ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆழ்வார்கள் அருளிச்செய்த

நாலாயிர திவ்யப்ரபந்தம்

திருவல்லிக்கேணி

தமிழ்ப்பண்டிதர்

சே. கிருஷ்ணமாசாரியரால்

சென்னை

கணேச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

பிங்கள௵

விலை ரூபா ௩ - ௮ - 0.

சே. கிருஷ்ணமாசாரியர்

தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய புஸ்தகசாலை

19 - தென்னண்டைமாடவீதி,

திருவல்லிக்கேணி.

ஸ்ரீ

முகவுரை.

நாலாயிரதிவ்வியப்பிரபந்தமானது—ஸ்ரீய:பதியான ஸர்வேஸ்வரனது கிருபையால் ஸம்ஸாரிசேதநர்களின் உஜ்ஜீவநத்தின்பொருட்டு இந்த உலகிருள் நீங்க வந்து உதித்த ஆழ்வார்கள் பதினொருவரும் ஆண்டாள் ஒருத்தியுமாகிய பன்னிருவரும் அந்தமிழால் நற்கலைகளை ஆய்ந்துஉரைத்த எம்பெருமானது ஸ்தோத்ரரூபமான இருபத்துநான்கு பிரபந்தங்களின் ஸமுதாயமாகும். நித்தியசூரிகளின் அம்சமாகத் திருவவதரித்த இவ்வாழ்வார்கள் எம்பெருமானால் மயர்வற மதிநலம் அருளப்பெற்று அப்பெருமானைத் தமது நெஞ்சென்னும் உட்கண்ணால் நன்குஅனுபவித்த அநுபவம் உள்ளடங்காமல் பெருக்கெடுத்துப் புறம்பேவழியத் திருவவதரித்தன வாதலால், இந்தப்பிரபந்தங்கள் "அருள்கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடினான்" என்கிறபடியே பகவத்கிருபையாலுண்டான ஞானக்கண்மூலமாகப் பக்திபலாத்காரத்தாலே அவதரித்தனவாய், பகவதேகபரங்களாய், விலக்ஷணங்களாய், போக்யங்களாய், பகவந்முகோல்லாஸஹேதுக்களாய், அந்த எம்பெருமானைத்தவிர வேறொன்றைப் பிரதிபாதியாதனவாய், ஸாரதமங்களாய், வேதத்தைக்காட்டிலும் விஞ்சியனவாய், எம்பெருமானது பர வ்யூஹ விபவ அந்தர்யாமி அர்ச்சை யென்கிற ஐவகைநிலைகளையும் குறிப்பனவாயிருந்தாலும் அர்ச்சையையே முக்கியதமமாகக் கொண்டனவாய், பெண்ணுக்கும் பேதைக்குங்கூட எளிதில்அப்யஸிக்கத்தக்கனவாய், அப்யஸித்தவர்களுக்குப பிறவித்துயரறுத்து அந்தமில் பேரின்பத்தை யளிக்கவல்லனவாய், செவிக்கினிய செஞ்சொல்லாய், கற்பனை அலங்காரம் சொற்செறிவு பொருட்பொலிவு ஆழ்ந்தகருத்து வ்யங்க்யார்த்தம் முதலிய காவ்யலக்ஷணங்களிற் குறைவில்லாதனவாய், முமுக்ஷுக்களுக்குஅவச்யம்அறியவேண்டிய அர்த்தபஞ்சகத்தையும் விசததமமாகப் பிரதிபாதிப்பனவாய், ஆங்காங்கு ஸ்வாபதேசம நிரம்பப்பெற்றனவா யிருக்கும். ரஹஸ்யஸம்ப்ரதாயத்துக்குப் பிரதாநகாரணபூதங்களான இந்தப்பிரபந்தங்கள் "கண்ணா! நின்தனக்கும் குறிப்பாகில் கற்கலாம் கவியின்பொருள்தானே" என்றும், "ஆரார் வானவர்கள் செவிக்கினியசெஞ்சொல்லே" என்றும் ஸர்வஜ்ஞனை ஈச்வரனையும் ஸம்ஸாரஸம்பந்தமற்ற நிர்மல ஜ்ஞாநவான்களாகிய விண்ணுளாரையுமே ஈடுபடுத்துமென்றால், இந்தத் திவ்யப்ரபந்தங்களின் பெருமை மந்தமதிகளான நம்மாற் சொல்லும் தரமுடையதோ?

திவ்யப்ரபந்தங்களின் முக்கியமான அர்த்தம்—இப்படிப்பட்ட திவ்யப்பிரபந்தங்களிற் பேசுகின்ற அர்த்தங்கள்தாம் எவையென்னில்:—ஆத்மாக்கள் அறியவேண்டிய பரப்ரஹ்மஸ்வரூபமும், அடைகிற ஆத்மாக்களின் ஸ்வரூபமும், அடைதற்கு உரிய உபாயத்தின் ஸ்வரூபமும், அடைவதனாற் பெறவேண்டிய பலத்தின் ஸ்வரூபமும், பலத்தைப் பெறவொட்டாது தடுக்

கும் விரோதியின் ஸ்வரூபமும் என்கிற அர்த்தபஞ்சகங்களுமாம். இவைகள் தாம் வேதங்களாலும், இதிஹாஸ புராணங்களாலும், வேதவேதார்த்தங்களை யறிந்த மஹாத்மாக்களாலும் சொல்லப்படுபவை.

இந்தப் பிரபந்தங்கள்:—௧. திருப்பல்லாண்டு, ௨. பெரியாழ்வார்திருமொழி, ௩. திருப்பாவை, ௪. நாச்சியார்திருமொழி, ௫. பெருமாள்திருமொழி, ௬. திருச்சந்தவிருத்தம், ௭. திருமாலை, ௮. திருப்பள்ளியெழுச்சி, ௯. அமலனாதிபிரான், ௧௦. கண்ணிநுண்சிறுத்தாம்பு என்னும் பத்துப்பிரபந்தங்கள் அடங்கிய முதலாயிரமும்; ௧௧. பெரியதிருமொழி, ௧௨. திருக்குறுந்தாண்டகம், ௧௩. திருநெடுந்தாண்டகம் என்னும் மூன்று பிரபந்தங்கள் அடங்கிய இரண்டாவது ஆயிரமும்; ௧௪. முதல்திருவந்தாதி, ௧௫. இரண்டாந்திருவந்தாதி, ௧௬. மூன்றாந்திருவந்தாதி, ௧௭. நான்முகன் திருவந்தாதி, ௧௮. திருவிருத்தம், ௧௯. திருவாசிரியம், ௨௦. பெரியதிருவந்தாதி, ௨௧. திருவெழுகூற்றிருக்கை, ௨௨. சிறியதிருமடல், ௨௩. பெரியதிருமடல் என்னும் பத்துப்பிரபந்தங்கள் அடங்கிய இயற்பாவென்னும் மூன்றாவதுஆயிரமும்; ௨௪. திருவாய்மொழி என்னும் நான்காவதுஆயிரமுமாம். இவைகளின் பாசுரங்களை எண்ணிப் பார்க்குமிடத்தில் ஸங்க்யையிற் சிறிது குறைந்திருப்பினும் குறைந்த சொச்சத்தொகையைக் கருதாது நாலாயிரதிவ்யப்ரபந்தங்கள் என்று இவை திருநாமம் படைத்தன.

இந்தப்பிரபந்தங்களின் முறைமை ஏற்பட்ட வகை:—'திருப்பல்லாண்டு' முதல் 'அமலனாதிபிரான்'ஈறானவை பிரணவார்த்தங்க ளாகையாலே முதலில் வைக்கப்பட்டன வென்றும், 'கண்ணிநுண்சிறுத்தாம்பு' நமஸ்ஸப்தார்த்தத்தை விவரிப்பதாகையாலே அது அவற்றின்பின்பு வைக்கப்பட்டதென்றும், பெரிய திருமொழி முதல் பெரியதிருமடல் ஈறாகவுள்ள பிரபந்தங்கள் மந்த்ரசேஷமான நாராயண சப்த விவரண மாகையாலே அதன்பின்பு வைக்கப்பட்டன வென்றும், இந்தப்பிரபந்தங்களிலும் பொருட்பொருத்தத்தைக் கணிசித்தே பௌர்வாபர்யங்கள் ஏற்பட்டுள்ளன வென்றும், இவ்வாறு திருமந்த்ரார்த்த ப்ரதிபாதகங்களான பிரபந்தங்கள் வைக்கப்பட்டபின்பு த்வயார்த்தமாய்த் தீர்க்கசரணாகதியை ப்ரதிபாதிப்பதாய் ஸாரதமமான திருவாய்மொழி எல்லாவற்றுக்கும் சரமப்ரபந்தமாக வைக்கப்பட்டதென்றும், * தமது தேவகான வல்லமையால் கண்ணிநுண்சிறுத்தாம்பைக்கொண்டு ப்ரமுஷிதமாய்ப்போன திவ்யப்ரபந்தங்களை உத்தரிப்பித்த ஸ்ரீமந்நாதமுனிகள் நம்மாழ்வாரிடத்திலே திவ்யப்ரபந்தங்களை உபதேசத்தாற் பெற்றபோது இவ்வாறே நாலாயிரங்களையும் நம்மாழ்வார் அவர்க்கு உபதேசித்தனரென்றும், இப்படி நம்மாழ்வார் நாதமுனிகளுக்கு அவயவியான தாம் அருளிச்செய்த திருவாய்மொழியையன்

---

* ப்ரணவம் நமஸ் என்பவற்றின் விவரண மாதலால் முதலாயிரத்தை முதலாகவும், நாராயணசப்த விவரணமாதலால் பெரியதிருமொழியை இரண்டாவதாகவும், த்வயார்த்தவிவரணமாதலால் திருவாய்மொழியை மூன்றாவதாகவும், சரமச்லோகவிவரணமாதலால் இயற்பாவை நான்காவதாகவும் நமது முன்னோர்கள் முறைப்படுத்தினார்க ளென்று கூறுவாருமுண்டு.

றித் தமக்கு அவயவபூதர்களான மற்றையாழ்வார்களின் அருளிச்செயல்களை யும் உபதேசம்செய்ததனால்தான் "நாதனுக்கு நாலாயிரமுரைத்தான் வாழி யே" என்று பாராட்டி அநுஸந்திக்கப்பட்டிருப்பதென்றும் ஸம்ப்ரதாயம்வல்ல பெரியோர் அருளிச்செய்வர்.

திவ்யப்ரபந்தம் முன்புறத்திலே அநுஸந்திக்கப்படுதற்குக் காரணம்:— கோயில்களில் உத்ஸவம்கண்டருளும்போது எம்பெருமான்நடுவேஎழுந்தருள, வடமொழிவேதம் எம்பெருமானது குணங்களைப் பேசத்தொடங்கி அவற்றின் முடிவு தனக்கு எட்டமுடியாமல் "யதோவாசோ நிவர்த்தந்தே, அப்ராப்யமந ஸாஸஹ" என்று இளைத்துப்போய்ப் பின்னும் அப்பெருமானை நாடிச்செல்வ தற்கு அறிகுறியாக எம்பெருமானுக்குப் பின்னே பாராயணஞ்செய்யப்பட்டும், மயர்வறமதிநலம்அருளப்பெற்ற ஆழ்வார்களின் திவ்யஸூக்தியான தமிழ்வேத மாகிய திவ்வியப்பிரபந்தம் அப்பெருமானது ஸ்வரூபத்தை உள்ளபடி உணர் ந்து அவனை ஸாக்ஷாத்கரித்து வடமொழிவேதத்துக்கு முற்பட்டமை தோன்ற அப்பெருமானுக்கு முன்னே பாராயணஞ்செய்யப்பட்டும் வருகின்றன. இவ் விஷயத்தை, வேதாந்ததேசிகனும்

"விச்வஸம்ஹாரவிஹாரஸமயே விஷ்வக்ஸேநோக்தவேதா:
கம்ஸாரே: பச்சாதஸௌகர்யமபிவஹதி யத்ராஷா ।
நித்யம்ஜாதாபரிவ்ருதயோ நிஷ்கர்ஷதஸ்தூயதே
ப்ரதீபாநாம்ஸூக்திவிசிஷ்டாம்பாடகேப்யஸ்ஸமக்ரா॥

என்று அருளிச்செய்தார்.

நித்யாநுஸந்தாநமும், கோயில்திருவாய்மொழியும்:—இப்படி மஹத்தான வைபவங்களையுடைய திவ்வியப்பிரபந்தங்கள் முழுவதையும் தினந்தோ றும் ஸேவிப்பது இயலாமையாலே, அவற்றுள்ளே திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சி யிரண்டும் எம்பெருமானைத் திருப்பள்ளியுணர்த்தி அப்பெருமானி டத்திற் கைங்கரியங்கொள்ளும் பிரபந்தங்களாகையால் அவை ப்ராதஃகாலத் தில் நித்யம் அநுஸந்தேய மென்றும், ஆழ்வார்கள்திவ்யஸூக்திகளைச் சேவிக் கும்போதெல்லாம் முதலில் வேதத்துக்கு ஓமென்னுமது போன்ற மங்களா சாஸநபரமான திருப்பல்லாண்டு அநுஸந்தேய மென்றும், திருவாய்மொழி யநுஸந்தாநத்திற்குப் பூர்வோத்தராங்களில் நம்மாழ்வார்விஷயமான கண்ணி நுண்சிறுத்தாம்பு அநுஸந்தேயமென்றும், ஸந்நிதிகளிலெல்லாம் ஸாயங்காலங் களில் திருப்பல்லாண்டு முதல் சிலபிரபந்தங்கள் நித்யமாக அநுஸந்தேயங்க ளென்றும் இப்படி ஸ்ரீ வைஷ்ணவதர்மப்ரவர்த்தகரானஸ்ரீமந்நாதமுனிகள்முத லிய பூர்வாசார்யபரம்பரைகள் திவ்யப்ரபந்தாநுஸந்தாநங்களில் சிலநிஷ்கர்ஷ மான அநுஷ்டாநங்களை ஏற்படுத்தினார்களென்றும்; இப்படியே திருவாய்மொழி யில் முதற்பத்தில் முதலிரண்டு திருவாய்மொழிகளையும் பத்தாம்பத்தில் இறுதி யிரண்டு திருவாய்மொழிகளையும், மற்றையெட்டுப்பத்துக்களிலும் ஸாரமான

ஒவ்வொரு திருவாய்மொழியையும் தேர்ந்தெடுத்து அந்தப் பன்னிரண்டு திருவாய்மொழிகளையும் 'கோயில்திருவாய்மொழி' என்று பேரிட்டு அவை திருவாய்மொழிமுழுதையும் ஸேவிக்க இயலாதபோது அநுஸந்தேயங்களாக ஏற்படுத்தப்பட்டனவென்றும் ஸம்ப்ரதாயஜ்ஞரான பெரியோர் அருளிச்செய்வர்.

திவ்யப்ரபந்தங்களின்வேதஸாம்யம்:— ஆழ்வார்களில் கடைக்குட்டியான திருமங்கையாழ்வார் எம்பெருமானருளால் திருந்திச் சதுர்வேதஸாரமாக நம்மாழ்வாரால் அருளிச்செய்யப்பட்ட திருவிருத்தம் திருவாசிரியம் பெரிய திருவந்தாதி திருவாய்மொழி என்ற திவ்யபிரபந்தங்கள் நான்குக்கும் சிக்ஷை வியாகரணம் சந்தஸ் நிருக்தம் ஜ்யோதிஷம் கல்பம் என்ற வேதாங்கங்கள் ஆறு போலப் பெரியதிருமொழி திருக்குறுந்தாண்டகம் திருநெடுந்தாண்டகம் திருவெழுகூற்றிருக்கை சிறியதிருமடல் பெரியதிருமடல் என்ற பிரபந்தங்கள் ஆறையும் அருளிச்செய்து திருவரங்கம்பெரியகோயிலிற் கைங்கரியஞ்செய்து வருகையில் ஒருநாள் பெருமாள் திருமுன்பே திருநெடுந்தாண்டகத்தைத் தேவகானத்தாற் பாடிக்கொண்டு மனமுருகிநிற்க, அதற்குத் திருவுள்ளமுவந்த ஸ்ரீரங்கநாதனுக்கு 'உமக்கு வேண்டுவது யாது?' என்று திருவுள்ளமாக, ஆழ்வாரும் பணிந்து 'நாயன்தே! நம்மாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய தமிழ்வேதமாகிய திருவாய்மொழியை மார்கழிமாஸத்தில் நடக்கும் திருவத்யயநோத்ஸவத்தில் வடமொழிவேதத்துடனே திருச்செவிசார்த்தியருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் அவ்வாறே அநுக்ரஹம் செய்தபின்பு, பெரிய பெருமாள் பிரஸாதித்த திருமுகப்பட்டயப்படியே திருமங்கையாழ்வார் ஆழ்வார்திருநகரியிலிருந்து நம்மாழ்வாரை எழுந்தருளப்பண்ணிக்கொண்டுவந்து மார்கழிமாஸத்தில் சுக்லபக்ஷத்து ஏகாதசிதொடங்கிப் பகலில் வடமொழிவேத பாராயணமும் இரவில் திராவிடவேதமாகிய திருவாய்மொழிபாராயணமுமாகப் பத்துநாள் திருவத்யயநோத்ஸவம் குறைவற நடக்கும்படி செய்தருளினார். இப்படியே கலியன்காலம்வரையில் நடந்துவந்தது. பிறகு, கலிதோஷத்தால் திவ்யப்ரபந்தங்கள் ப்ரமுஷிதங்களாய்ப்போக, வெகுகாலம்கழித்து அந்தத் திவ்யபிரபந்தங்களை உத்தாரணம்பண்ணி ஸ்ரீவைஷ்ணவதர்மங்களை ஸ்தாபித்த ஸ்ரீமந்நாதமுனிகள், ஸ்ரீரங்கநாதனது சாஸநத்தினால் நின்றுபோயிருந்த திருவத்யயநத்திருவிழாவை நடப்பித்ததுமன்றி, ஏகாதசிக்கு முன்பு பிரதமைமுதல் 'பகல்பத்து' என்று பெயர்வைத்து அந்தத்தினங்களில் முதலிரண்டு ஆயிரங்களையும் ஸேவிக்கும்படிக்கும், இராப்பத்தில் திருவாய்மொழி சாத்துமறையான மறுநாளில் இயற்பாவைச் சேவித்து முடிக்கும்படிக்கும் திட்டஞ்செய்தனர். (இயற்பாசாத்துமறைக்கு மறுநாள் திருப்பல்லாண்டு தொடக்கம்; இதன்பிறகுதான் கிருஹங்களிலெல்லாம் திவ்யபிரபந்தங்கள் ஸேவிக்கலாம்.)

பின்பும், அந்நாதமுனிகள், பெரியபெருமாள்நியமநத்தால் வேதஸாம்யம் பெற்ற திராவிடவேதத்துக்கும் வடமொழிவேதத்துக்குப்போலவே உத்ஸர்ஜந உபக்ரமகாலங்களை நியமிக்கத் திருவுள்ளங்கொண்டு பெருமாள் தைலக்காப்புச் சாத்திக்கொள்ளும் திருக்கார்த்திகைதொடங்கி அத்யயந உத்ஸவ ஆரம்ப பரியந்தம் இந்தத்திவ்யப்பிரபந்தங்களுக்கு உத்ஸர்ஜநகாலமென்றும், அந்நாள்களில் எங்கும் திவ்யப்ரபந்தங்கள் ஸேவிக்கக்கூடாதென்றும், மார்கழிமாஸத்

தில் கல்பப்ரதமை தொடங்கித் திவ்யப்ரபந்தங்களுக்கு உபக்ரமகால மென்றும், அப்போதுதான் ஸந்நிதிகளில் திவ்யப்பிரபந்தம் தொடங்கி ஸேவிக்கலாமென்றும் சிலவரையறைகளை ஏற்படுத்தித் திவ்யப்பிரபந்தத்தின் மகிமையைப் பாராட்டியருளினர்.

இராமாநுசநூற்றந்தாதியின் சிறப்பு:—இப்படி ஸ்ரீமந்நாதமுனிகள் காலம் தொடங்கி ஓராண்வழியாக நடந்துவந்த இந்த ஸம்ப்ரதாயம் எம்பெருமானார்காலத்தில் பின்னும் பரவிச் செழித்து வளரலாயிற்று. அந்த எம்பெருமானார் காலத்திலே திருவரங்கத்தமுதனார் அவர்விஷயமாக அருளிச்செய்த பிரபந்நகாயத்திரியான இராமாநுசநூற்றந்தாதி பெரியபெருமாளருளால் அந்த அமுதனார்க்கு அருளப்பாடிட்டுத் திருச்செவிசார்த்தப்பட்டதாதலால், அது முதல் அது ஆழ்வார்களருளிச்செயல்களோடு சேர்ந்து அநுஸந்திக்கலாயிற்று. ஆகவே, பிரணவார்த்தமான முதலாயிரத்தோடு நம்மாழ்வார்விஷயமான பாகவதசேஷத்வத்தைப் பிரதிபாதிக்கும் கண்ணிநுண்சிறுத்தாம்பைச் சேர்த்தாற்போலக் கைங்கரியத்திற் களையறுப்பதான இயற்பாவுடனே சேர்த்து இராமாநுசநூற்றந்தாதியும் அநுஸந்திக்கத் தட்டில்லை.

திவ்யப்ரபந்த வ்யாக்யாநங்கள்:—ஓராண்வழியாக வந்த இந்தத் திவ்யப்ரபந்தங்களின் அர்த்தங்கள் முன்பெல்லாம் உபதேசமுகமாய் வந்தன. 'எம்பெருமானார்தரிசநம்' என்று நம்பெருமாள் பேராதரத்தோடு பேரிட்டு நாட்டும்படி ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தத்தை எங்கும்பரவச்செய்த ஸ்ரீபாஷ்யகாரர் தாமே இந்தத்திவ்யப்ரபந்தங்கட்கு வ்யாக்யாநம் இட்டால் அதற்குமேல் வேறொருவரும் வ்யாக்யாநம்செய்யாமல் அவ்வளவோடே நின்றுவிடுமாகையால் அங்ஙனமாகாது மேன்மேலும் கிளைத்துச் செழித்து வளரவேண்டுமென்னும் திருவுள்ளக்கருத்தாலே, தாம் வ்யாக்யாநமிடாமல் தமது புத்ரஸ்தாநீயராக அபிமாநித்திருந்த திருக்குருகைப்பிரான்பிள்ளானைக் கொண்டு ஸ்ரீவிஷ்ணுபுராணப்ரக்ரியையாலே திருவாய்மொழிக்கு முதல்முதல் ஆறாயிரப்படியாக ஒரு வ்யாக்யாநம் இடுவித்தார். அநந்தரம் பட்டர்பேரருளால் வேதாந்தியான நஞ்சீயர் ஸ்ரீபாஷ்யப்ரக்ரியையாலே ஒன்பதினாயிரப்படியாக ஒரு வ்யாக்யாநம் செய்தருளினார். அப்பால், நம்பிள்ளையினிடத்து அர்த்தவிசேஷங்களையெல்லாம் கேட்டருளிய பெரியவாச்சான்பிள்ளை, ஸ்ரீராமாயணப்ரக்ரியையாலே இருபத்துநாலாயிரப்படியாக ஒரு வ்யாக்யாநம் செய்தருளியது மல்லாமலும், நஞ்சீயர்சிஷ்யரான நம்பிள்ளையினிடத்து வடக்குத்திருவீதிப்பிள்ளை தாம்கேட்ட திருவாய்மொழியின் அர்த்தத்தைக் கேட்டது கேட்டபடியே பட்டோலைகொள்கையால் ஸ்ருதப்ரகாசிகாப்ரக்ரியையாலே ஈடுமுப்பத்தாறாயிரப்படி திருவவதரித்தது. பெரியவாச்சான்பிள்ளையின் திருக்குமாரராகிய நயினாராச்சானது சிஷ்யரான வாதிகேஸரிஅழகியமணவாளச்சீயர் சப்தார்த்தம் விளங்கும்படி பன்னீராயிரப்படிவ்யாக்யாநம் செய்தருளினார். இவர்களைத்தவிர, பிற்காலத்தில் பெரியபரகாலஸ்வாமி முதலியோரும் திருவாய்மொழிக்கு வ்யாக்யாநம் செய்திருக்கிறார்கள். இவைகளெல்லாம் 'பகவத்விஷயம்' எனப்படும். இப்படி திருவாய்மொழிக்குப் பலவ்யாக்யாநங்கள் ஏற்பட்டதே திருவாய்மொழியென்னும் திவ்யப்ரபந்தத்தின் சீர்மையை வெளியாக்கும்.

முகவுரை.

பெரியவாச்சான்பிள்ளையென்பவர் திருவாய்மொழிதவிர மற்றைமூவாயி ரங்களுக்கும் வ்யாக்யாநம் செய்தருளினர். (பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த வ்யாக்யாநங்களில் பெரியாழ்வார்திருமொழியின் முதல்நான்குபத்தின் வ்யாக்யாநங்கள் செல்லரித்துப் பழுதுபட்டபடியால் ப்ரமுஷிதமான அந்தப் பாகத்திற்கு ஸ்ரீமந்மணவாளமாமுனிகள் வியாக்கியாநமிட்டருளினர்.) இப்படி பெரியவாச்சான்பிள்ளை நாலாயிரதிவ்வியப்பிரபந்தம் முழுவதுக்கும் வ்யாக்யா நம் அருளிச்செய்ததனால்தான், இந்தப்ப்ரபந்தம் ஸகலராலும் அர்த்தம் எளிதில் அறியும்படியாயிற்று. இதனைப பாராட்டியே மணவாளமாமுனிகள் "பெரிய வாச்சான்பிள்ளை பின்புள்ளவர்க்கும், தெரிய வியாக்கியைகள் செய்வால்— அரிய,அருளிச்செயற்பொருளை ஆரியர்கட்கு இபபோது,அருளிச்செயலாய்த்து அறிந்து" என்று அருளிச்செய்தார். இவைகள்தவிர, திருபபாவை அமலனாதி பிரான் கண்ணிநுண்சிறுத்தாம்பு திருவிருத்தம் முதலிய சிலபிரபந்தங்கட்கு. நஞ்சீயர் அழகியமணவாளச்சீயர் அழகியமணவாளபபெருமாள்நயினார் முதலி யோர்கள்அருளிய வ்யாக்யாநங்களும், அமலனாதிபிரானுக்கு வேதாந்ததேசிகன் செய்தருளிய 'முநிவாஹநபோகம்' என்னும் வடமொழிவ்யாக்யாநமும், மண வாளமாமுனிகளின் திருவடிகளை ஆச்யிரத்த அபபிள்ளை யென்பவர் இயற் பாவுக்கு அருளிச்செய்த வ்யாக்யாநமும் உள்ளன. இராமாநுசநூற்றந்தாதிக்கு மணவாளமாமுனிகளும பிள்ளைலோகாசாயசீயரும வ்யாக்யாநமிட்டுள்ளார்கள்.

முடிவுரை:—இபபடி வ்யாக்யாநங்களால் வளம்பெற்ற நாலாயிரதிவ்ய ப்ரபந்தங்கள் எம்பெருமானது நியமநத்தால் இந்தஉலகிருள் நீங்க வந்து உதித்த ஆழ்வார்கள் வேதங்களிற்கூறியுள்ள அருமையான அர்த்தங்களையெல்லாம் எடுத்துத்திரட்டி எல்லாரும்அதிகரிக்கும்படி செவிக்கினிய செந்தமிழ்ப் பாசு ரங்களால் அருளிச்செய்தன வாகையாலே,தமிழ்மறைகளான இவைகள், "அறி யக்கற்று வல்லார் வைட்டணவர் ஆழ்கடல்ஞாலத்துள்ளே" என்கிறபடி ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு உபாதேயதமங்களாகும்.

செய்யுளை 'பாசுரம்' என்றும், பத்து அல்லது பதினொரு செய்யுள் கொண்டதாகிய தசகமென்னும் பதிகத்தை 'திருமொழி' அல்லது 'திருவாய் மொழி' என்றும், பத்துபபதிகங்கள் சேர்ந்த நூறுபாடலாகிய சதகத்தை 'பத்து' என்றும் கூறுவது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயம்.

இபபுஸ்தகத்தில் ↓↓ இந்த ஸங்கேதம், இரண்டுதரம் ஸேவிக்கும் பாசு ரங்களைக் குறிக்கும். * இந்த ஸங்கேதம், நிறுத்துமிடங்களைக் குறிக்கும்.

இப்பதிப்பில் ஒவ்வொரு பிரபந்தத்துக்கும்முன்னே அதனை அருளிச் செய்த ஆழ்வாரின் சரித்ரம் தமிழ்நடையில் அச்சிடப்பட்டுள்ளது./ஒவ்வொரு ஆயிரமும் முடிந்தபிறகு அதனதன் இறுதியில் செய்யுளகராதியும்சேர்க்கப்பட் டுள்ளது. இந்த ப்ரபந்தத்தில் வழங்கும் அரும்பதங்கட்கு வ்யாக்யாநங்களிற் கூறியுள்ளபடி அர்த்தம்எழுதி அகராதியாகத் தனியே அச்சிடப்பட்டிருக்கிறது. உகந்தருளின நிலங்களாகிய திருமால்திருபபதிகள் நூற்றெட்டின் வைபவ மும் இப்புத்தகத்தின் இறுதியில் வைக்கப்பட்டிருக்கிறது.

திவ்யப்ரபந்த அடைவு.

முதலாயிரம்.

	பாசுரம்.
௧. திருப்பல்லாண்டு	௧௨
௨. பெரியாழ்வார்திருமொழி.	
முதற்பத்து.	
௧. வண்ணமாடங்கள்	௧0
௨. சீதக்கடல்	௨௧
௩. மாணிக்கங்கட்டி	௧0
௪. தன்முகத்து	௧0
௫. உய்யவுலகு	௧௧
௬. மாணிக்கக்கிண்கிணி	௧௧
௭. தொடர்சங்கிலிகை	௧௧
௮. பொன்னியல்	௧௧
௯. வட்டுநடுவே	௧0
இரண்டாம்பத்து.	
௧. மெச்சூது	௧0
௨. அரவணையாய்	௧௧
௩. போய்ப்பாடு	௧௩
௪. வெண்ணெயளைந்த	௧0
௫. பின்னைமணாளனை	௧0
௬. வேலிக்கோல்வெட்டி	௧0
௭. ஆநிரைமேய்க்க	௧0
௮. இந்திரனோடு	௧0
௯. வெண்ணெய்விழுங்கி	௧௧
௧0. ஆற்றிலிருந்து	௧0
மூன்றாம்பத்து.	
௧. தன்னேராயிரம்	௧௧
௨. அஞ்சனவண்ணனை	௧0
௩. சீலைக்குதம்பை	௧0
௪. தழைகளும்	௧0
௫. அட்டுக்குவி	௧௧
௬. நாவலம்பெரிய	௧௧
௭. ஐயபுழுதி	௧௧
௮. நல்லதோர்தாமரை	௧0
௯. என்னாதன்	௧௧
௧0. நெறிந்தகருங்குழல்	௧0
நான்காம்பத்து.	பாசுரம்.
௧. கதிராயிரம்	௧0
௨. அலம்பாவெருட்டா	௧௧
௩. உருப்பிணிநங்கை	௧௧
௪. நாவகாரியம்	௧௧
௫. ஆசைவாய்	௧0
௬. காசுங்கறையுடை	௧0
௭. தங்கையைமூக்கும்	௧௧
௮. மாதவத்தோன்	௧0
௯. மரவடியை	௧௧
௧0. துப்புடையாரை	௧0
ஐந்தாம்பத்து.	
௧. வாக்குத்தூய்மை	௧0
௨. நெய்க்குடத்தை	௧0
௩. துக்கச்சுழலை	௧0
௪. சென்னியோங்கு	௧௧
	ஆக, ௪௭௩
௩. திருப்பாவை.	௩0
௪. நாச்சியார்திருமொழி.	
௧. தையொருதிங்களும்	௧0
௨. நாமமாயிரம்	௧0
௩. கோழியழைப்பதன்	௧0
௪. தெள்ளியார்பலர்	௧௧
௫. மன்னுபெரும்புகழ்	௧௧
௬. வாரணமாயிரம்	௧௧
௭. கருப்பூரம்	௧0
௮. விண்ணீலமேலாப்பு	௧0
௯. சிந்துரச்செம்பொடி	௧0
௧0. கார்க்கோடல்	௧0
௧௧. தாமுகக்கும்	௧0
௧௨. மற்றிருந்தீர்கட்கு	௧0
௧௩. கண்ணனென்னும்	௧0
௧௪. பட்டிமேய்ந்து	௧0
	ஆக, ௧௪௩
௫. பெருமாள்திருமொழி.	
௧. இருளிரிய	௧௧
௨. தேட்டரும்	௧0

	பாசுரம்.
௩. மெய்யில்வாழ்க்கை	௧
௪. ஊனேறுசெல்வத்து	௧௧
௫. தருதுயரம்	௧௦
௬. ஏர்மலர்ப்பூங்குழல்	௧௦
௭. ஆலைநீள்கரும்பு	௧௧
௮. மன்னுபுகழ்	௧௧
௯. வன்தாளினிணை	௧௧
௧௦. அங்கணெடுமதிள்	௧௧
ஆக,	௧௦௫
௬. திருச்சந்தவிருத்தம்	௧௨௦
௭. திருமாலை	௪௫
௮. திருப்பள்ளியெழுச்சி	௧௦
௯. அமலனாதிபிரான்	௧௦
௧௦. கண்ணிநுண்சிறுத்தாம்பு	௧௧
ஆக, மொத்தம்,	௯௪௭

௧௧. பெரியதிருமொழி.

முதற்பத்து.

௧. வாடினேன்	௧௦
௨. வாலிமாவலத்து	௧௦
௩. முற்றமூத்து	௧௦
௪. ஏனமுனாகி	௧௦
௫. கலையும்கரியும்	௧௦
௬. வாணிலாமுறுவல்	௧௦
௭. அங்கண்ஞாலம்	௧௦
௮. கொங்கலர்ந்த	௧௦
௯. தாயேதந்தை	௧௦
௧௦. கண்ணார்கடல்	௧௦

இரண்டாம்பத்து.

௧. வானவர்தங்கள்	௧௦
௨. காசையாடை	௧௦
௩. விற்பெருவிழவும்	௧௦
௪. அன்றாயர்	௧௦
௫. பாராயது	௧௦
௬. நண்ணாத	௧௦
௭. திவளும்	௧௦
௮. திரிபுரம்	௧௦
௯. சொல்லு	௧௦
௧௦. மஞ்சாடுவரை	௧௦

மூன்றாம்பத்து.

௧. இருந்தண்மாநிலம்	௧௦
௨. ஊன்வாட	௧௦
௩. வாடமருதிடை	௧௦
௪. ஒருகுறளாய்	௧௦
௫. வந்துனதடியேன்	௧௦
௬. தூவிரிய	௧௦
௭. கள்வன்கொல்	௧௦
௮. நந்தாவிளக்கே	௧௦
௯. சலங்கொண்ட	௧௦
௧௦. திருமடந்தை	௧௦

நான்காம்பத்து.

௧. போதலர்ந்த	௧௦
௨. கம்பமாகடல்	௧௦
௩. பேரணிந்து	௧௦
௪. மாற்றரசர்	௧௦
௫. தூம்புடை	௧௦
௬. தாவளந்து	௧௦
௭. கண்ணார்கடல்	௧௦
௮. கவளயானை	௧௦
௯. நும்மைத்தொழுதோம்	௧௦
௧௦. ஆய்ச்சியர்	௧௦

ஐந்தாம்பத்து.

௧. அறிவதரியான்	௧௦
௨. தாந்தம்பெருமை	௧௦
௩. வென்றிமாமழு	௧௦
௪. உந்திமேல்	௧௦
௫. வெருவாதாள்	௧௦
௬. கைம்மானமழகளிறு	௧௦
௭. பண்டைநான்மறை	௧௦
௮. ஏழையேதலன்	௧௦
௯. கையிலங்கு	௧௦
௧௦. நீதறுநிலதொடு	௧௦

ஆறாம்பத்து.

௧. வண்டுணுநறுமலா	௧௦
௨. பொறுததேன்	௧௦
௩. துறப்பேனல்லேன்	௧௦
௪. கண்ணும்சுழன்று	௧௦
௫. கலங்கமுந்நீர்	௧௦
௬. அமபாரும்	௧௦
௭. ஆளும்பணியும	௧௦
௮. மான்கொண்ட	௧௦
௯. பெடையடர்த்த	௧௦
௧௦. கிடந்தநம்பி	௧௦

ஏழாம்பத்து.

௧. கறவாமடநாகு	௧௦
௨. புள்ளாய்	௧௦
௩. சினவில்	௧௦
௪. கண்சோர	௧௦
௫. தந்தைகாலில்பெரு	௧௦
௬. சிங்கமதாய்	௧௦

பாசுரம்.
௭. திருவுக்கும்திரு ௧௦
௮. செங்கமலம் ௧௦
௯. கள்ளம்மனம் ௧௦
௧௦. பெரும்புறக்கடல் ௧௦

எட்டாம்பத்து.
௧. சிலையிலங்கு ௧௦
௨. தெள்ளியீர் ௧௦
௩. கரையெடுத்த ௧௦
௪. விண்ணவர்தங்கள் ௧௦
௫. தந்தைகாலில்விலங்கு ௧௦
௬. தொண்டீர் ௧௦
௭. வியமுடை ௧௦
௮. வானோரளவும் ௧௦
௯. கைம்மானம் ௧௦
௧௦. வண்டார் ௧௦

ஒன்பதாம்பத்து.
௧. வங்கமாமுந்நீர் ௧௦
௨. பொன்னிவர்மேனி ௧௦
௩. தன்னைநைவிக்கிலேன் ௧௦
௪. காவார்மடல் ௧௦
௫. தவளவிளம்பிறை ௧௦
௬. அக்கும்புலியின் ௧௦
௭. தந்தைதாய்மக்களே ௧௦
௮. முந்துறவுரைக்கேன் ௧௦
௯. மூவரில் ௧௦
௧௦. எங்கள் ௧௦

பத்தாம்பத்து.
௧. ஒருநற்சுற்றம் ௧௦
௨. இரக்கமின்றி ௧௦
௩. ஏத்துகின்றோம் ௧௦
௪. சந்தமலர்க்குழல் ௧௦
௫. பூங்கோதையாய்ச்சி ௧௦
௬. எங்கானும் ௧௦
௭. மானமுடைத்து ௧௪
௮. காதிற்கடிப்பு ௧௦
௯. புள்ளுருவாகி ௧௦
௧௦. திருத்தாய் ௧௦

பதினோராம்பத்து.
௧. குன்றமொன்று ௧௦
௨. குன்றமெடுத்த ௧௦
௩. மன்னிலங்கு ௧௦
௪. நிலையிடம் ௧௦
௫. மானமரும் ௧௦
௬. மைந்நின்ற ௧௦
௭. நீணாகம்சுற்றி ௧௦
௮. மாற்றமுள ௧௦

ஆக, ௧௦௮௪

பாசுரம்.
௧௨. திருக்குறுந்தாண்டகம் ௨௦
௧௩. திருநெடுந்தாண்டகம் ௩௦

ஆக, பாசுரம் - ௧௧௩௪

இயற்பா.
௧௪. முதல்திருவந்தாதி ௧௦௦
௧௫. இரண்டாந்திருவந்தாதி ௧௦௦
௧௬. மூன்றாந்திருவந்தாதி ௧௦௦
௧௭. நான்முகன்திருவந்தாதி ௯௬
௧௮. திருவிருத்தம் ௧௦௦
௧௯. திருவாசிரியம் ௭
௨௦. பெரியதிருவந்தாதி ௮௭
௨௧. திருவெழுகூற்றிருக்கை ௧
௨௨. சிறியதிருமடல் ௭௭½
௨௩. பெரியதிருமடல் ௧௪௮½

ஆக, பாசுரம் - ௮௧௭

௨௪. திருவாய்மொழி.

முதற்பத்து.
௧. உயர்வறவுயர்நலம் ௧௧
௨. வீடுமின் ௧௧
௩. பத்துடையடியவர் ௧௧
௪. அஞ்சிறையமடநாராய் ௧௧
௫. வளவேழுலகின் ௧௧
௬. பரிவதிலீசன் ௧௧
௭. பிறவித்துயர் ௧௧
௮. ஓடும்புள் ௧௧
௯. இவையும் ௧௧
௧௦. பொருமாநீள்படை ௧௧

இரண்டாம்பத்து.
௧. வாயுந்திரை ௧௧
௨. திண்ணன்வீடு ௧௧
௩. ஊனில்வாழ் ௧௧
௪. ஆடியாடி ௧௧
௫. அந்தாமத்தன்பு ௧௧
௬. வைகுந்தா ௧௧
௭. கேசவன்தமர் ௧௧
௮. அணைவது ௧௧
௯. எம்மாவீடு ௧௧
௧௦. கிளரொளியிளமை ௧௧

மூன்றாம்பத்து.
௧. முடிச்சோதியாய் ௧௧
௨. முந்நீர்ஞாலம் ௧௧
௩. ஒழிவில்காலம் ௧௧
௪. புகழுநல்லொருவன் ௧௧

	பாசுரம்.
௫. மொய்ம்மாம்	௧௧
௬. செய்யதாமரை	௧௧
௭. பயிலுஞ்சுடரொளி	௧௧
௮. முடியானே	௧௧
௯. சொன்னால்விரோதம்	௧௧
௧௦. சன்மம்பலபல	௧௧

நான்காம்பத்து.

௧. ஒருநாயகமாய்	௧௧
௨. பாலனாய்	௧௧
௩. கோவைவாயாள்	௧௧
௪. மண்ணையிருந்து	௧௧
௫. வீற்றிருந்து	௧௧
௬. தீர்ப்பாரை	௧௧
௭. சீலமில்லா	௧௧
௮. ஏறாளும்	௧௧
௯. நண்ணாதார்	௧௧
௧௦. ஒன்றுந்தேவும்	௧௧

ஐந்தாம்பத்து.

௧. கையார்சக்கரம்	௧௧
௨. பொலிகபொலிக	௧௧
௩. மாசறுசோதி	௧௧
௪. ஊரெல்லாம்	௧௧
௫. எங்ஙனேயோ	௧௧
௬. கடல்ஞாலம்	௧௧
௭. நோற்றநோன்பு	௧௧
௮. ஆராவமுதே	௧௧
௯. மானேய்நோக்கு	௧௧
௧௦. பிறந்தவாறும்	௧௧

ஆறாம்பத்து.

௧. வைகல்பூங்கழி	௧௧
௨. மின்னிடைமடவார்கள்	௧௧
௩. நல்குரவும்	௧௧
௪. குரவையாய்ச்சியர்	௧௧
௫. துவளில்மாமணிமாடம்	௧௧
௬. மாலுக்கு	௧௧
௭. உண்ணுஞ்சோறு	௧௧
௮. பொன்னுலகு	௧௧
௯. நீராய்நிலனாய்	௧௧
௧௦. உலகமுண்ட	௧௧

ஏழாம்பத்து.

	பாசுரம்.
௧. உண்ணிலாவிய	௧௧
௨. கங்குலும்பகலும்	௧௧
௩. வெள்ளைச்சுரிசங்கு	௧௧
௪. ஆழியெழ	௧௧
௫. கற்பார்	௧௧
௬. பாமருமூவுலகும்	௧௧
௭. ஏழையராவி	௧௧
௮. மாயா	௧௧
௯. என்றைக்கும்	௧௧
௧௦. இன்பம்பயக்க	௧௧

எட்டாம்பத்து.

௧. தேவிமாராவார்	௧௧
௨. நங்கள்வரிவளை	௧௧
௩. அங்குமிங்கும்	௧௧
௪. வார்கடாவருவி	௧௧
௫. மாயக்கூத்தா	௧௧
௬. எல்லியும்	௧௧
௭. இருத்தும்	௧௧
௮. கண்கள்சிவந்து	௧௧
௯. கருமாணிக்கமலை	௧௧
௧௦. நெடுமாற்கடிமை	௧௧

ஒன்பதாம்பத்து.

௧. கொண்டபெண்டிர்	௧௧
௨. பண்டைநாளாலே	௧௧
௩. ஓராயிரமாய்	௧௧
௪. மையார்	௧௧
௫. இன்னுயிர்	௧௧
௬. உருகுமால்	௧௧
௭. எங்கானல்	௧௧
௮. அறுக்கும்	௧௧
௯. மல்லிகை	௧௧
௧௦. மாலைநண்ணி	௧௧

பத்தாம்பத்து.

௧. தாளதாமரை	௧௧
௨. கெடுமிடர்	௧௧
௩. வேய்மருதோளிணை	௧௧
௪. சார்வேதவநெறி	௧௧
௫. கண்ணன்கழலிணை	௧௧
௬. அருள்பெறுவார்	௧௧
௭. செஞ்சொற்கவிகாள்	௧௧
௮. திருமாலிருஞ்சோலை	௧௧
௯. சூழ்விசும்பு	௧௧
௧௦. முனியேநான்முகனே.	௧௧

ஆக, பாசுரம் - ௧௧௦௨

இராமாநுச நூற்றந்தாதி - ௧௦௮

ஸ்ரீ



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

பொதுத்தனியன்கள்.

(அழகியமணவாளன் அருளிச்செய்தது)

[illegible]
[illegible]

శ్రీశైలేశదయాపాత్రం ధీభక్త్యాదిగుణార్ణవమ్ ।
యతీన్ద్రప్రవణం వన్దే రమ్యజామాతరం మునిమ్ ॥

ஸ்ரீஸைலேஸதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம் -
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம்முநிம்.

குருபரம்பரையின் தனியன்.

(கூரத்தாழ்வான் அருளிச்செய்தது.)

[illegible]
[illegible]

లక్ష్మీనాథసమారమ్భాం నాథయామునమధ్యమామ్ ।
అస్మదాచార్యపర్యన్తాం వన్దే గురుపరమ్పరామ్ ॥

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம் -
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம்.

எம்பெருமானார் தனியன்.

[illegible]
[illegible]

యోనిత్యమచ్యుతపదామ్బుజయుగ్మరుక్మవ్యామోహతస్తదితరాణితృణాయమేనే ।
అస్మద్గురోర్భగవతోఽస్యదయైకసిన్ధోః రామానుజస్యచరణౌశరణంప్రపద్యే ॥

யோ நித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாய மேநே -
அஸ்மத்குரோர்பகவதோஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்யே.

நம்மாழ்வார் தனியன்.

(ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்தது.)

𑌮𑌾𑌤𑌾 𑌪𑌿𑌤𑌾 𑌯𑍁𑌵𑌤𑌯𑌸𑍍𑌤𑌨𑌯𑌾𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌃
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌦𑍇𑌵 𑌨𑌿𑌯𑌮𑍇𑌨 𑌮𑌦𑌨𑍍𑌵𑌯𑌾𑌨𑌾𑌮𑍍 ।
𑌆𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑌃 𑌕𑍁𑌲𑌪𑌤𑍇𑌰𑍍𑌵𑌕𑍁𑌳𑌾𑌭𑌿𑌰𑌾𑌮𑌂
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌤𑌦𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌯𑍁𑌗𑌳𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑌾𑌮𑌿 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌾 ॥

మాతా పితా యువతయ స్తనయా విభూతి స్సర్వం యదేవ నియమేన మదన్వయానామ్ ।
ఆద్యస్య నః కులపతేర్వకుళాభిరామం శ్రీమత్తదంఘ్రియుగళం ప్రణమామి మూర్ధ్నా ॥

மாதாபிதாயுவதயஸ்தநயாவிபூதிஸ்
ஸர்வம்யதேவநியமேநமதந்வயாநாம் -
ஆத்யஸ்யந:குலபதேர்வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம்ப்ரணமாமிமூர்த்நா.

(ஸ்ரீ பராசரபட்டர் அருளிச்செய்தது.)

𑌭𑍂𑌤𑌂 𑌸𑌰𑌶𑍍𑌚 𑌮𑌹𑌦𑌾𑌹𑍍𑌵𑌯 𑌭𑌟𑍍𑌟𑌨𑌾𑌥
𑌶𑍍𑌰𑍀𑌭𑌕𑍍𑌤𑌿𑌸𑌾𑌰 𑌕𑍁𑌲𑌶𑍇𑌖𑌰 𑌯𑍋𑌗𑌿𑌵𑌾𑌹𑌾𑌨𑍍 ।
𑌭𑌕𑍍𑌤𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌰𑍇𑌣𑍁 𑌪𑌰𑌕𑌾𑌲 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌿𑌶𑍍𑌰𑌾𑌨𑍍
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌪𑌰𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌮𑍁𑌨𑌿𑌂 𑌪𑍍𑌰𑌣𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍 ॥

భూతంసరశ్చమహదాహ్వయభట్టనాథ శ్రీభక్తిసారకులశేఖరయోగివాహాన్ ।,
భక్తాంఘ్రిరేణుపరకాలయతీన్ద్రమిశ్రాన్ శ్రీమత్పరాంకుశమునిం ప్రణతోఽస్మినిత్యమ్ ॥

பூதம் † ஸரஸ்சமஹதாஹ்வயபட்டநாத
ஸ்ரீபக்திஸாரகுலஶேகரயோகிவாஹாந் -
பக்தாங்க்ரிரேணுபரகாலயதீந்த்ரமிஶ்ராந்
ஸ்ரீமத்பராங்குஶமுநிம்ப்ரணதோஸ்மிநித்யம்.

† 'ஸரஸ்ய' என்றும் பாடம்.

ஸ்ரீ

பெரியாழ்வார் வைபவம்.

మిథునే స్వాతిజం విష్ణో ర్థాంశం ధన్వినః పురే ।
ప్రపద్యే శ్వశురం విష్ణో ర్విష్ణుచిత్తం పురశ్శిఖమ్ ॥

மிதுநே ஸ்வாதிஜம் விஷ்ணோ: ரதாம்ஸம் தந்விந: புரே-
ப்ரபத்யே ஶ்வஶுரம் விஷ்ணோ: விஷ்ணுசித்தம் புரஶ்ஶிகம்.

இவ்வாழ்வார், ஸ்ரீவில்லிபுத்தூரில், கலி - ௪௭ - ஆவதான க்ரோதந வருஷம் ஆனிமீ சுக்லபக்ஷம் ஏகாதசி ஞாயிற்றுக்கிழமை கூடின ஸ்வாதீநக்ஷத்ரத்தில், கருடாம்ஸராய், வேயர்குலத்தில் பதுமையாருக்கும் முகுந்தாசார்யருக்கும் புத்ரராகத் திருவவதரித்து, "விஷ்ணுசித்தர்" என்னும் திருநாமத்தையுடையராய், வடபெருங்கோயிலுடையானுடைய நிர்ஹேதுககடாக்ஷத்தினால் ஸஹஜ பகவத்தாஸ்யமுடையராய், "அவனுகந்த அடிமையே நாம் செய்யத்தக்கது" என்று நினைத்து, அதையறிகைக்கு அவதாரங்களை யாராய்ந்து பார்த்தவிடத்தில், ஸர்வேஸ்வரன், பூபாரத்தைப்போக்கித் தர்மத்தை நிலைநிறுத்தி ஸாதுக்களைக் காக்கும்பொருட்டுத் தேவகிவயிற்றில் கிருஷ்ணனாய்ப் பிறந்து, யசோதைவளர்க்க வளர்ந்து, கம்ஸனுக்குப்பணிசெய்துவந்த ஸ்ரீமாலாகாரர் திருமாளிகையில் எழுந்தருளிப் பூவை இரக்க, அவர் உகந்து சூட்டினபடியைக் கண்டு, "இவ்விஷயத்துக்குப் பூவிடுகையே உகப்பு" என்று அறுதியிட்டுத் திருநந்தவநஞ்செய்து வடபெருங்கோயிலுடையானுக்குத் திருமாலைகட்டிச் சாத்திக் கொண்டிருந்தார்.

இக்காலத்தில் பாண்டியகுலத்திற் பிறந்த ஸ்ரீவல்லபதேவன் என்னும் ஒரரசன், தார்மிகனாகையால் சிறியதைப் பெரியது நலியாதபடி கூடல் என்னும் மதுரையில் அரசாண்டுகொண்டிருந்தான். அவ்வரசன், ஒருநாளிராத்திரியில் நகரசோதனைக்கு வரும்போது, ஒரு தெருத்திண்ணையின்மேல் வேதியனொருவனிருக்கக் கண்டு, அவனை யெழுப்பி "நீ யார்?"என்று கேட்க, அவனும் "நான் ஒருப்ராஹ்மணன், கங்காஸ்நாநம்பண்ணி வருகிறேன்" என்ன, அரசன் "உனக்கு ஏதேனும் நீதி தெரிந்தது உண்டாகில் சொல்வாய்" என்ன, அவ்வந்தணனும், "மழைக்காலத்தில் வேண்டியவைகளுக்கு மற்றை எட்டுமாஸங்களிலும், இராத்திரிக்கு வேண்டியவைகளுக்குப் பகலிலும், கிழத்தனத்தில் வேண்டியவைகளுக்கு யௌவநத்திலும், பரலோகத்துக்கு வேண்டியவைகளுக்கு இந்தஜந்மத்திலும் ஒருவன் ப்ரயத்நஞ் செய்யவேண்டும்" என்னும் பொருளுள்ள "వర్షార్థమష్టౌ ప్రయతేత మాసాన్ నిశార్థమర్థం దివసం యతేత । వార్ధక్యహేతోర్వయసా నవేన పరత్ర హేతోరిహ జన్మనా చ" ॥ [வர்ஷார்த்தமஷ்டௌப்ரயதேதமாஸாந் நிஸார்த்தமர்த்தம் திவஸம்யதேத-வார்த்தக்யஹேதோர்வயஸாநவேந பரத்ரஹேதோரிஹஜந்மநாச] சுலோகத்தைச் சொல்ல, அரசனும், வித்வானாகையால், "நமக்கோ த்ருஷ்டத்தில் ஒருகுறையுமில்லை; இனி அத்ருஷ்டயத்நம் பண்ணும்படி யென்?" என்று இராமுழுதும் அதுவேசிந்தையாக இருந்து மறுமைப்பேற்றுக்கு முயற்சிசெய்யக் கருதி, பொழுதுவிடிந்தவுடனே தனது புரோஹிதனான செல்வநம்பியை நோக்கி, "புருஷார்த்த நிர்ணயபூர்வகமாக அத்ருஷ்டஸித்திக்கு உபாயமென்?" என்றுவினவ, புரோஹிதனும், "வித்வான்

களைத் திரட்டி வேதாந்தஸித்தமான பரதத்வநிர்ணயம் பண்ணுவித்து அவ்வழியாலே பெறவேணும்" என்ன, அரசனும், "அப்படியேயாகிறது" என்று வெகுத்ரவ்யத்தைக் கிழிச்சீரையிலே முடிந்து அப்பொற்கிழியை வித்யாசுல்கமாகச் சபாமண்டபத்தின் முன்னிலையிலே ஒருதோரணத்தில் கட்டுவித்து, ராஜ்யத்தில் வித்வான்களைத் திரட்டும்படி உத்தரவுசெய்தான்.

அப்போது, வடபெருங்கோயிலுடையான், இவ்வாழ்வாரைக்கொண்டு, வேதாந்தத்திற் சொல்லப்படும் பரத்வத்தை இவ்வுலகத்தில் ப்ரகாசிப்பிக்கைக்காக, மெய்யடியாரான இவ்வாழ்வாருடைய ஸ்வப்நத்தில் எழுந்தருளி, "நீர் போய்க் கிழியைஅறுத்துக்கொண்டுவாரும்" என்று அருளிச்செய்ய, "அது வித்யாசுல்கமாக ஏற்படுத்தப்பட்டதன்றோ? ஒன்றுமறியாத நான் என்கையில் கொட்டுத்தழும்பைக்காட்டிக் கிழியை அறுக்கலாமோ?" என்ன, "அது உமக்குப் பரமோ? நாமன்றோ வேதார்த்தத்தை ப்ரதிபாதிக்கக்கடவோம்" என்று ஆழ்வாரை நிர்ப்பந்தித்தருள, அவரும் சிற்றஞ்சிறுகாலையில் எழுந்திருந்து, "இதொரு ஸ்வபந மிருந்தபடி யென்!" என்று ஆச்சரியபபட்டு, பாண்டியனுடைய வித்வத்கோஷ்டியில் எழுந்தருளினவளவில், செல்வநம்பியும் அரசனும் ப்ராஹ்மணோத்தமரான இவ்வாழ்வாரைக் கண்டு எழுந்து சேவித்து மிகவும் ஆதரிக்க, இதனைக்கண்ட வித்வான்கள், "அளவிறந்த வேதசாஸ்திரங்களைப பயின்றுதேர்ந்த எங்கள்முன்னிலையில் யாதொருதேர்ச்சியுமில்லாதஇவனை ஸத்கரித்தது சிறிதும்தகுதியன்று" என்று கோபத்துடன் ஆக்ஷேபிக்கையில், அப்போது, அபிமாநதுங்கனான செல்வநம்பி ஆழ்வாரைத்தண்டனிட்டு, "வேதாந்த ப்ரதிபாத்யமான பரதத்வத்தை நிச்சயித்தருளிச்செய்யவேணும்" என்று ப்ரார்த்தித்தார்.

இவ்வாழ்வாரும், ஸ்ரீ வால்மீகிபகவான் ப்ரஹ்மாவின் ப்ரஸாதத்தாலே எல்லாவ்ருத்தங்களையும் அறிந்தாற்போலவும், ஸ்ரீபாஞ்சஜந்யஸ்பர்சத்தாலே ராஜகுமாரனான த்ருவன் ஸர்வஜ்ஞனானாற்போலவும், வடபெருங்கோயிலுடையானுடைய நிர்ஹேதுக கடாக்ஷத்தாலே நன்றாக அறிந்துகொண்டு, "அகாரவாச்யனான ஸ்ரீமந்நாராயணனே ஸர்வஸ்மாத்பரன்" என்று ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணாதி வசநஸஹஸ்ரங்களால் பஹுமுகமாக ப்ரதிபாதித்தருளிச் செய்கையால், வித்யாசுல்கமாகத் தோரணத்தில் கிழியாகக் கட்டிவைத்த தநம் இவர்முன்னே தானே தாழவளைய, ஆழ்வாரும் ப்ரீதியோடே அக்கிழியை அறுத்துக்கொண்டருளினார்.

இதனைக்கண்ட வித்வான்களும் அரசன்முதலானோரும் வியப்புற்று, இவர் திருவடிகளில் தண்டம் ஸமர்ப்பித்து, மிகவும் ப்ரீதியுடனே ஆழ்வாரைப் பட்டத்துயானையின்மேலேற்றி, அந்த வித்வான்கள் குடை கொடி சாமரம் ஆலவட்டம் முதலானவை தாங்களே பணிமாறிக்கொண்டு உடன்இருந்து வீதி வலஞ்செய்விக்கையில், "வேதப்பயன்கொள்ளவல்ல மெய்ந்நாவன் வந்தான்" என்று விருதூதித் திருச்சின்னம்பரிமாறவும், ஈண்டியசங்கமெடுத்தூதவும், அரசன் இவர்க்கு 'பட்டர்பிரான்' என்று திருநாமம்சாத்தித் தானும் தன்பரிகரத்துடன் ஸேவித்துநிற்க, நகரிவலம்வருகிற அந்த மஹோத்ஸவத்தைக் காண்கைக்காக, புத்ரர்களை ப்ரஹ்மரதம்பண்ணும்போது மாதாபிதாக்கள் காண ஆதரித்து வருமாபோலே, ஸர்வேச்வரனும், பிராட்டிஸஹிதனாய், கரியதிருமேனியுடன் பெரியதிருவடிமேலேறி, திவ்யாயுததரனாய், ப்ரஹ்ம ருத்ராதிகளெல்லாரும் ஸேவிக்க ஆகாசத்தில் திவ்யமங்களவிக்ரஹத்தோடுங் கூடி நெருங்கிநிற்கிற இந்திரர்களுடன் ஸந்நிஹிதனாக, அந்தத் திவ்யமங்களவிக்ரஹத்தை ஆழ்வார் ஸேவித்து, தம்ஸம்ருத்தியைப் பார்த்து இறுமாந்திராதே, அவன்கடாக்ஷத்தாலே

அளவற்ற பக்தியைப் பெற்றவராகையாலே, அவனுடைய ஸர்வஜ்ஞத்வம் ஸர்வஶக்தித்வம் ஸர்வரக்ஷகத்வம் முதலானவைகளை அநுஸந்திப்பதற்கு முன்னமே, முதலில், நீலமேனியிலுண்டான ஸௌந்தர்யம் ஸௌகுமார்யம் லாவண்யம் யௌவநம் முதலானவற்றைக் கண்டு அவற்றில்ஈடுபட்டுப் பக்தி பரவசராய், அதனால் தம்நிலையையும் எம்பெருமான்நிலையையும் மறந்து "காலாதீதமான பரமபதத்தில் நித்யஸூரிகளால் எப்போதும் தர்ஶநம்பண்ணப்படுகிற வஸ்து, கலிநடமாடுகிற இத்தேசத்தில் வந்து கண்ணுக்கு விஷயமாவதே! இவ்வஸ்துவுக்கு என்னதீங்கு வருகிறதோ!" என்னும் அதிஶங்கையாலே, யானைக்கழுத்தின்மேல்கிடக்கும் மணிகளைத் தாளமாகக்கொண்டு "இந்த ஸௌந்தர்யாதிகளுக்கு ஒருதீங்கு வாராதே நித்யமாகச் செல்லவேணும்" என்று மங்களாஶாஸநம்பண்ணியருளி, "இவ்விஷயத்துக்கு நாமொருவரும் மங்களாஶாஸநம்பண்ணுகை போதாது" என்று, ஐஶ்வர்ய கைவல்ய பகவச்சரணார்த்திகளையும் மங்களாஶாஸநயோக்யராம்படி திருத்திச் சேர்த்துக்கொண்டு, பலவகையாலும் திருப்பல்லாண்டு பாடியருளினார்.

பின்பு, இவ்வாழ்வார், அவ்வரசனையும் விஶேஷகடாக்ஷம் செய்தருளி, அவனால் ஸத்கரிக்கப்பட்டவராய், மீண்டு ஸ்ரீவில்லிபுத்தூர்க்கு எழுந்தருளி, தநத்தை வடபெருங்கோயிலுடையான் திருமுன்பே வைத்துத் தண்டம்ஸமர்ப்பித்து, தாம் முதலில் உபக்ரமித்தருளினபடியே திருமாலைகட்டி வடபெருங்கோயிலுடையானுக்கு நித்யமாகச்சாத்தி ஸேவித்துக்கொண்டிருந்தார்.

இவர் தாம் க்ருஷ்ணாவதாரத்திலே ஆதிதொடங்கி ஆழ்ந்தசிந்தையராய் அவ்வவதாரவ்ருத்தாந்தத்தையே பிரதானமாகப்பாராட்டி அனுபவித்து அவ்வனுபவத்தாலாகிய ஆநந்தம் உள்ளடங்காமற் பெருக்கெடுத்துப்பாய்தலால் அதனைப் பிரபந்தமுகமாக வெளியிடத்தொடங்கி, க்ருஷ்ணன் அவதரித்தது முதலாகச் செய்தருளின வ்ருத்தாந்தத்தை, கோபஜந்மத்தை ஆஸ்தாநம்பண்ணி அநுகரித்து, "பெரியாழ்வார்திருமொழி" என்கிற திவ்ய ப்ரபந்தமாக அருளிச்செய்து, ஸஜ்ஜநங்களுக்கு உபகரித்தருளி லோகத்தை வாழ்வித்தருளினார்.

நல்லதிருப்பல்லாண்டுநான்மூன்றோன்வாழியே
நானூற்றறுபத்தொன்றும்நமக்குரைத்தான்வாழியே
சொல்லரியவானிதனிற்சோதிவந்தான்வாழியே
தொடைசூடிக்கொடுத்தாளைத்தொழுமப்பன்வாழியே
செல்வநம்பிதனைப்போலச்சிறப்புற்றான்வாழியே
சென்றுகிழியறுத்துமால்தெய்வமென்றான்வாழியே
வில்லிபுத்தூர்நகரத்தைவிளங்கவைத்தான்வாழியே
வேதியர்கோன்பட்டர்பிரான்மேதினியில்வாழியே.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியாழ்வார்.

ஸ்ரீ

ஆழ்வார்கள் அருளிச்செய்த

நாலாயிர திவ்ய ப்ரபந்தங்களுள்

முதலாயிரம்.

(தோடயம் - நாட்டைராகம் - ஜம்பைதாளம்.)

திருப்பல்லாண்டு பெரியாழ்வார்திருமொழிகளின்

தனியன்கள்.

(நாதமுனிகள் அருளிச்செய்தது.)

𑌗𑍁𑌰𑍁𑌮𑍁𑌖𑌮𑌨𑌧𑍀𑌤𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌹 𑌵𑍇𑌦𑌾𑌨𑌶𑍇𑌷𑌾𑌨𑍍
𑌨𑌰𑌪𑌤𑌿𑌪𑌰𑌿𑌕𑍢𑌪𑍍𑌤𑌂 𑌶𑍁𑌲𑍍𑌕𑌮𑌾𑌦𑌾𑌤𑍁𑌕𑌾𑌮𑌃 ।
𑌶𑍍𑌵𑌶𑍁𑌰𑌮𑌮𑌰𑌵𑌨𑍍𑌦𑍍𑌯𑌂 𑌰𑌙𑍍𑌗𑌨𑌾𑌥𑌸𑍍𑌯 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍
𑌦𑍍𑌵𑌿𑌜𑌕𑍁𑌲𑌤𑌿𑌲𑌕𑌂 𑌤𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌨𑌮𑌾𑌮𑌿 ॥

గురుముఖమనధీత్య ప్రాహ వేదానశేషాన్ నరపతిపరిక్లృప్తం శుల్కమాదాతుకామః ।
శ్వశురమమరవన్ద్యం రఙ్గనాథస్య సాక్షాత్ ద్విజకులతిలకం తం విష్ణుచిత్తం నమామి ॥

குருமுகமநதீத்ய ப்ராஹவேதாநஶேஷாந்
நரபதிபரிக்லுப்தம் ஶுல்கமாதாதுகாம꞉ -
ஶ்வஶுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
ம் நமாமி.

(பாண்டியபட்டர் அருளிச்செய்தவை.)

இருவிகற்பநேரிசைவெண்பா.

மின்னார்தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்று * ஒருகால்
சொன்னார் கழற்கமலஞ் சூடினோம்*—முன்னாள்
கிழியறுத்தானென்றுரைத்தோம், * † கீழ்மையினிற்சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே! வந்து.

பாண்டியன்கொண்டாடப் பட்டர்பிரான்வந்தானென்று *
ஈண்டியசங்க ‡ மெடுத்தூத *—வேண்டிய
வேதங்களோதி விரைந்துகிழியறுத்தான் *
பாதங்கள்யாமுடையபற்று.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

† 'கீழ்மையினிச்சேரும்' என்றும் பாடாந்தரம்.
‡ 'மடுத்தூத' என்றும், 'எடுத்தோத' என்றும், 'அடுத்தூத' என்றும் பாடம்.

பெரியாழ்வார் அருளிச்செய்த

திருப்பல்லாண்டு.

காப்பு.

குறள்வெண்செந்துறை.

(நாட்டைராகம் - அடதாளம்.)

‡‡ * பல்லாண்டுபல்லாண்டு பல்லாயிரத்தாண்டு *
† பலகோடி நூறாயிரம்
மல்லாண்டதிண்டோள்மணிவண்ணா ! * உன்
‡ செவ்வடிசெவ்வி திருக்காப்பு. (க)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

‡‡ அடியோமோடும்நின்னோடும் பிரிவின்றியாயிரம்பல்லாண்டு *
வடிவாய்நின்வலமார்பினில் வாழ்கின்றமங்கையும்பல்லாண்டு *
வடிவார்சோதிவலத்துறையும் சுடராழியும்பல்லாண்டு *
படைபோர்புக்குமுழங்கும் அப்பாஞ்சசன்னியமும்பல்லாண்டே. (உ)

வாழாட்பட்டுநின்றீருள்ளீரேல் வந்துமண்ணும்மணமுங்கொண்மின் *
கூழாட்பட்டுநின்றீர்களை எங்கள்குழுவினில்புகுதலொட்டோம் *
ஏழாட்காலும்பழிப்பிலோம்நாங்கள் இராக்கதர்வாழ்இலங்கை *
பாழாளாகப்படைபொருதானுக்குப் பல்லாண்டுகூறுதுமே. (ங)

ஏடுநிலத்திலிடுவதன்முன்னம்வந்து எங்கள்குழாம்புகுந்து *
கூடுமனமுடையீர்கள்வரம்பொழி வந்தொல்லைக்கூடுமினோ *
நாடுநகரமும்நன்கறிய நமோநாராயணாயவென்று *
பாடுமனமுடைப்பத்தருள்ளீர் ! வந்துபல்லாண்டுகூறுமினே. (ச)

அண்டக்குலத்துக்கதிபதியாகி அசுரரிராக்கதரை *
§ இண்டைக்குலத்தையெடுத்துக்களைந்த இருடீகேசன்தனக்கு *
தொண்டக்குலத்திலுள்ளீர்வந்தடிதொழுது ஆயிரநாமஞ்சொல்லி *
பண்டைக்குலத்தைத்தவிர்ந்து பல்லாண்டுபல்லாயிரத்தாண்டென்மினே.

---

* முதலிரண்டுபாசுரங்களும் தனித்தனி வெவ்வேறாயினும் பொருட்சேர்த்தியால் இவற்றை ஒருபாசுரம்போல ஸேவிப்பது, ஸம்ப்ரதாயம்.

† 'பலகோடிநூறாயிரமும்' என்றும் பாடம். ‡ 'சேவடி' என்றும் பாடம்.

§ 'இண்டக்குலம்' என்றும் பாடம்.

எந்தைதந்தைதந்தைதந்தைதம்மூத்தப்பன் ஏழ்படிகால்தொடங்கி *
வந்துவழிவழியாட்செய்கின்றோம் * திருவோணத்திருவிழவில்
அந்தியம்போதிலரியுருவாகி அரியையழித்தவனை *
பந்தனைதீரப்பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்றுபாடுதுமே. (௬)

தீயிற்பொலிகின்றசெஞ்சுடராழி திகழ்திருச்சக்கரத்தின் *
கோயிற்பொறியாலேயொற்றுண்டுநின்று குடிகுடியாட்செய்கின்றோம் *
மாயப்பொருபடைவாணனை ஆயிரந்தோளும்பொழிகுருதி
பாய * சுழற்றியவாழிவல்லானுக்குப் பல்லாண்டுகூறுதுமே. (௭)

† நெய்யிடைநல்லதோர்சோறும் நியதமுமத்தாணிச்சேவகமும் *
கையடைக்காயுங்கழுத்துக்குப்பூணொடு காதுக்குக்குண்டலமும் *
மெய்யிடநல்லதோர்சாந்தமுந்தந்து என்னைவெள்ளுயிராக்கவல்ல *
பையுடைநாகப்பகைக்கொடியானுக்குப் பல்லாண்டுகூறுவனே. (௮)

உடுத்துக்களைந்த ‡ நின்பீதகவாடையுடுத்துக் கலத்ததுண்டு *
தொடுத்ததுழாய்மலர்சூடிக்களைந்தன சூடுமித்தொண்டர்களோம் *
விடுத்ததிசைக்கருமந்திருத்தித் திருவோணத்திருவிழவில் *
படுத்தபைந்நாகணைப்பள்ளிகொண்டானுக்குப் பல்லாண்டுகூறுதுமே. (௯)

எந்நாளெம்பெருமான் உன்தனக்கடியோமென்றெழுத்துப்பட்ட
அந்நாளே * அடியோங்களடிக்குடில் வீடுபெற்றுய்ந்ததுகாண் *
செந்நாள்தோற்றித் திருமதுரையுட்சிலைகுனித்து * ஐந்தலைய
பைந்நாகத்தலைப்பாய்ந்தவனே! உன்னைப்பல்லாண்டுகூறுதுமே. (௧௦)

‡‡ அல்வழக்கொன்றுமில்லா அணிகோட்டியர்கோன் * அபிமானதுங்கன்
செல்வனைப்போலத் திருமாலே! நானுமுனக்குப்பழவடியேன் *
நல்வகையால்நமோநாராயணாவென்று நாமம்பலபரவி *
பல்வகையாலும்பவித்திரனே! உன்னைப்பல்லாண்டுகூறுவனே. (௧௧)

‡‡ பல்லாண்டென்றுபவித்திரனைப் பரமேட்டியை * சார்ங்கமென்னும்
வில்லாண்டான்தன்னை வில்லிபுத்தூர்விட்டுசித்தன்விரும்பியசொல் *
நல்லாண்டென்றுநவின்றுரைப்பார் நமோநாராயணாயவென்று *
பல்லாண்டும்பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவர்பல்லாண்டே. (௧௨)

அடிவரவு:—பல் அடி வாழ் ஏடு அண்டம் எந்தை தீ நெய் உடுத்து எந்நாள் அல்வழக்கு பல்லாண்டு வண்ணம்.

[ஆதிகூறுதும், அநந்தரம் கூறுமின், அண்டம் என்மின், எந்தை பாடுதும், தீ உடுத்து எந்நாள் கூறுதும், நெய்யும் அல்லும் கூறுவனே.]

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

† 'நெய்யெடை' என்றும், 'நெய்யடை' என்றும்பாடம். ‡ 'நன்' என்றுங் கூறுவர்.

பாகவதஸாரமாகிய

பெரியாழ்வார் திருமொழி.

முதற்பத்து.

க - ஆந் திருமொழி - வண்ணமாடங்கள்.

கண்ணன் திருவவதாரச் சிறப்பு.

கலிவிருத்தம். (அபநுபராகம் - அடதாளம்.)

↓↓ வண்ணமாடங்கள்சூழ் திருக்கோட்டியூர் *
கண்ணன்கேசவன் நம்பிபிறந்தினில் *
எண்ணெய்சுண்ணம் எதிரெதிர்தூவிட *
கண்ணன்முற்றம் கலந்தளறாயிற்றே. (க)

ஓடுவார்விழுவார் உகந்தாலிப்பார் *
நாடுவார்நம்பிரான் † எங்குத்தானென்பார் *
பாடுவார்களும் பல்பறைகொட்டநின்று *
ஆடுவார்களும் ஆயிற்றாய்ப்பாடியே. (உ)

பேணிச்சீருடைப் பிள்ளைபிறந்தினில் *
காணத்தாம்புகுவார் புக்குப்போதுவார் *
‡ ஆணொப்பார் இவன்நேரில்லைகாண் * திரு
வோணத்தான் உலகாளுமென்பார்களே. (ங)

உறியைமுற்றத்து உருட்டிநின்றாடுவார் *
நறுநெய்பால்தயிர் நன்றாகத்தூவுவார் *
செறிமென்கூந்தல் அவிழத்திளைத்து * எங்கும்
அறிவழிந்தனர் ஆய்ப்பாடியாயரே. (ச)

கொண்டதாளுறி கோலக்கொடுமழு *
தண்டினர் பறியோலைச்சயனத்தர் *
§ விண்டமுல்லை யரும்பன்னபல்லினர் *
அண்டர்மிண்டிப்புகுந்து நெய்யாடினார். (ரு)

கையுங்காலும்நிமிர்த்துக் கடாரநீர் *
பையவாட்டிப் பசுஞ்சிறுமஞ்சளால் *
ஐயநாவழித்தாளுக்கு அங்காந்திட *
வையமேழுங்கண்டாள் பிள்ளைவாயுளே. (சா)

---

† 'எங்குற்றான்' என்றும் பாடம். ‡ 'ஆணொப்பானிவன்' என்பதும் பாடம்.
§ 'விண்டின்' என்பதும் பாடம்.

வாயுள்வையகங்கண்ட மடநல்லார் *
ஆயர்புத்திரனல்லன் அருந்தெய்வம் *
பாயசீருடைப் பண்புடைப்பாலகன் *
மாயனென்று மகிழ்ந்தனர்மாதரே. (எ)

பத்துநாளும்கடந்த இரண்டாநாள் *
எத்திசையும் சயமரங்கோடித்து *
மத்தமாமலை தாங்கியமைந்தனை *
உத்தானஞ்செய்து உகந்தனராயரே. (அ)

கிடக்கில்தொட்டில் கிழியவுதைத்திடும் *
எடுத்துக்கொள்ளில் மருங்கையிறுத்திடும் *
ஒடுக்கிப்புல்கில் உதரத்தேபாய்ந்திடும் *
மிடுக்கிலாமையால் நான்மெலிந்தேன்நங்காய்! (க)

↓↓ செந்நெலாரவயல்சூழ் திருக்கோட்டியூர்
மன்னுநாரணன் நம்பிபிறந்தமை *
மின்னுநூல் விட்டுசித்தன்விரித்த * இப்
பன்னுபாடல்வல்லார்க்கு இல்லைபாவமே. (க0)

அடிவரவு:—வண்ணம் ஓடு பேணி உறி கொண்ட கை வாயுள் பத்து கிடக்கில் செந்நெல் சீதக்கடல்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

உ - ஆந் திருமொழி - சீதக்கடல்.

கண்ணனது திருமேனியழகைப் பாதாதிகேசாந்தமாக அனுபவித்தல்.

வெண்டளையால்வந்தகலித்தாழிசை. (நந்யாசிராகம் - ஆதிதாளம்.)

↓↓ சீதக்கடல் உள்ளமுதன்னதேவகி *
கோதைக்குழலாள் அசோதைக்குப்போத்தந்த *
பேதைக்குழவி பிடித்துச்சுவைத்துண்ணும் *
பாதக்கமலங்கள்காணீரே பவளவாயீர்! வந்துகாணீரே. (க)

முத்தும்மணியும் வயிரமும்நன்பொன்னும் *
தத்திப்பதித்துத் தலைப்பெய்தாற்போல் * எங்கும்
பத்துவிரலும் மணிவண்ணன்பாதங்கள் *
ஒத்திட்டிருந்தவாகாணீரே ஒண்ணுதலீர்! வந்துகாணீரே. (உ)

பணைத்தோளிளவாய்ச்சி பால்பாய்ந்தகொங்கை *
அணைத்தாரவுண்டுகிடந்த இப்பிள்ளை *
இணைக்காலில் வெள்ளித்தளைநின்றிலங்கும் *
கணைக்காலிருந்தவாகாணீரே காரிகையீர்! வந்துகாணீரே. (௩)

உழந்தாள்நறுநெய் † ஓரோர்தடாவுண்ண *
இழந்தாளெரிவினாலீர்த்து எழில்மத்தின் *
பழந்தாம்பாலோச்சப் பயத்தால்தவழ்ந்தான் *
முழந்தாளிருந்தவாகாணீரே முகிழ்முலையீர்! வந்துகாணீரே. (௪)

பிறங்கியபேய்ச்சி முலைசுவைத்துண்டிட்டு *
உறங்குவான்போலேகிடந்த இப்பிள்ளை *
மறங்கொளிரணியன் மார்வைமுன்கீண்டான் *
குறங்குகளைவந்துகாணீரே குவிமுலையீர்! வந்துகாணீரே. (௫)

மத்தக்களிற்று வசுதேவர்தம்முடை *
சித்தம்பிரியாத தேவகிதன்வயிற்றில் *
அத்தத்தின்பத்தாநாள் தோன்றியவச்சுதன் *
முத்தமிருந்தவாகாணீரே முகிழ்நகையீர்! வந்துகாணீரே. (௬)

இருங்கைமதகளிறு ஈர்க்கின்றவனை *
பருங்கிப்பறித்துக்கொண்டு ஓடும்பரமன்தன் *
நெருங்குபவளமும் நேர்நாணும்முத்தும் *
மருங்குமிருந்தவாகாணீரே வாணுதலீர்! வந்துகாணீரே. (௭)

வந்தமதலைக்குழாத்தை வலிசெய்து *
தந்தக்களிறுபோல் தானேவிளையாடும் *
நந்தன்மதலைக்கு நன்றுமழகிய *
உந்தியிருந்தவாகாணீரே ஒளியிழையீர்! வந்துகாணீரே. (௮)

அதிருங்கடல்நிறவண்ணனை * ஆய்ச்சி
மதுரமுலையூட்டி வஞ்சித்துவைத்து *
பதறப்படாமே பழந்தாம்பாலார்த்த *
உதரமிருந்தவாகாணீரே ஒளிவளையீர்! வந்துகாணீரே. (௯)

பெருமாவுரலில் பிணிப்புண்டிருந்து * அங்
கிருமாமருதம்இறுத்த இப்பிள்ளை *
குருமாமணிப்பூண் குலாவித்திகழும் *
திருமார்பிருந்தவாகாணீரே சேயிழையீர்! வந்துகாணீரே. (௧௦)

† 'ஓரோதடாவுண்ண' என்றும் பாடம்.

நாள்களோர்நாலைந்து திங்களளவிலே *
தாளைநிமிர்த்துச் சகடத்தைச்சாடிப்போய் *
வாள்கொள்வளையெயிற்று ஆருயிர்வவ்வினான் *
தோள்களிருந்தவாகாணீரே சுரிகுழலீர்!வந்துகாணீரே. (கக)

மைத்தடங்கண்ணி யசோதைவளர்க்கின்ற *
செய்த்தலைநீலநிறத்துச் சிறுப்பிள்ளை *
நெய்த்தலைநேமியும் சங்கும்நிலாவிய *
கைத்தலங்கள்வந்துகாணீரே கனங்குழையீர்!வந்துகாணீ[ரே. (கஉ)

வண்டமர்பூங்குழல் ஆய்ச்சிமகனாகக்
கொண்டு * வளர்க்கின்ற † கோவலக்குட்டற்கு *
அண்டமும்நாடும் அடங்கவிழுங்கிய *
கண்டமிருந்தவாகாணீரே காரிகையீர்! வந்துகாணீரே. (கங)

‡ எந்தொண்டைவாய்ச்சிங்கம் வாவென்றெடுத்துக்கொண்டு *
அந்தொண்டைவாயமுதாதரித்து * ஆய்ச்சியர்
தந்தொண்டைவாயால் தருக்கிப்பருகும் * இச
செந்தொண்டைவாய்வந்துகாணீரே சேயிழையீர்!வந்துகா[ணீரே. (கச)

நோக்கியசோதை நுணுக்கியமஞ்சளால் *
நாக்குவழித்து நீராட்டுமிந்நம்பிக்கு *
வாக்கும்நயனமும் வாயும்முறுவலும் *
மூக்குமிருந்தவாகாணீரே மொய்குழலீர்! வந்துகாணீரே. (கரு)

விண்கொளமரர்கள் வேதனைதீர * முன்
மண்கொள்வசுதேவர்தம் மகனாய்வந்து *
திண்கொளசுரரைத் தேயவளர்கின்றான் *
கண்களிருந்தவாகாணீரே கனவளையீர்! வந்துகாணீரே. (கசு)

பருவம்நிரம்பாமே பாரெல்லாமுய்ய *
திருவின்வடிவொக்கும் தேவகிபெற்ற *
உருவுகரிய ஒளிமணிவண்ணன் *
புருவமிருந்தவாகாணீரே பூண்முலையீர்!வந்துகாணீரே. (கஎ)

மண்ணும்மலையும் கடலுமுலகேழும் *
உண்ணுந்திறத்து மகிழ்ந்துண்ணும்பிள்ளைக்கு *
வண்ணமெழில்கொள் மகரக்குழையிவை *
திண்ணமிருந்தவாகாணீரே சேயிழையீர்!வந்துகாணீரே. (கஅ)

---

† 'கோவலர்குட்டற்கு' என்றும் பாடம். ‡ 'என்தொண்டை' எனவுங் கூறுவர்.

முற்றிலும்தூதையும் முன்கைம்மேல்பூவையும் *
சிற்றிலிழைத்துத் திரிதருவோர்களை *
பற்றிப்பறித்துக்கொண்டு ஓடும்பரமன்தன் *
நெற்றியிருந்தவாகாணீரே நேரிழையீர்! வந்துகாணீரே. (கக)

அழகியபைம்பொன்னின்கோல் அங்கைக்கொண்டு *
கழல்கள்சதங்கை கலந்தெங்குமார்ப்ப *
மழகன்றினங்கள் மறித்துத்திரிவான் *
குழல்களிருந்தவாகாணீரே குவிமுலையீர்! வந்துகாணீரே. (உ0)

தரவுகொச்சகக்கலிப்பா.

↓↓ சுருப்பார்குழலி யசோதைமுன்சொன்ன *
திருப்பாதகேசத்தைத் தென்புதுவைப்பட்டன் *
விருப்பாலுரைத்த இருபதோடொன்று
முரைப்பார்போய் * வைகுந்தத் தொன்றுவர்தாமே. (உக)

அடிவரவு:—சித முத்து பணை உழ பிறங்கிய மத்த இருங்கை வந்த அதிரும் பெருமா நாள் மை வண்டு என் நோக்கி விண் பருவம் மண் முற்றில் அழகிய சுருப்பார் மாணிக்கம்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

ரு - ஆந் திருமொழி - மாணிக்கங்கட்டி.

கண்ணனைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுதல்.

கலித்தாழிசை. (நீலாம்புரிராகம் - அடதாளம்.)

↓↓ மாணிக்கங்கட்டி வயிரமிடைகட்டி *
ஆணிப்பொன்னாற்செய்த வண்ணச்சிறுத்தொட்டில் *
பேணியுனக்குப் பிரமன்விடுதந்தான் *
மாணிக்குறளனே! தாலேலோ
வையமளந்தானே! தாலேலோ. (க)

உடையார்கனமணியோடு ஒண்மாதுளம்பூ *
இடைவிரவிக்கோத்த எழில் † தெழ்கினோடு *
விடையேறுகாபாலி ஈசன்விடுதந்தான் *
உடையாய்! அழேலழேல்தாலேலோ
உலகமளந்தானே! தாலேலோ. (உ)

† 'தென்கு' என்றும், 'தொழ்கு' என்றுங் கூறுவர்.

என்தம்பிரானார் எழில்திருமார்வர்க்கு *
சந்தமழகிய தாமரைத்தாளர்க்கு *
இந்திரன்தானும் எழிலுடைக்கிண்கிணி *
தந்துவனாய்நின்றான்தாலேலோ
தாமரைக்கண்ணனே! தாலேலோ. (ரு)

சங்கின்வலம்புரியும் சேவடிக்கிண்கிணியும் *
அங்கைச்சரிவளையும் நாணுமரைத்தொடரும் *
அங்கண்விசும்பில் அமரர்கள்போத்தந்தார் *
செங்கட்கருமுகிலே! தாலேலோ
தேவகிசிங்கமே! தாலேலோ. (சு)

எழிலார்திருமார்வுக்கு ஏற்குமிவையென்று *
அழகியவைம்படையும் ஆரமுங்கொண்டு *
வழுவில்கொடையான் † வயிச்சிரவணன் *
தொழுதுவனாய்நின்றான்தாலேலோ
தூமணிவண்ணனே! தாலேலோ. (எ)

ஓதக்கடலின் ஒளிமுத்தினாரமும் *
சாதிப்பவளமும் சந்தச்சரிவளையும் *
மாதக்கவென்று வருணன்விடுதந்தான் *
சோதிச்சுடர்முடியாய்! தாலேலோ
சுந்தரத்தோளனே! தாலேலோ. (அ)

கானார்நறுந்துழாய் கைசெய்தகண்ணியும் *
வானார்செழுஞ்சோலைக் கற்பகத்தின்வாசிகையும் *
தேனார்மலர்மேல் திருமங்கைபோத்தந்தாள் *
கோனே! அழேலழேல்தாலேலோ
குடந்தைக்கிடந்தானே! தாலேலோ. (எ)

கச்சொடுபொற்சுரிகை காம்பு ‡ கனவளை *
உச்சிமணிச்சுட்டி ஒண்தாணிரைப்பொற்பூ *
அச்சுதனுக்கென்று அவனியாள்போத்தந்தாள் *
நச்சுமுலையுண்டாய்! தாலேலோ
நாராயணா! அழேல்தாலேலோ. (அ)

மெய்திமிருநானப்பொடியோடு மஞ்சளும் *
செய்யதடங்கண்ணுக்கு அஞ்சனமும்சிந்தூரமும் *
வெய்யகலைப்பாகி கொண்டுவளாய்நின்றாள் *
ஐயா! அழேலழேல்தாலேலோ
அரங்கத்தணையானே! தாலேலோ. (கூ)

† 'வயிச்சிராவணன்' என்றும் பாடம். ‡ 'கனகவளை' என்றும் பாடம்.

தரவுகொச்சகக்கலிப்பா.

↓↓ வஞ்சனையால்வந்த பேய்ச்சிமுலையுண்ட *
அஞ்சனவண்ணனை ஆய்ச்சிதாலாட்டிய *
செஞ்சொல்மறையவர்சேர் புதுவைப்பட்டன்சொல் *
எஞ்சாமைவல்லவர்க்கு இல்லையிடர்தானே. (கo)

அடிவரவு:—மாணி உடை என் சங்கின் எழில் ஒதக் காணூர் கச்சொடு மெய் வஞ்சனை தன்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

ச - ஆந் திருமொழி - தன்முகத்து.

சந்திரனை அழைத்தல் [அம்புலிப்பருவம்.]

கலித்தலைத்துறை. (மோஹநராகம் - அடதாளம்.)

↓↓ தன்முகத்துச்சுட்டி தூங்கத்தூங்கத்தவழ்ந்துபோய் *
பொன்முகக்கிண்கிணியார்ப்பப் புழுதியளைகின்றான் *
என்மகன்கோவிந்தன்கூத்தினை இளமாமதீ!
நின்முகம்கண்ணுளவாகில் நீயிங்கேநோக்கிப்போ. (க)

என்சிறுக்குட்டன் எனக்கோரின்னமுதெம்பிரான் *
தன்சிறுக்கைகளால் காட்டிக்காட்டியழைக்கின்றான் *
அஞ்சனவண்ணனோடு ஆடலாடவுறுதியேல் *
மஞ்சில்மறையாதே மாமதீ!மகிழ்ந்தோடிவா. (உ)

சுற்றுமொளிவட்டம்சூழ்ந்து சோதிபரந்தெங்கும் *
எத்தனைசெய்யிலும் என்மகன்முகம்நேரொவ்வாய் *
வித்தகன்வேங்கடவாணன் உன்னைவிளிக்கின்ற *
கைத்தலம்நோவாமே அம்புலீ!கடிதோடிவா. (ங)

சக்கரக்கையன் தடங்கண்ணால்மலரவிழித்து *
ஒக்கலைமேலிருந்து உன்னையேசுட்டிக்காட்டுங்காண் *
தக்கதறிதியேல் சந்திரா! சலஞ்செய்யாதே *
மக்கட்பெறாத மலடனல்லையேல்வாகண்டாய். (ச)

அழகியவாயில் அமுதவூறல்தெளிவுறா *
மழலைமுற்றாத இளஞ்சொல்லாலுன்னைக்கூவுகின்றான் *
குழகன்சிரீதரன் கூவக்கூவநீபோதியேல் *
புழை † யிலவாகாதே நின்செவிபுகர்மாமதீ! (ரு)

† 'இலவாகாவே' என்றுங் கூறுவர்.

தண்டொடுசக்கரம் சார்ங்கமேந்துந்தடக்கையன் *
கண்துயில்கொள்ளக்கருதிக் கொட்டாவிகொள்கின்றான் *
உண்டமுலைப்பாலறாகண்டாய் உறங்காவிடில *
விண்தனில்மன்னிய மாமதீ! விரைந்தோடிவா. (சு)

பாலகனென்று பரிபவஞ்செய்யேல் * பண்டொருநாள்
ஆலினிலைவளர்ந்த சிறுக்கனவனிவன் *
மேலெழப்பாய்ந்து பிடித்துக்கொள்ளும்வெகுளுமேல் *
மாலைமதியாதே மாமதீ! மகிழ்ந்தோடிவா. (எ)

சிறியனென்றென்னிளஞ்சிங்கத்தை இகழேல்கண்டாய் *
சிறுமையின்வார்த்தையை மாவலியிடைச்சென்றுகேள் *
சிறுமைப்பிழைகொள்ளில் நீயுமுன்தேவைக்குரியைகாண் *
நிறைமதீ! நெடுமால் விரைந்துன்னைக்கூவுகின்றான். (அ)

தாழியில்வெண்ணெய் தடங்கையாரவிழுங்கிய *
பேழைவயிற்றெம்பிரான்கண்டாய் உன்னைக்கூவுகின்றான் *
ஆழிகொண்டுன்னையெறியும் ஐயுறவில்லைகாண் *
வாழவுறுதியேல் மாமதீ! மகிழ்ந்தோடிவா. (கூ)

↓↓ மைத்தடங்கண்ணி யசோதை தன்மகனுக்கு * இவை
ஒத்தனசொல்லி உரைத்தமாற்றம் * ஒளிபுத்தூர்
வித்தகன்விட்டுசித்தன் விரித்ததமிழிவை *
எத்தனையும்சொல்லவல்லவர்க்கு இடரில்லையே. (க0)

அடிவரவு:—தன் என் சுற்றும் சக்கரம் அழகிய தண்டொடு பாலகன் சிறியன் தாழி மை உய்ய.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

ரு - ஆந் திருமொழி - உய்யவுலகு.

குழந்தையை அசைத்தாட்டுதல். [செங்கீரைப்பருவம்.]

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (முகாரிராகம்-ஆதிதாளம்.)

↓↓ உய்யவுலகுபடைத்துண்டமணிவயிறா!
ஊழிதோறூழிபலஆலினிலையதன்மேல *
பையவுயோகுதுயில்கொண்டபரம்பரனே!
பங்கயநீணயனத்தஞ்சனமேனியனே! *

செய்யவள்நின்னகலம்சேமமெனக்கருதிச்
செல்வுபொலிமகரக்காதுதிகழ்ந்திலக *
ஐய! எனக்கொருகால்ஆடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறே! ஆடுகஆடுகவே. (க)

கோளரியின்னுருவங்கொண்டவுணனுடலம்
குருதிகுழம்பியெழக்கூருகிரால்குடைவாய்! *
மீளவவன்மகனை † மெய்ம்மைகொளக்கருதி
மேலையமரர்பதிமிக்குவெகுண்டுவர *
காளநன்மேகமவைகல்லொடு ‡ கால்பொழியக்
கருதிவரைக்குடையாக்காலிகள்காப்பவனே! *
ஆள! எனக்கொருகால்ஆடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறே! ஆடுகஆடுகவே. (உ)

நம்முடைநாயகனே! நான்மறையின்பொருளே!
நாவியுள்நற்கமலநான்முகனுக்கு * ஒருகால்
தம்மனையானவனே! தரணிதலமுழுதும்
தாரகையின்னுலகுந்தடவியதன்புறமும் *
விம்மவளர்ந்தவனே! வேழமுமேழ்விடையும்
விரவியவேலைதனுள்வென்றுவருமவனே! *
அம்ம! எனக்கொருகால்ஆடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறே! ஆடுகஆடுகவே. (௩)

வானவர்தாம்மகிழவன்சகடமுருள
வஞ்சமுலைப்பேயின் § நஞ்சமதுண்டவனே!
கானகவல்விளவின்காயுதிரக்கருதிக்
கன்றதுகொண்டெறியுங்கருநிறவென்கன்றே! *
தேனுகனும்முரனும்திண்திறல்வெந்நரகன்
என்பவர்தாம்மடியச்செருவதிரச்செல்லும் *
ஆனை! எனக்கொருகால்ஆடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறே! ஆடுகஆடுகவே. (௪)

மத்தளவுந்தயிரும்வார்குழல்நன்மடவார்
வைத்தனநெய்களவால்வாரிவிழுங்கி * ஒருங்
கொத்தவிணைமருதம்உன்னியவந்தவரை
ஊருகரத்தினொடும்உந்தியவெந்திறலோய்! *

† ‘மேன்மை’ என்றும் பாடம். ‡ ‘கார்பொழிய’ என்றும் பாடம்.
§ ‘நெஞ்சமது’ என்றும், ‘நஞ்சமுது’ என்றும் பாடம்.

முத்தினிளமுறுவல்முற்றவருவதன்முன்
முன்னமுகத்தணியார்மொய்குழல்களலைய *
அத்த ! எனக்கொருகால்ஆடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறே! ஆடுகஆடுகவே. (௬)

காயமலர்நிறவா ! கருமுகில்போலுருவா !
கானகமாமடுவில்காளியனுச்சியிலே *
தூயநடம்பயிலும்சுந்தரவென்சிறுவா !
துங்கமதக்கரியின்கொம்புபறித்தவனே ! *
ஆயமறிந்துபொருவானெதிர்வந்தமல்லை
அந்தரமின்றியழித்தாடியதாளிணையாய் ! *
ஆய ! எனக்கொருகால்ஆடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறே ! ஆடுகஆடுகவே. (௭)

துப்புடையாயர்கள்தம்சொல்வழுவாதொருகால்
தூயகருங்குழல்நல்தோகைமயிலனைய *
நப்பினைதன்திறமாநல்விடையேழவிய
நல்லதிறலுடையநாதனுமானவனே ! *
தப்பினபிள்ளைகளைத்தனமிகுசோதிபுகத்
தனியொருதேர்கடவித்தாயொடுகூட்டிய * என்
அப்ப ! எனக்கொருகால்ஆடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறே ! ஆடுகஆடுகவே. (௮)

↓↓ உன்னையுமொக்கலையிற்கொண்டுதமில்மருவி
உன்னொடுதங்கள்கருத்தாயினசெய்துவரும் *
கன்னியருமகிழக்கண்டவர்கண்குளிரக்
கற்றவர்தெற்றிவரப்பெற்றவெனக்கருளி *
மன்னுகுறுங்குடியாய் ! வெள்ளறையாய் ! மதிள்சூழ்
சோலைமலைக்கரசே ! கண்ணபுரத்தமுதே ! *
என்னவலம்களைவாய் ! ஆடுகசெங்கீரை
ஏழுலகும்முடையாய் ! ஆடுகஆடுகவே. (௯)

பாலொடுநெய்தயிரொண்சாந்தொடுசண்பகமும்
பங்கயம்நல்லகருப்பூரமும்நாறிவர *
கோலநறும்பவளச்செந்துவர்வாயினிடைக்
கோமளவெள்ளிமுளைப்போல்சிலபல்லிலக *

நீலநிறத்தழகாரைம்படையின்நடுவே
நின்கனிவாயமுதமிற்றுமுறிந்துவிழ *
ஏலுமறைப்பொருளே! ஆடுகசெங்கீரை
ஏழுலகும்முடையாய்! ஆடுகஆடுகவே. (க)

செங்கமலக்கழலில்சிற்றிதழ்போல்விரலில்
சேர்திகழாழிகளுங்கிண்கிணியும் * அரையில்
தங்கியபொன்வடமும்தாளநன்மாதுளையின்
பூவொடுபொன்மணியும்மோதிரமுங்கிறியும் *
மங்கலவைம்படையும்தோள்வளையும்குழையும்
மகரமும்வாளிகளும்சுட்டியுமொத்திலக *
எங்கள்குடிக்கரசே! ஆடுகசெங்கீரை
ஏழுலகும்முடையாய்! ஆடுகஆடுகவே. (க0)

↓↓ அன்னமும்மீனுருவுமாளரியும்குறளும்
ஆமையுமானவனே! ஆயர்கள்நாயகனே! *
என்னவலம்களைவாய்! ஆடுகசெங்கீரை
ஏழுலகும்முடையாய்! ஆடுகவாடுகவென்று *
அன்னநடைமடவாளசோதையுகந்தபரிசு
ஆனபுகழ்ப்புதுவைப்பட்டனுரைத்ததமிழ் *
இன்னிசைமாலைகளிப்பத்தும்வல்லார் உலகி
லெண்டிசையும்புகழ்மிக்கின்பமதெய்துவரே. (கக)

அடிவரவு:—உய்ய கோளரி நம்முடை வானவர் மத்து காய துப்பு உன்னை பால் செங்கமலம் அன்னம மாணிக்கக்கிண்கிணி.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

கூ - ஆந் திருமொழி - மாணிக்கக்கிண்கிணி.

கைகொட்டி விளையாடுதல். [சப்பாணிப்பருவம்.]

வெண்டளையால்வந்த கலித்தாழிசை. (யமுனாகல்யாணிராகம் - ஆதிதாளம்.)

↓↓ மாணிக்கக்கிண்கிணியார்ப்ப மருங்கின்மேல் *
ஆணிப்பொன்னாற்செய்த ஆய்பொன்னுடைமணி *
பேணிப்பவளவாய் முத்திலங்க * பண்டு
காணிகொண்டகைகளால்சப்பாணி
கருங்குழற்குட்டனே!சப்பாணி. (க)

பொன்னரைநாணொடு மாணிக்கக்கிண்கிணி *
தன்னரையாடத் தனிச்சுட்டிதாழ்ந்தாட *
என்னரைமேல்நின்றிழிந்து உங்களாயர்தம் *
மன்னரைமேல்கொட்டாய்சப்பாணி
மாயவனே! கொட்டாய்சப்பாணி. (௨)

பன்மணிமுத்து இன்பவளம்பதித்தன்ன *
என்மணிவண்ணன்! இலங்குபொற்றோட்டின்மேல் *
நின்மணிவாய்முத்திலங்க நின்னம்மைதன் *
அம்மணிமேல்கொட்டாய்சப்பாணி
ஆழியங்கையனே! சப்பாணி. (௩)

தூநிலாமுற்றத்தே போந்துவிளையாட *
வானிலாவம்புலீ! சந்திரா! வாவென்று *
நீநிலாநின்புகழாநின்ற ஆயர்தம் *
கோநிலாவக்கொட்டாய்சப்பாணி
குடந்தைக்கிடந்தானே ! சப்பாணி. (௪)

புட்டியிற்சேறும் புழுதியும்கொண்டுவந்து *
அட்டியமுக்கி அகம்புக்கறியாமே *
சட்டித்தயிரும் தடாவினில்வெண்ணெயுமுண் *
பட்டிக்கன்றே ! கொட்டாய்சப்பாணி
பற்பநாபா ! கொட்டாய்சப்பாணி. (௫)

தாரித்துநூற்றுவர் தந்தைசொற்கொள்ளாது *
போருய்த்துவந்து புகுந்தவர்மண்ணாளப் *
பாரித்தமன்னர்படப் பஞ்சவர்க்கு * அன்று
தேருய்த்தகைகளால்சப்பாணி
தேவகிசிங்கமே ! சப்பாணி. (௬)

பரந்திட்டுநின்ற படுகடல் தன்னை *
இரந்திட்டகைம்மேல் எறிதிரைமோத *
கரந்திட்டுநின்ற கடலைக்கலங்க *
சரந்தொட்டகைகளால்சப்பாணி
சார்ங்கவிற்கையனே ! சப்பாணி. (௭)

குரக்கினத்தாலே குரைகடல்தன்னை *
நெருக்கியணைகட்டி நீணீரிலங்கை *
அரக்கரவிய அடுகணையாலே *
நெருக்கியகைகளால்சப்பாணி
நேமியங்கையனே! சப்பாணி. (அ)

அளந்திட்டதூணை அவன்தட்ட * ஆங்கே
வளர்ந்திட்டு வாளுகிர்ச்சிங்கவுருவாய் *
உளந்தொட்டிரணியன் ஒண்மார்வகலம் *
பிளந்திட்டகைகளால்சப்பாணி
பேய்முலையுண்டானே! சப்பாணி. (௯)

அடைந்திட்டமரர்கள் ஆழ்கடல்தன்னை *
மிடைந்திட்டு மந்தரம் மத்தாகநாட்டி *
வடம்சுற்றிவாசுகி வன்கயிறாக *
கடைந்திட்டகைகளால்சப்பாணி
கார்முகில்வண்ணனே!சப்பாணி. (௧0)

தரவுகொச்சகக்கலிப்பா.

↓↓ ஆட்கொள்ளத்தோன்றிய ஆயர்தங்கோவினை *
நாட்கமழ்பூம்பொழில் வில்லிபுத்தூர்ப்பட்டன் *
† வேட்கையாற்சொன்ன சப்பாணியீரைந்தும் *
வேட்கையினாற்சொல்லுவார் வினைபோமே. (௧௧)

அடிவரவு:—மாணிக்கப் பொன் பல் தூநிலா புட்டி தாரித்து பரந்து குரக்கினம் அளந்து அடைந்து ஆட்கொள்ளத் தொடர்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

எ - ஆந் திருமொழி - தொடர்சங்கிலிகை.

தளர்நடை நடத்தல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (அடாணாராகம் - ஆதிதாளம்.)

↓↓ தொடர்‡சங்கிலிகைசலார்பிலாரென்னத் தூங்குபொன்மணியொலிப்ப *
படுமும்மதப்புனல்சோர வாரணம்பையநின்றூர்வதுபோல் * [ப்ப *
உடன்கூடிக்கிண்கிணியாரவாரிப்ப உடைமணிபறைகறங்க *
தடந்தாளிணைகொண்டுசார்ங்கபாணி தளர்நடைநடவானோ. (க)

† 'வேட்கையினால்' என்று சிலர். ‡ 'சங்கிலிகள்' எனவும் கூறுவர்.

செக்கரிடைநுனிக்கொம்பில்தோன்றும் சிறுபிறைமுளைப்போல *
நக்கசெந்துவர்வாய்த்திண்ணைமீதே நளிர்வெண்பல்முளையிலக *
அக்குவடமுடுத்தாமைத்தாலிபூண்ட அனந்தசயனன் *
தக்கமாமணிவண்ணன்வாசுதேவன் தளர்நடைநடவானோ. (௨)

மின்னுக்கொடியுமோர்வெண்திங்களும் சூழ்பரிவேடமுமாய் *
பின்னல்துலங்குமரசிலையும் பீதகச்சிற்றாடையொடும் *
மின்னில்பொலிந்ததோர்கார்முகில்போலக் கழுத்தினிற்காறையொடும் *
தன்னில்பொலிந்தவிருடீகேசன் தளர்நடைநடவானோ. (௩)

கன்னற்குடம்திறந்தாலொத்தூறிக் கணகணசிரித்துவந்து *
முன்வந்துநின்றுமுத்தந்தரும் என்முகில்வண்ணன் திருமார்வன் *
தன்னைப்பெற்றேற்குத்தன்வாயமுதம்தந்து என்னைத்தளிர்ப்பிக்கின்றான் *
தன்னெற்றுமாற்றலர்தலைகள்மீதே தளர்நடைநடவானோ. (௪)

முன்னலோர்வெள்ளிப்பெருமலைக்குட்டன் மொடுமொடுவிரைந்தோட *
பின்னைத்தொடர்ந்ததோர்கருமலைக்குட்டன் பெயர்ந்தடியிடுவதுபோல் *
பன்னியுலகம்பரவியோவாப் புகழ்ப்பலதேவனென்னும் *
தன்நம்பியோடப்பின்கூடச்செல்வான் தளர்நடைநடவானோ. (௫)

ஒருகாலிற்சங்கொருகாலிற்சக்கரம் உள்ளடிபொறித்தமைந்த *
இருகாலுங்கொண்டங்கங்கெழுதினாற்போல் இலச்சினைபடநடந்து *
பெருகாநின்றவின்பவெள்ளத்தின்மேல் பின்னையும்பெய்துபெய்து *
கருகார்க்கடல்வண்ணன்காமர்தாதை தளர்நடைநடவானோ. (௬)

படர்பங்கயமலர்வாய்நெகிழப் பனிபடுசிறுதுளிபோல *
இடங்கொண்டசெவ்வாயூறியூறி இற்றிற்றுவீழநின்று *
கடுஞ்சேக்கழுத்தின்மணிக்குரல்போல் உடைமணிகணகணென *
தடந்தாளிணைகொண்டுசாரங்கபாணி தளர்நடைநடவானோ. (௭)

க்கம்கருஞ்சிறுப்பாறைமீதே அருவிகள்பகர்ந்தனைய *
அக்குவடமிழிந்தேறித்தாழ அணியல்குல்புடைபெயர *
மக்களுலகினில்பெய்தறியா மணிக்குழவியுருவின் *
தக்கமாமணிவண்ணன்வாசுதேவன் தளர்நடைநடவானோ. (௮)

வெண்புழுதிமேற்பெய்துகொண்டளைந்ததோர் வேழத்தின்கருங்கன்றுபோல் *
தெண்புழுதியாடித்திரிவிக்கிரமன் சிறுபுகர்படவியர்த்து *
ஒண்போதலர்கமலச்சிறுக்காலுறைத் தொன்றும்நோவாமே *
தண்போதுகொண்டதவிசின்மீதே தளர்நடைநடவானோ. (௯)

திரைநீர்ச்சந்திரமண்டலம்போல் செங்கண்மால்கேசவன் * தன்
திருநீர்முகத்துத்துலங்குசுட்டி திகழ்ந்தெங்கும்புடைபெயர *
பெருநீர்த்திரையெழுகங்கையிலும் பெரியதோர்தீர்த்தபலம்
தருநீர் * சிறுச்சண்ணம்துள்ளம்சோரத் தளர்நடைநடவானோ. (கo)

↓↓ ஆயர்குலத்தினில்வந்துதோன்றிய அஞ்சனவண்ணன்தன்னை *
தாயர்மகிழவொன்னார்தளரத் தளர்நடைநடந்ததனை *
வேயர்புகழ்விட்டுசித்தன் சீரால்விரித்தனவுரைக்கவல்லார் *
மாயன்மணிவண்ணன்தாள்பணியும் மக்களைப்பெறுவார்களே. (கக)

அடிவரவு:—தொடர் செக்கர் மின்னுக் கன்னல் முன்னல் ஒருகால் படர் பக்கம் வெண் திரை ஆயர் பொன்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

அ - ஆந் திருமொழி - பொன்னியல்.

அணைத்துக்கொள்ள அழைத்தல் [அச்சோப்பருவம்.]

கலித்தாழிசை. (தேசியாாகம் - ஆதிதாளம்.)

↓↓ பொன்னியல்கிண்கிணி சுட்டிபுறங்கட்டி *
தன்னியலோசை சலன்சலனென்றிட *
மின்னியல்மேகம் விரைந்தெதிர்வந்தாற்போல் *
என்னிடைக்கோட்டரா அச்சோவச்சோ
எம்பெருமான்! வாரா அச்சோவச்சோ. (க)

செங்கமலப்பூவில் தேனுண்ணும்வண்டேபோல் *
பங்கிகள்வந்து உன்பவளவாய்மொய்ப்ப *
சங்குவில்வாள்தண்டு சக்கரமேந்திய *
அங்கைகளாலேவந்தச்சோவச்சோ
ஆரத்தழுவா † வந்தச்சோவச்சோ (உ)

பஞ்சவர்தூதனாய்ப் பாரதம்கைசெய்து *
நஞ்சுமிழ்நாகங்கிடந்த நற்பொய்கைபுக்கு *
அஞ்சப்பணத்தின்மேல் பாய்ந்திட்டருள்செய்த *
அஞ்சனவண்ணனே! அச்சோவச்சோ
ஆயர்பெருமானே! அச்சோவச்சோ. (ங)

† 'ஆரத்தழுவாய்' என்று சிலர் பாடம்.

நாறியசாந்தம் நமக்கிறைநல்கென்ன *
தேறியவளும் திருவுடம்பிற்பூச *
ஊறியகூனினை உள்ளேயொடுங்க * அன்
றேறவுருவினாய்! அச்சோவச்சோ
எம்பெருமான்! வாரா அச்சோவச்சோ. (௪)

கழல்மன்னர்சூழக் கதிர்போல்விளங்கி *
எழலுற்றுமீண்டே இருந்துன்னைநோக்கும் *
சுழலைப்பெரிதுடைத் துச்சோதனனை *
அழலவிழித்தானே! அச்சோவச்சோ
ஆழியங்கையனே! அச்சோவச்சோ. (௫)

போரொக்கப்பண்ணி இப்பூமிப்பொறைதீர்ப்பான் *
தேரொக்கவூர்ந்தாய் செழுந்தார்விசயற்காய் *
காரொக்குமேனிக் கரும்பெருங்கண்ணனே! *
ஆரத்தழுவாவந்து அச்சோவச்சோ
ஆயர்கள்போரேறே! அச்சோவச்சோ. (௬)

மிக்கபெரும்புகழ் மாவலிவேள்வியில் *
தக்கதிதன்றென்று தானம்விலக்கிய *
சுக்கிரன்கண்ணைத் துரும்பாற்கிளறிய *
சக்கரக்கையனே! அச்சோவச்சோ
சங்கமிடத்தானே! அச்சோவச்சோ. (௭)

என்னிதுமாயம் என்னப்பனறிந்திலன் *
முன்னையவண்ணமே கொண்டளவாயென்ன *
மன்னுநமுசியை வானிற்சுழற்றிய *
மின்னுமுடியனே! அச்சோவச்சோ
வேங்கடவாணனே! அச்சோவச்சோ. (௮)

கண்டகடலும் மலையுமுலகேழும் *
முண்டத்துக்காற்றா முகில்வண்ணா! ஓ! என்று *
இண்டைச்சடைமுடி ஈசனிரக்கொள்ள *
மண்டைநிறைத்தானே! அச்சோவச்சோ
மார்வில்மறுவனே! அச்சோவச்சோ. (௯)

துன்னியபேரிருள் சூழ்ந்துலகைமூட *
மன்னியநான்மறை முற்றும்மறைந்திட *
பின்னிவ்வுலகினில் பேரிருள்நீங்க * அன்
றன்னமதானானே ! அச்சோவச்சோ
† அருமறைதந்தானே ! அச்சோவச்சோ. (கo)

தரவுகொச்சகக்கலிப்பா.

↓↓ நச்சுவார்முன்னிற்கும் நாராயணன்தன்னை *
அச்சோவருகவென்று ஆய்ச்சியுரைத்தன *
மச்சணிமாடப் புதுவைக்கோன்பட்டன்சொல் *
நிச்சலும்பாடுவார் நீள்விசும்பாள்வரே. (கக)

அடிவரவு:—பொன் செங்கமலம் பஞ்சவர் நாறிய கழல் போர் மிக்க என்னிது கண்ட துன்னிய நச்சு வட்டு.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

கூ - ஆந் திருமொழி - வட்டுநடுவே.

கண்ணனை முதுகிற்கட்டிக்கோள்ளும்படி அழைத்தல்.

வெண்டளையால்வந்த கலித்தாழிசை. (உசேனிராகம்-ருபகதாளம்.)

↓↓ வட்டுநடுவே வளர்கின்ற * மாணிக்க
மொட்டு ‡ நுனையில் முளைக்கின்றமுத்தேபோல் *
சொட்டுச்சொட்டென்னத் துளிக்கத்துளிக்க * என்
குட்டன்வந்தென்னைப்புறம்புல்குவான்
கோவிந்தனென்னைப்புறம்புல்குவான். (க)

§ கிங்கிணிகட்டிக் கிறிகட்டி * கையினில்
கங்கணமிட்டுக் கழுத்தில்தொடர்கட்டி *
தன்கணத்தாலே சதிராநடந்துவந்து *
என்கண்ணனென்னைப்புறம்புல்குவான்
எம்பிரானென்னைப்புறம்புல்குவான். (உ)

கத்தக்கதித்துக் கிடந்தபெருஞ்செல்வம் *
ஒத்துப்பொருந்திக்கொண்டு உண்ணாதுமண்ணாள்வான் *
கொத்துத்தலைவன் குடிகெடத்தோன்றிய *
அத்தன்வந்தென்னைப்புறம்புல்குவான்
ஆயர்களேறென்புறம்புல்குவான். (ஙூ)

† 'ஆர்மறை' என்னும் பாடம் வெண்டளைக்குச் சேரும்.
‡ 'நுனியில்' என்றும் கூறுவர். § 'கிண்கிணி' எனவுஞ் சொல்லுவர்.

நாந்தகமேந்திய நம்பிசரணென்று *
தாழ்ந்ததனஞ்சயற்காகி * தரணியில்
வேந்தர்களுட்க விசயன்மணித்திண்டேர் *
ஊர்ந்தவனென்னைப்புறம்புல்குவான்
உம்பர்கோனென்னைப்புறம்புல்குவான். (ச)

வெண்கலப்பத்திரம் கட்டிவிளையாடி *
கண்பல †செய்த கருந்தழைக்காவின்கீழ் *
பண்பலபாடிப் பல்லாண்டிசைப்ப * பண்டு
மண்பலகொண்டான்புறம்புல்குவான்
வாமனனென்னைப்புறம்புல்குவான். (ரு)

சத்திரமேந்தித் தனியொருமாணியாய் *
உத்தரவேதியில் நின்றவொருவனை *
‡ கத்திரியர்காணக் காணிமுற்றுங்கொண்ட *
பத்திராகாரன்புறம்புல்குவான்
பாரளந்தானென்புறம்புல்குவான். (சு)

பொத்தவுரலைக்கவிழ்த்து அதன்மேலேறி *
தித்தித்தபாலும் தடாவினில்வெண்ணெயும் *
மெத்தத்திருவயிறார விழுங்கிய *
அத்தன்வந்தென்னைப்புறம்புல்குவான்
ஆழியானென்னைப்புறம்புல்குவான். (எ)

மூத்தவைகாண முதுமணற்குன்றேறி *
கூத்துவந்தாடிக் குழலாலிசைபாடி *
வாய்த்தமறையோர் வணங்க * இமையவர்
ஏத்தவந்தென்னைப்புறம்புல்குவான்
எம்பிரானென்னைப்புறம்புல்குவான். (அ)

கற்பகக்காவு கருதியகாதலிக்கு *
இப்பொழுதீவனென்று இந்திரன்காவினில் *
நிற்பனசெய்து நிலாத்திகழ்முற்றத்துள் *
உய்த்தவனென்னைப்புறம்புல்குவான்
உம்பர்கோனென்னைப்புறம்புல்குவான். (கூ)

† 'பெய்த' என்றும், 'பெய்து' என்றும் பாடம்.
‡ 'கத்திரிவர்' என்று அத்யாபகபாடம்.

தரவுகொச்சகக்கலிப்பா.

ஆய்ச்சியன்றாழிப்பிரான் புறம்புல்கிய *
வேய்த்தடந்தோளிசொல் விட்டுசித்தன்மகிழ்ந்து *
ஈத்ததமிழிவை ஈரைந்தும்வல்லவர் *
வாய்த்தநன்மக்களைப்பெற்று மகிழ்வரே. (க0)

அடிவரவு:—வட்டு கிங்கிணி கத்த நாந்தகம் வெண்கலம் சத்திரம் பொத்த மூத்தவை கற்பகம் ஆய்ச்சி மெச்சூது.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்து.

க - ஆந் திருமொழி - மெச்சூது.

பூச்சிகாட்டி விளையாடுதல்.

கலித்தாழிசை. (பந்துவராளிராகம் - ரூபகதாளம்.)

மெச்சூதுசங்கமிடத்தான் நல்வேயூதி *
பொய்ச்சூதில்தோற்ற பொறையுடைமன்னர்க்காய் *
பத்தூர்பெறாதன்று பாரதம்கைசெய்த *
அத்தூதனப்பூச்சிகாட்டுகின்றான்
அம்மனே! அப்பூச்சிகாட்டுகின்றான். (க)

மலைபுரைதோள்மன்னவரும் மாரதரும்மற்றும் *
பலர்குலைய நூற்றுவரும்பட்டழிய * பார்த்தன்
சிலைவளையத் திண்தேர்மேல்முன்னின்ற * செங்கண்
அலவலைவந்தப்பூச்சிகாட்டுகின்றான்
அம்மனே! அப்பூச்சிகாட்டுகின்றான். (உ)

காயுநீர்புக்குக் கடம்பேறி * காளியன்
தீயபணத்தில் சிலம்பார்க்கப்பாய்ந்தாடி *
வேயின்குழலூதி வித்தகனாய்நின்ற *
ஆயன்வந்தப்பூச்சிகாட்டுகின்றான்
அம்மனே! அப்பூச்சிகாட்டுகின்றான். (ந)

இருட்டில்பிறந்துபோய் ஏழைவல்லாயர் *
மருட்டைத்தவிர்ப்பித்து வன்கஞ்சன்மாளப்
புரட்டி * அந்நாளெங்கள் பூம்பட்டுக்கொண்ட *
அரட்டன்வந்தப்பூச்சிகாட்டுகின்றான்
அம்மனே! அப்பூச்சிகாட்டுகின்றான். (ச)

சேப்பூண்ட சாடுசிதறி * திருடிநெய்க்
காப்பூண்டு நந்தன்மனைவிகடைதாம்பால் *
சோப்பூண்டு துள்ளித்துடிக்கத்துடிக்க * அன்
றாப்பூண்டானப்பூச்சிகாட்டுகின்றான்
அம்மனே! அப்பூச்சிகாட்டுகின்றான். (ரு)

செப்பிளமென்முலைத் தேவகிநங்கைக்கு *
சொப்படத்தோன்றித் தொறுப்பாடியோம்வைத்த *
துப்பமும்பாலும் தயிரும்விழுங்கிய *
அப்பன்வந்தப்பூச்சிகாட்டுகின்றான்
அம்மனே! அப்பூச்சிகாட்டுகின்றான். (சு)

தத்துக்கொண்டாள்கொலோ? தானேபெற்றாள்கொலோ? *
சித்தமனையாள் அசோதையிளஞ்சிங்கம் *
கொத்தார்கருங்குழல் கோபாலகோளரி *
அத்தன்வந்தப்பூச்சிகாட்டுகின்றான்
அம்மனே! அப்பூச்சிகாட்டுகின்றான். (எ)

கொங்கை வன்கூனிசொற்கொண்டு * குவலயத்
துங்கக்கரியும் பரியுமிராச்சியமும் *
எங்கும்பரதற்கருளி வன்கானடை *
அங்கண்ணனப்பூச்சிகாட்டுகின்றான்
அம்மனே! அப்பூச்சிகாட்டுகின்றான் (அ)

பதகமுதலைவாய்ப் பட்டகளிறு *
கதறிக்கைகூப்பி என்கண்ணா! கண்ணா! வென்ன *
உதவப்புள்ளூர்ந்து அங்குறுதுயர்தீர்த்த *
அதகன்வந்தப்பூச்சிகாட்டுகின்றான்
அம்மனே! அப்பூச்சிகாட்டுகின்றான். (கூ)

தரவுகொச்சகக்கலிப்பா.

↓↓ வல்லாளிலங்கைமலங்கச் சரந்துரந்த *
வில்லாளனை விட்டுசித்தன் † விரித்த *
சொல்லார்ந்தவப்பூச்சிப்பாடலிவைபத்தும்
வல்லார்போய் * வைகுந்தம் மன்னியிருப்பரே. (க0)

அடிவரவு:—மெச்சு மலை காயும் இருட்டு சேப்பூண்ட செப்பு தத்துகொங்கை பதகம் வல்லாள் அரவணையாய்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

† 'விரித்தன' என்ற பாடம் வெண்டளைக்குச் சேரும்.

௨ - ஆந் திருமொழி - அரவணையாய்.

கண்ணனை முலையுண்ண அழைத்தல்.

கலிவிருத்தம். (புன்னாகவராளிராகம் - ரூபகதாளம்.)

↓↓ அரவணையாய்! ஆயரேறே! அம்மமுண்ணத் துயிலெழாயே *
இரவுமுண்ணாதுறங்கிநீபோய் இன்றுமுச்சிகொண்டதாலோ! *
வரவுங்காணேன்வயிறசைந்தாய் வனமுலைகள்சோர்ந்துபாய *
திருவுடையவாய்மடுத்துத் திளைத்துதைத்துப்பருகிடாயே. (௧)

வைத்தநெய்யுங்காய்ந்தபாலும் வடிதயிரும்நறுவெண்ணெயும் *
இத்தனையும்பெற்றறியேன் எம்பிரான்! நீபிறந்தபின்னை *
எத்தனையும்செய்யப்பெறுவாய் யாதும்செய்யேன்கதம்படாதே *
முத்தனையமுறுவல்செய்து மூக்குறிஞ்சிமுலையுணாயே. (௨)

தந்தம்மக்களழுதுசென்றால் தாய்மாராவார்தரிக்ககில்லார் *
வந்துநின்மேல்பூசல்செய்ய வாழவல்லவாசுதேவா! *
உந்தையாருன்திறத்தரல்லர் உன்னைநானொன்றுரப்பமாட்டேன் *
நந்தகோபனணிசிறுவா! நான்சுரந்தமுலையுணாயே. (௩)

கஞ்சன்தன்னால்புணர்க்கப்பட்ட கள்ளச்சகடுகலக்கழிய *
பஞ்சியன்னமெல்லடியால் பாய்ந்தபோதுநொந்திடுமென்று *
அஞ்சினேன்காண்அமரர்கோவே! ஆயர்கூட்டத்தளவன்றாலோ *
கஞ்சனையுன்வஞ்சனையால் வலைப்படுத்தாய்! முலையுணாயே. (௪)

தீயபுந்திக்கஞ்சனுன்மேல் சினமுடையன்,சோர்வுபார்த்து *
மாயந்தன்னால்வலைப்படுக்கில் வாழகில்லேன்வாசுதேவா! *
தாயர்வாய்ச்சொல்கருமங்கண்டாய் சாற்றிச்சொன்னேன்போகவேண்டா *
ஆயர்பாடிக்கணிவிளக்கே! அமர்ந்துவந்தென்முலையுணாயே. (௫)

மின்னனையநுண்ணிடையார் விரிகுழல்மேல்நுழைந்தவண்டு *
இன்னிசைக்கும்வில்லிபுத்தூர் இனிதமர்ந்தாய்! * உன்னைக்கண்டார்
என்னநோன்புநோற்றாள்கொலோ இவனைப்பெற்றவயிறுடையாள்! *
என்னும்வார்த்தையெய்துவித்த இருடீகேசா! முலையுணாயே. (௬)

பெண்டிர்வாழ்வார்நின்னொப்பாரைப் பெறுதுமென்னுமாசையாலே *
கண்டவர்கள்போக்கொழிந்தார் கண்ணிணையால்கலக்கநோக்கி *
வண்டுலாம்பூங்குழலினார் உன்வாயமுதமுண்ணவேண்டி *
கொண்டுபோவான்வந்துநின்றார் கோவிந்தா! நீமுலையுணாயே. (௭)

இருமலைபோலெதிர்ந்தமல்லர் இருவரங்கமெரிசெய்தாய் * உன்
திருமலிந்துதிகழ்மார்வு தேக்கவந்தென்னல்குலேறி *
ஒருமுலையைவாய்மடுத்து † ஒருமுலையைநெருடிக்கொண்டு *
இருமுலையும்முறைமுறையா வேங்கியேங்கியிருந்துணாயே. (அ)

அங்கமலப்போதகத்தில் அணிகொள்முத்தம்சிந்தினாற்போல் *
செங்கமலமுகம்வியர்ப்பத் தீமைசெய்திம்முற்றத்தூடே *
அங்கமெல்லாம்புழுதியாக அளையவேண்டாஅம்ம! * விம்ம
அங்கமரர்க்கமுதளித்த அமரர்கோவே! முலையுணாயே. (௯)

ஓடவோடக்கிண்கிணிகள் ஒலிக்குமோசைப்பாணியாலே *
பாடிப்பாடிவருகின்றாயைப் பற்பநாபனென்றிருந்தேன் *
ஆடியாடியசைந்தசைந்திட்டு அதனுக்கேற்றகூத்தையாடி *
ஓடியோடிப்போய்விடாதே உத்தமா! நீமுலையுணாயே. (௧௦)

↓↓ வாரணிந்தகொங்கையாய்ச்சி மாதவாவுண்ணென்றமாற்றம் *
நீரணிந்தகுவளைவாசம் நிகழநாறும்வில்லிபுத்தூர் *
பாரணிந்ததொல்புகழான் பட்டர்பிரான்பாடல்வல்லார் *
சீரணிந்தசெங்கண்மால்மேல் சென்றசிந்தைபெறுவர்தாமே. (௧௧)

அடிவரவு:—அரவணை வைத்த தந்தம் கஞ்சன் தீய மின் பெண்டிர் இருமலை அங்கமலம் ஓட வாரணிந்த போய்ப்பாடு.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

௩ - ஆம் திருமொழி - போய்ப்பாடு.

துவாதசநாம மாஹாத்மியம் : காதுகுத்தல்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (அசாவேரிராகம் - ஆதிதாளம்.)

↓↓ போய்ப்பாடுடையநின்தந்தையும்தாழ்த்தான்
பொருதிறற்கஞ்சன்கடியன் *
காப்பாருமில்லைகடல்வண்ணா! உன்னைத்
தனியேபோயெங்கும்திரிதி *
பேய்ப்பால்முலையுண்டபித்தனே!
கேசவநம்பீ! உன்னைக்காதுகுத்த *
ஆய்ப்பாலர்பெண்டுகளெல்லாரும்வந்தார்
அடைக்காய்திருத்திநான்வைத்தேன். (௧)

† 'ஒருமுலைகை நெருடிக்கொண்டு' என்னும் பாடம் வ்யாக்யாநத்தோடு நன்கு பொருந்தும்.

வண்ணப்பவளமருங்கினிற்சாத்தி
மலர்ப்பாதக்கிண்கிணியார்ப்ப *
நண்ணித்தொழுமவர்சிந்தைபிரியாத
நாராயணா! இங்கேவாராய் *
எண்ணற்கரியபிரானே! திரியை
யெரியாமேகாதுக்கிடுவன் *
கண்ணுக்குநன்றுமழகுமுடைய
கனகக்கடிப்புமிவையா! (உ)

வையமெல்லாம்பெறும்வார்கடல்வாழும்
மகரக்குழைகொண்டுவைத்தேன் *
வெய்யவேகாதில்திரியையிடுவன்
நீவேண்டியதெல்லாம்தருவன் *
உய்யவிவ்வாயர்குலத்தினில்தோன்றிய
ஒண்சுடராயர்கொழுந்தே! *
மையன்மைசெய்திளவாய்ச்சியருள்ளத்து
மாதவனே! இங்கேவாராய். (௩)

வணநன்றுடையவயிரக்கடிப்பிட்டு
வார்காதுதாழப்பெருக்கி *
குணநன்றுடையரிக்கோபாலபிள்ளைகள்
கோவிந்தா! நீசொல்லுக்கொள்ளாய் *
இணைநன்றழகியவிக்கடிப்பிட்டால்
இனியபலாப்பழம்தந்து *
சுணநன்றணிமுலையுண்ணத்தருவன்நான்
சோத்தம்பிரான்! இங்கேவாராய். (௪)

சோத்தம்பிரானென்றிரந்தாலும்கொள்ளாய்
சுரிகுழலாரொடுநீபோய் *
கோத்துக்குரவைபிணைந்திங்குவந்தால்
குணங்கொண்டிடுவனோநம்பீ! *
பேர்த்தும்பெரியனவப்பம்தருவன்
பிரானே! திரியிடவொட்டில் *
வேய்த்தடந்தோளார்விரும்புகருங்குழல்
விட்டுவே! நீயிங்கேவாராய். (௫)

விண்ணெல்லாம்கேட்கவழுதிட்டாய்
உன்வாயில்விரும்பியதனைநான்நோக்கி *
மண்ணெல்லாம்கண்டென்மனத்துள்ளேயஞ்சி
மதுசூதனேயென் †றிருந்தேன் *

† 'அறிந்தேன்' என்ற பாடம் வ்யாக்யாநத்துக்கு ஒக்கும்.

புண்ணேதுமில்லையுன்காதுமறியும்
பொறுத்திறைப்போதிருநம்பீ! *
கண்ணா! என்கார்முகிலே!
கடல்வண்ணா! காவலனே! முலையுணாயே. (௬)

முலையேதும்வேண்டேனென்றோடி
நின்காதில்கடிப்பைப்பறித்தெறிந்திட்டு *
மலையையெடுத்துமகிழ்ந்துகன்மாரிகாத்துப்
பசுநிரைமேய்த்தாய்! *
சிலையொன்றிறுத்தாய்! திரிவிக்கிரமா!
திருவாயர்பாடிப்பிரானே! *
தலைநிலாப்போதேயுன்காதைப்பெருக்காதே
விட்டிட்டேன்குற்றமேயன்றே. (௭)

என்குற்றமேயென்றுசொல்லவும்வேண்டாகாண்
என்னைநான்மண்ணுண்டேனாக *
அன்புற்றுநோக்கியடித்தும்பிடித்தும
அனைவர்க்குங்காட்டிற்றிலையே *
வன்புற்றரவின்பகைக்கொடி வாமனநம்பீ!
உன்காதுகள்தூரும் *
துன்புற்றனவெல்லாம்தீர்ப்பாய்பிரானே!
திரியிட்டுச்சொல்லுகேன்மெய்யே. (௮)

மெய்யென்றுசொல்லுவார்சொல்லைக்கருதித்
தொடுப்புண்டாய்வெண்ணெயையென்று *
கையைப்பிடித்துக்கரையுரலோடென்னைக்
காணவேகட்டிற்றிலையே *
செய்தனசொல்லிச்சிரித்தங்கிருக்கில்
சிரீதரா! உன்காதுதூரும் *
கையில்திரியையிடுகிடாய் இந்நின்ற
காரிகையார்சிரியாமே. (௯)

காரிகையார்க்குமுனக்குமிழுக்குற்றென்
காதுகள்வீங்கியெரியில் *
தாரியாதாகில்தலைநொந்திடுமென்று
விட்டிட்டேன்குற்றமேயன்றே *

சேரியில்பிள்ளைகளெல்லாரும் காது
பெருக்கித்திரியவும்காண்டி *
ஏர்விடைசெற்றிளங்கன்றெறிந்திட்ட
இருடீகேசா! என்தன்கண்ணே! (௧௦)

கண்ணைக்குளிரக்கலந்தெங்கும்நோக்கிக்
கடிகமழ்பூங்குழலார்கள் *
எண்ணத்துளென்றுமிருந்து தித்திக்கும்
பெருமானே! எங்களமுதே *
உண்ணக்கனிகள்தருவன் கடிப்பொன்றும்
நோவாமேகாதுக்கிடுவன் *
பண்ணைக்கிழியச்சகடமுதைத்திட்ட
பற்பநாபா! இங்கேவாராய். (௧௧)

வாவென்றுசொல்லியென்கையைப்பிடித்து
வலியவேகாதில்கடிப்பை *
நோவத் † திரிக்கிலுனக்கிங்கிழுக்குற்றென்
காதுகள்நொந்திடுங்கில்லேன் *
நாவற்பழங்கொண்டுவைத்தேன்
இவை ‡ காணாய்நம்பீ! * முன்வஞ்சமகளைச்
சாவப்பாலுண்டுசகடிறப்பாய்ந்திட்ட
தாமோதரா! இங்கேவாராய். (௧௨)

↓↓ வார்காதுதாழப்பெருக்கியமைத்து
மகரக்குழையிடவேண்டி *
சீராலசோதைதிருமாலைச்சொன்னசொல்
சிந்தையுள்நின்றுதிகழ *
பாரார்தொல்புகழான்புதுவைமன்னன்
பன்னிருநாமத்தாற்சொன்ன *
ஆராதவந்தாதிபன்னிரண்டும்வல்லார்
அச்சுதனுக்கடியாரே. (௧௩)

அடிவரவு:—போய் வண்ணம் வையம் வணம் சோத்தம் விண் முலை என் மெய் காரிகை கண்ணை வா வார்காது வெண்ணெயளைந்த.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

---

† 'தரிக்கில்' என்றும் பாடம். ‡ 'ஆணாய்' என்று சிலர்க்குப் பாடம்.

ச - ஆந் திருமொழி - வெண்ணெயளைந்த.

கண்ணனை நீராட அழைத்தல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (பிலஹரிராகம்-ஜம்பைதாளம்.)

† வெண்ணெயளைந்தகுணுங்கும் விளையாடுபுழுதியுங்கொண்டு *
திண்ணெனவிவ்விராவுன்னைத் தேய்த்துக்கிடக்கநானொட்டேன் *
எண்ணெய்புளிப்பழங்கொண்டு இங்கெத்தனைபோதுமிருந்தேன் *
நண்ணலரியபிரானே! நாரணா! நீராடவாராய். (க)

கன்றுகளோடச்செவியில் கட்டெறும்புபிடித்திட்டால் *
தென்றிக்கெடுமாகில் வெண்ணெய்திரட்டிவிழுங்குமாகாண்பன் *
நின்றமராமரம்சாய்த்தாய்! நீபிறந்ததிருவோணம் *
இன்று, நீநீராடவேண்டும் எம்பிரான்! ஓடாதேவாராய். (உ)

பேய்ச்சிமுலையுண்ணக்கண்டு பின்னையும்நில்லாதென்னெஞ்சம *
ஆய்ச்சியரெல்லாருங்கூடி அழைக்கவும் நான்முலைதந்தேன் *
காய்ச்சினநீரொடுநெல்லி கடாரத்தில்பூரித்துவைத்தேன் *
வாய்த்தபுகழ்மணிவண்ணா! மஞ்சனமாடநீவாராய். (௩)

கஞ்சன்புணர்ப்பினில்வந்த கடியசகடமுதைத்து *
வஞ்சகப்பேய்மகள்துஞ்ச வாய்முலைவைத்தபிரானே! *
மஞ்சளுஞ்செங்கழுநீரின் வாசிகையும் நாறுசாந்தும் *
அஞ்சனமுங்கொண்டுவைத்தேன் அழகனே! நீராடவாராய். (ச)

அப்பம்கலந்த ‡ சிற்றுண்டி அக்காரம்பாலிற்கலந்து *
சொப்படநான்சுட்டுவைத்தேன் தின்னலுறுதியேல்நம்பி! *
செப்பிளமென்முலையார்கள் சிறுபுறம்பேசிச்சிரிப்பர் *
சொப்படநீராடவேண்டும் சோத்தம்பிரான்! இங்கேவாராய். (௫)

எண்ணெய்க்குடத்தையுருட்டி இளம்பிள்ளைகிள்ளியெழுப்பி *
கண்ணைப்புரட்டிவிழித்துக் $ கழகண்டுசெய்யும்பிரானே! *
உண்ணக்கனிகள்தருவன் ஒலிகடலோதநீர்போலே *
வண்ணமழகியநம்பீ! மஞ்சனமாடநீவாராய். (௬)

கறந்தநற்பாலும்தயிரும் கடைந்துறிமேல்வைத்தவெண்ணெய் *
பிறந்ததுவேமுதலாகப் பெற்றறியேன்எம்பிரானே! *
சிறந்தநற்றாயலர்தூற்றும் என்பதனால்பிறர்முன்னே *
மறந்துமுரையாடமாட்டேன் மஞ்சனமாடநீவாராய். (௭)

---

† இந்தப் பத்துப்பாசுரங்களும் திருமஞ்சனகாலத்தில் ஸேவிக்கப்படுவன.
‡ 'சிற்றுண்டை' என்னும் பாடம். $ 'கழைகண்டு' என்று சிலர்.

*கன்றினைவாலோலைகட்டிக் கனிகளுதிரவெறிந்து **
*பின்தொடர்ந்தோடியோர்பாம்பைப் பிடித்துக்கொண்டாட்டினாய்போலும் **
*நின்திறத்தேனல்லேன்நம்பீ! நீபிறந்ததிருநன்னாள் **
நன்றுநீநீராடவேண்டும் நாரணா! ஓடாதேவாராய். (௮)

*பூணித்தொழுவினில்புக்குப் புழுதியளைந்தபொன்மேனி **
*காணப்பெரிதுமுகப்பன் ஆகிலும்கண்டார்பழிப்பர் **
*நாணெத்தனையுமிலாதாய்! நப்பின்னைகாணிற்சிரிக்கும் **
மாணிக்கமே! என்மணியே! மஞ்சனமாடநீவாராய். (௯)

↓↓ *கார்மலிமேனி † நிறத்துக் கண்ணபிரானையுகந்து **
*வார்மலிகொங்கையசோதை மஞ்சனமாட்டியவாற்றை **
*பார்மலிதொல்புதுவைக்கோன் பட்டர்பிரான்சொன்னபாடல் **
சீர்மலிசெந்தமிழ்வல்லார் தீவினையாதுமிலரே. (௧௦)

அடிவரவு:—வெண்ணெய் கன்று பேய்ச்சி கஞ்சன் அப்பம் எண்ணெய் கறந்த கன்றினை பூணி கார் பின்னை.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

ரு - ஆந் திருமொழி - பின்னைமணாளனை.

குழல்வாரக் காக்கையை வாவெனல்.

கலித்தாழிசை. (மத்யமாவதிராகம் - ரூபகதாளம்.)

↓↓ *பின்னைமணாளனைப் பேரிற்கிடந்தானை **
*முன்னையமரர் முதல்தனிவித்தினை **
*என்னையும் எங்கள்குடிமுழுதாட்கொண்ட **
மன்னனைவந்துகுழல்வாராயக்காக்காய்!
மாதவன்தன்குழல்வாராயக்காக்காய். (க)

*பேயின்முலையுண்ட பிள்ளையிவன்முன்னம் **
*மாயச்சகடும் மருதுமிறுத்தவன் **
*காயாமலர்வண்ணன் கண்ணன்கருங்குழல் **
தூய்தாகவந்துகுழல்வாராயக்காக்காய்!
தூமணிவண்ணன்குழல்வாராயக்காக்காய். (உ)

† 'நிறத்தன்' என்றும் பாடம்.

திண்ணக்கலத்தில் திரையுறிமேல்வைத்த *
வெண்ணெய்விழுங்கி † விரையஉறங்கிடும் *
அண்ணல் அமரர்பெருமானை * ஆயர்தம்
கண்ணனைவந்துகுழல்வாராயக்காக்காய் !
கார்முகில்வண்ணன்குழல்வாராயக்காக்காய். (ரு)

பள்ளத்தில்மேயும் பறவையுருக்கொண்டு *
கள்ளவசுரன்வருவானைத் தான்கண்டு *
புள்ளிதுவென்று பொதுக்கோவாய்கீண்டிட்ட *
பிள்ளையைவந்துகுழல்வாராயக்காக்காய் !
பேய்முலையுண்டான்குழல்வாராயக்காக்காய். (சு)

கற்றினம்மேய்த்துக் கனிக்கொருகன்றினை *
பற்றியெறிந்த பரமன்திருமுடி *
உற்றனபேசி நீஓடித்திரியாதே *
அற்றைக்கும்வந்துகுழல்வாராயக்காக்காய்!
ஆழியான்தன்குழல்வாராயக்காக்காய். (ரு)

கிழக்கிற்குடிமன்னர் கேடிலாதாரை *
அழிப்பான்நினைந்திட்டு அவ்வாழியதனால் *
விழிக்குமளவிலே வேரறுத்தானை *
குழற்கணியாகக்குழல்வாராயக்காக்காய் !
கோவிந்தன் ‡ தன்குழல்வாராயக்காக்காய் (சு)

பிண்டத்திரளையும் பேய்க்கிட்டநீர்ச்சோறும் *
உண்டற்குவேண்டி நீஓடித்திரியாதே *
அண்டத்தமரர்பெருமான் அழகமர் *
வண்டொத்திருண்டகுழல்வாராயக்காக்காய் !
மாயவன்தன்குழல்வாராயக்காக்காய். (எ)

உந்தியெழுந்த உருவமலர்தன்னில *
சந்தச்சதுமுகன்தன்னைப் படைத்தவன் *
கொந்தக்குழலைக் குறந்து § புளியட்டி *
தந்தத்தின்சீப்பால்குழல்வாராயக்காக்காய் !
தாமோதரன்தன்குழல்வாராயக்கரக்காய். (அ)

மன்னன்தன்தேவிமார் கண்டுமகிழ்வெய்த *
முன்னிவ்வுலகினை முற்றுமளந்தவன் *
பொன்னின்முடியினைப் பூவணைமேல்வைத்து *
பின்னேயிருந்துகுழல்வாராயக்காக்காய் !
பேராயிரத்தான்குழலவாராயக்காக்காய். (கூ)

---

† 'விரையன்' என்பதும் பாடம். ‡ 'தண்குழல்' என்று சிலர்க்குப் பாடம்.
§ 'குறந்த' என்றும், 'புழுகட்டி' என்றும் பாடம்.

தரவுகொச்சகக்கலிப்பா

↓↓ கண்டார்பழியாமே யக்காக்காய் ! * கார்வண்ணன்
வண்டார்குழல்வார வாவென்றஆய்ச்சிசொல் *
விண்டோய்மதிள் வில்லிபுத்தூர்க்கோன்பட்டன்சொல் *
கொண்டாடிப்பாடக் குறுகாவினை † தாமே. (௧௦)

அடிவரவு:—பின்னை பேய் திண்ணம் பள்ளத்தில் கற்று கிழக்கில் பிண்டம் உந்தி மன்னன் கண்டார் வேலி.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

௬ - ஆந் திருமொழி - வேலிக்கோல்.

காக்கையைக் கோல்கொண்டுவர விளம்புதல்.

கலித்தாழிசை. (தேசியராகம் - ஆதிதாளம்.)

↓↓வேலிக்கோல்வெட்டி விளையாடுவில்லேற்றி *
தாலிக்கொழுந்தைத் தடங்கழுத்திற்பூண்டு *
பீலித்தழையைப் பிணைத்துப்பிறகிட்டு *
காலிப்பின்போவாற்கோர்கோல்கொண்டுவா
கடல்நிறவண்ணற்கோர்கோல்கொண்டுவா. (௧)

கொங்குங்குடந்தையும் கோட்டியூரும்பேரும் *
எங்குந்திரிந்து விளையாடுமென்மகன் *
சங்கம்பிடிக்கும் தடக்கைக்குத்தக்க * நல்
லங்கமுடையதோர்கோல்கொண்டுவா
அரக்குவழித்ததோர்கோல்கொண்டுவா. (௨)

கறுத்திட்டெதிர்நின்ற கஞ்சனைக்கொன்றான் *
பொறுத்திட்டெதிர்வந்த புள்ளின்வாய்கீண்டான் *
நெறித்தகுழல்களை நீங்கமுன்னோடி *
சிறுக்கன்றுமேய்ப்பாற்கோர்கோல்கொண்டுவா
தேவபிரானுக்கோர்கோல்கொண்டுவா. (௩)

ஒன்றேயுரைப்பான் ஒருசொல்லேசொல்லுவான் *
துன்றுமுடியான் துரியோதனன்பக்கல் *
சென்றங்குப்பாரதம் கையெறிந்தானுக்கு *
கன்றுகள்மேய்ப்பதோர்கோல்கொண்டுவா
கடல்நிறவண்ணற்கோர்கோல்கொண்டுவா. (௪)

† 'தாமே' என்பதும் பாடம்.

சீரொன்றுதூதாய்த் துரியோதனன்பக்கல் *
ஊரொன்றுவேண்டிப் பெறாதவுரோடத்தால் *
பாரொன்றிப் பாரதம்கைசெய்து * பார்த்தற்குத்
தேரொன்றையூர்ந்தாற்கோர்கோல்கொண்டுவா
தேவபிரானுக்கோர்கோல்கொண்டுவா. (௫)

ஆலத்திலையான் அரவினணைமேலான் *
நீலக்கடலுள் நெடுங்காலம்கண்வளர்ந்தான் *
பாலப்பிராயத்தே பார்த்தற்கருள்செய்த *
கோலப்பிரானுக்கோர்கோல்கொண்டுவா
குடந்தைக்கிடந்தாற்கோர்கோல்கொண்டுவா. (௬)

பொற்றிகழ் சித்திரகூடப்பொருப்பினில் *
உற்றவடிவில் ஒருகண்ணும்கொண்ட * அக்
கற்றைக்குழலன் கடியன்விரைந்து உன்னை *
மற்றைக்கண்கொள்ளாமேகோல்கொண்டுவா
மணிவண்ணநம்பிக்கோர்கோல்கொண்டுவா. (௭)

மின்னிடைச் சீதைபொருட்டா * இலங்கையர்
மன்னன்மணிமுடி பத்துமுடன்வீழ *
தன்னிகரொன்றில்லாச் சிலைகால்வளைத்திட்ட *
மின்னுமுடியற்கோர்கோல்கொண்டுவா
வேலையடைத்தாற்கோர்கோல்கொண்டுவா. (௮)

தென்னிலங்கைமன்னன் சிரம்தோள்துணிசெய்து *
மின்னிலங்குபூண் விபீடணநம்பிக்கு *
என்னிலங்குநாமத்தளவும் அரசென்ற *
மின்னலங்காரற்கோர்கோல்கொண்டுவா
வேங்கடவாணற்கோர்கோல்கொண்டுவா. (௯)

தரவுகொச்சகக்கலிப்பா.

‡‡ அக்காக்காய்! நம்பிக்குக் கோல்கொண்டுவாவென்று *
மிக்காளுரைத்தசொல் வில்லிபுத்தூர்ப்பட்டன் *
ஒக்கவுரைத்த தமிழ்ப்பத்தும்வல்லவர் *
மக்களைப்பெற்று மகிழ்வரிவ்வையத்தே. (௧௰)

அடிவரவு:—வேலி கொங்கு கறுத்து ஒன்றே சீர் ஆலத்து பொற்றிகழ் மின் தென்னிலங்கை அக்காக்காய் ஆநிரை.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

௭ - ஆந் திருமொழி - ஆநிரை.

கண்ணனைப் பூச்சூட அழைத்தல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (அடாணராகம் - ரூபகதாளம்.)

† ↓↓ ஆநிரைமேய்க்கநீபோதி அருமருந்தாவதறியாய் *
கானகமெல்லாந்திரிந்து உன்கரியதிருமேனிவாட *
பானையில்பாலைப்பருகிப் பற்றாதாரெல்லாம்சிரிப்ப *
தேனிலினியபிரானே ! செண்பகப்பூச்சூட்டவாராய். (௧)

கருவுடைமேகங்கள்கண்டால் உன்னைக்கண்டாலொக்குங்கண்கள் *
உருவுடையாய் ! உலகேழும்உண்டாகவந்துபிறந்தாய் ! *
திருவுடையாள்மணவாளா ! திருவரங்கத்தேகிடந்தாய் ! *
மருவிமணம்கமழ்கின்ற மல்லிகைப்பூச்சூட்டவாராய். (௨)

மச்சொடுமாளிகையேறி மாதர்கள்தம்மிடம்புக்கு *
கச்சொடுபட்டைக்கிழித்துக் காம்புதுகிலவைகீறி *
நிச்சலும்தீமைகள்செய்வாய் ! நீள்திருவேங்கடத்தெந்தாய் ! *
பச்சைத்தமனகத்தோடு பாதிரிப்பூச்சூட்டவாராய். (௩)

தெருவின்கண்நின்று இளவாய்ச்சிமார்களைத் தீமைசெய்யாதே *
மருவும்தமனகமும்சீர் மாலைமணங்கமழ்கின்ற *
புருவம்கருங்குழல்நெற்றி பொலிந்தமுகிற்கன்றுபோலே *
உருவமழகியநம்பீ ! உகந்திவைசூட்டநீவாராய். (௪)

புள்ளினைவாய்பிளந்திட்டாய் ! பொருகரியின்கொம்பொசித்தாய் !
கள்ளவரக்கியைமூக்கொடு காவலனைத்தலைகொண்டாய் ! *
அள்ளிநீவெண்ணெய்விழுங்க அஞ்சாதடியேனடித்தேன் *
தெள்ளியநீரிலெழுந்த செங்கழுநீர்சூட்டவாராய். (௫)

எருதுகளோடுபொருதி ஏதுமுலோபாய்காண்நம்பி !
கருதியதீமைகள்செய்து கஞ்சனைக்கால்கொடுபாய்ந்தாய் ! *
தெருவின்கண்தீமைகள்செய்து சிக்கெனமல்லர்களோடு *
பொருதுவருகின்றபொன்னே ! புன்னைப்பூச்சூட்டவாராய். (௬)

குடங்களெடுத்தேறவிட்டுக் கூத்தாடவல்லவெங்கோவே ! *
மடங்கொள்மதிமுகத்தாரை மால்செய்யவல்லவென்மைந்தா ! *
இடந்திட்டிரணியன்நெஞ்சை இருபிளவாகமுன்கீண்டாய் ! *
குடந்தைக்கிடந்தவெங்கோவே ! குருக்கத்திப்பூச்சூட்டவாராய். (௭)

---

† இத்தத்திருமொழி, நித்யாநுஸந்தாநத்திற் சேர்ந்தது.

சீமாலிகனவனோடு தோழமைகொள்ளவும்வல்லாய் ! *
சாமாறவனைநீயெண்ணிச் சக்கரத்தால்தலைகொண்டாய் ! *
ஆமாறறியும்பிரானே ! அணியரங்கத்தேகிடந்தாய் ! *
ஏமாற்றமென்னைத்தவிர்த்தாய் ! இருவாட்சிப்பூச்சூட்டவாராய். (அ)

அண்டத்தமரர்கள்சூழ அத்தாணியுள்ளங்கிருந்தாய் ! *
தொண்டர்கள்நெஞ்சிலுறைவாய் ! தூமலராள்மணவாளா ! *
உண்டிட்டுலகினையேழும் ஓராலிலையில்துயில்கொண்டாய் ! *
கண்டுநானுன்னையுகக்கக் கருமுகைப்பூச்சூட்டவாராய். (கூ)

செண்பகமல்லிகையோடு செங்கழுநீரிருவாட்சி *
எண்பகர்பூவும்கொணர்ந்தேன் இன்றிவைசூட்டவாவென்று *
மண்பகர்கொண்டானை ஆய்ச்சிமகிழ்ந்துரைசெய்தவிம்மாலை *
பண்பகர்வில்லிபுத்தூர்க்கோன் பட்டர்பிரான்சொன்னபத்தே. (க0)

அடிவரவு:—ஆநிரை கரு மச்சொடு தெருவின்கண் புள்ளினை எருதுகளோடு குடங்கள் சீமாலிகன் அண்டத்து செண்பகம் இந்திரன்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

அ - ஆந் திருமொழி - இந்திரனோடு.

க்ருஷ்ணனை த்ருஷ்டிதோஷம்வராதபடி திருவந்திக்காப்பிட அழைத்தல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (தோடிராகம் - ரூபகதாளம்.)

†↓↓ இந்திரனோடுபிரமன் ஈசனிமையவரெல்லாம் *
மந்திரமாமலர்கொண்டு மறைந்துவராய்வந்துநின்றார் *
சந்திரன்மாளிகைசேரும் சதுரர்கள்வெள்ளறைநின்றாய் ! *
அந்தியம்போதிதுவாகும் அழகனே ! காப்பிடவாராய். (க)

கன்றுகளில்லம்புகுந்து கதறுகின்றபசுவெல்லாம் *
நின்றொழிந்தேனுன்னைக்கூவி நேசமேலொன்றுமிலாதாய் ! *
மன்றில்நில்லேல்அந்திப்போது மதிள்திருவெள்ளறைநின்றாய் ! *
நன்றுகண்டாயென்தன்சொல்லு நானுன்னைக்காப்பிடவாராய். (உ)

செப்போதுமென்முலையார்கள் சிறுசோறுமில்லும்சிதைத்திட்டு *
அப்போதுநானுரப்பப்போய் அடிசிலுமுண்டிலைஆள்வாய் ! *
முப்போதும்வானவரேத்தும் முனிவர்கள்வெள்ளறைநின்றாய் ! *
இப்போதுநானொன்றும்செய்யேன் எம்பிரான்! காப்பிடவாராய். (ங)

† இது, நித்யாநுஸந்தாநத்தைச் சேர்ந்தது.

கண்ணில்மணற்கொடுதூவிக் காலினாற்பாய்ந்தனையென்றென்று *
எண்ணரும்பிள்ளைகள்வந்திட்டு இவரால்முறைப்படுகின்றார் *
கண்ணனே! வெள்ளறைநின்றாய்! கண்டாரோடேதீமைசெய்வாய்! *
வண்ணமேவேலையதொப்பாய்! வள்ளலே! காப்பிடவாராய். (௪)

பல்லாயிரவரிவ்வூரில்பிள்ளைகள் தீமைகள்செய்வார் *
எல்லாமுன்மேலன்றிப் † போகாது எம்பிரான்! நீயிங்கேவாராய் *
நல்லார்கள்வெள்ளறைநின்றாய்! ஞானச்சுடரே! உன்மேனி *
சொல்லாரவாழ்த்திநின்றேத்திச் சொப்படக்காப்பிடவாராய். (௫)

கஞ்சன்கறுக்கொண்டுநின்மேல் கருநிறச்செம்மயிர்ப்பேயை *
வஞ்சிப்பதற்குவிடுத்தானென்பது ஓர்வார்த்தையுமுண்டு *
மஞ்சுதவழ்மணிமாட மதிள்திருவெள்ளறைநின்றாய்! *
அஞ்சுவன்நீயங்குநிற்க அழகனே! காப்பிடவாராய். (௬)

கள்ளச்சகடும்மருதும் கலக்கழியவுதைசெய்த *
பிள்ளையரசே! நீபேயைப்பிடித்துமுலையுண்டபின்னை *
உள்ளவாறொன்றுமறியேன் ஒளியுடைவெள்ளறைநின்றாய்! *
பள்ளிகொள்போதிதுவாகும் பரமனே! காப்பிடவாராய். (௭)

இன்பமதனையுயர்த்தாய்! இமையவர்க்கென்றுமரியாய்! *
கும்பக்களிறட்டகோவே! கொடுங்கஞ்சன்நெஞ்சினிற்கூற்றே! *
செம்பொன்மதிள்வெள்ளறையாய்! செல்வத்தினால்வளர்பிள்ளாய்! *
கம்பக்கபாலிகாணங்குக் கடிதோடிக்காப்பிடவாராய். (௮)

இருக்கொடுநீர்சங்கிற்கொண்டிட்டு எழில்மறையோர்வந்துநின்றார் *
தருக்கேல்நம்பி! சந்திநின்று தாய்சொல்லுக்கொள்ளாய்சிலநாள் *
திருக்காப்புநானுன்னைச்சாத்தத் தேசுடைவெள்ளறைநின்றாய்! *
உருக்காட்டுமந்திவிளக்கு இன்றொளிகொள்ளஏற்றுகேன்வாராய். (௯)

⇊ போதமர்செல்வக்கொழுந்து புணர்திருவெள்ளறையானை *
மாதர்க்குயர்ந்தவசோதை மகன்தன்னைக்காப்பிட்டமாற்றம் *
வேதப்பயன்கொள்ளவல்ல விட்டுசித்தன்சொன்னமாலை *
பாதப்பயன்கொள்ளவல்ல பத்தருள்ளார்வினைபோமே. (௧௦)

அடிவரவு:—இந்திரனோடு கன்றுகள் செப்பு கண்ணில் பல்லாயிரவர் கஞ்சன் கள்ளம் இன்பமதனை இருக்கொடு போதமர் வெண்ணெய்விழுங்கி.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

† 'போகா' என்றுங் கூறுவர்.

கூ - ஆந் திருமொழி - வெண்ணெய்விழுங்கி.

வெண்ணெய் களவாடல் முதலிய பாலக்ரீடை விசேஷங்கள்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (கேதாரகௌளாாகம் - ஆதிதாளம்.)

↓↓ வெண்ணெய்விழுங்கிவெறுங்கலத்தை
வெற்பிடையிட்டு அதனோசைகேட்கும் *
கண்ணபிரான்கற்றகல்வி தன்னைக்
காக்ககில்லோம்உன் மகனைக்காவாய் *
புண்ணிற்புளிப்பெய்தாலொக்குந்தீமை
புரைபுரையாலிவைசெய்யவல்ல *
அண்ணற்கண்ணானோர்மகனைப்பெற்ற
அசோதைநங்காய் ! உன்மகனைக்கூவாய். (க)

வருகவருகவருகவிங்கே
வாமனநம்பி ! வருகவிங்கே *
கரியகுழற்செய்யவாய்முகத்துக்
காகுத்தநம்பி ! வருகவிங்கே *
அரியனிவனெனக்கின்றுநங்காய் !
அஞ்சனவண்ணா ! அசலகத்தார் *
பரிபவம்பேசத்தரிக்ககில்லேன்
பாவியேனுக்கிங்கேபோதராயே. (உ)

திருவுடைப்பிள்ளைதான்தீயவாறு
தேக்கமொன்றுமிலன்தேசுடையன் *
உருகவைத்தகுடத்தொடுவெண்ணெய்
† உறிஞ்சி யுடைத்திட்டுப்போந்துநின்றான் *
அருகிருந்தார்தம்மையநியாயஞ்செய்வது
தான் வழக்கோ ? அசோதாய் ! *
வருகவென்றுஉன்மகன்தன்னைக்கூவாய்
வாழவொட்டான்மதுசூதனனே. (ங)

கொண்டல்வண்ணா ! இங்கேபோதராயே
கோயிற்பிள்ளாய் ! இங்கேபோதராயே *
தெண்டிரைசூழ்திருப்பேர்க்கிடந்த
திருநாரணா ! இங்கேபோதராயே *

† 'உறிச்சி' என்பது அத்யாபகபாடம்.

உண்டுவந்தேனம்மனென்றுசொல்லி
ஓடியகம்புகவாய்ச்சிதானும் *
கண்டெதிரேசென்றெடுத்துக்கொள்ளக்
கண்ணபிரான்கற்றகல்விதானே. (௪)

பாலைக்கறந்தடுப்பேறவைத்துப்
பல்வளையாளென்மகளிருப்ப *
மேலையகத்தேநெருப்புவேண்டிச்சென்று
இறைப்பொழுதங்கேபேசிநின்றேன் *
சாளக்கிராமமுடையநம்பி
சாய்த்துப்பருகிட்டுப்போந்துநின்றான் *
ஆலைக்கரும்பின்மொழியனைய
அசோதைநங்காய்! உன்மகனைக்கூவாய். (௫)

போதர்கண்டாய்இங்கேபோதர்கண்டாய்
போதரேனென்னாதேபோதர்கண்டாய் *
ஏதேனும்சொல்லியசலகத்தார்
ஏதேனும்பேசநான்கேட்கமாட்டேன் *
† கோதுகலமுடைக்குட்டனே! ஓ
குன்றெடுத்தாய்! குடமாடுகூத்தா! *
வேதப்பொருளே! என்வேங்கடவா!
வித்தகனே! இங்கேபோதராயே. (௬)

செந்நெலரிசிசிறுபருப்புச்
செய்த அக்காரம்நறுநெய்பாலால் *
பன்னிரண்டுதிருவோணமட்டேன்
பண்டுமிப்பிள்ளைபரிசறிவன் *
இன்னமுகப்பன்நானென்றுசொல்லி
எல்லாம்விழுங்கிட்டுப்போந்துநின்றான் *
உன்மகன்தன்னையசோதைநங்காய்!
கூவிக்கொள்ளாய்இவையும்சிலவே. (௭)

கேசவனே! இங்கேபோதராயே
கில்லேனென்னாதிங்கேபோதராயே *
நேசமிலாதாரகத்திருந்து
நீவிளையாடாதேபோதராயே *

† 'கோதுகுலம்' என்றுமாம்.

தூசனஞ்சொல்லும்தொழுத்தைமாரும்
தொண்டரும்நின்றவிடத்தில்நின்று *
தாய்சொல்லுக்கொள்வதுதன்மங்கண்டாய்
தாமோதரா! இங்கேபோதராயே. (அ)

கன்னலிலட்டுவத்தோடுசீடை
காரெள்ளினுண்டைகலத்திலிட்டு *
என்னகமென்றுநான்வைத்துப்போந்தேன்
இவன்புக்கவற்றைப்பெறுத்திப்போந்தான் *
பின்னுமகம்புக்குறியைநோக்கிப்
பிறங்கொளிவெண்ணெயுஞ்சோதிக்கின்றான் *
உன்மகன்தன்னையசோதைநங்காய்!
கூவிக்கொள்ளாயிவையும்சிலவே. (கூ)

சொல்லிலரசிப்படுதிநங்காய்!
சூழலுடையனுன்பிள்ளைதானே *
இல்லம்புகுந்தென்மகளைக்கூவிக்
கையில்வளையைக்கழற்றிக்கொண்டு *
கொல்லையில்நின்றுங்கொணர்ந்துவிற்ற
அங்கொருத்திக்கவ்வளைகொடுத்து *
நல்லனநாவற்பழங்கள்கொண்டு
நானல்லேனென்றுசிரிக்கின்றானே. (௧௦)

↓↓ வண்டுகளித்திரைக்கும்பொழில்சூழ்
வருபுனற்காவிரித்தென்னரங்கன் *
பண்டவன்செய்தகிரீடையெல்லாம்
பட்டர்பிரான்விட்டுசித்தன்பாடல் *
கொண்டிவைபாடிக்குனிக்கவல்லார்
கோவிந்தன்தன்னடியார்களாகி *
எண்டிசைக்கும்விளக்காகிநிற்பார்
இணையடியென்தலைமேலனவே. (௧௧)

அடிவரவு:—வெண்ணெய் வருக திரு கொண்டல் பாலை போதர் செந்நெல் கேசவனே கன்னல் சொல்லில் வண்டு ஆற்றிலிருந்து.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

கo - ஆந் திருமொழி - ஆற்றிலிருந்து.

ஆயர்மங்கையர் யசோதைபக்கல் கண்ணன்தீம்புகளைக்கூறி முறையிடுதல்.

கலித்தாழிசை. (நாதநாமக்கிரியைராகம் - நடாகதாளம்.)

↓↓ ஆற்றிலிருந்து விளையாடுவோங்களை *
சேற்றாலெறிந்து வளைதுகில்கைக்கொண்டு *
காற்றிற்கடியனாய் ஓடியகம்புக்கு *
மாற்றமுந்தாரானாலின்றுமுற்றும்
வளைத்திறம்பேசானாலின்றுமுற்றும். (க)

குண்டலம்தாழக் குழல்தாழநாண்தாழ *
எண்டிசையோரும் இறைஞ்சித்தொழுதேத்த *
வண்டமர்பூங்குழலார் துகில்கைக்கொண்டு *
விண்தோய்மரத்தானாலின்றுமுற்றும்
வேண்டவுந்தாரானாலின்றுமுற்றும். (உ)

தடம்படுதாமரைப் பொய்கைகலக்கி *
விடம்படுநாகத்தை வால்பற்றியீர்த்து *
படம்படுபைந்தலை மேலெழப்பாய்ந்திட்டு *
உடம்பையசைத்தானாலின்றுமுற்றும்
உச்சியில்நின்றானாலின்றுமுற்றும். (௩)

தேனுகனாவி செகுத்து * பனங்கனி
தானெறிந்திட்ட தடம்பெருந்தோளினால் *
வானவர்கோன்விட வந்தமழைதடுத்து *
ஆனிரைகாத்தானாலின்றுமுற்றும்
அவையுய்யக்கொண்டானாலின்றுமுற்றும். (ச)

ஆய்ச்சியர்சேரி அளைதயிர்பாலுண்டு *
பேர்த்தவர்கண்டு பிடிக்கப்பிடியுண்டு *
வேய்த்தடந்தோளினார் வெண்ணெய்கொள்மாட்டாது * அங்
காப்புண்டிருந்தானாலின்றுமுற்றும்
அடியுண்டழுதானாலின்றுமுற்றும். (ரு)

தள்ளித்தளர்நடையிட்டு இளம்பிள்ளையாய் *
உள்ளத்தினுள்ளே அவளையுறநோக்கி *
கள்ளத்தினால்வந்த பேய்ச்சிமுலையுயிர் *
துள்ளச்சுவைத்தானாலின்றுமுற்றும்
துவக்கறவுண்டானாலின்றுமுற்றும். (சா)

மாவலிவேள்வியில் மாணுருவாய்ச்சென்று *
மூவடிதாவென்று இரந்தவிம்மண்ணினை *
ஓரடியிட்டு இரண்டாமடிதன்னிலே *
தாவடியிட்டானாலின்றுமுற்றும்
தரணியளந்தானாலின்றுமுற்றும். (௭)

தாழைதண்ணாம்பல் தடம்பெரும்பொய்கைவாய் *
வாழுமுதலை வலைப்பட்டுவாதிப்புண் *
வேழுந்துயர்கெட விண்ணோர்பெருமானாய் *
ஆழிபணிகொண்டானாலின்றுமுற்றும்
அதற்கருள்செய்தானாலின்றுமுற்றும். (௮)

வானத்தெழுந்த மழைமுகில்போல் * எங்கும்
கானத்துமேய்ந்து களித்துவிளையாடி *
ஏனத்துருவாய் இடந்தவிம்மண்ணினை *
தானதவேவைத்தானாலின்றுமுற்றும்
தரணியிடந்தானாலின்றுமுற்றும். (௯)

தரவுகொச்சகக்கலிப்பா.

↓↓ அங்கமலக்கண்ணன்தன்னை யசோதைக்கு *
மங்கைநல்லார்கள்தாம் வந்துமுறைப்பட்ட *
அங்கவர்சொல்லைப் புதுவைக்கோன்பட்டன்சொல் *
இங்கிவைவல்லவர்க்கு ஏதமொன்றில்லையே. (௧௦)

அடிவரவு:—ஆற்றில் குண்டலம் தடம் தேனுகன் ஆய்ச்சி தள்ளி மாவலி தாழை வானத்து அங்கமலம் தன்னேராயிரம்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

மூன்றாம் பத்து.

க - ஆந் திருமொழி - தன்னேராயிரம்.

யசோதைப்பிராட்டி கண்ணனது அதிமாநுஷசேஷ்டிதங்களைக் கண்டு முலைகொடுக்க அஞ்சுதல்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (ஆரபிராகம் - ஆதிதாளம்.)

↓↓ தன்னேராயிரம்பிள்ளைகளோடு
தளர்நடையிட்டுவருவான் *
பொன்னேய்நெய்யொடுபால்முதுண்டு
ஒருபுள்ளுவன்பொய்யேதவழும *

மின்னேர் நுண்ணிடைவஞ்சமகள்கொங்கைதுஞ்ச
வாய்வைத்தபிரானே! *
அன்னே! உன்னையறிந்துகொண்டேன்
உனக்கஞ்சுவன் அம்மந்தரவே. (க)

பொன்போல்மஞ்சனமாட்டியமுதூட்டிப்
போனேன் வருமளவிப்பால் *
வன்பாரச்சகடமிறச்சாடி
வடக்கிலகம்புக்கிருந்து *
மின்போல்நுண்ணிடையாளொருகன்னியை
வேற்றுருவஞ்செய்துவைத்த *
அன்பா! உன்னையறிந்துகொண்டேன்
உனக்கஞ்சுவன் அம்மந்தரவே. (உ)

கும்மாயத்தொடுவெண்ணெய்விழுங்கிக்
குடத்தயிர்சாய்த்துப்பருகி *
பொய்ம்மாயமருதானவசுரரைப்
பொன்றுவித்தின்றுநீவந்தாய் *
இம்மாயம்வல்லபிள்ளைநம்பீ!
உன்னையென்மகனேயென்பர்நின்றார் *
அம்மா! உன்னையறிந்துகொண்டேன்
உனக்கஞ்சுவன் அம்மந்தரவே. (௩)

மையார்கண்மடவாய்ச்சியர்மக்களை
மையன்மைசெய்து அவர்பின்போய் *
கொய்யார்பூந்துகில்பற்றித்தனிநின்று
குற்றம்பலபலசெய்தாய் *
பொய்யா! உன்னைப்புறம்பலபேசுவ
புத்தகத்துக்குளகேட்டேன்! *
ஐயா! உன்னையறிந்துகொண்டேன்
உனக்கஞ்சுவன் அம்மந்தரவே. (௪)

முப்போதுங்கடைந்தீண்டியவெண்ணெயி
னோடு தயிருமவிழுங்கி *
கப்பாலாயர்கள்காவிற்கொணர்ந்த
கலத்தொடுசாய்த்துப்பருகி *

மெய்ப்பாலுண்டழுபிள்ளைகள்போல
நீவிம்மிவிம்மியழுகின்ற *
அப்பா! உன்னையறிந்துகொண்டேன்
உனக்கஞ்சுவனம்மந்தரவே. (௫)

கரும்பார்நீள்வயற்காய்கதிர்ச்செந்நெலைக்
கற்றாநிரைமண்டித்தின்ன *
விரும்பாக்கன்றொன்றுகொண்டு
விளங்கனிவீழவெறிந்தபிரானே! *
சுரும்பார்மென்குழற்கன்னியொருத்திக்குச்
சூழ்வலைவைத்துத்திரியும் *
அரம்பா! உன்னையறிந்துகொண்டேன்
உனக்கஞ்சுவனம்மந்தரவே. (௬)

மருட்டார்மென்குழல்கொண்டுபொழில்புக்கு
வாய்வைத்தவ்வாயர்தம்பாடி *
சுருட்டார்மென்குழற்கன்னியர்வந்துன்னைச்
சுற்றும்தொழநின்றசோதி! *
பொருட்டாயமிலேனெம்பெருமான்!
உன்னைப்பெற்றகுற்றமல்லால் * மற்றிங்
கரட்டா! உன்னையறிந்துகொண்டேன்
உனக்கஞ்சுவனம்மந்தரவே (௭)

வாளாவாகிலும்காணகில்லார்
பிறர்மக்களைமையன்மைசெய்து *
தோளாவிட்டவரோடுதிளைத்து
நீசொல்லப்படாதனசெய்தாய் *
கேளார்ஆயர்குலத்தவர்இப்பழி
கெட்டேன்! வாழ்வில்லை * நந்தன்
காளாய்! உன்னையறிந்துகொண்டேன்
உனக்கஞ்சுவனம்மந்தரவே. (௮)

தாய்மார்மோர்விற்கப்போவர்
தமப்பன்மார்கற்றாநிரைப்பின்புபோவர் *
நீயாய்ப்பாடியிளங்கன்னிமார்களை
நேர்படவேகொண்டுபோதி *

காய்வார்க்கென்றுமுகப்பனவேசெய்து
கண்டார்கழறத்திரியும் *
ஆயா! உன்னையறிந்துகொண்டேன்
உனக்கஞ்சுவனம்மந்தரமே. (௯)

தொத்தார்பூங்குழற்கன்னியொருத்தியைச
சோலைத்தடங்கொண்டுபுக்கு *
முத்தார்கொங்கைபுணர்ந்திராநாழிகை
மூவேழுசென்றபின்வந்தாய் *
ஒத்தார்க்கொத்தனபேசுவர்
உன்னையுரப்பவேநானொன்றும்மாட்டேன் *
அத்தா! உன்னையறிந்துகொண்டேன்
உனக்கஞ்சுவனம்மந்தரமே. (௧௦)

↓↓ காரார்மேனிநிறத்தெம்பிரானைக்
கடிகமழ்பூங்குழலாய்ச்சி *
ஆராவின்னமுதுண்ணத்தருவன்நான்
அம்மந்தாரேனென்றமாற்றம் *
பாரார்தொல்புகழான்புதுவைமன்னன்
பட்டர்பிரான்சொன்னபாடல் *
ஏராரின்னிசை † மாலைவல்லார்
இருடீகேசனடியாரே. (௧௧)

அடிவரவு:—தன்னேராயிரம் பொன் கும்மாயத்தொங்க மையார் முப்போதும் கரும்பு மருட்டார் வாளா தாய்மார் தொத்தார் காரார் அஞ்சனம்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

உ-ஆந் திருமொழி - அஞ்சனவண்ணனை.

யசோதைப்பிராட்டி கண்ணனைக் கன்றின்பின் போக்கியதை எண்ணி அனுதபித்தல்.

கலிநிலைத்துறை. (சங்கராபரணராகம் - ரூபகதாளம்.)

↓↓ அஞ்சனவண்ணனை ஆயர்கோலக்கொழுந்தினை *
மஞ்சனமாட்டி மனைகள்தோறும்திரியாமே *
கஞ்சனைக்காய்ந்த கழலடிநோவக்கன்றின்பின் *
என்செயப்பிள்ளையைப்போக்கினேன்? எல்லேபாவமே. (௧)

† 'மாலைகள்வல்லார்' என்னும் பாடம் ஓசைக்கு அமையும்.

பற்றுமஞ்சள்பூசிப் பாவைமாரொடுபாடியில் *
சிற்றில்சிதைத்து எங்குந்தீமைசெய்து திரியாமே *
கற்றுத்தூளியுடை வேடர்கானிடைக்கன்றின்பின் *
எற்றுக்கென்பிள்ளையைப்போக்கினேன் ? எல்லேபாவமே. (௨)

நன்மணிமேகலை நங்கைமாரொடுநாள்தொறும் *
பொன்மணிமேனி புழுதியாடித்திரியாமே *
கன்மணிநின்றதிர் கானதரிடைக்கன்றின்பின் *
என்மணிவண்ணனைப்போக்கினேன் எல்லேபாவமே. (௩)

வண்ணக்கருங்குழல் மாதர்வந்தலர்தூற்றிடப் *
பண்ணிப்பலசெய்து இப்பாடியெங்குந்திரியாமே *
கண்ணுக்கினியானைக் கானதரிடைக்கன்றின்பின் *
எண்ணற்கரியானைப்போக்கினேன் எல்லேபாவமே. (௪)

அவ்வவ்விடம்புக்கு அவ்வாயர்பெண்டிர்க்கணுக்கனாய் *
கொவ்வைக்கனிவாய்கொடுத்துக் கூழைமைசெய்யாமே *
† எவ்வம்சிலையுடை வேடர்கானிடைக்கன்றின்பின் *
தெய்வத்தலைவனைப்போக்கினேன் எல்லேபாவமே. (௫)

மிடறுமெழுமெழுத்தோட வெண்ணெய்விழுங்கிப்போய் *
படிறுபலசெய்து இப்பாடியெங்குந்திரியாமே *
கடிறுபலதிரி கானதரிடைக்கன்றின்பின் *
இடறவென்பிள்ளையைப்போக்கினேன் எல்லேபாவமே. (௬)

வள்ளிநுடங்கிடை மாதர்வந்தலர்தூற்றிட *
துள்ளிவிளையாடித் தோழரோடுதிரியாமே *
கள்ளியுணங்கு வெங்கானதரிடைக்கன்றின்பின் *
புள்ளின்தலைவனைப்போக்கினேன் எல்லேபாவமே. (௭)

பன்னிருதிங்கள் வயிற்றிற்கொண்டவப்பாங்கினால் *
என்னிளங்கொங்கை அமுதமூட்டியெடுத்துயான் *
பொன்னடிநோவப் புலரியேகானிற்கன்றின்பின் *
என்னிளஞ்சிங்கத்தைப்போக்கினேன் எல்லேபாவமே. (௮)

குடையும்செருப்பும்கொடாதே தாமோதரனைநான் *
உடையும்கடியனவூன்று வெம்பரற்களுடை *
கடியவெங்கானிடைக் காலடிநோவக்கன்றின்பின் *
கொடியேனென்பிள்ளையைப்போக்கினேன் எல்லேபாவமே. (௯)

† 'எவ்வும்' என்று சிலர்.

↓↓ என்றுமெனக்கினியானை என்மணிவண்ணனை *
கன்றின்பின்போக்கினேனென்று அசோதைகழறிய *
பொன்திகழ்மாடப் புதுவையர்கோன்பட்டன்சொல் *
இன்தமிழ்மாலைகள்வல்லவர்க்கு இடரில்லையே. (௧௦)

அடிவரவு:—அஞ்சனம் பற்று நன்மணி வண்ணம் அவ்வவ்விடம் மிடறு வள்ளி பன்னிரு குடை என்றும் சீலை.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

ங - ஆந் திருமொழி - சீலைக்குதம்பை.

கண்ணன் கன்றுகள்மேய்த்துவரக் கண்டு யசோதை மகிழ்தல்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (சுருட்டிராகம் - ஆதிதாளம்.)

↓↓ சீலைக்குதம்பையொருகாதொருகாது செந்நிறமேல்தோன்றிப்பூ *
கோலப்பணைக்கச்சும்கூறையுடையும் குளிர்முத்தின்கோடாலமும் *
காலிப்பின்னேவருகின்ற கடல்வண்ணன்வேடத்தைவந்துகாணீர் *
† ஞாலத்துப்புத்திரனைப்பெற்றார் நங்கைமீர்!நானேமற்றாருமில்லை. (௧)

கன்னிநன்மாமதிள்சூழ்தரு பூம்பொழிற்காவிரித்தென்னரங்கம் *
மன்னியசீர்மதுசூதனா! கேசவா! பாவியேன்வாழ்வுகந்து *
உன்னையிளங்கன்றுமேய்க்கச் சிறுகாலேயூட்டியொருப்படுத்தேன் *
என்னின்மனம்வலியாளொருபெண்ணில்லைஎன்குட்டனே!முத்தந்தா.

‡ காடுகளூடுபோய்க் கன்றுகள்மேய்த்துமறியோடி * கார்க்கோடற்பூச்
சூடிவருகின்றதாமோதரா! கற்றுத்தூளிகாணுன்னுடம்பு *
பேடைமயிற்சாயற்பின்னைமணாளா! நீராட்டமைத்துவைத்தேன் *
ஆடியமுதுசெய்அப்பனுமுண்டிலன் உன்னோடுடனேயுண்பான். (௩)

கடியார்பொழிலணிவேங்கடவா! கரும்போரேறே! * நீயுகக்கும்
குடையும்செருப்பும்குழலும்தருவிக்கக்கொள்ளாதேபோனாய்மாலே!*
கடியவெங்கானிடைக்கன்றின்பின்போன சிறுக்குட்டச்செங்கமல
அடியும்வெதும்பி*உன்கண்கள்சிவந்தாயசைந்திட்டாய்நீயெம்பிரான்!

பற்றார்நடுங்கமுன்பாஞ்சசன்னியத்தை வாய்வைத்தபோரேறே! *
என்சிற்றாயர்சிங்கமே! சீதைமணாளா! சிறுக்குட்டச்செங்கண்மாலே! *
சிற்றாடையும்சிறுப்பத்திரமும் இவைகட்டிலின்மேல்வைத்துப்போய்*
கற்றாயரோடுநீகன்றுகள்மேய்த்துக் கலந்துடன்வந்தாய்போலும். (௫)

---

† 'ஞாலத்தில்' என்று சிலர். ‡ ங, ௪, இவ்விரண்டுபாசுரங்களும் திருமஞ்சன காலத்தில் சேவிக்கப்படுவன.

அஞ்சுடராழியுன்கையகத்தேந்தும் அழகா! நீபொய்கைபுக்கு *
நஞ்சுமிழ்நாகத்தினோடுபிணங்கவும் நானுயிர்வாழ்ந்திருந்தேன் *
என்செய்யவென்னைவயிறுமறுக்கினாய் ஏதுமோரச்சமில்லை * [டாய்.
கஞ்சன்மனத்துக்குகப்பனவேசெய்தாய்காயாம்பூவண்ணங்கொண் (௬)

பன்றியுமாமையுமீனமுமாகிய பாற்கடல்வண்ணா! * உன்மேல்
கன்றினுருவாகிமேய்புலத்தேவந்த கள்ளவசுரர்தம்மை *
சென்றுபிடித்துச்சிறுக்கைகளாலே விளங்காயெறிந்தாய்போலும் *
என்றுமென்பிள்ளைக்குத்தீமைகள்செய்வார்கள் அங்ஙனமாவர்களே. ()

கேட்டறியாதனகேட்கின்றேன் கேசவா! கோவலர்இந்திரற்கு *
காட்டியசோறுங்கறியுந்தயிரும் கலந்துடனுண்டாய்போலும் *
ஊட்டமுதலிலேனுன்தன்னைக்கொண்டு ஒருபோதுமெனக்கரிது *
வாட்டமிலாப்புகழ்வாசுதேவா! உன்னையஞ்சுவனின்றுதொட்டும். (அ)

[முன்
‡ திண்ணார்வெண்சங்குடையாய்! திருநாள் திருவோணமின்றேழுநாள் *
பண்ணேர்மொழியாரைக்கூவிமுளையட்டிப் பல்லாண்டுகூறுவித்தேன் *
கண்ணாலஞ்செய்யக் கறியுங்கலத்ததரிசியுமாக்கிவைத்தேன் * [யிரு.
கண்ணா! நீநாளைதொட்டுக்கன்றின்பின்போகேல் கோலஞ்செய்திங்கே

‡‡ புற்றரவல்குலசோதைநல்லாய்ச்சி தன்புத்திரன்கோவிந்தனை *
கற்றினம்மேய்த்துவரக்கண்டுகந்து அவள்கற்பித்தமாற்றமெல்லாம் *
செற்றமிலாதவர்வாழ்தரு தென்புதுவைவிட்டுசித்தன்சொல் *
கற்றிவைபாடவல்லார் கடல்வண்ணன்கழலிணைகாண்பர்களே. (௧0)

அடிவரவு:—சீலை கன்னி காடுகள் கடி பற்றார் அஞ்சுடர் பன்றி கேட்டு திண்ணார் புற்று தழை.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

௪ - ஆந் திருமொழி - தழைகளும்.

காலிப்பின்னேவருங் கண்ணனைக் கண்டு இடைக்கன்னியர் காமுறுதல்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (பைரவிராகம்-ஆதிதாளம்.)

††தழைகளும்தொங்கலும்ததும்பியெங்கும்
தண்ணுமையெக்கம்மத்தளிதாழ்பீலி *
குழல்களும்கீதமுமாகியெங்கும்
கோவிந்தன்வருகின்றகூட்டங்கண்டு *
மழைகொலோவருகின்றதென்றுசொல்லி
மங்கைமார்சாலகவாசல்பற்றி *
நுழைவனர்நிற்பனராகி எங்கும்
உள்ளம்விட்டூண்மறந்தொழிந்தனரே. (௧)

வல்லிநுண்ணிதழன்னவாடைகொண்டு
வசையறத்திருவரைவிரித்துடுத்து *
பல்லிநுண்பற்றாகவுடைவாள்சாத்திப்
பணைக்கச்சுந்திப்பலதழைநடுவே *
முல்லைநன்னறுமலர்வேங்கைமலரணிந்து
பல்லாயர்குழாம்நடுவே *
எல்லியம்போதாகப்பிள்ளைவரும்
எதிர்நின்றங்கினவளையிழவேன்மினே. (௨)

சுரிகையும்தெறிவில்லும்செண்டுகோலும்
மேலாடையும்தோழன்மார்கொண்டோட *
ஒருகையாலொருவன்தன்தோளையூன்றி
ஆநிரையினம்மீளக்குறித்தசங்கம் *
வருகையில்வாடியபிள்ளைகண்ணன்
மஞ்சளும்மேனியும்வடிவும்கண்டாள் *
அருகேநின்றாளென்பெண்நோக்கிக்கண்டாள்
அதுகண்டுஇவ்வூரொன்றுபுணர்க்கின்றதே. (௩)

குன்றெடுத்தாநிரைகாத்தபிரான்
கோவலனாய்க்குழலூதியூதி *
கன்றுகள்மேய்த்துத்தன்தோழரோடு
கலந்துடன்வருவானைத்தெருவில்கண்டு *

என்றுமிவனையொப்பாரை நங்காய் !
  கண்டறியேன்வடி! வந்துகாணாய் *
ஒன்றுநில்லாவளைகழன்று
  துகிலேந்திளமுலை யுமென்வசமல்லவே. (ரு)

சுற்றிநின்றுயர் தழைகளிடச
  சுருள்பங்கிநேத்திரத்தாலணிந்து *
பற்றிநின்றுயர்கடைத்தலையே
  பாடவுமாடக்கண்டேன் *அன்றிப்பின்
மற்றொருவர்க்கென்னைப்பேசலொட்டேன்
  மாலிருஞ்சோலையெமமாயற்கல்லால் *
கொற்றவனுக்கிவளாமென்றெண்ணிக்
  கொடுமின்கள்கொடீராகிற்கோழம்பமே. (சு)

சிந்துரமிலங்கத்தன் திருநெற்றிமேல
  திருத்தியகோறம்புந்திருக்குழலும் *
அந்தரமுழவத்தண் தழைக்காவின்கீழ்
  வருமாயரோடுடன்வளைகோலவீச *
அந்தமொன்றில்லாதவாயப்பிள்ளை
  அறிந்தறிந்திவ்வீதிபோதுமாகில் *
பந்துகொண்டானென்றுவளைத்துவைத்துப்
  பவளவாய்முறுவலும்காண்போம்தோழீ ! (எ)

சாலப்பன்னிரைப்பின்னே தழைக்காவின்கீழ்த்
  தன்திருமேனிநின்றொளிதிகழ *
நீலநன்னறுங்குஞ்சிநேத்திரத்தாலணிந்து
  பல்லாயர்குழாம்நடுவே *
கோலச்செந்தாமரைக்கண்மிளிரக்
  குழலூதியிசைபாடிக்குனித்து *ஆயரோடு
ஆலித்துவருகின்றவாயப்பிள்ளை
  (அ)

சிந்துரப்பொடிக்கொண்டுசென்னியப்பித்
  திருநாமமிட்டங்கோரிலையந்தன்னால் *
அந்தரமின்றித்தன்னெறிபங்கியை
  அழகியநேத்திரத்தாலணிந்து *

இந்திரன்போல்வருமாயப்பிள்ளை
எதிர்நின்றங்கினவளையிழவேலென்ன *
சந்தியில்நின்றுகண்டீர்
நங்கைதன் துகிலொடுசரிவளைகழல்கின்றதே. (௮)

வலங்காதின்மேல்தோன்றிப்பூவணிந்து
மல்லிகைவனமாலைமௌவல்மாலை *
சிலிங்காரத்தால்குழல்தாழவிட்டுத்
தீங்குழல்வாய்மடுத்தூதியூதி *
அலங்காரத்தால்வருமாயப்பிள்ளை
அழகுகண்டென்மகளாசைப்பட்டு *
விலங்கிநில்லாதெதிர்நின்றுகண்டீர்
வெள்வளைகழன்றுமெய்ம்மெலிகின்றதே. (௯)

விண்ணின்மீதமரர்கள்விரும்பித்தொழ
மிறைத்துஆயர்பாடியில்வீதியூடே *
கண்ணன்காலிப்பின்னேயெழுந்தருளக்கண்டு
இளவாய்க்கன்னிமார்காமுற்ற
வண்ணம்*வண்டமர்பொழில்புதுவையார்கோன
விட்டுசித்தன்சொன்னமாலைபத்தும் *
பண்ணின்பம்வரப்பாடும்பத்தருள்ளார்
பரமானவைகுந்தம்நண்ணுவரே. (௧௦)

அடிவரவு:—தழை வல்லி சரி குன்று சுற்றி சிந்துரம் சால சிந்துரப்பொடி வலம் விண்ணின்மீது அட்டு.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

௫-ஆந் திருமொழி - அட்டுக்குவி.

கண்ணன் கோவர்த்தனகிரியைக் குடையாகக்கொண்டு கன்மழை தடுத்து ஆயரையும் ஆநிரையையும் பாதுகாத்தல்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (பந்துவராளிராகம் - அடதாளம்.)

அட்டுக்குவிசோற்றுப்பருப்பதமும்
தயிர்வாவியும்நெய்யளறுமடங்கப்
பொட்டத்துற்றி*மாரிப்பகைபுணர்த்த
பொருமாகடல்வண்ணன்பொறுத்தமலை *

வட்டத்தடங்கண்மடமான்கன்றினை
வலைவாய்ப்பற்றிக்கொண்டு * குறமகளிர்
கொட்டைத்தலைப்பால்கொடுத்துவளர்க்கும்
கோவர்த்தனமென்னும்கொற்றக்குடையே. (௧)

வழுவொன்றுமில்லாச்செய்கை வானவர்கோன்
வலிப்பட்டுமுனிந்துவிடுக்கப்பட்ட *
மழைவந்தெழுநாள்பெய்துமாத்தடுப்ப
மதுசூதனெடுத்துமறித்தமலை *
இழவுதரியாததோரீற்றுப்பிடி
இளஞ்சீயம்தொடர்ந்துமுடுகுதலும் *
குழவியிடைக்காலிட்டெதிர்ந்துபொரும்
கோவர்த்தனமென்னும்கொற்றக்குடையே. (௨)

அம்மைத்தடங்கண்மடவாய்ச்சியரும்
ஆனாயருமாநிரையுமலறி *
எம்மைச்சரணேன்றுகொள்ளென்றிரப்ப
இலங்காழிக்கையெந்தையெடுத்தமலை *
தம்மைச்சரணென்றதம்பாவையரைப்
புனமேய்கின்றமானினங்காண்மினென்று *
கொம்மைப்புயக்குன்றர்சிலைகுனிக்கும்
கோவர்த்தனமென்னும்கொற்றக்குடையே. (௩)

கடுவாய்ச்சினவெங்கட்களிற்றினுக்குக்
கவளமெடுத்துக்கொடுப்பானவன்போல் *
அடிவாயுறக்கையிட்டெழப்பறித்திட்டு
அமரர்பெருமான்கொண்டுநின்றமலை *
கடல்வாய்ச்சென்றுமேகங்கவிழ்ந்திறங்கிக்
கதுவாய்ப்படநீர்முகந்தேறி * எங்கும்
குடவாய்ப்படநின்றுமழைபொழியும்
கோவர்த்தனமென்னும்கொற்றக்குடையே. (௪)

வானத்திலுள்ளீர் ! வலியீருள்ளீரேல்
அறையோவந்துவாங்குமினென்பவன்போல் *
ஏனத்துருவாகியவீசனெந்தை
இடவனெழவாங்கியெடுத்தமலை *

கானக்களியானை தன்கொம்பிழந்து
கதுவாய்மதஞ்சோரத்தன்கையெடுத்து *
கூனற்பிறைவேண்டியண்ணாந்துநிற்கும்
கோவர்த்தனமென்னும்கொற்றக்குடையே. (ரு)

செப்பாடுடையதிருமாலவன் தன்
செந்தாமரைக்கைவிரலைந்தினையும் *
கப்பாகமடுத்துமணிநெடுந்தோள்
காம்பாகக்கொடுத்துக்கவித்தமலை *
எப்பாடும்பரந்திழிதெள்ளருவி
இலங்குமணிமுத்துவடம்பிறழ *
குப்பாயமெனநின்றுகாட்சிதரும்
கோவர்த்தனமென்னும்கொற்றக்குடையே. (சு)

படங்கள்பலவுமுடைப்பாம்பரையன்
படர்பூமியைத்தாங்கிக்கிடப்பவன்போல *
தடங்கைவிரலைந்தும்மலரவைத்துத்
தாமோதரன்தாங்குதடவரைதான் *
அடங்கச்சென்றிலங்கையையீடழித்த
அனுமன்புகழ்பாடித்தம்குட்டன்களை *
குடங்கைக்கொண்டுமந்திகள்கண்வளர்த்தும்
கோவர்த்தனமென்னும்கொற்றக்குடையே. (எ)

சலமாமுகில்பல்கணப்போர்க்களத்துச
சரமாரிபொழிந்தெங்கும்பூசலிட்டு *
நலிவானுறக்கேடகங்கோப்பவன்போல்
நாராயணன்முன்முகங்காத்தமலை *
இலைவேய்குரம்பைத்தவமாமுனிவர்
இருந்தார்நடுவேசென்றுஅணார்சொறிய *
கொலைவாய்ச்சினவேங்கைகள்நின்றுறங்கும்
கோவர்த்தனமென்னும்கொற்றக்குடையே. (அ)

வன்பேய்முலையுண்டதோர்வாயுடையன்
வன்தூணெனநின்றதோர்வன்பரத்தை *
தன்பேரிட்டுக்கொண்டுதரணிதன்னில்
தாமோதரன்தாங்குதடவரைதான் *

முன்பேவழிகாட்டமுசுக்கணங்கள்
முதுகில்பெய்துதம்முடைக்குட்டன்களை *
கொம்பேற்றியிருந்துகுதிபயிற்றும்
கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. (௯)

கொடியேறுசெந்தாமரைக்கைவிரல்கள்
கோலமுமழிந்திலவாடிற்றில *
வடிவேறுதிருவுகிர்நொந்துமில
மணிவண்ணன்மலையுமோர்சம்பிரதம் *
முடியேறியமாமுகிற்பல்கணங்கள்
முன்னெற்றிநரைத்தனபோல * எங்கும்
குடியேறியிருந்துமழைபொழியும்
கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. (௧௦)

↓↓ அரவிற்பள்ளிகொண்டுஅரவம்துரந்திட்டு
அரவப்பகையூர்தியவனுடைய *
குரவிற்கொடிமுல்லைகள்நின்றுறங்கும்
கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடைமேல் *
திருவிற்பொலிமறைவாணர்புத்தூர்த்
திகழ் பட்டர்பிரான்சொன்னமாலைபத்தும் *
பரவுமனநன்குடைப்பத்தருள்ளார்
பரமானவைகுந்தம்நண்ணுவரே. (௧௧)

அடிவரவு:—அட்டு வழு அம்மை கடு வானத்தில் செப்பாடு படங்கள் சலம் வன்பேய் கொடி அரவில் நாவலம்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

ரு - ஆந் திருமொழி - நாவலம்.

கண்ணன் வேய்ங்குழலூதற் சிறப்பு.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (ஸாவேரிராகம் - ஆதிதாளம்.)

↓↓ நாவலம்பெரியதீவினில்வாழும்
நங்கைமீர்கள்! இதோரற்புதங்கேளீர் *
தூவலம்புரியுடையதிருமால்
தூயவாயிற்குழலோசைவழியே *

கோவலர்சிறுமியரிளங்கொங்கை
குதுகலிப்பவுடலுளவிழ்ந்து * எங்கும்
காவலுங்கடந்துகயிறுமாலையாகி
வந்துகவிழ்ந்துநின்றனரே. (க)

இடவணரையிடத்தோளொடுசாய்த்து
இருகைகூடப்புருவம்நெரிந்தேற *
குடவயிறுபடவாய்கடைகூடக்
கோவிந்தன்குழல்கொடூதினபோது *
மடமயில்களொடுமான்பிணைபோலே
மங்கைமார்கள்மலர்க்கூந்தலவிழ *
உடைநெகிழவோர்கையால்துகில்பற்றி
ஒல்கியோடரிக்கணோடநின்றனரே. (௨)

வானிளவரசுவைகுந்தக்குட்டன்
வாசுதேவன்மதுரைமன்னன் * நந்த
கோனிளவரசுகோவலக்குட்டன்
கோவிந்தன்குழல்கொடூதினபோது *
வானிளம்படியர்வந்துவந்தீண்டி
மனமுருகிமலர்க்கண்கள்பனிப்ப *
தேனளவுசெறிகூந்தலவிழச்
சென்னிவேர்ப்பச்செவிசேர்த்துநின்றனரே. (௩)

தேனுகன்பிலம்பன்காளியனென்னும்
தீப்பப்பூடுகளடங்கவுழக்கி *
கானகம்படியுலாவியுலாவிக்
கருஞ்சிறுக்கன்குழலூதினபோது *
மேனகையொடுதிலோத்தமையரம்பை
உருப்பசியரவர்வெள்கிமயங்கி *
வானகம்படியில்வாய்திறப்பின்றி
ஆடல்பாடலவைமாறினர்தாமே. (௪)

முன்நரசிங்கமதாகிஅவுணன்
முக்கியத்தைமுடிப்பான், மூவுலகில்
† மன்னரஞ்சும் * மதுசூதனன்வாயில்
குழலினோசை செவியைப்பற்றிவாங்க *

† 'மன்னரஞ்ச' என்று சிலர்.

நன்னரம்புடையதும்புருவோடு
நாரதனும்தந்தம்வீணைமறந்து *
கின்னரமிதுனங்களும் தந்தம்
கின்னரம்தொடுகிலோமென்றனரே. (ரு)

செம்பெருந்தடங்கண்ணன்திரள்தோளன்
தேவகிசிறுவன்தேவர்கள்சிங்கம் *
நம்பரமன் இந்நாள்குழலூதக்
கேட்டவர்கள் இடருற்றனகேளீர் *
அம்பரந்திரியுங்காந்தப்பரெல்லாம்
அமுதகீதவலையால்சுருக்குண்டு *
நம்பரமன்றென்றநாணிமயங்கி
நைந்துசோர்ந்துகைமறித்துநின்றனரே. (சு)

புவியுள்நான்கண்டதோரற்புதம்கேளீர்
பூணிமேய்க்குமிளங்கோவலர்கூட்டத்து
அவையுள் * நாகத்தணையான்குழலூத
அமரலோகத்தளவுஞ்சென்றிசைப்ப *
அவியுணாமறந்துவானவரெல்லாம்
ஆயர்பாடிநிறையப்புகுந்தீண்டி *
செவியுள்நாவின்சுவைகொண்டுமகிழ்ந்து
கோவிந்தனைத்தொடர்ந்தென்றும்விடாரே. (எ)

சிறுவிரல்கள்தடவிப்பரிமாறச்
செங்கண்கோடச்செய்யவாய்கொப்பளிப்ப *
குறுவெயர்ப்புருவம்கூடலிப்பக்
கோவிந்தன்குழல்கொடூதினபோது *
பறவையின்கணங்கள்கூடுதுறந்து
வந்துசூழ்ந்துபடுகாடுகிடப்ப *
கறவையின்கணங்கள்கால்பரப்பிட்டுக்
கவிழ்ந்திறங்கிச்செவியாட்டகில்லாவே. (அ)

திரண்டெழுதழைமழைமுகில்வண்ணன்
செங்கமலமலர்சூழ்வண்டினம்போலே *
சுருண்டிருண்டகுழல்தாழ்ந்தமுகத்தான்
ஊதுகின்றகுழலோசைவழியே *

மருண்டுமான்கணங்கள்மேய்கைமறந்து
மேய்ந்தபுல்லும்கடைவாய்வழிசோர *
இரண்டுபாடும்துலுங்காப்புடைபெயரா
எழுதுசித்திரங்கள்போலநின்றனவே. (௯)

கருங்கண்தோகைமயிற்பீலியணிந்து
கட்டிநன்குடுத்தபீதகவாடை *
அருங்கலவுருவினாயர்பெருமான்
அவனொருவன்குழலூதினபோது *
மரங்கள்நின்றுமதுதாரைகள்பாயும்
மலர்கள்வீழும்வளர்கொம்புகள்தாழும் *
இரங்கும்கூம்பும்திருமால்நின்றநின்ற
பக்கம்நோக்கி அவைசெய்யுங்குணமே. (௧0)

↓↓ குழலிருண்டுசுருண்டேறியகுஞ்சிக்
கோவிந்தனுடையகோமளவாயில் *
குழல்முழைஞ்சுகளினூடுகுமிழ்த்துக்
கொழித்திழிந்தவமுதப்புனல்தன்னை *
குழல்முழவம்விளம்புபுதுவைக்கோன்
விட்டுசித்தன்விரித்ததமிழ்வல்லார் *
குழலைவென்றகுளிர்வாயினராகிச்
சாதுகோட்டியுள்கொள்ளப்படுவாரே. (௧௧)

அடிவரவு:—நாவலம் இட வான் தேனுகன் முன் செம்புவியுள் சிறு திரண்டு கருங் குழல் ஐய.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

எ - ஆந் திருமொழி - ஐயபுழுதி.

திருமாலினிடத்து ஈடுபட்ட தலைமகளினிமை கண்டு நற்றாய் இரங்குதல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

(யமுனாகல்யாணிராகம் - திரிபுடைதாளம்.)

↓↓ ஐயபுழுதியுடம்பளைந்து இவள்பேச்சுமலந்தலையாய் *
செய்யநூலின்சிற்றாடை செப்பனுடுக்கவும்வல்லளல்லள் *
கையினிற்சிறுதூதையோடு இவள்முற்றில்பிரிந்துமிலள் *
பையரவணைப்பள்ளியானொடு கைவைத்திவள்வருமே, (௧)

வாயிற்பல்லுமெழுந்தில மயிரும்முடிகூடிற்றில *
சாய்விலாதகுறுந்தலைச் சிலபிள்ளைகளோடிணங்கி *
தீயிணக்கிணங்காடிவந்து இவள்தன்னன்னசெம்மைசொல்லி *
மாயன்மாமணிவண்ணன்மேல் இவள்மாலுறுகின்றாளே. (௨)

பொங்குவெண்மணற்கொண்டு சிற்றிலும்முற்றத்திழைக்கலுறில் *
சங்குசக்கரம்தண்டுவாள் வில்லுமல்லதிழைக்கலுறாள் *
கொங்கையின்னம்குவிந்தெழுந்தில கோவிந்தனோடிவளை *
சங்கையாகிஎன்னுள்ளம நாடொறும்தட்டுளுப்பாகின்றதே. (௩)

ஏழைபேதையோர்பாலகன்வந்து என்பெண்மகளையெள்கி *
தோழிமார்பலர்கொண்டுபோய்ச்செய்தசூழ்ச்சியையார்க்குரைக்கேன்?
ஆழியானென்னுமாழமோழையில் பாய்ச்சியகப்படுத்தி *
மூழையுப்பறியாததென்னும் மூதுரையுமிலளே. | (௪)

நாடுமூருமறியவேபோய் நல்லதுழாயலங்கல்
சூடி * நாரணன்போமிடமெல்லாம் சோதித்துழிதருகின்றாள் *
கேடுவேண்டுகின்றார்பலருளர் கேசவனோடிவளை *
பாடுகாவலிடுமினென்றென்று பார்தடுமாறினதே. (௫)

பட்டங்கட்டிப்பொற்றோடுபெய்து இவள்பாடகமும்சிலம்பும *
இட்டமாகவளர்த்தெடுத்தேனுக்கு என்னோடிருக்கலுறாள் *
பொட்டப்போய்ப்புறப்பட்டுநின்று இவள்பூவைபூவண்ணாவென்னும் *
வட்டவார்குழல்மங்கைமீர் ! இவள்மாலுறுகின்றாளே. (௬)

பேசவும் † தெரியாதபெண்மையின் பேதையேன்பேதையிவள் *
கூசமின்றிநின்றார்கள்தமமெதிர் கோல்கழிந்தான்மூழையாய் *
கேசவாவென்றும்கேடிலீயென்றும் கிஞ்சுகவாய்மொழியாள் *
வாசவார்குழல்மங்கைமீர் ! இவள்மாலுறுகின்றாளே. (௭)

காறைபூணும்கண்ணாடிகாணும் தன்கையில்வளைகுலுக்கும் *
கூறையுடுக்குமயர்க்கும் தன்கொவ்வைச்செவ்வாய்திருத்தும் *
தேறித்தேறிநின்று ஆயிரம்பேர்த்தேவன்திறம்பிதற்றும் *
மாறில்மாமணிவண்ணன்மேல் இவள்மாலுறுகின்றாளே. (அ)

கைத்தலத்துள்ளமாடழியக் கண்ணாலங்கள்செய்து * இவளை
வைத்துவைத்துக்கொண்டென்னவாணிபம்? நம்மை ‡ வடுப்படுத்தும் *
செய்த்தலையெழுநாற்றுப்போல் அவன்செய்வனசெய்துகொள்ள *
மைத்தடமுகில்வண்ணன்பக்கல் வளரவிடுமின்களே. (௯)

† ‘தரியாத’ என்றும் கூறுவர். ‡ ‘வடுப்படுக்கும்’ என்பதும் பாடம்.

பெருப்பெருத்தகண்ணாலங்கள்செய்து பேணிநம்மில்லத்துள்ளே *
இருத்துவானெண்ணிநாமிருக்க இவளுமொன்றெண்ணுகின்றாள் *
மருத்துவப்பதம்நீங்கினாளென்னும் வார்த்தை படுவதன்முன் *
ஒருப்படுத்திடுமின் இவளை உலகளந்தானிடைக்கே. (௧௦)

↓↓ ஞாலமுற்றுமுண்டு ஆலிலைத்துயில் நாராயணனுக்கு * இவள்
மாலதாகிமகிழ்ந்தனளென்று தாயுரைசெய்ததனை *
கோலமார்பொழில்சூழ்புதுவையர்கோன் விட்டுசித்தன்சொன்ன *
மாலைபத்தும்வல்லவர்கட்கு இல்லைவருதுயரே. (௧௧)

அடிவரவு:—ஐய வாயில் பொங்கு ஏழை நாடு பட்டம் பேச காறை கைத்தலத்து பெரு ஞாலம் நல்லதோர்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

௮ - ஆந் திருமொழி - நல்லதோர்தாமரை.

தலைமகனுடன்சென்ற தலைமகளைக்குறித்துத் தாய் பலபடி வருந்திக்கூறுதல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (ஆனந்தபைரவிராகம் - ஆதிதாளம்.)

↓↓ நல்லதோர்தாமரைப்பொய்கை நாண்மலர்மேற்பனிசோர *
அல்லியுந்தாதுமுதிர்ந்திட்டு அழகழிந்தாலொத்ததாலோ *
இல்லம்வெறியோடிற்றாலோ என்மகளையெங்குங்காணேன் *
மல்லரையட்டவன்பின்போய் மதுரைப்புறம்புக்காள்கொலோ? (௧)

ஒன்றுமறிவொன்றில்லாத உருவறைக்கோபாலர் தங்கள் *
கன்றுகால்மாறுமாபோலே கன்னியிருந்தாளைக்கொண்டு *
நன்றுங்கிறிசெய்துபோனான் நாராயணன்செய்ததீமை *
என்றுமெமர்கள்குடிக்கு ஓரேச்சுக்கொலாயிடுங்கொலோ? (௨)

குமரிமணஞ்செய்துகொண்டு கோலஞ்செய்தில்லத்திருத்தி *
தமரும்பிறருமறியத் தாமோதரற்கென்றுசாற்றி *
அமரர்பதியுடைத்தேவி அரசாணியைவழிபட்டு *
துமிலமெழப்பறைகொட்டித் தோரணம்நாட்டிடுங்கொலோ? (௩)

ஒருமகள்தன்னையுடையேன் உலகம்நிறைந்தபுகழால் *
திருமகள்போலவளர்த்தேன் செங்கண்மால்தான்கொண்டுபோனான் *
பெருமகளாய்க்குடிவாழ்ந்து பெரும்பிள்ளைபெற்றவசோதை *
மருமகளைக்கண்டுகந்து மணாட்டுப்புறம்செய்யுங்கொலோ? (௪)

தம்மாமன்நந்தகோபாலன் தழீஇக்கொண்டென்மகள்தன்னை *
செம்மாந்திரேயென்றுசொல்லிச் செழுங்கயற்கண்ணுஞ்செவ்வாயும் *
கொம்மைமுலையுமிடையும் கொழும்பணைத்தோள்களுங்கண்டிட்டு *
இம்மகளைப்பெற்றதாயர் இனித்தரியாரென்னுங்கொலோ? (௫)

வேடர்மறக்குலம்போலே வேண்டிற்றுச்செய்தென்மகளை *
கூடியகூட்டமேயாகக் கொண்டுகுடிவாழுங்கொலோ? *
நாடுநகருமறிய நல்லதோர்கண்ணாலஞ்செய்து *
சாடிறப்பாய்ந்தபெருமான் தக்கவாகைப்பற்றுங்கொலோ? (௬)

அண்டத்தமரர்பெருமான் ஆழியான்இன் றென்மகளை *
பண்டப்பழிப்புக்கள்சொல்லிப் பரிசறஆண்டிடுங்கொலோ? *
கொண்டுகுடிவாழ்க்கைவாழ்ந்து கோவலப்பட்டங்கவித்து *
பண்டைமணாட்டிமார்முன்னே பாதுகாவல்வைக்குங்கொலோ? (௭)

குடியிற்பிறந்தவர்செய்யும் குணமொன்றுஞ்செய்திலனந்தோ! *
நடையொன்றுஞ்செய்திலன்நங்காய்! நந்தகோபன்மகன்கண்ணன் *
இடையிருபாலும்வணங்க இளைத்திளைத்தென்மகளேங்கி *
கடைகயிறேபற்றிவாங்கிக் கைதழும்பேறிடுங்கொலோ? (௮)

வெண்ணிறத்தோய்தயிர்தன்னை வெள்வரைப்பின்முன்னெழுந்து *
கண்ணுறங்காதேயிருந்து கடையவுந்தான்வல்லள்கொலோ? *
ஒண்ணிறத்தாமரைச்செங்கண் உலகளந்தான்என்மகளை *
பண்ணறையாப்பணிகொண்டு பரிசறஆண்டிடுங்கொலோ? (௯)

↓↓ மாயவன்பின்வழிசென்று வழியிடைமாற்றங்கள்கேட்டு *
ஆயர்களசேரியிலும்புக்கு அங்குத்தைமாற்றமுமெல்லாம் *
தாயவள்சொலலியசொல்லைத் தண்புதுவைப்பட்டன்சொன்ன *
தூயதமிழ்ப்பத்தும்வல்லார் தூமணிவண்ணனுக்காளரே. (௧௦)

அடிவரவு:—நல்லது ஒன்றும் குமரி ஒரு தம்மாமன் வேடர் அண்டத்து குடியில் வெண்ணிறம் மாயவன் என்னுதன்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

கூ - ஆந் திருமொழி - என்னாதன்.

க்ருஷ்ணாவதார ராமாவதாரங்களின் குணசேஷ்டிதங்களை இரண்டு தோழியர் எதிரேதிராகக்கூறி உந்திபறத்தல்.

கலித்தாழிசை. (சேஞ்சுருட்டிராகம் - ரூபகதாளம்.)

↓↓ என்னாதன்தேவிக்கு அன்றுஇன்பப்பூஈயாதாள் *
தன்னாதன்காணவே தண்பூமரத்தினை *
வன்னாதப்புள்ளால் வலியப்பறித்திட்ட * [பற.
என்னாதன்வன்மையைப்பாடிப்பற எம்பிரான்வன்மையைப்பாடிப் (க)

என்வில்வலிகண்டுபோவென் றெதிர்வந்தான்
தன் * வில்லினொடும் தவத்தையெதிர்வாங்கி *
முன்வில்வலித்து முதுபெண்ணுயிருண்டான் [பாடிப்பற.
தன்*வில்லின்வன்மையைப்பாடிப்பற தாசரதிதன்மையைப் (உ)

உருப்பிணிநங்கையைத் தேரேற்றிக்கொண்டு *
விருப்புற்றங்கேக விரைந்தெதிர் † வந்து *
செருக்குற்றான் வீரஞ்சிதைய * தலையைச் [பற.
சிரைத்திட்டான்வன்மையைப்பாடிப்பற தேவகிசிங்கத்தைப்பாடிப(௩)

மாற்றுத்தாய்சென்று வனம்போகேயென்றிட *
ஈற்றுத்தாய்பின்தொடர்ந்து எம்பிரான் ! என்றழ *
கூற்றுத்தாய்சொல்லக் கொடியவனம்போன *
சீற்றமிலாதானைப்பாடிப்பற சீதைமணாளனைப்பாடிப்பற. (௪)

பஞ்சவர்தூதனாய்ப் பாரதம்கைசெய்து *
நஞ்சுமிழ்நாகம்கிடந்த நற்பொய்கைபுக்கு *
அஞ்சப்பணத்தின்மேல்பாய்ந்திட் டருள்செய்த * [பற.
அஞ்சனவண்ணனைப்பாடிப்பற அசோதைதன்சிங்கத்தைப்பாடிப் (௫)

முடியொன்றி மூவுலகங்களுமாண்டு*உன்
அடியேற்கருளென்று அவன்பின்தொடர்ந்த *
படியில்குணத்துப் பரதநம்பிக்கு*அன்
றடிநிலையீந்தானைப்பாடிப்பற அயோத்தியர்கோமானைப்பாடிப்பற. (௬)

---

† 'வந்த' என்றும் பாடம்.

காளியன்பொய்கை கலங்கப்பாய்ந்திட்டு* அவன்
நீள்முடியைந்திலும்நின்று நடஞ்செய்து *
மீள அவனுக்கு அருள்செய்தவித்தகன் *
தோள்வலிவீரமேபாடிப்பற தூமணிவண்ணனைப்பாடிப்பற. (எ)

தார்க்குஇளந்தம்பிக்கு அரசீந்து * தண்டகம்
நூற்றவள் சொற்கொண்டுபோகி* நுடங்கிடைச்
சூர்ப்பணகாவைச் செவியொடுமூக்கு * அவள்
ஆர்க்கவரிந்தானைப்பாடிப்பற அயோத்திக்கரசனைப்பாடிப்பற. (அ)

மாயச்சகடமுதைத்து மருதிறுத்து *
ஆயர்களோடுபோய் ஆநிரைகாத்து * அணி
வேயின்குழலூதி வித்தகனாய்நின்ற *
ஆயர்களேற்றினைப்பாடிப்பற ஆநிரைமேய்த்தானைப்பாடிப்பற. (கூ)

காரார்கடலையடைத்திட்டு இலங்கைபுக்கு *
ஓராதான்பொன்முடி ஒன்பதோடொன்றையும் *
நேரா அவன்தம்பிக்கே நீளரசீந்த *
ஆராவமுதனைப்பாடிப்பற அயோத்தியர்வேந்தனைப்பாடிப்பற. (கo)

தரவுகொச்சகக்கலிப்பா.

‡‡நந்தன்மதலையைக் காகுத்தனைநவின்று *
உந்திபறந்த ஒளியிழையார்கள்சொல் *
செந்தமிழ்த்தென்புதுவை விட்டுசித்தன்சொல் *
ஐந்தினோடைந்தும்வல்லார்க்கு அல்லலில்லையே. (கக)

அடிவரவு:—என்னுதன் என்வில் உருப்பிணி மாற்று பஞ்சவர் முடி காளியன் தார்க்கு மாயம் காரார் நந்தன் நெறிந்த.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

௧௦ - ஆந் திருமொழி - நெறிந்தகருங்குழல்.

இலங்கைக்குத் தூதுசென்ற திருவடி பிராட்டியைக்கண்டு
சக்ரவர்த்தித்திருமகன்கூறிய சில அடையாளங்களைக்
கூறிக் கணையாழிகொடுத்துக் களிப்பித்தல்.

கலிவிருத்தம். (கல்யாணிராகம் - ரூபகதாளம்.)

நெறிந்தகருங்குழல்மடவாய்! நின்னடியேன்விண்ணப்பம் *
செறிந்தமணிமுடிச்சனகன் சிலையிறுத்து நினைக்கொணர்ந்த
தறிந்து* அரசுகளைகட்ட அருந்தவத்தோனிடைவிலங்க *
செறிந்தசிலைகொடுதவத்தைச் சிதைத்ததுமோரடையாளம். (௧)

அல்லியம்பூமலர்க்கோதாய்! அடிபணிந்தேன்விண்ணப்பம் *
சொல்லுகேன்கேட்டருளாய் துணைமலர்க்கண்மடமானே! *
எல்லியம்போதினிதிருத்தல் இருந்ததோரிடவகையில் *
மல்லிகைமாமாலைகொண்டு அங்கார்த்ததுமோரடையாளம். (௨)

கலக்கியமாமனத்தனளாய்க் கைகேசிவரம்வேண்ட *
மலக்கியமாமனத்தனனாய் மன்னவனும்மறாதொழிய *
குலக்குமரா! காடுறையப்போ வென்றுவிடைகொடுப்ப *
இலக்குமணன்தன்னொடும் அங்கேகியதோரடையாளம். (௩)

வாரணிந்தமுலைமடவாய்! வைதேவீ! விண்ணப்பம் *
தேரணிந்தவயோத்தியர்கோன் பெருந்தேவீ! கேட்டருளாய் *
கூரணிந்தவேல்வலவன் குகனோடும்கங்கைதன்னில் *
சீரணிந்ததோழமை கொண்டதுமோரடையாளம். (௪)

மானமருமென்னோக்கி! வைதேவீ! விண்ணப்பம் *
கானமரும்கல்லதர்போய்க் காடுறைந்தகாலத்து *
தேனமரும்பொழிற்சாரல் சித்திரகூடத்திருப்ப *
பான்மொழியாய்! பரதநம்பி பணிந்ததுமோரடையாளம். (௫)

சித்திரகூடத்திருப்பச் சிறுகாக்கைமுலைதீண்ட *
அத்திரமேகொண்டெறிய அனைத்துலகும்திரிந்தோடி *
வித்தகனே! இராமா! ஓ! நின்னபயம்என்றழைப்ப *
அத்திரமேயதன்கண்ணை அறுத்ததுமோரடையாளம். (௬)

மின்னொத்தநுண்ணிடையாய் ! மெய்யடியேன்விண்ணப்பம் *
பொன்னொத்தமானொன்று புகுந்தினிதுவிளையாட *
நின்னன்பின் வழிநின்று சிலைபிடித்தெம்பிரானேக *
பின்னேயங்கிலக்குமணன் பிரிந்ததுமோரடையாளம். (௮)

மைத்தகுமாமலர்க்குழலாய் ! வைதேவீ! விண்ணப்பம் *
ஒத்தபுகழ்வானரக்கோன் உடனிருந்துநினைத்தேட *
அத்தகுசீரயோத்தியர்கோன் அடையாளமிவைமொழிந்தான் *
இத்தகையாலடையாளம் ஈதவன்கைம்மோதிரமே. (௯)

↓↓ திக்குநிறைபுகழாளன் தீவேள்விச்சென்றநாள் *
மிக்கபெருஞ்சபைநடுவே வில்லிறுத்தான்மோதிரங்கண்டு *
ஒக்குமாலடையாளம் அனுமான் ! என்றுஉச்சிமேல்
வைத்துக்கொண்டு * உகந்தனளால் மலர்க்குழலாள்சீதையுமே. (௧0)

↓↓வாராரும்முலைமடவாள் வைதேவிதனைக்கண்டு *
சீராருந்திறலனுமன் தெரிந்துரைத்தவடையாளம் *
பாராரும்புகழ்ப்புதுவைப் பட்டர்பிரான்பாடல்வல்லார் *
ஏராரும்வைகுந்தத்து இமையவரோடிருப்பாரே. (௧௧)

அடிவரவு:—நெறிந்த அல்லி கலக்கிய வாரணி மான் சித்திரகூடத்து மின் மைத்தகு திக்கு வாராரும் கதிர.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

நான்காம்பத்து.

௧ - ஆந் திருமொழி - கதிராயிரம்.

ஸர்வேஶ்வரனைக் காணவேணுமென்று தேடுவோர் சிலரும்
கண்டார் சிலருமாகக் கூறுதல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (தோடிராகம் - அடதாளம்.)

↓↓ கதிராயிரமிரவி கலந்தெறித்தாலொத்தநீண்முடியன் *
எதிரில்பெருமையிராமனை இருக்குமிடம்நாடுதிரேல் *
அதிருங்கழற்பொருதோள் இரணியனாகம்பிளந்து * அரியாய்
உதிரமளைந்தகையோடிருந்தானை உள்ளவாகண்டாருளர். (௧)

நாந்தகம்சங்குதண்டு நாணொலிச்சார்ங்கம்திருச்சக்கரம் *
ஏந்துபெருமையிராமனை இருக்குமிடம்நாடுதிரேல் *
காந்தள்முகிழ்விரற்சீதைக்காகிக் கடுஞ்சிலைசென்றிறுக்க *
வேந்தர்தலைவன்சனகராசன்தன் வேள்வியிற்கண்டாருளர். (உ)

கொலையானைக்கொம்புபறித்துக் கூடலர்சேனைபொருதழிய *
சிலையால்மராமரமெய்ததேவனைச் சிக்கெனநாடுதிரேல் *
தலையால்குரக்கினம்தாங்கிச்சென்று தடவரைகொண்டடைப்ப *
அலையார்கடற்கரைவீற்றிருந்தானை † அங்குத்தைக்கண்டாருளர். (௩)

தோயம்பரந்தநடுவுசூழலில் தொல்லைவடிவுகொண்ட *
மாயக்குழவியதனைநாடுறில் வம்மின்சுவடுரைக்கேன் *
ஆயர்மடமகள்பின்னைக்காகி அடல்விடையேழினையும் *
வீயப்பொருதுவியர்த்துநின்றானை மெய்ம்மையேகண்டாருளர். (௪)

நீரேறுசெஞ்சடைநீலகண்டனும் நான்முகனும் * முறையால்
சீரேறுவாசகஞ்செய்யநின்ற திருமாலைநாடுதிரேல் *
வாரேறுகொங்கையுருப்பிணியை வலியப்பிடித்துக்கொண்டு
தேரேற்றி * சேனைநடுவுபோர்செய்யச் சிக்கெனக்கண்டாருளர். (ரு)

பொல்லாவடிவுடைப்பேய்ச்சிதுஞ்சப் புணர்முலைவாய்மடுக்க
வல்லானை * மாமணிவண்ணனை மருவுமிடம்நாடுதிரேல் *
பல்லாயிரம்பெருந்தேவிமாரொடு பௌவமெறிதுவரை *
எல்லாருஞ்சூழச்சிங்காசனத்தே இருந்தானைக்கண்டாருளர். (௬)

வெள்ளைவிளிசங்குவெஞ்சுடர்த்திருச்சக்கரம் ஏந்துகையன் *
உள்ளவிடம்வினவில் உமக்கிறைவம்மின்சுவடுரைக்கேன் *
வெள்ளைப்புரவிக்குரக்குவெல்கொடித் தேர்மிசைமுன்புநின்று *
கள்ளப்படைத்துணையாகிப் பாரதம்கைசெய்யக்கண்டாருளர். (௭)

நாழிகைகூறிட்டுக்காத்துநின்ற அரசர்கள்தம்முகப்பே *
நாழிகைபோகப்படைபொருதவன் தேவகிதன்சிறுவன் *
ஆழிகொண்டன்றிரவிமறைப்பச் சயத்திரதன்தலையை *
பாழிலுருளப்படைபொருதவன் பக்கமேகண்டாருளர். (௮)

மண்ணும்மலையும்மறிகடல்களும் மற்றும்யாவுமெல்லாம் *
திண்ணம்விழுங்கியுமிழ்ந்ததேவனைச் சிக்கெனநாடுதிரேல் *
எண்ணற்கரியதோரேனமாகி இருநிலம்புக்கிடந்து *
வண்ணக்கருங்குழல்மாதரோடு மணந்தானைக்கண்டாருளர். (௯)

† 'அங்குற்று' என்பது சிலர் பாடம்.

⸸⸸ கரியமுகில்புரைமேனிமாயனைக் கண்டசுவடுரைத்து *
புரவிமுகஞ்செய்துசெந்நெலோங்கி விளைகழனிப்புதுவை * |
திருவிற்பொலிமறைவாணன் பட்டர்பிரான்சொன்னமாலைபத்தும் *
பரவுமனமுடைப்பத்தருள்ளார் பரமனடிசேர்வர்களே. (௧௦)

அடிவரவு:—கதிர் நாந்தகம் கொலை தோயம் நீரேறு பொல்லா வெள்ளை நாழிகை மண்ணும் கரிய அலம்பா.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

௨ - ஆம் திருமொழி - அலம்பாவெருட்டா.

திருமாலிருஞ்சோலைமலைச்சிறப்பு.

கலிநிலைத்துறை. (அடாணாராகம் - ஜம்பைதாளம்.)

⸸⸸ அலம்பாவெருட்டாக்கொன்று திரியுமரக்கரை *
குலம்பாழ்படுத்துக் குலவிளக்காய்நின்றகோன்மலை *
சிலம்பார்க்கவந்து தெய்வமகளிர்களாடும் * சீர்ச்
சிலம்பாறுபாயும் தென்திருமாலிருஞ்சோலையே. (௧)

வல்லாளன்தோளும் வாளரக்கன்முடியும் * தங்கை
பொல்லாதமூக்கும் போக்குவித்தான்பொருந்தும்மலை *
எல்லாவிடத்திலு மெங்கும்பரந்து * பல்லாண்டொலி
செல்லாநிற்கும்சீர்த் தென்திருமாலிருஞ்சோலையே. (௨)

தக்கார்மிக்கார்களைச் சஞ்சலஞ்செய்யும்சலவரை *
தெக்காநெறியேபோக்குவிக்கும் செல்வன்பொன்மலை *
எக்காலமுஞ்சென்று சேவித்திருக்குமடியரை *
அக்கானெறியைமாற்றும் தண்மாலிருஞ்சோலையே. (௩)

ஆனாயர்கூடி யமைத்தவிழவை * அமரர்தம்
கோனார்க்கொழியக் கோவர்த்தனத்துச்செய்தான்மலை *
வானாட்டில்நின்று மாமலர்க்கற்பகத்தொத்திழி *
தேனாறுபாயும் தென்திருமாலிருஞ்சோலையே. (௪)

ஒருவாரணம் பணிகொண்டவன்பொய்கையில் * கஞ்சன்தன்
ஒருவாரண முயிருண்டவன்சென்றுறையும்மலை *
கருவாரணம் தன்பிடிதுறந்தோட * கடல்வண்ணன்
திருவாணைகூறத்திரியும் தண்மாலிருஞ்சோலையே. (௫)

எயிற்றுச்செய்வான் என்றெதிர்ந்துவந்தமல்லரை *
சாவத்தகர்த்த சாந்தணிதோட்சதுரன்மலை *
ஆவத்தனமென்று அமரர்களும்நன்முனிவரும் *
சேவித்திருக்கும் தென்திருமாலிருஞ்சோலையே. (அ)

மன்னர்மறுக மைத்துனன்மார்க்குஒருதேரின்மேல் *
முன்னங்குநின்று மோழையெழுவித்தவன்மலை *
கொன்னவில்கூர்வேற்கோன் நெடுமாறன்தென்கூடற்கோன் *
தென்னன்கொண்டாடும் தென்திருமாலிருஞ்சோலையே. (எ)

குறுகாதமன்னரைக் கூடுகலக்கி * வெங்கானிடைச்
சிறுகால்நெறியேபோக்குவிக்கும் செல்வன்பொன்மலை *
அறுகால்வரிவண்டுகள் ஆயிரநாமஞ்சொல்லி *
சிறுகாலைப்பாடும் தென்திருமாலிருஞ்சோலையே. (அ)

சிந்தப்புடைத்துச் செங்குருதிகொண்டு * பூதங்கள்
அந்திப்பலிகொடுத்து ஆவத்தனஞ்செய்யப்பன்மலை *
இந்திரகோபங்களெம்பெருமான்கனிவாயொப்பான் *
சிந்தும்புறவில் தென்திருமாலிருஞ்சோலையே. (கூ)

எட்டுத்திசையும் எண்ணிறந்தபெருந்தேவிமார் *
விட்டுவிளங்க வீற்றிருந்தவிமலன்மலை *
பட்டிப்பிடிகள் பகடுரிஞ்சிச்சென்று * மாலைவாய்த்
தெட்டித்திளைக்கும் தென்திருமாலிருஞ்சோலையே. (கo)

↓↓ மருதப்பொழிலணி மாலிருஞ்சோலைமலைதன்னை *
கருதியுறைகின்ற கார்க்கடல்வண்ணனம்மான்தன்னை *
விரதங்கொண்டேத்தும் வில்லிபுத்தூர்விட்டுசித்தன்சொல *
கருதியுரைப்பவர் கண்ணன்கழலிணைகாண்பர்களே. (கக)

அடிவரவு:—அலம்பா வல்லாளன் தககார் ஆனாயா ஒரு எயிற்று மன்னர் குறுகாத சிந்த எட்டு மருத உருப்பிணி.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

ரு - ஆந் திருமொழி - உருப்பிணிநங்கை.

திருமாலிருஞ்சோலைமலையின் சிறப்பு.

கலிநிலைத்துறை. (ஸஹாநராகம் - ரூபகதாளம்.)

↓↓ உருப்பிணிநங்கைதன்னைமீட்பான் தொடர்ந்தோடிச்சென்ற *
உருப்பனையோட்டிக்கொண்டிட்டு உறைத்திட்டவுறைப்பன்மலை *
பொருப்பிடைக்கொன்றைநின்று முறியாழியுங்காசுங்கொண்டு *
விருப்பொடுபொன்வழங்கும் வியன்மாலிருஞ்சோலையதே. (க)

கஞ்சனுங்காளியனும் களிறும்மருதுமெருதும் *
வஞ்சனையில்மடிய வளர்ந்தமணிவண்ணன்மலை *
நஞ்சுமிழ்நாகமெழுந்தணவி நளிர்மாமதியை *
செஞ்சுடர்நாவளைக்கும் திருமாலிருஞ்சோலையதே. (உ)

மன்னுநரகன்தன்னைச் சூழ்போகிவளைத்தெறிந்து *
கன்னிமகளிர்தம்மைக் கவர்ந்தகடல்வண்ணன்மலை *
புன்னைசெருந்தியொடு புனவேங்கையுங்கோங்கும்நின்று *
பொன்னரிமாலைகள்சூழ் பொழில்மாலிருஞ்சோலையதே. (ங)

மாவலிதன்னுடைய மகன்வாணன்மகளிருந்த *
காவலைக்கட்டழித்த தனிக்காளைகருதும்மலை *
கோவலர்கோவிந்தனைக் குறமாதர்கள் * பண்குறிஞ்சிப்
பாவொலிபாடிநடம்பயில் மாலிருஞ்சோலையதே. (ச)

↓↓ பலபலநாழஞ்சொல்லிப்பழித்த சிசுபாலன்தன்னை *
அலைவலைமைதவிர்த்த அழகனலங்காரன்மலை *
குலமலைகோலமலை குளிர்மாமலைகொற்றமலை *
நிலமலைநீண்டமலை திருமாலிருஞ்சோலையதே. (ரு)

பாண்டவர்தம்முடைய பாஞ்சாலிமறுக்கமெல்லாம் *
ஆண்டங்குநூற்றுவர்தம் பெண்டிர்மேல்வைத்தஅப்பன்மலை *
பாண்தகுவண்டினங்கள் பண்கள்பாடிமதுப்பருக *
தோண்டலுடையமலை தொலலைமாலிருஞ்சோலையதே. (சா)

கனங்குழையாள்பொருட்டாக் கணைபாரித்து * அரக்கர்தங்கள்
† இனம்கழுவேற்றுவித்த எழில்தோளெம்பிராமன்மலை *
கனங்கொழிதெள்ளருவி வந்துசூழ்ந்தகல்ஞாலமெல்லாம் *
இனங்குழுவாடும்மலை எழில்மாலிருஞ்சோலையதே. (எ)

† 'இனம்கழுகேற்றுவித்த' என்றும் பாடம்.

எரிசிதறும்சரத்தால் இலங்கையினை * தன்னுடைய
வரிசிலைவாயிற்பெய்து வாய்க்கோட்டம்தவிர்த்துகந்த *
அரையனமரும்மலை அமரரொடுகோனும்சென்று *
திரிசுடர்சூழும்மலை திருமாலிருஞ்சோலையதே. (அ)

கோட்டுமண்கொண்டிடந்து குடங்கையில்மண்கொண்டளந்து *
மீட்டுமதுண்டுமிழ்ந்து விளையாடும்விமலன்மலை *
ஈட்டியபல்பொருள்கள் எம்பிரானுக்கடியுறையென்று *
ஓட்டரும்தண்சிலம்பாறுடை மாலிருஞ்சோலையதே. (கூ)

↓↓ ஆயிரம்தோள்பரப்பி முடியாயிரமின்னிலக *
ஆயிரம்பைந்தலைய அனந்தசயனனாளும்மலை *
ஆயிரமாறுகளும் சுனைகள்பலவாயிரமும் *
ஆயிரம்பூம்பொழிலுமுடை மாலிருஞ்சோலையதே. (க0)

↓↓ மாலிருஞ்சோலையென்னும் மலையையுடையமலையை *
நாலிருமூர்த்திதன்னை நால்வேதக்கடலமுதை *
மேலிருங்கற்பகத்தை வேதாந்தவிழுப்பொருளின் *
மேலிருந்தவிளக்கை விட்டுசித்தன் † விரித்தனவே. (கக)

அடிவரவு:—உருப்பிணி கஞ்சன் மன்னு மாவலி பலபல பாண்டவர் கனம் எரி கோட்டு ஆயிரம மாலிரு நாவகாரியம.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

ச - ஆந் திருமொழி - நாவகாரியம்.

திரிகரணங்களாலும் திருக்கோட்டியூரை அனுபவிப்பவரைக் கொண்டாடியும், அவ்வாறு அனுபவியாத அவைஷ்ணவரை இழித்தும் கூறுதல்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (நாதநாமக்ரியைராகம் - அடதாளம்.)

↓↓ நாவகாரியம்சொல்லிலாதவர் நாடொறும்விருந்தோம்புவார் *
தேவகாரியம்செய்து வேதம்பயின்றுவாழ்திருக்கோட்டியூர் *
மூவர்காரியமுந்திருத்தும் முதல்வனைச்சிந்தியாத * அப்
பாவகாரிகளைப்படைத்தவன் எங்ஙனம்படைத்தான்கொலோ! (க)

குற்றமின்றிக்குணம்பெருக்கிக் குருக்களுக்கனுகூலராய் *
செற்றமொன்றுமிலாத வண்கையினார்கள்வாழ்திருக்கோட்டியூர் *
துற்றியேழுலகுண்ட தூமணிவண்ணன்தன்னைத்தொழாதவர் *
பெற்றதாயர்வயிற்றினைப் பெருநோய்செய்வான்பிறந்தார்களே. (உ)

† 'விரித்தனனே' என்று சிலர் கூறுவர்.

வண்ணநன்மணியும்மரதகமுமழுத்தி நிழலெழும்
திண்ணைசூழ் * திருக்கோட்டியூர்த் திருமாலவன்திருநாமங்கள் *
எண்ணக்கண்டவிரல்களால் இறைப்பொழுதுமெண்ணகிலாதுபோய் *
உண்ணக்கண்டதம்மூத்தைவாய்க்குக் கவளமுந்துகின்றார்களே. (௩)

உரகமெல்லணையான்கையில் உறைசங்கம்போல்மடவன்னங்கள் *
நிரைகணம்பரந்தேறும் செங்கமலவயல்திருக்கோட்டியூர் *
நரகநாசனைநாவிற்கொண்டழையாத மானிடசாதியர் *
பருகுநீருமுடுக்குங்கூறையும் பாவஞ்செய்தனதாங்கொலோ (௪)

ஆமையின்முதுகத்திடைக்குதிகொண்டு தூமலர்சாடிப்போய் *
தீமைசெய்திளவாளைகள் விளையாடுநீர்த்திருக்கோட்டியூர் *
நேமிசேர்தடங்கையினானை நினைப்பிலா வலிநெஞ்சுடை *
பூமிபாரங்களுண்ணுஞ்சோற்றினைவாங்கிப் புல்லைத்திணிமினே (௫)

பூதமைந்தொடுவேள்வியைந்து புலன்களைந்துபொறிகளால் *
ஏதமொன்றுமிலாத வண்கையினார்கள்வாழ்திருக்கோட்டியூர் *
நாதனைநரசிங்கனை நவின்றேத்துவார்களுழக்கிய *
பாததூளிபடுதலால் இவ்வுலகம்பாக்கியம்செய்ததே. (௬)

குருந்தமொன்றொசித்தானொடுஞ்சென்று கூடியாடிவிழாச்செய்து *
திருந்துநான்மறையோர் இராப்பகலேத்திவாழ்திருக்கோட்டியூர் *
கருந்தடமுகில்வண்ணனைக் கடைக்கொண்டுகைதொழும்பத்தர்கள் *
இருந்தவூரிலிருக்கும்மானிடர் எத்தவங்களசெய்தார்கொலோ! (௭)

நளிர்ந்தசீலன்நயாசலன் அபிமானதுங்கனை * நாள்தொறும்
தெளிந்தசெல்வனைச்சேவகங்கொண்ட செங்கண்மால்திருக்கோட்டியூர் *
குளிர்ந்துறைகின்றகோவிந்தன் குணம்பாடுவாருள்ளநாட்டினுள் *
விளைந்ததானியமும் இராக்கதர்மீதுகொள்ளகிலார்களே. (௮)

கொம்பினார்பொழில்வாய்க் குயிலினம்கோவிந்தன்குணம்பாடுசீர் *
செம்பொனார்மதிள்சூழ் செழுங்கழனியுடைத்திருக்கோட்டியூர் *
நம்பனைநரசிங்கனை நவின்றேத்துவார்களைக்கண்டக்கால் *
எம்பிரான்தன்சின்னங்கள் † இவரிவரென்றாசைகள்தீர்வனே. (௯)

காசின்வாய்க்கரம்விற்கிலும் கரவாதுமாற்றிலிசோறிட்டு *
தேசவார்த்தைபடைக்கும் வண்கையினார்கள்வாழ்திருக்கோட்டியூர் *
கேசவா! புருடோத்தமா! கிளர்சோதியாய்! குறளா! என்று *
பேசுவாரடியார்கள் எந்தம்மைவிற்கவும்பெறுவார்களே. (௧௦)

---

† 'இவரென்றென்று' எனக் கூறுவர் சிலர்.

↓↓ சீதநீர்புடைசூழ் செழுங்கழனியுடைத்திருக்கோட்டியூர் *
ஆதியானடியாரையும் அடிமையின்றித்திரிவாரையும் *
கோதில்பட்டர்பிரான் குளிர்புதுவைமன்விட்டுணுசித்தன்சொல் *
ஏதமின்றி † புரைப்பவர்கள் இருடீகேசனுக்காளரே. (கக)

அடிவரவு:—நாவகாரியம் குற்றம் வண்ணம் உரகம் ஆமை பூதம் குருந்தம் நளிர்ந்த கொம்பின் காசின் சீதநீர் ஆசைவாய்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

ரு - ஆந் திருமொழி - ஆசைவாய்.

பகவானிடத்தில் விமுகராயிருக்கும் ஸம்ஸாரிகளுக்கு ஹிதோபதேசஞ் செய்தல்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (கண்டாராகம் - ஆதிதாளம்.)

↓↓ ஆசைவாய்ச்சென்றசிந்தையராகி
அன்னையத்தனென்புத்திரர்பூமி *
வாசவார்குழலாளென்றுமயங்கி
மாளுமெல்லைக்கண்வாய்திறவாதே *
கேசவா! புருடோத்தமா! வென்றும்
கேழலாகியகேடிலீ! யென்றும் *
பேசுவாரவரெய்தும்பெருமை
பேசுவான்புகிலநம்பரமன்றே. (க)

சீயினாற்செறிந்தேறியபுண்மேல்
செற்றலேறிக்குழம்பிருந்து * எங்கும்
ஈயினாலரிப்புண்டுமயங்கி
எல்லைவாய்ச்சென்றுசேர்வதன்முன்னம் *
வாயினால்நமோநாரணாவென்று
மத்தகத்திடைக்கைகளைக்கூப்பி *
போயினால்பின்னையித்திசைக்கென்றும்
பிணைகொடுக்கிலும்போகவொட்டாரே. (உ)

சோர்வினாற்பொருள்வைத்ததுண்டாகில்
சொல்லுசொல்லென்றுசுற்றுமிருந்து *
‡ ஆர்வினவிலும்வாய்திறவாதே
அந்தகாலமடைவதன்முன்னம் *

† 'உரைப்பவர்' என்று பாடம். ‡ 'ஆர்வினவிலும்' என்று பலர்.

மார்வமென்பதோர்கோயிலமைத்து
மாதவனென்னுந்தெய்வத்தைநாட்டி *
ஆர்வமென்பதோர்பூவிடவல்லார்க்கு
அரவதண்டத்திலுய்யலுமாமே. (௫)

மேலெழுந்ததோர்வாயுக்கிளர்ந்து
மேல்மிடற்றினையுள்ளெழவாங்கி *
காலுங்கையும்விதிர்விதிர்த்தேறிக்
கண்ணுறக்கமதாவதன்முன்னம் *
மூலமாகியவொற்றையெழுத்தை
மூன்றுமாத்திரையுள்ளெழவாங்கி *
வேலைவண்ணனைமேவுதிராகில்
விண்ணகத்தினில்மேவலுமாமே. (௬)

மடிவழிவந்துநீர்புலன்சோர
வாயிலட்டியகஞ்சியும்மீண்டே *
கடைவழிவாரக்கண்டமடைப்பக்
கண்ணுறக்கமதாவதன்முன்னம் *
தொடைவழியும்மைநாய்கள்கவரா
சூலத்தாலும்மைப்பாய்வதுஞ்செய்யார் *
இடைவழியில்நீர்கூறையுமிழவீர்
இருடீகேசனென்றேத்தவல்லீரே. (௭)

அங்கம்விட்டவையைந்துமகற்றி
ஆவிமூக்கினிற்சோதித்தபின்னை *
சங்கம்விட்டவர்கையைமறித்துப்
பையவேதலைசாய்ப்பதன்முன்னம் *
வங்கம்விட்டுலவுங்கடற்பள்ளிமாயனை
மதுசூதனைமார்பில்
தங்கவிட்டுவைத்து * ஆவதோர்கருமஞ்சாதிப்பார்க்கு
என்றுஞ் சாதிக்கலாமே. (௮)

தென்னவன்தமர்செப்பமிலாதார்
சேவதக்குவார்போலப்புகுந்து *
பின்னும்வன்கயிற்றாற்பிணித்தெற்றிப்
பின்முன்னாகவிழுப்பதன்முன்னம் *

இன்னவன் னினையானென் றுசொல்லி
　　யெண்ணி உள்ளத்திருளறநோக்கி *
மன்னவன் மதுசூதனனென்பார்
　　வானகத்துமன்றுடிகள் தாமே. (எ)

கூடிக்கூடியுற்றார்களிருந்து
　　குற்றம்நிற்கநற்றங்கள் பறைந்து *
பாடிப்பாடியோர்பாடையிலிட்டு
　　நரிப்படைக்கொருபாகுடம்போலே *
கோடிமூடியெடுப்பதன்முன்னம்
　　கௌத்துவமுடைக்கோவிந்தனோடு *
கூடியாடியவுள்ளத்தரானால்
　　குறிப்பிடங்கடந்துய்யலுமாமே. (அ)

வாயொருபக்கம்வாங்கிவலிப்ப
　　வார்ந்தநீர்க்குழிக்கண்கள்மிழற்ற *
தாயொருபக்கம்தந்தையொருபக்கம்
　　தாரமுமொருபக்கமலற்ற *
தீயொருபக்கஞ்சேர்வதன்முன்னம்
　　செங்கண்மாலொடும்சிக்கெனச்சுற்ற
மாய் * ஒருபக்கம்நிற்கவல்லார்க்கு
　　அரவதண்டத்திலுய்யலுமாமே. (௯)

↓↓ செத்துப்போவதோர்போதுநினைந்து
　　செய்யும்செய்கைகள்தேவபிரான்மேல் *
பத்தராயிறந்தார்பெறும்பேற்றைப்
　　பாழித்தோள்விட்டுசித்தன்புத்தூர்க்கோன் *
சித்தம்நன்கொருங்கித்திருமாலைச்
　　செய்தமாலையிவைபத்தும்வல்லார் *
சித்தம்நன்கொருங்கித்திருமால்மேல்
　　சென்றசிந்தை † பெறுவர்கள்தாமே. (௧0)

அடிவரவு:—ஆசை சீயினல் சோர்வினல் மேல் மடி அங்கம் தென்னவன் கூடி வாய் செத்து காசு.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

† 'பெறுவர்தாமே' என்பதும் பாடம்.

சு - ஆந் திருமொழி - காசுங்கறையுடை.

மக்கட்குப் பகவானுடைய திருநாமங்களையிட்டழைக்கும்படி மனம்திருந்தாதார்க்கு உபதேசித்தல்.

கலிநிலைத்துறை. (மோஹநராகம் - ரூபகதாளம்.)

↓↓ காசுங்கறையுடைக்கூறைக்கும் அங்கோர்கற்றைக்கும்
ஆசையினால் * அங்கவத்தப்பேரிடும் ஆதர்காள்! *
கேசவன்பேரிட்டு நீங்கள்தேனித்திருமினோ *
நாயகன்நாரணன் தம்மன்னைநரகம்புகாள். (க)

அங்கொருகூறை அரைக்குடுப்பதனாசையால் *
மங்கியமானிடசாதியின் பேரிடுமாதர்காள்! *
செங்கணெடுமால் சிரீதரா! வென்றழைத்தக்கால் *
நங்கைகாள்! நாரணன் தம்மன்னைநரகம்புகாள். (உ)

உச்சியிலெண்ணெயும் சுட்டியும்வளையுமுகந்து *
எச்சம்பொலிந்தீர்காள்! என்செய்வான்பிறர்பேரிட்டீர்? *
பிச்சைபுக்காகிலும் எம்பிரான்திருநாமமே
நச்சுமின் * நாரணன் தம்மன்னைநரகம்புகாள். (ந)

மானிடசாதியில்தோன்றிற்று ஓர்மானிடசாதியை *
மானிடசாதியின்பேரிட்டால மறுமைக்கில்லை *
வானுடைமாதவா! கோவிந்தா! வென்றழைத்தக்கால் *
நானுடைநாரணன் தம்மன்னைநரகம்புகாள். (ச)

மலமுடையூத்தையில்தோன்றிற்று ஓர்மலவூத்தையை *
மலமுடையூத்தையின்பேரிட்டால் மறுமைக்கில்லை *
குலமுடைக்கோவிந்தா! கோவிநதா! வென்றழைததக்கால் *
நலமுடைநாரணன் தம்மன்னைநரகம்புகாள். (ரு)

நாடுநகருமறிய மானிடப்பேரிட்டு *
கூடியழுங்கிக் குழியில்வீழ்ந்துவழுக்காதே *
சாடிறப்பாய்ந்ததலைவா! தாமோதரா! வென்று
நாடுமின் * நாரணன் தம்மன்னைநரகம்புகாள். (சு)

மண்ணிற்பிறந்துமண்ணாகும் மானிடப்பேரிட்டு * அங்கு
எண்ணமொன்றெண்ணியிருக்கும் ஏழைமனிசர்காள்! *
கண்ணுக்கினிய கருமுகில்வண்ணன்நாமமே
நண்ணுமின் * நாரணன் தம்மன்னைநரகம்புகாள். (எ)

நம்பிபிம்பியென்று நாட்டுமானிடப்பேரிட்டால் *
நம்பும்பிம்புமெல்லாம் நாலுநாளிலழுங்கிப்போம் *
செம்பெருந்தாமரைக்கண்ணன் பேரிட்டழைத்தக்கால் *
நம்பிகாள்! நாரணன் தம்மன்னைநரகம்புகாள். (அ)

ஊத்தைக்குழியில் அமுதம்பாய்வதுபோல் * உங்கள்
மூத்திரப்பிள்ளையை என்முகில்வண்ணன்பேரிட்டு *
கோத்துக்குழைத்துக் குணலமாடித்திரிமினோ *
நாத்தகுநாரணன் தம்மன்னைநரகம்புகாள். (க)

↓↓ சீரணிமால் திருநாமமேயிடத்தேற்றிய *
வீரணிதொல்புகழ் விட்டுசித்தன்விரித்த *
ஓரணியொண்டமிழ் ஒன்பதோடொன்றும்வல்லவர் *
பேரணிவைகுந்தத்து என்றும்பேணியிருப்பரே. (கo)

அடிவரவு:—காசும் அங்கொரு உச்சியில் மானிடம் மலம் நாடு மண் நம்பி ஊத்தை சீரணி தங்கை.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

எ - ஆந் திருமொழி - தங்கையைமூக்கும்.

தேவப்ரயாகை யென்று வழங்கும்
கங்கைக்கரையின் கண்டமென்னுந் திருப்பதியின் மகிமை.
எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (அடாணாராகம் - திரிபுடைதாளம்.)

↓↓ தங்கையைமூக்குமதமையனைத்தலையும்
தடிந்த எந்தாசரதிபோய் *
எங்கும்தன்புகழாவிருந்தரசாண்ட
எம்புருடோத்தமனிருக்கை *
கங்கைகங்கை † யென்னவாசகத்தாலே
கடுவினைகளைந்திடுகிற்கும் *
கங்கையின்கரைமேற்கைதொழநின்ற
கண்டமென்னுங்கடிநகரே. (க)

சலம்பொதியுடம்பின்தழலுமிழ்பேழ்வாய்ச
சந்திரன்வெங்கதிரஞ்ச *
மலர்ந்தெழுந்தணவுமணிவண்ணவுருவின்
மால்புருடோத்தமன்வாழ்வு *

† 'என்ற' என்றும் பாடம்.

நலந்திகழ்சடையான்முடிக்கொன்றைமலரும்
        நாரணன்பாதத்துழாயும் *
கலந்திழிபுனலாற்புகர்படுகங்கைக்
        கண்டமென்னுங்கடிநகரே. (௨)

அதிர்முகமுடையவலம்புரிகுமிழ்த்தி
        அழலுமிழாழிகொண்டெறிந்து * அங்
கெதிர்முகவசுரர்தலைகளையிடறும்
        எம்புருடோத்தமனிருக்கை *
சதுமுகன்கையில்சதுப்புயன்தாளில்
        சங்கரன்சடையினில்தங்கி *
கதிர்முகமணிகொண்டிழிபுனற்கங்கைக்
        கண்டமென்னுங்கடிநகரே. (௩)

இமையவரிறுமாந்திருந்தரசாள
        ஏற்றுவந்தெதிர்பொருசேனை *
நமபுரம்நணுகநாந்தகம்விசிறும்
        நம்புருடோத்தமன்நகர்தான் *
இமவந்தம்தொடங்கியிருங்கடலளவும்
        இருகரையுலகிரைத்தாட *
கமையுடைப்பெருமைக்கங்கையின்கரைமேல்
        கண்டமென்னுங்கடிநகரே. (௪)

உழுவதோர்படையுமுலக்கையும்வில்லும்
        ஒண்சுடராழியும்சங்கும் *
மழுவொடுவாளும்படைக்கலமுடைய
        மால்புருடோத்தமன்வாழ்வு *
எழுமையுங்கூடியீண்டியபாவம்
        இறைப்பொழுதளவினிலெல்லாம் *
கழுவிடும்பெருமைக்கங்கையின்கரைமேல்
        கண்டமென்னுங்கடிநகரே. (௫)

தலைப்பெய்துகுமுறிச்சலம்பொதிமேகம்
        சலசலபொழிந்திடக்கண்டு *
மலைப்பெருங்குடையால் † மறைத்தவன்
        மதுரைமால்புருடோத்தமன்வாழ்வு *

† 'மறுத்தவன்' என்றும் பாடம்.

அலைப்புடைத்திரைவாயருந்தவமுனிவர்
அவபிரதங்குடைந்தாட *
கலப்பைகள்கொழிக்குங்கங்கையின்கரைமேல்
கண்டமென்னுங்கடிநகரே. (சு)

விற்பிடித்திறுத்துவேழத்தை † முறுக்கி
மேலிருந்தவன்தலைசாடி *
மற்பொருதெழப்பாய்ந்தரையனையுதைத்த
மால்புருடோத்தமன்வாழ்வு *
அற்புதமுடையஐராவதமதமும்
அவரிளம்படியரொண்சாந்தும் *
கற்பகமலருங்கலந்திழிகங்கைக்
கண்டமென்னுங்கடிநகரே. (எ)

திரைபொருகடல்சூழ்திண்மதிள்துவரைவேந்து
தன்மைத்துனன்மார்க்காய் *
அரசினையவியஅரசினையருளும்
அரிபுருடோத்தமனமர்வு *
நிரைநிரையாகநெடியனயூபம்
நிரந்தரமொழுக்குவிட்டு * இரண்டு
கரைபுரைவேள்விப்புகைகமழ்கங்கைக்
கண்டமென்னுங்கடிநகரே. (அ)

↓↓ வடதிசைமதுரைசாளக்கிராமம்
வைகுந்தம்துவரையயோத்தி *
இடமுடைவதரியிடவகையுடைய
எம்புருடோத்தமனிருக்கை *
தடவரையதிரத்தரணிவிண்டிடியத்
தலைப்பற்றிக்கரைமரஞ்சாடி *
கடலினைக்கலங்கக்கடுத்திழிகங்கைக்
கண்டமென்னுங்கடிநகரே. (கூ)

↓↓ மூன்றெழுத்ததனைமூன்றெழுத்ததனால்
மூன்றெழுத்தாக்கி * மூன்றெழுத்தை
ஏன்றுகொண்டிருப்பார்க்குஇரக்கநன்குடைய
எம்புருடோத்தமனிருக்கை *

† 'முருக்கி' என்றும் பாடம்.

மூன்றடிநிமிர்த்துமூன்றினில்தோன்றி
மூன்றினில்மூன்றுருவானான் *
கான்தடம்பொழில்சூழ்கங்கையின்கரைமேல்
கண்டமென்னுங்கடிநகரே. (௧0)

↓↓ பொங்கொலிகங்கைக்கரைமலிகண்டத்து
உறைபுருடோத்தமனடிமேல் *
வெங்கலிநலியாவில்லிபுத்தூர்க்கோன்
விட்டுசித்தன்விருப்புற்று *
தங்கியஅன்பால்செய்தமிழ்மாலை
தங்கியநாவுடையார்க்கு *
கங்கையில்திருமால்கழலிணைக்கீழே
குளித்திருந்தகணக்காமே. (௧௧)

அடிவரவு:—தங்கையை சலம் அதிர் இமையவர் உரமவதோர் தலைபெய்து வில் திரை வடதிசை மூன்று பொங்கு மாதவத்தோன்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

௮ - ஆந் திருமொழி - மாதவத்தோன்.

திருவரங்கம்பெரியகோயிலின் மகிமை.

தரவுகொச்சகக்கலிப்பா. (ரங்கநாதர் ஸந்நிதி - அதிதானம்.)

↓↓ மாதவத்தோன்புத்திரன்போய் மறிகடலவாய்மாண்டானை *
ஓதுவித்ததக்கணையா உருவுருவேகொடுத்தானூர் *
தோதவத்தித்தூய்மறையோர் துறைபடியத்துளும்பியெங்கும் *
போதில்வைத்ததேன்சொரியும் புனலரங்கமென்பதுவே. (௧)

பிறப்பகத்தேமாண்டொழிந்த பிள்ளைகளைநால்வரையும் *
இறைப்பொழுதிற்கொணர்ந்துகொடுத்து ஒருப்படுத்தவுறைப்பனூர் *
மறைப்பெருந்தீவளர்த்திருப்பார் வருவிருந்தையளித்திருப்பார் *
சிறப்புடையமறையவர்வாழ் திருவரங்கமென்பதுவே. (௨)

மருமகன்தன்சந்ததியை உயிர்மீட்டு, மைத்துனன்மார் *
உருமகத்தேவீழாமே குருமுகமாய்க்காத்தானூர் *
திருமுகமாய்ச்செங்கமலம் திருநிறமாய்க்கருங்குவளை *
பொருமுகமாய்நின்றலரும் புனலரங்கமென்பதுவே. (௩)

கூன்தொழுத்தைசிதகுரைப்பக் கொடியவள்வாய்க்கடியசொற்கேட்டு*
ஈன்றெடுத்ததாயரையும் இராச்சியமுமாங்கொழிய *
கான்தொடுத்தநெறிபோகிக் கண்டகரைக்களைந்தானூர் *
தேன்தொடுத்தமலர்ச்சோலைத் திருவரங்கமென்பதுவே. (௪)

பெருவரங்களவைபற்றிப் பிழக்குடையஇராவணனை *
உருவரங்கப்பொருதழித்து இவ்வுலகினைக்கண்பெறுத்தானூர் *
குரவரும்பக்கோங்கலரக் குயில்கூவும்குளிர்பொழில்சூழ் *
திருவரங்கமென்பதுவே என்திருமால்சேர்விடமே. (௫)

கீழுலகிலசுரர்களைக் கிழங்கிருந்துகிளராமே *
ஆழிவிடுத்தவருடைய கருவழித்தவழிப்பனூர் *
தாழைமடலூடுரிஞ்சித் தவளவண்ணப்பொடியணிந்து *
யாழினிசைவண்டினங்கள் ஆளம்வைக்குமரங்கமே. (௬)

கொழுப்புடையசெழுங்குருதி கொழித்திழிந்துகுமிழ்த்தெறிய *
பிழக்குடையவசுரர்களைப் பிணம்படுத்தபெருமானூர் *
தழுப்பரியசந்தனங்கள் தடவரைவாயீர்த்துக்கொண்டு *
தெழிப்புடையகாவிரிவந்து அடிதொழுஞ்சீரரங்கமே. (௭)

வல்லெயிற்றுக்கேழலுமாய் வாளெயிற்றுச்சீயமுமாய் *
எல்லையில்லாத்தரணியையும் அவுணனையுமிடந்தானூர் *
எல்லியம்போதிருஞ்சிறைவண்டு எம்பெருமான்குணம்பாடி *
மல்லிகைவெண்சங்கூதும் மதிளரங்கமென்பதுவே. (௮)

குன்றாடுகொழுமுகில்போல் குவளைகள்போல்குரைகடல்போல் *
நின்றாடுகணமயில்போல் நிறமுடையநெடுமாலூர் *
குன்றாடுபொழில்நுழைந்து கொடியிடையார்முலையணவி *
மன்றாடுதென்றலுலாம் மதிளரங்கமென்பதுவே. (௯)

↓↓ பருவரங்களவைபற்றிப் படையாலித்தெழுந்தானை *
செருவரங்கப்பொருதழித்த திருவாளன்திருப்பதிமேல் *
திருவரங்கத்தமிழ்மாலை விட்டுசித்தன்விரித்தனகொண்டு *
இருவரங்கமெரித்தானை ஏத்தவல்லாரடியோமே. (௧௦)

அடிவரவு:—மாதவத்தோன் பிறப்பு மருமகன் கூன் பெரு கீழ் கொழுப்பு வல்லெயிற்று குன்று பரு மாவடி.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

௯ - ஆந் திருமொழி - மரவடியை.

திருவரங்கம்பெரியகோயிலின் மகிமை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (தோடிராகம் - ஆதிதாளம்.)

↓↓ மரவடியைத்தம்பிக்கு வான்பணையம்
வைத்துப்போய்வானோர்வாழ *
செருவுடையதிசைக்கருமம் திருத்திவந்
துலகாண்டதிருமால்கோயில் *
திருவடிதன் திருவுருவும் திருமங்கை
மலர்க்கண்ணும்காட்டிநின்று *
உருவுடையமலர்நீலம் காற்றாட்ட
ஓசலிக்குமொளியரங்கமே. (௧)

↓↓ தன்னடியார்திறத்தகத்துத் தாமரை
யாளாகிலும்சிதகுரைக்குமேல *
என்னடியாரது செய்யார் செய்தாரேல்
நன்றுசெய்தாரென்பர்போலும் *
மன்னுடையவிபீடணற்கா மதிளிலங்கைத்
திசைநோக்கிமலர்க்கண்வைத்த *
என்னுடையதிருவரங்கற்கன்றியும்
மற்றொருவர்க்காளாவரே. (௨)

கருளுடையபொழில்மருதும்
கதக்களிறும்பிலம்பனையும்கடியமாவும் *
உருளுடையசகடரையும்மல்லரையும்
உடையவிட்டோசைகேட்டான் *
இருளகற்றுமெறிகதிரோன்மண்டலத்தூடு
ஏற்றிவைத்தேணிவாங்கி *
அருள்கொடுத்திட்டடியவரை
ஆட்கொள்வானமருமூரணியரங்கமே. (௩)

பதினாறுமாயிரவர் தேவிமார்
பணிசெய்ய * துவரையென்னும்
அதில்நாயகராகிவீற்றிருந்த
மணவாளர்மன்னுகோயில் *

புதுநாண்மலர்க்கமலம் எம்பெருமான்
பொன்வயிற்றிற்பூவேபோல்வான் *
பொதுநாயகம்பாவித்து இறுமாந்து
பொன்சாய்க்கும்புனலரங்கமே. (ச)

ஆமையாய்க்கங்கையாய் ஆழ்கடலாய்
அவனியாயருவரைகளாய் *
நான்முகனாய்நான்மறையாய் வேள்வியாய்த்
தக்கணையாய்த்தானுமானான் *
சேமமுடைநாரதனார் சென்றுசென்று
துதித்திறைஞ்சக்கிடந்தானகோயில் *
பூமருவிப்புள்ளினங்கள் புள்ளரையன்
புகழ்குழறும்புனலரங்கமே. (ரு)

மைத்துனன்மார்காதலியைமயிர்முடிப்பித்து
அவர்களையேமன்னராக்கி *
உத்தரைதன்சிறுவனையுமுய்யக்கொண்ட
உயிராளனுறையுங்கோயில் *
பத்தர்களும்பகவர்களும் பழமொழிவாய்
முனிவர்களும்பரந்தநாடும் *
சித்தர்களும்தொழுதிறைஞ்சத்
திசைவிளக்காய்நிற்கின்றதிருவரங்கமே. (சா)

குறட்பிரமசாரியாய் மாவலியைக்
குறும்பதக்கியரசுவாங்கி *
இறைப்பொழுதிற்பாதாளங்கலவிருக்கை
கொடுத்துகந்தவெம்மான்கோயில் *
எறிப்புடையமணிவரைமேல் இளஞாயி
றெழுந்தாற்போலரவணையின்வாய் *
சிறப்புடையபணங்கள்மிசைச்
செழுமணிகள்விட்டெறிக்கும்திருவரங்கமே. (எ)

உரம்பற்றியிரணியனை உகிர்நுதியா
லொள்ளியமார்புறைக்கவூன்றி *
சிரம்பற்றிமுடியிடியக்கண்பிதுங்க
+ வாயலரத்தெழித்தான்கோயில் *

+ 'வாயலற' என்றும் பாடம்.

உரம்பெற்றமலர்க்கமலம் உலகளந்த
சேவடிபோ லுயர்ந்துகாட்ட *
வரம்புற்றகதிர்ச்செந்நெல் தாள்சாய்த்துத்
தலைவணக்குந்தண்ணரங்கமே. (அ)

தேவுடையமீனமாயாமையாய்
ஏனமாய் அரியாய்க்குறளாய் *
மூவுருவிலிராமனாய்க் கண்ணனாய்க்
கற்கியாய்முடிப்பான்கோயில் *
சேவலொடுபெடையன்னம்
செங்கமலமலரேறியூசலாடி *
பூவணைமேல்துதைந்தெழு செம்
பொடியாடிவிளையாடும்புனலரங்கமே. (௯)

செருவாளும்புள்ளாளன்மண்ணாளன்
செருச்செய்யும்நாந்தகமென்னும்
ஒருவாளன் * மறையாளனோடாத
படையாளன் விழுக்கையாளன் *
இரவாளன்பகலாளனென்னையாளன்
ஏழுலகப்பெரும்புரவாளன் *
திருவாளனினிதாகத் திருக்கண்கள்
வளர்கின்றதிருவரங்கமே. (௧௦)

↓↓ கைந்நாகத்திடர்கடிந்த கனலாழிப்
படையுடையான்கருதும்கோயில் *
தென்னாடும்வடநாடும்தொழநின்ற
திருவரங்கந்திருப்பதியின்மேல் *
மெய்ந்நாவன்மெய்யடியான் விட்டுசித்தன்
விரித்ததமிழுரைக்கவல்லார் *
எஞ்ஞான்றுமெம்பெருமானிணையடிக்கீழ்
இணைபிரியாதிருப்பார்தாமே. (௧௧)

அடிவரவு:—மரவடியை தன் கருள் பதினாறு ஆமையாய மைத்துனன்மார் குறள் உரம் தேவு செரு கைந்நாகத்து துப்பு.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

௰ - ஆம் திருமொழி - துப்புடையாரை.

அந்திமகாலத்தில் உடைகழிக்கும்படி அப்போதைக்கிப்போதே பெரியபெருமாள் திருவடிகளில் சரணம்புகுதல்.

[illegible] ([illegible])

[illegible]
[illegible] *
[illegible]
[illegible]
[illegible]
[illegible] *
[illegible]
அரங்கத்தரவணைப்பள்ளியானே! (க)

சாமிடத்தென்னைக்குறிக்கொள்கண்டாய்
சங்கொடுசக்கரமேந்தினானே! *
நாமடித்தென்னையனேகதண்டம்
செய்வதாநிற்பர்நமன்தமர்கள் *
போமிடத்துன்திறத்தெத்தனையும்
புகாவண்ணம்நிற்பதோர்மாயைவல்லை *
ஆமிடத்தேயுன்னைச்சொல்லிவைத்தேன்
அரங்கத்தரவணைப்பள்ளியானே! (உ)

எல்லையில்வாசல்குறுகச்சென்றால்
எற்றிநமன்தமர்பற்றும்போது *
நில்லுமினென்னுமுபாயமில்லை
நேமியுஞ்சங்கமுமேந்தினானே! *
சொல்லலாம்போதேயுன்நாமமெல்லாம்
சொல்லினேன் என்னைக்குறிக்கொண்டென்றும் *
அல்லல்படாவண்ணங்காக்கவேண்டும்
அரங்கத்தரவணைப்பள்ளியானே! (௩)

ஒற்றைவிடையனும்நான்முகனும்
உன்னையறியாப்பெருமையோனே! *
முற்றவுலகெல்லாம்நீயேயாகி
மூன்றெழுத்தாயமுதல்வனேயோ! *

அற்றதுவாணாளிவற்கென்றெண்ணி
அஞ்சநமன்தமர்பற்றலுற்ற *
அற்றைக்கு,நீயென்னைக்காக்கவேண்டும்
அரங்கத்தரவணைப்பள்ளியானே ! (ச)

பையரவினணைப்பாற்கடலுள்
பள்ளிகொள்கின்றபரமமூர்த்தி ! *
உய்யவுலகுபடைக்கவேண்டி
உந்தியில்தோற்றினாய்நான்முகனை *
வையமனிசரைப்பொய்யென்றெண்ணிக்
காலனையுமுடனேபடைத்தாய் *
ஐய ! இனியென்னைக்காக்கவேண்டும்
அரங்கத்தரவணைப்பள்ளியானே ! (ரு)

தண்ணெனவில்லைநமன்தமர்கள்
சாலக்கொடுமைகள்செய்யாநிற்பர் *
மண்ணொடுநீருமெரியுங்காலும்
மற்றுமாகாசமுமாகிநின்றாய் ! *
எண்ணலாம்போதேயுன்நாமமெல்லாம்
எண்ணினேன், என்னைக்குறிக்கொண்டென்றும் *
அண்ணலே ! நீயென்னைக்காக்கவேண்டும்
அரங்கத்தரவணைப்பள்ளியானே ! (சு)

செஞ்சொல்மறைப்பொருளாகிநின்ற
தேவர்கள்நாயகனே ! எம்மானே ! *
எஞ்சலிலென்னுடையின்னமுதே !
ஏழுலகுமுடையாய் ! என்னப்பா ! *
வஞ்சவுருவின்நமன்தமர்கள்
வலிந்துநலிந்தென்னைப்பற்றும்போது *
அஞ்சலமென்றென்னைக்காக்கவேண்டும்
அரங்கத்தரவணைப்பள்ளியானே ! (எ)

நானேதுமுன்மாயமொன்றறியேன்
நமன்தமர்பற்றிநலிந்திட்டு * இந்த
ஊனேபுகேயென்றுமோதும்போது
அங்கேதும் † நானுன்னைநினைக்கமாட்டேன் *

† ‘உன்னை நானொன்று நினைக்கமாட்டேன்’ என்பதும் பாடம்.

வானேய்வானவர்தங்களீசா !
மதுரைப்பிறந்தமாமாயனே ! * என்
ஆனாய் ! நீயென்னைக்காக்கவேண்டும்
அரங்கத்தரவணைப்பள்ளியானே ! (௯)

குன்றெடுத்தாநிரைகாத்தவாயா !
கோநிரைமேய்த்தவனே ! † எம்மானே ! *
அன்றுமுதலின்றறுதியா
ஆதியஞ்சோதி ! மறந்தறியேன் *
நன்றுங்கொடியநமன்தமர்கள்
நலிந்துவலிந்தென்னைப்பற்றும்போது *
அன்றங்குநீயென்னைக்காக்கவேண்டும்
அரங்கத்தரவணைப்பள்ளியானே ! (௧)

↓↓ மாயவனைமதுசூதனனை
மாதவனைமறையோர்களேத்தும் *
ஆயர்களேற்றினையச்சுதனை
அரங்கத்தரவணைப்பள்ளியானை *
வேயர்புகழ்வில்லிபுத்தூர்மன்
விட்டுசித்தன்சொன்னமாலைபத்தும் *
தூயமனத்தனராகிவல்லார்
தூமணிவண்ணனுக்காளர்தாமே. (௧0)

அடிவரவு:—துப்பு சாமிடத்து எல்லே ஒற்றை பை தண்ணெனவு செஞ்சொல் நான் குன்று மாயவனை வாக்கு

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

ஐந்தாம் பத்து.

க – ஆந் திருமொழி – வாக்குத்தூய்மை.

நைச்யாநுஸந்தாநம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (தன்யாசிராகம் - அடதாளம்.)

↓↓ வாக்குத்தூய்மையிலாமையினாலே
மாதவா ! உன்னைவாய்க்கொள்ளமாட்டேன் *
நாக்குநின்னையல்லாலறியாது
நானதஞ்சுவன்என்வசமன்று *

† 'அம்மானே' என்பதும் பாடம்.

மூர்க்குப்பேசுகின்றானிவனென்று
முனிவாயேலும்என்நாவினுக்காற்றேன் *
காக்கைவாயிலும்கட்டுரைகொள்வர்
காரணா ! கருளக்கொடியானே ! (௧)

சழக்குநாக்கொடுபுன்கவிசொன்னேன
சங்குசக்கரமேந்துகையானே ! *
பிழைப்பராகிலும்தம்மடியார்சொல்
பொறுப்பது பெரியோர்கடனன்றே *
விழிக்குங்கண்ணிலேன்நின்கண்மற்றல்லால்
வேறொருவரோடென்மனம்பற்றாது *
உழைக்கோர்புள்ளிமிகையன்றுகண்டாய்
ஊழியேழுலகுண்டுமிழ்ந்தானே ! (௨)

நன்மைதீமைகளொன்றுமறியேன்
நாரணா ! என்னுமித்தனையல்லால் *
புன்மையாலுன்னைப்புள்ளுவம்பேசிப்
புகழ்வானன்றுகண்டாய்திருமாலே ! *
உன்னுமாறு உன்னையொன்றுமறியேன்
ஓவாதேநமோநாரணா ! வென்பன் *
வன்மையாவதுன்கோயிலில்வாழும்
வைட்டணவனென்னும்வன்மைகண்டாயே. (௩)

நெடுமையாலுலகேழுமளந்தாய் !
நின்மலா ! நெடியாய் ! * அடியேனைக்
குடிமைகொள்வதற்கையுறவேண்டா
கூறைசோறிவைவேண்டுவதில்லை *
அடிமையென்னுமக்கோயின்மையாலே
அங்கங்கேயவைபோதருங்கண்டாய் *
கொடுமைக்கஞ்சனைக்கொன்றுநின்தாதை
கோத்தவன்தளைகோள்விடுத்தானே ! (௪)

தோட்டமில்லவளாத்தொழுஓடை
துடவையுங்கிணறுமிவையெல்லாம *
வாட்டமின்றியுன்பொன்னடிக்கீழே
வளைப்பகம்வகுத்துக்கொண்டிருந்தேன் *

நாட்டுமானிடத்தோடெனக்கரிது
நச்சுவார்பலர்கேழலொன்றாகி *
கோட்டுமண்கொண்டகொள்கையினானே!
குஞ்சரம்வீழக்கொம்பொசித்தானே! (௫)

கண்ணாநான்முகனைப்படைத்தானே!
காரணா! கரியாய்! அடியேன்நான் *
உண்ணாநாள்பசியாவதொன்றில்லை
ஓவாதேநமோநாரணாவென்று *
எண்ணாநாளும்இருக்கெசுச்சாமவேத
நாண்மலர்கொண்டுனபாதம்
நண்ணாநாள் * அவைதத்துறுமாகில்
அன்றெனக்கவைபட்டினிநாளே. (௬)

வெள்ளைவெள்ளத்தின்மேலொருபாம்பை
மெத்தையாகவிரித்து * அதன்மேலே
கள்ளநித்திரைகொள்கின்றமார்க்கம்
காணலாங்கொ † லென்றாசையினாலே *
உள்ளஞ்சோரவுகந்தெதிர்விம்மி
உரோமகூபங்களாய் * கண்ணநீர்கள்
துள்ளம்சோரத்துயிலணைகொள்ளேன்
சொல்லாய்யானுன்னைத்தத்துறுமாறே. (௭)

வண்ணமால்வரையேகுடையாக
மாரிகாத்தவனே! மதுசூதா! *
கண்ணனே! கரிகோள்விடுத்தானே!
காரணா! களிறட்டபிரானே! *
எண்ணுவாரிடரைக்களைவானே!
ஏத்தரும்பெருங்கீர்த்தியினானே! *
நண்ணிநானுன்னைநாள்தொறுமேத்தும்
நன்மையேயருள்செய்யெம்பிரானே! (௮)

நம்பனே! நவின்றேத்தவல்லார்கள்
நாதனே! நரசிங்கமதானாய்! *
உம்பர்கோனுலகேழுமளந்தாய்!
ஊழியாயினாய்! ஆழிமுன்னேந்தி *

† 'என்னாசையினாலே' என்பதும் பாடம்.

கம்பமாகரிகோள்விடுத்தானே!
காரணா! கடலைக்கடைந்தானே! *
எம்பிரான்!என்னையாளுடைத்தேனே!
ஏழையேனிடரைக்களையாயே. (கூ)

↓↓ காமர்தாதைகருதலர்சிங்கம்
காணவினியகருங்குழற்குட்டன் *
வாமனன்என்மரதகவண்ணன்
மாதவன்மதுசூதனன்தன்னை *
சேமநன்கமரும்புதுவையர்கோன்
விட்டுசித்தன்வியன்தமிழ்பத்தும் *
நாமமென்றுநவின்றுரைப்பார்கள்
நண்ணுவாரொல்லைநாரணனுலகே. (கO)

அடிவரவு:—வாக்கு சழக்கு நன்மை நெடுமையால் தோட்டம் கண்ணா வெள்ளை வண்ணம் நம்பனே காமர் நெய்க்குடத்தை.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

உ - ஆந் திருமொழி - நெய்க்குடத்தை.

ஆழ்வார் தம்மிடத்து எம்பெருமான் திருப்பதிகளிற்போல விரும்பிப்புகுந்ததனால், நோய்களை யகலும்படி கூறுதல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (பியாகடைராகம் - ருபகதாளம்.)

↓↓ நெய்க்குடத்தைப்பற்றி ஏறுமெறும்புகள்போல்நிரந்து * எங்கும்
கைக்கொண்டுநிற்கின்றநோய்காள்! காலம்பெறவுய்யப்போமின் *
மெய்க்கொண்டுவந்துபுகுந்து வேதப்பிரானார்கிடந்தார் *
பைக்கொண்டபாம்பணையோடும் பண்டன்றுபட்டினங்காப்பே. (க)

சித்திரகுத்தனெழுத்தால் தென்புலக்கோன்பொறியொற்றி *
வைத்தவிலச்சினைமாற்றித் தூதுவரோடியொளித்தார் *
முத்துத்திரைக்கடற்சேர்ப்பன் மூதறிவாளர்முதல்வன் *
பத்தர்க்கமுதனடியேன் பண்டன்றுபட்டினங்காப்பே. (உ)

வயிற்றில்தொழுவைப்பிரித்து வன்புலசசேவையதக்கி *
கயிற்றும்அக்காணிகழித்துக் † காலிடைப்பாசங்கழற்றி *
எயிற்றிடைமண்கொண்டவெந்தை இராப்பகலோதுவித்து * என்னைப்
பயிற்றிப்பணிசெய்யக்கொண்டான் பண்டன்றுபட்டினங்காப்பே. (ரு)

† 'காலிடப்பாசம்', 'காலடைப்பாசம்' என்பன பாடாந்தரம்.

மங்கியவல்வினைநோய்காள்! உமக்குமோர்வல்வினைகண்டீர் *
இங்குப்புகேன்மின்புகேன்மின் எளிதன்றுகண்டீர்புகேன்மின் *
சிங்கப்பிரானவனெம்மான் சேருந்திருக்கோயில்கண்டீர் *
பங்கப்படாதுய்யப்போமின் பண்டன்றுபட்டினங்காப்பே. (ச)

மாணிக்குறளுருவாயமாயனை என்மனத்துள்ளே *
பேணிக்கொணர்ந்து புகுதவைத்துக்கொண்டேன்பிறிதின்றி *
மாணிக்கப்பண்டாரங்கண்டீர் வலிவன்குறும்பர்களுள்ளீர்! *
பாணிக்கவேண்டாநடமின் பண்டன்றுபட்டினங்காப்பே. (ரு)

உற்றவுறுபிணிநோய்காள்! உமக்கொன்றுசொல்லுகேன்கேண்மின் *
பெற்றங்கள்மேய்க்கும்பிரானார் பேணுந்திருக்கோயில்கண்டீர் *
அற்றமுரைக்கின்றேன் இன்னமாழ்வினைகாள்! * உமக்கிங்கோர்
பற்றில்லைகண்டீர்நடமின் பண்டன்றுபட்டினங்காப்பே. (சா)

கொங்கைச்சிறுவரையென்னும் பொதும்பினில்வீழ்ந்துவழுக்கி *
அங்கோர்முழையினிற்புக்கிட்டு அழுந்திக்கிடந்துழல்வேனை *
வங்கக்கடல்வண்ணனம்மான் வல்வினையாயினமாற்றி *
பங்கப்படாவண்ணஞ்செய்தான் பண்டன்றுபட்டினங்காப்பே. (எ)

ஏதங்களாயினவெல்லாம் இறங்கலிடுவித்து * என்னுள்ளே
பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகிவந்து *
போதிற்கமலவன்னெஞ்சம் புகுந்தும் என்சென்னித்திடரில் *
பாதவிலச்சினைவைத்தார் பண்டன்றுபட்டினங்காப்பே. (அ)

உறகலுறகலுறகல் ஒண்சுடராழியே! சங்கே! *
அறவெறிநாந்தகவாளே! அழகியசார்ங்கமே! தண்டே! *
இறவுபடாமலிருந்த எண்மருலோகபாலீர்காள்! *
பறவையரையா! உறகல் பள்ளியறைக்குறிக்கொண்மின். (கூ)

↓↓ அரவத்தமளியினோடும் அழகியபாற்கடலோடும் *
அரவிந்தப்பாவையுந்தானும் அகம்படிவந்துபுகுந்து *
பரவைத்திரைபலமோதப் பள்ளிகொள்கின்றபிரானை *
பரவுகின்றான்விட்டுசித்தன் பட்டினங்காவற்பொருட்டே. (க0)

அடிவரவு:—நெய் சித்திரகுத்தன் வயிற்றில் மங்கிய மாணி உற்ற கொங்கை ஏதம் உறகல் அரவத்து துக்கச்சுழலையை.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

௩ - ஆந் திருமொழி - துக்கச்சுழலையை.

திருமாலிருஞ்சோலையெம்பெருமானைப் போகவொட்டேனென்று தடுத்தல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (ஸஹாநா ராகம் - அடதாளம்.)

↓↓ துக்கச்சுழலையைச்சூழ்ந்துகிடந்த வலையையறப்பறித்து *
புக்கினிற்புக்குன்னைக்கண்டுகொண்டேன் இனிப்போகவிடுவதுண்டே? *
மக்களறுவரைக்கல்லிடைமோத இழந்தவள்தன்வயிற்றில் *
சிக்கெனவந்துபிறந்துநின்றாய்! திருமாலிருஞ்சோலையெந்தாய்! (௧)

வளைத்துவைத்தேன் இனிப்போகலொட்டேன் உன் தனிந்திரஞாலங்களால் *
ஒளித்திடில்நின்திருவாணைகண்டாய் நீயொருவர்க்கும்மெய்யனல்லை *
அளித்தெங்கும்நாடும்நகரமும் தம்முடைத்தீவினைதீர்க்கலுற்று *
தெளித்துவலஞ்செய்யும்தீர்த்தமுடைத் திருமாலிருஞ்சோலையெந்தாய்!

↓↓உனக்குப்பணிசெய்திருக்கும்தவமுடையேன் இனிப்போயொருவன்
தனக்குப்பணிந்து * கடைத்தலைநிற்கை நின்சாயையழிவுகண்டாய் *
புனத்தினைகிள்ளிப்புதுவவிகாட்டி உன்பொன்னடிவாழ்கவென்று *
இனக்குறவர்புதியதுண்ணும் எழில்மாலிருஞ்சோலையெந்தாய்! (௩)

காதம்பலவுந்திரிந்துழன்றேற்கு அங்கோர்நிழலில்லைநீருமில்லை * உன்
பாதநிழலல்லால்மற்றோருயிர்ப்பிடம் நானெங்குங்காண்கின்றிலேன் *
தூதுசென்றாய்குருபாண்டவர்க்காய் அங்கோர்பொய்ச்சுற்றம்பேசிச்சென்று *
பேதஞ்செய்தெங்கும்பிணம்படுத்தாய்! திருமாலிருஞ்சோலையெந்தாய்!

காலுமெழாகண்ணநீரும்நில்லா உடல்சோர்ந்துநடுங்கி * குரல்
மேலுமெழாமயிர்க்கூச்சுமறா எனதோள்களும்வீழ்வொழியா *
மாலுகளாநிற்குமென்மனனே! உன்னைவாழத்தலைப்பெய்திட்டேன் *
சேலுகளாநிற்கும்நீள்சுனைசூழ் திருமாலிருஞ்சோலையெந்தாய்! (௫)

எருத்துக்கொடியுடையானும் பிரமனுமிந்திரனும் * மற்றும்
ஒருத்தரும்இப்பிறவியென்னும்நோய்க்கு மருந்தறிவாருமில்லை *
மருத்துவனாய்நின்றமாமணிவண்ணா! மறுபிறவிதவிரத்
திருத்தி*உன்கோயிற்கடைப்புகப்பெய் திருமாலிருஞ்சோலையெந்தாய்!(௬)

அக்கரையென்னுமனத்தக்கடலுளழுந்தி உன்பேரருளால் *
இக்கரையேறியிளைத்திருந்தேனை அஞ்சேலென்றுகைகவியாய் *
சக்கரமும்தடக்கைகளும் கண்களும்பீதகவாடையொடும் *
செக்கர்நிறத்துச்சிவப்புடையாய்! திருமாலிருஞ்சோலையெந்தாய்! (௭)

எத்தனைகாலமுமெத்தனையூழியும் இன்றொடுநாளையென்றே *
இத்தனைகாலமும்போய்க்கிறிப்பட்டேன் இனியுன்னைப்போகலொட்டேன் *
மைத்துனன்மார்களைவாழ்வித்துமாற்றலர் நூற்றுவரைக்கெடுத்தாய்! *
சித்தம்நின்பாலதறிதியன்றே திருமாலிருஞ்சோலையெந்தாய்! (அ)

அன்றுவயிற்றிற்கிடந்திருந்தே அடிமைசெய்யலுற்றிருப்பன் *
இன்றுவந்திங்குன்னைக்கண்டுகொண்டேன் இனிப்போகவிடுவதுண்டே? *
சென்றங்குவாணனையாயிரந்தோளும் திருச்சக்கரமதனால் *
தென்றித்திசைதிசைவீழச்செற்றாய்! திருமாலிருஞ்சோலையெந்தாய்!

↓↓ சென்றுலகம்குடைந்தாடுஞ்சுனைத் திருமாலிருஞ்சோலைதன்னுள்
நின்றபிரான் * அடிமேலடிமைத்திறம் நேர்படவிண்ணப்பஞ்செய் *
பொன்திகழ்மாடம்பொலிந்துதோன்றும் புதுவைக்கோன்விட்டுசித்தன் *
ஒன்றினோடொன்பதும்பாடவல்லார் உலகமளந்தான்தமரே. (க௦)

அடிவரவு:—துக்கச்சுழலையை வளைத்து உனக்கு காதம் காலும் எருத்து அக்கரை எத்தனை அன்று சென்று சென்னி.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்

ச - ஆந் திருமொழி - சென்னியோங்கு.

எம்பெருமான் தமது திருவுள்ளத்திற் புகுந்தமையால்
ஆழ்வார் தாம் பெற்ற நன்மைகளைக் கூறி உகத்தல்.

† அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (ஸ்ரீராகம் - திரிபுடை தாளம்.)

↓↓ சென்னியோங்கு தண்திருவேங்கடமுடையாய்! * உலகு
தன்னைவாழநின்றநம்பீ! தாமோதரா! சதிரா! *
என்னையும்என்னுடைமையையும் உன்சக்கரப்பொறியொற்றிக்கொண்டு *
நின்னருளேபுரிந்திருந்தேன் இனியென்திருக்குறிப்பே? (க)

பறவையேறுபரம்புருடா! நீயென்னைக்கைக்கொண்டபின் *
பிறவியென்னுங்கடலும்வற்றிப் பெரும்பதமாகின்றதால் *
இறவுசெய்யும்பாவக்காடு தீக்கொளீஇவேகின்றதால் *
அறிவையென்னுமமுதவாறு தலைப்பற்றிவாய்க்கொண்டதே. (உ)

எம்மனா! என்குலதெய்வமே! என்னுடைநாயகனே! *
நின்னுளேனாய்ப்பெற்றநன்மை இவ்வுலகினிலார்பெறுவார்? *
நம்மன் ‡ போலேவீழ்த்தமுக்கும் நாட்டிலுள்ளபாவமெல்லாம் *
சும்மெனாதேகைவிட்டோடித் தூறுகள்பாய்ந்தனவே. (ஙா)

† இப்பாசுரங்களைக் கலிநிலைத்துறையாகவும் அலகிடலாம்.
‡ 'போல்' என்பதும் பாடம்.

கடல்கடைந்தமுதங்கொண்டு கலசத்தைநிறைத்தாற்போல் *
உடலுருகிவாய்திறந்து மடுத்துன்னைநிறைத்துக்கொண்டேன் *
கொடுமைசெய்யுங்கூற்றமும் என்கோலாடிகுறுகப்பெறா *
தடவரைத்தோட்சக்கரபாணீ ! சார்ங்கவிற்சேவகனே ! (௪)

பொன்னைக்கொண்டுரைகல்மீதே நிறமெழவுரைத்தாற்போல் *
உன்னைக்கொண்டென்நாவகம்பால் மாற்றின்றியுரைத்துக்கொண்டேன் *
உன்னைக்கொண்டென்னுள்வைத்தேன் என்னையுமுன்னிலிட்டேன் *
என்னப்பா ! என்னிருடீகேசா ! என்னுயிர்க்காவலனே ! (௫)

உன்னுடையவிக்கிரமம் ஒன்றொழியாமலெல்லாம் *
என்னுடையநெஞ்சகம்பால் சுவர்வழியெழுதிக்கொண்டேன் *
மன்னடங்கமழுவலங்கைக்கொண்ட இராமநம்பீ ! *
என்னிடைவந்தெம்பெருமான் ! இனியெங்குப்போகின்றதே ? (௬)

பருப்பதத்துக்கயல்பொறித்த பாண்டியர்குலபதிபோல் * |
திருப்பொலிந்தசேவடி என்சென்னியின்மேற்பொறித்தாய் *
மருப்பொசித்தாய்! மல்லடர்த்தாய்! என்றென்று உன்வாசகமே *
உருப்பொலிந்தநாவினேனை உனக்குரித்தாக்கினையே. (௭)

அனந்தன்பாலும்கருடன்பாலும் ஐதுநொய்தாகவைத்து * என்
மனந்தனுள்ளேவந்துவைகி வாழச்செய்தாய்எம்பிரான் ! *
நினைந்தென்னுள்ளேநின்று நெக்குக் கண்கள்அசும்பொழுக *
நினைந்திருந்தேசிரமந்தீர்ந்தேன் நேமிநெடியவனே ! (௮)

↓↓ பனிக்கடலிற்பள்ளிகோளைப் பழகவிட்டு * ஓடிவந்துஎன்
மனக்கடலில்வாழவல்ல மாயமணாளநம்பீ ! *
தனிக்கடலே! தனிச்சுடரே! தனியுலகே! என்றென்று *
உனக்கிடமாயிருக்க என்னையுனக்குரித்தாக்கினையே. (௯)

↓↓ தடவரைவாய்மிளிர்ந்துமின்னும் தவளநெடுங்கொடிப்போல் *
சுடரொளியாய்நெஞ்சினுள்ளே தோன்றுமென்சோதிநம்பீ ! *
வடதடமும்வைகுந்தமும் மதிள்துவராபதியும் *
இடவகைகளிகழ்ந்திட்டு என்பாலிடவகைகொண்டனையே. (௧௦)

↓↓ வேயர்தங்கள்குலத்துதித்த விட்டுசித்தன்மனத்தே *
கோயில்கொண்டகோவலனைக் கொழுங்குளிர்முகில்வண்ணனை *
ஆயரேற்றையமரர்கோவை அந்தணர்தமமுதத்தினை *
சாயைபோலப்பாடவல்லார்தாமும் அணுக்கர்களே. (௧௧)

அடிவரவு:—சென்னி பறவை எம்மனா கடல் பொன் உன் பருப்பதம் அனந்தன் பனி தடவரை வேயர் மார்கழி.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

ஆக, பாசுரம் - 473.

பெரியாழ்வார் திருமொழி ஸம்பூர்ணம்.

ஸ்ரீ

ஆண்டாள் வைபவம்.

𑌕𑌰𑍍𑌕𑌟𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑌫𑌲𑍍𑌗𑍁𑌨𑍍𑌯𑌾𑌂 𑌤𑍁𑌲𑌸𑍀𑌕𑌾𑌨𑌨𑍋𑌦𑍍𑌭𑌵𑌾𑌂 ।
𑌪𑌾𑌣𑍍𑌡𑍍𑌯𑍇 𑌵𑌿𑌶𑍍𑌵𑌂𑌭𑌰𑌾𑌂 𑌗𑍋𑌦𑌾𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌨𑌾𑌯𑌕𑍀𑌂 ॥

కర్కటే పూర్వఫల్గున్యాం తులసీకాననోద్భవాం ।
పాండ్యే విశ్వంభరాం గోదాం వందే శ్రీరంగనాయకీం ॥

கர்க்கடே பூர்வபல்குந்யாம துளஸீகாநநோத்பவாம் -
பாண்ட்யே விஸ்வம்பராம் கோதாம் வந்தே ஸ்ரீரங்கநாயகீம்.

ஆண்டாள், ஸ்ரீவில்லிபுத்தூரில் நந்தவநத்தில் துளசிமலரில், கலி-௯௮-ஆவதான நளவூ ஆடிமீ சுக்லபக்ஷம் சதுர்த்தசி செவ்வாய்க்கிழமை கூடின பூரநக்ஷத்ரத்தில், பூமிப்பிராட்டியாரம்சையாய், அயோநிஜையாய்த் திருவவதரித்தருளினாள்.

முன்பு திரேதாயுகத்திலே விதேகதேசத்தில் மிதிலாபட்டணத்தில் ஜநகமகாராஜன் யாகசாலையமைத்தற்பொருட்டுக் கலபைகொண்டு பூமியை உழுகையில் அவ்வுழுபடைச்சாலிலே ஸ்ரீதேவியின் அம்சமான ஒருமகள் தோன்ற, அவளை அவ்வரசன் தன் புத்திரியாகப் பாவித்துச் சீதையென்று திருநாமஞ்சாத்தி வளர்த்துவந்தான்; அதுபோலவே, பின்பு கலியுகத்திலே பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரிலே பெரியாழ்வார் திருத்துழாய்ப்பாத்தி யமைத்தற்பொருட்டுக் களைக்கொட்டுக்கொண்டு திருநந்தவனத்தைக் கொத்துகையில் அக்கொத்தினநிலத்தில் ஸ்ரீதேவிபூதேவிகளின் அம்சமான ஒருமகள் ஆடிமாசத்துப் பூர்வபல்குநிநாளிலே தோன்ற, அவளை அவ்வாழ்வார் தமதுமகளாகப்பாவித்து 'கோதை' என்று நாமகரணஞ்செய்து வளர்க்கலானார். நுகரப்படும்பொருளொரு சிறிது மில்லாத வறியவனொருவன் பெருநிதியைக்கண்டாற்போல அப்பெண்ணருங்கலத்தைக் கண்டவளவிலே பெருங்களிப்புக்கொண்டு மிகஅருமையாகச் சீராட்டிப பாராட்டித் தாலாட்டிப பாலூட்டிப் பாலித்துவந்த பட்டர்பிரான், அவளுக்குப பஞ்சஸம்ஸ்காரங்களைச் செய்து பரமஞானத்தைப் போதித்தனர்.

தந்தை முதலியோர் கண்டு வியக்கும்படி இளமைதொடங்கி எம்பெருமான்பக்கலிலே பக்திப்பெருவேட்கைகொண்டு அவனையே தான் மணஞ்செய்துகொள்ளக்கருதி, அப்பிரானது மகிமைகளையே எப்பொழுதும் சிந்தித்தல் துதித்தல்முதலியன செய்துநிற்கிற அச்சுரிகுழற்கோதை, நாடோறும் விஷ்ணுசித்தர் வடபெருங்கோயிலுடையானுக்குச் சாத்துதற்காகக் கட்டிவைத்த திருமாலையை அவரில்லாத சமயம் பார்த்து எடுத்துத் தான் குழலிலே தரித்துக்கொண்டு 'அப்பெருமானுக்கு நான் நேரொத்திருக்கின்றேனோ இல்லையோ' என்று சிறந்தஆபரணங்களையணிந்து உயர்ந்தபட்டாடையையுடுத்துத் தன்னையலங்கரித்து அவ்வொப்பனையழகைக் கண்ணாடியிலேகண்டு தந்தையார் வரு

தற்குமுன் மலர்மாலையைக்களைந்து முன்போலவே செண்டாகச்சுற்றிப் பூங் கூடையினுள்ளே நலங்காமல் வைத்துவந்தாள். இரகசியமாகநடக்கிற அச்செய் தியை உணராமல் ஆழ்வார் அம்மாலையைக் கொண்டுபோய்ச் சுவாமிக்குச்சாத்தி வர, பெருமானும் பிரீதியுடன் ஏற்றருளினன். இங்ஙனம் பலநாள் கழிந்தபின் ஒருநாள், வெளியிற்சென்ற ஆழ்வார் விரைவில்மீண்டுவந்த பொழுது, பூமாலை யைக் கோதை சூடியிருத்தலைப் பார்த்துக் கோபங்கொண்டு, 'பெண்ணே! நீ செய்த இது மிக்க அபசாரமான காரியம்; இனி இவ்வாறு செய்தற்கு நினைப் புங்கொள்ளாதே' என்று நங்கைக்கு நற்புத்திசொல்லிவிட்டு அன்று வடபத்திர சாயிக்கு மாலைசாத்தாமல், திருப்பணிக்கு முட்டுப்பாடு நேர்ந்ததற்கு மனம் வருந்தியிருந்தார். அற்றைநாளிரவில் ஆலிலைத்துயில்வோன் ஆழ்வாரது கன விலே தோன்றி 'இன்று நீ நமக்கு மாலைகொண்டு வாராதிருந்தது என்?" என்று வினவியதற்கு, அவர் தம்திருமகளாரது பொருந்தாச் செய்கையை விண்ணப் பஞ்செய்ய, அதுகேட்டு அப்பெருமான் 'அவள் சூடிக்கொடுத்த மாலையேகாண் நறுமணம்மிக்கு நமது உள்ளத்துக்கு நனிஉகப்பாவது; ஆதலின், இனி அத்தன் மைத்தான தொடையலையே நமக்குக் கொண்டுவருவாய்' என்று அருளிச்செய் தனன். உடனே கண்விழித்த விஷ்ணுசித்தர் அம்மங்கையை மலர்மங்கை யென்றே எண்ணி அவள்திறத்து அளவிலன்பு கொண்டு, அனைத்துலகத்துக் கும் அன்னையாய் அவற்றை ஆண்டுவருகின்ற இலக்குமியின் அவதாரவிசேஷ மென்ற காரணத்தால், அவளுக்கு 'ஆண்டாள்' என்றும், மாதவனுக்கு உரிய மலர்மாலையைத் தான்சூடிக்கொண்டு பார்த்துப் பின்பு கொடுத்தது காரணமாக 'சூடிக்கொடுத்த நாச்சியார்' என்றும் திருப்பெயரிட்டு அழைத்துவந்தார்.

அந்நாச்சியார் தனதுபருவம் வளருந்தோறும் ஞானபக்திகளும் உடன் வளர்ந்துவரப்பெற்று, தனக்கு ஏற்ற காதலனைக் கருதிய கடல்வண்ணன் விஷயமான வேட்கை விஞ்சியவளாகி, இனி அவனை ஒருகணப்பொழுதுங் கூடாதிருக்கப்பொறாமல், கண்ணனது பிரிவை யாற்றாத கோபஸ்திரீகள் போலத் தானும் நோன்புநோற்று உயிர்தரிப்பவளாய், அவ்வபிப்பிராயத்தை 'திருப்பாவை', 'நாச்சியார் திருமொழி' என்ற திவ்வியப்பிரபந்தங்களின் மூல மாகப் பகவத்ஸந்நிதியிலே விண்ணப்பஞ்செய்து வாழ்ந்திருந்தாள்.

இப்படியிருக்கையில் இவட்கு விவாகத்துக்கு ஏற்றபருவம் வந்ததைக் கண்டு தந்தையார் இவளுக்கு ஏற்ற கொழுநனைக் காணப்பெறாது கவலைப்பட்டு இவளையழைத்து 'நீ யார்க்கு வாழ்க்கைப்பட விரும்புகின்றாய்?' என்று வினவ, ஆண்டாள் "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்று சொல்ல, பட்டர்பிரான் 'பின்னை எங்ஙனம் நிகழ்வது?' என்றுகேட்க, சூடிக் கொடுத்தாள் 'பெருமாளுக்கே யுரியவளாக விருக்கின்றேன்' என்று கட்டுரைத் தாள். அதுகேட்டு விஷ்ணுசித்தர் 'நூற்றெட்டுத் திருப்பதிகளி லுள்ள எம் பெருமான்களுள் யார்க்கு வாழ்க்கைத்துணைவியாகத் துணிகிறாய்?' என்று விசா ரித்தலும், கோதை 'அவ்வப்பெருமான்களுடைய வைபவத்தை விளங்க எடுத் துக்கூறியருளவேண்டும்' என வேண்ட, வேயர்குலத்தலைவரும் அவ்வாறே எடுத்து அருளிச்செய்து வருகையில் ஆண்டாள் வடமதுரையில் எழுந்தருளி

யுள்ள கண்ணபிரானது வரலாற்றைக் கேட்டவளவிலே மயிர்ச்சிலிர்ப்பும், திரு வேங்கடமுடையானது வரன்முறையைச் செவியுற்றபொழுது முகமலர்ச்சி யும், திருமாலிருஞ்சோலைமலை யழகரது வடிவழகை அறிந்த மாத்திரத்தில் மன மகிழ்ச்சியும் பெற்று ஸ்ரீரங்கநாதனது மகிமை செவிப்பட்டவுடனே அளவற்ற ஆனந்த மடைந்து நிற்க, அப்பொழுது அந்தந்தத் திருப்பதி யெம்பெருமான்க ளெல்லாரும் இவளது சுயம்வரத்தை யுத்தேசித்து ஸ்ரீவில்லிபுத்தூர்க்கு எழுந்த ருளி இவளது ஞானக்கண்ணுக்கு விஷயமாக, இவள் அவர்களுள் ரங்கநாத னிடத்தே மனத்தைச் செலுத்தி அவனுக்கே தன்னை மணமகளாக நிச்சயித்து அவ்வமலனையே சர்வகாலமும் சிந்தித்திருந்தாள்.

அதனையறிந்து ஆழ்வார் 'நம்பெருமாள் இவளைக் கடிமணம்புரிதல் கைகூடுமோ?' என்று சிந்தாக்கிராந்தராயிருக்கையில், திருவரங்கச்செல்வன் இவருடைய சொப்பனத்திலே.யெழுந்தருளி 'உமது திருமகளைக் கோயிலுக்கு அழைத்துக்கொண்டுவாரும்; அவளை யாம் அங்கீகரிப்போம்' என்று அருளிச் செய்ய, அதனால், விஷ்ணுசித்தர் வியாகுலம் நீங்கி மனமகிழ்ந்திருந்தனர். பின்பு, ஸ்ரீரங்கநாதன் ஸ்தாநிகர் முதலிய கோயிற்பரிசனங்களுடைய கனவிலே தோன்றி 'நீங்கள் சகலமங்களவாத்தியங்களோடும் சத்திரசாமராதிகளோடும் நமது நவரத்தினப்பல்லக்கையும் உடன்கொண்டு வில்லிபுத்தூர்க்குச் சென்று ஆண்டாளைப் பல்லக்கிலேற்றி அழைத்துவாருங்கள்' என்று கட்டளையிட்டான். அவ்வாறே எல்லாப் பரிகரத்தாரும் சென்று பெரியாழ்வாரையடுத்து நம்பெரு மாளது அருளப்பாட்டை விண்ணப்பஞ்செய்ய, கர்ணாமிருதமான அவ்வார்த் தையைச் செவியாரக்கேட்டுச் சந்தோஷித்து, கோதைதாதை, வடபெருங் கோயிலுடையான் சந்நிதியிலே அழகியமணவாளனது நியமனத்தை விண் ணப்பஞ் செய்து அநுமதிபெற்றுப் பிரயாணமாயினர்.

அச்செய்தியைக் கேள்வியுற்று ஸ்ரீவல்லபதேவன் அக்கலியாண மகோத் ஸவத்தைத் தானும் உடனிருந்து விசேஷமாக நடத்திக் கண்டுகளிகூர்ந்து திரு தார்த்தனாகக் கருதி, தன்னேவலாளரைக்கொண்டு ஸ்ரீவில்லிபுத்தூரையும், ஸ்ரீரங்க நகரத்தையும், இவ்விரண்டுக்கும்நடுவிலுள்ள நெடுவழியையும் தண்ணீர்தெளித் தும் பூம்பந்தரிட்டும் தோரணங்கட்டியும் வாழை கமுகு நாட்டியும் நன்றாக அலங்கரிப்பித்துக் கசதுரங்காதி சதுரங்கபலத்துடனே ஆழ்வார்பக்கல் வந்து சேர்ந்தான்.

அப்பால் பட்டர்பிரான் ஆண்டாளை மணிச்சிவிகையில் எழுந்தருளப் பண்ணி மங்கலவாத்திய கோஷத்துடனே 'ஆண்டாள் வந்தாள்', 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி வந்தாள்', 'சுரும்பார்குழற்கோதை வந்தாள்', 'திருப் பாவைபாடிய செல்வி வந்தாள்', 'பட்டர்பிரான்புதல்வி வந்தாள்', 'வேயர்குல விளக்கு வந்தாள்' என்று பலசின்னங்கள் பணிமாற, மெய்காப்பாளர் உடன் சூழ்ந்துநிற்க, தாமும் அரசனுமாக இருபுறத்தும் இடைவிடாதிருந்து அழைத்து வந்து திருவரங்கம்பெரியகோயிலை யடைந்து பெரியபெருமாளுடைய முன் மண்டபத்திலே அப்பிராட்டியை நிறுத்திப் பெருமாளைச் சேவிக்கப் பண்ணு விக்கையில், அத்திருமாலின் திவ்விய சௌந்தரியம் இரும்பைக் காந்தம் இழுக்

கின்றவாறுபோல ஆண்டாளைக் கவரத்தொடங்கியதனால், சூடிக்கொடுத்தநாச்சியார் சிலம்பார்க்கச் சீரார்வளையொலிப்பக் கொடியேரிடையாடக் காதளவும் ஓடிக் கயல்போல் மிளிருங் கடைக்கண் பிறழ அன்னமென்னடைகொண்டு அருகிற்சென்று ஆனந்தக்கடலிலாழ்ந்து திருவரங்கன் திருவடிவருடக் கருதி நாகபர்யங்கத்தை மிதித்தேறி நம்பெருமாளது திருமேனியிலே அந்தர்ப்பவித்து அவனை என்றும் பிரியாதிருப்பவளாயினாள்.

அவ்வண்ணம் அரும்பேறுபெற்றதைத் தரிசித்து ஆழ்வாரும் அவர்சிஷ்யரான வல்லபதேவனுள்ளிட்டாரும் யாவரும் அதிசயித்து நிற்கையில், திருவரங்கமுடையான் அர்ச்சகமுகமாக ஆழ்வாரை அருகிலழைத்து 'க்ஷீரசமுத்திரராஜன் போல நீரும் நமக்கு மாமனாராய்விட்டீர்' என்று முகமன் கூறித் தமது தீர்த்தம் திருப்பரியட்டம் மாலை ஸ்ரீசடகோபன் முதலியவற்றைப் பிரசாதித்து 'வில்லிபுத்தூருறைவானுக்கே தொண்டுபூண்டிரும்' என்று திருவாய் மலர்ந்து விடைகொடுத்தருளினான். அநந்தரம் ஆழ்வார்,

ஒருமகள்தன்னையுடையேன்உலகம்நிறைந்தபுகழால்
திருமகள்போலவளர்த்தேன்செங்கண்மால்தான்கொண்டுபோனான்
பெருமகளாய்க்குடிவாழ்ந்துபெரும்பிள்ளைபெற்றவசோதை
மருமகளைக்கண்டுகந்துமணாட்டுப்புறஞ்செய்யுங்கொலோ''

என்று போர உகந்து அரிதிற்பிரிந்து ஸ்ரீவில்லிபுத்தூர்க்குச் சென்று முன்போலவே கைங்கரிய நிரதராய்ச் சண்பகம் மல்லிகை பாதிரி செங்கழுநீர் புன்னை குருக்கத்தி இருவாட்சி முதலிய பல மலர்களுடன் ஆர்வமென்பதோர் பூவையும் இட்டுக்கொண்டு எண்பத்தைந்து வருஷகாலம் வாழ்ந்திருந்து பேரானந்தப்பெரும்பத மடைந்தனர்.

திருவாடிப்பூரத்துச் செகத்துதித்தாள் வாழியே
திருப்பாவைமுப்பதுஞ் செப்பினாள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும்பூதூர்மாமுனிக்குப் பின்னானாள் வாழியே
ஒருநூற்றுநாற்பத்துமூன்றுரைத்தாள் வாழியே
உயரரங்கர்க்கேகண்ணி யுகந்தளித்தாள் வாழியே
மருவாருந்திருமல்லி வளநாடி வாழியே
வண்புதுவைநகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே.

ஆண்டாள்.

ஸ்ரீ

ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த

திருப்பாவை.

ஆண்டாள் தனியன்கள்.

(ஸ்ரீ பராசரபட்டர் அருளிச்செய்தது.)

𑌨𑍀𑌳𑌾𑌤𑍁𑌙𑍍𑌗𑌸𑍍𑌤𑌨𑌗𑌿𑌰𑌿𑌤𑌟𑍀𑌸𑍁𑌪𑍍𑌤𑌮𑍁𑌦𑍍𑌬𑍋𑌧𑍍𑌯𑌕𑍃𑌷𑍍𑌣𑌂
𑌪𑌾𑌰𑌾𑌰𑍍𑌥𑍍𑌯𑌂𑌸𑍍𑌵𑌂𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌤𑌶𑌿𑌰𑌸𑍍𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑌧𑍍𑌯𑌾𑌪𑌯𑌨𑍍𑌤𑍀 ।
𑌸𑍍𑌵𑍋𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌾𑌯𑌾𑌂𑌸𑍍𑌰𑌜𑌿𑌨𑌿𑌗𑌳𑌿𑌤𑌂𑌯𑌾𑌬𑌲𑌾𑌤𑍍𑌕𑍃𑌤𑍍𑌯𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇
𑌗𑍋𑌦𑌾𑌤𑌸𑍍𑌯𑍈𑌨𑌮𑌇𑌦𑌮𑌿𑌦𑌂𑌭𑍂𑌯𑌏𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌭𑍂𑌯𑌃 ॥

నీళాతుంగ స్తనగిరితటీసుప్తముద్బోధ్య కృష్ణం
పారార్థ్యం స్వం శ్రుతిశతశిరస్సిద్ధ మధ్యాపయంతీ ।
స్వోచ్ఛిష్టాయాం స్రజినిగళితం యాబలాత్కృత్యభుంక్తే
గోదా తస్యై నమ ఇదమిదం భూయ ఏవాస్తు భూయః ॥

நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தமுத்போத்யக்ருஷ்ணம்
பாரார்த்யம்ஸ்வம்ஶ்ருதிஶதஶிரஸ்ஸித்தமத்யாபயந்தீ -
ஸ்வோச்சிஷ்டாயாம்ஸ்ரஜிநிகளிதம்யாபலாத்க்ருத்யபுங்க்தே
கோதாதஸ்யைநமஇதமிதம்பூயஏவாஸ்துபூய:.

(உய்யக்கொண்டார் அருளிச்செய்தது.)

இருவிகற்பநேரிசைவெண்பா.

*அன்னவயற்புதுவையாண்டாள் * அரங்கற்குப்*
*பன்னுதிருப்பாவைப்பல்பதியம் * —இன்னிசையால்*
*பாடிக்கொடுத்தாள் நற்பாமாலை * பூமாலை*
சூடிக்கொடுத்தாளைச்சொல்லு.

*சூடிக்கொடுத்தசுடர்க்கொடியே! * தொல்பாவை*
பாடியருளவல்லபல்வளையாய்! —நாடிநீ
*வேங்கடவற்கென்னைவிதியென்றவிம்மாற்றம் **
நாம்கடவாவண்ணமேநல்கு.

எட்டடிநாற்சீரோருவிகற்பக் கொச்சகக்கலிப்பா.

(பிலஹரிராகம் - அடதாளம்.)

↓↓ மார்கழித்திங்கள் மதிநிறைந்தநன்னாளால் *
நீராடப்போதுவீர் போதுமினோநேரிழையீர்! *
சீர்மல்குமாய்ப்பாடிச் செல்வச்சிறுமீர்காள்! *
கூர்வேற்கொடுந்தொழிலன் நந்தகோபன்குமரன் *
ஏரார்ந்தகண்ணி யசோதையிளஞ்சிங்கம் *
கார்மேனிச்செங்கண் கதிர்மதியம்போல்முகத்தான் *
நாராயணனே நமக்கேபறைதருவான் *
பாரோர்புகழப் படிந்தேலோரெம்பாவாய். (௧)

(பந்துவராளிராகம் - ஆதிதாளம்.)

வையத்துவாழ்வீர்காள்! நாமும்நம்பாவைக்கு *
செய்யும்கிரிசைகள் கேளீரோ * பாற்கடலுள்
பையத்துயின்ற பரமனடிபாடி *
நெய்யுண்ணோம்பாலுண்ணோம் நாட்காலேநீராடி *
மையிட்டெழுதோம் மலரிட்டுநாம்முடியோம் *
செய்யாதனசெய்யோம் தீக்குறளைசென்றோதோம் *
ஐயமும்பிச்சையும் ஆந்தனையும்கைகாட்டி *
உய்யுமாறெண்ணி உகந்தேலோரெம்பாவாய். (௨)

(பந்துவராளிராகம் - திரிபுடைதாளம்.)

↓↓ ஓங்கியுலகளந்த உத்தமன்பேர்பாடி *
நாங்கள்நம்பாவைக்குச் சாற்றிநீராடினால் *
தீங்கின்றிநாடெல்லாம் திங்கள்மும்மாரிபெய்து *
ஓங்குபெருஞ்செந்நெலூடு கயலுகள *
பூங்குவளைப்போதில் பொறிவண்டுகண்படுப்ப *
தேங்காதேபுக்கிருந்து சீர்த்தமுலைபற்றி
வாங்க * குடம்நிறைக்கும் வள்ளற்பெரும்பசுக்கள் *
நீங்காதசெல்வம் நிறைந்தேலோரெம்பாவாய். (௩)

(காம்போதிராகம் - அடதாளம்.)

ஆழிமழைக்கண்ணா! ஒன்றுநீகைகரவேல் *
ஆழியுள்புக்கு முகந்துகொடார்த்தேறி *
ஊழிமுதல்வ னுருவம்போல்மெய்கறுத்து *
பாழியந்தோளுடைப் பற்பநாபன்கையில் *

ஆழிபோல்மின்னி வலம்புரிபோல்நின்றதிர்ந்து *
தாழாதேசார்ங்கமுதைத்த சரமழைபோல் *
வாழவுலகினிற்பெய்திடாய் * நாங்களும்
மார்கழிநீராட மகிழ்ந்தேலோரெம்பாவாய். (௪)

(தோடிராகம் - ரூபகதாளம்.)

மாயனை மன்னுவடமதுரைமைந்தனை *
தூயபெருநீர் யமுனைத்துறைவனை *
ஆயர்குலத்தினில்தோன்றும் † அணிவிளக்கை *
தாயைக்குடல்விளக்கஞ்செய்த தாமோதரனை *
தூயோமாய்வந்துநாம் தூமலர்தூவித்தொழுது *
வாயினாற்பாடி மனத்தினாற்சிந்திக்க *
போயபிழையும் புகுதருவான்நின்றனவும் *
தீயினில்தூசாகும் செப்பேலோரெம்பாவாய். (௫)

(பூபாளராகம் - ஆதிதாளம்.)

புள்ளும் ‡ சிலம்பினகாண் புள்ளரையன் $ கோயில் *
வெள்ளைவிளிசங்கின் பேரரவம்கேட்டிலையோ? *
பிள்ளாய்! எழுந்திராய் பேய்முலைநஞ்சுண்டு *
கள்ளச்சகடம் கலக்கழியக்காலோச்சி *
வெள்ளத்தரவில் துயிலமர்ந்தவித்தினை *
உள்ளத்துக்கொண்டு முனிவர்களும்யோகிகளும் *
மெள்ளவெழுந்து அரியென்றபேரரவம் *
உள்ளம்புகுந்து குளிர்ந்தேலோரெம்பாவாய். (௬)

(பூபாளராகம் - ரூபகதாளம்.)

கீசுகீசென்றெங்கும் ஆனைச்சாத்தன் * கலந்து
பேசினபேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே! *
காசும்பிறப்பும் கலகலப்பக்கைபேர்த்து *
வாசநறுங்குழலாய்ச்சியர் * மத்தினால்
ஓசைபடுத்த தயிரரவம்கேட்டிலையோ? *
நாயகப்பெண்பிள்ளாய்! நாராயணன்மூர்த்தி *
கேசவனைப்பாடவும் நீகேட்டேகிடத்தியோ? *
தேசமுடையாய்! திறவேலோரெம்பாவாய். (௭)

† 'மணிவிளக்கை' என்பதும் பாடம். ‡ 'சிலும்பின' என்றும் பாடம்.
$ 'கோயிலில்' என்பதும் பாடம்.

(பூபாளராகம் - ஆதிதாளம்.)

கீழ்வானம்வெள்ளென் றெருமைசிறுவீடு *
மேய்வான்பரந்தனகாண் மிக்குள்ளபிள்ளைகளும் *
போவான்போகின்றாரைப் போகாமற்காத்து * உன்னைக்
கூவுவான்வந்துநின்றோம் * கோதுகலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப்பறைகொண்டு *
மாவாய்பிளந்தானை மல்லரைமாட்டிய *
தேவாதிதேவனைச் சென்றுநாம்சேவித்தால் *
ஆவாவென்றாராய்ந் தருளேலோரெம்பாவாய். (௮)

(மோஹநராகம் - ஆதிதாளம்.)

தூமணிமாடத்துச் சுற்றும்விளக்கெரிய *
தூபங்கமழத் துயிலணைமேல்கண்வளரும் *
மாமான்மகளே! மணிக்கதவந்தாள்திறவாய் *
மாமீர்! அவளையெழுப்பீரோ? * † உன்மகள்தான்
ஊமையோ? அன்றிச்செவிடோ? அனந்தலோ? *
ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ? *
மாமாயன்மாதவன் வைகுந்தனென்றென்று *
நாமம்பலவும் நவின்றேலோரெம்பாவாய். (௯)

(அஸாவேரிராகம் - ஆதிதாளம்.)

நோற்றுச்சுவர்க்கம் புகுகின்றவம்மனாய்! *
மாற்றமும்தாராரோ? வாசல்திறவாதார் *
நாற்றத்துழாய்முடி நாராயணன் * நம்மால்
போற்றப்பறைதரும் புண்ணியனால் * பண்டொருநாள்
கூற்றத்தின்வாய்வீழ்ந்த கும்பகருணனும் *
தோற்றுமுனக்கே பெருந்துயில்தான்தந்தானோ? *
ஆற்றவனந்தலுடையாய்! அருங்கலமே! *
தேற்றமாய்வந்து திறவேலோரெம்பாவாய். (௧௦)

(ஸஹாநாராகம் - திரிபுடைதாளம்.)

கற்றுக்கறவைக் கணங்கள்பலகறந்து *
செற்றார்திறலழியச் சென்றுசெருச்செய்யும் *
குற்றமொன்றில்லாத கோவலர்தம்பொற்கொடியே! *
புற்றரவல்குற் புனமயிலே! போதராய் *

† 'உம்மகள்' என்பதும் பாடம்

சுற்றத்துத்தோழிமா ரெல்லாரும்வந்து * நின்
முற்றம்புகுந்து முகில்வண்ணன்பேர்பாட *
சிற்றாதேபேசாதே செல்வப்பெண்டாட்டி! * நீ
எற்றுக்குறங்கும் பொருளேலோரெம்பாவாய். (கக)

(கேதாரகௌளராகம் - ஆதிதாளம்.)

கனைத்திளங்கற்றெருமை கன்றுக்கிரங்கி *
நினைத்துமுலைவழியே நின்றுபால்சோர *
நனைத்தில்லஞ்சேறாக்கும் நற்செல்வன்தங்காய்! *
பனித்தலைவீழ நின்வாசற்கடைபற்றி *
சினத்தினால்தென்னிலங்கைக் கோமானைச்செற்ற *
மனத்துக்கினியானைப் பாடவும்நீவாய்திறவாய் *
இனித்தானெழுந்திராய் ஈதென்னபேருறக்கம்? *
அனைத்தில்லத்தாரு மறிந்தேலோரெம்பாவாய். (கஉ)

(அடாணாராகம் - ரூபகதாளம்.)

புள்ளின்வாய்கீண்டானைப் பொல்லாவரக்கனை *
கிள்ளிக்களைந்தானைக் கீர்த்திமைபாடிப்போய் *
பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம்புக்கார் *
வெள்ளியெழுந்து வியாழ † முறங்கிற்று *
புள்ளும்சிலம்பினகாண் போதரிக்கண்ணினாய்! *
குள்ளக்குளிரக் குடைந்துநீராடாதே *
பள்ளிக்கிடத்தியோ? பாவாய்! நீநன்னாளால் *
கள்ளந்தவிர்ந்து கலந்தேலோரெம்பாவாய். (கங)

(ஸாரங்கராகம் - ஆதிதாளம்.)

உங்கள்புழைக்கடைத் தோட்டத்துவாவியுள் *
செங்கழுநீர்வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய்கூம்பினகாண் *
செங்கற்பொடிக்கூறை வெண்பல்தவத்தவர் *
தங்கள்திருக்கோயில் சங்கிடுவான் ‡ போதந்தார் *
எங்களைமுன்ன மெழுப்புவான்வாய்பேசும் *
நங்காய்! எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய்! *
சங்கொடுசக்கரம் ஏந்துதடக்கையன் *
பங்கயக்கண்ணானைப் பாடேலோரெம்பாவாய். (கச)

† 'இறங்கிற்று' என்பதும் பாடம். ‡ 'போகின்றார்' என்பது சிலர் பாடம்.

(சௌராஷ்ட்ரராகம் - அடதாளம்.)

எல்லே! இளங்கிளியே! இன்னமுறங்குதியோ? *
சில்லென்றழையேன்மின்! நங்கைமீர்! போதர்கின்றேன் *
வல்லையுன்கட்டுரைகள் பண்டேயுன்வாயறிதும் *
வல்லீர்கள்நீங்களே நானேதானாயிடுக *
ஒல்லைநீபோதாய் உனக்கென்ன † வேறுடையை *
எல்லாரும்போந்தாரோ? போந்தார்போந்தெண்ணிக்கொள் *
வல்லானைகொன்றானை மாற்றாரைமாற்றழிக்க
வல்லானை * மாயனைப் பாடேலோரெம்பாவாய். (கரு)

(யமுனாகல்யாணிராகம் - ஆதிதாளம்.)

↓↓ நாயகனாய்நின்ற நந்தகோபனுடைய
கோயில்காப்பானே! * கொடித்தோன்றும் தோரண
வாயில்காப்பானே! * மணிக்கதவம்தாள்திறவாய் *
ஆயர்சிறுமியரோமுக்கு * அறைபறை
மாயன்மணிவண்ணன் நென்னலேவாய்நேர்ந்தான் *
தூயோமாய்வந்தோம் ‡ துயிலெழப்பாடுவான் *
வாயால்முன்னமுன்னம் மாற்றாதேயம்மா! * நீ
நேயநிலைக்கதவம் நீக்கேலோரெம்பாவாய். (கசு)

(யமுனாகல்யாணிராகம் - ரூபகதாளம்.)

அம்பரமேதண்ணீரே சோறேயறஞ்செய்யும் *
எம்பெருமான்! நந்தகோபாலா! எழுந்திராய் *
கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே! *
எம்பெருமாட்டி! யசோதாய்! அறிவுறாய் *
அம்பரமூடறுத்தோங்கி உலகளந்த *
உம்பர்கோமானே! உறங்காதெழுந்திராய் *
செம்பொற்கழலடிச் செல்வா! பலதேவா! *
உம்பியும்நீயும் உறங்கேலோரெம்பாவாய். (கஎ)

(ஸாவேரிராகம் - ஆதிதாளம்.)

↓↓ உந்துமதகளிற்றன் ஓடாததோள்வலியன் *
நந்தகோபாலன்மருமகளே! நப்பின்னாய்! *
கந்தங்கமழுங்குழலீ! கடைதிறவாய் *
வந்தெங்கும் கோழியழைத்தனகாண் * மாதவிப்

† 'வேறுடைமை' என்பதும் பாடம். ‡ 'துயிலெழல்' என்பதும் பாடம்.

பந்தல்மேல் பல்கால்குயிலினங்கள்கூவினகாண் *
பந்தார்விரலி! உன்மைத்துனன்பேர்பாட *
செந்தாமரைக்கையால் சீரார்வளையொலிப்ப *
வந்துதிறவாய் மகிழ்ந்தேலோரெம்பாவாய். (௧௮)

(ஸ்ரீராகம் - ஆதிதாளம்.)

குத்துவிளக்கெரியக் கோட்டுக்காற்கட்டில்மேல் *
மெத்தென்ற பஞ்சசயனத்தின்மேலேறி *
கொத்தலர்பூங்குழல் நப்பின்னைகொங்கைமேல் *
வைத்துக்கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய் *
மைத்தடங்கண்ணினாய்! நீஉன்மணாளனை *
எத்தனைபோதும் துயிலெழவொட்டாய்காண் *
எத்தனையேலும் பிரிவாற்றகில்லாயால் *
தத்துவமன்று தகவேலோரெம்பாவாய். (௧௯)

(தேசிராகம் - ஆதிதாளம்.)

முப்பத்துமூவ ரமரர்க்குமுன்சென்று *
கப்பந்தவிர்க்குங்கலியே! துயிலெழாய் *
செப்பமுடையாய்! திறலுடையாய்! * செற்றார்க்கு
வெப்பங்கொடுக்கும் விமலா! துயிலெழாய் *
செப்பன்னமென்முலைச் செவ்வாய்ச்சிறுமருங்குல் *
நப்பின்னைநங்காய்! திருவே! துயிலெழாய் *
உக்கமுந்தட்டொளியுந் தந்துஉன்மணாளனை *
இப்போதே எம்மைநீராட்டேலோரெம்பாவாய். (௨௦)

(காம்போதிராகம் - ஆதிதாளம்.)

ஏற்றகலங்கள் எதிர்பொங்கிமீதளிப்ப *
மாற்றாதேபால்சொரியும் வள்ளற்பெரும்பசுக்கள் *
ஆற்றப்படைத்தான்மகனே! அறிவுறாய் *
ஊற்றமுடையாய்! பெரியாய்! * உலகினில்
தோற்றமாய்நின்ற சுடரே! துயிலெழாய் *
மாற்றாருனக்கு வலிதொலைந்துன்வாசற்கண் *
ஆற்றாதுவந்து உன்னடிபணியுமாபோலே *
போற்றியாம்வந்தோம் புகழ்ந்தேலோரெம்பாவாய். (௨௧)

(பைரவிராகம் - ஆதிதாளம்.)

அங்கண்மாஞாலத்தரசர் * அபிமான
பங்கமாய்வந்து நின்பள்ளிக்கட்டிற்கீழே *
சங்கமிருப்பார்போல் வந்துதலைப்பெய்தோம் *
கிங்கிணிவாய்ச்செய்த தாமரைப்பூப்போலே *
செங்கண்சிறுச்சிறிதே எம்மேல்விழியாவோ ? *
திங்களுமாதித்தியனும் எழுந்தாற்போல் *
அங்கணிரண்டுங்கொண்டு எங்கள்மேல்நோக்குதியேல் *
எங்கள்மேல்சாபம் இழிந்தேலோரெம்பாவாய். (உஉ)

(அடாணாராகம் - ஆதிதாளம்.)

↓↓ மாரிமலைமுழைஞ்சில் மன்னிக்கிடந்துறங்கும் *
சீரியசிங்கம் அறிவுற்றுத்தீவிழித்து *
வேரிமயிர்பொங்க எப்பாடும்பேர்ந்துதறி *
மூரிநிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு *
போதருமாபோலே நீபூவைப்பூவண்ணா ! * உன்
கோயில்நின்று மிங்ஙனேபோந்தருளி * கோப்புடைய
சீரியசிங்காசனத்திருந்து * யாம்வந்த
காரியமாராய்ந்தருளேலோரெம்பாவாய். (உங)

(பியாகடைராகம் - ஆதிதாளம்.)

↓↓ அன்றிவ்வுலகமளந்தாய் ! அடிபோற்றி *
சென்றங்குத்தென்னிலங்கைசெற்றாய்' திறல்போற்றி *
பொன்றச்சகடமுதைத்தாய் ! புகழ்போற்றி *
கன்றுகுணிலாவெறிந்தாய் ! கழல்போற்றி *
குன்றுகுடையாவெடுத்தாய் ! குணம்போற்றி *
வென்றுபகைகெடுக்கும் நின்கையில்வேல்போற்றி *
என்றென்றுன்சேவகமே ஏத்திப்பறைகொள்வான் *
இன்றுயாம்வந்தோம் இரங்கேலோரெம்பாவாய். (உச)

(சங்கராபரணராகம் - ஆதிதாளம்.)

ஒருத்திமகனாய்ப்பிறந்து * ஓரிரவில்
ஒருத்திமகனாய் ஒளித்துவளரத் *
தரிக்கிலானாகித் தான்தீங்குநினைந்த *
கருத்தைப்பிழைப்பித்துக் கஞ்சன்வயிற்றில் *

நெருப்பென்னநின்ற நெடுமாலே ! * உன்னை
அருத்தித்துவந்தோம் பறைதருதியாகில் *
திருத்தக்கசெல்வமும் சேவகமும்யாம்பாடி *
வருத்தமும்தீர்ந்து மகிழ்ந்தேலோரெம்பாவாய். (உரு)

(ஆரபிராகம் - ஆதிதாளம்.)

மாலே ! மணிவண்ணா ! மார்கழிநீராடுவான் *
மேலையார் † செய்வனகள் வேண்டுவனகேட்டியேல் *
ஞாலத்தையெல்லாம் நடுங்கமுரல்வன *
பாலன்னவண்ணத்து உன்பாஞ்சசன்னியமே *
போல்வனசங்கங்கள் போய்ப்பாடுடையனவே *
சாலப்பெரும்பறையே பல்லாண்டிசைப்பாரே *
கோலவிளக்கே கொடியேவிதானமே *
ஆலினிலையாய் ! அருளேலோரெம்பாவாய். (உசா)

(ஆநந்தபைரவிராகம் - ஆதிதாளம்.)

↓↓ கூடாரைவெல்லும்சீர்க் கோவிந்தா ! * உன்தன்னைப்
பாடிப்பறைகொண்டு யாம்பெறுசம்மானம் *
நாடுபுகழும் பரிசினால்நன்றாக *
சூடகமேதோள்வளையே தோடேசெவிப்பூவே *
பாடகமேயென்றனைய பல்கலனும்யாமணிவோம் *
ஆடையுடுப்போம் அதன்பின்னேபாற்சோறு *
மூடநெய்பெய்து முழங்கைவழிவாரக் *
கூடியிருந்து குளிர்ந்தேலோரெம்பாவாய். (உஎ)

(தந்யாசிராகம் - ஆதிதாளம்.)

↓↓ கறவைகள்பின்சென்று கானஞ்சேர்ந்துண்போம் *
அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்து * உன்தன்னைப்
பிறவிபெறுந்தனை புண்ணியம்யாமுடையோம் *
‡ குறைவொன்றுமில்லாத கோவிந்தா ! * உன்தன்னோடு
உறவேல்நமக்கு இங்கொழிக்கவொழியாது *
அறியாதபிள்ளைகளோம் அன்பினால் * உன்தன்னைச்
சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே *
இறைவா ! நீதாராய் பறையேலோரெம்பாவாய். (உஅ)

† 'செய்வினைகள்' என்பது சிலர் பாடம். ‡ 'குறைவொன்றிலாத கோவிந்த வுன்தன்னோடு' 'குறைவொன்று மில்லாத கோவிந்தா வுன்னோடு' என்பவை வெண்டளைக்குப் பொருந்தும்.

(கல்யாணிராகம் - ஆதிதாளம்.)

↓↓ சிற்றஞ் † சிறுகாலே வந்துன்னைச்சேவித்து * உன்
பொற்றாமரையடியே போற்றும்பொருள்கேளாய் *
பெற்றம்மேய்த்துண்ணுங் குலத்தில் ‡ பிறந்து * நீ
குற்றேவலெங்களைக் கொள்ளாமற்போகாது *
இற்றைப்பறைகொள்வா னன்றுகாண்கோவிந்தா! *
எற்றைக்கும் ஏழேழ்பிறவிக்கும் * உன்தன்னோடு
உற்றோமேயாவோம் உனக்கேநாமாட்செய்வோம் *
மற்றைநங்காமங்கள் மாற்றேலோரெம்பாவாய். (உகூ)

(சுருட்டிராகம் - ரூபகதாளம்.)

↓↓ வங்கக்கடல்கடைந்த மாதவனைக்கேசவனை *
திங்கள்திருமுகத்துச் சேயிழையார்சென்றிறைஞ்சி *
அங்கப்பறைகொண்டவாற்றை * அணிபுதுவைப்
பைங்கமலத்தண்தெரியற் பட்டர்பிரான்கோதைசொன்ன *
சங்கத்தமிழ்மாலை முப்பதும்தப்பாமே *
இங்கிப்பரிசுரைப்பார் ஈரிரண்டுமால்வரைத்தோள் *
செங்கண்திருமுகத்துச் செல்வத்திருமாலால் *
எங்குந்திருவருள்பெற்று இன்புறுவரெம்பாவாய் (௩0)

அடிவரவு:—மார்கழி வையத்து ஓங்கி ஆழி மாயன் புள்ளும் கீசு கீழ்வானம் தூமணி நோற்று கற்று கனைத்து புள்ளின் உங்கள் எல்லே நாயகன் அம்பரம் உந்து குத்து முப்பத்து ஏற்ற அங்கண் மாரி அன்று ஒருத்தி மாலே கூடார் கறவை சிற்றம் வங்கம் தை.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

---

† 'சிறுகாலை' என்றும் ஓதுவர். ‡ 'பிறந்த' என்பதும் பாடம்.

நாச்சியார் திருமொழி.

தனியன்.

(திருக்கண்ணமங்கையாண்டான் அருளிச்செய்தது.)

இருவிகற்பநேரிசைவெண்பா.

அல்லிநாள்தாமரைமேலாரணங்கினின்துணைவி *
மல்லிநாடாண்டமடமயில்—மெல்லியலாள் *
ஆயர்குலவேந்தனாகத்தாள் * தென்புதுவை
வேயர்பயந்தவிளக்கு.

கட்டளைக்கலித்துறை.

† கோலச்சுரிசங்கைமாயன்செவ்வாயின்குணம்வினவும்
சீலத்தனள் * தென்திருமல்லிநாடி * செழுங்குழல்மேல்
மாலைத்தொடைதென்னரங்கருக்கீயும்மதிப்புடைய
சோலைக்கிளி * அவள்தூயநற்பாதந்துணைநமக்கே.

௧ - ஆம் திருமொழி - தையொருதிங்கள்.

கண்ணனிடம் கூட்டும்படி காமனைத் தொழுதல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (ஸாவேரிராகம் - ஆதிதாளம்.)

தையொருதிங்களுந்தரைவிளக்கித்
தண்மண்டலமிட்டுமாசிமுன்னாள் *
ஐயநுண்மணற்கொண்டுதெருவணிந்து
அழகினுக்கலங்கரித்தனங்கதேவா! *
உய்யவுமாங்கொலோவென்றுசொல்லி
உன்னையுமும்பியையுந்தொழுதேன் *
வெய்யதோர்தழலுமிழ்சக்கரக்கை
வேங்கடவற்கென்னைவிதிக்கிற்றியே. (௧)

வெள்ளைநுண்மணற்கொண்டுதெருவணிந்து
வெள்வரைப்பதன்முன்னந்துறைபடிந்து *
முள்ளுமில்லாச்சுள்ளியெரிமடுத்து
முயன்றுன்னைநோற்கின்றேன்காமதேவா! *

† இந்தத்தனியன் இந்தப்ராந்தங்களில் அநுஸந்திக்கப்படுவதில்லை.

கள்ளவிழ்பூங்கணைதொடுத்துக்கொண்டு
கடல்வண்ணனென்பதோர்பேரெழுதி *
புள்ளினைவாய்பிளந்தானென்பது ஓர்
இலக்கினில்புகவென்னையெய்கிற்றியே. (உ)

மத்தநன்னறுமலர்முருக்கமலர்கொண்டு
முப்போதுமுன்னடிவணங்கி *
தத்துவமிலியென்றுநெஞ்செரிந்து
வாசகத்தழித்து உன்னைவைதிடாமே *
கொத்தலர்பூங்கணைதொடுத்துக்கொண்டு
கோவிந்தனென்பதோர்பேரெழுதி *
வித்தகன்வேங்கடவாணனென்னும்
விளக்கினிற்புகவென்னைவிதிக்கிற்றியே. (ஙா)

சுவரில்புராண! நின்பேரெழுதிச்
சுறவநற்கொடிக்களுந்துரங்கங்களும் *
கவரிப்பிணைக்களுங்கருப்புவில்லும்
காட்டித்தந்தேன்கண்டாய்காமதேவா! *
அவரைப்பிராயந்தொடங்கி என்றும்
ஆதரித்தெழுந்தஎன்தடமுலைகள் *
துவரைப்பிரானுக்கேசங்கற்பித்துத்
தொழுதுவைத்தேனொல்லைவிதிக்கிற்றியே. (ச)

வானிடைவாழுமவ்வானவர்க்கு
மறையவர்வேள்வியில்வகுத்தவவி *
கானிடைத்திரிவதோர்நரிபுகுந்து
கடப்பதும்மோப்பதும்செய்வதொப்ப *
ஊனிடையாழிசங்குத்தமர்க்கென்று
உன்னித்தெழுந்தஎன்தடமுலைகள் *
மானிடவர்க்கென்றுபேச்சுப்படில்
வாழகில்லேன்கண்டாய்மன்மதனே! (ரு)

உருவுடையாரிளையார்கள்நல்லார்
ஒத்துவல்லார்களைக்கொண்டு * வைகல்
தெருவிடையெதிர்கொண்டு பங்குனிநாள்
திருந்தவேநோற்கின்றேன்காமதேவா! *

கருவுடைமுகில்வண்ணன்காயாவண்ணன்
கருவிளைபோல்வண்ணன் * கமலவண்ணத்
திருவுடைமுகத்தினில்திருக்கண்களால்
திருந்தவேநோக்கெனக்கருள்கண்டாய். (சு)

காயுடைநெல்லொடுகரும்பமைத்துக்
கட்டியரிசியவலமைத்து *
வாயுடைமறையவர்மந்திரத்தால்
மன்மதனே! உன்னைவணங்குகின்றேன் *
தேசமுன்னளந்தவன் திரிவிக்கிரமன்
திருக்கைகளாலென்னைத்தீண்டும்வண்ணம் *
சாயுடைவயிறுமென்தடமுலையும்
தரணியில்தலைப்புகழ்தரக்கிற்றியே. (எ)

மாசுடையுடம்பொடுதலையுலறி
வாய்ப்புறம்வெளுத்தொருபோதுமுண்டு *
தேசுடைத்திறலுடைக்காமதேவா!
நோற்கின்றநோன்பினைக்குறிக்கொள்கண்டாய் *
பேசுவதொன்றுண்டிங்கெம்பெருமான்!
பெண்மையைத்தலையுடைத்தாக்கும்வண்ணம் *
கேசவநம்பியைக்கால்பிடிப்பா
ளென்னும் இப்பேறெனக்கருள் கண்டாய். (அ)

தொழுதுமுப்போதும்உன்னடிவணங்கித்
தூமலர்தூய்த்தொழுதேத்துகின்றேன் *
பழுதின்றிப்பார்க்கடல்வண்ணனுக்கே
பணிசெய்துவாழப்பெறாவிடில் நான் *
அழுதழுதலமந்தம்மாவழங்க
ஆற்றவுமதுவுனக்குறைக்குங்கண்டாய் *
உழுவதோரெருத்தினைநுகங்கொடுபாய்ந்து
ஊட்டமின்றித்துரந்தாலொக்குமே. (கூ)

↓↓ கருப்புவில்மலர்க்கணைக்காமவேளைக்
கழலிணைபணிந்தங்கோர்கரியலற *
மருப்பினையொசித்துப்புள்வாய்பிளந்த
மணிவண்ணற்கென்னைவகுத்திடென்று *

பொருப்பன்னமாடம்பொலிந்துதோன்றும்
புதுவையர்கோன்விட்டுசித்தன்கோதை *
விருப்புடையின்தமிழ்மாலைவல்லார்
விண்ணவர்கோனடிநண்ணுவரே. (௧௦)

அடிவரவு:—தை வெள்ளை மத்தம் சுவரில் வானிடை உரு காயொடு மாசுடை தொழுது கருப்பு நாமம்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

௨ - ஆந் திருமொழி - நாமமாயிரம்.

இடைப்பெண்கள் சிற்றில்சிதைக்கவேண்டாவென்று கண்ணனை வேண்டுதல்.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

(யமுனாகல்யாணிராகம் - திரிபுடை தாளம்.)

↓↓ நாமமாயிரமேத்தநின்ற நாராயணா! நரனே! * உன்னை
மாமிதன்மகனாகப்பெற்றால் எமக்குவாதைதவிருமே *
காமன்போதருகாலமென்று பங்குனிநாள் கடைபாரித்தோம் *
தீமைசெய்யுஞ்சிரீதரா! எங்கள்சிற்றில்வந்துசிதையேலே. (௧)

இன்றுமுற்றும்முதுகுநோவ இருந்திழைத்தவிச்சிற்றிலை *
நன்றுங்கண்ணுறநோக்கி நாங்கொளுமாரவந்தன்னைத்தணிகிடாய் *
அன்றுபாலகனாகி ஆலிலைமேல் துயின்றவெம்மாதியாய்! *
என்றுமுன்தனக்கெங்கள்மேல் இரக்கமெழாததெம்பாவமே. (௨)

குண்டுநீருறைகோளரீ! மதயானைகோள்விடுத்தாய்! * உன்னைக்
கண்டுமாலுறுவோங்களைக் கடைக்கண்களாலிட்டுவாதியேல் *
வண்டல்நுண்மணல்தெள்ளி யாம்வளைக்கைகளால்சிரமப்பட்டோம் *
தெண்டிரைக்கடற்பள்ளியாய்! எங்கள்சிற்றில்வந்துசிதையேலே. (௩)

பெய்யுமாமுகில்போல்வண்ணா! உன்தன்பேச்சுஞ்செய்கையும் * எங்களை
மையலேற்றிமயக்க உன்முகம்மாயமந்திரந்தான்கொலோ? *
நொய்யர்பிள்ளைகளென்பதற்கு உன்னைநோவநாங்களுரைக்கிலோம் *
செய்யதாமரைக்கண்ணினாய்! எங்கள்சிற்றில்வந்துசிதையேலே. (௪)

வெள்ளைநுண்மணற்கொண்டு சிற்றில்விசித்திரப்பட * வீதிவாய்த்
தெள்ளிநாங்களிழைத்தகோலம் அழித்தியாகிலும் உன்தன்மேல் *
உள்ளமோடியுருகலல்லால் உரோடமொன்றுமிலோங்கண்டாய் *
கள்ளமாதவா! கேசவா! உன்முகத்தனகண்களல்லவே. (௫)

முற்றிலாதபிள்ளைகளோம் முலைபோந்திலாதோமை * நாள்தோறும்
சிற்றில்மேலிட்டுக்கொண்டு நீசிறிதுண்டுதிண்ணெனநாமது
கற்றிலோம் * கடலையடைத்தரக்கர்குலங்களை முற்றவும்
செற்று * இலங்கையைப்பூசலாக்கியசேவகா! எம்மைவாதியேல். (௬)

பேதநன்கறிவார்களோடு இவைபேசினால்பெரிதின்சுவை *
யாதுமொன்றறியாதபிள்ளைகளோமை நீநலிந்தென்பயன்? *
ஓதமாகடல்வண்ணா! உன்மணவாட்டிமாரொடுசூழறும் *
சேதுபந்தந்திருத்தினாய்! எங்கள்சிற்றில்வந்துசிதையேலே. (௭)

வட்டவாய்ச்சிறுதூதையோடு சிறுசுளகும்மணலுங்கொண்டு *
இட்டமாவிளையாடுவோங்களைச் சிற்றிலீடழித்தென்பயன்? *
தொட்டுதைத்துநலியேல்கண்டாய் சுடர்ச்சக்கரங்கையிலேந்தினாய்! *
கட்டியுங்கைத்தால் இன்னாமையறிதியேகடல்வண்ணனே! (௮)

முற்றத்தூடுபுகுந்து நின்முகங்காட்டிப்புன்முறுவல்செய்து *
சிற்றிலோடெங்கள்சிந்தையும் சிதைக்கக்கடவையோ? கோவிந்தா! *
முற்றமண்ணிடந்தாவி விண்ணுறநீண்டளந்துகொண்டாய் * எம்மைப்
பற்றிமெய்ப்பிணக்கிட்டக்கால் இந்தப்பக்கம்நின்றவரென்சொல்லார்?

↓↓ சீதைவாயமுதமுண்டாய்! எங்கள்சிற்றில்நீசிதையேலென்று *
வீதிவாய்விளையாடும் ஆயர்சிறுமியர்மழலைச்சொல்லை *
வேதவாய்த்தொழிலார்கள்வாழ் வில்லிபுத்தூர்மன்விட்டுசித்தன்தன் *
கோதைவாய்த்தமிழ்வல்லவர் குறைவின்றிவைகுந்தஞ்சேருவரே. (௧௦)

அடிவரவு:—நாமம் இன்று குண்டு பெய்யும் வெள்ளை முற்றிலாத பேதம் வட்டம் முற்றத்தூடு சீதை கோழி

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

௩-ஆந் திருமொழி-கோழியழைப்பதன்முன்னம்.

கன்னியர் கண்ணனைக் கவர்ந்த கூறைகளை இரத்தல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (செஞ்சுருட்டிராகம் - அடதாளம்.)

↓↓ கோழியழைப்பதன்முன்னம் குடைந்துநீராடுவான்போந்தோம் *
ஆழியஞ்செல்வனெழுந்தான் அரவணைமேற்பள்ளிகொண்டாய்! *
ஏழைமையாற்றவும்பட்டோம் இனியென்றும்பொய்கைக்குவாரோம் *
தோழியும்நானுந்தொழுதோம் துகிலைப்பணித்தருளாயே. (௧)

இதுவென்புகுந்ததிங்கந்தோ! இப்பொய்கைக்கெவ்வாறுவந்தாய்? *
மதுவின் துழாய்முடிமாலே! மாயனே! எங்களமுதே! *
விதியின்மையாலதுமாட்டோம் வித்தகப்பிள்ளாய்! விரையேல் *
குதிகொண்டரவில்நடித்தாய்! குருந்திடைக்கூறைபணியாய். (உ)

எல்லே! ஈதென்னஇளமை? எம்மனைமார்காணிலொட்டார் *
பொல்லாங்கீதென்றுகருதாய் பூங்குருந்தேறியிருத்தி *
வில்லாலிலங்கை † யழித்தாய்! நீ வேண்டியதெல்லாம்தருவோம் *
பல்லாருங்காணுமேபோவோம் பட்டைப்பணித்தருளாயே. (ந)

பரக்கவிழித்தெங்கும்நோக்கிப் பலர்குடைநதாடுஞ்சுனையில் *
அரக்கநில்லாகண்ணநீர்கள் அலமருகின்றவாபாராய் *
இரக்கமேலொன்றுமிலாதாய்! இலங்கையழித்தபிரானே! *
குரக்கரசாவதறிந்தோம குருந்திடைக்கூறைபணியாய். (ச)

காலைக்கதுவிடுகின்ற கயலொடுவாளைவிரவி *
வேலைப்பிடித்தென்னைமார்களோட்டி லென்னவிளையாட்டோ? *
கோலச்சிற்றாடைபலவுங்கொண்டு நீயேறியிராதே *
கோலங்கரியபிரானே! குருந்திடைக்கூறைபணியாய். (ரு)

தடத்தவிழ்தாமரைப்பொய்கைத் தாள்களெங்காலைக்கதுவ *
விடத்தேளெறிந்தாலேபோல வேதனையாற்றவும்பட்டோம் *
குடத்தையெடுத்தேறவிட்டுக் கூத்தாடவல்லவெங்கோவே! *
படிற்றையெல்லாம்தவிர்ந்து எங்கள்பட்டைப்பணித்தருளாயே. (சு)

நீரிலேநின்றயர்க்கின்றோம் நீதியல்லாதனசெய்தாய் *
ஊரகம்சாலவுஞ்சேய்த்தால் ஊழியெல்லாமுணர்வானே! *
ஆர்வமுனக்கேயுடையோம் அம்மனைமார்காணிலொட்டார் *
போரவிடாயெங்கள்பட்டைப் பூங்குருந்தேறியிராதே. (எ)

மாமிமார்மக்களேயல்லோம் மற்றுமிங்கெல்லாரும்போந்தார் *
தூமலர்க்கண்கள்வளரத் தொல்லையிராத்துயில்வானே! *
சேமமேலன்றிதுசாலச் சிக்கெனநாமிதுசொன்னோம் *
கோமளவாயர்கொழுந்தே! குருந்திடைக்கூறைபணியாய். (அ)

கஞ்சன்வலைவைத்தவன்று காரிருளெல்லிற்பிழைத்து *
நெஞ்சுதுக்கஞ்செய்யப்போந்தாய் நின்றவிக்கன்னியரோமை *
அஞ்சவுரப்பாளசோதை ஆணாடவிட்டிட்டிருக்கும் *
வஞ்சகப்பேய்ச்சிபாலுண்ட ‡ மசிமையிலீ! கூறைதாராய். (கூ)

---

† 'அழித்தாய் வேண்டியது' என்னும் பாடம் நன்கு பொருந்தும்.
‡ 'மகிமை' என்பதும் பாடம்.

⇃⇃ கன்னியரோடெங்கள்நம்பி கரியபிரான்விளையாட்டை *
பொன்னியல்மாடங்கள்சூழ்ந்த புதுவையர்கோன்பட்டன்கோதை *
இன்னிசையாற்சொன்னமாலை ஈரைந்தும்வல்லவர்தாம்போய் *
மன்னியமாதவனோடு வைகுந்தம்புக்கிருப்பாரே. (கo)

அடிவரவு:—கோழி இது எல்லே பரக்க காலை தடத்து நீரில் மாமிமார் கஞ்சன் கன்னியரோடு தெள்ளியார்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ச - ஆந் திருமொழி - தெள்ளியார்பலர்.

கூடலிழைத்தல்.

கலிவிருத்தம். (கேதாரராகம் - அட தாளம்.)

⇃⇃ தெள்ளியார்பலர் கைதொழுந்தேவனார் *
வள்ளல மாலிருஞ்சோலைமணாளனார் *
பள்ளிகொள்ளுமிடத்து அடிகொட்டிட *
கொள்ளுமாகில் நீகூடிடுகூடலே. (க)

⇃⇃ காட்டில்வேங்கடம் கண்ணபுரநகர் *
வாட்டமின்றி மகிழ்ந்துறைவாமனன் *
ஓட்டரா வந்து என்கைப்பற்றி * தன்னொடும்
கூட்டுமாகில் நீகூடிடுகூடலே. (உ)

பூமகன்புகழ்வானவர் போற்றுதற்
காமகன் * அணிவாணுதல் தேவகி
மாமகன் * மிகுசீர் வசுதேவர்தம *
கோமகன்வரில் கூடிடுகூடலே. (ந)

ஆய்ச்சிமார்களும் ஆயருமஞ்சிட *
பூத்தநீள்கடம்பேறிப் புகப்பாய்ந்து *
வாய்த்தகாளியன்மேல நடமாடிய *
கூத்தனார்வரில் கூடிடுகூடலே. (ச)

மாடமாளிகைசூழ் மதுரைப்பதி
நாடி * நந்தெருவின் நடுவேவந்திட்டு *
ஓடைமாமதயானை யுதைத்தவன் *
கூடுமாகில் நீகூடிடுகூடலே. (ரு)

அற்றவன் மருதமமுறியநடை
கற்றவன் * கஞ்சனை வஞ்சனையிற்
செற்றவன் * திகழும் மதுரைப்பதி *
கொற்றவன்வரில் கூடிடுகூடலே. (சு)

அன்றின்னாதனசெய் சிசுபாலனும் *
நின்றநீள்மருதும் எருதும்புள்ளும் *
வென்றிவேல்விறல் கஞ்சனும்வீழ * முன்
கொன்றவன்வரில் கூடிடுகூடலே. (எ)

ஆவலன்புடையார்தம் மனத்தன்றி
மேவலன் * விரைசூழ் துவராபதிக்
காவலன் * கன்றுமேய்த்து விளையாடும் *
கோவலன்வரில் கூடிடுகூடலே. (அ)

கொண்டகோலக் குறளுருவாய்ச்சென்று *
பண்டுமாவலிதன் பெருவேள்வியில் *
அண்டமுநிலனும் அடியொன்றினால் *
கொண்டவன்வரில் கூடிடுகூடலே. (கூ)

பழகுநான்மறையின் பொருளாய் * மத
மொழுகுவாரண முய்யவளித்த * எம்
அழகனார் அணியாய்ச்சியர்சிந்தையுள்
குழகனார் * வரில் கூடிடுகூடலே. (க0)

↓↓ ஊடல்கூடல் உணர்தல்புணர்தலை *
† நீடுநின்ற நிறைபுகழாய்ச்சியர் *
கூடலைக் குழற்கோதைமுன்கூறிய *
பாடல்பத்தும்வல்லார்க்கு இல்லைபாவமே. (கக)

அடிவரவு:—தெள்ளியார் காட்டில் பூமகன் ஆய்ச்சிமார்கள் பாடம் அற்றவன் அன்று ஆவல் கொண்ட பழகு ஊடல் மன்னு.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

† 'நீடிநின்ற' என்றும் கூறுவர்.

ரு - ஆந் திருமொழி - மன்னுபெரும்புகழ்.

எம்பெருமானைக் கூவியழைக்கும்படி குயிலுக்குக் கூறுதல்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (ஆநந்தபைரவிராகம் - ஆதிதாளம்.)

↓↓ மன்னுபெரும்புகழ்மாதவன்
மாமணிவண்ணன்மணிமுடிமைந்தன்
தன்னை * உகந்ததுகாரணமாக
என்சங்கிழக்கும்வழக்குண்டே? *
புன்னைகுருக்கத்திஞாழல்செருந்திப்
பொதும்பினில்வாழுங்குயிலே! *
பன்னியெப்போதுமிருந்துவிரைந்து என்
பவளவாயன்வரக்கூவாய். (க)

வெள்ளைவிளிசங்கிடங்கையிற்கொண்ட
விமலனெனக்குருக்காட்டான் *
உள்ளம்புகுந்தென்னைநைவித்து
நாளும் † முயிர்பெய்துகூத்தாட்டுக்காணும் *
கள்ளவிழ்செண்பகப்பூமலர்கோதிக்
களித்திசைபாடுங்குயிலே! *
மெள்ளவிருந்துமிழற்றிமிழற்றாது என்
வேங்கடவன்வரக்கூவாய். (உ)

மாதலிதேர்முன்புகோல்கொள்ள
மாயனிராவணன்மேல் * சரமாரி
தாய்தலையற்றற்றுவீழத் தொடுத்த
தலைவன்வரவெங்குங்காணேன் *
போதலர்காவில்புதுமணம்நாறப்
பொறிவண்டின்காமரங்கேட்டு * உன்
காதலியோடுடன்வாழ்குயிலே! என்
கருமாணிக்கம்வரக்கூவாய். (ங)

என்புருகியினவேல்நெடுங்கண்கள்
இமைபொருந்தாபலநாளும் *
துன்பக்கடல்புக்குவைகுந்தனென்பதோர்
தோணிபெறாதுழல்கின்றேன் *

† 'உயிர்ப்பெய்து' என்று பலர்.

அன்புடையாரைப்பிரிவுறுநோயது
　　நீயுமறிதிகுயிலே! *
பொன்புரைமேனிக்கருளக்கொடியுடைப்
　　புண்ணியனைவரக்கூவாய். (ச)

↓↓ மென்னடையன்னம்பரந்துவிளையாடும்
　　வில்லிபுத்தூருறைவான்தன் *
பொன்னடிகாண்பதோராசையினால் என்
　　பொருகயற்கண்ணிணைதுஞ்சா *
இன்னடிசிலொடுபாலமுதூட்டி
　　எடுத்தவென்கோலக்கிளியை *
உன்னொடுதோழமைகொள்ளுவன்குயிலே!
　　உலகளந்தான்வரக்கூவாய். (ரு)

எத்திசையுமமரர்பணிந்தேத்தும்
　　இருடீகேசன்வலிசெய்ய *
முத்தன்னவெண்முறுவல்செய்யவாயும
　　முலையுமழகழிந்தேன்நான் *
கொத்தலர்காவில்மணித்தடம் கண்படை
　　கொள்ளுமிளங்குயிலே! * என்
தத்துவனைவரக்கூகிற்றியாகில
　　தலையல்லால்கைம்மாறிலேனே. (சு)

பொங்கியபாற்கடற்பள்ளிகொள்வானை
　　புணர்வதோராசையினால் * என்
கொங்கைகிளர்ந்துகுமைத்துக்குதுகலித்து
　　ஆவியையாகுலஞ்செய்யும் *
அங்குயிலே! உனக்கென்னமறைந்துறைவு?
　　ஆழியுஞ்சங்குமொண்தண்டும் *
தங்கியகையவனைவரக்கூவில் நீ
　　சாலத்தருமம்பெறுதி. (எ)

சார்ங்கம்வளையவலிக்கும் தடக்கைச்
　　சதுரன்பொருத்தமுடையன் *
நாங்களெம்மிலிருந்தொட்டியகச்சங்கம்
　　நானுமவனுமறிதும் *

தேங்கனிமாம்பொழிற்செந்தளிர்கோதுஞ்
சிறுகுயிலே! * திருமாலை
ஆங்குவிரைந்தொல்லைக்கூகிற்றியாகில்
அவனைநான்செய்வனகாணே. (அ)

பைங்கிளிவண்ணன்சிரீதரனென்பதோர்
பாசத்தகப்பட்டிருந்தேன் *
பொங்கொளிவண்டிரைக்கும்பொழில்வாழ்குயிலே!
குறிக்கொண்டிதுநீகேள் *
சங்கொடுசக்கரத்தான்வரக்கூவுதல்
பொன்வளைகொண்டுதருதல் *
இங்குள்ளகாவினில்வாழக்கருதில்
இரண்டத்தொன்றேல்திண்ணம்வேண்டும். (கூ)

அன்றுலகமளந்தானையுகந்து
அடிமைக்கணவன்வலிசெய்ய *
தென்றலுந்திங்களுமூடறுத்து
என்னைநலியுமுறைமையறியேன் *
என்றுமிக்காவிலிருந்திருந்து
என்னைத் † ததைத்தாதேநீயுங்குயிலே! *
இன்றுநாராயணனைவரக்கூவாயேல்
‡ இங்குத்தைநின்றும்துரப்பன். (க0)

↓↓ விண்ணுறநீண்டடிதாவியமைந்தனை
வேற்கண்மடந்தைவிரும்பி *
கண்ணுறவென்கடல்வண்ணனைக் கூவு
கருங்குயிலே! என்றமாற்றம் *
பண்ணுறுநான்மறையோர்புதுவைமன்னன்
பட்டர்பிரான்கோதைசொன்ன *
நண்ணுறுவாசகமாலைவல்லார்
நமோநாராயணாயவென்பாரே. (கக)

அடிவரவு:—மன்னு வெள்ளை மாதலி என்பு மென்னடை எத்திசை பொங்கிய சாரங்கம் பைங்கிளி அன்று விண் வாரணம்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

† 'ததர்த்தாதே' என்றும் பாடம்.
‡ 'இங்குற்றுநின்றும்' என்பதும் பாடம்.

சு - ஆந் திருமொழி - வாரணமாயிரம்.

மாயவனை மணஞ்செய்துகொள்வதாகத் தான்கண்ட கனவைத் தலைவி தோழிக்குக் கூறுதல்.

கலிவிருத்தம். (கல்யாணிராகம் - ரூபகதாளம்.)

† ‡‡ வாரணமாயிரம் சூழவலஞ்செய்து *
நாரணநம்பி நடக்கின்றானென்றெதிர் *
பூரணபொற்குடம் வைத்துப்புறமெங்கும் *
தோரணம்நாட்டக் கனாக்கண்டேன்தோழீ ! நான். (க)

நாளைவதுவை மணமென்றுநாளிட்டு *
பாளைகமுகு பரிசுடைப்பந்தற்கீழ் *
கோளரிமாதவன் கோவிந்தனென்பான் ஓர் *
காளைபுகுதக் கனாக்கண்டேன்தோழீ ! நான். (உ)

இந்திரனுள்ளிட்ட தேவர்குழாமெல்லாம் *
வந்திருந்தென்னை மகட்பேசிமந்திரித்து *
மந்திரக்கோடியுடுத்தி மணமாலை *
அந்தரிசூட்டக் கனாக்கண்டேன்தோழீ ! நான். (ங)

நால்திசைத்தீர்த்தங்கொணர்ந்து நனிநல்கி *
பார்ப்பனச்சிட்டர்கள் ‡ பல்லாரெடுத்தேத்தி *
பூப்புனைகண்ணிப் புனிதனோடென்தன்னை *
காப்புநாண்கட்டக் கனாக்கண்டேன்தோழீ ! நான். (ச)

கதிரொளிதீபம் கலசமுடனேந்தி *
சதிரிளமங்கையர்தாம் வந்தெதிர்கொள்ள *
மதுரையார்மன்னன் அடிநிலைதொட்டு * எங்கும்
அதிரப்புகுதக் கனாக்கண்டேன்தோழீ ! நான். (ரு)

மத்தளங்கொட்ட வரிசங்கம்நின்றூத *
முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்தபந்தற்கீழ் *
மைத்துனன்நம்பி மதுசூதன்வந்து * என்னைக்
கைத்தலம்பற்றக் கனாக்கண்டேன்தோழீ ! நான். (சா)

வாய்நல்லார் நல்லமறையோதி மந்திரத்தால் *
பாசிலைநாணல்படுத்துப் பரிதிவைத்து *
காய்சினமாகளிறன்னான் என்கைப்பற்றி *
தீவலஞ்செய்யக் கனாக்கண்டேன்தோழீ ! நான். (எ)

---

† இந்தப்பாடல்கள், கலியாணகாலங்களில் பாடும் சீர்பாடல்கள்.
‡ 'பல்லாண்டெடுத்து' என்பதும் பாடம்.

இம்மைக்குமேழேழ்பிறவிக்கும் பற்றாவான் *
நம்மையுடையவன் நாராயணன்நம்பி *
செம்மையுடையதிருக்கையால் தாள்பற்றி *
அம்மிமிதிக்கக் கனாக்கண்டேன்தோழீ! நான். (அ)

வரிசிலைவாள்முகத்து என்னைமார்தாம்வந்திட்டு *
எரிமுகம்பாரித்து என்னைமுன்னேநிறுத்தி *
அரிமுகனச்சுதன் கைம்மேலென்கைவைத்து *
பொரிமுகந்தட்டக் கனாக்கண்டேன்தோழீ! நான். (கூ)

குங்குமமப்பிக் குளிர்சாந்தம்மட்டித்து *
மங்கலவீதி வலஞ்செய்துமணநீர் *
அங்கவனோடும் உடன்சென்றங்கானைமேல் *
மஞ்சனமாட்டக் கனாக்கண்டேன்தோழீ! நான். (க0)

↓↓ ஆயனுக்காகத் தான்கண்டகனாவினை *
வேயர்புகழ் வில்லிபுத்தூர்க்கோன்கோதைசொல் *
தூயதமிழ்மாலை ஈரைந்தும்வல்லவர் *
வாயுநன்மக்களைப்பெற்று மகிழ்வரே. (கக)

அடிவரவு:—வாரணம் நாளை இந்திரன் நால்திசை கதிர் மத்தளம் வாய் இம்மைக்கும் வரிசிலை குங்குமம் ஆயனுக்காக கருப்பூரம்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

எ - ஆந் திருமொழி - கருப்பூரம் நாறுமோ.

பாஞ்சசன்னியத்தைப் பத்மநாபனோடுஞ் சுற்றமாக்குதல்.

தரவுகொச்சகக்கலிப்பா. (வராளிராகம் - ரூபகதாளம்.)

↓↓ கருப்பூரம்நாறுமோ? கமலப்பூநாறுமோ?
திருப்பவளச்செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ? *
மருப்பொசித்தமாதவன்தன் வாய்ச்சுவையும்நாற்றமும் *
விருப்புற்றுக்கேட்கின்றேன்சொல்லாழிவெண்சங்கே! (க)

கடலில்பிறந்து கருதாது * பஞ்சசன
னுடலில்வளர்ந்துபோய் ஊழியான்கைத்தலத்
திடரில்* குடியேறித் தீயவசுரர் *
நடலைப்படமுழங்கும் தோற்றத்தாய்நற்சங்கே! (உ)

தடவரையின்மீதே சரற்காலசந்திரன் *
இடையுவாவில்வந்து எழுந்தாலேபோல * நீயும்
வடமதுரையார்மன்னன் வாசுதேவன்கையில் *
குடியேறிவீற்றிருந்தாய் கோலப்பெருஞ்சங்கே! (௩)

சந்திரமண்டலம்போல் தாமோதரன்கையில் *
அந்தரமொன்றின்றி ஏறியவன்செவியில் *
மந்திரங்கொள்வாயேபோலும் வலம்புரியே! *
இந்திரனுமுன்னோடு செல்வத்துக்கேலானே. (௪)

உன்னோடுடனே ஒருகடலில்வாழ்வாரை *
இன்னா † ரிணையாரென்று எண்ணுவாரில்லைகாண் *
மன்னுகின்ற மதுசூதன்வாயமுதம் *
பன்னாளுமுண்கின்றாய் பாஞ்சசன்னியமே! (௫)

போய்த்தீர்த்தமாடாதே நின்றபுணர்மருதம் *
சாய்த்தீர்த்தான்கைத்தலத்தே ஏறிக்குடிகொண்டு *
சேய்த்தீர்த்தமாய்நின்ற செங்கண்மால்தன்னுடைய *
வாய்த்தீர்த்தம்பாய்ந்தாடவல்லாய் வலம்புரியே! (௬)

செங்கமலநாண்மலர்மேல் தேனுகருமன்னம்போல் *
செங்கண்கருமேனி வாசுதேவனுடைய *
அங்கைத்தலமேறி அன்னவசஞ்செய்யும் *
சங்கரையா! உன்செல்வம் சாலவழகியதே. (௭)

உண்பதுசொல்லில் உலகளந்தான்வாயமுதம் *
கண்படைகொள்ளில் கடல்வண்ணன்கைத்தலத்தே *
பெண்படையாருன்மேல் பெரும்பூசல்சாற்றுகின்றார் *
பண்பலசெய்கின்றாய் பாஞ்சசன்னியமே! (௮)

பதினாறுமாயிரவர் தேவிமார்பார்த்திருப்ப *
மதுவாயிற்கொண்டாற்போல் மாதவன்தன்வாயமுதம் *
பொதுவாகஉண்பதனைப் புக்குநீயுண்டக்கால் *
சிதையாரோ? உன்னோடு செல்வப்பெருஞ்சங்கே! (௯)

† 'இனியார்' என்பது சிலர் பாடம்

↓↓ பாஞ்சசன்னியத்தைப் பற்பநாபனோடும் *
வாய்ந்தபெருஞ்சுற்றமாக்கிய வண்புதுவை *
ஏய்ந்தபுகழ்ப்பட்டர்பிரான் கோதைதமிழீரைந்தும் *
ஆய்ந்தேத்தவல்லாரவரு மணுக்கரே. (கo)

அடிவரவு:—கருப்பூரம் கடலில் தடவரை சந்திர உன்னோடு போய் செங்கமலம் உண்பது பதினாறு பாஞ்சசன்னியத்தை விண்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

அ - ஆந் திருமொழி - விண்ணீலமேலாப்பு.

மேகவிடுதூது.

தரவுகொச்சகக்கலிப்பா. (துசாவந்திராகம் - ஆதிதாளம்.)

↓↓ விண்ணீலமேலாப்பு விரித்தாற்போல்மேகங்காள் !
தெண்ணீர்பாய்வேங்கடத்து என்திருமாலும்போந்தானே ? *
கண்ணீர்கள்முலைக்குவட்டில் துளிசோரச்சோர்வேனை *
பெண்ணீர்மையீடழிக்கும்இது தமக்கோர்பெருமையே. (க)

மாமுத்தநிதிசொரியும் மாமுகில்காள் ! * வேங்கடத்துச்
சாமத்தினிறங்கொண்ட † தாடாளன்வார்த்தையென்னே !
காமத்தீயுள்புகுந்து கதுவப்பட்டிடைக்கங்குல் *
ஏமத்தோர்தென்றலுக்கு இங்கிலக்காய்நானிருப்பேனே. (உ)

ஒளிவண்ணம்வளைசிந்தை உறக்கத்தோடிவையெல்லாம் *
எளிமையாலிட்டென்னை ஈடழியப்போயினவால் *
குளிரருவிவேங்கடத்து என்கோவிந்தன்குணம்பாடி *
அளியத்தமேகங்காள் ! ஆவிகாத்திருப்பேனே. (ங)

மின்னாகத்தெழுகின்ற மேகங்காள் ! * வேங்கடத்துத்
தன்னாகத்திருமங்கை தங்கியசீர்மார்வர்க்கு *
என்னாகத்திளங்கொங்கை விரும்பித்தாம்நாள்தோறும் *
பொன்னாகம்புல்குதற்கு என்புரிவுடைமைசெப்புமினே. (ச)

வான்கொண்டுகிளர்ந்தெழுந்த மாமுகில்காள்!*வேங்கடத்துத்
தேன்கொண்டமலர்சிதறத் திரண்டேறிப்பொழிவீர்காள் !
ஊன்கொண்டவள்ளுகிரால் இரணியனையுடலிடந்தான் *
தான்கொண்டசரிவளைகள் தருமாகில்சாற்றுமினே. (ரு)

† 'தாளாளன்' எனவும் ஓதுவர்.

சலங்கொண்டுகிளர்ந்தெழுந்த தண்முகில்காள்! * மாவலியை
நிலங்கொண்டான்வேங்கடத்தே நிரந்தேறிப்பொழிவீர்காள்! *
உலங்குண்டவிளங்கனிபோல் உள்மெலியப்புகுந்து * என்னை
நலங்கொண்டநாரணற்கு என்நடலைநோய்செப்புமினே. (சு)

↓↓சங்கமாகடல்கடைந்தான் தண்முகில்காள்! * வேங்கடத்துச்
செங்கண்மால்சேவடிக்கீழ் அடிவீழ்ச்சிவிண்ணப்பம் *
கொங்கைமேல்குங்குமத்தின் குழம்பழியப்புகுந்து * ஒருநாள்
தங்குமேல என்னாவிதங்குமென்றுரையீரே. (எ)

கார்காலத்தெழுகின்ற காமுகில்காள்! * வேங்கடத்துப்
போர்காலத்தெழுந்தருளிப் பொருதவனார்பேர்சொல்லி *
நீர்காலத் †தெருக்கின் அம்பழவிலைபோல்வீழ்வேனை *
வார்காலத்தொருநாள் தம்வாசகம்தந்தருளாரே. (அ)

↓↓மதயானைபோலெழுந்த மாமுகில்காள் * வேங்கடத்தைப்
பதியாகவாழ்வீர்காள்! பாம்பணையான்வார்த்தையென்னே! *
கதியென்றும்தானாவான் கருதாது * ஓர்பெண்கொடியை
வதைசெய்தானென்னுஞ்சொல் வையகத்தார்மதியாரே. (கூ)

↓↓நாகத்தினணையானை நன்னுதலாள்நயந்துரைசெய் *
மேகத்தைவேங்கடக்கோன் விடுதூதில்விண்ணப்பம் *
போகத்தில்வழுவாத புதுவையர்கோன்கோதைதமிழ் *
ஆகத்துவைத்துரைப்பாரவர் அடியாராகுவரே. (கO)

அடிவரவு:—விண் மா ஒளி மின் வான் சலம் சங்கம் கார் மதம் நாகம் சிந்துரம்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

கO - ஆந் திருமொழி - சிந்துரச்செம்பொடி.

திருமாலிருஞ்சோலை யெம்பெருமானை வழிபடுதல்.

கலிநிலைத்துறை. (கல்யாணிராகம் - ரூபகதாளம்.)

↓↓சிந்துரச்செம்பொடிப்போல் திருமாலிருஞ்சோலையெங்கும் *
இந்திரகோபங்களே எழுந்தும்பரந்திட்டனவால் *
மந்தரம்நாட்டி அன்றுமதுரக்கொழுஞ்சாறுகொண்ட *
சுந்தரத்தோளுடையான் சுழலையில்நின் ‡றுய்துங்கொலோ? (க)

† 'எருக்கிலம் பழவிலை' என்பதும் பாடம்.
‡ 'உய்யும்' என்றும் பாடம்.

போர்க்களிறுபொரும் மாலிருஞ்சோலையம்பூம்புறவில் *
தார்க்கொடிமுல்லைகளும் தவளநகைகாட்டுகின்ற *
கார்க்கொள்படாக்கள்நின்று கழறிச்சிரிக்கத்தரியேன் *
ஆர்க்கிடுகோ ? தோழீ ! அவன்தார்செய்தபூசலையே. (௨)

கருவிளையொண்மலர்காள் ! காயாமலர்காள் ! * திருமா
லுருவொளிகாட்டுகின்றீர் எனக்குய்வழக்கொன்றுரையீர் *
திருவிளையாடுதிண்டோள் திருமாலிருஞ்சோலைநம்பி *
வரிவளையில்புகுந்து வந்திபற்றும்வழக்குளதே. (௩)

பைம்பொழில்வாழ்குயில்காள்! மயில்காள்! ஒண்கருவிளைகாள்! *
வம்பக்களங்கனிகாள்! வண்ணப்பூவைநறுமலர்காள் ! *
ஐம்பெரும்பாதகர்காள் ! அணிமாலிருஞ்சோலைநின்ற *
எம்பெருமானுடையநிறம் உங்களுக்கென்செய்வதே ? (௪)

துங்கமலர்ப்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலைநின்ற *
செங்கண்கருமுகிலின் திருவுருப்போல் * மலர்மேல்
தொங்கியவண்டினங்காள் ! தொகுபூஞ்சுனைகாள் ! * சுனையில்
தங்குசெந்தாமரைகாள் ! எனக்கோர்சரண்சாற்றுமினே. (௫)

↓↓ நாறுநறும்பொழில் மாலிருஞ்சோலைநம்பிக்கு * நான்
நூறுதடாவில்வெண்ணெய் வாய்நேர்ந்துபராவிவைத்தேன் *
நூறுதடாநிறைந்த அக்காரவடிசில்சொன்னேன் *
ஏறுதிருவுடையான் † இன்றுவந்திவைகொள்ளுங்கொலோ ? (௬)

இன்றுவந்தித்தனையும் அமுதுசெய்திடப்பெறில் * நான்
ஒன்றுநூறாயிரமாக்கொடுத்துப் பின்னுமாளும்செய்வன் *
தென்றல்மணங்கமழும் திருமாலிருஞ்சோலைதன்னுள்
நின்றபிரான் * அடியேன்மனத்தே வந்துநேர்படிலே. (௭)

காலையெழுந்திருந்து கரியகுருவிக்கணங்கள் *
மாலின்வரவுசொல்லி மருள்பாடுதல்மெய்ம்மைகொலோ ? *
சோலைமலைப்பெருமான் துவராபதியெம்பெருமான் *
ஆலினிலைப்பெருமா னவன்வார்த்தையுரைக்கின்றதே. (௮)

கோங்கலரும்பொழில் மாலிருஞ்சோலையில்கொன்றைகள்மேல் *
தூங்குபொன்மாலைகளோடு உடனாய்நின்றுதூங்குகின்றேன் *
பூங்கொள்திருமுகத்து மடுத்தூதியசங்கொலியும் *
சார்ங்கவில்நாணொலியும் தலைப்பெய்வதெஞ்ஞான்றுகொலோ? ()

† 'என்று' என்றும் பாடம்.

↓↓ சங்தொடுகாரகிலும்சுமந்து தடங்கள்பொருது *
வந்திழியும்சிலம்பாறுடை மாலிருஞ்சோலைநின்ற
சுந்தரனை * சுரும்பார்குழற்கோதை தொகுத்துரைத்த *
செந்தமிழ்பத்தும்வல்லார் திருமாலடிசேர்வர்களே. (கo)

அடிவரவு.—சிந்துரம் போர் கருவிளை மைம்பொழில் துங்கம் நாறு இன்று காலை கோங்கு சங்தொடு கார்க்கோடல்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

கo - ஆந் திருமொழி - கார்க்கோடற்பூக்காள்.

தலைவி பிரிந்தநிலையில் மனம்பொறுது வருந்திக் கூறுதல்.

கலிநிலைத்துறை. (காம்போதிராகம் - த்ரிபுடைதாளம்.)

↓↓ கார்க்கோடற்பூக்காள்! கார்க்கடல்வண்ணனென்மேல் * உம்மைப்
போர்க்கோலஞ்செய்து போரவிடுத்தவனெங்குற்றான் ? *
ஆர்க்கோவினிநாம் பூசலிடுவது ? * அணிதுழாய்த்
தார்க்கோடும்நெஞ்சந்தன்னைப் படைக்கவல்லேனந்தோ ! (க)

மேல்தோன்றிப்பூக்காள்! மேலுலகங்களின்மீதுபோய் *
மேல்தோன்றும்சோதி வேதமுதல்வர்வலங்கையில *
மேல்தோன்றுமாழியின் வெஞ்சுடர்போலச்சுடாது * எம்மை
மாற்றோலைப்பட்டவர்கூட்டத்து வைத்துக்கொள்கிற்றிரே. (உ)

கோவைமணாட்டி ! நீஉன்கொழுங்கனிகொண்டு * எம்மை
ஆவிதொலைவியேல் வாயழகர்தம்மையஞ்சுதும் *
பாவியேன்தோன்றிப் பாம்பணையார்க்குந்தம்பாம்புபோல் *
நாவுமிரண்டுள † வாய்த்து நாணிலியேனுக்கே. (ங)

முல்லைப்பிராட்டி ! நீஉன்முறுவல்கள்கொண்டு * எம்மை
அல்லல்விளைவியேல் ஆழிநங்காய்! உன்னடைக்கலம் *
கொல்லையரக்கியைமூக்கரிந்திட்ட குமரனார்
சொல்லும்பொய்யானால் * நானும்பிறந்தமை பொய்யன்றே. (ச)

பாடும்குயில்காள்! ஈதென்னபாடல்? * நல்வேங்கட
நாடர்நமக்கொருவாழ்வுதந்தால் வந்துபாடுமின் *
ஆடும்கருளக்கொடியுடையார் வந்தருள்செய்து *
கூடுவராயிடில் கூவிநும்பாட்டுக்கள்கேட்டுமே. (ரு)

† 'ஆயிற்று' எனவும் பாடம்.

கணமாமயில்காள் ! கண்ணபிரான்திருக்கோலம்போன்று *
அணிமாநடம்பயின்றுடுகின்றீர்க்கு அடிவீழ்கின்றேன் *
† பணமாடரவணைப் பற்பலகாலமும்பள்ளிகொள்
மணவாளர் * நம்மைவைத்த பரிசிதுகாண்மினே. (அ)

நடமாடித்தோகைவிரிக்கின்ற மாமயில்காள் ! * உம்மை
நடமாட்டங்காணப் பாவியேன்நானோர்முதலிலேன் *
குடமாடுகூத்தன் கோவிந்தன்கோமிறைசெய்து * எம்மை
யுடைமாடுகொண்டான் உங்களுக்கினியொன்றுபோதுமே. (எ)

மழையே ! மழையே ! மண்புறம்பூசி உள்ளாய்நின்று *
மெழுகூற்றினாற்போ லூற்றுநல்வேங்கடத்துள்நின்ற *
அழகப்பிரானார்தம்மை என்னெஞ்சத்தகப்படத்
தழுவிநின்று * என்னைத் ‡ ததைத்துக்கொண்டு ஊற்றவும்வல்லையே.

கடலே! கடலே! உன்னைக்கடைந்துகலக்குறுத்து *
உடலுள்புகுந்து நின்றூறலறுத்தவற்கு * என்னையு
முடலுள்புகுந்து நின்றூறலறுக்கின்றமாயற்கு * என்
நடலைகளெல்லாம் நாகணைக்கேசென்றுரைத்தியே. (கூ)

↓↓ நல்லவென்தோழி ! நாகணைமிசைநம்பரர் *
செல்வர்பெரியர் சிறுமானிடவர்நாமசெய்வதென் ? *
வில்லிபுதுவைவிட்டுசித்தர் தங்கள்தேவரை *
வல்லபரிசுவருவிப்பரேல் அதுகாண்டுமே. (கம)

அடிவரவு:—கார் மேல் கோவை முல்லை பாடும் கணம் நடமாடி மழையே கடலே நல்ல தாம்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

கக – ஆந் திருமொழி - தாமுகக்கும்.

தலைவி மாயவன்செய்கைக்கு மனம்பொறாது தாய்மார் முதலியோரை நோக்கி வருந்திக்கூறுதல்.

தரவுகொச்சகக்கலிப்பா. (நாவேரிராகம் - திரிபுடைதாளம்.)

↓↓ தாமுகக்கும்தம்கையில் சங்கமேபோலாவோ ? *
யாமுகக்குமெங்கையில் சங்கமுமேநதிழைபீர் ! *
தீமுகத்துநாகணைமேல் சேருந்திருவரங்கர் *
ஆ! முகத்தைநோக்காரால் அம்மனே! அம்மனே ! (க)

† 'பணவாடரவணை' என்றும் பாடம் ‡ 'ததர்த்தி' எனவும் கூறுவர்.

எழிலுடைய அம்மனைமீர்! என்னரங்கத்தின்னமுதர் *
குழலழகர் வாயழகர் கண்ணழகர் * கொப்பூழில்
எழுகமலப்பூவழக ரெம்மானார் * என்னுடைய
கழல்வளையைத் தாமும்கழல்வளையேயாக்கினரே. (௨)

↓↓ பொங்கோதம்சூழ்ந்த புவனியும்விண்ணுலகும் *
அங்காதுஞ்சோராமே ஆள்கின்றவெம்பெருமான் *
செங்கோலுடைய திருவரங்கச்செல்வனார் *
எங்கோல்வளையால் இடர்தீர்வராகாதே? (௩)

மச்சணிமாட மதிளரங்கர்வாமனனார் *
பச்சைப்பசுந்தேவர் தாம்பண்டுநீரேற்ற *
பிச்சைக்குறையாகி என்னுடையபெய்வளைமேல் *
இச்சையுடையரேல் இத்தெருவேபோதாரே? (௪)

பொல்லாக்குறளுருவாய்ப் பொற்கையில்நீரேற்று *
எல்லாவுலகும் அளந்துகொண்டஎம்பெருமான் *
நல்லார்கள்வாழும் நளிரரங்கநாகணையான் *
இல்லாதோம்கைப்பொருளும் எய்துவானொத்துளனே. (௫)

கைப்பொருள்கள்முன்னமே கைக்கொண்டார் * காவிரிநீர்
செய்ப்புரளவோடும் திருவரங்கச்செல்வனார் *
எப்பொருட்கும்நின்று ஆர்க்குமெய்தாது * நான்மறையின்
சொற்பொருளாய்நின்றார் என்மெய்ப்பொருளும்கொண்டாரே. (௬)

உண்ணாதுறங்காது ஒலிகடலையூடறுத்து *
பெண்ணாக்கையாப்புண்டு தாமுற்றபேதெல்லாம் *
திண்ணார்மதிள்சூழ் திருவரங்கச்செல்வனார் *
எண்ணாதே தம்முடைய நன்மைகளேயெண்ணுவரே. (௭)

↓↓ பாசிதூர்த்துக்கிடந்த பார்மகட்கு * பண்டொருநாள்
மாசுடம்பில் † நீர்வார மானமிலாப்பன்றியாம் *
தேசுடையதேவர் திருவரங்கச்செல்வனார் *
பேசியிருப்பனகள் பேர்க்கவும்பேராவே. (௮)

கண்ணாலங்கோடித்துக் கன்னிதன்னைக்கைப்பிடிப்பான் *
திண்ணார்ந்திருந்த சிசுபாலன்தேசழிந்து *
அண்ணாந்திருக்கவே ஆங்கவளைக்கைப்பிடித்த *
பெண்ணாளன்பேணுமூர் பேருமரங்கமே. (௯)

† 'நீர்வாரா' என்றும் பாடம்.

↓↓ செம்மையுடைய திருவரங்கர்தாம்பணித்த *
மெய்ம்மைப்பெருவார்த்தை விட்டுசித்தர்கேட்டிருப்பர் *
தம்மையுகப்பாரைத் தாமுகப்பரென்னுஞ்சொல் *
தம்மிடையேபொய்யானல் சாதிப்பாராரினியே ? (கo)

அடிவரவு:—தாம் எழில் பொங்கு மச்சு பொல்லா கை உண்ணாது பாசி கண்ணாலம் செம்மை மற்று.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

கஉ - ஆந் திருமொழி - மற்றிருந்தீர்கட்கு.

தலைவி கண்ணனுள்ளவிடத்திற்கொண்டுவிடும்படி உற்றாரைவேண்டுதல்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (நாதநாமக்ரியைராகம்-ஆதிதாளம்.)

↓↓ மற்றிருந்தீர்கட்கறியலாகா
மாதவனென்பதோரன்புதன்னை *
உற்றிருந்தேனுக்குரைப்பதெல்லாம்
ஊமையரோடுசெவிடர்வார்த்தை *
பெற்றிருந்தாளையொழியவேபோய்ப்
பேர்த்தொருதாயில்வளர்ந்தநம்பி *
மற்பொருந்தாமற்களமடைந்த
மதுரைப்புறத்தென்னையுய்த்திடுமின். (க)

நாணியினியோர்கருமமில்லை
நாலயலாருமறிந்தொழிந்தார் *
பாணியாதென்னைமருந்துசெய்து
பண்டுபண்டாக்கவுறுதிராகில் *
மாணியுருவாயுலகளந்த
மாயனைக்காணிலதலைமறியும் *
ஆணையால்நீரென்னைக்காக்கவேண்டில்
ஆய்ப்பாடிக்கேயென்னையுய்த்திடுமின். (உ)

தந்தையுந்தாயுமுற்றாருநிற்கத்
தனிவழிபோயினளென்னுஞ்சொல்லு *
வந்தபின்னைப்பழிகாப்பரிது
மாயவன்வந்துருக்காட்டுகின்றான் *

கொந்தளமாக்கிப்பரக்கழித்துக்
குறும்புசெய்வானோர்மகனைப்பெற்ற *
நந்தகோபாலன்கடைத்தலைக்கே
நள்ளிருட்கணென்னையுய்த்திடுமின். (ங)

அங்கைத்தலத்திடையாழிகொண்டா
னவன்முகத்தன்றிவிழியேனென்று *
செங்கச்சுக்கொண்டுகண்ணாடையார்த்துச்
சிறுமானிடவரைக்காணில்நாணும் *
கொங்கைத்தலமிவைநோக்கிக்காணீர்
கோவிந்தனுக்கல்லால்வாயில்போகா *
இங்குத்தைவாழ்வையொழியவேபோய்
யமுனைக்கரைக்கென்னையுய்த்திடுமின். (ச)

ஆர்க்குமென்னோயிதறியலாகாது
அம்மனைமீர்! துழதிப்படாதே *
கார்க்கடல்வண்ணனென்பானொருவன்
கைகண்டயோகம்தடவத்தீரும் *
நீர்க்கரைநின்றகடம்பையேறிக்
காளியனுச்சியில்நட்டம்பாய்ந்து *
போர்க்களமாகநிருத்தஞ்செய்த
பொய்கைக்கரைக்கென்னையுய்த்திடுமின். (ரு)

கார்த்தண்முகிலும்கருவிளையும்
காயாமலரும்கமலப்பூவும் *
ஈர்த்திடுகின்றனவென்னைவந்திட்டு
இருடீகேசன்பக்கல்போகேயென்று *
வேர்த்துப்பசித்துவயிறசைந்து
வேண்டடிசிலுண்ணும்போது * ஈதென்று
பார்த்திருந்துநெடுநோக்குக்கொள்ளும்
பத்தவிலோசனத்துய்த்திடுமின். (சு)

வண்ணந்திரிவும்மனங்குழைவும்
மானமிலாமையும்வாய்வெளுப்பும் *
உண்ணலுறாமையும்உள்மெலிவும்
ஓதநீர்வண்ணனென்பானொருவன் *

தண்ணந்துழாயென்னும்மாலைகொண்டு
சூட்டத்தணியும் * பிலம்பன்தன்னைப்
பண்ணழியப்பலதேவன்வென்ற
பாண்டிவடத்தென்னையுய்த்திடுமின். (௭)

கற்றினம்மேய்க்கிலும்மேய்க்கப்பெற்றான்
காடுவாழ்சாதியுமாகப்பெற்றான் *
பற்றியுரலிடையாப்புமுண்டான்
பாவிகாள்! உங்களுக்கேசுக்கொலோ? *
கற்றனபேசிவசவுணாதே
காலிகளுய்யமழைதடுத்து *
கொற்றக்குடையாகவேந்திநின்ற
கோவர்த்தனத்தென்னையுய்த்திடுமின். (௮)

கூட்டிலிருந்துகிளியெப்போதும்
கோவிந்தா! கோவிந்தா! என்றழைக்கும் *
ஊட்டக்கொடாதுசெறுப்பனாகில்
உலகளந்தானென்றுயரக்கூவும் *
நாட்டில்தலைப்பழியெய்தி உங்கள்
நன்மையிழந்துதலையிடாதே *
சூட்டுயர்மாடங்கள்சூழ்ந்துதோன்றும்
துவராபதிக்கென்னையுய்த்திடுமின். (௯)

↓↓ மன்னுமதுரைதொடக்கமாக
வண்துவராபதிதன்னளவும் *
தன்னைத்தமருய்த்துப்பெய்யவேண்டித்
தாழ்குழலாள்துணிந்ததுணிவை *
பொன்னியல்மாடம்பொலிந்துதோன்றும்
புதுவையர்கோன்விட்டுசித்தன்கோதை *
இன்னிசையால்சொன்னசெஞ்சொல்மாலை
ஏத்தவல்லார்க்கிடம்வைகுந்தமே. (௧௦)

அடிவரவு:—மற்று நாணி தந்தை அங்கை ஆர்க்கும் கார்த்தண் வண்ணம் கற்றினம் கூட்டில் மன்னு கண்ணன்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

௧௩ - ஆந் திருமொழி - கண்ணனென்னும்.

தலைவி அச்சுதன் அணிந்த ஆடைமுதலியவற்றால் தன் வாட்டத்தைத் தணிக்க வேண்டுதல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (பைரவிராகம் - ஆதிதாளம்.)

↓↓ கண்ணனென்னுங்கருந்தெய்வம் காட்சிப்பழகிக்கிடப்பேனை *
புண்ணிற்புளிப்பெய்தாற் † போலப்புறநின்றழகுபேசாதே *
பெண்ணின்வருத்தமறியாத பெருமானரையிற்பீதக
வண்ணவாடைகொண்டு * என்னை வாட்டந்தணியவீசீரே. (௧)

பாலாலிலையில்துயில்கொண்ட பரமன்வலைப்பட்டிருந்தேனை *
வேலால்துன்னம்பெய்தாற்போல் வேண்டிற்றெல்லாம்பேசாதே *
கோலால்நிரைமேய்த்தாயனாய்க் குடந்தைக்கிடந்தகுடமாடி *
நீலார்தண்ணந்துழாய்கொண்டு என்நெறிமென்குழல்மேல்சூட்டீரே.

கஞ்சைக்காய்ந்தகருவில்லி கடைக்கணென்னுஞ்சிறைக்கோலால் *
நெஞ்சூடுருவவேவுண்டு நிலையுந்தளர்ந்துநைவேனை *
அஞ்சேலென்னானவனொருவன் அவன்மார்வணிந்தவனமாலை *
வஞ்சியாதேதருமாகில் மார்விற்கொணர்ந்துபுரட்டீரே (௩)

ஆரேயுலகத்தாற்றுவார்? ஆயர்பாடிகவர்ந்துண்ணும் *
காரேறுழக்கவுழக்குண்டு தளர்ந்தும்முறிந்தும்கிடப்பேனை *
ஆராவமுதமனையான்தன் அமுதவாயிலூறிய *
நீர்தான்கொணர்ந்துபுலராமே பருக்கியிளைப்பைநீக்கீரே. (௪)

அழிலும்தொழிலுமுருக்காட்டான் அஞ்சேலென்னானவனொருவன் *
தழுவி ‡ முழுசிபுகுந்தென்னைச் சுற்றிச்சுழன்றுபோகானால் *
தழையின்பொழில்வாய்நிரைப்பின்னே நெடுமாலூதிவருகின்ற *
குழலின்தொளைவாய்நீர்கொண்டு குளிரமுகத்துத்தடவீரே. (௫)

நடையொன்றில்லாவுலகத்து நந்தகோபன்மகனென்னும் *
கொடியகடியதிருமாலால் குளப்புக்கூறுகொளப்பட்டு *
புடையும்பெயரகில்லேன்நான் போட்கன்மிதித்தவடிப்பாட்டில் *
பொடித்தான்கொணர்ந்துபூசீர்கள் போகாவுயிரென்னுடம்பையே. (௬)

வெற்றிக்கருளக்கொடியான்தன் மீமீதாடாவுலகத்து *
வெற்றவெறிதேபெற்றதாய் வேம்பேயாகவளர்த்தாளே *
குற்றமற்றமுலைதன்னைக் குமரன்கோலப்பணைத்தோளோடு *
அற்றகுற்றமவைதீர அணையவமுக்கிக்கட்டீரே. (௭)

---

† 'போல்' என்று சிலர் பாடம். ‡ 'முழுவி' என்று சிலர் கூறுவர்.

உள்ளேயுருகிநைவேனை உளளோவிலளோவென்னாத *
கொள்ளைகொள்ளிக்குறும்பனைக் கோவர்த்தனனைக்கண்டக்கால் *
கொள்ளும்பயனொன்றில்லாத கொங்கைதன்னைக்கிழங்கோடும் *
அள்ளிப்பறித்திட்டவன்மார்விலெறிந்து என்னழலைத்தீர்வேனே. (அ)

கொம்மைமுலைகளிடர்தீரக் கோவிந்தற்கோர்குற்றேவல் *
இம்மைப்பிறவிசெய்யாதே இனிப்போய்ச்செய்யுந்தவந்தானென்? *
செம்மையுடையதிருமார்வில் சேர்த்தானேனும்ஒருஞான்று *
மெய்ம்மைசொல்லிமுகம்நோக்கி விடைதான்தருமேல்மிகநன்றே. (கூ)

↓↓ அல்லல்விளைத்தபெருமானை ஆயர்பாடிக்கணிவிளக்கை *
வில்லிபுதுவைநகர்நம்பி விட்டுசித்தன்வியன்கோதை *
வில்லைத்தொலைத்தபுருவத்தாள் வேட்கையுற்றுமிகவிரும்பும் *
சொல்லைத்துதிக்கவல்லார்கள் துன்பக்கடலுள் துவளாரே. (கய)

அடிவரவு:—கண்ணன் பால் சஞ்சை ஆரே அழில் நடை வெற்றி உள்ளே கொம்மை அல்லல் பட்டி

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

கச - ஆந் திருமொழி - பட்டிமேய்ந்தோர்.

விருந்தாவனத்தே பரந்தாமனைக் கண்டமை கூறுதல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (கல்யாணிராகம் - ரூபகதாளம்.)

↓↓ பட்டிமேய்ந்தோர்காரேறு பலதேவற்கோர்கீழ்க்கன்றாய் *
இட்டமாவிட்டுவிளையாடி இங்கேபோதக்கண்டீரே? *
இட்டமானபசுக்களை இனிதுமறித்துநீரூட்டி *
விட்டுக்கொண்டுவிளையாட விருந்தாவனத்தேகண்டோமே. (க)

அனுங்கவென்னைப்பிரிவுசெய்து ஆயர்பாடிகவர்ந்துண்ணும் *
குணுங்குநாறிக்குட்டேற்றைக் கோவர்த்தனனைக்கண்டீரே? *
கணங்களோடுமின்மேகம் கலந்தாற்போல * வனமாலை
மினுங்கநின்றுவிளையாட விருந்தாவனத்தேகண்டோமே (உ)

மாலாய்ப்பிறந்தநம்பியை மாலேசெய்யுமணாளனை *
ஏலாப்பொய்களுரைப்பானை இங்கேபோதக்கண்டீரே? *
மேலால்பரந்தவெயில்காப்பான் வினதைசிறுவன்சிறகென்னும் *
மேலாப்பின்கீழ்வருவானை விருந்தாவனத்தேகண்டோமே. (ங)

கார்த்தண்கமலக்கண்ணென்னும் நெடுங்கயிறுபடுத்தி * என்னை
ஈர்த்துக்கொண்டுவிளையாடும் ஈசன்தன்னைக்கண்டீரே ? *
போர்த்தமுத்தின்குப்பாயப் புகர்மால்யானைக்கன்றேபோல் *
வேர்த்துநின்றுவிளையாட விருந்தாவனத்தேகண்டோமே. (௫)

↓↓ மாதவன்என்மணியினை வலையில்பிழைத்தபன்றிபோல் *
ஏதுமொன்றும்கொளத்தாரா ஈசன்தன்னைக்கண்டீரே ? *
பீதகவாடையுடைதாழப் பெருங்கார்மேகக்கன்றேபோல் *
வீதியாரவருவானை விருந்தாவனத்தேகண்டோமே. (௬)

தருமமறியாக்குறும்பனைத் தன்கைச்சார்ங்கமதுவேபோல் *
புருவவட்டமழகிய பொருத்தமிலியைக்கண்டீரே ? *
உருவுகரிதாய்முகம்செய்தாய் உதயபருப்பதத்தின்மேல் *
விரியும்கதிரேபோல்வானை விருந்தாவனத்தேகண்டோமே. (௭)

பொருத்தமுடையநம்பியைப் புறம்போலுள்ளும்கரியானை *
கருத்தைப்பிழைத்துநின்ற அக்கருமாமுகிலைக்கண்டீரே ? *
அருத்தித்தாராகணங்களால் ஆரப் † பெருகுவானம்போல *
விருத்தம்பெரிதாய்வருவானை விருந்தாவனத்தேகண்டோமே. (௮)

வெளியசங்கொன்றுடையானைப் பீதகவாடையுடையானை *
அளிநன்குடையதிருமாலை ஆழியானைக்கண்டீரே ? *
களிவண்டெங்குங்கலந்தாற்போல் கமழ்பூங்குழல்கள் தடந்தோள்மேல் *
மிளிரநின்றுவிளையாட விருந்தாவனத்தேகண்டோமே. (௯)

↓↓ நாட்டைப்படையென்று ‡ அயன் முதலாத்தந்த நளிர்மாமலருந்தி
வீட்டைப்பண்ணிவிளையாடும் விமலன்தன்னைக்கண்டீரே ? *
காட்டைநாடித்தேனுகனும் களிறும்புள்ளுமுடன்மடிய *
வேட்டையாடிவருவானை விருந்தாவனத்தேகண்டோமே. (௧0)

↓↓ பருந்தாட்களிற்றுக்கருள்செய்த பரமன்தன்னை * பாரின்மேல்
விருந்தாவனத்தேகண்டமை விட்டுசித்தன்கோதைசொல் *
மருந்தாமென்றுதம்மனத்தே வைத்துக்கொண்டுவாழ்வார்கள் *
பெருந்தாளுடையபிரானடிக்கீழ்ப் பிரியாதென்றுமிருப்பாரே. (௧௧)

அடிவரவு:—பட்டி அனுங்க மால் கார்த்தண் மாதவன் தருமம் பொருத்தம் வெளிய நாட்டை பருந்தாள் இருள்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ஆக, பாசுரம் - 143.

நாச்சியார் திருமொழி ஸம்பூர்ணம்.

† 'பருகு' என்பதும் பாடம். ‡ 'அயன்தன்னை' என்பதும் பாடம்.

குலசேகராழ்வார் வைபவம்.

𑌕𑍁𑌂𑌭𑍇 𑌪𑍁𑌨𑌰𑍍𑌵𑌸𑍌 𑌜𑌾𑌤𑌂 𑌕𑍇𑌰𑌳𑍇 𑌚𑍋𑌳𑌪𑌟𑍍𑌟𑌣𑍇 ।
𑌕𑍌𑌸𑍍𑌤𑍁𑌭𑌾𑌂𑌶𑌂 𑌧𑌰𑌾𑌧𑍀𑌶𑌂 𑌕𑍁𑌲𑌶𑍇𑌖𑌰𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇 ॥

కుంభే పునర్వసౌ జాతం కేరళే చోళపట్టణే ।
కౌస్తుభాంశం ధరాధీశం కులశేఖరమాశ్రయే ॥

கும்பே புநர்வஸௌ ஜாதம் கேரளே சோளபட்டணே,
கௌஸ்துபாம்சம் தராதீசம் குலசேகரமாஸ்ரயே.

சேரநாட்டில் கோழிக்கூடு என்னும் ராஜதானியில் அரசாண்ட திருடவிரதனென்ற அரசன் வெகுநாளளவும் பிள்ளையில்லாத குறையால் திருமாலுக்கு விசேஷமான ஆராதனத்தைச் செய்ய, அதன் பயனால் அவனுக்கு ஒருகுமாரன் கலியுகம்பிறந்த ௨௮-ஆம் வருஷமான பராபவவருஷத்து மாசிமாதத்தில் சுக்கிலபக்ஷத்துத் துவாதசியும் வியாழக்கிழமையுங் கூடின சுபதினத்தில் புநர்வஸு நக்ஷத்திரத்திலே பட்டத்து இராணியினிடத்தில் திருவஞ்சிக்களமென்ற ஊரிலே கௌஸ்துபாம்சமாய் அவதரித்தனன். அச்செய்தியை அறிந்த அரசன் ஆனந்தக்கடலில் ஆழ்ந்து, உரியகாலத்தில் நாமகரணஞ் செய்யத்தொடங்கி, இம்மகன் தன்குலத்துக்குச் சிரோபூஷணம்போலச் சிறப்புத்தந்து யாவராலுங் கொண்டாடத்தக்கவனெனக் கொண்டு 'குலசேகரன்' எனப் பெயரிட்டான்.

பின்பு, அவ்விளமகன் நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாகச் சுக்கிலபக்ஷத்துச் சந்திரன்போல வளர்ந்து சௌளமும் உபநயநமும் தக்க பருவங்களில் தந்தையாற் செய்விக்கப்பெற்று, நல்லாசிரியனைத் துணைக்கொண்டு, நான்கு வேதங்களையும் ஆயுதசாஸ்திரங்களையும் தநுர்வித்தையையும் மற்றும் அரசர்க்கு உரிய நீதிநூல்களையும் யானை குதிரை தேர் முதலியவற்றின் நூல்களையும் சிறிதுகாலத்திலேயே ஐயந்திரிபுஅற முற்றக்கற்று வல்லனாயினன். அம்மைந்தனது திறத்தைக் கண்டு களிப்புக்கொண்ட காவலன் அவனுக்கு இளவரசுமுடிசூட்டினன்.

பின்னர், குலசேகரன் பராக்கிரமத்தாற் பகைவெல்லலுற்று, நால்வகைச் சேனையோடு புறப்பட்டுச்சென்று, சோழ பாண்டியர் முதலிய அரசர்களனைவரையும் புறங்கொடுத்தோடுமாறு வென்று அவர்களைக் கீழ்ப்படுத்தி அவர்கள் நாடுகளைத் தன்வசப்படுத்தி, இங்ஙனம் சேர சோழ பாண்டியமென்னும் தமிழ்நாடு மூன்றுக்குந் தலைமை பூண்டதனால், "கொல்லிகாவலன் கூடல்நாயகன் கோழிக்கோன் குலசேகரன்" என்னும்படி பல பிருதுகளைப் பெற்று மீண்டு வந்தனன். பிறகு திருடவிரதமஹாராஜா குமாரனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்து இராச்சியபாரம் முழுவதையும் அம்மகன் தோளில் நிலைநிறுத்தி க்ஷத்திரிய ஜாதிமுறைப்படியே தான் தவஞ்செய்து உயர்கதி பெறுதற்பொருட்டுத் தவவனஞ்சென்றான்.

தந்தையின் பிரிவுக்கு ஆற்ருது வருந்தி மந்திரிகள் தேற்றத் தேறிய மன்னவகுமாரன், நடுவுநிலைமைதவருது, சிறியவற்றைப பெரியவை நலியாதபடி இராமராச்சிய மென்னுமாறு எதிரின்றி அரசாண்டு ஒரு பெண்மணியை மணந்து, திருமாலின் தேவிமார் மூவருள் நீளாதேவியின் அம்சமான இளையென்னும் ஒரு புத்திரியையும் த்ருடவ்ரத னென்று பிதாமகன் பெயரையே பெறும் ஒரு புத்திரனையும் பெற்றுக் கவலையற்றிருக்கையில், 'இம்மை மறுமை வீடு என்னும் மும்மை யின்பங்களையுந் தரவல்லனும் முதலும் முடிவும் அற்ற முழுமுதற்கடவுள் யாரோ?' என்று பரதத்துவவிசாரம் பண்ணத் தொடங்கிப பலபண்டிதர்களுடனே ஶ்ருதி ஸ்மிருதி இதிஹாஸம் புராணம் முதலிய ஸகல கலைகளையும் பரிசோதித்துப் பார்த்துவர, அதுவே சமயமென்று அவ்வரசனை ஆட்கொண்டு உய்விக்கக் கருதிய கருணாநிதியான கமலக்கண்ணனது திருவருள் நோக்கத்தால், ஸ்ரீமகாவிஷ்ணுவே சிறந்த தெய்வமென்கிற சத்தியமான சித்தாந்தம் அவனது ஞானக்கண்ணுக்குத் தெள்ளிதிற் புலப்பட்டது.

இப்படி எம்பெருமானை எல்லாவுயிர்கட்கும் இறைவனாக அறிந்து அப்பிரானது அநந்த கலியாணகுணகணங்களாகிய பெருங்கடலில் ஆழ்ந்து நெஞ்சுருகி ஈடுபட்ட இந்தக்குலசேகராழ்வார், திருமாலின் விபவாவதாரங்களில் ஸ்ரீராமாவதார கிருஷ்ணவதாரங்களினிடத்திலும், அர்ச்சாவதாரத்தில் திருவரங்கம் திருவேங்கடம் முதலிய திவ்வியதேசத்து எம்பெருமான்களிடத்திலும் மிக்க பக்திப்பெருங்காதல் கொண்டு, ஸ்ரீராமாயண காலக்ஷேபத்தையே எப்பொழுதும் தமக்குப் பொழுதுபோக்காகப் பெற்றும், ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்டால் எதிர்கொண்டு அழைத்துவந்து விசேஷமாக உபசரித்தும், தமது திருமாளிகைத் திருவாராதனத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீராமசந்திரமூர்த்திக்கும் ஸ்ரீராஜகோபாலஸ்வாமிக்கும் நித்திய நைமித்திக உத்ஸவங்களைக் குறைவறச் செய்துகொண்டும் இருந்தார்.

இவர், ஒருநாள் ஸ்ரீராமாயண காலக்ஷேபஞ் செய்துவருகையில், ஆரண்ய காண்டத்தில் 'இராவணன் தங்கையான சூர்ப்பணகை மூக்கு அறுப்புண்டு (தனக்குத் துணையாக இராவணனால் நியமிக்கப்பட்டு) ஜநஸ்தாநத்தி லிருந்த கரதூஷணதியரிடத்திற் போய் முறையிட்டதை யறிந்து அவர்கள் அதியுக்கிரமாக எண்ணிறந்த சேனைகளைத் திரட்டிக்கொண்டு படையெடுத்து வந்த சமயத்தில், பெருமாள், பிராட்டிக்குக்காவலாக இருக்கும்படி இளையபெருமாளைப் பர்ணசாலையிலே நிறுத்திவிட்டு, தமக்கு ஒருவருந் துணையின்றித் தாம் தனியே அவ்வரக்கர்களனைவரோடும் போர்க்குச்சென்று நின்றார்' என்று பௌராணிகர் சொல்லக் கேட்டவுடனே, ஸ்ரீராமசரித்திரத்தில் தமக்குஉள்ள மிக்க பிரீதிவிசேஷத்தால், வெகுகாலத்துக்கு முன்பு நடந்த அந்தச் சரித்திரத்தை அன்றுதான் நடக்கின்றதாக நினைத்து, 'இப்படிப்பட்ட சங்கடகாலத்தில் எம்மால் இயன்ற உதவியைச் செய்யாதுவிடுவது சிறிதும் தக்கதன்று' என்று துணிந்து, தமதுசேனைகளையெல்லாம் போர்க்குச்சித்தமாய் முன்செல்லும்படி பணித்து, தாமும் ஜநஸ்தாநத்தை நோக்கிப் புறப்பட்டார். அச்சமயத்தில் யாவரும் இன்னதென்று அறியாது திடுக்கிட்டு நிற்கையில், அதிநிபுணரான ஆசிரியர்,

'இராமபிரான் தாம் ஒருவராகவே நிர்ப்பயமாகப் பிரபலயுத்தஞ்செய்து சத்துருக்களத்தனை பேரையுஞ் சயித்துத் தமது ஆச்சிரமத்துக்கு மீண்டுவர, அவரைச் சீதாதேவி களிப்புடன் அணைத்து அவரது இளைப்பைத் தணித்தாள்' என்ற செய்தியை எடுத்துக்கூற, அதுகேட்ட ஆழ்வார் ஆனந்தமடைந்து சேனையைத் திருப்பிக்கொண்டு தாமும் பிரயாணத்தை நிறுத்தினர்.

அதுமுதல், இராமாயணங்கூறுபவர், எந்தெந்தப்பாகத்தில் இராமனது விஜயப்ரஸ்தாபம் வருகின்றதோ அந்தந்தப்பாகத்தையே வளர்த்தியுரைத்தும், அரக்கராதியரால் இராகவபிரானுக்குத் துன்பம் நேர்ந்த இடங்களையெல்லாம சுருக்கியுரைத்தும் வந்தனர். இப்படியிருக்கையில், ஒருநாள் அந்தக்குரு வேறொருகாரியநிமித்தம் தாம் அவசியமாகப் பிறிதிடஞ்செல்ல வேண்டிவந்ததனல், காலக்ஷேபஞ் சொல்லுதற்குத் தாம்வாராமல் தமது குமாரரை அனுப்பினர்.

அவர், குலசேகரருடைய இயற்கையை உணராமல், இராவணன் சீதையையெடுத்துப்போன வ்யஸநகரமான செய்தியை உபந்யாஸஞ்செய்ய அது செவியிற்பட்டவுடனே குலசேகரர் மனங்கொதித்து 'நான் இப்பொழுதே வெகுவிரைவாகச் சென்று கடல்கடந்து இலங்கையை நீறுபடுத்தி ராக்ஷஸராஜனைப் பந்துமித்திரரோடும் போரில் தொலைத்து எனது அன்னையை மீட்டு வருவேன்' என்று சொல்லி எழுந்து ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு ஸேநாஸமூஹத்தோடு இலங்கையை நோக்கிப் பிரயாணமானர். அப்பொழுது விண்ணுலகத்தாரும் மண்ணுலகத்தாரும் இதனைக்கண்டு பெருவியப்புக்கொண்டு 'இதன்முடிவு என்னகுமோ?' என்று பெருங்கவலையோடு பார்த்து நின்றனர். ஆழ்வார் கடலை நீந்திக் கடக்க நிச்சயித்துக் கழுத்தளவினதான தண்ணீரில் இறங்கிநின்ற சமயத்தில், இவரது அன்புக்கு இடமான இராமமூர்த்தி, இவரைத் தடுத்தற்கு வேறுவகை யொன்றும் இல்லாமையைக் கருதி, தாம் நேரிலே சீதையைக் கைபற்றிக்கொண்டு இலக்ஷ்மணரோடு எதிரில் வந்து நின்று தரிசனந் தந்து, தமது போர்வெற்றியையுஞ் சத்துருவிநாசத்தையும் தேவியை மீட்டதையும் தெளிவாகக்கூறி, பிறவிப்பெருங்கடலினின்று கரையேற்றுதற்கு ஓர் அறிகுறியாகுமாறு இவரைக் கரையேற்றிக் கரிதுறட்செலுத்திவிட்டு, பின்பு மறைந்தருளினர்.

இப்படி எம்பெருமானுடைய திவ்யசரித்திரங்களைக் கேட்பதில் மிக்க அன்பை யுடையரான குலசேகரர், புராணங்களிற் கூறப்பட்ட ஸ்ரீரங்கக்ஷேத்திர மகிமையைக் கேட்டு, 'திருவரங்கத்தைநோக்கிப் பிரயாணப்பட்டுச் செல்லுதலும், அத்திருப்பதிக்குச் செல்லவேண்டுமென்ற விருப்பமும், சகலகருமங்களையுந் தொலைக்கும்' என்ற தன்மையையும், 'அக்கோயிலில் நித்தியவாசஞ் செய்தலும், நம்பெருமாளைக் கண்ணாரக்கண்டு களித்தலும், பேரின்பத்தைத் தரும்' என்ற தகைமையையும் உணர்ந்து, அங்குப்போதற்கு மிக்க குதூகலமுடையராய்ப் பரிவாரங்களோடு புறப்படுபவரானர்.

இவர் இவ்விடத்தை விட்டு அவ்விடத்துச்சென்று பெரியபெருமாளைச் சேவிப்பாராயின் பின்பு இங்கு மீளுதலரிதென்றும், அங்குத்தானே நித்திய

வாசஞ்செய்யக் கருதிவிடுவ ரென்றும் நினைத்து அந்த யாத்திரையைத் தடுத் தற்கு ஆலோசித்து மந்திரிகள் ஒருபாயஞ்செய்தார்கள்; அது யாதெனில்:— இவர் ஸ்ரீவைஷ்ணவர்களை உபசரிப்பதில் மிக்க விருப்பமுள்ளவ ராதலால், அநேக பாகவதர்களை அமைச்சர்கள் வரவழைத்து இவர்முன் செலுத்த, இவர் 'அறுபதினாயிரம் வருஷகாலம் விஷ்ணுவை ஆராதநஞ்செய்த பயனும், ஒரு கால் வைஷ்ணவர்களைப் பூசித்த பேற்றுக்கு ஈடாகாது' என்ற சாஸ்திரமுறை மையை யறிந்தவ ராதலால், ஸ்ரீரங்கயாத்திரையை நிறுத்தி, ஷோடசோப சாரத்தோடு திருமாலடியார்களைப் பலவாறு உபசரித்தார். இவ்வாறு இவர் திவ்வியதேசயாத்திரை தொடங்கும்பொழுதெல்லாம் மந்திரிகள் மெய்யடியார் களைக் கொணர்ந்துவிட்டுத் தடுத்துவந்தனர். ஆழ்வார் இங்ஙனம் அவர்களை அகங்கனிந்த அன்போடு கொண்டாடிவருகையில், அந்நாடெங்கும் ஸ்ரீவைஷ் ணவர்திரள் மிக்கது.

அரண்மனையினுள்ளும் ஆலோசனைச் சபாமண்டபத்திலும் இன்னும் அந்தரங்கமான இடங்களிலும் பாகவதர்கள் எக்காலத்திலுஞ் சிறிதுந் தடை யின்றிப் போக்குவரவுசெய்தலையும் தமது அரசன்பக்கல் இவர்கள் வரம்பு கடந்த ஸ்வாதந்த்ரியம் பாராட்டுதலையுங் கண்டு பொறாமைகொண்ட மந்திரி கள், இவர்களிடத்துக் குலசேகரர்க்கு வெறுப்பை யுண்டாக்கக் கருதினர். இவ் வாறு இருக்கையில், அனைவருங்கொண்டாடத்தக்க ஸ்ரீராமநவமிமஹோத்ஸவம் வந்தது. அதன்பொருட்டு, தோரணம நாட்டியும், துவசங்களைக் கட்டியும், வாழைமரங்களை நிறுத்தியும் நகர் முழுவதும் அலங்கரிக்கப்பட்டது. பின்பு திருக்கோயிலில் அர்ச்சகர், இராமமூர்த்திக்கும் மற்றும் விக்கிரகரூபமாயுள்ள எம்பெருமான்கட்கும் திருமஞ்சனஞ்செய்தற்பொருட்டு அவர்களுடைய திவ் வியாபரணங்களையெல்லாங் களைந்துவைத்தனர். பின்பு வேதகோஷத்தோடும் வாத்தியகோஷத்தோடும் திருமஞ்சனம் நடந்தேறிற்று. அச்சமயத்தில் யாவரும் ஸ்வாமிஸேவையிலே கருத்தூன்றி நிற்கையில், மந்திரிகள், ஒரு நவரத்தின மாலையைத் திருவாபரணத்திரளிலிருந்து எடுத்து ஒளித்துவைத்திட்டனர். பின்பு பெருமாளுக்கு அலங்காரஞ் செய்யும்பொழுது அவ்வணிகலத்தைக் காணாமல் அர்ச்சகர் கவலைப்பட்டு அரசரிடத்து அறிவிக்க, அதுகேட்டு ஆழ் வார் மனங்கலங்கி மந்திரிகளை அழைப்பித்து 'களவனை விரைவில் தேடிப்பிடி யுங்கள்' என்று கட்டளையிட்டார். அதுவே வியாஜமாக, அவர்கள் 'இது கொண்டுபோனவர் வைணவரேயன்றி வேறு எவருமல்லர்; இவர்களே எப் பொழுதும் இங்கு எங்கும் தட்டின்றித் திரிகின்றவர்; பிறனொருவன் புதிய னாகவந்து அஞ்சாது இத்தொழில்செய்யான்' என்று பாகவதர்மீது அடாப்பழி சுமத்தினர். நாராசம்புக்கதுபோல அக்கடுஞ்சொல் செவிபுகப்பெற்ற ஆழ்வார் அரிபக்தர்களின் நற்குணநற்செய்கைகளை நன்றாக அறிந்தவ ராதலால், அவர் கள்மேற் சற்றும் சங்கைகொள்ளாமல், அவர்களின்மீது குற்றங்கூறின தமது மந்திரிகளையே கடிந்து 'வைஷ்ணவசிகாமணிகள் ஒருபோதும் இத்தகைய கடுந் தொழிலை நினைத்தலுஞ் செய்யார்; இது திண்ணம்: இதனை உங்கட்கு உறுதிப் படுத்துதற்காக, யானே பிரமாணங்காட்டுவேன்' என்றுசொல்லி, பாம்பை யுள்ளிட்டதொரு குடத்தைச் சபைமுன்பே தருவித்து, 'ஸ்ரீவைஷ்ணவர்

மனம் மொழி மெய் யென்னுந் திரிகரணத்தாலும் சுத்தராயின், இப்பாம்பு என்னை யாதொன்றுஞ்செய்யாது ; இல்லையாயின், இந்நாகம் இப்பொழுதே என்னைத் தீண்டிக்கொல்லுக' என்று சபதஞ்செய்து அக்குடத்தினுள்ளே கையிட்டனர். அப்பொழுது, சத்தியத்துக்குக் கட்டுப்படுந் தன்மையதான சர்ப்பம் சிறிது கொடுமையும் புரியாது தணிந்திருந்தது. அதுநோக்கி, அமைச்சர்கள், தமது சூழ்ச்சி கிஞ்சித்தும் பலியாதுவிட்டதே யென்று வருத்தமும், தேர்ந்த ஆராய்ச்சியின்றி இங்ஙனந் தவறுசெய்துவிட்டோமே யென்று கழிவிரக்கமும், இனி நமது கதி என்னாகுமோ வென்று பேரச்சமுங் கொண்டு, நடுநடுங்கி, தாம்கவர்ந்திட்ட அந்த ஆபரணத்தை உடனே கொணர்ந்து சமர்ப்பித்து, தாம் அறியாதுசெய்த அப்பெரும்பிழையைப் பொறுத்தருளுமாறு பிரார்த்தித்து, ஆழ்வாரது திருவடித்தாமரைகளைச் சரணமடைந்தார்கள். ஆழ்வார் மிக்க பொறுமையுடையவராதலால் அமைச்சர்கள் பிழையைப் பொறுத்து, 'இனி நீவிர் பாகவதர்கட்கு எப்பொழுதும் பணிவிடை செய்யவே, நமது குற்றம்தீரும் வகை' என்று சொல்லிவிட, அவர்கள் அங்ஙனமே அடியவர்க்கு அடியராய்க் குறிப்பறிந்து குற்றேவல்புரிந்து பேறுபெற்றனர்.

பின்பு குலசேகரர் பொய்ம்மைக்கு இடமான அரசாட்சியில் இருத்தற்கு இஷ்டப்படாமல் தமது குமாரனை த்ருடவ்ரதனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்துவைத்துத் தாம் திருவரங்கம்பெரியகோயிலுக்குச் சென்று நம்பெருமாளைச் சேவித்து, அவ்வழகியமணவாளனையே தனக்கு உரிய மணவாளனாகக் கருதிய தம் திருமகளை அப்பெருமானுக்கே உரியபொருளாகக்கொடுத்து மணஞ் செய்வித்து, பகவத் பாகவத கைங்கரியங்களை விதிமுறை வழுவாது நித்யமுஞ் செய்துகொண்டு அத்திருப்பதியிற் சிலகாலம் இருந்தனர்.

பிறகு மற்றுஞ் சில திவ்யதேசங்கட்கும் யாத்திரைசெய்ய எண்ணி, திருவேங்கடம், திருவயோத்தி, தில்லைத் திருச்சித்திரகூடம், திருக்கண்ணபுரம், திருமாலிருஞ்சோலை, திருவிற்றுவக்கோடு முதலிய திருப்பதிகட்குச் சென்று ஆங்காங்கு எழுந்தருளியிருக்கின்ற பெருமாளைக் கண்ணாரக்கண்டு சேவித்து, அப்பால், நம்மாழ்வாரது திருவவதாரஸ்தலமான திருக்குருகூர்க்கு அருகிலுள்ள பிரமதேசமென்னும் ஊரை யடைந்து, அங்கு ஸ்ரீராஜகோபாலஸ்வாமி சந்நிதியிற் சிலகாலம் திருத்தொண்டு செய்துகொண்டிருந்து, தமது அறுபத்தேழாவது பிராயத்திற் பரமபதமடைந்தனர்

இவர் எம்பெருமானை அனுபவிக்கும்போது அவ்வநுபவத்தாலாகிய ஆனந்தம் உள்ளடங்காமையால் அதனை வெளியே வழியவிடுவாராகி அருளிச்செய்த திவ்வியப் பிரபந்தங்கள் - முகுந்தமாலை யென்னும் வடநூலும், பெருமாள் திருமொழி யென்னுந் தமிழ்நூலுமாம். இவற்றால் இவர் வடமொழி தென்மொழி யிரண்டிலும் வல்லவரென விளங்கும்.

" அரசமர்ந்தானடிசூடு மரசையல்லா லரசாக வெண்ணேன் மற்றரசு தானே " என்று கோவிந்தபாதாரவிந்தத்தைச் சிரமேற் கொள்ளுதலையே கிரீடாபிஷேகமாகப் பாவிக்கின்ற இவர், பெருமாளுடைய [இராமபிரானுடைய]

இன்ப துன்பங்களைத் தமது சுகதுக்கங்களாகக் கருதியதனால், இவர்க்கு 'பெருமாள்' என்றும் ஒரு பெயர் வழங்கும்.

இவ்வாழ்வார் " செடியாய வல்வினைகள் தீர்க்குந் திருமாலே, நெடியானே வேங்கடவா நின்கோயிலின்வாயில், அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும், படியாய்க்கிடந்து உன் பவளவாய் காண்பேனே" என்று வேண்டியமைபற்றி விஷ்ணுவாலயங்களில் கோயிலினுள் வாயிற்படி 'குலசேகரன்படி' என்று இவர்பெயரையிட்டு வழங்கப்படும்.

அஞ்சனமாமலைப்பிறவியாதரித்தோன்வாழியே
அணியரங்கர்மணத்தூணையடைந்துய்ந்தோன்வாழியே
வஞ்சிநகரந்தன்னில்வாழவந்தோன்வாழியே
மாசிதனிற்புனர்பூசம் வந்துதித்தான்வாழியே
அஞ்சலெனக்குடப்பாம்பிலங்கையிட்டான்வாழியே
அநவரதமிராமகதையருளுமவன்வாழியே
செஞ்சொல்மொழிநூற்றஞ்சுஞ்செப்பினான்வாழியே
சேரலர்கோன்செங்கமலத்திருவடிகள்வாழியே.

குலசேகராழ்வார்.

குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த

ஸ்ரீராமாயண ஸாரமாகிய

பெருமாள் திருமொழி.

தனியன்கள்.

(† உடையவர் அருளிச்செய்தது.)

இருவிகற்பநேரிசைவெண்பா.

இன்னமுத மூட்டுகேன் இங்கேவா பைங்கிளியே! *
தென்னரங்கம் பாடவல்ல சீர்ப்பெருமாள் *—பொன்னஞ்
சிலைசேர் நுதலியர்வேள் சேரலர்கோன் * எங்கள்
குலசேகரனென்றே கூறு.

(மணக்கால்நம்பி அருளிச்செய்தது.)

கட்டளைக்கலித்துறை.

ஆரங்கெடப் பரனன்பர்கொள்ளாரென்று * அவர்களுக்கே
வாரங்கொடுகுடப் பாம்பிற்கையிட்டவன் * மாற்றலரை
வீரங்கெடுத்த செங்கோற்கொல்லி காவலன் வில்லவர்கோன் *
சேரன் குலசேகரன் முடிவேந்தர்சிகாமணியே.

க - ஆந் திருமொழி - இருளிரியச் சுடர்மணிகள்.

ஸ்ரீரங்கநாதனது ஸேவையை ஆசம்ஸித்தல்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (பந்துவராளிராகம் - ஆதிதாளம்.)

↓↓ இருளிரியச்சுடர்மணிகளிமைக்கும்நெற்றி
இனத்துத்தியணிபணமாயிரங்களார்ந்த *
அரவரசப்பெருஞ்சோதியனந்தனென்னும்
அணிவிளங்குமுயர்வெள்ளையணையைமேவி *
திருவரங்கப்பெருநகருள்தெண்ணீர்ப்பொன்னி
திரைக்கையாலடிவருடப்பள்ளிகொள்ளும் *
கருமணியைக்கோமளத்தைக்கண்டுகொண்டு என்
கண்ணிணைகளென்றுகொலோகளிக்குமநாளே? (க)

† மணக்கால்நம்பி அருளிச்செய்ததெனக் கூறுவாருமுளர்.

↓↓ வாயோரீரைஞ்ஞூறு துதங்களார்ந்த
வளையுடம்பினழல்நாகமுமிழ்ந்தசெந்தீ *
வீயாதமலர்ச்சென்னிவிதானமேபோல்
மேன்மேலுமிகவெங்கும்பரந்ததன்கீழ் *
காயாம்பூமலர்ப்பிறங்கலன்னமாலைக்
கடியரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும் *
மாயோனை, மணத்தூணேபற்றிநின்று என்
வாயாரவென்றுகொலோவாழ்த்துநாளே? (௨)

எம்மாண்பினயன்நான்குநாவினாலும்
எடுத்தேத்தி ஈரிரண்டுமுகமுங்கொண்டு *
எம்மாடுமெழிற்கண்களெட்டினோடும்
தொழுதேத்தி இனிதிறைஞ்சநின்ற * செம்பொன்
அம்மான்தன்மலர்க்கமலக்கொப்பூழ்தோன்ற
அணியரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும் *
அம்மான்தனடியிணைக்கீழலர்களிட்டு அங்
கடியவரோடென்றுகொலோவணுகுநாளே? (௩)

மாவினைவாய்பிளந்துகந்தமாலை வேலை
வண்ணனைஎன்கண்ணனை * வன்குன்றமேந்தி
ஆவினையன்றுய்யக்கொண்டவாயரேற்றை
அமரர்கள்தந்தலைவனையந்தமிழினின்பப்
பாவினை * அவ்வடமொழியைப் பற்றற்றார்கள்
பயிலரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும் *
கோவினை, நாவுறவழுத்தியென்தன்கைகள்
கொய்ம்மலர்தூயென்றுகொலோகூப்புநாளே? (௪)

இணையில்லாவின்னிசையாழ்கெழுமி இன்பத்
தும்புருவும்நாரதனுமிறைஞ்சியேத்த *
துணையில்லாத்தொன்மறைநூல்தோத்திரத்தால்
தொன்மலர்க்கணயன்வணங்கியோவாதேத்த *
மணிமாடமாளிகைகள்மல்கு செல்வ
மதிளரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும் *
மணிவண்ணனம்மானைக்கண்டுகொண்டு என்
மலர்ச்சென்னியென்றுகொலோவணங்குநாளே? (௫)

அளிமலர்மேலயனரனிந்திரனோடு மனை
 அமரர்கள்தம்குழுவுமரம்பையரும் மற்றும் *
தெளிமதிசேர்முனிவர்கள்தம்குழுவும் முந்தித்
 திசைதிசையில்மலர்தூவிச்சென்றுசேரும் *
களிமலர்சேர்பொழிலரங்கத்துரகமேறிக்
 கண்வளரும்கடல்வண்ணர்கமலக்கண்ணும் *
ஒளிமதிசேர்திருமுகமும்கண்டுகொண்டு என்
 உள்ளமிகவென்றுகொலோவுருகும்நாளே ? (சு)

மறம்திகழும்மனமொழித்துவஞ்சமாற்றி
 † ஐம்புலன்களடக்கியிடர்ப்பாரத்துன்பம்
துறந்து * இருமுப்பொழுதேத்தியெல்லையில்லாத்
 தொன்னெறிக்கண் நிலைநின்றதொண்டரான *
அறம்திகழும்மனத்தவர்தம்கதியைப் பொன்னி
 யணியரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும் *
நிறம்திகழும்மாயோனைக், கண்டு என்கண்கள்
 நீர்மல்கவென்றுகொலோநிற்கும்நாளே ? (எ)

கோலார்ந்தநெடுஞ்சார்ங்கம்கூனற்சங்கம்
 கொலையாழிகொடுந்தண்டுகொற்றவொள்வாள் *
காலார்ந்தகதிக்கருடனென்னும் வென்றிக்
 கடும்பறவை யிவையனைத்தும்புறஞ்சூழ்காப்ப *
சேலார்ந்தநெடுங்கழனிசோலைசூழ்ந்த
 திருவரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும் *
மாலோனைக்,கண்டின்பக்கலவியெய்தி
 வல்வினையேனென்றுகொலோவாழும்நாளே ? (அ)

தூராதமனக்காதல்தொண்டர்தங்கள்
 குழாம்குழுமித் திருப்புகழ்கள்பலவும்பாடி *
ஆராதமனக்களிப்போடழுதகண்ணீர்
 மழைசோர நினைந்துருகியேத்தி * நாளும்
சீரார்ந்தமுழவோசைபரவைகாட்டும்
 திருவரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும் *
போராழியம்மானைக்,கண்டுதுள்ளிப்
 பூதலத்திலென்றுகொலோபுரளும்நாளே ? (கூ)

---

† 'வன்புலன்கள்' என்று சிலர்.

வன்பெருவானகமுய்யவமரருய்ய
மண்ணுய்யமண்ணுலகில்மனிசருய்ய *
துன்பமிகுதுயரகலஅயர்வொன்றில்லாச்
சுகம்வளரஅகமகிழும்தொண்டர்வாழ *
அன்பொடுதென்திசைநோக்கிப்பள்ளிகொள்ளும்
அணியரங்கன்திருமுற்றத்து * அடியார்தங்கள்
இன்பமிகுபெருங்குழுவுகண்டு யானும்
இசைந்துடனேயென்றுகொலோவிருக்குநாளே ? (க0)

திடர்விளங்குகரைப்பொன்னிநடுவுபாட்டுத்
திருவரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும் *
கடல்விளங்குகருமேனியம்மான்தன்னைக்,
கண்ணாரக்கண்டுகக்குங்காதல்தன்னால் *
குடைவிளங்குவிறல்தானைக்கொற்றவொள்வாள்
கூடலர்கோன்கொடைக்குலசேகரன்சொற்செய்த *
நடைவிளங்குதமிழ்மாலைபத்தும்வல்லார்
நலந்திகழ்நாரணனடிக்கீழ்நண்ணுவாரே. (கக)

அடிவரவு:—இருள் வாய எய்யாண்பின் யாவினை இணை அளி மறம் கோல் ஆராத வன்பெரு திடர் தேட்டு.

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்.

உ - ஆந் திருமொழி - தேட்டருந்திறல்.

அரங்கனடியாரது அடிமைத்திறத்தில் ஈடுபடுதல்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (மலகரி - ரூபகதாளம்.)

தேட்டருந்திறல்தேனினைத் தென்னரங்கனை * திருமாதுவாழ்
வாட்டமில்வனமாலைமார்வனைவாழ்த்தி மால்கொள்சிந்தையராய் *
ஆட்டமேவியலந்தழைத்து அயர்வெய்தும்மெய்யடியார்கள்தம் *
ஈட்டம்கண்டிடக்கூடுமேல் அதுகாணும்கண்பயனாவதே. (க)

தோடுலாமலர்மங்கை தோளிணைதோய்ந்ததும், * சுடர்வாளியால்
நீடுமாமரம்செற்றதும்நிரைமேய்த்ததும் இவையேநினைந்து *
ஆடிப்பாடிஅரங்கவோ ! என்றழைக்கும் தொண்டரடிப்பொடி
ஆடநாம்பெறில்* கங்கைநீர்குடைந்தாடும்வேட்கை யென்னாவதே? ()

ஏறடர்த்ததும்ஏனமாய்நிலங்கீண்டதும் முன்னிராமனாய் *
மாறடர்த்ததும்மண்ணளந்ததும் சொல்லிப்பாடி * வண்பொன்னிப்பே
ராறுபோல்வரும்கண்ணநீர்கொண்டு அரங்கன்கோயில்திருமுற்றம் *
சேறுசெய்தொண்டர்சேவடிச்செழுஞ்சேறு என்சென்னிக்கணிவனே.

தோய்த்ததண்தயிர்வெண்ணெய்பாலுடனுண்டலும் உடன்றாய்ச்சிகண்டு *
ஆர்த்ததோளுடையெம்பிரான் என்னரங்கனுக்கடியார்களாய் *
நாத்தழும்பெழநாரணாவென்றழைத்து மெய்தழும்பத்தொழு
தேத்தி * இன்புறும்தொண்டர்சேவடி ஏத்திவாழ்த்துமென்னெஞ்சமே.

பொய்சிலைக்குரலேற்றெருத்தமிறுத்துப் போரரவீர்த்தகோன் *
செய்சிலைச்சுடர்சூழொளித் திண்ணமாமதிள்தென்னரங்கனாம் *
மெய்சிலைக்கருமேகமொன்று தம்†நெஞ்சில்நின்றுதிகழப்போய் *
மெய்சிலிர்ப்பவர்தம்மையேநினைந்து என்மனம்மெய்சிலிர்க்குமே. (௫)

ஆதியந்தமனந்தமற்புதமான வானவர்தம்பிரான் *
பாதமாமலர்சூடும்பத்தியிலாத பாவிகளுமுய்ந்திட *
தீதில்நன்னெறிகாட்டி எங்கும்திரிந்தரங்கனெம்மானுக்கே *
காதல்செய்தொண்டர்க்கெப்பிறப்பிலும் காதல்செய்யுமென்னெஞ்சமே.

காரினம்புரைமேனிநற்கதிர் முத்தவெண்ணகைச்செய்யவாய் *
ஆரமார்வனரங்கனென்னும் அரும்பெருஞ்சுடரொன்றினை *
சேரும்நெஞ்சினராகிச் சேர்ந்துகசிந்திழிந்தகண்ணீர்களால் *
வாரநிற்பவர்தாளிணைக்கு ஒருவாரமாகுமென்னெஞ்சமே. (எ)

மாலையுற்றகடற்கிடந்தவன் வண்டுகிண்டுநறுந்துழாய் *
மாலையுற்றவரைப்பெருந்திருமார்வனை மலர்க்கண்ணனை *
மாலையுற்றெழுந்தாடிப்பாடித் திரிந்தரங்கனெம்மானுக்கே *
மாலையுற்றிடுந்தொண்டர்வாழ்வுக்கு மாலையுற்றதென்னெஞ்சமே. (அ)

மொய்த்துக்கண்பனிசோரமெய்கள்சிலிர்ப்ப ஏங்கியிளைத்துநின்று *
எய்த்துக்கும்பிட்டுநட்டமிட்டெழுந்து ஆடிப்பாடியிறைஞ்சி * என்
அத்தனச்சனரங்கனுக்கு அடியார்களாகி * அவனுக்கே
பித்தராமவர்பித்தரல்லர்கள் மற்றையார்முற்றும்பித்தரே. (௯)

↓↓ அல்லிமாமலர்மங்கைநாத னரங்கன்மெய்யடியார்கள்தம் *
எல்லையில்லடிமைத்திறத்தினில் என்றுமேவுமனத்தனாம் *
கொல்லிகாவலன்கூடல்நாயகன் கோழிக்கோன்குலசேகரன் *
சொல்லினின்தமிழ்மாலைவல்லவர் தொண்டர்தொண்டர்களாவரே. (௧௦)

அடிவரவு:—தேட்டு தோடு ஏறு தோய்த்த பொய் ஆதி காரினம் மாலை மொய்த்து அல்லி மெய்.

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்.

† 'நெஞ்சுள்' என்றும் பாடம்.

௩ - ஆந் திருமொழி - மெய்யில்வாழ்க்கையை.

ஆழ்வார் ரங்கநாதபக்தராய் உலகத்தாரோடு தாம்சேராமை.

கலிவிருத்தம். (ஸௌராஷ்ட்ராரகம் - அடதாளம்.)

↓↓ மெய்யில்வாழ்க்கையை மெய்யெனக்கொள்ளும் * இவ்
வையந்தன்னொடும் கூடுவதில்லையான் *
ஐயனே! அரங்கா!என்றழைக்கின்றேன் *
மையல்கொண்டொழிந்தேன் என்தன்மாலுக்கே. (க)

நூலினேரிடையார்திறத்தே நிற்கும் *
ஞாலந்தன்னொடும் கூடுவதில்லையான் *
ஆலியாஅழையா அரங்கா! என்று *
மாலெழுந்தொழிந்தேன் என்தன்மாலுக்கே. (உ)

மாரனார்வரிவெஞ்சிலைக் காட்செய்யும் *
பாரினாரொடும் கூடுவதில்லையான் *
ஆரமார்வன் அரங்கனனந்தன் * நல்
நாரணன் நரகாந்தகன்பித்தனே. (௩)

உண்டியேயுடையே உகந்தோடும் * இம்
மண்டலத்தொடும் கூடுவதில்லையான் *
அண்டவாணன் அரங்கன் * வன்பேய்முலை
உண்டவாயன்தன் உன்மத்தன்காண்மினே. (௪)

தீதில்நன்னெறிநிற்க அல்லாதுசெய் *
நீதியாரொடும் கூடுவதில்லையான் *
ஆதிஆயன் அரங்கன் * அந்தாமரைப்
பேதைமாமணவாளன்தன் பித்தனே. (௫)

எம்பரத்தரல்லாரொடும் கூடலன் *
உம்பர்வாழ்வை ஒன்றாகக்கருதிலன் *
தம்பிரானமரர்க்கு * அரங்கநகர்
எம்பிரானுக்கு எழுமையும்பித்தனே. (௬)

எத்திறத்திலும் யாரொடும்கூடும் * அச்
சித்தந்தன்னைத்தவிர்த்தனன் செங்கண்மால் *
அத்தனே! அரங்கா! என்றழைக்கின்றேன் *
பித்தனாயொழிந்தேன் எம்பிரானுக்கே. (௭)

பேயரே எனக்குயாவரும் * யானுமோர்
பேயனேஎவர்க்கும் இதுபேசியென்? *
ஆயனே! அரங்கா! என்றழைக்கின்றேன் *
பேயனாயொழிந்தேன் எம்பிரானுக்கே. (அ)

↓↓ அங்கையாழி அரங்கனடியிணை *
தங்குசிந்தைத் தனிப்பெரும்பித்தனாய் *
கொங்கர்கோன் குலசேகரன்சொன்னசொல் *
இங்குவல்லவர்க்கு ஏதமொன்றில்லையே. (கூ)

அடிவரவு:—மெய் நூல் மாரனார் உண்டி தீதில் எம்பரத்தர் எத்திறத்-
திலும் பேயரே அங்கை ஊன்.

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்.

ச - ஆந் திருமொழி - ஊனேறு.

ஆழ்வார் திருவேங்கடமலையிற்பிறத்தலை அவாவுதல்.

தரவுகொச்சகக்கலிப்பா. (தந்யாசிராகம் - திரிபுடை தாளம்.)

↓↓ ஊனேறுசெல்வத்து உடற்பிறவியான்வேண்டேன் *
ஆனேறேழ்வென்றான் அடிமைத்திறமல்லால் *
கூனேறுசங்கமிடத்தான்தன் வேங்கடத்து *
கோனேரிவாழும் குருகாய்ப்பிறப்பேனே. (க)

ஆனாதசெல்வத்து † அரம்பையர்கள்தற்சூழ *
வானாளும்செல்வமும் மண்ணரசும்யான்வேண்டேன் *
தேனார்பூஞ்சோலைத் திருவேங்கடச்சுனையில் *
மீனாய்ப்பிறக்கும் விதியுடையேனாவேனே. (உ)

பின்னிட்டசடையானும் பிரமனுமிந்திரனும் *
துன்னிட்டுப்புகலரிய வைகுந்தநீள்வாசல் *
மின்வட்டச்சுடராழி வேங்கடக்கோன்தானுமிழும் *
பொன்வட்டில்பிடித்து உடனேபுகப்பெறுவேனாவேனே. (ங)

ஒண்பவளவேலையுலவு தண்பாற்கடலுள் *
கண்துயிலும்மாயோன் கழலிணைகள்காண்பதற்கு *
பண்பகரும்வண்டினங்கள் பண்பாடும்வேங்கடத்து *
செண்பகமாய்நிற்கும் திருவுடையேனாவேனே. (ச)

---

† 'அரம்பையர் கடற்சூழ' என்றும் பிரிப்பர்.

கம்பமதயானைக் கழுத்தகத்தின்மேலிருந்து *
இன்பமரும்செல்வமும் இவ்வரசும்யான்வேண்டேன் *
எம்பெருமானீசன் எழில்வேங்கடமலைமேல் *
† தம்பகமாய்நிற்கும் தவமுடையேனாவேனே. (௫)

மின்னனையநுண்ணிடையார் உருப்பசியும்மேனகையும் *
அன்னவர்தம்பாடலொடும் ஆடலவையாதரியேன் *
தென்னவெனவண்டினங்கள் பண்பாடும்வேங்கடத்துள் *
அன்னனையபொற்குவடாம் அருந்தவத்தேனாவேனே. (௬)

வானாளும்மாமதிபோல் வெண்குடைக்கீழ் * மன்னவர்தம்
கோனாகிவீற்றிருந்து கொண்டாடும்செல்வறியேன் *
தேனார்பூஞ்சோலைத் திருவேங்கடமலைமேல் *
கானாறாய்ப்பாயும் கருத்துடையேனாவேனே. (௭)

பிறையேறுசடையானும் பிரமனுமிந்திரனும் *
முறையாயபெருவேள்விக் குறைமுடிப்பான் மறையானான் *
வெறியார்தண்சோலைத் திருவேங்கடமலைமேல் *
நெறியாய்க்கிடக்கும் நிலையுடையேனாவேனே. (௮)

↓↓ செடியாயவல்வினைகள் தீர்க்கும்திருமாலே! *
நெடியானே! வேங்கடவா! நின் கோயிலின் ‡ வாசல் *
அடியாரும்வானவரும் அரம்பையரும்கிடந்தியங்கும் *
படியாய்க்கிடந்து உன்பவளவாய்காண்பேனே. (௯)

உம்பருலகாண்டு ஒருகுடைக்கீழ் * உருப்பசிதன்
அம்பொற்கலையல்குல் பெற்றாலுமாதரியேன் *
செம்பவளவாயான் திருவேங்கடமென்னும் *
எம்பெருமான்பொன்மலைமேல் ஏதேனுமாவேனே. (௧௦)

↓↓ மன்னியதண்சாரல் வடவேங்கடத்தான்தன் *
பொன்னியலும்சேவடிகள்காண்பான் புரிந்திறைஞ்சி *
கொன்னவிலும்கூர்வேல் குலசேகரன்சொன்ன *
பன்னியநூல்தமிழ்வல்லார் பாங்காயபத்தர்களே. (௧௧)

அடிவரவு:—ஊன் ஆனாத பின்னிட்ட ஒண் கம்பம் மின் வான் பிறை செடி உம்பர் மன்னிய தரு.

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்.

† 'தம்பமாய்' என்றும் கூறுவர். ‡ 'வாயில்' என்றும் வழங்குவர்.

ரு - ஆந் திருமொழி - தருதுயரந்தடாயேல்.

† விற்றுவக்கோட்டம்மான்விஷயம்: ஆழ்வார் தமது அநந்யகதித்வத்தைத் தெரிவித்தல்.

தரவுகொச்சகக்கலிப்பா. (சங்கராபரணராகம் - ரூபகதாளம்.)

↓↓ தருதுயரம்தடாயேல் உன்சரணல்லாலசரணில்லை *
விரைகுழுவுமலர்ப்பொழில்சூழ் விற்றுவக்கோட்டம்மானே! *
அரிசினத்தாலீன்றதாய் அகற்றிடினும் * மற்றவள்தன்
அருள்நினைந்தேயழும் குழவியதுவேபோன்றிருந்தேனே. (க)

கண்டாரிகழ்வனவே காதலன்தான்செய்திடினும் *
கொண்டானையல்லால் அறியாக்குலமகள்போல் *
விண்தோய்மதிள்புடைசூழ் விற்றுவக்கோட்டம்மா! * நீ
கொண்டாளாயாகிலும் உன்குரைகழலேகூறுவனே. (உ)

மீன்நோக்கும்நீள்வயல்சூழ் விற்றுவக்கோட்டம்மா! * என்
பால்நோக்காயாகிலும் உன்பற்றல்லால்பற்றிலேன் *
தான்நோக்காது எத்துயரம்செய்திடினும் * தார்வேந்தன்
கோல்நோக்கிவாழும் குடிபோன்றிருந்தேனே. (௩)

வாளாலறுத்துச்சுடினும் மருத்துவன்பால் *
மாளாதகாதல் நோயாளன்போல் * மாயத்தால்
மீளாத்துயர்தரினும் விற்றுவக்கோட்டம்மா! * நீ
ஆளாவுனதருளே பார்ப்பனடியேனே. (௪)

வெங்கண்திண்களிறடர்த்தாய்! விற்றுவக்கோட்டம்மானே! *
எங்குப்போயுய்கேன்? உன்னிணையடியேயடையலல்லால் *
எங்கும்போய்க்கரைகாணாது எறிகடல்வாய்மீண்டேயும் *
வங்கத்தின்கூம்பேறும் மாப்பறவைபோன்றேனே. (ரு)

செந்தழலேவந்து அழலைச்செய்திடினும் * செங்கமலம்
அந்தரஞ்சேர்வெங்கதிரோற்கல்லால் அலராவால் *
வெந்துயர்வீட்டாவிடினும் விற்றுவக்கோட்டம்மா! * உன
அந்தமில்சீர்க்கல்லால் அகங்குழையமாட்டேனே. (௬)

எத்தனையும் ‡ வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள் *
மைத்தெழுந்தமாமுகிலே பார்த்திருக்கும் மற்றவைபோல *
மெய்த்துயர்வீட்டாவிடினும் விற்றுவக்கோட்டம்மா! * என்
சித்தமிகவுன்பாலே வைப்பனடியேனே. (௭)

† 'வித்துவக்கோடு' எனக் கூறுவாருமுளர். ‡ 'வான்வறந்த' என்றும் பாடம்

தொக்கிலங்குயாறெல்லாம் பரந்தோடி * தொடுகடலே
புக்கன்றிப்புறம்நிற்கமாட்டாத மற்றவைபோல் *
மிக்கிலங்குமுகில்நிறத்தாய்! விற்றுவக்கோட்டம்மா! * உன்
புக்கிலங்குசீரல்லால் புக்கிலன்காண்புண்ணியனே ! (௯)

நின்னையேதான்வேண்டி நீள்செல்வம்வேண்டாதான்
தன்னையே * தான்வேண்டும் செல்வம்போல், மாயத்தால் *
மின்னையேசேர்திகிரி விற்றுவக்கோட் + டம்மா! *
நின்னையேதான்வேண்டி நிற்பனடியேனே. (௧௦)

↓↓விற்றுவக்கோட்டம்மா! நீவேண்டாயேயாயிடினும் *
மற்றாரும்பற்றிலேனென்று அவனைத்தாள்நயந்த *
கொற்றவேல்தானைக் குலசேகரன்சொன்ன *
நற்றமிழ்பத்தும்வல்லார் நண்ணார்நரகமே. (௧௦)

அடிவரவு:—தரு கண்டார் மீன் வாளால் வெங்கண் செந்தழல் எத்தனை தொக்கு நின்னை விற்றுவக்கோடு ஏர்.

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்.

சு - ஆந் திருமொழி - ஏர்மலர்ப்பூங்குழல்.

ஆய்ச்சியர் ஊடி அமலனை எள்கியுரைத்தல்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (செஞ்சுருட்டிராகம் - ஆதிதாளம்.)

↓↓ ஏர்மலர்ப்பூங்குழலாயர்மாதர்
எனைப்பலருள்ளஇவ்வூரில் * உன்தன்
மாரவுதழுவுதற்காசையின்மையறிந்தறிந்தே
உன்தன்பொய்யைக்கேட்டு *
கூர்மழைபோற்பனிக்கூதலெய்திக்
கூசிநடுங்கியமுனையாற்றில் *
வார்மணற்குன்றில்புலரநின்றேன்
வாசுதேவா! உன்வரவுபார்த்தே. (௧)

கெண்டையொண்கண்மடவாளொருத்தி
கீழையகத்துத்தயிர்கடையக்
கண்டு * ஒல்லைநானும்கடைவனென்று
கள்ளவிழியைவிழித்துப்புக்கு *

+ 'அம்மானே' என்று சிலர்.

வண்டமர்பூங்குழல்தாழ்ந்துலாவ
வாண்முகம்வேர்ப்பச்செவ்வாய்துடிப்ப *
தண்தயிர்நீகடைந்திட்டவண்ணம்
தாமோதரா! மெய்யறிவன்நானே. (உ)

கருமலர்க்கூந்தலொருத்திதன்னைக்
கடைக்கணித்து * ஆங்கேயொருத்திதன்பால்
மருவிமனம்வைத்துமற்றொருத்திக்குரைத்து
ஒருபேதைக்குப்பொய்குறித்து *
புரிகுழல்மங்கையொருத்திதன்னைப்
புணர்தி அவளுக்கும்மெய்யனல்லை *
மருதிறுத்தாய் ! உன்வளர்த்தியூடே
வளர்கின்றதாலுன்தன்மாயைதானே. (ங)

தாய்முலைப்பாலிலமுதிருக்கத்
தவழ்ந்துதளர்நடையிட்டுச்சென்று *
பேய்முலைவாய்வைத்துநஞ்சையுண்டு
பித்தனென்றேபிறரேசநின்றாய் *
ஆய்மிகுகாதலோடியானிருப்ப
யான்விடவந்தஎன்தூதியோடே *
நீமிகுபோகத்தைநன்குகந்தாய்
அதுவுமுன்கோரம்புக்கேற்குமன்றே. (ச)

மின்னொத்தநுண்ணிடையாளைக்கொண்டு
வீங்கிருள்வாயென்தன்வீதியூடே *
பொன்னொத்தவாடைகுக்கூடலிட்டுப்
போகின்றபோதுநான்கண்டுநின்றேன் *
கண்ணுற்றவளைநீகண்ணாலிட்டுக்
கைவிளிக்கின்றதும்கண்டேநின்றேன் *
என்னுக்கவளைவிட்டிங்குவந்தாய் ?
இன்னமங்கேநடநம்பி! நீயே. (ரு)

மற்பொருதோளுடைவாசுதேவா !
வல்வினையேன்துயில்கொண்டவாறே *
இற்றையிரவிடையேமத்தென்னை
இன்னணைமேலிட்டகன்றுநீபோய் *

அற்றையிரவுமோர்பிற்றைநாளும்
அரிவையரோடுமணைந்துவந்தாய் *
எற்றுக்குநீயென்மருங்கில்வந்தாய் ?
எம்பெருமான்! நீயெழுந்தருளே. (சு)

பையரவின்னணைப்பள்ளியினாய் !
பண்டையோமல்லோம்நாம் * நீயுகக்கும்
மையரியொண்கண்ணினாருமல்லோம்
வைகியெம்சேரிவரவொழிநீ *
செய்யவுடையும்திருமுகமும்
செங்கனிவாயும்குழலும்கண்டு *
பொய்யொருநாள்பட்டதேயமையும்
புள்ளுவம்பேசாதேபோகுநம்பீ ! (எ)

என்னைவருகவெனக்குறித்திட்டு
இனமலர்முல்லையின்பந்தர்நீழல் *
மன்னியவளைப்புணரப்புக்கு
மற்றென்னைக்கண்டுழறாநெகிழ்ந்தாய் *
பொன்னிறவாடையைக்கையில்தாங்கிப்
பொய்யச்சங்காட்டிநீபோதியேலும் *
இன்னமென்கையகத்தீங்கொருநாள்வருதியேல்
என்சினம்தீர்வன்நானே. (அ)

மங்கலநல்வனமாலைமார்விலிலங்க
மயில்தழைப்பீலிசூடி *
பொங்கிளவாடையரையிற்சாத்திப்
பூங்கொத்துக்காதிற்புணரப்பெய்து *
கொங்குநறுங்குழலார்களோடு
குழைந்துகுழலினிதூதிவந்தாய் *
எங்களுக்கேயொருநாள்வந்தூத
உன்குழலின்னிசைபோதராதே. (கூ)

↓↓ அல்லிமலர்த்திருமங்கைகேள்வன்தன்னை
நயந்திளவாய்ச்சிமார்கள் *
எல்லிப்பொழுதினிலேமத்தூடி
எள்கியுரைத்தவுரையதனை *

கொல்லிநகர்க்கிறைகூடற்கோமான்
குலசேகரனின்னிசையில்மேவி *
சொல்லியவின்தமிழ்மாலைபத்தும்
சொல்லவல்லார்க்கில்லைதுன்பந்தானே. (கo)

அடிவரவு:—ஏர் தெண்டை கரு தாய் மின் மற்பொரு பை என்னை மங்கலம் அல்லி ஆலை.

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்.

எ-ஆந் திருமொழி - ஆலைநீள்கரும்பு.

கண்ணனது பாலசேஷ்டிதங்களைக் காணப்பெறாத தேவகியின் புலம்பல்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (கேதாரகௌளராகம் - அடதாளம்.)

↓↓ ஆலைநீள்கரும்பன்னவன்தாலோ
அம்புயத்தடங்கண்ணினன்தாலோ *
வேலைநீர்நிறத்தன்னவன்தாலோ
வேழப்போதகமன்னவன்தாலோ *
ஏலவார்குழலென்மகன்தாலோ
என்றென்றுன்னைஎன்வாயிடைநிறைய *
தாலொலித்திடும்திருவினையில்லாத்
தாயரிற்கடையாயினதாயே. (க)

வடிக்கொளஞ்சனமெழுதுசெம்மலர்க்கண் மருவி
மேலினிதொன்றினைநோக்கி *
முடக்கிச்சேவடிமலர்ச்சிறுகருந்தாள்
பொலியும்நீர்முகிற்குழவியேபோல *
அடக்கியாரச்செஞ்சிறுவிரலனைத்தும்
அங்கையோடணைந்தானையிற்கிடந்த *
கிடக்கைகண்டிடப்பெற்றிலனந்தோ!
கேசவா! கெடுவேன்கெடுவேனே. (உ)

முந்தைநன்முறையன்புடைமகளிர்
முறைமுறைதந்தம்குறங்கிடையிருத்தி *
எந்தையே! என்தன்குலப்பெருஞ்சுடரே!
எழுமுகில்கணத்தெழில்கவரேறே! *

உந்தையாவனென்றுரைப்ப நின்செங்கேழ்
விரலினும்கடைக்கண்ணினும்காட்ட *
நந்தன்பெற்றனன் நல்வினையில்லா
நங்கள்கோன்வசுதேவன்பெற்றிலனே. (௪)

களிநிலாவெழில்மதிபுரைமுகமும்
கண்ணனே! திண்கைமார்வும்திண்டோளும் *
தளிர்மலர்க்கருங்குழல்பிறையதுவும்
தடங்கொள்தாமரைக்கண்களும்பொலிந்த *
இளமையின்பத்தைஇன்றென்தன்கண்ணால்
பருகுவேற்குஇவள்தாயெனநினைந்த *
அளவில்பிள்ளைமையின்பத்தையிழந்த
பாவியேனெனதாவிநில்லாதே. (௫)

மருவுநின்திருநெற்றியில்சுட்டியசைதர
மணிவாயிடைமுத்தம்
தருதலும் * உன்தன்தாதையைப்போலும்
வடிவுகண்டுகொண்டு உள்ளமுள்குளிர *
விரலைச்செஞ்சிறுவாயிடைச்சேர்த்து
வெகுளியாய்நின்றுரைக்கும்அவ்வுரையும் *
திருவிலேனொன்றும்பெற்றிலேன் எல்லாம்
தெய்வநங்கையசோதைபெற்றாளே. (௬)

தண்ணந்தாமரைக்கண்ணனே! கண்ணா!
தவழ்ந்தெழுந்துதளர்ந்ததோர்நடையால் *
மண்ணிற்செம்பொடியாடிவந்து என்தன்
மார்வில்மன்னிடப்பெற்றிலேனந்தோ! *
வண்ணச்செஞ்சிறுகைவிரலனைத்தும்
வாரிவாய்க்கொண்டஅடிசிலின்மிச்சில் *
உண்ணப்பெற்றிலேன் ஓ! கொடுவினையேன்
என்னையென்செய்யப்பெற்றதெம்மோயே? (௭)

குழகனே! என்தன்கோமளப்பிள்ளாய்!
கோவிந்தா! என்குடங்கையில்மன்னி *
ஒழுகுபேரெழிலிளஞ்சிறுதளிர்போல
ஒருகையாலொருமுலைமுகம்நெருடா *

மழலைமென்னகையிடையிடையருளா
வாயிலேமுலையிருக்கவென்முகத்தே *
எழில்கொள்நின்திருக்கண்ணிணைநோக்கந்
தன்னையும் இழந்தேனிழந்தேனே. (எ)

முழுதும்வெண்ணெயளைந்துதொட்டுண்ணும்
முகிழிளஞ்சிறுத்தாமரைக்கையும் *
எழில்கொள்தாம்புகொண்டடிப்பதற்கெள்கு
நிலையும் வெண்தயிர்தோய்ந்தசெவ்வாயும் *
அழுகையுமஞ்சிநோக்குநந்நோக்கும்
அணிகொள்செஞ்சிறுவாய்நெளிப்பதுவும் *
தொழுகையும்இவைகண்டவசோதை
தொல்லையின்பத்திறுதிகண்டாளே. (அ)

குன்றினாற்குடைகவித்ததும் கோலக்
குரவைகோத்ததும்குடமாட்டும் *
கன்றினால்விளவெறிந்ததும் காலால்
காளியன்தலைமிதித்ததும்முதலா *
வென்றிசேர்பிள்ளைநல்விளையாட்டமனைத்திலும்
அங்கென்னுள்ளமுள்குளிர *
ஒன்றும்கண்டிடப்பெற்றிலேனடியேன்
காணுமாறினியுண்டெனிலருளே. (கூ)

வஞ்சமேவியநெஞ்சுடைப்பேய்ச்சி
வரண்டுநார்நரம்பெழக்கரிந்துக்க *
நஞ்சமார்தருசுழிமுலையந்தோ !
சுவைத்துநீயருள்செய்துவளர்ந்தாய் *
கஞ்சன்நாள்கவர்கருமுகிலெந்தாய் !
கடைப்பட்டேன்வெறிதேமுலைசுமந்து *
தஞ்சமேலொன்றிலேனுய்ந்திருந்தேன்
தக்கதேநல்லதாயைப்பெற்றாயே. (கO)

↓↓ மல்லைமாநகர்க்கிறையவன்தன்னை
வான்செலுத்திவந் † தீங்கணைமாயத்து *
எல்லையில்பிள்ளைசெய்வனகாணாத்
தெய்வத்தேவகிபுலம்பியபுலம்பல் *

† 'ஈங்ஙனமாயத்து' என்று சிலர்.

கொல்லிகாவலன்மாலடிமுடிமேல்
கோலமாங்குலசேகரன்சொன்ன *
நல்லிசைத்தமிழ்மாலைவல்லார்கள்
நண்ணுவாரொல்லைநாரணனுலகே. (கக)

அடிவரவு:—ஆலை வடி முந்தை களி மருவு தண்ணம் குழகன் முழுதும் குன்றினால் வஞ்சம் மல்லை மன்னு.

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்.

அ - ஆந் திருமொழி - மன்னுபுகழ்.

சக்ரவர்த்தித்திருமகனைக் கௌசலையார் தாலாட்டும் பாசுரம்.

தரவுகொச்சகக்கலிப்பா. (நீலாம்புரிராகம் - திரிபுடைதாளம்.)

⁂ மன்னுபுகழ்க்கௌசலைதன் மணிவயிறுவாய்த்தவனே ! *
தென்னிலங்கைக்கோன்முடிகள் சிந்துவித்தாய் ! * செம்பொன்சேர்
கன்னிநன்மாமதிள்புடைசூழ் கணபுரத்தென் கருமணியே ! *
என்னுடையவின்னமுதே ! இராகவனே ! தாலேலோ. (க)

புண்டரிகமலரதன்மேல் புவனியெல்லாம்படைத்தவனே ! *
திண்திறலாள்தாடகைதன் உரமுருவச்சிலைவளைத்தாய் ! *
கண்டவர்தம்மனம்வழங்கும் கணபுரத்தென்கருமணியே !
எண்திசையுமாளுடையாய் ! இராகவனே ! தாலேலோ. (உ)

கொங்குமலிகருங்குழலாள் கௌசலைதன்குலமதலாய் ! *
தங்குபெரும்புகழ்ச்சனகன் திருமருகா ! தாசரதீ ! *
கங்கையிலும்தீர்த்தமலி கணபுரத்தென்கருமணியே ! *
எங்கள்குலத்தின்னமுதே ! இராகவனே ! தாலேலோ. (௩)

தாமரைமேலயனவனைப் படைத்தவனே ! * தயரதன்தன்
மாமதலாய் ! மைதிலிதன் மணவாளா ! * வண்டினங்கள்
காமரங்களிசைபாடும் கணபுரத்தென்கருமணியே ! *
† ஏமருவும்சிலைவலவா ! இராகவனே ! தாலேலோ. (௪)

பாராளும்படர்செல்வம் பரதநம்பிக்கேயருளி *
ஆராவன்பிளையவனோடு அருங்கானமடைந்தவனே ! *
சீராளும்வரைமார்பா! திருக்கண்ணபுரத்தரசே ! *
‡ தாராளும்நீண்முடி என்தாசரதீ ! தாலேலோ. (௫)

† ஏமரு வெஞ்சிலை' என்பதும் பாடம். ‡ 'தாரார்ந்' என்பதும் பாடம்.

சுற்றமெல்லாம்பின்தொடரத் தொல்கானமடைந்தவனே! *
அற்றவர்கட்கருமருந்தே! அயோத்திநகர்க்கதிபதியே! *
கற்றவர்கள்தாம்வாழும் கணபுரத்தென்கருமணியே! *
சிற்றவைதன்சொற்கொண்ட சீராமா! தாலேலோ. (சு)

ஆலினிலைப்பாலகனாய் அன்றுலகமுண்டவனே! *
வாலியைக்கொன்று அரசு இளையவானரத்துக்களித்தவனே! *
காலின்மணிகரையலைக்கும் கணபுரத்தென்கருமணியே! *
ஆலிநகர்க்கதிபதியே! அயோத்திமனே! தாலேலோ. (எ)

↓↓ மலையதனாலணைகட்டி மதிளிலங்கையழித்தவனே! *
அலைகடலைக்கடைந்து அமரர்க்கமுதருளிச்செய்தவனே! *
கலைவல்லவர்தாம்வாழும் கணபுரத்தென்கருமணியே! *
சிலைவலவா! சேவகனே! சீராமா! தாலேலோ. (அ)

தளையவிழும்நறுங்குஞ்சித் தயரதன்தன்குலமதலாய்! *
வளையவொருசிலையதனால் மதிளிலங்கையழித்தவனே! *
களைகழுநீர்மருங்கலரும் கணபுரத்தென்கருமணியே! *
இளையவர்கட்கருளுடையாய்! இராகவனே! தாலேலோ. (கூ)

↓↓ தேவரையுமசுரரையும் திசைகளையும்படைத்தவனே! *
யாவரும்வந்தடிவணங்க அரங்கநகர்த்துயின்றவனே! *
காவிரிநல்நதிபாயும் கணபுரத்தென்கருமணியே! *
ஏவரிவெஞ்சிலைவலவா! இராகவனே! தாலேலோ. (க0)

↓↓ கன்னிநன்மாமதிள்புடைசூழ் கணபுரத்தென்காகுத்தன்
தன்னடிமேல் * தாலேலோவென்றுரைத்த தமிழ்மாலை *
கொல்நவிலும்வேல்வலவன் குடைக்குலசேகரன்சொன்ன *
பன்னியநூல்பத்தும்வல்லார் பாங்காயபத்தர்களே. (கக)

அடிவரவு:—மன்னு புண்டரிகம் கொங்கு தாமரை பாரா சுற்றம் ஆலின் மலை தளை தேவரை கன்னி வன்தாள்.

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்.

கூ - ஆந் திருமொழி - வன்தாளினிணை.

தனயன் கான்புகத் தசரதன் புலம்புதல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (காம்போதிராகம் - ஆதிதாளம்.)

↓↓ வன்தாளினிணைவணங்கிவளநகரம்
தொழுதேத்த மன்னனாவான்
நின்றாயை * அரியணைமேலிருந்தாயை
நெடுங்கானம்படரப்போகு
வென்றாள் * எம்மிராமாவோ !
உனைப்பயந்தகைகேசிதன்சொற்கேட்டு *
நன்றாகநானிலத்தையாள்வித்தேன்
நன்மகனே ! உன்னைநானே. (க)

வெவ்வாயேன்வெவ்வுரைகேட்டு இருநிலத்தை
வேண்டாதேவிரைந்து * வென்றி
மைவாயகளிறொழிந்துதேரொழிந்து
மாவொழிந்து வனமேமேவி *
நெய்வாயவேல்நெடுங்கண்நேரிழையும்
இளங்கோவும்பின்புபோக *
எவ்வாறுநடந்தனை? எம்மிராமாவோ !
எம்பெருமான் ! என்செய்கேனே ? (உ)

கொல்லணைவேல்வரிநெடுங்கண் கௌசலைதன்
குலமதலாய் ! * குனிவில்லேந்தும்
மல்லணைந்தவரைத்தோளா ! வல்வினையேன்
மனமுருக்கும்வகையேகற்றாய் *
மெல்லணைமேல்முன்துயின்றாய்
இன்றினிப்போய்வியன்கானமரத்தின்நீழல் *
கல்லணைமேல்கண்டுயிலக்கற்றனையோ ?
காகுத்தா ! கரியகோவே ! (ங)

வாபோகுவாஇன்னம்வந்து
ஒருகால்கண்டுபோ, மலராள்கூந்தல் *
வேய்போலுமெழில்தோளிதன்பொருட்டா
விடையோன்தன்வில்லைச்செற்றாய் ! *

மாபோகுநெடுங்கானம் வல்வினையேன்
மனமுருக்கும்மகனே ! * இன்று
நீபோகஎன்னெஞ்சம் இருபிளவாய்ப்
போகாதேநிற்குமாறே ! (௪)

பொருந்தார்கைவேல்நுதிபோல்
பரல்பாய † மெல்லடிக்கள்குருதிசோர *
விரும்பாதகான்விரும்பிவெயிலுறைப்ப
வெம்பசிநோய்கூர * இன்று
பெரும்பாவியேன்மகனே ! போகின்றாய்
கேகயர்கோன்மகளாய்ப்பெற்ற *
அரும்பாவிசொற்கேட்டஅருவினையேன்
என்செய்கேன் ? அந்தோ ! யானே. (௫)

அம்மாவென்றுகந்தழைக்கும் ஆர்வச்சொல்
கேளாதே * அணிசேர்மார்வம்
என்மார்வத்திடையழுந்தத் தழுவாதே
‡ முழுசாதேமோவாதுச்சி *
கைம்மாவின்நடையன்னமென்னடையும்
கமலம்போல்முகமும்காணாது *
எம்மானையென்மகனையிழந்திட்ட
இழிதகையேனிருக்கின்றேனே. (௬)

பூமருவுநறுங்குஞ்சிபுன்சடையாப்புனைந்து
பூந்துகில்சேரல்குல் *
காமரெழில்விழலுடுத்துக் கலனணியாது
அங்கங்களழகுமாறி *
ஏமருதோளென்புதல்வன் யானின்று
செலத்தக்கவனம்தான்சேர்தல் *
தூமறையீர் ! இதுதகவோ ? சுமந்திரனே !
வசிட்டனே ! சொல்லீர்நீரே. (௭)

பொன்பெற்றாரெழில்வேதப்புதல்வனையும்
தம்பியையும் பூவைபோலும் *
மின்பற்றாநுண்மருங்குல்மெல்லியலென்
மருகியையும் வனத்திற்போக்கி *

† 'மெல்லடிக்கண்' என்பதும் பாடம். ‡ 'மூழுவாதே' என்று கூறுவாருமுளர்

நின்பற்றாநின்மகன்மேல்பழிவிளைத்திட்டு
என்னையும்நீள்வானில்போக்க *
என்பெற்றாய்? கைகேசி! இருநிலத்தில்
இனிதாகவிருக்கின்றாயே. (அ)

முன்னொருநாள்மழுவாளிசிலைவாங்கி
அவன்தவத்தைமுற்றும்செற்றாய் *
உன்னையுமுன்னருமையையுமுன்மோயின்
வருத்தமும் ஒன்றாகக்கொள்ளாது *
என்னையுமென்மெய்யுரையும்மெய்யாகக்
கொண்டு வனம்புக்கவெந்தாய்! *
நின்னையேமகனாகப்பெறப்பெறுவேன்
ஏழ்பிறப்பும்நெடுந்தோள்வேந்தே! (கூ)

தேனகுமாமலர்க்கூந்தல்கௌசலையும்
சுமித்திரையும்சிந்தைநோவ *
கூனுருவிற்கொடுந்தொழுத்தைசொற்கேட்ட
கொடியவள் தன்சொற்கொண்டு * இன்று
கானகமேமிகவிரும்பி நீதுறந்த
வளநகரைத்துறந்து * நானும்
வானகமேமிகவிரும்பிப்போகின்றேன்
மனுகுலத்தார் தங்கள்கோவே! (கo)

↓↓ ஏரார்ந்தகருநெடுமாலிராமனாய்
வனம்புக்கவதனுக்காற்றா *
தாரார்ந்ததடவரைத்தோள்தயரதன்தான்
புலம்பிய அப்புலம்பல்தன்னை *
கூரார்ந்தவேல்வலவன்கோழியர்கோன்
குடைக்குலசேகரன்சொற்செய்த *
சீரார்ந்ததமிழ்மாலையிவைவல்லார்
தீநெறிக்கண்செல்லார்தாமே. (கக)

அடிவரவு:—வன்தாள் வெவ்வாயேன் கொல்லணை வாபோகு பொருந்தார் அம்மா பூ பொன் முன் தேன் ஏரார்ந்த அங்கண்.

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்.

௰ - ஆந் திருமொழி - அங்கணெடுமதிள்.

ஸ்ரீராமாயண கதைச்சுருக்கம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (கல்யாணிராகம் - ஆதிதாளம்.)

↓↓ அங்கணெடுமதிள்புடைசூழயோத்தியென்னும்
அணிநகரத்துலகனைத்தும்விளக்குஞ்சோதி *
வெங்கதிரோன்குலத்துக்கோர்விளக்காய்த்தோன்றி
விண்முழுதுமுயக்கொண்டவீரன்தன்னை *
செங்கணெடுங்கருமுகிலையிராமன்தன்னைத்
தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
எங்கள்தனிமுதல்வனையெம்பெருமான்தன்னை
என்றுகொலோ? கண்குளிரக்காணும்நாளே. (௧)

வந்தெதிர்ந்ததாடகைதனுரத்தைக்கீறி
வருகுருதிபொழிதரவன்கணையொன்றேவி *
மந்திரங்கொள்மறைமுனிவன்வேள்விகாத்து
வல்லரக்கருயிருண்டமைந்தன்காண்மின் *
செந்தளிர்வாய்மலர்நகைசேர்செழுந்தண்சோலைத்
தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
அந்தணர்களொருமூவாயிரவரேத்த
அணிமணியாசனத்திருந்தஅம்மான்தானே. (௨)

செவ்வரிநற்கருநெடுங்கண்சீதைக்காகிச்
சினவிடையோன்சிலையிறுத்துமழுவாளேந்தி *
வெவ்வரிநற்சிலைவாங்கிவென்றிகொண்டு
வேல்வேந்தர்பகைதடிந்தவீரன்தன்னை *
தெவ்வரஞ்சுநெடும்புரிசையுயர்ந்தபாங்கர்த்
தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
எவ்வரிவெஞ்சிலைத்தடக்கையிராமன்தன்னை
இறைஞ்சுவாரிணையடியேயிறைஞ்சினேனே. (௩)

தொத்தலர்பூஞ்சுரிகுழற்கைகேசிசொல்லால்
தொன்னகரந்துறந்து * துறைக்கங்கைதன்னைப்
பத்தியுடைக்குகன்கடத்தவனம்போய்ப்புக்குப்
பரதனுக்குப்பாதுகமுமரசுமீந்து *

சித்திரகூடத்திருந்தான் தன்னை இன்று
　　தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
எத்தனையுங்கண்குளிரக்காணப்பெற்ற
　　இருநிலத்தார்க்கு இமையவர்நேரொவ்வார்தாமே. (௪)

வலிவணக்குவரைநெடுந்தோள் † விராதைக்கொன்று
　　வண்டமிழ்மாமுனிகொடுத்தவரிவில்வாங்கி *
கலைவணக்குநோக்கரக்கிமூக்கைநீக்கிக்
　　கரனோடுதூடணன்தனுயிரைவாங்கி *
சிலைவணக்கிமான்மறியவெய்தான் தன்னைத்
　　தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
தலைவணக்கிக்கைகூப்பியேத்தவல்லார்
　　திரிதலால் தவமுடைத்துத் ‡ தரணிதானே. (௫)

தனமருவுவைதேகிபிரியலுற்றுத்
　　தளர்வெய்திச்சடாயுவைவைகுந்தத்தேற்றி *
வனமருவுகவியரசன்காதல்கொண்டு
　　வாலியைக்கொன்றிலங்கைநகரரக்கர்கோமான் *
சினமடங்கமாருதியாற்சுடுவித்தானைத்
　　தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
இனிதமர்ந்தவம்மானைஇராமன்தன்னை
　　ஏத்துவாரிணையடியேயேத்தினேனே. (௬)

குரைகடலையடலம்பால்மறுகவெய்து
　　குலைகட்டிமறுகரையையதனாலேறி *
எரிநெடுவேலரக்கரொடுமிலங்கைவேந்தன்
　　இன்னுயிர்கொண்டவன்தம்பிக்கரசுமீந்து *
திருமகளோடினிதமர்ந்தசெல்வன்தன்னைத்
　　தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
அரசமர்ந்தானடிசூடுமரசையல்லால்
　　அரசாகவெண்ணேன்மற்றரசுதானே. (௭)

அம்பொனெடுமணிமாடவயோத்தியெய்தி
　　அரசெய்தி அகத்தியன்வாய்த்தான்முன்கொன்றான்
தன் * பெருந்தொல்கதைகேட்டுமிதிலைச்செல்வி
　　உலகுய்யத்திருவயிறுவாய்த்தமக்கள் *

---

† 'விராதற்கொன்று' என்று சிலர். ‡ 'இத்தாரணி' என்பதும் பாடம்.

செம்பவளத்திரள்வாய்த்தன்சரிதைகேட்டான்
 தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
எம்பெருமான் தன்சரிதைசெவியால்கண்ணால்
 பருகுவோம் இன்னமுதம் † மதியோமன்றே. (அ)

செறிதவச்சம்புகன் தன்னைச்சென்றுகொன்று
 செழுமறையோனுயிர்மீட்டு * தவத்தோனீந்த
நிறைமணிப்பூணணியுங்கொண்டுஇலவணன் தன்னைத்
 தம்பியால்வானேற்றிமுனிவன்வேண்ட *
திறல்விளங்குமிலக்குமனைப்பிரிந்தான் தன்னைத்
 தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
உறைவானை * மறவாதவுள்ளந்தன்னை
 யுடையோம் மற்றுறுதுயர ‡ மடையோமன்றே. (கூ)

↓↓ அன்றுசராசரங்களைவைகுந்தத்தேற்றி
 அடலரவப்பகையேறியசுரர்தம்மை
வென்று * இலங்குமணிநெடுந்தோள்நான்கும்தோன்ற
 விண்முழுதுமெதிர்வரத்தன் தாமமேவி *
சென்றினிதுவீற்றிருந்த அம்மான் தன்னைத்
 தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
என்றும்நின்றானவனிவனென்றேத்தி நாளு
 மிறைஞ்சுமினோ எப்பொழுதும்தொண்டீர் ! நீரே. (க௦)

↓↓ தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
 திறல்விளங்குமாருதியோடமர்ந்தான் தன்னை *
எல்லையில்சீர்த்தயரதன் தன் மகனாய்த்தோன்றிற்று
 அதுமுதலாத் தன்னுலகம்புக்கதீறா *
கொல்லியலும்படைத்தானைக்கொற்றவொள்வாள்
 கோழியர்கோன்குடைக்குலசேகரன்சொற்செய்த *
நல்லியலின் தமிழ்மாலைபத்தும்வல்லார்
 நலந்திகழ்நாரணனடிக்கீழ்நண்ணுவாரே. (கக)

அடிவரவு:—அங்கண் வந்து செவ்வரி தொத்து வலி தனம் குறை அம்பொன் செறி அன்று தில்லை பூநிலாய.

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்.

ஆக, பாசுரம் - 105

பெருமாள்திருமொழி ஸம்பூர்ணம்.

† 'மதியோம் ஒன்றே' என்பதும், 'மதியோம் இன்றே' என்பதும் பாடம்.
‡ 'அடையோம்இன்றே' என்பதும் பாடம்.

திருமழிசையாழ்வார் வைபவம்.

𑌮𑌘𑌾𑌯𑌾𑌂𑌮𑌕𑌰𑍇𑌮𑌾𑌸𑍇𑌚𑌕𑍍𑌰𑌾𑌂𑌶𑌂𑌭𑌾𑌰𑍍𑌗𑌵𑍋𑌦𑍍𑌭𑌵𑌂 ।
𑌮𑌹𑍀𑌸𑌾𑌰𑌪𑍁𑌰𑌾𑌧𑍀𑌶𑌂𑌭𑌕𑍍𑌤𑌿𑌸𑌾𑌰𑌮𑌹𑌂𑌭𑌜𑍇 ॥

మఘాయాం మకరే మాసే చక్రాంశం భార్గవోద్భవం ।
మహీసారపురాధీశం భక్తిసారమ హంభజే ॥

மகாயாம்மகரேமாஸே சக்ராம்ஸம் பார்க்கவோத்பவம்-
மஹீஸாரபுராதீஸம் பக்திஸாரமஹம்பஜே.

முன்னொருகாலத்தில், அத்திரி வசிஷ்டர் பிருகு பார்க்கவர் புலஸ்தியர் அங்கிரசு முதலிய பிரமவிருடிகள் பலரும் சத்தியலோகத்தைச்சார்ந்து அங்குத் தலைமைபூண்டு வீற்றிருக்கின்ற பிரமதேவனைத் திருவடிதொழுது கூப்பிய கையராய் அடியில்வருமாறு கூறலுற்றனர்:—'இக பர மோக்ஷமாகிற மூன்றிடங்களின் பேற்றையும் பெறுதற்கு எற்ற முயற்சி செய்யத்தக்க தலமாக விருத்தலால் அனைத்துலகங்களுள்ளுஞ் சிறந்ததான பூலோகத்திலே சிலாக்கிய தலமான க்ஷேத்திரம் இன்னதென்று தெரிந்து ஆங்குச்சென்று பெருந்தவமியற்றக் கருதி இப்பொழுது ஈங்குவந்த எங்களுக்கு அத்தகைய திவ்விய ஸ்தானம் இன்னதென்று துணிந்து உரைத்தருளவேண்டும்' எனவேண்ட, அவ்வேண்டுகோளுக்கு இரங்கிய திரிபுவன கர்த்தாவாகிய சதுராநநர் உடனே தேவசிற்பியான விசுவகர்மனை வருவித்து, 'இம்முனிவர்கள் காணத் துலாக்கோல் நாட்டி அதன் ஒருதட்டில் ஐயபதுகோடி யோசனை விஸ்தீர்ணமான பூமிமுழுவதையும், மற்றொருதட்டில் திருமழிசை யென்னும் புண்ணியக்ஷேத்திர மாத்திரத்தையும் வைத்து நிறுப்பாய்' என்று பணிக்க, அங்ஙனம் அவன் செய்தவளவிலே, மண்ணுலகமுழுவதையும் நாட்டிய தட்டு இலேசுபட்டு மேலோங்கி நிற்க, மழிசைப்பதியை யிட்ட தட்டு கனம்பெற்றுத் தாழ்ந்து

அவ்வேறுபாட்டைப பிதாமகக்கடவுள் அத்தபோதனர்க்கு நன்கு எடுத்துக்காட்டி அந்த மழிசைப்பதிக்கு மஹீஸாரக்ஷேத்ரமென்று காரணப்பெயர் கூறி அதிற்போயிருந்து தவம்புரிந்து உயர்கதிபுகுமாறு அநுமதி தந்து அவர்களை அனுப்பினர்.

அவ்வண்ணமே அம்முனிபுங்கவர்கள் அவ்விடத்தை யடைந்து ஐம்பொறி யடக்கி அருந்தவம் புரிந்தனர். அவர்களில் பார்க்கவரென்கிற முனிச்சிரேஷ்டர் தீர்க்கசத்திரமென்ற பெருவேள்வியைச் செய்து அதனால் வாசுதேவனை ஆராதித்து அதன்பின்னர் அவ்வரவணைச் செல்வனையே குறித்துப் பெருந்தவமியற்றுகையில், அதனைக்கண்டு அழுக்காறுகொண்ட தேவர்கள் அத்தவ

வொழுக்கத்தை யழிக்குமாறு அரம்பை மேனகை ஊர்வசி திலோத்தமை முதலிய அப்ஸரஸ் ஸ்திரீகளநேகரை ஏவினார்கள். அவ்வரம்பையர் பலர் வந்து பலவாறு முயன்றுபார்த்தும், எம்பெருமானது சரணகமலத்தில் அழுந்தி நின்ற அவரது இருதயகமலத்தை மீட்க இயலாமல், வெட்கமும் அச்சமுங் கொண்டு மீண்டுசெல்ல, அவர்களில் அதிநிபுணையான கனகாங்கியென்னுங் கட்டழகி, விஷ்ணுமாயைபோல வேண்டியவுயிர்களை மோகிப்பிக்கும் வல்லமையுடையாள், கருப்புவில்லியையும் வசந்தகாலத்தையும் மற்றும் காமோத்தீபகமான தென்றல் திங்கள் முதலியவற்றையும் உற்றதுணையாக உடன் கொண்டு வந்து அம்முனிவர்முன்னிலையில் ஆடல் பாடலாதி விநோதங்களைச் செய்ய, அப்பொழுது விதிவசத்தால் அவ்வருந்தவர் தமது உள்ளத்தைப் பகவத்தியானத்தினின்று மீட்டு அவளது கானாமிருதத்தைக் கேட்டுச் செவி படைத்த பயன் பெற்றோமெனக் கருதிக் கண்விழித்து அவ்வமரமகளது அதி சௌந்தரியத்தைக் கண்டு காமமுற்று யோகம்விட்டுப் போகம்வேட்டு அவளோடுகூடிக் குலாவி மோகவலையினுட் சிக்கிச் சிலகாலம் தம்மை மறந்து தையல்வசப்பட்டிருந்தனர்.

அக்காலத்திற் கருப்பங்கொண்ட அவளது வயிற்றினின்று தைமாதத்தில் மகாநக்ஷத்திரத்தில், சுதர்சநமென்னுந் திருவாழியின் அம்சமானதொரு கர்ப்பம் வெளியாயிற்று. அது அவயவமொன்றுங் காணப்படாது பிண்டாகிருதியாக இருந்ததனால், அத்தேவமாது அதனை வெறுத்து அருகிலிருந்த பிரப்பம்புதரில் எடுத்தெறிந்துவிட்டுத் தன்னுலகஞ்சென்றனள்.

பின்பு தம்வசமடைந்த பார்க்கவர் தவமிழந்ததற்குக் கழிபேரிரக்கமுற்று வேற்றிடமடைந்து மீண்டுந் தவந்தொடங்கலாயினர். இது நிற்க: புதரில் எறியப்பட்ட பிண்டம் சிறந்ததோர் ஆண்குழந்தைவடிவமாகப் பரிணமித்து உயிர்பெற்றுப் பசிதாகங்களால் தனியே அழுதுகொண்டிருக்க, அவ்விடத்துக்கு அருகிலே அந்தத்தலத்தில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற ஜகந்நாதப்பெருமாள் பிராட்டியுடனே எழுந்தருளி அந்தச்சிசுவைக் குளிரக் கடாக்ஷித்து அதன் பசிதாகங்களைத் தவிர்த்து ஆராவமுதமான தமது திருமேனியைக் காட்டித் தேற்றி மறைந்துசெல்ல, அப்பெருமானது பிரிவை ஆற்றாமல் அக்குழந்தை மீளவும் அதிகமாக அழத்தொடங்கிற்று.

அச்சமயத்தில் அங்குப் பிரம்பறுக்கவந்தானொரு திருவாளனென்னும் வேளாளன் அவ்வழுகுரலைக் கேட்டு அருகில்வந்து அக்குழவியைக் கண்டு மிக்கமகிழ்ச்சி கொண்டு எடுத்துச்சென்று இல்லம்புக்குத் தன்மனைவியான பங்கயச்செல்வியை யழைத்து 'பிள்ளையில்லாத நமக்குத் தெய்விகமாகக் கிடைத்தது இது' என்று சொல்லிக் குழந்தையைக் கையிலே கொடுக்க, அவளும் அதிக ஆதரத்தோடு வாங்கிச் சீராட்டி வளர்க்கத்தொடங்குகையில், அவளுக்கு அம்மகவின்பாலுண்டான பேரன்பினாற் பால்சுரக்க, அதனை அவள் கொடுக்கமுயறலும், அத்தெய்வக்குழவி அங்கீகரியாமல் ஸ்தந்யபாநாதிகளில் விருப்பற்றுப் பகவத்குணநுபவத்தையே தாரகமாகக்கொண்டு பசிதாகங்கள் கொள்ளாது அழுதல் அரற்றுதல் கூவுதல் பேசுதல் முதலிய லோகவியாபார

மொன்றும் இன்றி மலமூத்திர ரகிதமாய்ப் பரிசுத்தமாக இளஞாயிறுபோலத் திருமேனியொளி விளங்க வளர்ந்துவந்தது.

"உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலையு மெல்லாங் கண்ணனெம்பெருமான்" என்றபடி இக்குமாரர் பகவானை அனுபவித்தலாகிய அமிருதபானத்தாலே உள்ளமும் உடலமும் நிறைந்து உணவு நீர்வேட்கை யொழிந்து காண்பவர் கேட்பவர் யாவரும் வியக்குமாறு எழுந்தருளியிருக்கிற செய்தியை அவ்வூரிலிருப்பானொரு மூப்புடையவேளாளன் கேள்வியுற்று இவரைத் தரிசிக்க விரும்பிப் பசுவின்பால் காய்ச்சி யெடுத்துக்கொண்டு தன் பாரியையுடனே ஒருநாளுதயகாலத்தில் இவரிருக்கிறவிடத்தை யடைந்து இவரது இளவொளியிளமையைக் கண்டு அதியாச்சரியப்பட்டுத் தான்கொணர்ந்த பாலைத் திருமுன்பேஸமர்ப்பித்து 'இதனை உட்கொண்டருளவேண்டும்' என்று வெகுவாகப் பிரார்த்தித்தான். அவனுடைய பக்திமிகுதிக்குத் திருவுள்ளமுகந்து இவர் அதனை அமுதுசெய்தார். பிள்ளையில்லாக்குறையால் அந்தத் தம்பதிகள் இவரையே தமக்கு எல்லாம்பேறுமாகப் பாவித்து நாள்தோறும் பால் கொண்டுவந்து கொடுக்க, அவர்களது பக்தியமுதத்துக்கு உவந்து அதனைப் பானஞ்செய்துவந்த இவர், ஒருநாள் அவர்களது குறையைத் தீர்க்கக் கருதி, தாம் உண்டு சேடித்த பாலை 'நீங்களுண்ணுங்கள்' என்று அவர்கட்குக் கொடுக்க, அவர்கள் அதனைப் பருகியவளவிலே, முதுமையொழிந்து இளமைப்பருவமடைந்தனர். பின்பு அவ்வேளாண்மகள் கர்ப்பவதியாய் ஒருபுத்திரனைப் பெற, அதுநோக்கி மகிழ்ச்சிகொண்ட அவள்கொழுநன் அக்குழந்தைக்குக் கணிகண்ணனென்று பெயரிட்டு அன்போடு வளர்த்து இவரது முன்னிலையிலே கொண்டுவந்து விட, அவ்விளமகன் இவரது கடாக்ஷவீக்ஷணத்தால் நல்லறிவுபெற்றுப் பலகலைகளை யுணர்ந்து பகவத்பக்தியையும் பாகவதபிரதிபத்தியையும் மிகுதியாக உடையனாயினன்.

பார்க்கவகுமாரர் இப்படி எழுபிராயமளவும் பிரம்பறுப்பாணிடத்திலேயிருந்து பின்பு அஷ்டாங்கயோகத்தால் முழுமுதற்கடவுளை யடையக் கருதுபவராய் அங்குநின்று புறப்பட்டுப் பலவிடங்களையடைந்து 'எல்லாப்பொருளுக்குந் தலைமையான பரதத்வம் எதுவோ" என்று ஆராயலுற்று லோகாயதம் பௌத்தம் சமணம் முதலிய அவைதிகமான புறச்சமயங்களுள்ளும் மாயாவாதம் முதலிய வைதிகமான அகச்சமயங்களுள்ளும் ஒவ்வொன்றிலும் தனித்தனி புகுதலுற்றார்- முதலில் ஒருமதத்திற் பிரவேசித்து அப்பொழுது அதற்கு உரிய நூல்களையெல்லாம் ஆய்ந்துதேர்ந்து அம்மதத்திற்கேற்ற பெயரோடும் ஒழுக்கத்தோடுங் கூடி அதன் நிலையிலே ஊன்றிநின்று பலநூல்களையியற்றிப் பின்பு அக்கொள்கையில் சில குறைபாடுகளைக் கண்டு அதனை விட்டு வேறொருசமயத்தில் இறங்குவார். இவ்வாறே பலகாலம் பலமதங்களையும் பரிசோதித்தவர் பின்பு சைவசமயமே ஸத்ஸமயமென்று துணிந்து அதில் தலையிட்டுச் சிவவாக்கியரென்னும் பெயர்பூண்டு சிவபரமாகச் சிலநூல்களைச் செய்துகொண்டு பிறமதஸ்தரோடு சமபாஷணைசெய்தற்கும் பிரியமின்றி ஏகாந்தசீலராய் ஓரிடத்திலேயிருந்து பரமசிவனைத் தியானித்துவருகையில், முத

லாழ்வார்களில் ஒருவரான பேயாழ்வார் அங்கு எழுந்தருளி அவரது செய்தியை யறிந்து அவரைச் சீர்திருத்தி ஸ்ரீவைஷ்ணவஸமயத்தவ ராக்குதற்குத் திருவுளங்கொண்டு அவரது ஆச்சிரமத்துக்குச் சமீபத்தில் தாம் ஓர் ஆச்சிரமத்தை யமைத்துக்கொண்டு அதிலே சிலசெடிகளைத் தலைகீழாக நட்டுச் சில்லிக்குடமும் அற்ற தாம்பும் கொண்டு அவற்றிற்கு நீர்வார்க்கத் தொடங்கி நின்றார். கண்டவர் பரிகசிக்கத்தக்க அச்செயலைப் பார்த்துச் சிவவாக்கியர் இகழ்ச்சிப்பெருநகைகொண்டு அவ்விடத்தை யடைந்து 'நீர் பித்தரோ? பேயரோ?' என்ன, அவர் 'நான் அத்தகையனல்லேன்; நீரே உந்மத்தர்' என்று உத்தரங்கூறினார். அதுகேட்டுச் சிவபக்தர் பிரதியக்ஷமாயுள்ள அவரது பொருந்தாதசெய்கையை எடுத்துக்காட்டித் தாம் சொன்னதை நிலைநிறுத்த, விஷ்ணுபக்தர் 'வெகுகாலமாக அநேக மதங்களில் அலைந்தும் பரதத்துவ மின்னதென்று உண்மைதெளியாத உம்மை உந்மத்தனென்னத் தடையென்ன? உற்பத்திவிநாசங்களில்லாத முழுமுதற்கடவுளான ஸ்ரீமந்நாராயணன் இருக்க, அவனை யறியாது, ஆக்கவழிவுகளோடுகூடிய சிவபிரானைத் தெய்வமாகக்கொண்டது, உமது உணர்வின்மையேயாகும்' என்று தாம் கூறியதை வற்புறுத்தத் தொடங்கினார். அப்பொழுது, அதிப்பிரபலமாக இருவர்க்கும் சைவ வைஷ்ணவ ஸம்வாதம் நடந்தது. அதில் தோல்வியடைந்த அரனடியவர் அதுகாறும் காலம் வீணே கழிந்ததற்கு அநுதபித்துச் சைவசின்னங்களை யொழித்துத் தம்மை வாதப்போரில் வென்ற வைஷ்ணவர்க்குச் சிஷ்யராய் அவரைச் சரணமடைய, அப்பொழுது, அவர்க்குப் பேயாழ்வார் பஞ்சஸம்ஸ்கார பூர்வகமாகத் தத்துவோபதேசஞ்செய்து எழுந்தருளினர். அதுமுதல் ஸாரதமமான விஷ்ணுபக்தியையே கொண்ட திருமழிசைப்பிரான், "சாக்கியங்கற்றோம் சமண் கற்றோம் சங்கரனாராக்கிய வாகமநூலாராய்ந்தோம்—பாக்கியத்தாற், செங்கட்கரியானைச் சேர்ந்தோம் யாம் தீதிலமே, யெங்கட்கரியதொன்றில்" என்று எண்ணித் திருமழிசைக்கு வந்து யோகநிலையில் நின்று திருமகள்கொழுநனைத் தியானித்துக்கொண்டிருந்தார்.

அந்நாட்களில் ஒருநாள், ஆகாசமார்க்கத்தில் ருஷபவாகநாரூடராய்ப் பார்வதீபரமேசுவரர் செல்லுகையில், உமாதேவி இவரது தவவொழுக்கத்தைக் கண்டு கொண்டாடித் தம்காதலனை நோக்கி 'இவன் ஆரோ?' என வினவ, சிவபிரான் 'இம்மகாநுபாவன் நம்மை விட்டு நாராயணனுக்கு அடிமைப்பட்டவன்' என்று சொன்னவளவிலே, அம்பிகை 'இப்பெரியவனுக்கு நாமும் தரிசனந்தந்து ஏதேனும் வரமளித்துப்போவோம்' என்று கூற, அவளது விருப்பத்தின்படிசெய்யச் சம்மதித்துச் சங்கரபகவான் இவரெதிரில் வந்து காட்சி தந்தருளினார். இவர் அப்பிரானைப் பார்த்தும் பாராதவர்போல உபேக்ஷித்து ஒருகந்தைத்துணியைத் தைத்துக்கொண்டு காரியாந்தரபரரா யிருக்க, கண்டு உமாபதி 'உனக்கு அருள்செய்யவந்த நம்மை நீ அநாதரஞ்செய்தல் தகுதியோ?' என்று நவில, வைணவயோகி 'உம்மால் ஆகவேண்டுவது ஒன்றும் எனக்கு இன்று; ஆதலின், நான் உதாசீனனாயிருந்தேன்' என்று உரைத்தார். பின்பும் சந்திரமௌலி 'நம்வரவு வீண்போவதன்று; உனக்கு அபீஷ்டமான வரம்

வேண்டிப் பெற்றுவாழ்வாய்' என்று நிர்ப்பந்திக்க, அநந்தரம்ஆழ்வார் 'பரமபத மருளவல்லீராயின் அருள்வீர்' என்று வேண்டினார். அதற்கு அக்கடவுள் 'அது நம்மால் தரத்தக்கதன்று; அது தருதற்உரிய தேவன் அச்சுதனே: ஆதலின், வேறுவரம் வேண்டுதி' என்ன, ஆழ்வார் புன்முறுவல்செய்து 'அம்முத்தியைப் பெறுதற்பொருட்டுப் பலகாலம் இவ்வுலகில் உயிர்த்திருந்து பெருந்தவம்புரி தற்கு உபயோகமாக நீண்ட ஆயுளையேனும் அடியேற்கு அளித்தருளும்' என்று பிரார்த்தித்தார். அதுகேட்டுக் கைலாசபதி 'அது கர்மாநுகுணமாக நடப்பதேயன்றி வளர்த்தத்தக்கதன்று; வேறுவேண்டுவதை விளம்புவாய்' என்னலும், திருமழிசைப்பிரான் குறுமுறுவலோடு இகழ்ச்சியாய் 'இவ்வூசி யின்பின்னே நூல்வரும்படி வரதாநஞ் செய்தருளீர்' என்று விநோதமாகச் சொல்ல, அப்பரிஹாசவார்த்தை செவிப்பட்டவுடனே கடுஞ்சினங்கொண்டு கண்ணுதற்கடவுள் 'இச்செருக்குடையானை இப்பொழுதே அநங்கனைப்போ லாக்கிவிடுவேன்' என்று தமது நெற்றியிலுள்ள நெருப்புக்கண்ணைத் திறந்து விட்டார். அதனினின்று புகையும்பொறியுமாகக் கிளர்ந்தெழுந்த காலாக்கினி யைக் கண்டு பாகவதோத்தமர் சிறிதுங்கலங்காமல் 'இந்திரன்போல உடம்பு முழுவதிலுங் கண்காட்டினாலும் அஞ்சுவேனல்லேன்' என்றுசொல்லித் தமது வலத்திருவடியின் பெருவிரலி லுள்ளதொரு கண்ணைத் திறந்துவிட, அதி லிருந்து ஒருபெருந்தீ எழுந்து ஊழித்தீயினும் பலமடங்கு மேலிட்டு அவ் வனலை அடக்கத்தொடங்கிற்று. அவ்வளவில், அரவாபரணர் அக்கடுநெருப்பை யவிக்கும்படி தமது சடையிலுள்ள பலமேகங்களை யேவிவிட, அவையும் அங் ஙனமே கல்பாந்தகாலத்திற்போலச் சோனைமழைபொழிந்து பெருவெள்ளங் கோக்கவும், பரமபாகவதர் சிறிதுஞ் சலியாமல் பகவத்பக்தியிலே பிரவணரா யிருந்தார். அதுகண்டு முக்கண்மூர்த்தி மிகவியந்து இவர்க்கு 'பக்திஸாரர்' என்று திருநாமஞ்சாத்தி இவர் வைபவத்தைக் கொண்டாடித் தம்மிடத்துக்கு மீண்டுசென்றனர்.

அதன்பின்பு ஆழ்வார் முன்போலவே யோகத்திலெழுந்தருளி யிருக்கை யில், சுக்திஹாரனென்பானொரு சித்தன் தன் சாமர்த்தியத்தால் ஒருபுலியை யடக்கி வாகனமாகக்கொண்டு அதன்மேலேறி நடாத்தி விசும்பாறாகச் செல்லு கையில், இவரது யோகப்பிரபாவத்தால் அவ்வூர்தி தடைப்பட்டு இவர்க்கு நேரில் மேலே வானததிற் செல்லமாட்டாது திகைத்துநிற்க, அவன் 'இதற்கு ஏது என்னோ?' என்று எப்புறத்தும் பார்க்கையில், கீழேயிருக்கிற யோகியைக் கண்டு ஆச்சரியப்பட்டு அங்குநின்று இறங்கி இவரருகில் வந்து, இவரது சக்தியைச் சோதிக்கக் கருதி, 'ஓ முநீந்திரரே! நீர் உடுத்துநின்ற அந்தக் கந் தைச்சீலையைப் போகட்டுப் பீதாம்பரத்தாலாகிய இந்த உடையை உபயோகித் துக்கொள்ளும்' என்று ஒரு சிறந்த கஞ்சுகத்தை யுண்டாக்கிக்கொடுக்க, அவர் அதனைத் திரஸ்கரித்து, தமது இச்சாமாத்திரத்தால் மாணிக்கமயமானதொரு கவசத்தை நிருமித்துக்காட்டினார். சூரியன்போல ஒளிவிளங்குகின்ற அதனைக் கண்டு நாணங்கொண்டு அவ்வியாக்கிரவாகனன் தன்கழுத்தி லுள்ளதொரு மணிமாலையை வாங்கி 'இதனை ஜபமாலையாகத் தரித்துக்கொள்ளும்' என்று கொடுக்கவர, முனிவர் தாம் கண்டத்தில் தரித்துள்ள துளசிமணிமாலையையும்

தாமரைமணிமாலையையும் எடுத்துக்காட்டினார். அவை சிலாக்கியமான நவ ரத்தினமாலைகளாய் விளங்கக் கண்ணுற்று அவன் வெட்கப்பட்டு 'எல்லாச் சித்தர்களையும் வென்றுவந்த என்னை நீர் வென்றதனால், உம்மினுஞ் சிறப்புடையானொரு சித்தன் உலகத்தில் எங்கும் இலன்' என்று சொல்லித் துதித்துப் பிரதக்ஷிணஞ்செய்து நமஸ்கரித்து வேறுவழியாகச் சென்றிட்டான்.

பின்பும் அவர் அங்கே யோகநிஷ்டராயிருக்கையில், கொங்கணசித்தனென்பானோர் இரசவாதி அவரது மகிமையைக் கேள்வியுற்று மிக்க பரபரப்போடு அருகில் வந்து கோடியிரும்பைப் பொன்னாக்கவல்லதோர் இரசகுளிகையைக் காட்டி 'இதனை நீர் பெற்றுமகிழ்மின்' என்ன, மழிசைக்கிறைவர் அதனை வேண்டாவென்று விலக்கித் தமது பொன்னொத்தமேனியின் புழுதியை எடுத்துத்திரட்டி அவ்வுருண்டையை அவன்கையிற் கொடுத்து 'இக்குளிகை பல கோடிக்கற்களைப் பொன்னாக்கவல்லது; இதனைக்கொண்டு நீபிழைப்பாய்' என்று சொல்லியருள, அவன் அதனை உடனே பரிசோதித்துப்பார்த்து அவ்வாறேயிருக்கக் கண்டு அதிப்ரீதியோடு ஆழ்வாரைத் தண்டனிட்டுப் போயினான்.

அப்பால் பக்திசாரர் பிறிதிடஞ்சென்று ஒருமலைக்குகையினுள் இருந்து யோகு செய்யாநிற்கையில், திவ்வியதேச யாத்திரையாச் சஞ்சரித்துவருகிற முதலாழ்வார்கள் மூவரும் அவ்விடத்தை யடைந்து உள்ளேயெழுந்தருளியிருக்கின்ற இவரது திவ்வியமான திருமேனியொளியை வெளியிலிருந்து கண்டு அதியாச்சரியப்பட்டு முழையினுட் புக்குக் குசலப்ரச்நம் பண்ண, அதுகேட்டு அவரும் விரைவாக எழுந்து யோகக்ஷேமவிசாரணை செய்தவளவிலே, நால்வரும் பாலும் பாலுங் கூடினாற்போலவும் தேனும் தேனுங் கலந்தாற்போலவும் ஒருமனப்பட்டுச் சர்வகாலமும் பகவத் குணங்களையே கூறுதல் கேட்டல் சிந்தித்தல் துதித்தல் அநுபவித்தல் முதலியன செய்துகொண்டு தவஞ்செய்திருந்தார்கள். இப்படி சிலகாலஞ்சென்றபின் எல்லாரும் பேயாழ்வாரது திருவவதாரஸ்தலமான மயூரபுரிக்கு வந்து அங்கு அவ்வாழ்வார் தோன்றிய இடமாகிய கைரவதீர்த்தத்தின் கரையிலே சில வாண்டு யோகம் முடித்த பின்னர், முன்னவர் மூவரும் பூமி சஞ்சாரார்த்தமாகப் போயினார்கள்.

அநந்தரம் ஆழ்வார், தமது ஜந்மபூமியான மகீசாரபுரத்துக்குச் சென்று தாம் வழக்கம்போலச் சாத்திக்கொள்ளுதற்குத் திருமண்வேண்டிச் சோதித்தவிடத்தில் அகப்படாமையால் மனக்கலக்கமுற, அப்பொழுது திருவேங்கடமுடையான் இவரது கனவிலே முற்பட்டு 'கச்சிவெஃகாவையடுத்த பொற்றாமரைப்பொய்கையிலே யுள்ளது' என்று கூறியருள, உடனே இவர் கவலையொழிந்து அங்கேசென்று திருமண்கண்டு களித்து எடுத்துவந்து தரித்துக் கொண்டு பகவதநுபவம் பண்ணுதலே தொழிலாகச் சிலகாலங்கழித்து, பின்பு மழிசையம்பதியைவிட்டுக் காஞ்சீபுரத்தைச் சேர்ந்து, அங்குத் திருவெஃகாவில் ஆதிசேஷசயனத்திலே திருப்பள்ளிகொண்டருள்கிற பெருமானைச் சேவித்து ஈடுபட்டு அப்பிரானையே தியானஞ்செய்துகொண்டு அநேக வருஷகாலம் எழுந்தருளியிருந்தார்.

அப்பொழுது கணிகண்ணன் வந்து தனது ஆசிரியரான இவர்க்குப் பல விதமான சுசுரூஷைகளைப் பண்ணிக்கொண்டு உபாதானமூலமாகச் ஜீவனஞ் செய்திருந்தான். அக்காலத்தில், தலைநரைத்து உடல்திரைந்து பருவம்முதிர்ந்த கிழவியொருத்தி பக்திசாரபாதநளினங்களிற் பரமபக்தியுடனே அவருள்ள விடத்தைத் திருவலகிடுதலும் மெழுகுதலும் கோலமிடுதலுமாகிய கைங்கரியங்களைத் தினந்தோறுஞ் செய்துகொண்டிருந்து ஒருநாள் அவர் திருக்கண்விழித்த வமயத்திலே அவரைச் சரணமடைந்து வரங்கேட்டுப்பெற்று மாறாத யௌவனத்தை யடைந்து தேவமாதுபோல அதிசுந்தரியாயினாள். அந்நகரத் தரசனான பல்லவராயன் ஒருநாள் அவளது வடிவழகைக் கண்டு காதலுற்று விலையுயர்ந்த அணிகலங்களையும் நலமிகுந்த பட்டாடைகளையும் பரிசுகொடுத்து அவளை மணஞ்செய்து பட்டமகிஷியாக்கி அவளுடன் வாழ்ந்திருந்தான். இருக்கையில், தனது இளமை நாளுக்கு நாள் குறைவதையும் அவளது பருவம் மாறுபடாததையும் கண்டு விம்மிதங்கொண்டு 'உனது மங்கைப்பிராயம் என்றும் ஒருபடியாயிருத்தற்கு ஏது என்ன?' என்று கேட்டு, ஆழ்வாருடைய அநுக்கிரகமென்று அறிந்து, அவ்வருளைத் தான் பெறுதற்கு நல்லுபாயத்தை நாடியுரைப்பாயென்று அவளையே வேண்டினான். அதுகேட்டு அவ்வணங்கு 'பிரதிதினமும் நமது அரண்மனைக்குப் பிக்ஷுகராய் வருகிற கணிகண்ணனென்பவர் அந்த மகாயோகிக்கு அந்தரங்கர்; இவர் புருஷகாரமாக அவரை அநுவர்த்தித்தால், கருதியது கைகூடும்' என்று கட்டுரைத்தாள். அவ்வாறே வேந்தன், மறுநாள் கணிகண்ணன் வந்தபோது, அவனைத் தனியே யழைத்து உபசரித்து 'உமது பரமகுருவை யான் சேவிக்குமாறு இங்கு அழைத்துவரவேண்டும்' என்று பிரார்த்திக்க, அவன் 'நம் ஆசாரியர் ஓரிடத்துக்கும் எழுந்தருளார்' என்று கூறிவிட, மன்னவன் 'என்னை அங்கு அழைததுப்போயாயினும் அவரது கருணைக்கு இலக்காக்குவித்து அவரருளால் என்னை என்றும் யுவாவாயிருக்கச் செய்யவேண்டும்' என்று வேண்ட, அதற்கும் அவன் உடன்படாமல் 'உன்னைப்போல இம்மைப்பயனையே யெதிர்நோக்கி நிற்பாரை ஆழ்வார் கண்ணெடுத்துப் பார்த்தலும அரிது' என்று மறுத்துவிட்டான். பின்பு அரசன் வருந்திய சிந்தையனாயிருக்கையில், அமைச்சர்கள் வந்துதேற்றி 'இக்கணிகண்ணன் தெய்வப்புலமையுடையான்; இவன் வாயினாற் பாடியபடியெல்லாம் பல அற்புதங்கள் நிகழ்கின்றன; ஆதலின், இவனாற் பாடப்பெற்றால் இஷ்டசித்திபெறலாம்' என்று உறுதிகூற, அங்ஙனமே மன்னவன் அடுத்தநாளில் அவ்வடியவன் வந்தபொழுது 'எனக்கு அழியாத இளமை வருமாறு கவிபாடவேண்டும்' என்றுபுகல, அவ்வைணவன் 'நான் எப்பொழுதும் நாராயணஸ்தோத்திரஞ்செய்வேனே யொழிய நரஸ்துதி செய்வேனல்லேன்' என இயம்பினன். பின்பும் பார்த்திவன் தன்னைப் பாடவேண்டுமென்று நிர்ப்பந்திக்க, அவன் "ஆடவர்களெங்ஙனகன்றொழிவார் வெஃகாவும், பாடகமுமூரகமும்பஞ்சரமா—நீடியமல், நின்றானிருந்தான்கிடந்தானிதுவன்றோ, மன்றார்பொழிற்கச்சிமாண்பு" என்று ஒரு திருக்கவிசொல்ல, கொற்றவன் கோபங்கொண்டு 'நம்மைப்பாடு என்றால் நகரத்தைப்பாடிய நீ இவ்வூரில் இனி வசித்தலாகாது; உடனே வெளியே போ' என்று உறுக்கிக்கூற, உடனே கணிகண்

ணன் பக்திசாரரையடைந்து நடந்த செய்தியை விண்ணப்பஞ்செய்து 'அடியேனுக்கு விடைதந்தருளவேண்டும்' என்ன, ஆழ்வார் 'நானும் பெருமானையெழுந்தருளப்பண்ணிக்கொண்டு உடன்வருவேன்' என்று உரைத்துத் திருக்கோயிலுட் சென்று அடியவர்க்கெளியவனான கடவுளைத் திருவடிதொழுது "கணிகண்ணன்போகின்றான் காமருபூங்கச்சி, மணிவண்ணா நீகிடக்கவேண்டா - துணிவுடைய, செந்நாப்புலவனும்போகின்றேன்நீயுமுன்றன், பைந்நாகப்பாய் சுருட்டிக்கொள்" என்று பிரார்த்தித்தவளவிலே, அந்தப்பகவானும் ஆழ்வாரபிமதப்படி யோகநித்திரையைவிட்டு எழுந்துவர, மூவரும் அவ்வூரைவிட்டு அருகிலுள்ளதோரிடத்தை யடைந்து அங்கு வசித்தனர். இங்ஙனம் பெருமானும் ஆழ்வாரும் அவரடியானும் அப்பதியைவிட்டுப் போயினதால், அத்திவ்யதேசத்திற் பலதிருக்கோயில்களி லெழுந்தருளியிருக்கிற மற்றையெம்பெருமான்களும் விட்டு நீங்க, அப்புரமுழுவதும் பொலிவிழந்து, அங்கு மற்றுப்பல ஆலயங்களிலிருக்கின்ற தேவதைகளின் சாந்நித்தியமு மில்லையாய், சூரியனொளியுஞ் செல்லாமல் இருள்மூடப்பட்டது இப்படி நீளிரவாய் நீண்டதைக் கண்டு கவன்று மன்னவனும் மந்திரிமாரும் அவர்களுள்ள விடத்தைத் தேடியடைந்து கணிகண்ணன்காலில் விழுந்து தனது பிழையைப் பொறுத்தருளுமாறு பலவாறு பிரார்த்திக்க, அவனும் மீண்டெழுந்தருளும்படி ஆழ்வார் பக்கல் விண்ணப்பஞ்செய்ய, அவரும் அதனை அங்கீகரித்து ஆசிரிதபாரதந்திரனான அரவணைச்செல்வனை நோக்கி, "கணிகண்ணன்போக்கொழிந்தான் காமருபூங்கச்சி, மணிவண்ணா நீகிடக்கவேண்டும் — துணிவுடைய, செந்நாப்புலவனும் போக்கொழிந்தேன்நீயுமுன்றன்,பைந்நாகப்பாய்ப்படுத்துக்கொள்"என்று, முன்பு பாடியபாட்டை மாற்றிப்பாடி வேண்ட, எம்பெருமானும் அதற்கு உடன்பட்டு ஆழ்வாருங் கணிகண்ணனும் உடன்வர மீண்டெழுந்தருளித் திருவெஃகாவையடைந்து ஆழ்வார்திறத்து அபிமானத்தால் தான் இங்ஙனஞ்செய்தது பின்புள்ளார்க்கும் பிரதியக்ஷமாகவேணுமென்று முன்புபோல வலத்திருக்கைகீழாக வன்றி இப்பொழுது இடத்திருக்கை கீழ்ப்படக் கண்வளர்ந்தருளினான்.

இங்ஙனம் பக்தர்சொன்னபடி செய்ததனால், அப்பெருமானுக்கு 'யதோக்தகாரீ' என்று வடமொழியிலும், 'சொன்னவண்ணஞ்செய்தபெருமாள்' என்று தென்மொழியிலும் திருநாமம் வழங்கலாயிற்று. இவர்கள் சென்று ஓரிராத்திரி தங்கியிருந்த ஊர், 'ஓரிரவிருக்கை' எனப் பெயர்பெற்றது.

அம்மாத்திரத்திற் காஞ்சீநகரம் முன்போலப் பொலிவுபெறவே, அரசனும் பாகவதர்களது மகிமையை யுணர்ந்து அதுமுதல் அவர்கட்கே அடியவனாய் வாழ்ந்திட்டான்.

அநந்தரம் ஆழ்வார் கும்பகோணயாத்திராபேக்ஷை யுடையராய்ப் புறப்பட்டுச் செல்லும் வழியிடையே பெரும்புலியூரென்கிற கிராமத்தில் ஒருவேதியன்வீட்டு வீதிவேதிகையிற் சிறிதுபொழுது எழுந்தருளியிருக்க, அங்கு வேதமோதிக்கொண்டிருந்த அந்தணர்கள், நீறுபூத்தநெருப்புப்போலுள்ள அந்த மகாயோகியின் பிரபாவத்தை யறியாமல் அவரைக் கீழ்ப்பட்ட சாதியனொருவனாகக் கணித்து அவர்காதிற்பட வேதாத்தியயனஞ்செய்யாதே தவிர்ந்திருக்க,

அக்குறிப்பையறிந்த இவர் அவ்விடத்தை விட்டுத் தூரத்திற்சென்று வேறோ ரகத்துமேடையில் வீற்றிருந்தார். பின்பு அம் முதல் வருணத்தவர் மீண்டும் வேதபாராயணஞ் செய்யத்தொடங்கி, விட்டவிடந்தோன்றாது மயங்கி, 'இதற்குக் காரணம், வந்த அதிதியை அலக்ஷ்யஞ்செய்ததே' என்று அறிந்து அவரிடஞ் சென்று சேர, ஆழ்வார் அதனைநோக்கி, கறுப்புநெற்களைக் கையுகிராலேயிடந்து அவர்கள் விட்டசொற்றொடரைக் குறிப்பித்தருளிய மாத்திரத்திலே, அப்பொருளுள்ள *வேதவாக்கியம் அவர்களுக்குத் தோன்றிற்று. உடனே அவர்கள் பிரதக்ஷிணப்பிரணாமாதிகளால் இவரை உபசரித்துக் கிருதார்த்தரானார்கள்.

அப்பொழுது அவ்வூர்த் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமான் இவ்வாழ்வார் எந்தெந்த முகமாகத் திரும்புகின்றனரோ அந்தந்த முகமாகத் திரும்பியருள, அந்த ஆச்சரியத்தை அருச்சகர் மூலமாக அறிந்து அவ்வூரவரனைவரும் அங்கு யாகஞ்செய்துகொண்டிருந்த பெரும்புலியூரடிகளிடத்தே சென்று இவருடைய வைபவத்தைக் கூற, அதுகேட்டவுடனே தீக்ஷிதரும் அதிக ஆனந்தத்தோடு வந்து பக்திசாரரைத் தரிசித்துக் கண்படைத்த பயன்பெற்றோமென்று களித்து யாகசாலைக்கு எழுந்தருளுவித்துக் கொண்டுபோய் அவர்க்கு அக்கிரபூஜை செய்திட்டார். தருமபுத்திரர் இராயசூயயாகத்திலே ஸ்ரீகிருஷ்ணனுக்குப் பிரதம தாம்பூலஞ் சமர்ப்பித்தபொழுது சிசுபாலன் பலவிதமாகப் பழித்தாற்போல, இங்கும் அழுக்காறுற்ற நான்மறையாளர் பலர் எண்ணிறந்த நிந்தைமொழிகளைக் கூற, முற்பூஜை தந்த முனிவர் 'அவர்களை அடக்கியருளவேண்டும்' என்று ஆழ்வாரைப் பிரார்த்திக்க, இவரும் அவரது வேண்டுகோளின்படி செய்யக் கருதி, தமக்கு அந்தர்யாமியான அநந்தசயனனைக் குறித்து, "அக்கரங்களக்கரங்களென்றுமாவதென்கொலோ, இக்குறும்பைநீக்கியென்னையீசனாக்கவல்லையேற், சக்கரங்கொள்கையனே சடங்கர்வாயடங்கிட, உட்கிடந்தவண்ணமேபுறப்பொசிந்துகாட்டிடே" என்று விண்ணப்பஞ்செய்ய, எம்பெருமான் "தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க்குத், தம்மையேயொக்க வருள்செய்வர்" ஆதலால், திருமகளும் நிலமகளுந் திருவடிவருடப் பெரிய திருவனந்தாழ்வான்மீது அறிதுயிலமருந் திருவுருவத்தை இவரது திருமேனியிலே தோற்றுவிக்க, அனைவரும் அந்தத்திவ்விய மங்கள விக்கிரகத்தைச் சேவித்து ஆழ்வாரது வாசாமகோசரமான விபவத்தையுணர்ந்து அவரது சீர்பாதங்களிலே ஸாஷ்டாங்கமாகத் தண்டன் சமர்ப்பித்து, அபராதக்ஷாமணஞ்செய்தருளுமாறு வேண்ட, மழிசைக்கிறைவர் அவர்கட்கு ஞானோபதேசஞ்செய்து ஆட்கொண்டு வாழ்வித்தருளி, திருக்குடந்தைக்குச் சென்று, அங்குச் சயனத்திருக்கோலமாக எழுந்தருளியிருக்கின்ற ஆராவமுதனைச் சேவித்து அப்பெருமானது திருக்கோலத்திலே ஈடுபட்டு, "நடந்தகால்கள்நொந்தவோ நடுங்கஞாலமேனமாய், யிடந்தமெய்குலுங்கவோ விலங்குமால்வரைச்சுரம், கடந்தகால்பரந்தகா விரிக்கரைக்குடந்தையுட், கிடந்தவாறெழுந்திருந்துபேசு" என்றுவிண்ணப்பஞ்செய்ய, அப்பிரானும் ஆழ்வார்பக்கல்

* "க்ருஷ்ணாம் வ்ரீஹீணாம் நகநிர்ப்பிந்நம்."

கொண்ட அளவில்பெருங்கருணையால் அர்ச்சாவதாரத்தின் வரம்புகடந்து விபவாவதாரத்திற்போல அங்ஙனம் எழுந்திருந்து பேசமுயல, உடனே பக்திசாரர் 'இந்த அதிசௌலப்பியத்துக்கு ஒருதீங்கு வாராதிருக்கவேணும்' என்று திருவுள்ளம்பற்றி "வாழிகேசனே" என்று மங்களாசாஸநம்பண்ண, பெருமானும் அப்பொழுதிருந்தபடியே உத்தானசாயியாய் நிலைத்தருளினன். அந்த ஆராவமுதாழ்வாருடைய திருவடிவத்தையே தியானஞ்செய்துகொண்டு திருமழிசைப்பிரான் அத்திருப்பதியிலே அநேககாலம் யோகத்திலெழுந்தருளியிருந்தார்.

இப்படி இவர் நாலாயிரத்தெழுநூறு வருஷகாலம் பூலோகத்தில் வாழ்ந்திருந்து, தாம் பகவானை அநுபவம்பண்ணினபடிகளை நான்முகன்திருவந்தாதி, திருச்சந்தவிருத்தம் என்கிற திவ்யப்ரபந்தமூலமாக உலகத்தார்க்கு உபகரித்தருளி, "இனியறிந்தேன் ஈசற்கும் நான்முகற்குந்தெய்வம், இனியறிந்தேனெம்பெருமானுன்னை—இனியறிந்தேன், காரணன்நீ கற்றவைநீ கற்பவைநீ நற்கிரிசை, நாரணன்நீ நன்கறிந்தேன்நான்" என்று சகலப்ரபஞ்சகாரணனான நாராயணனது பரத்வத்தை வெளியிட்டு யாவரையும் உய்வித்து அநந்தரம் திருக்குடந்தையிலே மீளாவுலகம்புக்கருளினர்.

அன்புடனந்தாதிதொண்ணூற்றாறுரைத்தான்வாழியே
அழகாருந்திருமழிசையமர்ந்தபிரான்வாழியே
இன்பமிகுதையில்மகத்திங்குதித்தான்வாழியே
எழிற்சந்தவிருத்தம்நூற்றிருபதீந்தான்வாழியே
முன்புகத்தில்வந்துதித்தமுனிவர்கோன்வாழியே
முழுப்பொன்னிப்பெருக்கெதிர்செல்முதிர்கவியோன்வாழியே
நன்புவிநாலாயிரத்தெழுநூறிருந்தான்வாழியே
நங்கள்பக்திசாரனிருபதங்கள்வாழியே.

திருமழிசையாழ்வார்.

திருமழிசைப்பிரான் அருளிச்செய்த

திருச்சந்தவிருத்தம்.

தனியன்கள்.

(திருக்கச்சிநம்பி அருளிச்செய்தது.)

தரவுகொச்சகக்கலிப்பா.

தருச்சந்தப்பொழில்தழுவு தாரணியின் துயர்தீர *
திருச்சந்தவிருத்தம்செய் திருமழிசைப்பரன்வருமூர் *
கருச்சந்தும்காரகிலும் கமழ்கோங்கும்மணநாறும் *
திருச்சந்தத்துடன்மருவு திருமழிசைவளம்பதியே.

இருவிகற்பநேரிசைவெண்பா.

உலகும்மழிசையும் உள்ளுணர்ந்து * தம்மில்
புலவர்புகழ்க்கோலால்தூக்க *—உலகுதன்னை
வைத்தெடுத்தபக்கத்தும் * மாநீர்மழிசையே
வைத்தெடுத்தபக்கம்வலிது.

எம்பெருமானே பரதத்துவமென்பது.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (யமுநாகல்யாணிராகம்-ரூபகதாளம்.)

↓↓ பூநிலாயவைந்துமாய்ப் புனற்கண்நின்றநான்குமாய் *
தீநிலாயமூன்றுமாய்ச் சிறந்தகாலிரண்டுமாய் *
மீநிலாயதொன்றுமாகி வேறுவேறுதன்மையாய் *
நீநிலாயவண்ணம்நின்னை யார்நினைக்கவல்லரே? (௧)

ஆறுமாறுமாறுமாய் ஓரைந்துமைந்துமைந்துமாய் *
ஏறுசீரிரண்டுமூன்றும் ஏழுமாறுமெட்டுமாய் *
வேறுவேறுஞானமாகி மெய்யினோடுபொய்யுமாய் *
ஊறொடோசையாயவைந்தும் ஆயஆயமாயனே! (௨)

ஐந்துமைந்துமைந்துமாகி அல்லவற்றுளாயுமாய் *
ஐந்துமூன்றுமொன்றுமாகி நின்றவாதிதேவனே! *
ஐந்துமைந்துமைந்துமாகி அந்தரத்தணைந்துநின்று *
ஐந்துமைந்துமாயநின்னை யாவர்காணவல்லரே? (௩)

மூன்றுமுப்பதாறினோடு ஓரைந்துமைந்துமைந்துமாய் *
மூன்றுமூர்த்தியாகி மூன்றுமூன்றுமூன்றுமூன்றுமாய் *
தோன்றுசோதிமூன்றுமாய்த் துளக்கமில்விளக்கமாய் *
ஏன்றெனாவியுள்புகுந்தது என்கொலோ? எம்மீசனே! (௪)

நின்றியங்குமொன்றலா உருக்கள்தோறும்ஆவியாய் *
ஒன்றியுள்கலந்துநின்ற நின்னதன்மையின்னதென்று *
என்றும்யார்க்குமெண்ணிறந்த ஆதியாய்! நின்னுந்திவாய் *
அன்றுநான்முகற்பயந்த ஆதிதேவனல்லையே? (ரு)

நாகமேந்துமேருவெற்பை நாகமேந்துமண்ணினை *
நாகமேந்துமாகமாகம் மாகமேந்துவார்புனல் *
மாகமேந்துமங்குல்தீயோர் † வாயுவைந்தமைந்துகாத்து *
ஏகமேந்திநின்றநீர்மை நின்கணேயியன்றதே. (சா)

ஒன்றிரண்டுமூர்த்தியாய் உறக்கமோடுணர்ச்சியாய் *
ஒன்றிரண்டுகாலமாகி வேலைஞாலமாயினாய் *
ஒன்றிரண்டுதீயுமாகி ஆயனாயமாயனே! *
ஒன்றிரண்டுகண்ணினானும் உன்னையேத்தவல்லனே? (எ)

ஆதியானவானவர்க்கும் அண்டமாயவப்புறத்து *
ஆதியானவானவர்க்கும் ஆதியானஆதிநீ *
ஆதியானவானவாணர் அந்தகாலநீயுரைத்தி *
ஆதியானகாலநின்னை யாவர்காணவல்லரே? (அ)

தாதுலாவுகொன்றைமாலை துன்னுசெஞ்சடைச்சிவன் *
நீதியால்வணங்குபாத! நின்மலா! நிலாயசீர் *
வேதவாணர்கீதவேள்வி நீதியானகேள்வியார் *
நீதியால்வணங்குகின்றநீர்மை நின்கண்நின்றதே. (கூ)

தன்னுளேதிரைத்தெழும் தரங்கவெண்தடங்கடல் *
தன்னுளேதிரைத்தெழுந்து அடங்குகின்றதன்மைபோல் *
நின்னுளேபிறந்திறந்து நிற்பவும்திரிபவும் *
நின்னுளேயடங்குகின்ற நீர்மைநின்கண்நின்றதே. (க0)

(அடாணாராகம் - ரூபகதாளம்.)

சொல்லினால்தொடர்ச்சிநீ சொலப்படும்பொருளும்நீ *
சொல்லினால்சொலப்படாது தோன்றுகின்றசோதிநீ *
சொல்லினால்படைக்க நீபடைக்கவந்துதோன்றினார் *
சொல்லினால்சுருங்க நின்குணங்கள்சொல்லவல்லரே? (கக)

உலகுதன்னைநீபடைத்தி உள்ளொடுக்கிவைத்தி * மீண்டு
உலகுதன்னுளேபிறத்தி ஓரிடத்தையல்லையால் *
உலகுநின்னொடொன்றிநிற்க வேறுநிற்றியாதலால் *
உலகில்நின்னையுள்ளசூழல் யாவருள்ளவல்லரே? (கஉ)

---

† 'வாயுவைந்துமைந்துகாத்து' என்றும் பாடம்.

இன்னையென்றுசொல்லலாவது இல்லையாதும், இட்டிடை *
பின்னைகேள்வனென்பர் உன்பிணக்குணர்ந்தபெற்றியோர் *
பின்னையாயகோலமோடு பேருமூருமாதியும் *
நின்னையார்நினைக்கவல்லர்? நீர்மையால்நினைக்கிலே. (கங)

தூய்மையோகமாயினாய்! துழாயலங்கல்மாலையாய்! *
ஆமையாகியாழ்கடல்துயின்ற ஆதிதேவ! * நின்
நாமதேயமின்னதென்ன வல்லமல்லவாகிலும் *
சாமவேதகீதனாய சக்ரபாணியல்லையே? (கச)

அங்கமாறும்வேதநான்கும் ஆகிநின்று, அவற்றுளே *
தங்குகின்றதன்மையாய்! தடங்கடற்பணைத்தலை *
செங்கண்நாகணைக்கிடந்த செல்வமல்குசீரினாய்! *
சங்கவண்ணமன்னமேனி சார்ங்கபாணியல்லையே? (கரு)

தலைக்கணத்துகள்குழம்புசாதிசோதிதோற்றமாய் *
நிலைக்கணங்கள்காணவந்து நிற்றியேலும், நீடிரும் *
கலைக்கணங்கள்சொற்பொருள் கருத்தினால்நினைக்கொணா *
மலைக்கணங்கள்போலுணர்த்தும்மாட்சி நின்தன்மாட்சியே. (கசு)

ஏகமூர்த்திமூன்றுமூர்த்தி நாலுமூர்த்தி, நன்மைசேர் *
போகமூர்த்திபுண்ணியத்தின்மூர்த்தி எண்ணில்மூர்த்தியாய் *
நாகமூர்த்திசயனமாய் நலங்கடற்கிடந்து * மேல்
ஆகமூர்த்தியாயவண்ணம் என்கொல்? ஆதிதேவனே! (கஎ)

விடத்தவாயொராயிரம் இராயிரம்கண்வெந்தழல் *
விடுத்துவீள்விலாதபோகம் மிக்கசோதிதொக்கசீர் *
தொடுத்துமேல்விதானமாய பௌவநீரராவணை *
படுத்தபாயல்பள்ளிகொள்வது என்கொல்? வேலைவண்ணனே! (கஅ)

புள்ளதாகிவேதநான்கும் ஓதினாய், அதன்றியும் *
புள்ளின்வாய்பிளந்து புட்கொடிப்பிடித்தபின்னரும் *
புள்ளையூர்தியாதலால் அதென்கொல்? மின்கொள்நேமியாய்! *
புள்ளின்மெய்ப்பகைக்கடல்கிடத்தல் காதலித்ததே. (க௯)

கூசமொன்றுமின்றி மாசுணம்படுத்து, வேலைநீர் *
பேசநின்றதேவர்வந்து பாடமுன்கிடந்ததும் *
பாசம்நின்றநீரில்வாழும் ஆமையானகேசவா! *
ஏசவன்றுநீகிடந்தவாறு கூறுதேறவே. (உ0)

(அடாணாராகம் - ஆதிதாளம்.)

அரங்கனே! தரங்கநீர் கலங்கவன்று, குன்றுசூழ் *
மரங்கள்தேயமாநிலம்குலுங்க மாசுணஞ்சுலாய் *
நெருங்க, நீகடைந்தபோது நின்றசூரரென்செய்தார்? *
குரங்கையாளுகந்தவெந்தை! கூறுதேறவேறிதே. (உக)

பண்டுமின்றுமேலுமாய் ஓர்பாலனாகி, † ஞாலமேழ் *
உண்டுமண்டியாலிலைத்துயின்ற ஆதிதேவனே! *
வண்டுகிண்டுதண்துழாய் அலங்கலாய்! கலந்தசீர் *
புண்டரீகபாவைசேரும் மார்ப! பூமிநாதனே! (உஉ)

வால்நிறத்தொர்சீயமாய் வளைந்தவாளெயிற்றவன் *
ஊன்நிறத்துகிர்த்தலம் அழுத்தினாய்! உலாயசீர் *
நால்நிறத்தவேதநாவர் நல்லயோகினால்வணங்கு *
பால்நிறக்கடற்கிடந்த பற்பநாபனல்லையே? (உ௩)

கங்கைநீர்பயந்த பாதபங்கயத்தெம்மண்ணலே! *
அங்கையாழிசங்குதண்டு வில்லும்வாளுமேந்தினாய்! *
சிங்கமாயதேவதேவ! தேனுலாவுமென்மலர் *
மங்கை மன்னிவாழுமார்ப! ஆழிமேனிமாயனே! (உச)

வரத்தினிற்சிரத்தைமிக்க வாளெயிற்றுமற்றவன் *
உரத்தினிற்கரத்தைவைத்து உகிர்த்தலத்தையூன்றினாய் *
இரத்திநீயிதென்னபொய்? இரந்தமண்வயிற்றுளே
கரத்தி * உன்கருத்தை யாவர்காணவல்லர்? கண்ணனே! (உ௫)

ஆணினோடுபெண்ணுமாகி அல்லவோடுநல்லவாய் *
ஊணொடோசையூறுமாகி ஒன்றலாதமாயையாய் *
பூணிபேணுமாயனாகிப் பொய்யினோடுமெய்யுமாய் *
காணிபேணுமாணியாய்க் கரந்துசென்றகள்வனே! (உ௬)

விண்கடந்தசோதியாய் விளங்குஞானமூர்த்தியாய் *
பண்கடந்ததேசமேவு பாவநாசநாதனே! *
எண்கடந்தயோகினோடு இரந்துசென்றுமாணியாய் *
மண்கடந்தவண்ணம்நின்னை யார்மதிக்கவல்லரே? (உ௭)

படைத்தபாரிடந்தளந்து அதுண்டுமிழ்ந்து, பௌவநீர் *
படைத்தடைத்ததிற்கிடந்து முன்கடைந்தபெற்றியோய்! *
மிடைத்தமாலிமாலிமான் விலங்குகாலனூர்புக *
படைக்கலம்விடுத்த பல்படைத்தடக்கைமாயனே! (உ௮)

† 'ஞாலமேழும்' என்றும் வழங்குவர்.

பரத்திலும்பரத்தையாதி பௌவநீரணைக்கிடந்து *
உரத்திலும்மொருத்திதன்னை வைத்துகந்து, அதன்றியும் *
நரத்திலும்பிறத்தி நாதஞானமூர்த்தியாயினாய் ! *
ஒருத்தரும்நினாதுதன்மை இன்னதென்னவல்லரே ? (உ௯)

வானகம்மும்மண்ணகம்மும் வெற்புமேழ்கடல்களும் *
போனகம்செய்தாலிலைத்துயின்ற புண்டரீகனே ! *
தேனகஞ்செய்தண்ணறும் மலர்த்துழாய்நன்மாலையாய் ! *
கூனகம்புகத்தெறித்த கொற்றவில்லியல்லையே ? (௩0)

(பியாகடைராகம் - திரிபுடைதாளம்)

காலநேமிகாலனே ! கணக்கிலாதகீர்த்தியாய் ! *
ஞாலமேழுமுண்டு பண்டோர்பாலனாயபண்பனே ! *
வேலைவேவவில்வளைத்த வெல்சினத்தவீர ! * நின்
பாலராயபத்தர்சித்தம் முத்திசெய்யும்மூர்த்தியே ! (௩௧)

குரக்கினப்படைகொடு குரைகடலின்மீதுபோய் *
அரக்கரங்கரங்க வெஞ்சரந்துரந்தவாதிநீ *
இரக்கமண்கொடுத்தவற்கு † இருக்கவொன்றுமின்றியே *
பரக்கவைத்தளந்துகொண்ட பற்பபாதனல்லையே ? (௩உ)

மின்னிறத்தெயிற்றரக்கன்வீழ வெஞ்சரந்துரந்து *
பின்னவற்கருள்புரிந்து அரசளித்தபெற்றியோய் ! *
நன்னிறத்தொரின்சொலேழை பின்னைகேள்வ ! மன்னுசீர் *
பொன்னிறத்தவண்ணனாய புண்டரீகனல்லையே ? (௩௩)

ஆதியாதியாதிநீ ஓரண்டமாதியாதலால் *
சோதியாதசோதிநீ அதுண்மையில்விளங்கினாய் *
வேதமாகிவேள்வியாகி விண்ணினோடுமண்ணுமாய் *
ஆதியாகிஆயனாய மாயமென்னமாயமே ? (௩௪)

அம்புலாவுமீனுமாகி ஆமையாகி, ஆழியார் *
தம்பிரானுமாகிமிக்கது அன்புமிக்கு, அதன்றியும *
கொம்பராவுநுண்மருங்குல ஆயர்மாதர்பிள்ளையாய் *
எம்பிரானுமாயவண்ணம் என்கொலோ ? எம்மீசனே ! (௩௫)

ஆடகத்தபூண்முலை யசோதையாய்ச்சிபிள்ளையாய் *
சாடுதைத்தொர்புள்ளதாவி கள்ளதாயபேய்மகள் *
வீடவைத்தவெய்யகொங்கை ஐயபாலமுதுசெய்து *
ஆடகக்கைமாதர்வாயமுதம் உண்டதென்கொலோ ? (௩௬)

---

† 'இரக்கமொன்றுமின்றியே' என்று வழங்குவர்.

காய்த்தநீள்விளங்கனியுதிர்த்து எதிர்ந்த † பூங்குருந்து
சாய்த்து * மாபிளந்தகைத்தலத்த கண்ணனென்பரால் *
ஆய்ச்சிபாலையுண்டுமண்ணையுண்டு வெண்ணெயுண்டு * பின்
பேய்ச்சிபாலையுண்டு பண்டொரேனமாயவாமனா ! (௩௭)

கடங்கலந்தவன்கரி மருப்பொசித்து, ஓர்பொய்கைவாய் *
விடங்கலந்தபாம்பின்மேல் நடம்பயின்றநாதனே ! *
குடங்கலந்தகூத்தனாய கொண்டல்வண்ண ! தண்துழாய் *
வடங்கலந்தமாலைமார்ப ! காலநேமிகாலனே ! (௩௮)

வெற்பெடுத்துவேலைநீர் கலக்கினாய், அதன்றியும் *
வெற்பெடுத்துவேலைநீர் வரம்புகட்டி, வேலைசூழ் *
வெற்பெடுத்தஇஞ்சிசூழ் இலங்கைகட்டழித்தநீ *
வெற்பெடுத்துமாரிகாத்த மேகவண்ணனல்லையே ? (௩௯)

ஆனைகாத்தொரானைகொன்று அதன்றி, ஆயர்பிள்ளையாய் *
ஆனைமேய்த்தியானெயுண்டி அன்றுகுன்றமொன்றினால் *
ஆனைகாத்து, மையரிக்கண் மாதரார்திறத்து * முன்
ஆனையன்றுசென்றடர்த்த மாயமென்னமாயமே ? (௪0)

(ஆரபிராகம் - ரூபகதாளம்.)

ஆயனாகிஆயர்மங்கை வேயதோள்விரும்பினாய் *
ஆய ! நின்னையாவர்வல்லர் ? அம்பரத்தொடிம்பராய் *
மாய ! மாயமாயைகொல் ? அதன்றிநீவகுத்தலும் *
மாயமாயமாக்கினாய் உன்மாயமுற்றும்மாயமே. (௪௧)

வேறிசைந்தசெக்கர்மேனி நீறணிந்தபுன்சடை *
கீறுதிங்கள்வைத்தவன் கைவைத்தவன்கபாலமிசை *
ஊறுசெங்குருதியால் நிறைத்தகாரணந்தனை *
ஏறுசென்றடர்த்தவீச ! பேசுகூசமின்றியே. (௪௨)

வெஞ்சினத்தவேழவெண் மருப்பொசித்து ‡ உருத்தமா *
கஞ்சனைக்கடிந்து மண்ணளந்துகொண்டகாலனே ! *
வஞ்சனத்துவந்தபேய்ச்சியாவி பாலுள்வாங்கினாய் ! *
அஞ்சனத்தவண்ணனாய ஆதிதேவனல்லையே ? (௪௩)

பாலினீர்மைசெம்பொனீர்மை பாசியின்பசும்புறம்
போலுநீர்மை * பொற்புடைத்தடத்து வண்டுவிண்டுலாம் *
நீலநீர்மையென்றிவை நிறைந்தகாலம்நான்குமாய் *
மாலினீர்மைவையகம் மறைத்ததென்னநீர்மையே ? (௪௪)

---

† 'பூங்குருந்தம்' என்பது பாடம்.　　‡ 'உருத்து' என்பதும் பாடம்.

மண்ணுளாய்கொல்? விண்ணுளாய்கொல்? மண்ணுளேமயங்கிநின்று *
எண்ணுமெண்ணகப்படாய்கொல்? என்னமாயை? * நின்தமர்
கண்ணுளாய்கொல்? சேயைகொல்? அனந்தன்மேற்கிடந்தஎம்
புண்ணியா! * புனந்துழாய் அலங்கலம்புனிதனே! (௪௫)

தோடுபெற்றதண்துழாய் அலங்கலாடுசென்னியாய்! *
கோடுபற்றியாழியேந்தி அஞ்சிறைப்புள்ளூர்தியால் *
நாடுபெற்றநன்மை நண்ணமில்லையேனும், நாயினேன் *
வீடுபெற்றிறப்பொடும் பிறப்பறுக்குமாசொலே. (௪௬)

காரொடொத்தமேனி நங்கள்கண்ண! விண்ணின்நாதனே! *
நீரிடத்தராவணைக்கிடத்தி யென்பர், அன்றியும் *
ஓரிடத்தையல்லை எல்லையில்லையென்பராதலால் *
சேர்விடத்தைநாயினேன் தெரிந்திறைஞ்சுமாசொலே. (௪௭)

குன்றில்நின்றுவானிருந்து நீள்கடற்கிடந்து * மண்
ஒன்றுசென்றதொன்றையுண்டு அதொன்றிடந்துபன்றியாய் *
நன்றுசென்றநாளவற்றுள் நல்லுயிர்படைத்து, அவர்க்கு *
அன்றுதேவமைத்தளித்த ஆதிதேவனல்லையே? (௪௮)

↓↓ கொண்டைகொண்டகோதைமீது தேனுலாவுகூனிகூன் *
உண்டைகொண்டரங்கவோட்டி உள்மகிழ்ந்தநாதனூர் *
நண்டையுண்டுநாரைபேர வாளைபாய, நீலமே *
அண்டைகொண்டுகெண்டைமேயும் அந்தணீரரங்கமே. (௪௯)

வெண்திரைக்கருங்கடல் சிவந்துவேவ, முன்னோர்நாள் *
திண்திறற்சிலைக்கைவாளி விட்டவீரர்சேருமூர் *
எண்திசைக்கணங்களும் இறைஞ்சியாடுதீர்த்தநீர் *
வண்டிரைத்தசோலைவேலி மன்னுசீரரங்கமே. (௫௰)

(தோடிராகம் - ஆதிதாளம்.)

சரங்களைத்துரந்து வில்வளைத்து, இலங்கைமன்னவன் *
சிரங்கள்பத்தறுத்துதிர்த்த செல்வர்மன்னுபொன்னிடம் *
பரந்துபொன்னிரந்துநுந்தி வந்தலைக்கும்வார்புனல் *
அரங்கமென்பர் நான்முகத்தயன்பணிந்தகோயிலே. (௫௧)

பொற்றையுற்றமுற்றல்யானை போரெதிர்ந்துவந்ததை *
பற்றியுற்றுமற்றதன் மருப்பொசித்தபாகனூர் *
சிற்றெயிற்றுமுற்றல்மூங்கில் மூன்றுதண்டரொன்றினர் *
அற்ற † பற்றர்சுற்றிவாழும் அந்தணீரரங்கமே. (௫௨)

† 'பத்தர்' என்பதும் பாடம்.

மோடியோடிலச்சையாய சாபமெய்திமுக்கணான் *
கூடுசேனைமக்களோடு கொண்டுமண்டிவெஞ்சமத்து
ஓட * வாணனாயிரம் கரங்கழித்த ஆதிமால் *
பீடுகோயில்கூடுநீர் அரங்கமென்றபேரதே. (ருங)

இலைத்தலைச்சரந்துரந்து இலங்கைகட்டழித்தவன் *
மலைத்தலைப்பிறந்திழிந்து வந்துநுந்துசந்தனம் *
குலைத்தலைத்திறுத்தெறிந்த குங்குமக்குழம்பினோடு *
அலைத்தொழுகுகாவிரி அரங்கமேயஅண்ணலே! (ருச)

மன்னுமாமலர்க்கிழத்தி வையமங்கைமைந்தனாய் *
பின்னுமாயர்பின்னைதோள் மணம்புணர்ந்ததன்றியும் *
உன்னபாதமென்னசிந்தை மன்னவைத்துநல்கினாய் *
பொன்னிசூழரங்கமேய புண்டரீகனல்லையே? (ருரு)

இலங்கைமன்னனைந்தொடைந்து பைந்தலைநிலத்துக *
கலங்கவன்றுசென்றுகொன்று வென்றிகொண்டவீரனே! *
விலங்குநூலர்வேதநாவர் நீதியானகேள்வியார் *
வலங்கொளக்குடந்தையுள் கிடந்தமாலுமல்லையே? (ருசு)

சங்குதங்குமுன்கைநங்கை கொங்கைதங்கலுற்றவன் *
அங்கமங்கவன்றுசென்று அடர்த்தெறிந்தவாழியான் *
கொங்குதங்குவார்குழல் மடந்தைமார்குடைந்தநீர் *
பொங்குதண்குடந்தையுள் கிடந்தபுண்டரீகனே. (ருஎ)

மரங்கெடநடந்தடர்த்து மத்தயானைமத்தகத்து *
உரங்கெடப்புடைத்து ஓர்கொம்பொசித்துகந்தஉத்தமா! *
துரங்கம்வாய்பிளந்து மண்ணளந்தபாத! * வேதியர்
வரங்கொளக்குடந்தையுள் கிடந்தமாலுமல்லையே. (ருஅ)

சாலிவேலிதண்வயல் தடங்கிடங்குபூம்பொழில் *
கோலமாடநீடு தண்குடந்தைமேயகோவலா! *
காலநேமிவக்கரன் கரன்முரன்சிரம்மவை *
காலனோடுகூட விற்குனித்தவிற்கைவீரனே! (ருகூ)

↓↓ செழுங்கொழும்பெரும்பனி பொழிந்திட * உயர்ந்தவேய்
விழுந்துலர்ந்தெழுந்து விண்புடைக்கும்வேங்கடத்துள்நின்று *
எழுந்திருந்துதேன்பொருந்து பூம்பொழில்தழைக்கொழும் *
செழுந்தடங்குடந்தையுள் கிடந்தமாலுமல்லையே? (சுo)

(கலியாணிராகம் - ரூபகதாளம்.)

↓↓ நடந்தகால்கள்நொந்தவோ ? நடுங்கஞாலமேனமாய் *
இடந்தமெய்குலுங்கவோ ? விலங்குமால்வரைச்சுரம் *
கடந்தகால்பரந்த காவிரிக்கரைக்குடந்தையுள் *
கிடந்தவாறெழுந்திருந்துபேசு வாழிகேசனே ! (௬௧)

↓↓ கரண்டமாடுபொய்கையுள் கரும்பனைப்பெரும்பழம் *
புரண்டுவீழ, வாளைபாய் குறுங்குடிநெடுந்தகாய் ! *
திரண்டதோளிரணியன் சினங்கொளாகமொன்றையும் *
இரண்டுகூறுசெய்துகந்த சிங்கமென்பதுன்னையே. (௬௨)

நன்றிருந்துயோகநீதி நண்ணுவார்கள்சிந்தையுள் *
சென்றிருந்துதீவினைகள் தீர்த்ததேவதேவனே ! *
குன்றிருந்தமாடநீடு பாடகத்துமூரகத்தும் *
நின்றிருந்து, வெஃகணைக்கிடந்தது என்னநீர்மையே ? (௬௩)

நின்றதெந்தையூரகத்து இருந்ததெந்தைபாடகத்து *
அன்றுவெஃகணைக்கிடந்தது என்னிலாதமுன்னெலாம் *
அன்றுநான்பிறந்திலேன் பிறந்தபின்மறந்திலேன் *
நின்றதுமிருந்ததும் கிடந்ததுமென்னெஞ்சுளே. (௬௪)

நிற்பதும்மொர்வெற்பகத்து இருப்பும்விண், கிடப்பதும் *
நற்பெருந்திரைக்கடலுள் நானிலாதமுன்னெலாம் *
அற்புதன்னனந்தசயனன் ஆதிபூதன்மாதவன் *
நிற்பதும்மிருப்பதும் கிடப்பதுமென்னெஞ்சுளே. (௬௫)

இன்றுசாதல்நின்றுசாதல் அன்றி யாரும்வையகத்து *
ஒன்றிநின்றுவாழ்தலின்மைகண்டும் நீசரென்கொலோ ? *
அன்றுபாரளந்தபாதபோதை யொன்றி, வானின்மேல் *
சென்றுசென்றுதேவராய் இருக்கிலாதவண்ணமே. (௬௬)

சண்டமண்டலத்தினூடு சென்றுவீடுபெற்று * மேலை
கண்டுவீடிலாதகாதலின்பம் நாளுமெய்துவீர் *
புண்டரீகபாதபுண்யகீர்த்தி நுஞ்செவிமடுத்து
உண்டு * நும்முறுவினைத் துயருள்நீங்கியுய்ம்மினோ. (௬௭)

முத்திறத்துவாணியத்து இரண்டிலொன்றும்நீசர்கள் *
மத்தராய்மயங்குகின்றது இட்டதிலிறந்துபோந்து *
எத்திறத்துமுய்வது ஒருபாயமில்லை, உய்குறில் *
† தொத்துறுத்ததண்துழாய் நன்மாலைவாழ்த்திவாழ்மினோ. (௬௮)

---

† 'தொத்திறுத்த' என்பதும் பாடம்.

காணிலும்உருப்பொலார் செவிக்கினாதகீர்த்தியார் *
பேணிலும்வரம்† தர மிடுக்கிலாததேவரை *
ஆணமென்றடைந்துவாழும் ஆதர்காள் ! எம்மாதிபால் *
பேணிநும்‡பிறப்பெனும் பிணக்கறுக்ககிற்றிரே. (௬௯)

குந்தமோடுசூலம்வேல்கள் தோமரங்கள்தண்டுவாள் *
பந்தமானதேவர்கள் பரந்துவானகம்முற *
வந்தவாணனீரைஞ்ஞூறு தோள்களைத்துணித்தநாள் *
அந்தவந்தவாகுலம் அமரரேயறிவரே (௭௦)

(ஸாவேரிராகம் - திரிபுடைதாளம்.)

வண்டுலாவுகோதைமாதர் காரணத்தினால்வெகுண்டு *
இண்டவாணனீரைஞ்ஞூறு தோள்களைத்துணித்தநாள் *
முண்டனீறன்மக்கள்வெப்பு மோடியங்கியோடிடக்
கண்டு * நாணிவாணனுக்கு இரங்கினானெம்மாயனே. (௭௧)

போதில்மங்கை பூதலக்கிழத்தி தேவி, அன்றியும் *
போதுதங்குநான்முகன்மகன் அவன்மகன்சொலில் *
மாதுதங்குகூறன் ஏறதூர்தியென்று வேதநூல் *
ஓதுகின்றதுண்மை அல்லதில்லைமற்றுரைக்கிலே. (௭௨)

மரம்பொதச்சரந்துரந்து வாலிவீழமுன்னோர்நாள் *
உரம்பொதச்சரந்துரந்த உம்பராளியெம்பிரான் *
வரம்குறிப்பில்வைத்தவர்க்கு அலாதுவானமாளிலும் *
நிரம்புநீடுபோகம் எத்திறத்துமியார்க்குமில்லையே. (௭௩)

அறிந்தறிந்துவாமனன் அடியிணைவணங்கினால் *
செறிந்தெழுந்தஞானமோடு செல்வமும்சிறந்திடும் *
மறிந்தெழுந்ததெண்திரையுள் மன்னுமாலைவாழ்த்தினால் *
பறிந்தெழுந்துதீவினைகள் பற்றறுதல்பான்மையே. (௭௪)

ஒன்றிநின்றுநற்றவஞ்செய்து ஊழியூழிதோறெலாம் *
நின்றுநின்றவன்குணங்கள் உள்ளிஉள்ளம்தூயராய் *
சென்றுசென்றுதேவதேவர் உம்பரும்பரும்பராய் *
அன்றி,எங்கள்செங்கண்மாலை யாவர்காணவல்லரே ? (௭௫)

புன்புலவழியடைத்து அரக்கிலச்சினைசெய்து *
நன்புலவழிதிறந்து ஞானநற்சுடர்கொளீஇ *
என்பிலெள்கிநெஞ்சுருகி உள்கனிந்தெழுந்ததோர் *
அன்பிலன்றியாழியானை யாவர்காணவல்லரே ? (௭௬)

† 'தரும்மிடுக்கு' என்பதும் பாடம். ‡ 'இறப்பெனும்' என்பதும் சிலர் பாடம்.

எட்டுமெட்டுமெட்டுமாய் ஓரேழுமேழுமேழுமாய் *
எட்டுமூன்றுமொன்றுமாகி நின்றஆதிதேவனை *
எட்டினாயபேதமோடு இறைஞ்சிநின்று, அவன்பெயர் *
எட்டெழுத்துமோதுவார்கள் வல்லர்வானமாளவே. (௭௭)

சோர்விலாதகாதலால் தொடக்கறுமனத்தராய் *
நீரராவணைக்கிடந்த நின்மலன்நலங்கழல் *
ஆர்வமோடிறைஞ்சிநின்று அவன்பெயரெட்டெழுத்தும் *
வாரமாகவோதுவார்கள் வலலர்வானமாளவே. (௭௮)

பத்தினோடுபத்துமாய் ஓரேழினோடோரொன்பதாய் *
பத்தினால்திசைக்கண்நின்ற நாடுபெற்றநன்மையாய் *
பத்தினாயதோற்றமோடு ஓராற்றல்மிக்கஆதிபால் *
பத்தராமவர்க்கலாது முத்திமுற்றலாகுமே? (௭௯)

வாசியாகிநேசமின்றி வந்தெதிர்ந்ததேனுகன் *
நாசமாகிநாளுலப்ப நன்மைசேர்பனங்கனிக்கு *
வீசி, மேல்நிமிர்ந்ததோளில் இல்லையாக்கினாய் * கழற்கு
ஆசையாமவர்க்கலால் அமரராகலாகுமே? (௮௦)

(குருட்டிராகம் - திரிபுடைதாளம்.)

கடைந்தபாற்கடற்கிடந்து † காலநேமியைக்கடிந்து *
உடைந்தவாலிதன் ‡ தனக்கு உதவவந்திராமனாய் *
மிடைந்தவேழ்மரங்களும் அடங்கவெய்து * வேங்கடம்
அடைந்தமாலபாதமே அடைந்துநாளுமுய்ம்மினோ. (௮௧)

எத்திறத்துமொத்துநின்று உயர்ந்துயர்ந்தபெற்றியோய்! *
முத்திறத்துமூரிநீர் அராவணைத்துயின்ற * நின்
பத்துறுத்தசிந்தையோடுநின்று, பாசம்விட்டவர்க்கு *
எத்திறத்துமின்பம் இங்குமங்குமெங்குமாகுமே. (௮௨)

மட்டுலாவுதண்துழா யலங்கலாய்! § புலன்கழல் *
விட்டு $ விள்விலாதபோகம் விண்ணில்நண்ணியேறினும் *
எட்டினோடிரண்டெனும் கயிற்றினால்மனந்தனைக்
கட்டி * வீடிலாதுவைத்த காதலின்பமாகுமே. (௮௩)

---

† 'காலநேமியைக் கடந்து' என்பதும் பாடம். ‡ 'தன்பினுக்கு' என்று பாட மிருக்கலாம். § 'பொலன்கழல்' என்பது சிலர்பாடம். $ 'வீள்விலாத' என்றும் கூறுவர்.

பின்பிறக்கவைத்தனன்கொல்? அன்றிநின்றுதன்கழற்கு *
அன்புறைக்கவைத்தநாள் அறிந்தனன்கொல்? ஆழியான் *
தன்திறத்தொரன்பிலா அறிவிலாதநாயினேன் *
என்திறத்திலென்கொல்? எம்பிரான்குறிப்பில்வைத்ததே. (அச)

நச்சராவணைக்கிடந்த நாத! பாதபோதினில் *
வைத்தசிந்தைவாங்குவித்து நீங்குவிக்கநீயினம் *
மெய்த்தன்வல்லையாதலால் அறிந்தனன், நின்மாயமே *
உய்த்துநின்மயக்கினில் மயக்கலென்னைமாயனே! (அரு)

சாடுசாடுபாதனே! சலங்கலந்தபொய்கைவாய் *
ஆடராவின்வன்பிடர் நடம்பயின்றநாதனே! *
கோடுநீடுகைய! செய்யபாதநாளுமுள்ளினால் *
வீடனாகமெய்செயாத வண்ணமென்கொல்? கண்ணனே! (அசா)

நெற்றிபெற்றகண்ணன் விண்ணின்நாதனோடு, போதின்மேல் *
நற்றவத்துநாதனோடு மற்றுமுள்ளவானவர் *
கற்றபெற்றியால்வணங்குபாத! நாத! வேத! * நின்
பற்றலாலொர்பற்று மற்றதுற்றிலேனுரைக்கிலே. (அஎ)

வெள்ளைவேலைவெற்புநாட்டி வெள்ளெயிற்றராவளாய் *
அள்ளலாக்கடைந்தவன்று அருவரைக்கோராமையாய் *
உள்ளநோய்கள்தீர்மருந்து வானவர்க்களித்த * எம்
வள்ளலாரையன்றி மற்றோர்தெய்வம்நான்மதிப்பனே? (அஅ)

பார்மிகுத்தபாரம் முன்னொழிச்சுவான், அருச்சுனன் *
தேர்மிகுத்துமாயமாக்கி நின்றுகொன்று, வென்றிசேர் *
மாரதர்க்குவான்கொடுத்து வையமைவர்பாலதாம் *
சீர்மிகுத்தநின்னலால ஓர்தெய்வம்நான்மதிப்பனே? (அகூ)

குலங்களாயவீரிரண்டில் ஒன்றிலும்பிறந்திலேன் *
நலங்களாயநற்கலைகள் நாவிலும்நவின்றிலேன் *
புலன்களைந்தும்வென்றிலேன் பொறியிலேன்புனித! * நின்
இலங்குபாதமன்றி மற்றோர்பற்றிலேனெம்மீசனே! (கூ0)

(சங்கராபரணராகம் - ரூபகதாளம்.)

பண்ணுலாவுமென்மொழிப் படைத்தடங்கணாள்பொருட்டு *
எண்ணிலாவரக்கரை நெருப்பினால்நெருக்கினாய் *
கண்ணலாலோர்கண்ணிலேன் கலந்தசுற்றம்மற்றிலேன் *
எண்ணிலாதமாய! நின்னை என்னுள்நீக்கலென்றுமே. (கூக)

விடைக்குலங்களேழடர்த்து வென்றிவேற்கண்மாதரார் *
கடிக்கலந்ததோள்புணர்ந்த காலிஆய! வேலைநீர் *
படைத்தடைத்ததிற்கிடந்து முன்கடைந்து, நின்தனக்கு *
அடைக்கலம்புகுந்தவென்னை அஞ்சலென்னவேண்டுமே. (கஉ)

சுரும்பரங்குதண்துழாய் துதைந்தலர்ந்தபாதமே *
விரும்பிநின்றிறைஞ்சுவேற்கு இரங்குஅரங்கவாணனே! *
கரும்பிருந்தகட்டியே! கடற்கிடந்தகண்ணனே! *
இரும்பரங்கவெஞ்சரந்துரந்த விலிராமனே! (கங)

ஊனில்மேயஆவிநீ உறக்கமோடுணர்ச்சிநீ *
ஆனில்மேயவைந்தும்நீ அவற்றுள்நின்றதூய்மைநீ *
வானினோடுமண்ணும்நீ வளங்கடற்பயனும்நீ *
யானும்நீஅதன்றி எம்பிரானும்நீஇராமனே! (கச)

அடக்கரும்புலன்கள்ஐந்தடக்கி ஆசையாமவை *
தொடக்கறுத்துவந்து நின்தொழிற்கண்நின்றஎன்னைநீ *
விடக்கருதிமெய்செயாது மிக்கோராசையாக்கிலும் *
கடற்கிடந்தநின்னலால் ஓர்கண்ணிலேன்எம்மண்ணலே! (கரு)

வரம்பிலாத † மாயைமாய! வையமேழும்மெய்ம்மையே *
வரம்பிலூழியேத்திலும் வரம்பிலாதகீர்த்தியாய்! *
வரம்பிலாதபல்பிறப்பு அறுத்துவந்துநின்கழல் *
பொருந்துமா, திருந்தநீ வரஞ்செய்புண்டரீகனே! (கசு)

வெய்யவாழிசங்குதண்டு வில்லும்வாளுமேந்துசீர்க்
கைய * செய்யபோதில்மாது சேரும்மார்ப! நாதனே! *
ஐயிலாயஆக்கைநோய் அறுத்துவந்துநின்னடைந்து *
உய்வதோருபாயம்நீ எனக்குநல்கவேண்டுமே. (கஎ)

மறந்துறந்துவஞ்சம்மாற்றி ஐம்புலன்களாசையும்
துறந்து * நின்கணாசையே தொடர்ந்துநின்றநாயினேன் *
பிறந்திறந்துபேரிடர்ச் சுழிக்கணின்றுநீங்குமா *
மறந்திடாதுமற்றெனக்கு மாய! நல்கவேண்டுமே. (கஅ)

காட்டிநான்செய்வல்வினை பயன்தனால்மனந்தனை *
நாட்டிவைத்துநல்லவல்ல செய்யவெண்ணினாரென *
கேட்டதன்றியென்னதாவி பின்னைகேள்வ! நின்னொடும் *
பூட்டிவைத்தவென்னை நின்னுள்நீக்கல்பூவைவண்ணனே! (ககூ)

---

† 'மாய மாய' என்று சிலர் கூறுவர்.

பிறப்பினோடுபேரிடர்ச் சுழிக்கண்நின்றும்நீங்குமஃது *
இறப்பவைத்தஞானநீசரைக் கரைக்கொடேற்றுமா *
பெறற்கரியநின்னபாத பத்தியானபாசனம் *
† பெறற்கரியமாயனே! எனக்குநல்கவேண்டுமே. (௧௦௦)

(செஞ்சுருட்டிராகம் - ரூபகதாளம்.)

இரந்துரைப்பதுண்டுவாழி ஏமநீர்நிறத்தமா! *
வரந்தரும்திருக்குறிப்பில் வைத்ததாகில்மன்னுசீர் *
பரந்தசிந்தையொன்றிநின்று நின்னபாதபங்கயம் *
நிரந்தரம்நினைப்பதாக நீநினைக்கவேண்டுமே. (௧௦௧)

விள்விலாதகாதலால் விளங்குபாதபோதில்வைத்து *
உள்ளுவேனதூனநோய் ஒழிக்குமா, தெழிக்குநீர் *
பள்ளிமாய! பன்றியாய வென்றிவீர! * குன்றினால்
துள்ளுநீர்வரம்புசெய்த தோன்றல்! ஒன்றுசொல்லிடே. (௧௦௨)

திருக்கலந்துசேருமார்ப! தேவதேவதேவனே! *
இருக்கலந்தவேதநீதி ஆகிநின்றநின்மலா! *
கருக்கலந்தகாளமேக மேனியாய! நின்பெயர் *
உருக்கலந்தொழிவிலாது உரைக்குமாறுரைசெயே. (௧௦௩)

கடுங்கவந்தன்வக்கரன் கரன்முரன்சிரம்மவை *
இடந்துகூறுசெய்த பல்படைத்தடக்கைமாயனே! *
கிடந்திருந்துநின்றியங்குபோதும் நின்னபொற்கழல் *
தொடர்ந்துவிள்விலாதது ஓர்தொடர்ச்சிநல்கவேண்டுமே. (௧௦௪)

மண்ணையுண்டுமிழ்ந்து பின்இரந்துகொண்டளந்து * மண்
கண்ணுளல்லதில்லையென்று வென்றகாலமாயினாய்! *
பண்ணைவென்றவின்சொல்மங்கை கொங்கைதங்குபங்கயக்
கண்ண! * நின்னவண்ணமல்லதில்லை எண்ணும்வண்ணமே. (௧௦௫)

கறுத்தெதிர்ந்தகாலநேமி காலனோடுகூட * அன்று
அறுத்தவாழிசங்குதண்டு வில்லும்வாளுமேந்தினாய்! *
தொறுக்கலந்தவூனமஃது ஒழிக்கவன்று, குன்றமுன் *
பொறுத்தநின்புகழ்க்கலால் ஓர்நேசமில்லைநெஞ்சமே! (௧௦௬)

காய்சினத்தகாசிமன்னன் வக்கரன்பவுண்டிரன் *
மாசினத்தமாலிமான் சுமாலிகேசிதேனுகன் *
நாசமுற்றுவீழ நாள்கவர்ந்தநின்கழற்கலால் *
நேசபாசமெத்திறத்தும் வைத்திடேன்எம்மீசனே! * (௧௦௭)

† 'பிறர்க்கரிய' என்றும் பாடம்.

கேடில்சீர்வரத்தனாய்க் கெடும்வரத்தயன்அரன் *
நாடினோடுநாட்டமாயிரத்தன் நாடுநண்ணிலும் *
வீடதானபோகமெய்தி வீற்றிருந்தபோதிலும் *
கூடுமாசையல்லதொன்று கொள்வனோ? குறிப்பிலே. (க0அ)

சுருக்குவாரையின்றியே சுருங்கினாய், சுருங்கியும் *
பெருக்குவாரையின்றியே பெருக்கமெய்துபெற்றியோய்! *
செருக்குவார்கள்தீக்குணங்கள் தீர்த்ததேவதேவனென்று *
இருக்குவாய்முனிக்கணங்களேத்த யானுமேத்தினேன். (க0௯)

தூயனாயுமன்றியும் சுரும்புலாவுதண்டுழாய் *
மாய! நின்னைநாயினேன் வணங்கிவாழ்த்துமீதெலாம் *
நீயும்நின்குறிப்பினில் பொறுத்துநல்கு, வேலைநீர் *
பாயலோடுபத்தர்சித்தம்மேய வேலைவண்ணனே! (கக0)

(மோஹநராகம் - ரூபகதாளம்.)

வைதுநின்னைவல்லவா பழித்தவர்க்கும், மாறில்போர் *
செய்துநின்னசெற்றத்தீயில் வெந்தவர்க்கும், வந்துன்னை *
எய்தலாகுமென்பர் ஆதலால், எம்மாய! நாயினேன் *
செய்தகுற்றம்நற்றமாகவேகொள் ஞாலநாதனே! (ககக)

வாள்களாகிநாள்கள்செல்ல நோய்மைகுன்றிமூப்பெய்தி *
மாளுநாளதாதலால் வணங்கிவாழ்த்தென்நெஞ்சமே! *
ஆளதாகும்நன்மையென்று நன்குணர்ந்ததன்றியும் *
மீள்விலாதபோகம்நல்கவேண்டும் மாலபாதமே. (ககஉ)

சலங்கலந்தசெஞ்சடைக் கறுத்தகண்டன், வெண்தலை *
புலன்கலங்கவுண்டபாதகத்தன் வன்துயர்கெட *
அலங்கல்மார்வில்வாசநீர் கொடுத்தவன், அடுத்தசீர் *
நலங்கொள்மாலைநண்ணும்வண்ணம் எண்ணுவாழிநெஞ்சமே! (ககங)

ஈனமாயவெட்டும்நீக்கி ஏதமின்றிமீதுபோய் *
வானமாளவல்லையேல் வணங்கிவாழ்த்தென்நெஞ்சமே! *
ஞானமாகிஞாயிறாகி ஞாலமுற்றும், ஓரெயிற்று *
ஏனமாயிடந்தமூர்த்தி எந்தைபாதமெண்ணியே. (ககச)

↓↓ அத்தனாகியன்னையாகி ஆளுமெம்பிரானுமாய் *
ஒத்தொவ்வாதபல்பிறப்பொழித்து நம்மையாட்கொள்வான் *
முத்தனார்முகுந்தனார் புகுந்துநம்முள்மேவினார் *
எத்தினால்இடர்க்கடல்கிடத்தி? ஏழைநெஞ்சமே! (ககரு)

மாறுசெய்தவாளரக்கன் நாளுலப்ப * அன்றிலங்கை
நீறுசெய்துசென்றுகொன்று வென்றிகொண்டவீரனார் *
வேறுசெய்துதம்முளென்னை வைத்திடாமையால் * நமன்
கூறுசெய்துகொண்டிறந்த குற்றமெண்ணவல்லனே? (ககசு)

அச்சம்நோயொடல்லல்பல் † பிறப்பு ஆயமூப்பிவை *
வைத்தசிந்தைவைத்தவாக்கை மாற்றிவானிலேற்றுவான் *
அச்சுதன்அனந்தகீர்த்தி ஆதியந்தமில்லவன் *
நச்சுநாகணைக்கிடந்த நாதன்வேதகீதனே. (ககஎ)

சொல்லினும்தொழிற்கணும் தொடக்கறாதஅன்பினும் *
அல்லும்நன்பகலினோடும் ஆனமாலைகாலையும் *
அல்லிநாண்மலர்க்கிழத்திநாத! பாதபோதினை *
புல்லியுள்ளம்விள்விலாது பூண்டுமீண்டதில்லையே. (ககஅ)

↓↓பொன்னிசூழரங்கமேய பூவைவண்ண! மாய! கேள் *
என்னதாவியென்னும் வல்வினையினுட்கொழுந்தெழுந்து *
உன்னபாதமென்னநின்ற ஒண்சுடர்க்கொழுமலர் *
மன்னவந்துபூண்டு வாட்டமின்றியெங்கும்நின்றதே. (கககூ)

↓↓இயக்கறாதபல்பிறப்பில் என்னைமாற்றி, இன்றுவந்து *
உயக்கொள்மேகவண்ணன்நண்ணி என்னிலாயதன்னுளே *
மயக்கினான்தன்மன்னுசோதி ஆதலால், என்னாவிதான் *
இயக்கெலாமறுத்து அறாதஇன்பவீடுபெற்றதே. (கஉ0)

அடிவரவு:—பூ ஆறு ஐந்து மூன்று நின்று நாகம ஒன்று ஆதி தாது தன்னுள் சொல்—சொல் உலகு இன்னை தூய்மை அங்கம் தலை ஏக விடத்த புள் கூசம் அரங்கன்—அரங்கன் பண்டு வால்நிற கங்கை வரத்தின் ஆண் விண் படைத்த பரத்தில் வானகம் கால—கால குரக்கு மின் ஆதி அம்பு ஆடகம் காய்த்த கடம் வெற்பு ஆனை ஆயன்—ஆயன் வேறு வெஞ்சின பால் மண் தோடு கார் குன்று கொண்டை வெண்டிரை சரம்—சரம் பொற்றை மோடி இலை மன் இலங்கை சங்கு மரம் சாலி செழு நடந்த—நடந்த கரண்டம் நன்று நின்றது நிற்பது இன்று சண்ட முத்திறம் காணில் குந்தம் வண்டு—வண்டு போதில் மரம் அறிந்து ஒன்றி புன்புல எட்டு சோர்வு பத்தின் வாசி கடை—கடை எத்திறம் மட்டு பின் நச்சரா சாடு நெற்றி வெள்ளை பார் குலம் பண்—பண் விடை சுரும்பு ஊனில் அடக்கு வரம்பு வெய்ய மறம் காட்டினான் பிறப்பு இரந்து —இரந்து விள் திரு கடும் மண்ணை கறுத்து காய்சினத்த கேடு சுருக்கு தூயன் வைது—வைது வாள் சலம் ஈனம் அத்தன் மாறு அச்சம் சொல் பொன்னி இயக்கறாத காவல்.

திருமழிசைப்பிரான் திருவடிகளே சரணம்.

திருச்சந்தவிருத்தம் ஸம்பூர்ணம்.

† 'பிறப்பவாய' என்று சிலர் பாடங்கொள்வர்.

ஸ்ரீ

தொண்டரடிப்பொடியாழ்வார்

வைபவம்.

കോദണ്ഡേ ജ്യേഷ്ഠനക്ഷത്രേ മണ്ഡംഗുഡിപുരോദ്ഭവം ।
ചോളോർവ്യാം വനമാലാംശം ഭക്തപദ്രേണുമാശ്രയേ ॥

కోదణ్డే జ్యేష్ఠనక్షత్రే మణ్డంగుడీ పురోద్భవం ।
చోళోర్వ్యాం వనమాలాంశం భక్తపద్రేణుమాశ్రయే ॥

கோதண்டே ஜ்யேஷ்டநக்ஷத்ரே மண்டங்குடிபுரோத்பவம்-
சோளோர்வ்யாம்வநமாலாம்ஸம் பக்தபத்ரேணுமாஸ்ரயே.

"சோழவளநாடு சோறுடைத்து" என்ற ஔவையாரமுதமொழியின்படி உயிர்கட்குச் ஜீவநாதாரமாகவுள்ள பயிர்வளத்துக்குப் பிரதானகாரணமான நாட்டுச்செழிப்பைக் காவேரிப்பாய்ச்சலால் நன்குபெற்று அந்நீர்வளத்தை மிகுதியாகவுடைமையால் 'புனனாடு' என்று புகழுற்ற சோழநாட்டிலே, "ஈரிருபதாஞ் சோழம்" என்றபடி பிரசித்தமாகவிருக்கிற பாடல்பெற்ற விஷ்ணுஸ்தலங்கள் நாற்பதிற் புள்ளம்பூதங்குடி யென்ற திவ்வியதேசத்தின் அருகிலுள்ள திருமண்டங்குடி யென்னுந் திருப்பதியிலே, பகவானது சொரூபமென்று ஸ்ரீகீதையால் விளங்குகின்ற சிறப்புடைய மார்கழி மாதத்தில், கேட்டைநக்ஷத்திரத்தில், வைஜயந்தியென்னும் வநமாலையின் அம்சமாய், ஒருவர், வேதம்வல்ல ஒரு முன்குடுமிப்பிராமணரது குமாரராய்த் தோன்றினார். நாராயணனது கடாக்ஷத்தால் அவதரித்த அவ்வந்தணகுமாரர்க்குத் தந்தையார் விப்பிரநாராயணரென்று பேரிட்டுச் சௌளம் உபநயநம் முதலிய வைதிகச்சடங்குகளை உரிய பருவங்களில் முறைப்படி செய்வித்து வேதசாஸ்திரங்களைப் பயிற்றுவிக்க, அவர் நான்குவேதங்களையும் ஆறுசாஸ்திரங்களையுங் கசடறக்கற்று வல்லராய் அக்கல்விக்குஏற்பச் சுத்தசத்துவகுணமே தலையெடுத்து ஞானவைராக்கியங்களோடு கூடித் தந்தை தாயர்க்கு மகிழ்ச்சிதந்து வாழ்ந்துவந்தார். அப்படியிருக்கையில், சேனைமுதலியார் மீளாவுலகினின்று எழுந்தருளி அவர்க்குப் பஞ்சஸம்ஸ்காரங்களைப் பண்ணி மந்திரோபதேசமுஞ் செய்து சென்றனர்.

அங்ஙனம் மந்திரார்த்தத்தை யறிந்த விப்பிரநாராயணர், கிருபாநிதியான கேசவனது குணாமிருதத்திலே ஆழ்ந்த சிந்தையுடையராய் அதனால் இம்மையின்பங்களை வெறுத்து விவாகத்தில் விருப்பில்லாமல் முதலாச்சிரமத்திலேயே நின்று, பிரணவப்பொருளான எம்பெருமான் பிராணிகளை ஈடேற்றுதற் பொருட்டுப் பூலோகத்திற் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற திவ்விய தேசங்களிற் சென்று ஸ்வாமிதரிசனஞ்செய்யக் கருதி, அவற்றில் முதலதான திருவரங்கம் பெரியகோயிலை யடைந்தார். அங்கு உபயகாவேரிமத்தியிலே

சேவைசயநத்திலே "குடதிசை முடியைவைத்துக் குணதிசைபாதம்நீட்டி, வட திசைபின்புகாட்டித் தென்திசையிலங்கை நோக்கி" பூமங்கையிருவர் பொன்னடிவருடப் பள்ளிகொண்டுள்ள பெருமானைச் சேவித்துநிற்க, அப்பொழுது நம்பெருமாள் தம்முடைய வடிவழகினால் இவரைத் தம்பக்கல் மிகுந்தபக்தியுடையராம்படி செய்தருளினார்.

உடனே இவர் தமதுவாணாள் வீணாகாதபடி ஒப்புயர்வற்ற அப்பெருமானுக்கு உற்றஅடிமைத்தொழில் செய்யக் கருதி, முன்பு வடமதுரையிற் கம்சனுடைய குற்றேவலாளனான மாலாகாரன் ஒருகால் வாசுதேவனுக்குப் புஷ்பம் சமர்ப்பித்துப் பேறுபெற்றதையும், கஜேந்திராழ்வான் புஷ்பகைங்கரியத்தாலே துன்பந்தீர்ந்ததையும் ஆலோசித்து, பெரியாழ்வார்போலவே தாமும் பெருமாளுக்குப் பூவிடுதலையும் திருத்துழாய் சாத்துதலையுமே திருப்பணியாகக் கடைப்பிடித்து, இந்திரனது நந்தனவனமோ குபேரனது சைத்திரரதமென்னும் உத்தியானமோ என்று காண்பவர் ஐயுறுமாறு ஒருதிருநந்தவனத்தை அப்பதியிலே செழிப்பாக அமைத்து, காலந்தோறும் பலவகைப் பூமாலைகளையும் திருத்துழாய் நன்மாலையையும் கட்டி யெடுத்துக் கொண்டுவந்து அழகியமணவாளனுக்குச் சாத்திக் கண்குளிரக்கண்டு மகிழ்ந்துகொண்டு, தமது நிலைக்கு ஏற்பப் பிராமணகிருகங்களில் அந்நபிக்ஷை வாங்கியுண்டு ஜீவித்துவந்தார்.

இங்ஙன மிருக்கையில், திருவரங்கத்துக்கு வடக்கிலுள்ள திருக்கரம்பனூரென்ற உத்தமர்கோயிலில் தேவமாதாம்சமாய்ப் பிறந்து ஒப்புயர்வற்ற எழில் வாய்ந்த தேவதேவி யென்பாளொரு கணிகை, ஒருநாள் பாங்கிமாரோடுந் தமக்கையோடும் உறையூர்க்குச் சென்று, அதனை இராசதானியாகக் கொண்டு வாழ்கிற சோழராசனது முன்னிலையில் சிருத்த கீதங்களை நிகரறநிகழ்த்தி அவனை மோகிப்பித்து அளவிறந்த செல்வத்தை அவன்பாற் பெற்று மிக்கசெருக்கோடு மீண்டுவருகையில், இளைப்பாறுதற்பொருட்டு இவரது பூம்பொழிலின் ஒருபுறத்திலே ஓர்மரத்தினடியில் இருந்து, கண்டவர் கண்கவரும் அத்தண்டலையின் சிறப்பை நாற்புறத்தும் நன்றாக உற்றுநோக்கி, அம்மலர்ச்சோலையைத் தனக்குரிய பொருளாக்கி அதிற் பூக்கொய்தும் புனல்விளையாடியும் பொழுதுபோக்கி மனமகிழ விரும்பி, அதற்குஉரியவனைக் கண்டு தன்வசப்படுத்த நினைத்து, அங்கு உலாவிநின்றாள். நிற்கையில், ஒருசார், விப்பிரநாராயணர், மனத்திற்பதிந்த சுத்தமாகிய சத்துவகுணந்தான் அகத்துஅடங்காது புறத்துப் பொசிந்ததோ வென்னும்படி தூய்தான வஸ்திரமும் முப்புரிநூலும் பன்னிரண்டு திருமண்காப்பும் வெள்ளொளிசெய்துவிளங்க, கழுத்தில் தாமரைமணிமாலைகளையும் துளசிமணிமாலைகளையும் தரித்து, பூஞ்செடிகளுக்குப் பாத்திகட்டுதலுந் தண்ணீர்பாய்ச்சுதலுஞ் செய்துகொண்டிருக்க, கண்ணுற்றாள்.

உடனே அவள், அவரருகில்வந்து முன்நின்று அவரைத்தொழுது தனது தேகசௌந்தரியத்தை அவர்க்குக்காட்டிச் சிலகுறிப்புச்செய்யவும், விஷயாந்தரங்களில் விழித்தகண் குருடாத்திரி வீரராகிய அவர் அவளைக் கண்ணெடுத்துப் பார்த்தலுஞ் செய்யாது திரஸ்கரித்துத் தமதுகைங்கரியத்திற் கருத்தூன்றியிருந்தனர். அதுநோக்கித் தேவதேவி ஆச்சரியமுற்றுத் தன்முன்பிறந்தாளுடனே 'அரசர் முதலிய பலரையும் எளிதில் வயப்படுத்துகிற ரூபலாவண்யங்

களிற்சிறந்த யான் சென்று எதிர்நிற்கவும் பாராதிருக்கின்ற இவன் பித்தனோ? பேடனோ?' என்றுகூற, அதற்கு அவள் 'பித்தனும் பேடனு மல்லன்; சுவாமி கைங்கரியத்திற் பற்றின சித்தமுடைய மகாவிரக்தன்: இவனைச் சுவாதீனப் படுத்த உன்னாலாகாது' என்று சொன்னவளவிலே, வடிவழகில் இறுமாப்புடைய தேவதேவி 'இவனை நான் வசீகரியாமல் விடுவதில்லை' என்று உறுதி கூறுதலும், முன்னவள் 'நீ அங்ஙனஞ்செய்தால், நான் உனக்கு ஆறுமாசகாலம் அடியவளாவேன்' என்று சபதஞ்செய்ய, பின்னவளும் 'நான் அங்ஙனஞ்செய்யேனாயின், ஆறுமாசம் உனக்குத் தொழுத்தையாவேன்' என்று பிரதிஜ்ஞை பண்ணினாள்.

அநந்தரம் அவள், தன் ஆபரணங்களைக் கழற்றிக்கொடுத்துத் தோழியரோடு தமக்கையையும் அனுப்பிவிட்டுத் தனியே மெல்லியதொரு செங்காவிச் சேலையுடுத்து அவரையடுத்துத் திருவடிகளில்விழுந்து நமஸ்கரிக்க, அவர் 'நீ யார்? ஏன் இங்கு வந்தாய்'?என்று வினவ, அதற்கு விலைமகள் 'அடியேன் முற்பிறப்பிற்செய்த தீவினையால் வேசையாய்ப் பிறந்தவள்; அடியேனைத் தாய் அக்குலத்திற்கு உரிய தொழிலைக் கைக்கொள்ளும்படி நிர்ப்பந்திக்க, அதற்கு இசையாமல் அவளைத் துறந்து மகாபாகவதரான தேவரீரது திருவடியைச் சரணமடைந்து உய்வுபெற நாடிவந்துற்றேன்; கருணைக்கடலான தேவரீர் அநாதையான என்னைக் காத்தருளவேணும்: செடிகொடிகளுக்கு நீர்பெய்தல், பூப்பறித்தல், மாலைகட்டுதல், தேவரீரில்லாதசமயங்களிற் சோலையைப்பாதுகாத்தல் முதலிய பணிவிடைகளில் எதைநியமித்தாலுஞ் செய்துவரக்காத்திருக்கிறேன்' என்று மிக்கவணக்கத்தோடு விண்ணப்பஞ்செய்தாள். அவர் அவளது கபடசித்தத்தை யுணராமல் உடன்பட்டுத் தாம் உண்டுசேடித்த அந்நத்தைக் கொடுத்துவர, அவளும் அதனை வாங்கிப் புசித்துத் திருத்துழாய் முதலியவற்றிற்குப் பாத்திகொத்துதல், நீர்பரிமாறுதல் முதலிய குற்றேவல்களைத் தவறாமல் மிக்கவணக்கத்துடனே எப்பொழுதுஞ் செய்துகொண்டு சோலையைச் செழுமையாக வளர்த்து அவர்க்குத் தன்பக்கல் நம்புதலுண்டாம்படி நல்லவள்போல நடித்துவந்தாள்.

இப்படி அநேகமாதங்கழிந்தபின் ஒருநாள் பெருமழை பொழிகின்றபொழுது, பர்ணசாலையிற் பிரவேசித்திருந்த அவ்வந்தணர், வெளியிலே அவள் நனைந்துவருந்துதலைப் பார்த்து இயற்கையான ஜீவகாருணியத்தால் உள்ளே வந்து நிற்கும்படி நியமிக்க, அதுவேவியாஜமாக அவள் அருகில்வந்து தனது மென்மொழிகளாலும் மேனிமினுக்கினாலும் மனத்தைக்கவர்ந்து அவரைத் தன்வசமாக்கிச் சிலகாலம் அவருடனே யிருந்து, பின்பு பொருளில்லாத அவரைப் பொருள்செய்யாது கைவிட்டுத் தன்கிருகத்திற்சென்று சேர்ந்தவளவிலே, இவர் அவள்பிரிவை யாற்றாமல் அவளது வீட்டுவாயிலில் சென்று தியங்கி நின்றார்.

அவ்வளவிலே, பிராட்டி பெருமாளைநோக்கி 'நமக்குப் பலகாலமாகப்பணி செய்துவந்த விப்பிரநாராயணன் அதனை முழுவதும் ஒழித்து ஒருபொதுமகளுக்குத் தொண்டுபூண்டு அவள்புறக்கணிக்கவும் மனந்திரும்பாது அவளில்லத்துப் புறங்கடைபற்றி ஏங்கிநிற்குமாறு தேவரீர் மாயைக்கு இலக்காக்கலாமோ?

இதுவும் ஒரு திருவிளையாட்டு இருந்தபடி என்? இனி இவனை விரைவில் மீட்டு முன்போல ஆட்கொண்டு அந்தரங்கபக்தனுக்கியருளவேண்டும்' என்று பிரார்த்திக்க, திருமாலும் திருமகள்வார்த்தைக்கு இயைந்து தமது திருக்கோயிற் பாத்திரங்களுள் ஒரு ஸ்வர்ணபாத்திரத்தை யெடுத்துக்கொண்டு மனிதவடிவம் பூண்டு விப்பிரநாராயணர்க்குத் தெரியாமல் அப்பரத்தையின் மனைக்கு எழுந்தருளி வாயிற்கதவு திறக்கச் சொல்ல, அவள் உள்ளிருந்தபடியே 'யார் நீ? எங்கு வந்தாய்?' என்றுகேட்க, நம்பெருமாள் 'நான் அழகியமணவாளதாசன், விப்பிரநாராயணரனுப்ப வந்தேன்' என்று விளம்பியவளவில், தேவதேவி விரைந்துவந்து கவாடந்திறந்து 'வந்தகாரிய மென்ன?'என்றுவினவுதலும், ஸ்ரீரங்கநாதன் தான்கொணர்ந்த பொற்கலத்தை அவள்கையிற் கொடுத்து 'இதனை விப்பிரநாராயணர் உனக்குவரவிடுத்தார்' என்று சொன்னவுடனே, அவள் அதியாதரத்தோடு 'அவரை உள்ளேவரச் சொல்லும்' என்று அநுமதி செய்தபின், அடியவர்க்குஎளியவனான எம்பெருமான் விப்பிரநாராயணரிடம் வந்து 'தேவதேவி உம்மைஉள்ளேவரச்சொன்னாள்' என்றுசொல்லிச்சென்றார். அச்செவிக்கினியசெஞ்சொல்லைக் கேட்டமாத்திரத்தில் அவர் பிரிந்தவுயிரைப் பெற்றாற்போல உள்ளங்குளிர்ந்து உடல்பூரித்து உளளேசென்று சேர்ந்தனர்.

அவ்விரவுகழிந்து பொழுதுவிடிந்தவாறே சுவாமிசந்நிதியில் திருக்காப்பு நீக்கியவளவில், சிறந்ததொரு பொற்பாத்திரத்தைக் காணமற் கோயிற்பரிகரத்தார் இராஜாங்கத்தார்க்கு அறிவிக்க, அவர்கள் உடனே வந்து களவுகண்டுபிடித்தற்பொருட்டு அர்ச்சகர் பரிசாரகர் முதலிய அந்தரங்கபரிசனங்களைப் பிடித்துப் பலவாறுதண்டித்து வருத்தியும் ஒருவர்மீதுங் குற்றங்காணப்படாமையால் ஆங்காங்குப் புலம் விசாரித்துவருகையில், தேவதேவியின்மாளிகையிலிருக்கின்றதென அவள்வீட்டுவேலைக்காரி யொருத்தியால் அறிந்து, அங்குச்சென்று அதனைக்கண்டு அவ்வில்லிலுள்ளார் யாவரையுங் குற்றவாளிகளாக்கி அரசன்முன்னிலையிற் கொண்டுபோய் நிறுத்தினார்கள். அப்போது வளவன் வரைவின் மகளைநோக்கி 'பெருமாள் பாத்திரத்தை நீ கவரலாமோ?' என்றுவினவ, அவள் 'யான் இன்னாரென்று அறியேன்; அழகியமணவாளதாசனென்பானொரு தூதன் மூலமாக இவ்வேதியன் இதனை எனக்கு வரவிட்டான்: இவ்வளவே யான் அறிவது' என்று உத்தரங் கூறினள். அதன்மேல் இராசன் விப்பிரரை விசாரிக்க, அவரும் 'யான் ஒன்றும்அறியேன்; ஏழையான எனக்கு ஓர் ஏவலாளனும் இல்லை' என்று சொல்ல, இங்ஙனம் இருதலைவாய்மொழியையுங் கேட்டபின் அரசன் ஆலோசித்து, களவாடியபொருளை வாங்கியவர்க்கு உரிய அபராதப்பொருளை இறுக்கும்படி வேசிக்கு விதித்து, அக்காணிக்கையையும் தங்கவட்டிலையும் பெருமாளுக்குச் சமர்ப்பித்து, பொற்கள்வர்க்குரிய தண்டனையை ஆராய்ந்து விதித்தற்பொருட்டு மறையவரைச் சிறையி விட்டான்.

மீண்டும் ஒருகால் ஸ்ரீரங்கநாயகி 'இவ்வடியவனைத் தேவரீர் லீலைக்கு விஷயமாக்காமற் கிருபைக்குப் பாத்திரமாக்கி யருளவேணும்' என்றுவேண்ட, பெருமாள் அதனை அங்கீகரித்துக் கோமகன்கனவிலே தாம்எழுந்தருளி 'வரைவின்மகளை வேட்ட இவனது கருமத்தைக் கழித்தற்பொருட்டு நாமே பொன்

,வன்னத்தைக் கொண்டுபோய்க் கொடுத்து இவனைத் தண்டிப்பித்தோம்; உண்மையில் இவன் சோரனல்லன்: சுத்தனே' என்று தெரிவிக்க, நரபதி துயிலுணர்ந்தவுடனே கனாத்தோற்றத்தை அமைச்சராதியர்க்கு வியப்போடு வெளியிட்டு வேதியனை விடுவித்து உபசரித்து அனுப்பிவிட்டான்.

பிறவிப்பெருஞ்சிறையினின்று விடுபடுதற்கு ஒரு முற்குறியாகக் காவல்வீடுபெற்ற பிராமணர், தாம் தளவத்தொண்டுதுறந்து வைதிகவொழுக்கமும் மறந்து பொருட்பெண்டிர் பொய்ம்மைமயக்கத்தில் ஆழ்ந்து இடங்கழியாளனாய் அலைந்து பரிபவப்பட்டதை நினைத்துநினைத்து மிகவும் பச்சாத்தாபப்பட்டுப் பிராயச்சித்தஞ் செய்துகொள்ளப் பிரயத்தனங்கொண்டு பெரியோர்களைச் சார்ந்து தமது தோஷங்களையெல்லாம் விடாது எடுத்துவாயாற்சொல்லி 'இவற்றிற்குக்கழுவாய் இன்னதென்று துணிந்து கூறியருளவேணும்' என்ன, அவர்கள் அநேகசாஸ்திரங்களை ஆராய்ந்து 'சகலபாபங்களும் பரிகாரமாதற்கு ஏற்ற செய்தொழில் பாகவதர்களுடைய ஸ்ரீபாததீர்த்தத்தை உட்கொள்ளுதலே' என்று உய்யுமாறு கூற, அங்ஙனமே அவர் அதனைப் பெற்றுப் பருகிப் பரிசுத்தராயினர்.

பின்பு, அவர், முன்போலவே பகவத்பாகவதபக்தி தலையெடுக்கப்பெற்று 'காதலைாரசிங்கனைகவின்றேத்துவார்களுழக்கிய, பாததூளிபடுதலா லிவ்வுலகம் பாக்கியஞ்செய்ததே" என்றும், "ஆடிப்பாடி யரங்கவோ வென்றழைக்குந் தொண்டரடிப்பொடி, யாட நாம்பெறிற் கங்கைநீர் குடைந்தாடும் வேட்கை யென்னாவதே" என்றும், "ஆறுபோல்வருங்கண்ணநீர் கொண்டரங்கன் கோயில்திருமுற்றஞ், சேறுசெய் தொண்டர்சேவடிச்செழுஞ்சே றென்சென்னிக்கணிவனே" என்றும் அருளிச்செய்யப்பட்ட நூற்பொருளிலே நுழைந்த நெஞ்சமுடையராய், ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஸ்ரீபாததூளியாய் அவர்கட்குக் கீழ்ப்படிந்து அடிமைபூண்டு ஒழுகி, அதனால் தமக்கு அதுவே நிரூபகமாக 'தொண்டரடிப்பொடி' என்று திருநாமம்பெற்றனர்.

அப்பால் தொண்டரடிப்பொடியாழ்வார்க்கு ஸ்ரீரங்கநாதன் தத்துவஞானத்தைக் கொடுத்துத் தனது பரம் வியூகம் விபவம் அந்தர்யாமித்வம் அர்ச்சை என்ற ஐவகை நிலையையுந் தெளிவாக விளக்கியருள, அவர் அவற்றில் அர்ச்சாவதாரத்திலே மிக்க ஈடுபாடு கொண்டு, அதிலும் எம்பெருமான் உகந்தருளின நிலங்களெல்லாவற்றினுள்ளும் திருவரங்கத்து நம்பெருமாள்பக்கலிலே நாட்டம்வைத்து அப்பெரியபெருமாளையல்லது பிறிதொரு பொருளை யறியாராய், அப்பிரானுக்கே தாம் உள்ளவளவும் தளவத்திருத்தொண்டு பூண்டு வாழ்ந்து தமது அநுபவத்தைப் பிரபந்தமூலமாகப் பிறர்க்குத் தெரிவிக்கக் கருதி, திருமாலை, திருப்பள்ளியெழுச்சி யென்ற திவ்வியநூல்களை யியற்றி, அவற்றில் "புலையறமாகிநின்ற புத்தொடுசமணமெல்லாங், கலையறக்கற்றமாந்தர் காண்பரோ கேட்பரோதான், தலையறுப்புண்டுஞ்சாகேன் சத்தியங்காண்மினையா, சிலையினாலிலங்கைசெற்ற தேவனே தேவனாவான்" என்று தமது சித்தாந்தத்தைப் பிரமாணபூர்வமாக வெளியிட்டு, திருமாலடியில் முடியிடுபவர் யமகிங்கரர்கள் முடியிலே அடியிடுந்தன்மைய ரென்ற சிறப்பையும் விளக்கி, உலகத்தாரை வாழ்வித்து, நூற்றைந்துபிராயம் ஸ்ரீரங்கத்திலேயே வாழ்ந்திருந்து, அநந்தரம் கலமக்தமில்லதோர் நாட்டை யடைந்தார்.

தன்பால் அன்பால்நிறைந்த விப்பிரநாராயணர் இராசதண்டனையினின்று மீண்டு தொண்டரடிப்பொடியாரான செய்தியை அறிந்து, தேவதேவி, தானும் உய்வுபெற உன்னித் தனதுபொருளனைத்தையும் அரங்கனுக்கே உரியதாக்கி விட்டு, பரமசாத்துவிகையாய், கோயிலிலே திருவலகிடுதல் மெழுகுதல் ரங்க வல்லிசமர்ப்பித்தல் முதலிய அடிமைத்தொழில்களைச் சிலகாலஞ் செய்து கொண்டிருந்து, ஊழ்வினை யொழித்து, தனதுசன்மத்தைச் சபலமாக்கி, முடிவில் நற்கதி நண்ணினாள்.

மண்டங்குடியதனில்வாழவந்தோன்வாழியே
மார்கழியிற்கேட்டைநாள்வந்துதித்தான்வாழியே
தெண்டிரைசூழரங்கரையேதெய்வமென்றான்வாழியே
திருமாலையொன்பதஞ்சும்செப்பினான்வாழியே
பண்டுதிருப்பள்ளியெழுச்சிபத்துரைத்தான்வாழியே
பாவையர்கள்கலவிதன்னைப்பழித்தசெல்வன்வாழியே
தொண்டுசெய்துதுளவத்தால்துலங்கினான்வாழியே
தொண்டரடிப்பொடியாழ்வார்துணைப்பதங்கள்வாழியே.

தொண்டரடிப்பொடியாழ்வார்.

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த

திருமாலை.

தனியன்கள்.

(திருவரங்கப்பெருமாளரையர் அருளிச்செய்தது.)

இருவிகற்பநேரிசைவெண்பா.

மற்றொன்றும்வேண்டாமனமே! * மதிளரங்கர்
கற்றினம்மேய்த்தகழலிணைக்கீழ் *—உற்ற
திருமாலைபாடும்சீர்த்தொண்டரடிப்பொடி † யெம்
பெருமானை * எப்பொழுதும்பேசு.

திருவரங்கத்து எம்பெருமான் விஷயம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (ஸஹாநாராகம் - ரூபகதாளம்.)

↓↓ காவலிற்புலனைவைத்துக் கலிதன்னைக்கடக்கப்பாய்ந்து *
நாவலிட்டுழிதருகின்றோம் நமன்தமர்தலைகள்மீதே *
மூவுலகுண்டுமிழ்ந்தமுதல்வ! நின்நாமம்கற்ற *
ஆவலிப்புடைமைகண்டாய் அரங்கமாநகருளானே! (க)

↓↓ பச்சைமாமலைபோல்மேனி பவளவாய்கமலச்செங்கண் *
அச்சுதா! அமரரேறே! ஆயர்தம்கொழுந்தே! என்னும் *
இச்சுவைதவிரயான்போய் இந்திரலோகமாளும் *
அச்சுவைபெறினும்வேண்டேன் அரங்கமாநகருளானே! (உ)

வேதநூற்பிராயம்நூறு மனிசர்தாம்புகுவரேலும் *
பாதியுமுறங்கிப்போகும் நின்றதிற்பதினையாண்டு ‡ *
பேதைபாலகனதாகும் பிணிபசிமூப்புத்துன்பம் *
ஆதலால்பிறவிவேண்டேன் அரங்கமாநகருளானே! (ங)

---

† இங்குத் தளை தவறுகின்றது: 'தொண்டர்பொடியெம்' என்றாவது, 'தொண்டரடித் தூளெம்' என்றாவது, 'தொண்டரடிப்பொடியெம், பெம் மானை' என்றாவது இருந்தால் பொருந்தும். ‡ 'நின்றஇப்பதினையாண்டு' என்பதும் பாடம்.

மொய்த்தவல்வினையுள்நின்று மூன்றெழுத்துடையபேரால் *
கத்திரபந்துமன்றே பராங்கதிகண்டுகொண்டான் *
இத்தனையடியரானார்க்கு இரங்குமநம்மரங்கனாய *
பித்தனைப்பெற்றுமந்தோ! பிறவியுட்பிணங்குமாறே. (௪)

பெண்டிராற்சுகங்களுய்ப்பான் பெரியதோரிடும்பைபூண்டு *
உண்டிராக் †கிடக்கும்போது உடலுக்கேகரைந்துநைந்து *
தண்துழாய்மாலைமார்பன் தமர்களாய்ப்பாடியாடி *
தொண்டுபூண்டமுதமுண்ணாத் தொழும்பர்சோறுகக்குமாறே! (௫)

மறஞ்சுவர்மதிளெடுத்து மறுமைக்கேவெறுமைபூண்டு *
புறஞ்சுவரோட்டைமாடம் புரளும்போதறியமாட்டீர் *
அறஞ்சுவராகிநின்ற அரங்கனார்க்காட்செய்யாதே *
புறஞ்சுவர்கோலஞ்செய்து புட்கௌவக்கிடக்கின்றீரே. (௬)

புலையறமாகிநின்ற புத்தொடுசமணமெல்லாம் *
கலையறக்கற்றமாந்தர் காண்பரோகேட்பரோதாம? *
தலையறுப்புண்டும் ‡சாகேன் சத்தியங்காண்மின்ஐயா! *
சிலையினாலிலங்கைசெற்ற தேவனேதேவனாவான். (௭)

வெறுப்பொடுசமணர்முண்டர் விதியில்சாக்கியர்கள் * நின்பால்
பொறுப்பரியனகள்பேசில் போவதேநோயதாகி *
§ குறிப்பெனக்கடையுமாகில் கூடுமேல், தலையையாங்கே *
அறுப்பதேகருமங்கண்டாய் அரங்கமாநகருளானே! (௮)

மற்றுமோர்தெய்வமுண்டே? மதியிலாமானிடங்காள்! *
உற்றபோதன்றிநீங்கள் ஒருவனென்றுணரமாட்டீர் *
அற்றமேலொன்றறியீர் அவனல்லால்தெய்வமில்லை *
கற்றினம்மேய்த்தவெந்தை கழலிணைபணிமின்நீரே. (௯)

நாட்டினான்தெய்வமெங்கும் நல்லதோரருள்தன்னாலே *
காட்டினான்திருவரங்கம் உய்பவர்க்கு உய்யும்வண்ணம் *
கேட்டிரேநம்பிமீர்காள்! கெருடவாகனனும்நிற்க *
சேட்டைதன்மடியகத்துச் செல்வம்பார்த்திருக்கின்றீரே. (௧0)

ஒருவில்லாலோங்குமுந்நீரடைத்து உலகங்களுய்ய *
செருவிலேயரக்கர்கோனைச்செற்ற நம்சேவகனார் *
மருவியபெரியகோயில் மதிள்திருவரங்கமென்னா *
கருவிலேதிருவிலாதீர்! காலத்தைக்கழிக்கின்றீரே. (௧௧)

---

† 'கிடக்குமப்போது' என்னும் பாடம் சிறந்ததாம். ‡ 'சாவேன்' என்பதும் பாடம். § 'குறிப்பினுக்கு' என்பதும் பாடம்.

நமனும்முற்கலனும்பேச நரகில்நின்றார்கள்கேட்க *
நரகமேசுவர்க்கமாகும் நாமங்களுடையநம்பி *
அவனதூரரங்கமென்னாது அயர்த்துவீழ்ந்தளியமாந்தர் *
கவலையுட்படுகின்றாரென்று அதனுக்கேகவல்கின்றேனே. (கஉ)

எறியுநீர்வெறிகொள்வேலை மாநிலத்துஉயிர்களெல்லாம் *
வெறிகொள்பூந்துளவமாலை விண்ணவர்கோனையேத்த *
அறிவிலாமனிசரெல்லாம் அரங்கமென்றழைப்பராகில் *
பொறியில்வாழ்நரகமெலலாம் புல்லெழுந்தொழியுமன்றே. (கங)

⸸⸸வண்டினமுரலும்சோலை மயிலினமாலும்சோலை *
கொண்டல்மீதணவும்சோலை குயிலினம்கூவும்சோலை *
அண்டர்கோனமரும்சோலை அணிதிருவரங்கமென்னா *
மிண்டர்பாய்ந்துண்ணும்சோற்றைவிலக்கி நாய்க்கிடுமினீரே. (கச)

மெய்யர்க்கேமெய்யனாகும் விதியிலாவென்னைப்போல *
பொய்யர்க்கேபொய்யனாகும் புட்கொடியுடையகோமான் *
உய்யப்போமுணர்வினார்கட்கு ஒருவனெனன்றுணர்ந்தபின்னை *
ஐயப்பாடறுத்துத்தோன்றும் அழகனூரரங்கமன்றே. (கரு)

சூதனாய்க்கள்வனாகித் தூர்த்தரோடிசைந்தகாலம் *
மாதரார்கயற்கணென்னும் வலையுட்பட்டழுந்துவேனை *
போதரேயென்றுசொல்லிப் புந்தியுட்புகுந்து * தன்பால்
ஆதரம்பெருகவைத்த அழகனூரரங்கமன்றே. (கசு)

விரும்பிநின்றேத்தமாட்டேன் விதியிலேன்மதியொன்றில்லை *
இரும்புபோல்வலியநெஞ்சம் இறையிறையுருகும்வண்ணம் *
சுரும்பமர்சோலைசூழ்ந்த அரங்கமாகோயில்கொண்ட *
கரும்பினைக்கண்டுகொண்டு என்கண்ணிணைகளிக்குமாறே! (கஎ)

இனிதிரைத்திவலைமோத எறியும்தண்பரவைமீதே *
தனிகிடந்தரசுசெய்யும் தாமரைக்கண்ணனெம்மான் *
கனியிருந்தனையசெவ்வாய்க் கண்ணனைக்கண்டகண்கள் *
பனியரும்புதிருமாலோ! என்செய்கேன்பாவியேனே? (கஅ)

⸸⸸குடதிசைமுடியைவைத்துக் குணதிசைபாதம்நீட்டி *
வடதிசைபின்புகாட்டித் தென்திசையிலங்கைநோக்கி *
கடல்நிறக்கடவுளெந்தை அரவணைத்துயிலுமாகண்டு *
உடலெனக்குருகுமாலோ! என்செய்கேன்? உலகத்தீரே! (கக)

பாயுநீரரங்கந்தன்னுள் பாம்பணைப்பள்ளிகொண்ட *
மாயனார்திருநன்மார்வும் மரகதவுருவும்தோளும் *
தூயதாமரைக்கண்களும் துவரிதழ்ப்பவளவாயும் *
ஆயசீர்முடியும்தேசும் அடியரோர்க்ககலலாமே? (உ0)

பணிவினால்மனமதொன்றிப் பவளவாயரங்கனார்க்கு *
துணிவினால்வாழமாட்டாத் தொல்லைநெஞ்சே! நீசொல்லாய் *
அணியினார்செம்பொனாய அருவரையனையகோயில் *
மணியனார்கிடந்தவாற்றை மனத்தினால்நினைக்கலாமே? (உக)

பேசிற்றேபேசலல்லால் பெருமையொன்றுணரலாகாது *
ஆசற்றார்தங்கட்கல்லால் அறியலாவானுமல்லன் *
மாசற்றார்மனத்துளானை வணங்கிநாமிருப்பதல்லால் *
பேசத்தானாவதுண்டோ? பேதைநெஞ்சே! நீசொல்லாய். (உஉ)

கங்கையிற்புனிதமாய காவிரிநடுவுபாட்டு *
பொங்குநீர்பரந்துபாயும் பூம்பொழிலரங்கந்தன்னுள் *
எங்கள்மாலிறைவனீசன் கிடந்ததோர்கிடக்கைகண்டும் *
எங்ஙனம்மறந்துவாழ்கேன்? ஏழையேனேழையேனே. (உ௩)

வெள்ளநீர்பரந்துபாயும் விரிபொழிலரங்கந்தன்னுள் *
கள்வனார்கிடந்தவாறும் கமலநன்முகமும்கண்டும் *
உள்ளமே! வலியைபோலும் ஒருவனென்றுணரமாட்டாய் *
கள்ளமேகாதல்செய்து உன்கள்ளத்தேகழிக்கின்றாயே. (உ௪)

குளித்துமூன்றனலையோம்பும் குறிகொளந்தணமைதன்னை *
ஒளித்திட்டேன், என்கணில்லை நின்கணும்பத்தனல்லேன் *
களிப்பதென்கொண்டு? நம்பி! கடல்வண்ணா! கதறுகின்றேன் *
அளித்தெனக்கருள்செய்கண்டாய் அரங்கமாநகருளானே! (உ௫)

போதெல்லாம்போதுகொண்டு உன்பொன்னடிபுனையமாட்டேன் *
தீதிலாமொழிகள்கொண்டு உன்திருக்குணம்செப்பமாட்டேன் *
காதலால்நெஞ்சமன்பு கலந்திலேன், அஃதுதன்னாலே *
ஏதிலேனரங்கர்க்கெல்லே! என்செய்வான்தோன்றினேனே? (உ௬)

குரங்குகள்மலையைநூக்கக் குளித்துத்தாம்புரண்டிட்டோடி *
தரங்கநீரடைக்கலுற்ற சலமிலாவணிலும்போலேன் *
மரங்கள்போல்வலியநெஞ்ச வஞ்சனேன், நெஞ்சுதன்னால் *
அரங்கனார்க்காட்செய்யாதே அளியத்தேனயர்க்கின்றேனே. (உ௭)

உம்பராலறியலாகா ஒளியுளார், ஆனைக்காகி *
செம்புலாலுண்டுவாழும் முதலைமேல்சீறிவந்தார் *
நம்பரமாயதுண்டே? நாய்களோம் சிறுமையோரா *
எம்பிராற்காட்செய்யாதே என்செய்வான்தோன்றினேனே? (உ௮)

ஊரிலேன்காணியில்லை உறவுமற்றொருவரில்லை *
பாரில்நின்பாதமூலம் பற்றிலேன்பரமமூர்த்தி! *
†காரொளிவண்ணனே! கண்ணனே! கதறுகின்றேன் *
ஆருளர்? களைகணம்மா! அரங்கமாநகருளானே! (உ௯)

மனத்திலோர்தூய்மையில்லை வாயிலோரின்சொலில்லை *
சினத்தினால்செற்றம்நோக்கித் தீவிளிவிளிவன்வாளா *
புனத்துழாய்மாலையானே! பொன்னிசூழ்திருவரங்கா! *
எனக்கினிக்கதியென்சொல்லாய்? என்னையாளுடையகோவே! (௩௦)

தவத்துளார்தம்மிலல்லேன் தனம்படைத்தாரிலல்லேன் *
உவர்த்தநீர்போல என்தனுற்றவர்க்கொன்றுமல்லேன் *
துவர்த்தசெவ்வாயினார்க்கே துவக்கறத்துரிசனானேன் *
அவத்தமேபிறவிதந்தாய் அரங்கமாநகருளானே! (௩௧)

ஆர்த்துவண்டலம்புஞ்சோலை அணிதிருவரங்கந்தன்னுள் *
கார்த்திரளனையமேனிக் கண்ணனே! உன்னைக்காணும் *
மார்க்கமொன்றறியமாட்டா மனிசரில்துரிசனாய *
மூர்க்கனேன்வந்துநின்றேன் மூர்க்கனேன்மூர்க்கனேனே. (௩௨)

மெய்யெல்லாம்போகவிட்டு விரிகுழலாரிற்பட்டு *
பொய்யெல்லாம்பொதிந்துகொண்ட போழ்க்கனேன்வந்துநின்றேன் *
ஐயனே! அரங்கனே! உன்னருளென்னுமாசைதன்னால் *
பொய்யனேன்வந்துநின்றேன் பொய்யனேன்பொய்யனேனே. (௩௩)

உள்ளத்தேயுறையும்மாலை உள்ளுவானுணர்வொன்றில்லா *
கள்ளத்தேன்நானும்தொண்டாய்த் தொண்டுக்கேகோலம் ‡ பூண்டு
உள்ளுவாருள்ளிற்றெல்லாம் உடனிருந்தறிதியென்று *
வெள்கிப்போயென்னுள்ளேநான் விலவறச்சிரித்திட்டேனே. (௩௪)

---

† 'காரொளிவண்ணனே என் கண்ணனே கதறுகின்றேன்' என்னும் பாடம் செய்யுளிலக்கணத்தோடும் வ்யாக்யாநத்தோடும் பொருந்தும்.

‡ 'பூண்டேன்' என்றும் பாடம்.

தாவியன்றுலகமெல்லாம் தலைவிளாக்கொண்டவெந்தாய்! *
சேவியேனுன்னையல்லால் சிக்கெனச்செங்கண்மாலே! *
ஆவியே! அமுதே! என்றனுருயிரனையவெந்தாய்! *
பாவியேனுன்னையல்லால் பாவியேன்பாவியேனே. (௩௫)

மழைக்கன்றுவரைமுனேந்தும் மைந்தனே! மதுரவாறே! *
உழைக்கன்றேபோல நோக்கமுடையவர்வலையுட்பட்டு *
உழைக்கின்றேற்கு என்னைநோக்காதொழிவதே! * உன்னையன்றே
அழைக்கின்றேன் ஆதிமூர்த்தி! அரங்கமாநகருளானே! (௩௬)

தெளிவிலாக்கலங்கல்நீர்சூழ் திருவரங்கத்துளோங்கும் *
ஒளியுளார்தாமேயன்றே தந்தையும்தாயுமாவார் *
எளியதோரருளுமன்றே என்திறத்தெம்பிரானார் *
அளியன்நம்பையலென்னார் அம்மவோ! கொடியவாறே! (௩௭)

‡ மேம்பொருள்போகவிட்டு மெய்ம்மையைமிகவுணர்ந்து *
ஆம்பரிசறிந்துகொண்டு ஐம்புலனகத்தடக்கி *
காம்பறத்தலைசிரைத்து உன்கடைத்தலையிருந்து * வாழும்
சோம்பரைஉகத்திபோலும் சூழ்புனலரங்கத்தானே! (௩௮)

அடிமையிற்குடிமையில்லா அயல்சதுப்பேதிமாரில் *
குடிமையில்கடைமைபட்ட குக்கிற்பிறப்பரேலும் *
முடியினில்துளபம்வைத்தாய்! மொய்கழற்கன்புசெய்யும் *
அடியரையுகத்திபோலும் அரங்கமாநகருளானே! (௩௯)

திருமறுமார்வ! நின்னைச்சிந்தையுள்திகழவைத்து *
மருவியமனத்தராகில் மாநிலத்துயிர்களெல்லாம் *
வெருவரக்கொன்றுசுட்டிட்டு ஈட்டியவினையரேலும் *
அருவினைப்பயனதுய்யார் அரங்கமாநகருளானே! (௪0)

வானுளாரறியலாகா வானவாஎன்பராகில் *
தேனுலாந்துளபமாலைச் சென்னியாய்என்பராகில் *
ஊனமாயினகள்செய்யும் ஊனகாரகர்களேலும் *
போனகம்செய்தசேடம் தருவரேல், புனிதமன்றே. (௪௧)

பழுதிலாவொழுகலாற்றுப் பலசதுப்பேதிமார்கள்! *
இழிகுலத்தவர்களேலும் எம்மடியார்களாகில் *
தொழுமினீர்கொடுமின்கொண்மின் என்று நின்னோடுமொக்க *
வழிபடவருளினாய்போல் மதிள்திருவரங்கத்தானே! (௪௨)

அமரவோரங்கமாறும் வேதமோர்நான்குமோதி *
தமர்களில்தலைவராய சாதியந்தணர்களேலும் *
நுமர்களைப்பழிப்பராகில் நொடிப்பதோராளவில் * ஆங்கே
அவர்கள்தாம்புலையர்போலும் அரங்கமாநகருளானே! (௪௩)

‡‡பெண்ணுலாம்சடையினானும் பிரமனுமுன்னைக்காண்பான் *
எண்ணிலாவூழியூழி தவஞ்செய்தார்வெள்கிநிற்ப *
விண்ணுளார்வியப்பவந்து ஆனைக்கன்றருளையீந்த
† கண்ணறா *உன்னையென்னோ? களைகணாக்கருதுமாறே. (௪௪)

‡‡ வளவெழும்தவளமாட மதுரைமாநகரந்தன்னுள் *
‡ கவளமால்யானைகொன்ற கண்ணனைஅரங்கமாலை *
துளவத்தொண்டாயதொல்சீர்த் தொண்டரடிப்பொடிசொல் *
இளையபுன்கவிதையேலும் எம்பிராற்கினியவாறே. (௪௫)

அடிவரவு:—காவல் பச்சை வேதம் மொய்த்த பெண்டிர் மறம் புலை வெறுப்பு மற்றும் நாட்டினான் ஒரு நமனும் எறியும் வண்டினம் மெய் சூதன் விரும்பி இனிது குட பாயும் பணி பேசு கங்கை வெள்ளம் குளித்து போது குரங்கு உம்பர் ஊர் மனம் தவம் ஆர்த்து மெய் உள்ளம் தாவி மழை தெளிவு மேம்பொருள் அடிமை திரு வான் பழுதிலா அமர பெண் வளவெழும் கதிர்.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்.

திருமாலை ஸம்பூர்ணம்.

---

† 'கண்ணுரு' என்பர் சிலர். ‡ 'களவமால்யானை' என்பதுமாம்.

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த

† திருப்பள்ளியெழுச்சி.

தனியன்கள்:

(திருமாலையாண்டான் அருளிச்செய்தது.)

‡ 𑌤𑌮𑍇𑌵 𑌮𑌤𑍍𑌵𑌾 𑌪𑌰𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌂
𑌰𑌙𑍍𑌗𑍇𑌶𑌯𑌂 𑌰𑌾𑌜𑌵𑌦𑌰𑍍𑌹𑌣𑍀𑌯𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌬𑍋𑌧𑌿𑌕𑍀𑌂 𑌯𑍋𑌽𑌕𑍃𑌤 𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌲𑌾𑌂
𑌭𑌕𑍍𑌤𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌰𑍇𑌣𑍁𑌂 𑌭𑌗𑌵𑌨𑍍𑌤𑌮𑍀𑌡𑍇 ॥

‡ తమేవ మత్వా పరవాసుదేవం రంగేశయం రాజవదర్హణీయం ।
ప్రాబోధకీం యోఽకృత సూక్తిమాలాం భక్తాంఘ్రిరేణుం భగవంతమీడే.

‡ தமேவமத்வாபரவாஸுதேவம்
ரங்கேசயம்ராஜவதர்ஹணீயம் -
ப்ராபோதகீம்யோக்ருதஸூக்திமாலாம்
பக்தாங்க்ரிரேணும்பகவந்தமீடே.

(திருவரங்கப்பெருமாளரையர் அருளிச்செய்தது.)

இருவிகற்பநேரிசைவெண்பா.

மண்டங்குடியென்பர் மாமறையோர்மன்னியசீர் *
தொண்டரடிப்பொடிதொன்னகரம் *—வண்டு
திணர்த்தவயல் தென்னரங்கத்தம்மானை * பள்ளி
யுணர்த்தும்பிரானுதித்தவூர்.

ஸ்ரீரங்கநாதனைத் துயிலுணர்த்துதல்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம். (பூபாளராகம் - அடதாளம்.)

↓↓ கதிரவன்குணதிசைச்சிகரம்வந்தணைந்தான்
கனையிருளகன்றதுகாலையம்பொழுதாய் *
§ மதுவிரிந்தொழுகினமாமலரெல்லாம
வானவரரசர்கள்வந்துவந்தீண்டி *

---

† இது, நித்யாநுஸந்தாநம். ‡ 'த்வாமேவ' என்ற பாடமே வ்ருத்தத்திற்குச் சேரும். § 'மதுவிருந்தொழுகின' என்றும் பாடம்.

எதிர்திசைநிறைந்தனரிவரொடும்புகுந்த
இருங்களிற்றீட்டமும்பிடியொடுமுரசும் *
அதிர்தலிலலைகடல்போன்றுளதெங்கும்
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. (க)

கொழுங்கொடிமுல்லையின்கொழுமலரணவிக்
கூர்ந்ததுகுணதிசைமாருதமிதுவோ *
எழுந்தனமலரணைப் † பள்ளிகொள்ளன்னம்
ஈன்பனிநனைந்ததமிருஞ்சிறகுதறி *
விழுங்கியமுதலையின்பிலம்புரைபேழ்வாய்
வெள்ளெயிறுறவதன்விடத்தினுக்கனுங்கி *
அழுங்கியவானையினருந்துயர்கெடுத்த
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. (உ)

சுடரொளிபரந்தனசூழ்திசையெல்லாம்
துன்னியதாரகைமின்னொளிசுருங்கி *
படரொளிபசுத்தனன்பனிமதியிவனோ
பாயிருளகன்றது, பைம்பொழிற்கமுகின் *
மடலிடைக்கீறிவண்பாளைகள்நாற
வைகறைகூர்ந்ததுமாருதமிதுவோ *
அடலொளிதிகழ்தருதிகிரியந்தடக்கை
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. (௩)

மேட்டிளமேதிகள்தளைவிடுமாயர்கள்
வேய்ங்குழலோசையும்விடைமணிக்குரலும் *
ஈட்டியவிசைதிசைபரந்தனவயலுள்
இரிந்தனசுரும்பினம், இலங்கையர்குலத்தை *
வாட்டியவரிசிலைவானவரேறே!
மாமுனிவேள்வியைக்காத்து * அவபிரதம்
ஆட்டியவடுதிறலயோத்தியெம்மரசே!
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. (௪)

புலம்பினபுட்களும்பூம்பொழில்களின்வாய்,
போயிற்றுக்கங்குல்புகுந்ததுபுலரி *
கலந்ததுகுணதிசைக்கனைகடலரவம்
களிவண்டுமிழற்றியகலம்பகம்புனைந்த *

† 'பள்ளிகொண்டன்னம்' என்றும் பாடாந்தரம்.

அலங்கலந்தொடையல்கொண்டடியிணைபணிவான்
அமரர்கள்புகுந்தனராதலிலம்மா ! *
இலங்கையர்கோன்வழிபாடுசெய்கோயில்
எம்பெருமான் ! பள்ளியெழுந்தருளாயே. (௫)

இரவியர்மணிநெடுந்தேரொடுமிவரோ
இறையவர்பதினொருவிடையருமிவரோ *
மருவியமயிலினனறுமுகனிவனே
மருதருவசுக்களும்வந்துவந்தீண்டி *
புரவியோடாடலும்பாடலும் தேரும்
குமரதண்டம்புகுந்தீண்டியவெள்ளம் *
அருவரையனையநின்கோயில்முன்னிவரோ
அரங்கத்தம்மா ! பள்ளியெழுந்தருளாயே. (௬)

அந்தரத்தமரர்கள்கூட்டங்களிவையோ
அருந்தவமுனிவரும்மருதருமிவரோ *
இந்திரனானையும்தானும்வந்திவனே
எம்பெருமானுனகோயிலின்வாசல் *
சுந்தரர்நெருக்கவிச்சாதரர்நூக்க
இயக்கரும்மயங்கினர்திருவடித்தொழுவான் *
அந்தரம்பாரிடமில்லைமற்றிதுவோ
அரங்கத்தம்மா ! பள்ளியெழுந்தருளாயே. (௭)

வம்பவிழ்வானவர்வாயுறைவழங்க
மாநிதிகபிலையொண்கண்ணாடி முதலா *
எம்பெருமான் † படிமெய்க்கலங்காண்டற்கு
ஏற்பனவாயினகொண்டுநன்முனிவர் *
தும்புருநாரதர்புகுந்தனரிவரோ
தோன்றினனிரவியும்துலங்கொளிபரப்பி *
அம்பரதலத்தினின்றகல்கின்றதிருள்போய்
அரங்கத்தம்மா ! பள்ளியெழுந்தருளாயே. (௮)

↓↓ ஏதமில்தண்ணுமையெக்கம்மத்தளி
யாழ்குழல்முழவமோடிசைதிசைகெழுமி *
கீதங்கள்பாடினர்கின்னரர்கெருடர்கள்
கந்தருவரவர்கங்குலுளெல்லாம் *

---

† 'படிமைக்கலம்' என்றும் பாடம்,

மாதவர்வானவர்சாரணரியக்கர்
சித்தரும்மயங்கினர்திருவடித்தொழுவான் *
ஆதலிலவர்க்குநாளோலக்கமருள
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. (௯)

↓↓ கடிமலர்க்கமலங்கள்மலர்ந்தனவிவையோ
கதிரவன்கனைகடல்முளைத்தனனிவனோ *
துடியிடையார்சுரிகுழல்பிழிந்துதறித்
துகிலுடுத்தேறினர்சூழ்புனலரங்கா! *
தொடையொத்ததுளவமுங்கூடையும்பொலிந்து
தோன்றியதோள்தொண்டரடிப்பொடியென்னு
மடியனை * அளியனென்றருளியுன்னடியார்க்
காட்படுத்தாய்! பள்ளியெழுந்தருளாயே. (௧௦)

அடிவரவு:—கதிர் கொழு சுடர் மேட்டு புலம்பின இரவியர் அந்தரம் வம்பவிழ் ஏதம் கடி அமலன்.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்.

திருப்பாணாழ்வார் வைபவம்.

𑌵𑍃𑌶𑍍𑌚𑌿𑌕𑍇 𑌰𑍋𑌹𑌿𑌣𑍀𑌜𑌾𑌤𑌂 𑌶𑍍𑌰𑍀𑌪𑌾𑌣𑌿𑌂 𑌨𑌿𑌚𑍁𑌳𑌾𑌪𑍁𑌰𑍇 ।
𑌶𑍍𑌰𑍀𑌵𑌤𑍍𑌸𑌾𑌂𑌶𑌂 𑌗𑌾𑌯𑌕𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌮𑍁𑌨𑌿𑌵𑌾𑌹𑌨𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇 ॥

వృశ్చికే రోహిణీజాతం శ్రీపాణిం నిచుళాపురే।
శ్రీవత్సాంశం గాయకేంద్రం మునివాహనమాశ్రయే॥

வ்ருஶ்சிகேரோஹிணீஜாதம் ஸ்ரீபாணிம்நிசுளாபுரே-
ஸ்ரீவத்ஸாம்ஸம்காயகேந்த்ரம் முநிவாஹநமாஸ்ரயே.

"கொண்டல் குமுறுங் குடகிழிந்து மதகுந்தி யகில்கொண்டு நுரை மண்டி வருநீர்த், தெண்டிரைதொறுந் தாளமுங் கனகமுஞ் சிதறு"வதும், தன்னில் நீராடியவர்க்கும் தன்கரைகளில் வாழ்பவர்க்கும் மாத்திரமே யன்றித் தனது தீர்த்தத்திற் பரிசித்த காற்றுச் செல்லுமிடமவ்வளவும் உள்ளார்க்கும் முத்திதரவல்ல மகாப்பிரபாவத்தை யுடையது மாகிய பொன்னிநதி பாயப் பெறுதலாற் புனிதமான சோழவளநாட்டிலே, ராஜநகரங்களிந்தனுள் ஒன்றாய்த் தருமவர்மாவென்னுஞ் செம்பியனுக்குக் குமாரியாய் நீளாதேவி அவதரித்த இடமான உறையூரிலே, துர்மதிவருஷத்தில் கார்த்திகைமாதத்து ரோகிணி நட்சத்திரத்திலே, ஸ்ரீதரனது ஸ்ரீவத்ஸத்தின் அம்சமாய், ஒருவர், ஓர் அந்தணனது கழனியிலே நெற்பயிர்க்கதிரில் அவதரித்தார்.

பிறவாதுபிறந்த அத்தெய்வக்குழந்தையை அவ்வூரிற் பஞ்சமசாதியிற் பாணர்குலத்துப் பிறந்தானொருவன் பார்த்து நல்வினைப்பயனென்று மகிழ்ந்து எடுத்துக்கொண்டுபோய், மலடுதீர்ந்து, மருவியகாதல்மனையாளுந் தானுமாக, பசுவின்பால் முதலிய பரிசுத்த ஆகாரங்களையே கொடுத்துப் போஷித்து வந்தான்.

அங்ஙனம் வளர்ந்த இவர், திருமாலருளால் தோன்றியவராதலால், இயற்கையிலே உலகப்பற்றற்று, மதுசூதனனது பாதாம்புயத்துக்குத் தன்மனத்தை மதுகரமாக்கியதுமன்றி, தாம்புகுந்த குலத்துக்கு ஏற்ற யாழ்ப்பாடலிலுந் தேர்ச்சிபெற்று அதனால், 'பாணர்' என்றே பேர் கூறப்பட்டு, நாரதபகவான் போல ஞானவைராக்கியங்களோடு கானசாமர்த்தியமும் முதிர்ந்துநின்றார்.

இவ்வாறிருக்கையில், விஷ்வக்ஸேநர் இரகசியமாக வெழுந்தருளி இவர்க்குத் திருவிலச்சினை சாதித்துச் சென்றார்.

அதனால் மகாபாகவதோத்தமராகிய இவர், ரங்கநாதனுக்குப் பாடல்திருத்தொண்டு செய்ய உத்தேசித்துப் புறப்பட்டு, தாம் தாழ்ந்தகுலத்தில் வளர்ந்தவராதலால், உபயகாவேரிமத்தியிலுள்ள ஸ்ரீரங்கதிவ்வியக்ஷேத்திரத்தில் அடியிடுதற்குந் துணியாமல் தென்திருக்காவேரியின் தென்கரையில் திருமுகத்துறைக்கெதிரிலே யாழுங்கையுமாக நின்றுகொண்டு, நம்பெருமாளைத் திசைநோக்கித்

தொழுது, அவ்வாதிபகவன்விஷயமாக, அநேகதிவ்வியகீதங்களை, கண்டமுங் கருவியு மொக்க, கேட்பவர் செவியும் மனமும் குளிர, எம்பெருமான் திருவுள்ளமுகக்க, கின்னர கந்தருவாதியர் வியப்புறப் பாடினார்.

முன்பு திருக்குறுங்குடியில் நாடோறும் பகவத்விஷயமான யாழிசை பாடிக் கைசிகமென்னும் பண்ணின் பயனால் தன்னைச் சரணமடைந்த ஒரு பிரமராக்கதனையுந் தீவினைதீர்த்து நற்கதிபுகுத்தித் தானும் பிறவிப்பெருங்கடல் கடந்த 'நம்பாடுவான்' என்னுஞ் சாதிசண்டாளன்போலவே இவ்விழிகுலத் தவரும் பக்தியாற் பரவசபபட்டு நெஞ்சம் நெக்குருகக் கண்கள் ஆனந்தவருவி சொரிய உடல் புளகிக்கப் பிரதிதினமும் வைகறையிலே வந்து இசைபாடா நிற்கையில், ஒருநாள், திருவரங்கச்செல்வனுக்குத் தீர்த்தகைங்கரியஞ் செய்கிற லோகசாரங்கரென்னும் பூசுரவரர் நீர்கொணர்தற்குப் பொற்குடத்தை யெடுத்துக்கொண்டு பொன்னித்துறையை யடைகையில் அருகிலுள்ள இந்த அதம வருணத்தவரைப் பார்த்து அருவருத்து 'எட்டச்செல்' என்று பலமுறை பணிக்கவும், இவர் இவ்வுலகத்தொடர்பை மறந்திருந்ததனால் அம்மொழியைச் செவியுறாமல் வாளா நின்றிட்டார்.

அச்செய்தியைக் கேள்வியுற்று மூர்க்ககுணமெனக் கருதி அக்கொண்டது விடாமையைக் குலைக்கத் துணிந்த சாதியபிமானம் மிக்க பல இருபிறப்பாளர் ஓடிவந்து 'போ போ' என்று அநேகமுறை கூறவும் அது செவியிற்படாமையாற் பாணகுலதிலகர் சிறிதும் பெயராது நிஸ்சலராய் இராகம் பாடிக்கொண்டிருக்க, அதுகண்டு அவர்களிற் சிலர் வியந்து 'இவன் ஞானயோகியல்லன்; கானயோகிபோலும்' என்று நினைத்துப்போக, முரட்டுக்குணமுடைய சிலர் 'எப்படியும் இப்பொழுது இவனை இடம்விட்டுத்தூரத்தாது விடுவதில்லை' என்று வீரவாதஞ்செய்து இவர்மேல் பல கற்களை யெடுத்து இடைவிடாது ஒருங்கே எறிய, அவ் வன்சிலைகள் இவருடைய மெல்லுடல்மேல் நன்குபட்டிடவும், இவர், பக்திவசப்பட்டதனாற் சிறிதும் பரிசவுணர்ச்சியின்றி, சோனைமாரியாக எழுமேகங்களையுங் கொண்டு இந்திரன் ஏககாலத்திலே பொழிவித்த சிலாவர்ஷத்துக்குச் சற்றும் பின்னிடாத கோவர்த்தனகிரிபோலச் சலியாதிருந்தார். அதுகண்டு அமரராசன்போல அனைவரும் அஞ்சி அகன்றனர்.

அப்பொழுது இவரது உடம்பிலும் உள்ளத்திலும் கிஞ்சித்தும் வருத்தங் காணப்படவில்லை யாயினும் பக்தர்களது அந்தரங்கத்தில் அமர்ந்திருக்கின்ற அரங்கநாதனது திருவுள்ளம் மிகக்கலங்க, திருநெற்றியும் இரத்தப்பெருக்குற்றது.

அதனை நோக்கி அர்ச்சகர் அதிபயப்பட்டுக் கோயிலதிகாரிகளுக்கு அறிவிக்க, அவர்களும் இவ்வுற்பாதச்செய்தியை அரசனுக்குப் போகவிட, அமாத்தியரோடு அநேகவிதமாக ஆராய்ந்தும் காவலன் காரணங்காணாது கவன்று சுவாமிதிருவடியிலே பாரத்தை வைத்திட்டான்.

அதற்குமுன்னே ஒருநாள், பிராட்டி பெருமானை நோக்கி 'வெகுகாலமாக நம்மை அநவரதபாவனை பண்ணிவருகிற நம் பாணன் புறம்பேநிற்கப் பார்த்திருக்கலாமோ?' என்று விண்ணப்பஞ்செய்ததற்கு, வாசுதேவபிரான் விரைவிலே அருகில் அழைப்பதாகவாக்களித்தனர்.

அநந்தரம் அவ்வாறே இந்திரையின் இஷ்டத்தை நிறைவேற்றவும், பாணரைப் பெருமைப்படுத்தவும், 'பகவத்பிராப்திக்குச் சாதியன்று பிரதானம்; பக்தியே அமையும்' என்ற சாஸ்திர சித்தாந்தத்தை நடத்திக்காட்டவும், சென்னிவேந்தனது சிந்தனையை ஒழித்தருளவும் திருவுள்ளங்கொண்டு திருவரங்கேசன் லோகசாரங்கமுனீந்திரரது கனவில் தோன்றி 'நமக்குநல்லன்பரான பாண்பெருமாளை இழிவாக நினையாமல் நீர் சென்று தோள்களில் எழுந்தருளப்பண்ணிவாரும்' என்று நியமிக்க, அவர் பிராமமுகூர்த்தத்திற் கண் விழித்தவளவிலே சொப்பனத்திற் சுவாமி நியமித்ததை நினைந்து அதிசயித்து அப்படியே செய்து தாம் பேறுபெறக்கருதி அச்செய்தியை அத்திருப்பதியிலுள்ளார் யாவர்க்குந் தெரிவித்து அவர்களும் உடன்வரச் சென்று திருமுகத்துறையிலே தீர்த்தமாடித் தௌதவஸ்திரமுடுத்துத் துவாதசோர்த்துவபுண்டரமணிந்து காலைக்கடன்கழித்துக் கரையேறிப் பாணர் வழக்கமாக நிற்கின்றவிடத்துச் சென்று அவர் திருவடிகளிலே ஸாஷ்டாங்கமாகத் தண்டனிட்டு 'தேவரீரைத் தம்மிடத்துக்கு எழுந்தருளப் பண்ணுவித்துக்கொண்டு வரவேண்டுமென்று நம்பெருமாள் அடியேனுக்குக் கட்டளையிட்டருளினார்' என்று சொல்ல, பாணர் தலைவர், 'நீசனான அடியேன் திருவரங்கப்பெருநகரை மிதித்திடுவேனோ?' என்று தம் சாதியிழிவைச் சொல்லி மறுத்திட்டனர்.

அப்பால் முனிக்கரசு 'தேவரீர் மிதித்திடவேண்டா; பெருமாள் பெரிய திருவடியின் திருத்தோளில் எழுந்தருளுதல்போலத் தேவரீர் அடியேனது தோளில் ஏறியருளும்' என்று பிரார்த்திக்க, அது கேட்டவளவிலே யாழ்ப்பாணர் அளவிறந்த அச்சங்கொண்டு அதனால் உடல்நடுநடுங்கிச் சொற்குழறி 'மகாபரிசுத்தமூர்த்தியான தேவரீர் அடியேன்திறத்து இங்ஙனங் கூறவொண்ணாது; பாகவதர் பாதத்துக்குச் சிரத்தைப் பீடமாக்குதற்கு உரிய யானோ இக்கொடுந்தொழில்புரிவேன்: இதுசெய்து பாகவதாபசாரப்படுதலினும் எரிவாய்நரகத்து அழுந்துவது நலமன்றோ?' என்று நைச்சியவார்த்தைகள்கூறினார்.

அதன்பின் அருந்தவர் பகவந்நியமநத்தை விண்ணப்பஞ்செய்து 'அது கடத்தற்கு உரியதன்று' என்று பகர்ந்து நிர்ப்பந்திக்க, பின்னர் வீணைப்பாடகர் கடவுள் கட்டளைக்கு யாதும் மாறுகூறமாட்டாமற் கூப்பியகையராய் அநந்தசயனனுக்கே தம்மை அர்ப்பித்துப் பரதந்திரராய் நின்றிட்டார்.

பின்னர்த் தபோநிதி காயகசார்வபௌமரைத் தோளிலேற்றிக்கொண்டு, முக்தனாய்ப்போமவனை ஆதிவாஹிகர் எழுந்தருள்வித்துக்கொண்டு திருமாமணிமண்டபத்துக்குச் செல்லுமாறுபோலச் சென்று ரங்கநாதனது திருமுன்பே இறக்கிவிட்டனர்.

உடனே முனிவாகனர், "இருளகற்று மெறிகதிரோன் மண்டலத்தூடேற்றிவைத்தேணிவாங்கி யருள்கொடுத்திட்டடியவரை யாட்கொள்வா"னை அணியரங்கனது திவ்விய மங்கள விக்கிரகத்தைப் பாதாதிகேசம் நேத்திராநந்தமாகச் சேவித்து அதில் ஆழ்ந்த அகத்தராய் அதனழகை அனுபவித்து அவ்வநுபவாதிசயத்தைப் பின்புள்ளார்க்கும் விசதமாக்குதற்பொருட்டு "அமலனாதிபிரான்" என்ற திவ்வியப்பிரபந்தத்தைத் திருவாய்மலர்ந்தருளி அதன் இறுதியில், "கொண்டல்வண்ணனைக் கோவலனாய் வெண்ணெ, யுண்டவாய

னென்னுள்ளங்கவர்ந்தானை,யண்டர்கோனணியரங்கனென்னமுதினைக்,கண்ட கண்கள் மற்றொன்றினைக்காணாவே" என்று தமது திணிவை வெளியிட்டு உலகத்தாரை வாழ்வித்து மிகவும் உகப்போடு நிற்கையில், பெரியபெருமாள் அத்திருமேனியோடு அவரை அங்கீகரித்தருள, திருப்பாணாழ்வார் அகிலரும் காண அப்பிரானது திருவடிகளிலே அந்தர்ப்பவித்துக் காய்ந்தஇரும்புஉண்ட நீராயினர்.

கோவலன் குழலிசையாற் கோக்களை மகிழச்செய்ததுபோல அக்கோவிந் தனை யாழிசையால் மகிழ்வித்த இவ்வாழ்வார் இவ்வுலகில் வாழ்ந்திருந்தது ஐம்பதுவருஷகால மென்பர்.

லோகசாரங்கர் முதலிய பலர் இவ்வாழ்வாரை யாசிரயித்து நற்கதிபெற் றார்கள். "காண்பனவு முரைப்பனவு மற்றொன்றின்றிக் கண்ணனையே கண் டுரைத்த கடியகாதற், பாண்பெருமாளருள்செய்த பாடல்பத்தும் பழமறையின் பொருளென்று பரவுமின்கள்."

உம்பர்தொழுமெய்ஞ்ஞானத்துறையூரான்வாழியே
　உரோகிணிநாள்கார்த்திகையிலுதித்தவள்ளல்வாழியே
வம்பவிழ்தார்முனிதோளில்வந்தபிரான்வாழியே
　மலர்க்கண்ணைவேறொன்றில்வையாதான்வாழியே
அம்புவியில்மதிளரங்கரகம்புகுந்தான்வாழியே
　அமலனாதிபிரான்பத்துமருளினன்வாழியே
செம்பொனடிமுடியளவும்சேவிப்போன்வாழியே
　திருப்பாணன்பொற்பதங்கள்செகதலத்தில்வாழியே.

திருப்பாணாழ்வார்.

திருப்பாணாழ்வார் அருளிச்செய்த

† அமலனாதிபிரான்.

தனியன்கள்.

(பெரியநம்பிகள் அருளிச்செய்தது.)

𑌆𑌪𑌾𑌦𑌚𑍂𑌡𑌮𑌨𑍁𑌭𑍂𑌯𑌹𑌰𑌿𑌂𑌶𑌯𑌾𑌨𑌂
𑌮𑌧𑍍𑌯𑍇𑌕𑌵𑍇𑌰𑌦𑍁𑌹𑌿𑌤𑍁𑌰𑍍𑌮𑍁𑌦𑌿𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 ।
𑌅𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍃𑌤𑌾𑌂𑌨𑌯𑌨𑌯𑍋𑌰𑍍𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌣𑌾𑌂
𑌯𑍋𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌕𑌾𑌯𑌮𑌨𑌵𑍈𑌮𑍁𑌨𑌿𑌵𑌾𑌹𑌨𑌂𑌤𑌂 ॥

ఆపాదచూడమనుభూయహరింశయానం
మధ్యేకవేరదుహితుర్ముదితాంతరాత్మా॥
అద్రష్టృతాంనయనయోర్విషయాంతరాణాం
యోనిశ్చికాయమనవైమునివాహనంతం॥

ஆபாதசூடமநுபூய ஹரிம்ஶயாநம்
மத்யேகவேர துஹிதுர்முதிதாந்தராத்மா -
அத்ரஷ்ட்ருதாம்நயநயோர்விஷயாந்தராணும்
யோநிஶ்சிகாயமநவைமுநிவாஹநந்தம்.

---

† இது, நித்யாநுஸந்தாநம்.

(திருமலைநம்பிகள் அருளிச்செய்தது.)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காட்டவேகண்டபாதகமலம் நல்லாடையுந்தி *
தேட்டருமுதரபந்தம் திருமார்வுகண்டம்செவ்வாய் *
வாட்டமில்கண்கள்மேனி முனியேறித்தனிபுகுந்து *
பாட்டினாற்கண்டுவாழும் பாணர்தாள்பரவினோமே.

அழகியமணவாளனது திருமேனியழகில் பாதாதிகேசாந்தமாக ஈடுபடுதல்.

ஆசிரியத்துறை. (யமுனாகல்யாணிராகம் - திரிபுடைதாளம்.)

↓↓ அமலனாதிபிரான் அடியார்க்கென்னையாட்படுத்த
விமலன் * விண்ணவர்கோன் விரையார்பொழில்வேங்கடவன் *
நிமலன்நின்மலன்நீதிவானவன் நீள்மதிளரங்கத்தம்மான் * திருக்
கமலபாதம்வந்து என்கண்ணினுள்ளனவொக்கின்றதே. (௧)

உவந்தவுள்ளத்தனாய் உலகமளந்தண்டமுற *
நிவந்தநீண்முடியன் அன்றுநேர்ந்தநிசாசரரை *
கவர்ந்தவெங்கணைக்காகுத்தன் கடியார்பொழிலரங்கத்தம்மான் * அரைச்
சிவந்தவாடையின்மேல் சென்றதாமெனசிந்தனையே. (௨)

↓↓ மந்திபாய் வடவேங்கடமாமலை * வானவர்கள்
சந்திசெய்யநின்றான் அரங்கத்தரவினணையான் *
அந்திபோல்நிறத்தாடையும் அதன்மேலயனைப்படைத்ததோரெழில் *
உந்திமேலதன்றோ அடியேனுள்ளத்தின்னுயிரே. (௩)

சதுரமாமதிள்சூழ் இலங்கைக்கிறைவன்தலைபத்
துதிரவோட்டி * ஓர்வெங்கணையுய்த்தவன் ஓதவண்ணன் *
மதுரமாவண்டுபாட மாமயிலாடரங்கத்தம்மான் * திருவயிற்
† றுதரபந்தம் என்னுள்ளத்துள்நின்றுலாகின்றதே. (௪)

பாரமாய பழவினைபற்றறுத்து * என்னைத்தன்
வாரமாக்கிவைத்தான் வைத்ததன்றியென்னுள்புகுந்தான் *
கோரமாதவம்செய்தனன்கொலறியேன் அரங்கத்தம்மான் * திரு
வாரமார்பதன்றோ அடியேனையாட்கொண்டதே. (௫)

துண்டவெண்பிறையன் துயர்தீர்த்தவன் * அஞ்சிறைய
வண்டுவாழ்பொழில்சூழ் அரங்கநகர்மேயஅப்பன் *
அண்டரண்டபகிரண்டத்து ஒருமாநிலமெழுமால்வரை * முற்றும்
உண்டகண்டங்கண்டீர் அடியேனையுய்யக்கொண்டதே. (௬)

---

† 'உதரபந்தனம்' என்றும் பாடம்.

கையினார் சுரிசங்கனலாழியர் * நீள்வரைபோல்
மெய்யனார் துளபவிரையார் கமழ்நீண்முடியெம்
ஐயனார் * அணியரங்கனார் அரவினணைமிசைமேயமாயனார் *
செய்யவாய் ஐயோ! என்னைச்சிந்தைகவர்ந்ததுவே. (எ)

பரியனாகிவந்த அவுணனுடல்கீண்ட * அமரர்க்
கரியவாதிப்பிரான் அரங்கத்தமலன்முகத்து *
கரியவாகிப்புடைபரந்து மிளிர்ந்துசெவ்வரியோடி * நீண்டஅப்
பெரியவாயகண்கள் என்னைப்பேதைமைசெய்தனவே. (அ)

↓↓ ஆலமாமரத்தினிலைமேல் ஒருபாலகனாய் *
ஞாலமேழுமுண்டான் அரங்கத்தரவினணையான் *
கோலமாமணியாரமும் முத்துத்தாமமும் முடிவில்லதோரெழில் *
நீலமேனி ஐயோ! நிறைகொண்டதென்நெஞ்சினையே. (கூ)

↓↓ கொண்டல்வண்ணனைக் கோவலனாய்வெண்ணெ
யுண்டவாயன் * என்னுள்ளம்கவர்ந்தானை *
அண்டர்கோனணியரங்கன் என் † னமுதினைக்
கண்டகண்கள் * மற்றொன்றினைக் காணாவே. (கo)

அடிவரவு:—அமலன் உவந்த மந்தி சதுரம் பாரம் துண்ட கை பரி
ஆல கொண்டல் கண்ணி.

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்.

† 'அமுதனை' என்றும் பாடம்.

மதுரகவியாழ்வார் வைபவம்.

മേഷേ ചിത്രാസമുദ്ഭൂതം പാണ്ഡ്യദേശേ ഗണാംശകം ।
ശ്രീപരാങ്കുശസദ്ഭക്തം മധുരങ്കവിമാശ്രയേ ॥

మేషే చిత్రాసముద్భూతం పాండ్యదేశే గణాంశకం।
శ్రీపరాంకుశసద్భక్తం మధురంకవిమాశ్రయే।

மேஷேசித்தாஸமுத்பூதம் பாண்ட்யதேஶேகணாம்ஶகம்-
ஸ்ரீபராங்குஶஸத்பக்தம் மதுரங்கவிமாஶ்ரயே.

பாண்டியநாட்டிலே, திருக்குருகூர்க்கு அருகிலுள்ள திருக்கோளூரிலே, துவாபரயுகத்தில், எட்டுலக்ஷத்து அறுபத்துமூவாயிரத்து எண்ணூற்றெழுபத்தொன்பதாவதான ஈசுவரவருஷத்தில், சித்திரைமாதத்தில் சித்திரைநக்ஷத்திரத்திலே, கணேசரான குமுதரது அம்சமும் கருடாழ்வானது அம்சமுமாய் ஒருவர் அவதரித்தார். சூரியோதயத்திற்குமுன் கிழக்கிற் காணப்படுகின்ற அருணோதயம்போலப் பராங்குசருதித்தற்குமுன் தென்தேயத்தில்தோன்றிய இவர், வேதசாஸ்திரங்களை இளமையிலேயேபயின்று செவிக்கினிய செஞ்சொற்கவிகளைப் பாட வல்லராய் அதனால் 'மதுரகவி' என்று திருநாமம்பெற்று மெய்யுணர்வினால் அவாவற்று மகாவிரக்தராய் விஷ்ணுபக்தி விஞ்சி யோகநிஷ்டையிலுந் தேர்ந்து தீர்த்தயாத்திரை திவ்வியதேசயாத்திரைகளிலே திருவுள்ளமுடையராய்ப் புறப்பட்டுச் சஞ்சரிக்கலுற்று வடநாட்டுத்திருப்பதிகளைச் சேவித்துக்கொண்டு திருவயோத்தியை யடைந்து, அங்கு அர்ச்சாவதாரரூபமாய் எழுந்தருளியிருக்கின்ற இராமபிரானையும் ஜாநகிப் பிராட்டியையுந் தரிசித்துத் திருவடிதொழுது அந்தப் பரிசுத்தபூமியில் நித்தியவாசஞ்செய்யக் கருதிச் சிலகாலம் வசித்திருந்தார்.

அக்காலத்தில் ஒருநாள் இரவில் இவர் திருக்கோளூரெம்பெருமானைத் திசைநோக்கித்தொழக் கருதித் தெற்குத்திக்கிற் கண்செலுத்தியபொழுது, அப்பக்கத்திலே வானுறவளர்ந்து விளங்குகின்றதொரு திவ்யமானபேரொளியைக் கண்ணுற்று அது இன்னதென்றறியாமல் 'கிராமநகரங்கள் வேகின்றனவோ? காட்டுத்தீயோ?" என்று சங்கித்துத் திகைத்துநின்றார். நின்றவர், இங்ஙனமே அடுத்த இரண்டுமூன்றுநாள்களிலுங் கண்டு, அச்சுடர்த்திரள் முச்சுடரொளியினும் மிக்குவிளங்கியதனால் வெகுவியப்புற்று, அதனை அருகிற்சென்றுபார்த்

துத் தெளியத் துணிந்து பிரயாணப்பட்டு, அச்சோதியையே குறியாகக் கொண்டு அதிவிரைவாக நெடுவழிகடந்து நடந்துவந்து, ஆழ்வார்திருநகரியை யடைந்து, அதில் அவதரித்தருளியுள்ள சடகோபமுனிவரது திருமேனிவிளக் கத்தைச் சேவித்து, இதுவே அத்தனைநெடுந்தூரம் பிரகாசித்ததென்று அறிந்து ஆச்சரியப்பட்டு, அவ்வாழ்வாரது நிலைமை முன்பு தாம் கேள்வியுற்றிருந்த படியே அப்ராகிருதமாயிருக்கக் கண்டு, அவர்க்குக் கட்புலனும் வாய்ப்புலனும் உண்மையைச் சிலஉபாயங்களாற் பரிசோதிப்பவரானார். அப்பொழுது காரி மாறப்பிரான் கண்திறந்து கடாக்ஷித்து, இவர் கேட்ட கேள்விக்கு ஏற்ற விடை சொல்லியருள, அதுகேட்டு மதுரகவியாழ்வார் அவரது ஞானவைப வத்துக்கு அதிசயித்து ஈடுபட்டு அவரையே ஆசாரியராகக்கொண்டு சரணம் புகுந்தனர்.

அப்பொழுது நம்மாழ்வார் பஞ்சஸம்ஸ்காரம் பிரசாதித்து இவரை ஆட் கொண்டு, பரத்வம் வியூகம் விபவம் அந்தர்யாமித்வம் என்னும் நான்கு நிலைக ளுக்கு முறையே வேதம் பாஞ்சராத்ரம் இதிஹாஸம் ஸ்மிருதி என்பனபோல அர்ச்சாவதாரத்திற்குஏற்ற துதிவடிவமான தமிழ்நூல்களைச் செய்யத்தொடங்கி, சதுர்வேதத்தின் ஸாரமாக நான்குபிரபந்தங்களை அருளிச்செய்து, அவற்றை அம்மதுரகவிக்கு உபதேசித்தருளினார்.

'முந்தின மூன்றுயுகங்களில் தியாக யாக அர்ச்சநங்களாற் போலக் கடை யுகத்தில் தோத்திரமாத்திரத்தால் உயர்கதி உளதாம்' என்ற நூற்கொள்கைக்கு ஏற்ப மதுரகவிகள் தாம் உபதேசம்பெற்ற திவ்வியப்பிரபந்தங்களைக் கைத்தாள மெடுத்துப் பண்ணிசையோடு எப்பொழுதும் பாராயணஞ் செய்துகொண்டு திருக்குருகூர்நகர்நம்பிக்குப் பிரதானசிஷ்யராய், பரதாழ்வானுக்கே பணிவிடை புரிந்தொழுகின சத்துருக்கனாழ்வான்போலப் பகவத்பக்தியினும் பாகவதப் பிரதிபத்தியையே பரமாநுஷ்டாநமாகத் தலைக்கொண்டு அவ்வாழ்வார் விஷய மாக 'கண்ணிநுண்சிறுத்தாம்பு' என்ற திவ்வியபிரபந்தத்தைப் பாடி முமு க்ஷுக்களுக்கு உபகரித்தருளி வாழ்ந்திருக்கையில், தேவிற்சிறந்த திருமாற்குத் தக்க தெய்வக்கவிஞரும் பாவிற்சிறந்த திருவாய்மொழி பகர் பண்டிதருமான காரிமாறர் திருநாட்டை யலங்கரித்தார்.

அப்பால், ஆசிரியரைப் பிரிந்ததற்கு மிக இரங்கி அரிதில்தேறிய மதுர கவிகள், அர்ச்சாரூபமான ஆழ்வார் விக்கிரகத்தை அத்திருநகரியில் ஏறியருளப் பண்ணிப் பிரதிஷ்டித்து அவர்க்கு நித்திய நைமித்திக உத்ஸவங்களையெல் லாம் சிறப்புற நடத்திக்கொண்டுவந்தார். அத்திருவிழாக்களில், 'வேதந்தமிழ் செய்த மாறர் வந்தார்,' 'திருமாலுக்குஉரிய தெய்வப்புலவர் வந்தார்,' 'அளவிலா ஞானத்து ஆசிரியர் வந்தார்' என்ற இவை முதலாக அநேகவிருதுகளைக் கூறித் திருச்சின்னம் முழங்குதலைக் கேள்வியுற்றவளவிலே, மதுரைச் சங்கத்தாரது தூண்டுதலால் அவர்கள்மாணாக்கர்கள் வந்து எதிரிட்டு 'உங்களாழ்வார் பக்தரே யன்றிப் பகவானல்லரே ; இவர் சங்கமேறிய புலவரோ ? இவர் பாடிய திரு வாய்மொழி சங்கமேறிய செய்யுளன்றே ; இவரை வேதந் தமிழ் செய்தவ

றென்று சிலாகிப்பது தகுதியோ?" என்று பல குதர்க்கம் பேசி விருதுகளைத் தடுத்திட்டனர். அதற்கு மதுரகவிகள் மனம்பொறுமல் வருந்தி 'இவர்கட்குக் கர்வபங்கமாம்படி தேவரீர் செய்தருளவேண்டும்' என்று ஆழ்வாரையே பிரார்த்திக்க, சடகோபர் ஒரு கிழப்பிராமணவடிவத்தோடு வந்து 'திருவாய்மொழியில் "கண்ணன்கழலிணை, நண்ணும் மனமுடையீ, ரெண்ணுந்திருநாமம், திண்ணம் நாரணமே" என்ற பாசுரத்தின் முதலடியை ஒரு சிற்றேட்டில் எழுதிக் கொண்டுபோய்ச் சங்கப்பலகையில் வைத்திட்டால் அவர்கள் செருக்கு அடங்கும்' என்று கூறியருளினர். அந்த நியமனத்தின்படியே சடகோபபக்தர் கண்ணன்கழலிணையையெழுதிய ஏட்டை எடுத்துப்போய் வைத்திட்ட மாத்திரத்தில், சங்கப்புலவர்கள் ஏறியிருந்த பலகை பொற்றாமரைப்பொய்கையில் மூழ்கித் தன்மேலிருந்த புலவர்களையெல்லாம் நீரில் வீழ்த்தி உடனே மேலெழுந்து தன்மீதுவைத்த சிறுமுறியைமாத்திரம் ஏந்திக்கொண்டு மிதந்தது. அப்பொழுது நீரில்விழுந்து அமிழ்ந்து தடுமாறி யெழுந்து மெல்ல நீந்திக் கரைசேர்ந்த சங்கப்புலவர்கள், சகல வேதசாஸ்திரங்களையும் பிறராற் கற்பிக்கப்படாமல் தாமேயுணர்ந்த பகவதம்சமாகிய ஆழ்வாருடைய தெய்விகமான பாண்டித்தியத்தைத் தெரிந்துகொண்டு இறுமாப்பொழிந்து, தாம் முன்பு அபசாரப்பட்டதற்கு அநுதாபமுற்று, அதனை க்ஷமித்தற்பொருட்டு அவரது மகிமையைக் குறித்துத் தோத்திரமாகத் தனித்தனி ஒவ்வொரு பாடல்பாடி வெளியிடுபவரானார்கள். அங்ஙனம் வெளியிடுகையில், அப்பாடல்கள் யாவும்,

"சேமங் குருகையோ செய்யதிருப் பாற்கடலோ
நாமம் பராங்குசமோ நாரணமோ—தாமந்
துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கு
முளவோ பெருமா னுனக்கு"

என்ற இப்பாடல்வடிவாகச் சிறிதும்வேற்றுமையின்றி ஒற்றுமைப்பட்டிருக்க, அதுபற்றி அவர்களனைவரும் 'இது என்ன அற்புதம்! என்ன அற்புதம்!! இதுவும் ஆழ்வாரது தெய்வத்திருவருளே !!!' என்று அதிசயப்பட்டு,

"ஈயாடுவதோகருடற்கெதிரே யிரவிக்கெதிர்மின்மினியாடுவதோ
நாயோடுவதோவுறுமிப்புலிமுன் நரிகேசரிமுன்நடையாடுவதோ
பேயாடுவதோவழகூர்வசிமுன் பெருமான்வகுளாபரணன்னருள்கூர்ந்
தோவாதுரையாயிரமாமறையின்னொருசொற்பொறுமோவுலகிற்கவியே"

என்பது முதலாகச் சிற்சில கவிகள் பாடிப் புகழ்ந்து, அன்றுமுதல் ஆழ்வார்க்கு விருதுகூறல் முதலிய சகலவிபவங்களையும் முன்னினும்பலமடங்கு மிகுதியாக நடப்பித்துவந்தார்கள்.

இப்படி மதுரகவியாழ்வார் "ஆசானை யெவ்விடத்து மப்படியே" என்றபடி தமது ஆசாரியருடைய பெருமைகளை வெளியிட்டுக்கொண்டு அத்தலத்திலே சிலகாலம் எழுந்தருளியிருந்து, பின்பு, சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைமைத்தான பேரின்பப்பெருவீட்டை யடைந்தனர்.

இங்ஙனம் இவ்வாழ்வார் நம்மாழ்வாருக்குத் திருவடித்தொண்டரா யொழுகியதுபற்றி, அவரது திருவடிநிலை, 'மதுரகவிகள்' என இவர் திருநாமத்தையிட்டு வழங்கப்படும்.

சித்திரையிற்சித்திரைநாள்சிறக்கவந்தோன்வாழியே
திருக்கோளூரவதரித்தசெல்வனார்வாழியே
உத்தரகங்காதீரத்துயர்தவத்தோன்வாழியே
ஒளிகதிரோன்தெற்குதிக்கவுகந்துவந்தோன்வாழியே
பத்தியுடன்பதினொன்றும்பாடினன்வாழியே
பராங்குசனேபரமென்றுபற்றினன்வாழியே
மத்திமமாம்பதப்பொருளைவாழ்வித்தான்வாழியே
மதுரகவிதிருவடிகள்வாழிவாழிவாழியே.

மதுரகவியாழ்வார்.

மதுரகவியாழ்வார் அருளிச்செய்த

† கண்ணிநுண்சிறுத்தாம்பு.

தனியன்கள்.

(நாதமுனிகள் அருளிச்செய்தவை.)

𑌅𑌵𑌿𑌦𑌿𑌤𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌶𑍍𑌶𑌠𑌾𑌰𑍇
𑌰𑍁𑌪𑌨𑌿𑌷𑌦𑌾𑌮𑍁𑌪𑌗𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌰𑌭𑍋𑌗𑌃 ।
𑌅𑌪𑌿𑌚𑌗𑍁𑌣𑌵𑌶𑌾𑌤𑍍𑌤𑌦𑍇𑌕𑌶𑍇𑌷𑍀
𑌮𑌧𑍁𑌰𑌕𑌵𑌿𑌰𑍍𑌹𑍃𑌦𑌯𑍇𑌮𑌮𑌾𑌵𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 ॥

అవిదితవిషయాంతరశ్శఠారే రుపనిషదాముపగానమాత్రభోగః ।
అపిచగుణవశాత్తదేకశేషీ మధురకవిర్హృదయేమమావిరస్తు ॥

அவிதிதவிஷயாந்தரஶ்ஶடாரே
ருபநிஷதாமுபகாநமாத்ரபோகஃ -
அபிசகுணவஶாத்ததேகஶேஷீ
மதுரகவிர்ஹ்ருதயேமமாவிரஸ்து.

இருவிகற்பநேரிசைவெண்பா.

வேறொன்றும்நானறியேன் வேதம்தமிழ்செய்த *
மாறன்சடகோபன் வண்குருகூர்—ஏறு * எங்கள்
வாழ்வாமென்றேத்தும் மதுரகவியார் * எம்மை
ஆள்வாரவரேயரண். ‡

நம்மாழ்வார் விஷயம்.

கலிவிருத்தம். [ஆபிராகம் - அதிதாளம்.]

‡‡கண்ணிநுண்சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணியபெருமாயன் * என்னப்பனில் *
நண்ணித்தென்குருகூர் நம்பியென்றக்கால் *
அண்ணிக்குமமுதூறும் என்னாவுக்கே. (௧)

† இது, நித்யாநுஸந்தாநம்.

‡ 'சரண்' என்று பாடாந்தரம்.

நாவினால்நவிற்று இன்பமெய்தினேன் *
மேவினேன் அவன்பொன்னடிமெய்ம்மையே *
தேவுமற்றறியேன் குருகூர்நம்பி *
பாவினின்னிசை பாடித்திரிவனே. (உ)

திரிதந்தாகிலும் தேவபிரானுடை *
கரியகோலத் திருவுருக்காண்பன்நான் *
பெரியவண்குருகூர் நகர்நம்பிக்கா
ளுரியனாய் * அடியேன் பெற்றநன்மையே. (௩)

நன்மையால்மிக்க நான்மறையாளர்கள் *
புன்மையாகக் கருதுவராதலின் *
அன்னையாயத்தனாய் என்னையாண்டிடும்
தன்மையான் * சடகோப னென்நம்பியே. (௪)

நம்பினேன் பிறர்நன்பொருள்தன்னையும் *
நம்பினேன் மடவாரையும்முன்னெலாம் *
செம்பொன்மாடத் திருக்குருகூர்நம்பிக்
கன்பனாய் * அடியேன் சதிர்த்தேனின்றே. (௫)

இன்றுதொட்டும் எழுமையும்எம்பிரான் *
நின்றுதன்புகழ் ஏத்தவருளினான் *
குன்றமாடத் திருக்குருகூர்நம்பி *
என்றுமென்னை இகழ்விலன்காண்மினே. (௬)

கண்டுகொண்டென்னைக் காரிமாறப்பிரான் *
பண்டைவல்வினை பாற்றியருளினான் *
எண்டிசையும் அறியவியம்புகேன் *
ஒண்தமிழ்ச் சடகோபனருளையே. (௭)

அருள்கொண்டாடும் அடியவரின்புற *
அருளினான் அவ்வருமறையின்பொருள் *
அருள்கொண்டு ஆயிரமின்தமிழ்பாடினான் *
அருள்கண்டீர் இவ்வுலகினில்மிக்கதே. (௮)

மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள் *
நிற்கப்பாடி என்னெஞ்சுள்நிறுத்தினான் *
தக்கசீர்ச் சடகோபனென்நம்பிக்கு * ஆள்
புக்ககாதல் அடிமைப்பயனன்றே. (௯)

⸸⸸ பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் *
செயல்நன்றாகத்திருத்திப் பணிகொள்வான் *
குயில்நின்றார்பொழில்சூழ் குருகூர்நம்பி! *
முயல்கின்றேன் உன்றன்மொய்கழற்கன்பையே. (கo)

⸸⸸ அன்பன் தன்னை அடைந்தவர்கட்கெல்லாம்
அன்பன் * தென்குருகூர் நகர்நம்பிக்கு *
அன்பனாய் மதுரகவிசொன்னசொல்
நம்புவார்பதி * வைகுந்தம் காண்மினே. (கக)

அடிவரவு:—கண்ணி நாவினால் திரி நன்மையால் நம்பினேன் இன்று கண்டு அருள் மிக்க பயன் அன்பன் வாடினேன்.

மதுரகவியாழ்வார் திருவடிகளே சரணம்.

பாசுரம்.

திருப்பல்லாண்டு	கஉ
பெரியாழ்வார்திருமொழி	சசுக
திருப்பாவை	நo
நாச்சியார்திருமொழி	கசந
பெருமாள்திருமொழி	கoரு
திருச்சந்தவிருத்தம்	கஉo
திருமாலை	சரு
திருப்பள்ளியெழுச்சி	கo
அமலனாதிபிரான்	கo
கண்ணிநுண்சிறுத்தாம்பு	கக

ஆக, முதலாயிரம், பாசுரம் - கூசஎ

முதலாயிரம் ஸம்பூர்ணம்.

முதலாயிரச் செய்யுளகராதி.

அ	பக்கம்.
அக்கரையென்னும்	௯௫
அக்காக்காய்நம்பிக்கு	௩௯
அங்கணெடுமதிள்புடைசூழ்	௧௬௫
அங்கண்மாஞாலத்தரசர்	௧௧௦
அங்கமலக்கண்ணன்தன்னை	௪௭
அங்கமலப்போதகத்தில்	௩௧
அங்கமாறும்வேதநான்கும்	௧௮௦
அங்கம்விட்டவையைந்து	௭௭
அங்கைத்தலத்திடை	௧௩௪
அங்கையாழியரங்கனடியிணை	௧௫௧
அங்கொருகூறை	௭௯
அச்சம்நோயோடல்லல்	௧௯௩
அஞ்சனவண்ணனை	௫௦
அஞ்சுடராழியுன்கையகம்	௫௩
அடக்கரும்புலன்கள்	௧௯௦
அடிமையிற்குடிமையில்லா	௨௦௫
அடியோமோடும்நின்னோடும்	௮
அடைந்திட்டமரர்கள்	௨௨
அட்டுக்குவிசோற்று	௫௬
அண்டக்குலத்துக்கு	௮
அண்டத்தமரர்கள்சூழ	௪௧
அண்டத்தமரர்பெருமான்	௬௫
அதிரும்கடல்நிறவண்ணனை	௧௨
அதிர்முகமுடையவலம்புரி	௮௧
அத்தனாகியன்னையாகி	௧௯௨
அந்தரத்தமரர்கள்கூட்டங்	௨௦௯
அப்பங்கலந்தசிற்றுண்டி	௩௫
அமரவோரங்கமாறும்	௨௦௬
அமலனாதிபிரானடியார்க்கு	௨௧௬
அம்பரமேதண்ணீரே	௧௦௮
அம்புலாவுமீனுமாகி	௧௮௨
அம்பொனெடுமணிமாடம்	௧௬௬
அம்மாவெனவுகந்தழைக்கும்	௧௬௩
அம்மைத்தடங்கண்	௫௭
அரங்கனேதரங்கநீர்கலங்க	௧௮௧
அரவணையாயாயரேறே	௩௦
அரவத்தமளியினோடும்	௯௪
அரவிற்பள்ளிகொண்டு	௫௯
அருள்கொண்டாடும்	௨௨௩
அலம்பாவெருட்டாக்கொன்று	௭௧
அல்லல்விளைத்தபெருமானை	௧௩௭
அல்லிநாள்தாமரை	௧௧௩
அல்லிமலர்த்திருமங்கை	௧௫௬
அல்லிமாமலர்மங்கைநாதன்	௧௪௯
அல்லியம்பூமலர்க்கோதாய்	௬௮
அல்வழக்கொன்றுமில்லா	௯
அவிதிதவிஷயாந்தரஸ்	௨௨௨
அவ்வவ்விடம்புக்கு	௫௧
அழகியபைம்பொன்னின்	௧௪
அழகியவாயிலமுதவூறல்	௧௬
அழிலுந்தொழிலுமுரு	௧௩௯
அளந்திட்டதூணை	௨௨
அளிமலர்மேலயனரன்	௧௪௭
அறிந்தறிந்துவாமனன்	௧௮௭
அற்றவன்மருதம்முறிய	௧௨௦
அனந்தன்பாலும்	௯௭
அனுங்கவென்னைப்பிரிவு	௧௩௭
அன்பன்தன்னை	௨௨௪
அன்றிவ்வுலகமளந்தாய்	௧௧௦
அன்றின்னாதனசெய்	௧௨௦
அன்றுசராசரங்களை	௧௬௭
அன்றுலகமளந்தானை	௧௨௩
அன்றுவயிற்றில்கிடந்திருந்தே	௯௬
அன்னவயற்புதுவை	௧௦௩
அன்னமுமீனுருவும்	௨௦

ஆ	
ஆசைவாய்ச்சென்ற	௭௯
ஆடகத்தபூண்முலை	௧௮௨
ஆட்கொள்ளத்தோன்றிய	௨௨
ஆணினோடுபெண்ணுமாகி	௧௮௧
ஆதியந்தமனந்தமற்புதம்	௧௪௯
ஆதியாதியாதிநீ	௧௮௨
ஆதியானவானவர்க்கும்	௧௭௯
ஆநிரைமேய்க்கநீபோதி	௪௦
ஆபாதசூடமநுபூய	௨௧௫
ஆமையாய்க்கங்கையாய்	௮௬
ஆமையின்முதுகத்து	௭௫
ஆயர்குலத்தினில்வந்து	௨௪
ஆயனாகியாயர்மங்கை	௧௮௩
ஆயனுக்காகத்தான்கண்ட	௧௨௫
ஆயிரந்தோள்பரப்பி	௭௪
ஆய்ச்சிமார்களும்	௧௧௯
ஆய்ச்சியர்சேரியளைதயிர்	௪௯
ஆய்ச்சியன்றாழிப்பிரான்	௨௮
ஆரங்கெடப்பரனன்பர்	௧௪௫
ஆரேயுலகத்தாற்றுவார்	௧௩௬
ஆர்க்குமென்னோய்	௧௩௪
ஆர்த்துவண்டலம்பும்	௨௦௪
ஆலத்திலையானரவினணை	௩௯
ஆலமாமரத்தினிலைமேல்	௨௧௭
ஆலினிலைப்பாலகனாய்	௧௯௧
ஆலைநீள்கரும்பன்னவன்	௧௫௭
ஆவலன்புடையார்தம்	௧௨௦

ஆ	பக்கம்.
ஆழிமழைக்கண்ணா	௧௦௪
ஆறுமாறுமாறுமாய்	௧௭௮
ஆற்றிலிருந்துவிளையாடு	௪௬
ஆனதசெல்வத்து	௧௫௧
ஆனயர்கூடியமைத்த	௭௧
ஆனைகாத்தொரானை	௧௮௩
இ	
இடவணரையிடத்தோளொடு	௬௦
இணையில்லாவின்னிசையாழ்	௧௪௬
இதுவென்புகுந்தது	௧௧௮
இந்திரனுள்ளிட்ட	௧௨௪
இந்திரனோடுபிரமன்	௪௧
இமையவரிறுமாந்து	௮௧
இம்மைக்குமேழேழ்பிறவிக்கு	௧௨௫
இயக்கறுதபல்பிறப்பில்	௧௯௩
இரந்துரைப்பதுண்டு	௧௯௧
இரவியர்மணிநெடும்	௨௦௯
இருக்கொடுநீர்சங்கில்	௪௨
இருங்கைமதகளிறு	௧௨
இருட்டில்பிறந்துபோய்	௨௮
இருமலைபோலெதிர்ந்தமல்ல	௩௧
இருளிரியச்சுடர்மணிகள்	௧௪௫
இலங்கைமன்னனைந்தொடு	௧௮௫
இலைத்தலைச்சரந்துரந்து	௧௮௫
இனிதிரைத்திவலை	௨௦௨
இன்பமதனையுயர்த்தாய்	௪௨
இன்றுசாதல்நின்றுசாதல்	௧௮௬
இன்றுதொட்டுமெழுமையும்	௨௨௯
இன்றுமுற்றும்முதுகுநோவ	௧௧௬
இன்றுவந்தித்தனையும்	௧௨௯
இன்னமுதமூட்டுகேன்	௧௪௫
இன்னையென்றுசொல்லலாவ	௧௮௦
ஈ	
ஈனமாயவெட்டுநீக்கி	௧௯௨
உ	
உங்கள்புழைக்கடை	௧௦௭
உச்சியில்லெண்ணெயும்	௭௯
உடுத்துக்களைந்த	௯
உடையார்கனமணியோடு	௧௪
உண்டியேயுடையேயுகந்து	௧௫௦
உண்ணாதுறங்காதொலிகடலை	௧௩௨
உண்பதுசொல்லில்	௧௨௬
உந்தியெழுந்தவுருவமலர்	௩௭
உந்துமதகளிற்றன்	௧௦௮
உம்பராலறியலாகா	௨௦௪
உம்பருலகாண்டு	௧௫௨

உ	பக்கம்.
உய்யவுலகுபடைத்துண்ட	௧௭
உரகமெல்லணையான்	௭௫
உரம்பற்றியிரணியனை	௮௬
உருப்பிணிநங்கைதன்னை	௭௩
உருப்பிணிநங்கையை	௬௬
உருவுடையாரிளையார்கள்	௧௧௪
உலகுமழிசையும்	௧௭௮
உலகுதன்னைநீபடைத்தி	௧௭௯
உவந்தவுள்ளத்தனாய்	௨௧௬
உழந்தாள்நறுநெய்	௧௨
உழுவதோர்படையும்	௮௧
உள்ளத்தேயுறையுமாலை	௨௦௪
உள்ளேயுருகிநைவேனை	௧௯௭
உறகலுறகலுறகல்	௯௪
உறியைமுற்றத்துருட்டி	௧௦
உற்றவுறுபிணிநோய்காள்	௯௪
உனக்குப்பணிசெய்திருக்கும்	௯௫
உன்னுடையவிக்கிரமம்	௯௭
உன்னையுமொக்கலையில்	௧௯
உன்னோடுடனே	௧௨௬
ஊ	
ஊடல்கூடலுணர்தல்புணர்	௧௨௦
ஊத்தைக்குழியில்	௮௦
ஊரிலேன்காணியில்லை	௨௦௪
ஊனில்மேயவாவிநீ	௧௯௦
ஊனேறுசெல்வத்து	௧௫௧
எ	
எட்டுத்திசையுமெண்ணிற	௭௨
எட்டுமெட்டுமெட்டுமாய்	௧௮௮
எண்ணெய்க்குடத்தை	௩௫
எத்தனைகாலமும்	௯௬
எத்தனையும்வான்மறந்த	௧௫௩
எத்திசையுமமரர்	௧௨௨
எத்திறத்திலும்யாரொடும்	௧௫௦
எத்திறத்துமொத்துநின்று	௧௮௮
எந்தைதந்தைதந்தை	௯
எந்தொண்டைவாய்ச்சிங்கம்	௧௩
எந்நாளெம்பெருமான்	௯
எம்பரத்தரல்லாரொடும்	௧௫௦
எம்மனாவென்குலதெய்வமே	௯௬
எம்மாண்பிலயன்நான்கு	௧௪௬
எரிசிதறுஞ்சரத்தால்	௭௪
எருதுகளோடுபொருதி	௪௦
எருத்துக்கொடியுடையானும்	௯௫
எல்லேயிளங்கிளியே	௧௦௮
எல்லேயீதென்னவிளமை	௧௧௮

எ	பக்கம்
எல்லையில்வாசல்	அஅ
எழிலார்திருமார்வுக்கு	க௫
எழிலுடையவம்மனைமீர்	க௩௨
எறியுநீர்வெறிகொள்	௨0௨
என்குற்றமேயென்று	௩௩
என்சிறுக்குட்டன்	க௬
என்தம்பிரானார்	க௫
என்புருகியினவேல்	க௨க
என்வில்வலிகண்டு	௬௬
என்றுமெனக்கினியானை	௫௨
என்னாதன்தேவிக்கு	௬௬
என்னிதுமாயம்	௨௫
என்னைவருகவென	க௫௬
ஏ	
ஏகமூர்த்திமூன்றுமூர்த்தி	கஅ0
ஏடுநிலத்திலிடுவதன்முன்னம்	அ
ஏதங்களாயினவெல்லாம்	௬௪
ஏதமில்தண்ணுமையெக்கம்	௨0௩
ஏராந்தகருநெடுமால்	க௬௪
ஏர்மலர்ப்பூங்குழலாயர்மாதா	க௫௪
ஏவிற்றுச்செய்வான்	எ௨
ஏழைபேதையோர்	௬௨
ஏறடர்த்ததுமேனமாய்	க௪௩
ஏற்றகலங்கள்	க0௩
ஐ	
ஐந்துமைந்துமைந்துமாகி	கஎஅ
ஐயபுழுதியுடம்பளைந்து	௬௨
ஒ	
ஒண்பவளவேலை	க௫க
ஒருகாலிற்சங்கு	௨௩
ஒருத்திமகனாய்ப்பிறந்து	க௪0
ஒருமகள்தன்னையுடையேன்	௬௪
ஒருவாரணம்பணிகொண்ட	எக
ஒருவில்லாலோங்குமுந்நீர்	௨0க
ஒளிவண்ணம்வண்ணசிந்தை	க௨எ
ஒற்றைவிடையனும்	அஅ
ஒன்றிநின்றுநற்றவஞ்செய்	கஅஎ
ஒன்றிரண்டுமூர்த்தியாய்	கஎ௩
ஒன்றுமறிவொன்றில்லாத	௬௪
ஒன்றேயுரைப்பான்	௩அ
ஓ	
ஓங்கியுலகளந்தவுத்தமன்	க0௪
ஓடவோடக்கிண்கிணிகள்	௩க
ஓடுவார்விழுவார்	க0
ஓதக்கடலினொளிமுத்தின்	க௫

க	பக்கம்
கங்கைநீர்பயந்தபாத	கஅக
கங்கையிற்புனிதமாய	௨0௩
கச்சொடுபொற்சுரிகை	க௫
கஞ்சனுங்காளியனும்	எ௩
கஞ்சன்கறுக்கொண்டு	௪௨
கஞ்சன்றன்னால்புணர்க்கப	௩0
கஞ்சன்புணர்ப்பினில்வந்த	௩௫
கஞ்சன்வலைவைத்தவன்று	ககஅ
கஞ்சைக்காய்ந்தகருவில்லி	க௩௬
கடங்கலந்தவன்கரி	கஅ௩
கடலில்பிறந்துகருதாது	க௨௫
கடலேகடலேயுன்னை	க௩க
கடல்கடைந்தமுதம்	௯எ
கடிமலர்க்கமலங்கள்	௨க0
கடியார்பொழிலணிவேங்கட	௫௨
கடுங்கவந்தன்வக்கரன்	க௯க
கடுவாய்ச்சினவெங்கண்	௫எ
கடைந்துபாற்கடல்கிடந்து	கஅஅ
கணமாமயில்காள்	க௩க
கண்டகடலும்மலையும்	௨௫
கண்டாரிகழ்வனவே	க௫௩
கண்டார்பழியாமே	௩அ
கண்டுகொண்டென்னை	௨௨௩
கண்ணனென்னுங்கருந்தெய்வம்	க௩௬
கண்ணாநான்முகனைப்படை	௯௨
கண்ணாலங்கோடித்து	க௩௨
கண்ணிநுண்சிறுத்தாம்பு	௨௨௩
கண்ணில்மணற்கொடு	௪௨
கண்ணைக்குளிரக்கலந்து	௩௪
கதிரவன்குணதிசை	௨0எ
கதிராயிரமிரவி	௬௯
கதிரொளிதீபம	க௨௪
கத்தக்கதித்துக்கிடந்த	௨௬
கம்பமதயானை	க௫௨
கரண்டமாடுபொய்கை	கஅ௬
கரியமுகில்புரைமேனி	எக
கருங்கண்தோகைமயில்	௬௨
கருப்புவில்மலர்க்கணை	கக௫
கருப்பூரம்நாறுமோ	க௨௫
கருமலர்க்கூந்தல்	க௫௫
கரும்பார்நீள்வயல்	௪௯
கருவிளையொண்மலர்காள்	க௨௯
கருவுடைமேகங்கள்	௪0
கருளுடையபொழில்மருதும்	அ௫
கலக்கியமாமனத்தனளாய்	௬அ
கழல்மன்னர்சூழ	௨௫
களிநிலாவெழில்	க௫அ

முதலாயிரச் செய்யுளகராதி.

க	பக்கம்.
கள்ளச்சகடும்மருதும்	௪௨
கறந்தநற்பாலும்	௩௫
கறவைகள்பின்சென்று	௧௧௧
கறுத்திட்டெதிர்நின்ற	௩௮
கறுத்தெதிர்ந்தகாலநேமி	௧௯௧
கற்பகக்காவுகருதியகாதலி	௨௭
கற்றினம்மேய்க்கிலும்	௧௩௫
கற்றினம்மேய்த்து	௩௭
கற்றுக்கறவை	௧௦௬
கனங்குழையாள்	௭௩
கனைத்திளங்கற்றெருமை	௧௦௭
கன்றினைவாலோலை	௩௬
கன்றுகளில்லம்புகுந்து	௪௧
கன்றுகளோடச்செவியில்	௩௫
கன்னலிலட்டுவத்தோடு	௪௫
கன்னற்குடந்திறந்தால்	௨௩
கன்னிநன்மாமதிள்சூழ்தரு	௫௨
கன்னிநன்மாமதிள்புடைசூழ்	௧௬௧
கன்னியரோடெங்கள்நம்பி	௧௧௯
கா	
காசின்வாய்க்கரம	௭௫
காசுங்கறையுடைக்கூறைக்கு	௭௯
காடுகளூடுபோய்	௫௨
காட்டவேகண்டபாத	௨௧௫
காட்டில்வேங்கடம்	௧௧௯
காட்டினான்செய்வல்வினை	௧௯௦
காணிலுமுருப்பொலார்	௧௮௭
காதம்பலவுந்திரிந்து	௬௫
காமர்தாதைகருதலர்	௯௩
காயமலர்நிறவா	௧௯
காயுடைநெல்லொடுகரும்பு	௧௧௫
காயுநீர்புக்குக்கடம்பேறி	௨௮
காய்சினத்தகாசிமன்னன்	௧௯௧
காய்த்தநீள்விளங்கனி	௧௮௩
காரார்கடலையடைத்திட்டு	௬௭
காரார்மேனிநிறத்தெம்பிரா	௫௦
காரிகையார்க்குமுனக்கும்	௩௯
காரினம்புரைமேனிநல்கதிர்	௧௪௯
காரொடொத்தமேனி	௧௮௪
கார்காலத்தெழுகின்ற	௧௨௮
கார்க்கோடற்பூக்காள்	௧௩௦
கார்த்தண்கமலக்கண்	௧௩௮
கார்த்தண்முகிலும்	௧௩௪
கார்மலிமேனிநிறத்து	௩௬
காலநேமிகாலனே	௧௮௨
காலுமெழாகண்ணநீரும்	௧௫
காலைக்கதவிடுகின்ற	௧௩௮

கா	பக்கம்.
காலையெழுந்திருந்து	௧௨௯
காவலில்புலனைவைத்து	௨௦௦
காளியன்பொய்கைகலங்க	௬௭
காறைபூணும்கண்ணாடி	௬௩
கானார்நறுந்துழாய்	௧௫
கி	
கிடக்கில்தொட்டில்	௧௧
கிங்கிணிகட்டி	௨௬
கிழக்கில்குடிமன்னர்	௩௭
கீ	
கீசுகீசென்றெங்கும்	௧௦௫
கீழுலகிலசுரர்களை	௮௪
கீழ்வானம்வெள்ளென்று	௧௦௬
கு	
குங்குமமப்பிகுளிர்சாந்தம்	௧௨௫
குடங்களெடுத்து	௪௦
குடதிசைமுடியை	௨௦௨
குடியிற்பிறந்தவர்செய்யும்	௬௫
குடையும்செருப்பும்	௫௧
குண்டலந்தாழக்குழல்தாழ	௪௬
குண்டுநீருறைகோளரி	௧௧௬
குத்துவிளக்கெரிய	௧௦௯
குந்தமோடுசூலம்வேல்கள்	௧௮௭
குமரிமணம்செய்து	௬௪
கும்மாயத்தொடுவெண்ணெய்	௪௮
குரக்கினத்தாலே	௨௨
குரக்கினப்படைகொடு	௧௮௨
குரங்குகள்மலையைநூக்க	௨௦௩
குருந்தமொன்றொசித்தான்	௭௫
குருமுகமாநதீத்ய	௭
குரைகடலையடலம்பால்	௧௬௬
குலங்களாயஈரிரண்டில்	௧௮௯
குழகனேயென்தன்	௧௫௮
குழலிருண்டுசுருண்டு	௬௨
குளித்துமூன்றனலை	௨௦௩
குறட்பிரமசாரியாய்	௮௬
குறுகாதமன்னரை	௭௨
குற்றமின்றிக்குணம்பெருக்கி	௭௪
குன்றூடுகொழுமுகில்போல்	௮௪
குன்றில்நின்றுவானிருந்து	௧௮௪
குன்றினால்குடைகவித்ததும்	௧௫௯
குன்றெடுத்தாநிரைகாத்தபிரா	௫௪
குன்றெடுத்தாநிரைகாத்தவா	௯௦
கூ	
கூசமொன்றுமின்றி	௧௮௦
கூடாரைவெல்லுஞ்சீர்	௧௧௩
கூடிக்கூடியுற்றார்கள்	௭௮

	பக்கம்.
கூ	
கூட்டிலிருந்துகிளி	கஙரு
கூன்தொழுத்தை	அச
கெ	
கெண்டையொண்கண்	கருச
கே	
கேசவனேயிங்கேபோதராயே	சச
கேடில்சீர்வரத்தனாய்	கஙஉ
கேட்டறியாதனகேட்கின்றேன்	ருங
கை	
கைத்தலத்துள்ளமாடழிய	சுங
கைந்நாகத்திடர்கடிந்த	அஎ
கைப்பொருள்கள்முன்னமே	கஙஉ
கையினார்சுரிசங்கு	உகஎ
கையுங்காலும்நிமிர்த்து	க௦
கொ	
கொங்குங்குடந்தையும்	ஙஅ
கொங்குமலிகருங்குழலாள்	கசு௦
கொங்கைச்சிறுவரையென்	கூச
கொங்கைவன்கூனிசொல்	உசு
கொடியேறுசெந்தாமரை	ருகூ
கொண்டகோலக்குறளுரு	கஉ௦
கொணடதாளுறி	க௦
கொண்டல்வண்ணாவிங்கே	சங
கொண்டல்வண்ணனைக்	உகஎ
கொண்டைகொண்ட	கஅச
கொம்பினார்பொழில்வாய்	எரு
கொம்மைமுலைகள்	கஙஎ
கொலையானைக்கொம்பு	எ௦
கொல்லைவேல்	கசுஉ
கொழுங்கொடிமுல்லை	உ௦அ
கொழுப்புடைப்பசெழுங்குருதி	அச
கோ	
கோங்கலரும்பொழில்	கஉசு
கோட்டுமண்கொண்டு	எச
கோலச்சுரிசங்கை	கக௩
கோலார்ந்தநெடுஞ்சார்ங்கம்	கசஎ
கோவைமணாட்டி	கங௦
கோழியழைப்பதன்முன்னம்	ககஎ
கோளரியின்னுருவம்	கஅ
ச	
சக்கரக்கையன்	கசு
சங்கமாகடல்கடைந்தான்	கஉஅ
சங்கின்வலம்புரியும்	கரு
சங்குதங்குமுன்கை	கஅரு
சண்டமண்டலத்தினூடு	கஅசு
சதுரமாமதிள்சூழ்	உகசு
சத்திரமேந்தி	உஎ
சந்திரமண்டலம்போல்	கஉசு
சந்தொடுகாரகிலும்	கங
சரங்களைத்துரந்து	கஅச
சலங்கலந்தசெஞ்சடை	கஙஉ
சலங்கொண்டுகிளர்ந்தெழுந்த	கஉஅ
சலமாமுகில்பல்கண	ருஅ
சலம்பொதியுடம்பில்	அ
சழக்குநாக்கொடு	கூக
சா	
சாடுசாடுபாதனே	கஅக
சாமிடத்தென்னை	அஅ
சார்ங்கம்வளையவலிக்கும்	கஉஉ
சாலப்பன்னிரைப்பின்னே	ருரு
சாலிவேலிதண்வயல்	கஅரு
சி	
சித்திரகுத்தனெழுத்தால்	கூங
சித்திரகூடத்திருப்ப	சுஅ
சிந்தப்புடைத்து	எஉ
சிந்துரச்செம்பொடி	கஉஅ
சிந்துரப்பொடி	ருரு
சிந்துரமிலங்க	ருரு
சிறியனென்று	கஎ
சிறுவிரல்கள்தடவி	சுக
சிற்றஞ்சிறுகாலே	ககஉ
சீ	
சீதக்கடலுள்ளமுது	கக
சீதநீர்புடைசூழ்	எசு
சீதைவாயமுதமுண்டாய்	ககஎ
சீமாலிகனவனோடு	சக
சீயினாற்செறிந்தேறிய	எசு
சீரணிமால்திருநாமமே	அ௦
சீரொன்றுதூதாய்	ஙக
சீலைக்குதம்பை	ருஉ
சு	
சுடரொளிபரந்தன	உ௦அ
சுரிகையுந்தெறிவில்லும்	ருச
சுருக்குவாரையின்றியே	ககஉ
சுருப்பார்குழலியசோதை	கச
சுரிம்பரங்குதண்டுழாய்	கஙரு
சுவரில்புராணநின்	கக௩
சுற்றமெல்லாம்பின்தொடர	கசுக
சுற்றிநின்றுயர்தழைகளிட	ருரு
சுற்றுமொளிவட்டம்	கசு

சூ	பக்கம்.
சூடிக்கொடுத்த	கOரு
சூதனாய்க்கள்வனாகி	உ'உ
செ	
செக்கரிடைநுனி	உரு
செங்கமலக்கழலில்	உ'
செங்கமலநாண்மலர்	கஉகூ
செங்கமலப்பூவில்	உசா
செஞ்சொல்மறைப்பொருள்	அகூ
செடியாயவல்வினைகள்	க௩உ
செண்பகமல்லிகை	சாக
செத்துப்போவதோர்	எஅ
செந்தழலேவந்து	க௩ரு
செந்நெலரிசிசிறுபருப்பு	சாசா
செந்நெலார்வயல்சூழ்	கக
செப்பாடுடையதிருமாலவன்	௩அ
செப்பிளமென்முலை	உகூ
செப்போதுமென்முலை	சாக
செம்பெருந்தடங்கண்ணன்	கூக
செம்மையுடையதிருவரங்கா	கருரு
செருவாளும்புள்ளாளன்	அஎ
செவ்வரிநற்கருநெடுங்கண்	ககூ௩
செழுங்கொழும்பெரும்பனி	கஅ௩
செறிதவச்சம்புகன்	ககூஎ
சென்றுலகம்குடைந்தாடும்	ருகூ
சென்னியோங்கு	ருகூ
சே	
சேப்பூண்டசாடுசிதறி	உரு
சொ	
சொல்லிலரசிப்படுதி	சா௩
சொல்லினால்தொடர்ச்சி நீ	கஎக
சொல்லினுந்தொழிற்கணும்	ககரு
சோ	
சோத்தம்பிரானென்று	ருஉ
சோர்விலாதகாதலால்	கஅஅ
சோர்வினால்பொருள்	எகூ
ஞா	
ஞாலமுற்றுமுண்டு	கூசா
த	
தக்கார்மிக்கார்களை	எக
தங்கையைமூக்கும்	அO
தடத்தவிழ்தாமரைப்பொய்	ககஅ
தடம்படுதாமரை	சாகூ
தடவரையின்மீதே	கஉகூ
தடவரைவாய்மிளிர்ந்து	கூஎ

த	பக்கம்.
தண்டொடுசக்கரம்	கஎ
தண்ணந்தாமரை	க௩அ
தண்ணெனவில்லை	அகூ
தத்துக்கொண்டாள்கொலோ	உக
தந்தம்மக்களழுது	ருO
தந்தையுந்தாயும்	கருரு
தமேவமத்வாபரவாஸு	உOஎ
தம்மாமன்நந்தகோபாலன்	கூ௩
தருச்சந்தப்பொழில்	கஎஅ
தருதுயரந்தடாயேல்	க௩ரு
தருமமறியாக்குறும்பனை	கருஅ
தலைக்கணத்துகள்	கஅO
தலைப்பெய்துகுமுறி	அக
தவத்துளார்	உOசா
தழைகளுந்தொங்கலும்	௩சா
தளையவிழும்நறுங்குஞ்சி	ககூக
தள்ளித்தளர்நடையிட்டு	சாகூ
தனமருவுவைதேகி	ககூஅ
தன்முகத்துச்சுட்டி	ககூ
தன்னடியார்திறத்தகத்து	அ௩
தன்னுளேதிரைத்தெழும்	கஎக
தன்னேராயிரம்பிள்ளைகள்	சாஎ
தா	
தாதுலாவுகொன்றை	கஎக
தாமரைமேலயனவனை	ககூO
தாழுகக்கும்தம்கையில்	கருக
தாய்மார்மோர்விற்கப்போவர்	சாக
தாய்முலைப்பாலில்	க௩௩
தாரித்துநூற்றுவர்	உக
தார்க்கிளந்தம்பிக்கு	கூஎ
தாவியன்றுலகமெல்லாம்	உ'௩
தாழியில்வெண்ணெய்	கஎ
தாழைதண்ணாம்பல்	சாஎ
தி	
திக்குநிறைபுகழாளன்	கூக
திடர்விளங்குகரை	கசாஅ
திண்ணக்கலத்தில்	ருஎ
திண்ணார்வெண்சங்குடை	௩ரு
திரண்டெழுதழை	கூக
திரிந்தாகிலும்	உஉக
திருக்கலந்துசேருமார்ப	கருக
திருமறுமார்வநின்னை	உO௩
திருவுடைப்பிள்ளைதான்	சாரு
திரைநீர்ச்சந்திரமண்டலம்	உசா
திரைபொருகடல்சூழ்	அஉ
தில்லைநகர்த்திருச்சித்திர	கஅஎ

தீ	பக்கம்.
தீதில்நன்னெறிநிற்க	௧௫0
தீயபுந்திக்கஞ்சன்	௬0
தீயில்பொலிகின்ற	௬
து	
துக்கச்சுழலையைச்சூழ்ந்து	௬௫
துங்கமலர்ப்பொழில்சூழ்	௧௨௬
துண்டவெண்பிறையன்	௨௧௬
துப்புடையாயர்கள்தம்	௬௬
துப்புடையாரையடைவது	௮௮
துன்னியபேரிருள்	௨௬
தூ	
தூநிலாமுற்றத்தேபோந்து	௨௯
தூமணிமாடத்துச்சுற்றும்	௧0௬
தூயநடம்பயிலும்	௧௫
தூயனுமன்றியும்	௧௬௨
தூய்மையோகமாயினுய	௧௮0
தூராதமனக்காதல்	௧௪௭
தெ	
தெருவின்கண்நின்று	௪0
தெளிவிலாக்கலங்கல்நீர்சூழ்	௨0௫
தெள்ளியார்பலர்	௧௩௬
தென்னவன்தமர்செப்பமி	௭௭
தென்னிலங்கைமன்னன்	௬௬
தே	
தேட்டருந்திறல்தேனினை	௧௪௮
தேவரையுமசுரரையும	௧௬௧
தேவுடையமீனமாய்	௮௭
தேனகுமாமலர்க்கூந்தல்	௧௬௪
தேனுகனுவிசெகுத்து	௪௬
தேனுகன்பிலமபன்	௬0
தை	
தையொருதிங்களும்	௧௧௬
தொ	
தொக்கிலங்குயாறெல்லாம்	௧௫௪
தொடர்சங்கிலிகை	௨௨
தொத்தலர்பூஞ்சுரிகுழல்	௧௬௫
தொத்தார்பூங்குழல்	௫0
தொழுதுமுப்போதும்	௧௧௫
தோ	
தோடுபெற்றதண்டுழாய்	௧௮௪
தோடுலாமலர்மங்கை	௧௪௮
தோட்டமில்லவள்	௬௧
தோயம்பரந்தநடுவுசூழலில்	௭0
தோய்த்ததண்டயிர்	௧௪௧

ந	பக்கம்.
நச்சராவணைக்கிடந்த	௧௮௬
நச்சுவார்முன்நிற்கும்	௨௬
நடந்தகால்கள்நொந்தவோ	௧௮௬
நடமாடித்தோகைவிரிக்கின்	௧௬௧
நடையொன்றில்லாவுலகத்து	௧௬௬
நந்தன்மதலையைக்காகுத்த	௬௭
நமனும்முற்கலனுமபேச	௨0௨
நம்பனைநவின்றேத்தவல்லார்	௬௨
நமபிபிம்பியென்று	௮0
நம்பினேன்பிறர்நன்பொருள்	௨௨௩
நமமுடைநாயகனே	௧௮
நல்லதோர்தாமரைப்பொய்	௬௪
நல்லவென்தோழி	௧௬௧
நளிர்ந்தசீலன்நயாசலன்	௭௫
நன்மணிமேகலைநங்கைமார்	௫௧
நன்மையால்மிக்கநான்மறை	௨௨௬
நன்மைதீமைகளொன்றும	௬௧
நன்றிருந்துயோகநீதி	௧௮௬
நா	
நாகத்தினணையானை	௧௨௮
நாகமேந்துமேருவெற்பை	௧௭௬
நாடுநகருமறியமானிடம்	௭௬
நாடூரறுமறியவேபோய்	௬௬
நாட்டினான்தெய்வம்	௨0௧
நாட்டைப்படையென்று	௧௩௮
நாணியினியோர்கருமமில்லை	௧௬௬
நாந்தகஞ்சங்குதண்டு	௭0
நாந்தகமேந்தியநம்பி	௨௭
நாமமாயிரமேத்தநின்ற	௧௧௬
நாயகனாய்நின்ற	௧0௮
நால்திசைதீர்த்தம்	௧௨௪
நாவகாரியஞ்சொல்லிலாதவர்	௭௪
நாவலம்பெரியதீவினில்	௫௬
நாவினால்நவிற்று	௨௨௩
நாழிகைகூறிட்டுக்காத்து	௭0
நாளைவதுவைமணமென்று	௧௨௪
நாள்களோர்நாலைந்து	௧௬
நாறியசாந்தம்	௨௫
நாறுநறும்பொழில்	௧௨௬
நானேதுமுன்மாயம்	௮௬
நி	
நிற்பதும்மோர்வெற்பகத்து	௧௮௬
நின்றதெந்தையூரகத்து	௧௮௬
நின்றியங்குமொன்றலா	௧௭௬
நின்னையேதான்வேண்டி	௧௫௪

பக்கம்.

நீரிலேநின் றயர்க்கின்றோம் ௧௧௮
நீரேறுசெஞ்சடைநீலகண்ட ௭௦
நீளாதுங்கஸ்தனகிரி ௧௦௫

நூ

நூலினேரிடையார் ௧௩௦

நெ

நெடுமையாலுலகேழும் ௯௧
நெய்க்குடத்தைபபற்றி ௯௫
நெய்யிடைநல்லதோர் ௯
நெறிந்தகருங்குழல் ௬௮
நெற்றிபெற்றகண்ணன் ௧௮௯

நோ

நோக்கியசோதைநுணுக்கிய ௧௫
நோற்றுச்சுவர்க்கம் ௧௦௬

ப

பக்கங்கருஞ்சிறுபாறை ௨௯
பச்சைமாமலைபோல்மேனி ௨௦௦
பஞ்சவர்தூதனாய்ப்பாரதங்கைச் ௨௪
பஞ்சவர்தூதனாய்ப்பாரதமபற ௬௬
படங்கள்பலவுமுடை ௩௮
படர்பங்கயமலர்வாய்நெகிழ ௨௫
படைத்தபாரிடந்தளந்த ௧௮௧
பட்டங்கட்டிபபொற்றோடு ௬௫
பட்டிமேய்ந்தோர்காரேறு ௧௫௭
பணிவினால்மனமது ௨௦௫
பணைத்தோளிளவாய்ச்சி ௧௨
பண்டுமின்றுமேலும் ௧௮௧
பண்ணுலாவுமென்மொழி ௧௮௯
பதகமுதலைவாய் ௨௯
பதினாறாமாயிரவர்தேவிமார்ப ௮௩
பதினாறாமாயிரவர்தேவிமார்பா ௧௨௬
பத்தினோடுபத்துமாய் ௧௮௮
பத்துநாளுங்கடந்த ௧௧
பயனன்றாகிலும் ௨௨௪
பரக்கவிழித்தெங்கும்நோக்கி ௧௧௮
பரத்திலும்பரத்தையாதி ௧௮௨
பரந்திட்டுநின்றபடுகடல் ௨௧
பரியனாகிவந்தவவுணன் ௨௧௭
பருந்தாட்களிற்றுக்கு ௧௫௮
பருப்பதத்துக்கயல்பொறித்த ௯௭
பருவம்நிரம்பாமேபாரெல் ௧௫
பருவரங்களவைபற்றி ௮௪
பலபலநாழஞ்சொல்லிப்பழி ௭௫
பல்லாண்டுபல்லாண்டு ௮
பல்லாண்டென்று ௯

ப

பல்லாயிரவரிவ்வூரில் ௪௨
பழுதுநான்மறையின் ௧௨௦
பழுதிலாவொழுகலாற்று ௨௦௩
பள்ளத்தில்மேயும்பறவை ௫௭
பறவையேறுபரம்புருடா ௫௬
பற்றூர்நடுங்கமுன் ௩௨
பற்றுமஞ்சள்பூசி ௩௧
பனிக்கடலில்பள்ளிகோளை ௯௭
பன்மணிமுத்தின்பவளம் ௨௧
பன்றியுமாமையுமீனமும் ௩௫
பன்னிருதிங்கள்வயிற்றில் ௩௧

பா

பாசிதூர்த்துக்கிடந்த ௧௫௨
பாஞ்சசன்னியத்தை ௧௨௭
பாடுங்குயில்காள் ௧௫௦
பாண்டவர்தம்முடைய ௭௫
பாண்டியன்கொண்டாட ௭
பாயுநீரரங்கந்தன்னுள் ௨௦௯
பாரமாயபழவினைபற்றறுத் ௨௧௬
பாராளும்படர்செல்வம் ௧௬௦
பார்மிகுத்தபாரம்முன் ௧௮௯
பாலகனென்றுபரிபவம் ௧௭
பாலாலிலையில்துயில்கொண் ௧௫௬
பாலின்நீர்மைசெம்பொன்நீர் ௧௮௫
பாலைக்கறந்தடுப்பேறவைத் ௪௪
பாலொடுநெய்தயிரொண் ௧௯

பி

பிண்டத்திரளையும் ௫௭
பிறங்கியபேய்ச்சிமுலைசுவை ௧௨
பிறப்பகத்தேமாண்டொழி ௮௫
பிறப்பினோடுபேரிடர் ௧௯௧
பிறையேறுசடையானும் ௧௩௨
பின்பிறக்கவைத்தனன் ௧௮௬
பின்னிட்டசடையானும் ௧௩௧
பின்னைமணாளனை ௫௬

பு

புட்டியிற்சேறும்புழுதியும் ௨௧
புண்டரிகமலரதன்மேல் ௧௬௦
புலம்பினபுட்களும் ௨௦௮
புலையறமாகிநின்ற ௨௦௪
புவியுள்நான்கண்டதோர் ௬௧
புள்ளதாகிவேதநான்கும் ௧௮௦
புள்ளினைவாய்பிளந்திட்டாய் ௪௦
புள்ளின்வாய்கீண்டானை ௧௦௭
புள்ளுஞ்சிலம்பினகாண் ௧௦௩
புற்றரவல்குலசோதை ௩௫
புன்புலவழியடைத்து ௧௮௭

முதலாயிரச் செய்யுளகராதி

பூ — பக்கம்.

பூணித்தொழுவினில்புக்கு ௩௬
பூதமைந்தொடுவேள்வியைந்து எ௫
பூநிலாயவைந்துமாய் ௧௭௮
பூமகன்புகழ்வானவர் ௧௧௯
பூமருவுநறுங்குஞ்சி ௧௬௩

பெ

பெண்டிரால்சுகங்கள் ௨0௧
பெண்டிர்வாழ்வார் ௩0
பெண்ணுலாம்சடையினன் ௨0௬
பெய்யுமாமுகில்போல்வண் ௧௧௬
பெருப்பெருத்தகண்ணலம் ௯௪
பெருமாவுரவில்பிணிப்புண்டு ௧௨
பெருவரங்களவை ௮௪

பே

பேசவுந்தெரியாதபெண்மை ௬௩
பேசிற்றேபேசலல்லால் ௨0௩
பேணிச்சீருடைப்பிள்ளை ௧0
பேதநன்கறிவார்களோடு ௧௧௭
பேயரேயெனக்குயாவரும் ௧௫௧
பேயின்முலையுண்டபிள்ளை ௩௬

பை

பைங்கிளிவண்ணன்சிரீதரன் ௧௨௩
பைம்பொழில்வாழ் ௧௨௯
பையரவினணைபள்ளியினாய் ௧௫௬
பையரவினணைப்பாற்கடலுள் ௮௯

பொ

பொங்கியபாற்கடல் ௧௨௨
பொங்குவெண்மணல் ௬௩
பொங்கொலிகங்கைக்கரை ௮௩
பொங்கோதஞ்சூழ்ந்த ௧௩௨
பொத்தவுரலைக்கவிழ்த்து ௨௭
பொய்சிலைக்குரலேற்றெருத் ௧௪௯
பொருத்தமுடையநம்பியை ௧௩௮
பொருந்தார்கைவேல்நுதி ௧௬௩
பொல்லாக்குறளுருவாய் ௧௩௨
பொல்லாவடிவுடைப்பேய்ச்சி ௭0
பொற்றிகழ்சித்திரகூடம் ௩௯
பொற்றையுற்றமுற்றல் ௧௮௪
பொன்பெற்றாரெழில்வேதப் ௧௬௩
பொன்போல்மஞ்சனம் ௪௮
பொன்னரைநாணொடு ௨௧
பொன்னிசூழரங்கமேய ௧௯௩
பொன்னியல்கிண் ௨௪
பொன்னைக்கொண்டுரைகல் ௯௭

போ — பக்கம்.

போதமர்செல்வக்கொழுந்து ௪௨
போதர்கண்டாயிங்கே ௪௪
போதில்மங்கைபூதலக்கிழத்தி ௧௮௭
போதெல்லாம்போதுகொண் ௨0௯
போய்த்தீர்த்தமாடாதே ௧௨௬
போய்ப்பாடுடையநின்தந்தை ௩௧
போரொக்கபபண்ணி ௨௫
போர்க்களிறுபொரும் ௧௨௯

ம

மங்கலநல்வனமாலைமார்வில் ௧௫௬
மங்கியவல்வினைநோய்காள் ௯௪
மச்சணிமாடமதிளரங்கர் ௧௯௨
மச்சொடுமாளிகையேறி ௪0
மடிவழிவந்துநீர்ப்புலன் ௭௭
மட்டுலாவுதண்டுழாய் ௧௮௮
மண்டங்குடியென்பர் ௨0௭
மண்ணிற்பிறந்துமண்ணாகும் ௭௯
மண்ணும்மலையும்கடலும் ௧௩
மண்ணும்மலையும்மறி ௭0
மண்ணுளாய்கொல் ௧௮௪
மண்ணையுண்டுமிழ்ந்து ௧௯௧
மதயானைபோலெழுந்த ௧௨௮
மத்தக்களிற்றுவசுதேவர் ௧௨
மத்தநன்னறுமலர் ௧௧௪
மத்தளங்கொட்டவரிசங்கம் ௧௨௪
மத்தளவுந்தயிரும் ௧௮
மந்திபாய்வடவேங்கடம் ௨௧௬
மரங்கெடநடந்தடர்த்து ௧௮௫
மரம்பொதச்சரந்துரந்து ௧௮௭
மரவடியைத்தம்பிக்கு ௮௫
மருட்டார்மென்குழல் ௪௯
மருதப்பொழிலணி ௭௨
மருமகன்தன்சந்ததியை ௮௩
மருவுநின்திருநெற்றியில் ௧௫௮
மலமுடையூத்தையில் ௭௯
மலைபுரைதோள்மன்னவரும் ௨௮
மலையதனலணைகட்டி ௧௬௧
மல்லைமாநகர்க்கிறையவன் ௧௫௯
மழைக்கன்றுவரைமுனே ௨0௫
மழையேமழையே ௧௩௧
மறஞ்சுவர்மதிளெடுத்து ௨0௧
மறந்திகழுமனமொழித்து ௧௪௭
மறந்துறந்துவஞ்சமாற்றி ௧௯0
மற்பொருதோளுடை ௧௫௫
மற்றிருந்தீர்கட்கறியலாகா ௧௩௩
மற்றுமோர்தெய்வமுண்டே ௨0௧
மற்றொன்றும்வேண்டா ௨00

ம	பக்கம்.
மனத்திலோர்தூய்மையில்	உ0ச
மன்னர்மறுக	எஉ
மன்னன்தன்தேவிமார	ருஎ
மன்னியதண்சாரல்	கருஉ
மன்னுநரகன்தன்னை	எரு
மன்னுபுகழ்க்கௌசலைதன்	கசா0
மன்னுபெரும்புகழ்மாதவன்	கஉக
மன்னுமதுரைதொடக்கமாக	கருரு
மன்னுமாமலர்க்கிழத்தி	கஅரு

மா	
மாசுடையுடம்பொடு	ககரு
மாடமாளிகைசூழ்மதுரை	கக௬
மாணிக்கக்கிண்கிணி	உ0
மாணிக்கங்கட்டிவயிரமிடை	கச
மாணிக்குறளுருவாய	ருச
மாதலிதேர்முன்புகோல்	கஉக
மாதவத்தோன்புத்திரன்	அரு
மாதவனென்மணியினை	கருஅ
மாமிமார்மக்களேயல்லோம்	ககஅ
மாமுத்தநிதிசொரியும்	கஉஎ
மாயச்சகடமுதைத்து	சாஎ
மாயவனைமதுசூதனனை	ரு0
மாயவன்பின்வழிசென்று	சாரு
மாயனைமன்னுவடமதுரை	க0ரு
மாரனார்வரிவெஞ்சிலை	கரு0
மாரிமலைமுழைஞ்சில்	கக0
மார்கழித்திங்கள்	க0ச
மாலாய்ப்பிறந்தநம்பியை	கருஎ
மாலிருஞ்சோலையென்னும்	எச
மாலேமணிவண்ணா	ககக
மாலையுற்றகடல்கிடந்தவன்	கச௬
மாவலிதன்னுடைய	எரு
மாவலிவேள்வியல்	சஎ
மாவினைவாய்பிளந்துகந்த	கசசா
மாறுசெய்தவாளரக்கன்	கசாரு
மாற்றுத்தாய்சென்று	சாச
மானமருமென்னோக்கிவை	சாஅ
மானிடசாதியில்தோன்றி	எக

மி	
மிக்கபெரும்புகழ்மாவலி	உரு
மிக்கவேதியர்வேதத்தின்	உஉரு
மிடறுமெழுமெழுத்தோட	ருக
மின்னனையநுண்ணிடையார்	கருஉ
மின்னனையநுண்ணிடையா	ரு0
மின்னுகத்தெழுகின்ற	கஉஎ
மின்னார்தடமதிள்சூழ்	எ
மின்னிடைச்சீதைபொருட்	ருக
மின்னிறத்தெயிற்றரக்கன்	கஅஉ
மின்னுகொடியுமோர்	உரு
மின்னொத்தநுண்ணிடை	கருரு
மின்னொத்தநுண்ணிடையாய்	சாக

மீ	
மீன்நோக்குநீள்வயல்சூழ்	கருரு

மு	
முடியொன்றிமூவுலகங்களு	சாக
முத்திறத்துவாணியத்து	கஅக
முத்தும்மணியும்வயிரமும்	கக
முந்தைநன்முறை	கருஎ
முப்பத்துமூவரமரர்க்கு	க0க
முப்போதுங்கடைந்து	சாஅ
முலையேதும்வேண்டேன்	ருரு
முல்லைப்பிராட்டி	கரு0
முழுதும்வெண்ணெயளைந்	கருக
முற்றத்தூடுபுகுந்து	ககஎ
முற்றிலாதபிள்ளைகளோம்	ககஎ
முற்றிலும்தூதையும்	கச
முன்னரசிங்கமதாகி	சா0
முன்னலோர்வெள்ளி	உரு
முன்னொருநாள்மழுவாளி	கசாச

மூ	
மூத்தவைகாணமுதுமணல்	உஎ
மூன்றுமுப்பதாறினோடு	கஎஅ
மூன்றெழுத்ததனை	அ

மெ	
மெச்சூதுசங்கமிடத்தா	உஅ
மெய்திமிருநானப்பொடி	கரு
மெய்யர்க்கேமெய்யனாகும்	உ0உ
மெய்யில்வாழ்க்கையை	கரு0
மெய்யெல்லாம்போகவிட்டு	உ0ச
மெய்யென்றுசொல்லுவார்	ருரு
மென்னடையன்னம்	கஉஉ

மே	
மேட்டிளமேதிகள்	உ0அ
மேம்பொருள்போகவிட்டு	உ0ரு
மேலெழுந்ததோர்வாயு	எஎ
மேல்தோன்றிப்பூக்காள்	கரு0

மை	
மைத்தகுமாமலர்க்குழலாய்	சாக
மைத்தடங்கண்ணியசோதைதன்	கஎ
மைத்தடங்கண்ணியசோதைவ	கரு

மை	பக்கம்.
மைத்துனன்மார்காதலியை	அகூ
மையார்கண்மடவாய்ச்சியர்	சஅ
மொ	
மொய்த்தவல்வினையுள்	உ0க
மொய்த்துக்கண்பனிசோர	கசகூ
மோ	
மோடியோடிலச்சையாய	கஅரு
வ	
வங்கக்கடல்கடைந்த	ககஉ
வஞ்சமேவியநெஞ்சுடை	கருக
வஞ்சனையால்வந்தபேய்ச்சி	ககூ
வடதிசைமதுரை	அஉ
வடிக்கொளஞ்சனமெழுது	கருஎ
வட்டவாய்ச்சிறுதூதை	ககஎ
வட்டுநடுவேவளர்கின்ற	உகூ
வணநன்றுடைய	நஉ
வண்டமர்பூங்குழல்	கந
வண்டினமுரலும்	உ0உ
வண்டுகளித்திரைக்கும்	சரு
வண்டுலாவுகோதைமாதர்	கஅஎ
வண்ணக்கருங்குழல்மாதர்	ருக
வண்ணநன்மணியும்	எரு
வண்ணந்திரிவும்	கநச
வண்ணப்பவளமருங்கினில்	நஉ
வண்ணமாடங்கள்	க0
வண்ணமால்வரையே	கூஉ
வந்தமதலைக்குழாத்தை	கஉ
வந்தெதிர்ந்ததாடகைதன்	ககூரு
வம்பவிழ்வானவர்வாயுறை	உ0கூ
வயிற்றில்தொழுவைப்பிரித்	கூந
வரத்தினில்சிரத்தைமிக்க	கஅக
வரம்பிலாதமாயைமாய	ககூ0
வரிசிலைவாளமுகத்து	கஉகூ
வருகவருகவருகவிங்கே	சந
வலங்காதின்மேல்தோன்றி	ருகூ
வலிவணக்குவரைநெடுந்	கககூ
வல்லாளன்தோளும்	எக
வல்லாளிலங்கைமலங்க	உகூ
வல்லிநுண்ணிதழன்ன	ருச
வல்லெயிற்றுக்கேழலுமாய்	அச
வழுவொன்றுமில்லா	ருஎ
வளவெழுந்தவளமாட	உ0கூ
வளைத்துவைத்தேன்	கூரு
வள்ளிநுடங்கிடை	ருக
வன்தாளினிணைவணங்கி	ககூஉ
வன்பெருவானகமுய்ய	கசஅ
வன்பேய்முலையுண்டதோர்	ருஅ

வா	பக்கம்.
வாக்குத்தூய்மையிலாமை	கூ0
வாசியாகிநேசமின்றி	கஅஅ
வாபோகுவாவின்னம்வந்து	ககூஉ
வாயிற்பல்லுமெழுந்தில	கூக
வாயுள்வையகம்	கக
வாயொருபக்கம்வாங்கிவலிப்	எஅ
வாயோரீரைஞ்ஞூறு	கசகூ
வாய்நல்லார்நல்லமறையோதி	கஉச
வாரணமாயிரஞ்சூழ	கஉச
வாரணிந்தகொங்கையாய்ச்சி	நக
வாரணிந்தமுலைமடவாய்	கூஅ
வாராரும்முலைமடவாள்	கூக
வார்காதுதாழப்பெருக்கி	நச
வாவென்றுசொல்லி	நச
வாழாட்பட்டுநின்றீர்	அ
வாளாலறுத்துச்சுடினும்	கருக
வாளாவாகிலும்காணகில்லார்	சக
வாள்களாகிநாள்கள்செல்ல	ககஉ
வானகமும்மண்ணகமும்	கஅஉ
வானத்திலுள்ளீர்	ருஎ
வானத்தெழுந்தமழைமுகில்	சஎ
வானவர்தாம்மகிழவன்சகட	கஅ
வானுளும்மாமதிபோல்	கருஉ
வானிடைவாழும்	ககச
வானிளவரசுவைகுந்தக்குட்டன்	கூ0
வானிறத்தோர்சீயமாய்	கஅக
வானுளாரறியலாகாவன	உ0ரு
வான்கொண்டுகிளர்ந்தெழுந்த	கஉஎ
வி	
விடத்தவாயொராயிரம்	கஅ0
விடைக்குலங்களேழடர்த்து	ககூ0
விண்கடந்தசோதியாய்	கஅக
விண்கொளமரர்கள்	கந
விண்ணின்மீதமரர்கள்	ருக
விண்ணீலமேலாப்பு	கஉஎ
விண்ணுறநீண்டடிதாவிய	கஉக
விண்ணெல்லாங்கேட்க	நஉ
விரும்பிநின்றேத்தமாட்டேன்	உ0உ
விள்விலாதகாதலால்	ககக
விற்பிடித்திறுத்து	அஉ
விற்றுவக்கோட்டம்மா	கருச
வெ	
வெங்கண்திண்களிறு	கருக
வெஞ்சினத்தவேழவெண்	கஅக
வெண்கலப்பத்திரம்	உஎ
வெண்டிரைக்கருங்கடல்	கஅச

வெ	பக்கம்.
வெண்புழுதிமேல்	உரு
வெண்ணிறத்தோய்தயிர்	சுரு
வெண்ணெயளைந்தகுணுங்கு	ஙரு
வெண்ணெய்விழுங்கி	சங
வெய்யவாழிசங்குதண்டு	ககூ௦
வெவ்வாயேன்வெவ்வுரை	கசுஉ
வெளியசங்கொன்று	கஙஅ
வெள்ளநீர்பரந்துபாயும்	உ௦ங
வெள்ளைநுண்மணல்சிற்	ககசு
வெள்ளைநுண்மணல்தெரு	ககங
வெள்ளைவிளிசங்கிடங்கை	கஉக
வெள்ளைவிளிசங்குவெஞ்சுட	எ௦
வெள்ளைவெள்ளத்தின்	கூஉ
வெள்ளைவேலைவெற்புநாட்டி	கஅகூ
வெறுப்பொடுசமணர்முண்	உ௦க
வெற்பெடுத்துவேலைநீர்	கஅரு
வெற்றிக்கருளக்கொடியான்	கஙசு

வே	
வேடர்மறக்குலம்போலே	கூரு
வேதநூல்பிராயம்நூறு	உ௦௦
வேயர்தங்கள்குலத்து	கூஎ
வேலிக்கோல்வெட்டி	ஙஅ
வேறிசைந்தசெக்கர்மேனி	கஅரு
வேறொன்றும்நானறியேன்	உஉஉ

வை	
வைதுநின்னைவல்லவா	ககூஉ
வைத்தநெய்யும்காய்ந்த	கூ௦
வையத்துவாழ்வீர்காள்	க௦ச
வையமெல்லாம்பெறும்	ஙஉ

திருமங்கையாழ்வார் வைபவம்.

வ்ருஶ்சிகே க்ருத்திகாஜாதம் சதுஷ்கவிஶிகாமணிம் ।
ஷட்ப்ரபந்தக்ருதம் ஶார்ங்கமூர்த்திம் கலிஹமாஶ்ரயே ॥

వృశ్చికే కృత్తికాజాతం చతుష్కవిశిఖామణిం ।
షట్ప్రబంధకృతం శార్ఙ్గమూర్తిం కలిహమాశ్రయే ॥

வ்ருஸ்சிகே க்ருத்திகாஜாதம் சதுஷ்கவிசிகாமணிம் -
ஷட்ப்ரபந்தக்ருதம் ஶார்ங்கமூர்த்திம் கலிஹமாஶ்ரயே.

கங்கையிற் புனிதமாய காவிரிநதி புனல்பரந்து பொன்கொழிக்கப்பெற்ற ஏற்றமுள்ள சோழமண்டலத்திலே, திருமங்கையென்னும் நாட்டில், திருவாலி திருநகரியென்ற திவ்வியதேசத்துக்கு மிக அருகிலுள்ள திருக்குறையலூரிலே, நான்காம்வருணத்தில், கள்ளர்குடியிலே, சோழராசனுக்குச் சேனைத்தலைவனாகவுள்ள ஒருவனது குமாரராய், ஒருத்தர், கலியுகத்தில் முந்நூற்றுத்தொண்ணூற்றெட்டாவதான நளவருஷத்திற் பூர்ணிமைபொருந்திய வியாழக்கிழமையில் கார்த்திகைமாசத்திற் கிருத்திகாநட்சத்திரத்திலே, சார்ங்கமென்ற விஷ்ணுகார்முகத்தின் அம்சமாய் அவதரித்தார்.

கிருதயுகத்திற் காததமனென்னும் பிராமணனும் திரேதாயுகத்தில் உபரிசரவசுவென்னும் க்ஷத்திரியனும் துவாபரயுகத்திற் சங்கபாலனென்னும் வைசியனுமாகத் தோன்றி உலகத்தை நல்வழிப்படுத்திப் பாதுகாத்த மகாத்மாவே கலியுகத்தில் மண்ணுலகத்து மன்னுயிர்களைச் சன்மார்க்கத்திலுய்த்தற்குச் சூத்திரசாதியில் இங்ஙனம் உதித்ததாக நூல்கள் நவலாநிற்கும்.

இப்படிப் பிறந்த இவர் மூலமூர்த்திபோல நீலநிறமுடையரா யிருந்ததனால், இவருக்குத் தந்தை நீலனென்று நாமமிட்டான்.

இவர் தமதுகுடிக்கு ஏற்ப இளமையிலேயே ஆயுதவித்தையில் தேர்ச்சிபெற்றுச் சோழராஜனையடுத்துச் சேனாதிபதியுத்தியோகத்திலமர்ந்து கொற்றவனுக்குக் கொடியவரோடு கடும்போர் நேருங்காலங்களிற் படைகளோடு முன்சென்று பராக்கிரமத்தாற் பகைவென்று பரகாலனென்று பேர்பெற்றுப் பலமுறை வாகைசூடிவந்தார். அவ்வாற்றலை யுணர்ந்த அபயராசன் இவரை அந்நாட்டுக்கு அரசனாக்கி முடிசூட்டினான். இவ்வாறு குறுநிலத்தலைமைபூண்ட மங்கையர்கோமான் ராஜாங்க காரியத்தைக் குறைவற நடத்திப் புகழ்பெற்று இசைநாடகங்களிற் பிரியமுடையராய் எப்பொழுதும் பல இளமங்கையர் இன்னிசைபாடக் கேட்டலையும் நன்னடம்பயிலக் காண்டலையுமே பொழுதுபோக்காகக் கொண்டிருந்தனர்.

இங்ஙனமிருக்கையில், அந்நாட்டில் திருவெள்ளக்குளமென்ற திருப்பதியில் மானசசரசையொத்ததொரு தாமரைப்பொய்கையில், தேவமாதர் பலர் வந்து ஜலக்கிரீடைசெய்துசெல்ல, அவ்வமரமகளிரில் திருமாமகளென்பாள் தன் இச்சையால் தெய்வவடிவத்தைவிட்டு மானுடப்படிவங்கொண்டு தனியே குமுதமலர் கொய்துநின்றாள். நின்றாளை அங்கு அனுட்டானம் முடித்தற்பொருட்டு வந்தாரொரு வைணவவைத்தியன் கண்டு செய்திவிசாரிக்க, அவள் 'உடன்வந்த மடமகளிரால் விடப்பட்ட என்னை நீர் பாதுகாத்தருளும்' என்று வேண்ட, மலடனான அம்மருத்துவன் மகிழ்ச்சியோடு அதற்கு உடன்பட்டு அம்மகளைத் தன்மாளிகைக்கு அழைத்துப்போய் மனையாள்வசம் ஒப்பித்து, குமுதமலர்கொண்டு நின்றது காரணமாகக் குமுதவல்லி யென நாமகரணஞ் செய்து வளர்த்துவந்தான். வருகையில் அக்கன்னிகைக்கு விவாகத்துக்குரிய பிராயம் வந்தவளவிலே, அவளைவளர்க்கிற அத்தந்தைக்கு 'மகாகுணவதியான இவ்வணங்குக்குஏற்ற கணவன் உலகத்திலுளனோ ?' என்ற கவலையும் உடன் வந்தது.

அப்பொழுது அவளுடைய ரூபலாவண்ய சௌந்தரியங்களையுங் குணாதிசயங்களையும் சாரர்கள் நீலனிடம் கொண்டாடிக்கூற, உடனே அவர் அவளழகைப்பார்த்தற்கு ஆதரங்கொண்டு இராச்சியகாரியங்களை இருந்தது இருந்தபடியே விட்டுத் திருநாங்கூரைச்சார்ந்ததான திருவெள்ளக்குளத்துக்கு வந்து அந்தப் பாகவதனகத்திற் புக்கு அவனோடு சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், அந்த மாதுசிரோமணி கண்ணெதிரிற்படக்கண்டு வியந்து காதல்விஞ்சி அவள் வரலாற்றை வினவி அந்தத் தந்தையால் அறிந்தவளவில், அத்தாதையை நோக்கி 'இவளை எனக்கு மனைவியாக்கவேணும்' என்று வரித்து வஸ்திரபூஷணாதிகளை மிகுதியாக முன்வைத்து வணங்கிக் கேட்டார். அதற்கு இசைந்து தந்தைதாயர் அவர்க்குக் கன்னிகாதானஞ் செய்யவிருக்கையில், குமுதவல்லி குறுக்கிட்டு 'தபதசக்கராங்கனம் திவ்வியோர்த்துவபுண்டரம் முதலிய பஞ்சஸம்ஸ்காரமுடைய ஒரு வைணவர்க்கேயன்றிப் பிறர்க்கு வாழ்க்கைப்படேன்' என்று தன்கருத்தைத் தெரிவித்தாள் அதுகேட்டலும் ஆலிநாடர் அதிவிரைவாகத் திருநறையூர்க்குச்சென்று அங்கு எழுந்தருளியுள்ள நம்பியென்னுந் திருநாமமுடைய எம்பெருமானது திருமுன்பே நின்று பிரார்த்தித்து அப்பிரான்பக்கல் சங்கசக்கரமுத்திரைகளைப் பெற்றுத் துவாதசோர்த்துவபுண்டரங்களையு முடையவராய் மணஞ்செய்துகொள்ளுதற்பொருட்டு விரைவில்வந்துசேர, கண்டு மீண்டும் அந்நங்கை 'நீர் ஓராண்டளவும் நித்தியமாக ஆயிரத்தெட்டு ஸ்ரீவைஷ்ணவர்களை அமுதுசெய்வித்து அவர்களுடைய திருவடித்தீர்த்தத்தையும் போனகஞ்செய்த சேடத்தையும் உட்கொண்டாலன்றி உம்மை நான் கொழுநராக ஏற்றுக்கொள்ளேன்' என்று நியமங்கூற, அவள்திறத்துக்கொண்ட வேட்கைமிகுதியால் அவர் அவ்வரிய விரதத்தைச் செய்துமுடித்தற்கும் உடன்பட்டு அங்ஙனமே செய்வதாகச் சபதஞ்செய்து கொடுக்க, அதன்பின் இருவர்க்கும் திருமணச்சடங்கு நடந்தது.

பின்பு பரகாலர் பகவதாராதனத்திலும்பரமபாவனமான பாகவதாராதனத்தைச் செய்துகொண்டு தம் அரசனுக்குச்செலுத்தவேண்டும் பகுதிப்பொருளை

முட்படச் செல்வமுழுவதையுஞ் செலவிட்டுவர, அச்செய்தியைச் சிலர் சொல்லச் செவியுற்றுச் சென்னி மன்னன் சினங்கொண்டு இவர்பக்கல் திறைவாங்கி வருதற்பொருட்டுத் தன் ஏவலாளரை அனுப்பினான். அவர்கள் வந்துகேட்டதற்கு, இவர் 'காலை, நண்பகல், மாலை, இரவு, நாளை, பின்னிட்டு' என்பதாகச் சிலதவணைகளைச் சொல்லிக்கொண்டு காலம் நீட்டித்துவந்தார். பின்பு ராஜபரிஜனங்கள் இறைப்பொருளிறுக்குமாறு நிர்ப்பந்திக்க, நீலர் வெகுண்டு அவர்களை வெருட்டித் துரத்தினார். அதனையறிந்த அரசன் சீற்றமுற்றுத் தனது தானைத்தலைவனை விளித்து, 'நீ சென்று பரகாலனைப் பிடித்துவா' என்று நியமிக்க, அவன் அவ்வாறே பலசேனைகளோடு வந்து இவரை வளைத்துப் பிடிக்கத்தொடங்க, இவர் ஆடன்மாவென்னுந் தமது குதிரைநம்பிரான்மேல் ஏறிக்கொண்டு அநீகத்தோடு முன்சென்று எதிர்த்துப்பொருது அவனைப் புறங்கொடுத்தோடச்செய்ய, அஃதுணர்ந்த காவலன் தானே சேனாசமூகத்தோடு வந்து இவரைவளைய, இவர் தம்படைவலிமையால் அப்படைக்கடலைக் கடந்து தமது திறமையைக் காட்டிப் பொருகையில், தாம் அருள்மாரியாதலால் இறைமகனைக் கொல்லலாகாதென்று சிறிதுபொழுது போர்நிறுத்தி நின்றார்.

அதுவே சமயமாக அரசன் தந்திரமாய் நல்வார்த்தைசொல்லிக்கொண்டு அருகில்வந்து 'உமது பராக்கிரமத்தைக் கண்டு மிக மகிழ்ந்தோம்' என்று கொண்டாடி 'சீக்கிரத்திற் கப்பஞ்செலுத்திவிடும்' என்று இவரை மந்திரிவசமாக்கிவிட்டு மீண்டனன். அவ்வமைச்சன் இவரைப் பகுதிக்காகப்பிடித்து ஒரு தேவாலயத்திற் சிறைவைக்க, அங்கு இவர் உணவில்லாமல் மூன்றுநாள் பட்டினிகிடக்கையில், காஞ்சீபுராதிபரான பேரருளாளப்பெருமாள் இவரது சொப்பனத்திலே பிரசந்நராய் 'உனக்கு வேண்டிய பொருள் தருகின்றோம், வா' என்று சொல்லியருளினார். இவர் அக்கனவை நனவாகவே நம்பிக் கடவுள் கருணைக்கு மகிழ்ந்து பொழுதுபுலர்ந்ததும் மந்திரியைநோக்கி 'காஞ்சீநகரியிலே நிதி யிருக்கின்றது ; அங்கு வந்தால், தருவேன்' என்று கூற, அவ்வமாத்தியன் அதனை அரசனுக்கு அறிவித்து அனுமதிபெற்றுப் பலபரிவாரங்களாற் காவல்செய்துகொண்டு கச்சிப்பதிக்கு இவரை அழைத்துவந்தான். அங்கு இவர் நிதிதேடிக் காணாமையாற் கவலைக்கடலில் மூழ்கி மூர்ச்சிக்குமளவிலே, கருணாகரரான வரதராஜஸ்வாமி மீண்டுங் கனவில் எழுந்தருளி அபயமளித்து வேகவதிநதிக்கரையில் வைப்புள்ளவிடத்தைக் குறிப்பிட்டு அருளிச்செய்தபின்பு, இவர் தெளிந்தெழுந்து பொருள் கண்டெடுத்து அரசன் கடமையைச் செலுத்தி, மிகுந்த தனத்தைப் பாகவதாராதனத்துக்கு வைத்துக்கொண்டார்.

பின்பு மந்திரி திரவியத்தைக் கொண்டுபோய்ப் புரவலன் முன்னிலையில் வைத்து நிகழ்ந்தவரலாறனைத்தையும் விளம்ப, கேட்டுப் புலிக்கொடிவேந்தன் இவர்மகிமையைக் கருதி அச்சமும் வியப்புங் கொண்டு உடனே இவரை வரவழைத்து விசேஷமாக உபசரித்து, தான் செய்த பிழைகளையெல்லாம் பொறுத்தருளுமாறு பலவாறு பிரார்த்தித்து, அநந்தரம் 'திரௌபதிக்குப் புடவை சுரந்ததுபோல மாயவனருளாற்பெருகிய இப்பொருளைத் திரவியசாலையில்

வைக்கலாகாது' என்று ஆலோசித்து அப்பொருள் முழுவதையும் இவரைப் பட்டினிவைத்த பாவந் தீர்தற்பொருட்டு அநேகபாகவதர்கட்குக் கொடுத்துப் பரிசுத்தனாயினான்.

பிறகு பரகாலர் சேடித்த திரவியங்கொண்டு ததீயாராதனம் நடத்திவருகையில், எல்லாம் செலவாய்விட்டதனால், கைப்பொருளொன்றுமின்றி, வழிபறித்தாகிலும் பொருளீட்டி அக் கைங்கரியத்தைத் தடையற நடப்பிக்கத் துணிந்து, நீர்மேல்நடப்பான் நிழலொதுங்குவான் தாளூதுவான் தோலாவழக்கன் என்ற நால்வரை உற்ற துணைவராக உடன்கொண்டு, ஆங்காங்குச்சென்று வழிச்செல்வோரைச் சூறைபாடிக் கொணர்ந்த பொருளால் திருமாலடியார்களைப் பூசிக்கும் நோன்பை நோற்றுவந்தார். இவர் கொள்ளைகொள்வதும வைணவர்களை வழிபடுதற்கேயாதலால், ஸ்ரீமந்நாராயணன் இவர்செயலைத் தீவினையாகத் திருவுள்ளம்பற்றாமல் நல்வினையாகவே உகந்து இவர்க்கு விசேஷ கடாக்ஷம்பண்ணி இவரையங்கீகரிக்கவேண்டுமென்று நினைத்து, இவர் தன்னை வழிபறிக்குமாறு தான் ஒரு பிராமணவேடங்கொண்டு பல அணிகலங்களைப் பூண்டு மணவாளக்கோலமாய் மனைவியுடனே இவரிருக்கிறவழியிலே எழுந்தருள, திருமணங்கொல்லையில் திருவரசமரத்தின்கீழ்ப் பதிவிருந்த குமுதவல்லிமணாளர் கண்டு களித்து ஆயுதபாணியாய்ப் பரிவாரத்துடனே வந்து அவர்களை வளைந்து வஸ்திராபரணங்களையெல்லாம் அபகரிக்கையில், அம்மணமகன் காலில் அணிந்துள்ள மோதிரமொன்றைக் கழற்றமுடியாமையால் அதனையும் விடாமற் பற்களாலே கடித்து வாங்க, அம்மிடுக்கைநோக்கி எம்பெருமான் இவர்க்கு 'கலியன்' என்று ஒருபெயர் கூறியருளினான்.

பின்பு இவர் பறித்த பொருள்களையெல்லாம் சுமையாகக் கட்டிவைத்து எடுக்கப்பார்க்க, அப்பொருட்குவை இடம்விட்டுப் பெயராமற் பர்வதம்போல அசலமாயிருக்க, அதுகுறித்து ஆச்சரியப்பட்டு, ஆலிநாடர் அவ்வந்தணனை நோக்கி 'நீ என்ன மந்திரவாதம் பண்ணினாய்?' என்று விடாது தொடர்ந்து தன்கையிலேந்திய வாட்படையைக் காட்டி அச்சுறுத்திநெருக்க, அப்பொழுது பதிகனான ஸர்வேச்வரன் 'அம்மந்திரத்தை உமக்குச் சொல்லுகிறோம், வாரும்' என்று அருகிலழைத்து, ஸகல வேதஸாரமாய்ப் பிறவித்துயரறுத்துப் பரமபதமளிப்பதாய்ச் சிறந்த அஷ்டாக்ஷர மகாமந்திரத்தை, முன்பு நரநாராயணராய்த் தனக்குத் தானே சொல்லிக்கொண்ட குறைதீர இவர்செவியிலே உபதேசித்து, உடனே கருடாரூடனாய்ப் பொன்மலைமீது மின்னுடன் விளங்குங் கார்முகில்போலக் கருணைவடிவமான திருமகளோடு இவர்முன் எழுந்தருளிச் சேவைசாதித்தான்.

அங்ஙனம் மந்திரோபதேசம் பெற்றதனாலும், அந்தத் திவ்யமங்களவிக்கிரகத்தைத் தரிசித்ததனாலும், முன்பு காலாழிவாங்கியபோது பகவத்பாதாரவிந்தத்தில் வாய்வைத்ததனாலும் கலியன் அஜ்ஞாநாந்தகாரம்ஒழிந்து தத்துவ ஞானச்சுடருதிக்கப்பெற்று, பகவானைப் பரிபூர்ணாநுபவம்பண்ணி, அவ்வானந்தமேலீட்டை வெளியிடுமாறு ஆசு மதுரம் சித்திரம் விஸ்தாரம் என்னும் நால்வகைக்கவிகளையும் பாடவல்ல பாண்டித்தியமுடையராய் "வாடினேன்

வாடிவருந்தினேன்" என்று தொடங்கிப் பாடலுற்று, "குலந்தருஞ் செல்வந்தந்திடு மடியார்படுதுயராயினவெல்லாம், நிலந்தரஞ்செய்யும்நீள்விசும்பருளு மருளொடுபெருநிலமளிக்கும், வலந்தருமற்றுந்தந்திடும் பெற்றதாயினுமாயின செய்யும், நலந்தருஞ்சொல்லை நான்கண்டுகொண்டேன் நாராயணாவென்னும் நாமம்" என்று தமது அநுபவத்தை வெளியிட்டு வடமொழிவேதங்கள் நான்குக்கும் ஆறங்கங்களமைந்திருக்கின்றதுபோல அவ்வேதங்களின் உட்பொருளால் நம்மாழ்வார் அருளிச்செய்த நான்கு திவ்வியப் பிரபந்தங்களுக்கும் தமது பிரபந்தங்கள் அங்கங்களாக அமையும்படி **பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரியதிருமடல்** என்னும் ஆறு திவ்வியநூல்களைத் திருவாய்மலர்ந்தருளி, '**திருமங்கையாழ்வார்**' என்று திருநாமம் பெற்றார்.

அவற்றுள் முதலிற் பெரியதிருமொழி பாடுகையில், திவ்வியதேசயாத்திரையாகச் சென்று ஆங்காங்குப் பெருமாளை மங்களாசாஸனஞ்செய்து திருப்பதிகம்பாட உத்தேசித்து, ஆழ்வார், பிருதி பதரி பதரிகாச்சிரமம் சாளக்கிராமம் நைமிசாரணியம் சிங்கவேள்குன்றம் திருவேங்கடம் என்னும் வடநாட்டுத் திருப்பதிகளிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து பாசுரம்பாடி, தொண்டைநாட்டுத் திருப்பதிகளுள் திருவெவ்வுளூர்க்கு வந்தபின் திருநின்றவூரைச் சேர்ந்தார். அத்திருப்பதியிலெழுந்தருளியுள்ள பத்தராவிப்பெருமாள் அப்பொழுது ஆழ்வார்க்கு முகங்கொடாமற் பிராட்டியாரோடு சரசசல்லாபஞ் செய்துகொண்டு பராமுகமாயிருக்க, பரகாலர் அப்பால் திருவல்லிக்கேணிக்குவந்து அங்கு எழுந்தருளியுள்ள ஐந்துஎம்பெருமான்களையுஞ் சேவித்துப்பதிகம்பாடி, திருநீர்மலைசேர்ந்து அந்த எம்பெருமான்பக்கலிலே மிக ஈடுபாடு கொண்டு, அநந்தரம் திருக்கடன்மல்லையையடைந்து பெருமாளைச் சேவித்துநின்றார்; அப்பொழுது, திருநின்றவூரெம்பெருமான் திருமகளால் தூண்டப்பட்டு இவர் வாயாற் பாடல்பெற்றுச் சிறப்புறக்கருதிக் கடன்மல்லையிற் காட்சிகொடுக்க, கலியன் அப்பிரானையும் அங்கே கண்ணாரக்கண்டு களித்து அவ்வூர்ப்பதிகத்திலே "நின்றவூர் நித்திலத்தைத் தொத்தார்சோலைக், காண்டவத்தைக் கனலெரிவாய்ப் பெய்வித்தானைக் கண்டது நான் கடன்மல்லைத்தலசயனத்தே" என்று பாடினார்.

இவ்வாறே மற்றுஞ் சிலதொண்டைநாட்டுத்திருப்பதிகளையும் நடுநாட்டுத் திருப்பதிகளிரண்டையுங்கடந்து, சோழநாட்டுத்திருப்பதிகளில் தில்லைத்திருச்சித்திரகூடம்பாடிய பின்பு சீர்காழிவழியாக எழுந்தருளுகையில், வழக்கப்படி பரிசனங்கள் இவர்முன்னே 'நாலுகவிப்பெருமாள் வந்தார், நம் கலியர் வந்தார், ஆலிநாடர் வந்தார், அருள்மாரி வந்தார், மங்கைவேந்தர் வந்தார், பரவாதி மத்தகஜகண்டீரவர் வந்தார், பரகாலர் வந்தார், நீலநிறத்துநிமலர் வந்தார்' என்று பல பிருதாவளிகளை எடுத்தேத்திக்கொண்டு செல்லாநிற்க, அவ்வூரிலுள்ள திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரென்கிற சைவசமயாசாரியருடைய அடியார்கள் வந்து 'எங்கள் நாயனாருள்ளவிடத்திலே நீவிர் விருதூதிச்செல்லலாகாது' என்று தடுக்க, அதுகேட்டுப் பரகாலர் சம்பந்தருள்ளவிடத்தே சென்று அவரோடு வாதப்போர் செய்யத்தொடங்குகையில், நாயனார் 'தமது

கவித்திறத்தை யான் காணுமாறு முன்னர்ப் பாடல் பாடும்' என்றுசொல்ல, உடனே ஆழ்வார் "ஒருகுறளாயிருநிலமூவடிமண்வேண்டி யுலகனைத்துமீர டியாலொடுக்கியொன்றந், தருகவென்றாவலியைச்சிறையில்வைத்த தாடாளன் ருளணைவீர்தக்ககீர்த்தி, யருமறையின்றிரணுன்கும் வேள்வியைந்து மங்கங்கள வையாறுமிசைகளேழுந், தெருவின்மலிவிழாவளமுஞ்சிறக்குங் காழிச்சீராம விண்ணகரேசேர்மினீரே" என்று தொடங்கி அருகிலிருக்கின்ற காழிச்சீராம விண்ணகரமென்ற திருப்பதியிலுள்ள தாடாளப்பெருமான் விஷயமாகப் பதிகம் பாட, கேட்டு ஞானசம்பந்தர் மிக அதிசயித்து 'உமக்கு இவ்விருதுகள்யாவும் தகும் தகும்' என்று சொல்லித் தமது வேலாயுதத்தை இவர்க்குத் திருமுன் காணிக்கையாகச் சமர்ப்பித்து நன்குமதித்து உபசரித்து வழிபட்டு வழிவிட்டு மீள, இம்மெய்யடியவர் வெற்றிவேல்பறித்துக்கொண்ட தமது கொற்றம் முற்றுந்தோன்ற "செங்கமலத்தயனனையமறையோர் காழிச்சீராமவிண்ணக ரின்செங்கண்மாலை, யங்கமலத்தடவயல்சூழாலிநாட னருண்மாரி யாட்டமுக்கி யடையார்சீயம், கொங்குமலர்க்குழலியர்வேள் மங்கைவேந்தன் கொற்றவேற் பரகாலன் கலியன் சொன்ன, சங்கமுகத்தமிழ்மாலைபத்தும்வல்லார் தடங்கடல் சூழுலகுக்குத்தலைவர்தாமே" என்று தமது பாயிரத்தோடு பதிகத்தை முடித்துச் சபபேரிமுழங்க அப்பாற் சென்று, தமது ஜநநபூமிக்கு அடுத்த திருவாலியைச் சார்ந்து, திருநாங்கூர்த்திருப்பதிகள் முதலியவற்றை நண்ணிய பிறகு, திருவிந்தளூரை யடைந்தார்.

அப்பொழுது, அத்தலத்து எம்பெருமான் ஆழ்வார்க்குத் தன்னை ஒருகாற் காட்டி மறைய, அவர் திருப்திப்படாமல் மனக்குறையோடு "வாசிவல்லீ ரிந்தளூரீர் வாழ்ந்தேபோம் நீரே" என்று தமது குறைபாடுதோன்றப் பாடி, அதற்கு இரங்கிய பெருமான் நிரந்தரசேவை கொடுக்க, அதுபெற்று நிரம்பிய மனத்தராய், பலதிருப்பதிகளின்வழியாகத் திருவரங்கத்தைச் சேர்ந்து நம்பெருமாள்பக்கலிலே மிக்கஈடுபாடு கொண்டு பலபதிகங்கள் பாட, அது கேட்டுத் திருவுள்ளமுவந்து அப்பெருமான் திருமுகமலர்ச்சியோடு ஆழ்வாரைக் குளிரநோக்கி 'நமக்கு விமானம் மண்டபம் கோபுரம் பிராகாரம் முதலிய கைங்கரியங்களைச் செய்யும்' என்று கட்டளையிட்டருளினான்.

ஆலிநாடா அவ்வாணையைச் சிரமேல்தாங்கி அங்ஙனமே திருப்பணிபுரிய விரும்பித் தமக்கு அந்தரங்கரான அமைச்சர் நால்வரையும் அழைத்து இரகசியமாகவிருந்து 'ஸ்ரீரங்கநாதனுக்குத் திருமதிள் தொடக்கமான கைங்கரியங்களைப் பண்ணுதற்குப் பொருளீட்டுமாறு யாதுவிரகு செய்யலாவது?' என்று ஆலோசிக்கிறவளவிலே, மந்திரிகள் 'நாகபட்டணத்திற் பொன்மயமானதொரு புத்தவிக்கிரகம் பௌத்தர்களால் அமைக்கப்பட்டதோ ராலயத்தில் அவர்கள் கொண்டாட்டத்துக்கு இலக்காயுள்ளது; அதனைக் களவாடிக் கொண்டுவந்திடுவோமாயின், பல திருப்பணிகளையும் நடத்தி முடிக்கச் சிறிதும் பொருட்குறைபாடு இராது' என்று உபாயங் கூறினார்கள். அவ்வுறுதிமொழியைச் செவியுற்றவுடனே களிப்புக்கொண்டு பரகாலர் பரிவாரங்களுடன் புறப்பட்டு நாகபட்டண மடைந்து அங்கு அதிவிசித்திரமான சிற்பவேலையையுடைய ஆலயத்தைக் கண்டு அதனுள் நுழைதற்கு எங்கும் வழிஅகப்படாமையால்

திகைத்துச் சுற்றிலும்பார்த்துவருகையில், அதன் சிகரத்திலே சக்கராகாரமான யந்திரவிசேடம் இடைவிடாது சுழன்றுகொண்டிருத்தலைப் பார்த்து அதனை நிறுத்துதற்கு ஏற்ற சூழ்ச்சி செய்பவராய்ப் பல வாழைத்தண்டுகளைக் கொணர்ந்து சிறிதுசிறிதாகத்தறித்து இடைவிடாது கொடுத்துவர, அதன் நூல்கள் நடுவிற் சுற்றிக்கொண்டதனால் அந்நேமிப்பொறி அசையாது நின்றுவிட்டது. அதன்பின் ஆழ்வார் தமது சீடர்களுள் வல்லானொருவனை அவ்வழியாய் உள்ளேசெலுத்த, அவன் சென்று கனகவிக்கிரகத்தைக் கவரத்தொடங்குகையில், அந்தப்பிம்பம் மந்திரபலத்தால் நிலைபெயர்ந்து அவன்கைக்கு அகப்படாதபடி அச்சினகரமுழுவதிலுந் திரிந்து ஓட்டங் காட்டியது. அது நோக்கி அவன் யாதுசெயவதென்று சிறிதுபொழுது கலங்கிநின்று, உடனே வெளியிலிருந்து திருமங்கைமன்னர்சொல்லிக்கொடுத்த உபாயத்தின்படி அவ்வுருவத்தை அபரிசுத்தமாக்கிவிடுதலும், அது சக்திகுன்றி "ஈயத்தாலாகாதோ விரும்பிலாலாகாதோ, பூயத்தான்மிக்கதொருபூதத்தாலாகாதோ, தேயத்தேபித்தளை நற்செம்புகளாலாகாதோ, மாயப்பொன்வேண்டுமோ மதித்தென்னைப்பண்ணுகைக்கே" என்று புலம்பிக்கொண்டு ஒருசார் விழுந்திட்டது. பின்பு அச்சீடன் அதனை யெடுத்துக் கொடுக்க, பரகாலர் அதியானந்தத்தோடு வெகு விரைவாகக்கொண்டுவந்து அவ்விக்கிரகத்தை யுருக்கி அந்தப்பொன்னை விலைபடுத்திப் பெற்ற பொருளால் திருமதில்முதல் சிகரபரியந்தமான கைங்கரியங்களைச் செய்வித்துவருகையில், மதில்கட்டுகிறபொழுது, தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலைசேர்த்துவந்த இடம் நேரபட, அதனையழித்துக் குறுக்கில் மதில்கட்ட மனங்கொள்ளாமல் ஒதுக்கிக் கட்டுவித்தார்.

இங்ஙனம் மற்றைக்கைங்கரியங்களையுங் குறைவற முடித்தபின்னர் நம்பெருமாள்பக்கல் விடைபெற்று மீண்டுந் திவ்வியதேசயாத்திரை தொடங்கித் தென்திருப்பேர், நந்திபுரவிண்ணகரம், திருவிண்ணகரம் என்ற இத்தலங்களை மங்களாசாஸநஞ்செய்தபின், திருநறையூரைச்சேர்ந்து, நம்பிவிஷயமாக நூறு பாசுரம விண்ணப்பஞ்செய்து, திருச்சேறை, தேரழுந்தூர், சிறுபுலியூர் என்னும் பதிகளின்வழியாக, திருக்கண்ணமங்கை புகக்கு அத்திருப்பதி யெம்பெருமானைப் பதிகம் பாடித் துதிக்கையில், திருநின்றவூர்ப் பத்தராவிப்பெருமாள் முன்பு ஒருபாடல்பெற்றது போதாதென்று மீட்டும் என்னைபபெற்ற அன்னையால் ஞாபிக்கப்பட்டவராய் ஆழ்வாரெதிரில்வந்து காட்சியளிக்க, ஆலிநாடர் "நின்றவூர்நின்ற நித்திலத்தொத்தினைக்... ...கண்ணமங்கையுட் கண்டுகொண்டேனே" என்று அப்பிரானையுஞ் சேர்த்துத் துதிசெய்தனர்.

அப்பால் திருக்கண்ணபுரம் திருக்கண்ணங்குடி திருநாகை யென்னுஞ் சோழநாட்டுத் திவ்யதேசங்களையும், திருப்புல்லாணி திருக்குறுங்குடி யென்னும் பாண்டியநாட்டுத் தலங்களையும், திருவல்லவாழென்ற மலைநாட்டுத் திருப்பதியையும் தரிசித்து, பின்னும் தென்னாட்டில் திருமாலிருஞ்சோலை திருக்கோட்டியூர் முதலானவற்றைத் தொழுது,மற்றும்பல திருப்பதிகளை வணங்கித் திருமாலின் அர்ச்சாவதாரங்களோடு விபவாவதாரங்களையுங் கருதி உள்ளங் கரைந்து பல திருப்பதிகங்கள் பாடிப் பெரியதிருமொழியை முடித்தனர்.

திருமங்கையாழ்வார் வைபவம்.

முடித்தும் தமது ஆராதஅன்பு அடங்காமையால் மற்றும் ஐந்துபிரபந்தங்களை அருளிச்செய்து, அநந்தரம் ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளி ரங்கநாதன்சந்நிதியிலே திருநெடுந்தாண்டகத்தைத் தேவகானத்திற் பாட, அதற்குத் திருவுள்ளமுகந்து நம்பெருமாள் 'உனக்குவேண்டும் வரம்பெற்றுக்கொள்' என்று நியமித்தவளவிலே, நாலுகவிப்பெருமாள் 'முன்பு தேவரீர் நம்மாழ்வார்முகமாக வெளிப்படுத்திய தமிழ்வேதங்கள் நான்கையும் மார்கழிமாதத்திலே தேவரீர் கண்டருள்கிற அத்தியயநோத்ஸவத்திற் கீர்வாணவேதங்களோடு பாராயணஞ்செய்யுமாறு கட்டளையிட்டருளவேணும்' என்று பிரார்த்திக்க, பெருமாள் அங்ஙனமே அருள்புரிந்தார். அவ்வாணையின்படி, ஆலிநாடர், அர்ச்சாவிக்கிரகரூபமான நம்மாழ்வாரை ஆழ்வார்திருநகரியினின்று கோயிலுக்கு எழுந்தருளப்பண்ணி உபயவேத பாராயணத்தையும் ஒழுங்காக நடக்கச்செய்து அத்தியயனத் திருவிழாவைச் சிறப்பாகச்செய்வித்து, அது முடிந்தவாறே பராங்குசரை மீண்டும் குருகூர்க்கு எழுந்தருளப்பண்ணுவித்தார்.

இங்ஙனமே பிரதிவருஷமும் அத்திருநாளைப்பரிபாலிக்கும்படி கட்டளை செய்திட்டு, மங்கையர்கோமான், மகேந்திரகிரிக்கு அருகே சித்தாச்சிரமமென்று பிரசித்தமான திருக்குறுங்குடியில் வந்து அங்கு எழுந்தருளியிருக்கின்ற நம்பியென்னும் எம்பெருமானுடைய அழகை யனுபவித்து, அங்கு நித்தியவாசஞ்செய்ய நினைவுபிறந்து, குமுதவல்லியாருடனே விரக்தராய்ச் சில காலம் யோகநிஷ்டையில் எழுந்தருளியிருந்து, தமது நூற்றைந்தாம்பிராயத்தில், சமாதியென்கிற மகாயோகத்தால் திருமேனிநீத்துத் தேஜோமயமான திவ்வியநகரஞ் சேர்ந்தனர்.

வழிபறித்தலாகிய அகருத்யத்தைச் செய்தாலும், அச்செல்வம் முழுவதையும் பகவத்பாகவதகைங்கரியத்துக்கே உபயோகித்ததனாலும், அபாகவதர் பொருளை அபகரித்துப் பாகவதர்க்கு உரியதாக்கியதனாலும், புகழ்புண்ணியங்களையேயன்றிப் பழிபாவங்களைச் சிறிதும் பெறாது பெருமாளுக்கு மிக்க முகோல்லாசத்தைச் செய்து சீருற்ற இத்திருமங்கைமன்னன், தமது திவ்யப்பிரபந்தங்களால் உலகத்தை நன்னெறிச்செலுத்திக் கலிதோஷத்தைக் கடிந்ததனால், அவர்க்கு 'கலிகன்றி' என்றும் ஒரு திருநாமம்.

கலந்ததிருக்கார்த்திகையில்கார்த்திகைவந்தோன்வாழியே
காசினியிற்குறையலூர்க்காவலோன்வாழியே
நலந்திகழாயிரத்தெண்பத்துநாலுரைத்தான்வாழியே
நாலைந்துமாறைந்துமுரைத்தான்வாழியே
இலங்கெழுகூற்றிருக்கையிருமடலீந்தான்வாழியே
இம்மூன்றிலிருநூற்றிருபத்தேழீந்தான்வாழியே
வலந்திகழுங்குமுதவல்லிமணவாளன்வாழியே
வாட்கலியன்பரகாலன்மங்கையர்கோன்வாழியே.

திருமங்கையாழ்வார்.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

தனியன்கள்.

(திருக்கோட்டியூர்நம்பி அருளிச்செய்தது.)

𑌕𑌲𑌯𑌾𑌮𑌿 𑌕𑌲𑌿𑌧𑍍𑌵𑌂𑌸𑌂 𑌕𑌵𑌿𑌂 𑌲𑍋𑌕𑌦𑌿𑌵𑌾𑌕𑌰𑌂 ।
𑌯𑌸𑍍𑌯 𑌗𑍋𑌭𑌿𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾𑌭𑌿 𑌰𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌂 𑌨𑌿𑌹𑌤𑌂 𑌤𑌮𑌃 ॥

కలయామి కలిధ్వంసం కవిం లోకదివాకరం ।
యస్య గోభిః ప్రకాశాభి రావిద్యం నిహతం తమః ॥

கலயாமிகலித்வம்ஸம் கவிம்லோகதிவாகரம் -
யஸ்யகோபிஃப்ரகாஶாபி ராவித்யம்நிஹதம்தமஃ.

(எம்பெருமானார் அருளிச்செய்தது.)

இருவிகற்பநேரிசைவெண்பா.

வாழிபரகாலன் வாழிகலிகன்றி *
வாழிகுறையலூர்வாழ்வேந்தன்—வாழியரோ *
மாயோனைவாள்வலியால்மந்திரங்கொள் * மங்கையர்கோன்
தூயோன்சுடர்மானவேல்.

(ஆழ்வான் அருளிச்செய்தது.)

கட்டளைக்கலித்துறை.

நெஞ்சுக்கிருள்கடிதீபம் அடங்காநெடும்பிறவி
நஞ்சுக்குநல்லவமுதம் * தமிழ்நன்னூல்துறைகள்
அஞ்சுக்கிலக்கியம் ஆரணசாரம் * பரசமயப்
பஞ்சுக்கனலின்பொறி * பரகாலன்பனுவல்களே.

(எம்பார் அருளிச்செய்தது.)

ஒருவிகற்பநேரிசைவெண்பா.

எங்கள்கதியே! இராமானுசமுனியே! *
சங்கைகெடுத்தாண்டதவராசா! *—பொங்குபுகழ்
மங்கையர்கோனீந்தமறையாயிரமனைத்தும் *
தங்குமனம்நீயெனக்குத்தா.

† [மாலைத்தனியேவழிபறிக்கவேணுமென்று *
கோலிப்பதிவிருந்தகொற்றவனே!—வேலை
அணைத்தருளுங்கையாலடியேன்வினையை *
துணித்தருளவேணும்துணிந்து.]

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

---

† இந்தத் தனியன் மணவாளமாமுனிகள் அருளிச்செய்ததென்றும், சோமாசியாண்டான் அருளிச்செய்ததென்றும் சொல்லுவர்; ஆகரங் கண்டு கொள்க. இதனை இந்தப்ராந்தங்களில் விசேஷமாக அநுஸந்திப்பதில்லை.

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

பெரிய திருமொழி.

முதற்பத்து.

க - ஆந் திருமொழி - வாடினேன்.

பெரிய திருமந்திரத்தின் மகிமை.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (சங்கராபரணராகம் - திரிபுடைதாளம்.)

↓↓ வாடினேன்வாடிவருந்தினேன்மனத்தால்
பெருந்துயரிடும்பையிற்பிறந்து *
கூடினேன்கூடியிளையவர்தம்மோடு
அவர்தருங்கலவியேகருதி *
ஓடினேனோடியுய்வதோர்பொருளால்
உணர்வெனும்பெரும்பதம் † தெரிந்து *
நாடினேன்நாடிநான்கண்டுகொண்டேன்
நாராயணாவென்னும்நாமம். (க)

↓↓ ஆவியே! அமுதே! எனநினைந்துருகி
அவரவர்பணைமுலைதுணையா *
பாவியேனுணராதெத்தனைபகலும்
பழுதுபோயொழிந்தனநாள்கள் *
தூவிசேரன்னந்துணையொடும்புணரும்
சூழ்புனற்குடந்தையேதொழுது * என்
நாவினாலுய்யநான்கண்டுகொண்டேன்
நாராயணாவென்னும்நாமம். (உ)

சேமமேவேண்டித்தீவினைபெருக்கித்
தெரிவைமாருருவமேமருவி *
ஊமனார்கண்டகனவிலும்பழுதாய்
ஒழிந்தனகழிந்தவந்நாள்கள் *

† 'திரிந்து' என்பதும் பாடம்.

காமனார்தாதைநம்முடையடிகள்
தம்மடைந்தார்மனத்திருப்பார் *
நாமம்நானுய்யநான்கண்டுகொண்டேன்
நாராயணாவென்னும்நாமம். (௩)

வென்றியேவேண்டிவீழ்பொருட்கிரங்கி
வேற்கணார்கலவியேகருதி *
நின்றவாநில்லாநெஞ்சினையுடையேன்
என்செய்கேன்? நெடுவிசும்பணவும் *
பன்றியாயன்றுபாரகங்கீண்ட
பாழியானாழியானருளே *
நன்றுநானுய்யநான்கண்டுகொண்டேன்
நாராயணாவென்னும்நாமம். (௪)

கள்வனேனானேன்படிறுசெய்திருப்பேன்
கண்டவாதிரிதந்தேனேலும் *
தெள்ளியேனானேன்செல்கதிக்கமைந்தேன்
சிக்கெனத்திருவருள்பெற்றேன் *
உள்ளெலாமுருகிக்குரல்தழுத்தொழிந்தேன்
உடம்பெலாங்கண்ணநீர்சோர *
நள்ளிருளளவும்பகலும்நானழைப்பன்
நாராயணாவென்னும்நாமம். (௫)

↓↓ எம்பிரானெந்தையென்னுடைச்சுற்றம்
எனக்கரசென்னுடைவாணாள் *
அம்பினாலரக்கர்வெருக்கொளநெருக்கி
அவருயிர்செகுத்தவெம்மண்ணல் *
வம்புலாஞ்சோலைமாமதிள் † தஞ்சை
மாமணிக்கோயிலேவணங்கி *
நம்பிகாள்! உய்யநான்கண்டுகொண்டேன்
நாராயணாவென்னும்நாமம். (௬)

இற்பிறப்பறியீரிவரவரென்னீர்
இன்னதோர்தன்மையென்றுணரீர் *
கற்பகம்புலவர்களைகணென்றுலகில்
கண்டவாதொண்டரைப்பாடும் *

† 'தஞ்சமா' என்றும் பாடம்.

சொற்பொருளாளீர்சொல்லுகேன்வம்மின்
சூழ்புனற்குடந்தையேதொழுமின் *
நற்பொருள்காண்மின்பாடிநீருய்ம்மின்
நாராயணாவென்னும்நாமம். (எ)

கற்றிலேன்கலைகளைம்புலன்கருதும்
கருத்துளேதிருத்தினேன்மனத்தை *
பெற்றிலேனதனால்பேதையேன்நன்மை
பெருநிலத்தாருயிர்க்கெல்லாம் *
செற்றமேவேண்டித்திரிதர்வேன்தவிர்ந்தேன்
செல்கதிக்குய்யுமாறெண்ணி *
நற்றுணையாகப்பற்றினேனடியேன்
நாராயணாவென்னும்நாமம். (அ)

↓↓ குலந்தருஞ்செல்வந்தந்திடும்
அடியார்படுதுயராயினவெல்லாம் *
நிலந்தரஞ்செய்யும்நீள்விசும்பருளும்
அருளொடுபெருநிலமளிக்கும் *
வலந்தரும்மற்றுந்தந்திடும்
பெற்றதாயினுமாயினசெய்யும் *
நலந்தருஞ்சொல்லைநான்கண்டுகொண்டேன்
நாராயணாவென்னும்நாமம். (௯)

↓↓ மஞ்சுலாஞ்சோலைவண்டறைமாநீர்
மங்கையார்வாட்கலிகன்றி *
செஞ்சொலாலெடுத்ததெய்வநன்மாலை
இவைகொண்டுசிக்கெனத்தொண்டீர் ! *
துஞ்சும்போதழைமின் துயர்வரில்நினைமின்
துயரிலீர்சொல்லிலும்நன்றாம் *
நஞ்சுதான்கண்டீர்நம்முடைவினைக்கு
நாராயணாவென்னும்நாமம். (கO)

அடிவரவு:—வாடினேன் ஆவியே சேமம் வென்றி கள்வன் எம்பிரான் இற்பிறப்பு கற்றிலேன் குலம் மஞ்சு வாலி.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

உ - ஆந் திருமொழி - வாலிமாவலத்து.

† திருப்பிருதி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (அடாணாராகம் - ஆதிதாளம்.)

↓↓ வாலிமாவலத்தொருவன துடல்கெட வரிசிலைவளைவித்து * அன்று
ஏலநாறுதண்தடம்பொழிலிடம்பெற இருந்தநல்லிமயத்துள் *
ஆலிமாமுகிலதிர்தரவருவரை அகடுறமுகடேறி *
பீலிமாமயில்நடஞ்செயும்தடஞ்சுனைப் பிருதிசென்றடைநெஞ்சே! (க)

கலங்கமாக்கடலரிகுலம்பணிசெய்ய அருவரையணைகட்டி *
இலங்கைமாநகர்பொடிசெய்தவடிகள்தாம் இருந்தநல்லிமயத்து *
விலங்கல்போல்வனவிறலிருஞ்சினத்தன வேழங்கள்துயர்கூர *
பிலங்கொள்வாளெயிற்றரியவைதிரிதரு பிருதிசென்றடைநெஞ்சே!

துடிகொள்நுண்ணிடைச்சுரிகுழல் துளங்கெயிற்றிளங்கொடிதிறத்து * ஆயர்
இடிகொள்வெங்குரலினவிடையடர்த்தவன் இருந்தநல்லிமயத்து *
கடிகொள்வேங்கையின்நறுமலரமளியின் மணியறைமிசை, வேழம் *
பிடியினோடுவண்டிசைசொலத்துயில்கொளும் பிருதிசென்றடைநெஞ்சே! (௩)

மறங்கொளாளரியுருவெனவெருவர ஒருவனதகல்மார்வம்
திறந்து * வானவர்மணிமுடிபணிதர இருந்தநல்லிமயத்துள் *
இறங்கியேனங்கள்வளைமருப்பிடந்திடக் கிடந்தருகெரிவீசும் *
‡ பிறங்குமாமணியருவியொடிழிதரு பிருதிசென்றடைநெஞ்சே! (௪)

கரைசெய்மாக்கடல்கிடந்தவன் கனைகழலமரர்கள்தொழுதேத்த *
அரைசெய்மேகலையலர்மகளவளொடும் அமர்ந்தநல்லிமயத்து *
வரைசெய்மாக்களிறிளவெதிர்வளர்முளை அளைமிகுதேன்தோய்த்து *
பிரசவாரிதன்னிளம்பிடிக்கருள்செயும் பிருதிசென்றடைநெஞ்சே! (௫)

பணங்களாயிரமுடையநல்லரவணைப் பள்ளிகொள் பரமா! என்று *
இணங்கிவானவர்மணிமுடிபணிதர இருந்தநல்லிமயத்து *
மணங்கொள்மாதவிநெடுங்கொடிவிசும்புற நிமிர்ந்தவைமுகில்பற்றி *
பிணங்குபூம்பொழில்நுழைந்துவண்டிசைசொலும் பிருதிசென்றடைநெஞ்சே!

கார்கொள்வேங்கைகள்கனவரைதழுவிய கறிவளர்கொடிதுன்னி *
போர்கொள்வேங்கைகள்புனவரைதழுவிய பூம்பொழிலிமயத்துள் *
ஏர்கொள்பூஞ்சுனைத்தடம்படிந்து இனமலரெட்டுமிட்டிமையோர்கள் *
பேர்களாயிரம்பரவிநின்றடிதொழும் பிருதிசென்றடைநெஞ்சே! (எ)

† 'பிரிதி' என்றும் வழங்கும். ‡ 'பிறங்கல்' என்றும் பாடம்.

இரவுகூர்ந்திருள்பெருகியவரைமுழை இரும்பசியதுகூர *
அரவமாவிக்குமகன்பொழில்தழுவிய அருவரையிமயத்து *
பரமனாதியெம்பனிமுகில்வண்ணனென்று எண்ணிநின்றிமையோர்கள் *
பிரமனோடுசென்றடிதொழும்பெருந்தகைப் பிருதிசென்றடைநெஞ்சே!

ஓதியாயிரநாமங்களுணர்ந்தவர்க்கு உறுதுயரடையாமல் *
ஏதமின்றிநின்றருளும்நம்பெருந்தகை இருந்தநல்லிமயத்து *
தாதுமல்கியபிண்டிவிண்டலர்கின்ற தழல்புரையெழில்நோக்கி *
பேதைவண்டுகளெரியெனவெருவரு பிருதிசென்றடைநெஞ்சே! (௯)

⁂ கரியமாமுகிற்படலங்கள் கிடந்தவைமுழங்கிட * களிறென்று
பெரியமாசுணம்வரையெனப்பெயர்தரு பிருதியெம்பெருமானை *
வரிகொள்வண்டறைபைம்பொழில் மங்கையர்கலியனதொலிமாலை *
அரியவின்னிசைபாடும்நல்லடியவர்க்கு அருவினையடையாவே. (௧௦)

அடிவரவு:—வாலி கலங்க துடி மறம் கரைசெய் பணங்கள் கார் இரவு ஓதி கரிய முற்ற.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௩ - ஆந் திருமொழி - முற்றமூத்து.

திருவதரி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (முகாரிராகம் - ஆதிதாளம்.)

⁂ முற்றமூத்துக்கோல்துணையா முன்னடிநோக்கிவளைந்து *
இற்றகால்போல்தள்ளிமெள்ள இருந்தங்கிளையாமுன் *
பெற்றதாய்போல்வந்தபேய்ச்சி பெருமுலையூடு * உயிரை
வற்றவாங்கியுண்டவாயான் வதரிவணங்குதுமே. (௧)

முதுகுபற்றிக்கைத்தலத்தால் முன்னொருகோலூன்றி *
விதிர்விதிர்த்துக்கண்சுழன்று மேற்கிளைகொண்டிருமி *
இதுவென்னப்பர்மூத்தவாறென்று இளையவரேசாமுன் *
மதுவுண்வண்டுபண்கள்பாடும் வதரிவணங்குதுமே. (௨)

உறிகள்போல்மெய்ந்நரம்பெழுந்து ஊன்தளர்ந்துள்ளமெள்கி *
நெறியைநோக்கிக்கண்சுழன்று நின்றுநடுங்காமுன் *
அறிதியாகில்நெஞ்சமன்பாய் ஆயிரநாமஞ்சொல்லி *
வெறிகொள்வண்டுபண்கள்பாடும் வதரிவணங்குதுமே. (௩)

பீளைசோரக்கண்ணிடுங்கிப் பித்தெழமூத்திருமி *
தாள்கள்நோவத்தம்மில்முட்டித் தள்ளிநடவாமுன் *
காளையாகிக்கன்றுமேய்த்துக் குன்றெடுத்தன்றுநின்றான் *
வாளைபாயும்தண்தடஞ்சூழ் வதரிவணங்குதுமே. (ச)

பண்டுகாமரானவாறும் பாவையர்வாயமுதம்
உண்டவாறும் * வாழ்ந்தவாறும் ஒக்கவுரைத்திருமி *
தண்டுகாலாவூன்றியூன்றித் தள்ளிநடவாமுன் *
வண்டுபாடும்தண்துழாயான் வதரிவணங்குதுமே. (ரு)

எய்த்தசொல்லோடீளையேங்கி இருமியிளைத்துடலம் *
பித்தர்போலச்சித்தம்வேறாய்ப் பேசியயராமுன் *
அத்தனெந்தையாதிமூர்த்தி ஆழ்கடலைக்கடைந்த *
மைத்தசோதியெம்பெருமான் வதரிவணங்குதுமே. (சு)

பப்பஅப்பர்மூத்தவாறு பாழ்ப்பதுசீத்திரளை
யொப்ப * ஐக்கள்போதவுந்த உன்தமர்காண்மினென்று *
செப்புநேர்மென்கொங்கைநல்லார் தாம்சிரியாதமுன்னம் *
வைப்பும்நங்கள்வாழ்வுமானான் வதரிவணங்குதுமே. (எ)

ஈசி ! போமினீங்கிரேன்மின் இருமியிளைத்தீர் * உள்ளம்
கூசியிட்டீரென்றுபேசும் குவளையங்கண்ணியர்பால் *
நாசமானபாசம்விட்டு நன்னெறிநோக்கலுறில் *
வாசமல்குதண்துழாயான் வதரிவணங்குதுமே. (அ)

புலன்கள்நையமெய்யில்மூத்துப் போந்திருந்துள்ளமெள்கி *
கலங்கஐக்கள்போதவுந்திக் கண்டபிதற்றாமுன் *
அலங்கலாயதண்துழாய்கொண்டு ஆயிரநாமஞ்சொல்லி *
வலங்கொள்தொண்டர்பாடியாடும் வதரிவணங்குதுமே. (கூ)

↓↓ வண்டுதண்தேனுண்டுவாழும் வதரிநெடுமாலை *
கண்டல்வேலிமங்கைவேந்தன் கலியனொலிமாலை *
கொண்டுதொண்டர்பாடியாடக் கூடிடில் * நீள்விசும்பில்
அண்டமல்லால்மற்றவர்க்கு ஓராட்சியறியோமே. (க0)

அடிவரவு:—முற்ற முதுகு உறி பீளை பண்டு எய்த்த பப்ப ஈசி புலன்கள் வண்டு ஏனம்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௪-ஆம் திருமொழி - ஏனமுனாகி.

திருவதரியாச்சிரமம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (பந்துவராளிராகம் - ஆதிதாளம்.)

‡‡ ஏனமுனாகி இருநிலமிடந்து அன்று
இணையடி இமையவர் வணங்க *
தானவனாகம் தரணியிற்புரளத்
தடஞ்சிலைகுனித்த என் தலைவன் *
தேனமர்சோலைக்கற்பகம்பயந்த
தெய்வநன்னறுமலர் கொணர்ந்து *
வானவர்வணங்குங்கங்கையின்கரைமேல்
† வதரியாச்சிராமத்துள்ளானே. (க)

கானிடையுருவைச்சுடுசரந்துரந்து
கண்டுமுன்கொடுந்தொழிலுரவோன் *
ஊனுடையகலத்தடுகணைகுளிப்ப
உயிர்கவர்ந்துகந்தவெம்மொருவன் *
தேனுடைக்கமலத்தயனொடுதேவர்
சென்றுசென்றிறைஞ்சிட * பெருகு
வானிடைமுதுநீர்க்கங்கையின்கரைமேல்
வதரியாச்சிராமத்துள்ளானே. (உ)

இலங்கையுங்கடலுமடலருந்துப்பின்
இருநிதிக்கிறைவனும் * அரக்கர்
குலங்களுங்கெடமுன்கொடுந்தொழில்புரிந்த
கொற்றவன், கொழுஞ்சுடர்சுழன்ற *
விலங்கலிலுரிஞ்சிமேல்நின்றவிசும்பில்
வெண்துகிற்கொடியெனவிரிந்து *
வலந்தருமணிநீர்க்கங்கையின்கரைமேல்
வதரியாச்சிராமத்துள்ளானே. (ங)

துணிவினியுனக்குச்சொல்லுவன்மனமே!
தொழுதெழுதொண்டர்கள்தமக்கு *
பிணியொழித்தமரர்பெருவிசும்பருளும்
பேரருளாளனெம்பெருமான் *

---

† 'வதரியாச்சிரமம்' எனவும் ஓதுவர்.

அணிமலர்க்குழலாரரம்பையர் துகிலும்
ஆரமும்வாரிவந்து * அணிநீர்
மணிகொழித்திழிந்தகங்கையின்கரைமேல்
வதரியாச்சிராமத்துள்ளானே. (௪)

பேயிடைக்கிருந்துவந்தமற்றவள்தன்
பெருமுலைசுவைத்திட * பெற்ற
தாயிடைக்கிருத்தலஞ்சுவனென்று
தளர்ந்திட வளர்ந்தஎன்தலைவன் *
சேய்முகட்டுச்சியண்டமுஞ்சுமந்த
செம்பொன்செய்விலங்கலிலங்கு *
வாய்முகட்டிழிந்தகங்கையின்கரைமேல்
வதரியாச்சிராமத்துள்ளானே. (௫)

தேரணங்கல்குற்செழுங்கயற்கண்ணி
திறத்து ஒருமறத்தொழில்புரிந்து *
பாரணங்கிமிலேறேழுமுன்னடர்த்த
பனிமுகில்வண்ணனெம்பெருமான் *
காரணந்தன்னாற்கடும்புனற்கயத்த
கருவரைபிளவெழக்குத்தி *
வாரணங்கொணர்ந்தகங்கையின்கரைமேல்
வதரியாச்சிராமத்துள்ளானே. (௬)

வெந்திறற்களிறும்வேலைவாயமுதும்
விண்ணொடுவிண்ணவர்க்கரசும் *
இந்திரற்கருளியெமக்குமீந்தருளும்
எந்தையெம்மடிகளெம்பெருமான் *
அந்தரத்தமரரடியிணைவணங்க
ஆயிரமுகத்தினலருளி *
மந்தரத்திழிந்தகங்கையின்கரைமேல்
வதரியாச்சிராமத்துள்ளானே. (௭)

மான்முனிந்தொருகால்வரிசிலைவளைத்த
மன்னவன் பொன்னிறத்துரவோன் *
ஊன்முனிந்தவனதுடலிருபிளவா
உகிர்நுதிமடுத்து * அயனரனைத்

தான்முனிந்திட்ட வெந்திறற்சாபம்
 தவிர்த்தவன் * தவம்புரிந்துயர்ந்த
மாமுனிகொணர்ந்தகங்கையின்கரைமேல்
 வதரியாச்சிராமத்துள்ளானே. (அ)

கொண்டல்மாருதங்கள்குலவரைதொகுநீர்க்
 குரைகடலுலகுடனனைத்தும் *
உண்டமாவயிற்றோன்ஒண்சுடரேய்ந்த
 உம்பருமூழியுமானான் *
அண்டமூடறுத்தன்றந்தரத்திழிந்து
 அங்கவனியாளலமர * பெருகும்
மண்டுமாமணிநீர்க்கங்கையின்கரைமேல்
 வதரியாச்சிராமத்துள்ளானே. (கூ)

↓↓ வருந்திரைமணிநீர்க்கங்கையின்கரைமேல்
 வதரியாச்சிராமத்துள்ளானை *
கருங்கடல்முந்நீர்வண்ணனையெண்ணிக்
 கலியன்வாயொலிசெய்தபனுவல் *
வரஞ்செய்தவைந்துமைந்தும்வல்லார்கள்
 வானவருலகுடன்மருவி *
இருங்கடலுலகமாண்டுவெண்குடைக்கீழ்
 இமையவராகுவர்தாமே. (க0)

அடிவரவு :—ஏனம் கான் இலங்கை துணிவு பேய் சேர் வெந்திறல் மான் கொண்டல் வருந்திரை கலை.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ரு-ஆம் திருமொழி - கலையுங்கரியும்.

திருச்சாளக்கிராமம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (பைரவிராகம் - ஆதிதாளம்.)

↓↓ கலையுங்கரியும்பரிமாவும் திரியுங்கானங்கடந்துபோய் *
சிலையுங்கணையுந்துணையாகச் சென்றான்வென்றிச்செருக்களத்து *
மலைகொண்டலைநீரணைகட்டி மதிள்நீரிலங்கைவாளரக்கர்
தலைவன் * தலைபத்தறுத்துகந்தான் சாளக்கிராமமடைநெஞ்சே ! (க)

கடஞ்சூழ்கரியும்பரிமாவும் ஒலிமாந்தேருங்காலாளும் *
உடன்சூழ்ந்தெழுந்தகடியிலங்கை பொடியாவடிவாய்ச்சரந்துரந்தான் *
இடஞ்சூழ்ந்தெங்குமிருவிசும்பில் இமையோர்வணங்கமணங்கமழும் *
தடஞ்சூழ்ந்தெங்குமழகாய சாளக்கிராமமடைநெஞ்சே! (௨)

உலவுதிரையுங்குலவரையும் ஊழிமுதலாவெண்திக்கும் *
நிலவுஞ்சுடருமிருளுமாய் நின்றான்வென்றிவிறலாழி
வலவன் * வானோர்தம்பெருமான் மருவாவரக்கர்க்கெஞ்ஞான்றும்
சலவன் * சலஞ்சூழ்ந்தழகாய சாளக்கிராமமடைநெஞ்சே! (௩)

ஊரான்குடந்தையுத்தமன் ஒருகாலிருகால்சிலைவளைய *
தேராவரக்கர்தேர்வெள்ளஞ்செற்றான் வற்றாவருபுனல்சூழ்
பேரான் * பேராயிரமுடையான் பிறங்குசிறைவண்டறைகின்ற
தாரான் * தாராவயல்சூழ்ந்த சாளக்கிராமமடைநெஞ்சே! (௪)

அடுத்தார்த்தெழுந்தாள்பிலவாய்விட்டலற அவள்மூக்கயில்வாளால்
விடுத்தான் * விளங்குசுடராழி விண்ணோர்பெருமான், நண்ணார்முன் *
கடுத்தார்த்தெழுந்தபெருமழையைக் கல்லொன்றேந்தியினநிரைக்காத்
தடுத்தான் * தடஞ்சூழ்ந்தழகாய சாளக்கிராமமடைநெஞ்சே! (௫)

தாயாய்வந்தபேயுயிரும் தயிருமிழுதுமுடனுண்ட
வாயான் * தூயவரியுருவிற்குறளாய்ச்சென்று மாவலியை
ஏயானிரப்ப * மூவடிமண்ணின்றேதாவென்று உலகேழும்
தாயான் * காயாமலர்வண்ணன் சாளக்கிராமமடைநெஞ்சே! (௬)

ஏனோரஞ்சவெஞ்சமத்துள் அரியாய்ப்பரியவிரணியனை *
ஊனாரகலம்பிளவெடுத்த ஒருவன்தானேயிருசுடராய் *
வானாய்த்தீயாய்மாருதமாய் மலையாயலைநீருலகனைத்தும்
தானாய் * தானுமானான்தன் சாளக்கிராமமடைநெஞ்சே! (௭)

வெந்தாரென்பும்சுடுநீறும் மெய்யிற்பூசி, கையகத்து * ஓர்
சந்தார்தலைகொண்டு உலகேழுந்திரியும்பெரியோன்தான்சென்று * என்
எந்தாய்! சாபந்தீரென்ன இலங்கமுதுநீர்திருமார்பில்
தந்தான் * சந்தார்பொழில்சூழ்ந்த சாளக்கிராமமடைநெஞ்சே! (௮)

தொண்டாமினமுமிமையோரும் துணைநூல்மார்வினந்தணரும் *
அண்டா! எமக்கேயருளாயென்று அணையுங்கோயிலருகெல்லாம் *
வண்டார்பொழிலின்பழனத்து வயலினயலேகயல்பாய *
தண்தாமரைகள்முகமலர்த்தும் சாளக்கிராமமடைநெஞ்சே! (௯)

↓↓ தாராவாரும்வயல்சூழ்ந்த சாளக்கிராமத்தடிகளை *
காரார்புறவின்மங்கைவேந்தன் கலியனொலிசெய்தமிழ்மாலை *
ஆராருலகத்தறிவுடையார் அமரர்நன்னாட்டரசாள *
பேராயிரமுமோதுமின்கள் அன்றியிவையேபிதற்றுமினே. (கo)

அடிவரவு:—கலை கடம் உலவு ஊரான் அடுத்து தாய் ஏனோர் வெந்தார் தொண்டு தாரா வாணிலா.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

கூ - ஆந் திருமொழி - வாணிலாமுறுவல்.

நைமிசாரணியம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (காம்போதிராகம் - ஆதிதாளம்)

↓↓ வாணிலாமுறுவற்சிறுநுதற்பெருந்தோள்
மாதரார்வனமுலைப்பயனே
பேணினேன் * அதனைப்பிழையெனக்கருதிப்
பேதையேன்பிறவிநோயறுப்பான் *
ஏணிலேனிருந்தேனெண்ணினேனெண்ணி
இளையவர்கலவியின்திறத்தை
நாணினேன் * வந்துன்திருவடியடைந்தேன்
நைமிசாரணியத்துளெந்தாய்! (க)

சிலம்படியுருவிற்கருநெடுங்கண்ணார்
திறத்தனாய் அறத்தையேமறந்து *
புலம்படிந்துண்ணும்போகமேபெருக்கிப்
போக்கினேன்பொழுதினைவாளா *
அலம்புரிதடக்கையாயனே! மாயா!
வானவர்க்கரசனே! * வானோர்
நலம்புரிந்திறைஞ்சுந்திருவடியடைந்தேன்
நைமிசாரணியத்துளெந்தாய்! (உ)

சூதினைப்பெருக்கிக்களவினைத்துணிந்து
சுரிகுழல்மடந்தையர்திறத்து *
காதலேமிகுத்துக்கண்டவாதிரிந்த
தொண்டனேன், நமன்தமர்செய்யும் *

வேதனைக்கொடுங்கிநடுங்கினேன்
வேலைவெண்திரையலமரக்கடைந்த
நாதனே! * வந்துன்திருவடியடைந்தேன்
நைமிசாரணியத்துளெந்தாய்! (ங)

வம்புலாங்கூந்தல்மனைவியைத்துறந்து
பிறர்பொருள்தாரமென்றிவற்றை *
நம்பினாரிறந்தால்நமன்தமர்பற்றி
யெற்றிவைத்து, எரியெழுகின்ற *
செம்பினாலியன்றபாவையைப்
பாவீ! தழுவெனமொழிவதற்கஞ்சி *
நம்பனே! வந்துன்திருவடியடைந்தேன்
நைமிசாரணியத்துளெந்தாய்! (ச)

இடும்பையாலடர்ப்புண்டிடுமினோதுற்றென்று
இரந்தவர்க்கில்லையேயென்று *
நெடுஞ்சொலால்மறுத்தநீசனேனந்தோ!
நினைக்கிலேன்வினைப்பயன்தன்னை *
கடுஞ்சொலார்கடியார்காலனார்தமரால்
படுவதோர்கொடுமிறைக்கஞ்சி *
நடுங்கிநான்வந்துன்திருவடியடைந்தேன்
நைமிசாரணியத்துளெந்தாய்! (ரு)

கோடியமனத்தாற்சினத்தொழில்புரிந்து
திரிந்துநாயினத்தொடுந்திளைத்திட்டு *
ஓடியுமுழன்றுமுயிர்களேகொன்றேன்
உணர்விலேனாதலால் * நமனார்
பாடியைப்பெரிதும்பரிசழித்திட்டேன்
பரமனே! பாற்கடற்கிடந்தாய்! *
நாடிநான்வந்துன்திருவடியடைந்தேன்
நைமிசாரணியத்துளெந்தாய்! (சு)

நெஞ்சினால்நினைந்தும்வாயினால்மொழிந்தும்
நீதியல்லாதனசெய்தும் *
துஞ்சினார்செல்லுந்தொன்னெறிகேட்டே
துளங்கினேன்விளங்கனிமுனிந்தாய்! *

வஞ்சனேனடியேன்நெஞ்சினிற்பிரியா
வானவா! தானவர்க்கென்றும்
நஞ்சனே! * வந்துன்திருவடியடைந்தேன்
நைமிசாரணியத்துளெந்தாய்! (எ)

ஏவினார்கலியார்நலிகவென்று என்மேல்
எங்ஙனேவாழுமாறு * ஐவர்
கோவினார்செய்யுங்கொடுமையைமடித்தேன்
குறுங்குடிநெடுங்கடல்வண்ணா! *
பாவினாரின்சொல்பன்மலர்கொண்டு உன்
பாதமேபரவிநான்பணிந்து * என்
நாவினால்வந்துன்திருவடியடைந்தேன்
நைமிசாரணியத்துளெந்தாய்! (அ)

† ஊனிடைச்சுவர்வைத்தென்புதூண்நாட்டி
உரோமம்வேய்ந்தொன்பதுவாசல் *
தானுடைக்குரம்பைபிரியும்போது உன்தன்
சரணமேசரணமென்றிருந்தேன் *
தேனுடைக்கமலத்திருவினுக்கரசே!
திரைகொள்மாநெடுங்கடற்கிடந்தாய்! *
நானுடைத்தவத்தால்திருவடியடைந்தேன்
நைமிசாரணியத்துளெந்தாய்! (கூ)

↓↓ ஏதம்வந்தணுகாவண்ணம்நாமெண்ணி
எழுமினோதொழுதுமென்று * இமையோர்
நாதன்வந்திறைஞ்சும் நைமிசாரணியத்
தெந்தையைச் சிந்தையுள்வைத்து *
காதலேமிகுத்தகலியன்வாயொலிசெய்
மாலைதான்கற்றுவல்லார்கள் *
ஓதநீர்வையகமாண்டுவெண்குடைக்கீழ்
உம்பருமாகுவர்தாமே. (க0)

அடிவரவு:—வாணிலா சிலம்பு துநினை வம்பு இம்மையால் கோடிய நெஞ்சினால் ஏவினார் ஊன் ஏதம் அங்கண்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

† 'ஊனுடை' என்பதும் பாடம்.

எ – ஆந் திருமொழி - அங்கண்ஞாலம்.

சிங்கவேள்குன்றம்.

† கலிநிலைத்துறை. (கமாஸ்ராகம் - ரூபகதாளம்.)

↓↓ அங்கண்ஞாலமஞ்ச அங்கோராளரியாய் * அவுணன்
பொங்கவாகம்வள்ளுகிரால் போழ்ந்தபுனிதனிடம் *
பைங்கணானைக்கொம்புகொண்டு பத்திமையால் * அடிக்கீழ்ச்
செங்கணாளியிட்டிறைஞ்சும் ‡ சிங்கவேள்குன்றமே. (க)

அலைத்தபேழ்வாய் வாளெயிற்றோர்கோளரியாய் * அவுணன்
கொலைக்கையாளன்நெஞ்சிடந்த கூருகிராளனிடம் *
மலைத்தசெல்சாத்தெறிந்தபூசல் வன்துடிவாய்கடுப்ப *
சிலைக்கைவேடர்தெழிப்பறாத சிங்கவேள்குன்றமே. (உ)

ஏய்ந்தபேழ்வாய் வாளெயிற்றோர்கோளரியாய் * அவுணன்
வாய்ந்தவாகம்வள்ளுகிரால் வகிர்ந்தவம்மானதிடம் *
ஓய்ந்தமாவுமுடைந்தகுன்றும் அன்றியும்நின்றழலால் *
தேய்ந்தவேயுமல்லதில்லாச் சிங்கவேள்குன்றமே. (ந)

$ எவ்வம்வெவ்வேற்பொன்பெயரோன் ஏதலனின்னுயிரை
வவ்வி * ஆகம்வள்ளுகிரால் வகிர்ந்தவம்மானதிடம் *
கவ்வுநாயுங்கழுகும் உச்சிப்போதொடுகால்சுழன்று *
தெய்வமல்லாற்செல்லவொண்ணாச் சிங்கவேள்குன்றமே. (ச)

மென்றபேழ்வாய் வாளெயிற்றோர்கோளரியாய் * அவுணன்
பொன்றவாகம்வள்ளுகிரால் போழ்ந்தபுனிதனிடம் *
நின்றசெந்தீமொண்டுசூறை நீள்விசும்பூ § டிரிய *
சென்றுகாண்டற்கரியகோயில் சிங்கவேள்குன்றமே. (ரு)

எரிந்தபைங்கணிலங்குபேழ்வாய் எயிற்றொடிதெவ்வுருவென்று *
இரிந்துவானோர்கலங்கியோட இருந்தவம்மானதிடம் *
நெரிந்தவேயின்முழையுள்நின்று நீள்நெறிவாயுழுவை *
திரிந்தவானைச்சுவடுபார்க்கும் சிங்கவேள்குன்றமே. (சு)

முனைத்தசீற்றம்விண்சுடப்போய் மூவுலகும்பிறவும் *
அனைத்துமஞ்சவாளரியாய் இருந்தவம்மானதிடம் *
கனைத்ததீயுங்கல்லுமல்லா வில்லுடைவேடருமாய் *
தினைத்தனையுஞ்செல்லவொண்ணாச் சிங்கவேள்குன்றமே. (எ)

---

† இப்பாசுரங்களை அறுசீராகவும் சிலர் பிரிப்பர். ‡ 'சிங்கவேழ்குன்றமே' என்றும் வழங்குவர். $ 'எவ்வும்' என்பாருமுளர். § 'எரிய' என்றும் பாடம்.

நாத்தழும்பநான்முகனும் ஈசனுமாய்முறையால்
ஏத்த * அங்கோராளரியாய் இருந்தவம்மானதிடம் *
காய்த்தவாகைநெற்றொலிப்பக் கல்லதர்வேய்ங்கழைபோய் *
தேய்த்ததீயால்விண்சிவக்கும் சிங்கவேள்குன்றமே. (அ)

† நல்லைநெஞ்சே! நாம்தொழுதும் நம்முடைநம்பெருமான் *
அல்லிமாதர்புல்கநின்ற ஆயிரந்தோளனிடம் *
நெல்லிமல்கிக்கல்லுடைப்பப் புல்லிலையார்த்து * அதர்வாய்ச்
சில்லிசில்லென்றொல்லறாத சிங்கவேள்குன்றமே. (௯)

‡‡ செங்கணாளியிட்டிறைஞ்சும் சிங்கவேள்குன்றுடைய *
எங்களீசனெம்பிரானை இருந்தமிழ்நூற்புலவன் *
மங்கையாளன்மன்னுதொல்சீர் வண்டறைதார்க்கலியன் *
செங்கையாளன்செஞ்சொல்மாலை வல்லவர்தீதிலரே. (௧௦)

அடிவரவு:— அங்கண் அலைத்த ஏய்ந்த எவ்வம் மென்ற எரிந்த முனைத்த நா நல்ல செங்கண் கொங்கு.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

அ-ஆம் திருமொழி - கொங்கலர்ந்த.

திருவேங்கடம். (க)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

(யமுநாகல்யாணிராகம் - திரிபுடைதாளம்.)

‡‡ கொங்கலர்ந்தமலர்க்குருந்தமொசித்த கோவலனெம்பிரான் *
சங்குதங்குதடங்கடல் துயில்கொண்டதாமரைக்கண்ணினன் *
பொங்குபுள்ளினைவாய்பிளந்த புராணர்தம்மிடம் * பொங்குநீர்ச்
செங்கயல்திளைக்குஞ்சுனைத் திருவேங்கடம்அடைநெஞ்சமே! (க)

‡‡ பள்ளியாவதுபாற்கடல்அரங்கம் இரங்கவன்பேய்முலை *
பிள்ளையாயுயிருண்டஎந்தை பிரானவன்பெருகுமிடம் *
வெள்ளியான்கரியான் மணிநிறவண்ணனென்றெண்ணி* நாள்தொறும்
தெள்ளியார்வணங்கும்மலைத் திருவேங்கடம்அடைநெஞ்சமே! (உ)

நின்றமாமருதிற்றுவீழ நடந்தநின்மலன்நேமியான் *
என்றும்வானவர்கைதொழும் இணைத்தாமரையடியெம்பிரான் *
கன்றிமாரிபொழிந்திடக் கடிதாநிரைக்கிடர்நீக்குவான் *
சென்றுகுன்றமெடுத்தவன் திருவேங்கடம்அடைநெஞ்சமே! (௩)

† 'நல்ல' என்பதும் பாடம்.

↓↓ பார்த்தற்காயன்றுபாரதங்கைசெய்திட்டு வென்றபரஞ்சுடர் *
கோத்தங்காயர்தம்பாடியில் குரவைபிணைந்தவெங்கோவலன் *
ஏத்துவார்தம்மனத்துள்ளான் இடவெந்தைமேவியஎம்பிரான் *
தீர்த்தநீர்த்தடஞ்சோலைசூழ் திருவேங்கடம்அடைநெஞ்சமே! (௪)

வண்கையானவுணர்க்குநாயகன் வேள்வியிற்சென்று, மாணியாய் *
மண்கையாலிரந்தான் மராமரமேழுமெய்தவலத்தினான் *
எண்கையானிமயத்துள்ளான் இருஞ்சோலைமேவியஎம்பிரான் *
திண்கைமாதுயர்தீர்த்தவன் திருவேங்கடம்அடைநெஞ்சமே! (௫)

எண்டிசைகளுமேழுலகமும்வாங்கிப் பொன்வயிற்றிற்பெய்து *
பண்டொராலிலைப்பள்ளிகொண்டவன் பான்மதிக்கிடர்தீர்த்தவன் *
ஒண்டிறலவுணனுரத்துகிர்வைத்தவன் ஒள்ளெயிற்றொடு *
திண்டிறலரியாயவன் திருவேங்கடம்அடைநெஞ்சமே! (௬)

பாருநீரெரிகாற்றினோடு ஆகாசமும்இவையாயினான் *
பேருமாயிரம்பேசநின்ற பிறப்பிலிபெருகுமிடம் *
காரும்வார்பனிநீள்விசும்பிடைச் † சோருமாமுகில்தோய்தர *
சேரும்வார்பொழில்சூழ் எழில்திருவேங்கடம்அடைநெஞ்சமே! (௭)

அம்பரமனல்கால்நிலம் சலமாகிநின்றஅமரர்கோன் *
வம்புலாமலர்மேல் மலிமடமங்கைதன்கொழுநனவன் *
கொம்பினன்னவிடைமடக்குறமாதர் நீளிதணந்தொறும் *
செம்புனம்மவைகாவல்கொள் திருவேங்கடம்அடைநெஞ்சமே! (௮)

பேசுமின்திருநாமமெட்டெழுத்தும் சொல்லிநின்று, பின்னரும் *
பேசுவார்தமையுய்யவாங்கிப் பிறப்பறுக்கும்பிரானிடம் *
வாசமாமலர்நாறுவார்பொழில் சூழ்தருமுலகுக்கெலாம் *
தேசமாய்த்திகழும்மலைத் திருவேங்கடம்அடைநெஞ்சமே! (௯)

↓↓ செங்கயல்திளைக்குஞ்சுனைத் திருவேங்கடத்துறைசெல்வனை *
மங்கையர்தலைவன்கலிகன்றி வண்டமிழ்ச்செஞ்சொல்மாலைகள் *
சங்கையின்றித்தரித்துரைக்கவல்லார்கள் தஞ்சமதாகவே *
வங்கமாகடல்வையங்காவலராகி வானுலகாள்வரே. (௧௦)

அடிவரவு—கொங்கு பள்ளி நின்ற பார்த்தன் வண்கையான் எண்டிசைகள் பார் அம்பரம் பேசுமின் செங்கயல் தாய்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

---

† 'சோருமாமுகில் தேய்தர' என்பதும் பாடம்.

கூ - ஆந் திருமொழி - தாயேதந்தை.

திருவேங்கடம். (உ)

கலிநிலைத்துறை. (முகாரி ராகம் - அடதாளம்.)

‡‡ தாயேதந்தையென்றும் தாரமேகிளைமக்களென்றும் *
நோயேபட்டொழிந்தேன் நுன்னைக்காண்பதோராசையினால் *
வேயேய்பூம்பொழில்சூழ் விரையார்திருவேங்கடவா ! *
நாயேன்வந்தடைந்தேன் நல்கியாளென்னைக்கொண்டருளே. (க)

மானேய்கண்மடவார் மயக்கிற்பட்டு * மாநிலத்து
நானேநானாவிதநரகம்புகும் பாவஞ்செய்தேன் *
தேனேய்பூம்பொழில்சூழ் திருவேங்கடமாமலை * என்
ஆனாய் ! வந்தடைந்தேன் அடியேனையாட்கொண்டருளே. (உ)

கொன்றேன்பல்லுயிரைக் குறிக்கோளொன்றிலாமையினால் *
என்றேனுமிரந்தார்க்கு இனிதாகவுரைத்தறியேன் *
குன்றேய்மேகமதிர் குளிர்மாமலைவேங்கடவா ! *
அன்றேவந்தடைந்தேன் அடியேனையாட்கொண்டருளே. (ங)

குலந்தானெத்தனையும் பிறந்தேயிறந்தெய்த்தொழிந்தேன் *
நலந்தானொன்றுமிலேன் நல்லதோரறஞ்செய்துமிலேன் *
நிலந்தோய் † நீள்முகில்சேர் நெறியார்திருவேங்கடவா ! *
அலந்தேன்வந்தடைந்தேன் அடியேனையாட்கொண்டருளே. (ச)

எப்பாவம்பலவும் இவையேசெய்திளைத்தொழிந்தேன் *
துப்பா ! நின்னடியே தொடர்ந்தேத்தவும்கிற்கின்றிலேன் *
செப்பார்திண்வரைசூழ் திருவேங்கடமாமலை * என்
அப்பா ! வந்தடைந்தேன் அடியேனையாட்கொண்டருளே. (ரு)

மண்ணாய்நீரெரிகால் மஞ்சுலாவுமாகாசமுமாம் *
புண்ணாராக்கைதன்னுள் புலம்பித்தளர்ந்தெய்த்தொழிந்தேன் *
விண்ணார்நீள்சிகர விரையார்திருவேங்கடவா ! *
அண்ணா ! வந்தடைந்தேன் அடியேனையாட்கொண்டருளே. (சு)

தெரியேன்பாலகனாய்ப் பலதீமைகள்செய்துமிட்டேன் *
பெரியேனாயினபின் பிறர்க்கேயுழைத்தேழையானேன் *
கரிசேர்பூம்பொழில்சூழ் கனமாமலைவேங்கடவா ! *
அரியே ! வந்தடைந்தேன் அடியேனையாட்கொண்டருளே. (எ)

† 'நீர்முகில்' என்பது சிலர் பாடம்.

நோற்றேன்பல்பிறவி நுன்னைக்காண்பதோராசையினால் *
ஏற்றேன்இப்பிறப்பே இடருற்றனனெம்பெருமான்! *
கோல்தேன்பாய்ந்தொழுகும் குளிர்சோலைசூழ்வேங்கடவா! *
ஆற்றேன்வந்தடைந்தேன் அடியேனையாட்கொண்டருளே. (௮)

பற்றேலொன்றுமிலேன் பாவமேசெய்துபாவியானேன் *
மற்றேலொன்றறியேன் மாயனே! எங்கள்மாதவனே! *
கல்தேன்பாய்ந்தொழுகும் கமலச்சுனைவேங்கடவா! *
அற்றேன்வந்தடைந்தேன் அடியேனையாட்கொண்டருளே. (௯)

↓↓ கண்ணாயேழுலகுக்குயிராய எங்கார்வண்ணனை *
விண்ணோர்தாம்பரவும் பொழில்வேங்கடவேதியனை *
திண்ணார்மாடங்கள்சூழ் திருமங்கையர்கோன்கலியன் *
பண்ணார்பாடல்பத்தும் பயில்வார்க்கில்லைபாவங்களே. (௧௦)

அடிவரவு:—தாய் மான் கொன்றேன் குலம் எப்பாவம் மண் தெரியேன் நோற்றேன் பற்றேல் கண்ணாய் கண்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௧௦ - ஆந் திருமொழி - கண்ணார்கடல்சூழ்.

திருவேங்கடம். (௫)

கலிவிருத்தம். (நாதநாமக்கிரியைராகம் - திரிபுடைதாளம்.)

↓↓ கண்ணார்கடல்சூழ் இலங்கைக்கிறைவன்தன் *
திண்ணாகம்பிளக்கச் சரஞ்செலவுய்த்தாய் *
விண்ணோர்தொழும் வேங்கடமாமலைமேய *
அண்ணா! அடியேனிடரைக்களையாயே. (௧)

† இலங்கைப்பதிக்கு அன்றிறையாய * அரக்கர்
குலங்கெட்டவர்மாளக் கொடிப்புள்திரித்தாய்! *
விலங்கற்குடுமித் திருவேங்கடம்மேய *
அலங்கல்துளபமுடியாய்! அருளாயே. (௨)

நீரார்கடலும் நிலனும்முழுதுண்டு *
ஏராலமிளந்தளிர்மேல் துயிலெந்தாய்! *
சீரார்திருவேங்கட மாமலைமேய *
ஆராவமுதே! அடியேற்கருளாயே. (௩)

† 'இலங்கைப்பதிக்கென்றிறை' என்றும் பாடமுண்டு.

உண்டாயுறிமேல் நறுநெய்அமுதாக *
கொண்டாய்குறளாய் நிலமீரடியாலே *
விண்தோய்சிகரத் திருவேங்கடம்மேய *
அண்டா! அடியேனுக்கருள்புரியாயே. (ச)

தூணாயதனூடு அரியாய்வந்துதோன்றி *
பேணாவவுணனுடலம் பிளந்திட்டாய் *
சேணார்திருவேங்கட மாமலைமேய *
கோணாகணையாய்! குறிக்கொள்ளெனைநீயே. (ரு)

மன்னா இம்மனிசப்பிறவியைநீக்கி *
தன்னாக்கித் தன்னின்னருள்செய்யுந்தலைவன் *
மின்னார்முகில்சேர் திருவேங்கடம்மேய *
என்னானையென்னப்பன் என்நெஞ்சிலுளானே. (சு)

மானேய்மடநோக்கிதிறத்து எதிர்வந்த *
ஆனேழ்விடைசெற்ற அணிவரைத்தோளா! *
தேனே! திருவேங்கடமாமலைமேய *
கோனே! என்மனம் குடிகொண்டிருந்தாயே. (எ)

சேயனணியன் எனசிந்தையுள்நின்ற
மாயன் *மணிவாளொளி வெண்தரளங்கள் *
வேய்விண்டுதிர் வேங்கடமாமலைமேய *
ஆயனடியல்லது மற்றறியேனே. (அ)

வந்தாயென்மனம்புகுந்தாய் மன்னிநின்றாய் *
நந்தாதகொழுஞ்சுடரே! எங்கள்நம்பீ! *
சிந்தாமணியே! திருவேங்கடம்மேய
எந்தாய்! * இனியானுன்னை என்றும்விடேனே. (கூ)

‖ வில்லார்மலி வேங்கடமாமலைமேய *
மல்லார்திரள்தோள் மணிவண்ணனம்மானை *
கல்லார்திரள்தோள் கலியன்சொன்னமாலை *
வல்லாரவர் வானவராகுவர்தாமே. (கo)

அடிவரவு:—கண் இலங்கை நீர் உண்டாய் தூணாய் மன்னா மானேய் சேயன் வந்தாய் வில் வானவர்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்து.

௧ - ஆந் திருமொழி - வானவர்.

திருவேங்கடம். (௪)

ஆசிரியத்துறை. (ஆனந்தபைரவிராகம் - ரூபகதாளம்.)

‡‡வானவர்தங்கள்சிந்தைபோல என்னெஞ்சமே! இனிதுவந்து * மாதவ
மானவர்தங்கள்சிந்தை அமர்ந்துறைகின்றவெந்தை *
கானவரிடுகாரகிற்புகை ஓங்குவேங்கடம்மேவி * மாண்குற
ளானவந்தணற்கு இன்றடிமைத்தொழில்பூண்டாயே! (௧)

உறவுசுற்றமென்றொன்றிலா ஒருவன்உகந்தவர்தம்மை * மண்மிசைப்
பிறவியேகெடுப்பான் அதுகண்டென்னெஞ்சமென்பாய்! *
குறவர்மாதர்களோடு வண்டுகுறிஞ்சிமருளிசைபாடும்வேங்கடத்து *
அறவனாயகற்கு இன்றடிமைத்தொழில்பூண்டாயே! (௨)

இண்டையாயினகொண்டு தொண்டர்களேத்துவாருறவோடும் * வானிடைக்
கொண்டுபோயிடவும் அதுகண்டென்னெஞ்சமென்பாய்! *
வண்டுவாழ்வடவேங்கடமலை கோயில்கொண்டதனோடும் * மீமிசை
அண்டமாண்டிருப்பாற்கு அடிமைத்தொழில்பூண்டாயே! (௩)

பாவியாதுசெய்தாயென்னெஞ்சமே! பண்டுதொண்டுசெய்தாரை *மண்
மேவியாட்கொண்டுபோய் விசும்பேறவைக்குமெந்தை * [மிசை
† கோவிநாயகன்கொண்டலுந்துயர் வேங்கடமலையாண்டு * வானவர்
ஆவியாயிருப்பார்க்கு அடிமைத்தொழில்பூண்டாயே! (௪)

பொங்குபோதியும்பிண்டியுமுடைப் புத்தர்நோன்பியர்பள்ளியுள்ளு
தங்கள்தேவருந்தாங்களுமேயாக என்னெஞ்சமென்பாய்! * [றை *
எங்கும்வானவர்தானவர்நிறைந்தேத்தும் வேங்கடமேவிநின்றருள் *
அங்கணாயகற்கு இன்றடிமைத்தொழில்பூண்டாயே! (௫)

துவரியாடையர்மட்டையர் சமண்தொண்டர்கள்மண்டியுண்டுபின்னரு
தமருந்தாங்களுமேதடிக்க என்னெஞ்சமென்பாய்! * [ம் *
கவரிமாக்கணஞ்சேரும் வேங்கடம்கோயில்கொண்டகண்ணார்விசும்பிடை *
அமரநாயகற்கு இன்றடிமைத்தொழில்பூண்டாயே! (௬)

---

† 'கோவல்நாயகன்' என்பதும் பாடம்,

தருக்கினுற்சமண்செய்து சோறுதண்தயிரினால்திரளை * மிடற்றிடை
நெருக்குவாரலக்கணதுகண்டு என்நெஞ்சமென்பாய்! * [னிடை
மருட்கள்வண்டுகள்பாடும் வேங்கடம்கோயில்கொண்டதனோடும் * வா
அருக்கன்மேவிநிற்பாற்கு அடிமைத்தொழில்பூண்டாயே. (எ)

சேயனணியன்சிறியன்பெரியனென்பதும் சிலர்பேசக்கேட்டிருந்
தே * என்நெஞ்சமென்பாய்! எனக்கொன்றுசொல்லாதே *
வேய்கள்நின்றுவெண்முத்தமேசொரி வேங்கடமலைகோயில்மேவிய *
† ஆயர்நாயகற்கு இன்றடிமைத்தொழில்பூண்டாயே (அ)

கூடியாடியுரைத்ததேயுரைத்தாய் என்நெஞ்சமென்பாய்! துணிந்துகே
பாடியாடிப்பலரும் பணிந்தேத்திக் ‡ காண்கிலர் * [துள் *
ஆடுதாமரையோனுமீசனும் அமரர்கோனும்நின்றேத்தும் * வேங்கடத்
தாடுகூத்தனுக்கு இன்றடிமைத்தொழில்பூண்டாயே. (௯)

↓↓ மின்னுமாமுகில்மேவுதண்திருவேங்கடமலைகோயில்மேவிய *
அன்னமாய்நிகழ்ந்த அமரர்பெருமானை *
கன்னிமாமதிள்மங்கையர்கலிகன்றி இன்தமிழாலுரைத்த * இம்
மன்னுபாடல்வல்லார்க்கு இடமாகும்வானுலகே. (௧௦)

அடிவரவு:—வானவர் உறவு இண்டை பாவியாது பொங்கு துவரி தருக்கினால் சேயன் கூடி மின்னு காசையாடை.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௨ - ஆந் திருமொழி - காசையாடை.

திருவெவ்வுளூர்.

கலிநிலைத்துறை. (கமாஸ்ராகம் - ரூபகதாளம்.)

↓↓காசையாடைமூடியோடிக் காதல்செய்தானவனூர் *
நாசமாகநம்பவல்ல நம்பிநம்பெருமான் *
வேயினன்னதோள்மடவார் வெண்ணெயுண்டானிவனென்று *
ஏசநின்றவெம்பெருமான் எவ்வுட்கிடந்தானே. (௧)

† 'ஆயநாயகற்கு' என்றும் பாடமோதுவர். ‡ 'காண்கிலா' என்பதும் பாடம்.

தையலாள்மேல்காதல்செய்த தானவன்வாளரக்கன் *
பொய்யிலாதபொன்முடிகள் ஒன்பதோடொன்றும் * அன்று
செய்தவெம்போர்தன்னில் அங்கோர்செஞ்சரத்தாலுருள *
எய்தவெந்தையெம்பெருமான் எவ்வுட்கிடந்தானே. (௨)

முன்னோர்தூது வானரத்தின்வாயில்மொழிந்து * அரக்கன்
மன்னூர்தன்னை வாளியினால்மாளமுனிந்து * அவனே
பின்னோர்தூது ஆதிமன்னர்க்காகி, பெருநிலத்தார் *
இன்னார்தூதனென நின்றான் எவ்வுட்கிடந்தானே. (௩)

பந்தணைந்தமெல்விரலாள் பாவைதன்காரணத்தால் *
வெந்திறலேறேழும் வென்றவேந்தன், விரிபுகழ்சேர் *
நந்தன்மைந்தனாகும் நம்பிநம்பெருமான் *
எந்தைதந்தைதம்பெருமான் எவ்வுட்கிடந்தானே. (௪)

பாலனாகிஞாலமேழுமுண்டு பண்டாலிலைமேல் *
சாலநாளும்பள்ளிகொள்ளும் தாமரைக்கண்ணன், எண்ணில் *
நீலமார்வண்டுண்டுவாழும் நெய்தலந்தண்கழனி *
ஏலநாறும்பைம்புறவில் எவ்வுட்கிடந்தானே (௫)

சோத்தநம்பியென்று தொண்டர்மிண்டித்தொடர்ந்தழைக்கும் *
ஆத்தனம்பிசெங்கணம்பி ஆகிலும்தேவர்க்கெல்லாம் *
மூத்தநம்பிமுக்கணம்பியென்று முனிவர்தொழுது
ஏத்தும் * நம்பியெம்பெருமான் எவ்வுட்கிடந்தானே. (௬)

திங்களப்பு வானெரிகாலாகி * திசைமுகனார்
தங்களப்பன்சாமியப்பன் பாகத்திருந்த * வண்டுண்
தொங்கலப்புநீள்முடியான் சூழ்கழல்சூடநின்ற *
எங்களப்பனெம்பெருமான் எவ்வுட்கிடந்தானே (௭)

முனிவன்மூர்த்திமூவராகி வேதம்விரித்துரைத்த
புனிதன் * பூவைவண்ணனண்ணல்புண்ணியன் விண்ணவர்கோன் *
தனியன்சேயன்தானொருவனாகிலும் தன்னடியார்க்கு
இனியன் * எந்தையெம்பெருமான் எவ்வுட்கிடந்தானே. (௮)

பந்திருக்கும்மெல்விரலாள் பாவைபனிமலராள் *
வந்திருக்கும்மார்வன் நீலமேனிமணிவண்ணன் *
அந்தரத்தில்வாழும் வானோர்நாயகனாயமைந்த *
இந்திரற்குந்தம்பெருமான் எவ்வுட்கிடந்தானே. (௯)

‡‡இண்டைகொண்டுதொண்டரேத்த எவ்வுட்கிடந்தானை *
வண்டுபாடும்பைம்புறவின் மங்கையர்கோன்கலியன் *
கொண்டசீரால்தண்தமிழ்செய்மாலை ஈரைந்தும்வல்லார் *
அண்டமாள்வதாணை அன்றேலாள்வரமருலகே. (௧௦)

அடிவரவு:—காசையாடை தையலாள் முன் பந்தணைந்த பாலன் சோத்தம் திங்கள் முனிவன் பந்திருக்கும் இண்டை வில்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௩-ஆந் திருமொழி - விற்பெருவிழவும்.

திருவல்லிக்கேணி.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (தோடிராகம் - ஆதிதாளம்.)

‡‡ விற்பெருவிழவும்கஞ்சனும்மல்லும்
வேழமும்பாகனும்வீழ *
செற்றவன்தன்னை, புரமெரிசெய்த
சிவனுறுதுயர்களைதேவை *
பற்றலர்வீயக்கோல்கையிற்கொண்டு
பார்த்தன்தன்தேர்முன்நின்றானை *
சிற்றவைபணியால்முடிதுறந்தானைத்
திருவல்லிக்கேணிக்கண்டேனே. (௧)

‡‡ வேதத்தைவேதத்தின்சுவைப்பயனை
விழுமியமுனிவர்விழுங்கும் *
கோதிலின்கனியைநந்தனார்களிற்றைக்
குவலயத்தோர்தொழுதேத்தும் *
ஆதியையமுதைஎன்னையாளுடை
யப்பனைஒப்பவரில்லா
மாதர்கள்வாழும் * மாடமாமயிலைத்
திருவல்லிக்கேணிக்கண்டேனே. (௨)

வஞ்சனைசெய்யத்தாயுருவாகி
வந்தபேயலறிமண்சேர *
நஞ்சமர்முலையூடுயிர்செகவுண்ட
நாதனைத் தானவர்கூற்றை *

விஞ்சைவானவர்சாரணர்சித்தர்
† வியந்துதிசெய்யப்பெண்ணுருவாகி *
அஞ்சுவையமுதமன்றளித்தானைத்
திருவல்லிக்கேணிக்கண்டேனே. (௩)

இந்திரனுக்கென்றாயர்களெடுத்த
எழில்விழவிற்பழநடைசெய் *
மந்திரவிதியிற்பூசனைபெறாது
மழைபொழிந்திடத்தளர்ந்து * ஆயர்
எந்தம்மோடினவாநிரைதளராமல்
எம்பெருமான்! அருளென்ன *
அந்தமில்வரையால்மழைதடுத்தானைத்
திருவல்லிக்கேணிக்கண்டேனே. (௪)

இன்துணைப்பதுமத்தலர்மகள்தனக்கு
மின்பன் நற்புவிதனக்கிறைவன் *
தன்துணையாயர்பாவைநப்பின்னை
தனக்கிறை மற்றையோர்க்கெல்லாம்
வன்துணை * பஞ்சபாண்டவர்க்காகி
வாயுரைதூதுசென்றியங்கும்
‡ என்துணை * எந்தைதந்தைதம்மானைத்
திருவல்லிக்கேணிக்கண்டேனே. (௫)

அந்தகன்சிறுவனரசர்தமரசற்கிளையவன்
அணியிழையைச்சென்று *
எந்தமக்குரிமைசெய்யெனத்தரியாது
எம்பெருமான்! அருளென்ன *
§ சந்தமல்குழலாளலக்கண் நூற்றுவர்தம்
பெண்டிருமெய்திநூலிழப்ப *
இந்திரன்சிறுவன்தேர்முன்நின்றானைத்
திருவல்லிக்கேணிக்கண்டேனே. (௬)

↓↓ பரதனும்தம்பிசத்துருக்கனனும்
இலக்குமனோடுமைதிலியும் *
இரவும்நன்பகலும்துதிசெய்யநின்ற
இராவணாந்தகனையெம்மானை *

---

† 'வியந்து துதிசெய்ய' என்ற பாடம் ஏற்கும். ‡ 'இன்துணை' என்பதும் பாடம். § 'சந்தமர்' என்பதும் பாடம்.

குரவமேகமழும்குளிர்பொழிலூடு
குயிலொடுமயில்கள்நின்றால *
இரவியின்கதிர்கள்நுழைதல்செய்தறியாத்
திருவல்லிக்கேணிக்கண்டேனே. (௭)

↓↓ பள்ளியிலோதிவந்ததன்சிறுவன்
வாயிலோராயிரநாமம் *
ஒள்ளியவாகிப்போதவாங்கதனுக்கு
ஒன்றுமோர்பொறுப்பிலனாகி *
பிள்ளையைச்சீறிவெகுண்டுதூண்புடைப்பப்
பிறையெயிற்றனல்விழிப்பேழ்வாய் *
தெள்ளியசிங்கமாகியதேவைத்
திருவல்லிக்கேணிக்கண்டேனே. (அ)

↓↓ மீனமர்பொய்கைநாண்மலர்கொய்வான்
வேட்கையினோடுசென்றிழிந்த *
கானமர்வேழம்கையெடுத்தலறக்
கராவதன்காலினைக்கதுவ *
ஆனையின்துயரந்தீரப்புள்ளூர்ந்து
சென்றுநின்றாழிதொட்டானை *
தேனமர்சோலைமாடமாமயிலைத்
திருவல்லிக்கேணிக்கண்டேனே. (௯)

↓↓ மன்னுதண்பொழிலும்வாவியும்மதிளும்
மாடமாளிகையும்மண்டபமும் *
தென்னன்தொண்டையர்கோன்செய்தநன்மயிலைத்
திருவல்லிக்கேணிநின்றானை *
கன்னிநன்மாடமங்கையர்தலைவன்
காமருசீர்க்கலிகன்றி *
சொன்னசொல்மாலைபத்துடன்வல்லார்
சுகமினிதாள்வர்வானுலகே. (௧௦)

அடிவரவு:—வில் வேதத்தை வஞ்சனை இந்திரனுக்கு இன்துணை அந்தகன் பரதன் பள்ளியில் மீனமர் மன்னு அன்றாயர்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ச - ஆந் திருமொழி - அன்றாயர்.

திருநீர்மலை.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (கல்யாணிராகம் - ஆதிதாளம்.)

↓↓ அன்றாயர்குலக்கொடியோடு
அணிமாமலர்மங்கையொடன்பளவி * அவுணர்க்
கென்றானுமிரக்கமிலாதவனுக்கு
உறையுமிடமாவது * இரும்பொழில்சூழ்
நன்றாயபுனல்நறையூர்திருவாலிகுடந்தை
தடந்திகழ்கோவல்நகர் *
நின்றானிருந்தான்கிடந்தான்நடந்தாற்கிடம்
மாமலையாவதுநீர்மலையே. (க)

காண்டாவனமென்பதோர்காடு
அமரர்க்கரையன்னதுகண்டவன்நிற்க * முனே
மூண்டாரழலுண்ணமுனிந்ததுவும் அதுவன்றியும்
முன்னுலகம்பொறைதீர்த்
தாண்டான் * அவுணனவன்மார்வகலம்
உகிரால்வகிராகமுனிந்து * அரியாய்
நீண்டான் குறளாகிநிமிர்ந்தவனுக்கிடம்
மாமலையாவதுநீர்மலையே. (உ)

அலமன்னுமடற்சுரிசங்க † மெடுத்து
அடலாழியினாலணியாருருவின் *
புலமன்னுவடம்புனைகொங்கையினாள்
பொறைதீரமுனாளடுவாளமரில் *
பலமன்னர்படச்சுடராழியினைப்
பகலோன்மறையப்பணிகொண்டு * அணிசேர்
நிலமன்னனுமாயுலகாண்டவனுக்கிடம்
மாமலையாவதுநீர்மலையே. (௩)

தாங்காததொராளரியாய் அவுணன்தனை
வீடமுனிந்து, அவனாலமரும் *
பூங்கோதையர்பொங்கெரிமூழ்கவிளைத்து
அதுவன்றியும் வென்றிகொள்வாளமரில் *

† 'அடுத்து' என்பதும் பாடம்.

பாங்காகமுனைவரொடன்பளவிப்
பதிற்றைந்திரட்டிப்படைவேந்தர்பட *
நீங்காச்செருவில்நிறைகாத்தவனுக்கிடம்
மாமலையாவதுநீர்மலையே. (௪)

மாலுங்கடலாரமலைக்குவடிட்டணைகட்டி
வரம்புருவ * மதிசேர்
கோலமதிளாயவிலங்கைகெடப் படை
தொட்டொருகாலமரிலதிர *
காலமிதுவென்றயன்வாளியினால்
கதிர்நீள்முடிபத்துமறுத்தமரும் *
நீலமுகில்வண்ணனெமக்கிறைவற்கிடம்
மாமலையாவதுநீர்மலையே. (௫)

பாராருலகும்பனிமால்வரையும்
கடலுஞ்சுடரும்மிவையுண்டும் * எனக்
காராதெனநின்றவனெம்பெருமான்
அலைநீருலகுக்கரசாகிய * அப்
பேரானைமுனிந்தமுனிக்கரையன்
பிறரில்லைநுனக்கெனுமெல்லையினான் *
நீரார்பேரான்நெடுமாலவனுக்கிடம்
மாமலையாவதுநீர்மலையே. (௬)

புகராருருவாகிமுனிந்தவனைப்
புகழ்வீடமுனிந்துயிருண்டு * அசுரன்
நகராயினபாழ்படநாமமெறிந்ததுவன்றியும்
வென்றிகொள்வாளவுணன் *
பகராதவனாயிரநாமம் அடிப்
பணியாதவனை, பணியாலமரில் *
நிகராயவன்நெஞ்சிடந்தானவனுக்கிடம்
மாமலையாவதுநீர்மலையே. (௭)

பிச்சச்சிறுபீலிபிடித்துலகில்
பிணந்தின்மடவாரவர்போல் * அங்ஙனே
அச்சமிலர்நாணிலராதன்மையால்
அவர்செய்கைவெறுத்தணிமாமலர்தூய் *

† 'நீலமுகில்வண்ணரெமக்கிறைவர்க்கிடம்' என்றும் வழங்குவர்.

நச்சிநமனாரடையாமைநமக்கருள்செய்யென
உள்குழைந்து, ஆர்வமொடு *
நிச்சம்நினைவார்க்கருள்செய்யுமவற்கிடம்
மாமலையாவதுநீர்மலையே. (அ)

பேசுமளவன்றிதுவம்மின் நமர் !
பிறர்கேட்பதன்முன், பணிவார்வினைகள் *
நாசமதுசெய்திடுமாதன்மையால்
அதுவேநமதுய்விடம், நாள்மலர்மேல் *
வாசமணிவண்டறைபைம்புறவில்
மனமைந்தொடுநைந்துழல்வார் * மதியில்
நீசரவர்சென்றடையாதவனுக்கிடம்
மாமலையாவதுநீர்மலையே. (௯)

↓↓ நெடுமாலவன்மேவியநீர்மலைமேல்
நிலவும்புகழ்மங்கையர்கோன் * அமரில்
கடமாகளியானைவல்லான் கலிய
னொலிசெய்தமிழ்மாலைவல்லார்க்கு * உடனே
விடுமால்வினைவேண்டிடில் மேலுலகு
மெளிதாயிடும், அன்றியிலங்கொலிசேர் *
கொடுமாகடல்வையகமாண்டு மதிக்
குடைமன்னவராயடிகூடுவரே. (௧௦)

அடிவரவு:—அன்றாயர் காண்டா அலம் தாங்காதது மாலும் பார் புகர் பிச்சம் பேசும் நெடுமால் பாராயது.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ரு - ஆந் திருமொழி - பாராயது.

திருக்கடல்மல்லை. (௧)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (கல்யாணிராகம்-ஆதிதாளம்.)

↓↓ பாராயதுண்டுமிழ்ந்தபவளத்தூணைப்
படுகடலிலமுதத்தைப்பரிவாய்கீண்ட
சீரானை * எம்மானைத்தொண்டர்தங்கள்
சிந்தையுள்ளே முளைத்தெழுந்ததீங்கரும்பினை *

போரானைக்கொம்பொசித்தபோரேற்றினைப்
புணர்மருதமிறநடந்தபொற்குன்றினை *
காரானையிடர்கடிந்தகற்பகத்தைக்
கண்டதுநான்கடல்மல்லைத்தலசயனத்தே (க)

‡ பூண்டவத்தம்பிறர்க்கடைந்துதொண்டுபட்டுப்
பொய்ந்நூலைமெய்ந்நூலென்றென்றுமோதி
மாண்டு * அவத்தம்போகாதேவம்மின் எந்தை
என்வணங்கப்படுவானை * கணங்களேத்தும்
† நீண்டவத்தைக்கருமுகிலை யெம்மான்தன்னை
நின்றவூர்நித்திலத்தை, தொத்தார்சோலை *
காண்டவத்தைக்கனலெரிவாய்ப்பெய்வித்தானைக்
கண்டதுநான்கடல்மல்லைத்தலசயனத்தே. (உ)

உடம்புருவில்மூன்றொன்றாய்மூர்த்திவேறாய்
உலகுய்யநின்றானை * அன்றுபேய்ச்சி
விடம்பருகுவித்தகனைக் கன்றுமேய்த்து
விளையாடவல்லானை, வரைமீகானில் *
தடம்பருகுகருமுகிலைத்தஞ்சைக்கோயில்
தவநெறிக்கோர்பெருநெறியை, வையங்காக்கும் *
கடும்பரிமேல்கற்கியைநான்கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ்கடல்மல்லைத்தலசயனத்தே. (ங)

பேய்த்தாயைமுலையுண்டபிள்ளைதன்னைப்
பிணைமருப்பிற்கருங்களிற்றை, பிணைமான்நோக்கின் *
ஆய்த்தாயர்தயிர்வெண்ணெயமர்ந்தகோவை
அந்தணர்தமமுதத்தை, குரவைமுன்னே
கோத்தானை * குடமாடுகூத்தன்தன்னைக்
கோகுலங்கள்தளராமற்குன்றமேந்திக்
காத்தானை * எம்மானைக்கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ்கடல்மல்லைத்தலசயனத்தே. (ச)

பாய்ந்தானைத்திரிசகடம்பாறிவீழப்
பாலகனாயாலிலையிற்பள்ளியின்ப
மேய்ந்தானை * இலங்கொளிசேர்மணிக்குன்றன்ன
ஈரிரண்டுமால்வரைத்தோளெம்மான்தன்னை *

---

† 'நீண்ட அத்தக்கருமுகிலை' என்பதும் பாடம்.
‡ 'அம்மான்தன்னை' என்பது சிலர்பாடம்.

தோய்ந்தானை நிலமகள்தோள் தூதிற்சென்று அப்
பொய்யறைவாய்ப்புகப்பெய்தமல்லர் மங்கக்
காய்ந்தானை * எம்மானைக்கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ்கடல்மல்லைத்தலசயனத்தே. (ரு)

கிடந்தானைத் தடங்கடலுள் பணங்கள்மேவிக்
கிளர்பொறியமறிதிரியவதனின்பின்னே
படர்ந்தானை * படுமதத்தகளிற்றின்கொம்பு
பறித்தானைப் பாரிடத்தையெயிறுகீற
இடந்தானை * வளைமருப்பினேனமாகி,
இருநிலனும்பெருவிசும்புமெய்தாவண்ணம்
கடந்தானை * எம்மானைக்கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ்கடல்மல்லைத்தலசயனத்தே. (சு)

பேணாதவலியரக்கர்மெலியவன்று
பெருவரைத்தோளிறநெரித்து, அன்றவுணர்கோனை *
பூணாகம்பிளவெடுத்தபோர்வல்லோனைப்
பொருகடலுள் துயிலமர்ந்தபுள்ளூர்தியை *
ஊணாகப்பேய்முலைநஞ்சுண்டான்தன்னை
உள்ளுவாருள்ளத்தேயுறைகின்றானை *
காணாதுதிரிதருவேன்கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ்கடல்மல்லைத்தலசயனத்தே. (எ)

பெண்ணாகியின்னமுதம்வஞ்சித்தானைப்
பிறையெயிற்றன்றடலரியாய்ப்பெருகினானை *
தண்ணார்ந்தவார்புனல்சூழ்மெய்யமென்னும்
தடவரைமேற்கிடந்தானை, பணங்கள்மேவி *
எண்ணானையெண்ணிறந்தபுகழினானை
இலங்கொளிசேரரவிந்தம்போன்றுநீண்ட
கண்ணானை * கண்ணாரக்கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ்கடல்மல்லைத்தலசயனத்தே. (அ)

தொண்டாயார்தாம்பரவுமடியினானை,
படிகடந்ததாளாளற்காளாயுய்தல்
விண்டானை * தென்னிலங்கையரக்கர்வேந்தை
விலங்குண்ணவலங்கைவாய்ச்சரங்களாண்டு *

பண்டாயவேதங்கள்நான்கும்ஐந்து
    வேள்விகளும் கேள்வியோடங்கமாறும்
கண்டானை * தொண்டனேன்கண்டுகொண்டேன்
    கடிபொழில்சூழ்கடல்மல்லைத்தலசயனத்தே. (௯)

↓↓ படநாகத்தணைக்கிடந்தன்றவுணர்கோனைப்
    படவெகுண்டுமருதிடைபோய், பழனவேலி *
தடமார்ந்தகடல்மல்லைத்தலசயனத்துத்
    தாமரைக்கண்துயிலமர்ந்த † தலைவன்தன்னை *
கடமாருங்கருங்களிறுவல்லான் வெல்போர்க்
    கலிகன்றியொலிசெய்தவின்பப்பாடல் *
திடமாகஇவையைந்துமைந்தும்வல்லார்
    தீவினையைமுதலரியவல்லார்தாமே (௧௦)

அடிவரவு:—பாராயது பூண்டு உடம்பு பேய் பாய்ந்தானை கிடந்தானை பேணாத பெண் தொண்டாயார் படம் நண்ணாத.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௬ - ஆம் திருமொழி - நண்ணாத.

திருக்கடல்மல்லை. (௨)

தரவுகொச்சகக்கலிப்பா. (ஸஹாநா ராகம்-ரூபகதாளம்.)

↓↓ நண்ணாத வாளவுணரிடைப்புக்கு * வானவரைப்
பெண்ணாகி யமுதூட்டும்பெருமானார் * மருவினிய
தண்ணார்ந்தகடல்மல்லைத் தலசயனத்துறைவாரை *
எண்ணாதேயிருப்பாரை இறைப்பொழுதுமெண்ணோமே. (௧)

பார்வண்ணமடமங்கை பனிநன்மாமலராக்கிழத்தி *
நீர்வண்ணன்மார்வத்தி லிருக்கையைமுன்நினைந்து, அவனூர் *
கார்வண்ணமுதுமுந்நீர்க் கடல்மல்லைத்தலசயனம் *
ஆரெண்ணுமநெஞ்சுடையார் அவரெம்மையாள்வாரே. (௨)

↓↓ ஏனத்தினுருவாகி நிலமங்கையெழில்கொண்டான் *
வானத்திலவர்முறையால் மகிழ்ந்தேத்தி ‡ வலங்கொள்ள *
கானத்தின் கடல்மல்லைத்தலசயனத்துறைகின்ற *
ஞானத்தினொளியுருவை நினைவாரென்நாயகரே. (௩)

---

† 'தலைவர்தம்மை' எனவும் பாடமோதுவர்.

‡ 'வரங்கொள்ள' என்பதும் பாடம்.

விண்டாரைவென்று ஆவிவிலங்குண்ண * மெல்லியலார்
கொண்டாடுமல்லகலம் அழலேறவெஞ்சமத்துக்
கண்டாரை * கடல்மல்லைத் தலசயனத்துறைவாரை *
கொண்டாடும்நெஞ்சுடையார் அவர் எங்கள்குலதெய்வமே. (ச)

பிச்சச்சிறுபீலிச் சமண்குண்டர்முதலாயோர் *
விச்சைக்கிறையென்னும் அவ்விறையைப்பணியாதே *
கச்சிக்கிடந்தவனூர் கடல்மல்லைத்தலசயனம் *
நச்சித்தொழுவாரை நச்சுஎன்தன்நன்னெஞ்சே! (ரு)

புலங்கொள்நிதிக்குவையோடு புழைக்கைம்மாகளிற்[illegible]மும் *
நலங்கொள்நவமணிக்குவையும் சுமந்தெங்கும்நான்றொசிந்து *
கலங்களியங்கும்மல்லைக் கடல்மல்லைத்தலசயனம் *
வலங்கொள்மனத்தாரவரை வலங்கொள்என்மடநெஞ்சே! (சு)

பஞ்சிச்சிறுகூழையுருவாகி * மருவாத
வஞ்சப்பெண்நஞ்சுண்ட அண்ணல், முன்நண்ணாத *
கஞ்சைக்கடந்தவனூர் கடல்மல்லைத்தலசயனம் *
நெஞ்சில்தொழுவாரைத் தொழுவாய்என் தூய்நெஞ்சே! (எ)

செழுநீர்மலர்க்கமலம் † திரையுந்துவன்பகட்டால் *
உழுநீர்வயலுழவருழப் பின்முன்பிழைத்தெழுந்த *
கழுநீர்கடிகமழும் கடல்மல்லைத்தலசயனம் *
தொழுநீர்மனத்தவரைத் தொழுவாய்என் தூய்நெஞ்சே! (அ)

பிணங்களிடுகாடதனுள் நடமாடுபிஞ்ஞகனோடு *
இணங்குதிருச்சக்கரத்து எம்பெருமானார்க்கிடம் * விசும்பில்
கணங்களியங்கும்மல்லைக் கடல்மல்லைத்தலசயனம் *
வணங்கும்மனத்தாரவரை வணங்குஎன்தன்மடநெஞ்சே! (கூ)

↓↓ கடிகமழும்நெடுமறுகில் கடல்மல்லைத்தலசயனத்து *
அடிகளடியேநினையும் அடியவர்கள் தம்மடியான் *
வடிகொள்நெடுவேல்வலவன் கலிகன்றியொலிவல்லார் *
முடிகொள்நெடுமன்னவர்தம் முதல்வர்முதலாவாரே. (கo)

அடிவரவு:—நண்ணாத பார் ஏனத்தின் விண்டாரை பிச்சம் புலம் பஞ்சி செழுநீர் பிணங்கள் கடி திவளும்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

† 'திரையுந்த' என்றும் பாடமுண்டு.

எ - ஆந் திருமொழி - திவளும்.

திருவிடவெந்தை.

[தலைவனைப் பிரிந்த தலைவியின் ஆற்றாமை கண்ட தாய் இரங்குதல்.]

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம் (ஸாவேரிராகம் - ஆதிதாளம்)

‡‡ திவளும்வெண்மதிபோல்திருமுகத்தரிவை
செழுங்கடலமுதினிற்பிறந்த
அவளும் * நின்னாகத்திருப்பதுமறிந்தும்
ஆகிலுமாசைவிடாளால் *
குவளையங்கண்ணிகொல்லியம்பாவை
சொல்லுநின்தாள்நயந்திருந்த
இவளை * உன்மனத்தாலென்னினைந்திருந்தாய் ?
இடவெந்தையெந்தைபிரானே ! (௧)

துளம்படுமுறுவல்தோழியர்க்கருளாள்
துணைமுலைசாந்துகொண்டணியாள் *
குளம்படுகுவளைக்கண்ணிணையெழுதாள்
கோலநன்மலர்குழற்கணியாள் *
வளம்படுமுந்நீர்வையமுன்னளந்த
மாலென்னும், மாலினமொழியாள் *
இளம்படியிவளுக்கென்னினைந்திருந்தாய் ?
இடவெந்தையெந்தைபிரானே ! (௨)

சாந்தமும்பூணும்சந்தனக்குழம்பும்
த முலைக்கணியிலுந்தழலாம் *
போந்தவெண்திங்கள்கதிர்சுடமெலியும்
பொருகடல்புலம்பிலும்புலம்பும் *
மாந்தளிர்மேனிவண்ணமும்பொன்னும்
வளைகளுமிறைநில்லா * என்தன்
ஏந்திழையிவளுக்கென்னினைந்திருந்தாய் ?
இட ந்தையெந்தைபிரானே ! (௩)

ஊழியிற் பரிதால்காழிகையென்னும்
ஒண்சுடர்துயின்றதாலென்னும் *
ஆழியும்புலம்புமன்றிலுமுறங்கா
தென்றலுந்தீயினிற்கொடிதாம் *

தோழீ! ஓ! வென்னும் துணைமுலையரக்கும்
சொல்லுமினென்செய்கேன்? என்னும் *
ஏழையென்பொன்னுக்கென்னினைந்திருந்தாய் ?
இடவெந்தையெந்தைபிரானே ! (ச)

ஓதிலுமுன்பேரன்றிமற்றோதாள்
உருகும்நின் திருவுருநினைந்து *
காதன்மைபெரிதுகையறவுடையள்
கயல்நெடுங்கண் துயில்மறந்தாள் *
பேதையேன்பேதைபிள்ளைமைபெரிது
தெள்ளியள்வள்ளிநுண்மருங்குல் *
ஏதலர்முன்னாவென்னினைந்திருந்தாய் ?
இடவெந்தையெந்தைபிரானே ! (ரு)

தன்குடிக்கேதும்தக்கவாநினையாள்,
தடங்கடல்நுடங்கெயிலிலங்கை *
வன்குடிமடங்கவாளமர்தொலைத்த
வார்த்தைகேட்டின்புறும்மயங்கும் *
மின்கொடிமருங்குல்சுருங்கமேல்நெருங்கி
மென்முலைபொன்பயந்திருந்த *
என்கொடியிவளுக்கென்னினைந்திருந்தாய் ?
இடவெந்தையெந்தைபிரானே ! (சா)

உளங்கனிந்திருக்குமுன்னையேபிதற்றும்
உனக்கன்றியெனக்கன்பொன்றிலளால் *
வளங்கனிபொழில்சூழ்மாலிருஞ்சோலை
மாயனே! என்றுவாய்வெருவும் *
களங்கனிமுறுவற்காரிகை பெரிது
கவலையோடவலஞ்சேர்ந்திருந்த *
இளங்கனியிவளுக்கென்னினைந்திருந்தாய் ?
இடவெந்தையெந்தைபிரானே ! (எ)

அலங்கெழுதடக்கையாயன்வாயாம்பற்கு
அழியுமாலென்னுள்ளமென்னும் *
புலங்கெழுபொருநீர்ப்புட்குழிபாடும்
போதுமோநீர்மலைக்கென்னும் *

குலங்கெழுகொல்லிகோமளவல்லி
கொடியிடைநெடுமழைக்கண்ணி *
இலங்கெழில்தோளிக்கென்னினைந்திருந்தாய் ?
இடவெந்தையெந்தைபிரானே ! (௮)

பொன்குலாம்பயலைபூத்தனமென்தோள்
பொருகயற்கண்துயில்மறந்தாள் *
அன்பினாலுன்மேலாதரம்பெரிது
† இவ்வணங்கினுக்குற்றநோயறியேன் *
மின்குலாமருங்குல்சுருங்கமேல்நெருங்கி
வீங்கியவனமுலையாளுக்கு *
என்கொலாம் ? குறிப்பிலென்னினைந்திருந்தாய் ?
இடவெந்தையெந்தைபிரானே ! (௯)

அன்னமுமீனுமாமையுமரியும்
ஆயவெம்மாயனே ! அருளாய் *
என்னுமின்தொண்டர்க்கின்னருள்புரியும்
இடவெந்தையெந்தைபிரானை *
மன்னுமாமாடமங்கையர்தலைவன்
மானவேற்கலியன்வாயொலிகள் *
பன்னியபனுவல்பாடுவார் நாளும்
பழவினைபற்றறுப்பாரே. (௰)

அடிவரவு:—திவளும் தளம் சாந்தம் ஊழியில் ஒதிலும் தன் உளம் அலம் பொன் அன்னம் திரிபுரம்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௮ - ஆந் திருமொழி - திரிபுரம்.

திருவட்டபுயகரம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (தர்பாரர்ராகம் - ரூபகதாளம்.)

⫰⫰ திரிபுரமூன்றெரித்தானும் மற்றைமலர்மிசைமேலயனும்வியப்ப *
முரிதிரைமாகடல்போல்முழங்கி மூவுலகும்முறையால்வணங்க *
எரியனகேசரவாளெயிற்றோடு இரணியனாகமிரண்டுகூறா *
அரியுருவாமிவரார்கொல் ? என்ன அட்டபுயகரத்தேனென்றாரே. (௧)

† 'என்னணங்கினுக்கு' என்றும் பாடம்.

வெந்திறல்வீரரில்வீரரொப்பார் வேதமுறைத்திமையோர்வணங்கும் *
செந்தமிழ்பாடுவார்தாம்வணங்கும் தேவரிவர்கொல்?தெரிக்கமாட்டேன்*
வந்துகுறளுருவாய்நிமிர்ந்து மாவலிவேள்வியில்மண்ணளந்த *
அந்தணர்போன்றிவரார்கொல் ? என்ன அட்டபுயகரத்தேனென்றாரே.

செம்பொனிலங்குவலங்கைவாளி திண்சிலைதண்டொடுசங்கமொள்வாள்*
உம்பரிருசுடராழியோடு கேடகமொண்மலர்பற்றியெற்றே ! *
வெம்புசினத்தடல்வேழம்வீழ வெண்மருப்பொன்றுபறித்து*இருண்ட
அம்புதம்போன்றிவரார்கொல் ? என்ன அட்டபுயகரத்தேனென்றாரே.

மஞ்சுயர்மாமணிக்குன்றமேந்தி மாமழைகாத்தொருமாயவானை,அஞ்ச*
அதன்மருப் † பன்றுவாங்கும் ஆயர்கொல்? மாயமறியமாட்டேன் *
வெஞ்சுடராழியுஞ்சங்குமேந்தி வேதமுன்னோதுவர்நீதிவானத்து *
அஞ்சுடர்போன்றிவரார்கொல்? என்ன அட்டபுயகரத்தேனென்றாரே.

கலைகளும்வேதமுநீதிநூலும் கற்பமுஞ்சொற்பொருள்தானும்*மற்றை
நிலைகளும்வானவர்க்கும்பிறர்க்கும் நீர்மையினாலருள்செய்து * நீண்ட
மலைகளும்மாமணியும் மலர்மேல்மங்கையுஞ்சங்கமுந்தங்குகின்ற *
அலைகடல்போன்றிவரார்கொல்? என்ன அட்டபுயகரத்தேனென்றாரே.

எங்ஙனுநாமிவர்வண்ணமெண்ணில் ஏதுமறிகிலம், ஏந்திழையார் *
சங்குமனமும்நிறைவுமெல்லாம் தம்மனவாகப்புகுந்து * தாமும்
பொங்குகருங்கடல்பூவைகாயா போதவிழ்நீலம்புனைந்தமேகம் *
அங்ஙனம்போன்றிவரார்கொல்?என்ன அட்டபுயகரத்தேனென்றாரே.

முழுசிவண்டாடியதண்துழாயின் மொய்ம்மலர்க்கண்ணியும் * மேனியஞ்சாந்
திழுசியகோலமிருந்தவாறும் எங்ஙனஞ்சொல்லுகேன் ? ஓவிநல்லார் *
எழுதியதாமரையன்னகண்ணும் ஏந்தெழிலாகமும்தோளும்வாயும் *
அழகியதாமிவரார்கொல் ? என்ன அட்டபுயகரத்தேனென்றாரே. (எ)

மேவியெப்பாலும்விண்ணோர்வணங்க வேதமுரைப்பர்முந்நீர்மடந்தை
தேவி*அப்பாலதிர்சங்கமிப்பால்சக்கரம் மற்றிவர்வண்ணமெண்ணில்*
காவியொப்பார்கடலேயுமொப்பார் கண்ணும்வடிவும்நெடியராய்*என்
ஆவியொப்பாரிவரார்கொல் ? என்ன அட்டபுயகரத்தேனென்றாரே. ()

தஞ்சமிவர்க்கென்வளையுமில்லா நெஞ்சமுந்தம்மதேசிந்தித்தேற்கு *
வஞ்சிமருங்குல்நெருங்கநோக்கி வாய்திறந்தொன்றுபணித்ததுண்டு *
நஞ்சமுடைத்திவர்நோக்கும்நோக்கம் நானிவர்தம்மையறியமாட்டேன் *
அஞ்சுவன்மற்றிவரார்கொல் ? என்ன அட்டபுயகரத்தேனென்றாரே.()

† 'ஒன்று' என்பதும் பாடம்.

↓↓ மன்னவன்தொண்டையர்கோன்வணங்கும் நீள்முடிமாலைவயிரமேகன் *
தன்வலிதன்புகழ்சூழ்ந்தகச்சி அட்டபுயகரத்தாதிதன்னை *
கன்னிநன்மாமதிள்மங்கைவேந்தன் காமருசீர்க்கலிகன்றி * குன்றா
இன்னிசையாற்சொன்னசெஞ்சொல்மாலை ஏத்தவல்லார்க்கிடம்வைகுந்தமே.

அடிவரவு:—திரிபுரம் வெந்திறல் செம்பொன் மஞ்சு கலைகளும் எங்ஙனும் முழுசி மேவி தஞ்சம் மன்னவன் சொல்லு.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

கூ - ஆந் திருமொழி - சொல்லு.

திருப்பரமேச்சுரவிண்ணகரம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (யமுநாகல்யாணிராகம்-ரூபகதாளம்.)

↓↓ சொல்லுவன்சொற்பொருள்தானவையாய்ச்
சுவையூறொலிநாற்றமுந்தோற்றமுமாய் *
நல்லரன் † நான்முகன்நாரணனுக்கிடந்தான்
தடஞ்சூழ்ந்தழகாயகச்சி *
பல்லவன்வில்லவனென்றுலகில்
பலராய்ப்பலவேந்தர்வணங்குகழற்
பல்லவன் * மல்லையர்கோன்பணிந்த
பரமேச்சுரவிண்ணகரமதுவே. (க)

கார்மன்னுநீள்விசும்பும் கடலும்
சுடரும்நிலனும்மலையும் * தன்னுந்தித்
தார்மன்னுதாமரைக்கண்ணனிடம்
தடமாமதிள்சூழ்ந்தழகாயகச்சி *
தேர்மன்னுதென்னவனைமுனையிற்செருவில்
திறல்வாட்டியதிண்சிலையோன் *
பார்மன்னுபல்லவர்கோன்பணிந்த
பரமேச்சுரவிண்ணகரமதுவே. (உ)

உரந்தருமெல்லணைப்பள்ளிகொண்டான்
ஒருகால்முன்னம்மாவுருவாய்க்கடலுள் *
வரந்தருமாமணிவண்ணனிடம்
மணிமாடங்கள்சூழ்ந்தழகாயகச்சி *

† 'நாரணன்நான்முகனுக்கு' என்றும் பாடம்.

நிரந்தவர்மண்ணையிற்புண் ணுகர்வேல்
நெடுவாயி லுகச்செருவில்முனநாள் *
பரந்தவன்பல்லவர்கோன்பணிந்த
பரமேச்சுரவிண்ணகரமதுவே. (ரு)

அண்டமுமெண்டிசையும்நில னும்
அலைநீரொடுவானெரிகால்முதலா
உண்டவன் * எந்தைபிரானதிடம்
ஒளிமாடங்கள்சூழ்ந்தழகாயகச்சி *
விண்டவரிண்டைக்குழாமுடனே
விரைந்தாரிரியச்செருவில்முனிந்து *
பண்டொருகால்வளைத்தான்பணிந்த
பரமேச்சுரவிண்ணகரமதுவே. (சு)

தூம்புடைத்திண்கைவன்தாள்களிற்றின்
துயர்தீர்த்து, அரவம்வெருவ * முனநாள்
பூம்புனற்பொய்கைபுக்கானவனுக்கிடந்தான்
தடஞ்சூழ்ந்தழகாயகச்சி *
தேம்பொழிற்குன்றெயில்தென்னவனைத்
திசைப்பச்செருமேல்வியந்தன்று†சென்ற *
பாம்புடைப்பல்லவர்கோன்பணிந்த
பரமேச்சுரவிண்ணகரமதுவே. (எ)

திண்படைக்கோளரியின்னுருவாய்த்
திறலோனகலஞ்செருவில்முனநாள் *
புண்படப்போழ்ந்தபிரானதிடம்
பொருமாடங்கள்சூழ்ந்தழகாயகச்சி *
வெண்குடைநீழல்செங்கோல்நடப்ப
விடைவெல்கொடிவேல்படைமுன்னுயர்த்த *
பண்புடைப்பல்லவர்கோன்பணிந்த
பரமேச்சுரவிண்ணகரமதுவே. (அ)

இலகியநீண்முடிமாவலிதன்பெருவேள்வியில்
மாணுருவாய், முனநாள் *
சலமொடுமாநிலங்கொண்டவனுக்கிடந்தான்
தடஞ்சூழ்ந்தழகாயகச்சி *

† 'திசைபப' எனவும் ஓதுவர்.

உலகுடைமன்னவன்தென்னவனைக்
கன்னிமாமதிள்சூழ்கருவூர்வெருவ *
பலபடைசாயவென்றான்பணிந்த
பரமேச்சுரவிண்ணகரமதுவே. (எ)

குடைத்திறல்மன்னவனாய்ஒருகால்
குரங்கைப்படையா, * மலையாற்கடலை
யடைத்தவனெந்தைபிரானதிடம்
மணிமாடங்கள்சூழ்ந்தழகாயகச்சி *
விடைத்திறல்வில்லவன்நென்மெலியில்
வெருவச்செருவேல்வலங்கைப்பிடித்த *
படைத்திறற்பல்லவர்கோன்பணிந்த
பரமேச்சுரவிண்ணகரமதுவே. (அ)

பிறையுடைவாணுதற்பின்னைதிறத்து முன்னே
யொருகாற்செருவில்உருமின் *
மறையுடைமால்விடையேழடர்த்தாற்குஇடந்தான்
தடஞ்சூழ்ந்தழகாயகச்சி *
கறையுடைவாள்மறமன்னர்கெடக்
கடல்போல்முழங்கும்குரற்கடுவாய் *
பறையுடைப்பல்லவர்கோன்பணிந்த
பரமேச்சுரவிண்ணகரமதுவே. (௯)

↓↓ பார்மன்னுதொல்புகழ்ப்பல்லவர்கோன்பணிந்த
பரமேச்சுரவிண்ணகர்மேல் *
காமன்னுநீள்வயல்மங்கையர்தந்தலைவன
கலிகன்றிகுன்றாதுரைத்த *
சீர்மன்னுசெந்தமிழ்மாலைவல்லார்
திருமாமகள்தன்னருளால் * உலகில்
தேர்மன்னராய்ஒலிமாகடல்சூழ்
செழுநீருலகாண்டுதிகழ்வர்களே. (௧0)

அடிவரவு:—சொல்லு கார் உரம் அண்டமும் தாம்பு திண் இலகிய குடை பிறை பார மஞ்சாடு.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௧௦ - ஆந் திருமொழி - மஞ்சாடு.

திருக்கோவலூர்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (ஆபிராகம் - அதிதாளம்.)

மஞ்சாடுவரையேழுங்கடல்களேழும்
வானகமும்மண்ணகமும்மற்றுமெல்லாம் *
எஞ்சாமல்வயிற்றடக்கியாலின்மேல் ஓரிளந்தளிரிற்
கண்வளர்ந்தவீசன்தன்னை *
துஞ்சாநீர்வளஞ்சுரக்கும்பெண்ணைத்தென்பால்
தூயநான்மறையாளர்சோமுச்செய்ய *
செஞ்சாலிவிளைவயலுள்திகழ்ந்துதோன்றும்
திருக்கோவலூரதனுள்கண்டேன்நானே. (க)

கொந்தலர்ந்தநறுந்துழாய்சாந்தம்தூபம்
தீபங்கொண்டமரர்தொழப்பணங்கொள்பாம்பில் *
சந்தணிமென்முலைமலராள்தரணிமங்கை
தாமிருவரடிவருடுந்தன்மையானை *
வந்தனைசெய்துஇசையேழாறங்கம் ஐந்து
வளர்வேள்விநான்மறைகள்மூன்றுதீயும் *
சிந்தனைசெய்திருபொழுதுமொன்றும் செல்வத்
திருக்கோவலூரதனுள்கண்டேன்நானே. (உ)

கொழுந்தலரும்மலர்ச்சோலைக்குழாங்கொள்பொய்கைக்
கோள்முதலைவாளெயிற்றுக்கொண்டற்கெள்கி *
அழுந்தியமாகளிற்றினுக்கன்றுஆழியேந்தி
அந்தரம்மேவரத்தோன்றியருள்செய்தானை *
எழுந்தமலர்க்கருநீலமிருந்தில்காட்ட
இரும்புன்னைமுத்தரும்பிச்செம்பொன்காட்ட *
செழுந்தடநீர்க்கமலந்தீவிகைபோற்காட்டும்
திருக்கோவலூரதனுள்கண்டேன்நானே. (௩)

தாங்கரும்போர்மாலிபடப்பறவையூர்ந்து
தராதலத்தோர்குறைமுடித்ததன்மையானை *
ஆங்கரும்பிக்கண்ணீர்சோர்ந்தன்புகூரும்
அடியவர்கட்காரமுதமானான்தன்னை *

கோங்கரும்புசுரபுன்னைகுரவார்சோலைக்
குழாவரிவண்டிசைபாடும்பாடல்கேட்டு *
தீங்கரும்புகண்வளருங்கழனிசூழ்ந்த
திருக்கோவலூரதனுள்கண்டேன்நானே. (௪)

கறைவளர்வேற்கரன்முதலாக்கவந்தன்வாலி
கணையொன்றினால்மடியஇலங்கைதன்னுள் *
பிறையெயிற்றுவாளரக்கர்சேனையெல்லாம்
பெருந்தகையோடுடன்துணித்தபெம்மான்தன்னை *
மறைவளரப்புகழ்வளரமாடந்தோறும்
மண்டபமொண்டொளியனைத்தும்வாரமோத *
சிறையணைந்தபொழிலணைந்ததென்றல்வீசும்
திருக்கோவலூரதனுள்கண்டேன்நானே. (௫)

உறியார்ந்தநறுவெண்ணெயொளியாற்சென்றுஅங்கு
உண்டானைக்கண்டாய்ச்சியுரலோடார்க்க *
தறியார்ந்தகருங்களிறேபோலநின்று
தடங்கண்கள்பனிமல்குந்தன்மையானை *
வெறியார்ந்தமலர்மகள்நாமங்கையோடு
வியன்கலையெண்தோளினாள்விளங்கு * செல்வச்
செறியார்ந்தமணிமாடந்திகழ்ந்துதோன்றும்
திருக்கோவலூரதனுள்கண்டேன்நானே. (௬)

இருங்கைம்மாகரிமுனிந்துபரியைக்கீறி
இனவிடைகளேழடர்த்துமருதஞ்சாய்த்து *
வருஞ்சகடமிறவுதைத்துமல்லையட்டு
வஞ்சஞ்செய்கஞ்சனுக்குநஞ்சானானை *
கருங்கமுகுபசும்பாளைவெண்முத்தீன்று
காயெல்லாம்மரகதமாய்ப்பவளங்காட்ட *
செருந்திமிகமொட்டலர்த்துந்தேன்கொள்சோலைத்
திருக்கோவலூரதனுள்கண்டேன்நானே. (௭)

பாரேறுபெரும்பாரந்தீரப் பண்டு
பாரதத்துத்தூதியங்கி * பார்த்தன்செல்வத்
தேரேறுசாரதியாயெதிர்ந்தார்சேனை
செருக்களத்துத்திறலழியச்செற்றான்தன்னை *

போரேற்றொன்றுடையானும் அளகைக்கோனும்
புரந்தரனும் நான்முகனும் பொருந்தும் ஊர்போல் *
சீரேறு மறையாளர் நிறைந்த செல்வத்
திருக்கோவலூரதனுள் கண்டேன் நானே. (௮)

தூவடிவின் பார்மகள் பூமங்கையோடு
சுடராழி சங்கிருபாற் பொலிந்து தோன்ற *
காவடிவிற் கற்பகமே போல நின்று
கலந்தவர்கட்கு அருள்புரியும் கருத்தினானை *
சேவடி கை திருவாய் கண் சிவந்த ஆடை
செம்பொன்செய் திருவுருவமானான் தன்னை *
தீவடிவிற் சிவனயனே போல்வார் மன்னு
திருக்கோவலூரதனுள் கண்டேன் நானே. (௯)

↓↓ வாரணங்கொள் இடர்கடிந்த மாலை நீல
மரதகத்தை மழைமுகிலே போல்வான் தன்னை *
சீரணங்கு மறையாளர் நிறைந்த செல்வத்
திருக்கோவலூரதனுள் கண்டேனென்று *
வாரணங்கு முலைமடவார் மங்கைவேந்தன்
வாட்கலியன் ஒலியைந்துமைந்தும் வல்லார் *
காரணங்களாலுலகங் கலந்தங்கேத்தக்
கரந்தெங்கும் பரந்தானைக் காண்பர்தாமே. (௧௰)

அடிவரவு:—மஞ்சாடு கொந்து கொழுந்து தாங்கு கறை உறி இருங்கை பார் தூவடிவில் வாரணம் இருந்தண்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

மூன்றாம்பத்து.

௧ - ஆந் திருமொழி - இருந்தண்மாநிலம்.

திருவயிந்திரபுரம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (செஞ்சுருட்டிராகம் - ஆதிதாளம்.)

↓↓ இருந்தண்மாநிலமேனமதாய் வளைமருப்பினில் † கத்தொடுக்கி *
கருந்தண்மாகடற்கண்துயின்றவனிடம் கமலநன்மலர்த்தேறல்
அருந்தி * இன்னிசைமுரன்றெழுமளிகுலம் பொதுளி அம்பொழிலூடே *
செருந்திநாண்மலர்சென்றணைந்து உழிதரு திருவயிந்திரபுரமே. (௧)

† 'அகத்தடக்கி' என்பதும் பாடம்,

மின்னுமாழியங்கையவன் செய்யவளுறைதருதிருமார்பன் *
பன்னுநான்மறைப்பல்பொருளாகிய பரனிடம், வரைச்சாரல் *
பின்னுமாதவிப்பந்தலில் பெடைவரப்பிணியவிழ்கமலத்து *
தென்னவென்றுவண்டின்னிசைமுரல்தரு திருவயிந்திரபுரமே. (உ)

வையமேழுமுண்டு ஆலிலைவைகியமாயவன் * அடியவர்க்கு
மெய்யனாகியதெய்வநாயகனிடம் மெய்தகுவரைச்சாரல் *
மொய்கொள்மாதவிசெண்பகம்முயங்கிய முல்லையங்கொடியாட *
செய்யதாமரைச்செழும்பணைதிகழ்தரு திருவயிந்திரபுரமே. (௩)

மாறுகொண்டுடன்றெதிர்ந்தவல்லவுணன்தன் மார்பகமிருபிளவா *
கூறுகொண்டு அவன்குலமகற்கின்னருள்கொடுத்தவனிடம் *மிடைந்து
சாறுகொண்டமென்கரும்பிளங்கழை தகைவிசும்புறமணிநீழல் *
சேறுகொண்டதண்பழனமதெழில்திகழ் திருவயிந்திரபுரமே. (௪)

ஆங்குமாவலிவேள்வியிலிரந்துசென்று அகலிடமளந்து * ஆயர்
பூங்கொடிக்கினவிடைபொருதவனிடம், பொன்மலர்திகழ் * வேங்கை
கோங்குசெண்பகக்கொம்பினில் குதிகொடுகுரக்கினமிரைத்தோடி *
தேன்கலந்ததண்பலங்கனிநுகர்தரு திருவயிந்திரபுரமே. (ரு)

கூனுலாவியமடந்தைதன் கொடுஞ்சொலின்திறத்துஇளங்கொடியோ
டும் *
கானுலாவியகருமுகில்திருநிறத்தவனிடம், கவினாரும் *
வானுலாவியமதிதவழ்மால்வரை மாமதிள்புடைசூழ *
தேனுலாவியசெழும்பொழில்தழுவிய திருவயிந்திரபுரமே. (சா)

மின்னின்நுண்ணிடைமடக்கொடிகாரணம் விலங்கலின்மிசையிலங்கை
மன்னன் * நீண்முடிபொடிசெய்தமைந்தனதிடம், மணிவரைநீழல்*
அன்னமாமலரவிந்தத்தமளியில் பெடையொடுமினிதமர *
செங்நெலார்கவரிக்குலைவீசு தண்திருவயிந்திரபுரமே. (எ)

விரைகமழ்ந்தமென்கருங்குழல்காரணம் வில்லிறுத்து, † அடல்மழைக்கு*
நிரைகலங்கிடவரைகுடையெடுத்தவன் நிலவியவிடம், தடமார் *
வரைவளந்திகழ்மதகரிமருப்பொடு மலைவளரகிலுந்தி *
திரைகொணர்ந்தணைசெழுநதிவயல்புகு திருவயிந்திரபுரமே. (அ)

வேல்கொள்கைத்தலத்தரசர்வெம்போரினில் விசயனுக்காய், மணித்தேர் *
கோல்கொள்கைத்தலத்தெந்தைபெம்மானிடம் குலவுதண்வரைச்சாரல்*
கால்கொள்கண்கொடிக்கையெழக் கமுகிளம்பாளைகள்கமழ்சாரல் *
சேல்கள்பாய்தருசெழுநதிவயல்புகு திருவயிந்திரபுரமே. (௯)

† 'அடர்மழைக்கு' என்பதும் பாடம்.

↓↓ மூவராகியவொருவனை மூவுலகுண்டுமிழ்ந்தளந்தானை *
தேவர்தானவர்சென்றுசென்றிறைஞ்சத் தண்திருவயிந்திரபுரத்து *
மேவுசோதியை வேல்வலவன்கலிகன்றிவிரித்துரைத்த *
பாவுதண்தமிழ்பத்திவைபாடிடப் பாவங்கள்பயிலாவே. (௧0)

அடிவரவு:—இருந்தண் மின்னும் வையம் மாறு ஆங்கு கூன் மின்னின் விரை வேல் மூவர் ஊன்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

உ - ஆந் திருமொழி - ஊன்வாட.

திருச்சித்திரகூடம். (௧)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (சங்கராபரணராகம் - அடதாளம்.)

↓↓ ஊன்வாடவுண்ணாதுயிர்காவலிட்டு
உடலிற்பிரியாப்புலனைந்துந்நொந்து *
தாம்வாடவாடத்தவஞ்செய்யவேண்டா
தமதாவிமையோருலகாளகிற்பீர்! *
கானாடமஞ்ஞைக்கணமாட மாடே
கயலாடுகானீர்ப்பழனம்புடைபோய் *
தேனாடமாடக்கொடியாடு தில்லைத்
திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. (௧)

காயோடுநீடுகனியுண்டு, வீசு
கடுங்கால்நுகர்ந்து, நெடுங்காலம் * ஐந்து
தீயோடுநின்றுதவஞ்செய்யவேண்டா
திருமார்பனைச்சிந்தையுள்வைத்துமென்பீர்! *
வாயோதுவேதம்மலிகின்றதொல்சீர்
மறையாளர்நாளும்முறையால்வளர்த்த *
தீயோங்கவோங்கப்புகழோங்கு தில்லைத்
திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. (௨)

வெம்புஞ்சினத்துப்புனக்கேழலொன்றாய்
விரிநீர்முதுவெள்ளமுள்புக்கழுந்த *
வம்புண்பொழில்சூழுலகன்றெடுத்தான்
அடிப்போதணைவான்விருப்போடிருப்பீர்! *

பைம்பொன்னுமுத்தும்மணியுங்கொணர்ந்து
படைமன்னவன்பல்லவர்கோன்பணிந்த *
செம்பொன்மணிமாடங்கள்சூழ்ந்த தில்லைத்
திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. (ரு)

அருமாநிலமன்றளப்பான்குறளாய்
அவுணன்பெருவேள்வியிற்சென்றிரந்த *
பெருமான்திருநாமம்பிதற்றி நுந்தம்
பிறவித்துயர்நீங்குதுமென்னகிற்பீர்! *
கருமாகடலுட்கிடந்தானுவந்து
கவைநாவரவினணைப்பள்ளியின்மேல் *
திருமால்திருமங்கையொடாடு தில்லைத்
திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. (சு)

கோமங்கவங்கக்கடல்வையமுய்யக்
குலமன்னரங்கம்மழுவில்துணிய *
தாமங்கமருட்படைதொட்ட வென்றித்
தவமாமுனியைத்தமக்காக்ககிற்பீர்! *
பூமங்கைதங்கிப்புலமங்கைமன்னிப்
புகழ்மங்கையெங்குந்திகழ * புகழ்சேர்
சேமங்கொள்பைம்பூம்பொழில்சூழ்ந்த தில்லைத்
திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. (எ)

நெய்வாயழலம்புதுரந்து முந்நீர்
துணியப்பணிகொண்டுஅணியார்ந்து * இலங்கு
மையார்மணிவண்ணனையெண்ணி நுந்தம்
மனத்தேயிருத்தும்படிவாழவல்லீர்! *
அவ்வாயிளமங்கையர்பேசவுந்தான்
அருமாமறையந்தணர்சிந்தைபுக *
செவ்வாய்க்கிளிநான்மறைபாடு தில்லைத்
திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. (அ)

மௌவற்குழலாய்ச்சிமென்தோள்நயந்து
மகரஞ்சுழலச்சுழல்நீர்பயந்த *
தெய்வத்திருமாமலர்மங்கைதங்கு
திருமார்பனைச்சிந்தையுள்வைத்துமென்பீர்! *

கௌவைக்களிற்றின்மருப்பும் பொருப்பிற்
கமழ்சந்தும்உந்திநிவாவலங்கொள் *
தெய்வப்புனல்சூழ்ந்தழகாய தில்லைத்
திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. (௭)

மாவாயினங்கம்மதியா துகீறி
மழைமாமுதுகுன்றெடுத்து * ஆயர்தங்கள்
கோவாய்நிரைமேய்த்துஉலகுண்டமாயன்
குரைமாகழல்கூடுங்குறிப்புடையீர்! *
மூவாயிரநான்மறையாளர் நாளும்
முறையால்வணங்க,அணங்காயசோதி *
தேவாதிதேவன்திகழ்கின்ற தில்லைத்
திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. (௮)

செருநீலவேற்கண்மடவார்திறத்துச்
சினத்தோடுநின்றுமனத்தால்வளர்க்கும் *
அருநீலபாவமகலப் புகழ்சேர்
அமரர்க்குமெய்தாதவண்டத்திருப்பீர்! *
பெருநீர்நிவாவுந்தி முத்தங்கொணர்ந்து
எங்கும்வித்தும்வயலுள்கயல்பாய்ந்துகள *
திருநீலம்நின்றுதிகழ்கின்ற தில்லைத்
திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. (௯)

↓↓ சீரார்பொழில்சூழ்ந்துஅழகாய தில்லைத்
திருச்சித்ரகூடத்துறைசெங்கண்மாலுக்கு *
ஆராதவுள்ளத்தவர்கேட்டுஉவப்ப
அலைநீருலகுக்கருளேபுரியும் *
காரார்புயற்கைக்கலிகன்றி குன்றாவொலிமாலை
ஒரொன்பதோடொன்றும்வல்லார் *
பாராருலகமளந்தானடிக்கீழ்ப்
பலகாலம்நிற்கும்படிவாழ்வர்தாமே. (௰)

அடிவரவு:—ஊன் காயோடு வெம்பும் அருமா கோமங்க நெய் மௌவல் மாவாயின் செரு சீரார் வாட.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௩ - ஆந் திருமொழி - வாடமருதிடை.

திருச்சித்திரகூடம். (௨)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (மோஹநராகம் - ஆதிதாளம்.)

↓↓ வாடமருதிடைபோகி மல்லரைக்கொன்றொக்கலித்திட்டு *
ஆடல்நன்மாவுடைத்து ஆயராநிரைக்கன்றிடர்தீர்ப்பான் *
கூடியமாமழைகாத்த கூத்தனெனவருகின்றான் *
சேடுயர்பூம்பொழில்தில்லைச் சித்திரகூடத்துள்ளானே. (௧)

பேய்மகள்கொங்கைநஞ்சுண்ட பிள்ளைபரிசிதுவென்றால் *
மாநிலமாமகள் மாதர்கேள்வனிவனென்றும் * வண்டுண்
பூமகள்நாயகனென்றும் † புலங்கெழுகோவியர்பாடி *
தேமலர்தூவவருவான் சித்திரகூடத்துள்ளானே. (௨)

பண்டிவன்வெண்ணெயுண்டானென்று ஆய்ச்சியர்கூடி ‡ யிழிப்ப *
எண்டிசையோரும்வணங்க இணைமருதூடுநடந்திட்டு *
அண்டரும்வானத்தவரும் ஆயிரநாமங்களோடு *
திண்திறல்பாடவருவான் சித்திரகூடத்துள்ளானே. (௩)

வளைக்கைநெடுங்கண்மடவார் ஆய்ச்சியரஞ்சியழைப்ப *
தளைத்தவிழ்தாமரைப்பொய்கைத் தண்தடம்புக்குஅண்டர்காண *
முளைத்தவெயிற்றழல்நாகத்து உச்சியில்நின்று அதுவாட *
திளைத்தமர்செய்துவருவான் சித்திரகூடத்துள்ளானே. (௪)

பருவக்கருமுகிலொத்து முத்துடைமாகடலொத்து *
அருவித்திரள்திகழ்கின்ற ஆயிரம்பொன்மலையொத்து *
உருவக்கருங்குழலாய்ச்சிதிறத்து இனமால்விடைசெற்று *
தெருவில்திளைத்துவருவான் சித்திரகூடத்துள்ளானே. (௫)

↓↓ எய்யச்சிதைந்ததிலங்கைமலங்க வருமழைகாப்பான் *
உய்யப்பருவரைதாங்கி ஆநிரைகாத்தானென்றேத்தி *
$ வையத் § தெவரும்வணங்க அணங்கெழுமாமலைபோலே *
தெய்வப்புள்ளேறிவருவான் சித்திரகூடத்துள்ளானே. (௬)

ஆவர்இவைசெய்தறிவார்? அஞ்சனமாமலைபோலே *
மேவுசினத்தடல்வேழம் வீழமுனிந்து * அழகாய
காவிமலர்நெடுங்கண்ணார் கைதொழவீதிவருவான் *
தேவர்வணங்குதண்தில்லைச் சித்திரகூடத்துள்ளானே. (௭)

---

† 'பொலன்கெழு' என்றும்பாடம். ‡ 'அழைப்ப'என்றுசிலர். $ 'வையத் தவரும்' என்பதும்சிலர்பாடம். § 'தேவரும்'என்பது அரும்பதத்துக்குப்பாடம்.

பொங்கியமரிலொருகால் பொன்பெயரோனைவெருவ *
அங்கவனாகமளைந்திட்டு ஆயிரந்தோளெழுந்தாட *
பைங்கணிரண்டெரிகான்ற நீண்டவெயிற்றொடுபேழ்வாய் *
சிங்கவுருவின்வருவான் சித்திரகூடத்துள்ளானே. (அ)

கருமுகில்போல்வதோர்மேனி கையனவாழியுஞ்சங்கும் *
பெருவிறல்வானவர்சூழ ஏழுலகுந்தொழுதேத்த *
ஒருமகளாயர்மடந்தை ஒருத்திநிலமகள் * மற்றைத்
திருமகளோடும்வருவான் சித்திரகூடத்துள்ளானே. (கூ)

↓↓ தேனமர்பூம்பொழில் தில்லைச்சித்திரகூடமமர்ந்த *
வானவர்தங்கள்பிரானை மங்கையர்கோன் † மருவார் *
ஊனமர்வேற்கலிகன்றி ஒண்டமிழொன்பதோடொன்றும் *
தானிவைகற்றுவல்லார்மேல் ‡ சாராதீவினைதானே. (கoo)

அடிவரவு:—வாட பேய் பண்டு வளை பருவம் எய்ய ஆவர் பொங்கி கருமுகில் தேனமர் ஒருகுறள்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ச - ஆந் திருமொழி - ஒருகுறளாய்.

திருக்காழிச்சீராமவிண்ணகரம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (பியாகடைராகம் - ரூபகதாளம்.)

↓↓ ஒருகுறளாயிருநிலம்மூவடிமண்வேண்டி
உலகனைத்துமீரடியாலொடுக்கி * ஒன்றுந்
தருகவெனாமாவலியைச்சிறையில்வைத்த
தாடாளன்தாளணைவீர்! * தக்ககீர்த்தி
அருமறையின்திரள்நான்கும்வேள்வியைந்தும்
அங்கங்களவையாறுமிசைகளேழும் *
தெருவிலமலிவிழாவளமுஞ்சிறக்கும் காழிச்
சீராமவிண்ணகரேசேர்மினீரே. (க)

நான்முகன்நாள் § மிகைத்தருக்கையிருக்குவாய்மை
நலமிகுசீருரோமசனால் $ நவிற்றி * நக்க
னூன்முகமார்தலையோட்டூணொழித்தவெந்தை
ஒளிமலர்ச்சேவடியணைவீர்! * உழுசேயோடச்

† 'மருவார்தம்' என்றும் வழங்குவர். ‡ 'சாரகில்லாவினைதாமே' என்று சில ஸ்ரீகோசங்கள். § 'மிகத்தருக்கை' என்றுசிலர். $'நவிற்று'எனவும் ஓதுவர்.

சூன்முகமார்வளையளைவாயுகுத்தமுத்தைத்
தொல்குருகுசினையென்னச்சூழ்ந்தியங்க * எங்கும்
தேன்முகமார்கமலவயல்சேல்பாய் காழிச்
சீராமவிண்ணகரேசேர்மினீரே. (௨)

வையணைந்தநுதிக்கோட்டுவராகமொன்றாய்
மண்ணெல்லாமிடந்தெடுத்துமதங்கள்செய்து *
நெய்யணைந்ததிகிரியினால்வாணன்திண்தோள்
நேர்ந்தவன்தாளணைகிற்பீர்! * நெய்தலோடு
மையணைந்தகுவளைகள்தங்கண்களென்றும்
மலர்க்குமுதம்வாயென்றும்கடைசிமார்கள்
செய்யணைந்துகளைகளையாதேறும் காழிச்
சீராமவிண்ணகரேசேர்மினீரே. (௩)

பஞ்சியமெல்லடிப்பின்னைதிறத்து முன்னாள்
பாய்விடைகளேழடர்த்து, பொன்னன்பைம்பூண் *
நெஞ்சிடந்துகுருதியுகவுகிர்வேலாண்ட
நின்மலன்தாளணைகிற்பீர்! * நீலமாலைத்
தஞ்சுடையவிருள்தழைப்பத் தரளமாங்கே
தண்மதியின்நிலாக்காட்ட, பவளந்தன்னால் *
செஞ்சுடர்வெயில்விரிக்குமழகார் காழிச்
சீராமவிண்ணகரேசேர்மினீரே. (௪)

தெவ்வாயமறமன்னர்குருதிகொண்டு
திருக்குலத்திலிறந்தோர்க்குத்திருத்திசெய்து *
வெவ்வாயமாகீண்டுவேழமட்ட
விண்ணவர்கோன்தாளணைவீர்! * விகிர்தமாதர்
அவ்வாயவாள்நெடுங்கண்குவளைகாட்ட
அரவிந்தம்முகங்காட்ட, அருகேயாம்பல் *
செவ்வாயின்திரள்காட்டும்வயல்சூழ் காழிச்
சீராமவிண்ணகரேசேர்மினீரே. (௫)

பைங்கண்விறற்செம்முகத்துவாலிமாளப்
படர்வனத்துக்கவந்தனொடும், படையார்திண்கை *
வெங்கண்விறல்விராதனுகவிற்குனித்த
விண்ணவர்கோன்தாளணைவீர்! * வெற்புப்போலும்

துங்கமுகமாளிகைமேலாயங்கூறும்
துடியிடையார்முகக்கமலச்சோதிதன்னால் *
திங்கள்முகம்பனிபடைக்குமழகார் காழிச்
சீராமவிண்ணகரேசேர்மினீரே. (௬)

பொருவில்வலம்புரியரக்கன்முடிகள்பத்தும்
புற்றுமறிந்தனபோலப்புவிமேற்சிந்த *
செருவில்வலம்புரிசிலைக்கைமலைத்தோள்வேந்தன்
திருவடிசேர்ந்துய்கிற்பீர்! * † திரைநீர்த்தெள்கி
மருவிவலம்புரிகைதைக்கழியூடாடி
வயல்நண்ணிமழைதருநீர்தவழ்கால்மன்னி *
தெருவில்வலம்புரிதரளமீனும் காழிச்
சீராமவிண்ணகரேசேர்மினீரே. (௭)

பட்டரவேரகலல்குல்பவளச்செவ்வாய்
பணைநெடுந்தோள்பிணைநெடுங்கண்பாலாமின்சொல் *
மட்டவிழுங்குழலிக்காவானோர்காவில்
மரங்கொணர்ந்தானடியணைவீர்! * அணில்கள்தாவ
நெட்டிலையகருங்கமுகின்செங்காய்வீழ
நீள்பலவின்தாழ்சினையில்நெருங்கு * பீனத்
தெட்டபழஞ்சிதைந்துமதுச்சொரியும் காழிச்
சீராமவிண்ணகரேசேர்மினீரே. (௮)

பிறைதங்குசடையானைவலத்தேவைத்துப்
பிரமனைத்தன்னுந்தியிலேதோற்றுவித்து *
கறைதங்குவேல்தடங்கண்திருவை மார்பிற்
கலந்தவன்தாளணைகிற்பீர்! * கழுநீர்கூடித்
துறைதங்குகமலத்துத்துயின்று கைதைத்
தோடாரும்பொதிசோற்றுச்சுண்ணம்நண்ணி *
சிறைவண்டுகளிபாடும்வயல்சூழ் காழிச்
சீராமவிண்ணகரேசேர்மினீரே. (௯)

செங்கமலத்தயனனையமறையோர் காழிச்
சீராம ‡ விண்ணகரென்செங்கண்மாலை *
அங்கமலத்தடவயல்சூழாலிநாடன்
அருள்மாரியரட்டமுக்கியடையார்சீயம் *

---

† 'திரைநீர்த்தெள்கி' என்றும் பாடம் உண்டு.

‡ 'விண்ணகரின்' என்பதும் பாடம்.

கொங்குமலர்க்குழலியர்வேள்மங்கைவேந்தன்
கொற்றவேற்பரகாலன்கலியன்சொன்ன *
சங்கமுகத்தமிழ்மாலைபத்தும்வல்லார்
தடங்கடல்சூழுலகுக்குத்தலைவர்தாமே. (௧0)

அடிவரவு:—ஒருகுறள் நான்முகன் வை பஞ்சிய தெவ்வாய பைங்கண் பொருவில் பட்டு பிறை செங்கமலத்து வந்து.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ரு - ஆந் திருமொழி - வந்துனது.

திருவாலி. (௧)

ஆசிரியத்துறை. (ஸாவேரிராகம் - அதிதாளம்.)

வந்துனதடியேன்மனம்புகுந்தாய் புகுந்ததற்பின்வணங்கும் * என்
சிந்தனைக்கினியாய்! திருவே! என்னுருயிரே! *
அந்தளிரணியா ரசோகின்இளந்தளிர்கள்கலந்து * அவையெங்கும்
செந்தழல்புரையும் திருவாலியம்மானே! (௧)

நீலத்தடவரை மாமணிநிகழக்கிடந்ததுபோல் * அரவணை
வேலைத்தலைக்கிடந்தாய்! அடியேன்மனத்திருந்தாய் * [எங்கும்
சோலைத்தலைக்கணமாமயில்நடமாட மழைமுகில்போன்றெழுந்து *
ஆலைப்புகைகமழும் அணியாலியம்மானே! (௨)

நென்னல்போய்வருமென்றென்றெண்ணியிராமை என்மனத்தேபுகுந்
† இம்மைக்கென்றிருந்தேன் எறிநீர்வளஞ்செறுவில் * [தது *
செந்நெற்கூழைவரம்பொரீஇ அரிவார்முகத் ‡ தெழு வாளைபோய் * கரும்பு
அந்நற்காடணையும் அணியாலியம்மானே! (௩)

மின்னின்மன்னுநுடங்கிடை மடவார்தம்சிந்தைமறந்துவந்து * நின்
மன்னுசேவடிக்கே மறவாமைவைத்தாயால் *
புன்னைமன்னுசெருந்தி வண்பொழில்வாயகன்பணைகள்கலந்து *எங்கும்
அன்னம்மன்னும்வயல் அணியாலியம்மானே! (௪)

நீடுபன்மலர்மாலையிட்டு நின்னிணையடிதொழுதேத்தும் * என்மனம்
வாடநீநினையேல் மரமெய்தமாமுனிவா! *
பாடலின்னொலிசங்கினோசைபரந்து பல்பணையால்மலிந்து * எங்கும்
ஆடலோசையறு அணியாலியம்மானே! (ரு)

† 'இன்மைக்கு' என்பதும் பாடம். ‡ 'எழ' என்பதும் பாடம்.

கந்தமாமலரெட்டுமிட்டு நின்காமர்சேவடிகைதொழுதெழும் *
புந்தியேன்மனத்தே புகுந்தாயைப்போகலொட்டேன் *
சந்திவேள்விசடங்குநான்மறை ஓதியோதுவித்துஆதியாய்வரும் *
அந்தணாளரறா அணியாலியம்மானே! (சு)

உலவுதிரைக்கடற்பள்ளிகொண்டுவந்து உன்னடியேன்மனம்புகுந்த *
புலவ! புண்ணியனே! புகுந்தாயைப்போகலொட்டேன் * [அப்
நிலவுமலர்ப்புன்னைநாழல்நீழல் தண்தாமரைமலரின்மிசை * மலி
அலவன்கண்படுக்கும் அணியாலியம்மானே! (எ)

சங்குதங்குதடங்கடல் கடல்மல்லையுள்கிடந்தாய் * அருள்புரிந்து
இங்கென்னுள்புகுந்தாய்! இனிப்போயினாலறையோ! *
கொங்குசெண்பகமல்லிகைமலர்புல்கி இன்னிளவண்டுபோய் * இளந்
தெங்கின்தாதளையும் திருவாலியம்மானே! (அ)

ஓதியாயிரநாமமும்பணிந்தேத்தி நின்னடைந்தேற்கு * ஒருபொருள்
வேதியா! அரையா! உரையாயொருமாற்றமெந்தாய்! *
நீதியாகியவேதமாமுனியாளர் தோற்றமுரைத்து * மற்றவர்க்
காதியாயிருந்தாய் அணியாலியம்மானே! (கூ)

↓↓ புல்லிவண்டறையும்பொழில்புடைசூழ் தென்னாலியிருந்தமாயனை *
கல்லின்மன்னுதிண்தோள் கலியனொலிசெய்த *
நல்லவின்னிசைமாலை நாலுமோரைந்துமொன்றும்நவின்று * தாமுடன்
வல்லராயுரைப்பார்க்கு இடமாகும்வானுலகே. (கூo)

அடிவரவு:—வந்து நீல நென்னல் மின்னின் நீடு கந்தம் உலவு சங்கு ஓதி புல்லி தூவிரிய.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

சு - ஆந் திருமொழி - தூவிரிய

திருவாலி. (உ)

[தலைவனைப் பிரிந்த தலைவி இரங்கிக்கூறிய பாசுரம்.]

தரவுகொச்சகக்கலிப்பா. (நாதநாமக்ரியைராகம் - ரூபகதாளம்.)

↓↓ தூவிரியமலருழக்கித் துணையோடும்பிரியாதே *
பூவிரியமதுநுகரும் பொறிவரியசிறுவண்டே! *
தீவிரியமறைவளர்க்கும் புகழாளர்திருவாலி *
ஏவரிவெஞ்சிலையானுக்கு என்னிலைமையுரையாயே. (க)

பிணியவிழுநறுநீலமலர்கிழியப் பெடையோடும் *
அணிமலர்மேல்மதுநுகரும் அறுகாலசிறுவண்டே! *
மணிகெழுநீர்மருங்கலரும் வயலாலிமணவாளன் *
பணியறியேன், நீசென்று என்பயலைநோயுரையாயே. (௨)

நீர்வானம்மண்ணெரிகாலாய் நின்றநெடுமால் * தன்
தாராயநறுந்துளவம் பெறுந்தகையேற்கருளானே! *
சீராரும்வளர்பொழில்சூழ் திருவாலிவயல்வாழும் *
கூர்வாயசிறுகுருகே! குறிப்பறிந்துகூறாயே. (௩)

தானாகநினையானேல் தன்னினைந்துநைவேற்கு * ஓர்
மீனாயகொடிநெடுவேள் வலிசெய்யமெலிவேனோ? *
தேன்வாயவரிவண்டே! திருவாலிநகராளும் *
ஆனாயற்கென்னுறுநோய் அறியச்சென்றுரையாயே. (௪)

வாளாயகண்பனிப்ப மென்முலைகள்பொன்னரும்ப *
நாளும்நின்னினைந்துநைவேற்கு * ஓ! மண்ணளந்த
தாளாளா! தண்குடந்தைநகராளா! * வரையெடுத்த
தோளாளா! என்தனக்கோர் துணையாளனாகாயே! (௫)

தாராயதண்துளவ வண்டுழுதவரைமார்பன் *
போரானைக்கொம்பொசித்த புட்பாகனென்னம்மான் *
தேராரும்நெடுவீதித் திருவாலிநகராளும் *
காராயன், என்னுடைய கனவளையுங்கவர்வானோ! (௬)

கொண்டரவத்திரையுலவு குரைகடல்மேல், குலவரைபோல் *
பண்டரவினணைக்கிடந்து பாரளந்தபண்பாளா! *
வண்டமரும்வளர்பொழில்சூழ் வயலாலிமைந்தா! * என்
கண்துயில்நீகொண்டாய்க்கு என்கனவளையுங்கடவேனோ! (௭)

↓↓ குயிலாலும்வளர்பொழில்சூழ் தண்குடந்தைக்குடமாடீ! *
துயிலாதகண்ணிணையேன் நின்னினைந்துதுயர்வேனோ! *
முயலாலுமிளமதிக்கே வளையிழந்தேற்கு * இதுநடுவே
வயலாலிமணவாளா! கொள்வாயோமணிநிறமே! (௮)

நிலையாளா! நின்வணங்கவேண்டாயேயாகிலும் * என்
முலையாளவொருநாள் உன்னகலத்தாலாளாயே *
சிலையாளா! மரமெய்ததிறலாளா! திருமெய்ய
மலையாளா! * நீயாள வளையாளமாட்டோமே. (௯)

↓↓ மையிலங்குகருங்குவளை மருங்கலரும்வயலாலி *
நெய்யிலங்குசுடராழிப் படையானைநெடுமாலை *
கையிலங்குவேற்கலியன் கண்டுரைத்ததமிழ்மாலை *
ஐயிரண்டுமிவைவல்லார்க்கு அருவினைகளடையாவே. (௧௦)

அடிவரவு:—தூவிரிய பிணி நீர் தான் வாள் தாராய கொண்டு குயில் நிலையாளா மையிலங்கு கள்வன்கொல்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௭ - ஆந் திருமொழி - கள்வன்கொல்.

திருவாலி. (௩)

[உடன்போக்கிற் சென்ற தலைமகளைக்குறித்துத் தாய் இரங்கிக்கூறிய பாசுரம்.]

கலிநிலைத்துறை. (த்வஜாவந்திராகம் - ஆதிதாளம்.)

↓↓ கள்வன்கொல்யானறியேன் கரியானொருகாளைவந்து *
வள்ளிமருங்குலென்தன் மடமானினைப்போதவென்று *
வெள்ளிவளைக்கைபற்றப் பெற்ற † தாயரைவிட்டகன்று *
அள்ளலம்பூங்கழனி அணியாலிபுகுவர்கொலோ ? (௧)

பண்டிவனாயன்நங்காய்! படிறன்புகுந்து * என்மகள்தன்
தொண்டையஞ்செங்கனிவாய் நுகர்ந்தானையுகந்து * அவன்பின்
கெண்டையொண்கண்மிளிரக் கிளிபோல்மிழற்றிநடந்து *
வண்டமர்கானல்மல்கும் வயலாலிபுகுவர்கொலோ ? (௨)

அஞ்சுவன்வெஞ்சொல்நங்காய்! அரக்கர்குலப்பாவைதன்னை *
வெஞ்சினமூக்கரிந்த விறலோன்திறங்கேட்கில் * மெய்யே
பஞ்சியமெல்லடி எம்பணைத்தோளிபரக்கழிந்து *
வஞ்சியந்தண்பணைசூழ் வயலாலிபுகுவர்கொலோ ? (௩)

ஏதவன்தொல்பிறப்பு இளையவன்வளையூதி * மன்னர்
தூதுவனாயவனூர் சொலுவீர்கள்! சொலீரறியேன் *
மாதவன்தன்துணையாநடந்தாள் தடஞ்சூழ்புறவில் *
போதுவண்டாடுசெம்மல் புனலாலிபுகுவர்கொலோ ? (௪)

தாயெனையென்றிரங்காள் தடந்தோளிதனக்கமைந்த *
மாயனை, மாதவனை மதித்தென்னை ‡ யகன்றவிவள் *
வேயனதோள்விசிறிப் பெடையன்னமெனநடந்து *
போயினபூங்கொடியாள் புனலாலிபுகுவர்கொலோ ? (௫)

---

† 'தாயரை யிட்டகன்று' என்றும் பாடம். ‡ 'அகன்றவன்பின்' என்றும்பாடம்.

என்துணையென்றெடுத்தேற்கு இறையேனுமிரங்கிற்றிலள் *
தன்துணையாயவென்தன் தனிமைக்குமிரங்கிற்றிலள் *
வன்துணைவானவர்க்காய் வரஞ்செற்று, அரங்கத்துறையும் *
இன்துணைவனொடும்போய் எழிலாலிபுகுவர்கொலோ? (௬)

அன்னையுமத்தனுமென்று அடியோமுக்கிரங்கிற்றிலள் *
பின்னைதன்காதலன்தன் பெருந்தோள்நலம்பேணினளால் *
மின்னையும்வஞ்சியையும் வென்றிலங்குமிடையாள் நடந்து *
புன்னையுமன்னமுஞ்சூழ் புனலாலிபுகுவர்கொலோ? (௭)

முற்றிலும்பைங்கிளியும் பந்துமூசலும், பேசுகின்ற *
சிற்றில்மென்பூவையும்விட்டகன்ற செழுங்கோதைதன்னைப்
பெற்றிலேன் * முற்றிழையை, பிறப்பிலி பின்னேநடந்து *
மற்றெல்லாம்கைதொழப்போய் வயலாலிபுகுவர்கொலோ? (௮)

காவியங்கண்ணியெண்ணில் கடிமாமலர்ப்பாவையொப்பாள் *
பாவியேன்பெற்றமையால் பணைத்தோளிபரக்கழிந்து *
தூவிசேரன்னமன்னநடையாள் நெடுமாலொடும்போய் *
வாவியந்தண்பணைசூழ் வயலாலிபுகுவர்கொலோ? (௯)

↓↓ தாய்மனம்நின்றிரங்கத் தனியேநெடுமால்துணையா *
போயினபூங்கொடியாள் புனலாலிபுகுவரென்று *
காய்சினவேற்கலியன் ஒலிசெய்தமிழ்மாலைபத்தும் *
மேவியநெஞ்சுடையார் தஞ்சமாவதுவிண்ணுலகே. (௧௦)

அடிவரவு:—கள்வன்கொல் பண்டு அஞ்சுவன் ஏதவன் தாய் என்துணை அன்னையும் முற்றிலும் காவி தாய்மனம் நந்தா.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

அ-ஆந் திருமொழி - நந்தாவிளக்கே.

திருநாங்கூர்த்திருப்பதி - ௧௧.

௧. திருமணிமாடக்கோயில்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (தோடிராகம் - அடதாளம்.)

↓↓ நந்தாவிளக்கே! அளத்தற்கரியாய்!
நரநாரணனே! கருமாமுகில்போல்
எந்தாய்! * எமக்கேயருளாயெனநின்று
இமையோர்பரவுமிடம் * எத்திசையும்

கந்தாரமந்தேனிசைபாட மாடே
களிவண்டுமிழற்றநிழல்துதைந்து *
மந்தாரம்நின்றுமணமல்குநாங்கூர்
மணிமாடக்கோயில்வணங்கென்மனனே ! (௧)

முதலைத்தனிமாமுரண்தீரவன்று
முதுநீர்த்தடத்துச்செங்கண்வேழமுய்ய *
விதலைத்தலைச்சென்றதற்கேயுதவி
வினைதீர்த்தவம்மானிடம் * விண்ணணவும்
பதலைக்கபோதத்தொளிமாடநெற்றிப்
பவளக்கொழுங்காலபைங்காற்புறவம் *
மதலைத்தலைமென்பெடைகூடுநாங்கூர்
மணிமாடக்கோயில்வணங்கென்மனனே ! (௨)

கொலைப்புண்தலைக்குன்றமொன்றுய்ய அன்று
கொடுமாமுதலைக்கிடர்செய்து * கொங்கார்
இலைப்புண்டரீகத்தவளின்பமன்போடு
அணைந்திட்டவம்மானிடம் * ஆளரியால்
அலைப்புண்டயானைமருப்பும்அகிலும்
அணிமுத்தும்வெண்சாமரையோடு * பொன்னி
மலைப்பண்டமண்டத்திரையுந்துநாங்கூர்
மணிமாடக்கோயில்வணங்கென்மனனே ! (௩)

சிறையாருவணப்புள்ளொன்றேறி அன்று
திசைநான்கும்நான்குமிரிய * செருவில்
கறையார்நெடுவேலரக்கர்மடியக்
கடல்சூழிலங்கைகடந்தானிடந்தான் *
முறையால்வளர்கின்றமுத்தீயர்நால்வேதர்
ஐவேள்வியாறங்கரேழினிசையோர் *
மறையோர்வணங்கப்புகழெய்துநாங்கூர்
மணிமாடக்கோயில்வணங்கென்மனனே ! (௪)

இழையாடுகொங்கைத்தலைநஞ்சமுண்டிட்டு
இளங்கன்றுகொண்டுவிளங்காயெறிந்து *
தழைவாடவன்தாட்குருந்தம்மொசித்துத்
தடந்தாமரைப்பொய்கைபுக்கானிடந்தான் *

குழையாடவல்லிக்குலமாட மாடே
குயில்கூவநீடுகொடிமாடமல்கு *
மழையாடுசோலைமயிலாலுநாங்கூர்
மணிமாடக்கோயில்வணங்கென்மனனே! (௫)

பண்ணேர்மொழியாய்ச்சியரஞ்ச வஞ்சப்
பகுவாய்க்கழுதுக்கிரங்காது * அவள்தன்
உண்ணாமுலைமற்றவளாவியோடும்
உடனேசுவைத்தானிடம் * ஓங்குபைந்தாள்
கண்ணார்கரும்பின்கழைதின்றுவைகிக்
கழுநீரில்மூழ்கிச்செழுநீர்த்தடத்து *
மண்ணேந்திளமேதிகள்வைகுநாங்கூர்
மணிமாடக்கோயில்வணங்கென்மனனே! (௬)

தளைக்கட்டவிழ்தாமரைவைகுபொய்கைத்
தடம்புக்கு, அடங்காவிடங்காலரவம் *
இளைக்கத்திளைத்திட்டதனுச்சிதன்மேல்
அடிவைத்தவம்மானிடம் * மாமதியம்
திளைக்கும்கொடிமாளிகைசூழ்தெருவில்
செழுமுத்துவெண்ணெற்கெனச்சென்று * முன்றில்
வளைக்கைநுளைப்பாவையர்மாறுநாங்கூர்
மணிமாடக்கோயில்வணங்கென்மனனே! (௭)

துளையார்கருமென்குழலாய்ச்சியர்தம்
துகில்வாரியும்சிற்றில்சிதைத்தும் * முற்றா
இளையார்விளையாட்டொடுகாதல்வெள்ளம்
விளைவித்தவம்மானிடம் * வேல்நெடுங்கண்
முளைவாளெயிற்றுமடவார்பயிற்று
மொழிகேட்டிருந்துமுதிராதவின்சொல் *
வளைவாயகிள்ளைமறைபாடுநாங்கூர்
மணிமாடக்கோயில்வணங்கென்மனனே! (௮)

விடையோடவென்றாய்ச்சிமென்தோள்நயந்த
விகிர்தா! விளங்குசுடராழியென்னும் *
படையோடுசங்கொன்றுடையாய்! எனநின்று
இமையோர்பரவுமிடம் * பைந்தடத்துப்

பெடையோடுசெங்காலவன்னம்துகைப்பத்
தொகைப்புண்டரீகத்திடைச்செங்கழுநீர் *
மடையோடநின்றுமதுவிம்முநாங்கூர்
மணிமாடக்கோயில்வணங்கென்மனனே! (கூ)

↓↓ வண்டார்பொழில்சூழ்ந்தழகாயநாங்கூர்
மணிமாடக்கோயில்நெடுமாலுக்கு * என்றும்
தொண்டாயதொல்சீர்வயல்மங்கையர்கோன்
கலியனொலிசெய்தமிழ்மாலைவல்லார் *
கண்டார்வணங்கக்களியானைமீதே
கடல்சூழுலகுக்கொருகாவலராய் *
விண்தோய்நெடுவெண்குடைநீழலின்கீழ்
விரிநீருலகாண்டுவிரும்புவரே. (கய)

அடிவாவு:—நந்தா முதலை கொலை சிறை இழை பண் தளை துளை விடை வண்டார் சலம்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

கூ-ஆந் திருமொழி - சலங்கொண்ட.

உ. திருவைகுந்தவிண்ணகரம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (அடாணாராகம் - அடதாளம்.)

↓↓ சலங்கொண்டவிரணியனதகல்மார்வம்கீண்டு
தடங்கடலைக்கடைந்தமுதங்கொண்டுகந்தகாளை *
நலங்கொண்டகருமுகில்போல்திருமேனியம்மான்
நாள்தோறும்மகிழ்ந்தினிதுமருவியுறைகோயில் *
சலங்கொண்டுமலர்சொரியும்மல்லிகையொண்செருந்தி
சண்பகங்கள்மணநாறும்வண்பொழிலினூடே *
வலங்கொண்டுகயலோடிவிளையாடுநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம்வணங்குமடநெஞ்சே! (க)

திண்ணியதோரரியுருவாய்த்திசையனைத்தும்நடுங்கத்
தேவரொடுதானவர்கள்திசைப்ப * இரணியனை
நண்ணியவன்மார்வகலத்துகிர்மடுத்தநாதன்
நாள்தோறும்மகிழ்ந்தினிதுமருவியுறைகோயில் *

எண்ணில்மிகுபெருஞ்செல்வத்தெழில்விளங்குமறையும்
ஏழிசையும்கேள்விகளுமியன்றபெருங்குணத்தோர் *
மண்ணில்மிகுமறையவர்கள்மலிவெய்துநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம்வணங்குமடநெஞ்சே ! (உ)

அண்டமுமிவ்வலைகடலுமவனிகளுமெல்லாம்
அமுதுசெய்ததிருவயிற்றன், அரன்கொண்டுதிரியும் *
முண்டமதுநிறைத்துஅவன்கண்சாபமதுநீக்கும்
முதல்வனவன்மகிழ்ந்தினிதுமருவியுறைகோயில் *
எண்திசையும்பெருஞ்செந்நெலிளந்தெங்குகதலி
இலைக்கொடியொண்குலைக்கமுகோடிசலிவளம்சொரிய *
வண்டுபலவிசைபாடமயிலாலுநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம்வணங்குமடநெஞ்சே ! (ங)

கலையிலங்குமகலல்குலரக்கர்குலக்கொடியைக்
காதொடுமூக்குடனரியக்கதறியவளோடி *
தலையிலங்கைவைத்துமலையிலங்கைபுகச்செய்த
தடந்தோளன்மகிழ்ந்தினிதுமருவியுறைகோயில் *
சிலையிலங்குமணிமாடத்துச்சிமிசைச்சூலம்
செழுங்கொண்டலகடிரியச்சொரிந்தசெழுமுத்தம் *
மலையிலங்குமாளிகைமேல்மலிவெய்துநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம்வணங்குமடநெஞ்சே ! (ச)

மின்னனையநுண்மருங்குல்மெல்லியற்கா இலங்கை
வேந்தன்முடியொருபதும்தோளிருபதும்போயுதிர *
தன்னிகரில்சிலைவளைத்தன்றிலங்கைபொடிசெய்த
தடந்தோளன்மகிழ்ந்தினிதுமருவியுறைகோயில் *
செந்நெலொடுசெங்கமலம்சேல்கயல்கள்வாளை
செங்கழுநீரொடுமிடைந்துகழனிதிகழ்ந்தெங்கும் *
மன்னுபுகழ்வேதியர்கள்மலிவெய்துநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம்வணங்குமடநெஞ்சே ! (ரு)

பெண்மைமிகுவடிவுகொடுவந்தவளைப் பெரிய
பேயினதுவுருவுகொடுமாளவுயிருண்டு *
திண்மைமிகுமருதொடுநற்சகடமிறுத்தருளும்
தேவனவன்மகிழ்ந்தினிதுமருவியுறைகோயில் *

உண்மைமிகுமறையொடுநற்கலைகள்நிறைபொறைகள்
உதவுகொடையென்றிவற்றின்ஒழிவில்லா * பெரிய
வண்மைமிகுமறையவர்கள்மலிவெய்துநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம்வணங்குமடநெஞ்சே ! (௬)

விளங்கனியையிளங்கன்றுகொண்டுதிரவெறிந்து
வேல்நெடுங்கணாய்ச்சியர்கள்வைத்ததயிர்வெண்ணெய் *
உளங்குளிரவமுதுசெய்திவ்வுலகுண்டகாளை
உகந்தினிதுநாள்தோறும்மருவியுறைகோயில் *
இளம்படிநற்கமுகுகுலைத்தெங்குகொடிச்செந்நெல்
ஈன்கரும்புகண்வளரக்கால்தடவும்புனலால் *
வளங்கொண்டபெருஞ்செல்வம்வளருமணிநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம்வணங்குமடநெஞ்சே ! (௭)

ஆறாதசினத்தின்மிகுநரகனுரமழித்த
அடலாழித்தடக்கையன், அலர்மகட்குமரற்கும் *
கூறாகக்கொடுத்தருளும்திருவுடம்பன் இமையோர்
குலமுதல்வன்மகிழ்ந்தினிதுமருவியுறைகோயில் *
மாறாதமலர்க்கமலம்செங்கழுநீர்ததும்பி
மதுவெள்ளமொழுகவயலுழுவர்மடையடைப்ப *
மாறாதபெருஞ்செல்வம்வளருமணிநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம்வணங்குமடநெஞ்சே ! (௮)

வங்கமலிதடங்கடலுள்வானவர்களோடு
மாமுனிவர்பலர்கூடிமாமலர்கள்தூவி *
எங்கள்தனிநாயகனே ! எமக்கருளாயென்னும்
ஈசனவன்மகிழ்ந்தினிதுமருவியுறைகோயில் *
செங்கயலும்வாளைகளும்செந்நெலிடைக்குதிப்பச்
சேலுகளும்செழும்பணைசூழ்வீதிதொறும்மிடைந்து *
மங்குல்மதியகடுரிஞ்சுமணிமாடநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம்வணங்குமடநெஞ்சே ! (௯)

⸸⸸ சங்குமலிதண்டுமுதல்சக்கரமுனேந்தும்
தாமரைக்கண்நெடியபிரான்தானமரும்கோயில் *
வங்கமலிகடலுலகில்மலிவெய்துநாங்கூர்
வைகுந்தவிண்ணகர்மேல், வண்டறையும்பொழில்சூழ் *

மங்கையர்தம்தலைவன், மருவலர்தமுடல்துணிய
வாள்வீசும்பரகாலன்கலிகன்றிசொன்ன *
சங்கமலிதமிழ்மாலைபத்திவைவல்லார்கள்
தரணியொடுவிசும்பாளும்தன்மைபெறுவாரே. (கo)

அடிவரவு:—சலம் திண்ணியது அண்டமும் கலை மின் பெண்மை விளங்கனியை ஆறாத வங்கம் சங்கு திருமடந்தை.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

கo - ஆந் திருமொழி - திருமடந்தை.

ரு. திருவரிமேயவிண்ணகரம்.

பண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (மோஹநராகம - ஜம்பைதாளம்.)

திருமடந்தைமண்மடந்தையிருபாலும்திகழத்
தீவினைகள்போயகலவடியவர்கட்கென்றும்
அருள்நடந்து * இவ்வேழுலகத்தவர்பணிய வானோர்
அமர்ந்தேத்தவிருந்தவிடம் * பெரும்புகழ்வேதியர்வாழ
தருமிடங்கள் மலர்கள்மிகுகைதைகள்செங்கழுநீர்
தாமரைகள்தடங்கடொறுமிடங்கடொறும்திகழ *
அருவிடங்கள்பொழில்தழுவியெழில்திகழுநாங்கூர்
அரிமேயவிண்ணகரம்வணங்குமடநெஞ்சே ! (க)

வென்றிமிகுநரகனுரமதுவழியவிசிறும்
விறலாழித்தடக்கையன், விண்ணவர்கட்கு * அன்று
குன்றுகொடுகுரைகடலைக்கடைந்து அமுதமளிக்கும்
குருமணியென்னாரமுதம்குலவியுறைகோயில் *
என்றுமிகுபெருஞ்செல்வத்தெழில்விளங்குமறையோர்
ஏழிசையும்கேள்விகளுமியன்றபெருங்குணத்தோர் *
அன்றுலகம்படைத்தவனையனையவர்கள்நாங்கூர்
அரிமேயவிண்ணகரம்வணங்குமடநெஞ்சே ! (உ)

உம்பருமிவ்வேழுலகுமேழ்கடலுமெல்லாம்
உண்டபிரான், அண்டர்கள்முன்கண்டுமகிழ்வெய்த *
கும்பமிகுமதயானைமருப்பொசித்துக் கஞ்சன்
குஞ்சிபிடித்தடித்தபிரான்கோயில் * மருங்கெங்கும்

நான்காம்பத்து.

க - ஆந் திருமொழி - போதலர்ந்த.

ச. திருத்தேவனார்தொகை.

கொச்சகக்கலிப்பா. (பைரவிராகம் - ஆதிதாளம்.)

‡‡ போதலர்ந்தபொழிற்சோலைப் புறமெங்கும்பொருதிரைகள் *
தாதுதிரவந்தலைக்கும் தடமண்ணித்தென்கரைமேல் *
மாதவன்தானுறையுமிடம வயல்நாங்கை * வரிவண்டு
தேதெனவென்றிசைபாடும் திருத்தேவனார்தொகையே. (க)

யாவருமாயாவையுமாய் எழிலவேதப்பொருள்களுமாய் *
மூவருமாய்முதலாய மூர்த்தியமர்ந்துறையுமிடம் *
மாவருந்திண்படைமன்னை வென்றிகொள்வார்மன்னுநாங்கை *
தேவருஞ்சென்றிறைஞ்சுபொழில் திருத்தேவனார்தொகையே. (உ)

வானொடும்மண்ணொடும் மற்றுள்ளபலவுயிரும் *
தானாயவெம்பெருமான் தலைவனமர்ந்துறையுமிடம் *
ஆனாதபெருஞ்செல்வத்து அருமறையோர்நாங்கைதன்னுள் *
தேனாரும்மலர்ப்பொழில்சூழ் திருத்தேவனார்தொகையே. (ங)

இந்திரனுமிமையவரும் முனிவர்களும் † எழிலமைந்த *
சந்தமலர்ச்சதுமுகனும் கதிரவனும்சந்திரனும் *
எந்தை ! எமக் ‡ கருளெனநின்று அருளுமிடம், எழில்நாங்கை *
சுந்தரநற்பொழில்புடைசூழ் திருத்தேவனார்தொகையே. (ச)

அண்டமுமிவ்வலைகடலும் அவனிகளுங்குலவரையும *
உண்டபிரானுறையுமிடம், ஒளிமணிசந்தகில்கனகம் *
தெண்திரைகள்வரத்திரட்டும் திகழ்மண்ணித்தென்கரைமேல் *
திண்திறலார்பயில்நாங்கைத திருத்தேவனார்தொகையே. (ரு)

ஞாலமெல்லாமமுதுசெய்து நான்மறையும்தொடராத *
பாலகனாயாலிலையில் பள்ளிகொள்ளும்பரமனிடம் *
சாலிவளம்பெருகிவரும் தடமண்ணித்தென்கரைமேல் *
சேலுகளும்வயல்நாங்கைத் திருத்தேவனார்தொகையே. (சு)

ஓடாதவாளரியின் உருவாகிஇரணியனை *
வாடாதவள்ளுகிரால் பிளந்தவனமாலதிடம் *
ஏடேறுபெருஞ்செல்வத்து எழில்மறையோர்நாங்கைதன்னுள் *
$ சேடேறுபொழில்தழுவு திருத்தேவனார்தொகையே. (எ)

† 'எழிலமர்ந்த' என்பதும் பாடம். ‡ 'அருளென்ன அருளுமிடம்' என்றும் ஓதுவர். $ 'சேடேறுமலர்ப்பொழில்சூழ்' என்றும் வழங்குவர்.

வாராருமிளங்கொங்கை மைதிலியைமணம்புணர்வான் *
காரார்திண்சிலையிறுத்த தனிக்காளைகருதுமிடம் *
ஏராரும்பெருஞ்செல்வத்து எழில்மறையோர்நாங்கைதன்னுள் *
சீராரும்மலர்ப்பொழில்சூழ் திருத்தேவனார்தொகையே. (அ)

கும்பமிகுமதயானை பாகனொடுங்குலைந்துவீழ *
கொம்பதனைப்பறித்தெறிந்த கூத்தனமர்ந்துறையுமிடம் *
வம்பவிழும்செண்பகத்தின் மணங்கமழுநாங்கைதன்னுள் *
செம்பொன்மதிள்பொழில்புடைசூழ் திருத்தேவனார்தொகையே. (கூ)

↓↓ காரார்ந்ததிருமேனிக் கண்ணனமர்ந்துறையுமிடம் *
சீரார்ந்தபொழில்நாங்கைத் திருத்தேவனார்தொகைமேல் *
கூரார்ந்தவேற்கலியன் கூறுதமிழ்பத்தும்வல்லார் *
ஏரார்ந்தவைகுந்தத்து இமையவரோடிருப்பாரே. (க0)

அடிவரவு:—போது யாவரும் வானும் இந்திரனும் அண்டமும் ஞாலம் ஓடாத வாராரும் கும்பம் காரார்ந்த கம்பமா.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

உ - ஆந் திருமொழி - கம்பமா.

ரு. திருவண்புருடோத்தமம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (கலியாணிராகம் - ரூபகதாளம்.)

↓↓ கம்பமாகடலடைத்திலங்கைக்குமன் கதிர்முடியவைபத்தும்
அம்பினாலறுத்து * அரசவன்தம்பிக்கு அளித்தவனுறைகோயில் *
செம்பலாநிரைசெண்பகம்மாதவி சூதகம்வாழைகள்சூழ் *
வம்புலாம்கமுகோங்கியநாங்கூர் வண்புருடோத்தமமே. (க)

பல்லவம்திகழ்பூங்கடம்பேறி அக்காளியன்பணவரங்கில் *
ஒல்லைவந்திறப்பாய்ந்தருநடஞ்செய்த உம்பர்கோனுறைகோயில் *
நல்லவெந்தழல்மூன்றுநால்வேதம் ஐவேள்வியோடாறங்கம் *
வல்லவந்தணர்மல்கியநாங்கூர் வண்புருடோத்தமமே. (உ)

அண்டரானவர்வானவர்கோனுக்கென்று அமைத்தசோறதுவெல்லாம்
உண்டு * கோநிரைமேய்த்தவைகாத்தவன் உகந்தினிதுறைகோயில் *
கொண்டலார்முழவிற்குளிர்வார்பொழில் குலமயில்நடமாட *
வண்டுதானிசைபாடிடுநாங்கூர் வண்புருடோத்தமமே. (ங)

பருங்கையானையின்கொம்பினைப்பறித்து அதன்பாகனைச்சாடிப்புக்கு*
ஒருங்கமல்லரைக்கொன்று பின்கஞ்சனையுதைத்தவனுறைகோயில் *
† கரும்பினூடுயர்சாலிகள்விளைதரு கழனியில்மலிவாவி *
மருங்கெலாம்பொழிலோங்கியநாங்கூர் வண்புருடோத்தமமே. (௪)

சாடுபோய்விழத்தாள்நிமிர்த்து ஈசன்தன்படையொடுங்கிளையோடும்
ஓட * வாணனையாயிரந்தோள்களும் துணித்தவனுறைகோயில் *
ஆடுவான்கொடியகல்விசும்பணவிப்போய்ப் பகலவனொளிமறைக்கும் *
மாடமாளிகைசூழ்தருநாங்கூர் வண்புருடோத்தமமே. (௫)

அங்கையாலடிமூன்றுநீரேற்று அயனலர்கொடுதொழுதேத்த *
கங்கைபோதரக்கால்நிமிர்த்தருளிய கண்ணன்வந்துறைகோயில் *
கொங்கைகோங்கவைகாட்ட வாய்குமுதங்கள்காட்ட * மாபதுமங்கள்
மங்கைமார்முகம்காட்டிடுநாங்கூர் வண்புருடோத்தமமே. (௬)

உளையவொண்திறல்பொன்பெயரோன்தனது உரம்பிளந்து உதிரத்தை
அளையும் * வெஞ்சினத்தரிபரிகீறிய அப்பன்வந்துறைகோயில் *
இளையமங்கையரிணையடிச்சிலம்பினோடெழில்கொள்பந்தடிப்போர்*கை
வளையினின்றொலிமல்கியநாங்கூர் வண்புருடோத்தமமே. (௭)

வாளையார்தடங்கண்ணுமைபங்கன் வன்சாபமற்றதுநீங்க *
மூளையார்சிரத்தையமுன்னளித்த எம்முகில்வண்ணனுறைகோயில் *
பாளைவான்கமுகூடுயர்தெங்கின் வன்பழம்விழவெருவிப்போய் *
வாளைபாய்தடம்சூழ்தருநாங்கூர் வண்புருடோத்தமமே. (௮)

இந்துவார்சடையீசனைப்பயந்த நான்முகனை, தன்னெழிலாரும் *
உந்திமாமலர்மீமிசைப்படைத்தவன் உகந்தினிதுறைகோயில் *
குந்திவாழையின்கொழுங்கனிநுகர்ந்து தன்குருளையைத்தழுவிப்போய்*
மந்திமாம்பணைமேல்வைகுநாங்கூர் வண்புருடோத்தமமே (௯)

‡மண்ணுளார்புகழ்வேதியர்நாங்கூர் வண்புருடோத்தமத்துள் *
அண்ணல்சேவடிக்கீழடைந்துய்ந்தவன் ஆலிமனருள்மாரி *
பண்ணுளார்தரப்பாடியபாடல் இப்பத்தும்வல்லார் * உலகில்
எண்ணிலாதபேரின்பமுற்று இமையவரோடும்கூடுவரே. (௧௦)

அடிவரவு:—கம்பம் பல்லவம் அண்டர் பருங்கை சாடு அங்கையால் உளைய வாளை இந்து மண்ணுளார் பேரணிந்து.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

† 'கரும்பினோடு' என்பது நஞ்சீயர்படியிற் பாடம்.

ந - ஆந் திருமொழி - பேரணிந்து.

க. திருச்செம்பொன்செய்கோயில்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (பந்துவராளிராகம் - அடதாவம்.)

↓↓ பேரணிந்துலகத்தவர்தொழுதேத்தும்
பேரருளாளனெம்பிரானை *
வாரணிமுலையாள்மலர்மகளோடு
மண்மகளுமுடன்நிற்ப *
சீரணிமாடநாங்கைநன்னடுவுள்
செம்பொன்செய்கோயிலினுள்ளே *
காரணிமேகம்நின்றதொப்பானைக்
கண்டுகொண்டுய்ந்தொழிந்தேனே. (க)

பிறப்பொடுமூப்பொன்றில்லவன்தன்னைப்
பேதியாவின்பவெள்ளத்தை *
இறப்பெதிர்காலக்கழிவுமானானை
ஏழிசையின்சுவைதன்னை *
சிறப்புடைமறையோர்நாங்கைநன்னடுவுள்
செம்பொன்செய்கோயிலினுள்ளே *
மறைப்பெரும்பொருளை வானவர்கோனைக்
கண்டுநான்வாழ்ந்தொழிந்தேனே. (உ)

திடவிசும்பெரிநீர்திங்களும்சுடரும்
செழுநிலத்துயிர்களும்மற்றும் *
படர்பொருள்களுமாய்நின்றவன்தன்னை,
பங்கயத்தயனவனனைய *
திடமொழிமறையோர்நாங்கைநன்னடுவுள்
செம்பொன்செய்கோயிலினுள்ளே *
கடல்நிறவண்ணன்தன்னை நானடியேன்
கண்டுகொண்டுய்ந்தொழிந்தேனே. (ங)

வசையறுகுறளாய்மாவலி † வேள்வி
மண்ணளவிட்டவன்தன்னை *
அசைவறுமமரரடியிணைவணங்க
அலைகடல்துயின்றவம்மானை *

† 'வேள்வியில்' என்று சிலர்.

திசைமுகனனையோர்நாங்கைநன்னடுவுள்
செம்பொன்செய்கோயிலினுள்ளே *
உயர்மணிமகுடஞ்சூடிநின்றானைக்
கண்டுகொண்டுய்ந்தொழிந்தேனே. (௪)

தீமனத்தரக்கர்திறலழித்தவனே!
என்று சென்றடைந்தவர்தமக்கு *
தாய்மனத்திரங்கியருளினைக்கொடுக்கும்
தயரதன்மதலையை, சயமே *
தேமலர்ப்பொழில்சூழ்நாங்கைநன்னடுவுள்
செம்பொன்செய்கோயிலினுள்ளே *
காமனைப்பயந்தான்தன்னைநானடியேன்
கண்டுகொண்டுய்ந்தொழிந்தேனே. (௫)

மல்லைமாமுந்நீர்தர்பட மலையால்
அணைசெய்துமகிழ்ந்தவன்தன்னை *
கல்லின்மீதியன்றகடிமதிளிலங்கை
கலங்க ஓர்வாளிதொட்டானை *
செல்வநான்மறையோர்நாங்கைநன்னடுவுள்
செம்பொன்செய்கோயிலினுள்ளே *
அல்லிமாமலராள்தன்னொடுமடியேன்
கண்டுகொண்டல்லல்தீர்ந்தேனே. (௬)

வெஞ்சினக்களிறும்வில்லொடுமல்லும்
வெகுண்டிறுத்தடர்த்தவன்தன்னை *
கஞ்சனைக்காய்ந்தகாளையம்மானைக்
கருமுகில்திருநிறத்தவனை *
செஞ்சொல்நான்மறையோர்நாங்கைநன்னடுவுள்
செம்பொன்செய்கோயிலினுள்ளே *
அஞ்சனக்குன்றம்நின்றதொப்பானைக்
கண்டுகொண்டல்லல்தீர்ந்தேனே. (எ)

அன்றியவாணனாயிரம்தோளும்
துணிய அன்றாழிதொட்டானை *
மின்திகழ்குடுமிவேங்கடமலைமேல்
மேவியவேதநல்விளக்கை *

தென்திசைத்திலதமனையவர்நாங்கைச்
செம்பொன்செய்கோயிலினுள்ளே *
மன்றதுபொலியமகிழ்ந்துநின்றானை
வணங்கிநான்வாழ்ந்தொழிந்தேனே. (அ)

களங்கனிவண்ணா! கண்ணனே! என்தன்
கார்முகிலே! எனநினைந்திட்டு *
உளங்கனிந்திருக்குமடியவர்தங்கள்
உள்ளத்துளூறியதேனை. *
தெளிந்தநான்மறையோர்நாங்கைநன்னடுவுள்
செம்பொன்செய்கோயிலினுள்ளே *
வளங்கொள்பேரின்பம்மன்னிநின்றானை
வணங்கிநான்வாழ்ந்தொழிந்தேனே. (கூ)

தேனமர்சோலைநாங்கைநன்னடுவுள்
செம்பொன்செய்கோயிலினுள்ளே *
வானவர்கோனைக்கண்டமைசொல்லும்
மங்கையார்வாட்கலிகன்றி *
ஊனமில்பாடலொன்பதோடொன்றும்
ஒழிவின்றிக்கற்றுவல்லார்கள் *
மானவெண்குடைக்கீழ்வையகமாண்டு
வானவராகுவர்மகிழ்ந்தே. (க0)

அடிவரவு:—பேரணிந்த பிறப்பு திட வசை நீமனத்து மல்லை வெஞ்சினம் அன்றிய களங்கனி தேனமர் மாற்றரசர்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

சு - ஆந் திருமொழி - மாற்றரசர்.

எ. திருத்தேற்றியம்பலம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (செஞ்சுருட்டி ராகம் - ரூபகதாளம்.)

மாற்றரசர்மணிமுடியும்திறலும்தேசும்
மற்றவர்தம்காதலிமார்குழையும் * தந்தை
கால்தளையும்உடன்கழலவந்துதோன்றிக்
கதநாகம்காத்தளித்தகண்ணர்கண்டீர் *

நூற்றிதழ்கொளரவிந்தம்நுழைந்தபள்ளத்து
இளங்கமுகின்முதுபாளைபகுவாய்நண்டின் *
சேற்றளையில்வெண்முத்தம்சிந்துநாங்கூர்த்
திருத்தெற்றியம்பலத்தென்செங்கண்மாலே. (க)

பொற்றொடித்தோள்மடமகள்தன்வடிவுகொண்ட
பொல்லாதவன்பேய்ச்சிகொங்கைவாங்கி *
பெற்றெடுத்ததாய்போலமடுப்ப ஆரும்
பேணாநஞ்சுண்டுகந்தபிள்ளைகண்டீர் *
நெல்தொடுத்தமலர்நீலம்நிறைந்தசூழல்
இருஞ்சிறையவண்டொலியும்நெடுங்கணார்தம் *
சிற்றடிமேல்சிலம்பொலியும்மிழற்றுநாங்கூர்த்
திருத்தெற்றியம்பலத்தென்செங்கண்மாலே. (உ)

படலடைத்தசிறுகுரம்பைநுழைந்துபுக்குப்
பசுவெண்ணெய்பதமாரப்பண்ணைமுற்றும் *
அடலடர்த்தவேற்கண்ணார்தோக்கைபற்றி
அலந்தலைமைசெய்துழலுமையன்கண்டீர் *
மடலெடுத்தநெடுந்தெங்கின்பழங்கள்வீழ
மாங்கனிகள்திரட்டுருட்டாவருநீர்ப்பொன்னி *
திடலெடுத்துமலர்சுமந்தங்கிழியுநாங்கூர்த்
திருத்தெற்றியம்பலத்தென்செங்கண்மாலே. (ங)

வாராரும்முலைமடவாள்பின்னைக்காகி
வளைமருப்பிற்கடுஞ்சினத்துவன்தாளார்ந்த *
காரார்திண்விடையடர்த்துவதுவையாண்ட
கருமுகில்போல்திருநிறத்தென்கண்ணர்கண்டீர் *
ஏராரும்மலர்ப்பொழில்கள்தழுவி எங்கும்
எழில்மதியைக்கால்தொடரவிளங்குசோதி *
சீராருமணிமாடம்திகழுநாங்கூர்த்
திருத்தெற்றியம்பலத்தென்செங்கண்மாலே. (ச)

கலையிலங்குமகலல்குல்கமலப்பாவை
கதிர்முத்தவெண்ணகையாள்கருங்கணாய்ச்சி *
முலையிலங்குமொளிமணிப்பூண்வடமுந்தேய்ப்ப
மூவாதவரைநெடுந்தோள்மூர்த்திகண்டீர் *

மலையிலங்குநிரைச்சந்திமாடவீதி
ஆடவரைமடமொழியார்முகத்து * இரண்டு
சிலைவிலங்கிமனஞ்சிறைகொண்டிருக்குநாங்கூர்த்
திருத்தெற்றியம்பலத்தென்செங்கண்மாலே. (ரு)

தான்போலுமென்றெழுந்தான்தரணியாளன்
அதுகண்டுதரித்திருப்பான், அரக்கர்தங்கள் *
கோன்போலுமென்றெழுந்தான்குன்றமன்ன
இருபதுதோளுடன்துணித்தவொருவன்கண்டீர் *
மான்போலுமென்னோக்கிற்செய்யவாயார்
மரகதம்போல்மடக்கிளியைக்கைமேற்கொண்டு *
தேன்போலுமென்மழலைபயிற்றுநாங்கூர்த்
திருத்தெற்றியம்பலத்தென்செங்கண்மாலே. (சா)

பொங்கிலங்குபுரிநூலுந்தோலுமதாழப்
பொல்லாதகுறளுருவாய்ப்பொருந்தாவாணன் *
மங்கலஞ்சேர்மறைவேள்வியதனுள்புக்கு
மண்ணகலங்குறையிரந்தமைந்தன்கண்டீர் *
கொங்கலர்ந்தமலர்க்குழலார்கொங்கைதோய்ந்த
குங்குமத்தின்குழம்பளைந்தகோலந்தன்னால *
செங்கலங்கல்வெண்மணல்மேல்தவழுநாங்கூர்த்
திருத்தெற்றியம்பலத்தென்செங்கண்மாலே. (எ)

சிலம்பினிடைச்சிறுபரல்போல்பெரியமேரு
திருக்குளம்பிற்கணகணப்பத் திருவாகாரம்
குலுங்க * நிலமடந்தைதனையிடந்துபுல்கிக்
கோட்டிடைவைத்தருளியவெங்கோமான்கண்டீர் *
இலங்கியநான்மறையனைத்தும்அங்கமாறும்
ஏழிசையும்கேள்விகளுமெண்டிக்கெங்கும் *
சிலம்பியநற்பெருஞ்செல்வந்திகழுநாங்கூர்த்
திருத்தெற்றியம்பலத்தென்செங்கண்மாலே. (அ)

ஏழுலகும்தாழ்வரையு † மெங்குமூடி
எண்டிசையும்மண்டலமும்மண்டி * அண்டம
மோழையெழுந்தாழிமிகுமூழிவெள்ளம்
முன்னகட்டிலொடுக்கியவெம்மூர்த்திகண்டீர் *

† 'எங்குமோடி' என்றும் கூறுவர்.

ஊழிதொறூழிதொறுமுயர்ந்தசெல்வத்து
ஓங்கியநான்மறையனைத்தும்தாங்குநாவர் *
சேழுயர்ந்தமணிமாடம்திகழுநாங்கூர்த்
திருத்தெற்றியம்பலத்தென்செங்கண்மாலே. (க)

↓↓ சீரணிந்தமணிமாடம்திகழுநாங்கூர்த்
திருத்தெற்றியம்பலத்தென்செங்கண்மாலை *
கூரணிந்தவேல்வலவனாலிநாடன்
கொடிமாடமங்கையர்கோன்குறையலாளி *
பாரணிந்ததொல்புகழான்கலியன்சொன்ன
பாமாலையிவையைந்துமைந்தும்வல்லார் *
சீரணிந்தவுலகத்துமன்னராகிச்
சேண்விசும்பில்வானவராய்த்திகழ்வர்தாமே. (கo)

அடிவரவு:—மாற்றரசா பொற்றொடி படல் வாராரும் கலை தான் பொங்கு சிலம்பின் ஏழுலகும் சீரணிந்த தூம்பு.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ரு - ஆந் திருமொழி - தூம்புடை.

அ. திருமணிக்கூடம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (பிலஹரிராகம் - ஆதிதாளம்.)

↓↓ தூம்புடைப் † பனைக்கைவேழம துயர்கெடுத்தருளி * மன்னு
காம்புடைக்குன்றமேந்திக் கடுமழைகாத்தவெந்தை *
பூம்புனற்பொன்னி ‡ முற்றும்புகுந்து பொன்வரண்ட * எங்கும்
தேம்பொழில்கமழுநாங்கூர்த் திருமணிக்கூடத்தானே. (க)

கவ்வைவாளெயிற்றுவன்பேய்க் கதிர்முலைசுவைத்து * இலங்கை
§ வவ்வியவிடும்பைகூரக் கடுங்கணைதுரந்தவெந்தை *
கொவ்வைவாய்மகளிர்கொங்கைக் குங்குமம்கழுவிப்போந்த *
தெய்வநீர்கமழுநாங்கூர்த் திருமணிக்கூடத்தானே. (உ)

மாத்தொழில்படங்கச்செற்று மருதிறநடந்து * வன்தாள்
சேத்தொழில்சிதைத்துப் பின்னை செவ்வித்தோள்புணர்ந்தவெந்தை *
நாத்தொழில்மறைவல்லார்கள் நயந்தறம்பயந்த * வண்கைத்
தீத்தொழில்பயிலுநாங்கூர்த் திருமணிக்கூடத்தானே. (ங)

† 'பனைக்கை' என்பதும் பாடம். ‡ 'முற்றம்' என்பதும் பாடம்.

§ 'வவ்வியவிடும்பைதீர' என்பது பாடாந்தரம்.

தாங்கருஞ்சினத்துவன்தாள் தடக்கைம்மாமருப்புவாங்கி *
பூங்குருந்தொசித்துப்புள்வாய்பிளந்து எருதடர்த்தவெந்தை *
மாங்கனிநுகர்ந்தமந்தி வந்துவண்டிரிய * வாழைத்
தீங்கனிநுகருநாங்கூர்த் திருமணிக்கூடத்தானே. (௪)

கருமகளிலங்கையாட்டி பிலங்கொள்வாய்திறந்து * தன்மேல்
வருமவள்செவியும்மூக்கும வாளினால்தடிந்தவெந்தை *
பெருமகள்பேதைமங்கை தன்னொடும்பிரிவிலாத *
திருமகள்மருவுநாங்கூர்த் திருமணிக்கூடத்தானே. (ரு)

கெண்டையும்குறளும்புள்ளும் கேழலுமரியும்மாவும *
அண்டமும்சுடரும் அல்லாவாற்றலுமாயவெந்தை *
ஒண்திறல்தென்னனோட வடவரசோட்டங்கண்ட *
திண்திறலாளர்நாங்கூர்த் திருமணிக்கூடத்தானே. (௬)

குன்றமும்வானுமமண்ணும் குளிர்புனல்திங்களோடு *
நின்றவெஞ்சுடரும் அல்லாநிலைகளுமாயவெந்தை *
மன்றமும்வயலும்காவும் மாடமும்மணங்கொண்டு * எங்கும்
தென்றல்வந்துலவுநாங்கூர்த திருமணிக்கூடத்தானே. (௭)

சங்கையும்துணிவும்பொய்யும் மெய்யும்இத்தரணியோம்பும் *
பொங்கியமுகிலும் அல்லாப்பொருள்களுமாயவெந்தை *
பங்கயமுகுத்ததேறல் பருகியவாளைபாய *
செங்கயலுகளும்நாங்கூர்த் திருமணிக்கூடத்தானே. (௮)

பாவமும்அறமும்வீடும் இன்பமும்துன்பந்தானும் *
கோவமும்அருளும் அல்லாக்குணங்களுமாயவெந்தை *
மூவரிலெங்கள்மூர்த்தி இவனெனமுனிவரோடு *
தேவர்வந்திறைஞ்சுநாங்கூர்த் திருமணிக்கூடத்தானே. (௯)

‡‡ திங்கள்தோய்மாடநாங்கூர்த் திருமணிக்கூடத்தானை *
மங்கையர்தலைவன்வண்தார்க் கலியன்வாயொலிகள்வல்லார் *
பொங்குநீருலகமாண்டு பொன்னுலகாண்டு * பின்னும்
வெங்கதிர்ப்பரிதிவட்டத்தூடுபோய் விளங்குவாரே. (௧௦)

அடிவரவு:—தூம்பு கவ்வை மாத்தொழில் தாங்கரும் கருமகள் கெண்டை குன்றம் சங்கை பாவம் திங்கள் தாவளந்து.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்,

௫ - ஆந் திருமொழி - தாவளந்து.

௯. திருக்காவளம்பாடி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (மத்யமாவதிராகம் - ரூபகதாளம்.)

‡‡ தாவளந்துலகமுற்றும் தடமலர்ப்பொய்கைபுக்கு *
நாவளம்நவின்றங்கேத்த நாகத்தின்நடுக்கம்தீர்த்தாய்! *
மாவளம்பெருகி மன்னுமறையவர்வாழும்நாங்கை *
காவளம்பாடிமேய கண்ணனே! களைகண்நீயே. (௧)

மண்ணிடந்தேனமாகி மாவலிவலிதொலைப்பான் *
விண்ணவர்வேண்டச்சென்று வேள்வியிற்குறையிரந்தாய்! *
துண்ணெனமாற்றார்தம்மைத் தொலைத்தவர்நாங்கைமேய *
கண்ணனே! காவளந்தண்பாடியாய்! களைகண்நீயே. (௨)

உருத்தெழுவாலிமார்வில் ஒருகணைஉருவவோட்டி *
கருத்துடைத்தம்பிக்கு இன்பக்கதிர்முடியரசளித்தாய்! *
பருத்தெழுபலவும்மாவும் பழம்விழுந்தொழுகும்நாங்கை *
கருத்தனே! காவளந்தண்பாடியாய்! களைகண்நீயே. (௩)

முனைமுகத்தரக்கன்மாள முடிகள்பத்தறுத்துவீழ்த்து * ஆங்
கனையவற்கிளையவற்கே அரசளித்தருளினானே! *
சுனைகளிற்கயல்கள்பாயச் சுரும்புதேன்நுகரும்நாங்கை *
கனைகழற்காவளந்தண்பாடியாய்! களைகண்நீயே. (௪)

படவரவுச்சிதன்மேல் பாய்ந்துபல்நடங்கள்செய்து *
மடவரல்மங்கைதன்னை மார்வகத்திருத்தினானே! *
தடவரைதங்குமாடத் தகுபுகழ்நாங்கைமேய *
கடவுளே! காவளந்தண்பாடியாய்! களைகண்நீயே. (௫)

மல்லரையட்டுமாளக் கஞ்சனைமலைந்துகொன்று *
பல்லரசவிந்துவீழப் பாரதப்போர்முடித்தாய்! *
நல்லரண்காவின்நீழல் நறைகமழ்நாங்கைமேய *
கல்லரண்காவளந்தண்பாடியாய்! களைகண்நீயே. (௬)

மூத்தவற்கரசுவேண்டி முன்புதூதெழுந்தருளி *
மாத்தமர்பாகன்வீழ மதகரிமருப்பொசித்தாய்! *
பூத்தமர்சோலையோங்கிப் புனல்பரந்தொழுகும்நாங்கை *
காத்தனே! காவளந்தண்பாடியாய்! களைகண்நீயே. (௭)

ஏவிளங்கன்னிக்காகி இமையவர்கோனைச்செற்று *
காவளம்கடிதிறுத்துக் கற்பகம்கொண்டுபோந்தாய்! *
பூவளம்பொழில்கள்சூழ்ந்த புரந்தரன்செய்தநாங்கை *
காவளம்பாடிமேய கண்ணனே! களைகண்நீயே. (௮)

சந்தமாய்ச்சமயமாகிச் சமயவைம்பூதமாகி *
அந்தமாயாதியாகி அருமறையவையுமானாய்! *
மந்தமார்பொழில்கள்தோறும் மடமயிலாலும்நாங்கை *
கந்தமார்காவளந்தண்பாடியாய்! களைகண்நீயே. (௯)

↓↓ மாவளம்பெருகிமன்னு மறையவர்வாழும்நாங்கை *
காவளம்பாடிமேய கண்ணனைக்கலியன்சொன்ன *
பாவளம்பத்தும்வல்லார் பார்மிசையரசராகி *
கோவிளமன்னர்தாழக் குடைநிழல்பொலிவர்தாமே. (௧௦)

அடிவரவு:—தாவளந்து மண் உருத்து முனை படம் மல்லலை மூத்தவற்கு ஏவிளம் சந்தம் மாவளம் கண்ணார.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௭ - ஆந் திருமொழி - கண்ணார்கடல்.

௧௦. திருவெள்ளக்குளம்.

கலிவிருத்தம். (தேசியராகம் - ஆதிதாளம்.)

↓↓ கண்ணார்கடல்போல் திருமேனிகரியாய்! *
நண்ணார்முனை வென்றிகொள்வார்மன்னுநாங்கூர் *
திண்ணார்மதிள்சூழ் திருவெள்ளக்குளத்துள்
அண்ணா! * அடியேனிடரைக்களையாயே. (௧)

கொந்தார்துளவம்மலர்கொண்டு அணிவானே! *
நந்தாதபெரும்புகழ் வேதியர்நாங்கூர் *
செந்தாமரைநீர்த் திருவெள்ளக்குளத்துள்
எந்தாய்! * அடியேனிடரைக்களையாயே. (௨)

குன்றால்குளிர்மாரி தடுத்துகந்தானே! *
நன்றாயபெரும்புகழ் வேதியர்நாங்கூர் *
சென்றார்வணங்கும் திருவெள்ளக்குளத்துள்
நின்றாய்! * நெடியாய்! அடியேனிடர்நீக்கே. (௩)

காணார்கரிகொம்பது ஒசித்தகளிறே! *
நாணாவகைநல்லவர் மன்னியநாங்கூர் *
தேனார்பொழில்சூழ் திருவெள்ளக்குளத்து
ளானாய்! * அடியேனுக்கருள்புரியாயே. (ச)

↓↓ வேடார்திருவேங்கடம் மேயவிளக்கே! *
நாடார்புகழ் வேதியர்மன்னியநாங்கூர் *
சேடார்பொழில்சூழ் திருவெள்ளக்குளத்தாய்! *
பாடாவருவேன் வினையாயினபாற்றே. (ரு)

கல்லால்கடலை அணைகட்டியுகந்தாய்! *
நல்லார்பலர் வேதியர்மன்னியநாங்கூர் *
செல்வா! திருவெள்ளக்குளத்துறைவானே! *
எல்லாவிடரும் கெடுமாறுஅருளாயே. (சா)

கோலால்நிரைமேய்த்த எங்கோவலர்கோவே! *
நாலாகியவேதியர் மன்னியநாங்கூர் *
சேலார்வயல்சூழ் திருவெள்ளக்குளத்துள்
மாலே! * எனவல்வினை தீர்த்தருளாயே. (எ)

வாராகமதாகி இம்மண்ணையிடந்தாய்! *
நாராயணனே! நல்லவேதியர்நாங்கூர் *
சீரார்பொழில்சூழ் திருவெள்ளக்குளத்துள்
ஆராவமுதே! * அடியேற்கருளாயே. (அ)

பூவார்திருமாமகள் புல்கியமார்பா! *
நாவார்புகழ் வேதியர்மன்னியநாங்கூர் *
தேவா! திருவெள்ளக்குளத்துறைவானே! *
ஆவா! அடியான் இவனென்றருளாயே. (கூ)

↓↓ நல்லன்புடை வேதியர்மன்னியநாங்கூர் *
செல்வன் திருவெள்ளக்குளத்துறைவானை *
கல்லின்மலிதோள் கலியன்சொன்னமாலை *
வல்லரெனவல்லவர் வானவர்தாமே. (க0)

அடிவரவு:—கண்ணார் கொந்து குன்றால் கான் வேடு கல்லால் கோலால் வாராகமது பூவார் நல்லன்பு கவளயானை.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

அ - ஆந் திருமொழி - கவளயானை.

கக - திருப்பார்த்தன்பள்ளி.

[திருமாலின்பத்து ஈடுபட்ட தலைமகளது செயல் கண்டு நற்றாய் இரங்கிக்கூறும் பாசுரம்.]

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (தந்யாசிராகம் - அடதாளம்.)

↓↓ கவளயானைக்கொம்பொசித்த கண்ணனென்றும் * காமருசீர்க்
குவளைமேகமன்னமேனி கொண்டகோனென்னானையென்றும் *
தவளமாடநீடுநாங்கைத் தாமரையாள்கேள்வனென்றும் *
பவளவாயாளென்மடந்தை பார்த்தன்பள்ளிபாடுவாளே. (க)

கஞ்சன்விட்டவெஞ்சினத்த களிறடர்த்தகாளையென்றும் *
வஞ்சமேவிவந்தபேயின் உயிரையுண்டமாயனென்றும் *
செஞ்சொலாளர்நீடுநாங்கைத் தேவதேவனென்றென்றோதி *
பஞ்சியன்னமெல்லடியாள் பார்த்தன்பள்ளிபாடுவாளே. (உ)

அண்டர்கோனென்னானையென்றும் ஆயர்மாதர்கொங்கைபுல்கு
செண்டனென்றும் * நான்மறைகள்தேடியோடும் செல்வனென்றும் *
வண்டுலவுபொழில்கொள்நாங்கை மன்னுமாயனென்றென்றோதி *
பண்டுபோலன்றென்மடந்தை பார்த்தன்பள்ளிபாடுவாளே. (ங)

கொல்லையானாள்பரிசழிந்தாள் கோல்வளையார்தம்முகப்பே *
மல்லைமுந்நீர்தட்டிலங்கை கட்டழித்தமாயனென்றும் *
செல்வம்மல்குமறையோர்நாங்கைத் தேவதேவனென்றென்றோதி *
பல்வளையாளென்மடந்தை பார்த்தன்பள்ளிபாடுவாளே. (ச)

அரக்கராவிமாளஅன்று ஆழ்கடல்சூழிலங்கைசெற்ற *
குரக்கரசனென்றும் கோலவில்லியென்றும் * மாமதியை
நெருக்குமாடநீடுநாங்கை † நின்மலன்தானென்றென்றோதி *
பரக்கழிந்தாளென்மடந்தை பார்த்தன்பள்ளிபாடுவாளே. (ரு)

ஞாலமுற்றுமுண்டுமிழ்ந்த நாதனென்றும் * நானிலஞ்சூழ்
வேலையன்னகோலமேனி வண்ணனென்றும் * மேலெழுந்து
சேலுகளும்வயல்கொள்நாங்கைத் தேவதேவனென்றென்றோதி *
பாலின்நல்லமென்மொழியாள் பார்த்தன்பள்ளிபாடுவாளே. (சு)

நாடியென்தனுள்ளங்கொண்ட நாதனென்றும் * நான்மறைகள்
தேடியென்றுங்காணமாட்டாச் செல்வனென்றும்*சிறைகொள்வண்டு
சேடுலவுபொழில்கொளநாங்கைத் தேவதேவனென்றென்றோதி *
பாடகம்சேர்மெல்லடியாள் பார்த்தன்பள்ளிபாடுவாளே. (எ)

† 'நின்மலனென்றென்று' என்று கூறுவர்.

உலகமேத்துமொருவனென்றும் ஒண்சுடரோடும்பரெய்தா *
நிலவுமாழிப்படையனென்றும் நேசனென்றும் * தென்திசைக்குத்
திலதமன்னமறையோர்நாங்கைத் தேவதேவனென்றென்றோதி *
பலருமேசவென்மடந்தை பார்த்தன்பள்ளிபாடுவாளே. (௮)

கண்ணனென்றும் வானவர்கள்காதலித்துமலர்கள்தூவும் *
எண்ணனென்றுமின்பனென்றும் ஏழுலகுக்காதியென்றும் *
திண்ணமாடநீடுநாங்கைத் தேவதேவனென்றென்றோதி *
பண்ணினன்னமென்மொழியாள் பார்த்தன்பள்ளிபாடுவாளே. (௯)

↓↓ பாருள்நல்லமறையோர்நாங்கைப் பார்த்தன்பள்ளிச்செங்கண்மா
வார்கொள்நல்லமுலைமடவாள்பாடலைத் தாய்மொழிந்தமாற்றம்* [லை*
கூர்கொள்நல்லவேற்கலியன் கூறுதமிழ்ப்பத்தும்வல்லார் *
ஏர்கொள்நல்லவைகுந்தத்துள் இன்பம்நாளுமெய்துவாரே. (௧௦)

அடிவரவு:—கவளம் கஞ்சன் அண்டா கொல்லை அரக்கர் ஞாலம் நாடி
உலகம் கண்ணன் பாருள் நும்மை.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௯ - ஆந் திருமொழி நும்மைத்தொழுதோம்.

திருவிந்தளூர்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (தோடிராகம் - ரூபகதாளம்.)

↓↓ நும்மைத்தொழுதோம் நுந்தம்பணிசெய்திருக்கும்நும்மடியோம்*
இம்மைக்கின்பம்பெற்றோம் எந்தாய் ! இந்தளூரீரே ! *
எம்மைக்கடிதாக்கருமமருளி ஆவா ! என்றிரங்கி *
நம்மையொருகாற்காட்டிநடந்தால் நாங்களுய்யோமே ? (௧)

↓↓ சிந்தைதன்னுள் நீங்காதிருந்ததிருவே ! மருவினிய
மைந்தா ! * அந்தணாலிமாலே ! சோலைமழகளிறே ! *
நந்தாவிளக்கின்சுடரே ! நறையூர்நின்றநம்பீ ! * என்
எந்தாய் ! இந்தளூராய் ! அடியேற்கிறையுமிரங்காயே ? (௨)

பேசுகின்றதிதுவே வையமீரடியாலளந்த *
மூசிவண்டுமுரலும் கண்ணிமுடியீர் ! * உம்மைக்காணும்
ஆசையென்னும்கடலில் வீழ்ந்திங்கயர்த்தோம் * அயலாரும்
ஏசுகின்றதிதுவேகாணும் இந்தளூரீரே! (௩)

ஆசைவழுவாதேத்தும் எமக்கிங்கிழுக்காய்த்து * அடியோர்க்குத்
தேசமறிய உமக்கேயாளாய்த்திரிகின்றோமுக்கு *
காசினொளியில்திகழும்வண்ணம், காட்டீர் எம்பெருமான்! *
வாசிவல்லீர்! இந்தளூரீர்! வாழ்ந்தேபோம்நீரே. (ச)

தீயெம்பெருமான்நீரெம்பெருமான் திசையுமிருநிலனு
மாய் * எம்பெருமானாகிநின்றால் அடியோம்காணோமால் *
தாயெம்பெருமான் தந்தைதந்தையாவீர் * அடியோமுக்
கேஎம்பெருமானல்லீரோ? நீர்இந்தளூரீரே! (ரு)

சொல்லாதொழியகில்லேன் அறிந்தசொல்லில் * † நும்மடியார்
எல்லாரோடுமொக்க எண்ணியிருந்தீரடியேனை *
நல்லாரறிவீர்தீயாரறிவீர் நமக்கிவ் ‡ வுலகத்தில் *
எல்லாமறிவீர் ஈதேயறிவீர்இந்தளூரீரே! (சா)

மாட்டீரானீர்பணிநீர்கொள்ள எம்மைப்பணியறியா
வீட்டீர் * இதனைவேறேசொன்னோம் இந்தளூரீரே! *
காட்டீரானீர் நுந்தமடிக்கள்காட்டில் * உமக்கிந்த
நாட்டேவந்துதொண்டரான நாங்களுய்யோமே? (எ)

முன்னைவண்ணம்பாலின்வண்ணம் முழுதும்நிலைநின்ற *
பின்னைவண்ணம்கொண்டல்வண்ணம் வண்ணமெண்ணுங்கால் *
பொன்னின்வண்ணம்மணியின்வண்ணம் புரையும்திருமேனி *
இன்னவண்ணமென்றுகாட்டீர் இந்தளூரீரே! (அ)

எந்தைதந்தை § தம்மானென்றென் றெமரேழேழளவும் *
வந்துநின்றதொண்டரோர்க்கே வாசிவல்லீரால் *
சிந்தைதன்னுள்முந்திநிற்றிர் சிறிதும்திருமேனி *
இந்தவண்ணமென்றுகாட்டீர் இந்தளூரீரே! (கூ)

↓↓ ஏரார்பொழில்சூழ் இந்தளூரில்எந்தைபெருமானை *
காரார்புறவின்மங்கைவேந்தன் கலியனொலிசெய்த *
சீராரின்சொல்மாலை கற்றுத்திரிவாருலகத்தில் *
ஆராரவரே அமரர்க்கென்றும்அமரராவாரே. (க0)

அடிவரவு:—நும்மை சிந்தை பேசுகின்ற ஆசை தீ சொல்லாது மாட்டீர்
முன்னை எந்தை ஏரார் ஆய்ச்சியர்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

† 'உம்மடியார்' எனவும் ஓதுவர். ‡ 'உலகத்து' எனவும் ஓதுவர்.
§ 'தம்மானென்றெமரேழளவும்' என்றும் பாடம்.

௰ - ஆந் திருமொழி - ஆய்ச்சியர்.

திருவெள்ளியங்குடி.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (மோஹநராகம் - அடதாளம்.)

⸸⸸ ஆய்ச்சியராழைப்பவெண்ணெயுண்டொருகால்
ஆலிலைவளர்ந்தவெம்பெருமான் *
பேய்ச்சியைமுலையுண்டிணைமருதிறுத்துப்
பெருநிலமளந்தவன்கோயில் *
காய்த்தநீள்கமுகுங்கதலியுந்தெங்கும்
எங்குமாம்பொழில்களினடுவே *
வாய்த்தநீர்பாயும்மண்ணியின்தென்பால்
திருவெள்ளியங்குடியதுவே. (௧)

ஆநிரைமேய்த்தன்றலைகடலடைத்திட்டு
அரக்கர்தம்சிரங்களையுருட்டி *
கார்நிறைமேகம்கலந்ததோருருவக்
கண்ணனார்கருதியகோயில் *
பூநிரைச்செருந்திபுன்னைமுத்தரும்பிப்
பொதும்பிடைவரிவண்டுமிண்டி *
தேனிரைத்துண்டங்கின்னிசைமுரலும்
திருவெள்ளியங்குடியதுவே. (௨)

கடுவிடமுடையகாளியன்தடத்தைக்
கலக்கிமுன்னலக்கழித்து * அவன்தன்
படமிறப்பாய்ந்துபன்மணிசிந்தப்
பல்நடம்பயின்றவன்கோயில் *
படவரவல்குற்பாவைநல்லார்கள்
பயிற்றியநாடகத்தொலிபோய் *
அடைபுடைதழுவியண்டம்நின்றதிரும்
திருவெள்ளியங்குடியதுவே. (௩)

கறவைமுன்காத்துக்கஞ்சனைக்காய்ந்த
காளமேகத்திருவுருவன் *
பறவைமுன்னுயர்த்துப்பாற்கடல்துயின்ற
பரமனார்பள்ளிகொள்கோயில் *

துறைதுறைதோறும்பொன்மணிசிதறும்
தொகுதிரைமண்ணியின்தென்பால் *
செறிமணிமாடக்கொடிகதிரணவும்
திருவெள்ளியங்குடியதுவே. (ச)

பாரினையுண்டுபாரினையுமிழ்ந்து
பாரதம்கையெறிந்து * ஒருகால்
தேரினையூர்ந்துதேரினைத்துரந்த
செங்கண்மால்சென்றுறைகோயில் *
ஏர்நிரைவயலுள்வாளைகள்மறுகி
எமக்கிடமன்றிதென்றெண்ணி *
சீர்மலிபொய்கைசென்றணைகின்ற
திருவெள்ளியங்குடியதுவே. (ரு)

காற்றிடைப்பூளைகரந்தெனவரந்தை
யுறக் கடலரக்கர்தம்சேனை *
கூற்றிடைச்செல்லக்கொடுங்கணைதுரந்த
கோலவில்லிராமன்தன்கோயில் *
ஊற்றிடைநின்றவாழையின்கனிகள்
ஊழ்த்துவீழ்ந்தனவுண்டுமண்டி *
சேற்றிடைக்கயல்களுகள்திகழ்வயல்சூழ்
திருவெள்ளியங்குடியதுவே. (சா)

ஒள்ளியகருமம்செய்வனென் † றுணர்ந்த
மாவலிவேள்வியிற்புக்கு *
தெள்ளியகுறளாய்மூவடிகொண்டு
திக்குறவளர்ந்தவன்கோயில் *
அள்ளியம்பொழில்வாயிருந்துவாழ்குயில்கள்
அரியரியென்றவையழைப்ப *
வெள்ளியார்வணங்கவிரைந்தருள்செய்வான்
திருவெள்ளியங்குடியதுவே. (எ)

முடியுடையமரர்க்கிடர்செய்யும்
அசுரர்தம்பெருமானை * அன்றரியாய்
மடியிடைவைத்துமார்வைமுன்கீண்ட
மாயனார்மன்னியகோயில் *

---

† 'உணர்ந்து' என்பதும் பாடம்.

படியிடைமாடத்தடியிடைத்தூணில்
பதித்தபன்மணிகளினொளியால் *
விடிபகலிரவென்றறிவரிதாய
திருவெள்ளியங்குடியதுவே. (அ)

குடிகுடியாகக்கூடிநின்றமரர்
குணங்களேபிதற்றிநின்றேத்த *
அடியவர்க்கருளியரவணைத்துயின்ற
ஆழியானமர்ந்துறைகோயில் *
கடியுடைக்கமலமடியிடைமலரக்
கரும்பொடுபெருஞ்செந்நெலசைய *
வடிவுடையன்னம்பெடையொடுஞ்சேரும்
வயல்வெள்ளியங்குடியதுவே. (கூ)

↓↓ பண்டுமுன்னேனமாகியன்றொருகால்
பாரிடந்தெயிற்றினிற்கொண்டு *
தெண்திரைவருடப்பாற்கடல்துயின்ற
திருவெள்ளியங்குடியானை *
வண்டறைசோலைமங்கையர்தலைவன்
மானவேற்கலியன்வாயொலிகள் *
கொண்டிவைபாடுந்தவமுடையார்கள்
ஆள்வரிக்குரைகடலுலகே. (கO)

அடிவரவு:—ஆய்ச்சியா ஆநிரை கடு கறவை பாரினை காற்று ஒள்ளிய முடி குடி பண்டு அறிவது.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ஐந்தாம்பத்து.

க - ஆந் திருமொழி - அறிவதரியான்.

திருப்புள்ளம்பூதங்குடி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (பந்துவராளிராகம் - ரூபகதாளம்.)

↓↓ அறிவதரியானனைத்துலகுமுடையான் என்னையாளுடையான் *
† குறியமாணியுருவாய கூத்தன்மன்னியமருமிடம் *
நறியமலர்மேல்சுரும்பார்க்க எழிலார்மஞ்ஞைநடமாட *
பொறிகொள்சிறைவண்டிசைபாடும் புள்ளம்பூதங்குடிதானே. (க)

† 'குறியமாணுருவாகிய' என்றும் பாடம்.

கள்ளக்குறளாய்மாவலியைவஞ்சித்து உலகம்கைப்படுத்து *
பொள்ளைக்கரத்தபோதகத்தின் துன்பம்தவிர்த்தபுனிதனிடம் *
பள்ளச்செறுவிற்கயலுகளப் பழனக்கழனியதனுள்போய் *
புள்ளுப்பிள்ளைக்கிரைதேடும் புள்ளம்பூதங்குடிதானே. (௨)

மேவாவரக்கர்தென்னிலங்கை வேந்தன்வீயச்சரம்துரந்து *
மாவாய்பிளந்துமல்லடர்த்து மருதம்சாய்த்தமாலதிடம் *
காவார்தெங்கின்பழம்வீழக் கயல்கள்பாயக்குருகிரியும் *
பூவார்கழனியெழிலாரும் புள்ளம்பூதங்குடிதானே. (௩)

வெற்பால்மாரிபழுதாக்கி விறல்வாளரக்கர்தலைவன்தன் *
வற்பார்திரள்தோளைந்நான்கும் துணித்தவல்விலிராமனிடம் *
கற்பார்புரிசைசெய்குன்றம் கவினூர்கூடம்மாளிகைகள் *
பொற்பார்மாடமெழிலாரும் புள்ளம்பூதங்குடிதானே. (௪)

மையார்தடங்கண்கருங்கூந்தல் ஆய்ச்சிமறையவைத்ததயிர் *
நெய்யார்பாலோடமுதுசெய்த நேமியங்கைமாயனிடம் *
செய்யார்ஆரலிரைகருதிச் செங்கால்நாரைசென்றணையும் *
பொய்யாநாவின்மறையாளர் புள்ளம்பூதங்குடிதானே. (ரு)

மின்னினன்னநுண்மருங்குல் வேயேய்தடந்தோள்மெல்லியற்கா *
மன்னுசினத்தமழவிடைகள் ஏழன்றடர்த்தமாலதிடம் *
மன்னுமுதுநீரரவிந்தமலர்மேல் வரிவண்டிசைபாட *
புன்னைபொன்னேய்தாதுதிர்க்கும் புள்ளம்பூதங்குடிதானே. (சு)

குடையாவிலங்கல்கொண்டேந்தி மாரிபழுதாநிரைகாத்து *
சடையானோடவடல்வாணன் தடந்தோள்துணித்ததலைவனிடம் *
குடியாவண்டுகள்ளுண்ணக் கோலநீலம்மட்டுகுக்கும் *
புடையார்கழனியெழிலாரும் புள்ளம்பூதங்குடிதானே. (எ)

கறையார்நெடுவேல்மறமன்னர்வீய விசயன்தேர்கடவி *
இறையான்கையில்நிறையாத முண்டம்நிறைத்தவெந்தையிடம் *
மறையால்முத்தீயவைவளர்க்கும் மன்னுபுகழால்வண்மையால் *
பொறையால்மிக்கவந்தணர்வாழ் புள்ளம்பூதங்குடிதானே. (அ)

துன்னிமண்ணும்விண்ணாடும் தோன்றாதிருளாய்மூடியநாள் *
அன்னமாகியருமறைகள் அருளிச்செய்தவமலனிடம் *
மின்னுசோதிநவமணியும் வேயின்முத்தும்சாமரையும் *
பொன்னும்பொன்னிகொணர்ந்தலைக்கும் புள்ளம்பூதங்குடிதானே. ()

↓↓ கற்றுமறித்துக்காளியன்தன் சென்னிநடுங்கநடம்பயின்ற *
பொற்றாமரையாள்தன்கேள்வன் புள்ளம்பூதங்குடிதன்மேல் *
கற்றார்பரவும்மங்கையர்கோன் காரார்புயற்கைக்கலிகன்றி *
சொல்தானீரைந்திவைபாடச் சோரநில்லா † துயர்தாமே. (கo)

அடிவரவு:—அறிவது கள்ளம் மேவா வெற்பால் மையார் மின்னின் குடை கறை துன்னி கற்று தாம்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

உ - ஆந் திருமொழி - தாந்தம்.

திருக்கூடலூர்.

கலிவிருத்தம். (அபநபாகம் - ஆதிதாளம்.)

↓↓ தாந்தம்பெருமையறியார் * தூது
வேந்தர்க்காய வேந்தனூர்போல் *
காந்தள்விரல் மென்கலைநன்மடவார் *
கூந்தல்கமழும் கூடலூரே. (க)

செறுந்திண்திமிலேறுடைய * பின்னை
பெறுந்தண்கோலம் பெற்றாரூர்போல் *
நறுந்தண்தீந்தேன் உண்டவண்டு *
குறிஞ்சிபாடும் கூடலூரே. (உ)

பிள்ளையுருவாய்த் தயிருண்டு * அடியே
னுள்ளம்புகுந்த ஒருவரூர்போல் *
கள்ளநாரை வயலுள் * கயல்மீன்
கொள்ளைகொள்ளும் கூடலூரே. (ந)

கூற்றேருருவிற் குறளாய் * நிலநீ
ரேற்றானெந்தை பெருமானூர்போல *
சேற்றேருழவர் கோதைப்போதூண் *
கோல்தேன்முரலும் கூடலூரே. (ச)

தொண்டர்பரவச் சுடர்சென்றணவ *
அண்டத்தமரும் அடிகளூர்போல் *
வண்டலலையுள் கெண்டைமிளிர *
கொண்டலதிரும் கூடலூரே. (ரு)

---

† 'துயர்தானே' என்றும் பாடம்.

தக்கன்வேள்வி தகர்த்ததலைவன் *
துக்கந்துடைத்த துணைவரூர்போல் *
எக்கலிடு நுண்மணல்மேல் * எங்கும்
கொக்கின்பழம்வீழ் கூடலூரே. (௬)

கருந்தண்கடலும் மலையுமுலகும் *
அருந்துமடிகள் அமருமூர்போல் *
பெருந்தண்முல்லைப் பிள்ளையோடி *
குருந்தந்தழுவும் கூடலூரே. (௭)

கலைவாழ்பிணையோடணையும் * திருநீர்
மலைவாழெந்தை மருவுமூர்போல் *
இலைதாழ்தெங்கின் மேல்நின்று * இளநீர்க்
குலைதாழ்கிடங்கின் கூடலூரே. (௮)

பெருகுகாதலடியேனுள்ளம் *
உருகப்புகுந்த ஒருவரூர்போல் *
அருகுகைதைமலரக் * கெண்டை
குருகென்றஞ்சும் கூடலூரே. (௯)

↓↓ காவிப்பெருநீர்வண்ணன் * கண்ணன்
மேவித்திகழும் கூடலூர்மேல் *
கோவைத்தமிழால் கலியன்சொன்ன *
பாவைப்பாடப் பாவம்போமே. (௰)

அடிவரவு:—தாம் சேறும் பிள்ளை கூற்றேர் தொண்டர் தக்கன் கருந்தண் கலை பெருகு காவி வென்றி.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௩-ஆந் திருமொழி-வென்றி.

திருவெள்ளறை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.
(சங்கராபரணராகம் - ஆதிதாளம்.)

↓↓ வென்றிமாமழுவேந்திமுன்மண்மிசைமன்னரை மூவெழுகால்
கொன்றதேவ! *நின்குரைகழல்தொழுவதோர்வகைஎனக்கருள்புரியே*
மன்றில்மாம்பொழில்நுழைதந்து மல்லிகைமௌவலின்போதலர்த்தி *
தென்றல்மாமணம்கமழ்தரவரு திருவெள்ளறைநின்றானே! (௧)

வசையில்நான்மறைகெடுத்த அம்மலரயற்கருளி, முன்பரிமுகமாய் *
இசைகொள்வேதநூலென்றிவைபயந்தவனே ! எனக்கருள்புரியே *
உயர்கொள்மாதவிப்போதொடுலாவிய மாருதம்வீதியின்வாய் *
திசையெல்லாம்கமழும்பொழில்சூழ் திருவெள்ளறைநின்றானே ! (௨)

வெய்யனாயுலகேழுடன்நலிந்தவன் உடலகமிருபிளவா *
கையில்நீளுகிர்ப்படையதுவாய்த்தவனே! எனக்கருள்புரியே *
மையினார்தருவராலினம்பாய வண்தடத்திடைக்கமலங்கள் *
தெய்வநாறுமொண்பொய்கைகள்சூழ் திருவெள்ளறைநின்றானே !(௩)

வாம்பரியுகமன்னர்தமுயிர்செக ஐவர்கட்கரசளித்த *
காம்பினார்திருவேங்கடப்பொருப்ப ! நின்காதலையருளெனக்கு *
மாம்பொழில்தளிர்கோதியமடக்குயில் வாயதுதுவர்ப்பெய்த *
தீம்பலங்கனித்தேனதுநுகர் திருவெள்ளறைநின்றானே ! (௪)

மானவேலொண்கண்மடவரல் மண்மகளழுங்கமுந்நீர்ப்பரப்பில் *
ஏனமாகியன்றிருநிலமிடந்தவனே ! எனக்கருள்புரியே *
கானமாமுல்லைக்கழைக்கரும்பேறி வெண்முறுவல்செய்தலர்கின்ற *
தேனின்வாய்மலர்முருகுகுக்கும் திருவெள்ளறைநின்றானே ! (௫)

பொங்குநீண்முடியமரர்கள்தொழுதெழ அமுதினைக்கொடுத்தளிப்பான் *
அங்கோராமையதாகியவாதி ! நின்னடிமையையருளெனக்கு *
தங்குபேடையோடூடியமதுகரம் தையலார்குழலணைவான் *
திங்கள்தோய்சென்னிமாடஞ்சென்றணை திருவெள்ளறைநின்றானே !

ஆறினோடொருநான்குடைநெடுமுடி அரக்கன்தன்சிரமெல்லாம் *
வேறுவேறாகவில்லதுவளைத்தவனே ! எனக்கருள்புரியே *
மாறில்சோதியமரதகப்பாசடைத் தாமரைமலர்வார்ந்த *
தேறல்மாந்திவண்டின்னிசைமுரல் திருவெள்ளறைநின்றானே ! (௭)

முன்னிவ்வேழுலகுணர்வின்றியிருள்மிக உம்பர்கள்தொழுதேத்த *
அன்னமாகியன்றருமறைபயந்தவனே ! எனக்கருள்புரியே *
மன்னுகேதகைசூதகமென்றிவை வனத்திடைச்சுரும்பினங்கள் *
தென்னவென்றுவண்டின்னிசைமுரல் திருவெள்ளறைநின்றானே!(௮)

ஆங்குமாவலிவேள்வியிலிரந்துசென்று அகலிடமுழுதினையும் *
பாங்கினாற்கொண்டபரம! நிற்பணிந்தெழுவேன் எனக்கருள்புரியே *
ஓங்குபிண்டியின்செம்மலரேறி வண்டுழிதர * மாவேறித்
தீங்குயில்மிழற்றும்படப்பைத் திருவெள்ளறைநின்றானே ! (௯)

↓↓ மஞ்சுலாமணிமாடங்கள்சூழ் திருவெள்ளறையதன்மேய *
அஞ்சனம்புரையுந்திருவுருவனை ஆதியையமுதத்தை *
நஞ்சுலாவியவேல்வலவன் கலிகன்றிசொல்லையிரண்டும் *
எஞ்சலின்றிநின்றேத்தவல்லார் இமையோர்க்கரசாவர்களே. (கய)

அடிவரவு:—வென்றி வசை வெய்ய வாம்பரி மானவேல் பொங்கு ஆறு முன் ஆங்கு மஞ்சு உந்தி.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

சு-ஆம் திருமொழி - உந்தி.

திருவரங்கம். (க)

கலிநிலைத்துறை. (ஸஹாநாராகம் - ஆதிதாளம்)

↓↓ உந்திமேல்நான்முகனைப்படைத்தான் உலகுண்டவ
னெந்தைபெம்மான் * இமையோர்கள்தாதைக்கு இடமென்பரால் *
சந்தினோடுமணியுங்கொழிக்கும் புனற்காவிரி *
அந்திபோலுநிறத்தார்வயல்சூழ் தென்னரங்கமே. (க)

வையமுண்டாலிலைமேவுமாயன், மணிநீண்முடி *
பைகொள்நாகத்தணையான் பயிலுமிடமென்பரால் *
தையல்நல்லார்குழல்மாலையும் மற்றவர்தடமுலை *
செய்யசாந்துங்கலந்திழிபுனல்சூழ் தென்னரங்கமே. (உ)

பண்டிவ்வையமளப்பான்சென்று மாவலிகையில்நீர்
கொண்ட * ஆழித்தடக்கைக் குறளனிடமென்பரால் *
வண்டுபாடும்மதுவார்புனல் வந்திழிகாவிரி *
அண்டநாறும்பொழில்சூழ்ந்து அழகார்தென்னரங்கமே. (ங)

விளைத்தவெம்போர் விறல்வாளரக்கன்நகர்பாழ்பட *
வளைத்தவல்வில்தடக்கையவனுக்கு இடமென்பரால் *
துளைக்கையானைமருப்பும் அகிலுங்கொணர்ந்துந்தி * முன்
திளைக்குஞ்செல்வப்புனற்காவிரிசூழ் தென்னரங்கமே. (ச)

வம்புலாங்கூந்தல்மண்டோதரிகாதலன் வான்புக *
அம்புதன்னால்முனிந்த அழகனிடமென்பரால் *
உம்பர்கோனுமுலகேழும் வந்தீண்டிவணங்கும் * நல்
செம்பொனாருமதிள்சூழ்ந்து அழகார்தென்னரங்கமே. (ரு)

கலைபுடுத்தவகலல்குல் வன்பேய்மகள்தாயென *
முலைகொடுத்தாளுயிருண்டவன் † வாழிடமென்பரால் *
குலையெடுத்தகதலிப் பொழிலூடும்வந்துந்தி * முன்
அலையெடுக்கும்புனற்காவிரிசூழ் தென்னரங்கமே. (சு)

கஞ்சன்நெஞ்சும்கடுமல்லரும் சகடமும்காலினால் *
துஞ்சவென்றசுடராழியான் † வாழிடமென்பரால் *
மஞ்சுசேர்மாளிகை நீடகில்புகையும் * ‡ மாமறையோர்
செஞ்சொல்வேள்விப்புகையுங்கமழும் தென்னரங்கமே. (எ)

ஏனமீனாமையோடு அரியும்சிறுகுறளுமாய் *
தானுமாய தரணித்தலைவனிடமென்பரால் *
வானும்மண்ணும்நிறையப் புகுந்தீண்டிவணங்கும் * நல்
தேனும்பாலுங்கலந்தன்னவர்சேர் தென்னரங்கமே. (அ)

சேயனென்றும்மிகப்பெரியன் நுண்நேர்மையினாயவிம்
$ மாயை * ஆருமறியாவகையான் இடமென்பரால் *
வேயின்முத்தும்மணியுங்கொணர்ந்து ஆர்புனற்காவிரி *
ஆயபொன்மாமதிள்சூழ்ந்து அழகார்தென்னரங்கமே. (௯)

↓↓ அல்லிமாதரமரும் திருமார்வனரங்கத்தை *
கல்லின்மன்னுமதிள் மங்கையர்கோன்கலிகன்றிசொல் *
நல்லிசைமாலைகள் நாலிரண்டுமிரண்டுமுடன் *
வல்லவர்தாம்உலகாண்டு பின்வானுலகாள்வரே. (கO)

அடிவரவு:—உந்தி வையம் பண்டு விளைத்த வம்பு கலை கஞ்சன் ஏனம் சேயன் அல்லி வெருவாதாள்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ரு - ஆம் திருமொழி - வெருவாதாள்.

திருவரங்கம். (உ)

[பிரிவாற்றாது வருந்துந் தலைவியைக்குறித்துத் தாய இரங்கிக்கூறியபாசுரம்.]

அறுசீராசிரியவிருத்தம். (காம்போதிராகம் - ஆதிதாளம்.)

↓↓ வெருவாதாள்வாய்வெருவி வேங்கடமே! வேங்கடமே! என்கின்றாளால் *
மருவாளாலென்குடங்கால்வாள்நெடுங்கண் துயில்மறந்தாள் * வண்டார்கொண
லுருவாளன்வானவர்தமுயிராளன் ஒலிதிரைநீர்ப்பௌவங்கொண்ட[ட
திருவாளன் * என்மகளைச்செய்தனகள் எங்ஙனம்நான்சிந்திக்கேனே?()

† 'வாழுமிடம்' என்றும் பாடம். ‡ 'மறையோர்' என்றே ஓதுவர்.
$ 'மாயையை' என்றும் வழங்குவர்.

கலையாளாவகலல்குல் கனவளையுங்கையாளா என்செய்கேன்நான்? *
விலையாளா அடியேனை வேண்டுதியோ? வேண்டாயோ? என்னும் * மெய்ய
மலையாளன் வானவர்தந் தலையாளன் மராமரமேழெய்தவென்றிச்
சிலையாளன் * என்மகளைச் செய்தனகள் எங்ஙனம்நான் சிந்திக்கேனே? (உ)

மானாயமென்னோக்கி வாள்நெடுங்கண்நீர்மல்கும் வளையும்சோரும் *
தேனாயநறுந்துழா யலங்கலின் திறம்பேசியுறங்காள்காண்மின் *
கானாயன்கடிமனையில் தயிருண்டுநெய்பருக நந்தன்பெற்ற
ஆனாயன் * என்மகளைச்செய்தனகள் அம்மனைமீர்! அறிகிலேனே. (ங)

தாய்வாயிற்சொற்கேளாள் தன்னாயத்தோடணையாள் தடமென்கொங்கை
யே * ஆரச்சாந்தணியாள் எம்பெருமான் திருவரங்கமெங்கே? என்னும் *
பேய்மாயமுலையுண்டிவ்வுலகுண்டபெருவயிற்றன் பேசில்நங்காய்! *
மாமாயன்என்மகளைச்செய்தனகள் மங்கைமீர்! மதிக்கிலேனே. (ச)

பூண்முலைமேல்சாந்தணியாள் பொருகயற்கண்மையெழுதாள்பூவைபேணாள் *
ஏணறியாளெத்தனையும் எம்பெருமான் திருவரங்கமெங்கே? என்னும் *
நாண்மலராள்நாயகனாய் நாமறியவாய்ப்பாடிவளர்ந்தநம்பி *
ஆண்மகனாயென்மகளைச்செய்தனகள் அம்மனைமீர்! அறிகிலேனே. (ரு)

தாதாடுவனமாலை தாரானோ? என்றென்றேதளர்ந்தாள்காண்மின் *
யாதானுமொன்றுரைக்கில்எம்பெருமான் திருவரங்கமென்னும் * பூமேல்
மாதாளன்குடமாடிமதுசூதன் மன்னர்க்காய்முன்னம்சென்ற
தூதாளன் * என்மகளைச்செய்தனகள் எங்ஙனம்நான்சொல்லுகேனே? ()

வாராளுமிளங்கொங்கைவண்ணம்வேறாயினவாறெண்ணாள் * எண்ணில்
பேராளன்பேரல்லால்பேசாள் இப்பெண்பெற்றேனென்செய்கேன்நான்? *
தாராளன்தண்குடந்தைநகராளன் ஐவர்க்காயமரிலுய்த்த
தேராளன் * என்மகளைச்செய்தனகள் எங்ஙனம்நான்செப்புகேனே? (எ)

உறவாதுமிலளென்றென்று ஒழியாதுபலரேசுமலராயிற்றால் *
மறவாதேயெப்பொழுதும் மாயவனே! மாதவனே! என்கின்றாளால் *
பிறவாதபேராளன்பெண்ணாளன்மண்ணாளன் விண்ணோர்தங்கள்
அறவாளன் * என்மகளைச்செய்தனகள் அம்மனைமீர்! அறிகிலேனே. (அ)

பந்தோடுகழல்மருவாள் பைங்கிளியும்பாலூட்டாள்பாவைபேணாள் *
வந்தானோ! திருவரங்கன் வாரானோ! என்றென்றேவளையும்சோரும் *
சந்தோகன்பௌழியன் ஐந்தழலோம்புதைத்திரியன்சாமவேதி *
† அந்தோ! வந்தென்மகளைச்செய்தனகள் அம்மனைமீர்! அறிகிலேனே.

† 'அந்தோவென்பொன்மகளை' என்பது பாடாந்தரம்.

‡‡சேலுகளும்வயல்புடைசூழ் திருவரங்கத்தம்மானைச்சிந்தைசெய்த *
நீலமலர்க்கண்மடவாள்நிறையழிவைத் தாய்மொழிந்தவதனை*நேரார்
காலவேற்பரகாலன் கலிகன்றியொலிமாலைகற்றுவல்லார் *
மாலைசேர்வெண்குடைக்கீழ்மன்னவராய்ப் பொன்னுலகில்வாழ்வர்தாமே.(௧௦)

அடிவரவு:—வெருவாதாள் கலை மான் தாய் பூண் தாதாடு வாராளும் உறவு பருதோம் சேல் கைம்மானம்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௬ - ஆம் திருமொழி - கைம்மானம்.

திருவரங்கம். (௩)

கலிவிருத்தம். (மாவிளம் - நுபகதானம்.)

‡‡ கைம்மானமழகளிற்றைக் கடற்கிடந்தகருமணியை *
மைம்மானமரதகத்தை மறையுரைத்ததிருமாலை *
எம்மானையெனக்கென்றுமினியானைப் பனிகாத்த
அம்மானை * யான்கண்டது அணிநீர்த்தென்னரங்கத்தே. (௧)

‡‡ பேரானைக் குறுங்குடியெம்பெருமானை * திருத்தண்கா
லூரானைக் கரம்பனூருத்தமனை * முத்திலங்கு
காரார்திண்கடலேழும் மலையேழிவ்வுலகேழுண்டும் *
ஆராதென்றிருந்தானைக் கண்டதுதென்னரங்கத்தே. (௨)

ஏனாகியுலகிடந்து அன்றுஇருநிலனும்பெருவிசும்பும் *
தானாயபெருமானைத் தன்னடியார்மனத்தென்றும் *
தேனாகியமுதாகித் திகழ்ந்தானை * மகிழ்ந்தொருகால்
ஆனாயனானானைக் கண்டதுதென்னரங்கத்தே (௩)

வளர்ந்தவனைத்தடங்கடலுள் வலியுருவில்திரிசகடம் *
† தளர்ந்ததிரவுதைத்தவனைத் தரியாதன்றிரணியனைப்
பிளந்தவனை * பெருநிலமீரடிநீட்டிப் பண்டொருநாள்
அளந்தவனை * யான்கண்டது அணிநீர்த்தென்னரங்கத்தே. (௪)

நீரழலாய் நெடுநிலனாய்நின்றானை * அன்றுஅரக்க
னூரழலாலுண்டானைக் கண்டார்பின்காணுமே *
பேரழலாய்ப்பெருவிசும்பாய்ப் பின்மறையோர்மந்திரத்தின் *
ஆரழலாலுண்டானைக் கண்டதுதென்னரங்கத்தே. (௫)

† 'தளர்ந்துதிர' என்றும் பாடாந்தரம்.

தஞ்சினத்தைத்தவிர்த்தடைந்தார் தவநெறியை * தரியாது
கஞ்சனைக்கொன்று அன்றுலகமுண்டுமிழ்ந்தகற்பகத்தை *
வெஞ்சினத்தகொடுந்தொழிலோன் விசையுருவையசைவித்த *
அஞ்சிறைப்புட்பாகனை யான்கண்டதுதென்னரங்கத்தே. (௬)

சிந்தனையைத்தவநெறியைத் திருமாலை * பிரியாது
வந்தெனதுமனத்திருந்த வடமலையை * வரிவண்டார்
கொந்தணைந்தபொழிற்கோவல் உலகளப்பானடிநிமிர்த்த
அந்தணனை * யான்கண்டது அணிநீர்த்தென்னரங்கத்தே. (௭)

துவரித்தவுடையவர்க்கும் தூய்மையில்லாச்சமணர்க்கும் *
அவர்கட்குஅங்கருளில்லாவருளானை * தன்னடைந்த
எமர்கட்குமடியேற்கும் எம்மாற்குமெம்மனைக்கும் *
அமரர்க்கும்பிரானாரைக் கண்டதுதென்னரங்கத்தே. (௮)

பொய்வண்ணம்மனத்தகற்றிப் புலனைந்தும்செலவைத்து *
மெய்வண்ணம்நினைந்தவர்க்கு மெய்ந்நின்றவித்தகனை *
மைவண்ணம்கருமுகில்போல் திகழ்வண்ணமரதகத்தின் *
அவ்வண்ணவண்ணனை யான்கண்டதுதென்னரங்கத்தே. (௯)

↓↓ ஆமருவிநிரைமேய்த்த அணியரங்கத்தம்மானை *
காமருசீர்க்கலிகன்றி ஒலிசெய்தமலிபுகழ்சேர் *
நாமருவுதமிழ்மாலை நாலிரண்டோடிரண்டினையும் *
தாமருவிவல்லார்மேல் சாரா தீ † வினைதானே. (௧௦)

அடிவரவு:—கைம்மானம் பேரானை ஏனாகி வளர்ந்தவனை நீர் தம் சிந்தனை துவரித்த பொய் ஆமருவி பண்டை.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௮ - ஆம் திருமொழி - பண்டை.

திருவரங்கம். (௪)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (ஸாவேரிராகம் - ஆதிதாளம்.)

↓↓ பண்டைநான்மறையும்வேள்வியும் கேள்விப்
பதங்களும் பதங்களின்பொருளும் *
பிண்டமாய்விரிந்தபிறங்கொளியனலும்
பெருகியபுனலொடுநிலனும் *

† 'வினைதாமே' எனவும் ஓதுவர்.

கொண்டல்மாருதமும்குரைகடலேழும்
ஏழுமாமலைகளும்விசும்பும் *
அண்டமும்தானாய்நின்றவெம்பெருமான்
அரங்கமாநகரமர்ந்தானே. (௧)

இந்திரன்பிரமனீசனென்றிவர்கள்
எண்ணில்பல்குணங்களேயியற்ற *
தந்தையும்தாயும்மக்களும்மிக்க
சுற்றமும் சுற்றிநின்றகலாப்
பந்தமும் * பந்தமறுப்பதோர்மருந்தும்
பான்மையும், பல்லுயிர்க்கெல்லாம் *
அந்தமும்வாழ்வுமாயவெம்பெருமான்
அரங்கமாநகரமர்ந்தானே. (௨)

மன்னுமாநிலனும்மலைகளும்கடலும்
வானமும்தானவருலகும் *
துன்னுமாயிருளாய்த்துலங்கொளிசுருங்கித்
தொல்லைநான்மறைகளும்மறைய *
பின்னும்வானவர்க்கும்முனிவர்க்கும்நல்கிப்
பிறங்கிருள்நிறங்கெட * ஒருநாள்
அன்னமாயன்றங்கருமறைபயந்தான்
அரங்கமாநகரமர்ந்தானே. (௩)

மாயிருங்குன்றமொன்றுமத்தாக
மாசுணமதனொடுமளவி *
பாயிரும்பௌவம்பகடுவிண்டலறப்
படுதிரைவிசும்பிடைப்படர *
சேயிருவிசும்பும்திங்களும்சுடரும்
தேவரும்தாமுடன்திசைப்ப *
ஆயிரந்தோளாலலைகடல்கடைந்தான்
அரங்கமாநகரமர்ந்தானே. (௪)

எங்ஙனேயுய்வர்? தானவர்நினைந்தால்
இரணியனிலங்குபூணகலம் *
பொங்குவெங்குருதிபொன்மலைபிளந்து,
பொழிதருமருவிபொத்திழிய *

வெங்கண்வாளெயிற்றோர்வெள்ளிமாவிலங்கல்
விண்ணுறக்கனல்விழித்தெழுந்தது *
அங்ஙனேயொக்கவரியுருவானான்
அரங்கமாநகரமர்ந்தானே. (ரு)

ஆயிரங்குன்றம்சென்றுதொக்கனைய
அடல்புரையெழில்திகழ்திரள்தோள் *
ஆயிரந்துணியவடல்மழுப்பற்றி
மற்றவனகல்விசும்பணைய *
ஆயிரம்பெயராலமரர்சென்றிறைஞ்ச
அறிதுயிலலைகடல்நடுவே *
ஆயிரஞ்சுடர்வாயரவணைத்துயின்றான்
அரங்கமாநகரமர்ந்தானே. (சு)

சுரிகுழற்கனிவாய்த்திருவினைப்பிரித்த
கொடுமையிற்கடுவிசையரக்கன் *
எரிவிழித்திலங்குமணிமுடிபொடிசெய்து
இலங்கைபாழ்படுப்பதற்கெண்ணி *
வரிசிலைவளையவடுசரந்துரந்து
மறிகடல்நெறிபட * மலையால்
அரிகுலம்பணிகொண்டலைகடலடைத்தான்
அரங்கமாநகரமர்ந்தானே. (எ)

↓↓ ஊழியாயோமத்துச்சியாய் ஒருகா
லுடை யதேரொருவனாய் * உலகில்
சூழிமால்யானைத்துயர்கெடுத்து
இலங்கைமலங்கவன்றடுசரந்துரந்து *
பாழியால்மிக்கபார்த்தனுக்கருளிப்
பகலவனொளிகெட * பகலே
ஆழியாலன்றங்காழியைமறைத்தான்
அரங்கமாநகரமர்ந்தானே. (அ)

பேயினார்முலையூண்பிள்ளையாய் ஒருகால்
பெருநிலம்விழுங்கி * அதுமிழ்ந்த
வாயனாய் மாலாயாலிலைவளர்ந்து
மணிமுடிவானவர்தமக்குச்

சேயனாய் * அடியேற்கணியனாய்வந்து
என்சிந்தையுள்வெந்துயரறுக்கும் *
ஆயனாயன்றுகுன்றமொன்றெடுத்தான்
அரங்கமாநகரமர்ந்தானே. (௯)

↓↓ பொன்னும்மாமணியும்முத்தமுஞ்சுமந்து
பொருதிரைமாநதிபுடைசூழ்ந்து *
அன்னமாடலவுமலைபுனல்சூழ்ந்த
அரங்கமாநகரமர்ந்தானை *
மன்னுமாமாடமங்கையர்தலைவன்
மானவேற்கலியன்வாயொலிகள் *
பன்னியபனுவல்பாடுவார்நாளும்
பழவினைபற்றறுப்பாரே. (௧௦)

அடிவரவு:—பண்டை இந்திரன் மன்னு மாயிரும் எங்ஙனே ஆயிரம் சுரி ஊழி பேயினார் பொன்னும் ஏழை.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

அ - ஆந் திருமொழி - ஏழையேதலன்.

திருவரங்கம். (ரு)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (தந்யாசிராகம் - ஆதிதாளம்.)

↓↓ ஏழையேதலன்கீழ்மகனென்னாது
இரங்கி மற்றவற்கின்னருள்சுரந்து *
மாழைமான்மடநோக்கியுன்தோழி
உம்பியெம்பியென்றொழிந்திலை * உகந்து,
தோழன்நீயெனக்கிங்கொழியென்ற
சொற்கள்வந்து அடியேன்மனத்திருந்திட *
ஆழிவண்ண! நின்னடியிணையடைந்தேன்
அணிபொழில்திருவரங்கத்தம்மானே! (௧)

வாதமாமகன்மர்க்கடம்விலங்கு
மற்றோர்சாதியென்றொழிந்திலை * உகந்து
காதலாதரங்கடலினும்பெருகச் செய்
தகவினுக்கில்லைகைம்மாறென்று *

கோதில்வாய்மையினாயொடுமுடனே
உண்பனானென்றவொண்பொருள் * எனக்கும்
ஆதல்வேண்டுமென்றடியிணையடைந்தேன்
அணிபொழில்திருவரங்கத்தம்மானே ! (உ)

கடிகொள்பூம்பொழிற்காமருபொய்கை
வைகுதாமரைவாங்கியவேழம் *
முடியும்வண்ணமோர்முழுவலிமுதலை
பற்ற மற்றதுநின்சரண்நினைப்ப *
கொடியவாய்விலங்கின்னுயிர்மலங்கக்
கொண்டசீற்றமொன்றுண்டுளதறிந்து * உன்
அடியனேனும்வந்தடியிணையடைந்தேன்
அணிபொழில்திருவரங்கத்தம்மானே ! (ங)

நஞ்சுசோர்வதோர்வெஞ்சினவரவம்
வெருவிவந்துநின்சரணெனச்சரணா *
நெஞ்சிற்கொண்டுநின்னஞ்சிறைப்பறவைக்கு
அடைக்கலம்கொடுத்தருள்செய்ததறிந்து *
வெஞ்சொலாளர்கள்நமன்தமர்கடியர்
கொடியசெய்வனவுள * அதற்கடியேன்
அஞ்சிவந்துநின்னடியிணையடைந்தேன்
அணிபொழில்திருவரங்கத்தம்மானே ! (ச)

மாகமாநிலம்முழுதும்வந்திறைஞ்சும்
மலரடிகண்டமாமறையாளன் *
தோகைமாமயிலன்னவரின்பம்
துற்றிலாமையிலத்த ! இங்கொழிந்து *
போகம்நீயெய்திப்பின்னும்நம்மிடைக்கே
போதுவாயென்றபொன்னருள் * எனக்கும்
ஆகவேண்டுமென்றடியிணையடைந்தேன்
அணிபொழில்திருவரங்கத்தம்மானே ! (ரு)

மன்னுநான்மறைமாமுனிபெற்ற
மைந்தனை மதியாதவெங்கூற்றந்
தன்னையஞ்சி * நின்சரணெனச்சரணாய்த்
தகவில்காலனையுகமுனிந்தொழியா *

பின்னையென்றும்நின் திருவடிபிரியாவண்ணம்
எண்ணியபேரருள் * எனக்கும்
அன்னதாகுமென்றடியிணையடைந்தேன
அணிபொழில் திருவரங்கத்தம்மானே ! (௬)

ஓதுவாய்மையுமுவனியப்பிறப்பும
உனக்குமுன் தந்தவந்தணனொருவன் *
காதலென்மகன் புகலிடங்காணேன்
கண்டுநீதருவாயெனக்கென்று *
கோதில்வாய்மையினானுனைவேண்டிய
குறைமுடித்தவன் சிறுவனைக்கொடுத்தாய் *
ஆதலால்வந்துன்னடியிணையடைந்தேன்
அணிபொழில திருவரங்கத்தம்மானே ! (௭)

வேதவாய்மொழியந்தணனொருவன்
எந்தை! நின் சரண், என்னுடைமனைவி *
காதல்மக்களைப்பயத்தலும்காணாள்
† கடியதோர்தெய்வங்கொண்டொளிக்குமென்றழைப்ப *
ஏதலார்முன்னேயின்னருளவற்குச்செய்து
உன்மக்கள்மற்றிவரென்றுகொடுத்தாய் *
ஆதலால்வந்துன்னடியிணையடைந்தேன்
அணிபொழில்திருவரங்கத்தம்மானே ! (அ)

‖ துளங்குநீண்முடியரசர்தம்குரிசில்
தொண்டைமன்னவன் திண்திறலொருவற்கு *
உளங்கொளன்பினோடின்னருள்சுரந்து
அங்கோடுநாழிகையேழுடனிருப்ப *
வளங்கொள்மந்திரம்மற்றவற்கருளிச்
செய்தவாறு அடியேனறிந்து * உலக
மளந்தபொன்னடியேயடைந்துய்ந்தேன்
அணிபொழில திருவரங்கத்தம்மானே ! (௯)

‖ மாடமாளிகைசூழ்திருமங்கை
மன்னன் ஒன்னலர்தங்களைவெல்லும் *
ஆடல்மாவலவன்கலிகன்றி
அணிபொழில்திருவரங்கத்தம்மானை *

† 'கடியதெய்வம்' என்றும் பாடம்.

நீடுதொல்புகழாழிவல்லானை
எந்தையைநெடுமாலைநினைந்த *
பாடல்பத்திவைபாடுமின்தொண்டீர் !
பாட | நும்மிடைப்பாவம்நில்லாவே.   (கo)

அடிவரவு:—ஏழை வாதம் கடி நஞ்சு மாகம் மனழு ஒது வேதம் துளங்கு மாடம் கை.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

கூ - ஆந் திருமொழி - கையிலங்கு.

திருப்பேர்நகர்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (அடிதோறும் - ஐம்மைந்தளம்.)

‡ கையிலங்காழி ‡ சங்கன்கருமுகில்திருநிறத்தன் *
பொய்யிலன்மெய்யன் தன்தாளடைவரேலடிமையாக்கும் *
செய்யலர்கமலமோங்கு செறிபொழில்தென்திருப்பேர் *
பையரவணையான்நாமம் பரவிநானுய்ந்தவாறே !   (க)

வங்கமார்கடல்களேழும் மலையும்வானகமும்மற்றும் *
அங்கண்மாஞாலமெல்லாம் அமுதுசெய்துமிழ்ந்தவெந்தை *
திங்கள்மாமுகிலணவு செறிபொழில்தென்திருப்பேர் *
எங்களமாலிறைவன்நாமம் எத்திநானுய்ந்தவாறே !   (உ)

ஒருவனையுந்திப்பூமேல் ஓங்குவித்து, ஆகந்தன்னால் *
ஒருவனைச்சாபம்நீக்கி உமைபாகமொன்றுவிட்டான் *
பெருவரைமதிள்கள்சூழ்ந்த பெருநகரரவணைமேல் *
கருவரைவண்ணன் § தென்பேர் கருதிநானுய்ந்தவாறே !   (ங)

ஊனமர்தலையொன்றேந்தி உலகெலாம்திரியுமீசன் *
ஈனமர்சாபம்நீக்காயென்ன ஒண்புனலையீந்தான் *
தேனமர்பொழில்கள்சூழ்ந்த செறிவயல்தென்திருப்பேர் *
வானவர்தலைவன்நாமம் வாழ்த்திநானுய்ந்தவாறே !   (ச)

வக்கரன்வாய்முன்கீண்ட மாயனே ! என்றுவானோர்
புக்கு * அரண்தந்தருளாயென்னப் பொன்னாகத்தானை *
நக்கரியுருவமாகி நகங்கிளர்ந்திடந்துகந்த *
சக்கரச்செல்வன்தென்பேர்த் தலைவன்தாளடைந்துய்ந்தேனே.   (ரு)

† 'நும்முடை' என்பதும் பாடம். ‡ 'சங்கம்' என்பது வ்யாக்யாநபாடம்.
§ 'தன்பேர்' என்பது வ்யாக்யாநபாடம்.

விலங்கலாற்கடலடைத்து விளங்கிழைபொருட்டு * வில்லால்
இலங்கைமாநகர்க்கிறைவன் இருபதுபுயம்துணித்தான் *
நலங்கொள்நான்மறைவல்லார்கள் ஓத்தொலியேத்தக்கேட்டு *
மலங்குபாய்வயல்திருப்பேர் மருவிநான்வாழ்ந்தவாறே! (சு)

வெண்ணெய்தானமுதுசெய்ய வெகுண்டுமத்தாய்ச்சியோச்சி *
கண்ணியார்குறுங்கயிற்றால் கட்டவெட்டென்றிருந்தான் *
திண்ணமாமதிள்கள்சூழ்ந்த தென்திருப்பேருள் * வேலை
வண்ணனார்நாமம் நாளும்வாய்மொழிந்துய்ந்தவாறே! (எ)

அம்பொனாருலகமேழுமறிய ஆய்ப்பாடிதன்னுள் *
கொம்பனார்பின்னைகோலம் கூடுதற்கேறுகொன்றான் *
செம்பொனார்மதிள்கள்சூழ்ந்த தென்திருப்பேருள்மேவும் *
எம்பிரான்நாமம் நாளுமேத்திநானுய்ந்தவாறே! (அ)

நால்வகைவேதம்ஐந்துவேள்வி ஆறங்கம்வல்லார் *
மேலைவானவரில்மிக்க வேதியர்ஆதிகாலம் *
சேலுகள்வயல்திருப்பேர்ச் செங்கண்மாலோடும்வாழ்வார் *
சீலமாதவத்தர்சிந்தையாளி என்சிந்தையானே. (கூ)

↓↓ வண்டறைபொழில்திருப்பேர் வரியரவணையில் * பள்ளி
கொண்டுறைகின்றமாலைக் கொடிமதிள்மாடமங்கை *
திண்திறல்தோட்கலியன் செஞ்சொலால்மொழிந்தமாலை *
கொண்டிவைபாடியாடக் கூடுவர்நீள்விசும்பே. (கO)

அடிவரவு:—கை வஞ்சம் ஒருவனை ஊன் வக்கரன் விலங்கல் வெண்ணெய் அம்பொன் நால்வகை வண்டறை தீதறு.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

கO - ஆம் திருமொழி - தீதறு.

திருநந்திபுரவிண்ணகரம்.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம். (சுருட்டிராகம் - ஜம்பைதாளம்.)

↓↓ தீதறுநிலத்தொடெரிகாலினொடு நீர்கெழுவிசும்புமவையாய் *
மாசறுமனத்தினொடுஉறக்கமொடிறக்கை யவையாயபெருமான *
தாய் † செறவுளைந்துதயிருண்டுகுடமாடு தடமார்வர், தகைசேர் *
நாதனுறைகின்றநகர் நந்திபுரவிண்ணகரம்நண்ணுமனமே! (க)

---

† 'சிற' என்று சிலர் பாடமோதுவார்; அப்பொழுது 'சீற' என்பது குறுகியதென்க.

உய்யும்வகையுண்டுசொனசெய்யில் உலகேழும்ஒழியாமைமுனநாள் *
மெய்யினளவேயமுதுசெய்யவல ஐயனவன்மேவுநகர்தான் *
மையவரிவண்டுமதுவுண்டுகிளையோடு மலர்கிண்டி, அதன்மேல் *
நைவளம்நவிற்றுபொழில் நந்திபுரவிண்ணகரம்நண்ணுமனமே! (௨)

உம்பருலகேழுகடலேழுமலையேழும் ஒழியாமைமுனநாள் *
தம்பொன்வயிறாரளவுமுண்டுஅவையுமிழ்ந்த தடமார்வர், தகைசேர் *
வம்புமலர்கின்றபொழில் பைம்பொன்வருதும்பிமணிகங்குல்வயல்சூழ் *
நம்பனுறைகின்றநகர் நந்திபுரவிண்ணகரம்நண்ணுமனமே! (௩)

பிறையினொளியெயிறிலகமுறுகியெதிர்பொருதுமென வந்தஅசுரர் *
இறைகளவைநெறுநெறெனவெறிய அவர்வயிறழல நின்றபெருமான் *
சிறைகொள்மயில்குயில்பயிலமலர்களுகஅளிமுரல அடிகொள்நெடுமா *
நறைசெய்பொழில்மழைதவழும் நந்திபுரவிண்ணகரம்நண்ணுமனமே!

மூளவெரிசிந்திமுனிவெய்தி அமர்செய்துமென வந்தவசுரர் *
தோளுமவர்தாளுமுடியோடுபொடியாக நொடியாமளவெய்தான் *
வாளும்வரிவில்லும்வளையாழிகதைசங்கமிவை அங்கையுடையான் *
நாளுமுறைகின்றநகர் நந்திபுரவிண்ணகரம்நண்ணுமனமே! (௫)

தம்பியொடுதாமொருவர்தன்துணைவி காதல்துணையாகமுனநாள் *
வெம்பியெரிகானகமுலாவுமவர் தாமினிதுமேவுநகர்தான் *
கொம்புகுதிகொண்டுகுயில்கூவமயிலாலும் எழிலார்புறவுசேர் *
நம்பியுறைகின்றநகர் நந்திபுரவிண்ணகரம்நண்ணுமனமே! (௬)

தந்தைமனமுந்துதுயர்நந்தஇருள் வந்தவிறல் நந்தன்மதலை *
எந்தையிவனென்றமரர்கந்தமலர்கொண்டுதொழ நின்றநகர்தான் *
மந்தமுழவோசைமழையாகவெழுகார் மயில்களாடுபொழில்சூழ் *
நந்திபணிசெய்தநகர் நந்திபுரவிண்ணகரம்நண்ணுமனமே! (௭)

எண்ணில்நினைவெய்தியினியில்லையிறையென்று முனியாளர்திருவார் *
பண்ணில்மலிகீதமொடுபாடிஅவராடலொடு கூடஎழிலார் *
மண்ணிலிதுபோலநகரில்லையெனவானவர்கள் தாம்மலர்கள்தூய் *
நண்ணியுறைகின்றநகர் நந்திபுரவிண்ணகரம்நண்ணுமனமே! (௮)

வங்கமலிபௌவமதுமாமுகடினுச்சிபுக, மிக்கபெருநீர் *
அங்கமழியாரவனதாணைதலைசூடும் அடியாரறிதியேல் *
பொங்குபுனலுந்துமணிகங்குலிருள்சீறுமொளி எங்குமுளதால் *
நங்கள்பெருமானுறையும் நந்திபுரவிண்ணகரம்நண்ணுமனமே! (௯)

↓↓ நறைசெய்பொழில்மழைதவழும் நந்திபுரவிண்ணகரம்நண்ணியுறையு
உறைகொள்புகராழிசுரிசங்கமவை அங்கையுடையானை*ஒளிசேர்[ம்*
கறைவளரும்வேல்வல்ல கலியனொலிமாலையிவையைந்துமைந்தும் *
முறையிலிவைபயிலவல அடியவர்கள்கொடுவினைகள் முழுதகலுமே. ()

அடிவரவு:—தீது உய்யும் உம்பர் பிறை மூளை தம்பியொடு தநதை எண்ணில் வங்கம் நறைசெய் வண்டு.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ஆறும்பத்து.

௧ - ஆந் திருமொழி - வண்டுணும்.

திருவிண்ணகர். (௧)

வஞ்சிவிருத்தம். (புன்னாகவராளிராகம் - அடதாளம்.)

↓↓ வண்டுணுநறுமலரிண்டைகொண்டு *
பண்டைநம்வினைகெடவென்று * அடிமேல்
தொண்டருமமரரும்பணியநின்று * அங்கு
அண்டமொடகலிடமளந்தவனே ! *
† ஆண்டாய் ! உனைக்காண்பதோர் அருளெனக்கருளுதியேல் *
வேண்டேன்மனைவாழ்க்கையை விண்ணகர்மேயவனே ! (க)

அணைசெய்து அலைகடல்கடைந்து * அதனுள்
கண்ணுதல்நஞ்சுண்ணக்கண்டவனே ! *
விண்ணவரமுதுண அமுதில்வரும் *
பெண்ணமுதுண்டஎம்பெருமானே ! *
ஆண்டாய் ! உனைக்காண்பதோர் அருளெனக்கருளுதியேல் *
வேண்டேன்மனைவாழ்க்கையை விண்ணகர்மேயவனே ! (௨)

குழல்நிறவண்ண ! நின்கூறுகொண்ட *
தழல்நிறவண்ணன் நண்ணார்நகரம்
விழ * நனிமலைசிலைவளைவுசெய்து * அங்கு
அழல்நிற அம்பதுவானவனே ! *
ஆண்டாய் ! உனைக்காண்பதோர் அருளெனக்கருளுதியேல் *
வேண்டேன்மனைவாழ்க்கையை விண்ணகர்மேயவனே ! (௩)

† இந்த அளவடியிரண்டும் தனிமகுடம்.

நிலவொடுவெயில்நிலவிருசுடரும் *
உலகமுமுயிர்களும்உண்டொருகால் *
கலைதருகுழவியின்உருவினையாய் *
அலைகடலாலிலைவளர்ந்தவனே! *
ஆண்டாய்! உனைக்காண்பதோர் அருளெனக்கருளுதியேல் *
வேண்டேன்மனைவாழ்க்கையை விண்ணகர்மேயவனே! (ச)

பாரெழுகடலெழுமலையெழுமாய் *
சீர்கெழும்இவ்வுலகேழுமெல்லாம் *
ஆரெழுவயிற்றினிலடக்கிநின்று * அங்கு
ஓரெழுத்தோருருவானவனே! *
ஆண்டாய்! உனைக்காண்பதோர் அருளெனக்கருளுதியேல் *
வேண்டேன்மனைவாழ்க்கையை விண்ணகர்மேயவனே! (ரு)

கார்கெழுகடல்களும்மலைகளுமாய் *
ஏர்கெழுமுலகமுமாகி * முத
லார்களும்அறிவருநிலையினையாய் *
சீர்கெழுநான்மறையானவனே! *
ஆண்டாய்! உனைக்காண்பதோர் அருளெனக்கருளுதியேல *
வேண்டேன்மனைவாழ்க்கையை விண்ணகர்மேயவனே! (சா)

உருக்குறுநறுநெய்கொண்டாரழலில் *
இருக்குறுமந்தணர்சந்தியின்வாய் *
பெருக்கமொடமரர்களமரநல்கும் *
இருக்கினில்இன்னிசையானவனே! *
ஆண்டாய்! உனைக்காண்பதோர் அருளெனக்கருளுதியேல் *
வேண்டேன்மனைவாழ்க்கையை விண்ணகர்மேயவனே! (எ)

காதல்செய்திளையவர்கலவிதரும் *
வேதனைவினையதுவெருவுதலாம் *
ஆதலினுனதடியணுகுவன்நான் *
போதலர்நெடுமுடிப்புண்ணியனே! *
ஆண்டாய்! உனைக்காண்பதோர் அருளெனக்கருளுதியேல் *
வேண்டேன்மனைவாழ்க்கையை விண்ணகர்மேயவனே! (அ)

சாதலும்பிறத்தலுமென்றிவற்றை *
காதல்செய்யாதுஉனகழலடைந்தேன் *
ஓதல்செய்நான்மறையாகி * உம்பர்
ஆதல்செய்மூவுருவானவனே! *

ஆண்டாய்! உனைக்காண்பதோர் அருளெனக்கருளுதியேல் *
வேண்டேன்மனைவாழ்க்கையை விண்ணகர்மேயவனே! (௯)

↓↓ பூமருபொழிலணிவிண்ணகர்மேல *
காமருசீர்க்கலிகன்றிசொன்ன *
பாமருதமிழிவைபாடவல்லார் *
வாமனனடியிணைமருவுவரே. (௧௦)

அடிவரவு:—வண்டு அண்ணல் குழல் நிலவொடு பார கரா உருக்குறு காதல் சாதல் பூமரு பொறுத்தேன்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௨ - ஆம் திருமொழி - பொறுத்தேன்.

திருவிண்ணகர். (௨)

கலிநிலைத்துறை. (நாதநாமக்கிரியைராகம் - ஆதிதாளம்.)

↓↓ பொறுத்தேன்புன்சொல்நெஞ்சில் பொருளின்பமெனவிரண்டும்
இறுத்தேன் * ஐம்புலன்கட்கிடனாயின வாயிலொட்டி
அறுத்தேன் * ஆர்வச்செற்றமவை † தம்மை மனத்தகற்றி
வெறுத்தேன் * நின்னடைந்தேன் திருவிண்ணகர்மேயவனே! (௧)

மறந்தேனுன்னைமுன்னம் மறந்தமதியின்மனத்தால் *
இறந்தேனெத்தனையும் அதனாலிடும்பைக்குழியில *
பிறந்தேயெய்த்தொழிந்தேன் பெருமான்! திருமார்பா! *
சிறந்தேன்நின்னடிக்கே திருவிண்ணகர்மேயவனே! (௨)

மானேய்நோக்கியர்தம வயிற்றுக்குழியிலுழைக்கும் *
‡ ஊனேயாக்கைதன்னை உதவாமையுணர்ந்துணர்ந்து *
வானே! மாநிலமே! வந்துவந்தென்மனத்திருந்த
தேனே! * நின்னடைந்தேன் திருவிண்ணகர்மேயவனே! (௩)

பிறிந்தேன்பெற்றமக்கள்பெண்டிரென்றிவர் பின்னுதவா
தறிந்தேன் * நீபணித்தவருளென்னும் ஒள்வாளுருவி
எறிந்தேன் * ஐம்புலன்களிடர்தீர எறிந்துவந்து
செறிந்தேன் * § நின்னடிக்கே திருவிண்ணகர்மேயவனே! (௪)

---

† ‘தன்னை’ எனச் சிலர் பாடமோதுவர்.

‡ ‘ஊனேராக்கை’ என்பதும் பாடம்.

§ ‘நின்னடைந்தேன்’ என்று சில ஸ்ரீகோசங்கள்.

பாண்தேன்வண்டறையும்குழலார்கள் பல்லாண்டிசைப்ப *
ஆண்டார்வையமெல்லாம் அரசாகி * முன்னாண்டவரே
மாண்டாரென்றுவந்தார் அந்தோ! மனைவாழ்க்கைதன்னை
வேண்டேன் * நின்னடைந்தேன் திருவிண்ணகர்மேயவனே! (௫)

கல்லாவைம்புலன்களவை கண்டவாறுசெய்யகில்லேன் *
மல்லா! மல்லமருள்மல்லர்மாள மல்லடர்த்த
மல்லா! * மல்லலம்சீர் மதிள்நீரிலங்கையழித்த
வில்லா! * நின்னடைந்தேன் திருவிண்ணகர்மேயவனே! (௬)

வேறாயானிரந்தேன் வெகுளாதுமனக்கொளெந்தாய்! *
ஆறாவெந்நரகத்து அடியேனையிடக்கருதி *
கூறாஐவர்வந்து குமைக்கக்குடிவிட்டவரை *
தேறாதுன்னடைந்தேன் திருவிண்ணகர்மேயவனே! (௭)

தீவாய்வல்வினையார் உடன்நின்றுசிறந்தவர்போல் *
மேவாவெந்நரகத்து † இடவுற்றுவிரைந்துவந்தார் *
மூவாவானவர்தம்முதல்வா! மதிகோள்விடுத்த
தேவா! * நின்னடைந்தேன் திருவிண்ணகர்மேயவனே! (௮)

போதார்தாமரையாள் புலவிக் குலவானவர்தம்
கோதா! * கோதில்செங்கோல் குடைமன்னரிடைநடந்த
தூதா! * தூமொழியாய்! சுடர்போலென்மனத்திருந்த
வேதா! * நின்னடைந்தேன் திருவிண்ணகர்மேயவனே! (௯)

†† தேனார்பூம்புறவில் திருவிண்ணகர்மேயவனை *
வானாருமதிள்சூழ் வயல்மங்கையர்கோன், * மருவார்
ஊனார்வேற்கலியன் ஒலிசெய்தமிழ்மாலைவல்லார் *
கோனாய், வானவர்தம் கொடிமாநகர்கூடுவரே. (௧௦)

அடிவரவு:—பொறுத்தேன் மறந்தேன் மானேய பிறிந்தேன் பாண்
கல்லா வேறா தீவாய் போதார் தேனார் துறப்பேன்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

† 'இடருற்று' என்று ஓதுவர்.

௩ - ஆந் திருமொழி - துறப்பேன்.

திருவிண்ணகர். (௩)

கலிநிலைத்துறை (அநந்தபைரவிராகம் - ஆதிதாளம்.)

‡‡ துறப்பேனல்லேன் இன்பம், துறவாது * நின்னுருவம்
மறப்பேனல்லேன் என்றும்மறவாது * யானுலகில்
பிறப்பேனாகவெண்ணேன் பிறவாமைபெற்றது * நின்
திறத்தேனாதன்மையால் திருவிண்ணகரானே ! (௧)

துறந்தேனார்வச்செற்றச்சுற்றம் துறந்தமையால் *
சிறந்தேன்நின்னடிக்கேயடிமை, திருமாலே ! *
அறந்தானாய்த்திரிவாய் ! உன்னையென்மனத்தகத்தே *
திறம்பாமற்கொண்டேன் திருவிண்ணகரானே ! (௨)

மானேய்நோக்குநல்லார் மதிபோல்முகத்துலவும் *
ஊனேய்கண்வாளிக்கு உடைந்தோட்டந்துஉன்னடைந்தேன் *
கோனே ! குறுங்குடியுட் குழகா ! திருநறையூர்த்
தேனே ! * வருபுனல்சூழ் திருவிண்ணகரானே ! (௩)

சாந்தேந்துமென்முலையார் தடந்தோள்புணரின்பவெள்ளத்
தாழ்ந்தேனை * அருநரகத்தழுந்தும் பயன்படைத்தேன் *
போந்தேன்புண்ணியனே ! உன்னையெய்தியென் தீவினைகள்
தீர்ந்தேன் * நின்னடைந்தேன் திருவிண்ணகரானே ! (௪)

மற்றோர்தெய்வமெண்ணேன் உன்னையென்மனத்துவைத்துப்
பெற்றேன் * பெற்றதுவும் பிறவாமையெம்பெருமான் ! *
வற்றாநீள்கடல்சூழ் இலங்கையிராவணனைச்
செற்றாய் ! * கொற்றவனே ! திருவிண்ணகரானே ! (௫)

மையொண்கருங்கடலும் நிலனுமணிவரையும் *
செய்யசுடரிரண்டும் இவையாயநின்னை * நெஞ்சில்
உய்யும்வகையுணர்ந்தேன் உண்மையாலினி * யாதும்மற்றோர்
தெய்வம்பிறிதறியேன் திருவிண்ணகரானே ! (௬)

வேறேகூறுவதுண்டு அடியேன்விரித்துரைக்கு
மாறே * நீபணியாதடை நின்திருமனத்து *
கூறேன்நெஞ்சுதன்னால் குணங்கொண்டு * மற்றோர்தெய்வம்
தேறேன்உன்னையல்லால் திருவிண்ணகரானே ! (௭)

முளிந்தீந்தவெங்கடத்து மூரிப்பெருங்களிற்றால் *
விளிந்தீந்தமாமரம்போல் வீழ்ந்தாரைநினையாதே *
அளிந்தோர்ந்தசிந்தை நின்பாலடியேற்கு * வானுலகம்
தெளிந்தேயென்றெய்துவது? திருவிண்ணகரானே! (௯)

சொல்லாய்திருமார்வா! உனக்காகித்தொண்டுபட்ட
நல்லேனை * வினைகள்நலியாமை நம்புநம்பீ! *
† மல்லா! குடமாடீ! மதுசூதனே! * உலகில்
செல்லாநல்லிசையாய்! திருவிண்ணகரானே! (௰)

‡‡ தாரார்மலர்க்கமலத் தடஞ்சூழ்ந்த தண்புறவில் *
சீரார்நெடுமறுகில் திருவிண்ணகரானை *
காரார்புயல்தடக்கைக் கலியனொலிமாலை *
ஆராரிவைவல்லார் அவர்க்குஅல்லலில்லாமே. (௰௧)

அடிவரவு:— துறப்பேன் துறந்தேன் மானேய் சாந்து மற்றோர் மை வேறே முளிந்து சொல்லாய் தாரார் கண்ணும்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ரு - ஆம் திருமொழி - கண்ணுஞ்சுழன்று.

திருநறையூர். (௧)

கலிநிலைத்துறை. (பந்துவராளிராகம் - ஜம்பைதாளம்)

‡‡ கண்ணும்சுழன்று பீளையோடு ஈளைவந்தேங்கினால் *
பண்ணின்மொழியார் பையநடமினென்னாதமுன் *
விண்ணும்மலையும் வேதமும்வேள்வியுமாயினான் *
நண்ணுநறையூர் நாம்தொழுதும்எழுநெஞ்சமே! (௧)

கொங்குண்குழலார் கூடியிருந்துசிரித்து * நீர்
இங்கென்? இருமி எம்பால்வந்ததென்றிகழாதமுன் *
திங்களெரிகால் செஞ்சுடராயவன்தேசுடை *
நங்கள்நறையூர் நாம்தொழுதும்எழுநெஞ்சமே! (௨)

கொங்கார்குழலார் கூடியிருந்துசிரித்து * எம்மை
எங்கோலம்ஐயா! என்? இனிக்காண்பதென்னாதமுன் *
செங்கோல் ‡ வலவன்தான் பணிந்தேத்தித்திகழுமூர் *
நங்கோன்நறையூர் நாம்தொழுதும் எழுநெஞ்சமே! (௩)

† 'மல்லார்' என்பதும் பாடம். ‡ 'வளவன்' என்றும் பாடம்.

கொம்புமரவுறும் வல்லியும்வென்றநுண்ணேரிடை *
வம்புண்குழலார் வாசலடைத்திகழாதமுன் *
செம்பொன்கமுகினம் தான்கனியுஞ்செழுஞ்சோலைசூழ் *
நம்பன்நறையூர் நாம்தொழுதும்எழுநெஞ்சமே ! (ச)

விலங்கும்கயலும் வேலுமொண்காவியும்வென்றகண் *
சலங்கொண்டசொல்லார் தாங்கள்சிரித்திகழாதமுன் *
மலங்கும்வராலும் வாளையும்பாய்வயல்சூழ்தரு *
நலங்கொள்நறையூர் நாம்தொழுதும்எழுநெஞ்சமே ! (ரு)

மின்னேரிடையார் வேட்கையைமாற்றியிருந்து *
என் ? நீரிருமி எம்பால்வந்ததென்றிகழாதமுன் *
தொன்னீரிலங்கைமலங்க விலங்கெரியூட்டினன் *
நன்னீர்நறையூர் நாம்தொழுதும்எழுநெஞ்சமே ! (சு)

வில்லேர்நுதலார் வேட்கையைமாற்றிச்சிரித்து * இவன்
பொல்லான்திரைந்தானென்னும் புறனுரைகேட்பதன்முன் *
சொல்லார்மறைநான்கோதி உலகில்நிலாயவர் *
நல்லார்நறையூர் நாம்தொழுதும்எழுநெஞ்சமே ! (எ)

வாளொண்கண்நல்லார்தாங்கள் மதனனென்றார்தம்மை *
கேண்மின்களீளையோடு ஏங்குகிழவனென்னாதமுன் *
வேள்வும்விழவும் வீதியிலென்றுமறாதவூர் *
நாளும்நறையூர் நாம்தொழுதும்எழுநெஞ்சமே ! (அ)

கனிசேர்ந்திலங்குநல்வாயவர் காதன்மைவிட்டிட *
குனிசேர்ந்துடலம் கோலில்தளர்ந்திளையாதமுன் *
பனிசேர்விசும்பில் பால்மதிகோள்விடுத்தானிடம் *
நனிசேர்நறையூர் நாம்தொழுதும்எழுநெஞ்சமே ! (கூ)

‡‡ பிறைசேர்நுதலார் பேணுதல்நம்மையிலாதமுன் *
நறைசேர்பொழில்சூழ் நறையூர்தொழுநெஞ்சமே ! என்ற *
கறையார்நெடுவேல்மங்கையர்கோன் கலிகன்றிசொல் *
மறவாதுரைப்பவர் வானவர்க்கின்னரசாவரே. (க0)

அடிவரவு:—கண்ணும் கொங்குண் கொங்கார் கொம்பு விலங்கு மின் வில் வாள் கனி பிறை கலங்க.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௫ - ஆந் திருமொழி - கலங்கமுந்நீர்.

திருநறையூர். (௨)

கலிநிலைத்துறை (செஞ்சுருட்டி ராகம் - அடதாளம்.)

† கலங்கமுந்நீர்கடைந்து † அமுதங்கொண்டு * இமையோர்
துளங்கல்தீரநல்கு சோதிச்சுடராய *
வலங்கையாழிஇடங்கைச்சங்கம் உடையானூர் *
நலங்கொள்வாய்மை அந்தணர்வாழுமநறையூரே. (௧)

முனையார்சீயமாகி அவுணன்முரண்மார்வம் *
புனைவாளுகிரால் போழ்படவீர்ந்தபுனிதனூர் *
சினையார்தேமாஞ்செந்தளிர்கோதிக் குயில்கூவும *
நனையார்சோலைசூழ்ந்து அழகாயநறையூரே. (௨)

ஆனைப்புரவிதேரொடுகாலாளணிகொண்ட *
சேனைத்தொகையைச்சாடி இலங்கைசெற்றானூர் *
மீனைததழுவிவீழ்ந்தெழும் மள்ளர்க்குஅலமந்து *
கானப்புதலில் ஆமையொளிக்கும்நறையூரே. (௩)

உறியார்வெண்ணெயுண்டு உரலோடுங்கட்டுண்டு *
வெறியார்கூந்தல்பின்னைபொருட்டு ஆன்வென்றானூர் *
பொறியார்மஞ்ஞை பூம்பொழில்தோறுமநடமாட *
நறுநாண்மலர்மேல் வண்டிசைபாடும்நறையூரே. (௪)

விடையேழ்வென்று மென்தோளாய்ச்சிக்கன்பனாய் *
நடையால்நின்றமருதம்சாய்த்த நாதனூர் *
பெடையோடன்னம் பெய்வளையார்தம்பின்சென்று *
நடையோடியலி நாணியொளிக்குமநறையூரே. (௫)

பகுவாய்வன்பேய்கொங்கைசுவைத்து ஆருயிருண்டு *
புகுவாய்நின்ற போதகம்வீழப்பொருதானூர் *
நெகுவாய்நெய்தற்பூமதுமாந்திக் கமலத்தின் *
நகுவாய்மலர்மேல் அன்னமுறங்கும்நறையூரே. (௬)

முந்துநூலும்முப்புரிநூலும் முன்னீந்த *
அந்தணாளன்பிள்ளையை அஞ்ஞான்றளித்தானூர் *
பொந்தில்வாழும் பிள்ளைக்காகிப் புள்ளோடி *
நந்துவாரும் பைம்புனல்வாவிநறையூரே. (௭

† 'அமுதங்கொண்டே' என்ற பாடம் செய்யுளோசைக்குச் சேரும்.

வெள்ளைப்புரவித்தேர்விசயற்காய் விறல்வியூகம்
விள்ள * சிந்துக்கோன்விழ வூர்ந்தவிமலனூர் *
கொள்ளைக்கொழுமீனுண் குருகுஓடிப்பெடையோடும் *
கள்ளக்கமலத்தேறலுகுக்கும் நறையூரே. (அ)

↓↓ பாரையூரும்பாரந்தீரப் பார்த்தன்தன்
தேரையூரும் * தேவதேவன்சேருமூர் *
தாரையூரும் தண்தளிர்வேலிபுடைசூழ *
நாரையூரும் நல்வயல்சூழ்ந்தநறையூரே. (கூ)

↓↓ தாமத்துளப நீண்முடிமாயன்தான்நின்ற *
நாமத்திரள்மாமாளிகைசூழ்ந்த நறையூர்மேல் *
காமக்கதிர்வேல்வல்லான் கலியனொலிமாலை *
சேமத்துணையாம் செப்புமவர்க்குத்திருமாலே. (க0)

அடிவரவு:—கலங்க முனை ஆனை உறி விடை பகுவாய் முந்து வெள்ளை பாரை தாமம் அம்பரம்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

சு - ஆம் திருமொழி - அம்பரமும்.

திருநறையூர் (ரு)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (மேசாடிராகம - ஆதிதாளம்.)

↓↓ அம்பரமும்பெருநிலனும்திசைகளெட்டும்
அலைகடலும்குலவரையுமுண்டகண்டன் *
கொம்பமரும்வடமரத்தினிலைமேல் பள்ளி
கூடினான்திருவடியேகூடகிற்பீர்! *
வம்பவிழும்செண்பகத்தின்வாசமுண்டு
மணிவண்டுவகுளத்தின்மலர்மேல்வைகு *
செம்பியன்கோச்செங்கணான்சேர்ந்தகோயில
திருநறையூர்மணிமாடம்சேர்மின்களே. (க)

கொழுங்கயலாய்நெடுவெள்ளங்கொண்டகாலம்
குலவரையின்மீதோடியண்டத்தப்பால் *
எழுந்தினிதுவிளையாடுமீசனெந்தை
இணையடிக்கீழினிதிருப்பீர்! இனவண்டாலும் *

உழுஞ்செறுவில்மணிகொணர்ந்து கரைமேற்சிந்தி
உலகெல்லாம்சந்தனமுமகிலுங்கொள்ள *
செழும்பொன்னிவளங்கொடுக்கும்சோழன்சேர்ந்த
திருநறையூர்மணிமாடம்சேர்மின்களே. (௨)

பவ்வநீருடையாடையாகச்சுற்றிப்
பாரகலம்திருவடியாப்பவனம்மெய்யா *
செவ்விமாதிரமெட்டும்தோளா அண்டம்
திருமுடியாநின்றான்பாற்செல்லகிற்பீர்! *
கவ்வைமாகளிறுந்திவிண்ணியேற்ற
கழல்மன்னர்மணிமுடிமேற்காகமேற *
தெய்வவாள்வலங்கொண்டசோழன்சேர்ந்த
திருநறையூர்மணிமாடம்சேர்மின்களே. (௩)

பைங்கணாளரியுருவாய்வெருவநோக்கிப்
பருவரைத்தோளிரணியனைப்பற்றிவாங்கி *
அங்கைவாளுகிர்நுதியாலவனதாகம்
அங்குருதிபொங்குவித்தானடிக்கீழ்நிற்பீர்! *
வெங்கண்மாகளிறுந்திவிண்ணியேற்ற
விறல்மன்னர்திறலழியவெம்மாவுய்த்த *
செங்கணான்கோச்சோழன்சேர்ந்தகோயில்
திருநறையூர்மணிமாடம்சேர்மின்களே. (௪)

அன்றுலகமூன்றினையுமளந்து வேறோர்
அரியுருவாயிரணியனதாகங்கீண்டு *
வென்றவனைவிண்ணுலகிற்செலவுய்த்தாற்கு
விருந்தாவீர்! மேலெழுந்துவிலங்கல்பாய்ந்து *
பொன்சிதறிமணிகொணர்ந்துகரைமேற்சிந்திப்
புலம்பரந்துநிலம்பரக்கும்பொன்னிநாடன் *
தென்தமிழன்வடபுலக்கோன்சோழன்சேர்ந்த
திருநறையூர்மணிமாடம்சேர்மின்களே. (௫)

தன்னாலேதன்னுருவம்பயந்ததானாய்த்
தயங்கொளிசேர்மூவுலகும்தானாய்வானாய் *
தன்னாலேதன்னுருவின்மூர்த்திமூன்றாய்த்
தானயனாயினான்சரணென்றுய்வீர்! *

மின்னாடுவேலேந்துவிளைந்தவேளை
விண்ணேறத்தனிவேலுய்த்துலகமாண்ட *
தென்னாடன்குடகொங்கன்சோழன்சேர்ந்த
திருநறையூர்மணிமாடம்சேர்மின்களே. (௬)

முலைத்தடத்தநஞ்சுண்டுதுஞ்சப்பேய்ச்சி
முதுதுவரைக்குலபதியாக் காலிப்பின்னே *
இலைத்தடத்தகுழலூதியாயர்மாதர்
இனவளைகொண்டானடிக்கீழெய்தகிற்பீர் ! *
மலைத்தடத்தமணிகொணர்ந்துவையமுய்ய
வளங்கொடுக்கும்வருபுனலம்பொன்னிநாடன் *
சிலைத்தடக்கைக்குலச்சோழன்சேர்ந்தகோயில்
திருநறையூர்மணிமாடம்சேர்மின்களே. (௭)

முருக்கிலங்குகனித்துவர்வாய்ப்பின்னைகேள்வன்
மன்னெல்லாம்முன்னவியச்சென்று * வென்றிச்
செருக்களத்துத்திறலழியச்செற்றவேந்தன்
சிரந்துணித்தான்திருவடிநும்சென்னிவைப்பீர் ! *
இருக்கிலங்குதிருமொழிவாயெண்தோளீசற்கு
எழில்மாடமெழுபதுசெய்துலகமாண்ட *
திருக்குலத்துவளச்சோழன்சேர்ந்தகோயில்
திருநறையூர்மணிமாடம்சேர்மின்களே (௮)

தாராளன்தண்ணரங்கவாளன் பூமேல்
தனியாளன்முனியாளரேத்தநின்ற
பேராளன் * ஆயிரம்பேருடையவாளன்
பின்னைக்குமணவாளன்பெருமைகேட்பீர் ! *
பாராளரவரிவரென்றழுந்தையேற்ற
படைமன்னருடல்துணியப்பரிமாவுய்த்த *
தேராளன்கோச்சோழன்சேர்ந்தகோயில்
திருநறையூர்மணிமாடம்சேர்மின்களே. (௯)

↓↓ செம்மொழிவாய்நால்வேதவாணர்வாழும்
திருநறையூர்மணிமாடச்செங்கண்மாலை *
பொய்ம்மொழியொன்றில்லாதமெய்ம்மையாளன்
புலமங்கைக்குலவேந்தன், புலமையார்ந்த *

அம்மொழிவாய்க்கலிகன்றியின்பப்பாடல்
பாடுவார், வியனுலகில்நமனார்பாடி *
வெம்மொழிகேட்டஞ்சாதேமெய்ம்மைசொல்லில்
விண்ணவர்க்குவிருந்தாகும்பெருந்தக்கோரே. (கo)

அடிவரவு:—அம்பரம் கொழு பவ்வம் மைங்கண் அன்று தன்னுலே முலை முருக்கு தாராளன் செம்மொழி ஆளும்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

எ - ஆந் திருமொழி - ஆளும்பணியும்.

திருநறையூர். (ச)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (ஆபோகம் - ரூபகதாளம்.)

↓↓ ஆளும்பணியுமடியேனைக்கொண்டான் விண்டநிசாசரரை *
தோளும்தலையும்துணிவெய்தச் சுடுவெஞ்சிலைவாய்ச்சரந்துரந்தான் *
வேளும்சேயுமனையாரும் வேற்கணாரும்பயில்வீதி *
நாளும்விழவினொலியோவா நறையூர்நின்றநம்பியே. (க)

முனியாய்வந்துமூவெழுகால் முடிசேர்மன்னருடல்துணிய *
தனிவாய்மழுவின்படையாண்ட தாரார்தோளான், வார்புறவில் *
பனிசேர்முல்லைபல்லரும்பப் பானலொருபாற்கண்காட்ட *
† நனிசேர்கமலமுகங்காட்டும் நறையூர்நின்றநம்பியே. (உ)

தெள்ளார்கடல்வாய்விடவாய சினவாளரவில்துயிலமர்ந்து *
துள்ளாவருமான்வீழ வாளிதுரந்தான், இரந்தான்மாவலிமண் *
புள்ளார்புறவிற்பூங்காவி புலன்கொள்மாதர்கண்காட்ட *
நள்ளார்கமலமுகங்காட்டும் நறையூர்நின்றநம்பியே. (ந)

ஒளியாவெண்ணெயுண்டானென் றுரலோடாய்ச்சியொண்கயிற்றால்*
விளியாவார்க்கவாப்புண்டு விம்மியழுதான், மென்மலர்மேல் *
களியாவண்டுகள்ளுண்ணக் காமர்தென்றலலர்தூற்ற *
நளிர்வாய்முல்லைமுறுவலிக்கும் நறையூர்நின்றநம்பியே. (ச)

வில்லார்விழவில்வடமதுரை விரும்பிவிரும்பாமல்லடர்த்து *
கல்லார்திரள்தோட்கஞ்சனைக் காய்ந்தான்பாய்ந்தான்காளியன்மேல் *
சொல்லார்சுருதிமுறையோதிச் சோமுச்செய்யும்தொழிலினோர் *
நல்லார்மறையோர்பலர்வாழும் நறையூர்நின்றநம்பியே. (ரு)

† 'நனிசேர் வயலுள் முத்தலைக்கும்' என்பது வ்யாக்யாநபாடம்.

வள்ளிகொழுநன்முதலாய மக்களோடுமுக்கணன் [ன் *
வெள்கியோட*விறல்வாணன் வியன்தோள்வனத்தைத்துணித்துகந்தா
பள்ளிகமலத்திடைப்பட்ட பகுவாயலவன்முகம்நோக்கி *
நள்ளியூடும்வயல்சூழ்ந்த நறையூர்நின்றநம்பியே. (சு)

மிடையாவந்தவேல்மன்னர்வீய விசயன்தேர்கடவி *
குடையாவரையொன்றெடுத்து ஆயர்கோவாய்நின்றான்கூராழிப
படையான் * வேதநான்கைந்துவேள்வி அங்கமாறிசையேழ் *
நடையாவல்லவந்தணர்வாழ் நறையூர்நின்றநம்பியே (எ)

பந்தார்விரலாள்பாஞ்சாலி கூந்தல்முடிக்க * பாரதத்துக்
கந்தார்களிற்றுக்கழல்மன்னர்கலங்கச் சங்கம்வாய்வைத்தான் *
செந்தாமரைமேலயனோடு சிவனுமனையபெருமையோர் *
நந்தாவண்கைமறையோர்வாழ் நறையூர்நின்றநம்பியே. (அ)

ஆறும்பிறையுமரவமும் அடம்பும்சடைமேலணிந்து * உடலம
நீறும்பூசியேறூரும் இறையோன்சென்றுகுறையிரப்ப *
மாறொன்றில்லாவாசநீர் வரைமார்பகலத்தளித்துகந்தான் *
நாறும்பொழில்சூழ்ந்தழகாய நறையூர்நின்றநம்பியே. (கூ)

↓↓ நன்மையுடையமறையோர்வாழ் நறையூர்நின்றநம்பியை *
கன்னிமதிள்சூழ்வயல்மங்கைக் கலியனொலிசெய்தமிழ்மாலை *
பன்னியுலகிற்பாடுவார் பாடுசாராபழவினைகள் *
மன்னியுலகமாண்டுபோய் வானோர்வணங்கவாழ்வாரே. (கய)

அடிவரவு:—ஆளும் முனி தெள்ளார ஒளியா வில் வள்ளி மிடையா பந்து ஆறும் நன்மை மான்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

அ - ஆந் திருமொழி - மான்கொண்ட

திருநறையூர். (ரு)

தரவுகொச்சகக்கலிப்பா. (பைரவிராகம் - ஜம்பைதாளம்.)

↓↓ மான்கொண்டதோல்மார்வின் மாணியாய் * மாவலிமண்
தான்கொண்டு தாளாலளந்தபெருமானை *
தேன்கொண்டசாரல் திருவேங்கடத்தானை *
நான்சென்றுநாடி நறையூரிற்கண்டேனே. (க)

முந்நீரைமுன்னாள் கடைந்தானை * மூழ்த்தநாள்
அந்நீரைமீனாய் அமைத்தபெருமானை *
தென்னாலிமேய திருமாலையெம்மானை *
நன்னீர்வயல்சூழ் நறையூரிற்கண்டேனே. (உ)

தூவாயபுள்ளூர்ந்துவந்து துறைவேழம் *
மூவாமைநல்கி முதலைதுணித்தானை *
தேவாதிதேவனைச் செங்கமலக்கண்ணானை *
நாவாயுளானை நறையூரிற்கண்டேனே. (ங)

ஓடாவரியாய் இரணியனையூனிடந்த *
சேடார்பொழில்சூழ் திருநீர்மலையானை *
வாடாமலர்த்துழாய் மாலைமுடியானை *
நாள்தோறும்நாடி நறையூரிற்கண்டேனே. (ச)

கல்லார்மதிள்சூழ் கடியிலங்கைக்காரரக்கன் *
வல்லாகங்கீள வரிவெஞ்சரந்துரந்த
வில்லானை * செல்வவிபீடணற்கு வேறாக *
நல்லானைநாடி நறையூரிற்கண்டேனே. (ரு)

உம்பருலகோடு உயிரெல்லாம் * உந்தியில்
வம்புமலர்மேல் படைத்தானைமாயோனை *
அம்பன்னகண்ணாள் அசோதைதன்சிங்கத்தை *
நம்பனைநாடி நறையூரிற்கண்டேனே. (சா)

கட்டேறுநீள்சோலைக் காண்டவத்தைத்தீமூட்டி
விட்டானை * மெய்யமமர்ந்த பெருமானை *
மட்டேறுகற்பகத்தை மாதர்க்காய் * வண்துவரை
நட்டானைநாடி நறையூரிற்கண்டேனே. (எ)

மண்ணின்மீபாரங்கெடுப்பான் மறமன்னர் *
பண்ணின்மேல்வந்த படையெல்லாம்பாரதத்து *
விண்ணின்மீதேற விசயன்தேரூர்ந்தானை *
நண்ணிநான்நாடி நறையூரிற்கண்டேனே. (அ)

↓↓ பொங்கேறுநீள்சோதிப் பொன்னாழிதன்னோடும் *
சங்கேறுகோலத் தடக்கைப்பெருமானை *
கொங்கேறுசோலைக் குடந்தைக்கிடந்தானை *
நங்கோனைநாடி நறையூரிற்கண்டேனே. (கூ)

↓↓ மன்னுமதுரை வசுதேவர்வாழ்முதலை *
நன்னறையூர்நின்ற நம்பியை * வம்பவிழ்தார்க்
கன்னவிலும்தோளான் கலியனொலிவல்லார் *
பொன்னுலகில்வானவர்க்குப் புத்தேளிராகுவரே.

அடிவரவு:—மான் முந்நீரை தூவாய ஓடா கல் உம்பர் க
மண்ணின் பொங்கு மன்னு பெடை.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௰ - ஆந் திருமொழி - பெடையடர்த்த.

திருநறையூர். (௯)

தரவுகொச்சகக்கலிப்பா ([illegible] கல்யாணிராகம் - ரூபகதாளம்)

↓↓ பெடையடர்த்தமடவன்னம் பிரியாது * மலர்க்கமலம்
மடலெடுத்துமதுநுகரும் வயலுடுத்ததிருநறையூர் *
முடையடர்த்தசிரமேந்தி மூவுலகும்பலிதிரிவோன் *
இடர்கெடுத்ததிருவாளன் இணையடியேயடைநெஞ்சே! (௧)

கழியாரும்கனசங்கம் கலந்தெங்கும்நிறைந்தேறி *
வழியாரமுத்தீன்று வளங்கொடுக்கும்திருநறையூர் *
பழியாரும்விறலரக்கன் பருமுடிகளவைசிதற *
அழலாரும்சரந்துரந்தான் அடியிணையேயடைநெஞ்சே! (௨)

சுளைகொண்டபலங்கனிகள் தேன்பாய * கதலிகளின்
திளைகொண்டபழங்கெழுமு திகழ்சோலைத்திருநறையூர் *
வளைகொண்டவண்ணத்தன் பின்தோன்றல் * மூவுலகோடு
அளைவெண்ணெயுண்டான்தன் அடியிணையேயடைநெஞ்சே! (௩)

துன்றொளித்துகிற்படலம் துன்னியெங்கும்மாளிகைமேல் *
நின்றாரவான்மூடும் நீள்செல்வத்திருநறையூர் *
மன்றாரக்குடமாடி வரையெடுத்துமழைதடுத்த *
குன்றாரும்திரள்தோளன் குரைகழலேயடைநெஞ்சே! (௪)

அகிற்குறடும்சந்தனமும் அம்பொன்னுமணிமுத்தும் *
மிகக்கொணர்ந்துதிரையுந்தும் வியன்பொன்னித்திருநறையூர் *
பகற்கரந்த சுடராழிப்படையான் * இவ்வுலகேழும்
புகக்கரந்ததிருவயிற்றன் பொன்னடியேயடைநெஞ்சே! (௫)

பொன்முத்துமரியுகிரும் புழைக்கைம்மாகரிக்கோடும் *
மின்னத்தண்டிரையுந்தும் வியன்பொன்னித்திருநறையூர் *
மின்னொத்தநுண்மருங்குல் மெல்லியலை * திருமார்பில்
மன்னத்தான்வைத்துகந்தான் மலரடியேயடைநெஞ்சே! (௬)

சீர்தழைத்தகதிர்ச்செந்நெல் செங்கமலத்திடையிடையின் *
பார்தழைத்துக்கரும்போங்கிப் பயன்விளைக்குந்திருநறையூர் *
கார்தழைத்ததிருவுருவன் கண்ணபிரான்விண்ணவர்கோன் *
தார்தழைத்ததுழாய்முடியன் தளிரடியேயடைநெஞ்சே! (௭)

↓↓ குலையார்ந்தபழுக்காயும் பசுங்காயும்பாளைமுத்தும் *
தலையார்ந்தவிளங்கமுகின் தடஞ்சோலைத்திருநறையூர் *
மலையார்ந்தகோலஞ்சேர் மணிமாடம்மிகமன்னி *
நிலையாரநின்றான்தன் நீள்கழலேயடைநெஞ்சே! (௮)

மறையாரும்பெருவேள்விக் கொழும்புகைபோய்வளர்ந்து * எங்கும்
நிறையாரவான்மூடும் நீள்செல்வத்திருநறையூர் *
பிறையாருஞ்சடையானும் பிரமனும்முன்தொழுதேத்த *
இறையாகிநின்றான்தன் இணையடியேயடைநெஞ்சே! (௯)

↓↓ திண்களகமதிள்புடைசூழ் திருநறையூர்நின்றானை *
வண்களகநிலவெறிக்கும் வயல்மங்கைநகராளன் *
பண்களகம்பயின்றசீர்ப் பாடலிவைபத்தும்வல்லார் *
விண்களகத்திமையவராய் வீற்றிருந்துவாழ்வாரே. (௧௦)

அடிவரவு:—பெடை கழி சுளை துன்று அகில் பொன் சீர் குலை மறை திண் கிடந்த.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௧௦ - ஆம் திருமொழி - கிடந்தநம்பி.

திருநறையூர். (௭)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (கமாஸ்ராகம் - த்ரிபுடைதாளம்.)

↓↓ கிடந்தநம்பிகுடந்தைமேவிக் கேழலாயுலகை
யிடந்தநம்பி * எங்கள்நம்பி எறிஞராரணழிய *
கடந்தநம்பிகடியாரிலங்கை உலகையீரடியால் *
நடந்தநம்பிநாமம்சொல்லில் நமோநாராயணமே. (௧)

விடந்தானுடையவரவம்வெருவச் செருவில்முனநாள் * முன்
தடந்தாமரைநீர்ப்பொய்கைபுக்கு மிக்கதாடாளன் *
இடந்தான்வையம்கேழலாகி உலகைபீரடியால் *
நடந்தானுடையநாமம்சொல்லில் நமோநாராயணமே. (உ)

பூணுதனலும் தறுகண்வேழம்மறுக * வளைமருப்பைப்
பேணுன்வாங்கி அமுதம்கொண்ட பெருமான்திருமார்வன் *
பாணுவண்டுமுரலும்கூந்தல் ஆய்ச்சிதயிர்வெண்ணெய் *
நாணுதுண்டான்நாமம்சொல்லில் நமோநாராயணமே. (ந)

கல்லார்மதிள்சூழ் கச்சிநகருள்நச்சி * பாடகத்துள்
எல்லாவுலகும்வணங்க இருந்தவம்மான் * இலங்கைக்கோன்
வல்லாளாகம் வில்லால்முனிந்தவெந்தை * விபீடணற்கு
நல்லானுடையநாமமசொலலில் நமோநாராயணமே. (ச)

குடையாவரையால் நிரைமுன்காத்தபெருமான் * மருவாத
விடைதானேழும்வென்றான் கோவல்நின்றான் * தென்னிலங்கை
அடையாவரக்கர்வீய பொருதுமேவிவெங்கூற்றம் *
நடையாவுண்ணக்கண்டான்நாமம் நமோநாராயணமே. (ரு)

கானஎண்கும்குரங்கும் முசுவும்படையா * அடலரக்கா
மானமழித்துநின்ற வென்றியம்மான் * எனக்குஎன்றும
தேனும்பாலுமமுதுமாய திருமால்திருநாமம் *
நானும்சொன்னேன்நமரும்முரைமின் நமோநாராயணமே. (சு)

நின்றவரையும்கிடநதகடலும் திசையும்இருநிலனும *
ஒன்றுமொழியாவண்ணம்எண்ணி நின்றவம்மானூர் *
குன்றுகுடையாவெடுத்த அடிகளுடையதிருநாமம் *
நன்றுகாண்மின்தொண்டீர்! சொன்னேன் நமோநாராயணமே. (எ)

கடுங்கால்மாரிகல்லேபொழிய அல்லேயெமக்கென்று
படுங்கால் * நீயேசரணென்று ஆயரஞ்ச, அஞ்சாமுன் *
நெடுங்காற்குன்றம்குடையொன்றேந்தி நிரையைச்சிரமத்தால் *
நடுங்காவண்ணம்காத்தான்நாமம நமோநாராயணமே. (அ)

பொங்குபுணரிக்கடல்சூழாடை நிலமாமகள்மலர்மா
மங்கை * பிரமன்சிவனிந்திரன் வானவர்நாயகராய *
எங்களடிகள் இமையோர்தலைவருடையதிருநாமம் *
நங்கள்வினைகள்தவிரவுரைமின் நமோநாராயணமே. (கூ)

↓↓ வாவித்தடஞ்சூழ்மணிமுத்தாற்று நறையூர்நெடுமாலை *
நாவிற்பரவிநெஞ்சிற்கொண்டு நம்பிநாமத்தை *
காவித்தடங்கண்மடவார்கேள்வன் கலியனொலிமாலை *
மேவிச்சொல்லவல்லார்பாவம் நில்லாவீயுமே. (௧0)

அடிவரவு:—கிடந்த விடம் பூனைய கல் குடை கானம் நின்ற கடுங்கால் பொங்கு வாவி கறவா.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்து.

க - ஆந் திருமொழி - கறவாமட நாகு.

திருநறையூர். (அ)

கலிவிருத்தம். (முகாரிராகம் - ரூபகதாளம்.)

↓↓ கறவாமடநாகு தன்கன்றுள்ளினாற்போல் *
மறவாதடியேன் உன்னையேயழைக்கின்றேன் *
நறவார்பொழில்சூழ் நறையூர்நின்றநம்பி! *
பிறவாமையெனைப்பணி எந்தைபிரானே! (௧)

வற்றாமுதுநீரொடு மால்வரையேழும் *
துற்றாகமுன் துற்றிய தொல்புகழோனே! *
அற்றேனடியேன் உன்னையேயழைக்கின்றேன் *
பெற்றேனருள்தந்திடு என்னெந்தைபிரானே! (௨)

தாரேன்பிறர்க்கு உன்னருளென்னிடைவைத்தாய் *
ஆரேனதுவே பருகிக்களிக்கின்றேன் *
காரேய்கடலேமலையே திருக்கோட்டி
யூரே * உகந்தாயை உகந்தடியேனே. (௩)

புள்வாய்பிளந்த புனிதா! என்றழைக்க *
உள்ளேநின்று என்னுள்ளங்குளிருமொருவா! *
கள்வா! கடல்மல்லைக்கிடந்தகரும்பே! *
வள்ளால்! உன்னையெங்ஙனம்நான்மறக்கேனே? (௪)

வில்லேர் நுதல் வேல்நெடுங்கண்ணியும்நீயும் *
கல்லார்கடுங்கானம் திரிந்தகளிறே! *
நல்லாய்! நரநாரணனே! எங்கள்நம்பி! *
சொல்லாயுன்னை யான்வணங்கித்தொழுமாறே. (ரு)

பனியேய்பரங்குன்றின் பவளத்திரளே! *
முனியே! திருமூழிக்களத்துவிளக்கே! *
இனியாயதொண்டரோம் பருகின்னமுதாய
கனியே! * உன்னைக்கண்டுகொண்டு உய்ந்தொழிந்தேனே.! (சா)

கதியேலில்லை நின்னருளல்லதெனக்கு *
நிதியே! திருநீர்மலைநித்திலத்தொத்தே! *
பதியே! பரவித்தொழும்தொண்டர்தமக்குக்
கதியே! * உன்னைக்கண்டுகொண்டு உய்ந்தொழிந்தேனே. (எ)

அத்தா! அரியே! என்று உன்னையழைக்க *
பித்தாவென்றுபேசுகின்றார் பிறரென்னை *
முத்தே! மணிமாணிக்கமே! முளைக்கின்ற
வித்தே! * உன்னையெங்ஙனம் நான்விடுகேனே? (அ)

தூயாய்! சுடர்மாமதிபோல் உயிர்க்கெல்லாம் *
தாயாயளிக்கின்ற தண்தாமரைக்கண்ணா! *
ஆயா! அலைநீருலகேழும் முன்னுண்ட
வாயா! * உன்னையெங்ஙனம நான்மறக்கேனே? (கூ)

‡‡ வண்டார்பொழில்சூழ் நறையூர்நம்பிக்கு * என்றும்
தொண்டாய கலியன்ஒலிசெய்தமிழ்மாலை *
தொண்டீர்! இவைபாடுமின் பாடிநின்றாட *
உண்டேவிசும்பு உநதமக்கில்லைதுயரே (க0)

அடிவரவு:—கறவா வற்று தாரேன் புள் வில் பனி கதி அத்தா தூயாய் வண்டார் புள்ளாய்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

உ-ஆந் திருமொழி-புள்ளாயேனமுமாய்.

திருநறையூர். (கூ)

கலிநிலைத்துறை. (கேதாரகௌளராகம் - ஆதிதாளம்.)

புள்ளாயேனமுமாய்ப்புகுந்து என்னையுள்ளங்கொண்ட
கள்வா! என்றலும் * என்கண்கள்நீர்கள்சோர்தருமால் *
உள்ளேநின்றுருகி நெஞ்சமுன்னையுள்ளியக்கால் *
நள்ளேனுன்னையல்லால நறையூர்நின்றநம்பீயோ! (க)

ஓடாவாளரியின் உருவாய்மருவி * என்தன்
மாடேவந்து அடியேன் மனங்கொள்ளவல்லமைந்தா! *
பாடேன்தொண்டர்தம்மைக் கவிதைப்பனுவல்கொண்டு *
நாடேனுன்னையல்லால் நறையூர்நின்றநம்பீயோ! (உ)

எம்மானுமெம்மனையும என்னைப்பெற்றொழிந்ததற்பின் *
அம்மானுமம்மனையும் அடியேனுக்காகிநின்ற *
நன்மானவொண்சுடரே! நறையூர்நின்றநம்பீ! * உன்
மைம்மானவண்ணமல்லால் மகிழ்ந்தேத்தமாட்டேனே. (௩)

சிறியாய்ஓர்பிள்ளையுமாய் உலகுண்டோராலிலைமேல்
உறைவாய்! * என்னெஞ்சினுள்ளே உறைவாய்! உறைந்ததுதான் *
அறியாதிருந்தறியேன் அடியேன்அணிவண்டுகிண்டும் *
நறைவாரும்பொழில்சூழ் நறையூர்நின்றநம்பீயோ! (௪)

நீண்டாயைவானவர்கள் நினைந்தேத்திக்காண்பரிதால் *
ஆண்டாயென்றாதரிக்கப்படுவாய்க்கு நானடிமை
பூண்டேன் * என்னெஞ்சினுள்ளே புகுந்தாயைப்போகலொட்டேன் *
நாண்தானுனக்கொழிந்தேன் நறையூர்நின்றநம்பீயோ! (௫)

எந்தாதைதாதையப்பால் எழுவர்பழவடிமை
வந்தார் * என்னெஞ்சினுள்ளே வந்தாயைப்போகலொட்டேன் *
அந்தோ! என்னாருயிரே! அரசே! அருளெனக்கு *
நந்தாமல்தந்தவெந்தாய்! நறையூர்நின்றநம்பீயோ! (௬)

மன்னஞ்சவாயிரந்தோள் மழுவில்துணித்தமைந்தா! *
என்னெஞ்சத்துள்ளிருந்து இங்கினிப்போய்ப்பிறரொருவர் *
வன்னெஞ்சம்புக்கிருக்கவொட்டேன் வளைத்துவைத்தேன் *
நன்னெஞ்சவன்னமன்னும் நறையூர்நின்றநம்பீயோ! (௭)

எப்போதும்பொன்மலரிட்டு இமையோர்தொழுது * தங்கள்
கைப்போதுகொண்டிறைஞ்சிக் கழல்மேல்வணங்கநின்றாய் *
இப்போதென்னெஞ்சினுள்ளே புகுந்தாயைப்போகலொட்டேன் *
நற்போதுவண்டுகிண்டும் நறையூர்நின்றநம்பியே ! (அ)

ஊனேராக்கைதன்னை உழந்தோம்பிவைத்தமையால் *
யானாயென்தனக்காய் அடியேன்மனம்புகுந்த
தேனே ! * தீங்கரும்பின்தெளிவே ! என்சிந்தைதன்னால் *
நானேயெய்தப்பெற்றேன் நறையூர்நின்றநம்பியே ! (௯)

↓↓ நன்னீர்வயல்புடைசூழ் நறையூர்நின்றநம்பியை *
கன்னீரமால்வரைத்தோள் கலிகன்றிமங்கையர்கோன் *
சொன்னீரசொன்மாலை சொல்லுவார்கள் * சூழ்விசும்பில்
நன்னீர்மையாலமர்ந்து நெடுங்காலம்வாழ்வாரே. (௰)

அடிவரவு:—புள் ஓடா எம்மானை சிறியாய் மீண்டாய் எந்தாதை மனை எப்போதும் ஊனேரா நன்னீர் சினவில்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௩ - ஆந் திருமொழி - சினவில்

திருநறையூர். (௧௰)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (மோஹநராகம் - ரூபகதாளம்.)

↓↓ சினவிற்செங்கணரக்கருயிர்மாளச்
செற்றவில்லியென்றுகற்றவர்தந்தம
மனமுட்கொண்டு * என்றுமெப்போதும்நின்றேத்தும்
மாமுனியை மரமேழெய்தமைந்தனை *
நனவிற்சென்றார்க்குமநண்ணற்கரியானை
நானடியேன்நறையூர்நின்றநம்பியை *
கனவிற்கண்டேனின்றுகண்டமையால் என்
கண்ணிணைகள்களிப்பக்களித்தேனே. (௧)

தாய்நினைந்தகன்றேயொக்க என்னையும்
தன்னையேநினைக்கச்செய்து, தானெனக்காய் *
நினைந்தருள்செய்யுமப்பனை
அன்றிவ்வையகமுண்டுமிழ்ந்திட்ட

வாயனை * மகரக்குழைக்காதனை
மைந்தனை மதிட்கோவலிடைகழி
யாயனை * அமரர்க்கரியேற்றை என்
அன்பனையன்றியாதரியேனே. (௨)

வந்தநாள்வந்தென்னெஞ்சிடங்கொண்டான்
மற்றோர்னெஞ்சறியான் * அடியேனுடைச்
சிந்தையாய்வந்துதென்புலர்க்கென்னைச
சேர்கொடான் இதுசிக்கெனப்பெற்றேன் *
கொந்துலாம்பொழில்சூழ்குடந்தைத்தலைக்
கோவினைக் குடமாடியகூத்தனை *
எந்தையையெந்தைதந்தைதம்மானை
எம்பிரானையெத்தால்மறக்கேனே ? (௩)

உரங்களாலியன்றமன்னர்மாளப்
பாரதத்தொருதேரைவர்க்காய்ச்சென்று *
இரங்கியூர்ந்தவர்க்கின்னருள்செய்யும
எம்பிரானை வம்பார்புனற்காவிரி *
அரங்கமாளியென்னாளிவிண்ணாளி
ஆழிசூழிலங்கைமலங்கச்சென்று *
சரங்களாண்டதண்தாமரைக்கண்ணனுக்கன்றி
என்மனந்தாழ்ந்துநில்லாதே. (௪)

ஆங்குவெந்நரகத்தழுந்தும்போது
அஞ்சேலென்றடியேனையங்கேவந்து
தாங்கு * தாமரையன்னபொன்னாரடி
யெம்பிரானை உம்பர்க்கணியாய்நின்ற *
வேங்கடத்தரியைப்பரிகீறியை
வெண்ணெயுண்டுரலினிடையாப்புண்ட
தீங்கரும்பினை * தேனைநன்பாலினையன்றி
என்மனஞ்சிந்தைசெய்யாதே. (௫)

எட்டனைப்பொழுதாகிலும் என்று
மென்மனத்தகலாதிருக்கும்புகழ் *
தட்டலர்த்தபொன்னேயலர்கோங்கின்
தாழ்பொழில்திருமாலிருஞ்சோலையங்

கட்டியை * கரும்பின்றவின்சாற்றைக்
காதலால்மறைநான்கும்முன்னோதிய
பட்டனை * பரவைத்துயிலேற்றை என்
பண்பனையன்றிப்பாடல்செய்யேனே. (சு)

பண்ணினின்மொழியாழ்நரம்பிற்பெற்ற
பாலையாகியிங்கேபுகுந்து * என்
கண்ணும்நெஞ்சும்வாயுமிடங்கொண்டான்
கொண்டபின்மறையோர்மனந்தன்னுள் *
விண்ணுளார்பெருமானையெம்மானை
வீங்குநீர்மகரந்திளைக்குங்கடல்
வண்ணன் * மாமணிவண்ணனெம்மண்ணல்
வண்ணமேயன்றிவாயுரையாதே. (எ)

இனியெப்பாவம்வந்தெய்தும்? சொல்லீர்
எமக்கிம்மையேயருள்பெற்றமையால் * அடும்
துனியைத்தீர்த்துஇன்பமேதருகின்றதோர்
தோற்றத்தொன்னெறியை * வையம்தொழப்படும்
முனியைவானவரால்வணங்கப்படும்
முத்தினைப் பத்தர்தாம்நுகர்கின்றதோர்
கனியை * காதல்செய்தென்னுள்ளம்கொண்ட
கள்வனை இன்றுகண்டுகொண்டேனே. (அ)

என்செய்கேன்அடியேன்? உரையீர்இதற்கு என்றும்
என்மனத்தேயிருக்குமபுகழ் *
தஞ்சையாளியைப் பொன்பெயரோன்
நெஞ்சமன்றிடந்தவனைத் தழலேபுரை *
மின்செய்வாளரக்கன்நகர்பாழ்படச்
சூழ்கடற்சிறைவைத்து, இமையோர்தொழும *
பொன்செய்மால்வரையைமணிக்குன்றினை அன்றி
என்மனம்போற்றியென்னாதே. (கூ)

‡‡ தோடுவிண்டலர்பூம்பொழில்மங்கையர்
தோன்றல் வாட்கலியன்திருவாலி
நாடன் * நன்னறையூர்நின்றநம்பிதன்
நல்லமாமலர்ச்சேவடிசென்னியிற்

சூடியும் * தொழுதுமெழுந்தாடியும்
　　தொண்டர்கட்கவன்சொன்னசொலமாலை *
பாடல்பத்திவைபாடுமின்தொண்டீர் !
　　பாட நும்மிடைப்பாவம்நில்லாவே.   (௰)

அடிவரவு:— சினவில் தாய் வந்த உரங்கள் ஆங்கு எட்டனை பண்ணின் இனி என்செய்கேன் தோடு கண்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௪ - ஆந் திருமொழி - கண்சோர.

திருச்சேறை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (அசாவேரிராகம் - அடதாளம்.)

↓↓ கண்சோரவெங்குருதிவந்திழிய வெந்தழலபோற்கூந்தலாளை *
மண்சேரமுலையுண்டமாமதலாய் ! வானவர்தம்கோவே ! என்று *
விண்சேருமிளந்திங்களகடுரிஞ்சு மணிமாடமல்கு * செல்வத்   [ரே.
தண்சேறையெம்பெருமான்தாள்தொழுவார்காண்மின் என்தலைமேலா

அம்புருவவரிநெடுங்கண் அலர்மகளைவரையகலத்தமர்ந்து * மல்லற்
கொம்புருவவிளங்கனிமேல் இளங்கன்றுகொண்டெறிந்தகூத்தர்போலாம் *
வம்பலரும்தண்சோலை வண்சேறைவானுந்துகோயில்மேய * [றுரே.
எம்பெருமான்தாள்தொழுவார் எப்பொழுதுமென்மனத்தேயிருக்கின்

மீதோடிவாளெயிறுமின்னிலக முன்விலகுமுருவினாளை *
காதோடுகொடிமூக்கன்றுடனறுத்த கைத்தலத்தா ! என்றுநின்று *
தாதோடுவண்டலம்பும் தண்சேறையெம்பெருமான்தாளையேத்தி *
போதோடுபுனலதூவும்புண்ணியரே விண்ணவரிற்பொலிகின்றாரே. (௩)

தேராளும்வாளரக்கன் தென்னிலங்கைவெஞ்சமத்துப்பொன்றிவீழ *
போராளும்சிலையதனால்பொருகணைகள்போக்குவித்தாயென்று * நாளும்
தாராளும்வரைமார்பன் தண்சேறையெம்பெருமான், உம்பராளும் *
பேராளன்பேரோதும்பெரியோரை ஒருகாலும்பிரிகிலேனே.   (௪)

வந்திக்கும்மற்றவர்க்கும் மாசுடம்பில்வல்லமணர்தமக்குமல்லேன் *
முந்திச்சென்றரியுருவாய் இரணியனைமுரணழித்தமுதல்வர்க்கல்லால் *
சந்தப்பூமலர்ச்சோலைத் தண்சேறையெம்பெருமான்தாளை * நாளும்
சிந்திப்பார்க்குஎன்னுள்ளம் தேனூறியெப்பொழுதும்தித்திக்குமே. ()

பண்டேனமாயுலகையன் றிடந்த பண்பாளா! என்றுநின்று*[ன்றேன்*
தொண்டானேன் திருவடியே துணையல்லால் துணையிலேன்சொல்லுகி
வண்டேந்தும்மலர்ப்புறவில் வண்சேறையெம்பெருமானடியார்தம்மை*
கண்டேனுக்கிதுகாணீர் என்னெஞ்சும்கண்ணிணையும்களிக்குமாறே. ( )

பைவிரியும்வரியரவில் படுகடலுள்துயிலமர்ந்தபண்பா! என்றும் *[ம்*
மைவிரியும்மணிவரைபோல் மாயவனே! என்றென்றும், வண்டார்நீல
செய்விரியும்தண்சேறையெம்பெருமான் திருவடியைச்சிந்தித்தேற்கு * என்
ஐயறிவும்கொண்டானுக்கு ஆளானார்க்கு ஆளாமென்னன்புதானே. (௭)

உண்ணாதுவெங்கூற்றம் ஓவாதபாவங்கள்சேரா * மேலை [னை *
விண்ணோரும்மண்ணோரும்வந்திறைஞ்சும் மென்தளிர்போலடியினா
பண்ணாரவண்டியம்பும் பைம்பொழில்சூழ்தண்சேறையம்மான்தன்னை*
கண்ணாரக் † கண்டுருகிக் கையாரத்தொழுவாரைக்கருதுங்காலே. (௮)

கள்ளத்தேன்பொய்யகத்தேனாதலால் ‡போதொருகால்கவலையென்னும்*
வெள்ளத்தேற்கென்கொலோ? விளைவயலுட்கருநீலம்களைஞர்தாளா
தள்ள*தேன்மணநாறும் தண்சேறையெம்பெருமான்தாளை*நாளும்[ல்
உள்ளத்தேவைப்பாருக்கு இதுகாணீர்என்னுள்ளமுருகுமாறே. (௯)

↓ பூமாண்சேர்கருங்குழலார்போல்நடந்து வயல்நின்றபெடையோடு*அன்னம்
தேமாவினின்னிழலிற்கண்துயிலும் தண்சேறையம்மான்தன்னை *
வாமான்தேர்ப்பரகாலன் கலிகன்றியொலிமாலைகொண்டுதொண்டீர்! *
தூமாண்சேர்பொன்னடிமேற்சூட்டுமினும்துணைக்கையால்தொழுதுநின்றே. (௰)

அடிவரவு:—கண் அம்பு மீதோடி தோராளும் வந்திக்கும் பண்டு பைவிரியும உண்ணாது கள்ளத்தேன பூமாண் தந்தை

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ரு - ஆந் திருமொழி - தந்தைகாலில்.

திருவழுந்தூர். (க)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (ஸௌராஷ்டிர ராகம் - அடதாளம்.)

[தலைவனைப்புணர்ந்துப்பிரிந்த தலைவி தனது பாங்கியர்க்குத்
தலைவன் பதியுரைத்த பாசுரம்.]

↓↓ தந்தைகாலில்பெருவிலங்கு தாளவிழ * நள்ளிருட்கண்
வந்தஎந்தைபெருமானார் மருவிநின்றவூர்போலும் *
முந்திவானம்மழைபொழியும் மூவாவுருவில்மறையாளர் *
அந்திமூன்றுமனலோம்பும் அணியார்வீதியழுந்தூரே. (க)

† 'கண்டிறைஞ்சி' என்றும் பாடம் ‡ 'போதருகால்' என்றும் பாடம்.

பாரித்தெழுந்த படைமன்னர்தம்மைமாள * பாரதத்துத்
தேரிற்பாகனாயூர்ந்த தேவதேவனூர்போலும் *
நீரிற்பணைத்தநெடுவாளைக்கு அஞ்சிப்போனகுருகினங்கள் *
ஆரற்கவுளோடருகணையும் அணியார்வயல்சூழழுந்தூரே. (உ)

செம்பொன்மதிள்சூழ்தென்னிலங்கைக்கிறைவன் சிரங்களையிரண்டும் *
உம்பர்வாளிக்கிலக்காக உதிர்த்தவுரவோனூர்போலும் *
கொம்பிலார்ந்தமாதவிமேல் கோதிமேய்ந்தவண்டினங்கள் *
அம்பராவும்கண்மடவார் ஐம்பாலணையுமழுந்தூரே (ங)

வெள்ளத்துள்ளோராலிலைமேல் மேவியடியேன்மனம்புகுந்து * என்
உள்ளத்துள்ளும்கண்ணுள்ளும் நின்றார்நின்றவூர்போலும் *
புள்ளுப்பிள்ளைக்கிரைதேடிப் போனகாதற்பெடையோடும் *
அள்ளற்செறுவிற்கயல்நாடும் அணியார்வயல்சூழழுந்தூரே. (ச)

பகலுமிரவும்தானேயாய்ப் பாரும்விண்ணும்தானேயாய் *
நிகரில்சுடராயிருளாகி நின்றார்நின்றவூர்போலும் *
துகிலின்கொடியும்தேர்த்துகளும் துன்னிமாதர்கூந்தல்வாய் *
அகிலின்புகையால்முகிலேய்க்கும் அணியார்வீதியழுந்தூரே. (ரு)

ஏடிலங்குதாமரைபோல் செவ்வாய்முறுவல்செய்தருளி *
மாடுவந்தென்மனம்புகுந்து நின்றார்நின்றவூர்போலும் *
நீடுமாடத்தனிச்சூலம் போழக்கொண்டல்துளிதூவ *
ஆடலரவத்தார்ப்போவா அணியார்வீதியழுந்தூரே (சு)

மாலைப்புகுந்துமலரணைமேல்வைகி அடியேன்மனம்புகுந்து * என்
நீலக்கண்கள்பனிமல்க நின்றார்நின்றவூர்போலும் *
வேலைக்கடல்போல்நெடுவீதி விண்தோய்சுதைவெண்மணிமாடத்து *
ஆலைப்புகையாலழற்கதிரை மறைக்குமவீதியழுந்தூரே. (எ)

வஞ்சிமருங்குலிடைநோவ மணந்துநின்றகனவகத்து * என்
நெஞ்சுநிறையக்கைகூப்பி நின்றார்நின்றவூர்போலும் *
பஞ்சியன்னமெல்லடி நற்பாவைமார்கள் * ஆடகத்தின்
அஞ்சிலம்பினார்ப்போவா அணியார்வீதியழுந்தூரே. (அ)

என்னைம்புலனுமெழிலுங்கொண்டு இங்கேநெருநலெழுந்தருளி *
பொன்னங்கலைகள்மெலிவெய்தப் போனபுனிதரூர்போலும் *
மன்னுமுதுநீரரவிந்த மலர்மேல்வரிவண்டிசைபாட *
அன்னம்பெடையோடுடனாடும் அணியார்வயல்சூழழுந்தூரே. (க)

↓↓ நெல்லிற்குவளைகண்காட்ட நீரிற்குமுதம்வாய்காட்ட *
அல்லிக்கமலம்முகங்காட்டும் கழனியழுந்தூர்நின்றானை *
வல்லிப்பொதும்பிற்குயில்கூவும் மங்கைவேந்தன்பரகாலன் *
சொல்லிற்பொலிந்ததமிழ்மாலை சொல்லப்பாவம்நில்லாவே. (௧௦)

அடிவரவு:—தந்தை பாரித்து செம்பொன் வெள்ளத்துள் பகல் ஏடு மாலை வஞ்சி என் நெல்லில் சிங்கம்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௬ - ஆம் திருமொழி - சிங்கமதாய்.

திருவழுந்தூர். (உ)

கலிநிலைத்துறை. (மத்யமாவதிராகம் - ரூபகதாளம்)

↓↓ சிங்கமதாயவுணன் திறலாகம்முன்கீண்டுகந்த *
சங்கமிடத்தானைத் தழலாழிவலத்தானை *
செங்கமலத்தயனனையார் தென்னழுந்தையில்மன்னிநின்ற *
அங்கமலக்கண்ணனை அடியேன்கண்டுகொண்டேனே. (௧)

கோவானார்மடியக் கொலையார்மழுக்கொண்டருளும் *
மூவாவானவனை முழுநீர்வண்ணனை * அடியார்க்கு
ஆ! ஆ! என்றிரங்கித் தென்னழுந்தையில்மன்னிநின்ற *
தேவாதிதேவனை யான்கண்டுகொண்டுதிளைத்தேனே. (உ)

உடையானை ஒலிநீருலகங்கள்படைத்தானை *
விடையானோடவன்று விறலாழிவிசைத்தானை *
அடையார்தென்னிலங்கையழித்தானை அணியழுந்தூர்
உடையானை * அடியேன் அடைந்துய்ந்துபோனேனே. (௩)

குன்றால்மாரிதடுத்தவனைக் குலவேழமன்று
பொன்றாமை * அதனுக்கருள்செய்த போரேற்றை *
அன்றாவின்நறுநெய்யமர்ந்துண்ண அணியழுந்தூர்
நின்றானை * அடியேன் கண்டுகொண்டுநிறைந்தேனே. (௪)

கஞ்சனைக்காய்ந்தானைக் கண்ணமங்கையுள்நின்றானை *
வஞ்சனப்பேய்முலையூடு உயிர்வாய்மடுத்துண்டானை *
செஞ்சொல்நான்மறையோர் தென்னழுந்தையில்மன்னிநின்ற *
அஞ்சனக்குன்றந்தன்னை அடியேன்கண்டுகொண்டேனே. (௫)

பெரியானை அமரர்தலைவற்கும்பிரமனுக்கும் *
உரியானையுகந்தானவனுக்கும் உணர்வதனுக்கு
அரியானை * அழுந்தூர்மறையோர்கள் அடிபணியும்
கரியானை * அடியேன் கண்டுகொண்டுகளித்தேனே. (௬)

திருவாழ்மார்வன்தன்னைத் திசைமண்ணீரெரிமுதலா *
உருவாய்நின்றவனை ஒலிசேரும்மாருதத்தை *
அருவாய்நின்றவனைத் தென்னழுந்தையில்மன்னிநின்ற *
கருவார்கற்பகத்தைக் கண்டுகொண்டுகளித்தேனே. (எ)

நிலையாளாக என்னையுகந்தானை * நிலமகள்தன்
முலையாள்வித்தகனை முதுநான்மறைவீதிதொறும் *
† அலையாருங்கடல்போல்முழங்கும் தென்னழுந்தையில்மன்னிநின்ற *
கலையார்சொற்பொருளைக் கண்டுகொண்டுகளித்தேனே. (அ)

↓↓ பேரானைக் குடந்தைப்பெருமானை * இலங்கொளிசேர்
வாரார்வனமுலையாள் மலர்மங்கைநாயகனை *
ஆராவின்னமுதைத் தென்னழுந்தையில்மன்னிநின்ற *
காரார்கருமுகிலைக் கண்டுகொண்டுகளித்தேனே. (௯)

↓↓ திறல்முருகனனையார் தென்னழுந்தையில்மன்னிநின்ற *
அறமுதல்வனவனை அணியாலியர்கோன், மருவார் *
கறைநெடுவேல்வலவன் கலிகன்றிசொல்ஐயிரண்டும் *
முறைவழுவாமைவல்லார் முழுதாள்வர்வானுலகே. (௧0)

அடிவரவு:—சிங்கமது கோ உடையானை குன்றால் கஞ்சனை பெரியானை திரு நிலை பேரானை திறல் திரு.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

எ - ஆந் திருமொழி - திருவுக்கும்.

திருவழுந்தூர். (௩)

எண்சீராசிரியவிருத்தம். (செஞ்சுருட்டிராகம் - ரூபகதாளம்.)

↓↓ திருவுக்குந்திருவாகியசெல்வா !
தெய்வத்துக்கரசே ! செய்யகண்ணா ! *
உருவச்செஞ்சுடராழிவல்லானே !
உலகுண்டவொருவா ! திருமார்பா ! *

† 'அலையார்' என்ற பாடம் ஓசைக்குச் சேரும்.

ஒருவற்காற்றியுய்யும்வகையென்றால்
உடன்நின்றறைவரென்னுள்புகுந்து * ஒழியாது
அருவித்தின்றிட அஞ்சிநின்னடைந்தேன்
அழுந்தூர்மேல்திசைநின்றவம்மானே ! (க)

பந்தார்மெலவிரல்நல்வளைத்தேதாளி
பாவைபூமகள்தன்னொடுமுடனே
வந்தாய் * என்மனத்தேமன்னிநின்றாய்
மாலவண்ணா ! மழைபோலொளிவண்ணா ! *
சந்தோகா ! பௌழியா ! தைத்திரியா !
சாமவேதியனே ! நெடுமாலே ! *
அந்தோ ! நின்னடியன்றிமற்றறியேன்
அழுந்தூர்மேல்திசைநின்றவம்மானே ! (உ)

நெய்யாராழியுஞ்சங்குமேந்துமா
நீண்டதோளுடையாய் ! * அடியேனைச
செய்யாதவுலகத்திடைச்செய்தாய்
சிறுமைக்கும்பெருமைக்குமுள்புகுந்து *
பொய்யாலேவரென்மெய்குடியேறிப்
போற்றிவாழ்வதற்கஞ்சிநின்னடைந்தேன் *
ஐயா ! நின்னடியன்றிமற்றறியேன்
அழுந்தூர்மேல்திசைநின்றவம்மானே ! (௩)

பரனே ! பஞ்சவன்பௌழியன்சோழன்
பார்மன்னர்மன்னர்தாம்பணிந்தேத்தும்
வரனே ! * மாதவனே ! மதுசூதா !
மற்றோர்நல்துணைநின்னலாலிலேன்காண் *
நரனே ! நாரணனே ! திருநறையூர்நம்பீ !
எம்பெருமான் ! உம்பராளும்
அரனே ! * ஆதிவராகமுன்னாய் !
அழுந்தூர்மேல்திசைநின்றவம்மானே ! (௪)

விண்டான்விண்புகவெஞ்சமத்தரியாய்ப
பரியோன்மார்வகம்பற்றிப்பிளந்து *
பண்டானுய்யவோர்மாலவரையேந்தும்
பண்பாளா ! பரனே ! பவித்திரனே ! *

கண்டேன்நான்கலியுகத்ததன்தன்மை
　　கருமமாவதும்மென்தனக்கறிந்தேன் *
அண்டா! நின்னடியன்றிமற்றறியேன்
　　அழுந்தூர்மேல்திசைநின்றவம்மானே! (ரு)

தோயாவின்தயிர்நெய்யமுதுண்ணச்
　　சொன்னார்சொல்லிநகும்பரிசே * பெற்ற
தாயாலாப்புண்டிருந்தழுதேங்கும்
　　தாடாளா! தரையோர்க்கும்விண்ணோர்க்கும்
சேயாய்! * கிரேததிரேததுவாபர
　　கலியுகம் இவைநான்குமுனானாய்! *
ஆயா! நின்னடியன்றிமற்றறியேன்
　　அழுந்தூர்மேல்திசைநின்றவம்மானே! (சு)

கறுத்துக்கஞ்சனையஞ்சமுனிந்தாய்!
　　கார்வண்ணா! கடல்போலொளிவண்ணா! *
இறுத்திட்டான்விடையேழும்முன்வென்றாய்!
　　எந்தாய்! அந்தரமேழுமுனானாய்! *
பொறுத்துக்கொண்டிருந்தால்பொறுக்கொணாப்
　　போகமே நுகர்வான்புகுந்து * ஐவர்
அறுத்துத்தின்றிடவஞ்சிநின்னடைந்தேன்
　　அழுந்தூர்மேல்திசைநின்றவம்மானே! (எ)

நெடியானே! கடிஆர்கலிநம்பீ!
　　நின்னையேநினைந்திங்கிருப்பேனை *
கடியார்காளையரைவர்புகுந்து
　　காவல்செய்தவக்காவலைப்பிழைத்து *
குடிபோந்துன்னடிக்கீழ்வந்துபுகுந்தேன்
　　கூறைசோறிவைதந்தெனக்கருளி *
அடியேனைப்பணியாண்டுகொளெந்தாய்!
　　அழுந்தூர்மேல்திசைநின்றவம்மானே! (அ)

கோவாயைவரென்மெய்க்குடியேறிக்
　　கூறைசோறிவைதாவென்றுகுமைத்துப்
போகார் * நானவரைப்பொறுக்ககிலேன்
　　புனிதா! புட்கொடியாய்! நெடுமாலே! *

தீவாய்நாகணையில்துயில்வானே!
திருமாலே! இனிச்செய்வதொன்றறியேன் *
ஆ! ஆ! என்றடியேற்குஇறையிரங்காய்
அழுந்தூர்மேல்திசைநின்றவம்மானே! (௯)

↓↓ அன்னமன்னுபைம்பூம்பொழில்சூழ்ந்த
அழுந்தூர்மேலதிசைநின்றவம்மானை! *
கன்னிமன்னுதிண்டோட்கலிகன்றி
ஆலிநாடன் மங்கைக்குலவேந்தன் *
சொன்னவின்தமிழ்நன்மணிக்கோவை
தூயமாலையிவைபத்தும்வல்லார் *
மன்னிமன்னவராயுலகாண்டு
மானவெண்குடைக்கீழ்மகிழ்வாரே. (க0)

அடிவரவு:—திருவுக்கும பந்தார நெய் பரனே விண்டான் தோயா கறுத்து நெடியானே கோவாய அன்னம் செங்கமலம்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

அ - ஆந் திருமொழி - செங்கமலம்.

திருவழுந்தூர். (ச)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (பியாகடை ராகம் - ஆதிதாளம்.)

↓↓ செங்கமலத்திருமகளும்புவியும்
செம்பொன்திருவடியினிணைவருடமுனிவரேத்த *
வங்கமலிதடங்கடலுளனந்தனென்னும்
வரியரவினணைத்துயின்றமாயோன்காண்மின் *
எங்குமலிநிறைபுகழ்நால்வேதம் ஐந்து
வேள்விகளும்கேள்விகளுமியன்றதன்மை *
அங்கமலத்தயனனையார்பயிலும்செல்வத்து
அணியழுந்தூர்நின்றுகந்தவமரர்கோவே. (க)

முன்னிவ்வுலகேழுமிருள்மண்டியுண்ண
முனிவரொடுதானவர்கள்திகைப்ப * வந்து
பன்னுகலைநால்வேதப்பொருளையெல்லாம்
பரிமுகமாயருளியவெம்பரமன்காண்மின் *

செந்நெல்மலிகதிர்க்கவரிவீசச்
சங்கமவைமுரலச்செங்கமலமலரையேறி *
அன்னமலிபெடையோடுமமரும்செல்வத்து
அணியழுந்தூர்நின்றுகந்தவமரர்கோவே

குலத்தலையமதவேழம்பொய்கைபுக்குக்
கோள்முதலைபிடிக்கஅதற்கனுங்கிநின்று *
நிலத்திகழும்மலர்ச்சுடரேய்சோதீ ! என்ன
நெஞ்சிடர்தீர்த்தருளியஎன்நிமலன்காண்மின் *
மலைத்திகழ்சந்தகிலகனகமணியுங்கொண்டு
வந்துந்திவயல்கள்தொறும்மடைகள்பாய *
அலைத்துவரும்பொன்னிவளம்பெருகும்செல்வத்து
அணியழுந்தூர்நின்றுகந்தவமரர்கோவே.

சிலம்புமுதற்கலனணிந்தோர் † செங்கண்குன்றம்
திகழ்ந்ததெனத்திருவுருவம்பன்றியாகி *
இலங்குபுவிமடந்தைதனையிடந்துபுல்கி
எயிற்றிடைவைத்தருளியவெம்மீசன்காண்மின் *
புலம்புசிறைவண்டொலிப்பப்பூகம்தொக்க
பொழில்கள்தொறும்குயில்கூவமயிலகளால *
அலம்புதிரைப்புனல்புடைசூழ்ந்துஅழகார்செல்வத்து
அணியழுந்தூர்நின்றுகந்தவமரர்கோவே.

சினமேவுமடலரியினுருவமாகித்
திறல்மேவுமிரணியனதாகங்கீண்டு *
மனமேவுவஞ்சனையால்வந்தபேய்ச்சி
மாளஉயிர்வௌவியவெம்மாயோன்காண்மின் *
இனமேவுவரிவளைக்கையேந்தும் கோவை
‡ யேய்வாய்மரகதம்போற்கிளியினின்சொல்
அனமேவுநடைமடவார்பயிலும்செல்வத்து
அணியழுந்தூர்நின்றுகந்தவமரர்கோவே.

வானவர்தம்துயர்தீரவந்துதோன்றி
மாணுருவாய்மூவடிமாவலியைவேண்டி *
தானமரவேழுலகுமளந்தவென்றித்
தனிமுதல்சக்கரப்படையென்தலைவன்காண்மின் *

† 'செங்கற்குன்றம்' என்று அரும்பதம். ‡ 'ஏய்வாய' என்றும் பாடம்.

தேனமரும்பொழில்தழுவுமெழில்கொள்வீதிச்
செழுமாடமாளிகைகள்கூடந்தோறும் *
ஆனதொல்சீர்மறையாளர்பயிலும்செல்வத்து
அணியழுந்தூர்நின்றுகந்தவமரர்கோவே. (௬)

பந்தணைந்தமெல்விரலாள்சீதைக்காகிப்
பகலவன்மீதியங்காதவிலங்கைவேந்தன் *
அந்தமில்திண்கரஞ்சிரங்கள்புரண்டுவீழ
அடுகணையாலெய்துகந்தவம்மான்காண்மின் *
செந்தமிழும்வடகலையும்திகழ்ந்தநாவர்
திசைமுகனையனையவர்கள்செம்மைமிக்க *
அந்தணர்தமாகுதியின்புகையார்செல்வத்து
அணியழுந்தூர்நின்றுகந்தவமரர்கோவே. (௭)

கும்பமிகுமதவேழம்குலையக்கொம்பு
பறித்து மழவிடையடர்த்துக்குரவைகோத்து *
வம்பவிழும்மலர்க்குழலாளாய்ச்சிவைத்த
தயிர்வெண்ணெய் உண்டுகந்தமாயோன்காண்மின் *
செம்பவளமரதகம் நன்முத்தம்காட்டத்
திகழ்பூகம்கதலிபலவளமிக்கெங்கும் *
அம்பொன்மதிள்பொழில்புடைசூழ்ந்தழகார்செல்வத்து
அணியழுந்தூர்நின்றுகந்தவமரர்கோவே. (௮)

ஊடேறுகஞ்சனொடுமல்லும்வில்லும்
ஒண்கரியுமுருள்சகடுமுடையச்செற்ற *
நீடேறுபெருவலித்தோளுடையவென்றி
நிலவுபுகழ்நேமியங்கைநெடியோன்காண்மின் *
சேடேறுபொழில்தழுவுமெழில்கொள்வீதித்
திருவிழவில்மணியணிந்ததிண்ணைதோறும *
ஆடேறுமலர்க்குழலார்பயிலும்செல்வத்து
அணியழுந்தூர்நின்றுகந்தவமரர்கோவே. (௯)

↓↓ பன்றியாய்மீனாகியரியாய்ப் பாரைப்
படைத்துக்காத்துண்டுமிழ்ந்தபரமன்தன்னை *
அன்றமரர்க்கதிபதியுமயனும்சேயும்
அடிபணியவணியழுந்தூர்நின்றகோவை *

கன்றிநெடுவேல்வலவனாலிநாடன்
கலிகன்றியொலிசெய்தவின்பப்பாடல் *
ஒன்றினொடுநான்குமோரைந்தும்வல்லார்
ஒலிகடல்சூழுலகாளுமும்பர்தாமே. (௧0)

அடிவரவு:—செங்கமலம் முன் குலம் சிலம்பு சினம் வானவர் பந்து கும்பம் ஊடேறு பன்றி கள்ளம்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௯ - ஆந் திருமொழி - கள்ளம்மனம்.

திருச்சிறுபுலியூர்.

கலிவிருத்தம். (அபராதக்ஷாமணம் - ஆகிஞ்சந்யம்.)

↓↓ கள்ளம்மனம்விள்ளும்வகை கருதிக்கழல்தொழுவீர் ! *
வெள்ளம்முதுபரவைத் திரைவிரிய * கரையெங்கும்
தெள்ளும்மணிதிகழும் சிறுபுலியூர்ச்சலசயனத
துள்ளும் * எனதுள்ளத்துளும் உறைவாரையுள்ளீரே. (௧)

தெருவில்திரிசிறுநோன்பியர் செஞ்சோற்றொடுகஞ்சி
மருவி * பிரிந்தவர்வாய்மொழி மதியாதுவந்தடைவீர் ! *
திருவிற்பொலிமறையோர் சிறுபுலியூர்ச்சலசயனத்து *
உருவக்குறளடிகள் அடி உணர்மின்உணர்வீரே. (௨)

பறையும்வினைதொழுதுய்ம்மின்நீர் பணியும்சிறுதொண்டீர் ! *
அறையும்புனலொருபால் வயலொருபால்பொழிலொருபால் *
சிறைவண்டினமறையும் சிறுபுலியூர்ச்சலசயனத
துறையும் * இறையடியல்லது ஒன்றிறையும்அறியேனே. (௩)

வானார்மதிபொதியுஞ்சடை மழுவாளியொடொருபால் *
தானாகியதலைவனவன் அமரர்க்கதிபதியாம் *
தேனார்பொழில்தழுவும் சிறுபுலியூர்ச்சலசயனத்து
ஆனாயனது * அடியல்லது ஒன்றறியேனடியேனே. (௪)

நந்தாநெடுநரகத்திடை நணுகாவகை * நாளும்
எந்தாய் ! என இமையோர்தொழுதேத்துமிடம் * எறிநீர்ச்
செந்தாமரைமலரும் சிறுபுலியூர்ச்சலசயனத்து
அந்தாமரையடியாய் ! உனதடியேற்கருள்புரியே. (௫)

முழுநீலமுமலராம்பலும் அரவிந்தமும்விரவி *
கழுநீரொடுமடவாரவர் கண்வாய்முகமலரும் *
செழுநீர்வயல்தழுவும் சிறுபுலியூர்ச்சலசயனம் *
தொழுநீர்மையதுடையார் அடிதொழுவார்துயரிலரே. (௬)

↓↓ சேயோங்குதண்திருமாலிருஞ்சோலைமலை உறையும்
மாயா! * எனக்குரையாயிது மறைநான்கினுளாயோ? *
தீயோம்புகைமறையோர் சிறுபுலியூர்ச்சலசயனத்
தாயோ? * உனதடியார்மனத்தாயோ? அறியேனே. (௭)

மையார்வரிநீலம் மலர்க்கண்ணார்மனம்விட்டிட்டு *
உய்வானுனகழலே தொழுதெழுவேன் * கிளிமடவார்
செவ்வாய்மொழிபயிலும் சிறுபுலியூர்ச்சலசயனத்து *
ஐவாயரவணைமேல் உறையமலா! அருளாயே. (௮)

↓↓ கருமாமுகிலுருவா! கனலுருவா! புனலுருவா! *
பெருமால்வரையுருவா! பிறவுருவா! நினதுருவா! *
திருமாமகள்மருவும் சிறுபுலியூர்ச்சலசயனத்து *
அருமாகடலமுதே! உனதடியேசரணாமே. (௯)

↓↓ சீரார்நெடுமறுகில் சிறுபுலியூர்ச்சலசயனத்து *
ஏரார்முகில்வண்ணன்றன்னை இமையோர்பெருமானை *
காரார்வயல்மங்கைக்கிறை கலியனொலிமாலை *
பாராரிவைபரவித்தொழப் பாவம்பயிலாவே. (௧௦)

அடிவரவு:— கள்ளம் தெருவில் பறையும் வான் நந்த முழு சேயோங்கு மையார் கரு சீரார் பெரும்புறம்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௧௦-ஆந் திருமொழி - பெரும்புறக்கடலை.

திருக்கண்ணமங்கை.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (தோடிராகம் - ஆதிதாளம்.

↓↓ பெரும்புறக்கடலையடலேற்றினைப்
பெண்ணையாணை * எண்ணில்முனிவர்க்கருள்
தருந்தவத்தைமுத்தின்திரள்கோவையைப்
பத்தராவியைநித்திலத்தொத்தினை *

அரும்பினையலரையடியேன்மனத்தாசையை
    அமுதம்பொதியின்சுவை *
கரும்பினைக்கனியைச்சென்றுநாடிக்
    கண்ணமங்கையுள்கண்டுகொண்டேனே. (க)

மெய்ந்நலத்தவத்தைத்திவத்தைத்தரும
    மெய்யைப்பொய்யினை, கையிலோர்சங்குடை *
மைந்நிறக்கடலைக்கடல்வண்ணனை மாலை
    ஆலிலைப்பள்ளிகொள்மாயனை *
நென்னலைப்பகலையிற்றைநாளினை
    நாளையாய்வரும்திங்களையாண்டினை *
கன்னலைக்கரும்பினிடைத்தேறலைக்
    கண்ணமங்கையுள்கண்டுகொண்டேனே. (உ)

எங்களுக்கருள்செய்கின்றவீசனை
    வாசவார்குழலாள்மலைமங்கைதன்
பங்கனை * பங்கில்வைத்துகந்தான்தன்னைப்
    பான்மையைப்பனிமாமதியந்தவழ் *
மங்குலைச்சுடரைவடமாமலை
    உச்சியை நச்சிநாம்வணங்கப்படும்
கங்குலை * பகலைச்சென்றுநாடிக்
    கண்ணமங்கையுள்கண்டுகொண்டேனே. (ங)

பேய்முலைத்தலைநஞ்சுண்டபிள்ளையைத்
    தெள்ளியார்வணங்கப்படுந்தேவனை *
மாயனைமதிட்கோவலிடைகழிமைந்தனை
    அன்றியந்தணர்சிந்தையுள்
ஈசனை * இலங்குஞ்சுடர்ச்சோதியை
    எந்தையையெனக்கெய்ப்பினில்வைப்பினை *
காசினைமணியைச்சென்றுநாடிக்
    கண்ணமங்கையுள்கண்டுகொண்டேனே. (ச)

↓↓ ஏற்றினையிமயத்துளெம்மீசனை
    இம்மையைமறுமைக்குமருந்தினை *
ஆற்றலையண்டத்தப்புறத்துய்த்திடும்
    ஐயனைக் கையிலாழியொன்றேந்திய

கூற்றினை * குருமாமணிக்குன்றினை
நின்றவூர்நின்றநித்திலத்தொத்தினை *
காற்றினைப்புனலைச்சென்றுநாடிக்
கண்ணமங்கையுள்கண்டுகொண்டேனே. (ரு)

துப்பனைத்துரங்கம்படச்சீறியதோன்றலைச்
சுடர்வான்கலன்பெய்ததோர்
செப்பினை * திருமங்கைமணாளனைத்
தேவனைத் திகழும்பவளத்தொளி
யொப்பனை * உலகேழினையூழியை
ஆழியேந்தியகையனை அந்தணர்
கற்பினை * கழுநீர்மலரும்வயல
கண்ணமங்கையுள்கண்டுகொண்டேனே. (சு)

திருத்தனைத்திசைநான்முகன்தந்தையைத்
தேவதேவனைமூவரில்முன்னிய
விருத்தனை * விளங்குஞ்சுடர்ச்சோதியை
விண்ணைமண்ணினைக் கண்ணுதல்கூடிய
அருத்தனை * அரியைப்பரிகீறியவப்பனை
அப்பிலாரழலாய்நின்ற
கருத்தனை * களிவண்டறையும்பொழில
கண்ணமங்கையுள்கண்டுகொண்டேனே. (எ)

வெஞ்சினக்களிற்றைவிளங்காய்வீழக்
கன்றுவீசியவீசனை * பேய்மகள்
துஞ்சநஞ்சுசுவைத்துண்டதோன்றலைத்
தோன்றல்வாளரக்கன்கெடத்தோன்றிய
நஞ்சினை * அமுதத்தினைநாதனை
நச்சுவாருச்சிமேல்நிற்குநம்பியை *
கஞ்சனைத்துஞ்சவஞ்சித்தவஞ்சனைக்
கண்ணமங்கையுள்கண்டுகொண்டேனே. (அ)

பண்ணினைப்பண்ணில்நின்றதோர்பான்மையைப்
பாலுள்நெய்யினைமாலுருவாய்நின்ற
விண்ணினை * விளங்குஞ்சுடர்ச்சோதியை
வேள்வியைவிளக்கினொளிதன்னை *

மண்ணினைமலையையலைநீரினை
மாலைமாமதியைமறையோர் தங்கள்
கண்ணினை * கண்களாரளவும்நின்று
கண்ணமங்கையுள்கண்டுகொண்டேனே. (௯)

↓↓ கண்ணமங்கையுள்கண்டுகொண்டேனென்று
காதலாற்கலிகன்றியுரைசெய்த *
வண்ணவொண்தமிழொன்பதோடொன்றிவை
வல்லராயுரைப்பார், மதியந்தவழ் *
விண்ணில்விண்ணவராய்மகிழ்வெய்துவர்
மெய்ம்மைசொல்லின்வெண்சங்கமொன்றேந்திய
கண்ண! * நின்தனக்குங்குறிப்பாகில்
கற்கலாம் கவியின்பொருள்தானே. (௰)

அடிவரவு:—பெரு மெய் எங்களுக்கு பேய் ஏற்றினை துப்பனை திருத்தனை வெஞ்சினம் பண்ணினை கண்ணமங்கையுள் சிலை.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

எட்டாம்பத்து

க - ஆந் திருமொழி - சிலையிலங்கு.

திருக்கண்ணபுரம். (க)

[தலைமகனைக்கண்டு ஈடுபட்ட தலைமகளது செயல்கண்ட தாய் வியந்துகூறிய பாசுரம்.]

அறுசீராசிரியவிருத்தம். (காம்போஜிராகம் - ரூபகதாளம்.)

↓↓ சிலையிலங்குபொன்னாழி திண்படைதண்டொண்சங்கமென்கின்றாளால் *
மலையிலங்குதோள்நான்கே மற்றவனுக்கெற்றேகாணென்கின்றாளால் *
முலையிலங்குபூம்பயலை முன்போட அன்போடியிருக்கின்றாளால் *
கலையிலங்குமொழியாளர் கண்ணபுரத்தம்மானைக்கண்டாள்கொலோ?

↓↓ செருவரைமுன்னாசறுத்த சிலையன்றோ? கைத்தலத்ததென்கின்றாளால் *
பொருவரைமுன்போர்தொலைத்தபொன்னாழிமற்றொருகையென்கின்றாளால் *
ஒருவரையும்நின்னொப்பா ரொப்பிலாவென்னப்பா! என்கின்றாளால் *
கருவரைபோல்நின்றானைக் கண்ணபுரத்தம்மானைக்கண்டாள்கொலோ? (௨)

துன்னுமாமணிமுடிமேல் துழாயலங்கல்தோன்றுமாலென்கின்றாளால் *
மின்னுமாமணிமகரகுண்டலங்கள் வில்வீசுமென்கின்றாளால் *
பொன்னின்மாமணியாரம் அணியாகத்திலங்குமாலென்கின்றாளால் *
கன்னிமாமதிள்புடைசூழ் கண்ணபுரத்தம்மானைக்கண்டாள்கொலோ?

தாராயதண்துளப வண்டுழுதவரைமார்பனென்கின்றாள் *
போரானைக்கொம்பொசித்த புட்பாகனென்னம்மானென்கின்றாள் *
ஆரானும்காண்மின்கள் அம்பவளம்வாயவனுக்கென்கின்றாள் *
கார்வானம்நின்றதிரும் கண்ணபுரத்தம்மானைக்கண்டாள்கொலோ? (ச)

அடித்தலமும்தாமரையே அங்கைகளும்பங்கயமேயென்கின்றாள் *
முடித்தலமும்பொற்பூணும் என்னெஞ்சத்துள் † அகலாதென்கின்றாள் *
வடித்தடங்கண்மலரவளோ வரையாகத்துள்ளிருப்பாள் ? என்கின்றாள் *
கடிக்கமலம்கள்ளுகுக்கும் கண்ணபுரத்தம்மானைக்கண்டாள்கொலோ?()

பேராயிரமுடையபேராளன் பேராளனென்கின்றாள் *
ஏரார்கனமகரகுண்டலத்தன் எண்டோளனென்கின்றாள் *
நீரார்மழைமுகிலே நீள்வரையேயொக்குமாலென்கின்றாள் *
காரார் ‡ வயலமரும் கண்ணபுரத்தம்மானைக்கண்டாள்கொலோ ? (சு)

செவ்வரத்தவுடையாடை அதன்மேலோர்சிவளிகைக்கச்சென்கின்றாள் *
அவ்வரத்தவடியிணையும் அங்கைகளும்பங்கயமேயென்கின்றாள் *
மைவளர்க்குமணியுருவம் மரதகமோ ! மழைமுகிலோ ! என்கின்றாள் *
கைவளர்க்குமழலாளர் கண்ணபுரத்தம்மானைக்கண்டாள்கொலோ? (எ)

கொற்றப்புள்ளொன்றேறி மன்றூடேவருகின்றானென்கின்றாள் *
வெற்றிப்போரிந்திரற்கும் இந்திரனேயொக்குமாலென்கின்றாள் *
பெற்றக்காலவனாகம் பெண்பிறந்தோமுய்யோமோ ! என்கின்றாள் *
கற்றநூல்மறையாளர் கண்ணபுரத்தம்மானைக்கண்டாள்கொலோ? (அ)

வண்டமரும்வனமாலை மணிமுடிமேல்மணநாறுமென்கின்றாள் *
உண்டிவர்பாலன்பெனக்கென் றொருகாலும்பிரிகிலேனென்கின்றாள் *
பண்டிவரைக்கண்டறிவதெவ்வூரில் ? யாமென்றேயயில்கின்றாள் *
கண்டவர்தம்மனம்வழங்கும் கண்ணபுரத்தம்மானைக்கண்டாள்கொலோ ? (கூ)

‡‡ மாவளருமென்னோக்கி மாதராள்மாயவனைக்கண்டாளென்று *
காவளரும்கடிபொழில்சூழ் கண்ணபுரத்தம்மானைக்கலியன்சொன்ன *
பாவளரும்தமிழ்மாலை பன்னியநூலிவையைந்துமைந்தும்வல்லார் *
பூவளரும்கற்பகஞ்சேர் பொன்னுலகில்மன்னவராய்ப்புகழ்தக்கோரே.

அடிவரவு:—சிலை செரு தன்னு தார் அடி பேர் செவ்வரத்த கொற்றம் வண்டு மாவளரும் தெள்ளியீர.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

---

† 'அகலாவென்கின்றாள்' என்பதும் பாடம்.
‡ 'வயல்மருவும்' என்றும் பாடம்.

உ - ஆந் திருமொழி - தெள்ளியீர்.

திருக்கண்ணபுரம். (உ)

[தலைவியின் நிலைகண்ட தாய் தலைமகனை இயற்பழித்தும், தலைமகளது இளமைக்கு இரங்கியும் கூறிய பாசுரம்.]

வெண்டளையாலமைந்த தரவுகொச்சகக்கலிப்பா (சைந்தவி ராகம்-அடதாளம்.)

↓↓ தெள்ளியீர் ! தேவர்க்கும்தேவர் திருத்தக்கீர் ! *
வெள்ளியீர் ! வெய்யவிழுநிதிவண்ணர் * ஓ
துள்ளுநீர்க் கண்ணபுரந்தொழுதாளிவள்
கள்வியோ ! * கைவளைகொள்வதுதக்கதே ? (௧)

நீணிலாமுற்றத்து நின்றிவளநோக்கினாள் *
காணுமோ? கண்ணபுரமென்றுகாட்டினாள் *
பாணனார்திண்ணமிருக்க இனியிவள்
நாணுமோ? * நன்றுநன்றுநறையூரர்க்கே. (௨)

↓↓ அருவிசோர்வேங்கடம் நீர்மலையென்றுவாய்
வெருவினாள் * மெய்யம்வினவியிருக்கின்றாள் *
பெருகுசீர்க் கண்ணபுரமென்றுபேசினாள்
உருகினாள் * உள்மெலிந்தாள் இதுவென்கொலோ? (௩)

உண்ணும்நாளில்லை உறக்கமும்தானில்லை *
பெண்மையும் சாலநிறைந்திலள்பேதைதான் *
கண்ணனூர் கண்ணபுரந்தொழும், கார்க்கடல்
வண்ணர்மேல் * எண்ணம்இவட்குஇதுவென்கொலோ ? (௪)

கண்ணனூர்கண்ணபுரம் தொழும்காரிகை *
பெண்மையும்என்னுடை உண்மையுரைக்கின்றாள் *
வெண்ணெயுண்டுஆப்புண்ட வண்ணம்விளம்பினால் *
வண்ணமும் பொன்னிறமாவதொழியுமே. (௫)

வடவரைநின்றும்வந்து இன்றுகணபுரம் *
இடவகைகொள்வது யாமென்றுபேசினாள் *
மடவரல்மாதரென்பேதை இவர்க்கிவள்
கடவதென் ? * கண்துயில் இன்றிவர்கொள்ளவே. (௬)

தரங்கநீர்பேசினும் தண்மதிகாயினும் *
இரங்குமோ ? எத்தனைநாளிருந்தெள்கினாள் ? *
துரங்கம்வாய்கீண்டுகந்தானது தொன்மை * ஊர்
அரங்கமேயென்பது இவள்தனக்காசையே. (௭)

தொண்டெல்லாம்நின்னடியே தொழுதுய்யுமா
கண்டு * தான்கணபுரம் தொழப்போயினாள் *
வண்டுலாம்கோதைஎன்பேதை மணிநிறம்
கொண்டுதான் * கோயின்மைசெய்வது தக்கதே? (அ)

முள்ளெயிறேய்ந்தில கூழைமுடிகொடா *
தெள்ளியளென்பதோர்தேசிலள் என்செய்கேன்? *
கள்ளவிழ்சோலைக் கணபுரம்கைதொழும்
பிள்ளையை * பிள்ளையென்றெண்ணப்பெறுவரே? (௯)

↓↓ கார்மலி கண்ணபுரத்தெம்மடிகளை *
பார்மலிமங்கையர்கோன் பரகாலன்சொல் *
சீர்மலிபாடல் இவைபத்தும்வல்லவர் *
நீர்மலிவையத்து நீடுநிற்பார்களே. (௧௦)

அடிவரவு:—தெள்ளியீர் நீணிலா அருவி உண்ணும் கண்ணன் வடவரை தரங்கம் தொண்டு முள் கார் கரை.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௩ - ஆம் திருமொழி - கரையெடுத்த.

திருக்கண்ணபுரம். (௩)

[தலைமகனைப்பிரிந்த தலைவி இரங்கிக்கூறிய பாசுரம்: அறத்தொடு நிற்றல்.]

தரவுகொச்சகக்கலிப்பா. (கேதாரகௌளாரகம் - ரூபகதாளம்.)

↓↓ கரையெடுத்தசுரிசங்கும் கனபவளத்தெழுகொடியும் *
திரையெடுத்துவருபுனல்சூழ் திருக்கண்ணபுரத்துறையும் *
விரையெடுத்ததுழாயலங்கல் விறல்வரைத்தோள்புடைபெயர *
வரையெடுத்தபெருமானுக்கு இழந்தேனென்வரிவளையே. (௧)

அரிவிரவுமுகிற்கணத்தால் அகிற்புகையால்வரையோடும் *
தெரிவரியமணிமாடத் திருக்கண்ணபுரத்துறையும் *
வரியரவினணைத்துயின்று மழைமதத்தசிறுதறுகண் *
கரிவெருவமருப்பொசித்தாற்கு இழந்தேனென்கனவளையே. (௨)

துங்கமாமணிமாட நெடுமுகட்டின்சூலிகை * போம்
திங்கள்மாமுகில்துணிக்கும் திருக்கண்ணபுரத்துறையும் *
பைங்கண்மால்விடையடர்த்துப் பனிமதிகோள்விடுத்துகந்த *
செங்கண்மாலம்மானுக்கு இழந்தேனென்செறிவளையே. (௩)

கணமருவுமயிலகவு கடிபொழில்சூழ்நெடுமறுகில் *
திணமருவுகனமதிள்சூழ் திருக்கண்ணபுரத்துறையும் *
மணமருவுதோளாய்ச்சி ஆர்க்கப்போய் * உரலோடும்
புணர்மருதமிறநடந்தாற்கு இழந்தேனென்பொன்வளையே. (ச)

வாயெடுத்தமந்திரத்தால் அந்தணர்தம்செய்தொழில்கள் *
தீயெடுத்துமறைவளர்க்கும் திருக்கண்ணபுரத்துறையும் *
தாயெடுத்தசிறுகோலுக்கு உளைந்தோடி * தயிருண்ட
வாய்துடைத்தமைந்தனுக்கு இழந்தேனென்வரிவளையே. (ரு)

மடலெடுத்தநெடுந்தாழை மருங்கெல்லாம்வளர்பவளம் *
திடலெடுத்துச்சுடரிமைக்கும் திருக்கண்ணபுரத்துறையும் *
அடலடர்த்தன்றிரணியனை முரணழிய, அணியுகிரால் *
உடலெடுத்தபெருமானுக்கு இழந்தேனென்னொளிவளையே. (சா)

வண்டமரும்மலர்ப்புன்னை வரிநீழலணிமுத்தம் *
தெண்திரைகள்வரத்திரட்டும் திருக்கண்ணபுரத்துறையும் *
எண்திசையுமெழுசுடரும் இருநிலனும்பெருவிசும்பும் *
உண்டுமிழ்ந்தபெருமானுக்கு இழந்தேனென்னொளிவளையே. (எ)

கொங்குமலிகருங்குவளை கண்ணாக, தெண்கயங்கள் *
செங்கமலமுகமலர்த்தும் திருக்கண்ணபுரத்துறையும் *
வங்கமலிதடங்கடலுள் வரியரவினணைத்துயின்ற *
செங்கமலநாபனுக்கு இழந்தேனென்செறிவளையே. (அ)

வாராளுமிளங்கொங்கை நெடும்பணைத்தோள்மடப்பாவை *
சீராளும்வரைமார்பன் திருக்கண்ணபுரத்துறையும் *
பேராளனாயிரம்பேர் ஆயிரவாயரவணைமேல் *
பேராளர்பெருமானுக்கு இழந்தேனென்பெய்வளையே. (கூ)

↓↓ தேமருவுபொழில்புடைசூழ் திருக்கண்ணபுரத்துறையும்
வாமனனை * மறிகடல்சூழ் வயலாலிவளநாடன் *
காமருசீர்க்கலிகன்றி கண்டுரைத்ததமிழ்மாலை *
நாமருவியிவைபாட வினையாயநண்ணாவே. (க0)

அடிவரவு:—கரை அரி தங்கம் கணம் வாய் மடல் வண்டு கொங்கு வாராளும் தேமருவு விண்ணவர்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

க - ஆந் திருமொழி - விண்ணவர்.

திருக்கண்ணபுரம். (ச)

[தலைமகளுடைத்தாடுபட்டதலைவி ஆற்றதுதும்பியைநோக்கிக்கூறியபாசுரம்.]

தரவுகொச்சகக்கலிப்பா. (காம்போதி - ஆதிதாளம்.)

⇊ விண்ணவர்தங்கள்பெருமான் திருமார்வன் *
மண்ணவரெல்லாம்வணங்கும் மலிபுகழ்சேர் *
கண்ணபுரத்தெம்பெருமான் கதிர்முடிமேல் *
வண்ணநறுந்துழாய் வந்தூதாய்கோல்தும்பீ ! (க)

வேதமுதல்வன் விளங்குபுரிநூலன் *
பாதம்பரவிப் பலரும்பணிந்தேத்தி *
காதன்மைசெய்யும் கண்ணபுரத்தெம்பெருமான் *
தாதுநறுந்துழாய் தாழ்ந்தூதாய்கோல்தும்பீ ! (உ)

விண்டமலரெல்லாம் ஊதிநீயென்பெறுதி ? *
அண்டமுதல்வன் அமரர்களெல்லாரும் *
கண்டுவணங்கும் கண்ணபுரத்தெம்பெருமான் *
வண்டுநறுந்துழாய் வந்தூதாய்கோல்தும்பீ ! (ங)

நீர்மலிகின்றது ஓர்மீனாய்ஓராமையுமாய் *
சீர்மலிகின்றது ஓர்சிங்கவுருவாகி *
கார்மலிவண்ணன் கண்ணபுரத்தெம்பெருமான் *
தார்மலிதண்துழாய் தாழ்ந்தூதாய்கோல்தும்பீ ! (ச)

ஏரார்மலரெல்லாம் ஊதிநீயென்பெறுதி ? *
பாரார்உலகம் பரவ, பெருங்கடலுள் *
காராலமயான கண்ணபுரத்தெம்பெருமான் *
தாரார்நறுந்துழாய் தாழ்ந்தூதாய்கோல்தும்பீ ! (ரு)

மார்வில்திருவன் வலனேந்துசக்கரத்தன் *
பாரைப்பிளந்த பரமன்பரஞ்சோதி *
காரில்திகழ் காயாவண்ணன்கதிர்முடிமேல *
தாரில்நறுந்துழாய் தாழ்ந்தூதாய்கோல்தும்பீ ! (சா)

வாமனன்கற்கி மதுசூதன்மாதவன் *
தார்மன்னுதாசரதியாய தடமார்வன் *
காமன்தன்தாதை கண்ணபுரத்தெம்பெருமான் *
தாமநறுந்துழாய் தாழ்ந்தூதாய்கோல்தும்பீ ! (எ)

நீலமலர்கள் நெடுநீர்வயலமருங்கில் *
சாலமலரெல்லாம் ஊதாதே * வாளரக்கர்
காலன் கண்ணபுரத்தெம்பெருமான்கதிர்முடிமேல் *
கோலநறுந்துழாய் கொண்டூதாய்கோல்தும்பீ ! (அ)

நந்தன்மதலை நிலமங்கைநல் துணைவன் *
அந்தமுதல்வன் அமரர்கள்தம்பெருமான் *
கந்தம்கமழ் காயாவண்ணன்கதிர்முடிமேல் *
கொந்துநறுந்துழாய் கொண்டூதாய்கோல்தும்பீ ! (கூ)

↓↓ வண்டமருஞ்சோலை வயலாலிநன்னாடன் *
கண்டசீர்வென்றிக் கலியனொலிமாலை *
கொண்டல்நிறவண்ணன் கண்ணபுரத்தானை *
தொண்டரோம்பாட நினைந்தூதாய்கோல்தும்பீ ! (கo)

அடிவரவு:—விண்ணவர் வேதம் விண்ட நீர் எரார் மார்வில் வாமனன் நீலம் நந்தன் வண்டமரும் தந்தை.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ரு - ஆந் திருமொழி - தந்தை.

திருக்கண்ணபுரம் (ரு)

அறுசீராசிரியவிருத்தம். (யதுகுலகாம்போதிராகம் - ஆதிதாளம்.)

[தலைவனைப்பிரிந்த தலைவி அந்திப்பொழுதில் தலைவன் வாராது நீட்டிக்க, தென்றல் முதலியவற்றால் வருந்திக் கூறுதல்.]

↓↓ தந்தைகாலில்விலங்கற வந்துதோன்றியதோன்றல்பின் * தமியேன்தன்
சிந்தைபோயிற்றுத் திருவருளவனிடைப்பெறுமளவிருந்தேனை *
அந்திகாவலன் அமுதுறுபசுங்கதிரவை சுட, அதனோடும் *
மந்தமாருதம்வனமுலைதடவந்து வலிசெய்வதொழியாதே. (க)

மாரிமாக்கடல்வளைவணற்கிளையவன் வரைபுரைதிருமார்பில் *
தாரினாசையிற்போயினநெஞ்சமும் தாழ்ந்தது, ஓர்துணைகாணேன் *
ஊருந்துஞ்சிற்று உலகமுந்துயின்றது ஒளியவன்விசும்பியங்கும் *
தேரும்போயிற்றுத்திசைகளும்மறைந்தன செய்வதொன்றறியேனே.()

ஆயன்மாயமேயன்றி, மற்றென்கையில் வளைகளுமிறைநில்லா *
பேயினாருயிருண்டிடும்பிள்ளை நம்பெண்ணுயிர்க்கிரங்குமோ ? *
தூயமாமதிக்கதிர்சுடத்துணையில்லை இணைமுலைவேகின்றதால் *
ஆயன்வேயினுக்கழிகின்றதுள்ளமும் அஞ்சேலென்பாரிலையே. (ஙு)

* 20

கயங்கொள்புண்தலைக்களிறுந்துவெந்திறல் கழல்மன்னர்பெரும்போரில்*
மயங்கவெண்சங்கம்வாய்வைத்தமைந்தனும் வந்திலன், மறிகடல்நீர் *
தயங்குவெண்திரைத்திவலைநுண்பனியென்னும் தழல்முகந்து இளமுலைமேல்*
இயங்குமாருதம்விலங்கில்என்னாவியை எனக்கெனப்பெறலாமே. (௪)

ஏழுமாமரம் துளைபடச்சிலைவளைத்து இலங்கையைமலங்குவித்த
ஆழியான் * நமக்கருளியவருளொடும் பகலெல்லைகழிகின்றதால் *
தோழி! நாமிதற்கென்செய்தும? துணையில்லை, சுடர்படுமுதுநீரில *
ஆழஆழ்கின்றஆவியை அடுவதோர அந்திவந்தடைகின்றதே. (௫)

முரியும்வெண்திரைமுதுகயம்தீப்பட முழங்கழலெரியம்பின் *
வரிகொள்வெஞ்சிலைவளைவித்த மைந்தனும்வந்திலனென்செய்கேன்? *
எரியும்வெங்கதிர்துயின்றது பாவியேனிணைநெடுங்கண்துயிலா *
கரியநாழிகையூழியிற்பெரியன கழியுமாறுஅறியேனே. (௬)

கலங்கமாக்கடலகடைந்தடைத்து இலங்கையர்கோனதுவரையாகம் *
மலங்க, வெஞ்சமத்தடுசரம்துரந்த எம்மடிகளும்வாரானல் *
இலங்குவெங்கதிரிளமதியதனொடும் விடைமணியடும் * ஆயன்
விலங்கல்வேயினதோசையுமாய் இனிவிளைவதொன்றறியேனே. (௭)

முழுதிவ்வையகம்முறைகெடமறைதலும் முனிவனுமமுனிவெய்தி *
மழுவினால்மன்னராருயிர்வவ்விய மைந்தனும்வாரானல் *
ஒழுகுநுண்பனிக்கொடுங்கியபேடையை அடங்கஅஞ்சிறைகோலி *
தழுவுநள்ளிருள்தனிமையிற்கடியது ஓர்கொடுவினையறியேனே. (௮)

கனஞ்செய்மாமதிட்கணபுரத்தவனொடும கனவினிலவன்தந்த *
மனஞ்செயின்பம்வந்துள்புகவெள்கி என்வளைநெகிழ்ந்திருந்தேனை *
சினஞ்செய்மால்விடைசிறுமணியோசை என்சிந்தையைச்சிந்துவிக்கும் *
அனந்தலன்றிலினரிகுரல் பாவியேனாவியையடுகின்றதே. (௯)

↓↓ வார்கொள்மென்முலைமடந்தையர் தடங்கடல்வண்ணனைத்தாள்நயந்து*
ஆர்வத்தாலவர்புலம்பியபுலம்பலை அறிந்துமுன்னுரைசெய்த *
கார்கொள்பைம்பொழில்மங்கையர்காவலன் கலிகன்றியொலிவல்லார்*
ஏர்கொள்வைகுந்தமாநகர்புக்கு இமையவரோடும்கூடுவரே. (௧௦)

அடிவரவு:—தந்தை மாரி ஆயன் கயம ஏழு முரியும் கலங்க முழுது கனஞ்செய வாரகொள் தொண்டர்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௰ - ஆந் திருமொழி - தொண்டீர்.

திருக்கண்ணபுரம். (௰)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம் (நாதநாமக்கிரியைராகம்-ஆதிதாளம்.)

↓↓தொண்டீர்! உய்யும்வகைகண்டேன் துளங்காவரக்கர் துளங்க*முன்
திண்தோள்நிமிரச்சிலைவளையச் சிறிதேமுனிந்ததிருமார்பன் *
வண்டாகூந்தல்மலர்மங்கை வடிக்கண்மடந்தைமான்நோக்கம்
கண்டான் * கண்டுகொண்டுகந்த கண்ணபுரம்நாம்தொழுதுமே. (க)

பொருந்தாவரக்கர்வெஞ்சமத்துப் பொன்றவன்றுபுள்ளூர்ந்து *
பெருந்தோள்மாலிதலைபுரளப் பேர்ந்தவரக்கர்தென்னிலங்கை *
இருந்தார்தம்மையுடன்கொண்டு அங்கெழிலாரபிலத்துப்புக்கொளிப்ப *
கருந்தாட்சிலைகைக்கொண்டானூர் கண்ணபுரம்நாம்தொழுதுமே. (உ)

வல்லியிடையாள்பொருட்டாக மதிள்நீரிலங்கையார்கோவை *
அல்லல்செய்துவெஞ்சமத்துள் ஆற்றல்மிகுத்தவாற்றலான் *
வல்லாளரக்கர்குலப்பாவைவாட முனிதன்வேள்வியை *
கல்விச்சிலையாற்காத்தானூர் கண்ணபுரம்நாம்தொழுதுமே. (௩)

மல்லைமுந்நீரதர்பட வரிவெஞ்சிலைகால்வளைவித்து *
கொல்லையிலங்குபணிசெய்ய கொடியோனிலங்கைபுகலுற்று *
தொல்லைமரங்கள்புகப்பெய்து துவலைநிமிர்ந்துவானணவ *
கல்லால்கடலையடைத்தானூர் கண்ணபுரம்நாம்தொழுதுமே. (௪)

ஆமையாகியரியாகி அன்னமாகி * அந்தணர்தம்
ஓமமாகியூழியாகி † உலகுசூழ்ந்தநெடும்புணரி *
சேமமதிள்சூழிலங்கைக்கோன் சிரமும்கரமும்துணித்து * முன்
காமற்பயந்தான்கருதுமூர் கண்ணபுரம்நாம்தொழுதுமே. (௫)

வருந்காதிருநீமடநெஞ்சே! நம்மேல்வினைகள்வாரா * முன்
திருந்தாவரக்கர்தென்னிலங்கை செந்தீயுண்ணச்சிவந்து, ஒருநாள் *
பெருந்தோள்வாணற்குஅருள்புரிந்து பின்னைமணாளனாகி * முன்
கருந்தாட்களிறொன்றொசித்தானூர் கண்ணபுரம்நாம்தொழுதுமே. (௬)

இலையார்மலர்ப்பூம்பொய்கைவாய் முதலைதன்னாலடர்ப்புண்டு *
கொலையார்வேழம்நடுக்குற்றுக்குலைய அதனுக்கருள்புரிந்தான் *
அலைநீரிலங்கைத்தசக்கிரீவற்கு இளையோற்கரசையருளி * முன்
கலைமாச்சிலையாலெய்தானூர் கண்ணபுரம்நாம்தொழுதுமே. (௭)

---

† 'உவரிசூழ்ந்த' என்பதும் பாடம்.

மாலாய்மனமே! அருந்துயரில் வருந்தாதிருநீ * வலிமிக்க
காலார்மருதும்காய்சினத்தகழுதும கதமாக்கழுதையும் *
மாலார்விடையும்மதகரியும் மல்லருயிரும்மடிவித்து *
காலால்சகடம்பாய்ந்தானூர் கண்ணபுரம்நாம்தொழுதுமே. (அ)

குன்றால்மாரிபழுதாக்கிக் கொடியேரிடையாள்பொருட்டாக *
வன்தாள்விடையேழன்றடர்த்த வானோர்பெருமான்மாமாயன் *
சென்றுன்தூதுபஞ்சவர்க்காய்த் திரிகாற்சகடம்சினமழித்து *
கன்றால்விளங்காயெறிந்தானூர் கண்ணபுரம்நாம்தொழுதுமே. (கூ)

↓↓ கருமாமுகிலதோய்நெடுமாடக் கண்ணபுரத்தெம்மடிகளை *
திருமாமகளாலருள்மாரி செழுநீராலிவளநாடன் *
மருவார்புயற்கைக்கலிகன்றி மங்கைவேந்தனொலிவல்லார் *
இருமாநிலத்துக்கரசாகி இமையோரிறைஞ்சவாழ்வாரே. (கய)

அடிவரவு:—தொண்டா பொருந்தா வல்வி மல்லை ஆமை வருந்தாது இலை மால் குன்றால் கருமா வியம்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ய - ஆந் திருமொழி - வியமுடை.

திருக்கண்ணபுரம். (எ)

கலிவிருத்தம். (அபநு ... - அ ...)

↓↓ வியமுடைவிடையினம் உடைதரமடமகள் *
† குயமிடைதடவரை அகலமதுடையவர் *
‡ நயமுடைநடையனம் இளையவர்நடைபயில *
கயமிடைகணபுரம் அடிகள்தமிடமே. (க)

இணைமலிமருதினொடு எருதிறஇகல்செய்து *
துணைமலிமுலையவள் மணமிகுகலவியுள் *
மணமலிவிழவினொடு அடியவரளவிய *
கணமலிகணபுரம் அடிகள்தமிடமே. (உ)

புயலுறுவரைமழை பொழிதர, மணிநிரை *
மயலுற, வரைகுடை எடுவியநெடியவர் *
முயல்துளர்மிளைமுயல்துள வளவிளைவயல் *
கயல்துளுகணபுரம் அடிகள்தமிடமே. (௩)

---

† 'குயமுடை' என்பது பாடாந்தரம்.
‡ 'நயமடநடை' என்பது அரும்பதத்தின் பாடம்.

ஏதலர்நகைசெய இளையவரளைவெண்ணெய் *
போதுசெய்தமரிய புனிதர், நல்விரைமலர் *
கோதியமதுகரம் குலவியமலர்மகள் *
காதல்செய்கணபுரம் அடிகள்தமிடமே. (௪)

தொண்டருமமரரும் முனிவரும்தொழுதெழ *
அண்டமொடகலிடம் அளந்தவரமர்செய்து *
விண்டவர்பட மதிளிலங்கை முன்னெரியெழ *
கண்டவர்கணபுரம் அடிகள்தமிடமே. (௫)

மழுவியல்படையுடையவனிடம், மழைமுகில் *
தழுவியவுருவினர் திருமகள்மருவிய *
கொழுவியசெழுமலர் முழுசியபறவைபண் *
எழுவியகணபுரம் அடிகள்தமிடமே. (௬)

பரிதியொடணிமதி பனிவரைதிசைநிலம் *
எரிதியொடெனவின இயல்வினர்செலவினர் *
சுருதியொடருமறை முறைசொலுமடியவர் *
கருதியகணபுரம் அடிகள்தமிடமே. (௭)

படிபுல்குமடியிணை பலர்தொழ, மலர்வைகு *
கொடிபுல்குதடவரை யகலமதுடையவர் *
முடிபுல்குநெடுவயல் படைசெல † அடிமலர் *
கடிபுல்குகணபுரம் அடிகள்தமிடமே (௮)

புலமனுமலர்மிசை மலர்மகள்புணரிய *
நிலமகளென இனமகளிர்களிவரொடும் *
வலமனுபடையுடை மணிவணர், நிதிகுவை *
கலமனுகணபுரம் அடிகள்தமிடமே. (௯)

↓↓ மலிபுகழ்கணபுரமுடைய எம்மடிகளை *
வலிகெழுமதிளயல வயலணிமங்கையர் *
கலியனதமிழிவை விழுமியவிசையினொடு *
ஒலிசொலுமடியவர் உறுதுயரிலரே. (௧௦)

அடிவரவு:—வியம் இணை புயல் ஏதலர் தொண்டர் மழு பரிதியொடு படி
புலம் மலிபுகழ் வானோ

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

† 'வடிமலர்' என்றும் எடுக்கலாம.

அ - ஆந் திருமொழி - வானோரளவும்.

திருக்கண்ணபுரம். (அ) தசாவதாரம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (ஸங்கீர்ணராகம் - ரூபகதாளம்.)

✝✝ வானோரளவும்முதுமுந்நீர் வளர்ந்தகாலம் * வலியுருவின்
மீனாய்வந்துவியந்துய்யக்கொண்ட தண்தாமரைக்கண்ணன் *
ஆனாவுருவிலானாயன் அவனைஅம்மாவிளைவயலுள் *
கானார்புறவிற்கண்ணபுரத்து அடியேன்கண்டுகொண்டேனே. (க)

மலங்குவிலங்குநெடுவெள்ளம்மறுக அங்கோர்வரைநட்டு *
இலங்குசோதியாரமுதம் எய்துமளவோராமையாய் *
விலங்கல்திரியத்தடங்கடலுள் சுமந்துகிடந்தவித்தகனை *
கலங்கல்முந்நீர்க்கண்ணபுரத்து அடியேன்கண்டுகொண்டேனே. (உ)

பாராரளவும்முதுமுந்நீர் பரந்தகாலம் * வளைமருப்பில்
ஏராருருவத்தேனமாய் எடுத்தவாற்றலம்மானை *
கூராராரலிரைகருதிக் குருகுபாயக்கயலிரியும் *
காரார்புறவிற்கண்ணபுரத்து அடியேன்கண்டுகொண்டேனே. (௩)

உளைந்தவரியும்மானிடமும் உடனாய்த்தோன்றவொன்றுவித்து *
விளைந்தசீற்றம்விண்வெதும்ப வேற்றோனகலம்வெஞ்சமத்து *
பிளந்துவளைந்தவுகிரானைப் பெருந்தண்செந்நெற்குலைதடிந்து *
களஞ்செய்புறவிற்கண்ணபுரத்து அடியேன்கண்டுகொண்டேனே. (௪)

தொழுநீர்வடிவிற்குறளுருவாய் வந்துதோன்றி, மாவலிபால் *
முழுநீர்வையம்முன்கொண்ட மூவாவுருவினம்மானை *
உழுநீர்வயலுள்பொன்கிளைப்ப ஒருபால்முல்லைமுகையோடும் *
கழுநீர்மலரும்கண்ணபுரத்து அடியேன்கண்டுகொண்டேனே. (௫)

வடிவாய்மழுவேபடையாக வந்துதோன்றி, மூவெழுகால் *
படியாரரசுகளைகட்ட பாழியானையம்மானை *
குடியாவண்டுகொண்டுண்ணக் கோலநீலம்மட்டுகுக்கும் *
கடியார்புறவிற்கண்ணபுரத்து அடியேன்கண்டுகொண்டேனே. (௬)

வையமெல்லாமுடன்வணங்க வணங்காமன்னனாய்த்தோன்றி *
வெய்யசீற்றக்கடியிலங்கை குடிகொண்டோடவெஞ்சமத்து *
செய்தவெம்போர்நம்பரனைச் செழுந்தண்கானலமணநாறும் *
கைதைவேலிக்கண்ணபுரத்து அடியேன்கண்டுகொண்டேனே. (௭)

ஒற்றைக்குழையுநாஞ்சிலும் ஒருபால்தோன்றத்தான்தோன்றி *
வெற்றித்தொழிலார்வேல்வேந்தர் விண்பாற்செல்ல, வெஞ்சமத்து *
செற்றகொற்றத்தொழிலானைச் செந்தீமூன்றுமில்லிருப்ப *
கற்றமறையோர்கண்ணபுரத்து அடியேன்கண்டுகொண்டேனே. (அ)

துவரிக்கனிவாய்நிலமங்கை துயர்தீர்ந்துய்ய, பாரதத்துள் *
இவரித்தரசர்தடுமாற இருள்நாள்பிறந்தவம்மானை *
உவரியோதம்முத்துந்த ஒருபாலொருபாலொண்செந்நெல் *
கவரிவீசும்கண்ணபுரத்து அடியேன்கண்டுகொண்டேனே. (கூ)

↓↓ மீனோடாமைகேழலரிகுறளாய் முன்னுமிராமனாய்த்
தானாய் * பின்னுமிராமனாய்த் தாமோதரனாய்க்கற்கியு
மானான்தன்னை * கண்ணபுரத்தடியான் கலியனொலிசெய்த *
தேனாரின்சொற்றமிழ்மாலை செப்பப்பாவம்நில்லாவே. (௰)

அடிவரவு:—வானோர் மலங்கு பார் உள்ளந்த தொழு வடி வையம் ஒற்றை துவரி மீன் கைம்மானம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

௰ - ஆந் திருமொழி - கைம்மானம்.

திருக்கண்ணபுரம். (கூ)

தரவுகொச்சகக்கலிப்பா. (மோஹநராகம் - திரிபுடைதாளம்.)

↓↓ கைம்மானமதயானை இடர்தீர்த்தகருமுகிலை *
மைம்மானமணியை அணிகொள்மரகதத்தை *
எம்மானையெம்பிரானையீசனை என்மனத்துள்
அம்மானை * அடியேன் அடைந்துய்ந்துபோனேனே. (க)

தருமானமழைமுகிலைப் பிரியாதுதன்னடைந்தார் *
வருமானம்தவிர்க்கும் மணியை, அணியுருவில் *
திருமாலையம்மானைஅமுதத்தைக் கடல்கிடந்த
பெருமானை * அடியேன் அடைந்துய்ந்துபிழைத்தேனே. (உ)

↓↓விடையேழன்றடர்த்து வெகுண்டுவிலங்கலுற *
படையாலாழிதட்ட பரமன்பரஞ்சோதி *
மடையார்நீலம்மல்குமவயல்சூழ் கண்ணபுரமொன்
றுடையானுக்கு * அடியேன் ஒருவர்க்குரியேனோ? (௩)

↓↓ மிக்கானை மறையாய்விரிந்தவிளக்கை * என்னுள்
புக்கானைப் புகழ்சேர்பொலிகின்றபொன்மலையை *
தக்கானைக் கடிகைத்தடங்குன்றின்மிசையிருந்த *
அக்காரக்கனியை அடைந்துய்ந்துபோனேனே. (௪)

வந்தாய்என்மனத்தே வந்துநீபுகுந்தபின்னை *
எந்தாய்! போயறியாய் இதுவேயமையாதோ? *
கொந்தார்பைம்பொழில்சூழ் குடந்தைக்கிடந்துகந்த
மைந்தா! * உன்னையென்றும் மறவாமைப்பெற்றேனே. (௫)

எஞ்சாவெந்நரகத்து அழுந்திநடுங்குகின்றேற்கு *
அஞ்சேலென்றடியேனை ஆட்கொள்ளவல்லானை *
நெஞ்சே! நீநினையாது இறைப்பொழுதிருத்திகண்டாய் *
மஞ்சார்மாளிகைசூழ் வயலாலிமைந்தனையே. (௬)

பெற்றார்பெற்றொழிந்தார் பின்னும்நின்றடியேனுக்கு *
உற்றானாய்வளர்த்து என்னுயிராகிநின்றானை *
முற்றாமாமதிகோள் விடுத்தானையெம்மானை *
எத்தால்யான்மறக்கேன்? இதுசொல்லென்னேழைநெஞ்சே! ()

கற்றார்பற்றறுக்கும் பிறவிப்பெருங்கடலே *
பற்றாவந்தடியேன் பிறந்தேன், பிறந்தபின்னை *
வற்றாநீர்வயல்சூழ் வயலாலியம்மானைப்
பெற்றேன் * பெற்றதுவும் பிறவாமைப்பெற்றேனே. (அ)

↓↓ கண்ணார்கண்ணபுரம் கடிகைகடிகமழும் *
தண்ணார்தாமரைசூழ் தலைச்சங்கமேல்திசையுள் *
விண்ணோர்நாண்மதியை விரிகின்றவெஞ்சுடரை *
கண்ணாரக்கண்டுகொண்டு களிக்கின்றதிங்கென்றுகொலோ? (௯)

↓↓ செருநீரவேலவலவன் கலிகன்றிமங்கையர்கோன் *
கருநீர்முகில்வண்ணன் கண்ணபுரத்தானை *
இருநீரின்தமிழ் இன்னிசைமாலைகள்கொண்டுதொண்டீர்! *
வருநீர்வையமுய்ய இவைபாடியாடுமினே. (௧௦)

அடிவரவு:—கைம்மானம் தரு விடை மிக்கானை வந்தாய எஞ்சா பெற்றார் கற்றார் கண்ணார் செரு வண்டார்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

க0 - ஆந் திருமொழி - வண்டார்.

திருக்கண்ணபுரம். (க0)

தரவுகொச்சகக்கலிப்பா. (ஸௌராஷ்டராகம் - ரூபகதாளம்.)

‡‡ வண்டார்பூமாமலர்மங்கை மணநோக்க
முண்டானே ! * உன்னையுகந்துகந்து உன்தனக்கே
தொண்டானேற்கு * எனசெய்கின்றாய் ? சொல்லு நால்வேதம்
கண்டானே ! * கண்ணபுரத்துறையம்மானே ! (க)

பெருநீரும்விண்ணும் மலையுமுலகேழும் *
ஒருதாரா நின்னுளொடுக்கிய நின்னையல்லால *
வருதேவர்மற்றுளரென்று என்மனத்துஇறையும்
கருதேன்நான் * கண்ணபுரத்துறையம்மானே ! (உ)

‡‡ மற்றுமோர்தெய்வமுளதென்று இருப்பாரோடு
உற்றிலேன் * உற்றதும் உன்னடியார்க்கடிமை *
மற்றெல்லாம்பேசிலும் நின்திருவெட்டெழுத்தும்
கற்று * நான் கண்ணபுரத்துறையம்மானே ! (ங)

பெண்ணானாள் பேரிளங்கொங்கையினாரழல்போல் *
உண்ணாநஞ்சுண்டுகந்தாயை உகந்தேன்நான் *
மண்ணாளா ! வாள்நெடுங்கண்ணி மதுமலராள்
கண்ணாளா ! * கண்ணபுரத்துறையம்மானே ! (ச)

பெற்றாரும்சுற்றமுமென்று இவைபேணேன்நான் *
மற்றாரும்பற்றிலேன் ஆதலால்நின்னடைந்தேன் *
உற்றானென்றுஉள்ளத்துவைத்து அருள்செய்கண்டாய் *
கற்றார்சேர் கண்ணபுரத்துறையம்மானே ! (ரு)

ஏத்தியுன்சேவடி எண்ணியிருப்பாரை *
பார்த்திருந்தங்கு நமன்தமர்பற்றாது *
சோத்தம்நாமஞ்சுதுமென்று தொடாமைநீ
காத்திபோல் * கண்ணபுரத்துறையம்மானே ! (சு)

வெள்ளைநீர்வெள்ளத்து அணைந்தவரவணைமேல் *
துள்ளுநீர்மெள்ளத் துயின்றபெருமானே ! *
வள்ளலே ! உன்தமர்க்கென்றும் நமன்தமர்
கள்ளர்போல் * கண்ணபுரத்துறையம்மானே ! (எ)

மாணாகி வையமளந்ததுவும் * வாளவுணன்
பூணாகம்கீண்டதுவும் ஈண்டுநினைந்திருந்தேன் *
பேணாதவல்வினையேன் இடரெத்தனையும்
காணேன்நான் * கண்ணபுரத்துறையம்மானே! (அ)

நாட்டினாயென்னை உனக்குமுன்தொண்டாக *
மாட்டினேனத்தனையே கொண்டுஎன்வல்வினையை *
பாட்டினாலுன்னை என்நெஞ்சத்திருந்தமை
காட்டினாய் * கண்ணபுரத்துறையம்மானே! (கூ)

⇊ கண்டசீர்க் கண்ணபுரத்துறையம்மானை *
கொண்டசீர்த்தொண்டன் கலியனொலிமாலை *
பண்டமாய்ப்பாடும் அடியவர்கட்கென்றும் *
அண்டம்போய்ஆட்சி அவர்க்கதறிந்தோமே. (கo)

அடிவரவு:—வண்டார் பெரு மற்று பெண் பெற்றா வத்தி வெள்ளை மாண் நாட்டினாய் கண்டசீர் வங்கம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ஒன்பதாம் பத்து.

க-ஆந் திருமொழி - வங்கமாமுந்நீர்.

திருக்கண்ணங்குடி.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (ஆரபிராகம் - அடதாளம்.)

⇊ வங்கமாமுந்நீர்வரிநிறப்பெரிய
வாளரவினணைமேவி *
சங்கமாரங்கைத்தடமலருந்திச்
சாமமாமேனியென்தலைவன் *
அங்கமாறைந்துவேள்விநால்வேதம்
அருங்கலைபயின்று * எரிமூன்றும்
செங்கையால்வளர்க்கும்துளக்கமில்மனத்தோர்
திருக்கண்ணங்குடியுள்நின்றானே. (க)

கவளமாகதத்தகரியுய்யப் பொய்கைக்
கராங்கொளக்கலங்கி * உள்நினைந்து
துவளமேல்வந்துதோன்றி வன்முதலை
துணிபடச்சுடுபடைதுரந்தோன் *

குவளைநீள்முளரிகுமுதமொண்கழுநீர்
கொய்ம்மலர்நெய்தலொண்கழனி *
திவளும்மாளிகைசூழ்செழுமணிப்புரிசைத்
திருக்கண்ணங்குடியுள்நின்றானே. (உ)

வாதைவந்தடரவானமும்நிலனும்
மலைகளுமலைகடல்குளிப்ப *
மீதுகொண்டுகளும்மீனுருவாகி
விரிபுனல்வரியகட்டொளித்தோன் *
போதலர்புன்னைமல்லிகைமௌவல்
புதுவிரைமதுமலரணைந்து *
சீதவொண்தென்றல்திசைதொறும்கமழும்
திருக்கண்ணங்குடியுள்நின்றானே. (௩)

வென்றிசேர்திண்மைவிலங்கல்மாமேனி
வெள்ளெயிற்றொள்ளெரித்தறுகண் *
பன்றியாயன்றுபார்மகள்பயலை
தீர்த்தவன் பஞ்சவர்பாகன் *
ஒன்றலாவுருவத்துலப்பில்பல்காலத்து
உயர்கொடியொளிவளர்மதியம் *
சென்றுசேர்சென்னிச்சிகரநன்மாடத்
திருக்கண்ணங்குடியுள்நின்றானே. (௪)

மன்னவன்பெரியவேள்வியிற்குறளாய்
மூவடிநீரொடும்கொண்டு *
பின்னுமேழுலகுமீரடியாகப்
பெருந்திசையடங்கிடநிமிர்ந்தோன் *
அன்னமென்கமலத்தணிமலர்ப்பீடத்து
அலைபுனலிலைக்குடைநீழல் *
செந்நெலொண்கவரியசையவீற்றிருக்கும்
திருக்கண்ணங்குடியுள்நின்றானே. (ரு)

மழுவினாலவனியரசைமூவெழுகால்
மணிமுடிபொடிபடுத்து * உதிரக்
குழுவுவார்புனலுள்குளித்து வெங்
கோபம்தவிர்ந்தவன், குலைமலிகதலி *

குழுவும்வார்கமுகும்குரவுநற்பலவும்
குளிர்தருசூதமாதவியும் *
செழுமையார்பொழில்கள் தழுவுநன்மாடத்
திருக்கண்ணங்குடியுள்நின்றானே. (சு)

வானுளாரவரைவலிமையால்நலியும்
மறிகடலிலங்கையார்கோனை *
பானுநேர்சரத்தால்பனங்கனிபோலப்
பருமுடியுதிரவில்வளைத்தோன் *
கானுலாமயிலின்கணங்கள்நின்றாடக்
கணமுகில்முரசம்நின்றதிர *
தேனுலாவரிவண்டின்னிசைமுரலும்
திருக்கண்ணங்குடியுள்நின்றானே. (எ)

அரவுநீள்கொடியோனவையுளாசனத்தை
அஞ்சிடாதேயிட * அதற்குப்
பெரியமாமேனியண்டமூடுருவப்
பெருந்திசையடங்கிடநிமிர்ந்தோன் *
வரையின்மாமணியும்மரதகத்திரளும்
வயிரமும்வெதிருதிர்முத்தும் *
திரைகொணர்ந்துந்திவயல்தொறுங்குவிக்கும்
திருக்கண்ணங்குடியுள்நின்றானே. (அ)

பன்னியபாரம்பார்மகட்கொழியப்
பாரதமாபெரும்போரில் *
மன்னர்கள்மடியமணிநெடுந்திண்தேர்
மைத்துனற்குய்த்தமாமாயன் *
துன்னுமாதவியும்சுரபுன்னைப்பொழிலும்
சூழ்ந்தெழுசெண்பகமலர்வாய் *
தென்னவென்றளிகள்முரன்றிசைபாடும்
திருக்கண்ணங்குடியுள்நின்றானே. (கூ)

↓↓ கலையுலாவல்குற்காரிகைதிறத்துக்
கடற்பெரும்படையொடும்சென்று *
சிலையினாலிலங்கைதீயெழச்செற்ற
திருக்கண்ணங்குடியுள்நின்றானை *

மலைகுலாமாடமங்கையர்தலைவன்
மானவேற்கலியன்வாயொலிகள் *
உலவுசொல்மாலையொன்பதோடொன்றும்
வல்லவர்க்கில்லைநல்குரவே. (க0)

அடிவரவு:—வங்க கவளம் வாதை வென்றி மன்னவன் மழுவினல் வானுளார் அரவு பன்னிய கலை பொன்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

உ - ஆந் திருமொழி - பொன்னிவர்மேனி.

திருநாகை.

எண்சீராசிரியவிருத்தம். (ராகங்காகப் - ஆதிதாளம்.)

[தலைவனது உருவெளிப்பாடுகண்ட தலைவி தோழிக்குக் கூறிய பாசுரம்.]

‡‡ பொன்னிவர்மேனிமரகதத்தின்
பொங்கிளஞ்சோதியகலத்துஆரம்
மின் * இவர்வாயில்நல்வேதமோதும்
வேதியர்வானவராவர்தோழீ ! *
என்னையும்நோக்கியென்னல்குலும்நோக்கி
ஏந்திளங்கொங்கையும்நோக்குகின்றார் *
அன்னையென்னைக்குமென்றஞ்சுகின்றேன்
அச்சோவொருவரழகியவா ! (க)

தோடவிழ்நீலம்மணங்கொடுக்கும்
சூழ்புனல்சூழ்குடந்தைக்கிடந்த *
சேடர்கொலென்றுதெரிக்கமாட்டேன்
செஞ்சுடராழியும்சங்குமேந்தி *
பாடகமெல்லடியார்வணங்கப்
பன்மணிமுத்தொடிலங்குசோதி *
ஆடகம்பூண்டொருநான்குதோளும்
அச்சோவொருவரழகியவா ! (உ)

வேயிருஞ்சோலைவிலங்கல்சூழ்ந்த
மெய்யமணாளர், இவ்வையமெல்லாம் *
தாயினநாயகராவர்தோழீ !
தாமரைக்கண்களிருந்தவாறு *

சேயிருங்குன்றம்திகழ்ந்தொப்பச்
செவ்வியவாகிமலர்ந்தசோதி *
ஆயிரம்தோளொடிலங்குபூணும்
அச்சோவொருவரழகியவா! (ரு)

வம்பவிழுந்துழாய்மாலைதோள்மேல்
கையனவாழியும்சங்குமேந்தி *
நம்பர்நம்மில்லம்புகுந்துநின்றார்
நாகரிகர்பெரிதும்இளையர் *
செம்பவளம்இவர்வாயின்வண்ணம்
தேவரிவரதுஉருவம்சொல்லில் *
அம்பவளத்திரளேயுமொப்பர்
அச்சோவொருவரழகியவா! (சு)

கோழியும்கூடலும்கோயில்கொண்ட
கோவலரேயொப்பர், குன்றமன்ன *
பாழியந்தோளுமோர்நான்குடையர்
பண்டிவர்தம்மையும்கண்டறியோம் *
வாழியரோஇவர்வண்ணமெண்ணில்
மாகடல்போன்றுளர், கையில்வெய்ய *
ஆழியொன்றேந்தியோர்சங்குபற்றி
அச்சோவொருவரழகியவா! (எ)

வெஞ்சினவேழம்மருப்பொசித்த
வேந்தர்கொல்? ஏந்திழையார்மனத்தை *
தஞ்சுடையாளர்கொல்? யானறியேன்
தாமரைக்கண்களிருந்தவாறு *
கஞ்சனைவஞ்சமுன்கால்விசைத்த
காளையராவர், கண்டார்வணங்கும் *
அஞ்சனமாமலையேயுமொப்பர்
அச்சோவொருவரழகியவா! (அ)

பிணியவிழ்தாமரைமொட்டலர்த்தும்
பேரருளாளர்கொல்? யானறியேன் *
பணியுமென்னெஞ்சமிதென்கொல்? தோழீ
பண்டிவர்தம்மையும்கண்டறியோம் *

அணிகெழுதாமரையன்னகண்ணும்
அங்கையும்பங்கயம், மேனிவானத்து *
அணிகெழுமாமுகிலேயுமொப்பர்
அச்சோவொருவரழகியவா ! (எ)

மஞ்சுயர்மாமதிதீண்டநீண்ட
மாலிருஞ்சோலைமணாளர்வந்து * என்
நெஞ்சுள்ளும்கண்ணுள்ளும்நின்றுநீங்கார்
நீர்மலையார்கொல் ? நினைக்கமாட்டேன் *
மஞ்சுயர்பொன்மலைமேலெழுந்த
மாமுகில்போன்றுளர்வந்துகாணீர் *
அஞ்சிறைப்புள்ளுமொன்றேறிவந்தார்
அச்சோவொருவரழகியவா ! (அ)

எண்டிசையும்எறிநீர்க்கடலும்
ஏழுலகுமுடனேவிழுங்கி *
மண்டியோராலிலைப்பள்ளிகொள்ளும்
† மாயர்கொல் ? மாயமறியமாட்டேன் *
கொண்டல்நன்மால்வரையேயுமொப்பர்
கொங்கலர்தாமரைக்கண்ணும்வாயும் *
அண்டத்தமரர்பணியநின்றார்
அச்சோவொருவரழகியவா ! (கூ)

↓↓ அன்னமும்கேழலும்மீனுமாய
ஆதியைநாகையழகியாரை *
கன்னிநன்மாமதிள்மங்கைவேந்தன்
காமருசீர்க்கலிகன்றி * குன்றா
இன்னிசையாற்சொன்னசெஞ்சொல்மாலை
ஏழுமிரண்டுமோரொன்றும்வல்லார் *
மன்னவராயுலகாண்டு மீண்டும்
வானவராய்மகிழ்வெய்துவரே. (கo)

அடிவரவு:—பொன் தோடு வேய் வம்பு கோழி வெஞ்சினம் பிணி மஞ்சுயர் எண்டிசை அன்னம் தன்னை.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

† 'ஆயர்கொல்' என்று கூறுவர்.

௩ - ஆந் திருமொழி - தன்னை.

திருப்புல்லாணி. (க)

கலிநிலைத்துறை. (சங்கராபரணராகம் - ரூபகதாளம்.)

[தலைவனைப்பிரிந்த தலைவி ஆற்றாமைமிகுதியால் தலைவனிடம் செல்லத் துணிந்து நெஞ்சையும் தோழியையும் அழைவேண்டிய பாசுரம்.]

†† தன்னைநைவிக்கிலேன் வல்வினையேன்தொழுதும்எழு *
பொன்னைநைவிக்கும் அப்பூஞ்செருந்தி ! மணிநீழல்வாய் *
என்னைநைவித்து எழில்கொண்டகன்றபெருமானிடம் *
புன்னைமுத்தம்பொழில்சூழ்ந்து அழகாயபுல்லாணியே. (க)

உருகிநெஞ்சே ! நினைந்திங்கிருந்தென் ? தொழுதும்எழு *
முருகுவண்டுண்மலர்க்கைதையின் நீழலில்முன்னொருநாள் *
பெருகுகாதன்மை என்னுள்ளமெய்தப்பிரிந்தானிடம் *
பொருதுமுந்நீர்க்கரைக்கே மணியுந்துபுல்லாணியே. (௨)

ஏதுசெய்தால்மறக்கேன் ? மனமே ! தொழுதும்எழு *
தாதுமல்குதடஞ்சூழ்பொழில் தாழ்வர்தொடர்ந்து * பின்
பேதைநின்னைப்பிரியேன் இனி என்றகன்றானிடம் *
போதுநாளுங்கமழும் பொழில்சூழ்ந்தபுல்லாணியே. (௩)

கொங்குண்வண்டேகரியாகவந்தான் கொடியேற்கு * முன்
நங்களீசன் நமக்கேபணித்தமொழிசெய்திலன் *
மங்கைநல்லாய் ! தொழுதும்எழு போயவன்மன்னுமூர் *
பொங்குமுந்நீர்க்கரைக்கே மணியுந்துபுல்லாணியே. (௪)

உணரிலுள்ளஞ்சுடுமால் வினையேன்தொழுதும்எழு *
துணரிஞாழல்நறும்போது நஞ்சூழ்குழல்பெய்து * பின்
தணரிலாவித்தளருமென அன்புதந்தானிடம் *
புணரியோதம்பணிலம் மணியுந்துபுல்லாணியே. (௫)

எள்கிநெஞ்சே ! நினைந்திங்கிருந்தென் ? தொழுதும்எழு *
வள்ளல்மாயன்மணிவண்ணனெம்மான் மருவுமிடம் *
கள்ளவிழும்மலர்க்காவியும் தூமடற்கைதையும் *
புள்ளுமள்ளற்பழனங்களுஞ்சூழ்ந்த புல்லாணியே. (௬)

பரவிநெஞ்சே ! தொழுதும்எழு போயவன்பாலமாய் *
இரவுநாளும் இனிக்கண்துயிலாதிருந்தென்பயன் ? *
விரவிமுத்தம் நெடுவெண்மணல்மேற்கொண்டு * வெண்திரை
புரவியென்னப்புதஞ்செய்து வந்துந்துபுல்லாணியே. (௭)

---

† 'மணிநீழல்' என்று சிலர் கூறுவர்.

அலமுமாழிப்படையும் உடையார் நமக்கன்பராய் *
சலமதாகித்தகவொன்றிலர் நாந்தொழுதும்எழு *
உலவுகால்நற்கழியோங்கு தண்பைம்பொழிலூடு * இசை
புலவுகானல் களிவண்டினம்பாடுபுல்லாணியே. (அ)

ஓதிநாமங்குளித்துஉச்சிதன்னால் ஒளிமாமலர் *
பாதநாளும்பணிவோம் நமக்கேநலமாதலில் *
ஆதுதாரானெனிலுந்தரும் அன்றியன்பாய் *
போதும்மாதே! தொழுதும் அவன்மன்னுபுல்லாணியே. (கூ)

↓↓ இலங்குமுத்தும்பவளக்கொழுந்தும் எழில்தாமரை *
புலங்கள்முற்றும்பொழில்சூழ்ந்து அழகாயபுல்லாணிமேல் *
கலங்கலில்லாப்புகழான் கலியனொலி † மாலை *
வலங்கொள்தொண்டர்க்கிடமாவது பாடியில்வைகுந்தமே. (க0)

அடிவரவு:—தன்னை உருகி எங்கானும் உணரில் எள்கி பாவி அலம் ஓதி இலங்கு காவார்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ச - ஆம் திருமொழி - காவார்

திருப்புல்லாணி. (உ)

தரவுகொச்சகக்கலிப்பா (... போதிராகம் - ஆதி தாளம்.)

[பிரிவாற்றாத தலைவி பறவைகளோடு தூதுவிடுகின்றமை தென்றல் முதலியவற்றால் வருந்திக் கூறிய பாசுரம்.]

↓↓ காவார்மடற்பெண்ணை அன்றிலரிகுரலும் *
ஏவாயினூடியங்கும் எஃகிற்கொடிதாலோ! *
பூவார்மணங்கமழும் புல்லாணிகைதொழுதேன் *
பாவாய்! இதுநமக்கு ஓர்பான்மையேயாகாதே. (க)

முன்னம்குறளுருவாய் மூவடிமண்கொண்டளந்த *
மன்னன்சரிதைக்கே மாலாகிப்பொன்பயந்தேன் *
பொன்னங்கழிக்கானல் புள்ளினங்காள்! புல்லாணி *
அன்னமாய்நூல்பயந்தாற்கு ஆங்கிதனைச்செப்புமினே. (உ)

வவ்வித்துழாயதன்மேல் சென்றதனிநெஞ்சம் *
செவ்வியறியாது நிற்குங்கொல்? நித்திலங்கள் *
பவ்வத்திரையுலவு புல்லாணிகைதொழுதேன் *
தெய்வச்சிலையார்க்கு என்சிந்தைநோய்செப்புமினே. (ங)

† 'மாலைகள்' என்ற பாடம் செய்யுளோசைக்குச் சேரும்.

பரியவிரணியனதாகம் அணியுகிரால் *
அரியுருவாய்க்கீண்டான் அருள்தந்தவாநமக்கு *
பொருதிரைகள்போந்துலவு புல்லாணிகைதொழுதேன் *
அரிமலர்க்கண்ணீர்ததும்ப அந்துகிலும்நில்லாவே. (௪)

வில்லாலிலங்கைமலங்கச் சரந்துரந்த *
வல்லாளன்பின்போன நெஞ்சம்வருமளவும் *
எல்லாருமென்தன்னை ஏசிலும்பேசிடினும் *
புல்லாணியெம்பெருமான் பொய்கேட்டிருந்தேனே. (௫)

சுழன்றிலங்குவெங்கதிரோன் தேரோடும்போய்மறைந்தான் *
அழன்றுகொடிதாகி அஞ்சுடரில்தானடுமால் *
செழுந்தடம்பூஞ்சோலைசூழ் புல்லாணிகைதொழுதேன் *
இழந்திருந்தேனென்தன் எழில்நிறமும்சங்குமே. (௬)

கனையாரிடிகுரலின் கார்மணியின்நாவாடல் *
தினையேனும்நில்லாது தீயிற்கொடிதாலோ *
புனையார்மணிமாடப் புல்லாணிகைதொழுதேன் *
வினையேன்மேல்வேலையும் வெந்தழலேவீசுமே. (௭)

தூம்புடைக்கைவேழம் வெருவமருப்பொசித்த *
பாம்பினணையான் அருள்தந்தவாநமக்கு *
பூஞ்செருந்திபொன்சொரியும் புல்லாணிகைதொழுதேன் *
தேம்பலிளம்பிறையும் என்தனக்கோர்வெந்தழலே. (௮)

வேதமும்வேள்வியும் விண்ணும்இருசுடரும் *
ஆதியுமானான் அருள்தந்தவாநமக்கு *
போதலரும்புன்னைசூழ் புல்லாணிகைதொழுதேன் *
ஓதமும்நானும் உறங்காதிருந்தேனே. (௯)

‡‡ பொன்னலரும்புன்னைசூழ் புல்லாணியம்மானை *
மின்னிடையார்வேட்கைநோய்கூர இருந்ததனை *
கன்னவிலும்திண்தோள் கலியனொலிவல்லார் *
மன்னவராய் மண்ணாண்டு † வானாடுமுன்னுவரே. (௧௰)

அடிவரவு:—காவார் முன்னம் வவ்வ பரிய வில் சுழன்று கனை தூம்புடை வேதம் பொன்னலரும் தவளம்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

† 'வானாளும்' 'வானான' என்பன பாடபேதங்கள்.

ரு - ஆந் திருமொழி - தவளவிளம்பிறை.

திருக்குறுங்குடி. (க)

[தலைவி தனது தலைமகனுள்ளவிடத்திற் கொண்டுவிடும்படி உற்றாரை வேண்டிக் கூறிய பாசுரம்]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (அநந்தபைரவிராகம் - அடதாளம்)

↓↓தவளவிளம்பிறைதுள்ளுமுந்நீர்த்தண்மலர்த்தென்றலோடன்றிலொன்றித்
துவள * என்னெஞ்சகஞ்சோரவீரும் சூழ்பனிநாள் துயிலாதிருப்பேன் *
இவளுமோர்பெண்கொடியென்றிரங்காதென்னலமைந்துமுன்கொண்டுபோன*
குவளைமலர்நிறவண்ணன்மன்னு குறுங்குடிக்கேயென்னையுய்த்திடுமின். (க)

தாதவிழ்மல்லிகைபுல்லிவந்த தண்மதியினிளவாடையின்னே *
ஊதைதிரிதந்துழறியுண்ண ஓரிரவுமுறங்கேன் * உறங்கும்
பேதையர்பேதைமையாலிருந்து பேசிலும்பேசுகபெய்வளையார் *
கோதைநறுமலர்மங்கைமார்வன்குறுங்குடிக்கேயென்னையுய்த்திடுமின்.

காலையும்மாலையொத்துண்டு கங்குல்நாழிகையூழியில்நீண்டுலாவும் *
போல்வதோர்தன்மைபுகுந்துநிற்கும் பொங்கழலேயொக்கும்வாடைசொல்லில்*
மாலவன்மாமணிவண்ணன்மாயம் மற்றுமுளஅவைவந்திடாமுன் *
கோலமயில்பயிலும்புறவின் குறுங்குடிக்கேயென்னையுய்த்திடுமின். (ங)

கருமணிபூண்டுவெண்ணாகணைந்து காரிமிலேற்றணர்தாழ்ந்துலாவும் *
ஒருமணியோசையென்னுள்ளந்தள்ள ஓரிரவுமுறங்காதிருப்பேன் *
பெருமணிவானவருச்சிவைத்த பேரருளாளன்பெருமை † பேசி *
குருமணிநீர்கொழிக்கும்புறவின் குறுங்குடிக்கேயென்னையுய்த்திடுமின்.

திண்திமிலேற்றின்மணியும் ஆயன்தீங்குழலோசையும்,தென்றலோடு*
கொண்டதோர்மாலையும்அந்தியீன்ற கோலவிளம்பிறையோடுகூடி *
பண்டையவல்லவிவைநமக்கு பாவியேனைவாட்டஞ்செய்யும் *
கொண்டல்மணிநிறவண்ணர்மன்னு குறுங்குடிக்கேயென்னையுய்த்திடுமின். ()

எல்லியும்நன்பகலுமிருந்தே ஏசிலுமேசுகவேந்திழையார் *
நல்லரவர்திறம்நாமறியோம் நாண்மடமச்சம்நமக்கிங்கில்லை *
வல்லனசொல்லிமகிழ்வரேலும் மாமணிவண்ணரைநாம்மறவோம் *
கொல்லைவளரிளமுல்லைபுல்கு குறுங்குடிக்கேயென்னையுய்த்திடுமின்.(சு)

செங்கண்நெடியகரியமேனித் தேவரொருவரிங்கேபுகுந்து * என்
அங்கமெலியவளைகழல ஆதுகொலோ? என்றுசொன்னபின்னை *
ஐங்கணைவில்லிதன்னாண்மை என்னோடாடுமதனையறியமாட்டேன் *
கொங்கலர்தண்பணைசூழ்புறவின் குறுங்குடிக்கேயென்னையுய்த்திடுமின். (எ)

† 'பேச' என்பது வ்யாக்யாநபாடம்.

கேவலமன்றுகடலினோசை கேண்மின்களாயன்கையாம்பல்வந்து *என்
ஆவியளவுமணைந்துநிற்கும் அன்றியுமைந்துகணைதெரிந்திட்டு *
ஏவலங்காட்டியிவனொருவன் இப்படியேபுகுந்தெய்திடாமுன் *
கோவலர்கூத்தன்குறிப்பறிந்து குறுங்குடிக்கேயென்னையுய்த்திடுமின். (அ)

சோத்தெனநின்றுதொழவிரங்கான் தொன்னலங்கொண்டெனக்குஇன்றுகாறு
போர்ப்பதோர்பொற்படந்தந்துபோனான்போயினவூரறியேன்*என்கொ [ம்*
மூத்திடுகின்றன மற்றவன்தன்மொய்யகலமணையாதுவாளா * [ங்கை *
கூத்தனிமையவர்கோன்விரும்பும் குறுங்குடிக்கேயென்னையுய்த்திடுமின். (௯)

↓↓ செற்றவன்தென்னிலங்கைமலங்கத் தேவபிரான், திருமாமகளைப்
பெற்றும் * என்னெஞ்சகங்கோயில்கொண்ட பேரருளாளன், பெருமைபேசக்
கற்றவன் * காமருசீர்க்கலியன் கண்ணகத்தும்மனத்தும், அகலாக்
கொற்றவன்*முற்றுலகாளிநின்ற குறுங்குடிக்கேயென்னையுய்த்திடுமின். (௧0)

அடிவரவு:—தவளம் தாதவிழ் காலை கருமணி நின்றிமில் எல்லி செங்கண்
கேவலம் சோத்தென செற்றவன் அக்கு

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௬ - ஆந் திருமொழி - அக்கும்புலியினதளும்

திருக்குறுங்குடி. (௨)

கலிநிலைத்துறை. ([illegible])

↓↓ அக்கும்புலியினதளும் உடையாரவரொருவர் *
பக்கம்நிற்கநின்ற பண்பரூர்போலும் *
தக்கமரத்தின் தாழ்சினையேறி * தாய்வாயில்
கொக்கின்பிள்ளை வெள்ளிறவுண்ணும்குறுங்குடியே. (௧)

துங்காரரவத்திரைவந்துலவத் தொடுகடலுள் *
பொங்காரரவில்துயிலும் புனிதரூர்போலும் *
செங்காலன்னம் திகழ்தண்பணையில்பெடையோடும் *
கொங்கார்கமலத்தலரில் சேரும்குறுங்குடியே. (௨)

வாழக்கண்டோம் வந்துகாண்மின்தொண்டீர்காள்! *
கேழற்செங்கண் மாமுகில்வண்ணர்மருவுமூர் *
ஏழைச்செங்கால் இன்துணைநாரைக்கிரைதேடி *
கூழைப்பார்வைக் கார்வயல்மேயும்குறுங்குடியே. (௩)

சிரமுனைந்துமைந்தும் சிந்தச்சென்று * அரக்கன்
உரமுங்கரமுந்துணித்த † உரவோனூர்போலும் *
இரவும்பகலும் ஈன்தேன் ‡ முரலமன்றெல்லாம் *
குரவின்பூவேதான் மணநாறும்குறுங்குடியே. (௪)

கவ்வைக்களிற்றுமன்னர்மாளக் கலிமான்தேர்
ஐவர்க்காய் * அன்றமரில் $ உய்த்தான் ஊர்போலும் *
மைவைத்திலங்குகண்ணார்தங்கள் மொழியொப்பான் *
கொவ்வைக்கனிவாய்க் கிள்ளைபேசும்குறுங்குடியே. (௫)

தீநீர்வண்ண மாமலர்கொண்டு விரையேந்தி *
தூநீர்பரவித் தொழுமின்னெழுமின்தொண்டர்காள்! *
மாநீர்வண்ணர் மருவியுறையுமிடம் * வானில்
கூனீர்மதியை மாடம்தீண்டும்குறுங்குடியே. (௬)

வல்லிச்சிறுநுண்ணிடையாரிடை நீர்வைக்கின்ற *
அல்லற்சிந்தைதவிர அடைமின்அடியீர்காள்! *
சொல்லில்திருவேயனையார் கனிவாயெயிறொப்பான் *
கொல்லைமுல்லை மெல்லரும்பீனும்குறுங்குடியே. (௭)

நாராரிண்டை நாண்மலர்கொண்டு நந்தமர்காள்! *
ஆராஅன்போடு எம்பெருமானூரடைமின்கள் *
தாராவாரும் வார்புனல்மேய்ந்துவயல்வாழும் *
கூர்வாய்நாரை பேடையொடாடும்குறுங்குடியே. (௮)

நின்றவினையும் துயருங்கெட மாமலரேந்தி *
சென்றுபணிமின்எழுமின் தொழுமின்தொண்டர்காள்! *
என்றுமிரவும்பகலும் வரிவண்டிசைபாட *
குன்றின்முல்லை மன்றிடைநாறும்குறுங்குடியே. (௯)

↓↓ சிலையாலிலங்கைசெற்றான் மற்றோர்சினவேழம் *
கொலையார்கொம்புகொண்டான்மேய குறுங்குடிமேல் *
கலையார்பனுவல்வல்லான் கலியனொலிமாலை *
நிலையார்பாடல்பாடப் பாவம்நில்லாவே. (௧௦)

அடிவரவு:—அக்கு தங்கா வாழ சிரமுன் கவ்வை தீநீர் வல்லி நாரார் நின்ற சிலையால் தந்தை.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

† 'ஒருவன்', ‡ 'முரலும்', $ 'உற்றான்' என்பன சிலர் பாடாந்தரங்கள்.

எ - ஆந் திருமொழி - தந்தைதாய்.

திருவல்லவாழ்.

அறுசீராசிரியவிருத்தம் (நந்யாசிரியம் நாகநாமம்)

↓↓ தந்தைதாய்மக்களே சுற்றமென்றுற்றவர்பற்றிநின்ற *
பந்தமார்வாழ்க்கையை நொந்துநீபழியெனக்கருதினாயேல் *
அந்தமாயாதியாய் ஆதிக்குமாதியாய்ஆயனாய *
மைந்தனார்வல்லவாழ் சொல்லுமாவல்லையாய்மருவுநெஞ்சே! (க)

மின்னுமாவல்லியும் வஞ்சியும்வென்றநுண்ணிடைநுடங்கும் *
அன்னமென்னடையினார்கலவியை அருவருத்தஞ்சினாயேல் *
துன்னுமாமணிமுடிப் பஞ்சவர்க்காகி முன் தூதுசென்ற *
மன்னனார்வல்லவாழ் சொல்லுமாவல்லையாய்மருவுநெஞ்சே! (உ)

பூணுலாமென்முலைப்பாவைமார் பொய்யினைமெய்யிதென்று *
பேணுவார்பேசுமப்பேச்சை நீபிழையெனக்கருதினாயேல் *
நீணிலாவெண்குடைவாணனார் வேள்வியின்மண்ணிரந்த *
மாணியார்வல்லவாழ் சொல்லுமாவல்லையாய்மருவுநெஞ்சே! (ஙு)

பண்ணுலாமென்மொழிப்பாவைமார் பணைமுலையணைதுநாமென்று *
எண்ணுவாரெண்ணமதொழிந்து நீபிழைத்துய்யக்கருதினாயேல் * [நீர்
விண்ணுளார்விண்ணின்மீதியன்ற வேங்கடத்துளார் வளங்கொள்முந்
வண்ணனார்வல்லவாழ் சொல்லுமாவல்லையாய்மருவுநெஞ்சே! (ச)

மஞ்சுதோய்வெண்குடைமன்னராய் வாரணஞ்சூழவாழ்ந்தார் *
துஞ்சினாரென்பதோர்சொல்லை நீதுயரெனக்கருதினாயேல் *
நஞ்சுதோய்கொங்கைமேல் அங்கைவாய்வைத்து அவள்நாளையுண்ட *
† மைந்தனார்வல்லவாழ் சொல்லுமாவல்லையாய்மருவுநெஞ்சே! (ரு)

உருவினார்பிறவிசேர் ஊன்பொதிநரம்புதோற்குரம்பையுள்புக்கு *
அருவிநோய்செய்துநின்றைவர்தாம் வாழ்வதற்கஞ்சினாயேல் *
திருவினார்வேதம்நான்கு ஐந்துதீவேள்வியோடங்கமாறும் *
மருவினார்வல்லவாழ் சொல்லுமாவல்லையாய்மருவுநெஞ்சே! (சா)

நோயெலாம்பெய்ததோராக்கையை மெய்யெனக்கொண்டு * வாளா
பேயர்தாம்பேசுமப்பேச்சை நீபிழையெனக்கருதினாயேல் *
தீயுலாவெங்கதிர்த்திங்களாய் மங்குல்வானாகிநின்ற *
மாயனார்வல்லவாழ் சொல்லுமாவல்லையாய்மருவுநெஞ்சே! (எ)

† 'மஞ்சனார்' என்பதும் பாடம்.

மஞ்சுசேர்வானெரி நீர்நிலம்காலிவைமயங்கிநின்ற *
அஞ்சுசேராக்கையை அரணமன்றென்றுயக்கருதினாயேல் *
சந்துசேர்மென்முலைப் பொன்மலர்ப்பாவையும்தாமும் * நாளும்
வந்துசேர்வல்லவாழ் சொல்லுமாவல்லையாய்மருவுநெஞ்சே! (அ)

வெள்ளியார்பிண்டியார் போதியாரென்றிவரோதுகின்ற *
கள்ளநூல்தன்னையும் கருமமன்றென்றுயக்கருதினாயேல் *
தெள்ளியார்கைதொழும்தேவனார் மாமுநீரமுதுதந்த *
வள்ளலார்வல்லவாழ் சொல்லுமாவல்லையாய்மருவுநெஞ்சே! (கூ)

↓↓ மறைவலார்குறைவிலாருறையுமூர் வல்லவாழடிகள்தம்மை *
சிறைகுலாவண்டறைசோலைசூழ் கோலநீளாலிநாடன் *
கறைஉலாவேல்வல்ல கலியன்வாயொலியிவைகற்றுவல்லார் *
இறைவராயிருநிலங்காவல்பூண்டு இன்பமநன்கெய்துவாரே. (கம)

அடிவரவு:— தந்தை மின் பூண் பண் மஞ்சு உருவின் நோய் மஞ்சுசேர்
வெள்ளியார் மறை முந்துற

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

கூ - ஆந் திருமொழி - முந்துற.

திருமாலிருஞ்சோலை. (க)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (சுருட்டிராகம் - அடதாளம்.)

↓↓ முந்துறவுரைக்கேன் விரைக்குழல்மடவார்
கலவியைவிடு தடுமாறல் *
அந்தரமேழுமலைகடலேழும
ஆய எம்மடிகள்தம்கோயில *
சநதொடுமணியும்அணிமயில்தழையும
தழுவிவந்தருவிகள்நிரந்து *
வந்திழிசாரல்மாலிருஞ்சோலை
வணங்குதும்வாமடநெஞ்சே! (க)

இண்டையும்புனலும்கொண்டிடையின்றி
எழுமினோதொழுதுமென்று * இமையோர்
அண்டரும்பரவவரவணைத்துயின்ற
சுடர்முடிக்கடவுள்தம்கோயில் *

விண்டலர் தூளிவேய் வளர்புறவில்
　　விரைமலர்க்குறிஞ்சியின் நறுந்தேன் *
வண்டமர் சாரல் மாலிருஞ்சோலை
　　வணங்குதும் வா மட நெஞ்சே ! (௨)

பிணிவளராக்கை நீங்க நின்றேத்தப்
　　பெருநிலம் அருளின் முன்னருளி *
அணிவளர் குறளாய் அகலிடம் முழுதும்
　　அளந்த எம் அடிகள் தம் கோயில் *
கணிவளர் வேங்கை நெடுநிலம் அதனில்
　　குறவர் தம் கவணிடைத் துரந்த *
மணிவளர் சாரல் மாலிருஞ்சோலை
　　வணங்குதும் வா மட நெஞ்சே ! (௩)

சூர்மையிலாய பேய்முலை சுவைத்துச்
　　சுடுசரம் அடுசிலைத் துரந்து *
நீர்மையிலாத தாடகை மாள
　　நினைந்தவர் மனங்கொண்ட கோயில் *
கார்மலி வேங்கை கோங்கலர் புறவில்
　　கடிமலர்க் குறிஞ்சியின் நறுந்தேன் *
வார்புனல் சூழ் தண் மாலிருஞ்சோலை
　　வணங்குதும் வா மட நெஞ்சே ! (௪)

வணங்கலில் அரக்கன் செருக்களத் தவிய
　　மணிமுடி ஒருபதும் புரள *
அணங்கெழுந்தவன் தன் கவந்தம் நின்றாட
　　அமர் செய்த அடிகள் தம் கோயில் *
பிணங்கலில் நெடுவேய் நுதிமுகம் கிழிப்பப்
　　பிரசம் வந்திழிதர * பெருந்தேன்
மணங்கமழ் சாரல் மாலிருஞ்சோலை
　　வணங்குதும் வா மட நெஞ்சே ! (௫)

விடங்கலந்தமர்ந்த அரவணைத் துயின்று
　　விளங்கனிக்கிளங்கன்று விசிறி *
குடங்கலந்தாடிக் குரவை முன் கோத்த
　　கூத்த எம் அடிகள் தம் கோயில் *

தடங்கடல்முகந்துவிசும்பிடைப்பிளிறத்
    தடவரைக்களிறென்றுமுனிந்து *
மடங்கல்நின்றதிரும்மாலிருஞ்சோலை
    வணங்குதும்வாமடநெஞ்சே ! (கூ)

தேனுகனுவிபோயுகஅங்கு ஓர்
    செழுந்திரள்பனங்கனியுதிர *
தானுகந்தெறிந்ததடங்கடல்வண்ணர்
    எண்ணிமுனிடங்கொண்டகோயில் *
வானகச்சோலைமரதகச்சாயல்
    மாமணிக்கல்லதர் + நிரைந்து *
மானுகர்சாரல்மாலிருஞ்சோலை
    வணங்குதும்வாமடநெஞ்சே ! (எ)

புதமிகுவிசும்பிற்புணரிசென்றணவப்
    பொருகடலரவணைத்துயின்று *
பதமிகுபரியின்மிகுசினம்தவிர்த்த
    பனிமுகில்வண்ணர்தம்கோயில் *
கதமிகுசினத்தகடதடக்களிற்றின்
    கவுள்வழிக் களிவண்டுபருக *
மதமிகுசாரல்மாலிருஞ்சோலை
    வணங்குதும்வாமடநெஞ்சே ! (அ)

புந்தியில்சமணர்புத்தரென்றிவர்கள
    ஒத்தனபேசவுமுகந்திட்டு *
எந்தைபெம்மானுரிமையவர்தலைவர்
    எண்ணிமுனிடங்கொண்டகோயில *
சந்தனப்பொழிலின்தாழ்சினைநீழல்
    தாழ்வரைமகளிர்கள்நாளும் *
மந்திரத்திறைஞ்சும்மாலிருஞ்சோலை
    வணங்குதும்வாமடநெஞ்சே ! (கு)

⇊ வண்டமர்சாரல்மாலிருஞ்சோலை
    மாமணிவண்ணரைவணங்கும் *
தொண்டரைப்பரவும்சுடரொளிநெடுவேல்
    சூழ்வயலாலிநன்னுடன் *

---

† ‘ நுழைந்து ’ என்னும் பாடம் வ்யாக்யாநத்தோடு நன்குபொருந்தும் ; ‘ நிரந்து ’ என்பதும் பாடம்.

கண்டல்கல்வேலிமங்கையர்தலைவன்
கலியன்வாயொலிசெய்தபனுவல் *
கொண்டிவைபாடும்தவமுடையார்கள்
ஆள்வரிக்குரைகடலுலகே. (௧0)

அடிவரவு:—முந்துற இண்டை பிணி சூர்மையில் வணங்கலில் விடம் தேனு-
கன் புதமிகு புந்தி வண்டமர் மூவர்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௯ - ஆம் திருமொழி - மூவரில்.

திருமாலிருஞ்சோலை. (௨)

கலிநிலைத்துறை. (காம்போதி-ரூபகதாளம்.)

[பிரிவாற்றாது தலைவனை நாடிச்சென்ற தலைவியின் நிலையைக்குறித்துத் தாய இரங்கிக் கூறியபாசுரம்.]

↓↓ மூவரில்முன்முதல்வன் முழங்கார்கடலுள்கிடந்து *
பூவலருந்திதன்னுள் புவனம்படைத்துண்டுமிழ்ந்த *
தேவர்கள்நாயகனைத் திருமாலிருஞ்சோலைநின்ற *
கோவலர்கோவிந்தனைக் கொடியேரிடைகூடுங்கொலோ ? (௧)

↓↓ புனைவளர்பூம்பொழிலார் பொன்னிசூழரங்கநகருள்
முனைவனை * மூவுலகும்படைத்த முதல்மூர்த்திதன்னை *
சினைவளர்பூம்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலைநின்றான் *
கனைகழல்காணுங்கொலோ ? கயற்கண்ணியெம்காரிகையே. (௨)

உண்டுலகேழினையும் ஒருபாலகனாலிலைமேல் *
கண்துயில்கொண்டுகந்த கருமாணிக்கமாமலையை *
திண்திறல்மாகரிசேர் திருமாலிருஞ்சோலைநின்ற *
அண்டர்தம்கோவினை இன்றணுகுங்கொல் ? என்னாயிழையே. (௩)

சிங்கமதாயவுணன் திறலாகம்முன்கீண்டுகந்த *
பங்கயமாமலர்க்கண் பரனையெம்பரஞ்சுடரை *
திங்கள்நன்மாமுகில்சேர் திருமாலிருஞ்சோலைநின்ற *
நங்கள்பிரானை இன்றுநணுகுங்கொல் ? என்நன்னுதலே. (௪)

தானவன்வேள்விதன்னில் தனியேகுறளாய்நிமிர்ந்து *
† வானமும்மண்ணகமும் அளந்ததிரிவிக்கிரமன் *
தேனமர்பூம்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலைநின்ற *
வானவர்கோனை இன்றுவணங்கித்தொழவல்லள்கொலோ ? (௫)

---

† 'வானகமும்' என்று சிலர்; இது, ஓசைக்குச்சேராது.

↓↓ நேசமிலாதவர்க்கும் நினையாதவர்க்கும்அரியான் *
வாசமலர்ப்பொழில்சூழ் வடமாமதுரைப்பிறந்தான் *
தேசமெல்லாம்வணங்கும் திருமாலிருஞ்சோலைநின்ற *
கேசவநம்பிதன்னைக் கெண்டையொண்கண்ணிகாணுங்கொலோ ? (௬)

புள்ளினைவாய்பிளந்து பொருமாகரிகொம்பொசித்து *
கள்ளச்சகடுதைத்த கருமாணிக்கமாமலையை *
தெள்ளருவிகொழிக்கும் திருமாலிருஞ்சோலைநின்ற *
வள்ளலை, வாணுதலாள் வணங்கித்தொழவல்லள்கொலோ ? (௭)

↓↓ பார்த்தனுக்கன்றருளிப் பாரதத்தொருதேர்முன்னின்று *
காத்தவன்தன்னை விண்ணோர்கருமாணிக்கமாமலையை *
தீர்த்தனைப்பூம்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலைநின்ற *
மூர்த்தியைக்கைதொழவும் முடியுங்கொல ? என்மொய்குழற்கே. (௮)

↓↓ வலம்புரியாழியனை வரையார்திரள்தோளன்தன்னை *
புலம்புரிநூலவனைப் பொழில்வேங்கடவேதியனை *
சிலம்பியலாறுடைய திருமாலிருஞ்சோலைநின்ற *
நலந்திகழ்நாரணனை நணுகுங்கொல் ? என்நன்னுதலே. (௯)

↓↓ தேடற்கரியவனைத் திருமாலிருஞ்சோலைநின்ற *
ஆடற்பறவையனை அணியாயிழைகாணுமென்று *
மாடக்கொடிமதிள்சூழ் மங்கையார்கலிகன்றிசொன்ன *
பாடற்பனுவலபத்தும் பயில்வார்க்கில்லைபாவங்களே. (௧௦)

அடிவரவு:—மூவரில் புனை உண்டு சிங்கமது தானவன் நேசம் புள்ளினை பார்த்தனுக்கு வலம்புரி தேடற்கு எங்கள்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௧௦ - ஆந் திருமொழி - எங்கள்.

திருக்கோட்டியூர்.

ஆசிரியத்துறை. (யமுநாகல்யாணிராகம் - அடதாளம்.)

↓↓ எங்களெம்மிறையெம்பிரான் இமையோர்க்குநாயகன்*ஏத்தடியவர்
தங்கள்தம்மனத்துப் பிரியாதருள்புரிவான் *
பொங்குதண்ணருவிபுதம்செய்யப் பொன்களேசிதறும், இலங்கொளி *
செங்கமலமலரும் திருக்கோட்டியூரானே. (௧)

எவ்வநோய்தவிர்ப்பான் எமக்கிறைஇன்னகைத்துவர்வாய் * நிலமகள்
செவ்விதோயவல்லான் திருமாமகட்கினியான் *
மௌவல்மாலைவண்டாடும் மல்லிகைமாலையோடுமணைந்து * மாருதம்
தெய்வநாறவரும் திருக்கோட்டியூரானே (௨)

வெள்ளியான்கரியான் மணிநிறவண்ணன்விண்ணவர்தமக்கிறை*எமக்
கொள்ளியானுயர்ந்தான் உலகேழுமுண்டுமிழ்ந்தான் *
துள்ளுநீர்மொண்டுகொண்டு சாமரைக்கற்றைசந்தனமுந்திவந்தசை *
தெள்ளுநீர்ப்புறவில் திருக்கோட்டியூரானே. (௩)

ஏறுமேறிஇலங்குமொண்மழுப்பற்றுமீசற்கிசைந்து * உடம்பிலோர்
கூறுதான்கொடுத்தான் குலமாமகட்கினியான் *
நாறுசண்பகமல்லிகைமலர்புல்கி இன்னிளவண்டு * நல்நறும்
தேறல்வாய்மடுக்கும் திருக்கோட்டியூரானே. (௪)

வங்கமாகடல்வண்ணன் மாமணிவண்ணன்விண்ணவர்கோன் * மது
தொங்கல்நீண்முடியான் நெடியான்படிகடந்தான் * [மலர்த்
மங்குல்தோய்மணிமாடவெண்கொடி மாகமீதுயர்ந்தேறி * வானுயர்
திங்கள்தானணவும் திருக்கோட்டியூரானே. (௫)

காவலனிலங்கைக்கிறைகலங்கச் சரம்செலவுய்த்து * மற்றவன்
ஏவலம்தவிர்த்தான் என்னையாளுடையெம்பிரான் *
நாவலம்புவிமன்னர்வந்துவணங்க மாலுறைகின்றதிங்கென *
தேவர்வந்திறைஞ்சும் திருக்கோட்டியூரானே. (௬)

கன்றுகொண்டுவிளங்கனியெறிந்து ஆநிரைக்கழிவென்று * மாமழை
நின்றுகாத்துகந்தான் நிலமாமகட்கினியான் *
குன்றின்முல்லையின்வாசமும் குளிர்மல்லிகைமணமுமளைந்து * இளந்
தென்றல்வந்துலவும் திருக்கோட்டியூரானே. (௭)

பூங்குருந்தொசித்தானைகாய்ந்து அரிமாச்செகுத்து * அடியேனையாளு
ஈங்கென்னுள்புகுந்தான் இமையோர்கள்தம்பெருமான் * [கந்து
தூங்குதண்பலவின்கனி தொகுவாழையின்கனியொடுமாங்கனி *
தேங்குதண்புனல்சூழ் திருக்கோட்டியூரானே. (௮)

கோவையின்தமிழ்பாடுவார் குடமாடுவார், தடமாமலர்மிசை *
மேவுநான்முகனில் விளங்குபுரிநூலர் *
மேவுநான்மறைவாணர் ஐவகைவேள்வியாறங்கம்வல்லவர்தொழும் *
தேவதேவபிரான் திருக்கோட்டியூரானே. (௯)

↓↓ ஆளுமாவலவன்கலிகன்றி மங்கையர்தலைவன் * அணிபொழில்
சேல்கள்பாய்கழனித் திருக்கோட்டியூரானை *
நீலமாமுகில்வண்ணனைநெடுமாலை இன்தமிழால்நினைந்த * இந்
நாளுமாமும்வல்லார்க்கு இடமாகும்வானுலகே. (க)

அடிவரவு:—எங்கள் எவ்வம் வெள்ளியான் ஏறு வங்கம் காவலன் கன்று பூம்கோவை ஆளும் ஒருநல்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பத்தாம்பத்து.

க - ஆந் திருமொழி - ஒருநல்சுற்றம்.

பலதிவ்யதேசங்கள்.

கலிவிருத்தம். (தர்ப்பாரராகம் - அடதாளம்.)

↓↓ ஒருநல்சுற்றம் எனக்குயிரொண்பொருள் *
வருநல்தொல்கதி ஆகியமைந்தனை *
நெருநல்கண்டது நீர்மலை, இன்றுபோய் *
கருநெல்சூழ் கண்ணமங்கையுள் காண்டுமே. (க)

↓↓ பொன்னைமாமணியை அணியார்ந்ததோர்
மின்னை * வேங்கடத்துச்சியில் கண்டுபோய் *
என்னையாளுடையீசனை எம்பிரான்
தன்னை * யாம்சென்றுகாண்டும் தண்காவிலே. (உ)

வேலையாலிலைப் பள்ளிவிரும்பிய *
பாலையாரமுதத்தினைப் பைந்துழாய் *
மாலையாலியில் கண்டுமகிழ்ந்துபோய் *
ஞாலமுன்னியைக்காண்டும் நாங்கூரிலே. (௩)

துளக்கமில்சுடரை * அவுணனுடல்
பிளக்குமைந்தனைப் பேரில்வணங்கிப்போய் *
அளப்பிலாரமுதை அமரர்க்கருள்
விளக்கினை * சென்று வெள்ளறைக்காண்டுமே. (௪)

சுடலையில் சுடுநீறனமர்ந்தது * ஓர்
நடலைதீர்த்தவனை நறையூர்க்கண்டு * என்
உடலையுள்புகுந்து உள்ளமுருக்கியுண் *
விடலையைச்சென்றுகாண்டும் மெய்யத்துள்ளே. (௫)

வானை ஆரமுதந்தந்தவள்ளலை *
தேனைநீள்வயல் சேறையிற்கண்டுபோய் *
ஆனைவாட்டியருளும் அமரர்தம்
கோனை * யாம்குடந்தைச்சென்றுகாண்டுமே. (௬)

கூந்தலார்மகிழ் கோவலனாய் * வெண்ணெய்
மாந்தழுந்தையில் கண்டுமகிழ்ந்துபோய் *
பாந்தட்பாழியில் பள்ளிவிரும்பிய *
வேந்தனைச்சென்றுகாண்டும் வெஃகாவுளே. (௭)

↓↓ பத்தராவியைப் பான்மதியை * அணித்
தொத்தை மாலிருஞ்சோலைத்தொழுதுபோய் *
முத்தினைமணியை மணிமாணிக்க
வித்தினை * சென்று விண்ணகர்க்காண்டுமே. (௮)

கம்பமாகளிறு அஞ்சிக்கலங்க * ஓர்
கொம்புகொண்ட குரைகழற்கூத்தனை *
கொம்புலாம்பொழில் கோட்டியூர்க்கண்டுபோய் *
நம்பனைச்சென்றுகாண்டும் நாவாயுளே. (௯)

↓↓ பெற்றம்† மாளியைப் பேரில்மணாளனை *
கற்றநூல் கலிகன்றியுரைசெய்த *
சொல்திறமிவை சொல்லியதொண்டர்கட்கு *
அற்றமில்லை அண்டமவர்க்காட்சியே. (க0)

அடிவரவு:—ஒரு பொன்னை வேலை தாங்கு சுடலையில் வான் கூந்தல் பத்தர் கம்பம் பெற்றம் இரக்கம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

உ - ஆந் திருமொழி - இரக்கமின்றி.

இராமாவதாரத்தில் ஈடுபாடு. (௯)

[தோல்வியுற்ற அரக்கர் அயம்வேரோடிக் கூத்தாடுதல்.]

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (பியாகடைராகம் - அடதாளம்.)

↓↓ இரக்கமின்றியெங்கோன்செய்ததீமை
இம்மையேயெமக்கெய்திற்றுக்காணீர் *
பரக்கயாமின்றுரைத்தென் ? இராவணன்
பட்டனன் இனியாவர்க்குரைக்கோம் ? *

† 'மாளிகை' என்பது வ்யாக்யானபாடம்.

குரக்குநாயகர்காள்! இளங்கோவே!
கோலவல்விலிராமபிரானே! *
அரக்கராடழைப்பாரில்லை நாங்கள்
அஞ்சினோம்தடம்பொங்கத்தம்பொங்கோ. (௧)

பத்துநீண்முடியுமவற்றிரட்டிப்
பாழித்தோளும்படைத்தவன்செல்வம் *
சித்தம்மங்கையர்பாலவைத்துக்கெட்டான்
செய்வதொன்றறியாவடியோங்கள் *
ஒத்ததோளிரண்டுமொருமுடியும்
ஒருவர்தந்திறத்தோமன்றிவாழ்ந்தோம் *
அத்த! எம்பெருமான்! எம்மைக்கொல்லேல்
அஞ்சினோம்தடம்பொங்கத்தம்பொங்கோ. (௨)

தண்டகாரணியம்புகுந்து அன்று
மைதயலைத்தகவிலியெங்கோமான் *
கொண்டுபோந்துகெட்டானெமக்கிங்கோர்
குற்றமில்லை சொல்லேல்குலவேந்தே! *
பெண்டிரால்கெடுமிக்குடிதன்னைப்
பேசுகின்றதென்? தாசரதீ! * உன்
அண்டவாணருகப்பதேசெய்தாய்
அஞ்சினோம்தடம்பொங்கத்தம்பொங்கோ. (௩)

எஞ்சலில்இலங்கைக்கிறை யெங்கோன்றன்னை
முன்பணிந்து * எங்கள்கண்முகப்பே
நஞ்சுதானரக்கர்குடிக்கென்று
நங்கையையவன்தம்பியேசொன்னான் *
விஞ்சைவானவர்வேண்டிற்றேபட்டோம்
வேரிவார்பொழில்மாமயிலன்ன *
அஞ்சலோதியைக்கொண்டுநடமின்
அஞ்சினோம்தடம்பொங்கத்தம்பொங்கோ. (௪)

செம்பொன்நீள்முடியெங்களிராவணன்
சீதையென்பதோர்தெய்வம்கொணர்ந்து *
வம்புலாங்கடிகாவிற்சிறையா
வைத்ததே குற்றமாயிற்றுக்காணீர் *

கும்பனொடுநிகும்பனும்பட்டான்
கூற்றமானிடமாய்வந்துதோன்றி *
அம்பினாலெம்மைக்கொன்றிடுகின்றது
அஞ்சினோம்தடம்பொங்கத்தம்பொங்கோ. (ரு)

ஓதமாகடலைக்கடந்தேறி
உயர்கொள்மாக்கடிகாவையிறுத்து *
காதல்மக்களும்சுற்றமும்கொன்று
கடியிலங்கைமலங்கவெரித்து *
தூதுவந்தகுரங்குக்கே உங்கள்
தோன்றல்தேவியைவிட்டுக்கொடாதே *
ஆதர்நின்றுபடுகின்றதந்தோ !
அஞ்சினோம்தடம்பொங்கத்தம்பொங்கோ. (சு)

தாழமின்றிமுந்நீரையஞ்ஞான்று
தகைந்ததேகண்டு, வஞ்சிநுண்மருங்குல் *
மாழைமான்மடநோக்கியைவிட்டு
வாழகில்லாமதியில்மனத்தானை *
ஏழையையிலங்கைக்கிறைதன்னை
எங்களையொழியக்கொலையவனை *
சூழுமாநினை, மாமணிவண்ணா ! *
சொல்லினோம்தடம்பொங்கத்தம்பொங்கோ. (எ)

மனங்கொண்டேறும்மண்டோதரிமுதலா
அங்கயற்கண்ணினார்களிருப்ப *
தனங்கொள்மென்முலைநோக்கமொழிந்து
தஞ்சமேசிலதாபதரென்று *
புனங்கொள்மென்மயிலைச்சிறைவைத்த
புன்மையாளன்நெஞ்சிற்புகவெய்த *
அனங்கனன்னதிண்தோளெம்பிராமற்கு
அஞ்சினோம்தடம்பொங்கத்தம்பொங்கோ. (அ)

புரங்கள்மூன்றமோர்மாத்திரைப்போதில்
பொங்கெரிக்கிரைகண்டவனம்பின் *
சரங்களேகொடிதாயடுகின்ற
சாம்பவானுடன்நிற்கத்தொழுதோம் *

இரங்குநீயெமக்கெந்தைபிரானே!
இலங்குவெங் † கதிரோன்சிறுவா! *
குரங்குகட்கரசே! எம்மைமக்கொல்லேல்
கூறினோம்தடம்பொங்கத்தம்பொங்கோ. (க)

↓↓ அங்குஅவ்வானவர்க்காகுலம்தீர
அணியிலங்கையழித்தவன்தன்னை *
பொங்குமாவலவன்கலிகன்றி
புகன்றபொங்கத்தங்கொண்டு * இவ்வுலகில்
எங்கும்பாடிநின்றாடுமின்தொண்டீர்!
இம்மையேயிடரில்லை * இறந்தால்
தங்குமூரண்டமேகண்டுகொண்மின்
சாற்றினோம்தடம்பொங்கத்தம்பொங்கோ. (கo)

அடிவரவு.—இரக்கம் பத்து தண்டக எஞ்சல் செம்பொன் ஓதம் தாழும் மனம் புரங்கள் அங்கு ஏத்து.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ரு - ஆந் திருமொழி - ஏத்துகின்றோம்.

(இராமாவதாரத்தில் போர்பாடு: இதுவுமது.) (உ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (கல்யாணிராகம் - திரிபுடை தாளம்.)

↓↓ ஏத்துகின்றோம்நாத்தழும்ப இராமன்திருநாமம் *
சோத்தநம்பீ! சுக்கிரீவா! உம்மைத்தொழுகின்றோம் *
வார்த்தைபேசீரெம்மை உங்கள்வானரம்கொல்லாமே *
கூத்தர்போலஆடுகின்றோம் குழமணிதூரமே. (க)

எம்பிரானே! என்னையாள்வாய்! என்றென்றலற்றாதே *
அம்பின்வாய்ப்பட்டாற்றகில்லாது இந்திரசித்தழிந்தான் *
நம்பிஅநுமா! சுக்கிரீவா! அங்கதனே! நளனே! *
கும்பகர்ணன்பட்டுப்போனான் குழமணிதூரமே. (உ)

ஞாலமாளும்உங்கள்கோமான் எங்களிராவணற்கு *
காலனாகிவந்தவா கண்டஞ்சிக் கருமுகில்போல் *
நீலன்வாழ்கசுடேணன்வாழ்க அங்கதன்வாழ்கவென்று *
கோலமாகஆடுகின்றோம் குழமணிதூரமே. (ங)

---

† 'கதிரோன்தன்சிறுவா' என்னும் பாடம் சந்தத்திற்குப் பொருந்தும்.

மணங்கள்நாறும்வார்குழலார் மாதர்களாதரத்தை *
புணர்ந்தசிந்தைப்புன்மையாளன் பொன்ற, வரிசிலையால் *
கணங்களுண்ணவாளியாண்ட காவலனுக்கிளையோன் *
குணங்கள்பாடிஆடுகின்றோம் குழமணிதூரமே. (௪)

வென்றிதந்தோம்மானம்வேண்டோம் தானமெமக்காக *
இன்றுதம்பினெங்களவாணுள் எம்பெருமான்தமர்காள்! *
நின்றுகாணீர்கண்களார நீரெம்மைக்கொல்லாதே *
குன்றுபோலஆடுகின்றோம் குழமணிதூரமே. (௫)

கல்லின்முந்நீர்மாற்றிவந்து காவல்கடந்து * இலங்கை
அல்லல்செய்தானுங்கள்கோமான் எம்மையமர்க்களத்து *
வெல்லகில்லாதஞ்சினோங்காண் வெங்கதிரோன்சிறுவா! *
கொல்லவேண்டாஆடுகின்றோம் குழமணிதூரமே. (௬)

மாற்றமாவதித்தனையே வம்மினரக்கருள்ளீர்! *
சீற்றநும்மேல்தீரவேண்டில் சேவகம்பேசாதே *
ஆற்றல்சான்றதொல்பிறப்பில் அநுமனைவாழ்கவென்று *
கூற்றமன்னார்காணஆடீர் குழமணிதூரமே. (௭)

கவளயானைபாய்புரவி தேரொடரக்கரெல்லாம்
துவள * வென்றவென்றியாளன்தன் தமர்கொல்லாமே *
தவளமாடநீடயோத்திக் காவலன்தன்சிறுவன் *
குவளைவண்ணன்காணஆடீர் குழமணிதூரமே. (௮)

ஏடொத்தேந்தும்நீளிலைவேல் எங்களிராவணனார்
ஓடிப்போனார் * நாங்களெய்த்தோம் உய்வதோர்காரணத்தால் *
சூடிப்போந்தோம்உங்கள்கோமானாணை தொடரேன்மின் *
கூடிக்கூடிஆடுகின்றோம் குழமணிதூரமே. (௯)

‡‡ வென்றதொல்சீர்த்தென்னிலங்கை வெஞ்சமத்து * அன்றரக்
குன்றமன்னாராடியுய்ந்த குழமணிதூரத்தை * [கர்
கன்றிநெய்நீர்நின்றவேற்கைக் கலியனொலிமாலை *
ஒன்றுமொன்றுமைந்துமூன்றும் பாடிநின்றாடுமினே. (௰)

அடிவரவு:—ஏத்துகின்றோம் எம்பிரானே ஞாலம் மணங்கள் வென்றி கல்லின் மாற்றம் கவள ஏடு வென்ற சந்தம்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ச - ஆந் திருமொழி - சந்தமலர்.

(கிருஷ்ணவதாரத்தில் ஈடுபாடு.) (க)

[கண்ணனை முலையுண்ண அழைத்தல்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (புந்நாகவராளிராகம் - ரூபகதாளம்.)

சந்தமலர்க்குழல்தாழ தானுகந்தோடித்தனியே
வந்து * என்முலைத்தடந்தன்னை வாங்கி நின்வாயில்மடுத்து *
நந்தன்பெறப்பெற்றநம்பீ ! நானுகந்துண்ணுமமுதே ! *
எந்தைபெருமானே ! உண்ணாய் என்னம்மம்சேமமுண்ணாயே. (க)

வங்கமறிகடல்வண்ணா ! மாமுகிலேயொக்கும்நம்பீ ! *
செங்கண்நெடியதிருவே ! செங்கமலம்புரைவாயா ! *
கொங்கைசுரந்திடவுன்னைக் கூவியும்காணாதிருந்தேன் *
எங்கிருந்தாயர்களோடும் என்விளையாடுகின்றாயே ? (உ)

திருவில்பொலிந்தவெழிலார் ஆயர்தம்பிள்ளைகளோடு *
தெருவில்திளைக்கின்றநம்பீ ! செய்கின்றதீமைகள்கண்டிட்டு *
உருகியென்கொங்கையின்தீம்பால் ஓட்டந்துபாய்ந்திடுகின்ற *
மருவிக்குடங்காலிருந்து வாய்முலையுண்ணநீவாராய். (௩)

மக்கள்பெறுதவம்போலும் வையத்துவாழும்மடவார் *
மக்கள்பிறர்கண்ணுக்கொக்கும் முதல்வா ! மதக்களிறன்னாய் ! *
செக்கரிளம்பிறைதன்னை வாங்கி நின்கையில்தருவன் *
ஒக்கலைமேலிருந்தம்மமுந்து இனிதுண்ணநீவாராய். (௪)

மைத்தகருங்குஞ்சிமைந்தா ! மாமருதூடுநடந்தாய் ! *
வித்தகனே ! விரையாதே வெண்ணெய்விழுங்கும்விகிர்தா ! *
இத்தனைபோதன்றியென்தன் கொங்கைசுரந்திருக்ககில்லா *
உத்தமனே ! அம்மமுண்ணாய் உலகளந்தாய் ! அம்மமுண்ணாய். (௫)

பிள்ளைகள்செய்வனசெய்யாய் பேசிற்பெரிதும்வலியை *
கள்ளம்மனத்திலுடையை காணவேதீமைகள்செய்தி *
உள்ளமுருகியென்கொங்கை ஓட்டந்துபாய்ந்திடுகின்ற *
பள்ளிகுறிப்புச்செய்யாதே பாலமுதுண்ணநீவாராய். (௬)

தன்மகனாகவன்பேய்ச்சி தான்முலையுண்ணக்கொடுக்க *
வன்மகனாயவளாவிவாங்கி முலையுண்டநம்பீ ! *
நன்மகளாய்மகளோடு நானிலமங்கைமணாளா ! *
என்மகனே ! அம்மமுண்ணாய் என்னம்மம்சேமமுண்ணாயே. (௭)

உந்தமடிகள்முனிவர் உன்னைநானென்கையிற்கோலால் *
நொந்திடமோதவுங்கில்லேன் உங்கள்தமாநிரையெல்லாம் *
வந்துபுகுதரும்போது வானிடைத்தெய்வங்கள்காண *
அந்தியம்போதங்குநில்லேல் ஆழியங்கையனே! வாராய். (௯)

பெற்றத்தலைவனெங்கோமான் பேரருளாளன்மதலாய்! *
சுற்றக்குழாத்திளங்கோவே! தோன்றியதொல்புகழாளா! *
கற்றினந்தோறும்மறித்துக் கானந்திரிந்தகளிறே! *
எற்றுக்கென்னம்மமுண்ணாதே எம்பெருமான்! இருந்தாயே? (௧)

↓↓ இம்மையிடர்கெடவேண்டி ஏந்தெழில்தோட்கலிகன்றி *
செம்மைப்பனுவல்நூல்கொண்டு செங்கணெடியவன்தன்னை *
அம்மமுண்ணென்றுரைக்கின்ற பாடலிவையைந்துமைந்தும் *
மெய்ம்மைமனத்துவைத்தேத்த விண்ணவராகலுமாமே. (௧௦)

அடிவரவு:—சந்தம் வங்கம் திருவில் மக்கள் மைத்த பிள்ளைகள் தன்மகன் உந்தம் பெற்றம் இம்மை பூங்கோதை.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௫-ஆம் திருமொழி - பூங்கோதை.

(க்ருஷ்ணாவதாரத்தில் ஈடுபாடு.) (௨)

[கண்ணனைக் கைகொட்டிவிளையாடும்படி கூறுதல். சப்பாணிப்பருவம்.]

கலித்தாழிசை. (யழநாகல்யாணிராகம் - ஆதிதாளம்.)

↓↓ பூங்கோதையாய்ச்சி கடைவெண்ணெய்புக்குண்ண *
ஆங்கவளார்த்துப்புடைக்கப் புடையுண்டு *
ஏங்கியிருந்து சிணுங்கிவிளையாடும் *
ஓங்கோதவண்ணனே! சப்பாணி ஒளிமணிவண்ணனே! சப்பாணி. (௧)

தாயர்மனங்கள்தடிப்ப * தயிர்நெய்யுண்
டேயெம்பிரான்கள்! * இருநிலத்தெங்கள்தம்
ஆயரழக! † * அடிகள் அரவிந்த
வாயவனே! கொட்டாய்சப்பாணி ‡ மால்வண்ணனே! கொட்டாய்சப்
[பாணி. (௨)

† 'அடிகளரவிந்தமாயவனே' என்பது வ்யாக்யாநபாடம்.
‡ 'மாலவனே' என்பதும் பாடம்.

தாமோருருட்டித் தயிர்நெய்விழுங்கிட்டு *
தாமோதவழ்வரென்று ஆய்ச்சியர்தாம்பினால் *
† தாமோதரக்கையால் ஆர்க்கத்தழும்பிருந்த *
தாமோதரா! கொட்டாய்சப்பாணி தாமரைக்கண்ணனே! சப்பாணி.
பெற்றார்தளைகழலப் பேர்ந்தங்கயலிடத்து *
உற்றாரொருவருமின்றி உலகினில் *
மற்றாருமஞ்சப்போய் வஞ்சப்பெண்நஞ்சுண்ட *
கற்றாயனே! கொட்டாய்சப்பாணி காரவண்ணனே! கொட்டாய்சப் [பாணி (ச)
சோத்தெனநின்னைத் தொழுவன்வரந்தர *
பேய்ச்சிமுலையுண்டபிள்ளாய்! * பெரியன
ஆச்சியர் அப்பம்தருவர் * அவர்க்காகச்
சாற்றியோராயிரமசப்பாணி தடங்கைகளாற்கொட்டாய்சப்பாணி. (ரு)
கேவலமன்று உன்வயிறு * வயிற்றுக்கு
‡ நான்வலவப்பம்தருவன் * கருவிளைப்
பூவலர்நீள்முடி நந்தன்தன்போரேறே! *
கோவலனே! கொட்டாய்சப்பாணி குடமாடீ! கொட்டாய்சப்பாணி.
புள்ளினைவாய்பிளந்து பூங்குருந்தம்சாய்த்து *
துள்ளிவிளையாடித் தூங்குறிவெண்ணெயை *
அள்ளியகையால் அடியேன்முலைநெருடும *
பிள்ளைப்பிரான்! கொட்டாய்சப்பாணி பேய்முலையுண்டானே! சப் [பாணி. (எ)
யாயும்பிறரும் அறியாதயாமத்து *
மாயவலவைப்பெண் வந்துமுலைதர *
பேயென்றுஅவளைப் பிடித்துஉயிரையுண்ட *
வாயவனே! கொட்டாய்சப்பாணி மால்வண்ணனே! கொட்டாய்சப் [பாணி. (அ)
கள்ளக்குழவியாய்க் காலாற்சகடத்தை *
தள்ளியுதைத்திட்டுத் தாயாய்வருவாளை *
மெள்ளத்தொடர்ந்து பிடித்தாருயிருண்ட *
வள்ளலே! கொட்டாய்சப்பாணி மாலவண்ணனே! கொட்டாய் சப் [பாணி. (கூ)
↓↓ காரார்புயற்கைக் கலிகன்றிமங்கையர்கோன் *
பேராளன்நெஞ்சில் பிரியாதிடங்கொண்ட
சீராளா! * செந்தாமரைக்கண்ணா! தண்துழாய்த்
தாராளா! *கொட்டாய்சப்பாணிதடமாவா! கொட்டாய்சப்பாணி. (கo)

அடிவரவு:—பூங்கோதை தாயர் தாமோர் பெற்றார் சோத்தென கேவலம் புள்ளினை யாயும் கள்ளம் காரார் எங்கானும்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

† 'தாமோதிரக்கையால்' என்பதும், ‡ 'நானவலப்பம்' என்பதும் பாடபேதம்.

கூ - ஆந் திருமொழி - எங்கானும்.

(ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்தில் ஈடுபாடு.) (ந)

[மற்றையவதாரங்களின் மேன்மையோடு க்ருஷ்ணாவதாரத்தின் ஸௌலப்யத்தை அநுபவித்தல்.]

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம். (ஸாவேரிராகம் - அடதாளம்.)

↓↓ எங்கானுமீதொப்பதோர் மாயமுண்டே?
நரநாரணனாயுலகத்தறநூல் *
சிங்காமைவிரித்தவனெம்பெருமான்
அதுவன்றியும்செஞ்சுடரும்நிலனும் *
பொங்கார்கடலும்பொருப்பும்நெருப்பும்நெருக்கிப்
புகப் பொன்மிடறத்தனைபோது *
அங்காந்தவன்காண்மின் இன்று ஆய்ச்சியரால்
அளைவெண்ணெயுண்டாப்புண்டிருந்தவனே. (க)

குன்றொன்றுமத்தாவரவமளவிக்
குரைமாகடலைக்கடைந்திட்டு * ஒருகால்
நின்றுண்டைகொண்டோட்டிவன்கூன்நிமிர
நினைந்தபெருமான், அதுவன்றியுமுன் *
நன்றுண்டதொல்சீர்மகரக்கடலேழ்
மலையேழுலகேழொழியாமைநம்பி *
அன்றுண்டவன்காண்மின் இன்று ஆய்ச்சியரால்
அளைவெண்ணெயுண்டாப்புண்டிருந்தவனே. (௨)

உளைந்திட்டெழுந்தமதுகைடவர்கள்
உலப்பில்வலியாரவர்பால் * வயிரம்
விளைந்திட்டதென்றெண்ணிவிண்ணோர்பரவ
அவர்நாளொழித்தபெருமான், முனநாள் *
வளைந்திட்டவில்லாளிவல்வாளெயிற்று
மலைபோலவுணனுடல் வள்ளுகிரால் *
அளைந்திட்டவன்காண்மின் இன்று ஆய்ச்சியரால்
அளைவெண்ணெயுண்டாப்புண்டிருந்தவனே. (௩)

தளர்ந்திட்டிமையோர்சரண்தாவெனத்
தான்சரணாய், முரணாயவனை * உகிரால்
பிளந்திட்டமரர்க்கருள்செய்துகந்த
பெருமான் திருமால், விரிநீருலகை *

வளர்ந்திட்டதொல்சீர்விறல்மாவலியை
மண்கொள்ளவஞ்சித்தொருமாண்குறளாய் *
அளந்திட்டவன்காண்மின் இன்று ஆய்ச்சியரால்
அளைவெண்ணெயுண்டாப்புண்டிருந்தவனே. (௪)

நீண்டான்குறளாய்நெடுவானளவும்
அடியார்படுமாழ்துயராயவெல்லாம் *
தீண்டாமைநினைந்திமையோரளவும்
செலவைத்தபிரான், அதுவன்றியும்முன் *
வேண்டாமைநமன்தமரென்தமரை
வினவப்பெறுவாரலரென்று * உலகேழ்
ஆண்டானவன்காண்மின் இன்று ஆய்ச்சியரால்
அளைவெண்ணெயுண்டாப்புண்டிருந்தவனே. (ரு)

பழித்திட்டவின்பப்பயன்பற்றறுத்துப்
பணிந்தேத்தவல்லார்துயராயவெல்லாம் *
ஒழித்திட்டவரைத்தனக்காக்கவல்ல
பெருமான்திருமால், அதுவன்றியும்முன் *
தெழித்திட்டெழுந்தேயெதிர்நின்றமன்னன்
சினத்தோளவையாயிரமும் மழுவால் *
அழித்திட்டவன்காண்மின் இன்று ஆய்ச்சியரால்
அளைவெண்ணெயுண்டாப்புண்டிருந்தவனே. (சு)

படைத்திட்டதிவ்வையமுய்யமுனநாள்
பணிந்தேத்தவல்லார்துயராயவெல்லாம் *
துடைத்திட்டவரைத்தனக்காக்கவென்னைத்
தெளியாவரக்கர்திறல்போயவிய *
மிடைத்திட்டெழுந்தகுரங்கைப்படையா
விலங்கல்புகப்பாய்ச்சிவிம்ம * கடலை
அடைத்திட்டவன்காண்மின் இன்று ஆய்ச்சியரால்
அளைவெண்ணெயுண்டாப்புண்டிருந்தவனே. (எ)

நெறித்திட்டமென்கூழைநன்னேரிழையோடு
உடனாயவில்லென்னவல்லேயதனை *
இறுத்திட்டவளின்பமன்போடணைந்திட்டு
இளங்கொற்றவனாய், துளங்காதமுந்நீர் *

பழித்திட்டிலங்கைமலங்கவரக்கன்
செழுநீள்முடிதோளொடுதாள் துணிய *
அழித்திட்டவன்காண்மின் இன்றாய்ச்சியரால்
அளைவெண்ணெயுண்டாப்புண்டிருந்தவனே. (அ)

சரிந்திட்டசெங்கேழளைப்பொங்கரிமாத்
தொலையப்பிரியாதுசென்றெய்தி * எய்தாது
இரிந்திட்டிடங்கொண்டடங்காததன்வாய்
இருகூறுசெய்தபெருமான், முனநாள் *
வரிந்திட்டவில்லால்மரமேழுமெய்து
மலைபோலுருவத்தொரிராக்கதிமூக்கு *
அரிந்திட்டவன்காணமின் இன்றாய்ச்சியரால்
அளைவெண்ணெயுண்டாப்புண்டிருந்தவனே. (கூ)

↓↓ நின்றார்முகப்புச்சிறிதும்நினையான்
வயிற்றைநிறைப்பானுறிப்பால்தயிர்நெய் *
அன்றாய்ச்சியர்வெண்ணெய்விழுங்கி உரலோடு
ஆப்புண்டிருந்தபெருமானடிமேல் *
நன்றாயதொல்சீர்வயலமங்கையர்கோன்
கலியனொலிசெய்தமிழ்மாலைவல்லார் *
என்றுமெய்தார்இடர் இன்பமெய்தி
இமையோர்க்குமப்பாற்செலவெய்துவாரே. (கம)

அடிவரவு:—எங்காணும் குன்று உளைந்து தளர்ந்து நீண்டான் பழித்திட்ட படை நெறி சரி நின்றார் மானம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

எ - ஆந் திருமொழி - மானமுடைத்து.

(கிருஷ்ணாவதாரத்தில் ஈடுபாடு.) (ர)

[கண்ணன்செய்தியைக்குறித்துஆய்ச்சியரும்யசோதையும் முறையிடுதல்.]

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (கேதாரகௌளராகம் - அடதாளம்.)

↓↓ மானமுடைத்துங்களாயர்குலம் அதனால்பிறர்மக்கள்தம்மை *
ஊனமுடையனசெய்யப்பெறாயென்று இரப்பனுரப்பகில்லேன் *
நானுமுரைத்திலேன்நந்தன்பணித்திலன நங்கைகாள்!நானென்செய்கேன்? *
தானுமோர்கன்னியும்கீழையகத்துத் தயிர்கடைகின்றான்போலும். (க)

காலையெழுந்துகடைந்தவிம்மோர்விற்கப்போகின்றேன் கண்டேபே
மாலைநறுங்குஞ்சிநந்தன்மகனல்லால் மற்றுவந்தாருமில்லை *
மேலையகத்துநங்காய்! வந்துகாண்மின்கள் வெண்ணெயேயன்று * இருந்த
பாலும்பதின்குடங்கண்டிலேன் பாவியேனென்செய்கேன்? என்செய்கேனோ?

தெள்ளியவாய்ச்சிறியான்நங்கைகாள்! உறிமேலைத்தடாநிறைந்த *
வெள்ளிமலையிருந்தாலொத்தவெண்ணெயை வாரிவிழுங்கியிட்டு
கள்வனுறங்குகின்றான்வந்துகாண்மின்கள் கையெல்லாம்நெய் *வயிறு
பிள்ளைபரமன்று, இவ்வேழுலகுங்கொள்ளும் பேதையேனென்செய்கேனோ?

மைந்நம்புவேற்கணல்லாள் முன்னம்பெற்றவளை வண்ணநன்மாமேனி*
தன்னம்பிநம்பியுமிங்குவளர்ந்தது அவனிவைசெய்தறியான் *
பொய்ந்நம்பிபுள்ளுவன்கள்வம்பொதியறைபோகின்றவாதவழ்ந்திட்டு*
இந்நம்பிநம்பியா ஆயச்சியாக்குய்வில்லை என்செய்கேன்? என்செய்கேனோ?

தந்தைபுகுந்திலன்நானிங்கிருந்திலேன் தோழிமாராருமில்லை *
சந்தமலர்க்குழலாள் தனியேவிளையாடுமிடங்குறுகி *
பந்துபறித்துத்துகில்பற்றிக்கீறிப் படிறன்படிறுசெய்யும் *
நந்தன்மதலைக்கிங்கென்கடவோம்? நங்காய்! என்செய்கேன்? என்செய்கேனோ?

மண்மகள்கேள்வன்மலர்மங்கைநாயகன் நந்தன்பெற்றமதலை *
அண்ணலிலைக்குழலூதிநஞ்சேரிக்கே † அல்லில்தான்வந்தபின்னை *
கண்மலர்சோர்ந்துமுலைவந்துவிம்மிக் கமலச்செவ்வாய்வெளுப்ப *
என்மகள்வண்ணமிருக்கின்றவாநங்காய்! என்செய்கேன்? என்செய்கேனோ?

ஆயிரங்கண்ணுடையிந்திரனுருக்கென்று ஆயர்விழவெடுப்ப *
பாசனநல்லனபண்டிகளால புகப்பெய்தவதனையெல்லாம் *
போயிருந்தங்கொருபூதவடிவுகொண்டு உன்மகனின்றுநங்காய்! *
மாயனதனையெல்லாம் முற்றவாரிவளைத்துண்டிருந்தான்போலும். (எ)

தோய்த்ததயிரும்நறுநெய்யும்பாலும் ஓரோர்குடம்துற்றிடுமென்று *
ஆய்ச்சியர்கூடியழைக்கவும் நானிதற்கெள்கியிவனைநங்காய்! *
சோத்தம்பிரான்! இவைசெய்யப்பெறுயென்று இரப்பனுரப்பகில்லேன்*
பேய்ச்சிமுலையுண்டபின்னை இப்பிள்ளையைப்பேசுவதஞ்சுவனே. (அ)

ஈடும்வலியுமுடைய இந்நம்பிபிறந்த வெழுதிங்களில் *
ஏடலர்கண்ணியினானைவளர்த்தி யமுனைநீராடப்போனேன் *
சேடன்திருமறுமார்பன்கிடந்து திருவடியால் * மலைபோல்
ஓடுஞ்சகடத்தைச்சாடியபின்னை உரப்புவதஞ்சுவனே. (கூ)

---

† 'அல்லுத்தான்' என்பதும் பாடம்.

அஞ்சுவன்சொல்லியழைத்திடநங்கைகாள் ! ஆயிரநாழிநெய்யை *
பஞ்சியமெல்லடிப்பிள்ளைகளுண்கின்ற பாகந்தான்வையார்களே *
கஞ்சன்கடியன்கறவெட்டுநாளில் என்கைவலத்தாதுமில்லை *
நெஞ்சத்திருப்பனசெய்துவைத்தாய்நம்பீ ! என்செய்கேன்? என்செய்கேனோ?

† அங்ஙனந்தீமைகள்செய்வர்களோ ? நம்பீ ! ஆயர்மடமக்களை *
பங்கயநீர்குடைந்தாடுகின்றார்கள் பின்னேசென்றொளித்திருந்து *
அங்கவர்பூந்துகில்வாரிக்கொண்டிட்டு அரவேரிடையாரிரப்ப *
மங்கைநல்லீர் ! வந்துகொண்மினென்று மரமேறியிருந்தாய்போலும்.

அச்சந்தினைத்தனையில்லையிப்பிள்ளைக்கு ஆண்மையுஞ்சேவகமும் *
உச்சியில்முத்திவளர்த்தெடுத்தேனுக்கு உரைத்திலன்தானின்றுபோய்*
பச்சிலைப்பூங்கடம்பேறி விசைகொண்டுபாய்ந்துபுக்கு * ஆயிரவாய்
நச்சழற்பொய்கையில்நாகத்தினோடு பிணங்கிநீவந்தாய்போலும். (கஉ)

தம்பரமல்லனவாண்மைகளைத் தனியேநின்றுதாம்செய்வரோ ? *
எம்பெருமான்! உன்னைப்பெற்றவயிறுடையேன் இனியானென்செய்கேன்?*
அம்பரமேழுமதிருமிடிகுரல் அங்கனற்செங்கணுடை *
வம்பவிழ்கானத்துமால்விடையோடு பிணங்கிநீவந்தாய்போலும். (கங)

↓↓ அன்னநடைமடவாய்ச்சிவயிறடித்தஞ்ச அருவரைபோல் *
மன்னுகருங்களிற்றாருயிர்வவ்விய மைந்தனை, மாகடல்சூழ் *
கன்னிநன்மாமதிள்மங்கையர்காவலன் காமருசீர்க்கலிகன்றி *
இன்னிசைமாலைகளீரேழும்வல்லவர்க்கு ஏதுமிடரில்லையே. (கச)

அடிவரவு:—மானம் காலை தெள்ளிய மை தந்தை மணமகள் ஆயிரம தோய்த்த ஈடும் அஞ்சுவன் அங்ஙனம் அச்சம் தம்பரம் அன்னம் காதில்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

அ - ஆந் திருமொழி - காதிற்கடிப்பு.

(க்ருஷ்ணவதாரத்தில் ஈடுபாடு.) (ரு)

[ஆய்ச்சியொருத்தி கண்ணனோடு ஊடுதல்.]

கலிவிருத்தம். (உசேனிராகம் - ரூபகதாளம்.)

↓↓ காதிற்கடிப்பிட்டுக் கலிங்கமுடுத்து *
தாதுநல்லதண்ணந்துழாய்கொடணிந்து *
போதுமறுத்துப் புறமேவந்துநின்றீர் *
ஏதுக்கிதுவென் ? இதுவென் ? இதுவென்னோ ? (க)

† 'அங்ஙனும்' எனவும் ஓதுவர்.

துவராடையுடுத்து ஒருசெண்டுசிலுப்பி *
கவராகமுடித்துக் கலிக்கச்சுக்கட்டி *
சுவரார்கதவின்புறமே வந்துநின்றீர் *
இவரார்? இதுவென்? இதுவென்? இதுவென்னோ? (உ)

கருளக்கொடியொன்றுடையீர்! தனிப்பாகீர்! *
உருளச்சகடமது † உறக்கில்நிமிர்த்தீர்! *
மருளைக்கொடுபாடிவந்து இல்லம்புகுந்தீர் *
இருளத்திதுவென்? இதுவென்? இதுவென்னோ? (ங)

நாமம்பலவுமுடை நாரணநம்பீ! *
தாமத்துளபம் மிகநாறிடுகின்றீர் *
காமனெனப்பாடிவந்து இல்லம்புகுந்தீர் *
ஏமத்திதுவென்? இதுவென்? இதுவென்னோ? (ச)

சுற்றுங்குழல்தாழச் சுரிகையணைத்து *
மற்றும்பல மாமணிபொன்கொடணிந்து *
முற்றம்புகுந்து முறுவல்செய்துநின்றீர் *
எற்றுக்கிதுவென்? இதுவென்? இதுவென்னோ? (ரு)

ஆனாயரும் ஆநிரையும்அங்கொழிய *
கூனாயதோர் கொற்றவில்லொன்றுகையேந்தி *
போனாரிருந்தாரையும் பார்த்துப்புகுதீர் *
ஏனோர்கள்முன்னென்? இதுவென்? இதுவென்னோ? (சா)

மல்லேபொருததிரள்தோள் மணவாளீர்! *
அல்லேயறிந்தோம் நும்மனத்தின்கருத்தை *
சொல்லாதொழியீர் சொன்னபோதினால்வாரீர் *
எல்லே! இதுவென்? இதுவென்? இதுவென்னோ? (எ)

புக்காடரவம் பிடித்தாட்டும்புனிதீர்! *
இக்காலங்கள் யாமுமக்கேதொன்றுமல்லோம் *
தக்கார்பலர் தேவிமார்சாலவுடையீர் *
எக்கே! இதுவென்? இதுவென்? இதுவென்னோ? (அ)

ஆடியசைந்து ஆய்மடவாரொடுநீபோய் *
கூடிக்குரவைபிணை கோமளப்பிள்ளாய்! *
தேடித்திருமாமகள் மண்மகள்நிற்ப *
ஏடி! இதுவென்? இதுவென்? இதுவென்னோ? (கூ)

† 'உறக்கி' என்றும் பாடம்.

↓↓ அல்லிக்கமலக்கண்ணனை அங்கோராய்ச்சி *
எல்லிப்பொழுதூட்டிய ஊடல்திறத்தை *
கல்லின்மலிதோள் கலியன்சொன்னமாலை *
சொல்லித்துதிப்பாரவர் துக்கமிலரே. (௧0)

அடிவரவு:—காதில் தவர் கருளக்கொடி நாமம் சுற்றும் ஆனயர் மல்லை புக்கு அல்லி புள்ளுரு.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

௯ - ஆம் திருமொழி - புள்ளுருவாகி.

(க்ருஷ்ணாவதாரத்தில் ஈடுபாடு.) (௬) (பழமொழி.)

[தலைவியினாற்றாமைக்குத் தாய் இரங்கித் தலைவனைவேண்டும் பாசுரம்.]

எழுசீராசிரியவிருத்தம். (செஞ்சுருட்டிராகம் - திரிபுடைதாளம்.)

↓↓ புள்ளுருவாகிநள்ளிருள்வந்த பூதனைமாள * இலங்கை
ஒள்ளெரிமண்டியுண்ணப்பணித்த ஊக்கமதனைநினைந்தோ ? *
கள்ளவிழ்கோதைகாதலும் எங்கள்காரிகைமாதர்கருத்தும் *
பிள்ளைதன்கையிற்கிண்ணமேயொக்கப் பேசுவதெந்தைபிரானே ! (௧)

மன்றில்மலிந்துகூத்துவந்தாடி மால்விடையேழுமடர்த்து * ஆயர்
அன்றுநடுங்கவானிரைகாத்த ஆண்மைகொலோஅறியேன்நான் ? *
நின்றபிரானே ! நீள்கடல்வண்ணா ! நீயிவள்தன்னைநின்கோயில் *
முன்றிலெழுந்தமுருங்கையில்தேனா முன்கைவளைகவர்ந்தாயே. (௨)

ஆர்மலியாழிசங்கொடுபற்றி ஆற்றலையாற்றல்மிகுத்து *
கார்முகில்வண்ணா ! கஞ்சனைமுன்னம் கடந்தநின்கடுந்திறல்தானோ? *
நேரிழைமாதைநித்திலத்தொத்தை நெடுங்கடலமுதனையாளை *
ஆரெழில்வண்ணா ! அங்கையில்வட்டாம் இவளெனக்கருதுகின்றாயே.

மல்கியதோளும்மானுரியதளும் உடையவர்தமக்கும்ஓர்பாகம் *
நல்கியநலமோ? நரகனைத்தொலைத்த கரதலத்தமைதியின்கருத்தோ ? *
அல்லியங்கோதையணிநிறங்கொண்டுவந்து முன்னேநின்றுபோகாய் *
சொல்லியென்? நம்பி! இவளைநீ உங்கள்தொண்டர்கைத்தண்டென்றவாறே.

செருவழியாதமன்னர்கள்மாளத் தேர்வலங்கொண்டவர்செல்லும் *
அருவழிவானமதர்படக்கண்ட ஆண்மைகொலோஅறியேன்நான்? *
திருமொழியெங்கள்தேமலர்க்கோதை சீர்மையைநினைந்திலையந்தோ! *
பெருவழிநாவற்கனியினுமெளியள் இவளெனப்பேசுகின்றாயே. (௫)

அரக்கியராகம்புல்லெனவில்லால் அணிமதிளிலங்கையார்கோனை *
செருக்கழித்தமரர்பணியமுன்னின்ற சேவகமோ? செய்ததின்று *
முருக்கிதழ்வாய்ச்சிமுன்கைவெண்சங்கங்கொண்டு முன்னேநின்றுபோகாய் *
எருக்கிலைக்காகவெறிமழுவோச்சல் என்செய்வது? எந்தைபிரானே! ()

ஆழியந்திண்தேரரசர்வந்திறைஞ்ச அலைகடலுலகமுன்னாண்ட *
பாழியந்தோளோராயிரம்வீழப் படைமழுப்பற்றியவலியோ? *
மாழைமென்னோக்கிமணிநிறங்கொண்டுவந்துமுன்னேநின்றுபோகாய் *
கோழிவெண்முட்டைக்கென்செய்வது? எந்தாய்! குறுந்தடிநெடுங்கடல்வண்ணா!

பொருந்தலன்ஆகம் [illegible] நற வள்ளுகிராற்பிளந்து * அன்று
பெருந்தகைக்கிரங்கிவாலியைமுனிந்த பெருமைகொலோ? செய்ததின்று *
பெருந்தடங்கண்ணிசுரும்புறுகோதைபெருமையைநினைநதிலைபேசில் *
கருங்கடல்வண்ணா! கவுள்கொண்டநீராம் இவளெனக்கருதுகின்றாயே.

நீரழல்வானாய்நெடுநிலங்காலாய் நின்றநின்நீர்மையைநினைந்தோ? *
சீர்கெழுகோதையென்னலதிலளென்று அன்னதோர்தேற்றன்மைதானோ? *
பார்கெழுபவ்வத்தாரமுதனைய பாவையைப்பாவஞ்செய்தேனுக்கு *
ஆரழலோம்புமந்தணன்தோட்டமாக நின்மனத்துவைத்தாயே. (கூ)

↓↓ வேட்டதைக்கருதாதடியிணைவணங்கி மெய்ம்மைநின்றெம்பெருமானை *
வாள்திறல்தானைமங்கையர்தலைவன் மானவேற்கலியன்வாயொலிகள் *
தோட்டலர்பைந்தார்ச்சுடர்முடியானைப் பழமொழியாற்பணிந்துரைத்த *
பாட்டிவைபாடப்பத்திமைபெருகிச் சித்தமுந்திருவொடுமிருமே. (கO)

அடிவரவு:—புள் மன்றில் ஆர் மல்கிய செரு அரக்கியர் ஆழி பொருந்தலன் நீர் வேட்டத்தை திருத்தாய்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

கO - ஆந் திருமொழி - திருத்தாய்.

தலைமகனைப்பிரிந்த தலைமகள் ஆற்றாது கூறிய பாசுரம்.

வெண்டுறை. (பாசுரம் - அதிகாவம்.)

↓↓ திருத்தாய் செம்போத்தே! *
திருமாமகள்தன் கணவன் *
மருத்தார்தொல்புகழ் மாதவனை
திருத்தாய் செம்போத்தே! [வர *

கரையாய் காக்கைப்பிள்ளாய்! *
கருமாமுகில்போல் நிறத்தன் *
உரையார்தொல்புகழுத்தமனைவர *
கரையாய் காக்கைப்பிள்ளாய்! (உ)

கூவாய் பூங்குயிலே! *
குளிர்மாரி தடுத்துகந்த * [வர *
மாவாய்கீண்ட மணிவண்ணனை-
கூவாய் பூங்குயிலே! (௩)

கொட்டாய் பல்லிக்குட்டி! *
குடமாடி உலகளந்த *
மட்டார்பூங்குழல் மாதவனைவர*
கொட்டாய் பல்லிக்குட்டி! (௪)

↓↓ சொல்லாய் பைங்கிளியே! *
சுடராழி வலனுயர்த்த * [வா *
மல்லார்தோள் வடவேங்கடவனை
சொல்லாய் பைங்கிளியே! (௫)

கோழி கூவென்னுமால் *
தோழி! நானென்செய்கேன்? *
ஆழிவண்ணர் வரும்பொழுதாயி
கோழி கூவென்னுமால். [ற்று*

காமற்கு என்கடவேன்? *
கருமாமுகில்வண்ணற்கல்லால் *
பூமேலைங்கணை கோத்துப்புகுந்
காமற்கு என்கடவேன்? [தெய்வ*

இங்கே போதுங்கொலோ? *
இனவேல நெடுங்கண்களிப்ப *
கொங்கார்சோலைக் குடந்தைக்கிடந்த
இங்கேபோதுங்கொலோ? [மால் *

இன்றொன்றறியேன் *
அன்னே! ஆழியொடும் * [களை*
பொன்னார்சார்ங்க முடையவடி
இன்றொன்றறியேன். (௯)

↓↓ தொண்டீர்! பாடுமினோ *
சுரும்பார்பொழில்மங்கையர்கோன்*
ஒண்தார்வேல்கலியனொலிமாலைகள்*
தொண்டீர்! பாடுமினோ. (௧௦)

அடிவரவு:—திருத்தாய் கரையாய் கூவாய் கொட்டாய் சொல்லாய் கோழி காமற்கு இங்கே இன்றொ் தொண்டீர் குன்றமொன்று.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதினோராம்பத்து.

௧-ஆந் திருமொழி - குன்றமொன்று.

[பிரிவாற்றாத தலைவி இரங்கிக்கூறும் பாசுரம்.]

கலிவிருத்தம் (காண்டாராகம் - ஆதிதாளம்.)

↓↓ குன்றமொன்றெடுத்தேந்தி * மாமழை
அன்றுகாத்தவம்மான் * அரக்கரை
வென்றவில்லியார் வீரமேகொலோ? *
தென்றல்வந்து தீவீசுமென்செய்கேன்? (௧)

காரும்வார்பனிக் கடலும், அன்னவன் *
தாருமார்வமும் கண்டதண்டமோ? *
சோருமாமுகில் துளியினூடுவந்து *
ஈரவாடைதான் ஈருமென்னையே. (௨)

சங்குமாமையும் தளருமேனிமேல் *
திங்கள்வெங்கதிர் சீறுமென்செய்கேன் ?
பொங்குவெண்திரைப் புணரிவண்ணனார் *
கொங்கலர்ந்ததார் கூவுமென்னையே. (௩)

அங்கோராய்க்குலத்துள் வளர்ந்துசென்று *
அங்கோர் தாயுருவாகிவந்தவள் *
கொங்கைநஞ்சுண்ட கோயின்மைகொலோ ?
திங்கள்வெங்கதிர் சீறுகின்றதே. (௪)

அங்கோராளரியாய் அவுணனை *
பங்கமா இருகூறுசெய்தவன் *
மங்குல்மாமதி வாங்கவேகொலோ ? *
பொங்குமாகடல் புலம்புகின்றதே. (௫)

சென்றுவார்சிலைவளைத்து இலங்கையை *
வென்றவில்லியார் வீரமேகொலோ ?
முன்றிற்பெண்ணைமேல் முளரிக்கூட்டகத்து *
அன்றிலின்குரல் அடருமென்னையே. (௬)

பூவைவண்ணனார் புள்ளின்மேல்வர *
மேவிநின்றுநான் கண்டதண்டமோ ? *
வீவிலைங்கணை வில்லியம்புகோத்து *
ஆவியே இலக்காகவெய்வதே ! (௭)

மால்இனந்துழாய் வருமென்னெஞ்சகம் *
மாலின்அந்துழாய் வந்தென்னுள்புக *
கோலவாடையும் கொண்டுவந்தது * ஓர்
ஆலிவந்ததால் அரிதுகாவலே ! (௮)

கெண்டையொண்கணும் துயிலும் * என்னிறம்
பண்டுபண்டுபோலொக்கும் * மிக்கசீர்த்
தொண்டரிட்ட பூந்துளவின்வாசமே *
வண்டுகொண்டுவந்து ஊதுமாகிலே. (௯)

↓↓ அன்றுபாரதத்து ஐவர்தூதனாய் *
சென்றமாயனைச் செங்கண்மாலினை *
மன்றிலார்புகழ் மங்கைவாட்கலி
கன்றி * சொல்வல்லார்க்கு அல்லலில்லையே. (௧0)

அடிவரவு:—குன்றம் காரும் சங்கு அங்கோராய் அங்கோராளரி சென்று பூவை மாலினம் கெண்டை அன்று குன்றமெடுத்து.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

உ - ஆந் திருமொழி - குன்றமெடுத்து.

[தலைவி பிரிவாற்றது வருந்திக் கூறும் பாசுரம்.]

கலிநிலைத்துறை. (கௌளிபந்துராகம் - ஆதிதாளம்.)

‡‡ குன்றமெடுத்துமழைதடுத்து இளையாரொடும் *
மன்றில்குரவைபிணைந்தமால் என்னைமால்செய்தான் *
முன்றில்தனிநின்றபெண்ணைமேல கிடந்தீர்கின்ற *
அன்றிலின்கூட்டைப் பிரிக்ககிற்பவராரர்கொலோ? (க)

பூங்குருந்தொசித்து ஆனைகாய்ந்து அரிமாச்செகுத்து *
ஆங்குவேழத்தின்கொம்புகொண்டு வன்பேய்முலை
வாங்கியுண்ட * அவ்வாயன்நிற்க இவ்வாயன்வாய் *
ஏங்குவேய்ங்குழல் என்னோடாடுமிளமையே. (உ)

மல்லொடுகஞ்சனும் துஞ்சவென்றமணிவண்ணன் *
அல்லிமலர்த்தண் துழாய் நினைந்திருந்தேனையே *
எல்லியில்மாருதம் வந்தடும், அதுவன்றியும் *
கொல்லைவல்லேற்றின்மணியும் கோயின்மைசெய்யுமே. (௩)

பொருந்துமாமரம் ஏழும்எய்தபுனிதனார் *
திருந்துசேவடி என்மனத்துநினைதொறும் *
கருந்தண்மாகடல் கங்குலார்க்கும், அதுவன்றியும் *
வருந்தவாடைவரும் இதற்கினியென்செய்கேன்? (௪)

அன்னைமுனிவதும் அன்றிலின்குரலீர்வதும் *
மன்னுமறிகடலார்ப்பதும் வளைசோர்வதும் *
பொன்னங்கலையல்குல் அன்னமென்னடைப்பூங்குழல் *
பின்னைமணாளர் திறத்தமாயினபின்னையே. (௫)

ஆழியுஞ்சங்குமுடைய நங்களடிகள்தாம் *
பாழிமையானகனவில் நம்மைப்பகர்வித்தார் *
தோழியும்நானுமொழிய வையம்துயின்றது *
கோழியுங்கூகின்றதில்லைக் கூரிருளாயிற்றே! (௬)

காமன்தனக்குமுறையல்லேன் கடல்வண்ணனார் *
மாமணவாளர் எனக்குத்தானும்மகன்சொல்லில் *
யாமங்கள்தோறெரிவீசும் என்னிளங்கொங்கைகள் *
மாமணிவண்ணர் திறத்தவாய்வளர்கின்றவே. (௭)

மஞ்சுறுமாலிருஞ்சோலை நின்றமணாளனார் *
நெஞ்சம்நிறைகொண்டுபோயினார் நினைகின்றிலர் *
வெஞ்சுடர்போய்விடியாமல் எவ்விடம்புக்கதோ? *
நஞ்சுடலந்துயின்றால் நமக்கினிநல்லதே. (அ)

காமன்கணைக்கோரிலக்கமாய் நலத்தின்மிகு *
பூமருகோல நம்பெண்மைசிந்தித்திராதுபோய் *
தூமலர்நீர்கொடு தோழி! நாம்தொழுதேத்தினால் *
கார்முகில்வண்ணரைக் கண்களாற்காணலாங்கொலோ? (கூ)

↓↓ வென்றிவிடையுடன் ஏழடர்த்தவடிகளை *
மன்றில்மலிபுகழ் மங்கைமன்கலிகன்றிசொல் *
ஒன்றுநின்றவொன்பதும் உரைப்பவர்தங்கள்மேல் *
என்றும்நில்லாவினை ஒன்றுஞ்சொல்லிலுலகிலே. (க0)

அடிவரவு:—குன்றம் பூ மல்லொடு பொருந்து அன்னை ஆழி காமன்தனக்கு மஞ்சுறு காமன்கணைக்கு வென்றி மன்னிலங்கு.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ரு - ஆம் † திருமொழி - மன்னிலங்கு.

[தலைவி இரங்கிக்கூறிய பாசுரம்; அறத்தொடுநிற்றல்.]

தரவுகொச்சகக்கலிப்பா. (ஸ்ரீராகம் - ரூபகதாளம்.)

↓↓ மன்னிலங்குபாரதத்துத் தேரூர்ந்து * மாவலியைப்
பொன்னிலங்குதிண்விலங்கில்வைத்து, பொருகடல்சூழ் *
தென்னிலங்கையீடழித்த தேவர்க்குஇதுகாணீர் *
என்னிலங்குசங்கோடு எழில்தோற்றிருந்தேனே. (க)

இருந்தானென்னுள்ளத்துஇறைவன் * கறைசேர்
பருந்தாட்களிற்றுக்கு அருள்செய்த * செங்கண்
பெருந்தோள்நெடுமாலைப் பேர்பாடியாட *
வருந்தாதென்கொங்கை ஒளிமன்னும்அன்னே! (உ)

அன்னே! இவரையறிவன் * மறைநான்கும்
முன்னேயுரைத்த முனிவரிவர்வந்து *
பொன்னேய்வளைகவர்ந்து போகார்மனம்புகுந்து *
என்னே? இவரெண்ணுமெண்ணம்அறியோமே. (ரு)

† இத்திருமொழி அந்தாதித்தொடைகொண்டு வந்தது.

அறியோமேயென்று உரைக்கலாமே? எமக்கு *
வெறியார்பொழில்சூழ் வியன்குடந்தைமேவி *
சிறியானோர்பிள்ளையாய் மெள்ளநடந்திட்டு *
உறியார்நறுவெண்ணெய் உண்டுகந்தார்தம்மையே. (௪)

தம்மையேநாளும் வணங்கித்தொழுவார்க்கு *
தம்மையேயொக்க அருள்செய்வராதலால் *
தம்மையேநாளும் வணங்கித்தொழுதிறைஞ்சி *
தம்மையேபற்றா மனத்தென்றும்வைத்தோமே. (௫)

வைத்தாரடியார் மனத்தினில்வைத்து * இன்பம்
உற்றாரொளிவிசும்பில் ஓரடிவைத்து * ஓரடிக்கும்
எய்த்தாதுமண்ணென்று இமையோர் † தொழுதிறைஞ்சி *
கைத்தாமரைகுவிக்கும் கண்ணனென்கண்ணனையே. (௬)

கண்ணன்மனத்துள்ளேநிற்கவும் * கைவளைகள்
என்னோகழன்ற? இவையென்னமாயங்கள்? *
பெண்ணானோம் பெண்மையோம்நிற்க * அவன்மேய
அண்ணல்மலையும் அரங்கமும்பாடோமே. (௭)

பாடோமே? எந்தைபெருமானை * பாடிநின்று
ஆடோமே? ஆயிரம்பேரானை * பேர்நினைந்து
சூடோமே? சூடுந்துழாயலங்கல்சூடி * நாம்
கூடோமே? கூடக்குறிப்பாகில் நன்னெஞ்சே! (௮)

நன்னெஞ்சே! நம்பெருமான் நாளும்இனிதமரும் *
அன்னஞ்சேர்கானல் அணியாலிகைதொழுது *
முன்னஞ்சேர்வல்வினைகள்போக முகில்வண்ணன் *
பொன்னஞ்சேர்சேவடிமேல் போதணியப்பெற்றோமே. (௯)

பெற்றாரார் ஆயிரம்பேரானை * பேர்பாடப்
பெற்றான் கலியனொலிசெய்தமிழ்மாலை *
கற்றார்கள்! முற்றுலகாள்வர் * இவைகேட்க
லுற்றார்க்கு உறுதுயரில்லையுலகத்தே. (௧௦)

அடிவரவு:—மன்னிலங்கு இருந்தான் அன்னே அறியோம் தம்மை வைத்தார் கண்ணன் பாடோமே நன்னெஞ்சே பெற்றாரார் தீலை.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

---

† 'தொழுதேத்தி' என்றும் பாடம்.

ச - ஆந் திருமொழி - நிலையிடம்.

[அவதாரங்களின் மகிமை.]

எண்சீராசிரியவிருத்தம். (அடாணாரகம் - திரிபுடைதாளம்.)

⇃⇃ நிலையிடமெங்குமின்றி, நெடுவெள்ளமும்பர்
வளநாடுமூட, இமையோர் *
தலையிடமற்றெமக்கோர்சரணில்லையென்ன
அரணாவனென்னுமருளால் *
அலைகடல்நீர்குழம்பவகடாடவோடி
அகல்வானுரிஞ்ச * முதுகில்
மலைகளைமீதுகொண்டுவருமீனைமாலை
மறவாதிறைஞ்சுஎன்மனனே ! (க)

செருமிகுவாளெயிற்றஅரவொன்றுசுற்றித்
திசைமண்ணும்விண்ணுமுடனே *
வெருவரவெள்ளைவெள்ளமுழுதுங்குழம்ப
இமையோர்கள்நின்றுகடைய *
பருவரையொன்றுநின்றுமுதுகிற்பரந்து
சுழலக்கிடந்துதுயிலும் *
அருவரையன்னதன்மையடலாமையான
திருமால்நமக்கொரரணே. (உ)

தீதறுதிங்கள்பொங்குசுடரும்பரும்பர்
உலகேழினோடுமுடனே *
மாதிரமண்சுமந்தவடகுன்றும் நின்ற
மலையாறுமேழுகடலும் *
பாதமர்சூழ்குளம்பினகமண்டலத்தின்
ஒருபாலொடுங்க, வளர்சேர் *
ஆதிமுனேனமாகியரணாயமூர்த்தி
யது நம்மையாளுமரசே. (ங)

தளையவிழ்கோதைமாலையிருபால்தயங்க
எரிகான்றிரண்டுதறுகண் *
அளவெழவெம்மைமிக்கஅரியாகி
அன்றுபரியோன்சினங்களவிழ *

வளையுகிராளிமொய்ம்பின்மறவோனதாகம்
மதியாதுசென்றுஒருகிரால் *
பிளவெழவிட்டகுட்டமது, வையமூடு
பெருநீரின்மும்மைபெரிதே. (௫)

வெந்திறல்வாணன்வேள்வியிடமெய்தி
அங்கோர்குறளாகிமெய்ம்மையுணர *
செந்தொழில்வேதநாவின்முனியாகி
வையமடிமூன்றிரந்துபெறினும் *
மந்தரமீதுபோகிமதிநின்றிறைஞ்ச
மலரோன்வணங்க, வளர்சேர் *
அந்தரமேழினூடுசெலவுய்த்தபாத
மது நம்மையாளுமரசே. (௬)

இருநிலமன்னர்தம்மையிருநாலுமெட்டும்
ஒருநாலுமொன்றுமுடனே *
செருநுதலூடுபோகியவராவிமங்க
மழுவாளில்வென்றதிறலோன் *
பெருநிலமங்கைமன்னர்மலர்மங்கைநாதர்
புலமங்கைகேள்வர்புகழ்சேர் *
பெருநிலமுண்டுமிழ்ந்தபெருவாயராகி
அவர்நம்மையாள்வர்பெரிதே. (௭)

இலைமலிபள்ளியெய்தியிதுமாயமென்ன
இனமாயமான்பின், எழில்சேர் *
அலைமலிவேற்கணாளையகல்விப்பதற்கு
ஒருருவாயமானையமையா *
கொலைமலியெய்துவித்தகொடியோனிலங்கை
பொடியாக, வென்றியமருள் *
சிலைமலிசெஞ்சரங்கள்செலவுய்த்த நங்கள்
திருமால்நமக்கொரரணே. (௮)

முன்னுலகங்களேழுமிருள்மண்டியுண்ண
முதலோடுவீடுமறியாது *
என்னிது? வந்ததென்ன இமையோர்திசைப்ப
எழில்வேதமின்றிமறைய *

† பின்னும்வானவர்க்கும்முனிவர்க்கும்நல்கி
இருள்தீர்ந்திவ்வையம்மகிழ *
அன்னமதாயிருந்தங்கறநூலுரைத்த
அதுநம்மையாளுமரசே. (அ)

துணைநிலைமற்றெமக்கொருளதென்றிராது
தொழுமின்கள்தொண்டர்! தொலைய *
உணமுலைமுன்கொடுத்தவுரவோளதாவி
உகவுண்டுவெண்ணெய்மருவி *
பணைமுலையாயர்மாதருரலோடுகட்ட
அதனோடுமோடி, அடல்சேர் *
இணைமருதிற்றுவீழநடைகற்றதெற்றல்
வினைபற்றறுக்கும்விதியே. (௯)

↓↓ கொலைகெழுசெம்முகத்தகளிறொன்றுகொன்று
கொடியோனிலங்கைபொடியா *
சிலைகெழுசெஞ்சரங்கள்செலவுய்த்த நங்கள்
திருமாலை, வேலைபுடைசூழ் *
கலிகெழுமாடவீதிவயல்மங்கைமன்னு
கலிகன்றிசொன்னபனுவல் *
ஒலிகெழுபாடல்பாடியுழல்கின்றதொண்டரவர்
ஆள்வரும்பருலகே. (க0)

அடிவரவு:—நிலை செரு தீதறு தளை வெந்திறல் இருநிலம் இலைமலி முன் துணை கொலை மான்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ரு - ஆந் திருமொழி - மானமரும்.

[இரண்டுதோழியர் எம்பெருமானது ஸௌலப்யத்தையும் பரத்வத்தையும் எதிரேதிராகக் கூறுதல்.]

தரவுகொச்சகக்கலிப்பா. (கன்னடராகம் - ஆதிதாளம்.)

↓↓ மானமருமென்னோக்கி வைதேவியின்துணையா *
கானமரும்கல்லதர்போய்க் காடுறைந்தான்காணேடீ! *
கானமரும்கல்லதர்போய்க் காடுறைந்தபொன்னடிக்கள் *
வானவர்தம் சென்னிமலர்கண்டாய்சாழலே! (க)

† 'பின்னுய', 'பின்னையும்' என்பன பாடபேதங்கள்.

தந்தைதளைகழலத் தோன்றிப்போய் * ஆய்ப்பாடி
நந்தன்குலமதலையாய் வளர்ந்தான்காணேடீ! *
நந்தன்குலமதலையாய்வளர்ந்தான் நான்முகற்குத்
தந்தைகாண் * எந்தைபெருமான்காண் சாழலே! (௨

ஆழ்கடல்சூழ்வையகத்தார் ஏசப்போய் * ஆய்ப்பாடித்
தாழ்குழலார்வைத்த தயிருண்டான்காணேடீ! *
தாழ்குழலார்வைத்த தயிருண்டபொன்வயிறு * இவ்
வேழுலகுமுண்டும் இடமுடைத்தால்சாழலே! (௩

அறியாதார்க்கு ஆனாயனாகிப்போய் * ஆய்ப்பாடி
உறியார்நறுவெண்ணெய் உண்டுகந்தான்காணேடீ! *
உறியார்நறுவெண்ணெய் உண்டுகந்தபொன்வயிற்றுக்கு *
எறிநீருலகனைத்தும் எய்தாதால்சாழலே! (௪

வண்ணக்கருங்குழல் ஆய்ச்சியால்மொத்துண்டு *
கண்ணிக்குறுங்கயிற்றால் கட்டுண்டான்காணேடீ! *
கண்ணிக்குறுங்கயிற்றால் கட்டுண்டானாகிலும் *
எண்ணற்கரியன் இமையோர்க்கும்சாழலே! (௫

கன்றப்பறைகறங்கக் கண்டவர்தம்கண்களிப்ப *
மன்றில்மரக்கால்கூத்து ஆடினான்காணேடீ! *
மன்றில்மரக்கால்கூத்து ஆடினானாகிலும் *
என்றுமரியன் இமையோர்க்கும்சாழலே! (௬

கோதைவேல்ஐவர்க்காய் மண்ணகலம்கூறிடுவான் *
தூதனாய், மன்னவனால் சொல்லுண்டான்காணேடீ! *
தூதனாய், மன்னவனால் சொல்லுண்டானாகிலும் *
ஓதநீர்வையகம் முன்னுண்டுமிழ்ந்தான்சாழலே! (௭

பார்மன்னர்மங்கப் படைதொட்டுவெஞ்சமத்து *
தேர்மன்னர்க்காய் அன்றுதேரூர்ந்தான்காணேடீ! *
தேர்மன்னர்க்காய் அன்றுதேரூர்ந்தானாகிலும் *
தார்மன்னர்தங்கள் தலைமேலான்சாழலே! (௮

கண்டாரிரங்கக் கழியக்குறளுருவாய் *
வண்தாரான்வேள்வியில் மண்ணிரந்தான்காணேடீ! *
வண்தாரான்வேள்வியில் மண்ணிரந்தானாகிலும் *
விண்டேழுலகுக்கும் மிக்கான்காண்சாழலே! (௯

↓↓ கள்ளத்தால்மாவலியை மூவடிமண்கொண்டளந்தான் *
வெள்ளத்தான்வேங்கடத்தான் என்பரால்காணேடீ! *
வெள்ளத்தான்வேங்கடத்தானேலும் * கலிகன்றி
உள்ளத்தினுள்ளே உளன்கண்டாய்சாழலே! (௰)

அடிவரவு:—மானமரும் தந்தை ஆழ்கடல் அறியாதார்க்கு வண்ணக் கன்ற கோதை பார்மன்னர் கண்டார் கள்ளத்தால் மைந்நின்ற.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

க - ஆம் திருமொழி - மைந்நின்ற.

[பிரளயாபத்தில் பாதுகாத்த எம்பெருமானையே ஆச்ரயிக்கும்படி உலகத்தார்க்கு உபதேசித்தல்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (நீலாம்புரிராகம் - அடதாளம்.)

↓↓ மைந்நின்றகருங்கடல்வாயுலகின்றி வானவரும்யாமுமெல்லாம் *
நெய்ந்நின்றசக்கரத்தன் திருவயிற்றில் நெடுங்காலம்கிடந்ததோரீர் *
எந்நன்றிசெய்தாரா ஏதிலோர்தெய்வத்தையேத்துகின்றீர்? *
செய்ந்நன்றிகுன்றேன்மின் தொண்டர்காள்! அண்டனையேயேத்தீர்களே. (க)

நில்லாதபெருவெள்ளம் நெடுவிசும்பின்மீதோடிநிமிர்ந்தகாலம் *
மல்லாண்டதடக்கையால் பகிரண்டமகப்படுத்தகாலத்து * அன்று
எல்லாருமறியாரோ? எம்பெருமானுண்டுமிழ்ந்தஎச்சில்தேவர் *
அல்லாதார்தாமுளரே? அவனருளேயுலகாவதறியீர்களே? (உ)

நெற்றிமேற்கண்ணானும் நிறைமொழிவாய்நான்முகனும் * நீண்டநால்வாய்
ஒற்றைக்கைவெண்பகட்டின் ஒருவனையும் உள்ளிட்டவமரரோடும் *
வெற்றிப்போர்க்கடலரையன்விழுங்காமல் தான்விழுங்கியுய்யக்கொண்ட *
கொற்றப்போராழியான் குணம்பரவாச்சிறுதொண்டர்கொடியவாறே! (௩)

பனிப்பரவைத்திரைததும்பப் பாரெல்லாம்நெடுங்கடலேயானகாலம் *
இனிக்களைகணிவர்க்கில்லையென்று உலகமேழினையுமூழில்வாங்கி *
முனித்தலைவன்,முழங்கொளிசேர்திருவயிற்றில்வைத்தும்மையுய்யக்கொண்ட *
கனிக்களவத்திருவுருவத்தொருவனையே கழல்தொழுமாகல்லீர்களே.

பாராரும்காணாமே பரவைமாநெடுங்கடலேயானகாலம் *
ஆராலுமவனுடையதிருவயிற்றில் நெடுங்காலம்கிடந்தது * உள்ளத்
தோராதவுணர்விலீர்! உணருதிரேல், உலகளந்தவும்பர்கோமான் *
பேராளன்பேரான பேர்களாயிரங்களுமேபேசீர்களே. (௫)

பேயிருக்குநெடுவெள்ளம் பெருவிசும்பின்மீதோடிப்பெருகுகாலம் *
தாயிருக்கும்வண்ணமே உம்மைத்தன்வயிற்றிருத்தியுய்யக்கொண்டான் *
போயிருக்க, மற்றிங்கோர்புதுத்தெய்வம் கொண்டாடும்தொண்டீர்! * பெற்
தாயிருக்கமணேவெந்நீராட்டுதிரோ? மாட்டாததகவற்றீரே. (

மண்ணாடும்விண்ணாடும் வானவரும்தானவரும்மற்றுமெல்லாம் *
உண்ணாதபெருவெள்ளம் உண்ணாமல்தான்விழுங்கியுய்யக்கொண்ட
கண்ணாளன்கண்ணமங்கைநகராளன் கழல்சூடி * அவனையுள்ளத்து
எண்ணாதமானிடத்தை எண்ணாதபோதெல்லாமினியவாறே. (

மறங்கிளர்ந்துகருங்கடல்நீர் உரந்துரந்துபரந்தேறியண்டத்தப்பால் *
புறங்கிளர்ந்தகாலத்துப் பொன்னுலகமேழினையுமூழில்வாங்கி *
அறங்கிளர்ந்ததிருவயிற்றின் அகம்படியில்வைத்தும்மையுய்யக்கொண்ட *
நிறங்கிளர்ந்தகருஞ்சோதிநெடுந்தகையை நினையாதார்நீசர்தாமே. (

அண்டத்தின்முகடழுந்த அலைமுந்நீர்த்திரைததும்பஆ! ஆ! வென்று
தொண்டர்க்குமமரர்க்கும் முனிவர்க்கும்தானருளி * உலகமேழும்
உண்டொத்ததிருவயிற்றின் அகம்படியில்வைத்தும்மையுய்யக்கொண்ட *
கொண்டற்கைமணிவண்ணன் தண்குடந்தைநகர்பாடியாடீர்களே. (

↓↓தேவரையுமசுரரையும் திசைகளையும்கடல்களையும்மற்றும்முற்றும்
யாவரையுமொழியாமே எம்பெருமானுண்டுமிழ்ந்ததறிந்துசொன்ன
காவளரும்பொழில்மங்கைக் கலிகன்றியொலிமாலைகற்றுவல்லார் *
பூவளரும்திருமகளாலருள்பெற்றுப் பொன்னுலகிற்பொலிவர்தாமே.

அடிவரவு:—மை நில்லாத நெற்றி பனி பாராரும பேய் மண் மறம் அண்டத்தின் தேவரை நீள்நாகம்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

எ-ஆந் திருமொழி - நீள்நாகம்.

['எம்பெருமான்திறத்தில் உதவாத அவயவங்கள் பயனற்றன' என்றல்.]

தரவுகொச்சகக்கலிப்பா. (வராளிராகம் - ரூபகதாளம்.)

↓↓ நீள்நாகம்சுற்றி நெடுவரைநட்டு * ஆழ்கடலைப்
பேணான்கடைந்து அமுதம்கொண்டுகந்தபெம்மானை *
பூணாரமார்வனைப் புள்ளூரும்பொன்மலையை *
காணாதார்கண் என்றும் கண்ணல்லகண்டாமே. (

நீள்வான்குறளுருவாய் நின்றிரந்துமாவலிமண் *
தாளாலளவிட்ட தக்கணைக்குமிக்கானை *
தோளாதமாமணியைத் தொண்டர்க்கினியானை *
கேளாச்செவிகள் செவியல்லகேட்டாமே. (உ)

தூயானைத் தூயமறையானை * தென்னாலி
மேயானை மேவாளுயிருண்டமுதுண்ட
வாயானை * மாலைவணங்கி அவன்பெருமை
பேசாதார் * பேச்சென்றும் பேச்சல்லகேட்டாமே. (ங)

கூடாவிரணியனைக் கூருகிரால்மார்விடந்த *
ஓடாவடலரியை உம்பரார்கோமானை *
தோடார்நறுந்துழாய் மார்வனை, ஆர்வத்தால் *
பாடாதார்பாட்டென்றும் பாட்டல்லகேட்டாமே. (ச)

மையார்கடலும் மணிவரையும்மாமுகிலும் *
கொய்யார்குவளையும் காயாவும்போன்றிருண்ட
மெய்யானை * மெய்யமலையானைச் சங்கேந்தும்
கையானை * கைதொழாக்கையல்ல கண்டாமே. (ரு)

கள்ளார்துழாயும் கணவலரும்கூவிளையும் *
முள்ளார்முளரியும் ஆம்பலும்முன்கண்டக்கால் *
புள்ளாரயோரேனமாய்ப் புக்கிடந்தான்பொன்னடிக்கென்று *
உள்ளாதாருள்ளத்தை உள்ளமாக்கொள்ளோமே. (சு)

கனையார்கடலும் கருவிளையும்காயாவும்
அனையானை * அன்பினொ லார்வத்தால் * என்றும
சுனையார் மலரிட்டுத் தொண்டராய்நின்று
நினையாதார் * நெஞ்சென்றும் நெஞ்சல்லகண்டாமே. (எ)

வெறியார்கருங்கூந்தல் ஆய்ச்சியர்வைத்த *
உறியார்நறுவெண்ணெய் தானுகந்துஉண்ட
சிறியானை * செங்கணெடியானைச் சிந்தித்
தறியாதார் * என்றும் அறியாதார்கண்டாமே. (அ)

↓↓ தேனொடுவண்டாலும் திருமாலிருஞ்சோலை *
தானிடமாக்கொண்டான் தடமலர்க்கண்ணிக்காய் *
ஆன்விடையேழன்றடர்த்தாற்கு ஆளானாரல்லாதார் *
மானிடவரல்லரென்று என்மனத்தேவைத்தேனே. (க)

* 27

↓↓ மெய்ந்நின்றபாவ மகல * திருமாலைக்
கைந்நின்றவாழியான் சூழும்கழல்சூடி *
கைந்நின்றவேற்கைக் கலியனொலிமாலை *
ஐயொன்றுமைந்தும் இவைபாடியாடுமினே. (௧0)

அடிவரவு:—நீள்நாகம் நீள்வான் தூயான் கூடா மையார் கள்ளார கனை வெறி தேனொடு மெய் மாற்றம்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

அ - ஆந் திருமொழி - மாற்றமுள.

['தேஹஸம்பந்தத்தை அறுத்துத் தந்தருளவேண்டும்' என்று எம்பெருமானைப் பிரார்த்தித்தல்.]

கலிவிருத்தம். (பந்நிராகம் - அடதாளம்.)

↓↓ மாற்றமுள ஆகிலுமசொல்லுவன் * மக்கள்
தோற்றக்குழி தோற்றுவிப்பாய்கொல்? என்றுஇன்னம் +
ஆற்றங்கரைவாழ்மரம்போல அஞ்சுகின்றேன் *
நாற்றச்சுவை ஊறொலியாகியநம்பீ ! (௧)

சீற்றமுள ஆகிலும்செப்புவன் * மக்கள்
தோற்றக்குழி தோற்றுவிப்பாய்கொலென்றஞ்சி *
காற்றத்திடைப்பட்ட கலவர்மனம்போல் *
ஆற்றத்துளங்காநிற்பன் ஆழிவலவா ! (௨)

தூங்கார்பிறவிக்கள் இன்னம்புகப்பெய்து *
வாங்காயென்றுசிந்தித்து நானதற்கஞ்சி *
பாம்போடொருகூரையிலே பயின்றாற்போல் *
தாங்காதுள்ளம்தள்ளும் என்தாமரைக்கண்ணா ! (௩)

உருவார்பிறவிக்கள் இன்னம்புகப்பெய்து *
திரிவாயென்றுசிந்தித்தி என்றதற்கஞ்சி *
இருபாடெரிகொள்ளியினுள் எறும்பேபோல் *
உருகாநிற்கும் என்னுள்ளம்ஊழிமுதல்வா ! (௪)

கொள்ளக்குறையாத இடும்பைக்குழியில் *
தள்ளிப்புகப்பெய்திகொல் ? என்றுஅதற்குஅஞ்சி *
வெள்ளத்திடைப்பட்ட நரியினம்போலே *
உள்ளம்துளங்காநிற்பன் ஊழிமுதல்வா ! (௫)

படைநின்ற பைந்தாமரையோடு * அணிநீலம்
மடைநின்றலரும் வயலாலிமணாளா! *
இடையன்எறிந்தமரமே ஒத்திராமே *
அடையஅருளாய் எனக்குஉன்தனருளே. (சு)

↓↓ வேம்பின்புழு வேம்பன்றியுண்ணாது * அடியேன்
நான்பின்னும் உன்சேவடியன்றிநயவேன் *
தேம்பலிளந்திங்கள் சிறைவிடுத்து * ஐவாய்ப
பாம்பினணைப் பள்ளிகொண்டாய்பரஞ்சோதீ! (எ)

↓↓ அணியார்பொழில்சூழ் அரங்கநகரப்பா! *
துணியேனினி நின்னருளல்லதெனக்கு *
மணியே! மணிமாணிக்கமே! மதுசூதா! *
பணியாய்எனக்குஉய்யும்வகை பரஞ்சோதீ! (அ)

↓↓ நந்தாநரகத்து அழுந்தாவகை * நாளும்
எந்தாய்! தொண்டரானவர்க்கு இன்னருள்செய்வாய்! *
சந்தோகா! தலைவனே! தாமரைக்கண்ணா! *
அந்தோ! அடியேற்கு அருளாய்உன்னருளே. (௯)

↓↓ குன்றமெடுத்து ஆநிரைகாத்தவன்தன்னை *
† மன்றில்புகழ் மங்கைமன்கலிகன்றிசொல *
ஒன்றுநின்றவொன்பதும் வல்லவர்தம்மேல் *
என்றும்வினையாயின சாரகில்லாவே. (கo)

அடிவரவு:—மாற்றம் சீற்றம் தூங்கார் உருவார் கொள்ள படை வேம்பின் அணியார நந்தா குன்றம் நிதியினை.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி ஸம்பூர்ணம்.

† 'மன்றில்மலிபுகழ்' என்றும் பாடம் வழங்குகின்றது.

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

திருக்குறுந்தாண்டகம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (தோடிராகம் - ரூபகதாளம்.)

↓↓ நிதியினைப்பவளத்தூணை நெறிமையால்நினையவல்லார் *
கதியினைக்கஞ்சன்மாளக் கண்டுமுன் அண்டமாளும் *
மதியினைமாலைவாழ்த்தி வணங்கியென்மனத்துவந்த *
விதியினைக்கண்டுகொண்ட தொண்டனேன்விடுகிலேனே. (க)

காற்றினைப்புனலைத்தீயைக் கடிமதிளிலங்கைசெற்ற
ஏற்றினை * இமயம்மேய எழில்மணித்திரளை * இன்ப
வாற்றினையமுதந்தன்னை அவுணனாருயிரையுண்ட
கூற்றினை * குணங்கொண்டுஉள்ளம்! கூறுநீகூறுமாறே. (உ)

பாயிரும்பரவைதன்னுள் பருவரைதிரித்து * வானோர்க்
காயிருந்தமுதங்கொண்ட அப்பனையெம்பிரானை *
வேயிருஞ்சோலைசூழ்ந்து விரிகதிரிரியநின்ற *
மாயிருஞ்சோலைமேய மைந்தனைவணங்கினேனே. (ங)

கேட்கயானுற்றதுண்டு கேழலாயுலகங்கொண்ட *
பூக்கெழுவண்ணனாரைப் போதரக்கனவிற்கண்டு *
வாக்கினால்கருமந்தன்னால் மனத்தினால்சிரத்தைதன்னால் *
வேட்கைமீதூரவாங்கி விழுங்கினேற்குஇனியவாறே. (ச)

இரும்பனன்றுண்டநீர்போல் எம்பெருமானுக்கு * என்தன்
அரும்பெறலன்புபுக்கிட்டு அடிமைபூண்டுய்ந்துபோனேன் *
வரும்புயல்வண்ணனாரை மருவியென்மனத்துவைத்து *
கரும்பினின்சாறுபோலப் பருகினேற்குஇனியவாறே. (ரு)

மூவரில்முதல்வனாய ஒருவனை, உலகங்கொண்ட *
கோவினைக்குடந்தைமேய குருமணித்திரளை * இன்பப்
பாவினைப்பச்சைத்தேனைப் பைம்பொன்னையமரர்சென்னிப்
பூவினை * புகழும்தொண்டர் என்சொல்லிப்புகழ்வர்தாமே? (சு)

இம்மையைமறுமைதன்னை எமக்குவீடாகிநின்ற *
மெய்ம்மையைவிரிந்தசோலை வியன்திருவரங்கம்மேய *
செம்மையைக்கருமைதன்னைத் திருமலையொருமையானை *
தன்மையைநினைவார் என்தன்தலைமிசைமன்னுவாரே. (எ)

வானிடைப்புயலைமாலை வரையிடைப்பிரசமீன்ற *
தேனிடைக்கரும்பின்சாற்றைத் திருவினைமருவிவாழார் *
மானிடப்பிறவியந்தோ! மதிக்கிலர்கொள்க * தந்தம்
ஊனிடைக்குரம்பைவாழ்க்கைக்கு உறுதியேவேண்டினாரே. (அ)

உள்ளமோவொன்றில்நில்லாது ஓசையிலெரிநின்றுண்ணும் *
கொள்ளிமேலெறும்புபோலக் குழையுமாலென்தனுள்ளம் *
தெள்ளியீர்! தேவர்க்கெல்லாம் தேவராயுலகங்கொண்ட *
ஒள்ளியீர்! உம்மையல்லால் எழுமையும்துணையிலோமே. (௯)

சித்தமும்செவ்வைநில்லாது என்செய்கேன்தீவினையேன்? *
பத்திமைக்கன்புடையேனாவதே? பணியாயெந்தாய்! *
முத்தொளிமரகதமே! முழங்கொளிமுகில்வண்ணா! * என்
அத்த! நின்னடிமையல்லால் யாதுமொன்றறிகிலேனே. (க0)

தொண்டெல்லாம்பரவிநின்னைத் தொழுதடிபணியுமாறு
கண்டு * தான்கவலைதீர்ப்பான் ஆவதே? பணியாயெந்தாய்! *
அண்டமாயெண்டிசைக்கும் ஆதியாய்! நீதியான *
பண்டமாம்பரமசோதி! நின்னையேபரவுவேனே. (கக)

ஆவியையரங்கமாலை அழுக்குடம்பெச்சில்வாயால *
தூய்மையில்தொண்டனேன்நான் சொல்லினேன்தொல்லைநாமம் *
பாவியேன்பிழைத்தவாறென்று அஞ்சினேற்கு அஞ்சலென்று *
காவிபோல்வண்ணர்வந்து என்கண்ணுளேதோன்றினாரே. (கஉ)

இரும்பனன்றுண்டநீரும் போதரும்கொள்க * என்தன்
அரும்பிணிபாவமெல்லாம் அகன்றனஎன்னைவிட்டு *
சுரும்பமர்சோலைசூழ்ந்த அரங்கமாகோயில்கொண்ட *
கரும்பினைக்கண்டுகொண்டு என்கண்ணிணைகளிக்குமாறே! (கரு)

காவியைவென்றகண்ணார் கலவியேகருதி * நாளும்
பாவியேனாகவெண்ணி அதனுள்ளேபழுத்தொழிந்தேன் *
தூவிசேரன்னமன்னும் சூழ்புனற்குடந்தையானை *
பாவியேன்பாவியாது பாவியேனாயினேனே. (கச)

† முன்பொலாவிராவணன்தன் முதுமதிளிலங்கைவேவித்து *
அன்பினாலனுமன்வந்து ஆங்கடியிணைபணியநின்றார்க்கு *
என்பெலாமுருகியுக்கிட்டு என்னுடைநெஞ்சமென்னும் *
அன்பினால்ஞானநீர்கொண்டு ஆட்டுவனடியனேனே. (கரு)

மாயமான்மாயச்செற்று மருதிறநடந்து * வையம்
தாயமாபரவைபொங்கத் தடவரைதிரித்து * வானோர்க்
கீயுமாலெம்பிரானார்க்கு என்னுடைச்சொற்களென்னும் *
தூயமாமாலைகொண்டு சூட்டுவன்தொண்டனேனே. (கசு)

பேசினார்பிறவிநீத்தார் பேருளான்பெருமைபேசி *
ஏசினாருய்ந்துபோனார்என்பது இவ்வுலகின்வண்ணம் *
பேசினேனேசமாட்டேன் பேதையேன்பிறவிநீத்தற்கு *
ஆசையோபெரிதுகொள்க அலைகடல்வண்ணர்பாலே. (கஎ)

இளைப்பினையியக்கம்நீக்கி இருந்துமுன்னிமையைக்கூட்டி *
அளப்பிலைம்புலனடக்கி அன்பவர்கண்ணேவைத்து *
துளக்கமில்சிந்தைசெய்து தோன்றலும்சுடர்விட்டு * ஆங்கே
விளக்கினைவிதியிற்காண்பார் மெய்ம்மையைக்காண்கிற்பாரே. (கஅ)

‡‡ பிண்டியார்மண்டையேந்திப் பிறர்மனைதிரிதந்துண்ணும் *
‡ முண்டியான்சாபம்தீர்த்த ஒருவனூர் * உலகமேத்தும்
கண்டியூர்அரங்கம்மெய்யம் கச்சிபேர்மல்லையென்று
மண்டினார் * உய்யலல்லால் மற்றையார்க்குஉய்யலாமே? (கக)

‡‡ வானவர்தங்கள்கோனும் மலர்மிசையயனும் * நாளும்
தேமலர்தூவியேத்தும் சேவடிச்செங்கண்மாலை *
மானவேற்கலியன்சொன்ன வண்தமிழ்மாலைநாலைந்தும் *
ஊனமதின்றிவல்லார் ஒளிவிசும்பாள்வர்தாமே. (உ0)

அடிவரவு:—நிதியினை காற்றினை பாயிரும் கேட்க இரும்பு மூவரில் இம்மையை வானிடை உள்ளம் சித்தம் தொண்டு ஆவியை இரும்பு காவியை முன்பொலா மாயம் பேசினார் இளைப்பினை பிண்டியார் வானவர் மின்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

---

† இந்த இரண்டுபாசுரங்களும் - திருமஞ்சனகாலத்தில் ஸேவிக்கப்படுவன.
‡ 'உண்டியான்' என்றும் கூறுவர்.

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

திருநெடுந்தாண்டகம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

[முதற் பத்துப்பாசுரங்கள் - ஆழ்வார் தாமானதன்மையில் அருளிச்செய்வன.]

(கல்யாணி ராகம் - ஆதி தாளம்.)

↓↓ மின்னுருவாய்முன்னுருவில்வேதநான்காய்
விளக்கொளியாய்முளைத்தெழுந்ததிங்கள்தானாய் *
பின்னுருவாய்முன்னுருவிற்பிணிமூப்பில்லாப்
பிறப்பிலியாயிறப்பதற்கேயெண்ணாது * எண்ணும்
பொன்னுருவாய்மணியுருவிற்பூதமைந்தாய்ப்
புனலுருவாயனலுருவில்திகழுஞ்சோதி *
தன்னுருவாயென்னுருவில்நின்றவெந்தை
தளிர்புரையும்திருவடியென்தலைமேலவே. (க)

பாருருவிநீரெரிகால்விசும்புமாகிப்
பல்வேறுசமயமுமாய்ப்பரந்துநின்ற *
ஏருருவில்மூவருமேயெனநின்ற
இமையவர்தம்திருவுருவேறெண்ணும்போது *
ஓருருவம்பொன்னுருவமொன்றுசெந்தீ
ஒன்றுமாகடலுருவமொத்துநின்ற *
மூவுருவும்கண்டபோதொன்றாம்சோதி
முகிலுருவமெம்மடிகளுருவந்தானே. (உ)

(தோடி ராகம் - ரூபக தாளம்.)

திருவடிவிற்கருநெடுமால்சேயனென்றும்
திரேதைக்கண்வளையுருவாய்த்திகழ்ந்தானென்றும் *
பெருவடிவிற்கடலமுதம்கொண்டகாலம்
பெருமானைக்கருநீலவண்ணன்தன்னை *
ஒருவடிவத்தோருருவென்றுணரலாகாது
ஊழிதோறூழிநின்றேத்தலல்லால் *
கருவடிவிற்செங்கண்ணவண்ணன்தன்னைக்
கட்டுரையேயாரொருவர்காண்கிற்பாரே ? (ங)

இந்திரற்கும்பிரமற்கும்முதல்வன்தன்னை
இருநிலம்கால்தீநீர்விண்பூதமைந்தாய் *
செந்திறத்ததமிழோசைவடசொல்லாகித்
திசைநான்குமாய்த்திங்கள்ஞாயிறாகி *
அந்தரத்தில்தேவர்க்குமறியலாகா
அந்தணனை அந்தணர்மாட்டந்திவைத்த
மந்திரத்தை * மந்திரத்தால்மறவாது என்றும்
வாழுதியேல்வாழலாம்மடநெஞ்சமே! (ச)

(தோடி ராகம் - திரிபுடை தாளம்.)

ஒண்மிதியிற்புனலுருவியொருகால்நிற்ப
ஒருகாலுங்காமருசீரவுணனுள்ளத்து *
எண்மதியுங்கடந்தண்டமீதுபோகி
இருவிசும்பினூடுபோயெழுந்து * மேலைத்
தண்மதியும்கதிரவனும்தவிரவோடித்
தாரகையின்புறந்தடவியப்பால்மிக்கு *
மண்முழுதுமகப்படுத்துநின்றவெந்தை
மலர்புரையும்திருவடியேவணங்கினேனே. (ரு)

அலம்புரிந்தநெடுந்தடக்கையமரர்வேந்தன்
அஞ்சிறைப்புள்தனிப்பாகன், அவுணர்க்கென்றும் *
சலம்புரிந்தங்கருளில்லாத்தன்மையாளன்
தானுகந்தவூரெல்லாம்தன்தாள்பாடி *
நிலம்பரந்துவரும்கலுழிப்பெண்ணையீர்த்த
நெடுவேய்கள்படுமுத்தமுந்தவுந்தி *
புலம்பரந்துபொன்விளைக்கும்பொய்கைவேலிப்
பூங்கோவலூர்தொழுதும்போதுநெஞ்சே! (சு)

வற்புடையவரைநெடுந்தோள்மன்னர்மாள
வடிவாயமழுவேந்தியுலகமாண்டு *
வெற்புடையநெடுங்கடலுள்தனிவேலுய்த்த
வேள்முதலாவென்றானூர், விந்தமேய *
கற்புடையமடக்கன்னிகாவல்பூண்ட
கடிபொழில்சூழ்நெடுமறுகிற்கமலவேலி *
பொற்புடையமலையரையன்பணியநின்ற
பூங்கோவலூர்தொழுதும்போதுநெஞ்சே! (எ)

↓↓ நீரகத்தாய் ! நெடுவரையினுச்சிமேலாய் !

ஊரகத்தாய் ! * ஒண்துறைநீர்வெஃகாவுள்ளாய் !
உள்ளுவாருள்ளத்தாய்! * உலகமேத்தும்
காரகத்தாய் ! கார்வானத்துள்ளாய் ! கள்வா !
காமருபூங்காவிரியின்தென்பால்மன்னு
பேரகத்தாய் ! * பேராதென்னெஞ்சினுள்ளாய் !
பெருமான் ! உன்திருவடியேபேணினேனே. (அ)

(சங்கராபரணராகம் - ஆதிதாளம்.)

வங்கத்தால்மாமணிவந்துந்துமுந்நீர்
மல்லையாய் ! மதிட்கச்சியூராய் ! பேராய் ! *
கொங்கத்தார்வளங்கொன்றையலங்கல்மார்வன்
குலவரையன்மடப்பாவையிடப்பாற்கொண்டான்
பங்கத்தாய் ! * பாற்கடலாய் ! பாரின்மேலாய் !
பனிவரையினுச்சியாய் ! பவளவண்ணா ! *
எங்குற்றாய் ? எம்பெருமான் ! உன்னைநாடி
ஏழையேனிங்ஙனமேயுழிதருகேனே. (க)

பொன்னானாய் ! பொழிலேழும்காவல்பூண்ட
புகழானாய் ! இகழ்வாயதொண்டனேன்நான் *
என்னானாய் ! என்னானாய் ! என்னலல்லால்
என்னறிவனேழையேன் ? * உலகமேத்தும்
தென்னானாய் ! வடவானாய் ! குடபாலானாய் !
குணபாலமதயானாய் ! இமையோர்க்கென்றும்
முன்னானாய் ! * பின்னானார்வணங்கும்சோதி !
திருமூழிக்களத்தானாய் ! முதலானாயே ! (கo)

[இதுமுதல் பத்துப்பாசுரங்கள் - தலைவனைப்பிரிந்த தலைவியின்
ஆற்றாமை கண்ட தாய் இரங்கிக்கூறியவை]

(பந்துவராளிராகம் - அட தாளம்.)

பட்டுடுக்கும்அயர்த்திரங்கும் பாவைபேணாள்
பனிநெடுங்கண்ணீர்ததும்பப்பள்ளிகொள்ளாள் *
எள் துணைப்போதென்குடங்காலிருக்ககில்லாள்
எம்பெருமான்திருவரங்கமெங்கே? என்னும் *

மட்டுவிக்கிமணிவண்டுமுரலும்கூந்தல்
மடமானையிதுசெய்தார்தம்மை * மெய்யே
கட்டுவிச்சிசொல்லென்னச்சொன்னாள், நங்காய்! *
கடல்வண்ணரிதுசெய்தார்காப்பாராரே! (கக)

நெஞ்சுருகிக்கண்பனிப்பநிற்கும்சோரும்
நெடிதுயிர்க்கும்உண்டறியாள்உறக்கம்பேணாள் *
நஞ்சரவில்துயிலமர்ந்தநம்பீ! என்னும் *
வம்பார் † பூம்வயலாலிமைந்தா! என்னும் *
அஞ்சிறையபுட்கொடியேயாடும்பாடும்
அணியரங்கமாடுதுமோ? தோழீ! என்னும் *
என்சிறகின்கீழடங்காப்பெண்ணைப்பெற்றேன்
இருநிலத்தோர்பழிபடைத்தேன் ஏ! பாவமே. (கஉ)

கல்லெடுத்துக்கல்மாரிகாத்தாய்! என்றும்
காமருபூங்கச்சியூரகத்தாய்! என்றும் *
வில்லிறுத்துமெல்லியல்தோள்தோய்ந்தாய்! என்றும்
வெஃகாவில்துயிலமர்ந்தவேந்தே! என்றும் *
மல்லடர்த்துமல்லரையன்றட்டாய்! என்றும்
மாகீண்டகைத்தலத்தென்மைந்தா! என்றும் *
சொல்லெடுத்துத்தன்கிளியைச்சொல்லேயென்று
துணைமுலைமேல் துளிசோரச்சோர்கின்றாளே. (கங)

(ஸாவேரிராகம் - ரூபகதாளம்.)

முளைக்கதிரைக்குறுங்குடியுள்முகிலைமூவா
மூவுலகும்கடந்தப்பால்முதலாய்நின்ற *
அளப்பரியவாரமுதைஅரங்கமேய
அந்தணனை அந்தணர்தம்சிந்தையானை *
விளக்கொளியைமரதகத்தைத்திருத்தண்காவில்
வெஃகாவில்திருமாலைப்பாடக்கேட்டு *
வளர்த்ததனால்பயன்பெற்றேன்வருகவென்று
மடக்கிளியைக்கைகூப்பிவணங்கினாளே. (கச)

கல்லுயர்ந்தநெடுமதிள்சூழ்கச்சிமேய
களிறு! என்றும் கடல்கிடந்தகனியே! என்றும் *
அல்லியம்பூமலர்ப்பொய்கைப்பழனவேலி
அணியழுந்தூர்நின்றுகந்தவம்மான்! என்றும் *

† 'பூவயலாலி' என்று இருப்பின் நலம்.

சொல்லுயர்ந்த நெடுவீணை முலைமேல் தாங்கித்
தூமுறுவல் நகையிறையே தோன்ற நக்கு *
மெல்விரல்கள் சிவப்பெய்தத் தடவி ஆங்கே
மென்கிளிபோல் மிகமிழற்றும் என் பேதையே. (கரு)

கன்றுமேய்த்து இனிதுகந்த காளாய்! என்றும்
கடிபொழில் சூழ் கணபுரத்து என் கனியே! என்றும் *
மன்றமரக் கூத்தாடி மகிழ்ந்தாய்! என்றும்
வடதிருவேங்கடம் மேய மைந்தா! என்றும் *
வென்றசுரர் குலங்களைந்த வேந்தே! என்றும்
விரிபொழில் சூழ் திருநறையூர் நின்றாய்! என்றும் *
துன்றுகுழல் கருநிறத்தென் துணையே! என்றும்
துணைமுலைமேல் துளிசோரச் சோர்கின்றாளே. (கசு)

(யதுகுலகாம்போதி - ஜம்பை தாளம்.)

பொங்கார் மெல்லிளங் கொங்கை பொன்னே பூப்பப்
பொருகயற்கண் ணீரரும்பப் போந்து நின்று *
செங்கால மடப்புறவம் பெடைக்குப் பேசும்
சிறுகுரலுக்கு உடலுருகிச் சிந்தித்து * ஆங்கே
தண்காலும் தண்குடந்தை நகரும் பாடித்
தண்கோவலூர் பாடி ஆடக் கேட்டு *
நங்காய்! நங்குடிக்கு இதுவோ நன்மை? என்ன
நறையூரும் பாடுவாள் நவில்கின்றாளே. (கஎ)

(பந்துவராளி - திரிபுடை தாளம்.)

கார்வண்ணம் திருமேனி கண்ணும் வாயும்
கைத்தலமும் அடியிணையும் கமலவண்ணம் *
பார்வண்ண மடமங்கை பத்தர் பித்தர்
பனிமலர்மேல் பாவைக்குப் பாவம் செய்தேன்! *
ஏர்வண்ண என்பேதை என் சொல் கேளாள்
எம்பெருமான் திருவரங்கம் எங்கே? என்னும் *
நீர்வண்ணன் நீர்மலைக்கே போவேன் என்னும்
இதுவன்றோ † நிறையழிந்தார் நிற்குமாறே! (கஅ)

முற்றாராவனமுலையாள் பாவை மாயன்
மொய்யகலத்துள் இருப்பாள் அஃதும் கண்டும்
அற்றாள் * தன் † நிறையழிந்தாள் ஆவிக்கின்றாள்
அணியரங்கம் ஆடுதுமோ? தோழீ! என்னும் *

---

† 'நிறைவு' என்றும் வழங்குவர்.

பெற்றேன்வாய்ச்சொல்லிறையும்பேசக்கேளாள்
பேர்பாடித்தண்குடந்தைநகரும்பாடி *
பொற்றாமரைக்கயம்நீராடப்போனாள்
பொருவற்றாளென்மகள்உம்பொன்னுமஃதே. (௧௯)

(அடாணாராகம் - ஆதிதாளம்.)

தேராளும்வாளரக்கன்செல்வம்மாளத்
தென்னிலங்கைமுன்மலங்கச்செந்தீயொல்கி *
போராளனாயிரந்தோள்வாணன்மாளப்
பொருகடலையரண்கடந்துபுக்குமிக்க
பாராளன் * பாரிடந்துபாரையுண்டு
பாருமிழ்ந்துபாரளந்து பாரையாண்ட
பேராளன் * பேரோதும்பெண்ணைமண்மேல்
பெருந்தவத்தளென்றல்லால்பேசலாமே? (௨௦)

[இதுமுதல் ஐந்துபாசுரங்கள் - தலைவி தோழிக்கு அறத்தொடுநிற்றல்.]

↓↓ மைவண்ணநறுங்குஞ்சிகுழல்பின்தாழ
மகரம்சேர்குழையிருபாடிலங்கியாட *
எய்வண்ணவெஞ்சிலையேதுணையா இங்கே
இருவராய்வந்தாரென்முன்னேநின்றார் *
கைவண்ணம்தாமரைவாய்கமலம்போலும்
கண்ணிணையுமரவிந்தம் அடியுமஃதே *
அவ்வண்ணத்தவர்நிலைமைகண்டும்தோழீ!
அவரைநாம்தேவரென்றஞ்சினோமே. (௨௧)

(ஆநந்தபைரவிராகம் - திரிபுடை தாளம்.)

நைவளமொன்றாராயாநம்மைநோக்கா
நாணினார்போலிறையேநயங்கள்பின்னும் *
செய்வளவில்என்மனமும்கண்ணுமோடி
எம்பெருமான்திருவடிக்கீழணைய * இப்பால்
கைவளையும்மேகலையும்காணேன் கண்டேன்
கனமகரக்குழையிரண்டும்நான்குதோளும் *
எவ்வளவுண்டெம்பெருமான்கோயில்? என்றேற்கு *
இதுவன்றோஎழிலாலி? என்றார்தாமே. (௨௨)

(காம்போஜிராகம் - த்ரிபுடைதாளம்.)

உள்ளூரும்சிந்தைநோயெனக்கேதந்து என்
    னொளிவளையும்மாநிறமும்கொண்டாரிங்கே *
தெள்ளூருமிளந்தெங்கின்தேறல்மாந்திச்
    சேலுகளும்திருவரங்கம் + நம்மூரென்ன *
கள்ளூரும்பைந்துழாய்மாலையானைக்
    கனவிடத்தில்யான்காண்பன், கண்டபோது *
புள்ளூரும்கள்வா! நீபோகேலென்பன்
    என்றாலுமிதுநமக்கோர்புலவிதானே? (உ௩)

(வராளிராகம் - ரூபகதாளம்.)

இருகையிற்சங்கிவைநில்லாஎல்லேபாவம்!
    இலங்கொலிநீர்ப்பெரும்பௌவம்மண்டியுண்ட *
பெருவயிற்றகருமுகிலேயொப்பர்வண்ணம்
    பெருந்தவத்தரருந்தவத்துமுனிவர்சூழ *
ஒருகையிற்சங்கொருகைமற்றாழியேந்தி
    உலகுண்டபெருவாயரிங்கேவந்து * என்
பொருகயற்கண்ணீரரும்பப்புலவிதந்து
    புனலரங்கமூரென்றுபோயினாரே. (உ௪)

மின்னிலங்குதிருவுருவும்பெரியதோளும்
    கரிமுனிந்தகைத்தலமும்கண்ணும்வாயும் *
தன்னலர்ந்தநறுந்துழாய்மலரின்கீழே
    தாழ்ந்திலங்குமகரஞ்சேர்குழையும்காட்டி *
என்னலனுமென்னிறைவுமென்சிந்தையும்
    என்வளையும்கொண்டு என்னையாளுங்கொண்டு *
பொன்னலர்ந்தநறுஞ்செருந்திப்பொழிலினூடே
    புனலரங்கமூரென்றுபோயினாரே. (உ௫)

[வண்டுவிடுதூது.]

(கேதாரகௌளராகம் - ரூபகதாளம்.)

தேமருவுபொழிலிடத்துமலர்ந்தபோதைத்
    தேனதனைவாய்மடுத்து, உன்பெடையும்நீயும் *
பூமருவியினிதமர்ந்துபொறியிலார்ந்த
    அறுகாலசிறுவண்டே! தொழுதேன்உன்னை *

+ ‘நம்மூரென்ற’ என்றும் பாடம்

ஆமருவிநிரைமேய்த்தஅமரர்கோமான்
அணியழுந்தூர்நின்றானுக்குஇன்றேசென்று *
நீமருவியஞ்சாதேநின்றுஓர்மாது
நின்நயந்தாளென்றிறையேயியம்பிக்காணே. (உசு)

[நாரைவிடுதூது.]

(சாரங்கராகம் - ரூபகதாளம்.)

↓↓ செங்காலமடநாராய் ! இன்றேசென்று
திருக்கண்ணபுரம்புக்குஎன்செங்கண்மாலுக்கு *
என்காதலென்துணைவர்க்குரைத்தியாகில்
இதுவொப்பதெமக்கின்பமில்லை * நாளும்
பைங்கானமீதெல்லாம்உனதேயாகப்
பழனமீன்கவர்ந்துண்ணத்தருவன் * தந்தால்
இங்கேவந்தினிதிருந்துஉன்பெடையும்நீயும்
இருநிலத்திலினிதின்பமெய்தலாமே. (உஎ)

[பறவைகளைத் தூதுவிடுத்த தலைவி தலைவன்வரக் காணாமையால் அவனைப்பற்றி ஊடல்கொண்டு தோழிக்குக் கூறிய பாசுரம்.]

(மோஹநராகம் - அடதாளம்.)

தென்னிலங்கையரண்சிதறியவுணன்மாளச்
சென்றுலகமூன்றினையும்திரிந்தோர்தேரால் *
மன்னிலங்குபாரதத்தைமாளவூர்ந்த
வரையுருவின்மாகளிற்றைத்தோழீ ! * என்தன்
பொன்னிலங்குமுலைக்குவட்டிற்பூட்டிக்கொண்டு
போகாமைவல்லேனாய்ப்புலவியெய்தி *
என்னிலங்கமெல்லாம்வந்தின்பமெய்த
எப்பொழுதும்நினைந்துருகியிருப்பன்நானே. (உஅ)

[இந்த இரண்டு பாசுரங்களும்-ஆழ்வார் தாமான தன்மையில் அருளிச்செய்வன.]

(மோஹநராகம் - ஜம்பைதாளம்.)

↓↓ அன்றாயர்குலமகளுக்கரையன்தன்னை
அலைகடலைக்கடைந்தடைத்தவம்மான்தன்னை *
குன்றாதவலியரக்கர்கோனைமாளக்
கொடுஞ்சிலைவாய்ச்சரந்துரந்துகுலங்களைந்து

வென்றானை * குன்றெடுத்த தோளினானை
விரிதிரைநீர் விண்ணகரம் மருவி நாளும்
நின்றானை * தண்குடந்தைக் கிடந்தமாலை
நெடியானை யடிநாயேன் நினைந்திட்டேனே. (உ௯)

‡‡ மின்னுமாமழைதவழும் மேகவண்ணா!
விண்ணவர்தம் பெருமானே! அருளாயென்று *
அன்னமாய் முனிவரோடமரரேத்த
அருமறையை வெளிப்படுத்த அம்மான்தன்னை *
மன்னுமாமணிமாட மங்கைவேந்தன்
மானவேற் பரகாலன் கலியன் சொன்ன *
பன்னியநூல் தமிழ்மாலை வல்லார் தொல்லைப்
பழவினையை முதலரிய வல்லார்தாமே. (௩0)

அடிவரவு:—மின் பார திருவடிவில இந்திரற்கும் ஒண்மிதி அலம் வற்பு நீரகம் கை கதத்தால் பொன் படங் நெஞ்சு கல் முளை கல்லுயர்ந்த சென்று பொங்கு கார் முற்று தேமருவு மை கைவளம் உள்ளூ- ரும் இருகை மின் தேமருவு செங்கால தென்னிலங்கை அன் றாயர் மின்னுமா வையம்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

திருநெடுந்தாண்டகம் ஸம்பூர்ணம்.

பெரியதிருமொழி	பாசுரம்	—க0அச
திருக்குறுந்தாண்டகம்	,,	உ0.
திருநெடுந்தாண்டகம்	,,	௩0.

ஆக, பாசுரம் – ககஙச.

பெரியதிருமொழிச் செய்யுளகராதி.

அ	பக்கம்.
அகில்குறடும்சந்தனமும	௧௨௪
அக்கும்புலியினதளும்	௧௭௨
அங்கண்ஞாலமஞ்ச	௨௪
அங்கவ்வானவாக்காகுலம்	௧௮௫
அங்கையாலடிமூன்று	௭௬
அங்கோராய்க்குலத்துள்	௧௯௯
அங்கோராளரியாய்	௧௯௯
அங்ஙனந்தீமைகள்	௧௯௪
அச்சந்தினைத்தனையில்லை	௧௬௩
அஞ்சுவன்சொல்லியழைத்திட	௧௯௪
அஞ்சுவன்வெஞ்சொல்	௬௪
அடித்தலமும்தாமரையே	௧௪௮
அடுத்தார்த்தெழுந்தாள்	௨௦
அணியார்பொழில்சூழ்	௨௧௧
அண்டத்தின்முகடழுந்த	௨௦௮
அண்டமுமிவ்வலைகட**அமுது	௯௯
அண்டமுமிவ்வலைகட**குலவ	௭௪
அண்டமுமெண்டிசையும்	௪௮
அண்டரானவானவர்	௭௫
அண்டர்கோனென்னானை	௮௭
அண்ணல்செய்தலைகடல்	௧௧௦
அத்தாவரியேயென்று	௧௨௮
அந்தகன்சிறுவன்	௩௪
அம்பரமனல்கால்நிலம்	௨௬
அம்பரமும்பெருநிலனும்	௧௧௮
அம்புருவவரிநெடுங்கண்	௧௩௩
அம்பொனருலகமேழும்	௧௦௮
அரக்கராவிமாளஅன்று	௮௭
அரக்கியராகம்புல்லென	௧௯௭
அரவுநீள்கொடியோன்	௧௬௪
அரிவிரவுமுகிற்கணத்தால்	௧௫௦
அருமாநிலமன்றளப்பான்	௫௫
அருவிசோரவேங்கடம்	௧௪௯
அலங்கெழுதடக்கை	௪௪
அலமன்னுமடல்	௩௬
அலமுமாழிப்படையும்	௧௬௯
அலம்புரிந்தநெடுந்தடக்கை	௨௧௬
அலைத்தபேழ்வாய்	௨௪
அல்லிக்கமலக்கண்ணனை	௧௯௬
அல்லிமாதரமருக்	௯௮
அறியாதார்க்கானாயகின	௨௦௬
அறியோமேயென்று	௨௦௧
அறிவதரியானனைத்துலகும்	௯௨
அன்றாயர்குலக்கொடியோடு	௩௯
அன்றாயர்குலமகளுக்கு	௨௨௨
அன்றியவாணனாயிரம்	௭௮
அன்றுபாரதத்தைவர்	௧௯௯
அன்றுலகமூன்றினையுமளந்	௧௧௯
அன்னநடைமடவாய்ச்சி	௧௯௪
அன்னமன்னுபைம்பூம	௧௪௦
அன்னமுமீகேழலும்	௧௬௭
அன்னமுமீனுமாமையும்	௪௫
அன்னேயிவரையறிவன்	௨௦௧
அன்னைமுனிவதும்	௨௦௦
அன்னையுமத்தனும்	௬௫

ஆ	
ஆங்குமாவலிவேள்வி**மளந்து	௫௩
ஆங்குமாவலிவேள்**முழுதினை	௯௯
ஆங்குவெந்நரகத்தழுந்தும்	௧௩௧
ஆசைவழுவாதேத்தும்	௮௯
ஆடியசைந்தாய்மடவாரொடு	௧௯௫
ஆநிரைமேய்த்தன்று	௯௦
ஆமருவிநிரைமேய்த்த	௧௦௧
ஆமையாகியரியாகி	௧௫௫
ஆயன்மாயமேயன்றி	௧௫௩
ஆயிரங்கண்ணுடை	௧௯௩
ஆயிரம்குன்றமசென்று	௧௦௩
ஆய்ச்சியரழைப்ப	௯௦
ஆமலியாழிசங்கொடுபற்றி	௧௯௯
ஆலுமாவலவன்கலிகன்றி	௧௮௧
ஆவர்இவைசெய்தறிவார்	௫௭
ஆவியேயமுதேயென	௧௧
ஆவியையரங்கமாலை	௨௧௩
ஆழியந்திண்டேர்	௧௯௭
ஆழியுஞ்சங்குமுடைய	௨௦௦
ஆழ்கடல்சூழ்வையகத்தார	௨௦௯
ஆளும்பணியுமடியேனை	௧௨௧
ஆறாதசினத்தின்மிகு	௭௦
ஆறினொடொருநான்குடை	௯௯
ஆறும்பிறையும்	௧௨௨
ஆனையருமாநிரையும்	௧௧௫
ஆனைப்புரவிதேரொடு	௧௧௭

இ	பக்கம்.
இங்கேபோதுங்கொலோ	கக௮
இடும்பையாலடர்ப்புண்டு	உஉ
இணைமலிமருதிறுடு	க௫௬
இண்டைகொண்டு	௯௯
இண்டையாயின	௯௦
இண்டையும்புனலும்	க௭௫
இந்திரற்கும்பிரமற்கும்	உக௬
இந்திரனுக்கென்று	௩௪
இந்திரனுமிமையவரும்	௭௪
இந்திரன்பிரமனீசன்	க௦உ
இந்துவார்சடையீசனை	௭௬
இம்மையிடர்கெடவேண்டி	க௮௮
இம்மையைமறுமைதன்னை	உக௯
இரக்கமின்றியெங்கோன	க௮உ
இரவுகூர்ந்திருள்	க௫
இருகையிற்சங்கிவைநில்லா	உஉக
இருங்கைம்மாகரிமுனிந்து	௫க
இருநிலமன்னர்தம்மை	உ௦௪
இருந்தண்மாநிலம்	௫உ
இருந்தானென்னுள்ளத்து	உ௦க
இரும்பனன்றுண்ட-போல்	உ௪உ
இரும்பனன்றுண்ட-ம்	உக௯
இலங்கியநீண்முடி	௪௮
இலங்குமுத்தும்	க௬௯
இலங்கைப்பதிக்கன்று	உ௮
இலங்கையுங்கடலும்	க௭
இலைமலிபள்ளியெய்தி	உ௦௪
இலையார்மலர்ப்பூம்பொய்கை	க௫௫
இழையாடுகொங்கை	௬௬
இளைப்பினையியக்கம்நீக்கி	உக௪
இற்பிறப்பறியீர்	கஉ
இனியெப்பாவம்	க௯உ
இன்துணைப்பதுமத்தலா	௩௪
இன்றுறென்றறியேன்	கக௮
ஈ	
ஈசிபோமினீங்கிரேன்மின்	க௬
ஈடும்வலியுமுடைய	கக௩
உ	
உடம்புருவில்மூன்றொன்றாய்	௩௯
உடையானையொலிநீருலகங்க	க௩௬
உணரிலுள்ளம்சுமொல்	க௬௮
உண்டாயுறிமேல்நறுநெய்	உ௯
உண்டலகேழினையும்	க௭௮
உண்ணாதுவெங்கூற்றம்	க௩௪
உண்ணும்நாளில்லை	க௪௯
உந்தமடிகள்முனிவர்	க௮௮
உந்திமேல்நான்முகனை	க௭

உ	பக்கம்.
உம்பருமிவ்வேழுலகும்	௭க
உம்பருலகேழுகடலேழு	க௦௯
உம்பருலகோடுயிரெல்லாம்	கஉ௩
உய்யும்வகையுண்டு	க௦௯
உரங்களாலியன்ற	க௩க
உரந்தருமெல்லணை	௪௭
உருகிநெஞ்சேநினைந்து	க௬௮
உருக்குறுநறுநெய்	ககக
உருத்தெழுவாலி	௮௪
உருவார்பிறவிக்கள்	உக௦
உருவினார்பிறவிசேர்	க௭௪
உலகமேத்துமொருவன்	௮௮
உலவுதிரைக்கடல்	௬உ
உலவுதிரையுங்குலவரையும்	உ௦
உளங்கனிந்திருக்கும்	௪௪
உளைந்தவரியும்மானிடமும்	க௫௮
உளைந்திட்டெழுந்த	க௯௦
உளையவொண்திறல்	௭௯
உள்ளமோவொன்றில்நில்லா	உக௯
உள்ளூரும்சிந்தைநோய்	உஉக
உரங்களாலியன்ற	க௦௦
உறவாதுமிலனென்று	௯௯
உறவுசுற்றமென்றொன்றி	௩௦
உறிகள்போல்மெய்ந்நரம்பு	க௫
உறியார்ந்தநறுவெண்ணெய்	௫க
உறியார்வெண்ணெயுண்டு	கக௭
ஊ	
ஊடேறுகஞ்சனொடு	க௪உ
ஊரான்குடந்தையுத்தமன்	உ௦
ஊழியாயோமத்துச்சியாய்	க௦௯
ஊழியிற்பெரிதால்நாழிகை	௪௩
ஊனமர்தலையொன்றேந்தி	க௦௭
ஊனிடைச்சுவர்வைத்து	உ௩
ஊனேராக்கைதன்னை	க௯௦
ஊன்வாடவுண்ணாது	௫௪
எ	
எங்களுக்கருள்செய்கின்ற	க௪௫
எங்களெம்மிறையெம்பிரான்	க௭௯
எங்கள்கதியே	க௦
எங்கானுமீதொப்பதோர்	க௯௦
எங்ஙனுநாமிவர்	௪௬
எங்ஙனேயுய்வர்தானவர்	க௦உ
எஞ்சவிலங்கைக்கிறை	க௮௯
எஞ்சாவெந்நரகத்து	க௯௦
எட்டனைப்பொழுதாகிலும்	க௩௦
எண்டிசைகளுமேழுலகமு	உக
எண்டிசையுமெறிநீர்	கக௭

எ	பக்கம்.
எண்ணில்நினைவெய்தி	க௦க
எந்தாதைதாதை	கஉக
எந்தைதந்தைதம்மான்	அகூ
எப்பாவம்பலவுமிவையே	உஎ
எப்போதும்பொன்மலரிட்டு	கந௦
எம்பிரானெந்தை	கஉ
எம்பிரானேயென்னையாள்	கஅரு
எம்மானுமெம்மனையும்	கஉக
எய்த்தசொல்லோடு	கசு
எய்யச்சிதைந்தது	ருஎ
எரிந்தபைங்கணிலங்குபேழ்	உச
எல்லியுமநன்பகலும்	கஎக
எவ்வநோய்தவிர்ப்பான்	கஅ௦
எவ்வம்வெவ்வேல்	உசு
என்கினெஞ்சேநினைந்து	கசுஅ
என்செய்கேன்அடியேன்	கநஉ
என்துணையென்றெடுத்	சுரு
என்னைம்புலனும்	கசுரு
ஏ	
ஏடிலங்குதாமரைபோல்	கநரு
ஏடொத்தேந்தும்நீளிலைவே	கஅசு
ஏதம்வந்தணுகாவண்ணம்	உந
ஏதலர்நகைசெயஇளையவர்	கருஎ
ஏதவன்தொல்பிறப்பு	சுச
ஏதுசெய்தால்மறக்கேன்	கசுஅ
ஏத்தியுன்சேவடி	கசுக
ஏத்துகின்றோம்நாத்தழும்ப	கஅரு
ஏய்ந்தபேழ்வாய்	உச
ஏரார்பொழில்சூழ்	அக
ஏரார்மலரெல்லாம்	கருஉ
ஏவிளங்கன்னிக்காகி	அரு
ஏவினார்கலியார்நலிக	உந
ஏழுமாமரந்துளைபட	கருச
ஏழுலகும்தாழ்வரையும்	அக
ஏழையேதலன்கீழ்மகன்	க௦ச
ஏறுமேறியிலங்கு	கஅ௦
ஏற்றினையிமயத்துளெம்மீசனை	கசரு
ஏனத்தினுருவாகிநிலமங்கை	சக
ஏனமீனாமையோடு	கூஅ
ஏனமுனாகியிருநிலமிடந்து	கஎ
ஏனாகியுலகிடந்து	க௦௦
ஏனோரஞ்சவெஞ்சமத்துள்	உ௦
ஒ	
ஒண்மிதியிற்புனலுருவி	உகசு
ஒருகுறளாயிருநிலம்	ருஅ
ஒருநல்சுற்றம்	கஅக
ஒருவனையுந்திப்பூமேல்	கூ௦எ

ஒ	பக்கம்.
ஒளியாவெண்ணெய்	கஉக
ஒள்ளியகருமம்	கக
ஒற்றைக்குழையும்	கருக
ஓ	
ஓடாதவாளரியினுருவமது	எஉ
ஓடாதவாளரியினுருவாகி	எச
ஓடாவரியாயிரணியனை	கஉந
ஓடாவாளரியினுருவாய்மரு	கஉக
ஓதமாகடலைக்கடந்தேறி	கஅச
ஓதிநாமங்குளித்து	கசுக
ஓதியாயிரநாமங்கள்	கரு
ஓதியாயிரநாமமும்	சுஉ
ஓதிலுமுன்பேரன்றி	சச
ஓதுவாய்மையும்	க௦க
க	
கஞ்சனைக்காய்ந்தானை	கநசு
கஞ்சன்நெஞ்சும்	கஅ
கஞ்சன்விட்டவெஞ்சினத்த	அஎ
கடஞ்சூழ்கரியும்பரிமாவும்	உ௦
கடிகமழுநெடுமறுகில்	சஉ
கடிகொள்பூம்பொழில்	க௦ரு
கடுங்கால்மாரி	கஉசு
கடுவிடமுடையகாளியன்	கூ௦
கட்டேறுநீள்சோலை	கஉந
கணமருவுமயிலகவு	கருக
கண்சோரவெங்குருதி	கநந
கண்டசீர்க்கண்ணபுரம்	கசுஉ
கண்டவர்தம்மனம்மகிழ	எஉ
கண்டாரிரங்கக்கழியக்குறள்	உ சு
கண்ணமங்கையுள்	கசஎ
கண்ணனூர்கண்ணபுரம்	கசக
கண்ணனென்றும்	அஅ
கண்ணன்மனத்துள்ளே	உ௦உ
கண்ணாயேழுலகுக்கு	உஅ
கண்ணார்கடல்சூழ்	உஅ
கண்ணார்கடல்போல்	அரு
கண்ணார்கண்ணபுரம்	கசு௦
கண்ணும்சுழன்று	கசரு
கதியேலில்லை	கஉஅ
கந்தமாமலரெட்டுமிட்டு	சுஉ
கம்பமாகடலடைத்து	எரு
கம்பமாகளிறு	கஅஉ
கயங்கொள்புண்தலை	கருச
கரியமாமுகிற்படலங்கள்	கரு
கருந்தண்கடலும்	சுரு
கருமகளிலங்கையாட்டி	அசு
கருமணிபூண்டு	கஎக

க	பக்கம்.
கருமாமுகிலுருவா	௧௪௪
கருமாமுகில்தோய்	௧௫௯
கருமுகில்போல்வதோர்	௫௮
கருளக்கொடியொன்றுடையீர்	௧௯௫
கரைசெய்மாக்கடல்	௧௪
கரையாய்காக்கைப்பிள்ளாய்	௧௯௭
கரையெடுத்தசுரிசங்கும்	௧௦௦
கலங்கமாக்கடலரிகுலம்	௧௪
கலங்கமாக்கடல்கடைந்து	௧௫௪
கலங்கமுந்நீர்கடைந்தமுதம்	௧௧௭
கலயாமிகலி	௧)
கலைகளும்வேதமும்	௪௬
கலையாளாவகலல்குல்	௯௯
கலையிலங்குமகலல்குலரக்	௬௯
கலையிலங்குமகலல்குல்கம	௮௦
கலையுங்கரியும்பரிமாவும்	௧௯
கலையுடுத்தவகலல்குல்	௯௮
கலையுலாவல்குல்	௧௬௪
கலைவாழ்பிணையோடு	௯௫
கல்லார்சூழ்மதிள்கச்சி	௧௨௬
கல்லார்மதிள்சூழ்கடி	௧௨௩
கல்லாற்கடலை	௮௬
கல்லாவைம்புலன்கள்	௧௧௩
கல்லின்முந்நீர்மாற்றிவந்து	௧௮௧
கல்லுயர்ந்தநெடுமதிள்	௨௧௮
கல்லெடுத்துக்கல்மாரி	௨௧௮
கவளமாகதத்தகரி	௧௬௨
கவளயானைக்கொம்பு	௮௭
கவளயானைபாய்	௧௮௬
கவ்வைக்களிற்றுமன்னர்	௧௭௩
கவ்வைவாளெயிற்று	௮௨
கழியாரும்கனசங்கம்	௧௨௪
	௭௯
கள்வனேனானேன்	௧௨
கள்வன்கொல்யானறியேன்	௬௪
கள்ளக்குழவியாய்	௧௮௧
கள்ளக்குறளாய்மாவலியை	௯௩
கள்ளத்தால்மாவலியை	௨௦௬
கள்ளத்தேன்பொய்யகத்தேன்	௧௩௪
கள்ளம்மனம்விள்ளும்	௧௪௩
கள்ளார்துழாயும்	௨௦௯
கறவாமடநாகு	௧௨௭
கறவைமுன்காத்து	௯௦
கறுத்துக்கஞ்சனை	௧௩௯
கறையார்நெடுவேல்	௯௧
கறைவளர்வேற்கரன்முதலா	௫௧
கற்றுமறித்து	௯௩
கற்றூர்பற்றறுக்கும்	௧௯௦
கற்றிலேன்கலைகள்	௧௯
கனஞ்செய்மாமதிள்	௧௫௪
கனிசேர்ந்திலங்கு	௧௧௧
கனையாரிடிகுரலின்	௧௭௦
கனையார்கடலும்	௨௦௯
கன்றதனால்விளவு	௭௯
கன்றப்பறைகறங்க	௨௦௯
கன்றுகொண்டுவிளங்கனி	௧௮௦
கன்றுமேய்த்தினிதுகந்த	௨௧௯
கா	
காசையாடைமூடியோடி	௯௧
காண்டாவனமென்பதோர்	௯௬
காதல்செய்திளையவர்	௧௧௧
காதிற்கடிப்பிட்டு	௧௯௪
காமற்கென்கடவேன்	௧௯௮
காமன்கணைக்கோர்	௨௦௧
காமன்தனக்குமுறை	௨௦௦
காயோடுநீடுகனியுண்டு	௫௪
காரார்ந்ததிருமேனி	௭௫
காரார்புயற்கைக்கலிகன்றி	௧௮௧
காரும்வார்பனிக்கடலும்	௧௯௮
கார்கெழுகடல்களும்	௧௧௧
கார்கொள்வேங்கைகள்	௧௪
கார்மலிகண்ணபுரத்து	௧௫௦
கார்மன்னுநீள்விசும்பும்	௪௭
கார்வண்ணம்திருமேனி	௨௧௯
காலையும்மாலையொத்துண்டு	௧௭௧
காலையெழுந்துகடைந்த	௧௯௯
காவலனிலங்கைக்கிறை	௧௮௦
காவார்மடற்பெண்ணை	௧௬௮
காவிப்பெருநீர்வண்ணன்	௧௫
காவியங்கண்ணியெண்ணில்	௧௫
காவியைவென்றகண்ணார்	௨௧௯
காற்றிடைப்பூளை	௯௧
காற்றினைப்புனலை	௨௧௨
கானஎண்குங்குரங்கும்	௧௨௯
கானார்கரிகொம்ப	௮௯
கானிடையுருவைச்சுடுசரம்	௧௭
கி	
கிடந்தநம்பிகுடந்தைமேவி	௧௨௫
கிடந்தானைத்தடங்கடலுள்	௨௦
கு	
குடிகுடியாகக்கூடிநின்றமரர்	௯௨
குடைத்திறல்மன்னவன்	௪௯
குடையாவரையால்	௧௨௮
குடையாவிலங்கல்	௯௧

கு	பக்கம்.
கும்பமிகுமதயானை	௭௫
கும்பமிகுமதவேழம்	௧௪௨
குயிலாலும்வளர்பொழில்சூழ்	௧௬
குலத்தலையமதவேழம்	௧௪௧
குலந்தருஞ்செல்வம்	௧௬
குலந்தானெத்தனையும்	௨௭
குலையார்ந்தபழுக்காயும்	௧௨௫
குழல்நிறவண்ணநின்கூறு	௧௧0
குன்றமும்வானும்	௮௬
குன்றமெடுத்தாநிரை	௨௧௧
குன்றமெடுத்துமழைதடுத்து	௨00
குன்றமொன்றெடுத்து	௧௯௮
குன்றால்குளிர்மாரிதடுத்து	௮௫
குன்றால்மாரிதடுத்தவனை	௧௬௯
குன்றால்மாரிபழுதாக்கி	௧௫௯
குன்றொன்றுமத்தாவரவம்	௧௯0
கூ	
கூடாவிரணியனை	௨0௯
கூடியாடியுரைத்ததே	௩௧
கூந்தலார்மகிழ்கோவலனாய்	௧௮௨
கூவாய்பூங்குயிலே	௧௯௮
கூற்றேருருவிற்குறளாட்	௯௪
கூனுலாவியமடந்தை	௫௩
கெ	
கெண்டையுங்குறளும்	௮௬
கெண்டையொண்கணும்	௧௯௯
கே	
கேட்கயானுற்றதுண்டு	௨௧௨
கேவலமன்றுகடலின்னோசை	௧௭௨
கேவலமன்றுன்வயிறு	௧௮௯
கை	
கைம்மானமதயானை	௧௫௯
கைம்மானமழகளிற்றை	௧00
கையிலங்காழிசங்கன்	௧0௭
கொ	
கொங்கலர்ந்தமலர்க்குருந்தம்	௨௫
கொங்கார்குழலார்	௧௧௫
கொங்குண்குழலார்	௧௧௫
கொங்குண்வண்டே	௧௪௮
கொங்குமலிகருங்குவளை	௧௫௧
கொட்டாய்பல்லிக்குட்டி	௧௯௮
கொண்டரவத்திரை	௯௩
கொண்டல்மாருதங்கள்	௧௯
கொந்தலர்ந்தநறுந்துழாய்	௫0
கொந்தார்துளவமலர்	௮௫
கொம்புமரவமும்	௧௧௯
கொலைகெழுசெம்முகத்த	௨0௫

கொ	பக்கம்.
கொலைப்புண்தலை	௯௯
கொல்லையானாள்	௮௭
கொழுங்கயலாய்நெடுவெள்	௧௧௮
கொழுந்தலருமலர்ச்சோலை	௫0
கொள்ளக்குறையாத	௨௧0
கொற்றப்புள்ளொன்றேறி	௧௪௮
கொன்றேன்பல்லுயிரை	௨௭
கோ	
கோடியமனத்தால்	௨௨
கோதைவேல்ஐவர்க்காய்	௨0௯
கோமங்கவங்கக்கடல்	௫௫
கோலால்நிரைமேய்த்து	௮௯
கோவாயைவரென்மெய்	௧௬௯
கோவானார்மடிய	௧௬௯
கோவையின்தமிழ்	௧௮0
கோழிகூவென்னுமால்	௧௯௮
கோழியுங்கூடலும்	௧௯௯
ச	
சங்குதங்குதடங்கடல்	௯௨
சங்குமலிதண்டுமுதல்	௭0
சங்குமாமையும்	௧௯௯
சங்கையுந்துணிவும்	௮௬
சந்தமலர்க்குழல்தாழ	௧௮௭
சந்தமாய்ச்சமயமாகி	௮௫
சலங்கொண்டவிரணியன	௯௮
சா	
சாடுபோய்விழ	௭௯
சாதலும்பிறத்தலும்	௧௧௧
சாந்தமும்பூணும்	௪௬
சாந்தேந்துமென்முலை	௧௧௪
சி	
சிங்கமதாயவுணன்சங்க	௧௬௯
சிங்கமதாயவுணன்பங்	௧௭௮
சித்திரமும்செவ்வைநில்லாது	௨௧௩
சிந்தனையைத்தவநெறியை	௧0௧
சிந்தைதன்னுள்நீங்கா	௮௮
சிரமுனைந்துமைந்தும்	௧௭௬
சிலம்படியுருவில்	௬௧
சிலம்பினிடை	௮௧
சிலம்புமுதற்கலன்	௧௪௧
சிலையாலிலங்கை	௧௭௬
சிலையிலங்குபொன்னாழி	௧௪௭
சிறியாயோர்பிள்ளை	௧௨௯
சிறையாருவணப்புள்	௯௯
சினமேவுமடலரியின்	௧௪0
சினவிற்செங்கணரக்கர்	௧௯0

சீ	பக்கம்.
சீரணிந்தமணிமாடம்	௮௨
சீரார்நெடுமறுகில்	௧௪௪
சீரார்பொழில்சூழ்ந்து	௫௬
சீர்தழைத்தகதிர்	௧௨௫
சீற்றமுளவாகிலும்	௨௧௦
சு	
சுடலையில்சுடுநீறன்	௧௮௧
சுரிகுழற்கனிவாய்	௧௦௩
சுரிந்திட்டசெங்கேழ்	௧௯௨
சுழன்றிலங்குவெங்கதிரோன்	௧௭௦
சுளைகொண்டபலங்கனி	௧௨௪
சுற்றுங்குழல்தாழ	௧௯௫
சூ	
சூதினைப்பெருக்கி	௨௧
சூர்மையிலாயபேய்முலை	௧௭௬
செ	
செங்கணாளியிட்டிறைஞ்சும்	௨௫
செங்கணெடியகரியமேனி	௧௭௧
செங்கமலத்தயனனைய	௬௦
செங்கமலத்திருமகளும்	௧௪௦
செங்கயல்திளைக்குஞ்சுனை	௨௬
செங்காலமடநாராய்	௨௨௨
செம்பொனிலங்கு	௪௬
செம்பொன்நீண்முடி	௧௮௩
செம்பொன்மதிள்சூழ்	௧௩௫
செம்மொழிவாய்	௧௨௦
செருநீரவேல்வலவன்	௧௬௦
செருநீலவேற்கண்	௫௬
செருமிகுவாளெயிற்ற	௨௦௩
செருவரைமுன்னாசறுத்த	௧௪௭
செருவழியாதமன்னர்கள்	௧௯௬
செவ்வரத்தவுடையாடை	௧௪௮
செழுநீர்மலர்க்கமலம்	௪௨
செறுந்திண்திமிலேறுடைய	௯௪
செற்றவன்தென்னிலங்கை	௧௭௨
சென்றுசினவிடையேழும்	௭௩
சென்றுவார்சிலைவளைத்து	௧௯௯
சே	
சேமமேவேண்டி	௧௧
சேயனணியனசிந்தை	௨௯
சேயனணியன்சிறியன்	௩௧
சேயனென்றும்மிக	௯௮
சேயோங்குதண்	௧௪௪
சேலுகளும்வயல்	௧௦௦
சொ	
சொல்லாதொழியகில்லேன்	௮௯
சொல்லாய்திருமார்வா	௧௧௫

சொ	பக்கம்.
சொல்லாய்பைங்கிளியே	௧௯௮
சொல்லுவன்சொற்பொருள்	௪௭
சோ	
சோத்தநம்பியென்று	௩௨
சோத்தெனநின்று	௧௭௨
சோத்தெனநின்னை	௧௮௯
ஞா	
ஞாலமாளுமுங்கள்	௧௮௫
ஞாலமுற்றுமுண்டு	௮௭
ஞாலமெல்லாமமுது	௭௪
த	
தக்கன்வேள்விதகர்த்த	௯௫
தஞ்சமிவர்க்கென்	௪௬
தஞ்சினத்தைத்தவிர்த்து	௧௦௯
தண்டகாரணியம்புகுந்து	௪௮௩
தந்தைகாலில்பெருவிலங்கு	௪௩௪
தந்தைகாலில்விலங்கற	௧௫௩
தந்தைதளைகழல	௨௦௯
தந்தைதாய்மக்களே	௧௭௪
தந்தைபுகுந்திலன்	௧௯௩
தந்தைமனமுந்துதுயர்	௧௦௯
தம்பரமல்லன	௧௯௪
தம்பியொடுதாமொருவர்	௧௦௯
தம்மையேநாளும்	௨௦௨
தாங்கநீர்பேசினும்	௧௪௯
தருக்கினுற்சமண்செய்து	௩௧
தருமானமழைமுகிலே	௧௫௯
தவளவிளம்பிறை	௧௭௧
தளர்ந்திட்டிமையோர்	௧௯௦
தளைக்கட்டவிழ்தாமரை	௯௭
தளையவிழ்கோதை	௨௦௯
தன்குடிக்கேதும்	௪௪
தன்மகனாகவன்பேய்ச்சி	௧௮௭
தன்னுலேதன்னுருவம்	௧௧௯
தன்னைநைவிக்கிலேன்	௧௬௮
தா	
தாங்கருஞ்சினத்து	௮௯
தாங்கரும்போர்மாலி	௫௦
தாங்காததொராளரியாய்	௩௯
தாதவிழ்மல்லிகை	௧௭௧
தாதாடுவனமாலை	௯௯
தாந்தம்பெருமை	௪௪
தாமத்துளபநீண்முடி	௧௧௮
தாமோருருட்டி	௧௮௯
தாயர்மனங்கள்தடிப்ப	௧௮௮
தாயாய்வந்தபேய்	௨௦
தாயெனையென்று	௯௪

தா	பக்கம்.
தாயேதந்தையென்றும்	௨௭
தாய்நினைத்தகன்றே	௧௫0
தாய்மனம்நின்று	௯௫
தாய்வாயிற்சொற்கேளான்	௯௯
தாராயதண்துளப வால்	௧௪௮
தாராயதண்துளவ பன்	௯௯
தாரார்மலர்க்கமலத்	௧௧௫
தாராவாரும்வயல்சூழ்ந்த	௨௧
தாராளன்தண்ணரங்க	௧௨0
தாரேன்பிறர்க்கு	௧௨௭
தாவளந்துலகமுற்றும்	௮௪
தாழ்மின்றிமுந்நீரை	௧௮௪
தானவன்வேள்வி	௧௭௮
தானுகநினையானேல்	௯௯
தான்போலுமென்று	௮௧
தி	
திங்களப்புவானெரிகால்	௯௨
திங்கள்தோய்மாட	௮௯
திடவிசும்பெரிநீர்	௭௭
திண்கனகமதிள்புடைசூழ்	௧௨௫
திண்டிமிலேற்றின்	௧௭௧
திண்ணியதோரரி	௯௮
திண்படைக்கோளரி	௬௮
திரிபுரமூன்றெரித்தானும்	௬௫
திருத்தனைத்திசைநான்முக	௧௬௯
திருத்தாய்செம்போத்தே	௧௯௭
திருமடந்தைமண்மடந்தை	௭௧
திருவடிவிற்கருநெடுமால்	௨௧௫
திருவாழ்மார்வன்தன்னை	௧௯௬
திருவிற்பொலிந்தவெழிலார்	௧௮௭
திருவுக்குந்திருவாகிய	௧௯௭
திவளும்வெண்மதிபோல்	௬௯
திறல்முருகனனையார்	௧௯௭
தீ	
தீதறுதிங்கள்பொங்குசுடர்	௨0௯
தீதறுநிலத்தொடெரிகாலி	௧0௮
தீர்வண்ணமாமலர்கொண்டு	௧௭௯
தீமனத்தரக்கர்திறல்	௭௮
தீமனத்தான்கஞ்சன்	௭௨
தீயெம்பெருமான்	௮௯
தீவாய்வல்வினையார்	௧௧௯
து	
துங்கமாமணிமாடநெடுமுக	௧௫0
துங்காரவத்திரைவந்து	௧௭௨
துடிகொள்நுண்ணிடை	௧௪
துணிவினியுனக்குச்சொல்லுவ	௧௭
துணைநிலைமற்றெமக்கு	௨0௫

து	பக்கம்
துப்பனைத்துரங்கம்பட	௧௪
துவராடையுடுத்து	௧௧
துவரிக்கனிவாய்	௧௫
துவரித்தவுடையவர்க்கும்	௧
துவரியாடையர்மட்டையர்	௯
துளக்கமில்சுடரை	௧௮
துளங்குநீண்முடி	௧0
துளம்படுமுறுவல்தோழியர்க்	௪௧
துளையார்கருமென்	௯௭
துறந்தேனார்வச்செற்ற	௧௧௪
துறப்பேனல்லேன்	௧௧௪
துன்றோளித்துகிற்படலம்	௧௨௪
துன்னிமண்ணும்	௯௯
துன்னுமாமணிமுடிமேல்	௧௪௭
தூ	
தூங்கார்பிறவிக்கள்	௨௧0
தூணையதனூடரியாய்	௨௯
தூம்புடைக்கைவேழம்	௧௭0
தூம்புடைத்திண்கை	௬௮
தூம்புடைப்பனைக்கை	௮௨
தூயாய்சுடர்மாமதிபோல்	௧௨௮
தூயானைத்தூயமறையானை	௨0௯
தூவடிவிற்பார்மகள்பூமங்கை	௫௨
தூவாயபுள்ளூர்ந்துவந்து	௧௨௯
தூவிரியமலருழக்கி	௯௨
தெ	
தெரியேன்பாலகனாய்	௨௭
தெருவில்திரிசிறுநோன்பியர்	௧௬௯
தெவ்வாயமறமன்னர்	௫௯
தெள்ளார்கடல்	௧௨௧
தெள்ளியவாய்ச்சிறி	௧௯௯
தெள்ளியீர்தேவர்க்கும்	௧௬௯
தென்னிலங்கையரண்சிதறி	௨௨௨
தே	
தேடற்கரியவனை	௧௭௧
தேமருவுபொழிலிடத்து	௨௨௧
தேமருவுபொழில்புடைசூழ்	௧௫௧
தேரணங்கல்குல்	௧௮
தேராளும்வாளரக்கன்தென்	௨௨0
தேவரையுமசுரரையும்	௨0௮
தேனமர்சோலைநாங்கை	௭௯
தேனமர்பூம்பொழில்	௫௮
தேனார்பூம்புறவில்	௧௧௯
தேனுகனுவிபோயுக	௧௭௭
தேனொடுவண்டாலும்	௨0௧
தை	
தையலாள்மேல்காதல்	௯௨

தொ — பக்கம்.

தொண்டருமமரரும் ௧௫௭
தொண்டர்பரவ ௯௪
தொண்டாமினமும் ௨௦
தொண்டாயார்தாம்பரவும் ௪௦
தொண்டீருய்யும்வகைகண் ௧௫௫
தொண்டீர்பாடுமினோ ௧௯௮
தொண்டெல்லாம்நின்னடியே ௧௫௦
தொண்டெல்லாம்பரவி ௨௧௩
தொழுநீர்வடிவில் ௧௫௮

தோ

தோடவிழ்நீலமணம் ௧௬௫
தோடுவிண்டலர்பூம் ௧௩௨
தோயாவின்தயிர்நெய் ௧௩௯
தோய்த்ததயிரும்நறுநெய்யும் ௧௯௩

ந

நஞ்சுசோர்வதோர் ௧௦௫
நண்ணாதவாளவுணர் ௬௧
நந்தன்மதலைநிலமங்கை ௧௫௩
நந்தாநரகத்தழுந்தாவகை ௨௧௧
நந்தாநெடுநரகத்து ௧௬௩
நந்தாவிளக்கேயளத்தற்கு ௬௫
நல்லன்புடைவேதியர் ௮௬
நல்லைநெஞ்சேநாம்தொழு ௨௫
நறைசெய்பொழில்மழை ௧௧௦
நன்மையுடையமறையோர் ௧௨௨
நன்னீர்வயல்புடைசூழ் ௧௩௦
நன்னெஞ்சேநம்பெருமான் ௨௦௨

நா

நாடியென்தனுள்ளம் ௮௭
நாட்டினாயென்னையுனக்கு ௧௬௨
நாத்தழும்பநான்முகனும் ௨௫
நாமம்பலவுமுடை ௧௯௫
நாராரிண்டைநாண்மலர் ௧௭௩
நால்வகைவேதம் ௧௦௮
நான்முகனுள்மிகைத் ௫௮

நி

௨௧௨
நிலவொடுவெயில் ௧௧௧
நிலையாளாகவென்னை ௧௩௭
நிலையாளாநின்வணங்க ௬௩
நிலையிடமெங்குமின்றி ௨௦௩
நில்லாதபெருவெள்ளம் ௨௦௭
நின்றமாமருதிற்றுவீழ ௨௫
நின்றவரையும் ௧௨௬
நின்றவினையும் ௧௭௩
நின்றார்முகப்புச்சிரித்தும் ௧௯௨

பக்கம்.

நீடுபன்மலர்மாலையிட்டு ௬௧
நீணகம்சுற்றிநெடுவரை ௨௦௮
நீணிலாமுற்றத்து ௬௬௧
நீண்டாயைவானவர் ௧௨௧
நீண்டான்குறளாய் ௧௯௧
நீரகத்தாய்நெடுவரையின் ௨௧௭
நீராழலாய்நெடுநிலனாய் ௧௦௦
நீரழல்வானாய்நெடுநிலம் ௧௯௭
நீரார்கடலும்நிலனும் ௨௮
நீர்மலிகின்றதோர்
நீர்வானம்மண்ணெரிகாலாய் ௬௩
நீலத்தடவரை ௬௧
நீலமலர்கள்நெடுநீர் ௧௫௩
நீள்வான்குறளுருவாய் ௨௦௯

நு

நும்மைத்தொழுதோம் ௮௮

நெ

நெஞ்சினால்நினைந்தும் ௨௨
நெஞ்சுக்கிருள்கடி ௧௦
நெஞ்சுருகிக்கண்பனிப்ப ௨௧௮
நெடியானேகடியார் ௧௯௯
நெடுமாலவன்மேவிய ௩௮
நெய்யாராழியும்சங்கமும் ௧௯௮
நெய்வாயழலம்புதுரந்து ௫௫
நெல்லிற்குவளைகண்காட்ட ௧௯௬
நெறித்திட்டமென்கூழை ௧௯௧
நெற்றிமேற்கண்ணானும் ௨௦௭
நென்னல்போய்வரும் ௬௧

நே

நேசமிலாதவர்க்கும் ௧௭௮

நை

நைவளமொன்றாராயா ௨௨௦

நோ

நோயெல்லாம்பெய்ததோர் ௧௭௪
நோற்றேன்பல்பிறவி ௨௮

ப

பகலுமிரவும்தானேயாய் ௧௯௫
பகுவாய்வன்பேய் ௧௧௭
பஞ்சிச்சிறுகூழை ௬௨
பஞ்சியமெல்லடிப்பின்னை ௫௯
படநாகத்தணைக்கிடந்து ௬௧
படலடைத்தசிறுகுரம்பை ௮௦
படவரவுச்சிதன்மேல் ௮௪
படிபுல்குமடியிணை ௧௫௭
படைத்திட்டதிவ்வையம் ௧௯௯
படைநின்றபைந்தாமரை ௨௧௧
பட்டரவேரகலல்குல் ௯௦

ப	பக்கம்.
பட்டுடுக்குமயர்த்திரங்கும்	௨௧௭
பணங்களாயிரமுடைய	௧௪
பண்டிவனுயன்நங்காய்	௬௪
பண்டிவன்வெண்ணெய்	௫௭
பண்டிவ்வையம்	௯௭
பண்டுகாமரானவாறும்	௧௬
பண்டுமுனேனமாகி	௯௨
பண்டேனமாயுலகை	௧௩௪
பண்டைநான்மறையும்	௧௦௧
பண்ணினின்மொழியாழ்	௧௩௨
பண்ணினைப்பண்ணில்	௧௪௬
பண்ணுலாமென்மொழி	௧௭௪
பண்ணேர்மொழியாய்ச்சி	௬௭
பத்தராவியைப்பான்மதி	௧௮௨
பத்துநீண்முடியும்	௧௮௩
பந்தணைந்தமெல்விரலாள்சீதை	௧௪௨
பந்தணைந்தமெல்விரலாள்பாவை	௩௨
பந்தார்மெல்விரல்	௧௩௮
பந்தார்விரலாள்	௧௨௨
பந்திருக்கும்மெல்விரலாள்	௩௨
பந்தோடுகழல்மருவாள்	௯௯
பப்பஅப்பர்மூத்தவாறு	௧௬
பரதனும்தம்பிசத்துருக்கனனு	௩௪
பரவிநெஞ்சேதொழுதும்	௧௬௮
பரனேபஞ்சவன்பௌழியன்	௧௩௮
பரிதியொடணிமதி	௧௫௭
பரியவிரணியனதாகம்	௧௭௦
பருங்கையானையின்	௭௬
பருவக்கருமுகிலொத்து	௫௭
பல்லவம்திகழ்	௭௫
பவ்வநீருடையாடை	௧௧௯
பழித்திட்டவின்பப்பயன்	௧௯௧
பள்ளியாவதுபாற்கடல்	௨௫
பள்ளியிலோதிவந்த	௩௫
பறையும்வினைதொழுது	௧௪௩
பற்றேலொன்றுமிலேன்	௨௮
பனிப்பரவைத்திரைததும்ப	௨௦௭
பனியேய்பரங்குன்றின்	௧௨௮
பன்றியாய்மீனுகி	௧௪௨
பன்னியபாரம்	௧௯௪
பா	
பாடோமேயெந்தைபெருமா	௨௦௨
பாண்டுதேன்வண்டு	௧௧௩
பாயிரும்பரவைதன்னுள்	௨௧௨
பாய்ந்தானைத்திரிசகடம்	௩௯
பாராயதுண்டுமிழ்ந்த	௩௮
பாராரளவும்முதுமுந்நீர்	௧௫௮

பா	பக்கம்.
பாராருமகாணும்ம	௨௦௭
பாராருலகும்பனிமால்வரை	௩௭
பாரித்தெழுந்தபடைமன்னர்	௧௩௫
பாரினையுண்டு	௩௧
பாருநீரெரிகாற்றினேடு	௨௬
பாருருவிநீரெரிகால்	௨௧௫
பாருள்நல்லமறையோர்	௮௮
பாரொழுகடலெழுமலையெழு	௧௧௧
பாரேறுபெரும்பாரந்தீரப்	௫௧
பாரையூரும்பாரம்	௧௧௮
பார்த்தற்காயன்றுபாரதம்	௨௬
பார்த்தனுக்கன்று	௧௭௯
பார்மன்னர்மங்கப்படை	௨௦௯
பார்மன்னுதொல்புகழ்	௪௯
பார்வண்ணமடமங்கை	௪௧
பாலனுகிஞாலமேழுமுண்டு	௩௨
பாவமும்அறமும்வீடும்	௮௩
பாவியாதுசெய்தாயென்னெஞ்ச	௩௦
பி	
பிச்சச்சிறுபீலிச்சமண்குண்டர்	௪௨
பிச்சச்சிறுபீலிபிடித்து	௩௭
பிணங்களிடுகாடதனுள்	௪௨
பிணியவிழுநறுநீல	௬௩
பிணியவிழ்தாமரை	௧௬௬
பிணிவளராக்கை	௧௭௬
பிண்டியார்மண்டையேந்தி	௨௧௪
பிள்ளைகள்செய்வனசெய்யா	௧௮௭
பிள்ளையுருவாய்த்தயிருண்டு	௯௪
பிறப்பொடுமூப்பொன்றில்ல	௭௭
பிறிந்தேன்பெற்றமக்கள்	௧௧௨
பிறைசேர்நுதலார்	௧௧௬
பிறைதங்குசடையானை	௬௦
பிறையினொளியெயிறிலக	௧௦௯
பிறையுடைவாணுதல்	௪௯
பீ	
பீளைசோரக்கண்ணிடுங்கி	௧௬
பு	
புகராருருவாகிமுனிந்தவனை	௩௭
புக்காடரவம்பிடித்தாட்டும்	௧௧௫
புதமிகுவிசும்பிற்புணரி	௧௭௭
புந்தியில்சமணர்	௧௭௭
புயலுறுவரைமழை	௧௫௬
புரங்கள்மூன்றும்	௧௮௪
புலங்கொள்நிதிக்குவையோடு	௪௨
புலமனுமலர்மிசை	௧௫௭
புலன்கள்நையமெய்யில்	௧௬
புல்லிவண்டறையும்	௧௨

பு	பக்கம்.
புள்வாய்பிளந்தபுனிதா	௧௨௭
புள்ளாயேனமுமாய்	௧௨௯
புள்ளினைவாய்பிளந்துபூங்	௧௮௯
புள்ளினைவாய்பிளந்துபொரு	௧௭௯
புள்ளுருவாகிநள்ளிருள்வந்த	௧௧௬
புனைவளர்பூம்பொழிலார்	௧௭௮
பூ	
பூங்குருந்தொசித்தானைகாய்ந்	௨௦௧
பூங்குருந்தொசித்து—அடியே	௧௮௦
பூங்கோதையாய்ச்சி	௧௮௮
பூணாதனலும்தறுகண்வேழம்	௧௨௬
பூணுலாமென்முலை	௧௭௪
பூண்டவத்தம்பிறர்க்கடைந்து	௯௧
பூண்முலைமேல்	௯௧
பூமருபொழிலணி	௧௧௨
பூமாண்சேர்கருங்குழல்	௧௯௪
பூவார்திருமாமகள்	௮௬
பூவைவண்ணனார்	௧௧௧
பெ	
பெடையடர்த்தமடவன்னம்	௧௨௪
பெண்ணாகியின்னமுதம்	௪௦
பெண்ணானாள்பேரிளம்	௧௬௧
பெண்மைமிகுவடிவுகொடு	௬௯
பெரியானையமரர்தலைவற்கும்	௧௯௭
பெருகுகாதலடியேன்	௯௫
பெருநீரும்விண்ணும்	௧௬௧
பெரும்புறக்கடலை	௧௪௪
பெற்றத்தலைவனெங்கோமான்	௧௮௮
பெற்றமாளியை	௧௮௨
பெற்றாராயிரம்பேரானை	௨௦௨
பெற்றாரும்சுற்றமும்	௧௬௧
பெற்றார்தளைகழலப்பேர்ந்து	௧௮௯
பெற்றார்பெற்றொழிந்தார்	௧௬௦
பே	
பேசினார்பிறவிநீத்தார்	௨௧௪
பேசுகின்றதிதுவே	௮௮
பேசுமளவன்றிது	௯௮
பேசுமின்திருநாமம்	௨௯
பேணாதவலியரக்கர்மெலிய	௪௦
பேயிடைக்கிருந்துவந்த	௧௮
பேயிருக்குநெடுவெள்ளம்	௨௦௮
பேயினார்முலையூண்	௧௦௯
பேய்த்தாயைமுலையுண்ட	௯௧
பேய்மகள்கொங்கைநஞ்சு	௫௭
பேய்முலைத்தலைநஞ்சுண்ட	௧௪௫
பேரணிந்துலகத்தவர்	௭௭
பேராயிரமுடையபேராளன்	௧௪௮
பேரானைக்குடந்தை	௧௯௭
பேரானைக்குறுங்குடி	௧௦௦

பை	பக்கம்.
பைங்கணாளரியுருவாய்	௧௧௧
பைங்கண்விறல்	௫௧
பைங்கண்விறற்செம்முகத்து	௫௧
பைவிரியும்வரியரவில்	௧௯௪
பொ	
பொங்கார்மென்னிளங்கொங்	௨௧௧
பொங்கியமரிலொருகால்	௫௮
பொங்கிலங்குபுரிநூலும்	௮௧
பொங்குபுணரிக்கடல்	௧௨௬
பொங்குநீண்முடியமரர்	௯௧
பொங்குபோதியும்	௯௦
பொங்கேறுநீள்சோதி	௧௨௫
பொய்வண்ணம்மனத்தக	௧௦௧
பொருந்தலனாகம்புள்ளுவந்	௧௧௭
பொருந்தாவரக்கர்	௧௫௫
பொருந்துமாமரமேழும்	௨௦௦
பொருவில்வலம்புரியரக்கன்	௬௦
பொறுத்தேன்புன்சொல்	௧௧௨
பொற்றொடித்தோள்	௮௦
பொன்குலாம்பயலைபூத்தன	௪௫
பொன்முத்துமரியுகிரும்	௧௨௫
பொன்னலரும்புன்னைசூழ்	௧௭௦
பொன்னானாய்பொழிலேழும்	௨௧௭
பொன்னிவர்மேனிமரகதம்	௧௪௫
பொன்னும்மாமணியும்	௧௦௪
பொன்னைமாமணியை	௧௮௧
போ	
போதலர்ந்தபொழில்	௭௪
போதார்தாமரையாள்	௧௧௯
ம	
மக்கள்பெறுதவம்போலும்	௧௮௭
மஞ்சாடுவரையேழும்	௫௦
மஞ்சுசேர்வானெரிநீர்நிலம்	௧௭௫
மஞ்சுதோய்வெண்குடை	௧௭௪
மஞ்சுயர்மாமணிக்குன்றம்	௪௬
மஞ்சுயர்மாமதிதீண்ட்	௧௬௭
மஞ்சுலாஞ்சோலைவண்ட	௧௯
மஞ்சுலாமணிமாட	௯௭
மஞ்சுறுமாலிருஞ்சோலை	௨௦௧
மடலெடுத்தநெடுந்தாழை	௧௫௦
மணங்கள்நாறும்வார்குழலார்	௧௮௯
மண்ணாடும்விண்ணாடும்	௨௦௮
மண்ணாய்நீரெரிகால்	௨௭
மண்ணிடந்தேனமாகி	௮௪
மண்ணின்மீபாரம்	௧௨௧
மண்ணுளார்புகழ்	௭௧
மண்மகள்கேள்வன்	௧௧௯
மலங்குவிலங்குநெடுவெள்	௧௫௮
மலிபுகழ்கணபுரம்	௧௫௭

பெரியதிருமொழிச் செய்யுளகராதி.

ம	பக்கம்.
மல்கியதோளும்மானுரி	கக௯
மல்லரையட்டமாள	அ௪
மல்லேபொருததிரடோள்	கக௩
மல்லைமாமுந்நீர்	எஅ
மல்லைமுந்நீரதர்பட	க௩௩
மல்லொடுகஞ்சனும்	உ00
மழுவியல்படையுடையவன்	க௩எ
மழுவினலவனி	ககரு
மறங்கிளர்ந்துகருங்கடல்	உ0அ
மறங்கொளாளரியுருவென	க௪
மறந்தேனுன்னைமுன்னம்	ககஉ
மறையாரும்பெருவேள்வி	கஉ௩
மறைவலார்குறைவிலார்	கஎ௩
மற்றுமோர்தெய்வமுளதென்று	ககக
மற்றோர்தெய்வம்	கக௩
மனங்கொண்டேறும்	கஅ௪
மன்றின்மலிந்து	ககக
மன்னஞ்சவாயிரம்	கஉக
மன்னவன்தொண்டையர்	௪எ
மன்னவன்பெரிய	ககரு
மன்னுஇம்மனிசப்பிறவி	உக
மன்னிலங்குபாரதத்து	உ0க
மன்னுதண்பொழிலும்	ரு௩
மன்னுநான்மறை	க௰௩
மன்னுமதுரை	கஉ௪
மன்னுமாநிலனும்	க0உ

மா	
மாகமாநிலம்முழுதும்	க0௩
மாடமாளிகைசூழ்	க0க
மாட்டேரானீர்பணிநீர்கொள்	அக
மாணாகிவையமளந்ததுவும்	ககஉ
மாத்தொழில்மடங்க	அஉ
மாயமான்மாயச்செற்று	உக௪
மாயிருங்குன்றம்	க0உ
மாரிமாக்கடல்வளைவணற்	க௩ரு
மார்வில்திருவன்	க௩உ
மாலாய்மனமே	க௩க
மாலினந்துழாய்	ககக
மாலுங்கடலாரமலை	ருஎ
மாலைத்தனியே	க0
மாலைப்புகுந்துமலரணைமேல்	கரு௩
மாவளம்பெருகி	அ௩
மாவளருமென்னோக்கி	க௬அ
மாவாயினங்கம்மதியாது	௩க
மாறுகொண்டுடன்றெதிர்ந்த	௩க
மாற்றமாவதித்தனையே	கஅக
மாற்றமுளவாகிலும்	உக0
மாற்றரசர்மணிமுடியும்	எ௩

மா	பக்கம்.
மானமருமென்னோக்கி	உ0௩
மானமுடைத்துங்கள்	ககஉ
மானவேலொண்கண்மடவரல்	கக
மானையமென்னோக்கி	கக
மானேய்கண்மடவார்	உஎ
மானேய்நோக்கியர்தம்	ககஉ
மானேய்நோக்குநல்லார்	கக௪
மானேய்மடநோக்கி	௬க
மான்கொண்டதோல்	கஉஉ
மான்முனிந்தொருகால்	க௪

மி	
மிக்கானைமறையாய்விரிந்த	க௬0
மிடையாவந்தவேல்மன்னர்	கஉஉ
மின்னனையநுண்மருங்குல்	௬க
மின்னிலங்குதிருவுருவம்	உஉக
மின்னின்நுண்ணிடை	௩க
மின்னின்மன்னுநுடங்கி	௬க
மின்னினன்னநுண்மருங்குல்	ருக
மின்னுமாமழைதவழும்	உஉக
மின்னுமாமுகில்	௬க
மின்னுமாவல்லியும்	கஎ௪
மின்னுமாழியங்கை	௩க
மின்னுருவாய்முன்னுருவில்	உக௩
மின்னேரிடையார்	ககக

மீ	
மீதோடிவாளெயிறு	ககரு
மீனமர்பொய்கைநாண்மலர்	ரு௩
மீனோடாமைகேழலரிகுற	க௩க

மு	
முடியுடையமரர்க்கு	கக
முதலைத்தனிமாமுரண்தீர	௬க
முதுகுபற்றிக்கைத்தலத்தால்	க௩
முந்துநூலும்முப்புரிநூலும்	ககஎ
முந்துறவுரைக்கேன்	கஎ௩
முந்நீரைமுன்னாள்	கஉக
முரியும்வெண்டிரை	க௩௪
முருக்கிலங்குகனித்துவர்	கஉ0
முலைத்தடத்தநஞ்சுண்டு	கஉ0
முழுசிவண்டாடியதண்	௪க
முழுதிவ்வையகம்முறைகெட	க௩௪
முழுநீலமுமலராம்பலும்	கஎ௪
முனிந்திந்தவெங்கடத்து	கக௩
முனைக்கதிரைக்குறுங்குடி	உகஅ
முன்னெயிறேய்ந்தில	௬௰0
முற்றமூத்துக்கோல்துணை	௬௩
முற்றாவனமுலையாள்	உகக
முற்றிலும்பைங்கிளியும்	௪௩

மு	பக்கம்
முனியாய்வந்துமூவெழுகால்	௧௨௦
முனிவன்மூர்த்திமூவராகி	௯௨
முனைத்தசீற்றம்விண்சுட	௨௪
முனைமுகத்தரக்கன்	௮௪
முனையார்சீயமாகி	௧௧௭
முன்பொலாவிராவணன்	௨௧௪
முன்னம்குறளுருவாய்	௧௬௯
முன்னிவ்வுலகேழுமிருள்	௧௪௦
முன்னிவ்வேழுலகு	௯௧
முன்னுலகங்கள்	௨௦௪
முன்னைவண்ணம்பாலின்	௮௯
முன்னோர்தூதுவானரத்தின்	௯௨
மூ	
மூத்தவற்கரசு	௮௪
மூவராகியவொருவனை	௫௪
மூவரில்முதல்வனுயவொருவ	௨௧௨
மூவரில்முன்முதல்வன்	௧௭௮
மூளவெரிசிந்திமுனி	௧௦௯
மெ	
மெய்ந்நலத்தவத்தை	௧௪௫
மெய்ந்நின்றபாவமகல	௨௧௦
மென்றபேழ்வாய்	௨௪
மே	
மேவாவரக்கர்தென்னிலங்	௯௯
மேவியெப்பாலும்	௪௬
மை	
மைத்தகருங்குஞ்சிமைந்தா	௧௮௭
மைந்நம்புவேற்கணல்லா	௧௯௯
மைந்நின்றகருங்கடல்	௨௦௭
மையார்கடலும்மணிவரை	௨௦௯
மையார்தடங்கண்கருங்கூர்	௯௩
மையார்வரிநீலம்	௧௪௪
மையிலங்குகருங்குவளை	௯௪
மையொண்கருங்கடலும்	௧௧௫
மைவண்ணநறுங்குஞ்சி	௨௨௦
மௌ	
மௌவற்குழலாய்ச்சி	௫௫
யா	
யாயும்பிறருமறியாத	௧௮௯
யாவருமாயாவையுமாய்	௭௪
வ	
வக்கரன்வாய்முன்கீண்ட	௧௦௭
வங்கத்தால்மாமணிவந்து	௨௧௬
வங்கமலிதடங்கடலுள்	௭௦
வங்கமலிபௌவமது	௧௦௯
வங்கமறிகடல்வண்ணா	௧௮௭
வங்கமாகடல்வண்ணன்	௧௮௦
வங்கமாமுந்நீர்வரிநிறப்	௧௯௨
வங்கமார்கடல்களேழும்	௧௦௭

வ	பக்கம்
வசையறுகுறளாய்	௭௭
வசையில்நான்மறை	௯௬
வஞ்சனைசெய்யத்தாயுரு	௯௯
வஞ்சனையால்வந்தவள்தன்	௭௩
வஞ்சிமருங்குல்	௧௯௫
வடவரைநின்றும்வந்து	௧௪௯
வடிவாய்மழுவே	௧௫௮
வணங்கலிலரக்கன்	௧௭௬
வண்கையானவுணர்க்கு	௨௬
வண்டமருஞ்சோலை	௧௫௩
வண்டமரும்மலர்ப்புன்னை	௧௫௧
வண்டமரும்வனமாலை	௧௪௮
வண்டமர்சாரல்	௧௭௭
வண்டறைபொழில்	௧௦௮
வண்டார்பூமாமலர்மங்கை	௧௬௧
வண்டார்பொழில்சூழ்ந்தழகாய	௬௮
வண்டார்பொழில்நறை	௧௨௮
வண்டுணுநறுமலர்	௧௧௦
வண்டுதண்டேனுண்டு	௧௬
வண்ணக்கருங்குழலாய்ச்சி	௨௦௬
வந்தநாள்வந்தென்னெஞ்சிடம்	௧௯௧
வந்தாயென்மனத்தே	௧௬௦
வந்தாயென்மனம்புகுந்தாய்	௨௯
வந்திக்கும்மற்றவாக்கும்	௧௯௯
வந்துனதடியேன்	௬௧
வம்பவிழுந்துழாய்	௧௬௬
வம்புலாங்கூந்தல்மண்டோதரி	௯௭
வம்புலாங்கூந்தல்மனைவியை	௨௨
வருந்தாதிருநீமடநெஞ்சே	௧௫௫
வருந்திரைமணிநீர்க்கங்கையின்	௧௯
வலம்புரியாழியனை	௧௭௧
வல்லிச்சிறுநுண்ணிடையார்	௧௭௩
வல்லியிடையாள்பொருட்	௧௫௫
வவ்வித்துழாயதன்மேல்	௧௧௧
வளர்ந்தவனை	௧௦௦
வளைக்கைநெடுங்கண்மடவார்	௫௭
வள்ளிகொழுநன்	௧௨௨
வற்புடையவரைநெடுந்தோள்	௨௧௬
வற்றாமுதுநீரொடு	௧௨௭
வா	
வாடமருதிடைபோகி	௫௭
வாடினேன்வாடிவருந்தினேன்	௧௧
வாணிலாமுறுவல்	௨௧
வாணெடுங்கண்	௭௨
வாதமாமகன்மர்க்கடம்	௧௦௪
வாதைவந்தடர	௧௬௩
வாமனன்கற்கி	௧௫௨
வாம்பரியுக	௯௧
வாயெடுத்தமந்திரத்தால்	௧௫௧

வா	பக்கம்.
வாரணங்கொளிடர்கடிந்த	௫௨
வாராகமதாகியிம்மண்ணை	௮௯
வாராருமிளங்கொங்கை	௭௫
வாராரும்முலைமடவாள்	௮௰
வாராளுமிளங்கொங்கைநெடும்	௧௫௧
வாராளுமிளங்கொங்கைவண்	௯௧
வார்கொள்மென்முலை	௧௫௬
வாலிமாவலத்து	௧௬
வாவித்தடஞ்சூழ்மணி	௧௨௭
வாழக்கண்டோம்	௧௭௨
வாழிபரகாலன்	௧௰
வாளாயகண்பனிப்ப	௯௩
வாளையார்தடங்கண்	௭௯
வாளொண்கண்நல்லார்	௧௧௯
வானவர்தங்கள்கோனும்	௨௧௬
வானவர்தங்கள்சிந்தைபோல	௩௰
வானவர்தம்துயர்தீரவந்து	௧௬௧
வானாடும்மண்ணாடும்	௭௬
வானார்மதிபொதியுஞ்சடை	௧௬௩
வானிடைப்புயலைமாலை	௨௧௩
வானுளாரவரை	௧௯௬
வானையாரமுதந்தவள்ள	௧௮௨
வானோரளவும்முதுமுந்நீர்	௧௫௮
வி	
விடங்கலந்தமர்ந்த	௧௭௯
விடந்தானுடையவரவம்	௧௨௯
விடையேழன்றடர்த்து	௧௫௩
விடையேழ்வென்று	௧௯௭
விடையோடவென்று	௯௭
விண்டமலரெல்லாம்	௧௫௨
விண்டாரைவென்றாவி	௬௨
விண்டான்விண்புக	௧௩௮
விண்ணவர்தங்கள்பெருமான்	௧௫௨
வியமுடைவிடையினம்	௧௫௯
விரைகமழ்ந்தமென்கருங்	௫௩
விலங்கலாற்கடலடைத்து	௧௰௮
விலங்கும்கயலும்	௧௧௯
வில்லார்மலிவேங்கடம்	௨௯
வில்லார்விழவில்	௧௨௧
வில்லாலிலங்கைமலங்கச்சர	௧௭௰
வில்லேர்நுதலார்	௧௧௯
வில்லேர்நுதல்வேல்	௧௨௮
விளங்கனியையிளங்கன்று	௭௰
விளைத்தவெம்போர்	௯௭
விற்பெருவிழவும்கஞ்சனும்	௯௩

வெ	பக்கம்.
வெஞ்சினக்களிறும்	௭௮
வெஞ்சினக்களிற்றை	௧௪௯
வெஞ்சினவேழம்	௧௧௯
வெண்ணெய்தானமுது	௧௰௮
வெந்தாரென்புஞ்சுடுநீறும்	௨௰
வெந்திறல்களிறும்வேலைவா	௧௮
வெந்திறல்வாணன்	௨௰௬
வெந்திறல்வீரரில்	௬௯
வெம்புஞ்சினத்துப்புனம்	௫௬
வெய்யனுயுலகேழுடன்	௯௧
வெருவாதாள்வாய்வெருவி	௯௮
வெள்ளத்துள்ளோர்	௧௩௫
வெள்ளியார்பிண்டியார்	௧௭௫
வெள்ளியான்கரியான்	௧௮௰
வெள்ளைநீர்வெள்ளத்து	௧௯௧
வெள்ளைப்புரவித்	௧௧௮
வெறியார்கருங்கூந்தல்	௨௰௯
வெற்பால்மாரிபழுதாக்கி	௯௩
வென்றதொல்சீர்த்தென்னில	௧௮௯
வென்றிசேர்திண்மை	௧௯௩
வென்றிதந்தோம்	௧௮௪
வென்றிமாமழுவேந்தி	௯௫
வென்றிமிகுநரகன்	௭௧
வென்றியேவேண்டி	௧௨
வென்றிவிடையுடன்	௨௰௧
வே	
வேடார்திருவேங்கடம்	௮௯
வேட்டத்தைக்கருதாது	௧௯௭
வேதத்தைவேதத்தின்	௩௩
வேதமுதல்வன்விளங்கு	௧௫௨
வேதமும்வேள்வியும்	௧௭௰
வேதவாய்மொழியந்தணன்	௧௰௯
வேம்பின்புழுவேம்பன்றி	௨௧௧
வேயிருஞ்சோலை	௧௯௫
வேலையாலிலைப்பள்ளி	௧௮௧
வேல்கொள்கைத்தலத்து	௫௩
வேறியானிரந்தேன்	௧௧௩
வேறேகூறுவதுண்டு	௧௧௬
வை	
வைத்தாரடியார்மனத்தினில்	௨௰௨
வையணைந்தநுதிக்கோட்டு	௫௯
வையமுண்டாலிலைமேவு	௯௭
வையமெல்லாமுடன்வணங்	௧௫௮
வையமேழுமுண்டாலிலை	௫௩

பெரியதிருமொழிச் செய்யுளகராதி ஸம்பூர்ணம்.

ஸ்ரீ

நம்மாழ்வார் வைபவம்.

വൃഷഭേ തു വിശാഖായാം കുരുകാപുരികാരിജം ।
പാണ്ഡ്യദേശേ കലേരാദൗ ശഠാരിം സൈന്യപം ഭജേ ॥

వృషభే తు విశాఖాయాం కురుకాపురికారిజం ।
పాణ్డ్యదేశే కలేరాదౌ శఠారిం సైన్యపం భజే ॥

வ்ருஷபே துவிஶாகாயாம் குருகாபுரிகாரிஜம் -
பாண்ட்யதேஶே கலேராதௌ ஶடாரிம் ஸைந்யபம் பஜே.

“பூழியர்கோன் தென்னாடு முத்துடைத்து” என்ற முதியார்மொழியின் படி முத்துவளத்தை மிகுதியாகவுடையதும், செந்தமிழ்நாடென்று சிறப்புற்றதும், “ஈரொன்பதாம் பாண்டி” என்றவாறு பதினெட்டுத் திருப்பதிகளையுடையது மான பாண்டியநாட்டிலே, கங்கை யமுனை முதலிய புண்யநதிகள் பலவற்றினும் மகிமையுடைய தாம்ரபர்ணியென்னும் பொருநையாற்றின் கரையிலே திருநகரியென்பது ஒருதிவ்யதேசம். அத்திருக்குருகூரிலே வேளாளவருணத்திலே வம்சபரம்பரையாகத் திருமாலடிக்கே தொண்டுபூண்டொழுகுஞ் சிறந்த குலத்திலே திருவழுதிவளநாடரென்னும் பாகவதரது புத்திரரான அறந்தாங்கியா ரீன்ற சக்கரபாணியாரது தநயராகிய அச்சுதரைத் தந்தையாகவுடையவர் செந்தாமரைக்கண்ணர். அவர்பாலுதித்த செங்கண்ணரது குமாரரான பொற்காரியார், தமது புதல்வராய்த் தோன்றிய காரியார்க்குக் கல்யாணஞ்செய்விக்கக் கருதி மலையமானாட்டில் திருவண்பரிசாரமென்னுந் திருப்பதியிலுள்ள திருவாழ்மார்ப ரென்னும் பகவத்பக்தரது தநயையான உடையநங்கையாரை மணம்பேசிமுடிக்க, இருவர்க்கும் அவ்வூரில் வெகு ஸம்ப்ரமமாக விவாகமகோத்ஸவம் நடந்தேறிற்று.

பின்னர் இத்தம்பதிகள் திருக்குருகூர்க்கு வந்து சிறப்பாகப் பலவாண்டு இல்லறம் நடத்துகையில், ஒருநாள், மாமனார்வேண்டுகோளின்படி, காரியார், தமதுவாழ்க்கைத்துணைவியுடனே திருவண்பரிசாரத்தை யடைந்து, அங்குச் சிலகாலம் வசித்திருந்தார். பிறகு தமது இல்லாளோடு தம்மூர்க்கு மீண்டு வருகையில், திருக்குறுங்குடியென்னுந் திருப்பதியை யடைந்து அங்கு எழுந்தருளியிருக்கிற நம்பியென்னுந் திருநாமமுடைய எம்பெருமானை வந்தித்து வாழ்த்தி ‘அடியேங்களுக்கு ஒருமகப்பேற்றை அளித்தருளவேணும்’ என்று பிரார்த்திக்க, அவ்வாதிமூர்த்தி ‘நாமே வந்து பிறக்கிறோம்’ என்று பெருங்கருணையுடன் அர்ச்சகமுகமாகச் சொல்லியருளித் தமது தீர்த்தம் திருமாலை பரியட்டம் முதலியவற்றைப் பிரசாதித்தருளினன். இங்ஙனம் பெற்ற அர்வ

நம்மாழ்வார் வைபவம்.

திருநகரியிற் சென்று வாழ்க்கையில், உடையநங்கையார் கர்ப்பவதியாக, அவரது திருவயிற்றினின்று, பகவானது அம்சமும், ஸ்ரீகௌஸ்துபத்தினது அம்சமும், சேனைமுதலியாரது அம்சமுமாக, ஒருகுமாரர், கலியுகம்பிறந்த நாற்பத்து மூன்றாநாளான பிரமாதிவருஷத்து வைகாசிமாதத்துப் பௌர்ணமி கூடிய வெள்ளிக்கிழமையில் கடகலக்நத்தில் திருவவதரித்தார்.

இப்படி ஒருவர் மூவரது அம்சமாக இருக்கக்கூடுமோவென்னில்?—சக்கரவர்த்தியான அரசன் அஷ்டதிக்பாலகர்களின் அம்சங்கள் கூடிப் பிறந்தவனென்றும், இளையபெருமாளும் நம்பிமூத்தபிரானும் தனித்தனி ஆதிசேஷாம்சத்தோடு பகவானது அம்சமும் பொருந்தியவரென்றும், அநுமான் வாயுவின் அம்சத்துடன் ருத்ராம்சமு முடையவரென்றும் நூல்கள் கூறுதலால், அவைபோலவே இதுவும் ஒக்குமென்க.

இப்படி பகவான் அவதாரஞ்செய்தற்குமுன்னமே, அவனுக்குப் பலவாற்றாலும் அடிமைசெய்தலையே உரியதொழிலாகக்கொண்ட திருவனந்தாழ்வான் இக்குமாரர்மீது வெயில் மழை முதலியன படாதிருக்குமாறு வந்து ஒரு புளியமரமாக அவதரித்து வளர்ந்திருந்தனர்.

நம்பி தந்தருளிய வரத்தின்படி யுதித்த குமாரர் பிறந்தபொழுதே தொடங்கி அழுதல் பாலுண்ணுதல் முதலிய லோகவியாபாரமொன்று மின்றியும் வாட்டமில்லாது பரிபூர்ணராயிருக்க, அவ்வதிசயத்தைக் கண்ட தாய்தந்தையர் எம்பெருமான்பக்கலில் பாரத்தை வைத்திட்டுத் தாம் சிறிதும் கவலைப்படாமல், பிறந்த பன்னிரண்டாநாளில் அத்திருநகரியிலுள்ள திருக்கோயிலுக்கு அக்குழந்தையை எடுத்துக்கொண்டுபோய், அங்கு எழுந்தருளியிருக்கின்ற பொலிந்துநின்றபிரானைச் சேவிக்கப் பண்ணுவித்து, அப்பெருமானது திருமுன்பே, அந்தத் தெய்வக்குழவிக்கு, உலகநடைக்கு மாறாக இருந்ததனால், 'மாறன்' என்று திருநாமம் சாத்தி, அருகிலிருந்த திருப்புளியமரத்தினடியிலே ஆணிப்பொன்னாற்செய்த வண்ணச்சிறுத்தொட்டிலில் வளர்த்திப் போற்றி வந்தார்கள்.

கர்ப்பத்திலிருக்கும்பொழுது ஞானமுடையனவாயிருக்கின்ற குழந்தைகளைப் பிறந்தவுடனே தனதுபரிசத்தால் அஜ்ஞாநத்துக்கு உள்ளாக்கி அழுதல் அரற்றுதல் முதலியன செய்யும்படி பண்ணிவிடுந் தன்மையதான சடமென்னும் வாயு இவரையும் பிறந்தபொழுது தொடுதற்கு வர அப்பொழுது இவர் அதனை ஹூங்காரத்தால் ஒறுத்து ஓட்டி ஒழித்ததனால், இவர்க்கு 'சடகோபர்' என்று திருநாமமாயிற்று.

“நம்சடகோபனைப்பாடினையோவென்று நம்பெருமாள், விஞ்சியவாதரத்தாற்கேட்ப” என்று பின்புள்ளாரும் கொண்டாடும்படி இவர் நம்பெருமாளால் 'நம்ஆழ்வார்' என்று அபிமானித்து விசேஷகடாக்ஷஞ் செய்யப்பட்டு மற்றையாழ்வார்களனைவரினும் உயர்வுற்றதனால், 'நம்மாழ்வார்' என்று ஒரு திருப்பெயர் பெற்றனர்.

இத்தன்மையரான ஆழ்வார் பதினாறுபிராயமளவும் கண்விழியாமல் மௌனத்தோடு எழுந்தருளியிருக்க, அதுநோக்கிய நங்கையாரும் அவர்கொழு

நரும், 'இவர், தம்மைப்போன்ற நிலையுடையா ரெவரையும் உலகத்திற் காணா மையால், யாரோடும் பேசாமலிருக்கின்றார்' என்று அறியாமல், 'எம்பெரு மான்விஷயத்தில் நாம் செய்த அபராதம் ஏதேனும் உண்டோ?' என்று கரு திக் கலங்கியிருந்தனர்.

அப்பொழுது பரமபதநாதனது நியமனத்தாற் சேனைத்தலைவர் ஏகாந்த மாக எழுந்தருளி இவர்க்குத் திருவிலச்சினைசெய்து ஸகலமந்திரார்த்தங்களையும் உபதேசித்தருளினார்.

இப்படி பெற்ற இவர் பதினாறுகலைகளும் நிறைந்த சந்திரன்போலப் பதினாறுபருவம் நிரம்பி உறங்காப்புளிநிழலிலே பதுமாசனங் கொண்டு வீற் றிருந்து பரதத்வத்தைத் தியானஞ்செய்து ஞானமுத்திரை கைக்கொண்டி ருந்த காலத்தில், திவ்வியதேசயாத்திரையாகச் சென்றிருந்த மதுரகவியாழ் வார், இவரது வைபவத்தைக் கேட்டும், இவரது திவ்வியஒளியைக் கண்டும் திருவயோத்தியினின்று புறப்பட்டு வந்து அருகில் நின்று 'இவர்க்கு உணர்ச்சி உளதோ? இலதோ?' என்று சோதித்தற்பொருட்டு இவர்முன்னிலையிலே ஒரு சிறு கல்லை யெடுத்துப்போகட, அதுவிழுந்த ஒலியைக் கேட்டவுடனே இவர் திருக்கண்களை விழித்துப் பார்த்தருளினார். உடனே மதுரகவிகள் 'இவர்க்கு வாக்கு உண்டோ? இன்றோ? அறிவோம்' என்று எண்ணி இவரை நோக்கி 'அசித்தாகிய சரீரத்திலே அணுவளவினதான ஆத்மா சம்பந்தித்தால், அது எதனை அனுபவித்து எங்கு இருக்கும்?' என்னுங் கருத்தை யமைத்து 'செத்ததின்வயிற்றிற் சிறியது பிறந்தால், எத்தைத்தின்று எங்கே கிடக் கும்?' என்று வினவ, ஆழ்வார் 'அச்சரீரத்தைச் சார்ந்த சுகதுக்கங்களை அனு பவித்துக்கொண்டு அதனையே ஆசிரயித்திருக்கும்' என்ற கருத்தை யமைத்து 'அத்தைத்தின்று அங்கே கிடக்கும்' என்று விடையருளிச்செய்தார். அது கேட்டு மதுரகவிகள் மிக மகிழ்ந்து சடகோபமுனிவரது ஞானத்தைக் கொண் டாடி, இவரையடைந்து தாம் கடைத்தேறக் கருதி, இவர் திருவடிகளிலே ஸாஷ்டாங்கப்ரணாமமாகத் தாளும் தடக்கையும் கூப்பி விழுந்து தண்ட னிட்டு இவரது இணையடித்தாமரைகளைத் தியானித்தலும் திருநாமங்களை வழுத்துதலும் செய்துகொண்டு இவரை ஆசிரயித்து 'அடியேனுக்குத் தத்வ ஹித புருஷார்த்தங்களை விளக்கியருளவேண்டும்' என்று பிரார்த்தித்தார்.

அவ்வாறிருக்கையில், ஸ்ரீவைகுண்டநாதன் ஆழ்வாரது ஞானக்கண்ணுக் குச் சேவைசாதிக்கத் திருவுளங்கொண்ட வளவிலே,பெரியதிருவடியும் தனது பக்ஷபாதம்தோன்ற முன்வந்து நிற்றலும், பெருமான் பிரியாப்பிரியமுடைய பிராட்டியுடனே கருடவாகனாரூடனாய் எழுந்தருளி எதிர்வந்துநிற்க,கருமுகில் தாமரைக்காடுபூத்து நீடிருசுடர் இருபுறத்தேந்தி ஏடவிழ்திருவொடும் பொலிய ஓர் செம்பொற்குன்றின்மேல் வருவபோல் கலுழன்மேல்வந்து தோன்றிய அம்முகில் வண்ணனது திருமேனியழகைச் சேவித்துக் கண்கள் ஆனந்தவருவி சொரிய உடம்பு உரோமாஞ்சங்கொள்ள ஆனந்தவெள்ளத்தில் ஆழ்ந்தார். அநந்தரம் நூற்றெட்டுத்திருப்பதியெம்பெருமான்களும் அங்கு எழுந்தருளிக் காட்சிகொடுக்க, அவர்களைத் தரிசித்து அவர்கள்திவ்வியகுணங்களை அனுப

வித்து அவ்வனுபவத்தாலுண்டான பிரீதி உள்ளடங்காமல் அதனைப் பிரபந்த முகமாக வெளியிடக்கருதி, நான்கு வேதங்களுள் இருக்கு, யஜுஸ் அதர்வணம் என்ற மூன்று வேதங்களின் ஸாரார்த்தத்தைத் திருவிருத்தம் திருவாசிரியம் பெரியதிருவந்தாதி யென்ற மூன்று பிரபந்தங்களின் மூலமாக வெளியிட்டு, அவ்வேதங்களுள்சிறந்ததும் பகவானதுசொரூபமாகவே யுள்ளதுமான ஸாம வேதத்தின் தத்துவப்பொருளைச் சரம ப்ரபந்தமான திருவாய்மொழியால் அருளிச்செய்து, அவற்றை மதுரகவிகளுக்கு உபதேசித்தருளினர்.

அக்காலத்தில் நித்யசூரிகளும், சுவேதத்வீபவாசிகளான ஸ்ரீவைஷ்ணவ சிரேஷ்டர்களும் காரிமாறப்பிரானது மகிமையைக் காணுதற்பொருட்டு முன்வந்துசேர, மாறனார் அவர்களைத் தமது பிரபந்தத்திலே "பொலிக பொலிக" என்று வாழ்த்தியருளினர்.

தம்பக்கல் திருவுள்ளமுவந்து பொலிந்துநின்றபிரான் பிரசாதித்தருளின மகிழமலர்மாலையைத் தரித்ததனால் 'வகுளாபரணர்' என்றும், பிறமதங்களாகிய யானைகளைத் தமது பிரபந்தங்களிற் கூறிய தத்துவார்த்தங்களாற் செருக்கடக்கி அவற்றிற்கு மாவெட்டியென்னுங் கருவிபோல இருத்தலால் 'பராங்குசர்' என்றுந் திருநாமம்பெற்ற குருகைப்பிரான், பரப்ரஹ்ம ஸ்வரூபமும், ஜீவாத்மாவினது தன்மையும், பரமாத்மாவையடையும் உபாயமும், அங்ஙனம் அடைதலின் பயனும், அச்சரணுகதிக்குப்பகையும் என்று ஸகலவேதசாஸ்திரங்களிலும் ஸாரமாகச்சொல்லப்பட்ட அர்த்தபஞ்சகத்தையும், மந்திரசிரேஷ்டமான த்வயமென்னும் சரணுகதிமந்திரத்தின் அர்த்தத்தையும் பிரபந்தரூபமாக யாவரும் எளிதில் அறியத் தெரிவித்தருளி, "களிர்மதிச்சடையனும் நான்முகக் கடவுளும், தளிரொளியிமையவர் தலைவனும் முதலா, யாவகையுலகமும்யாவரு மகப்பட, நிலம்நீர் தீகால்சுடரிருவிசும்பும், மலர்சுடர்பிறவுஞ் சிறிதுடன்மயங்க, ஒருபொருள்புறப்பாடின்றிமுழுவதும், அகப்படக்கரந்தோராலிலைச்சேர்ந்த எம், பெருமாமாயனையல்லது, ஒருமாதெய்வம்மற்றுடையமோயாமே?" என்று தமது சித்தாந்தத்தின் தத்வத்தை நன்குவெளியிட்டுத் தமது வாழ்நாள்முழுவதிலும் பிறிதொன்றில் சிந்தைசெலுத்தாது பரமனையே சிந்தித்துப் பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளை யுடையராய்க்கொண்டு, உலகநடையாட்டம் சற்றுந் தொடாது, முப்பத்தைந்து திருநக்ஷத்திரம் வாழ்ந்திருந்து, அப்பால், இமையவர் எதிர்கொள்ள, கின்னரகந்தருவாதியர் கீதம்பாட, தேவர்கள் தோத்திரஞ்செய்ய, வைகுந்தமாநகர்புக்குத் திருமாமணிமண்டபத்தில் அந்தமில் பேரின்பத்து அமர்ந்தனர்.

இவர், மற்றையாழ்வார்கள்போல இவ்வுலகவுணர்ச்சி நடையாடாநிற்க எம்பிரானருளால் ஒருகாலவிசேஷத்தில் தத்துவஞானம் முதலியன தோன்றப்பெற்று அனுபவித்தவரன்றி, திருத்துழாய் பரிமளத்தோடே அங்குரிக்குமாபோல அவதரிக்கும்பொழுதே இயற்கையில் ஞானபக்திகளையுடையராய் அந்நிலை என்றும் மாறாதிருந்ததனால், தலைவராகக்கூறப்படுவர். இதுவே, இவரை அவயவியாகவும், மற்றையாழ்வார்களை இவர்க்கு அவயவமாகவும் நிரூபித்ததற்கு ஏற்ற காரணம்.

அங்ஙனம் உருவகப்படுத்துமிடத்து, இவர்க்கு, பூதத்தாழ்வாரைச் சிரமாகவும், பொய்கையேயாழ்வார்களைக் கண்களாகவும், பெரியாழ்வாரை முகமாகவும், திருமழிசையாழ்வாரைக் கழுத்தாகவும், குலசேகராழ்வாரையும் திருப்பாணாழ்வாரையும் கைகளாகவும், தொண்டரடிப்பொடியாழ்வாரை மார்பாகவும், திருமங்கையாழ்வாரைக் கொப்பூழாகவும், மதுரகவியாழ்வாரைப் பாதமாகவும் உரைப்பது மரபு.

இப்படி ஒப்புயர்வற்ற இவ்வாழ்வார் எம்பெருமானது திருவடிகளுக்கு மிகவும் அந்தரங்கராக இருந்ததனால், பெருமாளது பாதுகை, 'ஸ்ரீசடகோபம்' என்று இவரது திருநாமத்தையிட்டு வழங்கப்படுகின்றது.

ஆனதிருவிருத்தம்நூறும் அருளினன் வாழியே
  ஆசிரியமேழுபாட்டு அளித்தபிரான் வாழியே *
ஈனமறவந்தாதி யெண்பத்தேழீந்தான் வாழியே
  இலகுதிருவாய்மொழியாயிரத்தொருநூற்றிரண்டுரைத்தான்வாழியே *
வானணியும்மாமாடக் குருகைமன்னன் வாழியே
  வைகாசிவிசாகத்தில் வந்துதித்தான் வாழியே *
சேனையர்கோனவதாரம் செய்தவள்ளல் வாழியே
  திருக்குருகைச்சடகோபன் திருவடிகள் வாழியே. (க)

மேதினியில் வைகாசிவிசாகத்தோன் வாழியே
  வேதத்தைச் செந்தமிழால் விரித்துரைத்தான் வாழியே *
ஆதிகுருவாய் அம்புவியி லவதரித்தான் வாழியே
  அனவரதம் சேனையர்கோ னடிதொழுவோன் வாழியே *
நாதனுக்கு நாலாயிர முரைத்தான் வாழியே
  நன்மதுரகவிவணங்கும் நாவீறன் வாழியே *
மாதவன்பொற்பாதுகையாய் வளர்ந்தருள்வோன் வாழியே
  மகிழ்மாறன் சடகோபன் வையகத்தில் வாழியே. (உ)

திருக்குருகைப்பெருமாள்தன் திருத்தாள்கள் வாழியே
  திருவான திருமுகத்துச் செவியென்றும் வாழியே *
இருக்குமொழி என்னெஞ்சில் தேக்கினன் வாழியே
  எந்தை யெதிராசர்க் கிறைவனார் வாழியே *
கருக்குழியில் புகாவண்ணம் காத்தருள்வோன் வாழியே
  காசினியில் ஆரியனாய்க் காட்டினன் வாழியே *
வருத்தமற வந்தென்னை வாழ்வித்தான் வாழியே
  மதுரகவிதம்பிரான் வாழிவாழிவாழியே.

ஸ்ரீ

நம்மாழ்வார்.

வகுளாபரணம்வந்தே ஜகதாபரணம்முநிம்-
யஸ்ஶ்ருதேருத்தரம்பாகம் சக்ரேத்ராவிடபாஷயா.

நம்மாழ்வார் அருளிச்செய்த

திருவாய்மொழி.

தனியன்கள்.

(நாதமுனிகள் அருளிச்செய்தது.)

𑌭𑌕𑍍𑌤𑌾𑌮𑍃𑌤𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌜𑌨𑌾𑌨𑍁𑌮𑍋𑌦𑌨𑌂
𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌦𑌂 𑌶𑍍𑌰𑍀𑌶𑌠𑌕𑍋𑌪𑌵𑌾𑌙𑍍𑌮𑌯𑌂 ।
𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌾𑌖𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑌮𑌾𑌗𑌮𑌂
𑌨𑌮𑌾𑌮𑍍𑌯𑌹𑌂 𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌵𑍇𑌦𑌸𑌾𑌗𑌰𑌂 ॥

భక్తామృతం విశ్వజనానుమోదనం సర్వార్థదం శ్రీశఠకోపవాఙ్మయం।
సహస్రశాఖోపనిషత్సమాగమం నమామ్యహం ద్రావిడవేదసాగరం ॥

பக்தாம்ருதம்விஶ்வஜநாநுமோதநம்
ஸர்வார்த்ததம் ஸ்ரீசடகோபவாங்மயம்
ஸஹஸ்ரசாகோபநிஷத்ஸமாகமம்
நமாம்யஹம்த்ராவிடவேதஸாகரம்.

(ஈச்வரமுனிகள் அருளிச்செய்தது.)

இருவிகற்பநேரிசைவெண்பா.

திருவழுதிநாடென்றும் தென்குருகூரென்றும் *
மருவினியவண்பொருநலென்றும் *—அருமறைகள்
அந்தாதிசெய்தானடியிணையே எப்பொழுதும் *
சிந்தியாய்நெஞ்சே! தெளிந்து.

(சொட்டைநம்பிகள் அருளிச்செய்தது.)

மனத்தாலும்வாயாலும் வண்குருகூர்பேணும் *
இனத்தாரையல்லாதிறைஞ்சேன் *—தனத்தாலும்
ஏதுங்குறைவிலேன் எந்தைசடகோபன் *
பாதங்கள்யாமுடையபற்று.

(அனந்தாழ்வான் அருளிச்செய்தது.)

ஏய்ந்தபெருங்கீர்த்தியிராமானுசமுனிதன் *
வாய்ந்தமலர்ப்பாதம்வணங்குகின்றேன் *—ஆய்ந்தபெருஞ்
சீரார்சடகோபன்செந்தமிழ்வேதம்தரிக்கும் *
பேராதவுள்ளம்பெற.

(பட்டர் அருளிச்செய்தது.)

வான்திகழும்சோலைமதிளரங்கர்வண்புகழ்மேல *
ஆன்றதமிழ்மறைகளாயிரமும் *—ஈன்ற
முதல்தாய்சடகோபன் * மொய்ம்பால்வளர்த்த
இதத்தாய்இராமானுசன்.

மிக்கவிறைநிலையும் மெய்யாமுயிர்நிலையும் *
தக்கநெறியும் தடையாகித்—தொக்கியலும் *
ஊழ்வினையும்வாழ்வினையும் ஓதுங்குருகையர்கோன் *
யாழினிசைவேதத்தியல்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

முதற்பத்து.

கைங்கரியமே புருஷார்த்த மென்று அறுதியிடுதல்.

† க-ஆந் திருவாய்மொழி—உயர்வறவுயர்நலம்.

[எம்பெருமான்திருவடிகளிலே நித்யகைங்கர்யம் பண்ணும்படி ஆழ்வார் தம் திருவுள்ளத்துக்கு உபதேசித்தல்.]

கலிவிருத்தம்.

பண் - முதிர்ந்தகுறிஞ்சி, தாளம் - ஏழொத்து. கமாஸ் ராகம் - ஆதிதாளம்.

உயர்வறவுயர்நலம் உடையவன் ‡ யவனவன் *
மயர்வறமதிநலம் அருளினன்யவனவன் *
அயர்வறுமமரர்கள் அதிபதியவனவன் *
துயரறுசுடரடி தொழுதெழென்மனனே! (க)

மனனகமலமற மலர்மிசையெழுதரும் *
மனனுணர்வளவிலன் பொறியுணர்வவையிலன் *
இனனுணர்முழுநலம் எதிர்நிகழ்கழிவினும் *
இனனிலனெனனுயிர் மிகுநரையிலனே. (உ)

இலனதுவுடையனிது எனநினைவரியவன் *
நிலனிடைவிசும்பிடை உருவினனருவினன் *
புலனொடுபுலனலன் ஒழிவிலன்பரந்த * அந்
நலனுடையொருவனை நணுகினம்நாமே. (ங)

நாமவனிவனுவன் அவளிவளுவளெவள் *
தாமவரிவருவர் அதுவிதுவுதுவெது *
வீமவையிவையுவை அவைநலம்தீங்கவை *
ஆமவையாயவை ஆய்நின்றவவரே. (ச)

அவரவர்தமதமது அறிவறிவகைவகை *
அவரவரிறையவர் எனவடியடைவர்கள் *
அவரவரிறையவர் குறைவிலரிறையவர் *
அவரவர்விதிவழி அடையநின்றனரே. (ரு)

† இத்திருவாய்மொழி, கோயில்திருவாய்மொழியைச் சேர்ந்தது.
‡ 'எவனவன்' என்றும் பாடங் கூறுவர்; மேலும் இப்படியே.

நின்றனரிருந்தனர் கிடந்தனர்திரிந்தனர் *
நின்றிலரிருந்திலர் கிடந்திலர்திரிந்திலர் *
என்றுமொரியல்வினர் எனநினைவரியவர் *
என்றுமொரியல்வொடு நின்றவெந்திடரே. (௬)

திடவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசை *
படர்பொருள்முழுவதுமாய் அவையவைதொறும் *
உடல்மிசையுயிரெனக் கரந்தெங்கும்பரந்துளன் *
சுடர்மிகுசுருதியுள் இவையுண்டசுரனே. (௭)

சுரரறிவருநிலை விண்முதல்முழுவதும் *
வரன்முதலாயவை முழுதுண்டபரபரன் *
புரமொருமூன்றெரித்து அமரர்க்குமறிவியந்து *
அரனயனென உலகழித்தமைத்துளனே. (௮)

உளனெனிலுளன் அவனுருவமிவ்வுருவுகள் *
உளனலனெனில் அவனருவமிவ்வருவுகள் *
உளனெனவிலனென இவைகுணமுடைமையில் *
உளனிருதகைமையொடு ஒழிவிலன்பரந்தே. (௯)

பரந்ததண்பரவையுள் நீர்தொறும்பரந்துளன் *
பரந்தவண்டமிதென நிலவிசும்பொழிவற *
கரந்தசிலிடந்தொறும் இடந்திகழ்பொருள்தொறும் *
கரந்தெங்கும்பரந்துளன் இவையுண்டகரனே. (௧௦)

↓↓ கரவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசை *
வரனவில்திறல்வலி அளிபொறையாய்நின்ற *
பரனடிமேல் குருகூர்ச்சடகோபன்சொல் *
நிரனிறையாயிரத்து இவைபத்தும்வீடே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

† உ-ஆந் திருவாய்மொழி—வீடுமின்.

['பகவத்பஜநம்பண்ணி நுகர்ந்துய்ம்மின்' என்று பரோபதேசஞ்செய்தல்]

வஞ்சித்துறை.

பண் - முதிர்ந்தகுறிஞ்சி, தாளம் - ஏழொத்து. செஞ்சுருட்டிராகம் - அடதாளம்.

↓↓ வீடுமின் முற்றவும் *
வீடுசெய்து * உம்முயிர்
வீடுடையானிடை *
‡ வீடுசெய்ம்மினே. (க)

மின்னின்நிலையில *
மன்னுயிராக்கைகள் *
என்னுமிடத்து * இறை
உன்னுமின்நீரே. (உ)

நீர்நுமதென்றிவை *
வேர்முதல்மாய்த்து * இறை
சேர்மின், உயிர்க்கு * அதன்
நேர்நிறையில்லே. (ங)

இல்லதுமுள்ளதும் *
அல்லதவனுரு *
எல்லையிலந்நலம் *
புல்குபற்றற்றே. (ச)

அற்றதுபற்றெனில் *
உற்றதுவீடுயிர் *
செற்றதுமன்னுறில் *
அற்றிறைபற்றே. (ரு)

பற்றிலனீசனும் *
முற்றவும்நின்றனன் *
பற்றிலையாய் * அவன்
முற்றிலடங்கே. (சா)

அடங்கெழில்சம்பத்து *
அடங்கக்கண்டு * ஈசன்
அடங்கெழிலஃதென்று *
அடங்குகவுள்ளே. (எ)

உள்ளமுரைசெயல் *
உள்ளவிம்மூன்றையும் *
உள்ளிக்கெடுத்து * இறை
யுள்ளிலொடுங்கே. (அ)

ஒடுங்கவவன்கண் *
ஒடுங்கலுமெல்லாம் *
விடும் பின்னுமாக்கை *
விடும்பொழுதெண்ணே. (கூ)

↓↓ எண்பெருக் கந்நலத்து *
ஒண்பொருளீறில *
வண்புகழ்நாரணன் *
திண்கழல்சேரே. (கo)

↓↓ சேர்த்தடத் * தென்குரு
கூர்ச்சடகோபன்சொல் *
சீர்த்தொடையாயிரத்து *
ஓர்த்தவிப்பத்தே. (கக)

---

† இது, கோயில்திருவாய்மொழி.

‡ 'வீடிசைமினே' என்று பாடாந்தரம்.

ங - ஆந் திருவாய்மொழி—பத்துடை.

[எம்பெருமானது ஸௌலப்யத்தை அருளிச்செய்தல்.]

கலிநிலைத்துறை.

பண் - நட்டபாடை. தாளம் - ஏழொத்து. அபருபாகம் - ரூபகதாளம்.

பத்துடையடியவர்க்கெளியவன் பிறர்களுக்கரிய
வித்தகன் * மலர்மகள்விரும்பும் நம்அரும்பெறலடிகள் *
மத்துறுகடைவெண்ணெய் களவினில்உரலிடையாப்புண்டு *
எத்திறம்! உரலினொடு இணைந்திருந்தேங்கியஎளிவே. (க)

எளிவருமியல்வினன் நிலைவரம்பிலபலபிறப்பாய் *
ஒளிவருமுழுநலம் முதலிலகேடிலவீடாம் *
தெளிதருநிலைமையதொழிவிலன் முழுவதுமிறையோன் *
அளிவருமருளினோடு அகத்தனன்புறத்தனனமைந்தே. (௨)

அமைவுடையறநெறி முழுவதுமுயர்வற † வுயர்ந்து *
அமைவுடைமுதல்கெடல் ஒடிவிடையறநிலமதுவாம் *
அமைவுடையமரரும் யாவையும்யாவரும்தானாம் *
அமைவுடைநாரணன்மாயையை அறிபவர்யாரே? (ங)

யாருமோர்நிலைமையனென அறிவரியஎம்பெருமான் *
யாருமோர்நிலைமையனென அறிவெளியஎம்பெருமான் *
பேருமோராயிரம் பிறபலவுடையஎம்பெருமான் *
பேருமோருருவமும் உளதில்லையிலதில்லைபிணக்கே (ச)

பிணக்கறவறுவகைச்சமயமும் நெறியுள்ளியுரைத்த *
கணக்கறுநலத்தனன் அந்தமிலாதியம்பகவன் *
வணக்குடைத்தவநெறி வழிநின்றுபுறநெறிகளைகட்டு *
உணக்குமின்பசையற அவனுடையுணர்வுகொண்டுணர்ந்தே. (ரு)

உணர்ந்துணர்ந்திழிந்தகன்று உயர்ந்துருவியந்தவிந்நிலைமை *
உணர்ந்துணர்ந்துணரிலும் இறைநிலையுணர்வரிதுஉயிர்காள்! *
உணர்ந்துணர்ந்துரைத்துரைத்து அரியயனரனென்னுமிவரை *
உணர்ந்துணர்ந்துரைத்துரைத்துஇறைஞ்சுமின்மனப்பட்டதொன்றே. (சா)

ஒன்றெனப்பலவென அறிவரும்வடிவினுள்நின்ற *
நன்றெழில்நாரணன் நான்முகனரனென்னுமிவரை *
ஒன்றநும்மனத்துவைத்து உள்ளிநும்இருபசையறுத்து *
நன்றெனநலஞ்செய்வது அவனிடைநம்முடைநாளே. (எ)

† 'உயர்ந்த' என்பது உரையின் பாடம்.

நாளும்நின்றடுநமபழமை அங்கொடுவினையுடனே
மாளும் * ஓர்குறைவில்லை மனனகமலமறக்கழுவி *
நாளும்நந்திருவுடையடிகள்தம் நலங்கழல் † வணங்கி *
மாளுமோரிடத்திலும் வணக்கொடுமாள்வதுவலமே. (௯)

வலத்தனன்திரிபுரமெரித்தவன் இடம்பெறத்துந்தித்
தலத்து * எழுதிசைமுகன்படைத்த நல்லுலகமும்தானும்
புலப்பட * பின்னும்தன்னுலகத்தில் அகத்தனன்தானே
சொலப்புகில் * இவைபின்னும்வயிற்றுள இவைஅவன்துயக்கே. (௰)

துயக்கறுமதியில்நன்ஞானத்துள் அமரரைத்துயக்கும் *
மயக்குடைமாயைகள் வானிலும்பெரியனவல்லன் *
புயற்கருநிறத்தனன் பெருநிலங்கடந்தநல்லடிப்போது *
அயர்ப்பிலனலற்றுவன் தழுவுவன்வணங்குவனமர்ந்தே. (௧௦)

↓↓ அமரர்கள்தொழுதெழ அலைகடல்கடைந்தவன்தன்னை *
அமர்பொழில்வளங்குருகூர்ச் சடகோபன் ‡ குற்றேவல்கள் *
அமர்சுவையாயிரத்து அவற்றினுளிவைபத்தும்வல்லார் *
அமரரோடுயர்விற்சென்று அறுவர்தம்பிறவியஞ்சிறையே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௪-ஆந் திருவாய்மொழி—அஞ்சிறைய.

[எம்பெருமானது பிழைபொறுத்தலைப் பற்றுசாகக்கொண்டு தலைமகள் பறவை முதலியவற்றைத் தூதுசெல்ல வேண்டுதல்.]

தரவுகொச்சகக்கலிப்பா.

பண் - நட்டபாடை. தாளம் - ஏழொத்து. கண்டராகம் - ஆதிதாளம்.

↓↓ அஞ்சிறையமடநாராய்! அளியத்தாய்! * நீயும்நின்
அஞ்சிறையசேவலுமாய் ஆவா! என்றெனக்கருளி *
வெஞ்சிறைப்புள்ளுயர்த்தார்க்கு என்விடுதூதாய்ச்சென்றக்கால் *
வன்சிறையிலவன்வைக்கில் வைப்புண்டாலென்செய்யுமோ? (௧)

என்செய்யதாமரைக்கண் பெருமானார்க்கென்தூதாய் *
என்செய்யும்? உரைத்தக்கால் இனக்குயில்காள்! நீரலிரே? *
முன்செய்தமுழுவினையால் திருவடிக்கீழ்க்குற்றேவல் *
முன்செய்யமுயலாதேன் அகல்வதுவோ? விதியினமே. (௨)

† 'வணங்கின்' என்பது உரையின் பாடம்.
‡ 'குற்றேவல்' என்னும் பாடம் செய்யுளிசைக்குச் சேரும்.

ஒயினால்பெடைமணக்கும் மென்னடையவன்னங்காள்! *
ஒயினால்குறள்மாணாய் உலகிரந்தகள்வர்க்கு *
ஒயிலேன்வல்வினையே மாளாதோ? என்று * ஒருத்தி
ஒயெலாமுள்கலங்கி மயங்குமாலென்னீரே. (ரு)

ன்னீர்மைகண்டிரங்கி இதுதகாதென்னாத *
ன்னீலமுகில்வண்ணற்கு என்சொல்லியான்சொல்லுகேனோ? *
ன்னீர்மையினியவர்கண் தங்காதென்றொருவாய்ச்சொல் *
ன்னீலமகன்றில்காள்! நல்குதிரோ? நல்கீரோ? (சு)

ல்கித்தான்காத்தளிக்கும் பொழிலேழும்வினையேற்கே *
ல்கத்தானாகாதோ? நாரணனைக்கண்டக்கால் *
மல்குநீர்ப்புனற்படப்பை இரைதேர்வண்சிறுகுருகே! *
மல்குநீர்க்கண்ணேற்கு ஓர்வாசகங்கொண்டருளாயே. (எ)

அருளாதநீரருளி அவராவிதுவராமுன் *
அருளாழிப்புள்கடவீர் அவர்வீதியொருநாளென்று *
அருளாழியம்மானைக் கண்டக்காலிதுசொல்லி
யருள் * ஆழிவரிவண்டே! யாமும்என்பிழைத்தோமே? (அ)

என்பிழைகோப்பதுபோலப் பனிவாடை † யீர்கின்றது *
என்பிழையேநினைந்தருளி அருளாததிருமாலார்க்கு *
என்பிழைத்தாள்திருவடியின்தகவினுக்கு என்றொருவாய்ச்சொல் *
என்பிழைக்குமிளங்கிளியே! யான்வளர்த்தநீயலையே? (கூ)

நீயலையே? சிறுபூவாய்! நெடுமாலார்க்கென்தூதாய் *
நோயெனதுநுவலென்ன நுவலாதேயிருந்தொழிந்தாய் *
சாயலொடுமணிமாமை தளர்ந்தேன்நான் * இனிஉனது
வாயலகிலின்னடிசில் வைப்பாரைநாடாயே. (அ)

நாடாதமலர்நாடி நாள்தோறும்நாரணன்தன் *
வாடாதமலரடிக்கீழ் வைக்கவேவகுக்கின்று *
வீடாடிவீற்றிருத்தல் வினையற்றதென்செய்வதோ? *
ஊடாடுபனிவாடாய்! உரைத்தீராயெனதுடலே. (கூ)

உடலாழிப்பிறப்புவீடு உயிர்முதலாமுற்றுமாய் *
கடலாழிநீர்தோற்றி அதனுள்ளேகண்வளரும் *
அடலாழியம்மானைக் கண்டக்காலிதுசொல்லி *
விடல் ஆழிமடநெஞ்சே! வினையோமொன்றுமளவே. (கய)

† 'ஈர்கின்ற' என்று வழங்குவர்.

↓↓ அளவியன்றவேழுலகத்தவர் பெருமான்கண்ணனை *
வளவயல்சூழ் வண்குருகூர்ச் சடகோபன்வாய்ந்துரைத்த *
அளவியன்றவந்தாதி ஆயிரத்துள்இப்பத்தின் *
வளவுரையால்பெறலாகும் வானோங்குபெருவளமே.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ரு - ஆந் திருவாய்மொழி—வளவேழ்.

[ஆழ்வார் எம்பெருமானது பரத்வத்தை அநுஸந்தித்து அகலத் தேட, எம்பெருமான் தன்னுடைய சீலகுணத்தாலே ஆழ்வாரைச் சேர்த்துக்கொள்ளுதல்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - செந்துருத்தி. தாளம் - ஏழொத்து. கல்யாணிராகம் - ஆதிதாளம்.

↓↓ வளவேழுலகின்முதலாய வானோரிறையை * அருவினையேன்
களவேழ்வெண்ணெய்தொடுவுண்ட கள்வா! என்பன்பின்னையும் *
தளவேழ்முறுவற்பின்னைக்காய் வல்லானாயர்தலைவனாய் *
இளவேறேழும்தழுவிய எந்தாய்! என்பன் † நினைந்துநைந்தே. (க

நினைந்துநைந்துள்கரைந்துருகி இமையோர்பலரும்முனிவரும் *
புனைந்தகண்ணிநீர்சாந்தம் புகையோடேந்திவணங்கினால் *
நினைந்தவெல்லாப்பொருள்கட்கும் வித்தாய்முதலிற்சிதையாமே *
மனஞ்செய்ஞானத்துன்பெருமை மாசூணாதோ? மாயோனே! (உ

மாயோனிகளாய்நடைகற்ற வானோர்பலரும்முனிவரும் *
நீயோனிகளைப்படையென்று நிறைநான்முகனைப்படைத்தவன் *
சேயோனெல்லாவறிவுக்கும் திசைகளெல்லாம்திருவடியால்
தாயோன் * எல்லாவெவ்வுயிர்க்கும்தாயோன் தானோருருவனே. (ங

தானோருருவேதனிவித்தாய்த் தன்னில்மூவர்முதலாய *
வானோர்பலரும்முனிவரும் மற்றும்மற்றும்முற்றுமாய் *
தானோர்பெருநீர்தன்னுள்ளேதோற்றி அதனுள்கண்வளரும் *
வானோர்பெருமான்மாமாயன் வைகுந்தன்எம்பெருமானே. (ச

† 'இனைந்துநைந்தே' என்பது சிலர் பாடம்.

மானேய் † நோக்கிமடவாளை மார்விற்கொண்டாய்! மாதவா! *
கூனேசிதையவுண்டைவில் நிறத்தில்தெறித்தாய்! கோவிந்தா! *
வானார்சோதிமணிவண்ணா! மதுசூதா! நீயருளாய் * உன்
தேனேமலரும்திருப்பாதம் சேருமாறுவினையேனே. (ரு)

வினையேன்வினைதீர்மருந்தாநாய்! விண்ணோர்தலைவா! கேசவா! *
மனைசேராயர்குலமுதலே! மாமாயனே! மாதவா! *
சினையேய்தழையமராமரங்கள் ஏழுமெய்தாய்! சிரீதரா! *
இனையாய்! இனையபெயரினாய்! என்றுநைவனடியேனே. (சு)

அடியேன்சிறியஞானத்தன் அறிதலார்க்குமரியானை *
கடிசேர்தண்ணந்துழாய்க் கண்ணிபுனைந்தான்தன்னைக்கண்ணனை *
செடியாராக்கையடியாரைச் சேர்தல்தீர்க்கும்திருமாலை *
அடியேன்காண்பானலற்றுவன் இதனில்மிக்கோரயர்வுண்டே? (எ)

உண்டாயுலகேழ்முன்னமே உமிழ்ந்துமாயையாற்புக்கு *
உண்டாய்வெண்ணெய்சிறுமனிசர் உவலையாக்கைநிலையெய்தி *
மண்தான்சோர்ந்ததுண்டேலும் மனிசர்க்காகும்பீர் * சிறிதும்
அண்டாவண்ணம்மண்கரைய நெய்யூண்மருந்தோ? மாயோனே! (அ)

மாயோம்தீயவலவலைப் பெருமாவஞ்சப்பேய்வீய *
தூயகுழவியாய்விடப்பாலமுதா அமுதுசெய்திட்ட
மாயன் * வானோர்தனித்தலைவன்மலராள்மைந்தன் எவ்வுயிர்க்கும்
தாயோன் * தம்மானென்னம்மான் அம்மாமூர்த்தியைச்சார்ந்தே. (கூ)

சார்ந்தவிருவல்வினைகளும்சரித்து மாயப்பற்றறுத்து *
தீர்ந்துதன்பால்மனம்வைக்கத்திருத்தி வீடுதிருத்துவான் *
ஆர்ந்தஞானச்சுடராகி அகலம்கீழ்மேலளவிறந்து *
நேர்ந்தவுருவாயருவாகும் இவற்றினுயிராம்நெடுமாலே! (கo)

↓↓ மாலே! மாயப்பெருமானே! மாமாயனே! என்றென்று *
மாலேயேறிமாலருளால் மன்னுகுருகூர்ச்சடகோபன் *
பாலேய்தமிழரிசைகாரர் பத்தர்பரவுமாயிரத்தின்
பாலேபட்ட * இவைபத்தும்வல்லார்க்கு இல்லைபரிவதே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

† 'நோக்கின்' என்பதும் சிலர்பாடம்.

௬ - ஆந் திருவாய்மொழி—பரிவதில்.

['எம்பெருமான் சுகமாக ஆராதிக்கத்தக்கவன்' என்று உபதேசித்த

வஞ்சிவிருத்தம்.

பண் - முதிர்ந்தகுறிஞ்சி, தாளம் - ஏழொத்து.

நாதநாமக்கிரியைராகம் - அடதாளம்.

↓↓ பரிவதிலீசனைப்பாடி *
விரிவதுமேவலுறுவீர் *
பிரிவகையின்றி நன்னீர்தூய் *
† புரிவதுவும்புகைபூவே. (௧)

‡ மதுவார்தண்ணந்துழாயான் *
முதுவேதமுதல்வனுக்கு *
எதுவேது? என்பணி?என்னாது *
அதுவேயாட்செய்யுமீடே. (௨)

ஈடுமெடுப்புமிலீசன் *
மாடுவிடாதென்மனனே *
பாடுமென்நா அவன்பாடல் *
ஆடுமெனங்கம் அணங்கே. (௩)

அணங்கென ஆடுமெனங்கம் *
வணங்கிவழிபடுமீசன் *
பிணங்கியமரர்பிதற்றும் *
குணங்கெழுகொள்கையினானே. ()

கொள்கைகொளாமையிலாதான் *
எள்கலிராகமிலாதான் *
விள்கைவிள்ளாமைவிரும்பி *
உள்கலந்தார்க்கோரமுதே. (௫)

அமுதமமரர்கட்கீந்த *
நிமிர்சுடராழிநெடுமால் *
அமுதிலுமாற்றவினியன் *
நிமிர்திரைநீள்கடலானே.

நீள்கடல்சூழிலங்கைக்கோன்
தோள்கள்தலைதுணிசெய்தான்
தாள்கள்தலையில்வணங்கி *
நாள்கடலைக்கழிமினே.

கழிமின்தொண்டர்கள்! கழித்
தொழுமின் அவனைத்தொழுதா
வழிநின்றவல்வினைமாள்வித்து
அழிவின்றியாக்கம்தருமே. (

தருமவரும்பயனாய *
திருமகளார்தனிக்கேள்வன் *
பெருமையுடையபிரானார் *
இருமைவினைகடிவாரே. (

கடிவார் தீயவினைகள் *
நொடியாருமளவைக்கண் *
கொடியாவடுபுள்ளுயர்த்த *
வடிவார்மாதவனாரே. (

↓↓ மாதவன்பால்சடகோபன்
தீதவமின்றியுரைத்த *
ஏதமிலாயிரத்திப்பத்து *
ஓதவல்லார்பிறவாரே. (

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

† 'புரிவதுமாவதுபூவே' என்பது உரையின் பாடம்.

‡ 'வதுவார்' என்பதும் ஈட்டின் பாடம்.

எ - ஆந் திருவாய்மொழி—பிறவித்துயர்.

[ஈச்வரனுடைய ஆச்ரயணம் போகரூபமா யிருக்குமென்று அருளிச்செய்தல்.]

கலிவிருத்தம்.

பண் - வியந்தம், தாளம் - ஏழொத்து. மத்யமாவதிராகம் - அடதாளம்.

↓↓ பிறவித்துயரற ஞானத்துள்நின்று *
துறவிச்சுடர்விளக்கம் தலைப்பெய்வார் *
அறவனை ஆழிப்படையந்தணனை *
மறவியையின்றி மனத்துவைப்பாரே. (க)

வைப்பாம்மருந்தாம் அடியரை * வல்வினைத்
துப்பாம்புலனைந்தும் துஞ்சக்கொடானவன் *
எப்பால்யவர்க்கும் நலத்தாலுயர்ந்துயர்ந்து *
அப்பாலவன் எங்களாயர்கொழுந்தே. (உ)

ஆயர்கொழுந்தாய் அவரால்புடையுண்ணும் *
மாயப்பிரானை என்மாணிக்கச்சோதியை *
தூயவமுதைப் பருகிப்பருகி * என்
மாயப்பிறவி மயர்வறுத்தேனே. (ங)

மயர்வறவென்மனத்தே மன்னினான்தன்னை *
உயர்வினையேதரும் ஒண்சுடர்க்கற்றையை *
அயர்விலமரர்கள் ஆதிக்கொழுந்தை * என்
இசைவினை என்சொல்லியான்விடுவேனோ? (ச)

விடுவேனோ? என்விளக்கை என்னாவியை *
நடுவேவந்து உய்யக்கொள்கின்றநாதனை *
தொடுவேசெய்து இளவாய்ச்சியர்கண்ணினுள் *
விடவேசெய்து விழிக்கும்பிரானையே. (ரு)

பிரான் பெருநிலங்கீண்டவன் * பின்னும்
விராய் மலர்த்துழாய்வேய்ந்தமுடியன் *
மராமரமெய்தமாயவன் * என்னுள்
இரானெனில் பின்னையானொட்டுவேனோ? (சா)

யானொட்டியென்னுள் இருத்துவமென்றிலன் *
தானொட்டிவந்து என்தனிநெஞ்சைவஞ்சித்து *
ஊனொட்டிநின்று என்னுயிரிற்கலந்து * இயல்
வானொட்டுமோ? இனியென்னைநெகிழ்க்கவே. (எ)

என்னைநெகிழ்க்கிலும் என்னுடைநன்னெஞ்சந்
தன்னை * அகல்விக்கத் தானுங்கில்லானினி *
பின்னைநெடும்பணைத்தோள் மகிழ்பீடுடை *
முன்னையமரர் முழு † முதலானே. (அ)

அமரர்முழுமுதல் ஆகியஆதியை *
அமரர்க்கமுதீந்த ஆயர்கொழுந்தை *
அமரவழும்பத் துழாவிஎன்னாவி *
அமரத்தழுவிற்று இனியகலுமோ? (கூ)

அகலிலகலும் அணுகிலணுகும் *
புகலுமரியன் பொருவல்லனெம்மான் *
நிகரிலவன்புகழ் பாடியிளைப்பிலம் *
பகலுமிரவும் படிந்துகுடைந்தே. (கo)

↓↓ குடைந்துவண்டுண்ணும் துழாய்முடியானை *
அடைந்த தென்குருகூர்ச்சடகோபன் *
மிடைந்தசொல்தொடை ஆயிரத்திப்பத்து *
உடைந்துநோய்களை ஓடுவிக்குமே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

அ-ஆந் திருவாய்மொழி—ஓடும்புள்.

[ஈச்வரன் யாவரிடத்திலும் வாசியில்லாமல் ஆர்ஜவகுணமுடையவனென்று அருளிச்செய்தல்.]

வஞ்சித்துறை.

பண் - இந்தளம், தாளம் - ஏழொத்து. தேசியராகம் - ஆதிதாளம்.

↓↓ ஓடும்புள்ளேறி *
சூடும்தண்துழாய் *
நீடுநின்றவை *
ஆடும்அம்மானே

அம்மானாய்ப்பின்னும் *
எம்மாண்புமானான் *
வெம்மாவாய்கீண்ட *
செம்மாகண்ணனே. (உ)

கண்ணாவானென்றும் *
மண்ணோர்விண்ணோர்க்கு *
தண்ணார்வேங்கட *
ர்வெற்பனே. (ங)

வெற்பையொன்றெடுத்து *
ஒற்கமின்றியே *
மமான்சீர் *
கற்பன்வைகலே. (ச)

† 'முழுமுதல்தானே' என்பதும் பாடம்.

வைகலும்வெண்ணெய் *
கைகலந்துண்டான் *
பொய்கலவாது * என்
மெய்கலந்தானே. (ரு)

கலந்தென்னாவி *
நலங்கொள்நாதன் *
புலன்கொள்மாணாய் *
நிலங்கொண்டானே. (சு)

கொண்டானேழ்விடை *
உண்டானேழ்வையம் *
தண்தாமஞ்செய்து * என்
எண்தானானானே. (எ)

ஆனானானாயன் *
மீனோடேனமும் *
தானானானென்னில் *
தானாயசங்கே. (அ)

சங்குசக்கரம் *
அங்கையில்கொண்டான் *
எங்குந்தானாய *
நங்கள்நாதனே. (கூ)

நாதன்ஞாலங்கொள் *
பாதன்என்னம்மான் *
ஓதம்போல்கிளர் *
வேதநீரனே. (கய)

நீர்புரைவண்ணன் *
சீர்சடகோபன் *
நேர்தலாயிரத்து *
ஓர்தலிவையே. (கக)

கூ - ஆந் திருவாய்மொழி—இவையுமவையும்.

[ஈச்வரன் தம்மோடே கலந்து அநுபவித்த கலவியை ஆழ்வார் அருளிச்செய்தல்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - கொல்லி, தாளம் - ஏழொத்து. மோஹநராகம் - ஆதிதாளம்.

↓↓ இவையுமவையுமுவையும் இவருமவருமுவரும் *
எவையும்யவரும்தன்னுள்ளே ஆகியுமாக்கியுங்காக்கும் *
அவையுள்தனிமுதலெம்மான் கண்ணபிரானென்னமுதம் *
சுவையன்திருவின்மணாளன் என்னுடைச்சூழலுளானே. (க)

சூழல்பலபலவல்லான் தொல்லையங்காலத்துலகை *
கேழலொன்றாகியிடந்த கேசவனென்னுடையம்மான் *
வேழமருப்பையொசித்தான் விண்ணவர்க்கெண்ணலரியான் *
ஆழநெடுங்கடல்சேர்ந்தான் அவனென்னருகலிலானே. (உ)

அருகலிலாயபெருஞ்சீர் அமரர்களாதிமுதல்வன் *
கருகியநீலநன்மேனிவண்ணன் செந்தாமரைக்கண்ணன் *
பொருசிறைப்புள்ளுவந்தேறும் பூமகளார்தனிக்கேள்வன் *
ஒருகதியின்சுவைதந்திட்டு ஒழிவிலனென்னோடுடனே. (ங)

உடனமர்காதல்மகளிர் திருமகள்மண்மகளாயர்
மடமகள் * என்றிவர்மூவராளும் உலகமும்மூன்றே *
உடனவையொக்கவிழுங்கி ஆலிலைச்சேர்ந்தவனெம்மான் *
கடல்மலிமாயப்பெருமான் கண்ணனென்னொக்கலையானே. (௪)

ஒக்கலைவைத்துமுலைப்பாலுண்ணென்று தந்திடவாங்கி *
செக்கஞ்செகஅன்று அவள்பால்உயிர்செகவுண்டபெருமான் *
நக்கபிரானோடு அயனுமிந்திரனும்முதலாக *
ஒக்கவும்தோற்றியவீசன் மாயனென்னெஞ்சினுளானே. (௫)

மாயனென்னெஞ்சினுள்ளான் மற்றும்யவர்க்கு † மஃதே *
காயமும்சீவனும்தானே காலுமெரியுமவனே *
சேயனணியன்யவர்க்கும் சிந்தைக்கும்கோசரமல்லன் *
தூயன்துயக்கன்மயக்கன் என்னுடைத்தோளிணையானே. (௬)

தோளிணைமேலும்நன்மார்பின்மேலும் சுடர்முடிமேலும் *
தாளிணைமேலும்புனைந்த தண்ணந்துழாயுடையம்மான் *
கேளிணையொன்றுமிலாதான் கிளரும்சுடரொளிமூர்த்தி *
நாளணைந்தொன்றுமகலான் என்னுடைநாவினுளானே. (௭)

நாவினுள்நின்றுமலரும் ஞானக்கலைகளுக்கெல்லாம் *
ஆவியுமாக்கையும்தானே அழிப்பொடளிப்பவன்தானே *
பூவியல்நால்தடந்தோளன் பொருபடையாழிசங்கேந்தும் *
காவிநன்மேனிக்கமலக்கண்ணன் என்கண்ணினுளானே. (௮)

கமலக்கண்ணனென்கண்ணினுள்ளான் காண்பனவன்கண்களாலே *
அமலங்களாகவிழிக்கும் ஐம்புலனும்அவன்மூர்த்தி *
கமலத்தயன்நம்பிதன்னைக் கண்ணுதலானொடும்தோற்றி *
அமலத்தெய்வத்தோடுஉலகமாக்கி என்நெற்றியுளானே. (௯)

நெற்றியுள்நின்றென்னையாளும் நிரைமலர்ப்பாதங்கள்சூடி *
கற்றைத்துழாய்முடிக்கோலக் கண்ணபிரானைத்தொழுவார் *
ஒற்றைப்பிறையணிந்தானும் நான்முகனுமிந்திரனும் *
மற்றையமரருமெல்லாம்வந்து எனதுச்சியுளானே. (௧௦)

↓↓ உச்சியுள்ளேநிற்கும்தேவதேவற்குக் கண்ணபிரார்க்கு *
இச்சையுள்செல்லவுணர்த்தி வண்குருகூர்ச்சடகோபன் *
இச்சொன்னவாயிரத்துள் இவையுமோர்பத்துளம்பிரார்க்கு *
நிச்சலும்விண்ணப்பம்செய்ய நீள்கழல்சென்னிபொருமே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

† 'அதுவே' என்பதும் பாடம்.

க0-ஆந் திருவாய்மொழி—பொருமாநீள்படை.

[ஈச்வரனுடைய நிர்ஹேதுக உபகாரத்வத்தை அருளிச்செய்தல்.]

கலிவிருத்தம்.

பண் - தக்கராகம், தாளம் - ஏழொத்து. பைரவிராகம் - ஆதிதாளம்.

↓↓ பொருமாநீள்படை ஆழிசங்கத்தொடு *
திருமாநீள்கழல் ஏழுலகும்தொழ *
ஒருமாணிக் குறளாகிநிமிர்ந்த * அக்
கருமாணிக்கம் என்கண்ணுளதாகுமே. (க)

கண்ணுள்ளேநிற்கும் காதன்மையால்தொழில் *
எண்ணிலும்வரும் என்னினிவேண்டுவம்? *
மண்ணும்நீரும் எரியும்நல்வாயுவும் *
விண்ணுமாய்விரியும் எம்பிரானையே. (உ)

எம்பிரானை எந்தைதந்தைதந்தைக்கும்
தம்பிரானை * தண்தாமரைக்கண்ணனை *
கொம்பராவு நுண்ணேரிடைமார்வனை *
எம்பிரானைத்தொழாய் மடநெஞ்சமே! (ங)

நெஞ்சமே! நல்லைநல்லை உன்னைப்பெற்றால்
என்செய்யோம்? * இனியென்னகுறைவினம்? *
மைந்தனை மலராள்மணவாளனை *
துஞ்சும்போதும் விடாதுதொடர்கண்டாய். (ச)

கண்டாயேநெஞ்சே! கருமங்கள்வாய்க்கின்று * ஓர்
எண்தானுமின்றியே வந்தியலுமாறு *
உண்டானை உலகேழும்ஓர்மூவடி
கொண்டானை * கண்டுகொண்டனைநீயுமே. (ரு)

நீயும்நானும் இந்நேர்நிற்கில் * மேல்மற்றோர்
நோயும்சார்கொடான் நெஞ்சமே! சொன்னேன் *
தாயும்தந்தையுமாய் இவ்வுலகினில் *
வாயுமீசன் மணிவண்ணனெந்தையே. (சு)

எந்தையே! என்றும் எம்பெருமான்! என்றும் *
சிந்தையுள்வைப்பன் சொல்லுவன்பாவியேன் *
எந்தை! எம்பெருமான்! என்று வானவர்
சிந்தையுள்வைத்து * சொல்லும்செல்வனையே. (எ)

செல்வன்நாரணனென்ற சொல்கேட்டலும் *
மல்குங்கண்பனி நாடுவன்மாயமே *
அல்லும்நன்பகலும் இடைவீடின்றி *
நல்கியென்னைவிடான் நம்பிநம்பியே. (அ)

↓↓ நம்பியைத் தென்குறுங்குடிநின்ற * அச்
செம்பொனேதிகழும் திருமூர்த்தியை *
உம்பர்வானவர் ஆதியஞ்சோதியை *
எம்பிரானை என்சொல்லிமறப்பனோ? (௯)

மறப்புஞ்ஞானமும் நானொன்றுணர்ந்திலன் *
மறக்குமென்று செந்தாமரைக்கண்ணொடு *
மறப்பறஎன்னுள்ளே மன்னினான்தன்னை *
மறப்பனோ? இனி யானென்மணியையே. (க0)

↓↓ மணியைவானவர்கண்ணனைத் தன்னதோ
ரணியை * தென்குருகூர்ச்சடகோபன் * சொல்
பணிசெயாயிரத்துள் இவைபத்துடன் *
தணிவிலர்கற்பரேல் கல்விவாயுமே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்து.

பகவத் கைங்கர்யத்தில் நேர்ந்த களையை அறுத்தல்.

க - ஆந் திருவாய்மொழி—வாயுந்திரை.

[எம்பெருமான் மறையநிற்க, ஆழ்வார் ஒரு பிராட்டியவஸ்தையடைந்து அசேதநங்களையும் திர்யக்குகளையும் தம்மோடு ஸமதுஃகிகளாக எண்ணி ப்ரலாபித்தல்.]

தரவுகொச்சகக்கலிப்பா.

பண் - புறநீர்மை, தாளம் - இடையொத்து.
யதுகுலகாம்போதிராகம் - ஆதிதாளம்.

↓↓ வாயுந்திரையுகளும் கானல்மடநாராய் ! *
ஆயுமமருலகும் துஞ்சிலும்நீதுஞ்சாயால் *
நோயும்பயலைமையும் மீதூரஎம்மேபோல் *
நீயுந்திருமாலால் நெஞ்சங்கோட்பட்டாயே ? (க)

கோட்பட்டசிந்தையையாய்க் கூர்வாயவன்றிலே ! *
சேட்பட்டயாமங்கள் சேராதிரங்குதியால் *
ஆட்பட்டஎம்மேபோல் நீயும்அரவணையான் *
தாட்பட்டதண்துழாய்த்தாமம் காமுற்றாயே ? (உ)

காமுற்றகையறவோடு எல்லே!இராப்பகல் *
நீமுற்றக்கண்துயிலாய் நெஞ்சுருகியேங்குதியால் *
தீமுற்றத்தென்னிலங்கை யூட்டினான் தாள்நயந்த *
யாமுற்றதுற்றாயோ ? வாழிகனைகடலே ! (௩)

கடலும்மலையும் விசும்பும்துழாய்எம்போல் *
சுடர்கொளிராப்பகல் துஞ்சாயால்தண்வாடாய் ! *
அடல்கொள்படையாழி அம்மானைக்காண்பான்நீ *
உடலம்நோயுற்றாயோ ? ஊழிதோறூழியே. (௪)

ஊழிதோறூழி உலகுக்குநீர்கொண்டு *
தோழியரும்யாமும்போல் நீராய்நெகிழ்கின்ற *
வாழியவானமே ! நீயும்மதுசூதன் *
பாழிமையில்பட்டுஅவன்கண் பாசத்தால்நைவாயே ? (௫)

நைவாயவெம்மேபோல் நாண்மதியே ! நீஇந்நாள் *
மைவானிருளகற்றாய் மாழாந்துதேம்புதியால் *
ஐவாயரவணைமேல் ஆழிப்பெருமானார் *
மெய்வாசகங்கேட்டு உன்மெய்ந்நீர்மைதோற்றாயே ? (௬)

தோற்றோம்மடநெஞ்சம் எம்பெருமான்நாரணற்கு * எம்
ஆற்றாமைசொல்லி அழுவோமைநீநடுவே *
வேற்றோர்வகையில்கொடிதாய் எனையூழி *
மாற்றாண்மை நிற்றியோ ? வாழிகனையிருளே ! (௭)

இருளின்திணிவண்ணம் மாநீர்க்கழியேபோய் *
மருளுற்றிராப்பகல் துஞ்சிலும்நீதுஞ்சாயால் *
† உருளும்சகடம் உதைத்தபெருமானார் *
அருளின்பெருநசையால் ஆழாந்துநொந்தாயே ? (௮)

நொந்தாராக்காதல்நோய் மெல்லாவியுள்ளுலர்த்த *
நந்தாவிளக்கமே ! நீயுமளியத்தாய் *
செந்தாமரைத்தடங்கண் செங்கனிவாயெம்பெருமான் *
அந்தாமத்தண்துழாய் ஆசையால்வேவாயே ? (௯)

---

† 'உருளின்' என்பது உரையின் பாடம்.

வேவாரவேட்கைநோய் மெல்லாவியுள்ளுலர்த்த *
ஓவாதிராப்பகல் உன்பாலேவீழ்த்தொழிந்தாய் *
மாவாய்பிளந்து மருதிடைபோய்மண்ணளந்த *
மூவாமுதல்வா! இனியெம்மைச்சோரேலே. (கo)

↓↓ சோராதஎப்பொருட்கும் ஆதியாம்சோதிக்கே *
ஆராதகாதல் குருகூர்ச்சடகோபன் *
ஓராயிரஞ்சொன்ன அவற்றுளிவைபத்தும் *
சோரார்விடார்கண்டீர் வைகுந்தம்திண்ணனவே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

உ - ஆந் திருவாய்மொழி—திண்ணன்வீடு.

[எம்பெருமானுடைய பரத்வத்தை அவதாரத்திலே அநுஸந்தித்துப் பரோபதேசம்செய்தல்.]

கலிவிருத்தம்.

பண் - தக்கராகம், தாளம் - ஏழொத்து. சுருட்டிராகம் - ரூபகதாளம்.

↓↓ † திண்ணன்வீடு முதல்முழுதுமாய் *
எண்ணின்மீதியன் எம்பெருமான் *
மண்ணும்விண்ணுமெல்லாம் உடனுண்ட * நங்
கண்ணன்கண்ணல்லது இல்லையோர்கண்ணே. (க)

ஏ! பாவம்பரமே ஏழுலகும் *
ஈபாவஞ்செய்து அருளாலளிப்பாரார்? *
மாபாவம்விட அரற்குப்பிச்சைபெய் *
கோபாலகோளரி ஏறன்றியே. (உ)

ஏறனைப்பூவனைப் பூமகள்தன்னை *
வேறின்றிவிண்தொழத் தன்னுள்வைத்து *
மேல்தன்னைமீதிட நிமிர்ந்துமண்கொண்ட *
மால்தனில்மிக்கும் ஓர்தேவுமுளதே? (ங)

தேவுமெப்பொருளும்படைக்க *
பூவில் நான்முகனைப்படைத்த *
தேவனெம்பெருமானுக்கல்லால் *
பூவும்பூசனையும்தகுமே? (ச)

---

† 'திண்நல்வீடு' என்று பாடாந்தரம்.

தருஞ்சீர்த் தன் தனிமுதலினுள்ளே *
மிருந்தேவும் எப்பொருளும்படைக்க *
தருங்கோலத் தாமரைக்கண்ணனெம்மான் *
மிருஞ்சோதி மேலறிவார்யவரே? (ரு)

யவரும்யாவையும் எல்லாப்பொருளும் *
கவர்வின்றித் தன்னுளொடுங்கநின்ற *
பவர்கொள்ஞான வெள்ளச்சுடர்மூர்த்தி *
அவர்எம்மாழி அம்பள்ளியாரே. (சு)

பள்ளியாலிலை ஏழுலகும்கொள்ளும் *
வள்ளல் வல்வயிற்றுப்பெருமான் *
உள்ளுளார் அறிவார்? அவன்தன் *
கள்ளமாய மனக்கருத்தே. (எ)

கருத்தில்தேவும் எல்லாப்பொருளும் *
வருத்தித்த மாயப்பிரானையன்றி * ஆரே?
திருத்தித் திண்ணிலைமூவுலகும் * தம்முள்
இருத்திக்காக்கு மியல்வினரே. (அ)

காக்குமியல்வினன் கண்ணபெருமான் *
சேர்க்கைசெய்து தன்னுந்தியுள்ளே *
வாய்த்ததிசைமுகன் இந்திரன்வானவர் *
ஆக்கினான் தெய்வவுலகுகளே. (கூ)

கள்வா!எம்மையும் ஏழுலகும் * நின்
னுள்ளேதோற்றிய இறைவ!என்று *
வெள்ளேறன்நான்முகன் இந்திரன்வானவர் *
புள்ளூர்தி கழல்பணிந்தேத்துவரே. (கய)

↓↓ ஏத்தவேழுலகும்கொண்ட கோலக்
கூத்தனை * குருகூர்ச்சடகோபன்சொல் *
வாய்த்தவாயிரத்துள் இவைபத்துடன் *
ஏத்தவல்லவர்க்கு இல்லையோருனமே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௩ - ஆந் திருவாய்மொழி—ஊனில்வாழ்.

[பகவதநுபவத்தைப் பூர்ணமாகப்பெற்று, உசாத்துணையான நித்யஸூரிகளோடே எப்போது கூடப்போகிறோ மென்கிற ப்ரார்த்தனையோடே தலைக்கட்டுதல்.]

கலிவிருத்தம்.

பண் - நாட்டம், தாளம் - ஏழொத்து. முகாரிராகம் - அடதாளம்.

↓↓ ஊனில்வாழுயிரே! நல்லைபோஉன்னைப்பெற்று *
வானுளார்பெருமான் மதுசூதனென்னம்மான் *
தானும்யானுமெல்லாம் தன்னுள்ளேகலந்தொழிந்தோம் *
தேனும்பாலும்நெய்யும் கன்னலும்அமுதுமொத்தே. (௧)

ஒத்தார்மிக்காரை இலையாயமாமாயா! *
ஒத்தாய்எப்பொருட்கும் உயிராய் * என்னைப்பெற்ற
அத்தாயாய்த்தந்தையாய் அறியாதன † வறிவித்த *
அத்தா! நீசெய்தன அடியேனறியேனே. (௨)

அறியாக்காலத்துள்ளே அடிமைக்கண்அன்புசெய்வித்து *
அறியாமாமாயத்து அடியேனைவைத்தாயால் *
அறியாமைக்குறளாய் நிலம்மாவலி! மூவடியென்று *
அறியாமைவஞ்சித்தாய் எனதாவியுள்கலந்தே. (௩)

எனதாவியுள்கலந்த பெருநல்லுதவிக்கைம்மாறு *
எனதாவிதந்தொழிந்தேன் இனிமீள்வதென்பதுண்டே? *
எனதாவியாவியும்நீ பொழிலேழுமுண்டவெந்தாய்! *
எனதாவியார்?யான்ஆர்? தந்தநீகொண்டாக்கினையே. (௪)

இனியார்ஞானங்களால் எடுக்கலெழாதவெந்தாய்! *
கனிவார்வீட்டின்பமே! என்கடல்படாவமுதே! *
தனியேன்வாழ்முதலே! பொழிலேழுமேனமொன்றாய் *
நுனியார்கோட்டில்வைத்தாய்! உனபாதம்சேர்ந்தேனே. (௫)

சேர்ந்தார்தீவினைகட்கு அருநஞ்சைத்திண்மதியை *
தீர்ந்தார்தம்மனத்துப் பிரியாதவருயிரை *
சோர்ந்தேபோகல்கொடாச்சுடரை அரக்கியைமூக்கு
ஈர்ந்தாயை * அடியேனடைந்தேன் முதல்முன்னமே. (௬

† 'அறிவித்து' என்றும் பாடம்.

முன்னல்யாழ்பயில்நூல் நரம்பின்முதிர்சுவையே! *
பன்னலார்பயிலும் பரனே! பவித்திரனே! *
கன்னலே! அமுதே! கார்முகிலே! என்கண்ணா! *
நின்னலாலிலேன்காண் என்னைநீகுறிக்கொள்ளே. (எ)

குறிக்கொள்ஞானங்களால் எனையூழிசெய்தவமும் *
கிறிக்கொண்டிப்பிறப்பே சிலநாளிலெய்தினன்யான் *
உறிக்கொண்டவெண்ணெய்பால் ஒளித்துண்ணுமம்மான்பின் *
நெறிக்கொண்டநெஞ்சனாய்ப் பிறவித்துயர்கடிந்தே. (அ)

கடிவார் தண்ணந்துழாய்க் கண்ணன்விண்ணவர்பெருமான் *
படிவானமிறந்த பரமன்பவித்திரன்சீர் *
செடியார்நோய்கள்கெடப் படிந்துகுடைந்தாடி *
அடியேன்வாய்மடுத்துப் பருகிக்களித்தேனே. (௯)

களிப்பும்கவர்வுமற்றுப் பிறப்புப்பிணிமூப்பிறப்பற்று *
ஒளிக்கொண்டசோதியமாய் உடன்கூடுவதென்றுகொலோ? *
துளிக்கின்ற † வானிந்நிலம் சுடராழிசங்கேந்தி *
அளிக்கின்றமாயப்பிரான் அடியார்கள்குழாங்களையே. (௧௦)

↓↓ குழாங்கொள்பேரரக்கன் குலம்வீயமுனிந்தவனை *
குழாங்கொள்தென்குருகூர்ச் சடகோபன்தெரிந்துரைத்த *
குழாங்கொளாயிரத்துள் இவைபத்துமுடன்பாடி *
குழாங்களாய்அடியீருடன் கூடிநின்றாடுமினே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ச-ஆந் திருவாய்மொழி—ஆடியாடி.

[தலைவனைப் பிரிந்த தலைவியின் ஆற்றாமை கண்ட தாய் தலைவனைநோக்கி இரங்கிக்கூறும் பாசுரம்.]

வஞ்சிவிருத்தம்.

பண் - நாட்டம். தாளம் - ஏழொத்து. யமுநாகல்யாணிராகம்-திரிபுடைதாளம்.

↓↓ ஆடியாடி அகம்கரைந்து * இசை
பாடிப்பாடிக் கண்ணீர்மல்கி * எங்கும்
நாடிநாடி நரசிங்கா! என்று *
வாடிவாடும் இவ்வாணுதலே. (௧)

† 'வானும்நிலம்' என்றும் பாடம்.

வாணுதல் இம்மடவரல் * உம்மைக்
காணுமாசையுள் நைகின்றாள் * விறல்
வாணன் ஆயிரந்தோள் துணித்தீர்! * உம்மைக்
காண நீரிரக்கமிலீரே. (௨)

இரக்கமனத்தோடு எரியணை *
அரக்கும்மெழுகும் ஒக்குமிவள் *
இரக்கமெழீர் இதற்கென்செய்கேன்? *
அரக்கனிலங்கை செற்றீருக்கே. (௩)

இலங்கைசெற்றவனே! என்னும் * பின்னும்
வலங்கொள் புள்ளுயர்த்தாய்! என்னும் * உள்ளம்
மலங்க வெவ்வுயிர்க்கும் * கண்ணீர்மிகக்
கலங்கிக் கைதொழும்நின்றிவளே. (௪)

இவளிராப்பகல் வாய்வெரீஇ * தன
குவளையொண் கண்ணநீர்கொண்டாள் * வண்டு
திவளும் தண்ணந்துழாய்கொடீர் * என
தவளவண்ணர் தகவுகளே. (௫)

தகவுடையவனே! என்னும் * பின்னும்
மிகவிரும்பும் பிரானென்னும் * எனது
அகவுயிர்க்கு அமுதே! என்னும் * உள்ளம்
உகவுருகி நின்றுள்ளுளே. (௬)

உள்ளுளாவி உலர்ந்துலர்ந்து * என
வள்ளலே! கண்ணனே! என்னும் * பின்னும்
வெள்ளநீர்க் கிடந்தாய்! என்னும் * என
கள்விதான்பட்ட வஞ்சனையே! (௭)

வஞ்சனே! என்னும் கைதொழும் * தன
நெஞ்சம்வேவ நெடிதுயிர்க்கும் * விறற்
கஞ்சனை வஞ்சனைசெய்தீர்! * உம்மைத்
தஞ்சமென்று இவள்பட்டனவே! (௮)

பட்டபோது எழுபோதறியாள் * விரை
மட்டலர் தண்துழாயென்னும் * சுடர்
வட்டவாய் நுதிநேமியீர்! * நுமது
இட்டமென்கொல்? இவ்வேழைக்கே. (௯)

ஏழைபேதை இராப்பகல் * தன
கேழி லொண்கண்ணநீர்கொண்டாள் * கிளர்
வாழ்வைவேவ இலங்கைசெற்றீர்! * இவள்
மாழைநோக்கொன்றும் வாட்டேன்மினே. (கo)

↓↓ வாட்டமில்புகழ் வாமனனை * இசை
கூட்டி வண்சடகோபன்சொல் * அமை
பாட்டு ஓராயிரத்திப்பத்தால் * அடி
சூட்டலாகும் அந்தாமமே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ரு - ஆந் திருவாய்மொழி—அந்தாமத்தன்பு.

[ஈச்வரன் தனது திவ்யபூஷண திவ்யாயுத திவ்யாவயவ ஸௌந்தர்யங்களோடு வந்து கலக்க, அதனால் ஹ்ருஷ்டராதலை ஆழ்வார் அருளிச்செய்தல்.]

தரவுகொச்சகக்கலிப்பா.

பண் - சீகாமரம், தாளம் - நடையொத்து. பைரவிராகம் - ஆதிதாளம்.

↓↓ அந்தாமத்தன்புசெய்து என்னாவிசேரம்மானுக்கு *
அந்தாம † வாழ்முடிசங்கு ஆழிநூலாரமுள *
செந்தாமரைத்தடங்கண் செங்கனிவாய்செங்கமலம் *
செந்தாமரையடிக்கள் செம்பொன்திருவுடம்பே. (க)

திருவுடம்புவான்சுடர் செந்தாமரைகண்கைகமலம் *
திருவிடமேமார்பம் அயனிடமேகொப்பூழ் *
ஒருவிடமும் எந்தைபெருமாற்கரனேயோ! *
ஒருவிடமொன்றின்றி என்னுள்கலந்தானுக்கே. (உ)

என்னுள்கலந்தவன் செங்கனிவாய்செங்கமலம் *
மின்னும்சுடர்மலைக்குக் கண்பாதம்கைகமலம் *
மன்னுமுழுவேழுலகும் வயிற்றினுள *
தன்னுள்கலவாதது எப்பொருளும்தானிலையே. (ங)

எப்பொருளும்தானாய் மரதகக்குன்றமொக்கும் *
அப்பொழுதைத்தாமரைப்பூக் கண்பாதம்கைகமலம் *
எப்பொழுதும்நாள்திங்கள் ஆண்டூழியூழிதொறும் *
அப்பொழுதைக்கப்பொழுது என்னாராவமுதமே. (ச)

† 'வாண்முடி' என்பதும் பாடம்.

ஆராவமுதமாய் அல்லாவியுள்கலந்த *
காரார்கருமுகில்போல் என்னம்மான்கண்ணனுக்கு *
நேராவாய்செம்பவளம் கண்பாதம்கைகமலம் *
பேராரநீள்முடிநாண் பின்னுமிழைபலவே. (ரு)

பலபலவேயாபரணம் பேரும்பலபலவே *
பலபலவேசோதிவடிவு பண்பெண்ணில் *
பலபலகண்டுண்டு கேட்டுற்றுமோந்தின்பம் *
பலபலவேஞானமும் பாம்பணைமேலாற்கேயோ ! (சு)

பாம்பணைமேல்பாற்கடலுள் பள்ளியமர்ந்ததுவும் *
காம்பணைதோள்பின்னைக்கா ஏறுடனேழ்செற்றதுவும் *
தேம்பணையசோலை மராமரமேழெய்ததுவும் *
பூம்பிணையதண்துழாய்ப் பொன்முடியம்போரேறே. (எ)

பொன்முடியம்போரேற்றை எம்மானை, நால்தடந்தோள் *
தன்முடிவொன்றில்லாத தண்துழாய்மாலையனை *
என்முடிவுகாணாதே என்னுள்கலந்தானை *
சொல்முடிவுகாணேன்நான் சொல்லுவதென்? சொல்லீரே. (அ)

சொல்லீரென்னம்மானை என்னாவியாவிதனை *
எல்லையில்சீர் என்கருமாணிக்கச்சுடரை *
நல்ல † வமுதம் பெறற்கரிய வீடுமாய் *
அல்லிமலர்விரையொத்து ஆணல்லன்பெண்ணல்லனே. (௯)

ஆணல்லன்பெண்ணல்லன் அல்லாவலியுமல்லன் *
காணலுமாகான் உளனல்லனில்லையல்லன் *
பேணுங்காற்பேணும் உருவாகும்அல்லனுமாம் *
கோணைபெரிதுடைத்து எம்பெம்மானைக்கூறுதலே. (௧௦)

கூறுதலொன்றாராக் குடக்கூத்தவம்மானை *
கூறுதலேமேவிக் குருகூர்ச்சடகோபன் *
கூறினவந்தாதி ஓராயிரத்துள்இப்பத்தும் *
கூறுதல்வல்லாருளரேல் கூடுவர்வைகுந்தமே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

† 'அமுதும்' என்பதும் பாடம்.

சு-ஆந் திருவாய்மொழி—வைகுந்தா!

[ஆழ்வாரது நைச்சியத்தைக் கண்டு எம்பெருமான் இவரது பிரிவைச் சங்கிக்க, அச்சங்கையைப் போக்குதல்.]

ஆசிரியத்துறை.

பண் - பழந்தக்கராகம், தாளம் - ஏழொத்து.

ஆநந்தபைரவிராகம் - ஆதிதாளம்.

↓↓ வைகுந்தா! மணிவண்ணனே! என்பொல்லாத்திருக்குறளா!
வைகும்வைகல்தோறும் அமுதாயவானேறே! * [என்னுள் மன்னி*
செய்குந்தாவருந்தீமையுன்னடியார்க்குத்தீர்த்து அசுரர்க்குத்தீமைகள்
செய்குந்தா! * உன்னைநான்பிடித்தேன்கொள் சிக்கெனவே. (க)

சிக்கெனச்சிறிதோரிடமும் புறப்படாத்தன்னுள்ளே * உலகுகள்
ஒக்கவேவிழுங்கிப் புகுந்தான்புகுந்ததற்பின் *
மிக்கஞானவெள்ளச்சுடர்விளக்காய்த் துளக்கற்றமுதமாய் * எங்கும்
பக்கம்நோக்கறியான் என்பைந்தாமரைக்கண்ணனே. (உ)

தாமரைக்கண்ணனை விண்ணோர்பரவுந்தலைமகனை * துழாய்விரைப்
பூமருவுகண்ணி எம்பிரானைப்பொன்மலையை *
நாம்மருவிநன்கேத்தியுள்ளிவணங்கி நாம்மகிழ்ந்தாட * நாவலர்
பாமருவிநிற்கத்தந்த † பான்மையே! வள்ளலே! (ங)

வள்ளலே! மதுசூதனா! என்மரதகமலையே! * உனைநினைந்
தெள்கல்தந்தவெந்தாய்! உன்னையெங்ஙனம்விடுகேன்? *
வெள்ளமேபுரைநின்புகழ்குடைந்தாடிப்பாடிக் களித்துகந்துகந்து *
உள்ளநோய்களெல்லாம்துரந்து உய்ந்துபோந்திருந்தே. (ச)

உய்ந்துபோந்தென்னுலப்பிலாத வெந்தீவினைகளைநாசஞ்செய்து*உன
அந்தமிலடிமைஅடைந்தேன் விடுவேனோ? * [து
ஐந்துபைந்தலையாடரவணைமேவிப் பாற்கடல்யோகநித்திரை *
சிந்தைசெய்தவெந்தாய்? உன்னைச்சிந்தைசெய்துசெய்தே. (ரு)

உன்னைச்சிந்தைசெய்துசெய்து உன்நெடுமாமொழியிசைபாடியாடி *
முன்னைத்தீவினைகள் முழுவேரரிந்தனன்யான் * [என்
உன்னைச்சிந்தையினாலிகழ்ந்த இரணியனகல்மார்வங்கீண்ட * என்
முன்னைக்கோளரியே! முடியாததென்னெனக்கே? (சா)

---

† 'பான்மையேய்' என்றும் பாடம்.

முடியாததென்? எனக்கேலினி முழுவேழுலகுமுண்டான் * உகந்து
அடியேனுள்புகுந்தான் அகல்வானுமல்லனினி * [வந்து
செடியார்நோய்களெல்லாம்துரந்து எமர்கீழ்மேலெழுபிறப்பும் *
விடியாவெந்நரகத்து என்றும்சேர்தல்மாறினரே. (எ)

மாறிமாறிப்பலபிறப்பும்பிறந்து அடியையடைந்துள்ளந்தேறி *
ஈறிலின்பத்திருவெள்ளம் யான்மூழ்கினன் *
பாறிப்பாறியசுரர்தம் பல்குழாங்கள்நீறெழ * பாய்பறவையொன்று
ஏறிவீற்றிருந்தாய்! உன்னையென்னுள்நீக்கேலெந்தாய்! (அ)

எந்தாய்! தண்திருவேங்கடத்துள்நின்றாய்! இலங்கைசெற்றாய்! *மரா
மரம் பைந்தாளேழுருவ ஒருவாளிகோத்தவில்லா! * [மரம்
கொந்தார்தண்ணந்துழாயினாய்! அமுதே! உன்னையென்னுள்ளேகுழை
மைந்தா! வானேறே! இனியெங்குப்போகின்றதே? [த்தவெம் *

போகின்றகாலங்கள்போயகாலங்கள் போகுகாலங்கள்*தாய்தந்தையுயி
ராகின்றாய்! உன்னைநானடைந்தேன்விடுவேனோ? *
பாகின்றதொல்புகழ்மூவுலகுக்கும் நாதனே! பரமா! * தண்வேங்கடம்
மேகின்றாய்! தண்துழாய்விரைநாறுகண்ணியனே! (௧௦)

↓↓ கண்ணித்தண்ணந்துழாய்முடிக் கமலத்தடம்பெருங்கண்ணனை*பு
கழ் நண்ணித்தென்குருகூர்ச் சடகோபன்மாறன்சொன்ன * [கழ்
எண்ணில்சோர்விலந்தாதி ஆயிரத்துளிவையுமோர்பத்திசையொடும் *
பண்ணிற்பாடவல்லாரவர் கேசவன்தமரே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எ - ஆந் திருவாய்மொழி—கேசவன்தமர்.

[எம்பெருமானது திருவருளால் தமது ஏழேழு தலைமுறையோரும் பெருமை பெற்றாரென்று அருளிச்செய்தல்.]

கலிநிலைத்துறை.

பண் - தக்கராகம், தாளம் - ஏழொத்து. கல்யாணிராகம் - ரூபகதாளம்.

↓↓ கேசவன்தமர் கீழ்மேலெமரேழெழுபிறப்பும் *
மாசதிரிதுபெற்று நம்முடைவாழ்வுவாய்க்கின்றவா! *
ஈசனென்கருமாணிக்கமென்செங்கோலக்கண்ணன் விண்ணோர்
நாயகன் * எம்பிரானெம்மான் நாராயணனாலே. (௧)

நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன் வேதமயன் *
காரணம் கிரிசை கருமமிவை முதல்வனெந்தை *
சீரணங்கமரர் பிறர்பலரும் தொழுதேத்த நின்று *
வாரணத்தை மருப்பொசித்த பிரான் என் மாதவனே. (௨)

மாதவனென்றதே கொண்டு என்னையினி இப்பால் பட்டது *
யாதவங்களும் சேர்கொடேனென்று என்னுள் புகுந்திருந்து *
தீதவம் கெடுக்கும் அமுதம் செந்தாமரைக்கண் குன்றம் *
கோதவமில் என் கன்னற்கட்டி எம்மானென் கோவிந்தனே. (௩)

கோவிந்தன் குடக்கூத்தன் கோவலனென்றென்றே குனித்து *
தேவும் தன்னையும் பாடியாடத் திருத்தி * என்னைக்கொண்டென்
பாவம் தன்னையும் பாறக்கைத்து எமரேழேழ் பிறப்பும் *
மேவும் தன்மையமாக்கினான் வல்லனெம்பிரான் விட்டுவே. (௪)

விட்டிலங்கு செஞ்சோதித் தாமரைபாதம் கைகள் கண்கள் *
விட்டிலங்கு கருஞ்சுடர் மலையே திருவுடம்பு *
விட்டிலங்கு மதியம் சீர் சங்கு சக்கரம் பரிதி *
விட்டிலங்கு முடியம்மான் மதுசூதனன் தனக்கே. (௫)

மதுசூதனை அன்றி மற்றிலேனென்று எத்தாலும் கருமமின்றி *
துதிசூழ்ந்த பாடல்கள் பாடியாட நின்று ஊழியூழி தொறும் *
எதிர்சூழல் புக்கு எனைத்தோர் பிறப்பும் எனக்கே அருள்கள் செய்ய *
விதிசூழ்ந்ததால் எனக்கேலம்மான் திரிவிக்கிரமனையே. (௬)

திரிவிக்கிரமன் செந்தாமரைக்கண் எம்மானென் செங்கனிவாய் *
உருவில் பொலிந்த வெள்ளைப் பளிங்கு நிறத்தனனென்றென்று * உள்ளிப்
பரவிப் பணிந்து பல்லூழியூழி நின் பாதபங்கயமே *
மருவித் தொழும் மனமே தந்தாய் வல்லைகாணென் வாமனனே! (௭)

வாமனன்! என் மரதகவண்ணன்! தாமரைக்கண்ணினன்!
காமனைப் பயந்தாய்! * என்றென்று உன் கழல் பாடியே பணிந்து *
தூமனத்தனனாய்ப் பிறவித் துழதி நீங்க * என்னைத்
தீமனங்கெடுத்தாய் உனக்கென் செய்கேன்? என் சிரீதரனே! (௮)

சிரீஇதரன் செய்யதாமரைக்கண்ணன் என்றென்று இராப்பகல்வாய்
வெரீஇ * அலமந்து கண்கள் நீர்மல்கி வெவ்வுயிர்த்துயிர்த்து *
மரீஇய தீவினை மாள இன்பம் வளர வைகல் வைகல்
இரீஇ * உன்னை என்னுள் வைத்தனை என் இருடீகேசனே! (௯)

இருடீகேசனெம்பிரான் இலங்கையரக்கர்குலம் *
முருடுதீர்த்தபிரான்எம்மான் அமரர்பெம்மானென்றென்று *
தெருடியாகில்நெஞ்சே! வணங்கு திண்ணமறியறிந்து *
மருடியேலும்விடேல்கண்டாய் நம்பிபற்பநாபனையே. (௧௦)

பற்பநாபன் உயர்வறவுயரும்பெருந்திறலோன் *
எற்பரன்என்னையாக்கிக்கொண்டு எனக்கேதன்னைத்தந்த
கற்பகம் * என்னமுதம்கார்முகில்போலும் வேங்கடநல்
வெற்பன் * விசும்போர்பிரான் எந்தைதாமோதரனே. (௧௧)

தாமோதரனைத்தனிமுதல்வனை ஞாலமுண்டவனை *
ஆமோதரமறிய ஒருவர்க்கென்றேதொழுமவர்கள் *
தாமோதரனுருவாகிய சிவற்கும்திசைமுகற்கும் *
ஆமோதரமறிய எம்மானைஎன்னாழிவண்ணனையே. (௧௨)

↓↓ வண்ணமாமணிச்சோதியை அமரர்தலைமகனை *
கண்ணனைநெடுமாலைத் தென்குருகூர்ச்சடகோபன் *
பண்ணியதமிழ்மாலை ஆயிரத்துள்ளிவைபன்னிரண்டும் *
பண்ணிற்பன்னிருநாமப்பாட்டு அண்ணல்தாளணைவிக்குமே. ௧௩)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

அ - ஆந் திருவாய்மொழி—அணைவது.

[எம்பெருமான் மோக்ஷமளிப்பனென்பதை உலகத்தார்க்குஉபதேசித்தல்.]

தரவுகொச்சகக்கலிப்பா.

பண் - இந்தளம், தாளம் - ஏழொத்து. ஸௌராஷ்டராகம் - அடதாளம்.

↓↓ அணைவதரவணைமேல் பூம்பாவையாகம்
புணர்வது * இருவரவர்முதலும் தானே *
இணைவனாமெப்பொருட்கும், வீடுமுதலாம் *
புணைவன் பிறவிக்கடல்நீந்துவார்க்கே. (௧)

நீந்தும் துயர்ப்பிறவி உட்படமற்றெவ்வெவையும் *
நீந்தும்துயரில்லா வீடுமுதலாம் *
பூந்தண்புனற்பொய்கை யானையிடர்கடிந்த *
பூந்தண்துழாய் என்தனிநாயகன் புணர்ப்பே. (௨)

புணர்க்குமயனும் அழிக்குமரனும் *
புணர்த்ததன்னுந்தியோடு ஆகத்துமன்னி *
புணர்த்ததிருவாகித் தன்மார்வில்தான்சேர் *
புணர்ப்பன் பெரும்புணர்ப்பு எங்கும்புலனே. (ங)

புலனைந்துமேயும் பொறியைந்துநீங்கி *
நலமந்தமில்லது ஓர்நாடுபுகுவீர் *
அலமந்துவீய † அசுரரைச்செற்றான் *
பலமுந்துசீரில் படிமினோவாதே. (ச)

ஓவாத்துயர்ப்பிறவி உட்படமற்றெவ்வெவையும் *
மூவாத்தனிமுதலாய் மூவுலகும்காவலோன் *
மாவாகியாமையாய் மீனாகிமானிடமாம் *
தேவாதிதேவபெருமான் என்தீர்த்தனே. (ரு)

தீர்த்தனுலகளந்த சேவடிமேல்பூந்தாமம் *
சேர்த்தியவையே சிவன்முடிமேல்தான்கண்டு *
பார்த்தன்தெளிந்தொழிந்த பைந்துழாயான்பெருமை *
பேர்த்துமொருவரால் பேசக்கிடந்ததே ? (சு)

கிடந்திருந்துநின்றளந்து கேழலாய்க்கீழ்புக்
கிடந்திடும் * தன்னுள்கரக்குமுமிழும் *
தடம்பெருந்தோளாரத்தழுவும் பாரென்னும்
மடந்தையை * மால்செய்கின்றமால் ஆர்காண்பாரே ? (எ)

காண்பாரார் ? எம்மீசன் கண்ணனையென்காணுமாறு ? *
ஊண்பேசில் எல்லாவுலகுமோர்துற்றாற்றா *
சேண்பாலவீடோ உயிரோமற்றெப்பொருட்கும் *
ஏண்பாலும்சோரான் பரந்துளனாமெங்குமே. (அ)

எங்குமுளன்கண்ணனென்ற மகனைக்காய்ந்து *
இங்கில்லையாலென்று இரணியன்தூண்புடைப்ப *
அங்கப்பொழுதே அவன்வீயத்தோன்றிய * என்
சிங்கப்பிரான்பெருமை ஆராயும்சீர்மைத்தே ? (கூ)

சீர்மைகொள்வீடு சுவர்க்கம்நரகீறா *
ஈர்மைகொள்தேவர்நடுவா மற்றெப்பொருட்கும் *
வேர்முதலாய்வித்தாய்ப் பரந்துதனிநின்ற *
கார்முகில்போல்வண்ணன் என்கண்ணனைநான்கண்டேனே. (க0)

† 'அசுரைச்செற்றான்' என்பது சிலர்பாடம்.

↓↓ கண்தலங்கள்செய்ய கருமேனியம்மானை *
வண்டலம்பும்சோலை வழுதிவளநாடன் *
பண்தலையிற்சொன்னதமிழ் ஆயிரத்துஇப்பத்தும்வல்லார் *
விண்தலையில்வீற்றிருந்தாள்வர் எம்மாவீடே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

கூ - ஆந் திருவாய்மொழி—எம்மாவீடு.

[புருஷார்த்த நிஷ்கர்ஷம் பண்ணுதல்.]

கலிவிருத்தம்.

பண் - முதிர்ந்தகுறிஞ்சி, தாளம் - ஏழொத்து. ஆநந்தபைரவிராகம் - ஆதிதாளம்.

↓↓ எம்மாவீட்டுத் திறமும்செப்பம் * நின்
செம்மாபாதபற்புத் தலைசேர்த்து ஒல்லை *
கைம்மா துன்பம் கடிந்தபிரானே! *
அம்மா! அடியேன் வேண்டுவதீதே. (க)

† ஈதேயானுன்னைக் கொள்வதெஞ்ஞான்றும் * என்
மைதோய்சோதி மணிவண்ணவெந்தாய்! *
எய்தாநின்கழல் யானெய்த * ஞானக்
கைதா காலக்கழிவுசெய்யேலே. (உ)

செய்யேல்தீவினையென்று அருள்செய்யும் * என்
கையார்சக்கரக் கண்ணபிரானே! *
ஐயார்கண்டமடைக்கிலும் நின்கழல்
எய்யாதேத்த * அருள்செய்யெனக்கே. (ங)

எனக்கேயாட்செய் எக்காலத்துமென்று * என்
மனக்கேவந்து இடைவீடின்றிமன்னி *
தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே *
எனக்கேகண்ணனை யான்கொள்சிறப்பே. (ச)

சிறப்பில்வீடு சுவர்க்கம்நரகம் *
இறப்பிலெய்துக வெய்தற்க * யானும்
பிறப்பில் பல்பிறவிப்பெருமானை *
மறப்பொன்றின்றி என்றும்மகிழ்வேனே. (ரு)

---

† 'இதேயான்' என்ற பாடம் செய்யுளிலக்கணத்துக்குச் சேரு மென்பர்.

மகிழ்கொள்தெய்வம் உலோகமலோகம் *
மகிழ்கொள்சோதி மலர்ந்தவம்மானே! *
மகிழ்கொள்சிந்தை சொல்செய்கைகொண்டு * என்றும்
மகிழ்வுற்று உன்னைவணங்கவாராயே. (௬)

வாராய் உன்திருப்பாதமலர்க்கீழ் *
போராதேயான்வந்து அடையும்படி
தாராதாய்! * உன்னையென்னுள்வைப்பில் என்றும்
ஆராதாய்! * எனக்கென்று மெக்காலே. (௭)

எக்காலத்தெந்தையாய் என்னுள்மன்னில் * மற்
றெக்காலத்திலும் யாதொன்றும்வேண்டேன் *
மிக்கார் வேதவிமலர்விழுங்கும் * என்
அக்காரக்கனியே! உன்னையானே. (௮)

யானேயென்னை அறியகிலாதே *
யானேயென்தனதே என்றிருந்தேன் *
யானேநீ என்னுடைமையும்நீயே *
வானேயேத்தும் † எம்வானவரேறே! (௯)

ஏறேலேழும்வென்று ஏர்கொளிலங்கையை *
நீறேசெய்த நெடுஞ்சுடர்ச்சோதி! *
தேறேலென்னை உன்பொன்னடிச்சேர்த்தொல்லை *
வேறேபோக எஞ்ஞான்றும்விடலே. (௧௦)

↓↓ விடலில் சக்கரத்தண்ணலை * மேவல்
விடலில் வண்குருகூர்ச்சடகோபன்சொல் *
கெடலிலாயிரத்துள் இவைபத்தும் *
கெடலில்வீடுசெய்யும் கிளர்வார்க்கே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

† 'அவ்வானவரேறே' என்றும் பாடம்.

† க0 - ஆந் திருவாய்மொழி—கிளரொளி.

[கீழ் நிஷ்கர்ஷித்த புருஷார்த்தத்தைப் பெறும்பொருட்டுத் திருமாலிருஞ்சோலைமலையை ஆச்ரயிக்கும்படி பரோபதேசஞ்செய்தல்.]

கலிவிருத்தம்.

பண் - நாட்டம், தாளம் - ஏழொத்து. கேதாரகௌளராகம் - ஆதிதாளம்.

↓↓ கிளரொளியிளமை கெடுவதன்முன்னம் *
வளரொளிமாயோன் மருவியகோயில் *
வளரிளம்பொழில்சூழ் மாலிருஞ்சோலை *
தளர்வில ‡ ராகில் சார்வதுசதிரே. (௧)

சதிரிளமடவார் தாழ்ச்சியைமதியாது *
அதிர்குரல்சங்கத்து அழகர்தம்கோயில் *
மதிதவழ்குடுமி மாலிருஞ்சோலை *
பதியதுவேத்தி எழுவதுபயனே. (௨)

பயனல்லசெய்து பயனில்லைநெஞ்சே! *
புயல்மழைவண்ணர் புரிந்துறைகோயில் *
மயல்மிகுபொழில்சூழ் மாலிருஞ்சோலை *
அயல்மலையடைவததுகருமமே. (௩)

கருமவன்பாசம் கழித்துழன்றுய்யவே *
பெருமலையெடுத்தான் பீடுறைகோயில் *
வருமழைதவழும் மாலிருஞ்சோலை *
திருமலையதுவே அடைவதுதிறமே. (௪)

திறமுடைவலத்தால் தீவினைபெருக்காது *
அறமுயலாழிப் படையவன்கோயில் *
மறுவில்வண்சுனைசூழ் மாலிருஞ்சோலை *
புறமலைசாரப் போவதுகிறியே. (௫)

கிறியெனநினைமின் கீழ்மைசெய்யாதே *
உறியமர்வெண்ணெய் உண்டவன்கோயில் *
மறியொடுபிணைசேர் மாலிருஞ்சோலை *
நெறிபடவதுவே நினைவதுநலமே. (௬)

---

† இது, கோயில்திருவாய்மொழி. ‡ 'ஆகி' என்பது உரையின் பாடம்.

நலமெனநினைமின் நரகழுந்தாதே *
நிலமுனமிடந்தான் நீடுறைகோயில் *
மலமறுமதிசேர் மாலிருஞ்சோலை *
வலமுறையெய்தி மருவுதல்வலமே. (௭)

வலஞ்செய்துவைகல் வலங்கழியாதே *
வலஞ்செய்யும் ஆயமாயவன்கோயில் *
வலஞ்செய்யும்வானோர் மாலிருஞ்சோலை *
வலஞ்செய்துநாளும் மருவுதல்வழக்கே. (௮)

வழக்கெனநினைமின் வல்வினைமூழ்காது *
அழக்கொடியட்டான் அமர்பெருங்கோயில் *
மழக்களிற்றினஞ்சேர் மாலிருஞ்சோலை *
தொழக்கருதுவதே துணிவதுசூதே. (௯)

சூதென்றுகளவும் சூதும்செய்யாதே *
வேதமுன்விரித்தான் விரும்பியகோயில் *
மாதுறுமயில்சேர் மாலிருஞ்சோலை *
போதவிழ்மலையே புகுவதுபொருளே. (௧௦)

↓↓ பொருளென்றிவ்வுலகம் படைத்தவன்புகழ்மேல் *
மருளில்வண்குருகூர் வண்சடகோபன் *
தெருள்கொள்ளச்சொன்ன ஓராயிரத்துள்இப்பத்து *
அருளுடையவன்தாள் அணைவிக்கும்முடித்தே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

மூன்றாம்பத்து.

[கைங்கர்யஸ்வரூபம் - பாகவதசேஷத்வ பர்யந்தமான பகவத் கைங்கர்ய மென்னுதல்.]

௧- ஆந் திருவாய்மொழி—முடிச்சோதி.

[திருமாலிருஞ்சோலை அழகரது திவ்யஸௌந்தர்யத்தை அநுபவித்தல்.]

தரவுகொச்சகக்கலிப்பா.

பண் - இந்தளம், தாளம் - நடையொத்து. தண்டக்ரியைராகம் - ரூபகதாளம்

↓↓ முடிச்சோதியாய் உனதுமுகச்சோதிமலர்ந்ததுவோ ? *
அடிச்சோதிநீநின்ற தாமரையாயலர்ந்ததுவோ ? *
படிச்சோதியாடையொடும் பல்கலனாய் * நின்பைம்பொன்
கடிச்சோதிகலந்ததுவோ ? திருமாலே ! கட்டுரையே. (௧)

ட்டுரைக்கில்தாமரை நின்கண்பாதம்கையொவ்வா *
சுட்டுரைத்தநன்பொன் உன்திருமேனியொளியொவ்வாது *
ஒட்டுரைத்திவ்வுலகுஉன்னைப் புகழ்வெல்லாம் பெரும்பாலும் *
பட்டுரையாய்ப்புற்கென்றே காட்டுமால்பரஞ்சோதீ ! (௨.)

பரஞ்சோதிநீபரமாய் நின்னிகழ்ந்துபின் * மற்றோர்
பரஞ்சோதியின்மையின் படியோவிநிகழ்கின்ற *
பரஞ்சோதிநின்னுள்ளே படருலகம்படைத்த * எம்
பரஞ்சோதி ! கோவிந்தா ! பண்புரைக்கமாட்டேனே. (௩)

மாட்டாதேயாகிலும் இம்மலர்தலைமாஞாலம் * நின்
மாட்டாயமலர்புரையும் திருவுருவம்மனம்வைக்க *
மாட்டாதபலசமய மதிகொடுத்தாய் * மலர்த்துழாய்
மாட்டேநீமனம் † வைத்தாய் மாஞாலம்வருந்தாதே ? (௪)

வருந்தாதவருந்தவத்த மலர்கதிரின்சுடருடம்பாய் *
வருந்தாதஞானமாய் வரம்பின்றிமுழுதியன்றாய் ! *
வருங்காலம்நிகழ்காலம் கழிகாலமாய் * உலகை
ஒருங்காகஅளிப்பாய் ! சீர் எங்குஉலக்கஓதுவனே ? (௫)

ஓதுவாரோத்தெல்லாம் எவ்வுலகத்தெவ்வெவையும் *
சாதுவாய்நின்புகழின் தகையல்லால்பிறிதில்லை *
போதுவாழ்புனந்துழாய் முடியினாய் ! * பூவின்மேல்
மாதுவாழ்மார்பினாய் ! என்சொல்லியான்வாழ்த்துவனே ? (௬)

வாழ்த்துவார்பலராக நின்னுள்ளேநான்முகனை *
மூழ்த்தநீருலகெல்லாம் படையென்றுமுதல்படைத்தாய் ! *
கேழ்த்தசீரரன்முதலாக் கிளர்தெய்வமாய்க்கிளர்ந்து *
சூழ்த்தமரர் துதித்தால் உன்தொல்புகழ்மாசூணாதே ? (௭)

மாசூணாச்சுடருடம்பாய் மலராதுகுவியாது *
மாசூணாஞானமாய் முழுதுமாய்முழுதியன்றாய் ! *
மாசூணாவான்கோலத்து அமரர்கோன்வழிப்பட்டால் *
மாசூணாவுனபாதமலர்ச்சோதிமழுங்காதே ? (௮)

மழுங்காதவைந்நுதிய சக்கரநல்வலத்தையாய் *
தொழுங்காதற்களிறளிப்பான் புள்ளூர்ந்துதோன்றினையே *
மழுங்காதஞானமே படையாக * மலருலகில்
தொழும்பாயார்க்களித்தால் உன்சுடர்ச்சோதிமறையாதே ? (௯)

---

† 'வைத்தால்' என்றும் பாடம்.

மறையாயநால்வேதத்துள்நின்ற மலர்ச்சுடரே! *
முறையாலிவ்வுலகெல்லாம் படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்தாய்! *
பிறையேறுசடையானும் நான்முகனுமிந்திரனும் *
இறையாதலறிந்தேத்த வீற்றிருத்தலிதுவியப்பே? (க0)

↓↓ வியப்பாயவியப்பில்லா மெய்ஞ்ஞானவேதியனை *
சயப்புகழார்பலர்வாழும் தடங்குருகூர்ச்சடகோபன் *
துயக்கின்றித்தொழுதுரைத்த ஆயிரத்துள்இப்பத்தும் *
உயக்கொண்டுபிறப்பறுக்கும் ஒலிமுந்நீர்ஞாலத்தே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

உ - ஆந் திருவாய்மொழி—முந்நீர்ஞாலம்.

[ஆழ்வார் அழகரைப் பூர்ணாநுபவம் பண்ண முடியாமல் வருந்த, எம்பெருமான் இவரது கலக்கத்தைத் தீர்த்தல்.]

கலிவிருத்தம்.

பண் - சீகாமரம், தாளம் - ஏழொத்து. முகாரிராகம் - அடதாளம்.

↓↓ முந்நீர்ஞாலம்படைத்த எம்முகில்வண்ணனே! *
அந்நாள்நீதந்த ஆக்கையின்வழியுழல்வேன் *
வெந்நாள்நோய்வீய வினைகளைவேரறப்பாய்ந்து *
எந்நாள்யானுன்னை இனிவந்துகூடுவனே? (க)

வன்மாவையமளந்த எம்வாமனா! * நின்
பன்மாமாயப் பல்பிறவியில்படிகின்றயான் *
தொன்மாவல்வினைத் தொடர்களை முதலரிந்து *
நின்மாதாள்சேர்ந்து நிற்பது எஞ்ஞான்றுகொலோ? (உ)

கொல்லாமாக்கோல் கொலைசெய்து, பாரதப்போர் *
எல்லாச்சேனையும் இருநிலத்தவித்தவெந்தாய்! *
பொல்லாவாக்கையின் புணர்வினையறுக்கலறா *
சொல்லாய்யானுன்னைச் சார்வதோர்சூழ்ச்சியே. (ங)

சூழ்ச்சிஞானச் சுடரொளியாகி * என்றும்
ஏழ்ச்சிக்கேடின்றி எங்கணும்நிறைந்தவெந்தாய்! *
தாழ்ச்சிமற்றெங்கும்தவிர்ந்து நின்தாளிணைக்கீழ்
வாழ்ச்சி * யான்சேரும்வகை அருளாய்வந்தே. (ச)

வந்தாய்போலேவந்தும் என்மனத்தினைநீ *
சிந்தாமற்செய்யாய் இதுவேஇதுவாகில் *
கொந்தார்காயாவின் கொழுமலர்த்திருநிறத்த
எந்தாய்! * யான்உன்னை எங்குவந்தணுகிற்பனே? (௫)

கிற்பன்கில்லேனென்றிலன் முனநாளால் *
அற்பசாரங்களவை சுவைத்தகன்றொழிந்தேன் *
பற்பல்லாயிரம் உயிர்செய்தபரமா! * நின்
நற்பொற்சோதித்தாள் நணுகுவதென்ஞான்றே? (௬)

என்ஞான்றுநாமிருந்திருந்து இரங்கிநெஞ்சே! *
மெய்ஞ்ஞானமின்றி வினையியல்பிறப்பழுந்தி *
எஞ்ஞான்றுமெங்கும் ஒழிவறநிறைந்துநின்ற *
மெய்ஞ்ஞானச்சோதிக் கண்ணனைமேவுதுமே. (௭)

மேவுதுன்பவினைகளை விடுத்துமிலேன் *
ஓவுதலின்றி உன்கழல்வணங்கிற்றிலேன் *
பாவுதொல்சீர்க்கண்ணா! என்பரஞ்சுடரே! *
கூவுகின்றேன்காண்பான் எங்கெய்தக்கூவுவனே? (௮)

கூவிக்கூவிக் கொடுவினைத்தூற்றுள்நின்று *
பாவியேன்பலகாலம் வழிதிகைத்தலமர்கின்றேன் *
மேவியன்றாநிரைகாத்தவன் உலகமெல்லாம்
தாவியவம்மானை * எங்கினித்தலைப்பெய்வனே? (௯)

தலைப்பெய்காலம் நமன்தமர்பாசம்விட்டால் *
அலைப்பூணுண்ணும் அவ்வல்லலெல்லாமகல *
கலைப்பல்ஞானத்து என்கண்ணனைக்கண்டுகொண்டு *
நிலைப்பெற்றென்னெஞ்சம்பெற்றது நீடுயிரே. (௧௦)

‡‡ உயிர்களெல்லாவுலகமுமுடையவனை *
குயில்கொள்சோலைத் தென்குருகூர்ச்சடகோபன் *
செயிரில்சொல்லிசைமாலை ஆயிரத்துள்இப்பத்தும் *
உயிரின்மேலாக்கை ஊனிடையொழிவிக்குமே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

† ரு - ஆந் திருவாய்மொழி—ஒழிவில்காலம்.

[திருவேங்கடமுடையான் திருவடிகளில் நிரந்தர கைங்கர்யம் செய்யப் பாரித்தல்.]

கலிவிருத்தம்.

பண் - பழந்தக்கராகம், தாளம் - ஏழொத்து. ஸௌராஷ்ட்ரராகம்-அடதாளம்.

‡‡ ஒழிவில்காலமெல்லாம் உடனாய்மன்னி *
வழுவிலா அடிமைசெய்யவேண்டும்நாம் *
தெழிகுரலருவித் திருவேங்கடத்து *
எழில்கொள்சோதி எந்தைதந்தைதந்தைக்கே. (க)

எந்தைதந்தைதந்தை தந்தைதந்தைக்கும்
முந்தை * வானவர் வானவர்கோனொடும் *
சிந்துபூமகிழும் திருவேங்கடத்து *
அந்தமில்புகழ்க் காரெழிலண்ணலே. (உ)

அண்ணல்மாயன் அணிகொளசெந்தாமரைக்
கண்ணன் * செங்கனிவாய்க் கருமாணிக்கம் *
‡ தெண்ணிறைச்சுனைநீர்த் திருவேங்கடத்து *
எண்ணில்தொல்புகழ் வானவரீசனே. (ங)

ஈசன்வானவர்க்கென்பன் என்றால் * அது
தேசமோ? திருவேங்கடத்தானுக்கு *
நீசனேன் நிறைவொன்றுமிலேன் * என்கண்
பாசம்வைத்த பரஞ்சுடர்ச்சோதிக்கே (ச)

சோதியாகி எல்லாவுலகுந்தொழும் *
ஆதிமூர்த்தியென்றால் அளவாகுமோ ? *
வேதியர் முழுவேதத்தமுதத்தை *
தீதில்சீர்த் திருவேங்கடத்தானையே. (ரு)

வேங்கடங்கள் மெய்ம்மேல்வினைமுற்றவும் *
தாங்கள்தங்கட்கு நல்லனவேசெய்வார் *
வேங்கடத்துறைவார்க்கு நமவென்ன
லாங்கடமை * அதுசுமந்தார்கட்கே. (சா)

---

† இது, கோயில் திருவாய்மொழி.

‡ 'தெண்ணிறச்சுனை' என்பதும் பாடம்.

சுமந்துமாமலர் நீர்சுடர்தூபங்கொண்டு *
அமர்ந்துவானவர் வானவர்கோனொடும் *
நமன்றெழும் திருவேங்கடம்நங்கட்கு *
சமன்கொள்வீடுதரும் தடங்குன்றமே. (௭)

↓↓ குன்றமேந்திக் குளிர்மழைகாத்தவன் *
அன்றுஞாலமளந்தபிரான் * பரன்
சென்றுசேர் திருவேங்கடமாமலை *
ஒன்றுமேதொழ நம்வினையோயுமே. (௮)

ஓயுமூப்புப் பிறப்பிறப்பு * பிணி
வீயுமாறுசெய்வான் திருவேங்கடத்து
ஆயன் * நாள்மலராம் அடித்தாமரை *
வாயுள்ளும்மனத்துள்ளும் வைப்பார்கட்கே. (௯)

வைத்தநாள்வரை எல்லைகுறுகிச்சென்று *
எய்த்திளைப்பதன்முன்னம் அடைமினோ *
பைத்தபாம்பணையான் திருவேங்கடம் *
மொய்த்தசோலை மொய்பூந்தடந்தாழ்வரே. (௧௰)

↓↓ தாள்பரப்பி மண்தாவியவீசனை *
நீள்பொழில் குருகூர்ச்சடகோபன்சொல் *
கேழிலாயிரத்து இப்பத்தும்வல்லவர் *
வாழ்வர்வாழ்வெய்தி ஞாலம்புகழவே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௪ - ஆந் திருவாய்மொழி—புகழுநல்லொருவன்.

[எம்பெருமானது ஸர்வாத்மபாவத்தைப் பேசி அடிமைசெய்தல்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - நாட்டம், தாளம் - ஒன்பதொத்து. யமுநாகல்யாணிராகம் - ரூபகதாளம்.

புகழுநல்லொருவனென்கோ! பொருவில்சீர்ப்பூமியென்கோ? *
திகழுந்தண்பரவையென்கோ? தீயென்கோவாயுவென்கோ? *
நிகழுமாகாசமென்கோ? நீள்சுடரிரண்டுமென்கோ? *
இகழ்விலிவ்வனைத்துமென்கோ? கண்ணனைக்கூவுமாறே. (௧)

கூவுமாறறியமாட்டேன் குன்றங்களனைத்துமென்கோ? *
மேவுசீர்மாரியென்கோ? விளங்குதாரகைகளென்கோ? *
நாவியல்கலைகளென்கோ? ஞானநல்லாவியென்கோ? *
பாவுசீர்க்கண்ணனெம்மான் பங்கயக்கண்ணனையே. (உ)

பங்கயக்கண்ணனென்கோ? பவளச்செவ்வாயனென்கோ? *
அங்கதிரடியனென்கோ? அஞ்சனவண்ணனென்கோ? *
செங்கதிர்முடியனென்கோ? திருமறுமார்வனென்கோ? *
சங்குசக்கரத்தனென்கோ? சாதிமாணிக்கத்தையே. (௩)

சாதிமாணிக்கமென்கோ? சவிகொள்பொன்முத்தமென்கோ? *
சாதிநல்வயிரமென்கோ? தவிவில்சீர்விளக்கமென்கோ? *
ஆதியஞ்சோதியென்கோ? ஆதியம்புருடனென்கோ? *
ஆதுமில்காலத்தெந்தை அச்சுதனமலனையே. (௪)

அச்சுதனமலனென்கோ? அடியவர்வினைகெடுக்கும் *
நச்சுமாமருந்தமென்கோ? நலங்கடலமுதமென்கோ? *
அச்சுவைக்கட்டியென்கோ? அறுசுவையடிசிலென்கோ? *
நெய்ச்சுவைத்தேறலென்கோ? கனியென்கோ? பாலென்கேனோ? (௫)

பாலென்கோ? நான்குவேதப்பயனென்கோ? * சமயநீதி
நூலென்கோ? நுடங்குகேள்வியிசையென்கோ? * இவற்றுள்நல்ல
மேலென்கோ? வினையின்மிக்கபயனென்கோ? * கண்ணனென்கோ?
மாலென்கோ? மாயனென்கோ? வானவராதியையே. (௬)

வானவராதியென்கோ? வானவர்தெய்வமென்கோ? *
வானவர்போகமென்கோ? வானவர்முற்றுமென்கோ? *
ஊனமில்செல்வமென்கோ? ஊனமில்சுவர்க்கமென்கோ? *
ஊனமில்மோக்கமென்கோ? ஒளிமணிவண்ணனையே. (௭)

ஒளிமணிவண்ணனென்கோ? ஒருவனென்றேத்தநின்ற *
நளிர்மதிச்சடையனென்கோ? நான்முகக்கடவுளென்கோ? *
அளிமகிழ்ந்துலகமெல்லாம் படைத்தவையேத்தநின்ற *
களிமலர்த்துளவனெம்மான் கண்ணனைமாயனையே. (௮)

கண்ணனைமாயன்தன்னைக் கடல்கடைந்தமுதங்கொண்ட *
அண்ணலையச்சுதனை அனந்தனையனந்தன்தன்மேல் *
நண்ணிநன்குறைகின்றானை ஞாலமுண்டுமிழ்ந்தமாலை *
எண்ணுமாறறியமாட்டேன் யாவையும்யவரும்தானே. (௯)

யாவையும்யவரும்தானாய் அவரவர்சமயந்தோறும் *
தோய்விலன்புலனைந்துக்கும் சொலப்படான்உணர்வின்மூர்த்தி *
ஆவிசேருயிரினுள்ளால் ஆதுமோர்பற்றிலாத *
பாவனையதனைக்கூடில் அவனையுங்கூடலாமே. (௰)

↓↓ கூடிவண்டறையுந்தண்தார்க் கொண்டல்போல்வண்ணன்தன்னை *
மாடலர்பொழிற்குருகூர் வண்சடகோபன்சொன்ன *
பாடலோராயிரத்துள் † இவையுமொருபத்தும்வல்லார் *
வீடிலபோகமெய்தி விரும்புவாமரர்மொய்த்தே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௫ - ஆந் திருவாய்மொழி—மொய்ம்மாம்.

[பகவத்கைங்கர்யம் பண்ணுகிறபேரைக் கொண்டாடியும், அல்லாதாரை நிந்தித்தும் அருளிச்செய்தல்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - சீகாமரம்: தாளம் - இடையொத்து. நாதநாமக்ரியைராகம்-அடதாளம்.

↓↓ மொய்ம்மாம்பூம்பொழில்பொய்கை முதலைச்சிறைப்பட்டுநின்ற *
கைம்மாவுக்கருள்செய்த கார்முகில்போல்வண்ணன்கண்ணன் *
எம்மானைச்சொல்லிப்பாடி எழுந்தும்பறந்துந்துள்ளாதார் *
தம்மால், கருமமென்? சொல்லீர் தண்கடல்வட்டத்துள்ளீரே! (௧)

தண்கடல்வட்டத்துள்ளாரைத் தமக்கிரையாத்தடிந்துண்ணும் *
திண்கழற்காலசுரர்க்குத் தீங்கிழைக்குந்திருமாலை *
பண்கள்தலைக்கொள்ளப்பாடிப் பறந்துங்குனித்துழலாதார் *
மண்கொளுலகிற்பிறப்பார் வல்வினைமோதமலைந்தே * (௨)

மலையையெடுத்துக்கல்மாரிகாத்துப் பசுநிரைதன்னை *
தொலைவுதவிர்த்தபிரானைச் சொல்லிச்சொல்லிநின்றெப்போதும் *
தலையினோடாதனந்தட்டத் தடுகுட்டமாய்ப்பறவாதார் *
அலைகொள்நரகத்தழுந்திக் கிடந்துழைக்கின்றவம்பரே. * (௩)

வம்பவிழ்கோதைபொருட்டா மால்விடையேழுமடர்த்த *
செம்பவளத்திரள்வாயன் சிரீதரன்தொல்புகழ்பாடி *
கும்பிடுநட்டமிட்டாடிக் கோகுகட்டுண்டுழலாதார் *
தம்பிறப்பாற்பயனென்னே? சாதுசனங்களிடையே. (௪)

† ‘இவையொருபத்தும்’ என்ற பாடம் பொருந்தும்.

சாதுசனத்தைநலியும் கஞ்சனைச்சாதிப்பதற்கு *
ஆதியஞ்சோதியுருவை அங்குவைத்திங்குப்பிறந்த *
வேதமுதல்வனைப்பாடி வீதிகள்தோறுந்துள்ளாதார் *
ஓதியுணர்ந்தவர்முன்னா என்சவிப்பார்மனிசரே ? (௫)

மனிசரும்மற்றுமுற்றுமாய் மாயப்பிறவிபிறந்த *
தனியன்பிறப்பிலிதன்னைத் தடங்கடல்சேர்ந்தபிரானை *
கனியைக்கரும்பினின்சாற்றைக் கட்டியைத்தேனையமுதை *
முனிவின்றியேத்திக்குனிப்பார் முழுதுணர்நீர்மையினாரே. (௬)

நீர்மையில்நூற்றுவர்வீய ஐவர்க்கருள்செய்துநின்று *
பார்மல்குசேனையவித்த பரஞ்சுடரைநினைந்தாடி *
நீர்மல்குகண்ணினராகி நெஞ்சங்குழைந்துநையாதே *
ஊன்மல்கிமோடுபருப்பார் உத்தமர்கட்கென்செய்வாரே ? (௭)

வார்புனலந்தணருவி வடதிருவேங்கடத்தெந்தை *
பேர்பலசொல்லிப்பிதற்றிப் பித்தரென்றேபிறர்கூற *
ஊர்பலபுக்கும்புகாதும் உலோகர்சிரிக்கநின்றாடி *
ஆர்வம்பெருகிக்குனிப்பார் அமரர்தொழப்படுவாரே. (௮)

அமரர்தொழப்படுவானை அனைத்துலகுக்கும்பிரானை *
அமரமனத்தினுள்யோகுபுணர்ந்து அவன்தன்னோடொன்றாக *
அமரத்துணியவல்லார்களொழிய அல்லாதவரெல்லாம் *
அமரநினைந்தெழுந்தாடி அலற்றுவதேகருமமே. (௯)

கருமமும்கருமபலனுமாகிய காரணன்தன்னை *
திருமணிவண்ணனைச்செங்கண்மாலினைத் தேவபிரானை *
ஒருமைமனத்தினுள்வைத்து உள்ளங்குழைந்தெழுந்தாடி *
பெருமையும்நாணும்தவிர்ந்து பிதற்றுமின்பேதைமைதீர்ந்தே. (௧௦)

‡‡ தீர்ந்தவடியவர்தம்மைத் திருத்திப்பணிகொள்ளவல்ல *
ஆர்ந்தபுகழச்சுதனை அமரர்பிரானையெம்மானை *
வாய்ந்தவளவயல்சூழ் தண்வளங்குருகூர்ச்சடகோபன் *
நேர்ந்தவோராயிரத்திப்பத்து அருவினைநீறுசெய்யுமே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

சு - ஆந் திருவாய்மொழி—செய்யதாமரை.

[கைங்கர்யத்துக்குப் பர வ்யூஹ விபவங்களைக்காட்டிலும் அர்ச்சாவதாரமே ஸுலபவிஷயமென்று அருளிச்செய்தல்.]

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - தக்கராகம், தாளம் - ஏழொத்து. ஸௌராஷ்ட்ரராகம் - ஆதிதாளம்.

‡‡ செய்யதாமரைக்கண்ணனாய் உலகேழுமுண்ட அவன்கண்டீர் *
வையம்வானம்மனிசர்தெய்வம்மற்றும்மற்றும்மற்றும்முற்றுமாய் *
செய்யசூழ்சுடர்ஞானமாய் வெளிப்பட்டிவைபடைத்தான் * பின்னும்
மொய்கொள்சோதியோடாயினன் ஒருமூவராகியமூர்த்தியே. (க)

மூவராகியமூர்த்தியை முதல்மூவர்க்கும்முதல்வன்தன்னை *
சாவமுள்ளனநீக்குவானைத் தடங்கடற்கிடந்தான்தன்னை *
தேவதேவனைத் தென்னிலங்கையெரியெழச்செற்றவில்லியை *
பாவநாசனைப் பங்கயத்தடங்கண்ணனைப் பரவுமினே. (உ)

பரவிவானவரேத்தநின்ற பரமனைப்பரஞ்சோதியை *
குரவைகோத்தகுழகனை மணிவண்ணனைக்குடக்கூத்தனை *
அரவமேறியலைகடலமரும் துயில்கொண்ட அண்ணலை *
இரவுநன்பகலும்விடாது என்றுமேத்துதல்மனம்வைம்மினோ. (ங)

வைம்மின்நம்மனத்தென்று யானுரைக்கின்றமாயவன்சீர்மையை *
எம்மனோர்களுரைப்பதென்? அதுநிற்கநாடொறும் * வானவர்
தம்மையாளுமவனும் நான்முகனும்சடைமுடியண்ணலும் *
செம்மையாலவன்பாதபங்கயம் சிந்தித்தேத்தித்திரிவரே. (ச)

திரியுங்காற்றோடகல்விசும்பு திணிந்தமண்கிடந்தகடல் *
எரியுந்தீயோடிருசுடர்தெய்வம் மற்றும்மற்றும்முற்றுமாய் *
கரியமேனியன்செய்யதாமரைக்கண்ணன் கண்ணன்விண்ணோரிறை *
சுரியும்பல்கருங்குஞ்சி எங்கள்சுடர்முடியண்ணல்தோற்றமே. (ரு)

தோற்றக்கேடவையில்லவனுடையான் அவனொருமூர்த்தியாய் *
சீற்றத்தோடருள்பெற்றவனடிக்கீழ்ப் புகநின்றசெங்கண்மால் *
நாற்றத்தோற்றச்சுவையொலி உறலாகிநின்ற * எம்வானவ
ரேற்றையேயன்றி மற்றொருவரையானிலேனெழுமைக்குமே. (சு)

எழுமைக்குமெனதாவிக்கு இன்னமுதத்தினை, எனதாருயிர் *
கெழுமியகதிர்ச்சோதியை மணிவண்ணனைக்குடக்கூத்தனை *
விழுமியவமரர்முனிவர்விழுங்கும் கன்னற்கனியினை *
தொழுமின்தூயமனத்தராய் இறையும்நில்லாதுயரங்களே. (எ)

துயரமேதருதுன்பவின்பவினைகளாய் அவையல்லனாய் *
உயரநின்றதோர்சோதியாய் உலகேழுமுண்டுமிழ்ந்தான்தன்னை *
அயரவாங்குநமன்தமர்க்கு அருநஞ்சினையச்சுதன்தன்னை *
தயரதற்குமகன்தன்னையன்றி மற்றிலேன்தஞ்சமாகவே. (அ)

தஞ்சமாகியதந்தைதாயொடு தானுமாயவையல்லனாய் *
எஞ்சலில்லமரர்குலமுதல் மூவர்தம்முள்ளுமாதியை *
அஞ்சிநீருலகத்துள்ளீர்கள் அவனிவனென்று † கூழேன்மின் *
நெஞ்சினால்நினைப்பான்யவன் அவனாகும்நீள்கடல்வண்ணனே. (௯)

கடல்வண்ணன்கண்ணன் விண்ணவர்கருமாணிக்கமெனதாருயிர் *
படவரவினணைக்கிடந்த பரஞ்சுடர், பண்டுநூற்றுவர் *
அடவரும்படைமங்க ஐவர்கட்காகிவெஞ்சமத்து * அன்றுதேர்
கடவியபெருமான் கனைகழல்காண்பதென்றுகொல்கண்களே? (௧௦)

↓↓ கண்கள்காண்டற்கரியனாய்க் கருத்துக்குநன்றுமெளியனாய் *
மண்கொள்ஞாலத்துயிர்க்கெல்லாம் அருள்செய்யும்வானவரீசனை *
பண்கொள்சோலைவழுதிநாடன் குருகைக்கோன்சடகோபன்சொல் *
பண்கொளாயிரத்திப்பத்தால் பத்தராகக்கூடும் ‡ பயிலுமினே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எ - ஆந் திருவாய்மொழி—பயிலும்.

[பாகவதர்களிடத்தில் ஆளானார்க்குத் தாம் ஶேஷமாயிருத்தலை அருளிச்செய்தல்.]

கலிநிலைத்துறை.

பண் - நாட்டம், தாளம் - ஏழொத்து. ஸஹாநாராகம் - அடதாளம்.

↓↓ பயிலுஞ்சுடரொளிமூர்த்தியைப் பங்கயக்கண்ணனை *
பயிலவினிய நம்பாற்கடல்சேர்ந்தபரமனை *
பயிலுந்திருவுடையார் யவரேலுமவர்கண்டீர் *
பயிலும்பிறப்பிடைதோறு எம்மையாளும்பரமரே. (௧)

ஆளும்பரமனைக்கண்ணனை ஆழிப்பிரான்தன்னை *
தோளுமோர்நான்குடைத் தூமணிவண்ணனெம்மான்தன்னை *
தாளுந்தடக்கையுங்கூப்பிப் பணியுமவர்கண்டீர் *
நாளும்பிறப்பிடைதோறு எம்மையாளுடைநாதரே.' (௨)

---

† 'கூழன்மின்' என்றும் பாடமோதுவர் ‡ 'பயின்மினே' என்பதும் பாடம்.

நாதனைஞாலமும்வானமுமேத்தும் நறுந்துழாய்ப்
போதனை * பொன்னெடுஞ்சக்கரத்து எந்தைபிரான்தன்னை *
பாதம்பணியவல்லாரைப் பணியுமவர்கண்டீர் *
ஓதும்பிறப்பிடைதோறு எம்மையாளுடையார்களே. (௩)

உடையார்ந்தவாடையன் கண்டிகையன்உடைநாணினன் *
புடையார்பொன்னூலினன் பொன்முடியன், மற்றும்பல்கலன் *
நடையாவுடைத்திருநாரணன் தொண்டர்தொண்டர்கண்டீர் *
இடையார்பிறப்பிடைதோறு எமக்கெம்பெருமக்களே. (௪)

பெருமக்களுள்ளவர்தம்பெருமானை * அமரர்கட்கு
அருமையொழிய அன்றாரமுதூட்டியவப்பனை *
பெருமைபிதற்றவல்லாரைப் பிதற்றுமவர்கண்டீர் *
வருமையுமிம்மையும் நம்மையளிக்கும்பிராக்களே. (௫)

அளிக்கும்பரமனைக்கண்ணனை ஆழிப்பிரான்தன்னை *
துளிக்குநறுங்கண்ணித் தூமணிவண்ணனெம்மான்தன்னை *
ஒளிக்கொண்டசோதியை உள்ளத்துக்கொள்ளுமவர்கண்டீர் *
சலிப்பின்றியாண்டெம்மைச் சன்மசன்மாந்தரம்காப்பரே. (௬)

சன்மசன்மாந்தரம்காத்து அடியார்களைக்கொண்டுபோய் *
தன்மைபெறுத்தித் தன்தாளிணைக்கீழ்க்கொள்ளும்அப்பனை *
தொன்மைபிதற்றவல்லாரைப் பிதற்றுமவர்கண்டீர் *
நன்மைபெறுத்தெம்மை நாளுய்யக்கொள்கின்றநம்பரே. (௭)

நம்பனைஞாலம்படைத்தவனைத் திருமார்பனை *
உம்பருலகினில்யார்க்கும் உணர்வரியான்தன்னை *
கும்பிநரகர்களேத்துவரேலும் அவர்கண்டீர் *
எம்பல்பிறப்பிடைதோறு எம்தொழுகுலம்தாங்களே. (௮)

குலந்தாங்குசாதிகள் நாலிலுங்கீழிழிந்து * எத்தனை
நலந்தானிலாத சண்டாளசண்டாளர்களாகிலும் *
வலந்தாங்குசக்கரத்தண்ணல் மணிவண்ணற்காளென்றுஉள்
கலந்தார் * அடியார்தம்மடியார் எம்மடிகளே. (௯)

அடியார்ந்தவையமுண்டு ஆலிலையன்னவசஞ்செய்யும் *
படியாதுமில்குழவிப் படியெந்தைபிரான்தனக்கு *
அடியாரடியார்தம்மடியாரடியார் தமக்
கடியாரடியார்தம் * அடியாரடியோங்களே. (௧௦)

↓↓ அடியோங்குநூற்றுவர்வீய அன்றுஐவர்க்கருள்செய்த
நெடியோனை * தென்குருகூர்ச்சடகோபன் குற்றேவல்கள். *
அடியார்ந்தவாயிரத்துள் இவைபத்துஅவன்தொண்டர்மேல்
முடிவு * ஆரக்கற்கிற்கில் சன்மஞ்செய்யாமைமுடியுமே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

அ-ஆந் திருவாய்மொழி—முடியானே.

[கரணங்களும் தாமும் பெருவிடாய்ப்பட்டுப் பேசுதல்.]

கலிவிருத்தம்.

பண் - இந்தளம், தாளம் - ஏழொத்து. ஆனந்தபைரவிராகம் - ஆதிதாளம்.

↓↓ முடியானே! மூவுலகும் தொழுதேத்தும்சீ
ரடியானே! * ஆழ்கடலைக்கடைந்தாய்! புள்ளூர்
கொடியானே! * கொண்டல்வண்ணா! அண்டத்துஉம்பரில்
நெடியானே! * என்றுகிடக்கும் என்நெஞ்சமே. (க)

நெஞ்சமேநீள்நகராக இருந்தஎன்
தஞ்சனே! * † தண்ணிலங்கைக்கு இறையைச்செற்ற
நஞ்சனே! * ஞாலங்கொள்வான் குறளாகிய
வஞ்சனே! * என்னும்எப்போதும் என்வாசகமே. (உ)

வாசகமேயேத்த அருள்செய்யும்வானவர்தம்
நாயகனே! * நாளிளந்திங்களைக் கோள்விடுத்து *
வேயகம்பால்வெண்ணெய்தொடுவுண்ட ஆனாயர்
தாயவனே! * என்றுதடவும் என்கைகளே. (ங)

கைகளாலாரத் தொழுதுதொழுதுஉன்னை *
வைகலும்மாத்திரைப்போதும் ஓர்வீடின்றி *
பைகொள்பாம்பேறி உறைபரனே! * உன்னை
மெய்கொள்ளக்காண விரும்பும்என்கண்களே. (ச)

கண்களாற்காண வருங்கொல்? என்றாசையால் *
மண்கொண்டவாமனன் ஏறமகிழ்ந்துசெல் *
பண்கொண்டபுள்ளின் சிறகொலிபாவித்து *
திண்கொள்ளஓர்க்கும் கிடந்துஎன்செவிகளே. (ரு)

† 'தென்னிலங்கை' என்றும் பாடம்.

செவிகளாலார நின்கீர்த்திக்கனியென்னும்
கவிகளே * காலப்பண்டேன் உறைப்பத்துற்று *
புவியின்மேல் பொன்னெடுஞ்சக்கரத்துன்னையே *
அவிவின்றியாதரிக்கும் எனதாவியே. (௬)

ஆவியே! ஆரமுதே! என்னையாளுடை *
தூவியம்புள்ளுடையாய்! சுடர்நேமியாய்! *
பாவியேன்நெஞ்சம் புலம்பப்பலகாலும் *
கூவியும்காணப்பெறேன் உனகோலமே. (௭)

கோலமே! தாமரைக்கண்ணது ஓரஞ்சன
நீலமே! * நின்றெனதாவியை ஈர்கின்ற
சீலமே! * சென்றுசெல்லாதன முன்னிலாம்
காலமே! * உன்னையெந்நாள் கண்டுகொள்வனே? (௮)

கொள்வன்நான்மாவலி! மூவடிதாவென்ற
கள்வனே! * கஞ்சனைவஞ்சித்து வாணனை
உள்வன்மைதீர * ஓராயிரந்தோள்துணித்த
புள்வல்லாய்! * உன்னையெஞ்ஞான்று பொருந்துவனே? (௯)

பொருந்தியமாமருதினிடைபோய எம்
பெருந்தகாய்! * உன்கழல்காணிய பேதுற்று *
வருந்திநான் வாசகமாலைகொண்டு * உன்னையே
இருந்திருந்து எத்தனைகாலம்புலம்புவனே? (௧௦)

↓↓ புலம்புசீர்ப் பூமியளந்தபெருமானை *
நலங்கொள்சீர் நன்குருகூர்ச்சடகோபன் * சொல்
வலங்கொண்டவாயிரத்துள் இவையுமோர்பத்து
இலங்குவான் * யாவருமேறுவர் சொன்னாலே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௩-ஆந் திருவாய்மொழி—சொன்னால்.

[நரகவநம் செய்யாது எம்பெருமானை ஸ்துதிக்கும்படி உபதேசஞ்செய்தல்.]

கலிநிலைத்துறை.

பண் - முதிர்ந்தகுறிஞ்சி, தாளம் - ஏழொத்து. ஸஹாநாராகம் - ஆதிதாளம்.

↓↓ சொன்னால்விரோதமிது ஆகிலும்சொல்லுவன்கேண்மினோ *
என்னாவிலின்கவி யாதொருவர்க்குங்கொடுக்கிலேன் *
தென்னாதெனாவென்று வண்டுமுரல்திருவேங்கடத்து *
என்னானையென்னப்பன் எம்பெருமானுளனாகவே. (௧)

உளனாகவேயெண்ணித் தன்னையொன்றாகத்தன்செல்வத்தை *
வளனாமதிக்கும் இம்மானிடத்தைக் கவிபாடியென்? *
குளனார்கழனிசூழ் கண்ணன்குறுங்குடிமெய்ம்மையே *
உளனாயவெந்தையை எந்தைபெம்மானையொழியவே. (உ)

ஒழிவொன்றில்லாத பல்லூழிதோறூழிநிலாவ * போம்
வழியைத்தரும் நங்கள்வானவரீசனை நிற்கப்போய் *
கழியமிகநல்லவான்கவிகொண்டு புலவீர்காள்! *
இழியக்கருதி ஓர்மானிடம்பாடலென்னாவதே? (ங)

என்னாவது? எத்தனைநாளைக்குப்போதும்? புலவீர்காள்! *
மன்னாமனிசரைப்பாடிப் படைக்கும்பெரும்பொருள் *
மின்னார்மணிமுடி விண்ணவர்தாதையைப்பாடினால் *
தன்னாகவேகொண்டு சன்மஞ்செய்யாமையுங்கொள்ளுமே. (ச)

கொள்ளும்பயனில்லைக் குப்பைகிளர்த்தன்னசெல்வத்தை *
வள்ளல்புகழ்ந்து நும்வாய்மையிழக்கும்புலவீர்காள்! *
கொள்ளக்குறைவிலன் வேண்டிற்றெல்லாந்தருங்கோதில் * என்
வள்ளல்மணிவண்ணன் தன்னைக் கவிசொல்லவம்மினோ. (ரு)

வம்மின்புலவீர்! நும்மெய்வருத்திக்கைசெய்துய்ம்மினோ *
இம்மன்னுலகினில் செல்வரிப்போதில்லைநோக்கினோம் *
நும்மின்கவிகொண்டு நும்நும்இட்டாதெய்வமேத்தினால் *
செம்மின்சுடர்முடி என்திருமாலுக்குச்சேருமே. (சா)

சேருங்கொடைபுகழ் எல்லையிலானை * ஓராயிரம்
பேருமுடையபிரானையல்லால் மற்றுயான்கிலேன் *
மாரியனையகை மால்வரையொக்குந்திண்தோளென்று *
பாரிலோர்பற்றையைப் பச்சைப்பசும்பொய்கள்பேசவே. (எ)

வேயின்மலிபுரைதோளி பின்னைக்குமணாளனை *
ஆயபெரும்புகழ் எல்லையிலாதனபாடிப்போய் *
காயங்கழித்து அவன்தாளிணைக்கீழ்ப்புகுங்காதலன் *
மாயமனிசரை என்சொல்லவல்லேன்என்வாய்கொண்டே? (அ)

வாய்கொண்டுமானிடம்பாடவந்த கவியேனல்லேன் *
ஆய்கொண்டசீர்வள்ளல் ஆழிப்பிரான்எனக்கேஉளன் *
சாய்கொண்டஇம்மையுஞ்சாதித்து வானவர்நாட்டையும் *
நீகண்டுகொள்ளென்று வீடுந்தரும்நின்றுநின்றே. (க)

நின்றநின்றபலநாளுக்கும் இவ்வுடல்நீங்கிப்போய் *
சென்றுசென்றாகிலும்கண்டு சன்மங்கழிப்பானெண்ணி *
ஒன்றியொன்றியுலகம்படைத்தான் கவியாயினேற்கு *
என்றுமென்றுமினி மற்றொருவர்கவியேற்குமே? (க0)

↓↓ ஏற்கும்பெரும்புகழ் வானவரீசன்கண்ணன்தனக்கு *
ஏற்கும்பெரும்புகழ் வண்குருகூர்ச்சடகோபன்சொல் *
ஏற்கும்பெரும்புகழ் ஆயிரத்துள்இவையுமோர்பத்து *
ஏற்கும்பெரும்புகழ் சொல்லவல்லார்க்குஇல்லைசன்மமே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

க0 - ஆந் திருவாய்மொழி—சன்மம்பலபல.

[எம்பெருமானது அவதாரகுணசேஷ்டிதங்களை அநுபவிக்கையாலே
தமக்கு ஒரு குறையுமின்றி ஸர்வாபீஷ்டங்களும்
உண்டானமையை அருளிச்செய்தல்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - நாட்டம், தாளம் - ஏழொத்து. அடாணாராகம் - திரிபுடைதாளம்.

↓↓ சன்மம்பலபலசெய்துவெளிப்பட்டுச் சங்கொடுசக்கரம்வில் *
ஒண்மையுடையவுலக்கையொள்வாள் தண்டுகொண்டுபுள்ளூர்ந்து * உல
வன்மையுடையவரக்கர்அசுரரை மாளப்படைபொருத * [கில்
நன்மையுடையவன்சீர்பரவப்பெற்ற நானோர்குறைவிலனே. (க)

குறைவில்தடங்கடல்கோளரவேறித் தன்கோலச்செந்தாமரைக்கண் *
உறைபவன்போலவோர்யோகுபுணர்ந்தஒளிமணிவண்ணன்கண்ணன் *
கறையணிமூக்குடைப்புள்ளைக்கடாவி அசுரரைக்காய்ந்தஅம்மான் *
நிறைபுகழேத்தியும்பாடியுமாடியும் யானொருமுட்டிலனே. (உ)

முட்டில்பல்போகத்தொருதனிநாயகன் மூவுலகுக்குரிய *
கட்டியைத்தேனையமுதை நன்பாலைக்கனியைக்கரும்புதன்னை *
மட்டவிழ்தண்ணந்துழாய்முடியானை வணங்கி அவன்திறத்துப்
பட்டபின்னை * இறையாகிலும் யானென்மனத்துப்பரிவிலனே. (ரு)

பரிவின்றிவாணனைக்காத்துமென்று அன்றுபடையொடும்வந்தெதிர்ந்த *
திரிபுரஞ்செற்றவனும்மகனும் பின்னுமங்கியும்போர்தொலைய *
பொருசிறைப்புள்ளைக்கடாவிய மாயனை ஆயனைப்பொற்சக்கரத்
தரியினை * அச்சுதனைப்பற்றி யானிறையேனுமிடரிலனே. (ச)

இடரின்றியேயொருநாளொருபோழ்தில் எல்லாவுலகும்கழிய *
படர்புகழ்ப்பார்த்தனும்வைதிகனும் உடனேறத்திண்தேர்கடவி *
சுடரொளியாய்நின்றதன்னுடைச்சோதியில் வைதிகன்பிள்ளைகளை *
உடலொடும்கொண்டுகொடுத்தவனைப்பற்றி ஒன்றும்துயரிலனே. (௫)

துயரில்சுடரொளிதன்னுடைச்சோதி நின்றவண்ணம்நிற்கவே *
துயரில்மலியும்மனிசர்பிறவியில் தோன்றிக்கண்காணவந்து *
துயரங்கள்செய்துதன்தெய்வநிலையுலகில் புகவுய்க்குமம்மான் *
துயரமில்சீர்க்கண்ணன்மாயன்புகழ்துற்ற யானோர்துன்பமிலனே. (௬)

துன்பமுமின்பமுமாகிய செய்வினையாய்உலகங்களுமாய் *
இன்பமில்வெந்நரகாகி இனியநல்வான்சுவர்க்கங்களுமாய் *
மன்பல்லுயிர்களுமாகிப பலபலமாயமயக்குக்களால் *
இன்புறுமிவ்விளையாட்டுடையானைப்பெற்று ஏதுமல்லலிலனே. (௭)

அல்லலில்இன்பமளவிறந்தெங்கும் அழகமர்சூழொளியன் *
அல்லிமலர்மகள்போகமயக்குக்கள் ஆகியும்நிற்குமம்மான் * [ய் *
எல்லையில்ஞானத்தன்ஞானமஃதேகொண்டு எல்லாக்கருமங்களும்செ
எல்லையில்மாயனைக்கண்ணனைத்தாள்பற்றி யானோர்துக்கமிலனே. (௮)

துக்கமில்ஞானச்சுடரொளிமூர்த்தி துழாயலங்கல்பெருமான் *
மிக்கபல்மாயங்களால்விகிர்தஞ்செய்து வேண்டுமுருவுகொண்டு *
நக்கபிரானோடயன்முதலாக எல்லாருமெவையும் * தன்னுள்
ஒக்கவொடுங்கவிழுங்கவல்லானைப்பெற்று ஒன்றும்தளர்விலனே. (௯)

தளர்வின்றியேயென்றுமெங்கும்பரந்த தனிமுதல்ஞானமொன்றாய் *
அளவுடையைம்புலன்கள்அறியாவகையால் அருவாகிநிற்கும் *
வளரொளியீசனைமூர்த்தியைப் பூதங்களைந்தைஇருசுடரை *
கிளரொளிமாயனைக்கண்ணனைத்தாள்பற்றி யானென்றும்கேடிலனே. ()

↓↓ கேடில்விழுப்புகழ்க்கேசவனைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன *
பாடலோராயிரத்துள் † இவையுமொருபத்தும்பயிற்றவல்லார்கட்கு *
நாடுநகரமும்நன்குடன்காண நலனிடையூர்திபண்ணி * [அவன்
வீடும்பெறுத்தித்தன்மூவுலகுக்கும்தரும் ஒருநாயகமே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

† 'இவையொருபத்தும்' என்றும் பாடம்.

நான்காம்பத்து.

பகவத்கைங்கர்யத்துக்கு விரோதி ஐச்வர்ய கைவல்யங்களென்னுதல்.

௧ - ஆந் திருவாய்மொழி—ஒருநாயகம்.

[ஐச்வர்யத்தின் நிலையில்லாமையையும், ஆத்மாநுபவத்தின் தண்மை யையும், பகவதநுபவமே பரமபுருஷார்த்தமென்பதையும் பரோபதேசஞ்செய்தல்.]

கலிநிலைத்துறை.

பண் - நாட்டம், தாளம் - ஏழொத்து. சுருட்டிராகம் - திரிபுடைதாளம்.

↓↓ ஒருநாயகமாய் ஓடவுலகுடனாண்டவர் *
கருநாய்கவர்ந்தகாலர் சிதைகியபானையர் *
பெருநாடுகாண இம்மையிலேபிச்சைதாம்கொள்வர் *
திருநாரணன்தாள் காலம்பெறச்சிந்தித்துய்ம்மினோ. (௧)

உய்ம்மின்திறைகொணர்ந்து என்றுலகாண்டவர் * இம்மையே
தம்மின்சுவைமடவாரைப் பிறர்கொள்ளத்தாம்விட்டு *
வெம்மினொளிவெயில் கானகம்போய்க்குமைதின்பர்கள் *
செம்மின்முடித்திருமாலை விரைந்தடிசேர்மினோ. (௨)

அடிசேர்முடியினராகி அரசர்கள்தாம்தொழ *
இடிசேர்முரசங்கள முற்றத்தியம்பவிருந்தவர் *
பொடிசேர்துகளாய்ப்போவர்கள் ஆதலில்நொக்கென *
கடிசேர்துழாய்முடிக் கண்ணன்கழல்கள்நினைமினோ. (௩)

நினைப்பான்புகில் கடலெக்கலின்நுண்மணலின்பலர் *
எனைத்தோருகங்களும் இவ்வுலகாண்டுகழிந்தவர் *
மனைப்பால்மருங்கற மாய்தலல்லால் மற்றுச்சண்டிலம் *
பனைத்தாள்மதகளிறட்டவன் பாதம்பணிமினோ. (௪)

பணிமின்திருவருளென்னும் அம்சீதப்பைம்பூம்பள்ளி *
அணிமென்குழலார் இன்பக்கலவியமுதுண்டார் *
துணிமுன்புநாலப் பல்லேழையர்தாமிழிப்பச்செல்வர் *
மணிமின்னுமேனி நம்மாயவன்பேர்சொல்லிவாழ்மினோ. (௫)

வாழ்ந்தார்கள்வாழ்ந்தது மாமழை † மொக்குளின்மாய்ந்துமாய்ந்து *
ஆழ்ந்தாரென்றல்லால் அன்றுமுதலின்றறுதியா *
வாழ்ந்தார்கள்வாழ்ந்தேநிற்பர் என்பதில்லை, நிற்குறில் *
ஆழ்ந்தார்கடற்பள்ளி அண்ணலடியவராமினோ. (௬)

† 'மொக்கலின்' என்று சிலர்.

பக்கம்நோக்கிநிற்கும்நையுமென்று அன்னையரும்முனிதிர் *
தக்ககீர்த்தித்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின் *
தொக்கசோதித்தொண்டைவாயும் நீண்டபுருவங்களும் *
தக்கதாமரைக்கண்ணும் பாவியேனாவியின்மேலனவே. (௫)

மேலும்வன்பழிநங்குடிக்கிவளென்று அன்னைகாணகொடாள் *
சோலைசூழ்தண்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின் *
கோலநீள்கொடிமூக்கும் தாமரைக்கண்ணும்கனிவாயும் *
நீலமேனியும்நான்குதோளும் என்னெஞ்சம்நிறைந்தனவே. (௬)

நிறைந்தவன்பழிநங்குடிக்கிவளென்று அன்னைகாணகொடாள் *
சிறந்தகீர்த்தித்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின் *
நிறைந்தசோதிவெள்ளம்சூழ்ந்த நீண்டபொன்மேனியொடும் *
நிறைந்தென்னுள்ளேநின்றொழிந்தான் நேமியங்கையுளதே. (௭)

கையுள்நன்முகம்வைக்கும்நையுமென்று அன்னையரும்முனிதிர் *
மைகொள்மாடத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின் *
செய்யதாமரைக்கண்ணுமல்குலும் சிற்றிடையும்வடிவும் *
மொய்யநீள்குழல்தாழ்ந்ததோள்களும் பாவியேன்முன்னிற்குமே. ()

முன்னின்றாயென்றுதோழிமார்களும் அன்னையரும்முனிதிர் *
மன்னுமாடத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின் *
சென்னிநீள்முடியாதியாய உலப்பிலணிகலத்தன் *
கன்னல்பாலமுதாகிவந்து என்னெஞ்சம்கழியானே. (௯)

கழியமிக்கதோர்காதலளிவளென்று அன்னைகாணகொடாள் *
வழுவில்கீர்த்தித்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின் *
குழுமித்தேவர்குழாங்கள் கைதொழச்சோதிவெள்ளத்தினுள்ளே *
எழுவதோருருவென்னெஞ்சுள்ளெழும் ஆர்க்குமறிவரிதே. (௧௦)

†† அறிவரியபிரானை ஆழியங்கையனையேயலற்றி *
நறியநல்மலர்நாடி நன்குருகூர்ச்சடகோபன்சொன்ன *
குறிகொளாயிரத்துள்இவைபத்தும் திருக்குறுங்குடியதன்மேல் *
அறியக்கற்றுவல்லார்வைட்டணவர் ஆழ்கடல்ஞாலத்துள்ளே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

† 'மொய்கொள்' என்பது உரையின் பாடம்.

வல்லிசேர் நுண்ணிடை ஆய்ச்சியர் தம்மொடும் *
கொல்லைமைசெய்து குரவைபிணைந்தவர் *
நல்லடிமேலணி நாறுதுழாயென்றே
சொல்லுமால் * சூழ்வினையாட்டியேன்பாவையே. (௨)

பாவியல்வேத நன்மாலைபலகொண்டு *
தேவர்கள்மாமுனிவர் இறைஞ்சநின்ற *
சேவடிமேலணி செம்பொன் துழாயென்றே
கூவுமால் * கோள்வினையாட்டியேன்கோதையே. (௩)

கோதிலவண்புகழ் கொண்டுசமயிகள் *
பேதங்கள்சொல்லிப் பிதற்றும்பிரான்பரன் *
பாதங்கள்மேலணி பைம்பொன் துழாயென்றே
ஓதுமால் * ஊழ்வினையேன்தடந்தோளியே. (௪)

தோளிசேர்பின்னைபொருட்டு எருதேழ்தழீஇக்
கோளியார் * கோவலனார் குடக்கூத்தனார் *
தாளிணைமேலணி தண்ணந்துழாயென்றே
நாளுநாள் * நைகின்றதால் என்தன்மாதரே. (௫)

மாதர்மாமண்மடந்தைபொருட்டு ஏனமாய் *
ஆதியங்காலத்து அகலிடங்கீண்டவர் *
பாதங்கள்மேலணி பைம்பொன்துழாயென்றே
ஓதுமால் * எய்தினள்என்தன்மடந்தையே. (௬)

மடந்தையை வண்கமலத்திருமாதினை *
தடங்கொள்தார்மார்பினில்வைத்தவர் தாளின்மேல் *
வடங்கொள்பூந் தண்ணந்துழாய்மலர்க்கே இவள்
மடங்குமால் * வாணுதலீர்! என்மடக்கொம்பே. (௭)

கொம்புபோற்சீதைபொருட்டு இலங்கைநகர் *
அம்பெரியுய்த்தவர் தாளிணைமேலணி *
வம்பவிழ்தண்ணந்துழாய்மலர்க்கே இவள்
நம்புமால் * நானிதற்கென்செய்கேன்? நங்கைமீர்! (௮)

நங்கைமீர்! நீரும் ஓர்பெண்பெற்றுநல்கினீர் *
என்ஙனேசொல்லுகேன்? யான்பெற்றஏழையை *
சங்கென்னும்சக்கரமென்னும் துழாயென்னும் *
இங்ஙனேசொல்லும் இராப்பகலென்செய்கேன்? (௯)

என்செய்கேன்? என்னுடைப்பேதை என்கோமளம் *
என்சொல்லும் என்வசமுமல்லள்நங்கைமீர்! *
மின்செய்பூண்மார்பினன் கண்ணன்கழல்துழாய் *
பொன்செய்பூண் மென்முலைக்கென்றுமெலியுமே. (௧௰)

↓↓ மெலியுநோய்தீர்க்கும் நம்கண்ணன்கழல்கள்மேல் *
மலிபுகழ் வண்குருகூர்ச்சடகோபன்சொல் *
ஒலிபுகழாயிரத்து இப்பத்தும்வல்லவர் *
மலிபுகழ்வானவர்க்காவர் நற்கோவையே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௩-ஆந் திருவாய்மொழி—கோவைவாயாள்.

[அர்த்தித்தபடியே எம்பெருமான் தன்னைக்காட்ட, ஆழ்வார் அவனது ப்ரணயித்வகுணத்தில் ஈடுபட்டு அருளிச்செய்தல்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - தக்கேசி, தாளம் - ஏழொத்து. ஆரபிராகம் - ஆதிதாளம்.

↓↓ கோவைவாயாள்பொருட்டு ஏற்றினெருத்தமிறுத்தாய்! *மதிளிலங்கைக்
கோவைவீயச்சிலைகுனித்தாய்! குலநல்யானைமருப்பொசித்தாய்! *
பூவைவீயாநீர்தூவிப் போதால்வணங்கேனேலும் * நின்
பூவைவீயாமேனிக்குப் பூசுஞ்சாந்தென்னெஞ்சமே. (௧)

பூசுஞ்சாந்தென்னெஞ்சமே புனையுங்கண்ணியெனதுடைய *
வாசகஞ்செய்மாலையே வான்பட்டாடையுமஃதே *
தேசமானவணிகலனும் என்கைகூப்புச்செய்கையே *
ஈசன்ஞாலமுண்டுமிழ்ந்த எந்தையேகமூர்த்திக்கே. (௨)

ஏகமூர்த்தியிருமூர்த்தி மூன்றுமூர்த்திபலமூர்த்தி
யாகி * ஐந்துபூதமாய் இரண்டுசுடராயருவாகி *
நாகமேறிநடுக்கடலுள் துயின்ற நாராயணனே! * உன்
ஆகமுற்றுமகத்தடக்கி ஆவியல்லல்மாய்த்ததே. (௩)

மாய்த்தலெண்ணிவாய்முலைதந்த மாயப்பேயுயிர்
மாய்த்த * ஆயமாயனே! வாமனனே! மாதவா! *
பூத்தண்மாலைகொண்டுஉன்னைப் போதால்வணங்கேனேலும் * நின்
பூத்தண்மாலைநெடுமுடிக்குப் புனையுங்கண்ணியெனதுயிரே. (௪)

கண்ணிஎனதுயிர் காதல்கனகச்சோதிமுடிமுதலா *
எண்ணில்பல்கலன்களும் ஏலுமாடையும்அஃதே *
நண்ணிமூவுலகும் நவிற்றுங்கீர்த்தியும்அஃதே *
கண்ணனெம்பிரானெம்மான் காலசக்கரத்தானுக்கே. (௫)

காலசக்கரத்தொடு வெண்சங்கம்கையேந்தினாய்! *
ஞாலமுற்றுமுண்டுமிழ்ந்த நாராயணனே! என்றென்று *
ஓலமிட்டுநானழைத்தால் ஒன்றும்வாராயாகிலும் *
கோலமாமென்சென்னிக்கு உன்கமலமன்னகுரைகழலே. (௬)

குரைகழல்கள்நீட்டி மண்கொண்டகோலவாமனா! *
குரைகழல்கைகூப்புவார்கள் கூடநின்றமாயனே! *
விரைகொள்பூவும்நீரும்கொண்டு ஏத்தமாட்டேனேலும் * உன்
உரைகொள்சோதித்திருவுருவம் என்னதாவிமேலதே. (௭)

என்னதாவிமேலையாய் ஏர்கொளேழுலகமும் *
துன்னிமுற்றுமாகிநின்ற சோதிஞானமூர்த்தியாய் *
உன்னதென்னதாவியும் என்னதுன்னதாவியும் *
இன்னவண்ணமேநின்றாய் என்றுரைக்கவல்லேனே? (௮)

உரைக்கவல்லேனல்லேன் உன்னுலப்பில்கீர்த்திவெள்ளத்தின் *
† கரைக்கணென்றுசெல்வன்நான்? காதலமையலேறினேன் *
புரைப்பிலாதபரம்பரனே! பொய்யிலாதபரஞ்சுடரே! *
இரைத்துநல்லமேன்மக்களேத்த யானுமேத்தினேன். (௯)

யானுமேத்தி ஏழுலகும்முற்றுமேத்தி * பின்னையும்
தானுமேத்திலும் தன்னையேத்தவேத்தவெங்கெய்தும்? *
தேனும்பாலும்கன்னலும் அமுதுமாகித்தித்திப்ப *
யானுமெம்பிரானையேயேத்தினேன் யானுய்வானே. (௧௦)

↓↓ உய்வுபாயம்மற்றின்மைதேறிக் கண்ணனொண்கழல்கள்மேல் *
செய்யதாமரைப்பழனத் தென்னன்குருகூர்ச்சடகோபன் *
பொய்யில்பாடலாயிரத்துள் இவையும்பத்தும்வல்லார்கள் *
வையம்மன்னிவீற்றிருந்து விண்ணுமாள்வர் ‡ மண்ணூடே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

† 'கரைக்கணின்றசெல்ல', 'கரைக்கணின்றுசொல்வன்' எனவும் பாடம்.
‡ 'மண்ணோடே' என்றும் பாடம்.

௪-ஆந் திருவாய்மொழி—மண்ணை.

[பிரிவாற்றாத நிலையில் போலிகண்டு வருந்தும் தலைவியின் நிலையைத் தாய் உரைத்தல்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - பஞ்சமம், தாளம் - இடையொத்து. பிலஹரிராகம் - அடதாளம்.

↓↓ மண்ணையிருந்துதுழாவி வாமனன்மண்ணிதுவென்னும் *
விண்ணைத்தொழுதவன்மேவு வைகுந்தமென்றுகைகாட்டும் *
கண்ணையுண்ணீர்மல்கநின்று கடல்வண்ணனென்னும்அன்னே!*என்
பெண்ணைப்பெருமயல்செய்தார்க்கு என்செய்கேன்? பெய்வளையீரே!

பெய்வளைக்கைகளைக்கூப்பிப் பிரான்கிடக்குங்கடலென்னும் *
செய்யதோர்ஞாயிற்றைக்காட்டிச் சிரீதரன்மூர்த்தியீதென்னும் *
நையும்கண்ணீர்மல்கநின்று நாரணனென்னும்அன்னே! * என்
தெய்வவுருவிற்சிறுமான் செய்கின்றதொன்றறியேனே. (௨)

அறியுஞ்செந்தீயைத்தழுவி அச்சுதனென்னும்மெய்வேவாள் *
எறியுந்தண்காற்றைத்தழுவி என்னுடைக்கோவிந்தனென்னும் *
வெறிகொள்துழாய்மலர்நாறும் வினையுடையாட்டியேன்பெற்ற *
செறிவளைமுன்கைச்சிறுமான் செய்கின்றதென்கண்ணுக்கொன்றே. ()

ஒன்றியதிங்களைக்காட்டி ஒளிமணிவண்ணனேயென்னும் *
நின்றகுன்றத்தினைநோக்கி நெடுமாலே! வாவென்றுகூவும் *
நன்றுபெய்யும்மழைகாணில் நாரணன்வந்தானென்றாலும் *
என்றினமையல்கள்செய்தார் என்னுடைக்கோமளத்தையே. (௪)

கோமளவான்கன்றைப்புல்கிக் கோவிந்தன்மேய்த்தனவென்னும் *
போமிளநாகத்தின்பின்போய் அவன்கிடக்கையீதென்னும் *
ஆமளவொன்றுமறியேன் அருவினையாட்டியேன்பெற்ற *
கோமளவல்லியைமாயோன் மால்செய்துசெய்கின்றகூத்தே. (௫)

கூத்தர்குடமெடுத்தாடில் கோவிந்தனாமெனாஓடும் *
வாய்த்தகுழலோசைகேட்கில் மாயவனென்றுமையாக்கும் *
ஆய்ச்சியர்வெண்ணெய்கள்காணில் அவனுண்டவெண்ணெயீதென்
பேய்ச்சிமுலைசுவைத்தார்க்கு என்பெண்கொடியேறியபித்தே! [னும்*

ஏறியபித்தினோடு எல்லாவுலகும்கண்ணன்படைப்பென்னும் *
நீறுசெவ்வேயிடக்காணில் நெடுமாலடியாரென்றோடும் *
நாறுதுழாய்மலர்காணில் நாரணன்கண்ணியீதென்னும் *
தேறியும்தேறாதும்மாயோன் திறத்தனளேஇத்திருவே. (எ)

திருவுடைமன்னரைக்காணில் திருமாலைக்கண்டேனேயென்னும் *
உருவுடைவண்ணங்கள்காணில் உலகளந்தானென்றுதுள்ளும் *
கருவுடைத்தேவில்களெல்லாம் கடல்வண்ணன்கோயிலேயென்னும் *
வெருவிலும்வீழ்விலு † மோவாக் கண்ணன்கழல்கள்விரும்புமே. (அ)

விரும்பிப்பகவரைக்காணில் வியலிடமுண்டானேயென்னும் *
கரும்பெருமேகங்கள்காணில் கண்ணனென்றேறப்பறக்கும் *
பெரும்புலவாநிரைகாணில் பிரானுளனென்றுபின்செல்லும் *
அரும்பெறற்பெண்ணினைமாயோன் அலற்றியயர்ப்பிக்கின்றானே. (கூ)

அயர்க்கும்சுற்றும்பற்றி ‡ நோக்கும் அகலவேநீணோக்குக்கொள்ளும் *
வியர்க்கும்மழைக்கண்துளும்ப வெவ்வுயிர்க்கொள்ளும்மெய்சோரும் *
பெயர்த்துங்கண்ணா! என்றுபேசும் பெருமானே! வாவென்றுகூவும் *
மயல்பெருங்காதலென்பேதைக்கு என்செய்கேன்? வல்வினையேனே. ()

⇊ வல்வினைதீர்க்குங்கண்ணனை வண்குருகூர்ச்சடகோபன் *
சொல்வினையாற்சொன்னபாடல் ஆயிரத்துள்இவைபத்தும் *
நல்வினையென்றுகற்பார்கள் § நலனிடைவைகுந்தம்நண்ணி *
தொல்வினைதீரஎல்லாரும் தொழுதெழவீற்றிருப்பாரே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ரு - ஆம் திருவாய்மொழி—வீற்றிருந்து

[ஸர்வேச்வரன் தனது பெருமையெல்லாம் தோன்ற ஸாந்நித்யம்பண்ணுகையில் ஆழ்வார் மங்களாசாஸநம்பண்ணி ப்ரீதியடைதல்.]

கலிநிலைத்துறை.

பண் - இந்தளம் - குறிஞ்சி, தாளம் - ஒன்பதொத்து. தோடிராகம்-ரூபகதாளம்.

⇊ வீற்றிருந்தேழுலகும் தனிக்கோல்செல்ல, வீவில்சீர் *
ஆற்றல்மிக்காளுமம்மானை வெம்மாபிளந்தான்தன்னை *
போற்றியென்றேகைகளாரத் தொழுதுசொல்மாலைகள் *
ஏற்றநோற்றேற்கு இனியென்னகுறையெழுமையுமே? (க)

---

† 'ஓவாள்' என்பது உரையின் பாடம். ‡ 'நோக்கி' என்பது ஆறாயிரப்படி.
§ 'நலனுடை' என்பது ஆறாயிரப்படிக்கும் பன்னீராயிரப்படிக்கும் பாடம்.

மையகண்ணாள்மலர்மேலுறைவாள் உறைமார்பினன் *
செய்யகோலத்தடங்கண்ணன் விண்ணோர்பெருமான்தன்னை *
மொய்யசொல்லாலிசைமாலைகளேத்தி உள்ளப்பெற்றேன் *
வெய்யநோய்கள்முழுதும் வியன்ஞாலத்துவீயவே. (௨)

வீவிலின்பம்மிக எல்லைநிகழ்ந்தநம்அச்சுதன் *
வீவில்சீரன்மலர்க்கண்ணன் விண்ணோர்பெருமான்தன்னை *
வீவில்காலமிசைமாலைகளேத்தி மேவப்பெற்றேன் *
வீவிலின்பம்மிக எல்லை + நிகழ்ந்தனன்மேவியே. (௩)

மேவிநின்றுதொழுவார் வினைபோகமேவும்பிரான் *
தூவியம்புள்ளுடையான் அடலாழியம்மான்தன்னை *
நாவியலாலிசைமாலைகளேத்தி நண்ணப்பெற்றேன் *
ஆவியென்னாவியை யானறியேன்செய்தவாற்றையே. (௪)

ஆற்றநல்ல வகைகாட்டுமம்மானை * அமரர்தம்
ஏற்றைஎல்லாப்பொருளும்விரித்தானை எம்மான்தன்னை *
மாற்றமாலைபுனைந்தேத்தி நாளும்மகிழ்வெய்தினேன் *
காற்றின்முன்னங்கடுகி வினைநோய்கள்கரியவே. (௫)

கரியமேனிமிசை வெளியநீறுசிறிதேயிடும் *
பெரியகோலத்தடங்கண்ணன் விண்ணோர்பெருமான்தன்னை *
உரியசொல்லாலிசைமாலைகளேத்தி உள்ளப்பெற்றேற்கு *
அரியதுண்டோ? எனக்கு இன்றுதொட்டும்இனியென்றுமே. (௬)

என்றுமொன்றாகி ஒத்தாரும்மிக்கார்களும் * தன்தனக்
கின்றிநின்றானை எல்லாவுலகும்உடையான்தன்னை *
குன்றமொன்றால்மழைகாத்தபிரானைச் சொல்மாலைகள் *
நன்றுசூட்டும்விதியெய்தினம் என்னகுறைநமக்கே? (௭)

நமக்கும்பூவின்மிசைநங்கைக்கும் இன்பனை * ஞாலத்தார்
தமக்கும் வானத்தவர்க்கும்பெருமானை * தண்தாமரை
சுமக்கும் பாதப்பெருமானைச்சொல்மாலைகள் * சொல்லுமாறு
அமைக்கவல்லேற்கு இனியாவர்நிகரகல்வானத்தே? (௮)

வானத்தும்வானத்துள்ளும்பரும் மண்ணுள்ளும்மண்ணின்கீழ்த்
தானத்தும் * எண்திசையும் தவிராதுநின்றான்தன்னை
கூனற்சங்கத்தடக்கையவனைக் குடமாடியை
‡ வானக்கோனை * கவிசொல்லவல்லேற்கு இனிமாறுண்டே? (௯)

+ 'நிகழ்ந்தன' என்பது உரையின் பாடம்.

‡ 'வானக்' என்பதை மூன்றாமடியிற் சேர்த்தும் கூறுவர்.

உண்டுமுமிழ்ந்தும்கடந்துமிடந்தும் கிடந்தும்நின்றும் *
கொண்டகோலத்தொடுவீற்றிருந்தும் மணங்கூடியும் *
கண்டவாற்றால் தனதேயுலகெனநின்றான்தன்னை *
வண்தமிழ்நூற்கநோற்றேன் அடியார்க்கின்பமாரியே. (௧௦)

↓↓ மாரிமாறாததண்ணம்மலை வேங்கடத்தண்ணலை *
வாரிமாறாதபைம்பூம்பொழில்சூழ் குருகூர்நகர் *
காரிமாறன்சடகோபன் சொல்லாயிரத்திப்பத்தால் *
வேரிமாறாதபூமேலிருப்பாள் வினைதீர்க்குமே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௬ - ஆந் திருவாய்மொழி—தீர்ப்பாரை.

[வெறிவிலக்கு.]

கலிநிலைத்துறை.

பண் - சீகாமரம், பழந்தக்கராகம், தாளம் - இடையோத்து.

பந்துவராளிராகம் - அடதாளம்.

↓↓ தீர்ப்பாரையாமினியெங்ஙனம் நாடுதும்? அன்னைமீர்! *
ஓர்ப்பாலிவ்வொண்ணுதல உற்றநல்நோயிதுதேறினோம் *
போர்ப்பாகுதான்செய்து அன்றைவரைவெல்வித்த * மாயப்போர்த்
தேர்ப்பாகனார்க்கு இவள்சிந்தைதுழாய்த்திசைக்கின்றதே. (௧)

திசைக்கின்றதேயிவள்நோய் இதுமிக்கபெருந்தெய்வம் *
இசைப்பின்றி நீரணங்காடும்இளந்தெய்வமன்றிது *
திசைப்பின்றியே சங்குசக்கரமென்றிவள்கேட்க * நீர்
இசைக்கிற்றிராகில் நன்றேயில்பெறுமிதுகாண்மினே. (௨)

இதுகாண்மின்அன்னைமீர்! இக்கட்டுவிச்சிசொற்கொண்டு * நீர்
எதுவானுஞ்செய்து அங்கோர்கள்ளுமிறைச்சியும்தூவேன்மின் *
மதுவார்துழாய்முடி மாயப்பிரான்கழல்வாழ்த்தினால் *
அதுவேஇவளுற்றநோய்க்கும் அருமருந்தாகுமே. (௩)

மருந்தாகுமென்று அங்கோர்மாயவலவைசொற்கொண்டு * நீர்
கருஞ்சோறும்மற்றைச்செஞ்சோறும் களனிழைத்தென்பயன்? *
ஒருங்காகவே உலகேழும்விழுங்கியுமிழ்ந்திட்ட *
பெருந்தேவன்பேர்சொல்லகிற்கில் இவளைப்பெறுதிரே. (௪)

இவளைப்பெறும்பரிசு இவ்வணங்காடுதலன்றந்தோ! *
குவளைத்தடங்கண்ணும் கோவைச்செவ்வாயும்பயந்தனள் *
கவளக்கடாக்களிறட்டபிரான் திருநாமத்தால் *
தவளப்பொடிக்கொண்டு நீரிட்டிடுமின்தணியுமே. (ரு)

தணியும் † பொழுதில்லை நீரணங்காடுதிர் அன்னைமீர்! *
பிணியுமொழிகின்றதில்லைப் பெருகுமிதுவல்லால் *
மணியினணிநிறமாயன் தமரடிநீறுகொண்டு *
அணியமுயலின் மற்றில்லைகண்டீர் இவ்வணங்குக்கே. (சு)

அணங்குக்கருமருந்தென்று அங்கோராடும்கள்ளும்பராய் *
‡ சுணங்கையெறிந்து நும்தோள்குலைக்கப்படுமன்னைமீர்! *
உணங்கல்கெடக் கழுதையுதடாட்டம்கண்டென்பயன்? *
வணங்கீர்கள் மாயப்பிரான்தமர்வேதம்வல்லாரையே. (எ)

வேதம்வல்லார்களைக்கொண்டு விண்ணோர்பெருமான்திருப்
பாதம்பணிந்து * இவள்நோயிது தீர்த்துக்கொள்ளாதுபோய் *
ஏதம்பறைந்து அல்லசெய்து கள்ளூடுகலாய்த்தூய் *
கீதமுழவிட்டு நீரணங்காடுதல்கீழ்மையே. (அ)

கீழ்மையினாலங்கு ஓர்கீழ்மகனிட்டமுழவின்கீழ் *
நாழ்மைபலசொல்லி நீரணங்காடும்பொய்காண்கிலேன் *
ஏழ்மைப்பிறப்புக்கும்சேமம் இந்நோய்க்கும்ஈதேமருந்து *
ஊழ்மையில்கண்ணபிரான் கழல்வாழ்த்துமினுன்னித்தே. (கூ)

உன்னித்துமற்றொருதெய்வம்தொழாள் அவனையல்லால் *
நும்மிச்சைசொல்லி நும்தோள்குலைக்கப்படும்அன்னைமீர்! *
மன்னப்படுமறைவாணனை வண்துவராபதி
மன்னனை * ஏத்துமின் ஏத்துதலும்தொழுதாடுமே. (௰)

‡‡ தொழுதாடித்தூமணிவண்ணனுக்கு ஆட்செய்துநோய்தீர்ந்த *
வழுவாததொல்புகழ் வண்குருகூர்ச்சடகோபன் * சொல்
வழுவாதவாயிரத்துள் இவைபத்துவெறிகளும் *
தொழுதாடிப்பாடவல்லார் துக்கசீலமிலர்களே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

† 'பொழுதின்றி' என்பது பன்னீராயிரப்படி.
‡ 'துணங்கை' என்றும் பாடம்.

௭-ஆந் திருவாய்மொழி—சீலமில்லா.

[ஆழ்வார் எம்பெருமானது திருமேனியைக் கண்டு மேவும்படி அஹோராத்ரம் வருந்திக் கூப்பிடுதல்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - பழந்தக்காரகம், தாளம் - ஏழொத்து. கண்டாரகம் ஆதிதாளம்.

‡‡ சீலமில்லாச்சிறியனேலும் செய்வினையோபெரிதால் *
ஞாலமுண்டாய்! ஞானமூர்த்தி! நாராயணா! என்றென்று *
காலந்தோறும்யானிருந்து கைதலைபூசலிட்டால் *
கோலமேனிகாணவாராய் கூவியுங்கொள்ளாயே. (௧)

கொள்ளமாளாவின்பவெள்ளம் கோதிலதந்திடும் * என்
வள்ளலேயோ! வையங்கொண்ட வாமனாவோ! என்றென்று *
நள்ளிராவும்நன்பகலும் நானிருந்தோலமிட்டால் *
கள்ளமாயா! உன்னை என்கண்காணவந்தீயாயே. (௨)

ஈவிலாததீவினைகள் எத்தனைசெய்தனன்கொல்? *
தாவிவையங்கொண்டவெந்தாய்! தாமோதரா! என்றென்று *
கூவிக்கூவிநெஞ்சுருகிக் கண்பனிசோரநின்றால் *
பாவிநீயென்றொன்றுசொல்லாய் பாவியேன்காணவந்தே. (௩)

காணவந்தென்கண்முகப்பே தாமரைக்கண்பிறழ *
ஆணிசெம்பொன்மேனியெந்தாய்! நின்றருளாயென்றென்று *
நாணமில்லாச்சிறுதகையேன் நானிங்கலற்றவதென்? *
பேணிவானோர்காணமாட்டாப் பீடுடையப்பனையே. (௪)

அப்பனே! அடலாழியானே! ஆழ்கடலைக்கடைந்த
துப்பனே! * உன்தோள்கள்நான்கும் கண்டிடக்கூடுங்கொல்? என்று *
எப்பொழுதுங்கண்ணநீர்கொண்டு ஆவிதுவர்ந்துதுவர்ந்து *
இப்பொழுதேவந்திடாயென்று ஏழையேன்நோக்குவனே. (௫)

நோக்கிநோக்கியுன்னைக்காண்பான் யானெனதாவியுள்ளே *
நாக்குநீள்வன்ஞானமில்லை நாள்தோறும்என்னுடைய *
ஆக்கையுள்ளுமாவியுள்ளும் அல்லபுறத்தினுள்ளும் *
நீக்கமின்றியெங்கும்நின்றாய்! நின்னையறிந்தறிந்தே. (௬)

அறிந்தறிந்துதேறித்தேறி யானெனதாவியுள்ளே *
நிறைந்தஞானமூர்த்தியாயை நின்மலமாகவைத்து *
பிறந்தும்செத்தும்நின்றிடறும் பேதைமைதீர்ந்தொழிந்தேன் *
நறுந்துழாயின்கண்ணியம்மா! நானுன்னைக்கண்டுகொண்டே. (எ)

கண்டுகொண்டென்கைகளார நின்திருப்பாதங்கள்மேல் *
எண்திசையுமுள்ளபூக்கொண்டு ஏத்தியுகந்துகந்து *
தொண்டரோங்கள்பாடியாடச் சூழ்கடல்ஞாலத்துள்ளே *
வண்துழாயின்கண்ணிவேந்தே! வந்திடகில்லாயே. (அ)

இடகிலேனொன்றட்டகில்லேன் ஐம்புலன்வெல்லகில்லேன் *
கடவனாகிக்காலந்தோறும் பூப்பறித்தேத்தகில்லேன் *
மடவன்நெஞ்சம்காதல்கூர வல்வினையேன் அயர்ப்பாய் *
தடவுகின்றேன்எங்குக்காண்பன் சக்கரத்தண்ணலையே? (௯)

சக்கரத்தண்ணலே! என்று தாழ்ந்துகண்ணீர்ததும்ப *
பக்கம்நோக்கிநின்றலந்தேன் பாவியேன்காண்கின்றிலேன் *
மிக்கஞானமூர்த்தியாய வேதவிளக்கினை * என்
தக்கஞானக்கண்களாலே கண்டுதழுவுவனே. (க0)

↓↓ தழுவிநின்றகாதல்தன்னால் தாமரைக்கண்ணன்தன்னை *
குழுவுமாடத்தென்குருகூர் மாறன்சடகோபன் * சொல்
வழுவிலாதவொண்தமிழ்கள் ஆயிரத்துள்இப்பத்தும் *
தழுவப்பாடியாடவல்லார் வைகுந்தமேறுவரே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

அ - ஆந் திருவாய்மொழி—ஏறாளும்.

[ஆழ்வார் 'எம்பெருமான் வேண்டாத ஆத்ம ஆத்மீயங்கள் தமக்கும் வேண்டா' என்பதைத் தலைவிபாசுரத்தாற் பேசுதல்.]

தரவுகொச்சகக்கலிப்பா.

பண் - நாட்டம், தாளம் - ஏழொத்து. ஸாரங்கராகம் - ஆதிதாளம்.

↓↓ ஏறாளுமிறையோனும் திசைமுகனும்திருமகளும் *
கூறாளுந்தனியுடம்பன் குலங்குலமாஅசுரர்களை *
நீறாகும்படியாக நிருமித்துப்படைதொட்ட *
மாறாளன்கவராத மணிமாமைகுறைவிலமே. (௧)

மணிமாமைகுறைவில்லா மலர்மாதருறைமார்வன் *
அணிமானத்தடவரைத்தோள் அடலாழித்தடக்கையன் *
பணிமானம்பிழையாமே அடியேனைப்பணிகொண்ட *
மணிமாயன்கவராத மடநெஞ்சால்குறைவிலமே. (௨)

மடநெஞ்சால்குறைவில்லா மகள்தாய்செய்தொருபேய்ச்சி *
விடநஞ்சமுலைசுவைத்த மிகுஞானச்சிறுகுழவி *
படநாகத்தணைக்கிடந்த பருவரைத்தோள்பரம்புருடன் *
நெடுமாயன்கவராத நிறைவினால்குறைவிலமே. (௩)

நிறைவினால்குறைவில்லா நெடும்பணைத்தோள்மடப்பின்னை *
பொறையினால்முலையணைவான் பொருவிடையேழடர்த்துகந்த *
கறையினார்துவருடுக்கை கடையாவின்கழிகோல்கை *
சறையினார்கவராத தளிர்நிறத்தால்குறைவிலமே. (௪)

தளிர்நிறத்தால்குறைவில்லாத் தனிச்சிறையில்விளப்புற்ற *
கிளிமொழியாள்காரணமாக் கிளரரக்கன்நகரெரித்த *
களிமலர்த்துழாயலங்கல் கமழ்முடியன்கடல்ஞாலத்து *
அளிமிக்கான்கவராத அறிவினால்குறைவிலமே. (௫)

அறிவினால்குறைவில்லா அகல்ஞாலத்தவரறிய *
நெறியெல்லாமெடுத்துரைத்த நிறைஞானத்தொருமூர்த்தி *
குறியமாணுருவாகிக் கொடுங்கோளால்நிலங்கொண்ட *
கிறியம்மான்கவராத கிளரொளியால்குறைவிலமே. (௬)

கிளரொளியால்குறைவில்லா அரியுருவாய்க்கிளர்ந்தெழுந்து *
கிளரொளியவிரணியனது அகல்மார்பம்கிழித்துகந்த *
வளரொளியகனலாழி வலம்புரியன், மணிநீல *
வளரொளியான்கவராத வரிவளையால்குறைவிலமே. (௭)

வரிவளையால்குறைவில்லாப் பெருமுழக்கால்அடங்காரை *
எரியழலம்புகவூதி இருநிலமுன்துயர்தவிர்த்த *
தெரிவரியசிவன்பிரமன் அமரர்கோன்பணிந்தேத்தும் *
விரிபுகழான்கவராத மேகலையால்குறைவிலமே. (௮)

மேகலையால்குறைவில்லா மெலிவுற்றவகலல்குல் *
போகமகள்புகழ்த்தந்தை விறல்வாணன்புயந்துணித்து *
நாகமிசைத்துயில்வான்போல் உலகெல்லாம்நன்கொடுங்க *
யோகணைவான்கவராத உடம்பினால்குறைவிலமே (௯)

உடம்பினால்குறைவில்லா உயிர்பிரிந்தமலைத்துண்டம் *
கிடந்தனபோல்துணிபலவா அசுரர்குழாம்துணித்துகந்த *
தடம்புனலசடைமுடியன் தனியொருகூறமர்ந்துறையும் *
உடம்புடையான்கவராத உயிரினால்குறைவிலமே. (௧0)

↓↓ உயிரினால்குறைவில்லா உலகேழ்தன்னுள்ளொடுக்கி *
தயிர்வெண்ணெயுண்டானைத் தடங்குருகூர்ச்சடகோபன் *
செயிரில்சொல்லிசைமாலை ஆயிரத்துள்இப்பத்தால் *
வயிரஞ்சேர்பிறப்பறுத்து வைகுந்தம்நண்ணுவரே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௯-ஆந் திருவாய்மொழி—நண்ணாதார்.

[ஆழ்வார் உலகவியற்கையில் வெறுப்புக்கொண்டு தம்மைத் திருவடியிற் சேர்த்துக்கொள்ளுமாறு எம்பெருமானைப் பிரார்த்தித்தல்.]

தரவுகொச்சகக்கலிப்பா.

பண் - நட்டபாஷை, தாளம் - இடையொத்து. தந்யாசிராகம் - ரூபகதாளம்.

↓↓ நண்ணாதார்முறுவலிப்ப நல்லுற்றார்கரைந்தேங்க *
எண்ணாராத்துயர்விளைக்கும் இவையென்னஉலகியற்கை ? *
கண்ணாளா ! கடல்கடைந்தாய் ! உனகழற்கேவரும்பரிசு *
தண்ணாவாதடியேனைப் பணிகண்டாய்சாமாறே. (௧)

சாமாறும்கெடுமாறும் தமருற்றார்தலைத்தலைப்பெய்து *
ஏமாறிக்கிடந்தலற்றும் இவையென்னஉலகியற்கை ? *
ஆமாறொன்றறியேன்நான் அரவணையாய் ! அம்மானே ! *
கூமாறேவிரைகண்டாய் அடியேனைக்குறிக்கொண்டே. (௨)

கொண்டாட்டும்குலம்புனைவும் தமருற்றார்விழுநிதியும் *
வண்டார்பூங்குழலாளும் மனையொழியஉயிர்மாய்தல் *
கண்டாற்றேன்உலகியற்கை கடல்வண்ணா ! அடியேனை *
பண்டேபோற்கருதாது உன்னடிக்கேகூய்ப்பணிகொள்ளே. (௩)

கொள்ளென்றுகிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம்நெருப்பாக *
கொள்ளென்றுதமம்மூடும் இவையென்னஉலகியற்கை ? *
வள்ளலே ! மணிவண்ணா ! உனகழற்கேவரும்பரிசு *
வள்ளல்செய்தடியேனை உனதருளால்வாங்காயே. (௪)

வாங்குநீர்மலருலகில் நிற்பனவும்திரிவனவும் *
ஆங்குயிர்கள்பிறப்பிறப்புப் பிணிமூப்பால்தகர்ப்புண்ணும் *
ஈங்கிதன்மேல்வெந்நரகம் இவையென்னஉலகியற்கை ? *
வாங்கெனைநீமணிவண்ணா ! அடியேனைமறுக்கேலே. (ரு)

மறுக்கிவல்வலைப்படுத்திக் குமைத்திட்டுக்கொன்றுண்பர் *
அறப்பொருளையறிந்தோரார் இவையென்னஉலகியற்கை ? *
வெறித்துளவமுடியானே ! வினையேனைஉனக்கடிமை
அறக்கொண்டாய் * இனியென்னாரமுதே ! கூயருளாயே. (சு)

கூயே ! இவ்வுலகத்து நிற்பனவும்திரிவனவும் *
நீயேமற்றொருபொருளும் இன்றிநீநின்றமையால் *
நோயேமூப்பிறப்பிறப்புப் பிணியேயென்றிவையொழிய *
கூயேகொள்ளடியேனைக் கொடுவுலகம்காட்டேலே. (எ)

காட்டிநீகரந்துமிழும் நிலம்நீர்தீவிசும்புகால் *
ஈட்டிநீவைத்தமைத்த இமையோர்வாழ்தனிமுட்டை *
† கோட்டையினில்கழித்து என்னைஉன்கொழுஞ்சோதியுயரத்து *
கூட்டரியதிருவடிக்கள் எஞ்ஞான்றுகூட்டுதியே ? (அ)

கூட்டுதிநின்குரைகழல்கள் இமையோரும்தொழாவகைசெய்து *
ஆட்டுதிநீஅரவணையாய் ! அடியேனும் ‡ அஃதறிவன் *
வேட்கையெல்லாம்விடுத்து என்னைஉன்திருவடியேசுமந்துழல *
கூட்டரியதிருவடிக்கள் கூட்டினைநான்கண்டேனே. (கூ)

கண்டுகேட்டுற்றுமோந்துண்டுழலும் ஐங்கருவி
கண்டவின்பம் * தெரிவரிய அளவில்லாச்சிற்றின்பம் *
ஒண்தொடியாள்திருமகளும் நீயுமேநிலாநிற்ப *
கண்டசதிர்கண்டொழிந்தேன் அடைந்தேன்உன்திருவடியே. (க0)

‡‡ திருவடியைநாரணனைக் கேசவனைப்பரஞ்சுடரை *
திருவடிசேர்வதுகருதிச் செழுங்குருகூர்ச்சடகோபன் *
திருவடிமேலுரைத்ததமிழ் ஆயிரத்துள்இப்பத்தும் *
திருவடியேயடைவிக்கும் திருவடிசேர்ந்தொன்றுமினே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

† பன்னீராயிரப்படிக்கு 'கோட்டையினை' என்பது பாடம்.
‡ 'அதுவறிவன்' என்றும் பாடம்.

கဂ - ஆந் திருவாய்மொழி—ஒன்றுந்தேவும்.

[‘ஸ்ரீமந்நாராயணனே பரதேவதையாகையால் தேவதாந்தரத்தைவிட்டு அவனையே ஆச்ரயியுங்கோள்’ என்று மூதலித்துப்பேசுதல்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - நாட்டம், தாளம் - ஏழொத்து. சுருட்டிராகம் - ரூபகதாளம்.

†† ஒன்றுந்தேவுமுலகுமுயிரும்மற்றும் யாதுமில்லா
அன்று * நான்முகன்தன்னொடு தேவருலகோடுஉயிர்படைத்தான் *
குன்றம்போல்மணிமாடநீடு திருக்குருகூரதனுள் *
நின்றவாதிப்பிரான்நிற்க ‡ மற்றைத்தெய்வம்நாடுதிரே? (க)

நாடிநீர்வணங்குந்தெய்வமும் உம்மையும்முன்படைத்தான் *
வீடில்சீர்புகழாதிப்பிரான் அவன்மேவியுறைகோயில் *
மாடமாளிகைசூழ்ந்தழகாய திருக்குருகூரதனை *
பாடியாடிப்பரவிச்சென்மின்கள் பல்லுலகீர்! பரந்தே. (உ)

பரந்ததெய்வமும்பல்லுலகும்படைத்து அன்றுடனேவிழுங்கி *
கரந்துமிழ்ந்துகடந்திடந்தது கண்டும்தெளியகில்லீர் *
சிரங்களாலமரர்வணங்கும் திருக்குருகூரதனுள் *
பரன்திறமன்றிப்பல்லுலகீர்! தெய்வம்மற்றில்லைபேசுமினே. (ங)

பேசநின்றசிவனுக்கும்பிரமன்தனக்கும் பிறர்க்கும்
நாயகனவனே * கபாலநன்மோக்கத்துக் கண்டுகொண்மின் *
தேசமாமதிள்சூழ்ந்தழகாய திருக்குருகூரதனுள் *
ஈசன்பாலோரவம்பறைதல் என்னாவதுஇலிங்கியர்க்கே? (ச)

†† இலிங்கத்திட்டபுராணத்தீரும் சமணரும்சாக்கியரும் *
§ வலிந்துவாதுசெய்வீர்களும் மற்றுநுந்தெய்வமுமாகிநின்றான் *
மலிந்துசெந்நெல்கவரிவீசும் திருக்குருகூரதனுள் *
பொலிந்துநின்றபிரான்கண்டீர் ஒன்றும்பொய்யில்லைபோற்றுமினே. ()

போற்றிமற்றோர்தெய்வம் பேணப்புறத்திட்டு * உம்மையின்னே
தேற்றிவைத்தது எல்லீரும்வீடுபெற்றால்உலகில்லையென்றே *
சேற்றில்செந்நெல்கமலமோங்கு திருக்குருகூரதனுள் *
ஆற்றவல்லவன்மாயம்கண்டீர் அதுஅறிந்தறிந்தோடுமினே. (சு)

---

† இது, கோயில்திருவாய்மொழி. ‡ ‘மற்றெத்தெய்வம்’ என்பதும் சிலர்க்குப் பாடம். § ‘மலிந்து’ என்றும் பாடம்.

ஓடியோடிப்பலபிறப்பும்பிறந்து மற்றோர்தெய்வம் *
பாடியாடிப்பணிந்து பல்படிகால்வழியேறிக்கண்டீர் *
கூடிவானவரேத்தநின்ற திருக்குருகூரதனுள் *
ஆடுபுட்கொடியாதிமூர்த்திக்கு அடிமைபுகுவதுவே. (எ)

புக்கடிமையினால்தன்னைக்கண்ட மார்க்கண்டேயனவனை *
நக்கபிரானும்அன்றுய்யக்கொண்டது நாராயணனருளே *
கொக்கலர்தடந்தாழைவேலித் திருக்குருகூரதனுள் *
மிக்கவாதிப்பிரான்நிற்க மற்றைத்தெய்வம்விளம்புதிரே. (அ)

விளம்பும்ஆறுசமயமும் அவையாகியும்மற்றும்தன்பால் *
அளந்துகாண்டற்கரியனாகிய ஆதிப்பிரானமரும் *
வளங்கொள்தண்பணைசூழ்ந்தழகாய திருக்குருகூரதனை *
உளங்கொள்ஞானத்துவைம்மின் உம்மையுய்யக்கொண்டுபோகுறிலே.

உறுவதாவதெத்தேவும் எவ்வுலகங்களும்மற்றும்தன்பால் *
மறுவில்மூர்த்தியோடொத்து இத்தனையும்நின்றவண்ணம்நிற்கவே *
செறுவிற்செந்நெல்கரும்பொடோங்கு திருக்குருகூரதனுள் *
குறியமாணுருவாகிய நீள்குடக்கூத்தனுக்காட்செய்வதே. (க0)

↓↓ ஆட்செய்தாழிப்பிரானைச்சேர்ந்தவன் வண்குருகூர்நகரான் *
நாட்கமழ்மகிழ்மாலைமார்பினன் மாறன்சடகோபன் *
வேட்கையால்சொன்னபாடல் ஆயிரத்துள்இப்பத்தும்வல்லார் *
மீட்சியின்றிவைகுந்தமாநகர் மற்றதுகையதுவே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஐந்தாம்பத்து.

‘விரோதியைப் போக்குபவனும் அவனே’ என்னுதல்.

க - ஆம் திருவாய்மொழி—கையார்சக்கரத்து.

[உண்மையான பக்தியில்லாதிருக்கையிலும் பொய்யாகப்பேசிய தமக்குப் பேறளித்தானென்று எம்பெருமானது பரம கிருபையைப் பேசுதல்.]

கலிநிலைத்துறை.

பண் - குறிஞ்சி, தாளம் - ஏழொத்து. முகாரிராகம் - அடதாளம்.

↓↓ கையார்சக்கரத்து என்கருமாணிக்கமே! என்றென்று *
பொய்யேகைம்மைசொல்லிப் புறமேபுறமேயாடி *
மெய்யேபெற்றொழிந்தேன் விதிவாய்க்கின்றுகாப்பாரார்? *
ஐயோ! கண்ணபிரான்! அறையோ! இனிப்போனாலே. (க)

போனாய் ! மாமருதின்நடுவே என்பொல்லாமணியே ! *
தேனே ! இன்னமுதே ! என்றென்றேசில † கூத்துச்சொல்ல *
தானேயெம்பெருமான் அவனென்னாகியொழிந்தான் *
வானேமாநிலமே மற்றுமுற்றுமென்னுள்ளனவே. (௨)

உள்ளனமற்றுளவாப் புறமேசிலமாயஞ்சொல்லி *
வள்ளல் ! மணிவண்ணனே ! என்றென்றேஉன்னையும்வஞ்சிக்கும் *
கள்ளமனந்தவிர்ந்தே உன்னைக்கண்டுகொண்டுய்ந்தொழிந்தேன் *
வெள்ளத்தணைக்கிடந்தாய் ! இனியுன்னைவிட்டென்கொள்வனே ? (௩)

என்கொள்வன் ? உன்னைவிட்டென்னும் வாசகங்கள்சொல்லியும் *
வன்கள்வனேன்மனத்தைவலித்துக் கண்ணநீர்கரந்து *
நின்கண்நெருங்கவைத்தே எனதாவியைநீக்ககில்லேன் *
என்கண்மலினமறுத்து என்னைக் ‡ கூவியருளாய்கண்ணனே ! (௪)

கண்ணபிரானை விண்ணோர்கருமாணிக்கத்தையமுதை *
நண்ணியும்நண்ணகில்லேன் நடுவேயோருடம்பிலிட்டு *
திண்ணமழுந்தக்கட்டிப் பலசெய்வினைவன்கயிற்றால் *
புண்ணைமறையவரிந்து என்னைப்போரவைத்தாய்புறமே. (௫)

புறமறக்கட்டிக்கொண்டு இருவல்வினையார்குமைக்கும் *
முறைமுறையாக்கைபுகலொழியக் கண்டுகொண்டொழிந்தேன் *
நிறமுடைநால்தடந்தோள் செய்யவாய்செய்யதாமரைக்கண் *
அறமுயலாழியங்கைக் கருமேனியம்மான்தன்னையே. (௬)

அம்மானாழிப்பிரான் அவனெவ்விடத்தான் ? யானார் ? *
எம்மாபாவியர்க்கும் விதிவாய்க்கின்றுவாய்க்கும்கண்டீர் *
கைம்மாதுன்பொழித்தாய் ! என்று கைதலைபூசலிட்டே *
மெய்ம்மாலாயொழிந்தேன் எம்பிரானும்என்மேலானே. (௭)

மேலாத்தேவர்களும் நிலத்தேவரும்மேவித்தொழும் *
மாலார் $ வந்தினநாள் அடியேன்மனத்தேமன்னினார் *
சேலேய்கண்ணியரும் பெருஞ்செல்வமும்நன்மக்களும் *
மேலாத்தாய்தந்தையும் அவரேயினியாவாரே. (௮)

ஆவாரார்துணை ? என்று அலைநீர்க்கடலுளழுந்தும்
நாவாய்போல் * பிறவிக்கடலுள் நின்றுநான்துளங்க *
தேவார்கோலத்தொடும் திருச்சக்கரம்சங்கினொடும் *
ஆவா ! என்றருள்செய்து அடியேனொடுமானானே. (௯)

---

† 'கூற்று' என்பது உரையின் பாடம். ‡ 'கூயருளாய்' என்றும் பாடம்.

$ 'இந்நாள்' என்பதும் பாடம்.

ஆனானுடையானென்று அஃதேகொண்டுகந்துவந்து *
தானேயின்னருள்செய்து என்னைமுற்றவும்தானானான் *
மீனாயாமையுமாய் நரசிங்கமுமாய்க்குறளாய் *
கானேனமுமாய்க் கற்கியாமின்னங்கார்வண்ணனே. (க0)

↓↓ கார்வண்ணன்கண்ணபிரான் கமலத்தடங்கண்ணன்தன்னை *
ஏர்வளவொண்கழனிக் குருகூர்ச்சடகோபன்சொன்ன *
சீர்வண்ணவொண்தமிழ்கள் இவையாயிரத்துள்இப்பத்தும் *
ஆர்வண்ணத்தாலுரைப்பார் அடிக்கீழ்புகுவார்பொலிந்தே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

உ - ஆம் திருவாய்மொழி—பொலிகபொலிக.

[ஸ்ரீவைஷ்ணவர்திரளைக் கண்டு வாழ்த்தி, அல்லாதாரைத் திருந்துமாறு உபதேசித்தல்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - சீகாமரம்: தாளம் - இடையொத்து. கல்யாணிராகம்-திரிபுடைதாளம்.

↓↓ பொலிகபொலிகபொலிக போயிற்றுவல்லுயிர்ச்சாபம் *
நலியும்நரகமும்நைந்த நமனுக்கிங்குயாதொன்றுமில்லை *
கலியுங்கெடும்கண்டுகொண்மின் கடல்வண்ணன்பூதங்கள்மண்மேல் *
மலியப்புகுந்திசைபாடி ஆடியுழிதரக்கண்டோம். (க)

கண்டோம்கண்டோம்கண்டோம் கண்ணுக்கினியனகண்டோம் *
தொண்டீர்! எல்லீரும்வாரீர் தொழுதுதொழுதுநின்றார்த்தும் *
வண்டார்தண்ணந்துழாயான் மாதவன்பூதங்கள்மண்மேல் *
பண்தான்பாடிநின்றாடிப் பரந்துதிரிகின்றனவே. (உ)

திரியுங்கலியுகம்நீங்கித் தேவர்கள்தாமும்புகுந்து *
பெரியகிதயுகம்பற்றிப் பேரின்பவெள்ளம்பெருக *
கரியமுகில்வண்ணனெம்மான் கடல்வண்ணன்பூதங்கள்மண்மேல் *
இரியப்புகுந்திசைபாடி எங்குமிடங்கொண்டனவே. (ங)

இடங்கொள்சமயத்தையெல்லாம் எடுத்துக்களைவனபோலே *
தடங்கடற்பள்ளிப்பெருமான்தன்னுடைப் பூதங்களேயாய் *
கிடந்துமிருந்துமெழுந்தும் கீதம்பலபலபாடி *
நடந்தும்பறந்தும்குனித்தும் நாடகம்செய்கின்றனவே. (ச)

செய்கின்றதென்கண்ணுக்கொன்றே ஒக்கின்றதிவ்வுலகத்து *
வைகுந்தன்பூதங்களேயாய் மாயத்தினாலெங்கும்மன்னி *
ஐயமொன்றில்லை அரக்கர்அசுரர்பிறந்தீருள்ளீரேல் *
உய்யும்வகையில்லைதொண்டீர்! ஊழிபெயர்த்திடும்கொன்றே. (௫)

கொன்றுயிருண்ணும்விசாதி பகைபசிதீயனவெல்லாம் *
நின்றிவ்வுலகிற்கடிவான் நேமிப்பிரான்தமர்போந்தார் *
நன்றிசைபாடியும்துள்ளியாடியும் ஞாலம்பரந்தார் *
சென்றுதொழுதுய்ம்மின்தொண்டீர்! சிந்தையைச்செந்நிறுத்தியே. ()

நிறுத்திநும்முள்ளத்துக்கொள்ளும் தெய்வங்களும்மையுய்யக்கொள் *
மறுத்துமவனோடேகண்டீர் மார்க்கண்டேயனும்கரியே *
கறுத்தமனமொன்றும்வேண்டா கண்ணனல்லால்தெய்வமில்லை *
இறுப்பதெல்லாம் அவன்மூர்த்தியாயவர்க்கேயிறுமினே. (௭)

இறுக்குமிறையிறுத்துண்ண எவ்வுலகுக்கும்தன்மூர்த்தி *
நிறுத்தினான்தெய்வங்களாக அத்தெய்வநாயகன்தானே *
மறுத்திருமார்வனவன்தன் பூதங்கள்கீதங்கள்பாடி *
வெறுப்பின்றிஞாலத்துமிக்கார் மேவித்தொழுதுய்ம்மினீரே. (௮)

மேவித்தொழுதுய்ம்மினீர்கள் வேதப்புனிதவிருக்கை *
நாவிற்கொண்டச்சுதன்தன்னை ஞானவிதிபிழையாமே *
பூவிற்புகையும்விளக்கும் சாந்தமும்நீரும்மலிந்து *
மேவித்தொழுமடியாரும் பகவரும்மிக்கதுலகே. (௯)

மிக்கவுலகுகள்தோறும் மேவிக்கண்ணன்திருமூர்த்தி *
நக்கபிரானோடு அயனுமிந்திரனும்முதலாக *
தொக்கவமரர்குழாங்கள் எங்கும்பரந்தனதொண்டீர்! *
ஒக்கத்தொழுகிற்றிராகில் கலியுகமொன்றுமில்லையே. (௰)

‡‡ கலியுகமொன்றுமின்றிக்கே தன்னடியார்க்கருள்செய்யும் *
மலியுஞ்சுடரொளிமூர்த்தி மாயப்பிரான்கண்ணன்தன்னை *
கலிவயல்தென்னன்குருகூர்க் காரிமாறன்சடகோபன் *
ஒலிபுகழாயிரத்திப்பத்து † உள்ளத்தைமாசறுக்குமே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

† ‘உள்ளத்தின்’ என்றும் பாடம்.

௩ - ஆந் திருவாய்மொழி—மாசறுசோதி.

[எம்பெருமானது விஸ்லேஷம் பொறுக்கமாட்டாமல் ஆழ்வார்
தலைமகள் ஆசைமேலிட்டினால் பழிக்கு அஞ்சாமல் மட
லூரத்துணிந்ததாகக் கூறும் பாசுரம்.]

கலிவிருத்தம்.

பண் - நட்டபாஷை, தாளம் - ஏழொத்து. பியாகடை ராகம்-திரிபுடைதாளம்.

↓↓ மாசறுசோதி என்செய்யவாய்மணிக்குன்றத்தை *
ஆசறுசீலனை ஆதிமூர்த்தியைநாடியே *
பாசறவெய்தி அறிவிழந்தெனைநாளையம்? *
ஏசறுமூரவர்கவ்வை தோழீ! என்செய்யுமே? (௧)

என்செய்யுமூரவர்கவ்வை? தோழீ! இனிநம்மை *
என்செய்யதாமரைக்கண்ணன் என்னைநிறைகொண்டான் *
முன்செய்யமாமையிழந்து மேனிமெலிவெய்தி *
என்செய்யவாயும்கருங்கண்ணும் பயப்பூர்ந்தவே. (௨)

ஊர்ந்தசகடம் உதைத்தபாதத்தன் * பேய்முலை
சார்ந்துசுவைத்தசெவ்வாயன் என்னைநிறைகொண்டான் *
பேர்ந்தும்பெயர்ந்தும் அவனோடன்றியோர்சொல்லிலேன் *
தீர்ந்தவென்தோழீ! என்செய்யுமூரவர்கவ்வையே? (௩)

ஊரவர்கவ்வையெருவிட்டு அன்னைசொல்நீர் † படுத்து *
ஈரநெல்வித்திமுளைத்த நெஞ்சப்பெருஞ்செய்யுள் *
பேரமர்காதல் கடல்புரையவிளைவித்த *
காரமர்மேனி நங்கண்ணன்தோழீ! கடியனே. (௪)

கடியன்கொடியன்நெடியமால் உலகங்கொண்ட
அடியன் * அறிவருமேனிமாயத்தன் * ஆகிலும்
கொடியஎன்னெஞ்சம் அவனென்றேகிடக்குமெல்லே! *
துடிகொளிடைமடத்தோழீ! அன்னையென்செய்யுமே? (௫)

அன்னையென்செய்யிலென்? ஊரென்சொல்லிலென்? தோழிமீர்! *
என்னையினியுமக்காசையில்லை அகப்பட்டேன் *
முன்னையமரர்முதல்வன் வண்துவராபதி
மன்னன் * மணிவண்ணன் வாசுதேவன்வலையுளே. (௬)

---

† 'மடுத்து' என்றும் பாடம்.

வலையுளகப்படுத்து என்னைநன்னெஞ்சம் கூவிக்கொண்டு *
அலைகடற்பள்ளி † யம்மானை ஆழிப்பிரான்றன்னை *
கலைகொளகலல்குல்தோழீ ! நம்கண்களால்கண்டு *
தலையில்வணங்கவுமாங்கொலோ ? தையலார்முன்பே. (எ)

பேய்முலையுண்டுசகடம்பாய்ந்து மருதிடைப்
போய்முதல்சாய்த்து * புள்வாய்பிளந்துகளிறட்ட *
தூமுறுவல் தொண்டைவாய்ப்பிரானை எந்நாள்கொலோ ? *
யாமுறுகின்றதுதோழீ ! அன்னையர்நாணவே. (அ)

நாணும்நிறையும்கவர்ந்து என்னைநல்நெஞ்சம்கூவிக்கொண்டு *
சேணுயர்வானத்திருக்கும் தேவபிரான்தன்னை *
ஆணையென் ? தோழீ ! உலகுதோறலர்தூற்றி * ஆம்
கோணைகள்செய்து குதிரியாய்மடலூர்துமே. (௯)

யாம்மடலூர்ந்தும் எம்மாழியங்கைப்பிரானுடை *
தூமடல்தண்ணந்துழாய் மலர்கொண்டுசூடுவோம் *
யாம்மடமின்றித் தெருவுதோறு அயல்தையலார் *
நாமடங்காப்பழிதூற்றி நாடுமிரைக்கவே. (௧௦)

↓↓ இரைக்குங்கருங்கடல்வண்ணன் கண்ணபிரான்தன்னை *
விரைக்கொள்பொழில் ‡ குருகூர்ச்சடகோபன்சொன்ன *
நிரைக்கொளந்தாதி ஓராயிரத்துள்இப்பத்தும் *
உரைக்கவல்லார்க்கு வைகுந்தமாகும்தம்மூரெல்லாம். (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௪ - ஆந் திருவாய்மொழி—ஊரெல்லாம்.

[மடலூர்தற்கு அசக்யமாய்த் தலைவி இரவுநீட்டிப்புக்கு வருந்திக் கூறல்.]

§ கலிவிருத்தம்.

பண் - புறநீர்மை, தாளம் - நடையொத்து. கண்டாரரகம் - திரிபுடைதாளம்.

↓↓ ஊரெல்லாம்துஞ்சி உலகெல்லாம்நள்ளிருளாய் *
நீரெல்லாந்தேறி ஓர்நீளிரவாய்நீண்டதால் *
பாரெல்லாமுண்ட நம்பாம்பணையான்வாரானால் *
ஆர் ? எல்லே ! வல்வினையேன் ஆவிகாப்பாரினியே. (௧)

† 'எம்மானை' என்பது உரையின் பாடம்.

‡ 'குருகூரவர்சடகோபன்' என்றும் பாடம்.

§ பெரும்பாலும் வெண்டளையால் வந்தது.

ஆவிகாப்பாரினியார் ? ஆழ்கடல்மண்விண்மூடி *
மாவிகாரமாய் ஓர்வல்லிரவாய்நீண்டதால் *
காவிசேர்வண்ணன் என்கண்ணனும்வாரானால் *
பாவியேன்நெஞ்சமே ! நீயும்பாங்கல்லையே. (௨)

நீயும்பாங்கல்லைகாண் நெஞ்சமே ! நீளிரவும் *
ஓயும்பொழுதின்றி ஊழியாய்நீண்டதால் *
காயுங்கடுஞ்சிலை என்காகுத்தன்வாரானால் *
மாயும்வகையறியேன் வல்வினையேன்பெண்பிறந்தே. (௩)

பெண்பிறந்தாரெய்தும் பெருந்துயர்காண்கிலேனென்று *
ஒண்சுடரோன் வாராதொளித்தான் * இம்மண்ணளந்த
கண்பெரியசெவ்வாய் எங்காரேறுவாரானால் *
எண்பெரியசிந்தைநோய் தீர்ப்பாரார்என்னையே ? (௪)

ஆரென்னையாராய்வார் ? அன்னையரும்தோழியரும் *
நீரென்னே ? என்னாதே நீளிரவும்துஞ்சுவரால் *
காரன்னமேனி நங்கண்ணனும்வாரானால் *
பேரென்னைமாயாதால் வல்வினையேன்பின்னின்றே. (௫)

† பின்னின்றகாதல்நோய் நெஞ்சம்பெரிதடுமால் *
முன்னின்றிராவூழி கண்புதையமூடிற்றால் *
மன்னின்றசக்கரத்து எம்மாயவனும்வாரானால் *
இந்நின்றநீளாவி காப்பாரார்இவ்விடத்தே ? (௬)

காப்பாரார்இவ்விடத்து ? கங்கிருளின்நுண்துளியாய் *
சேட்பாலதூழியாய்ச் செல்கின்றகங்குல்வாய் *
தூப்பாலவெண்சங்கு சக்கரத்தன்தோன்றானால் *
தீப்பாலவல்வினையேன் தெய்வங்காள் ! என்செய்கேனோ ? (௭)

தெய்வங்காள் ! என்செய்கேன் ? ஓரிரவேழூழியாய் *
மெய்வந்துநின்று எனதாவிமெலிவிக்கும் *
கைவந்தசக்கரத்து என்கண்ணனும்வாரானால் *
தைவந்ததண்தென்றல் வெஞ்சுடரில்தானடுமே. (௮)

வெஞ்சுடரில்தானடுமால் வீங்கிருளின்நுண்துளியாய் *
அஞ்சுடரவெய்யோன் அணிநெடுந்தேர்தோன்றாதால் *
செஞ்சுடர்த்தாமரைக்கண் செல்வனும்வாரானால் *
நெஞ்சிடர்தீர்ப்பாரினியார் ? நின்றுருகுகின்றேனே. (௯)

---

† 'பின்னின்று' என்றும் பாடம்.

நின்றுருகுகின்றேனேபோல நெடுவானம் *
† சென்றுருகிநுண் துளியாய்ச் செல்கின்றகங்குல்வாய் *
அன்றொருகால்வையம் அளந்தபிரான்வாராவென்று *
ஒன்றொருகால்சொல்லாது உலகோஉறங்குமே. (கo)

↓↓ உறங்குவான்போல் யோகுசெய்தபெருமானை *
சிறந்தபொழில்சூழ் குருகூர்ச்சடகோபன்சொல் *
நிறங்கிளர்ந்தவந்தாதி ஆயிரத்திப்பத்தால் *
இறந்துபோய்வைகுந்தம் சேராவாறெங்ஙனேயோ ? (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ரு - ஆந் திருவாய்மொழி—எங்ஙனேயோ.

[உருவெளிப்பாடுகண்ட தலைவி தாயை மறுத்துரைத்தல்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - கைசிகம், தாளம் - ஏழோத்து. செஞ்சுருட்டிராகம் - ரூபகதாளம்.

↓↓ எங்ஙனேயோ அன்னைமீர்காள் ! என்னைமுனிவதுநீர் ? *
நங்கள்கோலத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின் *
சங்கினோடும்நேமியோடும் தாமரைக்கண்களோடும் *
செங்கனிவாயொன்றினோடும் செல்கின்றதுஎன்நெஞ்சமே. (க)

என்னெஞ்சினால்நோக்கிக்காணீர் என்னைமுனியாதே *
தென்னன்சோலைத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின் *
மின்னுநூலும்குண்டலமும் மார்வில்திருமறுவும் *
மன்னுபூணும்நான்குதோளும் வந்தெங்கும்நின்றிடுமே. (உ)

நின்றிடும்திசைக்கும்நையுமென்று அன்னையரும்முனிதிர் *
குன்றமாடத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின் *
வென்றிவில்லும்தண்டும்வாளும் சக்கரமும்சங்கமும் *
நின்றுதோன்றிக்கண்ணுள்நீங்கா நெஞ்சுள்ளும்நீங்காவே. (ங)

நீங்கநில்லாகண்ணநீர்களென்று அன்னையரும்முனிதிர் *
தேங்கொள்சோலைத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின் *
பூந்தண்மாலைத்தண்துழாயும் பொன்முடியும்வடிவும் *
பாங்குதோன்றும்பட்டும்நாணும் பாவியேன்பக்கத்தவே. (ச)

---

† 'சென்றுருகு' என்பது உரையின் பாடம்.

திரைகொள்பௌவத்துச்சேர்ந்ததும்
திசைஞாலம்தாவியளந்ததும் *
நிரைகள்மேய்த்ததுமேபிதற்றி
நெடுங்கண்நீர்மல்கநிற்குமே. (௫)

நிற்கும்நான்மறைவாணர்வாழ்
தொலைவில்லிமங்கலம்கண்டபின் *
அற்கமொன்றுமறிவுறாள்
மலிந்தாள்கண்டீரிவளன்னைமீர் ! *
கற்குங்கல்வியெல்லாம் கருங்கடல்
வண்ணன்கண்ணபிரானென்றே *
ஒற்கமொன்றுமிலள் உகந்துகந்து
உள்மகிழ்ந்துகுழையுமே. (௬)

குழையும்வாள்முகத்தேழையைத்
தொலைவில்லிமங்கலம்கொண்டுபுக்கு *
இழைகொள்சோதிச்செந்தாமரைக்கண்பிரான்
இருந்தமைகாட்டினீர் *
மழைபெய்தாலொக்குங்கண்ணநீரினொடு
அன்றுதொட்டும்மையாந்து * இவள்
நுழையுஞ்சிந்தையளன்னைமீர் ! தொழும்
அத்திசையுற்றுநோக்கியே. (௭)

நோக்கும்பக்கமெல்லாம் கரும்பொடு
செந்நெலோங்குசெந்தாமரை *
வாய்க்குந்தண்பொருநல் வடகரை
வண்தொலைவில்லிமங்கலம் *
நோக்குமேலத்திசையல்லால்
மறுநோக்கிலள்வைகல்நாடொறும் *
வாய்க்கொள்வாசகமும் மணிவண்ணன்
நாமமேயிவளன்னைமீர் ! (௮)

அன்னைமீர் ! அணிமாமயில் சிறுமானிவள்
நம்மைக்கைவலிந்து *
என்னவார்த்தையுங்கேட்குறாள்
தொலைவில்லிமங்கலமென்றல்லால் *

சு - ஆந் திருவாய்மொழி—கடல்ஞாலம்.

[பிரிவாற்றாது தலைவன்தன்மைகளை அநுகரித்துத் தரிக்கப் பார்க்கிற தலைவியின் நிலைகண்ட தாய் 'ஆவேசமோ ?' என்று நொந்துகூறும் பாசுரம்.]

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - சீகாமரம், தாளம் - ஏழொத்து. யதுகுலகாம்போதிராகம் - ஆதிதாளம்.

↓↓ கடல்ஞாலம்செய்தேனும்யானேயென்னும்
கடல்ஞாலமாவேனும்யானேயென்னும் *
கடல்ஞாலம்கொண்டேனும்யானேயென்னும்
கடல்ஞாலம்கீண்டேனும்யானேயென்னும் *
கடல்ஞாலமுண்டேனும்யானேயென்னும்
கடல்ஞாலத்தீசன்வந்தேறக்கொலோ ? *
கடல்ஞாலத்தீர்க்கிவையென்சொல்லுகேன் ?
கடல்ஞாலத்துஎன்மகள்கற்கின்றவே. (க)

கற்குங்கல்விக்கெல்லையிலனேயென்னும்
கற்குங்கல்வியாவேனும்யானேயென்னும் *
கற்குங்கல்விசெய்வேனும்யானேயென்னும்
கற்குங்கல்விதீர்ப்பேனும்யானேயென்னும் *
கற்குங்கல்விச்சாரமும்யானேயென்னும்
கற்குங்கல்விநாதன்வந்தேறக்கொலோ ? *
கற்குங்கல்வியீர்க்கிவையென்சொல்லுகேன் ?
கற்குங்கல்விஎன்மகள்காண்கின்றவே. (உ)

காண்கின்றநிலமெல்லாம்யானேயென்னும்
காண்கின்றவிசும்பெல்லாம்யானேயென்னும் *
காண்கின்றவெந்தீயெல்லாம்யானேயென்னும்
காண்கின்றஇக்காற்றெல்லாம்யானேயென்னும் *
காண்கின்றகடலெல்லாம்யானேயென்னும்
காண்கின்றகடல்வண்ணனேறக்கொலோ ? *
காண்கின்றவுலகத்தீர்க்கென்சொல்லுகேன் ?
காண்கின்றஎன்காரிகைசெய்கின்றவே. (ங)

செய்கின்றகிதியெல்லாம்யானேயென்னும்
செய்வானின்றனகளும்யானேயென்னும் *
செய்துமுன்னிறந்தவும்யானேயென்னும்
செய்கைப்பயனுண்பேனும்யானேயென்னும் *
செய்வார்களைச்செய்வேனும்யானேயென்னும்
செய்யகமலக்கண்ணனேறக்கொலோ ? *
செய்யவுலகத்தீர்க்கிவையென்சொல்லுகேன் ?
செய்யகனிவாயிளமான்திறத்தே. (௫)

திறம்பாமல்மண்காக்கின்றேன்யானேயென்னும்
திறம்பாமல்மலையெடுத்தேனேயென்னும் *
திறம்பாமலசுரரைக்கொன்றேனேயென்னும்
திறங்காட்டியன்றைவரைக்காத்தேனேயென்னும் *
திறம்பாமல்கடல்கடைந்தேனேயென்னும்
திறம்பாதகடல்வண்ணனேறக்கொலோ ? *
திறம்பாதஉலகத்தீர்க்கென்சொல்லுகேன் ?
திறம்பாதென்திருமகளெய்தினவே. (௬)

இனவேய்மலையேந்தினேன்யானேயென்னும்
இனவேறுகள்செற்றேனும்யானேயென்னும் *
இனவான்கன்றுமேய்த்தேனும்யானேயென்னும்
இனவாநிரைகாத்தேனும்யானேயென்னும் *
இனவாயர்தலைவனும்யானேயென்னும்
இனத்தேவர்தலைவன்வந்தேறக்கொலோ ? *
இனவேற்கண்நல்லீர்க்கிவையென்சொல்லுகேன் ?
இனவேற்கண்ணிஎன்மகளுற்றனவே. (௭)

உற்றார்களெனக்கில்லையாருமென்னும்
உற்றார்களெனக்கிங்கெல்லாருமென்னும் *
உற்றார்களைச்செய்வேனும்யானேயென்னும்
உற்றார்களையழிப்பேனும்யானேயென்னும் *
† உற்றார்களுக்குற்றேனும்யானேயென்னும்
உற்றாரிலிமாயன்வந்தேறக்கொலோ ? *
உற்றீர்கட்கென்சொல்லிச்சொல்லுகேன்யான் ?
உற்றென்னுடைப்பேதையுரைக்கின்றவே. (௮)

† 'உற்றார்கட்கு' என்றும் பாடம்.

உரைக்கின்றமுக்கட்பிரான்யானேயென்னும்
    உரைக்கின்றதிசைமுகன்யானேயென்னும் *
உரைக்கின்றஅமரரும்யானேயென்னும்
    உரைக்கின்றஅமரர்கோன்யானேயென்னும் *
உரைக்கின்றமுனிவரும்யானேயென்னும்
    உரைக்கின்றமுகில்வண்ணனேறக்கொலோ ? *
உரைக்கின்றவுலகத்தீர்க்கென்சொல்லுகேன் ?
    உரைக்கின்றஎன்கோமளவொண்கொடிக்கே. (௮)

கொடியவினையாதுமிலனேயென்னும்
    கொடியவினையாவேனும்யானேயென்னும் *
கொடியவினைசெய்வேனும்யானேயென்னும்
    கொடியவினைதீர்ப்பேனும்யானேயென்னும் *
கொடியானிலங்கைசெற்றேனேயென்னும்
    கொடியபுள்ளுடையவனேறக்கொலோ ? *
கொடியவுலகத்தீர்க்கிவையென்சொல்லுகேன் ?
    கொடியேன்கொடிஎன்மகள்கோலங்களே. (௯)

கோலங்கொள்சுவர்க்கமும்யானேயென்னும்
    கோலமில்நரகமும்யானேயென்னும் *
கோலந்திகழ்மோக்கமும்யானேயென்னும்
    கோலங்கொளுயிர்களும்யானேயென்னும் *
கோலங்கொள்தனிமுதல்யானேயென்னும்
    கோலங்கொள்முகில்வண்ணனேறக்கொலோ ? *
கோலங்கொளுலகத்தீர்க்கென்சொல்லுகேன் ?
    கோலந்திகழ்கோதைஎன்கூந்தலுக்கே. (௧௦)

‡ கூந்தல்மலர்மங்கைக்கும்மண்மடந்தைக்கும்
    குலவாயர்கொழுந்துக்கும்கேள்வன்தன்னை *
வாய்ந்தவழுதிவளநாடன் மன்னு
    குருகூர்ச்சடகோபன்குற்றேவல்செய்து *
ஆய்ந்ததமிழ்மாலையாயிரத்துள்
    † இவையுமோர்பத்தும்வல்லார் * உலகில்
  ஏந்துபெருஞ்செல்வத்தராய்த் திருமா
    லடியார்களைப்பூசிக்கநோற்றார்களே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

† 'இவையொருபத்தும் என்றும், ‡ 'ஏய்ந்த' என்றும் பாடம்.

௭-ஆந் திருவாய்மொழி—நோற்றநோன்பு.

[ஆழ்வார் எம்பெருமானையன்றித் தாம்தரியாத தமதுஅநந்ய கதித்வத்தை யெடுத்துக்கூறி வானமாமலைப் பெருமானிடத்தில் ப்ரபத்தி பண்ணுதல்.]

ஆசிரியத்துறை.

பண் - சீகாமரம், தாளம் - ஏழொத்து. ஸாவேரிராகம் - ஆதிதாளம்.

↓↓ நோற்றநோன்பிலேன் நுண்ணறிவிலேன் * ஆகிலும்இனியுன்னை
ஆற்றகிற்கின்றிலேன் அரவினணையம்மானே ! * [விட்டொன்றும்
சேற்றுத்தாமரைசெந்நெலூடுமலர் சிரீவரமங்கலநகர் *
வீற்றிருந்தஎந்தாய் ! உனக்குமிகையல்லேனங்கே. (௧)

அங்குற்றேனல்லேன் இங்குற்றேனல்லேன் உன்னைக்காணுமவாவில்
எங்குற்றேனுமல்லேன் இலங்கைசெற்றவம்மானே!* [வீழ்ந்து*நான்
திங்கள்சேர்மணிமாடநீடு சிரீவரமங்கலநகருறை *
சங்குசக்கரத்தாய் ! தமியேனுக்கருளாயே. (௨)

கருளப்புட்கொடிசக்கரப்படை வானநாட ! என்கார்முகில்வண்ணா! *
பொருளல்லாதவென்னைப்பொருளாக்கி அடிமைகொண்டாய் ! *
தெருள்கொள்நான்மறைவல்லவர்பலர்வாழ் சிரீவரமங்கலநகர்க்கு *
அருள்செய்தங்கிருந்தாய் ! அறியேனொருகைம்மாறே. (௩)

மாறுசேர்படைநூற்றுவர்மங்க ஓரைவர்க்காயன்றுமாயப்போர்பண்ணி*
நீறுசெய்தவெந்தாய் ! நிலங்கீண்டவம்மானே ! *
தேறுஞானத்தர்வேதவேள்வியறாச் சிரீவரமங்கலநகர் *
ஏறிவீற்றிருந்தாய் ! உன்னையெங்கெய்தக்கூவுவனே ? (௪)

எய்தக்கூவுதலாவதேயெனக்கு எவ்வதெய்வத்துளாயுமாய்நின்று *
கைதவங்கள்செய்யும் கருமேனியம்மானே ! *
செய்தவேள்வியர்வையத்தேவராறாச் சிரீவரமங்கலநகர் *
கைதொழவிருந்தாய் ! அதுநானும்கண்டேனே. (௫)

↓↓ ஏனமாய்நிலங்கீண்டஎன்னப்பனே ! கண்ணா ! என்றுமென்னை
வானநாயகனே ! மணிமாணிக்கச்சுடரே ! * [யாளுடை *
தேனமாம்பொழில்தண்சிரீவரமங்கலத்தவர் கைதொழவுறை *
வானமாமலையே ! அடியேன்தொழவந்தருளே. (௬)

வந்தருளியென்னெஞ்சிடங்கொண்ட வானவர்கொழுந்தே! * உலகுக்
முந்தைத்தாய்தந்தையே! முழுவேழுலகுமுண்டாய்! * [கோர்
செந்தொழிலவர்வேதவேள்வியறாச் சிரீவரமங்கலநகர் *
அந்தமில்புகழாய்! அடியேனையகற்றேலே. (எ)

அகற்றநீவைத்தமாயவல்லைம்புலன்களாமவை நன்கறிந்தனன் *
அகற்றியென்னையும்நீ அருஞ்சேற்றில்வீழ்த்திகண்டாய் *
பகற்கதிர்மணிமாடநீடு சிரீவரமங்கைவாணனே! * என்றும்
புகற்கரியஎந்தாய்! புள்ளின்வாய்பிளந்தானே! (அ)

புள்ளின்வாய்பிளந்தாய்! மருதிடைபோயினாய்! எருதேழடர்த்த*என்
கள்ளமாயவனே! கருமாணிக்கச்சுடரே! *
தெள்ளியார்திருநான்மறைகள்வல்லார் மலிதண்சிரீவரமங்கை
யுள்*இருந்தஎந்தாய்! அருளாய்உய்யுமாறெனக்கே. (௯)

ஆறெனக்குநின்பாதமே சரணாகத்தந்தொழிந்தாய் * உனக்கோர்கைம்
மாறுநானொன்றிலேன் எனதாவியும்உனதே *
சேறுகொள்கரும்பும்பெருஞ்செந்நெலும் மலிதண்சிரீவரமங்கை *
நாறுபூந்தண்துழாய்முடியாய்! தெய்வநாயகனே! (௧௦)

⸸⸸ தெய்வநாயகன்நாரணன் திரிவிக்கிரமனடியிணைமிசை *
கொய்கொள்பூம்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன் *
செய்தவாயிரத்துள்ளிவை தண்சிரீவரமங்கைமேயபத்துடன் *
வைகல்பாடவல்லார் வானோர்க்காராவமுதே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

† அ - ஆந் திருவாய்மொழி—ஆராவமுதே.

[பலஸித்தியாகாமையால் ஆராவமுதாழ்வாரிடத்தில் ஆழ்வார் தீராத ஆசையுடன் ஆற்றாமைபேசி அலமருதல்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - காந்தாரம், தாளம் - ஏழொத்து. தந்யாசிராகம் - ஆதிதாளம்.

⸸⸸ ஆராவமுதே! அடியேன் ‡ னுடலம் நின்பாலன்பாயே *
நீராயலைந்துகரைய உருக்குகின்றநெடுமாலே! *
சீரார்செந்நெல்கவரிவீசும் செழுநீர்த்திருக்குடந்தை *
ஏரார்கோலந்திகழக்கிடந்தாய்! கண்டேனெம்மானே! (௧)

† இது, கோயில்திருவாய்மொழி. ‡ 'உடலும்' எனக் கொள்ளவும் இடமுண்டு.

எம்மானே ! என்வெள்ளைமூர்த்தி ! என்னையாள்வானே ! *
எம்மாவுருவும்வேண்டுமாற்றால் ஆவாய் ! எழிலேறே ! *
செம்மாகமலம்செழுநீர்மிசைக்கண்மலரும் திருக்குடந்தை *
அம்மாமலர்க்கண்வளர்கின்றானே ! என்நான்செய்கேனே ? (உ)

என்நான்செய்கேன் ? யாரேகளைகண் ? என்னையென்செய்கின்றாய் ? *
உன்னாலல்லால்யாவராலும் ஒன்றும்குறைவேண்டேன் *
கன்னார்மதிள்சூழ்குடந்தைக்கிடந்தாய் ! அடியேனருவாணாள் *
சென்னாளெந்நாள் ? அந்நாள் உனதாள்பிடித்தேசெலக்காணே. (ரு)

செலக்காண்கிற்பார்காணுமளவும் செல்லும்கீர்த்தியாய் ! *
உலப்பிலானே ! எல்லாவுலகுமுடையவொருமூர்த்தி ! *
நலத்தால்மிக்கார்குடந்தைக்கிடந்தாய் ! உன்னைக்காண்பான்நான்
அலப்பாய் * ஆகாசத்தைநோக்கி அழுவன்தொழுவனே. (ச)

அழுவன்தொழுவன்ஆடிக்காண்பன் பாடியலற்றுவன் *
தழுவல்வினையால்பக்கம்நோக்கி நாணிக்கவிழ்ந்திருப்பன் *
செழுவொண்பழனக்குடந்தைக்கிடந்தாய் ! செந்தாமரைக்கண்ணா ! *
தொழுவனேனைஉனதாள் சேரும்வகையேசூழ்கண்டாய். (ரு)

சூழ்கண்டாய்என்தொல்லைவினையையறுத்து உன்னடிசேரும்
ஊழ்கண்டிருந்தே * தூராக்குழிதூர்த்து எனைநாளகன்றிருப்பன் ? *
வாழ்தொல்புகழார்குடந்தைக்கிடந்தாய் ! வானோர்கோமானே ! *
யாழினிசையே ! அமுதே ! அறிவின்பயனே ! அரியேறே ! (சு)

அரியேறே ! என்னம்பொற்சுடரே ! செங்கண்கருமுகிலே ! *
எரியே ! பவளக்குன்றே ! நால்தோளெந்தாய் ! உனதருளே ! *
பிரியாவடிமையென்னைக்கொண்டாய் ! குடந்தைத்திருமாலே ! *
தரியேனினிஉன்சரணந்தந்து என்சன்மம்களையாயே. (எ)

களைவாய்துன்பம்களையாதொழிவாய் களைகண்மற்றிலேன் *
வளைவாய்நேமிப்படையாய் ! குடந்தைக்கிடந்தமாமாயா ! *
தளராவுடலமெனதாவி சரிந்துபோம்போது *
இளையாதுஉனதாள்ஒருங்கப்பிடித்துப் போதஇசைநீயே. (அ)

இசைவித்தென்னையுன்தாளிணைக்கீழ் இருத்தும்அம்மானே ! *
அசைவிலமரர்தலைவர்தலைவா ! ஆதிப்பெருமூர்த்தி ! *
திசைவில்வீசுஞ்செழுமாமணிகள்சேரும் திருக்குடந்தை *
அசைவிலுலகம்பரவக்கிடந்தாய் ! காணவாராயே. (கூ)

↓↓ வாராவருவாய்வருமென்மாயா! மாயாமூர்த்தியாய்! *
ஆராவமுதாய் அடியேனாவி அகமேதித்திப்பாய் *
தீராவினைகள்தீரஎன்னையாண்டாய! திருக்குடந்தை
ஊரா! * உனக்காட்பட்டும் அடியேன்இன்னும்உழல்வேனோ? (க0)

↓↓ உழலையென்பின்பேய்ச்சிமுலையூடு அவளையுயிருண்டான் *
கழல்களவையேசரணாகக்கொண்ட குருகூர்ச்சடகோபன் *
குழலின்மலியச்சொன்ன ஓராயிரத்துள்இப்பத்தும் *
மழலைதீரவல்லார் காமர்மானேய்நோக்கியர்க்கே. (கக)

அழ்வார் திருவடிகளே சரணம்.

கூ - ஆந் திருவாய்மொழி—மானேய்நோக்கு.

[திருவல்லவாழ்செல்ல ஒருப்பட்ட தலைவி விடாய்த்துப் புறச்சோலையில் விழுந்து தடுக்குந் தோழியரை நல்வார்த்தைகூறி 'அந்தத் திருவல்லவாழ்ப்பிரானை என்று அடைவேன்?' என்று கூறும் பாசுரம்.]

கலிநிலைத்துறை.

பண் - பஞ்சமம், தாளம் - ஏழொத்து. முகாரிராகம் - அடதாளம்.

↓↓ மானேய்நோக்குநல்லீர்! வைகலும்வினையேன்மெலிய *
வானார்வண்கமுகும் மதுமல்லிகைகமழும் *
தேனார்சோலைகள்சூழ் திருவல்லவாழுறையும்
கோனாரை * அடியேன் அடிகூடுவதென்றுகொலோ? (க)

என்றுகொல்? தோழிமீர்காள்! எம்மைநீர்நலிந்தென்செய்தீரோ? *
பொன்திகழ்புன்னைமகிழ புதுமாதவிமீதணவி *
தென்றல்மணங்கமழும் திருவல்லவாழ்நகருள்
நின்றபிரான் * அடிநீறு அடியோம்கொண்டுசூடுவதே. (உ)

சூடுமலர்க்குழலீர்! துயராட்டியேனைமெலிய *
பாடுநல்வேதவொலி பரவைத்திரைபோல்முழங்க *
மாடுயர்ந்தோமப்புகைகமழும் தண்திருவல்லவாழ் *
நீடுறைகின்றபிரான் கழல்காண்டுங்கொல்நிச்சலுமே? (ங)

நிச்சலும்தோழிமீர்காள்! எம்மைநீர்நலிந்தென்செய்தீரோ? *
பச்சிலைநீள்கமுகும் பலவும்தெங்கும்வாழைகளும் *
மச்சணிமாடங்கள்மீதணவும் தண்திருவல்லவாழ் *
நச்சரவினணைமேல் நம்பிரானதுநன்னலமே. (ச)

நன்னலத்தோழிமீர்காள்! நல்லஅந்தணர்வேள்விப்புகை *
மைந்நலங்கொண்டுயர்விண்மறைக்கும் தண்திருவல்லவாழ் *
கன்னலங்கட்டிதன்னைக் கனியைஇன்னமுதந்தன்னை *
என்னலங்கொள்சுடரை என்றுகொல்கண்கள்காண்பதுவே? (௫)

காண்பதெஞ்ஞான்றுகொலோ? வினையேன்கனிவாய்மடவீர்! *
பாண்குரல்வண்டினொடு பசுந்தென்றலுமாகியெங்கும் *
சேண்சினையோங்குமரச் செழுங்கானல்திருவல்லவாழ் *
மாண்குறள்கோலப்பிரான் மலர்த்தாமரைப்பாதங்களே. (௬)

பாதங்கள்மேலணி பூந்தொழக்கூடுங்கொல்? பாவைநல்லீர்! *
ஓதநெடுந்தடத்துள் உயர்தாமரைசெங்கழுநீர் *
மாதர்கள்வாண்முகமும் கண்ணுமேந்தும்திருவல்லவாழ் *
நாதனிஞ்ஞாலமுண்ட நம்பிரான்தன்னைநாள்தொறுமே. (௭)

நாள்தொறும்வீடின்றியே தொழக்கூடுங்கொல்? நன்னுதலீர்! *
ஆடுறுதீங்கரும்பும் விளைசெந்நெலுமாகியெங்கும் *
மாடுறுபூந்தடஞ்சேர் வயல்சூழ்தண்திருவல்லவாழ் *
நீடுறைகின்றபிரான் நிலந்தாவியநீள்கழலே. (௮)

கழல்வளைபூரிப்பயாம்கண்டு கைதொழக்கூடுங்கொலோ? *
குழலென்னயாழுமென்னக் குளிர்சோலையுள்தேனருந்தி *
மழலைவரிவண்டுகளிசைபாடும் திருவல்லவாழ் *
சுழலின்மலிசக்கரப்பெருமானது தொல்லருளே. (௯)

தொல்லருள்நல்வினையால் சொலக்கூடுங்கொல்? தோழிமீர்காள்! *
தொல்லருள்மண்ணும்விண்ணும் தொழநின்றதிருநகரம் *
நல்லருளாயிரவர் நலனேந்துந்திருவல்லவாழ் *
நல்லருள்நம்பெருமான் நாராயணன்நாமங்களே. (௧௦)

↓↓ நாமங்களாயிரமுடைய நம்பெருமானடிமேல் *
சேமங்கொள்தென்குருகூர்ச் சடகோபன்தெரிந்துரைத்த *
நாமங்களாயிரத்துள் இவைபத்தும்திருவல்லவாழ் *
சேமங்கொள்தென்னகர்மேல் செப்புவார்சிறந்தார்பிறந்தே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௧௦ - ஆந் திருவாய்மொழி—பிறந்தவாறும்.

[ஆழ்வார் குணாநுபவத்தால் தாம் சிதிலராகாது சேர்ந்து அநுபவிப்பிக்குமாறு எம்பெருமானை வேண்டுதல்.]

ஆசிரியத்துறை.

பண் - காந்தாரம், தாளம் - ஏழொத்து. மோஹநராகம் - ஆதிதாளம்.

⸸⸸ பிறந்தவாறும்வளர்ந்தவாறும் பெரியபாரதம்கைசெய்து * ஐவர்க்
திறங்கள்காட்டியிட்டுச் செய்துபோனமாயங்களும் * [குத்
நிறந்தனூடுபுக்குஎனதாவியை நின்றுநின்றுஉருக்கியுண்கின்ற * இச்
சிறந்தவான்சுடரே! உன்னையென்றுகொல்? சேர்வதுவே. (௧)

வதுவைவார்த்தையுளேறுபாய்ந்ததும் மாயமாவினைவாய்பிளந்ததும் *
மதுவைவார்குழலார் குரவைபிணைந்தகுழகும் * [ம் *
அதுவிதுவுதுவென்னலாவனவல்ல என்னைஉன்செய்கைநைவிக்கு
முதுவையமுதல்வா! உன்னையென்றுதலைப்பெய்வனே? (௨)

பெய்யும்பூங்குழல்பேய்முலையுண்ட பிள்ளைத்தேற்றமும் * பேர்ந்தோர்
செய்யபாதமொன்றால் செய்தநின்சிறுச்சேவகமும் * [சாடிறச்
நெய்யுண்வார்த்தையுள்அன்னைகோல்கொள்ள நீஉன்தாமரைக்கண்கள்
பையவேநிலையும்வந்து என்னெஞ்சைஉருக்குங்களே. (௩) [நீர்மல்க *

கள்ளவேடத்தைக்கொண்டுபோய்ப் புரம்புக்கவாறும் * கலந்தசுரரை
உள்ளம்பேதஞ்செய்திட்டு உயிருண்டவுபாயங்களும் *
வெள்ளநீர்ச்சடையானும் நின்னிடைவேறலாமைவிளங்கநின்றதும் *
உள்ளமுள்குடைந்து என்னுயிரையுருக்கியுண்ணுமே. (௪)

உண்ணவானவர்கோனுக்கு ஆயரொருப்படுத்தவடிசிலுண்டதும் *
வண்ணமால்வரையையெடுத்து மழைகாத்ததும் *
மண்ணைமுன்படைத்துண்டுமிழ்ந்து கடந்திடந்துமணந்தமாயங்கள் *
எண்ணுந்தோறுமென்னெஞ்சு எரிவாய்மெழுகொக்கும்நின்றே. (௫)

நின்றவாறும்இருந்தவாறும் கிடந்தவாறும்நினைப்பரியன *
ஒன்றலாஉருவாய் அருவாயநின்மாயங்கள் * [யேற்கு
நின்றுநின்றுநினைகின்றேன் உன்னையெங்ஙனம்நினைகிற்பன்? * பாவி
ஒன்றுநன்குரையாய் உலகமுண்டவொண்சுடரே! (௬)

ஒண்சுடரொடிருளுமாய்நின்றவாறும் உண்மையோடின்மையாய்வந்
கண்கொளாவகை நீகரந்தென்னைச்செய்கின்றன * [து * என்
எண்கொள்சிந்தையுள்நைகின்றேன் என்கரியமாணிக்கமே! * என்கண்
திண்கொள்ளஒருநாள் அருளாய்உன்திருவுருவே. (௭) கட்குத்

திருவுருவுகிடந்தவாறும் கொப்பூழ்ச்செந்தாமரைமேல் * திசைமுகன்
கருவுள்வீற்றிருந்து படைத்திட்டகருமங்களும் *   [னெக்கு *
பொருவிலுன்தனிநாயகமவை கேட்குந்தோறும்என்னெஞ்சம்நின்று
அருவிசோரும்கண்ணீர் என்செய்கேன் ? அடியேனே. (௮)

அடியைமூன்றையிரந்தவாறும் அங்கேநின்றாழ்கடலும்மண்ணும்விண்
முடிய * ஈரடியால் முடித்துக்கொண்டமுக்கியமும் *   [ணும்
நொடியுமாறவைகேட்குந்தோறும் என்னெஞ்சம்நின்தனக்கேகரைந்து
கொடியவல்வினையேன் உன்னையென்றுகொல்கூடுவதே ? (௯) [கும் *

கூடிநீரைக்கடைந்தவாறும் அமுதம்தேவருண்ண * அசுரரை
வீடும்வண்ணங்களே செய்துபோனவித்தகமும் *
ஊடுபுக்கெனதாவியை உருக்கியுண்டிடுகின்ற * நின்தன்னை
நாடும்வண்ணஞ்சொல்லாய் நச்சுநாகணையானே ! (௧௦)

↓↓ நாகணைமிசைநம்பிரான்சரணே சரண்நமக்கென்று * நாள்தொறும்
ஏகசிந்தையனாய்க் குருகூர்ச்சடகோபன்மாறன் *
ஆகநூற்றவந்தாதி ஆயிரத்துள் இவையுமோர்பத்துமவல்லார் *
மாகவைகுந்தத்து மகிழ்வெய்துவர்வைகலுமே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆறும்பத்து.

விரோதி நிரஸந சீலனனவனது திருவடிகளில் சரணம்புகுதல்.

௧- ஆந் திருவாய்மொழி—வைகல்பூங்கழி.

[தலைவி திருவண்வண்டூரிலே சக்ரவர்த்தித்திருமகன் விஷயமாகப் பக்ஷிகளைத் தூதுவிட்டதை அருளிச்செய்தல்.]

கலிநிலைத்துறை.

பண் - நட்டராகம், தாளம் - ஏழொத்து. அஸாவேரிராகம் - ஆதிதாளம்

↓↓ வைகல்பூங்கழிவாய் வருதுமேயுங்குருகினங்காள்! *
செய்கொள்செந்நெலுயர் திருவண்வண்டூருறையும் *
கைகொள்சக்கரத்து என்கனிவாய்ப்பெருமானைக்கண்டு *
கைகள்கூப்பிச்சொல்லீர் வினையாட்டியேன்காதன்மையே. (௧)

காதல்மென்பெடையோடு உடன்மேயுங்கருநாராய்! *
வேதவேள்வியொலிமுழங்கும் தண்திருவண்வண்டூர் *
நாதன் ஞாலமெல்லாமுண்ட நம்பெருமானைக்கண்டு *
பாதம்கைதொழுதுபணியீர் அடியேன்திறமே. (௨)

திறங்களாகியெங்கும் செய்களூடுழல்புள்ளினங்காள்! *
சிறந்தசெல்வம்மல்கு திருவண்வண்டூருறையும் *
கறங்குசக்கரக்கைக் கனிவாய்ப்பெருமானைக்கண்டு *
இறங்கிநீர்தொழுதுபணியீர் அடியேனிடரே. (௩)

இடரில்போகம்மூழ்கி இணைந்தாடும்மடவன்னங்காள்! *
விடலில்வேதவொலிமுழங்கும் தண்திருவண்வண்டூர் *
† கடலின்மேனிப்பிரான் கண்ணனைநெடுமாலைக்கண்டு *
உடலம்நைந்தொருத்தி உருகுமென்றுஉணர்த்துமினே. (௪)

உணர்த்தலூடலுணர்ந்து உடன்மேயும்மடவன்னங்காள்! *
திணர்த்தவண்டல்கள்மேல் சங்குசேரும்திருவண்வண்டூர் *
புணர்த்தபூந்தண்துழாய்முடி நம்பெருமானைக்கண்டு *
புணர்த்தகையினராய் அடியேனுக்கும்போற்றுமினே. (௫)

போற்றியானிரந்தேன் புன்னைமேலுறைபூங்குயில்காள்! *
சேற்றில்வாளைதுள்ளும் திருவண்வண்டூருறையும் *
ஆற்றலாழியங்கை அமரர்பெருமானைக்கண்டு *
மாற்றங்கொண்டருளீர் மையல்தீர்வதொருவண்ணமே. (௬)

ஒருவண்ணம்சென்றுபுக்கு எனக்கொன்றுரைஒண்கிளியே! *
செருவொண்பூம்பொழில்சூழ் செக்கர்வேலைத்திருவண்வண்டூர் *
கருவண்ணம்செய்யவாய் செய்யகண்செய்யகைசெய்யகால் *
செருவொண்சக்கரம்சங்கு அடையாளம்திருந்தக்கண்டே. (௭)

திருந்தக்கண்டெனக்கொன்றுரையாய் ஒண்சிறுபூவாய்! *
செருந்திஞாழல்மகிழ் புன்னைசூழ்தண்திருவண்வண்டூர் *
பெருந்தண்தாமரைக்கண் பெருநீள்முடிநால்தடந்தோள் *
கருந்திண்மாமுகில்போல் திருமேனியடிகளையே. (௮)

அடிகள்கைதொழுது அலர்மேலசையுமன்னங்காள்! *
விடிவைசங்கொலிக்கும் திருவண்வண்டூருறையும் *
கடியமாயன்தன்னைக் கண்ணனைநெடுமாலைக்கண்டு *
கொடியவல்வினையேன் திறம்கூறுமின்வேறுகொண்டே. (௯)

---

† 'கடலமேனி' என்றும் பாடம்.

வேறுகொண்டும்மையானிரந்தேன் வெறிவண்டினங்காள்! *
தேறுநீர்ப்பம்பை வடபாலைத்திருவண்வண்டூர் *
மாறில்போரரக்கன் மதிள்நீறெழச்செற்றுகந்த *
ஏறுசேவகனார்க்கு என்னையுமுளளென்மின்களே. (கO)

↓↓ மின்கொள்சேர்புரிநூல்குறளாய் அகல்ஞாலம்கொண்ட *
வன்கள்வனடிமேல் குருகூர்ச்சடகோபன்சொன்ன *
பண்கொளாயிரத்துள் இவைபத்தும் திருவண்வண்டூர்க்கு *
இன்கொள்பாடல்வல்லார் மதனர்மின்னிடையவர்க்கே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

† உ-ஆந் திருவாய்மொழி—மின்னிடைமடவார்கள்.

[எம்பெருமான் விளம்பித்து வரக் கண்ட தலைவி 'உமக்கு வேண்டின ஸ்திரீகள் இருக்க இங்கே வரவேண்டா' என்று ஊடல் திறத்தினால் திரஸ்காரம் பண்ணினதை அருளிச்செய்தல்.]

ஆசிரியத்துறை.

பண் - சீகாமரம், தாளம் - ஏழொத்து சோகவராளிராகம் - ஆதிதாளம்.

↓↓ மின்னிடைமடவார்கள்நின்னருள்சூடுவார் முன்புநான தஞ்சுவன் *
மன்னுடையிலங்கை அரண்காய்ந்தமாயவனே! *
உன்னுடையசுண்டாயம்நானறிவன் இனிஅதுகொண்டுசெய்வதென்? *
என்னுடையபந்துங்கழலும் தந்துபோகுநம்பீ! (க)

போகுநம்பீ! உன்தாமரைபுரைகண்ணிணையும் செவ்வாய்முறுவலும் *
ஆகுலங்கள்செய்ய அழிதற்கேநோற்றோமே? யாம் *
தோகைமாமயிலார்கள்நின்னருள்சூடுவார் செவியோசைவைத்தெழ *
ஆகள்போகவிட்டுக் குழலூதுபோயிருந்தே. (உ)

போயிருந்துநின்புள்ளுவம் அறியாதவர்க்குஉரைநம்பீ! * நின்
வாயிருங்கனியும்கண்களும் விபரீதமிந்நாள் * [செய்ய
வேயிருந்தடந்தோளினார் இத்திருவருள்பெறுவார்யவர்கொல்? *
மாயிருங்கடலைக்கடைந்த பெருமானாலே. (ங)

---

† இந்தத் திருவாய்மொழி, நாச்சிமார் பிரணயகலகத்தில் ஸேவிக்கப் படுவது.

ஆலினீளிலையேழுலகமுண்டு அன்றுநீகிடந்தாய் * உன்மாயங்கள்
மேலைவானவருமறியார் இனியெம்பரமே? *
வேலினேர்தடங்கண்ணினார் விளையாடுசூழலைச்சூழவேநின்று *
காலிமேய்க்கவல்லாய்! எம்மைநீகழறேலே. (ச)

கழறேல்நம்பீ! உன்கைதவம்மண்ணும்விண்ணும்நன்கறியும் * திண்
நிழறுதொல்படையாய்! உனக்கொன்றுணர்த்துவன்நான் * [சக்கர
மழறுதேன்மொழியார்கள்நின்னருள்சூடுவார் மனம்வாடிநிற்க * எம்
குழறுபூவையொடும் கிளியோடும்குழகேலே. (ரு)

குழகியெங்கள்குழமணன்கொண்டு கோயின்மைசெய்துகன்மமொன்
பழகியாமிருப்போம் பரமேஇத்திருவருள்கள்? * [றில்லை *
அழகியாரிவ்வுலகமூன்றுக்கும் தேவிமைதகுவார்பல நளர் *
கழகமேறேல்நம்பீ! உனக்குமிளைதேகன்மமே. (சு)

கன்மமன்றெங்கள்கைப்பிற்பாவைபறிப்பது கடல்ஞாலமுண்டிட்ட *
நின்மலா! நெடியாய்! உனக்கேலும்பிறைபிறையே *
வன்மமேசொல்லியெம்மைநீவிளையாடுதி அதுகேட்கில்என்னைமார் *
தன்மபாவமென்னார் ஒருநான்றுதடிபிணக்கே. (எ)

பிணக்கியாவையும்யாவரும் பிழையாமல்பேதித்தும்பேதியாதது *ஓர்
கணக்கில்கீர்த்திவெள்ளக் கதிர்ஞானமூர்த்தியினாய்! * [ந்தோமை *
இணக்கியெம்மையெந்தோழிமார் விளையாடப்போதுமினென்னப்போ
உணக்கிநீவளைத்தால் என்சொல்லாருகவாதவரே? (அ)

உகவையால்நெஞ்சமுள்ளுருகி உன்தாமரைத்தடங்கண்விழிகளின் *
அகவலைப்படுப்பான் அழித்தாயுன்திருவடியால் *
தகவுசெய்திலைஎங்கள்சிற்றிலும் யாமடுசிறுசோறும்கண்டு * நின்
முகவொளிதிகழ முறுவல்செய்துநின்றிலையே. (கூ)

நின்றிலங்குமுடியினாய்! இருபத்தோர்காலரசுகளைகட்ட *
வென்றிநீள்மழுவா! வியன்ஞாலமுன்படைத்தாய்! *
இன்றிவ்வாயர்குலத்தைவீடுய்யத்தோன்றிய கருமாணிக்கச்சுடர்! *
நின்தன்னால்நலிவேபடுவோம்என்றும் ஆய்ச்சியோமே. (க0)

↓↓ ஆய்ச்சியாகியவன்னையால் அன்றுவெண்ணெய்வார்த்தையுள் *
கூத்தவப்பன்தன்னைக் குருகூர்ச்சடகோபன் * [சீற்றமுண்டழு
வத்தியதமிழ்மாலை ஆயிரத்துள்இவையுமோர்பத்திசையொடும் *
நாத்தன்னால்நவிலவுரைப்பார்க்கு இல்லைநல்குரவே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௩-ஆந் திருவாய்மொழி—நல்குரவும்.

['ப்ரணயகலஹத்தில் விருத்தரான தம்மை வசீகரித்தவன் விருத்த விபூதிகனான ஸர்வேச்வரன்' என்று அருளிச்செய்தல்.]

கலிநிலைத்துறை.

பண் - நட்டராகம், தாளம் - நடையொத்து. உசேனிராகம் - ரூபகதாளம்.

நல்குரவும்செல்வும் நரகும்சுவர்க்கமுமாய் *
வெல்பகையும்நட்பும் விடமும்அமுதமுமாய் *
பல்வகையும்பரந்த பெருமானென்னையாள்வானை *
செல்வம்மல்குகுடித் திருவிண்ணகர்க்கண்டேனே. (௧)

கண்டவின்பம் துன்பம் கலக்கங்களும்தேற்றமுமாய் *
தண்டமும்தண்மையும் தழலும்நிழலுமாய் *
கண்டுகொள்தற்கரிய பெருமானென்னையாள்வானூர் *
தெண்திரைப்புனல்சூழ் திருவிண்ணகர்நன்னகரே. (௨)

நகரமும்நாடுகளும் ஞானமும்மூடமுமாய் *
நிகரில்சூழ்சுடராயிருளாய் நிலனாய்விசும்பாய் *
சிகரமாடங்கள்சூழ் திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான் *
புகர்கொள்கீர்த்தியல்லாலில்லை யாவர்க்கும்புண்ணியமே. (௩)

புண்ணியம்பாவம் புணர்ச்சிபிரிவென்றிவையாய் *
எண்ணமாய்மறப்பாய் உண்மையாயின்மையாயல்லனாய் *
திண்ணமாடங்கள்சூழ் திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான் *
கண்ணனின்னருளே கண்டுகொண்மின்கள்கைதவமே. (௪)

கைதவம்செம்மை கருமைவெளுமையுமாய் *
மெய்பொய் இளமைமுதுமை புதுமைபழமையுமாய் *
செய்ததிண்மதிள்சூழ் திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான் *
பெய்தகாவுகண்டீர் பெருந்தேவுடைமூவுலகே. (௫)

மூவுலகங்களுமாயல்லனாய் உகப்பாய்முனிவாய் *
பூவில்வாழ்மகளாய்த் தவ்வையாய்ப் புகழாய்ப்பழியாய் *
தேவர்மேவித்தொழும் திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான் *
பாவியேன்மனத்தே உறைகின்றபரஞ்சுடரே. (௬)

பரஞ்சுடருடம்பாய் அழுக்குப்பதித்தவுடம்பாய் *
கரந்தும்தோன்றியும்நின்றும் கைதவங்கள்செய்தும் * விண்ணோர்
சிரங்களால்வணங்கும் திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான் *
வரங்கொள்பாதமல்லாலில்லை யாவர்க்கும்வன்சரணே. (௭)

வன்சரண்சுரர்க்காய் அசுரர்க்குவெங்கூற்றமுமாய் *
தன்சரண்நிழற்கீழ் உலகம்வைத்தும்வையாதும் *
தென்சரண்திசைக்குத் திருவிண்ணகர்சேர்ந்தபிரான் *
என்சரணென்கண்ணன் என்னையாளுடையென்னப்பனே. (௮)

என்னப்பனெனக்காயிகுளாய் என்னைப்பெற்றவளாய் *
பொன்னப்பன்மணியப்பன்முத்தப்பன் என்னப்பனுமாய் *
மின்னப்பொன்மதிள்சூழ் திருவிண்ணகர்சேர்ந்தவப்பன் *
தன்னொப்பாரில்லப்பன் தந்தனன்தனதாள்நிழலே. (௯)

நிழல்வெய்யில்சிறுமைபெருமை குறுமைநெடுமையுமாய் *
சுழல்வனநிற்பன மற்றுமாயவையல்லனுமாய் *
மழலைவாய்வண்டுவாழ் திருவிண்ணகர்மன்னுபிரான் *
கழல்களன்றி மற்றோர்களைகணிலம்காண்மின்களே. (௧0)

⸸⸸ காண்மின்களுலகீர்! என்று கண்முகப்பேநிமிர்ந்த *
தாளிணையன்தன்னைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன *
ஆணையாயிரத்துத் திருவிண்ணகர்ப்பத்தும்வல்லார் *
கோணையின்றிவிண்ணோர்க்கு என்றுமாவர்குரவர்களே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௪ - ஆந் திருவாய்மொழி—குரவையாய்ச்சியர்.

[கண்ணனுடைய குணசேஷ்டிதங்களை எப்பொழுதும் பேசப்பெற்றமைக்குக் களித்தல்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - தக்கராகம், தாளம் - ஏழொத்து. யமுநாகல்யாணிராகம் - ஆதிதாளம்.

⸸⸸ குரவையாய்ச்சியரோடுகோத்ததும் குன்றமொன்றேந்தியதும் *
உரவுநீர்ப்பொய்கைநாகம்காய்ந்ததும் உட்படமற்றும்பல *
அரவிற்பள்ளிப்பிரான்தன் மாயவினைகளையேயலற்றி *
இரவும்நன்பகலும் † தவிர்கிலம் என்னகுறைவெனக்கே? (௧)

கேயத்தீங்குழலூதிற்றும் நிரைமேய்த்ததும்*கெண்டையொண்கண்
வாசப்பூங்குழல்பின்னைதோள்கள்மணந்ததும் மற்றும்பல *
மாயக்கோலப்பிரான்தன் செய்கைநினைந்துமனங்குழைந்து *
நேயத்தோடுகழிந்தபோது எனக்குஎவ்வுலகம்நிகரே? (௨)

† 'தவிர்கிலமென்னகுறைநமக்கே' என்பதும் பாடம்.

நிகரில்மல்லரைச்செற்றதும் நிரைமேய்த்ததும், நீள்நெடுங்கை *
சிகரமாகளிறட்டதும் இவைபோல்வனவும்பிறவும் *
புகர்கொள்சோதிப்பிரான்தன் செய்கைநினைந்துபுலம்பி * என்றும்
நுகரவைகல்வைகப்பெற்றேன் எனக்கென்னினிநோவதுவே ? (௩)

நோவவாய்ச்சியுரலோடார்க்க இரங்கிற்றும், வஞ்சப்பெண்ணை *
சாவப்பாலுண்டதும் ஊர்சகடமிறச்சாடியதும் *
தேவக்கோலப்பிரான்தன் செய்கைநினைந்துமனங்குழைந்து *
மேவக்காலங்கள்கூடினேன் எனக்கென்னினிவேண்டுவதே ? (௪)

வேண்டித்தேவரிரக்கவந்துபிறந்ததும் வீங்கிருள்வாய்
பூண்டு * அன்றன்னைபுலம்பப்போய் அங்கோராய்க்குலம்புக்கதும் *
காண்டலின்றிவளர்ந்து கஞ்சனைத்துஞ்சவஞ்சஞ்செய்ததும் *
ஈண்டுநானலற்றப்பெற்றேன் எனக்கென்னஇகலுளதே ? (௫)

இகல்கொள்புள்ளைப்பிளந்ததும் இமிலேறுகள்செற்றதுவும் *
உயர்கொள்சோலைக்குருந்தொசித்ததும் உட்படமற்றும்பல *
அகல்கொள்வையமளந்தமாயன் என்னப்பன்தன்மாயங்களே *
பகலிராப்பரவப்பெற்றேன் எனக்கென்னமனப்பரிப்பே ? (௬)

மனப்பரிப்போடு அழுக்குமானிடசாதியில்தான்பிறந்து *
தனக்குவேண்டுருக்கொண்டு தான்தனசிற்றத்தினைமுடிக்கும் *
புனத்துழாய்முடிமாலைமார்பன் என்னப்பன்தன்மாயங்களே *
நினைக்கும்நெஞ்சுடையேன் எனக்கினியார்நிகர்நீணிலத்தே ? (௭)

நீணிலத்தொடுவான்வியப்ப நிறைபெரும்போர்கள்செய்து *
வாணனாயிரந்தோள்துணித்ததும் உட்படமற்றும்பல *
மாணியாய்நிலங்கொண்டமாயன் என்னப்பன்தன்மாயங்களே *
காணும்நெஞ்சுடையேன் எனக்கினியென்னகலக்கமுண்டே ? (௮)

கலக்கவேழ்கடலேழ்மலை உலகேழும்கழியக்கடாய் *
உலக்கத்தேர்கொடுசென்றமாயமும் உட்படமற்றும்பல *
வலக்கையாழியிடக்கைச்சங்கம் இவையுடைமால்வண்ணனை *
மலக்குநாவுடையேற்கு மாறுளதோஇம்மண்ணின்மிசையே ? (௯)

மண்மிசைப்பெரும்பாரம்நீங்க ஓர்பாரதமாபெரும்போர்
பண்ணி * மாயங்கள்செய்துசேனையைப்பாழ்பட நூற்றிட்டுப்போய் *
விண்மிசைத்தனதாமமேபுக மேவியசோதிதன்தாள் *
நண்ணிநான்வணங்கப்பெற்றேன் எனக்கார்பிறர்நாயகரே ? (௧௦)

⸸ நாயகன்முழுவேழுலகுக்குமாய் முழுவேழுலகும் * தன்
வாயகம்புகவைத்துமிழ்ந்தவையாய் அவையல்லனுமாம் *
கேசவனடியிணைமிசைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன *
தூயவாயிரத்திப்பத்தால் பத்தராவர் துவளின்றியே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ரு - ஆந் திருவாய்மொழி—துவளில்.

[தோழி தாய்மாரைநோக்கிக் கூறும் பாசுரத்தாலே, ஆழ்வார் எம்பெருமானிடத்து ஈடுபட்டமையைப் பேசுதல்.]

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - பஞ்சமம், தாளம் - ஏழொத்து. சங்கராபரணராகம் - அடதாளம்.

⸸ துவளில்மாமணிமாடமோங்கு
† தொலைவில்லிமங்கலம்தொழு
மிவளை * நீரினியன்னைமீர்!
உமக்காசையில்லைவிடுமினோ *
தவளவொண்சங்குசக்கரமென்றும்
தாமரைத்தடங்கணென்றும் *
குவளையொண்மலர்க்கண்கள்நீர்மல்க
நின்றுநின்றுகுமுறுமே. (க)

குமுறுமோசைவிழவொலித்
தொலைவில்லிமங்கலம்கொண்டுபுக்கு *
அமுதமென்மொழியாளை
நீருமக்குஆசையின்றியகற்றினீர் *
திமிர்கொண்டாலொத்துநிற்கும் மற்றிவள்
தேவதேவபிரானென்றே *
நிமியும்வாயொடுகண்கள்நீர்மல்க
நெக்கொசிந்துகரையுமே. (உ)

கரைகொள்பைம்பொழில்தண்பணைத் தொலை
வில்லிமங்கலம்கொண்டுபுக்கு *
உரைகொளின்மொழியாளை
நீருமக்காசையின்றியகற்றினீர் *

† 'துலைவில்லிமங்கலம்' என்றும் கூறுவர்.

பக்கம்நோக்கிநிற்கும்நையுமென்று அன்னையரும்முனிதிர் *
தக்ககீர்த்தித்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின் *
தொக்கசோதித்தொண்டைவாயும் நீண்டபுருவங்களும் *
தக்கதாமரைக்கண்ணும் பாவியேனுடையாவியின்மேலனவே. (௫)

மேலும்வன்பழிநங்குடிக்கிவளென்று அன்னைகாணக்கொடாள் *
சோலைசூழ்தண்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின் *
கோலநீள்கொடிமூக்கும் தாமரைக்கண்ணும்கனிவாயும் *
நீலமேனியும்நான்குதோளும் என்னெஞ்சம்நிறைந்தனவே. (௬)

நிறைந்தவன்பழிநங்குடிக்கிவளென்று அன்னைகாணக்கொடாள் *
சிறந்தகீர்த்தித்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின் *
நிறைந்தசோதிவெள்ளம்சூழ்ந்த நீண்டபொன்மேனியொடும் *
நிறைந்தென்னுள்ளேநின்றொழிந்தான் நேமியங்கையுளதே. (௭)

கையுள்நன்முகம்வைக்கும்நையுமென்று அன்னையரும்முனிதிர் *
மைகொள்மாடத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின் *
செய்யதாமரைக்கண்ணுமல்குலும் சிற்றிடையும்வடிவும் *
†மொய்யநீள்குழல்தாழ்ந்ததோள்களும் பாவியேன்முன்னிற்குமே. ()

முன்னின்றாயென்றுதோழிமார்களும் அன்னையரும்முனிதிர் *
மன்னுமாடத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின் *
சென்னிநீள்முடியாதியாய உலப்பிலணிகலத்தன் *
கன்னல்பாலமுதாகிவந்து என்னெஞ்சம்கழியானே. (௯)

கழியமிக்கதோர்காதலளிவளென்று அன்னைகாணக்கொடாள் *
வழுவில்கீர்த்தித்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின் *
குழுமித்தேவர்குழாங்கள் கைதொழச்சோதிவெள்ளத்தினுள்ளே *
எழுவதோருருவென்னெஞ்சுள்ளெழும் ஆர்க்குமறிவரிதே. (௧௦)

↓↓ அறிவரியபிரானை ஆழியங்கையனையேயலற்றி *
நறியநன்மலர்நாடி நன்குருகூர்ச்சடகோபன்சொன்ன *
குறிகொளாயிரத்துள் இவைபத்தும் திருக்குறுங்குடியதன்மேல் *
அறியக்கற்றுவல்லார்வைட்டணவர் ஆழ்கடல்ஞாலத்துள்ளே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

† 'மொய்கொள்' என்பது உரையின் பாடம்.

முன்னம்நோற்றவிதிகொலோ ? முகில்
வண்ணன்மாயங்கொலோ? * அவன்
சின்னமும்திருநாமமும் இவள்
வாயனகள்திருந்தவே. (௭)

திருந்துவேதமும்வேள்வியும்
திருமாமகளிரும்தாம் * மலிந்
திருந்துவாழ்பொருநல்
வடகரைவண்தொலைவில்லிமங்கலம் *
கருந்தடங்கண்ணிகைதொழுத
அந்நாள்தொடங்கிஇந்நாள்தொறும் *
இருந்திருந்தரவிந்தலோசன !
என்றென்றே நைந்திரங்குமே. (௮)

இரங்கிநாள்தொறும்வாய்வெரீஇ
இவள்கண்ணநீர்களலமர *
மரங்களுமிரங்கும்வகை
மணிவண்ணவோ ! என்றுகூவுமால் *
துரங்கம்வாய்பிளந்தானுறை
தொலைவில்லிமங்கலமென்று * தன்
கரங்கள்கூப்பித்தொழும் அவ்வூர்த்
திருநாமம்கற்றதற்பின்னையே. (௯)

பின்னைகொல்? நிலமாமகள்கொல்?
திருமகள்கொல்? பிறந்திட்டாள் *
என்னமாயங்கொலோ? இவள்நெடுமா
லென்றேநின்றுகூவுமால் *
முன்னிவந்தவன்நின்றிருந்துறையும்
தொலைவில்லிமங்கலம்
சென்னியால்வணங்கும் * அவ்வூர்த்திருநாமம்
கேட்பதுசிந்தையே. (௧௦)

↓↓ சிந்தையாலும்சொல்லாலும்
செய்கையினாலும் தேவபிரானையே *
தந்தைதாயென்றடைந்த
வண்குருகூரவர்சடகோபன் *

முந்நூறாயிரத்துள் இவை
    தொலைவில்லிமங்கலத்தைச்சொன்ன *
செந்தமிழ்ப்பத்தும்வல்லார்
    அடிமைசெய்வார்திருமாலுக்கே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௬ - ஆந் திருவாய்மொழி—மாலுக்

[ஆழ்வார் பகவதநுபவத்தின் அலாபத்தால்வந்த பாரவஶ்யத்தை, பிரிந்து வருந்தும் தலைமகளைக் குறித்துத் தாய் இரங்கும் பாசுரத்தால் அருளிச்செய்தல்.]

கலிவிருத்தம்.

பண் - முதிர்ந்தகுறிஞ்சி, தாளம் - ஏழொத்து. காபிராகம் - ரூபகதாளம்.

↓↓ மாலுக்கு வையமளந்தமணாளற்கு *
நீலக்கருநிற மேகநியாயற்கு *
கோலச்செந்தாமரைக்கண்ணற்கு * என்கொங்கல
ரேலக்குழலி இழந்ததுசங்கே. (௧)

சங்குவில்வாள்தண்டு சக்கரக்கையற்கு *
செங்கனிவாய்ச் செய்யதாமரைக்கண்ணற்கு *
கொங்கலர்தண்ணந்துழாய் முடியானுக்கு * என்
மங்கையிழந்தது மாமைநிறமே. (௨)

நிறங்கரியானுக்கு நீடுலகுண்ட *
திறங்கிளர்வாய்ச் சிறுக்கள்வரவர்க்கு *
கறங்கியசக்கரக் கையவனுக்கு * என்
பிறங்கிருங்கூந்தல் இழந்ததுபீடே. (௩)

பீடுடைநான்முகனைப் படைத்தானுக்கு *
மாடுடைவையம் அளந்தமணாளற்கு *
நாடுடைமன்னர்க்குத் † தூதுசெல்நம்பிக்கு * என்
பாடுடையல்குல் இழந்ததுபண்பே. (௪)

---

† தூதுசெய்' என்பது உரையின் பாடம்.

பண்புடைவேதம் பயந்தபரனுக்கு *
மண்புரைவையம் இடந்தவராகற்கு *
தெண்புனற்பள்ளி எந்தேவபிரானுக்கு * என்
கண்புனைகோதை இழந்ததுகற்பே. (௫)

கற்பகக்காவன நற்பலதோளற்கு *
பொற்சுடர்க்குன்றன்ன பூந்தண்முடியற்கு *
நற்பலதாமரை நாள்மலர்க்கையற்கு * என்
விற்புருவக்கொடி தோற்றதுமெய்யே. (௬)

மெய்யமர்பல்கலன் நன்கணிந்தானுக்கு *
பையரவினணைப் பள்ளியினானுக்கு *
கையொடுகால்செய்ய கண்ணபிரானுக்கு * என்
தையலிழந்தது தன்னுடைச்சாயே. (௭)

சாயக்குருந்தம் ஒசித்ததமியற்கு *
மாயச்சகடம் உதைத்தமணாளற்கு *
பேயைப்பிணம்படப் பாலுண்பிரானுக்கு * என்
வாசக்குழலி இழந்ததுமாண்பே. (௮)

மாண்பமைகோலத்து எம்மாயக்குறளற்கு *
சேண்சுடர்க்குன்றன்ன செஞ்சுடர்மூர்த்திக்கு *
காண்பெருந்தோற்றத்து எங்காகுத்தநம்பிக்கு * என்
பூண்புனைமென்முலை தோற்றதுபொற்பே. (௯)

பொற்பமைநீள்முடிப் பூந்தண்துழாயற்கு *
மற்பொருதோளுடை மாயப்பிரானுக்கு *
நிற்பனபல்லுருவாய் நிற்குமாயற்கு * என்
கற்புடையாட்டி இழந்ததுகட்டே. (௧௦)

‡‡ கட்டெழில்சோலை நல்வேங்கடவாணனை *
கட்டெழில்தென்குருகூர்ச் சடகோபன்சொல் *
கட்டெழிலாயிரத்து இப்பத்தும்வல்லவர் *
கட்டெழில்வானவர் போகமுண்பாரே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எ-ஆந் திருவாய்மொழி—உண்ணுஞ்சோறு.

[ஆழ்வார் தாரக போஷக போக்யங்கள் கண்ணனென்றுஉணர்ந்து திருக்கோளூரி லீடேபட்டதை, தலைவன்நகர்நோக்கிச்சென்ற தலைமகளைப் பற்றித் தாய் இரங்கும் பாசுரத்தாலே அருளிச்செய்தல்.]

கலிநிலைத்துறை.

பண் - பழஞ்சுரம், தாளம் - ஏழொத்து. காம்போஜிராகம் - ஆதிதாளம்.

↓↓ உண்ணுஞ்சோறுபருகுநீர் தின்னும்வெற்றிலையுமெல்லாம்
கண்ணன் * எம்பெருமானென்றென்றே கண்கள்நீர்மல்கி *
மண்ணினுள்ளவன்சீர் வளம்மிக்கவனூர்வினவி *
திண்ணம்என்னிளமான்புகுமூர் திருக்கோளூரே. (௧)

ஊரும்நாடுமுலகமும் தன்னைப்போல் * அவனுடைய
பேரும்தார்களுமேபிதற்றக் கற்புவானிடறி *
சேரும்நல்வளஞ்சேர் பழனத்திருக்கோளூர்க்கே *
போருங்கொல்? உரையீர் கொடியேன்கொடிபூவைகளே! (௨)

பூவைபைங்கிளிகள் பந்துதூதைபூம்புட்டில்கள் *
யாவையும்திருமால் திருநாமங்களேகூவியெழும் * என்
பாவைபோயினித் தண்பழனத்திருக்கோளூர்க்கே *
கோவைவாய்துடிப்ப மழைக்கண்ணொடென்செய்யுங்கொலோ ? (௩)

கொல்லையென்பர்கொலோ ? குணம்மிக்கனளென்பர்கொலோ? *
சில்லைவாய்ப்பெண்டுகள் அயற்சேரியுள்ளாருமெல்லே ! *
செல்வம்மல்கியவன்கிடந்த திருக்கோளூர்க்கே *
மெல்லிடைநுடங்க இளமான்செல்லமேவினளே. (௪)

மேவிநைந்துநைந்துவிளையாடலுறாள்என் சிறுத்
தேவிபோய் * இனித்தன்திருமால் திருக்கோளூரில் *
பூவியல்பொழிலும் தடமும்அவன்கோயிலும்கண்டு *
ஆவியுள்குளிர எங்ஙனேயுகக்குங்கொலின்றே ? (௫)

இன்றெனக்குதவாதகன்ற இளமான்இனிப்போய் *
தென்திசைத்திலதமனைய திருக்கோளூர்க்கே
சென்று * தன்திருமால்திருக்கண்ணும் செவ்வாயும்கண்டு *
நின்றுநின்றுநையும் நெடுங்கண்கள்பனிமல்கவே. (௬)

மல்குநீர்க்கண்ணொடு மையலுற்றமனத்தனளாய் *
அல்லும்நன்பகலும் நெடுமாலென்றழைத்து, இனிப்போய் *
செல்வம்மல்கியவன்கிடந்த திருக்கோளூர்க்கே *
ஒல்கியொல்கிநடந்து எங்ஙனேபுகுங்கொலொசிந்தே? (எ)

ஒசிந்தநுண்ணிடைமேல் கையைவைத்து நொந்துநொந்து *
கசிந்தநெஞ்சினளாய்க் கண்ணநீர் துளும்பச்செல்லுங்கொல்? *
ஒசிந்தவொண்மலராள்கொழுநன் திருக்கோளூர்க்கே *
கசிந்தநெஞ்சினளாய் எம்மைநீத்தவெம்காரிகையே. (அ)

காரியம்நல்லனகளவைகாணில் என்கண்ணனுக்கென்று *
ஈரியாயிருப்பாள் இதெல்லாம்கிடக்க, இனிப்போய் *
சேரிபல்பழிதூயிரைப்பத் திருக்கோளூர்க்கே *
நேரிழைநடந்தாள் எம்மையொன்றும்நினைத்திலளே. (கூ)

நினைக்கிலேன்தெய்வங்காள்! நெடுங்கணிளமான் இனிப்போய் *
அனைத்துலகுமுடைய அரவிந்தலோசனனை *
தினைத்தனையும்விடாள் அவன்சேர்திருக்கோளூர்க்கே *
மனைக்குவான்பழியும்நினையாள் செல்லவைத்தனளே. (கo)

↓↓ வைத்தமாநிதியாம் மதுசூதனையேயலற்றி *
கொத்தலர்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன்சொன்ன *
பத்துநூற்றுள்இப்பத்து அவன்சேர்திருக்கோளூர்க்கே *
சித்தம்வைத்துரைப்பார் திகழ்பொன்னுலகாள்வாரே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

அ - ஆந் திருவாய்மொழி—பொன்னுலகு.

[எம்பெருமானது ஆச்ரிதரோடு கலந்திருக்கும் குணமே பற்றாசாக, பரத்வம் முதலியவற்றில் பறவைகளைத் தூதுவிடும் தலைமகள்பாசுரத்தாலே அருளிச்செய்தல்.]

கலிநிலைத்துறை.

பண் - குறிஞ்சி, தாளம் - ஏழொத்து. த்வஜாவந்திராகம், ஆதிதாளம்.

↓↓ பொன்னுலகாளீரோ? புவனிமுழுதாளீரோ? *
நன்னலப்புள்ளினங்காள்! வினையாட்டியேன்நானிரந்தேன் *
முன்னுலகங்களெல்லாம்படைத்த முகில்வண்ணன்கண்ணன் *
என்னலங்கொண்டபிரான்தனக்கு என்நிலைமையுரைத்தே. (க)

மையமர்வாள்நெடுங்கண் மங்கைமார்முன்பு, என்கையிருந்து *
நெய்யமரின்னடிசில் நிச்சல் பாலொடுமேவீரோ? *
கையமர்சக்கரத்து என்கனிவாய்ப்பெருமானைக்கண்டு *
மெய்யமர்காதல்சொல்லிக் கிளிகாள்! விரைந்தோடிவந்தே. (௨

ஓடிவந்தென்குழல்மேல் ஒளிமாமலரூதீரோ? *
கூடியவண்டினங்காள்! குருநாடுடையைவர்கட்காய் *
ஆடியமாநெடுந்தேர்ப்படை நீறெழச்செற்றபிரான் *
சூடியதண்துளவுண்ட தூமதுவாய்கள்கொண்டே. (௩

தூமதுவாய்கள்கொண்டுவந்து என்முல்லைகள்மேல் தும்பிகாள்! *
பூமதுவுண்ணச்செல்லில் வினையேனைப்பொய்செய்தகன்ற *
மாமதுவார்தண்துழாய்முடி வானவர்கோனைக்கண்டு *
யாமிதுவோதக்கவாறு? என்னவேண்டுங்கண்டீர் நுங்கட்கே. (௪

நுங்கட்குயானுரைக்கேன்வம்மின் யான்வளர்த்தகிளிகாள்! *
வெங்கட்புள்ளூர்ந்துவந்து வினையேனைநெஞ்சங்கவர்ந்த *
செங்கண்கருமுகிலைச் செய்யவாய்ச்செழுங்கற்பகத்தை *
எங்குச்சென்றாகிலுங்கண்டு இதுவோதக்கவாறு? என்மினே. (௫

என்மின்னுநூல்மார்வன் என்கரும்பெருமான்என்கண்ணன் *
தன்மன்னுநீள்கழல்மேல்தண்துழாய் நமக்கன்றிநல்கான் *
கன்மின்களென்றுஉம்மையான் கற்பியாவைத்தமாற்றம்சொல்லி *
சென்மின்கள்தீவினையேன் வளர்த்தசிறுபூவைகளே! (௬)

பூவைகள்போல்நிறத்தன் புண்டரீகங்கள்போலுங்கண்ணன் *
யாவையும்யாவருமாய் நின்றமாயன்என்னாழிப்பிரான் *
மாவைவல்வாய்பிளந்த மதுசூதற்குஎன்மாற்றம்சொல்லி *
பாவைகள்! தீர்க்கிற்றிரே வினையாட்டியேன்பாசறவே. (௭)

பாசறவெய்தி இன்னே வினையேன்எனையூழிநைவேன்? *
ஆசறுதூவிவெள்ளைக்குருகே! † அருள்செய்துஒருநாள் *
மாசறுநீலச்சுடர்முடி வானவர்கோனைக்கண்டு *
ஏசறும்நும்மையல்லால் மறுநோக்கிலேன்பேர்த்துமற்றே. (அ)

பேர்த்துமற்றோர்களைகண் வினையாட்டியேன்நானொன்றிலேன் *
நீர்த்திரைமேலுலவி இரைதேரும்புதாவினங்காள்! *
கார்த்திரள்மாமுகில்போல் கண்ணன்விண்ணவர்கோனைக்கண்டு *
வார்த்தைகள்கொண்டருளியுரையீர் வைகல்வந்திருந்தே. (௯)

† 'அருள்செய்யொருநாள்' என்பது உரையின்பாடம்.

வந்திருந்துஉம்முடைய மணிச்சேவலும்நீருமெல்லாம் *
அந்தரமொன்றுமின்றி அலர்மேலசையுமன்னங்காள்! *
என்திருமார்வற்குஎன்னை இன்னவாறிவள்காண்மினென்று *
மந்திரத்தொன்றுஉணர்த்தியுரையீர் மறுமாற்றங்களே. (௧௦)

↓↓ மாற்றங்களாய்ந்துகொண்டு மதுசூதபிரானடிமேல் *
நாற்றங்கொள்பூம்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன்சொன்ன *
தோற்றங்களாயிரத்துள் இவையுமொருபத்தும்வல்லார் *
ஊற்றின்கண் நுண்மணல்போல் உருகாநிற்பர்நீராயே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

கூ - ஆந் திருவாய்மொழி—நீராய்.

[கேட்டவர்கள் நெஞ்சு நீராய்க்கரையவும், திருமாலுக்கும் பரமபதத்தில் இருப்பு அரிதாகவும் ஆழ்வார் பேரவாவோடு கூப்பிடுதல்.]

கலி நி லைத் து றை.

பண் - காந்தாரம், தாளம் - ஏழொத்து. ஸாவேரிராகம் - ஆதிதாளம்.

↓↓ நீராய்நிலனாய்த் தீயாய்க்காலாய்நெடுவானாய் *
சீரார்சுடர்களிரண்டாய்ச் சிவனாயயனானாய்! *
கூரார்ஆழிவெண்சங்கேந்திக் கொடியேன்பால்
வாராய் * ஒருநாள் மண்ணும்விண்ணும்மகிழவே. (௧)

மண்ணும்விண்ணும்மகிழக் குறளாய்வலங்காட்டி *
மண்ணும்விண்ணும்கொண்ட மாயவம்மானே! *
நண்ணியுனை நான் கண்டுகந்துகூத்தாட *
நண்ணியொருநாள் ஞாலத்தூடேநடவாயே. (௨)

ஞாலத்தூடேநடந்தும்நின்றும் கிடந்திருந்தும் *
சாலப்பலநாள் உகந்தோறுஉயிர்கள்காப்பானே! *
கோலத்திருமாமகளோடு உன்னைக்கூடாதே *
சாலப்பலநாள் அடியேன்இன்னுந்தளர்வேனோ? (௩)

தளர்ந்தும்முறிந்தும் சகடவசுரருடல்வேறா *
பிளந்துவீயத் திருக்காலாண்டபெருமானே! *
கிளர்ந்துபிரமன்சிவன் இந்திரன்விண்ணவர்சூழ *
விளங்கவொருநாள் காணவாராய்விண்மீதே. (௪)

விண்மீதிருப்பாய் ! மலைமேல்நிற்பாய் ! கடற்சேர்ப்பாய் ! *
மண்மீதுழல்வாய் ! இவற்றுளெங்கும்மறைந்துறைவாய் ! *
எண்மீதியன்றபுறவண்டத்தாய் ! எனதாவி *
உள்மீதாடி உருக்காட்டாதேயொளிப்பாயோ? (௫)

பாயோரடிவைத்து அதன்கீழ்ப் பரவைநிலமெல்லாம்
தாய் * ஓரடியால் எல்லாவுலகும்தடவந்த
மாயோன் ! * உன்னைக்காண்பான் வருந்தியெனைநாளும் *
தீயோடுடன்சேர்மெழுகாய் உலகில்திரிவேனோ? (௬)

உலகில்திரியுங்கருமகதியாய் உலகமாய் *
உலகுக்கேயோருயிருமானாய் ! புறவண்டத்து *
அலகில்பொலிந்த திசைபத்தாயஅருவேயோ ! *
அலகில்பொலிந்த அறிவிலேனுக்கருளாயே. (௭)

அறிவிலேனுக்கருளாய் அறிவாருயிரானாய் ! *
வெறிகொள்சோதிமூர்த்தி ! அடியேன்நெடுமாலே ! *
கிறிசெய்தென்னைப்புறத்திட்டு இன்னம்கெடுப்பாயோ ? *
பிறிதொன்றறியாஅடியேன் ஆவிதிகைக்கவே. (௮)

ஆவிதிகைக்க ஐவர்குமைக்கும்சிற்றின்பம் *
பாவியேனைப் பலநீகாட்டிப்படுப்பாயோ? *
தாவிவையங்கொண்ட தடந்தாமரைகட்கே *
கூவிக்கொள்ளுங்காலம் இன்னங்குறுகாதோ ? (௯)

குறுகாநீளா இறுதிகூடாஎனையூழி *
சிறுகாபெருகா அளவிலின்பம்சேர்ந்தாலும் *
மறுகாலின்றிமாயோன் ! உனக்கேயாளாகும் *
சிறுகாலத்தையுறுமோ? அந்தோ ! தெரியிலே. (௧௦)

‡‡ தெரிதல்நினைதல் எண்ணலாகாத்திருமாலுக்கு *
உரியதொண்டர்தொண்டர் தொண்டன்சடகோபன் *
தெரியச்சொன்ன ஓராயிரத்துள் இப்பத்தும் *
உரியதொண்டராக்கும் உலகமுண்டாற்கே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

கo - ஆந் திருவாய்மொழி—உலகமுண்ட.

[அலர்மேல்மங்கை புருஷகாரமாகத் திருவேங்கடமுடையானது திருவடிகளில் சரணம்புகுதல்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - பழம்பஞ்சுரம், தாளம்-ஏழொத்து. நாதநாமக்கிரியைராகம்-ஆதிதாளம்.

↓↓ உலகமுண்டபெருவாயா! உலப்பில்கீர்த்தியம்மானே! *
நிலவுஞ்சுடர்சூழொளிமூர்த்தி! நெடியாய்! அடியேனாருயிரே! *
திலதமுலகுக்காய்நின்ற திருவேங்கடத்தெம்பெருமானே! *
குலதொல்லடியேன்உனபாதம் கூடுமாறுகூறாயே. (க)

கூறாய்நீறாய்நிலனாகிக் கொடுவல்லசுரர்குலமெல்லாம் *
சீறாவெறியுந்திருநேமிவலவா! தெய்வக்கோமானே! *
சேறார்சுனைத்தாமரைசெந்தீமலரும் திருவேங்கடத்தானே! *
ஆறாவன்பிலடியேன் உன்னடிசேர்வண்ணம்அருளாயே. (உ)

வண்ணமருள்கொளணிமேகவண்ணா! மாயவம்மானே! *
எண்ணம்புகுந்துதித்திக்குமமுதே! இமையோரதிபதியே! *
தெண்ணலருவிமணிபொன்முத்தலைக்கும் திருவேங்கடத்தானே! *
அண்ணலே! உன்னடிசேர † அடியேற்குஆவாவென்னாயே. (ங)

ஆவா! என்னாதுஉலகத்தையலைக்கும் அசுரர்வாணாள்மேல் *
தீவாய்வாளிமழைபொழிந்தசிலையா! திருமாமகள்கேள்வா!
தேவா!* சுரர்கள்முனிக்கணங்கள்விரும்பும் திருவேங்கடத்தானே! *
பூவார்கழல்கள்அருவினையேன் பொருந்துமாறுபுணராயே. (ச)

புணராநின்றமரமேழ் அன்றெய்தஒருவில்வலவாவோ! *
புணரேய்நின்றமரமிரண்டின் நடுவேபோனமுதல்வாவோ! *
திணரார்மேகமெனக்களிறுசேரும் திருவேங்கடத்தானே! *
திணரார்சார்ங்கத்துஉனபாதம் சேர்வதடியேனெந்நாளே? (ரு)

எந்நாளே? நாம்மண்ணளந்த இணைத்தாமரைகள்காண்பதற்கென்று *
எந்நாளும்நின்றிமையோர்களேத்தி இறைஞ்சியினமினமாய் *
மெய்ந்நாமனத்தால்வழிபாடுசெய்யும் திருவேங்கடத்தானே! *
மெய்ந்நானெய்தியெந்நாள் ‡ உன்னடிக்கணடியேன்மேவுவதே? (சு)

அடியேன்மேவியமர்கின்றவமுதே! இமையோரதிபதியே! *
கொடியாவடுபுள்ளுடையானே! கோலக்கனிவாய்ப்பெருமானே! *
செடியார்வினைகள்தீர்மருந்தே! திருவேங்கடத்தெம்பெருமானே! *
நொடியார்பொழுதும்உனபாதம் காணநோலாதாற்றேனே. (எ)

---

† 'அடியோர்க்கு' என்பதும் பாடம். ‡ 'உன்னடிக்கள்' என்றும் பாடம்.

கோலாதாற்றேன்உனபாதம் காணவென்றுநுண்ணுணர்வின் *
நீலார்கண்டத்தம்மானும் நிறைநான்முகனுமிந்திரனும் *
சேலேய்கண்ணார்பலர்சூழவிரும்பும் திருவேங்கடத்தானே! *
மாலாய்மயக்கிஅடியேன்பால் வந்தாய்போலேவாராயே. (அ)

வந்தாய்போலேவாராதாய் வாராதாய்போல்வருவானே! *
செந்தாமரைக்கண்செங்கனிவாய் நால்தோளமுதே! எனதுயிரே! *
சிந்தாமணிகள்பகரல்லைப்பகல்செய் திருவேங்கடத்தானே! *
அந்தோ! அடியேன்உனபாதம் அகலகில்லேனிறையுமே. (கூ)

↓↓ அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பா! *
நிகரில்புகழாய்! உலகம்மூன்றுடையாய்! என்னையாள்வானே! *
நிகரிலமரர்முனிக்கணங்கள்விரும்பும் திருவேங்கடத்தானே! *
புகலொன்றில்லாஅடியேன் உன்னடிக்கீழமர்ந்துபுகுந்தேனே. (க0)

↓↓ அடிக்கீழமர்ந்துபுகுந்து அடியீர்! வாழ்மினென்றென்றருள்கொடு
படிக்கேழில்லாப்பெருமானைப் பழனக்குருகூர்ச்சடகோபன்* [க்கும்*
முடிப்பான்சொன்னவாயிரத்துத் திருவேங்கடத்துக்கிவைபத்தும் *
பிடித்தார்பிடித்தார்வீற்றிருந்து பெரியவானுள்நிலாவுவரே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்து

பெரியபிராட்டியார் முன்னிலையாகச் சரணம்புக்கவிடத்திலும் ஸம்ஸாரம் அநுவர்த்திக்கிறபடியைக் கண்டு ஆழ்வார் விஷண்ணராதல்.

க-ஆந் திருவாய்மொழி—உண்ணிலாவிய.

['எம்பெருமான் தன்திருவடிகளில் சேராதபடி இன்னும் இந்த்ரியங்களாலே எத்தனைநாள் பாதிப்பனோ?' என்று ஆழ்வார் ஓலமிடுதல்.]

ஆசிரியத்துறை.

பண் - பழம்பஞ்சுரம், தாளம் - ஏழொத்து. ஸாரங்கராகம் - ஆதிதாளம்.

உண்ணிலாவியஐவரால்குமைதீற்றி என்னைஉன்பாதபங்கயம் *
நண்ணிலாவகையே நலிவான் இன்னுமெண்ணுகின்றாய் * [டை *
எண்ணிலாப்பெருமாயனே! இமையோர்களேத்தும்உலகம்மூன்று
அண்ணலே! அமுதே! அப்பனே! என்னையாள்வானே! (க)

என்னையாளும்வன்கோவோரைந்திவைபெய்து இராப்பகல்மோதுவித்
உன்னைநானணுகாவகை செய்துபோதிகண்டாய் * [திட்டு *
கன்னலே! அமுதே! கார்முகில்வண்ணனே! கடல்ஞாலம்காக்கின்ற *
மின்னுநேமியினாய்! வினையேனுடைவேதியனே! (௨)

வேதியாநிற்குமைவரால் வினையேனைமோதுவித்து * உன்திருவடி
சாதியாவகைநீ தடுத்தென்பெறுதி? அந்தோ! *
ஆதியாகியகலிடம்படைத்து உண்டுமிழ்ந்துகடந்திடந்திட்ட *
சோதிநீள்முடியாய்! தொண்டனேன்மதுசூதனனே! (௩)

சூதுநானறியாவகை சுழற்றியோரைவரைக்காட்டி * உன்னடிப்
போதுநானணுகாவகை செய்துபோதிகண்டாய் *
யாதும்யாவருமின்றிநின்னகம்பாலொடுக்கி ஓராலின்நீளிலை *
மீதுசேர்குழவி! வினையேன்வினைதீர்மருந்தே! (௪)

தீர்மருந்தின்றியைந்துநோயடும் செக்கிலிட்டுத்திரிக்குமைவரை *
நேர்மருங்குடைத்தாவடைத்து நெகிழ்ப்பானொக்கின்றாய் *
ஆர்மருந்தினியாகுவார்? அடலாழியேந்தியசுரர்வன்குலம் *
வேர்மருங்கறுத்தாய்! விண்ணுளார்பெருமானேயோ! (௫)

விண்ணுளார்பெருமாற்கடிமைசெய்வாரையும்செறும் ஐம்புலனிவை *
மண்ணுளென்னைப்பெற்றால் என்செய்யாமற்றுநீயும்விட்டால்?*[தெண்
பண்ணுளாய்! கவிதன்னுளாய்! பத்தியினுள்ளாய்! பரமீசனே! * வந்
கண்ணுளாய்! நெஞ்சுளாய்! சொல்லுளாய்! ஒன்றுசொல்லாயே. (௬)

ஒன்றுசொல்லிஒருத்தினில்நிற்கிலாத ஓரைவர்வன்கயவரை *
என்றுயான்வெல்கிற்பன் உன்திருவருளில்லையேல்? *
அன்றுதேவரசுரர்வாங்க அலைகடலரவமளாவி * ஓர்
குன்றம்வைத்தஎந்தாய்! கொடியேன்பருகின்னமுதே! (௭)

இன்னமுதெனத்தோன்றி ஓரைவர்யாவரையும்மயக்க * நீவைத்த
† முன்னமாயமெல்லாம் முழுவேரரிந்து * என்னையுன்
சின்னமும்திருமூர்த்தியும் சிந்தித்தேத்திக்கைதொழுவேயருளெனக்கு*
என்னம்மா! என்கண்ணா! இமையோர்தம்குலமுதலே! (௮)

குலமுதலடுந்தீவினைக் கொடுவன்குழியினில்வீழ்க்குமைவரை *
வலமுதல்கெடுக்கும் ‡ வரமேதந்தருள்கண்டாய் *
நிலமுதலினியெவ்வுலகுக்கும் நிற்பனசெல்வனவெனா * பொருள்
பலமுதல்படைத்தாய்! என்கண்ணா! என்பரஞ்சுடரே! (௯)

---

† 'முன்னை' என்பதும் பாடம். ‡ 'வலம்' என்பதும் பாடம்.

என்பரஞ்சுடரே ! என்றுஉன்னையலற்றி உன்னிணைத்தாமரைகட்கு *
அன்புருகிநிற்கு மதுநிற்கச் சுமடுதந்தாய் *
வன்பரங்களெடுத்து ஐவர்திசைதிசைவலித்தெற்றுகின்றனர் *
முன்பரவைகடைந்து அமுதங்கொண்டமூர்த்தியோ ! (க௦

↓↓ கொண்டமூர்த்தியோர்மூவராய்க் குணங்கள்படைத்தளித்துக்கெ[டுக்கும் * அ[ட்]
புண்டரீகக்கொப்பூழ்ப் புனற்பள்ளியப்பனுக்கே * [டுக்கும் * அட
தொண்டர்தொண்டர்தொண்டர்தொண்டன்சடகோபன் சொல்லாயிரத்துள்
கண்டுபாடவல்லார் வினைபோம்கங்குலும்பகலே. (கக) [இப்பத்தும் *

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

† உ - ஆந் திருவாய்மொழி—கங்குலும்பகலும்.

[ஆழ்வார் பெரியபெருமானிடத்து மோஹித்திருப்பதை, 'இந்நாயகி விஷயமாக ஏதுசங்கல்பித்திருக்கிறீர் ?' என்று திருத்தாயார் கேட்கும் பாசுரத்தால் அருளிச்செய்தல்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - தக்கராகம், தாளம் - ஒன்பதொத்து. நீலாம்புரிராகம் - ஆதிதாளம்.

↓↓ கங்குலும்பகலும்கண் துயிலறியாள்
கண்ணநீர்கைகளாலிறைக்கும் *
சங்குசக்கரங்களென் றுகைகூப்பும்
தாமரைக்கண்ணென்றேதளரும் *
எங்ஙனேதரிக்கேன்உன்னைவிட்டு ? என்னும்
இருநிலம்கைதுழாவிருக்கும் *
செங்கயல்பாய்நீர்த்திருவரங்கத்தாய் !
இவள்திறத்தென்செய்கின்றாயே ? (க)

என்செய்கின்றாய் ? என்தாமரைக்கண்ணா !
என்னும் கண்ணீர்மல்கவிருக்கும் *
என்செய்கேன் ? எறிநீர்த்திருவரங்கத்தாய் !
என்னும் வெவ்வுயிர்த்துயிர்த்துருகும் *

---

† இது, கோயில்திருவாய்மொழி.

முன்செய்தவினையே! முகப்படாயென்னும்
முகில்வண்ணா! † தகுவதோ? என்னும் *
முன்செய்திவ்வுலகமுண்டுமிழ்ந்தளந்தாய்!
என்கொலோமுடிகின்றதிவட்கே? (உ)

வட்கிலளிறையும்மணிவண்ணா! என்னும்
வானமேநோக்கும்மையாக்கும் *
உட்குடையசுரருயிரெல்லாமுண்ட
ஒருவனே! என்னும்உள்ளுருகும் *
கட்கிலீ! உன்னைக்காணுமாறருளாய்
காகுத்தா! கண்ணனே! என்னும் *
திட்கொடிமதிள்சூழ்திருவரங்கத்தாய்!
இவள்திறத்தென்செய்திட்டாயே? (ரு)

இட்டகாலிட்ட ‡ கையளாயிருக்கும்
எழுந்துலாய்மயங்குங்கைகூப்பும் *
கட்டமேகாதலென்றுமூர்ச்சிக்கும்
கடல்வண்ணா! கடியைகாணென்னும் *
வட்டவாய்நேமிவலங்கையா! என்னும்
வந்திடாயென்றென்றேமயங்கும் *
சிட்டனே! செழுநீர்த்திருவரங்கத்தாய்!
இவள்திறத்தென்சிந்தித்தாயே? (௬)

சிந்திக்கும்திசைக்கும்தேறும்கைகூப்பும்
திருவரங்கத்துள்ளாய்! என்னும் வந்திக்கும் *
ஆங்கேமழைக்கண்ணீர்மல்க
வந்திடாயென்றென்றேமயங்கும் *
அந்திப்போதவுணனுடலிடந்தானே!
அலைகடல்கடைந்தவாரமுதே! *
சந்தித்துன்சரணம்சார்வதேவலித்த
தையலைமையல்செய்தானே! (௭)

மையல்செய்தென்னைமனங்கவர்ந்தானே!
என்னும் மாமாயனே! என்னும் *
செய்யவாய்மணியே! என்னும் தண்புனல்சூழ்
திருவரங்கத்துள்ளாய்! என்னும் *

---

† 'தகவிதோ' என்பதும் பாடம்.
‡ 'கைகளாய்' என்பது சிலர் பாடம்.

வெய்யவாள்தண்டுசங்குசக்கரம்வில்லேந்தும்
விண்ணோர்முதல்! என்னும் *
பைகொள்பாம்பணையாய்! இவள்திறத்தருளாய்
பாவியேன்செயற்பாலதுவே. (சு)

பாலதுன்பங்களின்பங்கள்படைத்தாய்!
பற்றிலார்பற்றநின்றானே! *
காலசக்கரத்தாய்! கடலிடங்கொண்ட
கடல்வண்ணா! கண்ணனே! என்னும் *
சேல்கொள்தண்புனல்சூழ்திருவரங்கத்தாய்!
என்னும் என்தீர்த்தனே! என்னும் *
கோலமாமழைக்கண்பனிமல்கவிருக்கும்
என்னுடைக்கோமளக்கொழுந்தே. (எ)

கொழுந்துவானவர்கட்கு! என்னும் குன்றேந்திக்
கோநிரைகாத்தவன்! என்னும் *
அழும்தொழும்ஆவியனலவெவ்வுயிர்க்கும
அஞ்சனவண்ணனே! என்னும் *
எழுந்துமேல்நோக்கியிமைப்பிலளிருக்கும்
எங்ஙனேநோக்குகேன்? என்னும் *
செழுந்தடம்புனல்சூழ்திருவரங்கத்தாய்!
என்செய்கேன்என்திருமகட்கே? (அ)

↓↓ என்திருமகள்சேர்மார்வனே! என்னு
மென்னுடையாவியே! என்னும் *
நின்திருவெயிற்றாலிடந்துநீகொண்ட
நிலமகள்கேள்வனே! என்னும் *
† அன்றுருவேழும்தழுவிநீகொண்ட
ஆய்மகளன்பனே! என்னும் *
தென்திருவரங்கம்கோயில்கொண்டானே!
தெளிகிலேன்முடிவிவள்தனக்கே. (கூ)

முடிவிவள்தனக்கொன்றறிகிலேனென்னும்
மூவுலகாளியே! என்னும் *
கடிகமழ்கொன்றைச்சடையனே! என்னும்
நான்முகக்கடவுளே! என்னும் *

---

† 'அன்றுருமேழும்' என்பதும் பாடம்.

வடிவுடைவானோர்தலைவனே ! என்னும்
வண்திருவரங்கனே ! என்னும் *
அடியடையாதாள்போல்இவளணுகி
யடைந்தனள் முகில்வண்ணனடியே. (௧௦)

↓↓ முகில்வண்ணனடியையடைந்தருள்சூடி
யுய்ந்தவன் மொய்புனற்பொருநல் *
துகில்வண்ணத்தூநீர்ச்சேர்ப்பன் வண்பொழில்சூழ்
வண்குருகூர்ச்சடகோபன் *
முகில்வண்ணனடிமேற்சொன்னசொல்மாலை
ஆயிரத்துஇப்பத்தும்வல்லார் *
முகில்வண்ணவானத்திமையவர்சூழ
இருப்பர் பேரின்பவெள்ளத்தே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௩-ஆந் திருவாய்மொழி—வெள்ளைச்சுரிசங்கு.

[தாய்மாரும் தோழிமாரும் தடுக்கவும், தலைவி திருப்பேரைக்குச் செல்வேனென்று துணிந்ததைக் கூறுதல்.]

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - நட்டபாஷை, தாளம் - ஏழொத்து. ஆநந்தபைரவிராகம் - ஆதிதாளம்.

↓↓ வெள்ளைச்சுரிசங்கொடாழியேந்தித்
தாமரைக்கண்ணன்என்னெஞ்சினூடே *
புள்ளைக்கடாகின்றவாற்றைக்காணீர்
என்சொல்லிச்சொல்லுகேன் ? அன்னைமீர்காள் ! *
வெள்ளச்சுகமவன்வீற்றிருந்த
வேதவொலியும்விழாவொலியும் *
பிள்ளைக்குழாவிளையாட்டொலியுமறாத்
திருப்பேரையில்சேர்வன்நானே. (௧)

நாணக்கருங்குழல்தோழிமீர்காள் !
அன்னையர்காள் ! அயற்சேரியீர்காள் ! *
நாணித்தனிநெஞ்சம்காக்கமாட்டேன்
என்வசமன்றிது, இராப்பகல்போய் *

தேன்மொய்த்தபூம்பொழில்தண்பணைசூழ்
தென்திருப்பேரையில்வீற்றிருந்த *
வானப்பிரான்மணிவண்ணன்கண்ணன்
செங்கனிவாயின்திறத்ததுவே. (உ)

செங்கனிவாயின்திறத்ததாயும்
செஞ்சுடர்நீள்முடித்தாழ்ந்ததாயும் *
சங்கொடுசக்கரம்கண்டுகந்தும்
தாமரைக்கண்களுக்கற்றுத்தீர்ந்தும் *
திங்களும்நாளும்விழாவறாத
தென்திருப்பேரையில்வீற்றிருந்த *
நங்கள்பிரானுக்குஎன்நெஞ்சம்தோழீ !
நாணும்நிறையுமிழந்ததுவே. (௩)

இழந்தவெம்மாமைத்திறத்துப்போன
என்நெஞ்சினாருமங்கேயொழிந்தார் *
உழந்தினியாரைக்கொண்டு? என்உசாகோ?
ஓதக்கடலொலிபோல * எங்கும்
எழுந்தநல்வேதத்தொலிநின்றோங்கு
தென்திருப்பேரையில்வீற்றிருந்த *
முழங்குசங்கக்கையன்மாயத்தாழ்ந்தேன்
அன்னையர்காள் ! என்னைஎன்முனிந்தே? (௪)

முனிந்துசகடமுதைத்து மாயப்பேய்
முலையுண்டுமருதிடைபோய் *
கனிந்தவிளவுக்குக்கன்றெறிந்த
கண்ணபிரானுக்குஎன்பெண்மைதோற்றேன் *
முனிந்தினியென்செய்தீர் ? அன்னைமீர்காள் !
முன்னியவன்வந்துவீற்றிருந்த *
கனிந்தபொழில்திருப்பேரையிற்கே
காலம்பெறஎன்னைக்காட்டுமினே. (௫)

காலம்பெறஎன்னைக்காட்டுமின்கள்
காதல்கடலின்மிகப்பெரிதால் *
நீலமுகில்வண்ணத்தெம்பெருமான்
நிற்கும்முன்னேவந்தென்கைக்குமெய்தான் *

ஞாலத்தவன்வந்துவீற்றிருந்த
நான்மறையாளரும்வேள்வியோவா *
கோலச்செந்நெற்கள்கவரிவீசும்
கூடுபுனல்திருப்பேரையிற்கே. (௬)

பேரெயில்சூழ்கடல்தென்னிலங்கை
செற்ற பிரான்வந்துவீற்றிருந்த *
பேரையிற்கேபுக்கென்னெஞ்சம்நாடிப்
பேர்த்துவரவெங்குங்காணமாட்டேன் *
ஆரையினியிங்குடையம்? தோழீ!
என்னெஞ்சம்கூவவல்லாருமில்லை *
ஆரை? இனிக்கொண்டென்சாதிக்கின்றது?
என்னெஞ்சம்கண்டதுவேகண்டேனே. (௭)

கண்டதுவேகொண்டெல்லாரும்கூடிக்
கார்க்கடல்வண்ணனோடென்திறத்துக்
கொண்டு * அலர்தூற்றிற்றதுமுதலாக்
கொண்டஎன்காதலுரைக்கில்தோழீ! *
மண்திணிஞாலமுமேழ்கடலும்
நீள்விசும்பும்கழியப்பெரிதால் *
தெண்திரைசூழ்ந்தவன்வீற்றிருந்த
தென்திருப்பேரையில்சேர்வன்சென்றே. (௮)

சேர்வன்சென்றென்னுடைத்தோழிமீர்காள்!
அன்னையர்காள்! என்னைத்தேற்றவேண்டா *
நீர்களுரைக்கின்றதென்னிதற்கு?
நெஞ்சமும்நிறைவுமெனக்கிங்கில்லை *
கார்வண்ணன்கார்க்கடல்ஞாலமுண்ட
கண்ணபிரான்வந்துவீற்றிருந்த *
ஏர்வளவொண்கழனிப்பழனத்
† தென்திருப்பேரையின்மாநகரே. (௯)

நகரமும்நாடும்பிறவும்தேர்வேன்
நாணெனக்கில்லைஎன்தோழிமீர்காள்! *
சிகரமணிநெடுமாடநீடு
தென்திருப்பேரையில்வீற்றிருந்த *

---

† 'தென்திருப்பேரெயின்மாநகரே' என்றும் பாடம்.

மகரநெடுங்குழைக்காதன்மாயன்
நூற்றுவரையன்றுமங்கநூற்ற *
நிகரில்முகில்வண்ணன்நேமியான் என்
நெஞ்சங்கவர்ந்தெனையூழியானே. (௧௦)

↓↓ ஊழிதோறூழியுருவும்பேரும்
செய்கையும்வேறவன்வையங்காக்கும் *
ஆழிநீர்வண்ணனை அச்சுதனை
அணிகுருகூர்ச்சடகோபன்சொன்ன *
கேழிலந்தாதியோராயிரத்துள் இவை
திருப்பேரெயில்மேயபத்தும் *
ஆழியங்கையனையேத்தவல்லாரவர்
அடிமைத்திறத்தாழியாரே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ச - ஆந் திருவாய்மொழி—ஆழியெழ.

[எம்பெருமானது விஜயபரம்பரைகளைப் பேசுதல்.]

கலிவிருத்தம்.

பண் - காந்தாரம், தாளம் - ஏழொத்து. மோஹநராகம் - அடதாளம்.

↓↓ ஆழியெழச் சங்கும்வில்லுமெழ * திசை
வாழியெழத் தண்டும்வாளுமெழ * அண்டம்
மோழையெழ முடிபாதமெழ * அப்பன்
ஊழியெழ உலகங்கொண்டவாறே. (௧)

ஆறுமலைக்கு எதிர்ந்தோடுமொலி * அர
வூறுசுலாய் மலைதேய்க்குமொலி * கடல்
மாறுசுழன்று அழைக்கின்றவொலி * அப்பன்
சாறுபட அமுதங்கொண்டநான்றே. (௨)

நான்றில ஏழ்மண்ணும்தானத்தவே * பின்னும்
நான்றில ஏழ்மலைதானத்தவே * பின்னும்
நான்றில ஏழ்கடல்தானத்தவே * அப்பன்
ஊன்றியிடந்து எயிற்றில்கொண்டநாளே. (௩)

நாளுமெழ நிலநீருமெழ * விண்ணும்
கோளுமெழ எரிகாலுமெழ * மலை
தாளுமெழச் சுடர்தானுமெழ * அப்பன்
ஊழியெழ உலகமுண்டவூணே. (௫)

ஊணுடைமல்லர் † ததைந்தவொலி * மன்னர்
ஆணுடைச்சேனை நடுங்குமொலி * விண்ணுள்
ஏணுடைத்தேவர் வெளிப்பட்டவொலி * அப்பன்
காணுடைப்பாரதம் கையறைபோழ்தே. (௬)

போழ்துமெலிந்த புன்செக்கரில் * வான்திசை
சூழுமெழுந்து உதிரப்புனலா * மலை
கீழ்துபிளந்த சிங்கமொத்ததால் * அப்பன்
ஆழ்துயர்செய்து ‡ அசுரரைக்கொல்லுமாறே. (௭)

மாறுநிரைத்து இரைக்குஞ்சரங்கள் * இன
நூறுபிணம் மலைபோல்புரள * கடல்
ஆறுமடுத்து உதிரப்புனலா * அப்பன்
நீறுபட இலங்கைசெற்றநேரே. (௮)

நேர்சரிந்தான் கொடிக்கோழிகொண்டான் * பின்னும்
நேர்சரிந்தான் எரியுமனலோன் * பின்னும்
நேர்சரிந்தான் முக்கண்மூர்த்திகண்டீர் * அப்பன்
நேர்சரிவாணன் திண்தோள்கொண்டவன்றே. (௯)

அன்றுமண்நீரெரிகால் விண்மலைமுதல் *
அன்றுசுடர்இரண்டுபிறவும் * பின்னும்
அன்று மழையுயிர்தேவும்மற்றும் * அப்பன்
அன்றுமுதல் உலகம்செய்ததுமே. (௰)

மேய்நிரைகீழ்புக மாபுரள * சுனை
வாய்நிறைநீர் பிளிறிச்சொரிய * இன
ஆநிரைபாடி அங்கேயொடுங்க * அப்பன்
தீமழைகாத்துக் குன்றமெடுத்தானே. (௧௰)

↓↓ குன்றமெடுத்தபிரான் அடியாரொடும் *
ஒன்றிநின்ற சடகோபனுரைசெயல் *
நன்றிபுனைந்த ஓராயிரத்துள்ளிவை *
வென்றிதரும்பத்தும் மேவிக்கற்பார்க்கே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

† 'ததர்ந்த' என்றும் பாடம். ‡ 'அசுரர்க் கொல்லுமாறே' என்றும் பாடம்.

ரு - ஆந் திருவாய்மொழி—கற்பார்.

['விஜயங்களுக்குஅடியான விபவாவதாரகுணங்களை இழக்கிறீர்களே !' என்று உலகத்தாரைநோக்கி ஆழ்வார் இரங்குதல்.]

கலிவிருத்தம்.

பண் - நாட்டராகம், தாளம் - ஏழொத்து. ஸஹாநாராகம் - அடதாளம்.

கற்பார்இராமபிரானையல்லால் மற்றுங்கற்பரோ? *
புற்பாமுதலாப் புல்லெறும்பாதியொன்றின்றியே *
நற்பாலயோத்தியில்வாழும் சராசரம்முற்றவும் *
நற்பாலுக்குய்த்தனன் நான்முகனார்பெற்றநாட்டுளே. (க)

நாட்டிற்பிறந்தவர் நாரணற்காளன்றியாவரோ? *
நாட்டிற்பிறந்து படாதனபட்டுமனிசர்க்கா *
நாட்டைநலியுமரக்கரை நாடித்தடிந்திட்டு *
நாட்டையளித்துய்யச்செய்து நடந்தமைகேட்டுமே. (உ)

கேட்பார்கள் கேசவன்கீர்த்தியல்லால் மற்றுங்கேட்பரோ ? *
கேட்பார்செவிசுடு கீழ்மைவசைவுகளேவையும் *
சேட்பாற்பழம்பகைவன் சிசுபாலன் * திருவடி
தாட்பாலடைந்த தன்மையறிவாரையறிந்துமே. (௩)

தன்மையறிபவர்தாம் அவற்காளன்றியாவரோ ? *
பன்மைப்படர்பொருள் ஆதுமில்பாழ்நெடுங்காலத்து *
நன்மைப்புனல்பண்ணி நான்முகனைப்பண்ணி * தன்னுள்ளே
தொன்மைமயக்கியதோற்றிய சூழல்கள்சிந்தித்தே. (௪)

சூழல்கள்சிந்திக்கில் மாயன்கழலன்றிச்சூழ்வரோ ? *
ஆழப்பெரும்புனல்தன்னுள் அழுந்தியஞாலத்தை *
தாழப்படாமல் தன்பாலொருகோட்டிடைத்தான்கொண்ட *
கேழல்திருவுருவாயிற்றுக் கேட்டுமுணர்ந்துமே. (ரு)

கேட்டுமுணர்ந்தவர் கேசவற்காளன்றியாவரோ ? *
வாட்டமிலாவண்கை மாவலிவாதிக்கவாதிப்புண்டு *
ஈட்டங்கொள்தேவர்கள் சென்றிரந்தார்க்கிடர்நீக்கிய *
கோட்டங்கைவாமனனாய்ச் செய்தகூத்துக்கள்கண்டுமே. (௬)

கண்டும்தெளிந்தும்கற்றார் கண்ணற்காளன்றியாவரோ ? *
வண்டுண்மலர்த்தொங்கல் மார்க்கண்டேயனுக்குவாழுநாள் *
இண்டைச்சடைமுடி ஈசனுடன்கொண்டுசாச்செல்ல *
கொண்டங்குத்தன்னொடுங்கொண்டு உடன்சென்றதுணர்ந்துமே. (எ)

செல்லவுணர்ந்தவர் செல்வன்தன்சீரன்றிக்கற்பரோ ? *
எல்லையிலாதபெருந்தவத்தால் பலசெய்ம்மிறை *
அல்லலமரரைச்செய்யும் இரணியனாகத்தை *
மல்லலரியுருவாய்ச் செய்தமாயமறிந்துமே. (அ)

மாயமறிபவர் மாயவற்காளன்றியாவரோ ? *
தாயஞ்செறுமொருநூற்றுவர்மங்க ஓரைவர்க்காய் *
தேசமறியவோர்சாரதியாய்ச்சென்று சேனையை
நாசஞ்செய்திட்டு * நடந்தநல்வார்த்தையறிந்துமே. (கூ)

↓↓ வார்த்தையறிபவர் மாயவற்காளன்றியாவரோ ? *
போர்த்தபிறப்பொடுநோயொடுமூப்பொடு இறப்பிவை
பேர்த்து * பெருந்துன்பம்வேரறநீக்கித் தன்தாளின்கீழ்ச்
சேர்த்து * அவன்செய்யும்சேமத்தையெண்ணித் தெளிவுற்றே. (கo)

↓↓ தெளிவுற்றுவீவின்றிநின்றவர்க்கு இன்பக்கதிசெய்யும் *
தெளிவுற்றகண்ணனைத் தென்குருகூர்ச்சடகோபன்சொல் *
தெளிவுற்றவாயிரத்துள் இவைபத்தும்வல்லாரவர் *
தெளிவுற்றசிந்தையர் பாமருமூவுலகத்துள்ளே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

கூ-ஆந் திருவாய்மொழி—பாமருமூவுலகும்.

[எம்பெருமானது குணம் அழகு முதலியவற்றை எண்ணி ப்ரத்யக்ஷமாக அனுபவிக்கும்படி ஆழ்வார் மனமுருகிக் கூப்பிடுதல்.]

கலிநிலைத்துறை.

பண் - பாலையாழ்; தாளம் - ஏழொத்து. தோடிராகம் - ரூபகதாளம்.

↓↓ பாமருமூவுலகும்படைத்த பற்பநாபாவோ ! *
பாமருமூவுலகுமளந்த பற்பபாதாவோ ! *
தாமரைக்கண்ணாவோ ! தனியேன்தனியாளாவோ ! *
தாமரைக்கையாவோ ! உன்னையென்றுகொல்சேர்வதுவே ? (க)

என்றுகொல் ? சேர்வதந்தோ ! அரன்நான்முகனேத்தும் * செய்ய
நின்திருப்பாதத்தையான் நிலம்நீரெரிகால் * விண்ணுயிர்
என்றிவைதாம்முதலாமுற்றுமாய் நின்றவெந்தாயோ ! *
குன்றெடுத்தாநிரைமேய்த்து அவைகாத்தஎம்கூத்தாவோ ! (உ)

காத்தஎங்கூத்தாவோ ! மலையேந்திக்கல்மாரிதன்னை *
பூத்தண் துழாய்முடியாய் ! புனைகொன்றையஞ்செஞ்சடையாய் ! *
வாய்த்தஎன்நான்முகனே ! வந்தென்னாருயிர்நீயானால் *
ஏத்தருங்கீர்த்தியினாய்! உன்னைஎங்குத்தலைப்பெய்வனே ? (௩)

எங்குத்தலைப்பெய்வன்நான் ? எழில்மூவுலகும்நீயே *
அங்குயர்முக்கண்பிரான் பிரமபெருமானவன்நீ *
வெங்கதிர்வச்சிரக்கை இந்திரன்முதலாத்தெய்வம்நீ *
கொங்கலர்தண்ணந்துழாய்முடி என்னுடைக்கோவலனே ! (௪)

என்னுடைக்கோவலனே ! என்பொல்லாக்கருமாணிக்கமே ! *
உன்னுடையுந்திமலர் உலகமவைமூன்றும்பரந்து *
உன்னுடைச்சோதிவெள்ளத்தகம்பாலுன்னைக்கண்டுகொண்டிட்டு*
என்னுடையாருயிரார் எங்ஙனேகொல்வந்தெய்துவரே ? (௫)

வந்தெய்துமாறறியேன் மல்குநீலச்சுடர்தழைப்ப *
செஞ்சுடர்ச்சோதிகள்பூத்து ஒருமாணிக்கம்சேர்வதுபோல் *
அந்தரமேற்செம்பட்டோடு அடியுந்திகைமார்வுகண்வாய் *
செஞ்சுடர்ச்சோதிவிடவுறை என்திருமார்பனையே. (௬)

என்திருமார்பன்தன்னை என்மலைமகள்கூறன்தன்னை *
என்றுமென்நாமகளை அகம்பாற்கொண்டநான்முகனை *
நின்றசசிபதியை நிலங்கீண்டெயில்மூன்றெரித்த *
வென்றுபுலன்துரந்த விசும்பாளியைக்காணேனோ ? (எ)

ஆளியைக்காண்பரியாய் அரிகாண்நரியாய் * அரக்கர்
ஊளையிட்டன்றிலங்கைகடந்து பிலம்புக்கொளிப்ப *
மீளியம்புள்ளைக்கடாய் விறல்மாலியைக்கொன்று * பின்னும்
ஆளுயர்குன்றங்கள்செய்து அடர்த்தானையும்காண்டுங்கொலோ ? (அ)

காண்டுங்கொலோ ? நெஞ்சமே ! கடியவினையேமுயலும் *
ஆண்திறல்மீளிமொய்ம்பின் அரக்கன்குலத்தைத்தடிந்து *
மீண்டுமவன்தம்பிக்கே விரிநீரிலங்கையருளி *
ஆண்டுதன்சோதிபுக்க அமரரரியேற்றினையே. (௯)

ஏற்றரும்வைகுந்தத்தை அருளும்நமக்கு * ஆயர்குலத்து
ஈற்றிளம்பிள்ளையொன்றாய்ப்புக்கு மாயங்களேயியற்றி *
கூற்றியல்கஞ்சனைக்கொன்று ஐவர்க்காய்க்கொடுஞ்சேனைதடிந்து *
ஆற்றல்மிக்கான் பெரியபரஞ்சோதிபுக்கவரியே. (௧௦)

↓↓ புக்கவரியுருவாய் அவுணனுடல்கீண்டுகந்த *
சக்கரச்செல்வன்தன்னைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன *
மிக்கவோராயிரத்துள் இவைபத்தும்வல்லாரவரை *
தொக்குப்பல்லாண்டிசைத்துக் கவரிசெய்வரேழையரே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எ - ஆந் திருவாய்மொழி—ஏழையர்.

[எம்பெருமானது திவ்யாவயவஸௌந்தர்யம் உருவெளித்தோற்றத்தில் காணப்பட, அதனால் வருந்தும் தலைவி சொல்லிய பாசுரம்.]

கலிநிலைத்துறை.

பண் - பாலையாழ், தாளம் ஏழொத்து. முகாரிராகம் - அடதாளம்.

↓↓ ஏழையராவியுண்ணும் இணைக்கூற்றங்கொலோ? அறியேன் *
ஆழியங்கண்ணபிரான் திருக்கண்கள்கொலோ? அறியேன் *
சூழவுந்தாமரைநாண்மலர்போல் வந்துதோன்றும்கண்டீர் *
தோழியர்காள்! அன்னைமீர்! என்செய்கேன்? துயராட்டியேனே. (௧)

ஆட்டியும்தூற்றியும்நின்று அன்னைமீர்! என்னைநீர்நலிந்தென்? *
மாட்டுயர்கற்பகத்தின் வல்லியோ? கொழுந்தோ? அறியேன் *
ஈட்டியவெண்ணெயுண்டான் திருமூக்கு, எனதாவியுள்ளே *
மாட்டியவல்விளக்கின் சுடராய்நிற்கும்வாலியதே (௨)

வாலியதோர்கனிகொல்? வினையாட்டியேன்வல்வினைகொல்? *
கோலந்திரள்பவளக் கொழுந்துண்டங்கொலோ? அறியேன் *
நீலநெடுமுகில்போல் திருமேனியம்மான்தொண்டைவாய் *
ஏலும் † திசையுளெல்லாம் வந்துதோன்றுமென்னின்னுயிர்க்கே. (௩)

இன்னுயிர்க்கேழையர்மேல் வளையும்இணைநீலவிற்கொல்? *
மன்னியசீர்மதனன் கருப்புச்சிலைகொல்? * மதனன்
தன்னுயிர்த்தாதை கண்ணபெருமான்புருவமவையே *
என்னுயிர்மேலனவாய் அடுகின்றனவென்றுநின்றே. (௪)

என்றுநின்றேதிகழும் செய்யவீன்சுடர்வெண்மின்னுக்கொல்? *
அன்றியென்னாவியடும் அணிமுத்தங்கொலோ? அறியேன் *
குன்றமெடுத்தபிரான்முறுவல் எனதாவியடும் *
ஒன்றுமறிகின்றிலேன் அன்னைமீர்! எனக்குஉய்விடமே. (௫)

† 'திசைகளெல்லாம்' என்பதும் பாடம்.

உய்விடமேழையர்க்கும் அசுரர்க்கும்அரக்கர்கட்கும் *
எவ்விடம்? என்றிலங்கி மகரந்தழைக்குந்தளிர்கொல்? *
பைவிடப்பாம்பணையான் திருக்குண்டலக்காதுகளே *
கைவிடலொன்றுமின்றி அடுகின்றனகாண்மின்களே. (சு)

காண்மின்களன்னையர்காள்! என்று காட்டும்வகையறியேன் *
நாண்மன்னுவெண்திங்கள்கொல்? நயந்தார்கட்குநச்சிலைகொல்? *
சேண்மன்னுநால்தடந்தோள் பெருமான்தன்திருநுதலே *
கோள்மன்னியாவியடும் கொடியேனுயிர்கோளிழைத்தே. (எ)

கோளிழைத்தாமரையும் கொடியும்பவளமும்வில்லும் *
கோளிழைத்தண்முத்தமும் தளிரும்குளிர்வான்பிறையும் *
கோளிழையாவுடைய கொழுஞ்சோதிவட்டங்கொல்? * கண்ணன்
கோளிழைவாண்முகமாய்க் கொடியேனுயிர்கொள்கின்றதே. (அ)

கொள்கின்றகோளிருளைச் சுகிர்ந்திட்டகொழுஞ்சுருளின் *
உள்கொண்டநீலநன்னூல்தழைகொல்? அன்றுமாயன்குழல் *
விள்கின்றபூந்தண்துழாய் விரைநாறவந்தென்னுயிரை *
கள்கின்றவாறறியீர் அன்னைமீர்! கழறுநிற்றிரே. (கூ)

நிற்றிமுற்றத்துளென்று நெரித்தகையராய் * என்னைநீர்
சுற்றியும்சூழ்ந்தும்வைதிர் சுடர்ச்சோதிமணிநிறமாய் *
முற்றவிம்மூவுலகும் விரிகின்றசுடர்முடிக்கே *
ஒற்றுமைகொண்டதுள்ளம் அன்னைமீர்! நசையென்நுங்கட்கே? (க0)

↓↓ கட்கரியபிரமன்சிவன் இந்திரனென்றிவர்க்கும் *
கட்கரியகண்ணனைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன *
உட்குடையாயிரத்துள் இவையுமொருபத்தும்வல்லார் *
உட்குடைவானவரோடு உடனாய்என்றும்மாயாரே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

அ - ஆந் திருவாய்மொழி—மாயாவாமனனே.

[உபத்திரவப்படும்படி தம்மைவைத்த விசித்திரசக்தியால் எம்பெருமானது விசித்திர விபூதியைக் கண்டு ஆழ்வார் ஆச்சரியப்படுதல்.]

கலிவிருத்தம்.

பண் - பாலையாழ், தாளம் - ஏழொத்து. பந்துவராளிராகம் - ரூபகதாளம்.

↓↓ மாயா ! வாமனனே ! மதுசூதா ! நீயருளாய் *
தீயாய்நீராய்நிலனாய் விசும்பாய்க்காலாய் * *
தாயாய்த்தந்தையாய்மக்களாய் மற்றுமாய்முற்றுமாய் *
நீயாய்நீநின்றவாறு இவையென்னநியாயங்களே ! (க)

அங்கண்மலர்த்தண்துழாய்முடி அச்சுதனே ! அருளாய் *
திங்களும்ஞாயிறுமாய்ச் செழும்பல்சுடராயிருளாய் *
பொங்குபொழிமழையாய்ப் புகழாய்ப்பழியாய்ப்பின்னும்நீ *
வெங்கண்வெங்கூற்றமுமாம் இவையென்னவிசித்திரமே ! (உ)

சித்திரத்தேர்வலவா ! திருச்சக்கரத்தாய் ! அருளாய் *
எத்தனையோருகமும் அவையாய்அவற்றுள்ளியலும் *
ஒத்தவொண்பல்பொருள்கள் உலப்பில்லனவாய்வியவாய் *
†வித்தகத்தாய்நிற்றிநீ இவையென்னவிடமங்களே ! (ங)

கள்ளவிழ்தாமரைக்கண்கண்ணனே ! எனக்கொன்றருளாய் *
உள்ளதுமில்லதுமாய் உலப்பில்லனவாய்வியவாய் *
வெள்ளத்தடங்கடலுள் விடநாகணைமேல்மருவி *
உள்ளப்பல்யோகுசெய்தி இவையென்னவுபாயங்களே ! (ச)

பாசங்கள்நீக்கி என்னைஉனக்கேயறக்கொண்டிட்டு * நீ
வாசமலர்த்தண்துழாய்முடி மாயவனே ! அருளாய் *
காயமும்சீவனுமாய்க் கழிவாய்ப்பிறப்பாய், பின்னும்நீ *
மாயங்கள்செய்துவைத்தி இவையென்னமயக்குக்களே ! (ரு)

மயக்கா ! வாமனனே ! மதியாம்வண்ணமொன்றருளாய் *
அயர்ப்பாய்த்தேற்றமுமாய் அழலாய்க்குளிராய்வியவாய் *
வியப்பாய்வென்றிகளாய் வினையாய்ப்பயனாய், பின்னும்நீ *
துயக்காய்நீநின்றவாறு இவையென்னதுயரங்களே ! (சு)

---

† 'வித்தகத்தால்' என்பதும் பாடம்.

துயரங்கள்செய்யுங்கண்ணா! சுடர்நீள்முடியாய்! அருளாய் *
துயரஞ்செய்மானங்களாய் மதனாகியுகலைகளாய் *
துயரஞ்செய்காமங்களாய்த் துலையாய்நிலையாய்நடையாய் *
துயரங்கள்செய்துவைத்தி இவையென்னசுண்டாயங்களே! (எ)

† என்னசுண்டாயங்களால் நின்றிட்டாய்? என்னையாளுங்கண்ணா! *
இன்னதோர்தன்மையையென்று உன்னையாவர்க்குந்தேற்றரியை *
முன்னையமூவுலகுமவையாய் அவற்றைப்படைத்து *
பின்னும்உள்ளாய்! புறத்தாய்! இவையென்னஇயற்கைகளே! (அ)

‡ என்னவியற்கைகளால் எங்ஙனேநின்றிட்டாய்? என்கண்ணா! *
துன்னுகரசரணம்முதலாக எல்லாவுறுப்பும் *
உன்னுசுவையொளி ஊறொலிநாற்றம்முற்றும்நீயே *
உன்னையுணரவுறில் உலப்பில்லைநுணுக்கங்களே! (கூ)

இல்லைநுணுக்கங்களே இதனிற்பிறிதென்னும்வண்ணம் *
தொல்லைநன்னூலிற்சொன்ன உருவும்அருவும்நீயே *
அல்லித்துழாயலங்கல் அணிமார்ப! என்னச்சுதனே! *
வல்லதோர்வண்ணம்சொன்னால் அதுவேஉனக்காம்வண்ணமே. (க0)

⸸⸸ ஆம்வண்ணமின்னதொன்றென்று அறிவதரியவரியை *
ஆம்வண்ணத்தால் குருகூர்ச்சடகோபனறிந்துரைத்த *
ஆம்வண்ணவொண்தமிழ்கள் இவையாயிரத்துள்இப்பத்தும் *
ஆம்வண்ணத்தாலுரைப்பார் அமைந்தார்தமக்கென்றைக்குமே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

கூ - ஆந் திருவாய்மொழி—என்றைக்கும்.

[எம்பெருமான் தனக்கும் ததீயர்க்கும் இனிதாகக் கவிபாடும்படி தம்மை இங்குவைத்ததற்குக் கைம்மாறில்லாமையை ஆழ்வார் அருளிச்செய்தல்.]

கலிவிருத்தம்.

பண் - நட்டபாஷை, தாளம் - ஒன்பதோத்து. ஆரபிராகம் - ஆதிதாளம்.

⸸⸸ என்றைக்குமென்னை உய்யக்கொண்டுபோகிய *
அன்றைக்கன்றென்னைத் தன்னாக்கியென்னால்தன்னை *
இன்தமிழ்பாடியவீசனை ஆதியாய்
நின்றவென்சோதியை * என்சொல்லிநிற்பனோ? (க)

† 'என்னசுண்டாயங்களாலெங்ஙனேநின்றிட்டாயென்கண்ணா' என்பதும்பாடம்
‡ 'என்னவியற்கைகளால் நின்றிட்டாயென்னையாளுங்கண்ணா' என்பதும்பாடம்

என்சொல்லிநிற்பன் ? என்னின்னுயிரின்றொன்றாய் *
என்சொல்லால்யான்சொன்ன இன்கவியென்பித்து *
தன்சொல்லால்தான் தன்னைக் கீர்த்தித்தமாயன் * என்
முன்சொல்லும் மூவுருவாம்முதல்வனே. (உ)

ஆமுதல்வனிவனென்று தன்தேற்றி * என்
நாமுதல்வந்துபுகுந்து நல்லின்கவி *
தூமுதற்பத்தர்க்குத் தான் தன்னைச்சொன்ன * என்
வாய்முதலப்பனை என்றுமறப்பனோ ? (௩)

அப்பனையென்றுமறப்பன் ? என்னாகியே *
தப்புதலின்றித் தனைக்கவிதான்சொல்லி *
ஒப்பிலாத்தீவினையேனை உய்யக்கொண்டு *
செப்பமேசெய்து திரிகின்றசீர்கண்டே. (௪)

சீர்கண்டுகொண்டு திருந்துநல்லின்கவி *
நேர்படயான்சொல்லும் நீர்மையிலாமையில் *
ஏர்விலாஎன்னைத் தன்னாக்கிஎன்னால்தன்னை *
பார்பரவின்கவி பாடும்பரமரே. (௫)

இன்கவிபாடும் பரமகவிகளால் *
தன்கவிதான் தன்னைப்பாடுவியாது * இன்று
நன்குவந்தென்னுடனாக்கி என்னால்தன்னை *
வன்கவிபாடும் என்வைகுந்தநாதனே. (௬)

வைகுந்தநாதன் என்வல்வினைமாய்ந்தற *
செய்குந்தன்தன்னை என்னாக்கிஎன்னால்தன்னை *
வைகுந்தனாகப்புகழ வண்தீங்கவி *
செய்குந்தன்தன்னை எந்நாள்சிந்தித்தார்வனோ ? (௭)

ஆர்வனோ ? ஆழியங்கை எம்பிரான்புகழ் *
பார்விண்நீர்முற்றும் கலந்துபருகிலும் *
ஏர்விலாஎன்னைத் தன்னாக்கிஎன்னால்தன்னை *
சீர்பெறஇன்கவி சொன்னதிறத்துக்கே. (௮)

திறத்துக்கே † துப்புரவாம் திருமாலின்சீர் *
இறப்பெதிர்காலம் பருகிலுமார்வனோ ? *
மறப்பிலாஎன்னைத் தன்னாக்கிஎன்னால்தன்னை *
உறப்பலஇன்கவி சொன்னவுதவிக்கே. (௯)

---

† 'துப்பரவு' என்றும் பாடம்.

உதவிக்கைம்மாறு என்னுயிரென்னவுற்றெண்ணில் *
அதுவும்மற்றாங்கவன்தன்னது, என்னால்தன்னை *
பதவியஇன்கவி பாடியஅப்பனுக்கு *
எதுவுமொன்றுமில்லை செய்வதிங்குமங்கே. (௧௦)

↓↓ இங்குமங்கும் திருமாலன்றியின்மைகண்டு *
அங்ஙனேவண்குருகூர்ச் † சடகோபன் *
இங்ஙனேசொன்ன ஓராயிரத்துஇப்பத்தும் *
எங்ஙனேசொல்லினும் இன்பம்பயக்குமே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௯௦-ஆந் திருவாய்மொழி—இன்பம்பயக்க.

[இன்பக்கவிபாடுவித்த எம்பெருமானை ஆழ்வார் திருவாறன்விளையிற் சென்று கண்டு அடிமைசெய்யக் கருதுதல்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண்-பழம்பஞ்சுரம்: தாளம்-ஏழொத்து. கல்யாணிராகம்-அடதாளம்.

↓↓ இன்பம்பயக்க எழில்மலர்மாதரும்தானும் * இவ்வேழுலகை
இன்பம்பயக்கஇனிதுடன்வீற்றிருந்து ஆள்கின்றஎங்கள்பிரான் *
அன்புற்றமர்ந்துறைகின்ற அணிபொழில்சூழ்திருவாறன்விளை *
அன்புற்றமர்ந்துவலஞ்செய்து கைதொழுநாள்களுமாகுங்கொலோ ?

ஆகுங்கொல் ? ஐயமொன்றின்றி அகலிடம்முற்றவும் * ஈரடியே
ஆகும்பரிசுநிமிர்ந்த திருக்குறளப்பனமர்ந்துறையும் *
மாகந்திகழ்கொடிமாடங்கள்நீடு மதிள்திருவாறன்விளை *
மாகந்தநீர்கொண்டுதூவிவலஞ்செய்து கைதொழக்கூடுங்கொலோ ?(௨)

கூடுங்கொல் ? வைகலும் கோவிந்தனைமதுசூதனைக் கோளரியை *
ஆடும்பறவைமிசைக்கண்டு கைதொழுதன்றி, அவனுறையும் * [ழ் *
பாடும்பெரும்புகழ்நான்மறைவேள்வியைந்து ஆறங்கம்பன்னினர்வா
நீடுபொழில்திருவாறன்விளைதொழ வாய்க்குங்கொல் ? நிச்சலுமே.(௩)

வாய்க்குங்கொல்? நிச்சலும் எப்பொழுதும்மனத்தீங்குநினைக்கப்பெற *
வாய்க்குங்கரும்பும்பெருஞ்செந்நெலும் வயல்சூழ்திருவாறன்விளை *
வாய்க்கும்பெரும்புகழ்மூவுலகீசன் வடமதுரைப்பிறந்த *
வாய்க்கும்மணிநிறக்கண்ணபிரான்தன் மலரடிப்போதுகளே. (௪)

† 'சடகோபன்சொல்' என்பதும் பாடம்.

மலரடிப்போதுகள்என்னெஞ்சத்தெப்பொழுதும் இருத்திவணங்க *
பலரடியார்முன்பருளிய பாம்பணையப்பனமர்ந்துறையும் *
மலரின்மணிநெடுமாடங்கள்நீடு மதிள்திருவாறன்விளை *
உலகமலிபுகழ்பாட நம்மேல்வினையொன்றும்நில்லாகெடுமே. (ரு)

ஒன்றுநில்லாகெடும்முற்றவும்தீவினை உள்ளித்தொழுமின்தொண்டீர்!*
அன்றங்கமர்வென்று உருப்பிணிநங்கை அணிநெடுந்தோள்புணர்ந்தான்*
என்றுமெப்போதுமென்னெஞ்சம்துதிப்ப உள்ளேயிருக்கின்றபிரான் *
நின்றவணிதிருவாறன்விளையென்னும் நீள்நகரமதுவே. (௬)

நீணகரமதுவேமலர்ச்சோலைகள்சூழ் திருவாறன்விளை *
நீணகரத்துறைகின்றபிரான் நெடுமால்கண்ணன்விண்ணவர்கோன் *
வாணபுரம்புக்குமுக்கட்பிரானைத் தொலையவெம்போர்கள்செய்து *
வாணனையாயிரந்தோள்துணித்தான்சரணன்றி மற்றொன்றிலமே. (எ)

அன்றிமற்றொன்றிலம்நின்சரணேயென்று அகலிரும்பொய்கையின்
நின்றுதன்நீள்கழலேத்திய ஆனையின்நெஞ்சிடர்தீர்த்தபிரான் *[வாய்*
சென்றங்கினிதுறைகின்ற செழும்பொழில்சூழ்திருவாறன்விளை *
ஒன்றிவலஞ்செய்யவொன்றுமோ ? தீவினையுள்ளத்தின்சார்வல்லவே.()

தீவினையுள்ளத்தின்சார்வல்லவாகித் தெளிவிசும்பேறலுற்றால் *
நாவினுள்ளும்உள்ளத்துள்ளும் அமைந்ததொழிலினுள்ளும்நின்று *
யாவரும்வந்துவணங்கும்பொழில் திருவாறன்விளையதனை *
மேவிவலஞ்செய்துகைதொழக்கூடுங்கொல் ? என்னும்என்சிந்தனையே.

சிந்தைமற்றொன்றின்திறத்ததல்லாத்தன்மை தேவபிரானறியும் *
சிந்தையினால்செய்வதானறியாதன மாயங்களொன்றுமில்லை *
சிந்தையினால்சொல்லினால்செய்கையால் நிலத்தேவர்குழுவணங்கும் *
சிந்தைமகிழ்திருவாறன்விளையுறை தீர்த்தனுக்கற்றபின்னே. (கo)

⸸ தீர்த்தனுக்கற்றபின் மற்றோர்சரணில்லையென்றெண்ணி* தீர்த்தனு
தீர்த்தமனத்தனனாகிச் செழுங்குருகூர்ச்சடகோபன்சொன்ன * [க்கே
தீர்த்தங்களாயிரத்துள் இவைபத்தும்வல்லார்களை * தேவர்வைகல்
தீர்த்தங்களேயென்றுபூசித்துநல்கியுரைப்பர் தம்தேவியர்க்கே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எட்டாம்பத்து.

ஆழ்வார் தமது ஆத்மஆத்மீயங்களில் நசையற்றபடியை அருளிச்செய்தல்.

க - ஆந் திருவாய்மொழி—தேவிமாராவார்.

[எம்பெருமான் தமதுநினைவைத் தலைக்கட்டாமையால், ஆழ்வார் அவனது ஆச்ரிதபாரதந்த்ரியம் யாவையும்தானும்நிலைமை

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - புறநீர்மை, தாளம், ஒன்பதோத்து. பைரவிராகம் - ஆதிதாளம்.

தேவிமாராவார்திருமகள்பூமி
ஏவமற்றமரராட்செய்வார் *
மேவியவுலகம்மூன்றவையாட்சி
வேண்டுவேண்டுருவம்நின்னுருவம் *
பாவியேன்தன்னையடுகின்ற
கமலக்கண்ணது ஓர்பவளவாய்மணியே ! *
ஆவியே ! அமுதே ! அலைகடல்கடைந்த
அப்பனே ! காணுமாறருளாய். (க)

காணுமாறருளாயென்றென்றேகலங்கிக்
கண்ணநீரலமர * வினையேன்
பேணுமாறெல்லாம்பேணி நின்பெயரே
பிதற்றுமாறருளெனக்கந்தோ ! *
காணுமாறருளாய்காகுத்தா ! கண்ணா !
தொண்டனேன்கற்பகக்கனியே ! *
பேணுவாரமுதே ! பெரியதண்புனல்சூழ்
பெருநிலமெடுத்தபேராளா ! (உ)

எடுத்தபேராளன்நந்தகோபன்தன்
இன்னுயிர்ச்சிறுவனே ! * அசோதைக்கு
அடுத்தபேரின்பக்குலவிளங்களிறே !
அடியனேன்பெரியவம்மானே ! *
கடுத்தபோரவுணனுடலிருபிளவாக்
கையுகிராண்டவெங்கடலே ? *
அடுத்ததோருருவாய்இன்றுநீவாராய்
எங்ஙனம்தேறுவருமரே ? (ங)

உமருகந்துகந்தவுருவம்நின்னுருவமாகி
    உன்தனக்கன்பரானா
ரவர் * உகந்தமர்ந்தசெய்கையுன்மாயை
    அறிவொன்றுஞ்சங்கிப்பன்வினையேன் *
அமரதுபண்ணியகலிடம்புடைசூழ்
    அடுபடையவித்தஅம்மானே ! *
அமரர்தமமுதே ! அசுரர்கள்நஞ்சே !
    என்னுடையாருயிரேயோ ! (௫)

ஆருயிரேயோ ! அகலிடமுழுதும் *
    படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்த *
பேருயிரேயோ ! பெரியநீர்படைத்து அங்குறைந்தது
    கடைந்தடைத்துடைத்த *
சீருயிரேயோ ! மனிசர்க்குத்தேவர்போலத்
    தேவர்க்குந்தேவாவோ ! *
ஓருயிரேயோ ! உலகங்கட்கெல்லாம்
    உன்னைநானெங்குவந்துறுகோ ? (௬)

எங்குவந்துறுகோ ! என்னையாள்வானே !
    ஏழுலகங்களுந்நீயே *
அங்கவர்க்கமைத்ததெய்வமுந்நீயே
    அவற்றவைகருமமுந்நீயே *
பொங்கியபுறம்பாற்பொருளுளவேலும்
    அவையுமோநீயின்னேயானால் *
மங்கியஅருவாம்நேர்ப்பமுந்நீயே
    வான்புலனிறந்ததுந்நீயே. (௭)

இறந்ததுந்நீயேஎதிர்ந்ததுந்நீயே
    நிகழ்வதோநீயின்னேயானால் *
சிறந்தநின்தன்மையதுஇதுவுதுவென்று
    அறிவொன்றுஞ்சங்கிப்பன்வினையேன் *
கறந்தபால்நெய்யே ! நெய்யினின்சுவையே !
    கடலினுளமுதமே ! * அமுதிற்
பிறந்தஇன்சுவையே ! சுவையதுபயனே !
    பின்னைதோள்மணந்தபேராயா ! (௮)

மணந்தபேராயா! மாயத்தால்முழுதும்
வல்வினையேனையீர்கின்ற *
குணங்களையுடையாய்! அசுரர்வன்கையர்கூற்றமே!
கொடியபுள்ளுயர்த்தாய்! *
பணங்களாயிரமுடையபைந்நாகப்பள்ளியாய்!
பாற்கடற்சேர்ப்பா! *
வணங்குமாறறியேன்மனமும்
வாசகமும் செய்கையும் யானும்நீதானே. (அ)

யானும்நீதானேயாவதோமெய்யே
அருநரகவையும்நீயானால் *
வானுயரின்பமெய்திலென்?
மற்றைநரகமேயெய்திலென்? எனினும் *
யானும்நீதானாய்த்தெளிதொறும்நன்றும்
அஞ்சுவன் நரகம்நானடைதல் *
வானுயரின்பம்மன்னிவீற்றிருந்தாய்!
அருளுநின்தாள்களையெனக்கே. (௯)

தாள்களையெனக்கேதலைத்தலைச்சிறப்பத்
தந்த பேருதவிக்கைம்மாறு *
தோள்களையாரத்தழுவி என்னுயிரை
அறவிலைசெய்தனன்சோதீ! *
தோள்களாயிரத்தாய்! முடிகளாயிரத்தாய்!
துணைமலர்க்கண்களாயிரத்தாய்! *
தாள்களாயிரத்தாய்! பேர்களாயிரத்தாய்!
தமியனேன்பெரியவப்பனே! (௧0)

‡‡ பெரியவப்பனைப்பிரமனப்பனை
உருத்திரனப்பனை * முனிவர்க்
குரியவப்பனையமரரப்பனை
உலகுக்கோர்தனியப்பன்தன்னை *
பெரியவண்குருகூர்வண்சடகோபன்
பேணினவாயிரத்துள்ளும் *
உரியசொல்மாலையிவையும்பத்து
இவற்றால் உய்யலாம்தொண்டீர்! நங்கட்கே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

உ - ஆந் திருவாய்மொழி—நங்கள்வரிவளை.

[ஆழ்வார் தமக்கு ஸம்ஸாரத்தில் நைராஸ்யமுண்டானதை, தலைவனை நோக்கிச் செல்லக் கருதிய தலைவிபேச்சாலே அருளிச்செய்தல்.]

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - கொல்லி, தாளம் - ஏழொத்து. செஞ்சுருட்டிராகம் - அடதாளம்.

⇊ நங்கள்வரிவளையாயங்காளோ!
நம்முடையேதலர்முன்புநாணி *
நுங்கட்குயானொன்றுரைக்குமாற்றம்
நோக்குகின்றேனெங்குங்காணமாட்டேன் *
சங்கம்சரிந்தனசாயிழந்தேன்
தடமுலைபொன்னிறமாய்த்தளர்ந்தேன் *
வெங்கண்பறவையின்பாகனெங்கோன்
வேங்கடவாணனைவேண்டிச்சென்றே. (க)

வேண்டிச்சென்றொன்றுபெறுகிற்பாரில்
என்னுடைத்தோழியர்நுங்கட்கேலும் *
ஈண்டிதுரைக்கும்படியை அந்தோ!
காண்கின்றிலேன் இடராட்டியேன்நான் *
காண்தகுதாமரைக்கண்ணன்கள்வன்
விண்ணவர்கோன்நங்கள்கோனைக்கண்டால் *
ஈண்டியசங்கும்நிறையுங்கொள்வான்
எத்தனைகாலம் இளைக்கின்றேனே? (உ)

காலமிளைக்கிலல்லால் வினையேன்நான்
இளைக்கின்றிலன் கண்டுகொண்மின் *
ஞாலமறியப்பழிசுமந்தேன் நன்னுதலீர்!
இனிநாணித்தானென்? *
நீலமலர்நெடுஞ்சோதிசூழ்ந்த
நீண்டமுகில்வண்ணன்கண்ணன்கொண்ட *
கோலவளையொடுமாமைகொள்வான்
எத்தனைகாலமுங்கூடச்சென்றே. (ங)

கூடச்சென்றேன் இனியென்கொடுக்கேன்?
கோல்வளை † நெஞ்சத்துடக்கமெல்லாம் *
பாடற்றொழிய இழந்துவைகல்
பல்வளையார்முன்பரிசழிந்தேன் *

† 'நெஞ்சந்தொடக்கம்' என்றும் பாடம்.

மாடக்கொடிமதிள்தென்குளந்தை
　　வண்குடபால்நின்றமாயக்கூத்தன் *
ஆடற்பறவையுயர்த்தவெல்போர்
　　ஆழிவலவனையாதரித்தே. (ரு)

ஆழிவலவனை ஆதரிப்பும்
　　ஆங்கவன்நம்மில்வரவுமெல்லாம் *
தோழியர்காள் ! நம்முடையமேதான் ?
　　சொல்லுவதோ ? இங்கரியதுதான் *
ஊழிதோறூழியொருவனாக
　　நன்குணர்வார்க்குமுணரலாகா *
சூழலுடையசுடர்கொளாதித்
　　தொல்லையஞ்சோதிநினைக்குங்காலே. (௬)

தொல்லையஞ்சோதிநினைக்குங்கால்
　　என்சொல்லளவன்று, இமையோர்தமக்கும் *
எல்லையிலாதனகூழ்ப்புச்செய்யும்
　　அத்திறம்நிற்கஎம்மாமைகொண்டான் *
அல்லிமலர்த்தண்துழாய்ந்தாரான்
　　ஆர்க்கிடுகோ இனிப்பூசல் ? சொல்லீர் *
வல்லிவளவயல்சூழ்குடந்தை
　　மாமலர்க்கண்வளர்கின்றமாலே. (எ)

மாலரிகேசவன்நாரணன்
　　சீமாதவன்கோவிந்தன்வைகுந்தனென்றென்று *
ஓலமிடவென்னைப்பண்ணிவிட்டிட்டு
　　ஒன்றுமுருவுஞ்சுவடுங்காட்டான் *
ஏலமலர்க்குழலன்னைமீர்காள் !
　　என்னுடைத்தோழியர்காள் ! என்செய்கேன் ? *
காலம்பலசென்றுங்காண்பதாணை
　　உங்களோடெங்களிடையில்லையே. (அ)

இடையில்லையான்வளர்த்தகிளிகாள் !
　　பூவைகள்காள் ! குயில்காள் ! மயில்காள் ! *
உடையநம்மாமையுஞ்சங்கும்நெஞ்சும்
　　ஒன்றுமொழியவொட்டாதுகொண்டான் *

அடையும்வைகுந்தமும்பாற்கடலும்
அஞ்சனவெற்புமவைநணிய *
கடையறப்பாசங்கள்விட்டபின்னையன்றி
அவனவைகாண்கொடானே. (அ)

காண்கொடுப்பானல்லனார்க்குந்தன்னைக்
கைசெயப்பாலதோர்மாயந்தன்னால் *
மாண்குறள்கோலவடிவுகாட்டி
மண்ணும்விண்ணும்நிறையமலர்ந்த *
சேண்சுடர்த்தோள்கள்பலதழைத்த
தேவபிராற்குஎன்நிறைவினோடு *
நாண்கொடுத்தேன்இனியென்கொடுக்கேன் ?
என்னுடைநன்னுதல்நங்கைமீர்காள் ! (கூ)

என்னுடைநன்னுதல்நங்கைமீர்காள் !
யானினிச்செய்வதென் ? என்னெஞ்சுஎன்னை *
நின்னிடையேனல்லேனென்றுநீங்கி
நேமியும்சங்குமிருகைக்கொண்டு *
பன்னெடுஞ்சூழ்சுடர்ஞாயிற்றோடு
பால்மதியேந்தி, ஓர்கோலநீல *
நன்னெடுங்குன்றம்வருவதொப்பான்
நாள்மலர்ப்பாதமடைந்ததுவே. (கo)

‡‡ பாதமடைவதன்பாசத்தாலே
மற்றவன்பாசங்கள்முற்றவிட்டு *
கோதில்புகழ்க்கண்ணன்தன்னடிமேல்
வண்குருகூர்ச்சடகோபன்சொன்ன *
தீதிலந்தாதியோராயிரத்துள்
இவையுமோர்பத்திசையொடும்வல்லார் *
ஆதுமோர்தீதிலராகி இங்குமங்கும்
எல்லாமமைவார்கள்தாமே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ரு - ஆந் திருவாய்மொழி—அங்குமிங்கும்.

[ஆழ்வார் இங்கு எம்பெருமானுக்குப் பரிவரில்லாமைபற்றி அஞ்சி அப்பிரானருளாலுணர்ந்து பயந்தீர்தல்.]

கலிநிலைத்துறை.

பண் - நட்டபாஷை, தாளம் - ஏழொத்து. வராளிராகம் - ரூபகதாளம்.

‡‡ அங்குமிங்கும் வானவர்தானவர் யாவரும் *
எங்குமினையையென்று உன்னையறியகிலாது அலற்றி *
அங்கஞ்சேரும் பூமகள்மண்மகளாய்மகள் *
சங்குசக்கரக்கையவனென்பர் சரணமே. (க)

சரணமாகிய நான்மறைநூல்களுஞ்சாராதே *
மரணந்தோற்றம் வான்பிணிமூப்பென்றிவைமாய்த்தோம் *
கரணப்பல்படை பற்றறவோடுங்கனலாழி *
அரணத்திண்படையேந்திய ஈசற்காளாயே. (உ)

ஆளுமாளார் ஆழியுஞ்சங்குஞ்சுமப்பார்தாம் *
வாளும்வில்லுங்கொண்டு பின்செல்வார்மற்றில்லை *
தாளுந்தோளும் கைகளையாரத்தொழக்காணேன் *
நாளுந்நாளுந்நாடுவன் அடியேன்ஞாலத்தே. (ரு)

ஞாலம்போனகம்பற்றி ஓர்முற்றாவுருவாகி *
ஆலம்பேரிலை அன்னவசஞ்செய்யும்அம்மானே! *
காலம்பேர்வது ஓர்காரிருள்ஊழியொத்துளதால் * உன்
கோலங்காரெழில் காணலுற்றுஆழுங்கொடியேற்கே. (சு)

கொடியார்மாடக் கோளூரகத்தும்புளிங்குடியும் *
மடியாதின்னே நீதுயில்மேவிமகிழ்ந்ததுதான் *
அடியாரல்லல்தவிர்த்தஅசைவோ? அன்றேல்இப்
படிதான் * நீண்டுதாவிய அசைவோ? பணியாயே. (ரு)

பணியாவமரர் பணிவும்பண்பும்தாமேயாம் *
அணியாராழியும் சங்கமுமேந்துமவர்காண்மின் *
தணியாவெந்நோய் உலகில்தவிர்ப்பான் * திருநீல
மணியார்மேனியோடு என்மனஞ்சூழவருவாரே. (சா)

வருவார்செல்வார் வண்பரிசாரத்திருந்த * என்
திருவாழ்மார்வற்கு என்திறம்சொல்லார்செய்வதென்? *
உருவார்சக்கரம் சங்குசுமந்து இங்குஉம்மோடு *
ஒருபாடுழல்வான் ஓரடியானுமுளனென்றே. (எ)

என்றே? என்னை உன்னேரார்கோலத்திருந்தடிக்கீழ் *
நின்றேயாட்செய்ய நீகொண்டருள நினைப்பதுதான் *
குன்றேழ்பாரேழ் சூழ்கடல்ஞாலம்முழுவேழும் *
நின்றேதாவிய நீள்கழலாழித்திருமாலே! (அ)

திருமால்! நான்முகன் செஞ்சடையானென்றிவர்கள் * எம்
பெருமான் தன்மையை யாரறிகிற்பார்? பேசியென்? *
ஒருமாமுதல்வா! ஊழிப்பிரான்! என்னையாளுடை *
கருமாமேனியன்! என்பன் என்காதல்கலக்கவே. (கூ)

கலக்கமில்லா நல்தவமுனிவர் கரைகண்டோர் *
துளக்கமில்லா வானவரெல்லாம்தொழுவார்கள் *
மலக்கமெய்த மாகடல்தன்னைக்கடைந்தானை *
உலக்கநாம்புகழ்கிற்பது என்செய்வது? உரையீரே. (க0)

↓↓ உரையாவெந்நோய்தவிர அருள்நீள்முடியானை *
வரையார்மாட மன்னுகுருகூர்ச்சடகோபன் *
உரையேய்சொல்தொடை ஓராயிரத்துள்இப்பத்தும் *
நிரையேவல்லார் நீடுலகத்துப்பிறவாரே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ச - ஆந் திருவாய்மொழி—வார்கடாவருவி.

[எம்பெருமான் தனதுவலிமையையும் பரிவின் ஸம்ருத்தியையும் காட்ட, ஆழ்வார் திருச்செங்குன்றூரிற் கண்டு மகிழ்தல்.]

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண்-புறநீர்மை, தாளம், ஒன்பதோத்து. அடாணாராகம் - ஆதிதாளம்.

↓↓ வார்கடாவருவியானைமாமலையின்
மருப்பிணைக்குவடிறுத்துருட்டி *
ஊர்கொள்திண்பாகனுயிர்செகுத்து
அரங்கின்மல்லரைக்கொன்று சூழ்பரண்மேல் *

போர்கடாவரசர்புறக்கிட
மாடமீமிசைக்கஞ்சனைத்தகர்த்த *
சீர்கொள்சிற்றாயன் திருச்செங்குன்றூரில்
திருச்சிற்றாறெங்கள்செல்சார்வே. (க)

எங்கள்செல்சார்வுயாமுடையமுதம்
இமையவரப்பனென்னப்பன் *
பொங்குமூவுலகும்படைத்தளித்தழிக்கும்
பொருந்துமூவுருவனெம்மருவன் *
செங்கயலுகளும்தேம்பணைபுடைசூழ்
திருச்செங்குன்றூர்த்திருச்சிற்றாறு
அங்கமர்கின்ற * ஆதியானல்லால்
யாவர்மற்றென்னமர் துணையே? (உ)

என்னமர்பெருமான் இமையவர்பெருமான்
இருநிலமிடந்தஎம்பெருமான் *
முன்னைவல்வினைகள்முழுதுடன்மாள
என்னையாள்கின்றஎம்பெருமான் *
தென்திசைக்கணிகொள்திருச்செங்குன்றூரில்
திருச்சிற்றாற்றங்கரைமீபால்
நின்றஎம்பெருமான் * அடியல்லால் † சரண்
நினைப்பிலும் பிறிதில்லையெனக்கே. (௩)

பிறிதில்லையெனக்குப்பெரியமூவுலகும
நிறையப் பேருருவமாய்நிமிர்ந்த *
குறியமாணெம்மான்குரைகடல்கடைந்த
கோலமாணிக்கம்என்னம்மான் *
செறிகுலைவாழைகமுகுதெங்கணிசூழ்
திருச்செங்குன்றூர்த்திருச்சிற்றாறு
அறிய * மெய்ம்மையேநின்றஎம்பெருமான்
அடியிணையல்லதோரரணே. (௪)

அல்லதோரரணும்அவனில்வேறில்லை
அதுபொருளாகிலும் * அவனை
யல்லதென்னாவியமர்ந்தணைகில்லாது
ஆதலால்அவனுறைகின்ற *

---

† 'சரணம்' என்றும் பாடம்.

நல்லநான்மறையோர்வேள்வியுள்மடுத்த
நறும்புகைவிசும்பொளிமறைக்கும் *
நல்லநீள்மாடத்திருச்செங்குன்றூரில்
திருச்சிற்றாறெனக்குநல்லரணே. (௫)

எனக்குநல்லரணையெனதாருயிரை
இமையவர்தந்தைதாய்தன்னை *
தனக்கும்தன்தன்மையறிவரியானைத்
தடங்கடற்பள்ளியம்மானை *
மனக்கொள்சீர்மூவாயிரவர் *
வண்சிவனுமயனுந்தானுமொப்பார்வாழ்
கனக்கொள்திண்மாடத்திருச்செங்குன்றூரில்
திருச்சிற்றாறதனுள்கண்டேனே. (௬)

திருச்செங்குன்றூரில்திருச்சிற்றாறதனுள்
கண்ட அத்திருவடியென்றும் *
திருச்செய்யகமலக்கண்ணும் செவ்வாயும்
செவ்வடியும்செய்யகையும் *
திருச்செய்யகமலவுந்தியும்
செய்ய † கமலமார்பும்செய்யவுடையும் *
திருச்செய்யமுடியுமாரமும் படையும்
திகழஎன்சிந்தையுளானே. (௭)

திகழவென்சிந்தையுளிருந்தானைச்
செழுநிலத்தேவர்நான்மறையோர் *
திசைகைகூப்பியேத்தும் திருச்செங்குன்றூரில்
திருச்சிற்றாற்றங்கரையானை *
புகர்கொள்வானவர்கள்புகலிடந்தன்னை
அசுரர்வன்கையர்வெங்கூற்றை *
புகழுமாறறியேன்பொருந்துமூவுலகும்
படைப்பொடுகெடுப்புக்காப்பவனே. (௮)

படைப்பொடுகெடுப்புக்காப்பவன்
பிரமபரம்பரன்சிவப்பிரானவனே *
இடைப்புக்கோருருவுமொழிவில்லை அவனே
புகழ்வில்லையாவையும்தானே *

† 'கமலை' என்பதும் பாடம்.

* கஅ

கொடைப்பெரும்புகழாரினையர்தன்னானார்
கூறியவிச்சையோடொழுக்கம் *
நடைப்பலியியற்கைத்திருச்செங்குன்றூரில்
திருச்சிற்றாறமர்ந்தநாதனே. (௯)

அமர்ந்தநாதனை அவரவராகி
அவர்க்கருளருளுமம்மானை *
அமர்ந்ததண்பழனத்திருச்செங்குன்றூரில்
திருச்சிற்றாற்றங்கரையானை *
அமர்ந்தசீர்மூவாயிரவர் வேதியர்கள்
தம்பதிஅவனிதேவர்வாழ்வு *
அமர்ந்தமாயோனைமுக்கணம்மானை
நான்முகனையமர்ந்தேனே. (௧௦)

↓↓ தேனைநன்பாலைக்கன்னலையமுதைத்
திருந்துலகுண்டவம்மானை *
வானநான்முகனைமலர்ந்ததண்கொப்பூழ்
மலர்மிசைப்படைத்தமாயோனை *
கோனைவண்குருகூர்வண்சடகோபன்
சொன்னஆயிரத்துள்இப்பத்தும் *
வானின்மீதேற்றியருள்செய்துமுடிக்கும்
பிறவிமாமாயக்கூத்தினையே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ரு-ஆந் திருவாய்மொழி—மாயக்கூத்தா.

[எம்பெருமான்வடிவழகை ப்ரத்யக்ஷீகரிக்கமாட்டாது ஆழ்வார் விடாய் விஞ்சி அழுது அரற்றுதல்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - பழம்பஞ்சுரம், தாளம் - ஏழொத்து. ஸாவேரிராகம் - ஆதிதாளம்.

↓↓ மாயக்கூத்தா ! வாமனா ! வினையேன்கண்ணா ! கண்கைகால் *
தூயசெய்யமலர்களாச் சோதிச்செவ்வாய்முகிழதா *
சாயல்சாமத்திருமேனி தண்பாசடையா * தாமரைநீள்
வாசத்தடம்போல்வருவானே ! ஒருநாள்காணவாராயே ! (௧)

காணவாராயென்றென்று கண்ணும்வாயுந்துவர்ந்து * அடியேன்
நாணிநன்னாட்டுஅலமந்தால் இரங்கிஒருநாள்நீஅந்தோ ! *
காணவாராய்கருநாயிறுதிக்கும் கருமாமாணிக்கம் * |
நாள்நல்மலைபோல்சுடர்ச்சோதி முடிசேர்சென்னியம்மானே ! (உ)

முடிசேர்சென்னியம்மா ! நின்மொய்பூந்தாமத்தண்துழாய் *
கடிசேர்கண்ணிப்பெருமானே ! என்றென்றேங்கியழுதக்கால் *
படிசேர்மகரக்குழைகளும் பவளவாயும்நால்தோளும் *
துடிசேரிடையுமமைந்தது ஓர்தூநீர்முகில்போல்தோன்றாயே. (ங)

தூநீர்முகில்போல்தோன்றும் நின்சுடர்கொள்வடிவும்கனிவாயும் *
தேநீர்கமலக்கண்களும் வந்தென்சிந்தைநிறைந்தவா ! *
மாநீர்வெள்ளிமலைதன்மேல் வண்கார்நீலமுகில்போல *
தூநீர்க்கடலுள்துயில்வானே ! எந்தாய் ! சொல்லமாட்டேனே. (ச)

சொல்லமாட்டேனடியேன் உன்துளங்குசோதித்திருப்பாதம் *
எல்லையில்சீரிளநாயிறு இரண்டுபோலென்னுள்ளவா *
அல்லலென்னுமிருள்சேர்தற்கு உபாயமென்னே ? * ஆழிசூழ்
† மல்லைஞாலமுழுதுண்ட மாநீர்க்கொண்டல்வண்ணனே ! (ரு)

கொண்டல்வண்ணா! குடக்கூத்தா! வினையேன்கண்ணா! கண்ணா! *என்
அண்டவாணா ! என்றென்னை ஆளக்கூப்பிட்டழைத்தக்கால் *
விண்தன்மேல்தான்மண்மேல்தான் விரிநீர்க்கடல்தான்மற்றுத்தான் *
தொண்டனேனுன்கழல்காண ஒருநாள்வந்துதோன்றாயே. (சா)

வந்துதோன்றாயன்றேல் உன்வையந்தாயமலரடிக்கீழ் *
முந்திவந்துயான்நிற்ப முகப்பேகூவிப்பணிகொள்ளாய் *
செந்தண்கமலக்கண்கைகால் சிவந்தவாயோர்கருநாயிறு *
அந்தமில்லாக்கதிர்பரப்பி அலர்ந்ததொக்குமம்மானே ! (எ)

ஒக்குமம்மானுருவமென்று உள்ளங்குழைந்துநாணாளும் *
தொக்கமேகப்பல்குழாங்கள் காணுந்தோறும்தொலைவன்நான் *
தக்கவைவர்தமக்காய்அன்று ஈரைம்பதின்மர்தாள்சாய *
புக்கநல்தேர்த்தனிப்பாகா ! வாராய்இதுவோபொருத்தமே ? (அ)

இதுவோ பொருத்தம்? மின்னாழிப்படையாய்! ஏறுமிருஞ்சிறைப்புள்
அதுவே * கொடியாவுயர்த்தானே ! என்றென்றேங்கியழுதக்கால் *
எதுவேயாகக்கருதுங்கொல் ? இம்மாஞாலம்பொறைதீர்ப்பான் *
மதுவார்சோலை உத்தரமதுரைப்பிறந்தமாயனே. (௯)

† 'மல்லல்' என்பதும் பாடம்.

பிறந்தமாயா! பாரதம்பொருதமாயா! * நீ இன்னே
சிறந்தகால்தீநீர்வான் மண்பிறவுமாயபெருமானே! *
கறந்தபாலுள்நெய்யேபோல் இவற்றுளெங்குங்கண்டுகொள் *
இறந்துநின்றபெருமாயா! உன்னையெங்கேகாண்கேனே? (௧௰)

↓↓எங்கேகாண்கேன்? ஈன்துழாயம்மான்தன்னை யானென்றென்று *
அங்கேதாழ்ந்தசொற்களால் அந்தண்குருகூர்ச்சடகோபன் *
செங்கேழ்சொன்னவாயிரத்துள் இவையும்பத்தும்வல்லார்கள் *
இங்கேகாணஇப்பிறப்பே மகிழ்வர்எல்லியுங்காலையே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௬-ஆம் திருவாய்மொழி—எல்லியும்.

[ஆழ்வாரது பெருவிடாய் தீரக் கலக்கக் கருதித் திருமால் திருக்கடித் தானத்தில் சேவைசாதிக்கத் தரித்தமை கூறுதல்.]

கலி விருத்தம்.

பண் - வியந்தம், தாளம் - எழொத்து. மோஹநராகம் - ஆதிதாளம்.

↓↓ எல்லியும்காலையும் தன்னைநினைந்தெழ *
நல்லவருள்கள் நமக்கேதந்தருள்செய்வான் *
அல்லியந்தண்ணந்துழாய்முடி அப்பனூர் *
செல்வர்கள்வாழும் திருக்கடித்தானமே. (௧)

திருக்கடித்தானமும் என்னுடைச்சிந்தையும் *
ஒருக்கடுத்துள்ளே உறையும்பிரான்கண்டீர் *
செருக்கடுத்தன்று திகைத்தவரக்கரை *
உருக்கெட வாளிபொழிந்தஒருவனே. (௨)

ஒருவரிருவர் ஓர்மூவரெனநின்று *
உருவுகரந்து உள்ளுந்தோறும்தித்திப்பான் *
திருவமர்மார்வன் திருக்கடித்தானத்தை *
மருவியுறைகின்ற மாயப்பிரானே. (௩)

மாயப்பிரான் எனவல்வினைமாய்ந்தற *
நேசத்தினால் நெஞ்சம்நாடுகுடிகொண்டான் *
தேசத்தமரர் திருக்கடித்தானத்தை *
வாசப்பொழில் மன்னுகோயில்கொண்டானே. (௪)

கோயில்கொண்டான்தன் திருக்கடித்தானத்தை *
கோயில்கொண்டான் அதனோடுமென்னெஞ்சகம் *
கோயில்கொள் தெய்வமெல்லாம்தொழ * வைகுந்தம்
கோயில்கொண்ட குடக்கூத்தவம்மானே. (ரு)

கூத்தவம்மான் கொடியேனிடர்முற்றவும் *
மாய்த்தவம்மான் மதுசூதவம்மானுறை *
பூத்தபொழில் தண்திருக்கடித்தானத்தை *
ஏத்தநில்லா குறிக்கொண்மினிடரே. (சு)

கொண்மின் இடர்கெட உள்ளத்துக்கோவிந்தன் *
மண்விண்முழுதும் அளந்த ஒண்தாமரை *
மண்ணவர்தாம்தொழ வானவர்தாம்வந்து *
நண்ணு திருக்கடித்தானநகரே. (எ)

தானநகர்கள் தலைச்சிறந்தெங்கெங்கும் *
வானிந்நிலம்கடல் முற்றும்எம்மாயற்கே *
ஆனவிடத்தும் என்நெஞ்சும் திருக்கடித்
தானநகரும் * தனதாயப்பதியே. (அ)

தாயப்பதிகள் தலைச்சிறந்தெங்கெங்கும் *
மாயத்தினால் மன்னிவீற்றிருந்தானுறை *
தேசத்தமரர் திருக்கடித்தானத்துள் *
ஆயர்க்கதிபதி அற்புதன்தானே. (கூ)

அற்புதன்நாராயணன் அரிவாமனன் *
நிற்பதுமேவி இருப்பதென்னெஞ்சகம் *
நற்புகழ்வேதியர் நான்மறைநின்றதிர் *
கற்பகச்சோலைத் திருக்கடித்தானமே. (கய)

↓↓ சோலைத்திருக்கடித்தானத்து உறைதிரு
மாலை * மதிள்குருகூர்ச் சடகோபன்சொல் *
பாலோடமுதன்ன ஆயிரத்துஇப்பத்தும் *
மேலைவைகுந்தத்து இருத்தும்வியந்தே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எ-ஆந் திருவாய்மொழி—இருத்தும்.

[தம்மிடம்வந்து தாம்மனோரதித்தபடி எம்பெருமான் கலக்க, அந்தக்கலவியை ஸ்வப்நாதிகளாகச் சந்தேகித்துத் தெளிந்து ஆழ்வார் எம்பெருமானதுகுணங்களைப் பேசுதல்.]

கலிவிருத்தம்.

பண் - இந்தளம், தாளம் - ஏழொத்து. கல்யாணிராகம் - ஆதிதாளம்.

↓↓ இருத்தும்வியந்தென்னைத் தன்பொன்னடிக்கீழென்று *
அருத்தித்து எனைத்தோர்பலநாளழைத்தேற்கு *
பொருத்தமுடை வாமனன்தான்புகுந்து * என்தன்
கருத்தையுற வீற்றிருந்தான்கண்டுகொண்டே. (க)

இருந்தான்கண்டுகொண்டு எனதேழைநெஞ்சாளும் *
திருந்தாதவோரைவரைத் தேய்ந்தறமன்னி *
பெருந்தாட்களிற்றுக்கு அருள்செய்தபெருமான் *
தருந்தானருள்தான் இனியானறியேனே. (உ)

அருள்தானினியான்அறியேன் அவன்என்னுள் *
இருள்தானற வீற்றிருந்தான், இதுவல்லால் *
பொருள்தானெனின் மூவுலகும்பொருளல்ல *
மருள்தானீதோ மாயமயக்குமயக்கே. (ங)

மாயமயக்குமயக்கான் என்னைவஞ்சித்து *
ஆயனமரர்க்கரியேறு எனதம்மான் *
தூயசுடர்ச்சோதி தனதென்னுள்வைத்தான் *
தேசந்திகழும் தன்திருவருள்செய்தே. (ச)

திகழும்தன்திருவருள்செய்து உலகத்தார்
புகழும்புகழ் * தானதுகாட்டித்தந்து * என்னுள்
திகழும்மணிக்குன்றமொன்றே ஒத்துநின்றான் *
புகழும்புகழ் * மற்றெனக்குமோர்பொருளே. (ரு)

பொருள்மற்றெனக்கும் ஓர்பொருள்தன்னில்சீர்க்கத்
தருமேல் * பின்னையார்க்கு அவன்தன்னைக்கொடுக்கும் ? *
கருமாணிக்கக்குன்றத்துத் தாமரைபோல் *
திருமார்புகால்கண்கை செவ்வாயுந்தியானே. (சு)

செவ்வாயுந்தி வெண்பல்சுடர்க்குழை † தம்மோடு *
எவ்வாய்ச்சுடரும் தம்மில்முன்வளாய்க்கொள்ள *
செவ்வாய்முறுவலோடு எனதுள்ளத்திருந்த *
அவ்வாயன்றி யானறியேன்மற்றருளே. (எ)

அறியேன்மற்றருள் என்னையாளும்பிரானார் *
வெறிதேயருள்செய்வர் செய்வார்கட்குஉகந்து *
சிறியேனுடைச் சிந்தையுள்மூவுலகும் * தன்
நெறியாவயிற்றிற்கொண்டு நின்றொழிந்தாரே. (அ)

வயிற்றிற்கொண்டு நின்றொழிந்தாரும்யவரும் *
வயிற்றிற்கொண்டுநின்று ஒருமூவுலகும் * தம்
வயிற்றிற்கொண்டு நின்றவண்ணம்நின்றமாலை *
வயிற்றிற்கொண்டு மன்னவைத்தேன்மதியாலே. (கூ)

வைத்தேன்மதியால் எனதுள்ளத்தகத்தே *
எய்த்தேயொழிவேனல்லேன் என்றுமெப்போதும் *
மொய்த்தேய்திரை மோதுதண்பாற்கடலுளால் *
பைத்தேய்சுடர்ப் பாம்பணைநம்பரனையே. (க0)

↓↓ சுடர்ப்பாம்பணைநம்பரனைத் திருமாலை *
அடிச்சேர்வகை வண்குருகூர்ச்சடகோபன் *
முடிப்பான்சொன்னவாயிரத்து இப்பத்தும்சன்மம்
விட * தேய்ந்தறநோக்கும் தன்கண்கள்சிவந்தே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

அ - ஆந் திருவாய்மொழி—கண்கள்சிவந்து.

[தனது கலவியை நிரந்தரம்பெறத்தக்க ஆத்மஸ்வரூப வைலக்ஷண்யத்தை எம்பெருமான் காட்ட, ஆழ்வார் அதனைப்பேசுதல்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - தக்கேசி; தாளம் - ஏழொத்து. பைரவிராகம் - ஆதிதாளம்.

↓↓ கண்கள்சிவந்துபெரியவாய் வாயும்சிவந்துகனிந்து * உள்ளே
வெண்பலிலகுசுடரிலகு விலகுமகரகுண்டலத்தன் *
கொண்டல்வண்ணன்சுடர்முடியன் நான்குதோளன் ‡ குனிசார்ங்கன் *
ஒண்சங்கதைவாளாழியான் ஒருவனடியேனுள்ளானே. (க)

† 'தன்னோடு' என்று வழங்குவர். ‡ 'குனிசார்ங்கம்' என்பதும் பாடம்.

அடியேனுள்ளானுடலுள்ளான் அண்டத்தகத்தான்புறத்துள்ளான் *
படியேயிதுவென்றுரைக்கலாம்படியனல்லன் பரம்பரன் *
கடிசேர்நாற்றத்துள்ளாலை இன்பத்துன்பக்கழிநேர்மை *
ஒடியாவின்பப்பெருமையோன் உணர்விலும்பரொருவனே. (உ)

உணர்விலும்பரொருவனை அவனதருளாலுறற்பொருட்டு * என்
உணர்வினுள்ளேயிருத்தினேன் அதுவுமவனதின்னருளே *
உணர்வுமுயிருமுடம்பும் மற்றுலப்பிலனவும்பழுதேயாம் *
உணர்வைப்பெறவூர்ந்திறவேறி யானும்தானாயொழிந்தானே. (ங)

யானும்தானாயொழிந்தானை யாதும்யவர்க்கும்முன்னோனை *
தானும்சிவனும்பிரமனுமாகிப் பணைத்ததனிமுதலை *
தேனும்பாலும்கன்னலும் அமுதுமாகித்தித்தித்து * என்
ஊனிலுயிரிலுணர்வினில் நின்றவொன்றையுணர்ந்தேனே. (ச)

நின்றவொன்றையுணர்ந்தேனுக்கு அதனுள்நேர்மையதுவிதுவென்று *
ஒன்றுமொருவர்க்குணரலாகாது உணர்ந்தும்மேலுங்காண்பரிது *
சென்றுசென்றுபரம்பரமாய் யாதுமின்றித்தேய்ந்தற்று *
நன்றுதீதென்றறிவரிதாய் நன்றாய்ஞானங்கடந்ததே. (ரு)

நன்றாய்ஞானங்கடந்துபோய் நல்லிந்திரியமெல்லாமீர்த்து *
ஒன்றாய்க்கிடந்தவரும்பெரும்பாழுலப்பிலதனை யுணர்ந்துணர்ந்து *
சென்றாங்கின்பதுன்பங்கள் செற்றுக்களைந்துபசையற்றால் *
அன்றேயப்போதேவீடு அதுவேவீடுவீடாமே. (சா)

அதுவேவீடு வீடுபேற்றின்பந்தானுமதுதேறி *
எதுவேதானும்பற்றின்றி யாதுமிலிகளாகிற்கில் *
அதுவேவீடு வீடுபேற்றின்பந்தானும்அதுதேறாது *
எதுவேவீடு? எதுஇன்பம்? என்றெய்த்தார் எய்த்தாரெய்த்தாரே. (எ)

எய்த்தாரெய்த்தாரெய்த்தாரென்று இல்லத்தாரும்புறத்தாரும்
மொய்த்து * ஆங்கலறிமுயங்கத் தாம்போகும்போது * உன்மத்தர்போல்
பித்தேயேறியநுராகம்பொழியும்போது எம்பெம்மானோடு
ஒத்தேசென்று * அங்குள்ளங்கூடக்கூடிற்றாகில் நல்லுறைப்பே. (அ)

கூடிற்றாகில்நல்லுறைப்புக் கூடாமையைக்கூடினால் *
ஆடற்பறவையுயர்கொடி எம்மாயனாவததுவதுவே *
† வீடைப்பண்ணியொருபரிசே எதிர்வும்நிகழ்வும்கழிவுமாய் *
ஓடித்திரியும்யோகிகளும் உளரும்இல்லையல்லரே. (கூ)

---

† 'வீட்டைப்பண்ணி' என்று மிகாதுவந்தது எதுகையம்பற்றி.

உளருமில்லையல்லராய் உளராயில்லையாகியே *
உளரெம்மொருவரவர்வந்து என்னுள்ளத்துள்ளேயுறைகின்றார் *
வளரும்பிறையுந்தேய்பிறையும்போல அசைவுமாக்கமும் *
வளரும்சுடருமிருளும்போல் தெருளும்மருளும்மாய்த்தோமே. (கo)

↓↓ தெருளும்மருளும்மாய்த்துத் தன்திருந்துசெம்பொற்கழலடிக்கீழ்*
அருளியிருத்துமம்மானும் அயனும்சிவனும் * திருமாலால்
அருளப்பட்டசடகோபன் ஓராயிரத்துள்இப்பத்தால் *
அருளியடிக்கீழிருத்தும் † நம்மண்ணல்கருமாணிக்கமே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

கூ - ஆந் திருவாய்மொழி—கருமாணிக்கம்.

[ஆழ்வார் தமதுஅநந்யார்ஹசேஷத்வத்தை, தோழி மணவிலக்குக்காகத் தாய்மாரோடு கூறும் பாசுரத்தாலே அருளிச்செய்தல்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - தக்கேசி, தாளம் - ஏழொத்து. ஸ்ரீராகம், ஆதிதாளம்.

↓↓ கருமாணிக்கமலைமேல் மணித்தடம்தாமரைக்காடுகள்போல் *
திருமார்வுவாய்கண்கை உந்திகாலுடையாடைகள்செய்யபிரான் *
திருமாலெம்மான்செழுநீர்வயல் குட்டநாட்டுத்திருப்புலியூர் *
அருமாயன்பேரன்றிப்பேச்சிலள் அன்னைமீர்!இதற்கென்செய்கேனோ?

அன்னைமீர் ! இதற்கென்செய்கேன் ? அணிமேருவின்மீதுலவும் *
துன்னுசூழ்சுடர்ஞாயிறும் அன்றியும்பல்சுடர்களும்போல் *
மின்னுநீள்முடியாரம் பல்கலன்தானுடையெம்பெருமான் *
புன்னையம்பொழில்சூழ் திருப்புலியூர்புகழுமிவளே. (உ)

புகழுமிவள்நின்றிராப்பகல் பொருநீர்க்கடல்தீப்பட்டு * எங்கும்
திகழுமெரியொடுசெல்வதொப்பச் செழுங்கதிராழிமுதல் *
புகழும்பொருபடையேந்திப் போர்புக்கசுரரைப்பொன்றுவித்தான் *
திகழுமணிநெடுமாடநீடு திருப்புலியூர்வளமே. (ங)

ஊர்வளங்கிளர்சோலையும் கரும்பும்பெருஞ்செந்நெலும்சூழ்ந்து *
ஏர்வளங்கிளர்தண்பணைக் குட்டநாட்டுத்திருப்புலியூர் *
சீர்வளங்கிளர்மூவுலகுண்டுமிழ் தேவபிரான் *
பேர்வளங்கிளர்ந்தன்றிப்பேச்சிலள் இன்றுஇப்புனையிழையே. (௪)

† 'எம்மண்ணல்' என்பதும் பாடம்.

புனையிழைகளணிவும் ஆடையுடையும்புதுக்கணிப்பும் *
நினையும்நீர்மையதன்றிவட்கிது நின்றுநினைக்கப்புக்கால் *
சுனையினுள்தடந்தாமரை மலரும்தண்திருப்புலியூர் *
முனைவன்மூவுலகாளி அப்பன் திருவருள்மூழ்கினளே. (ரு)

திருவருள்மூழ்கிவைகலும் செழுநீர்நிறக்கண்ணபிரான் *
திருவருள்களும்சேர்ந்தமைக்கு அடையாளம்திருந்தவுள *
திருவருளருளால் அவன்சென்றுசேர் தண்திருப்புலியூர் *
திருவருள்கமுகொண்பழத்தது மெல்லியல்செவ்விதழே. (சு)

மெல்லிலைச்செல்வவண்கொடிப்புல்க வீங்கிளந்தாள்கமுகின் *
மல்லிலைமடல்வாழைஈன்கனிசூழ்ந்து மணங்கமழ்ந்து *
புல்லிலைத்தெங்கினூடு காலுலவும்தண்திருப்புலியூர் *
மல்லலஞ்செல்வக்கண்ணன் தாளடைந்தாள் இம்மடவரலே. (எ)

மடவரலன்னைமீர்கட்கு என்சொல்லிச்சொல்லுகேன் ?*மல்லைச்செல்வ
வடமொழிமறைவாணர் வேள்வியுள்நெய்யழல்வான்புகைபோய் *
திடவிசும்பிலமரர்நாட்டைமறைக்கும் தண்திருப்புலியூர் *
படவரவணையான்தன்நாமமல்லால் பரவாளிவளே. (அ)

பரவாளிவள்நின்றிராப்பகல் பனிநீர்நிறக்கண்ணபிரான் *
† விரவாரிசைமறைவேதியரொலி வேலையின்நின்றொலிப்ப *
கரவார்தடந்தொறும்தாமரைக்கயம் தீவிகைநின்றலரும் *
புரவார்கழனிகள்சூழ் திருப்புலியூர்ப்புகழன்றிமற்றே. (கூ)

அன்றிமற்றோருபாயமென் ? இவளந்தண்துழாய்கமழ்தல் *
குன்றமாமணிமாடமாளிகைக் கோலக்குழாங்கள்மல்கி *
தென்திசைத்திலதம்புரை குட்டநாட்டுத்திருப்புலியூர் *
நின்றமாயப்பிரான்திருவருளாம் இவள்நேர்பட்டதே. (க0)

‡‡ நேர்பட்டநிறைமூவுலகுக்கும் நாயகன்தன்னடிமை *
நேர்பட்டதொண்டர்தொண்டர்தொண்டர் தொண்டன்சடகோபன் *
நேர்பட்டதமிழ்மாலை ஆயிரத்துள் ‡ இவைபத்தும் [சொல்
நேர்பட்டாரவர் * நேர்பட்டார் நெடுமாற்கடிமைசெய்யவே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

† ‘விரைவார்’ என்பதும் பாடம். ‡ ‘இவையுமோர்பத்தும்’ என்றும் பாடம்.

† ௧௦ - ஆந் திருவாய்மொழி—நெடுமாற்கடிமை.

[அநந்யார்ஹசேஷத்வத்துக்கு எல்லைநிலமான பாகவதசேஷத்வம் தமக்கு உண்மையை ஆழ்வார் பேசுதல்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - நட்டபாடை, தாளம் - ஏழொத்து. ஸஹ்யாத்ரிராகம் - அடதாளம்.

‡‡ நெடுமாற்கடிமைசெய்வேன்போல் அவனைக்கருதவஞ்சித்து *
தடுமாற்றற்றதீக்கதிகள் முற்றுந்தவிர்ந்தசதிர்நினைந்தால் *
கொடுமாவினையேன் அவனடியாரடியே கூடுமிதுவல்லால் *
விடுமாறென்பதென்? அந்தோ! வியன்மூவுலகுபெறினுமே. (௧)

வியன்மூவுலகுபெறினும் போய்த்தானேதானேயானாலும் *
புயல்மேகம்போல்திருமேனியம்மான் புனைபூங்கழலடிக்கீழ் *
சயமேயடிமைதலைநின்றார் திருத்தாள்வணங்கி * இம்மையே
பயனேயின்பம்யான்பெற்றது உறுமோபாவியேனுக்கே? (௨)

உறுமோபாவியேனுக்கு? இவ்வுலகமூன்றும்உடன்நிறைய *
சிறுமாமேனிநிமிர்த்த என்செந்தாமரைக்கண்திருக்குறளன் *
நறுமாவிரைநாள்மலரடிக்கீழ்ப் புகுதலன்றிஅவனடியார் *
சிறுமாமனிசராய்என்னையாண்டார் இங்கேதிரியவே. (௩)

இங்கேதிரிந்தேற்கிழுக்குற்றென்? இருமாநிலம்முன்னுண்டுமிழ்ந்த *
செங்கோலத்தபவளவாய்ச் செந்தாமரைக்கணென்னம்மான் *
பொங்கேழ்புகழ்கள்வாயவாய்ப் புலன்கொள்வடிவுஎன்மனத்ததாய் *
அங்கேய்மலர்கள்கையவாய் வழிபட்டோடஅருளிலே. (௪)

வழிபட்டோடஅருள்பெற்று மாயன்கோலமலரடிக்கீழ் *
சுழிபட்டோடும்சுடர்ச்சோதிவெள்ளத்து இன்புற்றிருந்தாலும் *
இழிபட்டோடும்உடலினிற்பிறந்து தன்சீர்யான்கற்று *
மொழிபட்டோடும்கவியமுதம் நுகர்ச்சியுறுமோ? முழுதுமே. (௫)

நுகர்ச்சியுறுமோ? மூவுலகின் வீடுபேறுதன்கேழில் *
புகர்ச்செம்முகத்தகளிறட்ட பொன்னாழிக்கையென்னம்மான் *
நிகர்ச்செம்பங்கியெரிவிழிகள் நீண்டஅசுரருயிரெல்லாம் *
தகர்த்துண்டுழலும்புட்பாகன் பெரியதனிமாப்புகழே. (௬)

---

† இது, கோயில்திருவாய்மொழி.

தனிமாப்புகழேஎஞ்ஞான்றும் நிற்கும்படியாத்தான்தோன்றி *
முனிமாப்பிரமமுதல்வித்தாய் உலகமூன்றும்முளைப்பித்த *
தனிமாத்தெய்வத்தளிரடிக்கீழ்ப் புகுதலன்றிஅவனடியார் *
நனிமாக்கலவியின்பமே நாளும்வாய்க்கநங்கட்கே. (எ)

நாளும்வாய்க்கநங்கட்கு நளிர்நீர்க்கடலைப்படைத்து * தன்
தாளும்தோளும்முடிகளும் சமனிலாதபலபரப்பி *
நீளும்படர்பூங்கற்பகக்காவும் நிறைபன்னியிற்றின் *
கோளுமுடையமணிமலைபோல் கிடந்தான்தமர்கள்கூட்டமே. (அ)

தமர்கள்கூட்டவல்வினையை நாசஞ்செய்யும் † சதுமூர்த்தி *
அமர்கொளாழிசங்குவாள் வில்தண்டாதிபல்படையன் *
குமரன்கோலவைங்கணைவேள்தாதை கோதிலடியார்தம் *
தமர்கள்தமர்கள்தமர்களாம் சதிரேவாய்க்கதமியேற்கே. (கூ)

வாய்க்கதமியேற்கு ஊழிதோறூழியூழி * மாகாயாம்
பூக்கொள்மேனிநான்குதோள் பொன்னாழிக்கையென்னம்மான் *
நீக்கமில்லாவடியார்தம் அடியாரடியாரடியாரெங்
கோக்கள் * அவர்க்கேகுடிகளாய்ச்செல்லும் நல்லகோட்பாடே (க0)

↓↓ நல்லகோட்பாட்டுலகங்கள் மூன்றினுள்ளும்தான்நிறைந்த *
அல்லிக்கமலக்கண்ணனை அந்தண்குருகூர்ச்சடகோபன் *
சொல்லப்பட்டஆயிரத்துள் இவையும்பத்தும்வல்லார்கள் *
நல்லபதத்தால்மனைவாழ்வர் கொண்டபெண்டிர்மக்களே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஒன்பதாம்பத்து.

ஸர்வாபேக்ஷிதங்களையும் முடித்துக்கொடுப்பதாக அருளிச்செய்த எம்பெருமானது சீலகுணங்களில் ஆழ்வார் ஆழங்கால்படுதல்.

க-ஆம் திருவாய்மொழி—கொண்டபெண்டிர்.

['ஆபாஸபந்துக்களைவிட்டு ஸர்வவிதபந்துவுமான எம்பெருமானைப் பற்றுங்கோள்' என்று ஆழ்வார் பரோபதேசஞ்செய்தல்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண்-பழந்தக்கராகம், தாளம்-ஏழொத்து. செஞ்சுருட்டிராகம் - ரூபகதாளம்.

↓↓ கொண்டபெண்டிர்மக்களுற்றார் சுற்றத்தவர்பிறரும் *
கண்டதோடுபட்டதல்லால் காதல்மற்றுயாதுமில்லை *
எண்டிசையும்கீழும்மேலும் முற்றவும்உண்டபிரான் *
தொண்டரோமாய் ‡ உய்யலல்லால் இல்லைகண்டீர்துணையே. (க)

---

† 'சதிர்மூர்த்தி' என்பது பன்னீராயிரப்படி. ‡ 'உய்யில்' என்றும் பாடம்.

துணையும்சார்வுமாகுவார்போல் சுற்றத்தவர்பிறரும் *
அணையவந்தஆக்கமுண்டேல் அட்டைகள்போற்சுவைப்பார் *
கணையொன்றாலேயேழ்மரமுமெய்த எம்கார்முகிலை *
புணையென்றுய்யப் † போகலல்லால் இல்லைகண்டீர்பொருளே. (உ)

பொருள்கையுண்டாய்ச்செல்லக்காணில் போற்றியென்றேற்றெழுவர் *
இருள்கொள் துன்பத்தின்மைகாணில் என்னே! என்பாருமில்லை *
மருள்கொள்செய்கையசுரர்மங்க வடமதுரைப்பிறந்தாற்கு *
அருள்கொளாளா ‡ யுய்யலல்லால் இல்லைகண்டீரரணே. (ங)

அரணமாவரற்றகாலைக்கு என்றென்றமைக்கப்பட்டார் *
இரணங்கொண்டதெப்பராவர் இன்றியிட்டாலுமஃதே *
வருணித்தென்னே? வடமதுரைப்பிறந்தவன்வண்புகழே *
சரணென்றுய்யப் † போகலல்லால் இல்லைகண்டீர்சதிரே. (ச)

சதுரமென்றுதம்மைத்தாமே சம்மதித்தின்மொழியார் *
மதுரபோகம்துற்றவரே வைகிமற்றொன்றுறுவர் *
அதிர்கொள்செய்கையசுரர்மங்க வடமதுரைப்பிறந்தாற்கு *
எதிர்கொளாளா ‡ யுய்யலல்லால் இல்லைகண்டீரின்பமே. (ரு)

இல்லைகண்டீரின்பமந்தோ! உள்ளதுநினையாதே *
தொல்லையார்களெத்தனைவர்? தோன்றிக்கழிந்தொழிந்தார் *
மல்லைமூதூர் வடமதுரைப்பிறந்தவன்வண்புகழே *
சொல்லியுய்யப் † போகலல்லால் மற்றொன்றில்லைசுருக்கே. (சு)

மற்றொன்றில்லைசுருங்கச்சொன்னோம் மாநிலத்தெவ்வுயிர்க்கும் *
சிற்றவேண்டாசிந்திப்பேயமையும் கண்டீர்களந்தோ! *
குற்றமன்றெங்கள்பெற்றத்தாயன் வடமதுரைப்பிறந்தான் *
குற்றமில்சீர்கற்று வைகல்வாழ்தல்கண்டீர்குணமே. (எ)

வாழ்தல்கண்டீர்குணமிதந்தோ! மாயவனடிபரவி *
போழ்துபோகவுள்ளகிற்கும் புன்மையிலாதவர்க்கு *
வாழ்துணையா வடமதுரைப்பிறந்தவன்வண்புகழே *
வீழ்துணையாப்போமிதனில் யாதுமில்லைமிக்கதே. (அ)

யாதுமில்லைமிக்கதனில் என்றென்றதுகருதி *
காதுசெய்வான்கூதைசெய்து கடைமுறைவாழ்க்கையும்போம் *
மாதுகிலின்கொடிக்கொள்மாட வடமதுரைப்பிறந்த *
தாதுசேர்தோள்கண்ணனல்லால் இல்லைகண்டீர்சரணே. (கூ)

† 'போகில்,' ‡ 'உய்யில்' என்பன - பாடபேதம்.

கண்ணனல்லாலில்லைகண்டீர் சரண் அதுநிற்கவந்து *
மண்ணின்பாரம்நீக்குதற்கே வடமதுரைப்பிறந்தான் *
திண்ணமாநும்முடைமையுண்டேல் அவனடிசேர்த்துய்ம்மினோ *
எண்ணவேண்டாநும்மதாதும் அவனன்றிமற்றில்லையே. (௧௦)

↓↓ ஆதுமில்லைமற்றவனில் என்றதுவே துணிந்து *
தாதுசேர்தோள்கண்ணனைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன *
தீதிலாதவொண்டமிழ்கள் இவையாயிரத்துள்இப்பத்தும் *
ஓதவல்லபிராக்கள் நம்மையாளுடையார்கள்பண்டே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௨-ஆந் திருவாய்மொழி—பண்டைநாளாலே.

[ஆழ்வார் எம்பெருமானைத் தமக்கு எல்லாவுறவின் காரியமும் குறைவில்லாமல் அருளுமாறு பிரார்த்தித்தல்.]

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - புறநீர்மை, தாளம்-ஒன்பதோத்து. த்வஜாவந்திராகம் - ஆதிதாளம்.

↓↓ பண்டைநாளாலேநின்திருவருளும்
பங்கயத்தாள் திருவருளும்
கொண்டு * நின்கோயில்சீய்த்துப்பல்படிகால்
குடிகுடிவழிவந்தாட்செய்யும் *
தொண்டரோர்க்கருளிச்சோதிவாய்திறந்து
உன்தாமரைக்கண்களால்நோக்காய் *
தெண்திரைப்பொருநல்தண்பணைசூழ்ந்த
திருப்புளிங்குடிக்கிடந்தானே! (௧)

குடிக்கிடந்தாக்கஞ்செய்து நின்தீர்த்த
அடிமைக்குற்றேவல்செய்து * உன்பொன்
அடிக்கடவாதேவழிவருகின்ற
அடியரோர்க்கருளி * நீயொருநாள்
படிக்களவாகநிமிர்த்த நின்பாத
பங்கயமேதலைக்கணியாய் *
கொடிக்கொள்பொன்மதிள்சூழ்குளிர்வயல்சோலைத்
திருப்புளிங்குடிக்கிடந்தானே! (௨)

கிடந்தநாள்கிடந்தாய்எத்தனைகாலம்
　　கிடத்தி? உன்திருவுடம்புஅசைய *
தொடர்ந்துகுற்றேவல்செய்து தொல்லடிமை
　　வழிவருந்தொண்டரோர்க்கருளி *
தடங்கொள்தாமரைக்கண்விழித்து
　　நீயெழுந்துஉன்தாமரைமங்கையும்நீயும் *
இடங்கொள்மூவுலகும்தொழவிருந்தருளாய்
　　திருப்புளிங்குடிக்கிடந்தானே ! (௫)

புளிங்குடிக்கிடந்துவரகுணமங்கையிருந்து
　　வைகுந்தத்துள்நின்று *
தெளிந்தவென்சிந்தையகங்கழியாதே
　　என்னையாள்வாய் ! எனக்கருளி *
நளிர்ந்தசீருலகமூன்றுடன்வியப்ப
　　நாங்கள்கூத்தாடிநின்றார்ப்ப *
பளிங்குநீர்முகிலின்பவளம்போல்
　　கனிவாய்சிவப்ப நீகாணவாராயே. (௬)

பவளம்போற்கனிவாய்சிவப்ப
　　நீகாணவந்துநின்பல்நிலாமுத்தம *
தவழ்கதிர்முறுவல்செய்து
　　நின்திருக்கண்தாமரைதயங்கநின்றருளாய் *
பவளநன்படர்க்கீழ்ச்சங்குறைபொருநல்
　　தண்திருப்புளிங்குடிக்கிடந்தாய் ! *
கவளமாகளிற்றினிடர்கெடத் தடத்துக்
　　காய்சினப்பறவையூர்ந்தானே ! (௭)

காய்சினப்பறவையூர்ந்து பொன்மலையின்
　　மீமிசைக்கார்முகில்போல *
மாசினமாலிமாலிமானென்று
　　அங்குஅவர்படக்கனன்றுமுன்னின்ற *
காய்சினவேந்தே ! கதிர்முடியானே !
　　கலிவயல்திருப்புளிங்குடியாய் ! *
காய்சினவாழிசங்குவாள்வில்
　　தண்டேந்தி எம்மிடர்கடிவானே ! (௮)

எம்பிடர்கடிந்திங்கென்னையாள்வானே !
இமையவர்தமக்குமாங்கனையாய் ! *
செம்மடல்மலருந்தாமரைப்பழனத்
தண்திருப்புளிங்குடிக்கிடந்தாய் ! *
நம்முடையடியர்கவ்வைகண்டுகந்து
நாம்களித்துளநலங்கூர *
இம்மடவுலகர்காணநீயொருநாள்
இருந்திடாய்எங்கள்கண்முகப்பே. (எ)

எங்கள்கண்முகப்பேயுலகர்களெல்லாம்
இணையடிதொழுதெழுதிறைஞ்சி *
தங்களன்பாரத்தமதுசொல்வலத்தால்
தலைத்தலைச்சிறந்துபூசிப்ப *
திங்கள்சேர்மாடத்திருப்புளிங்குடியாய் !
திருவைகுந்தத்துள்ளாய்! தேவா ! *
இங்கண்மாஞாலத்திதனுளுமொருநாள்
இருந்திடாய் வீற்றிடங்கொண்டே. (அ)

வீற்றிடங்கொண்டுவியன்கொள்மாஞாலத்து
இதனுளுமிருந்திடாய் * அடியோம்
போற்றியோவாதேகண்ணிணைகுளிரப்
புதுமலராகத்தைப்பருக *
சேற்றிளவாளைசெந்நெலூடுகளும்
செழும்பணைத்திருப்புளிங்குடியாய் ! *
கூற்றமாயசுரர்குலமுதலரிந்த
கொடுவினைப்படைகள்வல்லானே ! (௯)

கொடுவினைப்படைகள்வல்லையாய்
அமரர்க்கிடர்கெடஅசுரர்கட்கிடர்செய் *
கடுவினைநஞ்சே ! என்னுடையமுதே !
கலிவயல்திருப்புளிங்குடியாய் ! *
வடிவிணையில்லாமலர்மகள் மற்றை
நிலமகள்பிடிக்கும்மெல்லடியை *
கொடுவினையேனும்பிடிக்கநீயொருநாள்
கூவுதல்வருதல்செய்யாயே. (௧௦)

↓↓ கூவுதல்வருதல்செய்திடாயென்று
குரைகடல்கடைந்தவன்தன்னை *
மேவிநன்கமர்ந்தவியன்புனற்பொருநல்
வழுதிநாடன்சடகோபன் *
நாவியல்பாட † லாயிரத்துள்ளும்
இவையுமோர்பத்தும்வல்லார்கள் *
ஓவுதலின்றியுலகமூன்றளந்தான்
அடியிணையுள்ளத்தோர்வாரே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௩-ஆந் திருவாய்மொழி—ஓராயிரம்.

[எம்பெருமான் ஆழ்வார் அபேக்ஷித்ததையெல்லாம் தரவல்ல தனது நாராயணத்வத்தைக் காட்ட, அவர் அவன்சீலத்தில் ஈடுபட்டுக் கூறுதல்.]

கலி விருத்தம்.

பண் - நட்டபாஷை, தாளம் - ஏழொத்து. கேதாரராகம் - ஆதிதாளம்.

↓↓ ஓராயிரமாய் உலகேழளிக்கும் *
பேராயிரங்கொண்டது ஓர்பீடுடையன் *
காராயின காளநன்மேனியினன் *
நாராயணன் நங்கள்பிரானவனே. (க)

அவனேயகல்ஞாலம் படைத்திடந்தான் *
அவனேயஃதுண்டு உமிழ்ந்தானளந்தான் *
அவனேயவனும் அவனும்அவனும் *
அவனேமற்றெல்லாமும் அறிந்தனமே. (உ)

அறிந்தனவேத வரும்பொருள்நூல்கள் *
அறிந்தனகொள்க அரும்பொருளாதல் *
அறிந்தனரெல்லாம் அரியைவணங்கி *
அறிந்தனர் நோய்களறுக்கும்மருந்தே. (௩)

மருந்தே நங்கள்போகமகிழ்ச்சிக்கென்று *
பெருந்தேவர்குழாங்கள் பிதற்றும்பிரான் *
கருந்தேவனெம்மான் கண்ணன் விண்ணுலகம் *
தரும்தேவனைச் சோரேல்கண்டாய்மனமே! (௪)

---

† 'ஆயிரத்துளிவையுமோர்பத்தும்,' 'ஆயிரத்துளிவையும்பத்தும்' என்பன - பாடபேதங்கள்.

மனமே! உன்னை வல்வினையேன்இரந்து *
கனமேசொல்லினேன் இதுசோரேல்கண்டாய் *
புனமேவிய பூந்தண்துழாயலங்கல் *
இனமேதுமிலானை அடைவதுமே. (௫

அடைவதும் அணியார்மலர்மங்கைதோள் *
மிடைவதும் அசுரர்க்குவெம்போர்களே *
கடைவதும் கடலுளமுதம் * என்மனம்
உடைவதும் அவற்கேயொருங்காகவே. (௬

ஆகம்சேர் நரசிங்கமதாகி * ஓர்
ஆகம்வள்ளுகிரால் பிளந்தானுறை *
மாகவைகுந்தம் காண்பதற்கு * என்மனம்
ஏகமெண்ணும் இராப்பகலின்றியே. (௭

இன்றிப்போக இருவினையும்கெடுத்து *
ஒன்றியாக்கைபுகாமை உய்யக்கொள்வான் *
நின்றவேங்கடம் நீள்நிலத்துள்ளது *
சென்றுதேவர்கள் கைதொழுவார்களே. (௮

தொழுதுமாமலர் நீர்சுடர்தூபம்கொண்டு *
எழுதுமென்னும்இது மிகையாதலில் *
பழுதில்தொல்புகழ்ப் பாம்பணைப்பள்ளியாய்! *
தழுவுமாறறியேன் உனதாள்களே. (௯)

தாளதாமரையான் உனதுந்தியான் *
வாள்கொள்நீள்மழுவாளி உன்னாகத்தான் *
ஆளராய்த்தொழுவாரும் அமரர்கள் *
நாளும்என்புகழ்கோ உனசீலமே? (க௦)

↓↓ சீலமெல்லையிலான் அடிமேல் * அணி
கோலநீள் குருகூர்ச்சடகோபன் * சொல்
மாலையாயிரத்துள் இவைபத்தினின்
பாலர் * வைகுந்தமேறுதல் பான்மையே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

சு - ஆந் திருவாய்மொழி—மையார்.

[ஆழ்வார் எம்பெருமானைச் சங்குசக்கரங்களுடன் காணவேண்டிக் கூப்பிட்டு அங்ஙனமே பெற்றமையை உகந்து அருளிச்செய்தல்.]

கலிவிருத்தம்.

பண் - கொல்லி, தாளம் - ஏழொத்து. தந்யாசிராகம் - ருபகதாளம்.

↓↓ மையார்கருங்கண்ணி கமலமலர்மேல்
செய்யாள் * திருமார்வினில்சேர் திருமாலே! *
வெய்யார்சுடராழி சுரிசங்கமேந்தும்
கையா! * உன்னைக்காணக் கருதும்என்கண்ணே. (க)

கண்ணே! உன்னைக் காணக்கருதி * என்னெஞ்சம்
எண்ணேகொண்ட சிந்தையதாய்நின்றியம்பும் *
விண்ணோர்முனிவர்க்கு என்றும்காண்பரியாயை *
நண்ணுதொழியேன்என்று நானழைப்பனே. (உ)

அழைக்கின்றஅடிநாயேன் நாய்கூழைவாலால் *
குழைக்கின்றதுபோல என்னுள்ளம்குழையும் *
மழைக்குஅன்றுகுன்றமெடுத்து ஆநிரைகாத்தாய்! *
பிழைக்கின்றதருளென்று பேதுறுவனே. (ங)

உறுவதிதுவென்று உனக்காட்பட்டு * நின்கண்
பெறுவதெதுகொலென்று பேதையேன்நெஞ்சம் *
மறுகல்செய்யும் வானவர்தானவர்க்குஎன்றும் *
அறிவதரிய அரியாயவம்மானே! (ச)

அரியாயவம்மானை அமரர்பிரானை *
பெரியானைப் பிரமனைமுன்படைத்தானை *
வரிவாளரவினணைப் பள்ளிகொள்கின்ற *
கரியான்கழல்காணக் கருதும்கருத்தே. (ரு)

கருத்தே! உன்னைக் காணக்கருதி * என்னெஞ்சத்து
இருத்தாகஇருத்தினேன் தேவர்கட்கெல்லாம்
விருத்தா! * விளங்குஞ்சுடர்ச்சோதி உயரத்
தொருத்தா! * உன்னையுள்ளும் என்னுள்ளம்உகந்தே. (சு)

உகந்தேயுன்னை உள்ளும்என்னுள்ளத்து * அகம்பால்
அகந்தானமர்ந்தே இடங்கொண்டஅமலா! *
மிகுந்தானவன்மார்வகலம் இருகூறு
நகந்தாய் * நரசிங்கமதாயவுருவே! (எ)

உருவாகிய ஆறுசமயங்கட்கெல்லாம் *
பொருவாகிநின்றானவன் எல்லாப்பொருட்கும் *
அருவாகியஆதியைத் தேவர்கட்கெல்லாம் *
கருவாகியகண்ணனைக் கண்டுகொண்டேனே. (அ)

கண்டுகொண்டு என்கண்ணிணையாரக்களித்து *
பண்டைவினையாயின பற்றோடறுத்து *
தொண்டர்க்கமுதுண்ணச் சொல்மாலைகள்சொன்னேன் *
அண்டத்தமரர்பெருமான் அடியேனே. (௯)

அடியானிவனென்று எனக்காரருள்செய்யும்
நெடியானை * நிறைபுகழ் அஞ்சிறைப்புள்ளின்
கொடியானை * குன்றாமல் உலகமளந்த
அடியானை * அடைந்து அடியேனுய்ந்தவாறே ! (௧௦)

⸸ ஆறுமதயானை அடர்த்தவன்தன்னை *
சேறார்வயல் தென்குருகூர்ச்சடகோபன் *
நூறேசொன்ன ஓராயிரத்துள்இப்பத்தும் *
ஏறேதரும் வானவர்தமின்னுயிர்க்கே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ரு-ஆந் திருவாய்மொழி—இன்னுயிர்ச்சேவல்.

[தலைவனை நேரிற்காண ஆசைப்பட்ட தலைவி ஸ்மாரகபதார்த்தங்களால் தான்தளர்ந்தமை கூறும் பாசுரத்தாலே, தம்நிலையை ஆழ்வார் கூறுதல்.]

கலிநிலைத்துறை.

பண் - கொல்லி, தாளம் - ஏழொத்து. அஸாவேரிராகம் - ஆதிதாளம்.

⸸ இன்னுயிர்ச்சேவலும் நீரும்கூவிக்கொண்டு, இங்கெத்தனை *
என்னுயிர்நோவமிழற்றேன்மின் குயிற்பேடைகாள் ! *
என்னுயிர்க்கண்ணபிரானை நீர்வரக்கூவுகிலீர் *
என்னுயிர்கூவிக்கொடுப்பார்க்கும் இத்தனைவேண்டுமோ ? (௧)

இத்தனைவேண்டுவதன்றந்தோ ! அன்றிற்பேடைகாள் ! *
எத்தனைநீரும்நுஞ்சேவலும் கரைந்தேங்குதிர் *
வித்தகன்கோவிந்தன் மெய்யனல்லன்ஒருவர்க்கும் *
அத்தனையாம்இனி என்னுயிர்அவன்கையதே. (௨)

அவன்கையதேஎனதாருயிர் அன்றிற்பேடைகாள் ! *
எவன்சொல்லிநீர்குடைந்தாடுதிர் புடைசூழவே *
தவஞ்செய்திலா வினையாட்டியேனுயிர்இங்குண்டோ ? *
எவன்சொல்லிநிற்றும் ? நும்மெங்குக்குரல்கேட்டுமே. (௩)

கூக்குரல்கேட்டும் நங்கண்ணன்மாயன்வெளிப்படான் *
மேற்கிளைகொள்ளேன்மின் † நீரும்சேவலும்கோழிகாள் ! *
வாக்கும்மனமும்கருமமும் நமக்காங்கதே *
ஆக்கையுமாவியும் அந்தரம்நின்றுழலுமே. (௪)

அந்தரம்நின்றுழல்கின்ற யானுடைப்பூவைகாள் ! *
நுந்திறத்தேதுமிடையில்லை குழறேன்மினோ *
இந்திரஞாலங்கள்காட்டி இவ்வேழுலகும்கொண்ட *
நந்திருமார்பன் நம்மாவியுண்ணநன்கெண்ணினன். (௫)

நன்கெண்ணிநான்வளர்த்த சிறுகிளிப்பைதலே ! *
இன்குரல்நீமிழற்றேல் என்னாருயிர்க்காகுத்தன் *
நின்செய்யவாயொக்கும்வாயன் கண்ணன்கைகாலினன் *
நின்பசுஞ்சாமநிறத்தன் கூட்டுண்டுநீங்கினன். (௬)

கூட்டுண்டுநீங்கிய கோலத்தாமரைக்கண்செவ்வாய் *
வாட்டமிலென்கருமாணிக்கம் கண்ணன்மாயன்போல் *
கோட்டியவில்லொடு மின்னுமேகக்குழாங்கள்காள் ! *
காட்டேன்மின் நும்முரு என்னுயிர்க்குஅதுகாலனே. (௭)

உயிர்க்கதுகாலனென்று உம்மையானிரந்தேற்கு * நீர்
குயிற்பைதல்காள் ! கண்ணன்நாமமேகுழறிக்கொன்றீர் *
தயிர்ப்பழஞ்சோற்றொடு பாலடிசிலும்தந்து * சொல்
பயிற்றியநல்வளமூட்டினீர் பண்புடையீரே! (௮)

‡ பண்புடைவண்டொடுதும்பிகாள் ! பண்மிழற்றேன்மின் *
புண்புரைவேல்கொடு குத்தாலொக்கும்நும்இன்குரல் *
தண்பெருநீர்த்தடந்தாமரை மலர்ந்தாலொக்கும்
கண்பெருங்கண்ணன் * நம்மாவியுண்டெழுநண்ணினன். (௯)

எழுநண்ணிநாமும் நம்வானநாடனோடொன்றினோம் *
பழனநன்னாரைக்குழாங்கள்காள் ! பயின்றென்னினி ! *
இழைநல்லவாக்கையும் பையவேபுயக்கற்றது *
தழைநல்லவின்பந்தலைப்பெய்து எங்குந்தழைக்கவே. (௧௦)

---

† 'நீரும்நுஞ்சேவலும்' என்பதும் பாடம்.
‡ 'பண்புரை' என்பது ஈட்டின்பாடம்.

‡‡ இன்பந்தலைப்பெய்தெங்குந்தழைத்த பல்லூழிக்கு *
தன்புகழேத்தத் தனக்கருள்செய்தமாயனை *
தென்குருகூர்ச்சடகோபன் சொன்னவாயிரத்துள் இவை *
ஒன்பதோடொன்றுக்கும் மூவுலகுமுருகுமே. (௧௧

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௬-ஆந் திருவாய்மொழி—உருகுமால்.

[ஆழ்வார் எம்பெருமானது சீரை இன்னாப்புடன் கூறியருளுதல்.]

கலிவிருத்தம்.

பண் - நாட்டராகம், தாளம் - ஏழொத்து. கல்யாணிராகம் - ஆதிதாளம்.

‡‡ உருகுமால்நெஞ்சம் உயிரின்பரமன்றி *
பெருகுமால்வேட்கையும் என்செய்கேன்தொண்டனேன் ? *
தெருவெல்லாம்காவிகமழ் திருக்காட்கரை *
மருவியமாயன்தன் மாயம்நினைதொறே. (௧)

நினைதொறும்சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துகும் *
வினைகொள்சீர்பாடிலும் வேமெனதாருயிர் *
சுனைகொள்பூஞ்சோலைத் தென்காட்கரையென்னப்பா ! *
நினைகிலேன்நான் உனக்காட்செய்யும்நீர்மையே. (௨)

நீர்மையால்நெஞ்சம் வஞ்சித்துப்புகுந்து * என்னை
ஈர்மைசெய்து என்னுயிராய்என்னுயிருண்டான் *
சீர்மல்குசோலைத் தென்காட்கரையென்னப்பன் *
கார்முகில்வண்ணன்தன் கள்வமறிகிலேன். (௩)

அறிகிலேன் தன்னுள் அனைத்துலகும்நிற்க *
நெறிமையால்தானும் அவற்றுள்நிற்கும்பிரான் *
வெறிகமழ்சோலைத் தென்காட்கரையென்னப்பன் *
சிறியவென்னாருயிருண்ட திருவருளே. (௪)

திருவருள்செய்பவன்போல என்னுள்புகுந்து *
உருவமுமாருயிரும் உடனேயுண்டான் *
திருவளர்சோலைத் தென்காட்கரையென்னப்பன் *
கருவளர்மேனி † நங்கண்ணன்கள்வங்களே. (௫)

---

† 'என்கண்கள்' என்றும் பாடம்.

என்கண்ணன்கள்வம் எனக்குச்செம்மாய்நிற்கும் *
அங்கண்ணனுண்ட என்னாருயிர்க்கோதிது *
புன்கண்மையெய்திப் புலம்பியிராப்பகல் *
என்கண்ணனென்று அவன்காட்கரையேத்துமே. (௬)

காட்கரையேத்தும் அதனுள்கண்ணா! என்னும் *
வேட்கைநோய்கூர நினைந்துகரைந்துகும் *
ஆட்கொள்வானொத்து என்னுயிருண்டமாயனால் *
கோட்குறைபட்டது என்னாருயிர்கோளுண்டே. (௭)

கோளுண்டானன்றிவந்து என்னுயிர்தானுண்டான் *
நாளுநாள்வந்து என்னைமுற்றவும்தானுண்டான் *
காளநீர்மேகத் தென்காட்கரையென்னப்பற்கு *
ஆளன்றேபட்டது என்னாருயிர்பட்டதே. (௮)

ஆருயிர்பட்டது எனதுயிர்பட்டது? *
பேரிதழ்த்தாமரைக்கண் கனிவாயது * ஓர்
காரெழில்மேகத் தென்காட்கரைகோயில்கொள் *
சீரெழில்நால்தடந்தோள் தெய்வவாரிக்கே. (௯)

வாரிக்கொண்டு உன்னைவிழுங்குவன்காணிலென்று *
ஆர்வுற்ற என்னையொழிய என்னின்முன்னம்
பாரித்து * தானென்னை முற்றப்பருகினான் *
காரொக்கும் காட்கரையப்பன்கடியனே. (௧0)

↓↓ கடியனாய்க் கஞ்சனைக்கொன்றபிரான்தன்னை *
கொடிமதிள்தென்குருகூர்ச் சடகோபன்சொல் *
வடிவமையாயிரத்து இப்பத்தினால் * சன்மம்
முடிவெய்தி நாசங்கண்டீர்களெங்கானலே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எ - ஆந் திருவாய்மொழி - எங்கானல்.

[எம்பெருமானது வடிவழகே பற்றாசாகத் தலைவி திருமூழிக்களத்தே பறவைகளைத் தூதுவிடுவதாகக் கூறும் பாசுரம்.]

தரவுகொச்சகக்கலிப்பா.

பண் - நாட்டராகம், தாளம் - ஏழொத்து. கண்டராகம் - ஆதிதாளம்.

↓↓ எங்கானலகங்கழிவாய் இரைதேர்ந்திங்கினிதமரும் *
செங்காலமடநாராய்! திருமூழிக்களத்துறையும் *
கொங்கார்பூந்துழாய்முடி எங்குடக்கூத்தர்க்கு என்தூதாய் *
நுங்கால்களென்தலைமேல் கெழுமீரோநுமரோடே. (௧)

நமரோவெம்பெருமானேன் றோதார் நீரும்நம்சேவலுமாய் *
அமர்காதற்குருகினங்காள் ! அணிமூழிக்களத்துறையும் *
எமராலும்பழிப்புண்டு இங்குஎன் ? தம்மாலிழிப்புண்டு *
தமரோடங்குறைவார்க்குத் தக்கிலமே ? கேளீரே. (௨)

தக்கிலமே ? கேளீர்கள் தடம்புனல்வாயிரைதேரும் *
கொக்கினங்காள்!குருகினங்காள்!குளிர்மூழிக்களத்துறையும் *
செக்கமலத்தலர்போலும் கண்கைகால்செங்கனிவாய் *
அக்கமலத்திலைபோலும் திருமேனியடிகளுக்கே. (௩)

திருமேனியடிகளுக்குத் தீவினையேன்விடுதூதாய் *
திருமூழிக்களமென்னும் செழுநகர்வாயணிமுகில்காள்! *
திருமேனியவட்கருளீர் என்றக்கால் * உம்மைத்தன்
திருமேனியொளியகற்றித் தெளிவிசும்புகடியுமே ? (௪)

தெளிவிசும்புகடிதோடித் தீவளைத்துமின்னிலகும் *
ஒளிமுகில்காள் ! திருமூழிக்களத்துறையுமொண்சுடர்க்கு *
தெளிவிசும்புதிருநாடாத் தீவினையேன்மனத்துறையும் *
துளிவார்கட்குழலார்க்கு என்தூதுரைத்தல்செப்புமினே. (௫)

தூதுரைத்தல்செப்புமின்கள் தூமொழிவாய்வண்டினங்காள் ! *
போதிரைத்துமதுநுகரும் பொழில்மூழிக்களத்துறையும் *
மாதரைத்தம்மார்வகத்தே வைத்தார்க்கு, என்வாய்மாற்றம் *
தூதுரைத்தல்செப்புதிரேல் சுடர்வளையும்கலையுமே. (௬)

சுடர்வளையும்கலையும்கொண்டு அருவினையேன்தோள்துறந்த *
படர்புகழான் திருமூழிக்களத்துறையும்பங்கயக்கண் *
சுடர்பவளவாயனைக்கண்டு ஒருநாளோர்தூய்மாற்றம் *
படர்பொழில்வாய்க்குருகினங்காள் ! எனக்கொன்றுபணியீரே.

எனக்கொன்றுபணியீர்கள் இரும்பொழில்வாயிரைதேர்ந்து *
மனக்கின்பம்படமேவும் வண்டினங்காள் ! தும்பிகாள் ! *
கனக்கொள்திண்மதிள் புடைசூழ் திருமூழிக்களத்துறையும் *
புனக்கொள்காயாமேனிப் பூந்துழாய்முடியார்க்கே. (௮)

பூந்துழாய்முடியார்க்குப் பொன்னாழிக்கையாருக்கு *
ஏந்துநீரிளங்குருகே ! திருமூழிக்களத்தாருக்கு *
ஏந்துபூண்முலைபயந்து என்னிணைமலர்க்கண்நீர்ததும்ப *
தாம்தம்மைக்கொண்டகல்தல் தகவன்றென்றுரையீரே. (௯)

தகவன்றென்றுரையீர்கள் தடம்புனல்வாயிரைதேர்ந்து *
மிகவின்பம்படமேவும் மென்னடையவன்னங்காள் ! *
மிகமேனிமெலிவெய்தி மேகலையும்ஈடழிந்து * என்
அகமேனியொழியாமே திருமூழிக்களத்தார்க்கே. (கo)

↓↓ ஒழிவின்றித்திருமூழிக்களத்துறையும் ஒண்சுடரை *
ஒழிவில்லாவணிமழலைக் கிளிமொழியாளலற்றியசொல் *
வழுவில்லாவண்குருகூர்ச் சடகோபன்வாய்ந்துரைத்த *
அழிவில்லாவாயிரத்து இப்பத்துநோயறுக்குமே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

அ - ஆம் திருவாய்மொழி—அறுக்கும்வினை.

[எம்பெருமான் வரக்காணாமையாலே தலைவி தலைவனது நகரான திருநாவாயிற் செல்ல நினைந்தமை கூறும் முகத்தால் ஆழ்வார் தமது ப்ராப்யத்வரையைத் தெரிவித்தல்.]

கலிவிருத்தம்.

பண் - கொல்லி, தாளம் - இடையொத்து, ஸாவேரிராகம் - ஆதிதாளம்.

↓↓ அறுக்கும்வினையாயின ஆகத்தவனை *
நிறுத்தும்மனத்தொன்றிய சிந்தையினார்க்கு *
வெறித்தண்மலர்ச்சோலைகள்சூழ் திருநாவாய் *
குறுக்கும்வகையுண்டுகொலோ ? கொடியேற்கே. (க)

கொடியேற்கிடைக் கோகனகத்தவள்கேள்வன் *
வடிவேல்தடங்கண் மடப்பின்னைமணாளன் *
நெடியானுறைசோலைகள்சூழ் திருநாவாய் *
அடியேனணுகப்பெறுநாள் எவைகொலோ ? (உ)

எவைகொல்அணுகப்பெறுநாள் ? என்று எப்போதும் *
கவையில்மனமின்றிக் கண்ணீர்கள்கலுழ்வன் *
நவையில்திருநாரணன்சேர் திருநாவாய் *
அவையுள்புகலாவதோர்நாளறியேனே. (ங)

நாளேலறியேன் எனக்குள்ளன * நானும்
மீளாவடிமைப்பணி செய்யப்புகுந்தேன் *
நீளார்மலர்ச்சோலைகள்சூழ் திருநாவாய் *
வாளேய்தடங்கண் மடப்பின்னைமணாளா! (ச)

மண்ணாளன்மலர்மங்கைக்கும் மண்மடந்தைக்கும் *
கண்ணாளன் உலகத்துயிர்தேவர்க்கெல்லாம் *
விண்ணாளன்விரும்பியுறையும் திருநாவாய் *
கண்ணாரக்களிக்கின்றது இங்குஎன்றுகொல்கண்டே ? (ரு

கண்டேகளிக்கின்றது இங்குஎன்றுகொல் ? கண்கள் *
தொண்டேயுனக்காய்ஒழிந்தேன் துரிசின்றி *
வண்டார்மலர்ச்சோலைகள் சூழ் திருநாவாய் *
கொண்டேயுறைகின்ற எங்கோவலர்கோவே ! (சு

கோவாகியமாவலியை நிலங்கொண்டாய் ! *
தேவாசுரம்செற்றவனே ! திருமாலே ! *
நாவாயுறைகின்ற என்நாரணநம்பீ ! *
ஆவா ! அடியான் இவனென்றுஅருளாயே. (எ

அருளாதொழிவாய் அருள்செய்து * அடியேனைப்
பொருளாக்கி உன்பொன்னடிக்கீழ்ப்புகவைப்பாய் *
மருளேயின்றி உன்னை என்னெஞ்சத்திருத்தும் *
தெருளேதரு தென்திருநாவாயென்தேவே ! (அ

தேவர்முனிவர்க்கு என்றும்காண்டற்கரியன் *
மூவர்முதல்வன் ஒருமூவுலகாளி *
தேவன்விரும்பியுறையும் திருநாவாய் *
யாவரணுகப்பெறுவார் ? இனியந்தோ ! (கூ

அந்தோ ! அணுகப்பெறுநாள்என்று எப்போதும் *
சிந்தைகலங்கித் திருமாலென்றழைப்பன் *
கொந்தார்மலர்ச்சோலைகள்சூழ் திருநாவாய் *
வந்தேயுறைகின்ற எம்மாமணிவண்ணா ! (க0

வண்ணம்மணிமாட நல்நாவாயுள்ளானை *
திண்ணம்மதிள் தென்குருகூர்ச்சடகோபன் *
பண்ணார்தமிழ் ஆயிரத்துஇப்பத்தும்வல்லார் *
மண்ணாண்டு மணங்கமழ்வர்மல்லிகையே. (கக

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௯-ஆந் திருவாய்மொழி—மல்லிகை.

[தலைவி தனதுஆற்றாமையால் வருந்தியதைக் கூறும் பாசுரத்தாலே, தமதுதன்மையை ஆழ்வார் தெரிவித்தல்.]

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - பஞ்சமம், தாளம் - ஏழொத்து. சங்கராபரணராகம் - ரூபகதாளம்.

↓↓ மல்லிகைகமழ்தென்றலீருமாலோ !
வண்குறிஞ்சியிசைதவழுமாலோ ! *
செல்கதிர்மாலையும்மயக்குமாலோ !
செக்கர்நன்மேகங்கள்சிதைக்குமாலோ ! *
அல்லியந்தாமரைக்கண்ணனெம்மான்
ஆயர்களேறரியேறெம்மாயோன் *
புல்லியமுலைகளுந்தோளுங்கொண்டு
புகலிடமறிகிலந்தமியமாலோ ! (க)

புகலிடமறிகிலந்தமியமாலோ !
புலம்புறுமணிதென்றலாம்பலாலோ! *
பகலடுமாலைவண்சாந்தமாலோ !
பஞ்சமம்முல்லைதண்வாடையாலோ ! *
அகலிடம்படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்து
எங்குமளிக்கின்றவாயன்மாயோன் *
இகலிடத்தசுரர்கள்கூற்றம்வாரான்
இனியிருந்தென்னுயிர்காக்குமாறென் ? (உ)

இனியிருந்தென்னுயிர்காக்குமாறென் ?
இணைமுலைநமுகநுண்ணிடைநுடங்க *
துனியிருங்கலவிசெய்தாகந்தோய்ந்து
துறந்தெம்மையிட்டகல்கண்ணன்கள்வன் *
தனியிளஞ்சிங்கமெம்மாயன்வாரான்
தாமரைக்கண்ணுஞ்செவ்வாயும் * நீலப்
பனியிருங்குழல்களுநான்குதோளும்
பாவியேன்மனத்தேநின்றீருமாலோ ! (௩)

பாவியேன்மனத்தேநின்றீருமாலோ !
வாடைதண்வாடைவெவ்வாடையாலோ ! *
மேவுதண்மதியம்வெம்மதியமாலோ !
மென்மலர்ப்பள்ளிவெம்பள்ளியாலோ ! *

தூவியம்புள்ளுடைத்தெய்வவண்டு
  துதைந்த எம்பெண்மையம்பூவிதாலோ! *
ஆவியின்பரமல்லவகைகளாலோ!
  யாமுடைநெஞ்சமும்துணையன்றாலோ! (௪)

யாமுடைநெஞ்சமும்துணையன்றாலோ!
  ஆபுகுமாலையுமாகின்றாலோ! *
யாமுடையாயன்தன்மனம்கல்லாலோ!
  அவனுடைத்தீங்குழலீருமாலோ! *
யாமுடைத்துணையென்னும்தோழிமாரும்
  எம்மின்முன் அவனுக்குமாய்வராலோ! *
யாமுடையாருயிர்காக்குமாறென்?
  அவனுடையருள்பெறும்போதரிதே. (௫)

அவனுடையருள்பெறும்போதரிதால்
  அவ்வருளல்லனவருளுமல்ல *
அவனருள்பெறுமளவாவிநில்லாது
  அடுபகல்மாலையும்நெஞ்சும்காணேன் *
சிவனொடுபிரமன்வண்திருமடந்தை
  சேர்திருவாகம்எம்மாவியீரும் *
எவனினிப்புகுமிடம்? எவன்செய்கேனோ?
  ஆருக்கென்சொல்லுகேன்? அன்னைமீர்காள்! (௬)

ஆருக்கென்சொல்லுகேன்? அன்னைமீர்காள்!
  ஆருயிரளவன்றுஇக்கூர்தண்வாடை *
காரொக்கும்மேனிநங்கண்ணன்கள்வம்
  கவர்ந்தவத்தனிநெஞ்சமவன்கணஃதே *
சீருற்றஅகிற்புகையாழ்நரம்பு
  பஞ்சமம்தண்பசுஞ்சாந்தணைந்து *
போருற்றவாடைதண்மல்லிகைப்பூப்
  புதுமணம்முகந்துகொண்டெறியுமாலோ! (௭)

புதுமணம்முகந்துகொண்டெறியுமாலோ!
  பொங்கிளவாடைபுன்செக்கராலோ! *
அதுமணந்தகன்றநங்கண்ணன்கள்வம்
  கண்ணனிற்கொடிது இனியதனிலும்பர் *

மதுமணமல்லிகைமந்தக்கோவை
வண்பசுஞ்சாந்தினிற்பஞ்சமம்வைத்து *
அதுமணந்தின்னருளாய்ச்சியர்க்கே
ஊதுமத்தீங்குழற்கேஉய்யேன்நான். (அ)

ஊதுமத்தீங்குழற்கேஉய்யேன்நான்
அதுமொழிந்திடையிடைத்தன்செய்கோல *
தூதுசெய்கண்கள்கொண்டொன்றுபேசித்
தூமொழியிசைகள்கொண்டொன்றுநோக்கி *
பேதுறுமுகஞ்செய்துநொந்துநொந்து
பேதைநெஞ்சறவறப்பாடும்பாட்டை *
யாதுமொன்றறிகிலம்அம்ம! அம்ம!
மாலையும்வந்ததுமாயன்வாரான். (௯)

மாலையும்வந்ததுமாயன்வாரான்
மாமணிபுலம்பவல்லேறணைந்த *
கோலநன்னாகுகளுகளுமாலோ
கொடியனகுழல்களும்குழறுமாலோ! *
வாலொளிவளர்முல்லைகருமுகைகள்
மல்லிகையலம்பிவண்டாலுமாலோ! *
வேலையும்விசும்பில்விண்டலறுமாலோ!
என்சொல்லிஉய்வன்இங்குஅவனைவிட்டே? (௰)

↓↓ அவனைவிட்டகன்றுயிராற்றகில்லா
அணியிழையாய்ச்சியர்மாலைப்பூசல் *
அவனைவிட்டகல்வதற்கேயிரங்கி
அணிகுருகூர்ச்சடகோபன்மாறன் *
அவனியுண்டுமிழ்ந்தவன்மேலுரைத்த
ஆயிரத்துள்இவைபத்தும்கொண்டு *
அவனியுளலற்றிநின்றுய்ம்மின்தொண்டீர்!
அச்சொன்னமாலைநண்ணித்தொழுதே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

† கo - ஆந் திருவாய்மொழி—மாலைநண்ணி.

[எம்பெருமான் அவஸாநத்தில் விரும்பியபடி யாவும்சித்திக்குமென்று ஆழ்வார்க்கு அருள, அவர் உவந்து, திருக்கண்ணபுரத்திலே சென்று அவனைச் சேருமாறு பரோபதேசஞ் செய்தல்.]

கலிவிருத்தம்.

பண்-நட்டபாஷை,தாளம்-ஒன்பதோத்து. கேதாரகௌளராகம்-ஆதிதாளம்.

↓↓ மாலைநண்ணித் தொழுதெழுமினோவினைகெட *
காலைமாலை கமலமலரிட்டுநீர் *
வேலைமோதும்மதிள்சூழ் திருக்கண்ணபுரத்து *
ஆலின்மேலால்அமர்ந்தான் அடியிணைகளே. (க)

கள்ளவிழும்மலரிட்டு நீரிறைஞ்சுமின் *
நள்ளிசேரும்வயல்சூழ் கிடங்கின்புடை *
வெள்ளியேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரம்
உள்ளி * நாளும்தொழுதெழுமினோ தொண்டரே! (உ)

தொண்டர்! நுந்தம்துயர்போகநீரேகமாய் *
விண்டுவாடாமலரிட்டு நீரிறைஞ்சுமின் *
வண்டுபாடும்பொழில்சூழ் திருக்கண்ணபுரத்து
அண்டவாணன் * அமரர்பெருமானையே. (ங)

மானைநோக்கி மடப்பின்னைதன்கேள்வனை *
தேனைவாடாமலரிட்டு நீரிறைஞ்சுமின் *
வானையுந்தும்மதிள்சூழ் திருக்கண்ணபுரம் *
தான்நயந்தபெருமான் சரணாகுமே. (ச)

சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம் *
மரணமானால் வைகுந்தம்கொடுக்கும்பிரான் *
அரணமைந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரத்
தரணியாளன் * தனதன்பர்க்கன்பாகுமே. (ரு)

அன்பனாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம் *
செம்பொனாகத்து அவுணனுடல்கீண்டவன் *
நன்பொனேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரத்
தன்பன் * நாளும்தனமெய்யர்க்குமெய்யனே. (சு)

---

† இது, கோயில்திருவாய்மொழி.

மெய்யனாகும் விரும்பித்தொழுவார்க்கெல்லாம் *
பொய்யனாகும் புறமேதொழுவார்க்கெல்லாம் *
செய்யில்வாளையுகளும் திருக்கண்ணபுரத்து
ஐயன் * ஆகத்தணைப்பார்கட்கு அணியனே. (௭)

அணியனாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம் *
பிணியும்சாரா பிறவிகெடுத்தாளும் *
மணிபொன்னேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரம்
பணிமின் * நாளும்பரமேட்டிதன்பாதமே. (௮)

பாதம்நாளும்பணியத் தணியும்பிணி *
ஏதம்சாரா எனக்கேலினியென்குறை ? *
வேதநாவர்விரும்பும் திருக்கண்ணபுரத்து
ஆதியானை * அடைந்தார்க்கு அல்லலில்லையே. (௯)

இல்லையல்லல் எனக்கேலினியென்குறை ? *
அல்லிமாதரமரும் திருமார்பினன் *
கல்லிலேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரம்
சொல்ல * நாளும் துயர்பாடுசாராவே. (௧௦)

↓↓ பாடுசாராவினை பற்றறவேண்டுவீர் ! *
மாடநீடு குருகூர்ச்சடகோபன் * சொல்
பாடலானதமிழ் † ஆயிரத்துள்இப்பத்தும்
பாடியாடி * பணிமின் அவன் ‡ தாள்களே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

† 'ஆயிரத்து இப்பத்தும்' என்றும் பாடம்.
‡ 'தாள்களையே' என்றும் பாடம்.

பத்தாம்பத்து

எம்பெருமான் ஆழ்வார்க்கு அர்ச்சிராதிகதியைக் காட்டி இவரது அபேக்ஷிதங்களைத் தலைக்கட்டுதல்.

க - ஆந் திருவாய்மொழி—தாளதாமரை.

[அடைந்தார்க்குத் தானே துணையாகின்ற திருமோகூர்க் காளமேகப் பெருமாளைச் சரணமடைந்து ஆழ்வார் தாம் பிறவித்துயரொழிந்து பரமபதமடையக் கருதியதை அருளிச்செய்தல்.]

கலிநிலைத்துறை.

பண் - இந்தளம், தாளம் - ஏழொத்து. மைராகம் · ரூபகதாளம்.

↓↓ தாளதாமரைத் தடமணிவயல்திருமோகூர் *
நாளும்மேவிநன்கமர்ந்துநின்று அசுரரைத்தகர்க்கும் *
தோளும்நான்குடைச் சுரிகுழல்கமலக்கண்கனிவாய் *
காளமேகத்தையன்றி மற்றொன்றிலம்கதியே. (க)

இலம்கதிமற்றொன்றெம்மைக்கும் ஈன்தண்துழாயின் *
அலங்கலங்கண்ணி ஆயிரம்பேருடையம்மான் *
நலங்கொள்நான்மறைவாணர்கள்வாழ் திருமோகூர் *
நலங்கழலவனடிநிழல் தடமன்றியாமே. (உ)

அன்றியாமொருபுகலிடம்இலம் என்றென்றலற்றி *
நின்றுநான்முகனரனொடு தேவர்கள்நாட *
வென்றுஇம்மூவுலகளித்து உழல்வான்திருமோகூர் *
நன்றுநாமினிநணுகுதும் நமதிடர்கெடவே. (௩)

இடர்கெடஎம்மைப்போந்தளியாய் என்றென்றேத்தி *
சுடர்கொள்சோதியைத் தேவரும்முனிவரும்தொடர *
படர்கொள்பாம்பணைப் பள்ளிகொள்வான்திருமோகூர் *
இடர்கெடஅடிபரவுதும் தொண்டீர் ! வம்மினே. (௪)

தொண்டீர் ! வம்மின் நம்சுடரொளியொருதனிமுதல்வன் *
அண்டமூவுலகளந்தவன் அணிதிருமோகூர் *
எண்திசையுமீன்கரும்பொடு பெருஞ்செந்நெல்விளைய *
கொண்டகோயிலைவலஞ்செய்து இங்காடுதும்கூத்தே. (௫)

கூத்தன்கோவலன் குதற்றுவல்லசுரர்கள்கூற்றம் *
ஏத்தும்நங்கட்கும் அமரர்க்கும்முனிவர்க்குமின்பன் *
வாய்த்ததண்பணைவளவயல்சூழ் திருமோகூர்
ஆத்தன் * தாமரையடியன்றி மற்றிலம்அரணே. (சு)

மற்றிலம்அரண் வான்பெரும்பாழ்தனிமுதலா *
சுற்றும்நீர்படைத்து அதன்வழித்தொல்முனிமுதலா *
முற்றுந்தேவரோடு உலகுசெய்வான் திருமோகூர் *
சுற்றிநாம்வலஞ்செய்ய நம்துயர்கெடும்கடிதே. (எ)

துயர்கெடும்கடிதடைந்துவந்து அடியவர்! தொழுமின் *
உயர்கொள்சோலை ஒண்தடமணியொளிதிருமோகூர் *
பெயர்களாயிரமுடைய வல்லரக்கர்புக்கழுந்த *
தயரதன்பெற்ற மரதகமணித்தடத்தினையே. (அ)

மணித்தடத்தடிமலர்க்கண்கள் பவளச்செவ்வாய் *
அணிக்கொள்நால்தடந்தோள்தெய்வம் அசுரரையென்றும் *
துணிக்கும்வல்லரட்டன் உறைபொழில்திருமோகூர் *
நணித்துநம்முடைநல்லரண் நாமடைந்தனமே. (௯)

நாமடைந்தநல்லரண் நமக்கென்றுநல்லமரர் *
தீமைசெய்யும்வல்லசுரரை அஞ்சிச்சென்றடைந்தால் *
காமரூபங்கொண்டெழுந்தளிப்பான் திருமோகூர் *
நாமமேநவின்றெண்ணுமின் ஏத்துமின்நமர்காள்! (க௦)

↓↓ ஏத்துமின் † நமர்காள்! என்றுதான்குடமாடு
கூத்தனை * குருகூர்ச்சடகோபன் ‡ குற்றேவல்கள் *
வாய்த்தவாயிரத்துள்ளிவை வண்திருமோகூர்க்கு *
ஈத்தபத்திவையேத்தவல்லார்க்கு இடர்கெடுமே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

† 'எமர்காள்' என்றும் பாடம்.

‡ 'குற்றேவல்' என்பதும் பாடம்.

* உஉ

௨-ஆந் திருவாய்மொழி—கெடுமிடர்.

[திருவனந்தபுரத்தைச்சேர்ந்தால் பரமபதத்திற்போலக் கைங்கர்யம் செய்யலாமென்று பரோபதேசஞ் செய்தல்.]

கலிவிருத்தம்.

பண் - இந்தளம், தாளம் - ஏழொத்து. கமாஸ்ராகம் - ரூபகதாளம்.

கெடுமிடராயவெல்லாம் கேசவாவென்ன * நாளும்
கொடுவினைசெய்யும் கூற்றின் தமர்களுங்குறுககில்லார் *
விடமுடையரவில் பள்ளிவிரும்பினான்சுரும்பலற்றும் *
தடமுடைவயல் அனந்தபுரநகர்புகுதுமின்றே. (௧)

இன்றுபோய்ப்புகுதிராகில் எழுமையும்ஏதம்சாரா *
குன்றுநேர்மாடமாடே குருந்துசேர்செருந்திபுன்னை *
மன்றலர்பொழில் அனந்தபுரநகர்மாயன்நாமம் *
ஒன்றுமோ † ராயிரமாம் உள்ளுவார்க்குஉம்பரூரே. (௨)

ஊரும்புட்கொடியுமஃதே உலகெல்லாமுண்டுமிழ்ந்தான் *
சேருந்தண்ணனந்தபுரம் சிக்கெனப்புகுதிராகில் *
தீரும்நோய்வினைகளெல்லாம்திண்ணம்நாம்அறியச்சொன்னோம் *
பேருமோராயிரத்துள் ஒன்றுநீர்பேசுமினே. (௩)

பேசுமின்கூசமின்றிப் பெரியநீர்வேலைசூழ்ந்து *
வாசமேகமழும்சோலை வயலணியனந்தபுரம் *
நேசஞ்செய்துறைகின்றானை நெறிமையாலமலர்கள்தூவி *
பூசனைசெய்கின்றார்கள் புண்ணியம்செய்தவாறே! (௪)

புண்ணியஞ்செய்து நல்லபுனலொடுமலர்கள்தூவி *
எண்ணுமின்எந்தைநாமம் இப்பிறப்பறுக்கும்அப்பால் *
திண்ணம்நாமறியச்சொன்னோம் செறிபொழிலனந்தபுரத்து *
அண்ணலார்கமலபாதம் அணுகுவார்அமரராவார். (௫)

அமரராய்த்திரிகின்றார்கட்கு ஆதிசேரனந்தபுரத்து *
அமரர்கோனர்ச்சிக்கின்று அங்ககப்பணிசெய்வர்விண்ணோர் *
நமர்களோ! சொல்லக்கேண்மின் நாமும்போய்நணுகவேண்டும் *
குமரனார்தாதைதுன்பம்துடைத்த கோவிந்தனாரே. (௬)

† 'ஆயிரமா' என்பதும் பாடம்.

துடைத்தகோவிந்தனாரே உலகுயிர்தேவும்மற்றும் *
படைத்தஎம்பரமமூர்த்தி பாம்பணைப்பள்ளிகொண்டான் *
மடைத்தலைவாளைபாயும் வயலணியனந்தபுரம் *
கடைத்தலைசீய்க்கப்பெற்றால் கடுவினைகளையலாமே. (௭)

கடுவினைகளையலாகும் காமனைப்பயந்தகாளை *
இடவகைகொண்டதென்பர் எழிலணியனந்தபுரம் *
படமுடையரவில் பள்ளிபயின்றவன்பாதம்காண *
நடமினோநமர்களுள்ளீர் ! நாமுமக்கறியச்சொன்னோம். (௮)

நாமுமக்கறியச்சொன்ன நாள்களும்நணியவான *
சேமநன்குடைத்துக்கண்டீர் செறிபொழிலனந்தபுரம் ! *
† தூமநல்விரைமலர்கள் துவளறஆய்ந்துகொண்டு *
வாமனனடிக்கென்றேத்த மாய்ந்தறும்வினைகள்தாமே. (௯)

மாய்ந்தறும்வினைகள்தாமே மாதவா ! என்ன * நாளும்
ஏய்ந்தபொன்மதிள் அனந்தபுரநகரெந்தைக்கென்று *
சாந்தொடுவிளக்கம்தூபம் தாமரைமலர்கள்நல்ல *
ஆய்ந்துகொண்டேத்தவல்லார் அந்தமில்புகழினாரே. (௧௦)

↓↓ அந்தமில்புகழ் அனந்தபுரநகராதிதன்னை *
கொந்தலர்பொழில் குருகூர்மாறன்சொல்லாயிரத்துள் *
ஐந்தினோடைந்தும்வல்லார் அணைவர்போயமருலகில் *
பைந்தொடிமடந்தையர்தம் வேய்மருதோளிணையே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௩ - ஆந் திருவாய்மொழி—வேய்மருதோள்.

[தலைவி தலைவனதுபிரிவுக்கு இரங்கிய பாசுரத்தாலே, 'இன்னும் என்னை இந்தப்பூமியில்தானே வைத்தால் என்செய்வது?' என்ற சங்கையை, ஆழ்வார் பேசுதல்.]

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - பஞ்சமம், தாளம் - ஏழொத்து. காம்போஜிராகம் - ஆதிதாளம்.

↓↓ வேய்மருதோளிணைமெலியுமாலோ !
மெலிவுமென்தனிமையும்யாதும்நோக்கா *
காமருகுயில்களும்கூவுமாலோ !
கணமயிலவைகலந்தாலுமாலோ ! *

---

† 'தூபநல்விரைமலர்கள்' என்றும் கூறுவர்.

ஆமருவினநிரைமேய்க்கநீபோக்கு
ஒருபகலாயிரமூழியாலோ! *
தாமரைக்கண்கள்கொண்டீர்தியாலோ!
தகவிலைதகவிலையேநீகண்ணா! (௧)

தகவிலைதகவிலையேநீகண்ணா!
தடமுலைபுணர்தொறும்புணர்ச்சிக்காரா *
சுகவெள்ளம்விசும்பிறந்தறிவைமூழ்க்கச்
சூழ்ந்து அதுகனவெனநீங்கியாங்கே *
அகவுயிரகமகந்தோறுமுள்புக்கு
ஆவியின்பரமல்லவேட்கையந்தோ! *
மிகமிகவினியுன்னைப்பிரிவையாமால்
வீவநின்பசுநிரைமேய்க்கப்போக்கே. (௨)

வீவன்நின்பசுநிரைமேய்க்கப்போக்கு
வெவ்வுயிர்கொண்டெனதாவிவேமால் *
யாவரும்துணையில்லையானிருந்து
உன்னஞ்சனமேனியையாட்டங்காணேன் *
போவதன்றொருபகல்நீயகன்றால்
பொருகயற்கண்ணிணைநீரும்நில்லா *
சாவதிவ்வாய்க்குலத்தாய்ச்சியோமாய்ப் பிறந்த
இத்தொழுத்தையோம்தனிமைதானே. (௩)

தொழுத்தையோம்தனிமையும்துணைபிரிந்தார்
துயரமும் நினைகிலைகோவிந்தா! * நின்
தொழுத்தனிற்பசுக்களையேவிரும்பித்
துறந்தெம்மையிட்டவைமேய்க்கப்போதி *
பழுத்தநல்லமுதினின் சாற்றுவெள்ளம்
பாவியேன்மனமகந்தோறுமுள்புக்கழுத்த *
நின்செங்கனிவாயின்கள்வப்பணிமொழி
நினைதொறும்ஆவிவேமால். (௪)

பணிமொழிநினைதொறுமாவிவேமால்
பகல்நிரைமேய்க்கியபோயகண்ணா! *
பிணியவிழ்மல்லிகைவாடைதூவப்
பெருமதமாலையும்வந்தின்றாலோ! *

மணிமிகுமார்பினின்முல்லைப்போது
என்வனமுலைகமழ்வித்துஉன்வாயமுதந்தந்து *
அணிமிகுதாமரைக்கையைஅந்தோ!
அடிச்சியோம்தலைமிசைநீயணியாய். (௫)

அடிச்சியோம்தலைமிசைநீயணியாய்
ஆழியங்கண்ணா! உன்கோலப்பாதம் *
பிடித்ததுநடுவுனக்கரிவையரும்பலர்
அதுநிற்க எம்பெண்மையாற்றோம் *
வடித்தடங்கண்ணிணைநீரும்நில்லா
மனமும்நில்லா, எமக்கதுதன்னாலே *
வெடிப்புநின்பசுநிரைமேய்க்கப்போக்கு
வேமெமதுயிரழல்மெழுகிலுக்கே. (௬)

வேமெமதுயிரழல்மெழுகிலுக்கு
வெள்வளைமேகலைகழன்றுவீழ *
தூமலர்க்கண்ணிணைமுத்தஞ்சோரத்
துணைமுலைபயந்துஎனதோள்கள்வாட *
மாமணிவண்ணா! உன்செங்கமலவண்ண
மென்மலரடிநோவநீபோய் *
ஆமகிழ்ந்துகந்தவைமேய்க்கின்றுஉன்னோடு
அசுரர்கள்தலைப்பெய்யிலெவன்கொல்ஆங்கே? (௭)

அசுரர்கள்தலைப்பெய்யிலெவன்கொல்? ஆங்கென்று
ஆழுமென்னாருயிர், ஆன்பின்போகேல் *
கசிகையும்வேட்கையுமுள்கலந்து
கலவியும்நலியுமென்கைகழியேல் *
வசிசெயுன்தாமரைக்கண்ணும்வாயும்
கைகளும்பீதகவுடையும்காட்டி *
ஒசிசெய்நுண்ணிடையிளவாய்ச்சியர்
நீயுகக்கும்நல்லவரொடுமுழிதராயே. (௮)

உகக்குநல்லவரொடுமுழிதந்து
உன்தன் திருவுள்ளமிடர்கெடுந்தோறும் * நாங்கள்
வியக்கவின்புறுதும்எம்பெண்மையாற்றோம்
எம்பெருமான்! பசுமேய்க்கப்போகேல் *

மிகப்பலவசுரர்கள்வேண்டுருவங்கொண்டு
நின்றூடழிதருவர்கஞ்சனேவ *
அகப்படிலவரொடும்நின்னோடாங்கே
அவத்தங்கள்விளையும்என்சொற்கொளந்தோ ! (௯)

அவத்தங்கள்விளையுமென்சொற்கொளந்தோ !
அசுரர்கள்வன்கையர்கஞ்சனேவ *
தவத்தவர்மறுகநின்றுழிதருவர்
தனிமையும்பெரிதுஉனக்குஇராமனையும் *
உவர்த்தலை, உடன்திரிகிலையும் என்றென்று
ஊடுறஎன்னுடையாவிவேமால் *
திவத்திலும்பசுநிரைமேய்ப்புஉவத்தி
செங்கனிவாயெங்களாயர்தேவே ! (௧௦)

↓↓ செங்கனிவாயெங்களாயர்தேவு
அத்திருவடிதிருவடிமேல் * பொருநல்
சங்கணிதுறைவன்வண்தென்குருகூர்
வண்சடகோபன்சொல்லாயிரத்துள் *
மங்கையராய்ச்சியராய்ந்தமாலை
அவனொடும்பிரிவதற்கிரங்கி * தையல்
அங்கவன்பசுநிரைமேய்ப்பொழிப்பான்
உரைத்தன இவையும்பத்துஅவற்றின்சார்வே. (௧௧

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௫ - ஆந் திருவாய்மொழி—சார்வே.

[ஆழ்வார் தாம் முதலில் அநுஸந்தித்த பக்தி பலித்தமையை அருளிச்செய்தல்.]

கலிவிருத்தம்.

பண் - கொல்லி, தாளம் நடையொத்து கல்யாணிராகம் - ஆதிதாளம்.

↓↓ சார்வேதவநெறிக்குத் தாமோதரன்தாள்கள் *
கார்மேகவண்ணன் கமலநயனத்தன் *
நீர்வானம்மண்ணெரிகாலாய் நின்றநேமியான் *
பேர்வானவர்கள் பிதற்றும்பெருமையனே. (௧

பெருமையனே வானத்திமையோர்க்கும்காண்டற்
கருமையனே * ஆகத்தணையாதார்க்கு * என்றும்
திருமெய்யுறைகின்ற செங்கண்மால் * நாளும்
இருமைவினைகடிந்து இங்கென்னையாள்கின்றானே. (௨)

ஆள்கின்றானாழியான் ஆரால்குறைவுடையம்? *
மீள்கின்றதில்லைப் பிறவித்துயர்கடிந்தோம் *
வாள்கெண்டையொண்கண் மடப்பின்னைதன்கேள்வன் *
தாள்கண்டுகொண்டு என்தலைமேற்புனைந்தேனே. (௩)

தலைமேற்புனைந்தேன் சரணங்கள் * ஆலின்
இலைமேல்துயின்றான் இமையோர்வணங்க *
மலைமேல்தான்நின்று என்மனத்துளிருந்தானை *
நிலைபேர்க்கலாகாமை நிச்சித்திருந்தேனே. (௪)

நிச்சித்திருந்தேன் என்நெஞ்சம்கழியாமை *
கைச்சக்கரத்தண்ணல் கள்வம்பெரிதுடையன் *
மெச்சப்படான்பிறர்க்கு மெய்போலும்பொய்வல்லன் *
நச்சப்படும்நமக்கு நாகத்தணையானே. (௫)

நாகத்தணையானை நாள்தோறும்ஞானத்தால் *
ஆகத்தணைப்பார்க்கு அருள்செய்யும்அம்மானை *
மாகத்திளமதியம் சேரும்சடையானை *
பாகத்துவைத்தான்தன் பாதம்பணிந்தேனே. (௬)

பணிநெஞ்சே! நாளும் பரமபரம்பரனை *
† பிணியொன்றும்சாரா பிறவிகெடுத்தாளும் *
மணிநின்றசோதி மதுசூதன்என்னம்மான் *
அணிநின்றசெம்பொன் அடலாழியானே. (௭)

ஆழியான் ஆழியமரர்க்குமப்பாலான் *
ஊழியானூழிபடைத்தான் நிரைமேய்த்தான் *
பாழியந்தோளால் வரையெடுத்தான்பாதங்கள் *
வாழிஎன்நெஞ்சே! மறவாதுவாழ்கண்டாய். (௮)

கண்டேன்கமலமலர்ப்பாதம் காண்டலுமே *
விண்டேயொழிந்த வினையாயினவெல்லாம் *
தொண்டேசெய்து என்றும்தொழுதுவழியொழுக *
பண்டே பரமன்பணித்த பணிவகையே. (௯)

---

† 'பிணியென்றும்' என்றும் பாடம்.

வகையால்மனமொன்றி மாதவனை * நாளும்
புகையால்விளக்கால் புதுமலரால்நீரால் *
திசைதோறமரர்கள் சென்றிறைஞ்சநின்ற *
தகையான்சரணம் தமர்கட்கோர்பற்றே. (௧௦)

↓↓ பற்றென்றுபற்றிப் பரமபரம்பரனை *
மல்திண்தோள்மாலை வழுதிவளநாடன் *
சொல்தொடையந்தாதி ஓராயிரத்துள் இப்பத்தும் *
கற்றார்க்கோர்பற்றாகும் கண்ணன்கழலிணையே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௫ - ஆந் திருவாய்மொழி—கண்ணன்கழலிணை.

[ஆழ்வார் எம்பெருமானிடத்துப் பக்தியுடையார்செய்யவேண்டிய செயல்களையெல்லாம் சுருங்கச்சொல்லி முடித்தல்.]

வஞ்சித்துறை.

பண் - நாட்டம், தாளம் - இடையொத்து. வஸந்தராகம் - ஆதிதாளம்.

↓↓ கண்ணன்கழலிணை *
நண்ணும்மனமுடையீர் ! *
எண்ணும்திருநாமம் *
திண்ணம்நாரணமே. (௧)

நாரணனெம்மான் *
பாரணங்காளன் *
வாரணம்தொலைத்த *
காரணன்தானே. (௨)

தானேஉலகெல்லாம் *
தானேபடைத்திடந்து *
தானேஉண்டுமிழ்ந்து *
தானேயாள்வானே. (௩)

ஆள்வானாழிநீர் *
கோள்வாயரவணையான் *
தாள்வாய்மலரிட்டு *
நாள்வாய்நாடீரே. (௪)

நாடீர்நாடோறும் *
வாடாமலர்கொண்டு *
பாடீர் அவன்நாமம் *
வீடேபெறலாமே. (௫)

↓↓ மேயான்வேங்கடம் *
காயாமலர்வண்ணன் *
பேயார்முலையுண்ட *
வாயான்மாதவனே. (௬)

மாதவனென்றென்று *
ஓதவல்லீரேல் *
தீதொன்றும் அடையா *
ஏதம்சாராவே. (௭)

சாராவேதங்கள் *
நீரார்முகில்வண்ணன் *
பேராரோதுவார் *
ஆராரமரரே. (௮)

அமரர்க்கரியானை *
தமர்கட்கெளியானை *
அமரத்தொழுவார்கட்கு *
அமராவினைகளே. (௯)

வினைவல்லிருளென்னும் *
முனைகள்வெருவிப்போம் *
சுனைநன்மலரிட்டு *
நினைமின்நெடியானே. (௧0)

‡‡ நெடியானருள்சூடும் *
படியான்சடகோபன் *
நொடியாயிரத்திப்பத்து *
அடியார்க்கருள்பேறே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௬ - ஆந் திருவாய்மொழி— அருள்பெறுவார்.

[ஆழ்வார் தமக்குப்பேறளிக்குமாறு சமயம்பார்த்திருந்த எம்பெருமானது பரமகிருபையைப்பற்றித் தமதுநெஞ்சுடன் பாராட்டிக் கூறுதல்.]

கலிவிருத்தம்.

பண் - இந்தளம், தாளம் - நடையொத்து. நாதநாமக்ரியைராகம் - ரூபகதாளம்.

‡‡ அருள்பெறுவாரடியார்தம் அடியனேற்கு * ஆழியான்
அருள்தருவானமைகின்றான் அதுநமதுவிதிவகையே *
இருள்தருமாஞாலத்துள் இனிப்பிறவியான்வேண்டேன் *
மருளொழிநீமடநெஞ்சே! வாட்டாற்றானடிவணங்கே. (௧)

வாட்டாற்றானடிவணங்கி மாஞாலப்பிறப்பறுப்பான் *
கேட்டாயேமடநெஞ்சே! கேசவனெம்பெருமானை *
பாட்டாயபலபாடிப் பழவினைகள்பற்றறுத்து *
நாட்டாரோடியல்வொழிந்து நாரணனைநண்ணினமே. (௨)

நண்ணினம்நாராயணனை நாமங்கள்பலசொல்லி *
மண்ணுலகில்வளம்மிக்க வாட்டாற்றான்வந்துஇன்று *
விண்ணுலகம்தருவானாய் விரைகின்றான்விதிவகையே *
எண்ணினவாறாகா இக்கருமங்கள்என்னெஞ்சே! (௩)

என்னெஞ்சத்துள்ளிருந்து இங்கிருந்தமிழ்நூலிவைமொழிந்து *
வன்னெஞ்சத்திரணியனை மார்விடந்தவாட்டாற்றான் *
† மன்னஞ்சப்பாரதத்துப் பாண்டவர்க்காப்படைதொட்டான் *
நன்னெஞ்சே! நம்பெருமான் நமக்கருள்தான்செய்வானே. (௪)

† 'மன்னெஞ்ச' என்றும் பாடம்.

வானேறவழிதந்த வாட்டாற்றான்பணிவகையே *
நானேறப்பெறுகின்றேன் நரகத்தைநகுநெஞ்சே! *
தேனேறுமலர்த்துளவம் திகழ்பாதன் * செழும்பறவை
தானேறித் † திரிவானதாளிணை என்தலைமேலே. (௫)

தலைமேலதாளிணைகள் தாமரைக்கண்ணென்னம்மான் *
நிலைபேரானென்னெஞ்சத்து எப்பொழுதும்எம்பெருமான் *
மலைமாடத்தரவணைமேல் வாட்டாற்றான் * மதம்மிக்க
கொலையானைமருப்பொசித்தான் குரைகழல்கள்குறுகினமே. (௬)

குரைகழல்கள்குறுகினம் நம்கோவிந்தன்குடிகொண்டான் *
திரைகுழுவுகடல்புடைசூழ் தென்னாட்டுத்திலதமன்ன *
வரைகுழுவுமணிமாட வாட்டாற்றான்மலரடிமேல் *
விரைகுழுவுநறுந்துளவம் மெய்ந்நின்றுகமழுமே. (௭)

மெய்ந்நின்றுகமழ்துளவ விரையேறுதிருமுடியன் *
கைந்நின்றசக்கரத்தன் கருதுமிடம்பொருதுபுனல் *
மைந்நின்றவரைபோலும் திருவுருவவாட்டாற்றற்கு *
எந்நன்றிசெய்தேனா என்னெஞ்சில்திகழ்வதுவே? (௮)

திகழ்கின்றதிருமார்பில் திருமங்கைதன்னோடும் *
திகழ்கின்றதிருமாலார் சேர்விடம்தண்வாட்டாறு *
‡ புகழ்கின்றபுள்ளூர்தி போரரக்கர்குலம்கெடுத்தான் *
இகழ்வின்றிஎன்னெஞ்சத்து எப்பொழுதும்பிரியானே. (௯)

பிரியாதாட்செய்யென்று பிறப்பறுத்தாளறக்கொண்டான் *
அரியாகிஇரணியனை ஆகங்கீண்டானன்று *
பெரியார்க்காட்பட்டக்கால் பெறாதபயன்பெறுமாறு *
வரிவாள்வாயரவணைமேல் வாட்டாற்றான்காட்டினனே. (கO)

↓↓ காட்டித்தன்கனைகழல்கள் கடுநரகம்புகலொழித்த *
வாட்டாற்றெம்பெருமானை வளங்குருகூர்ச்சடகோபன் *
பாட்டாயதமிழ்மாலை ஆயிரத்துள்இப்பத்தும்
கேட்டு * ஆரார்வானவர்கள் செவிக்கினியசெஞ்சொல்லே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

† 'திரிவானத்தாளிணை' என்பது உரையின்பாடம்; 'திரிவான்தன்தாளிணை' எனச் சிலர் பாடமோதுவர். ‡ 'புகழ்நின்ற' என்றும் பாடம்.

௭ - ஆந் திருவாய்மொழி—செஞ்சொற்கவிகாள்.

[தம்முடம்பில் எம்பெருமான் ப்ரீதியாக வைத்துள்ள வாஞ்சையை ஆழ்வார் கால்கட்டி விடுவித்துக்கொண்டு அவனது குணத்தைப் பாராட்டிப் பேசியருளுதல்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண் - தக்கேசி, தாளம் - ஏழொத்து. தன்யாசிராகம் - ஆதிதாளம்.

‡‡ செஞ்சொற்கவிகாள்! உயிர்காத்தாட்செய்ம்மின் திருமாலிருஞ் [சோலை *
வஞ்சக்கள்வன் மாமாயன் மாயக்கவியாய்வந்து * என்
நெஞ்சுமுயிருமுள்கலந்து நின்றாரறியாவண்ணம் * என்
நெஞ்சுமுயிருமவையுண்டு தானேயாகிநிறைந்தானே. (௧)

தானேயாகிநிறைந்து எல்லாவுலகுமுயிரும்தானேயாய் *
தானேயானென்பானாகித் தன்னைத்தானேதுதித்து * எனக்குத்
தேனேபாலேகன்னலேயமுதே திருமாலிருஞ்சோலை *
கோனேயாகிநின்றொழிந்தான் என்னைமுற்றுமுயிருண்டே. (௨)

என்னைமுற்றுமுயிருண்டு என்மாயவாக்கையிதனுள்புக்கு *
என்னைமுற்றும்தானேயாய் நின்றமாயஅம்மான்சேர் *
தென்னன்திருமாலிருஞ்சோலைத் திசைகைகூப்பிச்சேர்ந்தயான் *
இன்னும்போவேனேகொலோ? என்கொலம்மான்திருவருளே? (௩)

என்கொல்அம்மான்திருவருள்கள்? உலகுமுயிரும்தானேயாய் *
நன்கென்னுடலம்கைவிடான் ஞாலத்தூடேநடந்துழக்கி *
தென்கொள்திசைக்குத்திலதமாய்நின்ற திருமாலிருஞ்சோலை *
நங்கள்குன்றம்கைவிடான் நண்ணாஅசுரர் † நலியவே. (௪)

நண்ணாவசுரர் † நலிவெய்த நல்லவமரர்பொலிவெய்த *
எண்ணாதனகளெண்ணும் நன்முனிவரின்பம்தலைசிறப்ப *
பண்ணார்பாடலின்கவிகள் யானாய்த்தன்னைத்தான்பாடி *
தென்னாவென்னும்என்னம்மான் திருமாலிருஞ்சோலையானே (௫)

திருமாலிருஞ்சோலையானேயாகிச் செழுமூவுலகும் * தன்
ஒருமாவயிற்றினுள்ளேவைத்து ஊழியூழிதலையளிக்கும் *
திருமாலென்னையாளுமால் சிவனும்பிரமனும்காணாது *
அருமாலெய்தியடிபரவ அருளையீந்தவம்மானே. (௬)

† 'நலியவே', 'நலிவெய்த' என்று வழங்குவர்.

அருளாயீயென்னம்மானே! என்னும் முக்கணம்மானும் *
தெருள்கொள்பிரமனம்மானும் தேவர்கோனும்தேவரும் *
இருள்கள்கடியும்முனிவரும் ஏத்துமம்மான்திருமலை *
மருள்கள்கடியும்மணிமலை திருமாலிருஞ்சோலைமலையே. (௭)

⇊ திருமாலிருஞ்சோலைமலையே திருப்பாற்கடலேஎன்தலையே *
திருமால்வைகுந்தமே தண்திருவேங்கடமேஎனதுடலே *
அருமாமாயத்தெனதுயிரே மனமேவாக்கேகருமமே *
ஒருமாநொடியும்பிரியான் என்ஊழிமுதல்வனொருவனே. (௮)

ஊழிமுதல்வனொருவனேயென்னும் ஒருவன்உலகெல்லாம் *
ஊழிதோறும்தன்னுள்ளேபடைத்துக் காத்துக்கெடுத்துழலும் *
ஆழிவண்ணனென்னம்மான் அந்தண்திருமாலிருஞ்சோலை *
வாழிமனமே! கைவிடேல் உடலுமுயிருமங்கவொட்டே. (௯)

மங்கவொட்டுஉன்மாமாயை திருமாலிருஞ்சோலைமேய *
நங்கள்கோனே! யானேநீயாகி என்னையளித்தானே! *
பொங்கைம்புலனும்பொறியைந்தும் கருமேந்திரியம்ஐம்பூதம் *
இங்கிவ்வுயிரேய்பிரகிருதி மானாங்காரமனங்களே. (௧௰)

⇊ மானாங்காரமனம்கெட ஐவர்வன்கையர்மங்க *
தானாங்காரமாய்ப்புக்குத் தானேதானேயானானை *
தேனாங்காரப்பொழில்குருகூர்ச் சடகோபன்சொல்லாயிரத்துள் *
மானாங்காரத்திவைபத்தும் திருமாலிருஞ்சோலைமலைக்கே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௮-ஆந் திருவாய்மொழி—திருமாலிருஞ்சோலை.

[தம்மிடத்து எம்பெருமான் விசேஷமாக விருப்பஞ்செய்வதுகண்ட ஆழ்வார் முன்பு தம்மை அகல்வித்து இப்போது இப்படியிருத்தற்குக் காரணங் கூறமாட்டாது நிற்கும் அவனது திறத்தை விஸ்மிதராய்ப் பேசுதல்.]

கலிவிருத்தம்.

பண் - இந்தளம்: தாளம் - ஏழொத்து. மோஹநராகம் - ஆதிதாளம்.

⇊ திருமாலிருஞ்சோலைமலை என்றேன், என்ன *
திருமால்வந்து என்னெஞ்சுநிறையப்புகுந்தான் *
குருமாமணிபுந்துபுனல் பொன்னித்தென்பால் *
திருமால்சென்றுசேர்விடம் தென்திருப்பேரே. (௧)

பேரேயுறைகின்றபிரான் இன்றுவந்து *
பேரேனென்று என்னெஞ்சுநிறையப்புகுந்தான் *
காரேழ்கடலேழ் மலையேழுலகுண்டும் *
ஆராவயிற்றானை அடங்கப்பிடித்தேனே. (உ)

பிடித்தேன்பிறவிகெடுத்தேன் பிணிசாரேன் *
மடித்தேன்மனைவாழ்க்கையுள் நிற்பதோர்மாயையை *
கொடிக்கோபுரமாடங்கள்சூழ் திருப்பேரான் *
அடிச்சேர்வது எனக்கெளிதாயினவாறே. (ங)

எளிதாயினவாறென்று என்கண்கள்களிப்ப *
களிதாகியசிந்தையனாய்க் களிக்கின்றேன் *
கிளிதாவியசோலைகள்சூழ் திருப்பேரான் *
தெளிதாகிய சேண்விசும்புதருவானே. (ச)

வானேதருவான் எனக்காஎன்னோடொட்டி *
ஊனேய்குரம்பை யிதனுள்புகுந்து * இன்று
தானேதடுமாற்றவினைகள் தவிர்த்தான் *
தேனேய்பொழில் தென்திருப்பேர்நகரானே. (ரு)

திருப்பேர்நகரான் திருமாலிருஞ்சோலை *
பொருப்பேயுறைகின்றபிரான் இன்றுவந்து *
இருப்பேனென்று என்னெஞ்சுநிறையப்புகுந்தான் *
விருப்பேபெற்று அமுதமுண்டுகளித்தேனே. (சு)

உண்டுகளித்தேற்கு உம்பரென்குறை? * மேலைத்
தொண்டுஉகளித்து அந்திதொழும்சொல்லுப்பெற்றேன் *
வண்டுகளிக்கும்பொழில்சூழ் திருப்பேரான் *
கண்டுகளிப்பக் கண்ணுள்நின்றகலானே. (எ)

கண்ணுள்நின்றகலான் கருத்தின்கண்பெரியன் *
எண்ணில்நுண்பொருள் ஏழிசையின்சுவைதானே *
வண்ணநன்மணிமாடங்கள்சூழ் திருப்பேரான் *
திண்ணமென்மனத்துப் புகுந்தான்செறிந்தின்றே. (அ)

இன்றென்னைப்பொருளாக்கித் தன்னைஎன்னுள்வைத்தான் *
அன்றென்னைப்புறம்போகப்புணர்த்தது என்செய்வான்? *
குன்றென்னத்திகழ்மாடங்கள்சூழ் திருப்பேரான் *
ஒன்றெனக்கருள்செய்ய உணர்த்தலுற்றேனே. (க)

↓↓ உற்றேன் உகந்து பணிசெய்து உனபாதம்
பெற்றேன் * ஈதேயின்னம்வேண்டுவ தெந்தாய்! *
கற்றார்மறைவாணர்கள்வாழ் திருப்பேரற்கு *
அற்றாரடியார்தமக்கு அல்லல்நில்லாவே. (௧௦

↓↓ நில்லாவல்லல் நீள்வயல்சூழ்திருப்பேர்மேல் *
நல்லார்பலர்வாழ் குருகூர்ச்சடகோபன் *
சொல்லார்தமிழ் ஆயிரத்துள் இவைபத்தும்
வல்லார் * தொண்டராள்வது சூழ்பொன்விசும்பே. (௧௧

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௯ - ஆம் திருவாய்மொழி—சூழ்விசும்பு.

[பரஜ்ஞானத்தைப்பெற்ற ஆழ்வார் திருநாட்டுக்குச் சென்று அடியாரோடு சேர்ந்தமையை விஷயீகரித்து அருளிச்செய்தல்.]

கலிவிருத்தம்.

பண் - கொல்லி, தாளம் - ஏழொத்து. கல்யாணிராகம் - அடதாளம்.

↓↓ சூழ்விசும்பணிமுகில் தூரியம்முழக்கின *
ஆழ்கடலலைதிரை கையெடுத்தாடின *
ஏழ்பொழிலும் வளமேந்தியவென்னப்பன் *
வாழ்புகழ்நாரணன்தமரைக் கண்டுகந்தே. (௧

நாரணன்தமரைக்கண்டுகந்து நல்நீர்முகில் *
பூரணபொற்குடம் பூரித்ததுஉயர்விண்ணில் *
நீரணிகடல்கள் நின்றார்த்தன * நெடுவரைத்
தோரணம்நிரைத்து எங்கும்தொழுதனருலகே. (௨

தொழுதனருலகர்கள் தூபநல்மலர்மழை
பொழிவனர் * பூமியன்றளந்தவன்தமர்முன்னே *
எழுமினென்று இருமருங்கிசைத்தனர்முனிவர்கள் *
வழியிதுவைகுந்தற்கென்று வந்தெதிரே. (௩

எதிரெதிரிமையவர் இருப்பிடம்வகுத்தனர் *
கதிரவரவரவர் கைந்நிரைகாட்டினர் *
அதிர்குரல்முரசங்கள் அலைகடல்முழக்கொத்த *
மதுவிரிதுழாய்முடி மாதவன்தமர்க்கே. (௪

மாதவன் தமரென்று வாசலில் வானவர் *
போதுமின் எமதிடம் புகுதுக வென்றலும் *
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள் *
வேதநல் வாயவர் வேள்வியுள் மடுத்தே. (௫)

வேள்வியுள் மடுத்தலும் விரைகமழ் நறும்புகை *
காளங்கள் வலம்புரி கலந்தெங்கும் இசைத்தனர் *
ஆண்மின்கள் வானகம் ஆழியான் தமரென்று *
வாளொண்கண் மடந்தையர் வாழ்த்தினர் மகிழ்ந்தே. (௬)

மடந்தையர் வாழ்த்தலும் மருதரும் வசுக்களும் *
தொடர்ந்தெங்கும் தோத்திரஞ் சொல்லினர் * தொடுகடல்
கிடந்தவெங் கேசவன் கிளரொளி மணிமுடி *
குடந்தையெங் கோவலன் குடியடியார்க்கே. (௭)

குடியடியாரிவர் கோவிந்தன் தனக்கென்று *
முடியுடை வானவர் முறைமுறை யெதிர்கொள்ள *
கொடியணி நெடுமதிள் கோபுரங் குறுகினர் *
வடிவுடை மாதவன் வைகுந்தம் புகவே. (௮)

வைகுந்தம் புகுதலும் வாசலில் வானவர் *
வைகுந்தன் தமரெமர் எமதிடம் புகுதென்று *
வைகுந்தத் தமரரும் முனிவரும் வியந்தனர் *
வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே. (௯)

விதிவகை புகுந்தனரென்று நல்வேதியர் *
பதியினில் பாங்கினில் பாதங்கள் கழுவினர் *
நிதியும் நற்சுண்ணமும் நிறைகுட விளக்கமும் *
மதிமுக மடந்தையர் ஏந்தினர் வந்தே. (௰)

‡ வந்தவரெதிர்கொள்ள மாமணி மண்டபத்து *
அந்தமில் பேரின்பத்து அடியரோ டிருந்தமை *
கொந்தலர் பொழில் குருகூர்ச் சடகோபன் * சொல்
சந்தங்க ளாயிரத்து இவைவல்லார் முனிவரே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

க௦ - ஆந் திருவாய்மொழி—முனியே.

[ஆழ்வார் பரமபக்தியால் நைந்து திருமாலைத் தாம் சேர்ந்தமையை அருளிச்செய்து பிரபந்தத்தைத் தலைக்கட்டுதல்.]

கலிநிலைத்துறை.

பண் - பஞ்சமம், தாளம் - ஏழொத்து. கல்யாணிராகம் - அடதாளம்.

↓↓ முனியே ! நான்முகனே ! முக்கண்ணப்பா! * என்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண்கருமாணிக்கமே ! என்கள்வா ! *
தனியேனாருயிரே ! என் தலைமிசையாய்வந்திட்டு *
இனிநான்போகலொட்டேன் ஒன்றும்மாயஞ்செய்யேலென்னையே. (க)

மாயஞ்செய்யேலென்னை உன் திருமார்வத்துமாலைநங்கை *
வாசஞ்செய்பூங்குழலாள் திருவாணைநின்னாணைகண்டாய் *
நேசஞ்செய்துஉன்னோடென்னை உயிர்வேறின்றிஒன்றாகவே *
கூசஞ்செய்யாதுகொண்டாய் என்னைக்கூவிக்கொள்ளாய்வந்தந்தோ ! (உ)

கூவிக்கொள்ளாய்வந்தந்தோ ! என்பொல்லாக்கருமாணிக்கமே ! *
ஆவிக்கோர்பற்றுக்கொம்பு நின்னலாலறிகின்றிலேன்யான் *
மேவித்தொழும்பிரமன்சிவன் இந்திரனாதிக்கெல்லாம் *
நாவிக்கமலமுதற்கிழங்கே! உம்பரந்ததுவே. (ங)

உம்பரந்தண்பாழேயோ ! அதனுள்மிசைநீயேயோ ! *
அம்பரநற்சோதி ! அதனுள்பிரமன்அரன்நீ *
உம்பரும்யாதவரும்படைத்த முனிவன்அவன்நீ *
எம்பரம்சாதிக்கலுற்று என்னைப்போரவிட்டிட்டாயே. (ச)

போரவிட்டிட்டென்னை நீபுறம்போக்கலுற்றால் * பின்னையான் [ன்?*
ஆரைக்கொண்டெத்தையந்தோ ! எனதென்பதென் ? யானென்பதெ
தீரிரும்புண்டநீரதுபோல என்னாருயிரை
ஆரப்பருக * எனக்கு ஆராவமுதானாயே. (ரு)

எனக்காராவமுதாய் எனதாவியைஇன்னுயிரை *
மனக்காராமைமன்னியுண்டிட்டாய் இனியுண்டொழியாய் *
புனக்காயாநிறத்த புண்டரீகக்கண்செங்கனிவாய் *
உனக்கேற்கும்கோலமலர்ப்பாவைக்கன்பா ! என்னன்பேயோ ! (சு)

கோலமலர்ப்பாவைக்கன்பாகிய என்னன்பேயோ! *
நீலவரை இரண்டுபிறைகவ்வி நிமிர்ந்ததொப்ப *
கோலவராகமொன்றாய் நிலம்கோட்டிடைக்கொண்டஎந்தாய்! *
நீலக்கடல்கடைந்தாய்! உன்னைப்பெற்றுஇனிப்போக்குவனோ? (எ)

பெற்றினிப்போக்குவனோ? உன்னைஎன்தனிப்பேருயிரை *
உற்றவிருவினையாய் உயிராய்ப்பயனாயவையாய் *
முற்றவிம்மூவுலகும் பெருந்தூறாய்த்தூற்றில்புக்கு *
முற்றக்கரந்தொளித்தாய் என்முதல்தனிவித்தேயோ! (அ)

முதல்தனிவித்தேயோ! முழுமூவுலகாதிக்கெல்லாம் *
முதல்தனியுன்னையுன்னை எனைநாள்வந்துகூடுவன்நான்? *
முதல்தனியங்குமிங்கும் முழுமுற்றுறுவாழ்பாழாய் *
முதல்தனிசூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடிவிலீயோ! (௯)

↓↓ சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடிவில்பெரும்பாழேயோ! *
சூழ்ந்ததனில்பெரிய பரநன்மலர்ச்சோதீயோ! *
சூழ்ந்ததனில்பெரிய சுடர்ஞானவின்பமேயோ! *
சூழ்ந்ததனில்பெரிய என்னவாவறச்சூழ்ந்தாயே. (௰)

↓↓ அவாவறச்சூழ் அரியையயனையரனையலற்றி *
அவாவற்றுவீடுபெற்ற குருகூர்ச்சடகோபன்சொன்ன *
அவாவிலந்தாதிகளால் இவையாயிரமும் * முடிந்த
அவாவிலந்தாதியிப்பத்தறிந்தார் பிறந்தார்உயர்ந்தே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம். சீயர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி ஸம்பூர்ணம்.

ஆக, பாசுரம் - ௧௧௦௨

இனி, திருவாய்மொழியில் முதற்பத்தால் எம்பெருமானது பரத்வமும், இரண்டாம்பத்தால் காரணத்வமும், மூன்றாம்பத்தால் வ்யாபகத்வமும், நான்காம்பத்தால் நியந்த்ருத்வமும், ஐந்தாம்பத்தால் காருணிகத்வமும், ஆறாம்பத்தால் சரண்யத்வமும், ஏழாம்பத்தால் சக்தத்வமும், எட்டாம்பத்தால் ஸத்யகாமத்வமும், ஒன்பதாம்பத்தால் ஆபத்ஸகத்வமும், பத்தாம்பத்தால் ஆர்த்திஹரத்வமும் கூறப்படுகின்றன வென்றும் பெரியோர் அருளிச்செய்வர்

திருவாய்மொழிச் செய்யுளகராதி,

அ	பக்கம்.
அஃதேயுய்யப்புகுமாறு	௫௭
அகலகில்லேனிறையும்	௧௦௮
அகலிலகலும்அணுகிலணுகும்	௧௮
அகற்றநீவைத்த	௮௫
அங்கண்மலர்த்தண்துழாய்	௧௨௯
அங்குமிங்கும்வானவர்	௧௩௪
அங்குற்றேனல்லேன்	௮௪
அசுரர்கள்தலைப்பெய்யில்	௧௭௯
அச்சுதனமலனென்கோ	௪௫
அஞ்சிறையமடநாராய்	௧௨
அடங்கெழிற்சம்பத்து	௧௦
அடிகள்கைதொழுது	௯௧
அடிக்கீழமர்ந்துபுகுந்து	௧௦௮
அடிசேர்முடியினராகி	௫௬
அடிச்சியோந்தலைமிசை	௧௭௯
அடியார்ந்தவையமுண்டு	௫௦
அடியானிவனென்று	௧௫௬
அடியேனுள்ளான்	௧௪௪
அடியேன்சிறியஞானத்தன்	௧௫
அடியேன்மேவியமர்கின்ற	௧௦௭
அடியைமூன்றையிரந்த	௯௦
அடியோங்குநூற்றுவர்வீய	௫௧
அடைவதும்அணியார்	௧௫௪
அணங்குக்கருமருந்தென்று	௬௫
அணங்கெனஆடுமெனங்கம்	௧௬
அணியனுரும்தனதாள்	௧௬௭
அணைவதரவணைமேல்	௩௪
அண்ணல்மாயன் அணிகொள்	௪௩
அதுவேவீடுவீடுபேற்று	௧௪௪
அந்தமில்புகழனந்தபுரநகர்	௧௭௧
அந்தரம்நின்றுழல்கின்ற	௧௫௭
அந்தாமத்தன்புசெய்து	௨௯
அந்தோஅணுகப்பெறுநாள்	௧௬௨
அப்பனேயடலாழியானே	௬௬
அப்பனையென்றுமறப்பன்	௧௨௫
அமரராய்த்திரிகின்றார்கட்கு	௧௭௦
அமரர்கள்தொழுதெழ	௧௨
அமரர்க்கரியானை	௧௭௭
அமரர்தொழப்படுவானை	௪௭
அமரர்முழுமுதலாகிய	௧௮
அமர்ந்தநாதனையவரவராகி	௧௯௮
அமுதமமரர்கட்கீந்த	௧௯
அமைவுடையறநெறி	௧௧

அ	பக்கம்.
அம்மானாய்ப்பின்னும்	௧௮
அம்மானாழிப்பிரான்	௭௯
அயர்க்கும்சுற்றும்பற்றி	௬௨
அரணமாவாற்றகாலைக்கு	௧௪௯
அரியாயவம்மானையமரர்	௧௫௫
அரியேறேயென்னம்பொன்	௮௬
அருகலிலாயபெருஞ்சீர்	௧௯
அருளாதநீரருளி	௧௩
அருளாதொழிவாய்	௧௬௨
அருளாயீயென்னம்மானே	௧௮௦
அருள்தானினியானறியேன்	௧௪௨
அருள்பெறுவாரடியார்	௧௭௭
அல்லதோராணும்	௧௩௬
அல்லலிலின்பம்	௫௫
அவத்தங்கள்விளையும்	௧௭௪
அவரவர்தமதமது	௮
அவனுடையருள்பெறும்	௧௬௪
அவனேயகல்ஞாலம்	௧௫௩
அவனைவிட்டகன்று	௧௬௫
அவன்கையதேயெனதாருயிர்	௧௫௭
அவாவறச்சூழ்அரியை	௧௮௫
அழுவன்தொழுவன்	௮௬
அழைக்கின்றவடிநாயேன்	௧௫௫
அளவியன்றவேழுலகத்தவர்	௧௪
அளிக்கும்பரமனைக்கண்ணனை	௫௦
அறிகிலேன்தன்னுள்	௧௫௮
அறிந்தறிந்துதேறித்தேறி	௬௭
அறிந்தனவேதம்	௧௫௩
அறியாக்காலத்துள்ளே	௨௬
அறியுஞ்செந்தீயைத்தழுவி	௬௧
அறியேன்மற்றருள்	௧௪௯
அறிவரியபிரானை	௮௦
அறிவிலேனுக்கருளாய்	௧௦௬
அறிவினால்குறைவில்லா	௬௮
அறுக்கும்வினையாயின	௧௬௧
அற்புதன்நாராயணனரி	௧௪௧
அற்றதுபற்றெனில்	௧௦
அன்பனாகுந்தனதாள்	௧௬௬
அன்றிமற்றொன்றிலம்	௧௨௭
அன்றிமற்றோருபாயம்	௧௪௬
அன்றியாமொருபுகலிடம்	௧௬௮
அன்றுமண்நீரெரிகால்	௧௧௭
அன்னைமீரணிமாமயில்	௯௮

அ	பக்கம்.
அன்னைமீரிதற்கென்செய்	௧௪௫
அன்னையென்செய்யிலென்	௭௯
ஆகஞ்சேர்நரசிங்கமதாகி	௧௫௪
ஆகுங்கொல்ஐயமொன்றின்றி	௧௨௯
ஆடியாடிஅகம்கரைந்து	௨௭
ஆட்செய்தாழிபிரானை	௭௨
ஆட்டியும்தூற்றியும்	௧௨௧
ஆணல்லன்பெண்ணல்லன்	௩௦
ஆதுமில்லைமற்றவனில்	௧௫௦
ஆமின்சுவையவை	௫௭
ஆமுதல்வனிவனென்று	௧௨௫
ஆம்வண்ணமின்னதொன்	௧௨௪
ஆயர்கொழுந்தாய்அவரால்	௧௭
ஆயேஇவ்வுலகத்து	௭௦
ஆய்ச்சியாகியவன்னையால்	௯௩
ஆராவமுதமாய்	௩௦
ஆராவமுதேஅடியேனுடலம்	௮௫
ஆருக்கென்சொல்லுகேன்	௧௯௪
ஆருயிரேயோஅகலிடமுழுதும்	௧௨௯
ஆருயிர்பட்டது	௧௫௯
ஆரென்னையாராய்வார்	௭௮
ஆர்வனோஆழியங்கை	௧௨௫
ஆலினீளிலையேழுலகமுண்டு	௯௩
ஆவாராரதுணையென்று	௭௩
ஆவாஎன்றாதுஉலகத்தை	௧௦௭
ஆவிகாப்பாரினியார்	௭௮
ஆவிதிகைக்கஐவர்	௧௦௯
ஆவியேஆரமுதே	௫௨
ஆழியானாழிஅமரர்க்கும்	௧௭௫
ஆழியெழச்சங்கும்	௧௧௯
ஆழிவலவனைஆதரிப்பும்	௧௩௨
ஆளியைக்காண்பரியாய்	௧௨௦
ஆளுமாளார்ஆழியுஞ்சங்கும்	௧௩௪
ஆளும்பரமனைக்கண்ண	௪௯
ஆள்கின்றானாழியான்	௧௭௫
ஆள்வானாழிநீர்	௧௭௯
ஆறுமதயானைஅடர்த்தவன்	௧௫௯
ஆறுமலைக்கெதிர்ந்தோடும்	௧௧௧
ஆறெனக்குநின்பாதமே	௮௫
ஆற்றநல்லவகைகாட்டும்	௯௩
ஆனானுடையான்	௭௪
ஆனானையன்	௧௯
இ	
இகல்கொள்புள்ளை	௯௧
இங்குமங்குந்திருமாலன்றி	௧௨௯
இங்கேதிரிந்தேற்கு	௧௪௭

இ	பக்கம்.
இசைவித்தென்னை	௮௯
இடகிலேனொன்றட்டகில்லேன்	௯௭
இடங்கொள்சமயத்தை	௭௪
இடரில்போகம்மூழ்கி	௯௧
இடரின்றியேயொருநாள்	௫௫
இடர்கெடவெம்மை	௧௯௮
இடையில்லையான்வளர்த்த	௧௩௨
இட்டகாலிட்டகையளாய்	௧௧௧
இதுகாண்மின்அன்னைமீர்	௯௪
இதுவோபொருத்தம்	௧௩௯
இத்தனைவேண்டுவது	௧௫௯
இரக்கமனத்தோடு	௨௮
இரங்கிநாள்தொறும்	௯௯
இருடீகேசனெம்பிரான்	௩௪
இருத்தும்வியந்து	௧௪௨
இருந்தான்கண்டுகொண்டு	௧௪௨
இருளின்திணிவண்ணம்	௨௩
இரைக்குங்கருங்கடல்	௭௭
இலங்கதிமற்றொன்றும்	௧௯௮
இலங்கைசெற்றவனே	௨௮
இலனதுஉடையனிது	௮
இலிங்கத்திட்டபுராணத்தீரும்	௭௧
இல்லதுமுள்ளதும்	௧௦
இல்லைகண்டீரின்பம்	௧௪௯
இல்லைநுணுக்கங்களே	௧௨௪
இல்லையல்லலெனக்கேலினி	௧௯௭
இவளிராப்பகல்வாய்வெரீஇ	௨௮
இவளைபெறும்பரிசு	௯௫
இவையுமவையுமுவையும்	௧௯
இழந்தவெம்மாமை	௧௧௪
இறந்ததும்நீயே	௧௨௯
இறுக்குமிறையிறுத்து	௭௫
இனவேய்மலையேந்தினேன்	௮௨
இனியாஞானங்களால்	௨௯
இணியிருந்தென்னுயிர்	௧௯௩
இன்கவிபாடும்பரமகவிகள்	௧௨௫
இன்பம்தலைபெய்து	௧௫௮
இனபம்பயக்கஎழில்	௧௨௯
இன்றிப்போகஇருவினையும்	௧௫௪
இன்றுபோய்ப்புகுதிராகில்	௧௭௦
இன்றெனக்குதவாதகன்ற	௧௦௨
இன்றென்னைப்பொருளாக்கி	௧௮௧
இன்னமுதெனத்தோன்றி	௧௦௯
இன்னுயிர்க்கேழையர்மேல்	௧௨௧
இன்னுயிர்ச்சேவலும்	௧௫௧
ஈ	
ஈசன்வானவர்க்கென்பன்	௯௩.

ஈ	பக்கம்.
ஈடுமெடுப்புமிலீசன்	கக
ஈதேயானுன்னைக்கொள்வது	ருசு
ஈவிலாததீவினைகள்	சுசு
உ	
உகக்குநல்லவரொடும்	கஎரு
உகந்தேயுன்னையுள்ளும்	கருரு
உகவையால்நெஞ்சமுள்ளுருகி	கூரு
உச்சியுள்ளேநிற்கும்	உ0
உடம்பினுல்குறைவில்லா	சுசு
உடலாழிப்பிறப்புவீடு	கரு
உடனமர்காதல்மகளிர்	உ0
உடையார்ந்தவாடையன்	ரு0
உணர்த்தலூடலுணர்ந்து	கூக
உணர்ந்துணர்ந்திழிந்தகன்று	கக
உணர்விலும்பரொருவனை	கசரு
உண்டாயுலகேழ்முன்னமே	கரு
உண்டுகளித்தேற்கு	கஅக
உண்டுமுமிழ்ந்தும்	சுச
உண்ணவானவர்கோனுக்கு	அக
உண்ணிலாவியவைவரால்	க0அ
உண்ணுஞ்சோறுபருகுநீர்	க0உ
உதவிக்கைம்மாறு	கஉசு
உமருகந்துகந்தவுருவம்	கஉக
உம்பரந்தண்பாழேயோ	கஅச
உயர்வறவுயர்நலம்	அ
உயிரினுல்குறைவில்லா	சுசு
உயிர்களெல்லாவுலகமும்	சஉ
உயிர்க்கதிகாலன்	கருஎ
உய்ந்துபோந்து	ருக
உய்ம்மின்திறைகொணர்ந்து	ருசு
உய்விடமேழையர்க்கும்	கஉஉ
உய்வுபாயம்மற்றின்மை	சு0
உருகுமால்நெஞ்சம்	கருஅ
உருவாகியஆறுசமயம்	கருசு
உரைக்கவல்லேனல்லேன்	சு0
உரைக்கின்றமுக்கட்பிரான்	அரு
உரையாவெந்நோய்	கருரு
உலகமுண்டபெருவாயா	க0எ
உலகில்திரியுங்கருமகதியாய்	க0சு
உழலையென்பின்பேய்ச்சி	அஎ
உளருமில்லையல்லராய்	கசரு
உளனாகவேயெண்ணி	ருரு
உளனெனிலுளன்	கூ
உள்ளமுரைசெயல்	க0
உள்ளனமற்றுளவா	எரு
உள்ளுளாவிஉலர்ந்துலர்ந்து	உஅ
உறங்குவான்போல்	எக
உ	**பக்கம்.**
உறுமோபாவியேனுக்கு	கஎஎ
உறுவதாவதெத்தேவு	எஉ
உறுவதிதுவென்று	கருரு
உற்றார்களெனக்கில்லை	அஉ
உற்றேனுகந்துபணிசெய்து	கஅஉ
உன்னித்துமற்றொருதெய்வம்	சுரு
உன்னைச்சிந்தைசெய்துசெய்து	ருக
ஊ	
ஊனுடைமல்லர்ததைந்த	ககஎ
ஊதுமத்தீங்குழல்	கசுரு
ஊரவர்கவ்வை	எசு
ஊரும்நாடுமுலகமும்	க0உ
ஊரும்புட்கொடியும்	கஎ0
ஊரெல்லாந்துஞ்சி	எஎ
ஊர்ந்தசகடம்உதைத்த	எசு
ஊர்வளங்கிளர்சோலையும்	கசரு
ஊழிதோறூழியுருவும்	ககசு
ஊழிதோறூழிஉலகுக்கு	உரு
ஊழிமுதல்வனொருவனே	கஅ0
ஊனில்வாழுயிரே	உசு
எ	
எக்காலத்தெந்தையாய்	ருஎ
எங்கள்கண்முகப்பே	கருஉ
எங்கள்செல்சார்வு	கருசு
எங்கானலகங்கழிவாய்	கருசு
எங்குத்தலைப்பெய்வன்நான்	கஉ0
எங்குமுளன்கண்ணன்	ருரு
எங்குவந்துறுகோ	கஉக
எங்கேகாண்கேன்ஈன்துழாய்	கச0
எங்ஙனேயோஅன்னைமீர்காள்	எசு
எஞ்ஞான்றுநாமிருந்திருந்து	சஉ
எடுத்தபேராளன்	கஉஅ
எண்பெருக்கந்நலத்து	க0
எதிரெதிரிமையவர்	கஅரு
எந்தாய்தண்திருவேங்கடத்துள்	ருஉ
எந்தைதந்தைதந்தை	சரு
எந்தையேயென்றும்	உக
என்நாளேநாம்மண்ணளந்த	க0எ
எப்பொருளுந்தானாய்	உசு
எம்பிரானையெந்தைதந்தை	உக
எம்மாவீட்டுத்திறமும்	உசு
எம்மானேஎன்வெள்ளை	அசு
எம்மிடர்கடிந்து	
எய்த்தகூவுதலாவதே	அச
எய்த்தாரெய்த்தாரெய்த்தார்	கசச
எல்லியுங்காலையும்	கசரு

திருவாய்மொழிச் செய்யுளகராதி.

எ	பக்கம்.
எவைகொல்அணுக	௧௯௧
எழுகண்ணிநாமும்	௧௫௭
எழுமைக்குமெனதாவிக்கும்	௪௮
எளிதாயினவாறென்று	௧௮௧
எளிவருமியல்வினன்	௧௧
எனக்காராவமுதாய	௧௮௪
எனக்குநல்லரணை	௧௩௭
எனக்கேயாட்செய்	௩௯
எனக்கொன்றுபணியீர்கள்	௧௯௦
எனதாவியுள்கலந்த	௨௯
என்கண்ணன்கள்வம்	௧௫௯
என்கொல்அம்மான்	௧௭௯
என்கொள்வனுன்னைவிட்டு	௭௩
என்செய்கின்றாய்	௧௧௦
என்செய்கேன்என்னுடை	௫௯
என்செய்யதாமரைக்கண்	௧௨
என்செய்யுமூரவர்கவ்வை	௭௯
என்சொல்லிநிற்பன்	௧௨௫
என்திருமகள்சேர்மார்வனே	௧௧௨
என்திருமார்பன்தன்னை	௧௨௦
என்நான்செய்கேன்	௮௯
என்நீர்மைகண்டிரங்கி	௧௩
என்பரஞ்சுடரே	௧௦௯
என்பிழைகோபபதுபோல	௧௬
என்மின்னுநூல்மார்வன்	௧௦௪
என்றுகொல்சேர்வது	௧௧௯
என்றுகொல்தோழி	௮௭
என்றுநின்றேதிகழும்	௧௨௧
என்றுமொன்றாகி	௯௯
என்றேஎன்னை	௧௩௫
என்றைக்குமென்னை	௧௨௪
என்னசுண்டாயங்களால்	௧௨௪
என்னதாவிமேலையாய்	௯௦
என்னபபனெனக்காயிகுளாய்	௯௫
என்னமர்பெருமான்	௧௬௯
என்னவியற்கைகளால்	௧௨௪
என்னூவதுஎத்தனைநாளைக்கு	௫௬
என்னுடைக்கோவலனே	௧௨௦
என்னுடைநன்னுதல்	௧௬௬
என்னுள்கலந்தவன்	௨௯
என்னெஞ்சத்துள்	௧௭௭
என்னெஞ்சினால்நோக்கி	௭௯
என்னைநெகிழ்க்கிலும்	௧௮
என்னைமுற்றும்	௧௭௯
என்னையாளும்வன்கோ	௧௦௯

ஏ	பக்கம்.
ஏகமூர்த்தியிருமூர்த்தி	௫௯
ஏத்தவேழுலகும்கொண்ட	௨௫
ஏத்துமின்நமர்காள்	௩௯௯
ஏபாவம்பரமேஏழுலகும்	௨௪
ஏய்ந்தபெருங்கீர்த்தி	௭
ஏழைபேதையிராப்பகல்	௨௯
ஏழையராவியுண்ணும்	௧௨௧
ஏறனைபூவனைபூமகள்	௨௪
ஏருளுமிறையோனும்	௯௭
ஏறியபித்தினொடு	௯௨
ஏறேலேழும்வென்று	௩௭
ஏற்கும்பெரும்புகழ்	௫௪
ஏற்றரும்வைகுந்தத்தை	௧௨௦
ஏனமாய்நிலங்கீண்ட	௮௪

ஒ	பக்கம்.
ஒக்கலைவைத்து	௨௦
ஒக்குமம்மானுருவம்	௧௬௯
ஒசிந்தநுண்ணிடைமேல்	௧௦௬
ஒடுங்கவவன்கண்	௧௦
ஒண்சுடரோடிருளுமாய்	௮௯
ஒத்தார்மிக்காரை	௨௯
ஒருநாயகமாய்	௫௯
ஒருவண்ணஞ்சென்றுபுக்கு	௯௧
ஒருவரிருவரோர்மூவரென	௧௪௦
ஒழிவில்காலமெல்லாம்	௪௬
ஒழிவின்றித்திருமூழிக்கள	௧௯௧
ஒழிவொன்றில்லாத	௫௩
ஒளிமணிவண்ணனென்கோ	௪௫
ஒன்றியதிங்களைக்காட்டி	௯௧
ஒன்றுசொல்லி	௧௦௯
ஒன்றிநில்லாகெடும்	௧௨௭
ஒன்றுந்தேவுமுலகுமுயிரும்	௭௧
ஒன்றெனப்பலவென	௧௧

ஓ	பக்கம்.
ஓடியோடிபபலபிறப்பும்	௭௨
ஓடிவந்தென்குழல்மேல்	௧௦௪
ஓடும்புள்ளேறி	௧௮
ஓதுவாரோத்தெல்லாம்	௪௦
ஓயுமூப்புப்பிறப்பு	௪௪
ஓராயிரமாயுலகேழளிக்கும்	௧௫௬
ஓவாத்துயர்ப்பிறவி	௩௫

க	பக்கம்.
கங்குலும்பகலும்	௧௧௦
கடலும்மலையும்விசும்பும்	௨௩
கடல்ஞாலஞ்செய்தேனும்	௮௧
கடல்வண்ணன்கண்ணன்	௪௯
கடியனாய்க்கஞ்சனை	௧௫௯
கடியன்கொடியன்	௭௯

க	பக்கம்.
கடிவார்தண்ணந்துழாய்	௨௭
கடிவார்தீயவினைகள்	௧௯
கடுவினைகளையலாகும்	௧௭௧
கட்கரியபிரமன்சிவன்	௧௨௨
கட்டுரைக்கில்தாமரை	௪0
கட்டெழிற்சோலை	௧0௧
கண்களாற்காண	௫௧
கண்கள்காண்டற்கரியனாய்	௪௯
கண்கள்சிவந்துபெரியவாய்	௩௪௩
கண்டதுவேகொண்டு	௪௧௫
கண்டவின்பம்துன்பம்	௯௪
கண்டாயேநெஞ்சே	௨௧
கண்டுகேட்டுற்றுமோந்து	௭0
கண்டுகொண்டென்கண்	௧௫௬
கண்டுகொண்டென்கைகள்	௯௭
கண்டுந்தெளிந்தும்	௧௧௮
கண்டேகளிக்கின்றது	௧௯௨
கண்டேன்கமலமலர்	௧௭௫
கண்டோம்கண்டோம்	௭௪
கண்ணபிரானைவிண்ணோர்	௭௩
கண்ணனல்லாலில்லை	௧௫0
கண்ணனைமாயன்தன்னை	௪௫
கண்ணன்கழலிணை	௧௭௬
கண்ணாவானென்றும்	௧௮
கண்ணித்தண்ணந்துழாய்	௩௨
கண்ணிஎனதுயிர்	௬0
கண்ணுள்நின்றகலான்	௧௮௧
கண்ணுள்ளேநிற்கும்	௨௧
கண்ணேஉன்னைக்காண	௧௫௫
கண்தலங்கள்செய்ய	௯௬
கமலக்கண்ணன்	௨0
கரவிசும்பெரிவளி	௯
கரியமேனிமிசை	௬௩
கருத்தில்தேவும்	௨௫
கருத்தேஉன்னைக்காண	௧௫௫
கருமமும்கருமபலனும	௪௭
கருமவன்பாசம்கழித்து	௩௮
கருமாணிக்கமலைமேல்	௧௪௫
கருளப்புட்கொடி	௮௪
கரைகொள்பைம்பொழில்	௯௭
கலக்கமில்லாநற்றவமுனிவர்	௧௩௫
கலக்கவேழ்கடல்	௯௬
கலந்தென்னாவிநலங்கொள்	௧௯
கலியுகமொன்றும்	௭௫
கழல்வளைபூரிப்ப	௮௮
கழறேல்நம்பீயுன்கைதவம்	௯௩
கழிமின்தொண்டீர்கள்	௧௯

க	பக்கம்.
கழியமிக்கதோர்காதலள்	௮0
களிப்பும்கவர்வும்	௨௭
களைவாய்துன்பம்	௮௯
கள்வாஎம்மையும்	௨௫
கள்ளவிழும்மலரிட்டு	௧௬௬
கள்ளவிழ்தாமரைக்கண்	௧௨௩
கள்ளவேடத்தை	௮௯
கற்குங்கல்விக்கு	௮௧
கற்பகக்காவன	௧0௧
கற்பாரிராமபிரானை	௧௧௮
கன்மமன்றெங்கள்	௯௩
கா	
காக்குமியல்வினன்	௨௫
காட்கரையேத்தும்	௧௫௯
காட்டித்தன்கனைகழல்கள்	௧௭௮
காட்டிநீகரந்துமிழும்	௬0
காணவந்தென்கண்முகப்பே	௯௯
காணவாராயென்றென்று	௧௩௯
காணுமாறருளாய்	௧௨௮
காண்கின்றநிலமெல்லாம்	௮௧
காண்கொடுப்பானல்லன்	௧௩௩
காண்டுங்கொலோ	௧௨0
காண்பதெஞ்ஞான்றுகொலோ	௮௮
காண்பாரார்எம்மீசன்	௩௫
காண்மின்களன்னையர்காள்	௧௨௨
காண்மின்களுலகீர்	௯௫
காதல்மென்பெடையோடு	௯௧
காத்தவெங்கூத்தாவோ	௧௨0
காப்பாராரிவ்விடத்து	௭௮
காமுற்றகையறவோடு	௨௩
காய்சினப்பறவையூர்ந்து	௧௫௧
காரியம்நல்லனகளவை	௧0௩
கார்வண்ணன்கண்ணபிரான்	௭௪
காலசக்கரத்தொடு	௯0
காலமிளைக்கிலல்லால்	௧௩௧
காலம்பெறவென்னை	௧௧௪
கி	
கிடந்தநாள்கிடந்தாய்	௧௫௧
கிடந்திருந்துநின்றளந்து	௩௫
கிளரொளியால்குறைவில்லா	௯௮
கிளரொளியிளமை	௩௮
கிறியெனநினைமின்கீழ்மை	௩௮
கிற்பன்கில்லேனென்றிலன்	௪௨
கீ	
கீழ்மையினாலங்கோர்	௯௫
கு	
குடிக்கிடந்தாக்கஞ்செய்து	௧௫0

கு	பக்கம்.
குடியடியாரிவர்	கஅ௬
குடைந்துவண்டுண்ணும்	கஅ
குணங்கொள்நிறைபுகழ்	ருஎ
குமுறுமோசைவிழவொலி	கூஎ
குரவையாய்ச்சியரோடு	கூரு
குரைகழல்கள்குறுகினம்	கஎஅ
குரைகழல்கள்நீட்டி	கூ௦
குலந்தாங்குசாதிகள்	ரு௦
குலமுதலடுந்தீவினை	க௰௬
குழகியெங்கள்குழமணன்	கூங
குழாங்கொள்பேரரக்கன்	உஎ
குழையும்வாண்முகத்து	கூஅ
குறிக்கொள்ஞானங்களால்	உஎ
குறுகமிகவுணர்வத்தொடு	ருஎ
குறுகாநீளாஇறுதிகூடா	க௦கூ
குறைவில்தடங்கடல்கோளரா	ருச
குன்றமெடுத்தபிரான்	கசஎ
குன்றமேந்திக்குளிர்மழை	சச
கூ	
கூக்குரல்கேட்டும்	கருஎ
கூடச்சென்றேன் இனி	கஙக
கூடிநீரைக்கடைந்தவாறும்	கூ௦
கூடிவண்டறையும்தண்தார்	சகூ
கூடிற்றாகில்நல்லுறைப்பு	கசச
கூடுங்கொல்வைகலும்	கஉகூ
கூட்டுண்டுநீங்கிய	கருஎ
கூட்டுதிநின்குரைகழல்கள்	எ௦
கூத்தர்குடமெடுத்தாடில்	கூக
கூத்தவம்மான்	கசக
கூத்தன்கோவலன்	ககூகூ
கூந்தல்மலர்மங்கைக்கும்	அங
கூவிக்கூவிக்கொடுவினை	சஉ
கூவிக்கொள்ளாய்வந்து	கஅச
கூவுதல்வருதல்செய்திடாய்	கருகூ
கூவுமாறறியமாட்டேன்	சரு
கூறாய்நீறாய்நிலனாகி	க௦எ
கூறுதலொன்றாரா	ங௦
கெ	
கெடுமிடராயவெல்லாம்	கஎ௦
கே	
கேசவன்தமர்கீழ்மேல்	ஙஉ
கேடில்விழுபுகழ்	ருரு
கேட்டுமுணர்ந்தவர்	ககஅ
கேட்பார்கள்கேசவன்கீர்த்தி	ககஅ
கேயத்தீங்குழல்	கூரு
கை	
கைகளாலாரத்தொழுது	ருக

கை	பக்கம்.
கைதவஞ்செம்மை	கூச
கையார்சக்கரத்து	எஉ
கையுள்நன்முகம்	அ௦
கொ	
கொடியவினையாதும்	அங
கொடியார்மாடம்	கஙச
கொடியேரிடை	ககூக
கொடுவினைப்படைகள்	கருஉ
கொண்டபெண்டிர்	கசஅ
கொண்டமூர்த்தியோர்	கக௦
கொண்டல்வண்ணா	கஙகூ
கொண்டாட்டுங்குலம்	கூகூ
கொண்டானேழ்விடை	கக
கொண்மினிடர்கெட	கசக
கொம்புபோற்சீதைபொருட்டு	ருஅ
கொல்லாமாக்கோல்	சக
கொல்லையென்பர்கொலோ	க௦உ
கொழுந்துவானவர்கட்கு	ககஉ
கொள்கின்றகோளிருளை	கஉஉ
கொள்கைகொளாமை	கூகூ
கொள்வன்நான்மாவலி	ருஉ
கொள்ளமாளாவின்பம்	கூகூ
கொள்ளும்பயனில்லை	ருங
கொள்ளென்றுகிளர்ந்த	கூகூ
கொன்றுயிருண்ணும்விசாதி	எரு
கோ	
கோட்படட்சிந்தையையாய்	உங
கோதிலவண்புகழ்	ருஅ
கோமளவான்கன்றை	கூக
கோயில்கொண்டான்தன்	கசக
கோலங்கொள்சுவர்க்கமும்	அங
கோலமலர்ப்பாவைக்கு	கஅரு
கோலமேதாமரை	ருஉ
கோவாகியமாவலியை	ககூஉ
கோவிந்தன்குடக்கூத்தன்	ஙங
கோவைவாயாள்பொருட்டு	ருகூ
கோளிழைத்தாமரை	கஉஉ
கோளுண்டானன்றிவந்து	கருகூ
ச	
சக்கரத்தண்ணலேஎன்று	கூஎ
சங்குசக்கரம்அங்கையில்	ககூ
சங்குவில்வாள்தண்டு	க௦௦
சதிரிளமடவார்தாழ்ச்சியை	ஙஅ
சதுரமென்றுதம்மைத்தாமே	கசகூ
சரணமாகியநான்மறை	கஙச
சரணமாகும்தனதாள்	ககூகூ
சன்மசன்மாந்தரங்காத்து	ரு௦

ச	பக்கம்.
சன்மம்பலபலசெய்து	௫௪
சா	
சாதிமாணிக்கமென்கோ	௪௫
சாதுசனத்தைநலியும்	௪௭
சாமாறுங்கெடுமாறும்	௬௯
சாயக்குருந்தமொசித்த	௧௦௧
சாராவதங்கள்	௧௭௭
சார்ந்தவிருவல்வினை	௧௫
சார்வேதவநெறிக்கு	௧௭௪
சி	
சிக்கெனச்சிறிதோரிடமும்	௩௧
சித்திரத்தேர்வலவா	௧௨௩
சிந்திக்குந்திசைக்கும்	௧௧௧
சிந்தைமற்றொன்றின்	௧௨௭
சிந்தையாலும்சொல்லாலும்	௯௯
சிரீதரன்செய்யதாமரை	௯௩
சிறப்பில்வீடுசுவர்க்கம்	௩௬
சீ	
சீர்கண்டுகொண்டு	௧௨௫
சீர்மைகொள்வீடு	௩௫
சீலமில்லாச்சிறியன்	௬௬
சீலமெல்லையிலான்	௧௫௪
சு	
சுடர்ப்பாம்பணைநம்பனை	௧௪௩
சுடர்வளையுங்கலையும்	௧௬௦
சுமந்துமாமலர்நீர்சுடர்	௪௪
சுரரறிவருநிலை	௯
சூ	
சூடுமலர்க்குழலீர்	௮௭
சூதுநானறியாவகை	௧௦௯
சூதென்றுகளவுஞ்சூதும்	௩௯
சூழல்கள்சிந்திக்கில்	௧௧௮
சூழல்பலபலவல்லான்	௧௯
சூழ்கண்டாயென்	௮௬
சூழ்ச்சிஞானச்சுடர்	௪௧
சூழ்ந்தகன்றாழ்ந்து	௧௮௫
சூழ்விசும்பணிமுகில்	௧௮௨
செ	
செங்கனிவாயின்திறத்தது	௧௧௪
செங்கனிவாயெங்கள்	௧௭௪
செஞ்சொற்கவிகாள்	௧௭௯
செய்கின்றகிதியெல்லாம்	௮௨
செய்கின்றதென்கண்ணுக்கு	௭௫
செய்யதாமரைக்கண்ணனாய்	௪௮

செ	பக்கம்.
செய்யேல்தீவினையென்று	௩௬
செலக்காண்கிற்பார்	௮௬
செல்லவுணர்ந்தவர்	௧௧௯
செல்வன்நாரணனென்ற	௨௨
செவிகளாலாரநின்கீர்த்தி	௫௨
செவ்வாயுந்திவெண்பல்	௧௪௩
சே	
சேருங்கொடைபுகழ்	௫௩
சேர்த்தடத்தென்குருகூர	௧௦
சேர்ந்தார்தீவினைகட்கு	௨௬
சேர்வன்சென்றென்	௧௧௫
சொ	
சொல்லமாட்டேனடியேன்	௧௩௯
சொல்லீரென்னம்மானை	௩௦
சொன்னால்விரோதமிது	௫௨
சோ	
சோதியாகியெல்லா	௪௩
சோராதஎப்பொருட்கும்	௨௪
சோலைத்திருக்கடித்தானத்து	௧௪௧
ஞா	
ஞாலத்தூடேநடந்து	௧௦௫
ஞாலம்போனகம்பற்றி	௧௩௪
த	
தகவன்றென்றுரையீர்கள்	௧௬௩
தகவிலைதகவிலையேநீகண்ணே	௧௭௨
தசவுடையவனேஎன்னும்	௨௮
தகுஞ்சீர்த்தன்தனி	௨௫
தக்கிலமேகேளீர்கள்	௧௬
தஞ்சமாகியதந்தைதாயொடு	௪௯
தணியும்பொழுதில்லை	௯௫
தண்கடல்வட்டத்துள்	௪௬
தமர்கள்கூட்டவல்வினையை	௧௪௮
தருமவரும்பயனாய	௧௬
தலைப்பெய்காலம்	௪௨
தலைமேலதாளிணைகள்	௧௭௮
தலைமேற்புனைந்தேன்	௧௭௫
தழுவிநின்றகாதல்தன்னால்	௯௭
தளர்ந்தும்முறிந்தும்	௧௦௫
தளர்வின்றியேயென்றும்	௫௫
தளிர்நிறத்தால்குறைவில்லா	௬௮
தனிமாப்புகழேயெஞ்ஞான்று	௧௪௮
தன்மையறிபவர்	௧௧௮
தா	
தாமரைக்கண்ணனை	௩௧
தாமோதரனைத்தனிமுதல்வனை	௩௪

தா	பக்கம்.
தாயப்பதிகள்தலை	கசக
தாளதாமரைத்தடமணிவயல்	கசுஅ
தாளதாமரையான்	கருச
தாள்களையெனக்கே	கஙு0
தாள்பரப்பிமண்தாவிய	சச
தானநகர்கள்	கசக
தானேயாகிநிறைந்து	களக
தானேயுலகெல்லாம்	களசு
தானொருருவேதனிவித்தாய்	கச
தி	
திகழுமென்சிந்தையுள்	கஙுஎ
திகழும்தன்திருவருள்	கசஉ
திகழ்கின்றதிருமார்பில்	களஅ
திசைக்கின்றதே	சுச
திடவிசும்பெரிவளி	க
திண்ணன்வீடுமுதல்	உச
திரியுங்கலியுகம்	எச
திரியுங்காற்றோடு	சஅ
திரிவிக்கிரமன்செந்தாமரை	ஙுஙு
திருக்கடித்தானமும்	கச0
திருச்செங்குன்றூரில்	கஙுஎ
திருந்தக்கண்டெனக்கு	கக
திருந்துவேதமும்	கக
திருப்பேர்நகரான்	கஅக
திருமாலிருஞ்சோலைமலைஎன்	கஅ0
திருமாலிருஞ்சோலைமலையே	கஅ0
திருமாலிருஞ்சோலையானே	களக
திருமால்நான்முகன்	கஙுரு
திருமேனியடிகளுக்கு	கசு0
திருவடியைநாரணனை	எ0
திருவருள்செய்பவன்	கருஅ
திருவருள்மூழ்கிவைகலும்	கசசு
திருவழுதிநாடென்றும்	எ
திருவுடம்புவான்சுடர்	உக
திருவுடைமன்னரை	சுஉ
திருவுருவுகிடந்தவாறும்	சு0
திறங்களாகியெங்கும்	கக
திறத்துக்கேதுப்புரவாம்	கஉரு
திறமுடைவலத்தால்	ஙுஅ
திறம்பாமல்மண்காக்கின்றேன்	அஉ
தீ	
தீர்த்தனுக்கற்றபின்	கஉஎ
தீர்த்தனுலகளந்த	ஙுரு
தீர்ந்தவடியவர்தம்மை	சஎ
தீர்ப்பாரையாமினி	சுச
தீர்மருந்தின்றி	க0க
தீவினையுள்ளத்தின்சார்வல்ல	கஉஎ

து	பக்கம்.
துக்கமில்ஞானச்சுடரொளி	ருரு
துடைத்தகோவிந்தனாரே	களக
துணையுஞ்சார்வுமாகுவார்	கசக
துயககறுமதியில்	கட
துயரங்கள்செய்யும்	கஉச
துயரமேதருதுன்பம்	சக
துயரில்சுடரொளி	ருரு
துயர்கெடுங்கடிதடைந்து	கசுக
துவளில்மாமணிமாடம்	கஎ
துன்பமுமின்பமுமாகிய	ருரு
தூ	
தூதுரைத்தல்செபபுமின்	கசு0
தூநீர்முகில்போல்தோன்றும்	கஙுசு
தூமதுவாய்கள்கொண்டு	க0ச
தெ	
தெய்வங்காள்என்செய்கேன்	எஅ
தெய்வநாயகன்நாரணன்	அரு
தெரிதல்நினைதல்எண்ணல்	க0சு
தெருளும்மருளும்மாய்த்து	கசரு
தெளிவிசும்புகடிதோடி	கசு0
தெளிவுற்றுவீவின்றி	ககக
தே	
தேவர்முனிவர்க்குஎன்றும்	கசுஉ
தேவிமாராவார்திருமகள்	கஉஅ
தேவுமெப்பொருளும்	உச
தேனைநன்பாலைக்கன்னலை	கஙுஅ
தொ	
தொண்டர்தந்தம்துயர்போக	கசுக
தொண்டீர்வம்மின்	கசுஅ
தொல்லருள்நல்வினையால்	அஅ
தொல்லையஞ்சோதி	கஙுஉ
தொழுதனருலகர்கள்	கஅஉ
தொழுதாடித்தூமணிவண்	சுரு
தொழுதுமாமலர்நீர்சுடர	கருச
தொழுத்தையோம்தனிமை	களஉ
தோ	
தோளிசேர்பின்னைபொருட்டு	ருஅ
தோளிணைமேலும்நன்மார்பின்	உ0
தோற்றக்கேடவையில்லவ	சஅ
தோற்றோம்மடநெஞ்சம்	உக
ந	
நகரமும்நாடுகளும்ஞானமும்	சுச
நகரமும்நாடும்பிறவும்	ககரு
நங்கள்வரிவளையாயங்காளோ	ககக

ந	பக்கம்.
நங்கைமீர்நீரும்	௫௮
நண்ணூதார்முறுவலிப்ப	௯௯
நண்ணாவசுரர்நலிவெய்த	௧௭௯
நண்ணினம்நாராயணனை	௧௭௭
நமக்கும்பூவின்மிசை	௬௩
நம்பனைஞாலம்படைத்தவனை	௫௦
நம்பியைத்தென்குறுங்குடி	௨௨
நலமெனநினைமின்	௩௯
நல்கித்தான்காத்தளிக்கும்	௧௩
நல்குரவும்செல்வும்	௯௪
நல்லகோட்பாட்டுலகங்கள்	௧௪௮
நன்கெண்ணிநான்வளர்த்த	௧௫௭
நன்றாய்ஞானங்கடந்து	௧௪௪
நன்னலத்தோழிமீர்காள்	௮௮
நா	
நாகணைமிசைநம்பிரான்	௯௦
நாகத்தணையானை	௧௭௫
நாடாதமலர்நாடி	௧௩
நாடிநீர்வணங்கும்	௭௧
நாடீர்நாடோறும்	௧௭௬
நாட்டிற்பிறந்தவர்நாரணற்கு	௧௧௮
நாணும்நிறையும்	௭௭
நாதனைஞாலமும்வானமும்	௫௦
நாதன்ஞாலங்கொள்	௧௯
நாமங்களாயிரமுடைய	௮௮
நாமடைந்தநல்லரண்	௧௬௯
நாமவனிவனுவன்	௮
நாமுமக்கறியச்சொன்ன	௧௭௧
நாயகன்முழுவேழுலகு	௯௭
நாரணனெம்மான்	௧௭௬
நாரணன்தமரைக்கண்டு	௧௮௨
நாரணன்முழுவேழுலகு	௩௩
நாவினுள்நின்று	௨௦
நாளும்நின்றடுநமபழமை	௧௨
நாளுமெழுநிலநீருமெழு	௧௧௭
நாளும்வாய்க்கநங்கட்கு	௧௪௮
நாளேலறியேன்	௧௬௧
நாள்தொறும்வீடின்றியே	௮௮
நாணக்கருங்குழல்	௧௧௩
நான்றிலஏழ்மண்ணும்	௧௧௬
நி	
நிகரில்மல்லரைச்செற்றதும்	௯௬
நிச்சலுந்தோழிமீர்காள்	௮௭
நிச்சித்திருந்தேன்	௧௭௫
நில்லாவல்லல்	௧௮௨
நிழல்வெய்யில்சிறுமை	௧௫

நி	பக்கம்.
நிறங்கரியானுக்கு	௧௦௦
நிறுத்திநும்முள்ளத்து	௭௫
நிறைந்தவன்பழிநங்குடிக்கு	௮௦
நிறைவினுல்குறைவில்லா	௬௮
நிற்கும்நான்மறைவாணர்	௯௮
நிற்றிமுற்றத்துளென்று	௧௨௨
நினைக்கிலேன்தெய்வங்காள்	௧௦௯
நினைதொறும்சொல்லும்	௧௫௮
நினைந்துநைந்துள்கரைந்து	௧௪
நினைப்பான்புகில்	௫௬
நின்றவாறும்இருந்தவாறும்	௮௯
நின்றவொன்றையுணர்ந்தே	௧௪௪
நின்றனரிருந்தனர்	௯
நின்றிடுந்திசைக்கும்	௭௯
நின்றிலங்குமுடியினாய்	௯௯
நின்றுநின்றுபலநாள்	௫௪
நின்றுருகுகின்றேனேபோல	௭௯
நீ	
நீங்கநில்லாகண்ணநீர்கள்	௭௯
நீணகரமதுவேமலர்	௧௨௭
நீணிலத்தொடுவான்	௯௬
நீந்தும்துயர்ப்பிறவி	௩௪
நீயலையேசிறுபூவாய்	௧௩
நீயும்நாணும்இந்நேர்நிற்கில்	௨௧
நீயும்பாங்கல்லைகாண்	௭௮
நீராய்நிலனாய்த்தீயாய்	௧௦௫
நீர்நுமதென்றிவை	௫௦
நீர்புரைவண்ணன்	௧௯
நீர்மையால்நெஞ்சம்	௧௫௮
நீர்மையில்நூற்றுவர்	௪௭
நீள்கடல்சூழிலங்கை	௧௯
நு	
நுகர்ச்சியுறுமோமூவுலகின்	௧௪௭
நுங்கட்குயானுரைக்கேன்	௧௦௪
நுமரோடும்பிரியாதே	௧௯௦
நெ	
நெஞ்சமேநல்லைநல்லை	௨௧
நெஞ்சமேநீள்நகராக	௫௧
நெடியானருள்சூடும்	௧௭௭
நெடுமாற்கடிமை	௧௪௭
நெற்றியுள்நின்றென்னை	௨௦
நே	
நேர்சரிந்தான்கொடிக்கோழி	௧௧௭
நேர்பட்டநிறைமூவுலகு	௧௪௯
நை	
நைவாயவெம்மேபோல்	௨௩

நொ — பக்கம்.
நொந்தாராக்காதல்நோய் உரு
நோ
நோக்கிநோக்கியுன்னை கூகூ
நோக்குமபக்கமெல்லாம் கூஅ
நோலாதாற்றேன் க0அ
நோவவாய்ச்சியுரலோடு கூகூ
நோற்றநோன்பிலேன் அச
ப
பக்கம்நோக்கிநிற்குமையு அ1
பங்கயக்கண்ணனென்கோ சரு
பத்தாம்ருதம் கூ
படிமன்னுபல்கலன் ருஎ
படைப்பொடுகெடுப்பு கருஎ
பட்டபோதுஎழுபோது உஅ
பணிநெஞ்சேநாளும் கஎரு
பணிமின்திருவருள் ருகூ
பணிமொழிநினைதொறும் கஎஉ
பணியாவமரர் கரூச
பண்டைநாளாலே கரு0
பண்புடைவண்டொடு கருஎ
பண்புடைவேதம்பயந்த க1க
பத்துடையடியவர்க்கு கக
பயனல்லசெய்துபயனில்லை ஙஅ
பயிலுஞ்சுடரொளி அகூ
பரஞ்சுடருடம்பாய் கூச
பரஞ்சோதிநீபரமாய் ச0
பரந்ததண்பரவையுள் கூ
பரந்ததெய்வமும் எக
பரவாளிவள்நின்று கசகூ
பரவிவானவரேத்தநின்ற சஅ
பரிவதிலீசனைப்பாடி கசு
பரிவின்றிவாணனைக்காத்து ருச
பலபலவேயாபரணம் ங0
பவளம்போற்கனிவாய்சிவப் கருக
பள்ளியாலிலையேழுலகும் உரு
பற்பநாபன்உயர்வறவுயரும் கூச
பற்றிலனீசனும்முற்றவும் க0
பற்றென்றுபற்றிபரம கஎகூ
பா
பாசங்கள்நீக்கியென்னை கஉங
பாசறவெய்தியின்னே க0ச
பாடுசாராவினைபற்றற கஙஎ
பாதங்கள்மேலணி அஅ
பாதம்நாளும்பணிய கஙஎ
பாதமடைவதன்பாசத்தாலே கஙங
பாமருமூவுலகும்படைத்த ககங

பா — பக்கம்.
பாம்பணைமேல்பாற்கடலுள் கூ0
பாயோரடிவைத்ததன்கீழ் க0அ
பாலதுன்பங்களின்பங்கள் ககஉ
பாலனாய்ஏழுலகுண்டு ருஎ
பாலென்கோநான்குவேத சரு
பாவியல்வேதநன்மாலை ருஅ
பாவியேன்மனத்தே ககங
பி
பிடித்தேன்பிறவிகெடுத்தேன் கஅக
பிணக்கறவறுவகை கக
பிணக்கியாவையும்யாவரும் கூங
பிரான்பெருநிலங்கீண்டவன் கஎ
பிரியாதாட்செய்யென்று கஎஅ
பிறந்தவாறும்வளர்ந்தவாறும் அகூ
பிறந்தமாயாபாரதம்பொருத கச0
பிறவித்துயரறஞானத்துள் கஎ
பிறிதில்லையெனக்கு கங.கூ
பின்நின்றகாதல்நோய் எஅ
பின்னைகொல்நிலமாமகள் கூக
பீ
பீடுடைநான்முகனை க00
பு
புகலிடமறிகிலம்தமியமாலோ கசுங
புகழுநல்லொருவனென்கோ சச
புகழுமிவள்நின்றிராப்பகல் கசரு
புக்கடிமையினால்தன்னை எஉ
புக்கவரியுருவாய் கஉக
புணராநின்றமரமேழ் க0எ
புணர்க்குமயனாம் ஙரு
புண்ணியம்செய்துநல்ல கஎ0
புண்ணியம்பாவம்புணர்ச்சி கூச
புதுமணம்முகந்துகொண்டு கசுச
புலம்புசீர்ப்பூமியளந்த ருஉ
புலனைந்துமேயும்பொறி ஙரு
புளிங்குடிக்கிடந்து கருக
புள்ளின்வாய்பிளந்தாய் அரு
புறமறக்கட்டிக்கொண்டு எகூ
புனையிழைகளணிவும் கசங
பூ
பூசுஞ்சாந்தென்னெஞ்சமே ருகூ
பூந்துழாய்முடியார்க்கு கூ0
பூவைகள்போல்நிறத்தன் க0ச
பூவைபைங்கிளிகள் க0உ
பெ
பெண்பிறந்தாரெய்தும் எஅ
பெய்யும்பூங்குழல் அகூ

பெ	பக்கம்.
பெய்வளைக்கைகளைக்கூப்பி	கூக
பெரியவப்பனைப்பிரமன்	கரு0
பெருமக்களுள்ளவர்	ருO
பெருமையனேவானத்து	களரு
பெற்றினிப்போக்குவனே	கஅரு
பே	
பேசநின்றசிவனுக்கும்	எக
பேசுமின்கூசமின்றிப	கஎ0
பேய்முலையுண்டுசகடம்பாய்	எஎ
பேரெயில்சூழ்கடல்	ககரு
பேரேயுறைகின்ற	கஅக
பேர்த்துமற்றோர்களைகண்	க0ச
பொ	
பொருந்தியமாமருதினிடை	ருஉ
பொருமாநீள்படைஆழி	உக
பொருளென்றிவ்வுலகம்	௩கூ
பொருள்கையுண்டாய்	கசகூ
பொருள்மற்றெனக்கும்	கசஉ
பொலிகபொலிகபொலிக	எச
பொற்பமைநீண்முடி	க0௩
பொன்முடியம்போரேற்றை	௬0
பொன்னுலகாளீரோ	க0௬
போ	
போகின்றகாலங்கள்	௩உ
போகுநம்பீயுன்தாமரை	கூஉ
போயிருந்துநின்புள்ளுவம்	கூஉ
போரவிட்டிட்டென்னை	கஅச
போழ்துமெலிந்தபுன்செக்க	ககஎ
போற்றிமற்றோர்தெய்வம்	எக
போற்றியானிரந்தேன்	கூ௩
பொனுய்மாமருதின்நடுவே	எ௩
ம	
மகிழ்கொள்தெய்வம்	௬எ
மங்கவொட்டுஉன்மாமாயை	கஅ0
மடநெஞ்சால்குறைவில்லா	கூஅ
மடந்தையர்வாழ்த்தலும்	கஅ௬
மடந்தையைவண்கமல	ருஅ
மடவரலன்னைமீர்	கசகூ
மணந்தபேராயா	க௩0
மணாளன்பலர்மங்கைக்கும்	ககூஉ
மணித்தடத்தடிமலர்க்கண்கள்	ககூக
மணிமாமைகுறைவில்லா	கூஅ
மணியைவானவர்கண்ணனை	உஉ
மண்ணும்விண்ணும்	க0ரு
மண்ணையிருந்துதுழாவி	கூக

ம	பக்கம்.
மண்மிசைப்பெரும்பாரம்	கூகூ
மதிசூதனையன்றிமற்றிலே	௩௩
மதுவார்தண்ணந்துழாயான்	சகூ
மயக்காவாமனனே	கஉ௩
மயர்வறவென்மனத்தே	கஎ
மருந்தாகுமென்றங்கோர்	கூச
மருந்தேநங்கள்போகமகிழ்	கரு௩
மலரடிப்போதுகள்	கஉஎ
மலையையெடுத்துக்கல்மாரி	சகூ
மல்குநீர்க்கண்ணொடு	க0௩
மல்லிகைகமழ்தென்றல்	ககூ௩
மழுங்காதவைந்நுதிய	ச0
மறப்பும்ஞானமும்	உஉ
மறுக்கிவல்வலைப்படுத்தி	எ0
மறையாயநால்வேதத்துள்	சக
மற்றிலம்அரண்வான்	ககூக
மற்றொன்றில்லை	கசக
மனத்தாலும்வாயாலும்	எ
மனப்பரிப்போடு	கூகூ
மனமேஉன்னைவல்வினையே	கருச
மனனகமலமறமலர்மிசை	அ
மனிசரும்மற்றுமுற்றும்	சஎ
மா	
மாசறுசோதிஎன்செய்ய	எகூ
மாசுணச்சுடருடம்பாய்	ச0
மாட்டாதேயாகிலும்	ச0
மாண்பமைகோலத்து	க0க
மாதர்மாமண்மடந்தை	ருஅ
மாதவனென்றதேகொண்டு	௩௩
மாதவனென்றென்று	கஎகூ
மாதவன்தமரென்று	கஅ௬
மாதவன்பால்சடகோபன்	ககூ
மாயக்கூத்தாவாமனு	க௬அ
மாயப்பிரானெனவல்வினை	கச0
மாயமயக்குமயக்கானென்னை	கசஉ
மாயமறிபவர்மாயவற்கு	கககூ
மாயஞ்செய்யேலென்னை	கஅச
மாயனென்னெஞ்சின்	உ0
மாயாவாமனனே	கஉ௩
மாயோம்தீயவலவலை	கரு
மாயோனிகளாய்	கச
மாயத்தவெண்ணிவாய்முலை	ருக
மாய்ந்தறும்வினைகள்தானே	களக
மாரிமாறாததண்ணம்மலை	கூச
மாலரிகேசவன்நாரணன்	க௩உ
மாலுக்குவையமளந்த	க00

மா	பக்கம்.
மாலேமாயப்பெருமானே	கடு
மாலைநண்ணித்தொழுது	ககசு
மாலையும்வந்ததுமாயன்	ககடு
மாறிமாறிப்பலபிறப்பும்	ருஉ
மாறுசேர்படைநூற்றுவர்	அச
மாறுநிரைத்திரைக்கும்	ககஎ
மாற்றங்களாய்ந்துகொண்டு	கoடு
மாணுங்காரமனம்	கஅo
மானேய்நோக்கிமடவாளை	கடு
மானேய்நோக்குநல்லீர்	அஎ
மானைநோக்கிமடப்பின்னை	ககசு
மி	
மிக்கவிறைநிலையும்	எ
மிக்கவுலகுகள்தோறும்	எடு
மின்கொள்சேர்புரிநூல்	சுஉ
மின்னிடைமடவார்கள்	சுஉ
மின்னின்நிலையில	கo
மு	
முகில்வண்ணனடியை	ககரு
முடிசேர்சென்னியம்மா	கருசு
முடிச்சோதியாயுனது	ருசு
முடியாதவென்னெனக்கு	யஉ
முடியானேமூவுலகும	டுக
முடிவிவள்தனக்கொன்று	ககஉ
முட்டில்பல்போகத்தொரு	டுச
முதல்தனிவித்தேயோ	கஅடு
முந்நீர்ஞாலம்படைத்த	சக
முனிந்துசகடமுதைத்து	ககச
முனியேநான்முகனே	கஅச
முன்னல்யாழ்பயில்நூல்	உஎ
முன்னின்றுயென்று	அo
மூ	
மூவராகியமூர்த்தியை	சஅ
மூவுலகங்களுமாய	சுச
மெ	
மெய்ந்நின்றுகமழ்துளவ	கஎஅ
மெய்யமர்பல்கலன்	கoக
மெய்யனாகும்விரும்பித்	ககஎ
மெலியுநோய்தீர்க்கும்	டுசு
மெல்லிலைச்செல்வவண்	கசசு
மே	
மேகலையால்குறைவில்லா	சுஅ
மேயான்வேங்கடம்	கஎசு
மேய்நிரைகீழ்புக	ககஎ
மேலாத்தேவர்களும்	எரு
மேலும்வன்பழிநங்குடிக்கு	அய

மே	பக்கம்.
மேவித்தொழுதுய்ம்மினீர்	எடு
மேவிநின்றுதொழுவார்	சுரு
மேவினைந்தினைந்து	கoஉ
மேவுதுன்பவினைகளை	சஉ
மை	
மையகண்ணாள்மலர்மேல்	சுரு
மையமர்வாளெடுங்கண்	கயச
மையல்செய்தென்னை	ககக
மையார்கருங்கண்ணி	கடுரு
மொ	
மொய்ம்மாம்பூம்பொழில்	சசு
ய	
யவருமியாவையும்	உடு
யா	
யாதுமில்லைமிக்கதனில்	கசசு
யாமடலூர்ந்தும்	எஎ
யாமுடைநெஞ்சமும்	கசுச
யாருமோர்நிலைமையனென	கக
யாவையும்யவருந்தானாய்	யசு
யானும்நீதானேயாவதோ	கருo
யானுந்தானாயொழிந்தானை	கசச
யானுமேத்திஏழுலகம்	சுய
யானேயென்னைஅறியகிலா	ருஎ
யானொட்டியென்னுள்	கஎ
வ	
வகையால்மனமொன்றி	கஎசு
வஞ்சனேஎன்னும	உஅ
வட்கிலளிறையும்	ககக
வண்ணமருள்கொள்	கயஎ
வண்ணமாமணிச்சோதியை	ருச
வண்ணம்மணிமாடம்	கசுஉ
வதுவைவார்த்தையுள்	அசு
வந்தருளியென்னெஞ்சு	அடு
வந்தவரெதிர்கொள்ள	கஅரு
வந்தாய்போலேவந்தும்	சஉ
வந்தாய்போலேவாராதாய்	கoஅ
வந்திருந்தும்முடைய	கயடு
வந்துதோன்றாயன்றேல்	கருசு
வந்தெய்துமாறறியேன்	கஉo
வம்பவிழ்கோதைபொருட்	சசு
வம்மின்புலவீர்	டுரு
வயிற்றிற்கொண்டு	கசரு
வரிவளையால்குறைவில்லா	சுஅ
வருந்தாதவருந்தவத்த	சo
வருவார்செல்வார்வண்பரி	கருடு

வ	பக்கம்.
வலஞ்செய்துவைகல்	௩௯
வலத்தனன்திரிபுரமெரித்தவ	௧௨
வலையுளகப்படுத்து	௭௭
வல்வினைதீர்க்குங்கண்ணனை	௯௨
வல்லிசேர்நுண்ணிடை	௫௮
வழக்கெனநினைமின்	௩௯
வழிபட்டோடவருள்	௧௪௭
வளவேழுலகின்முதலாய	௧௪
வள்ளலேமதுசூதனு	௩௧
வன்சரண்சுரர்க்காய்	௯௫
வன்மாவையமளந்த	௪௧
வா	
வாங்குநீர்மலருலகில்	௭௦
வாசகமேயேத்தவருள்	௫௧
வாட்டமில்புகழ்	௨௯
வாட்டாற்றானடிவணங்கி	௧௭௭
வாணுதலிம்மடவரல்	௨௮
வாமனன்என்மரதக	௯௩
வாயுந்திரையுகளும்	௨௨
வாய்கொண்டுமானிடம்	௫௩
வாய்க்கதமியேற்கு	௧௪௮
வாய்க்குங்கொல்நிச்சலும்	௧௨௬
வாராயுன்திருப்பாதமலர்	௯௭
வாராவருவாய்	௮௭
வாரிக்கொண்டுன்னை	௧௫௯
வார்கடாவருவியானைமாமலை	௧௯௫
வார்த்தையறிபவர்	௧௧௯
வார்புனலந்தணருவி	௪௭
வாலியதோர்கனிகொல்	௧௨௧
வாழ்தல்கண்டேர்குணம்	௧௪௯
வாழ்த்துவார்பலராக	௪௦
வாழ்ந்தார்கள்வாழ்ந்தது	௫௬
வானத்தும்வானத்துள்	௬௩
வானவராதியென்கோ	௪௫
வானேதருவான்எனக்கா	௧௮௧
வானேறவழிதந்தவாட்ட	௧௭௮
வான்திகழுஞ்சோலை	௭
வி	
விடலில்சக்கரத்தண்ணலை	௯௭
விடுவேனோஎன்விளக்கை	௧௭
விட்டிலங்குசெஞ்சோதி	௯௯
விண்மீதிருப்பாய்	௧௦௬
விண்ணுளார்பெருமாற்கு	௧௦௯

வி	பக்கம்.
விதியினால்பெடைமணக்கும்	௧௩
விதிவகைபுகுந்தனரென்று	௧௮௩
வியப்பாயவியப்பில்லா	௪௧
வியன்மூவுலகுபெறினும்	௧௪௭
விரும்பிப்பகவரை	௬௨
விளம்புமாறுசமயமும்	௭௨
வினையேன்வினைதீர்மருந்தா	௧௫
வினைவல்லிருளென்னும்	௧௭௭
வீ	
வீடுமின்முற்றவும்	௧௦
வீவனின்பசுநிரைமேய்க்க	௧௭௨
வீவிலின்பம்மிக	௬௩
வீற்றிடங்கொண்டு	௧௫௨
வீற்றிருந்தேழுலகும	௬௨
வெ	
வெஞ்சுடரில்தானடுமால்	௭௮
வெள்ளைச்சுரிசங்கொடாழி	௧௧௩
வெற்பையொன்றெடுத்து	௧௮
வே	
வேங்கடங்கள்மெய்ம்மேல்	௪௩
வேண்டிச்சென்றொன்று	௧௩௧
வேண்டித்தேவரிரக்க	௯௬
வேதம்வல்லார்களைக்கொண்டு	௬௫
வேதியாநிற்குமைவால	௧௦௯
வேமெமதுயிரழல்மெழுகி	௧௭௩
வேயின்மலிபுரைதோளி	௫௩
வேய்மருதோளிணைமெலியு	௧௭௧
வேவாராவேட்கைநோய்	௨௪
வேள்வியுள்மடுத்தலும்	௧௮௩
வேறுகொண்டும்மையான்	௯௨
வை	
வைகலும்வெண்ணெய்	௧௯
வைகல்பூங்கழிவாய்வந்து	௯௦
வைகுந்தநாதனென்	௧௨௫
வைகுந்தம்புகுதலும்	௧௮௩
வைகுந்தாமணிவண்ணனே	௩௧
வைத்தநாள்வரையெல்லை	௪௪
வைத்தமாநிதியாம்	௧௦௩
வைத்தேன்மதியால்	௧௪௩
வைப்பாம்மருந்தாம்அடியரை	௧௭
வைம்மின்நும்மனத்து	௪௮

திருவாய்மொழிச் செய்யுளகராதி ஸம்பூர்ணம்.

ஸ்ரீ

க. பொய்கையாழ்வார்.

𑌤𑍁𑌲𑌾𑌯𑌾𑌂𑌶𑍍𑌰𑌵𑌣𑍇𑌜𑌾𑌤𑌂 𑌕𑌾𑌞𑍍𑌚𑍍𑌯𑌾𑌂𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌵𑌾𑌰𑌿𑌜𑌾𑌤𑍍 ।
𑌦𑍍𑌵𑌾𑌪𑌰𑍇𑌪𑌾𑌞𑍍𑌚𑌜𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑌂 𑌸𑌰𑍋𑌯𑍋𑌗𑌿𑌨𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇 ॥

తులాయాం శ్రవణేజాతం కాంచ్యాం కాంచనవారిజాత్ ।
ద్వాపరేపాంచజన్యాంశం సరోయోగినమాశ్రయే ॥

துலாயாம்ஸ்ரவணேஜாதம் காஞ்ச்யாம்காஞ்சநவாரிஜாத்-
த்வாபரேபாஞ்சஜந்யாம்ஸம் ஸரோயோகிநமாஸ்ரயே.

நிலவளம் சலவளம் முதலிய பலவளங்களும் மலிந்து இந்நிலவுலகத்துக்குத் திலகம்போன்றுள்ள தொண்டைமண்டலத்திலே, புண்ணியக்ஷேத்திரங்கள் பலவற்றுள்ளும் மிகச்சிறந்த ஸத்யவ்ரதக்ஷேத்ரத்திலே, "காசிமுதலாகிய நன்னகரியெல்லாம் காரமேனியருளாளர்கச்சிக்கு ஒவ்வா" என்றபடி முத்திதரும் நகரமேழனுள் முக்கியமானதாய் வேகவதியென்னும் புனிதநதி பாயப்பெற்றுக் கண்டவர்கண்கவருங் கச்சித்திருப்பதியிலே, திருவெஃகாவென்னுந் திவ்வியதலத்தின் வடபுறத்தில், சான்றோருள்ளம்போல ஆழ்ந்து தெளிந்துள்ளதொரு பொற்றாமரைப்பொய்கை உண்டு. அதில் பூத்ததொரு கமலமலரிலே, ஐப்பசிமாதத்தில் விஷ்ணுநக்ஷத்திரமான திருவோணத்திலே தேவிற் சிறந்த திருமாலின் திவ்வியபஞ்சாயுதங்களுள் பாஞ்சஜந்ய மென்னுந் திருச்சங்கின் அம்சமாய், ஒருவர், அன்புவெள்ளத்தினகத்திருந்து தியானிக்கின்ற அடியார்களது உள்ளப்பதுமப்போதில் அவர்நினைந்தவடிவோடு எம்பெருமான் விரைந்து தோன்றுதல் போலவும், பிரளயப்பெருங்கடலில் மலர்ந்த அப்பெருமானது உந்தியந்தாமரையில் நான்முகக்கடவுள் உற்பவித்தது போலவும் திருவவதரித்தார்.

அத்தத்தின்பத்தாநாள் தோன்றிய இவர்க்கு, பொய்கையிலவதரித்தது காரணமாக 'பொய்கையாழ்வார்' என்று திருநாமமாயிற்று.

செய்யதுலாவோணத்தில்செகத்துதித்தான்வாழியே
திருக்கச்சிமாநகரம்செழிக்கவந்தோன்வாழியே
வையந்தகளிநூறும்வகுத்துரைத்தான்வாழியே
வனசமலர்க்கருவதனில்வளர்ந்தமைந்தன்வாழியே
வெய்யகதிரோன்றன்னைவிளக்கிட்டான்வாழியே
வேங்கடவா திருமலையைவிரும்புமவன்வாழியே
பொய்கைமுனிவடிவழகும்பொற்பதமும்வாழியே
பொன்முடியும்திருமுகமும்இப்பூதலத்தில்வாழியே.

உ. பூதத்தாழ்வார்.

𑌤𑍁𑌲𑌾𑌧𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌸𑌂𑌭𑍂𑌤𑌂 𑌭𑍂𑌤𑌂𑌕𑌲𑍍𑌲𑍋𑌲𑌮𑌾𑌲𑌿𑌨𑌃 ।
𑌤𑍀𑌰𑍇𑌫𑍁𑌲𑍍𑌲𑍋𑌤𑍍𑌪𑌲𑍇𑌮𑌲𑍍𑌲𑌾 𑌪𑍁𑌰𑍍𑌯𑌾𑌮𑍀𑌡𑍇𑌗𑌦𑌾𑌂𑌶𑌕𑌂 ॥

తులాధనిష్ఠాసంభూతం భూతం కల్లోలమాలినః ।
తీరేఫుల్లోత్పలేమల్లా పుర్యామీడే గదాంశకం ॥

துலாதநிஷ்டாஸம்பூதம் பூதம்கல்லோலமாலிநः -
தீரேபுல்லோத்பலேமல்லா புர்யாமீடேகதாம்ஸகம்.

"தெண்ணீர்வயல் தொண்டைநன்னாடு சான்றோருடைத்து" என்று ஔவையார் பாடியபடி கல்விகேள்வி யறிவொழுக்கங்களா லான்றவர் பலரை யுடையதும், "ஆறேழிரெட்டுத் தொண்டை" என்றவாறு நூற்றெட்டுத்திரு மால்திருப்பதிகளுள் இருபத்திரண்டுள்ளது மான அந்தத் தொண்டைவள நாட்டிலே, கீழ்கடற்கரையிலுள்ள திருக்கடல்மல்லை யென்கிற மஹாபலிபுரத் திலே, குருக்கத்திப்பந்தரிலே, ஒருகுருக்கத்திமலரிலே, கௌமோதகி யென் னுங் கதாயுதத்தின் அம்சமாய், ஐப்பசிமாதத்தில் அவிட்டநக்ஷத்திரத்திலே, ஒருவர் திருவவதாரஞ் செய்தார். "கடல்வண்ணன்பூதம்," "மறுத்திருமார்ப னவன்தன்பூதம்" என்றவாறு எம்பெருமானை அறிதலாலே தமது உள்ளு கையையுடையவ ராதலால், இவர்க்கு 'பூதத்தாழ்வார்' 'என்று திருநாமம்.

அன்பேதகளிநூறுமருளினான்வாழியே
ஐப்பசியிலவிட்டத்திலவதரித்தான்வாழியே
நன்புகழ்சேர்குருக்கத்திநாண்மலரோன்வாழியே
நல்லதிருக்கடல்மல்லைநாதனார்வாழியே
இன்புருகுசிந்தைதிரியிட்டபிரான்வாழியே
எழில்ஞானச்சுடர்விளக்கையேற்றினான்வாழியே
பொன்புரையுந்திருவரங்கர்புகழுரைத்தான்வாழியே
பூதத்தார்தாளிணைகளிப்பூதலத்தில்வாழியே.

௩. பேயாழ்வார்.

𑌤𑍁𑌲𑌾𑌶𑌤𑌭𑌿𑌷𑌗𑍍𑌜𑌾𑌤𑌂 𑌮𑌯𑍂𑌰𑌪𑍁𑌰𑌿𑌕𑍈𑌰𑌵𑌾𑌤𑍍 ।
𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑌂 𑌮𑌹𑌦𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌶𑍍𑌰𑍀𑌨𑌨𑍍𑌦𑌕𑌾𑌂𑌶𑌕𑌮𑍍 ॥

తులాశతభిషగ్జాతం మయూరపురికైరవాత్ ।
మహాంతం మహదాఖ్యాతం వందే శ్రీనందకాంశకం ॥

துலாஶதபிஷக்ஜாதம் மயூரபுரிகைரவாத் -
மஹாந்தம்மஹதாக்யாதம் வந்தேஸ்ரீநந்தகாம்ஶகம்.

துண்டீரமண்டலமென்று ப்ரஸித்தமான அத்தொண்டைநன்னாட்டிலே, ப்ருந்தாரண்யக்ஷேத்ரத்திலே, "குரவமே கமழுங் குளிர்பொழிலூடு குயி லொடு மயில்கள் நின்று ஆல, இரவியின்கதிர்கள் நுழைதல்செய்தறியா"த திரு வல்லிக்கேணியென்னுந் திவ்வியதேசத்துக்குத் தென்திசையிலுள்ள திரு மயிலைநகரியில், ஆதிகேசவப்பெருமாள் கிணற்றிலே யுண்டான தொரு செவ் வல்லிப்பூவிலே நந்தகமென்கிற வாட்படையின் அம்சமாய், ஒருவர், ஐப்பசி மாதத்துச் சதயதாரகையிலே அவதரித்தார்.

இவர், பகவத்பக்தியாற் பரவசப்பட்டு நெஞ்சழிதல் கண்சுழலுதல் அழு தல் சிரித்தல் தொழுதல் மகிழ்தல் ஆடுதல் பாடுதல் அலறுதல் முதலிய தொழில்களையே அநவரதஞ் செய்துகொண்டு, காண்பவர்பேய்பிடித்தவரென் னும்படி யிருந்ததனால், 'பேயாழ்வார்' என்று பெயர்பெற்றனர். பரமபக்தி தலையெடுத்தலா லுண்டாகின்ற பகவதநுபவாதிசயம் மற்றையாவரினும் இவர் க்கு மகத்தாயிருந்ததனாலும், இவர் தாம் எம்பிரானுக்கு ஆட்பட்டது மாத்திர மேயன்றித் திருமழிசையாழ்வாரைத் திருத்திப் பணிகொண்ட மகானதலா லும், இவர்க்கு 'மஹதாஹ்வயர்' என்றும் ஒருதிருநாமம் உண்டு.

திருக்கண்டேனெனநூறும்செப்பினான்வாழியே
    சிறந்தவைப்பசியில்சதயம்சனித்தவள்ளல்வாழியே
மருக்கமழும்மயிலைநகர்வாழவந்தோன்வாழியே
    மலர்க்கரியநெய்தல்தனில்வந்துதித்தான்வாழியே
நெருக்கிடவேயிடைகழியில்நின்றசெல்வன்வாழியே
    நேமிசங்கன்வடிவழகைநெஞ்சில்வைப்போன்வாழியே
பெருக்கமுடன்திருமழிசைப்பிரான்தொழுவோன்வாழியே
    பேயாழ்வார்தாளிணை இப்பெருநிலத்தில்வாழியே.

அயோநிஜரும் ஸ்ரீராமபரதலக்ஷ்மணர்போல அடுத்த நாள்களில் அவதரித்தவர்களுமாகிய இவர்கள்மூவர்க்கும், ஸ்ரீவைகுண்டநாதனது நியமனத்தின்படி, பரமபதத்திலுள்ள நித்யமுக்தர்களின் திரளுக்குத் தலைவராதலாற் சேனைமுதலியா ரென்று சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற விஷ்வக்ஸேநர், பெருங்கருணையுடன் அங்குநின்று இங்குவந்து, பஞ்சஸம்ஸ்காரங்களை யிட்டருளி, பெரியதிருமந்திரம் முதலாக எல்லாமந்திரவிசேஷங்களையும், அவற்றின் விசேஷார்த்தங்களனைத்தையும் குறைவற உபதேசித்தருளினார். அதனால் இவர்கள் ராஜஸதாமஸகுணங்களின் தொடர்பில்லாமல் சுத்தஸாத்விக குணமே தலையெடுத்து அந்தக்குணமயனான புண்டரீகாக்ஷனுக்கு அடிமை செய்தலையே பணியாகக்கொண்டு ஞானபக்திவைராக்கியங்கள் மிக்குத் துறவறவொழுக்கம் பூண்டு அந்நபாநாதிகளை யொழித்துப பகவத்தியானமே தாரகமாக உண்டியே யுடையே உகந்தோடும் இம்மண்டலத்தாரோடு கலவாமல் ஒருநாளிருந்தவிடத்தில் மற்றொருநாளிராதபடி க்ராமைகராத்ரமாய்த் தம்மில் ஒருவரையொருவர் அறியாமல் தனித்தனியே சஞ்சரித்துக்கொண்டிருக்கிற காலத்தில், ஸர்வேஶ்வரன் இம்மூவரையும் ஓரிடத்திலே சேர்த்து ஆட்கொண்டு இவர்களால் உலகத்தை உய்விக்கவேண்டுமென்று நினைத்தருளினான்.

ஸத்யஸங்கல்பனான அந்த முகுந்தனது திருவுள்ளக் கொள்கையின்படி ஒருநாள் ஸூர்யாஸ்தமநமானபின் பொய்கையாழ்வார் நடுநாட்டுத் திருப்பதிகளிற் பெண்ணையாற்றங்கரையி லுள்ள திருக்கோவலூரை யடைந்து அங்கு மிருகண்டு மகாமுனிவரது திருமாளிகையிற் சென்று அதன் இடைகழியிற் சயனித்துக்கொண்டிருந்தார். பின்னர்ப் பூதத்தாழ்வாரும் அவ்விடத்திலே சென்றுசேர, இருவரும் ஒருவரையொருவர் கண்டபொழுதே முறைப்படி வந்தனைவழிபாடுகள் செய்தவுடன், பொய்கையாழ்வார் 'இவ்விடம் ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம' என்று விண்ணப்பஞ்செய்தபின்பு, அவ்வாறே அவ்விருவரும் அங்கு இருந்தனர் அதன்பிறகு பேயாழ்வாரும் அவ்விடத்தையே அடைந்திட, ஒருவர்க்கொருவர் ப்ரணாமம முதலியன நிகழ்ந்தபின், முன்னையரிருவரும் 'இவவிடம் ஒருவா படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம்' என்று கூற, இவரும் அதற்கு உடன்படலும், இம்மூவரும் அவ்விடத்திலே நின்றுகொண்டு, பரஸ்பரம் பகவத்குணங்களைச் சொல்லுதலும் கேட்டலும் செய்து மகிழ்ந்திருந்தனர். அப்பொழுது, திரிவிக்கிரமமூர்த்தி, அவர்களை அநுக்கிரகித்தற்பொருட்டுப பேரிருளையும் பெருமழையையும் உண்டாக்கி, பெரியவடிவத்தோடு அவர்களிடத்திற் சென்று நின்று, பொறுக்கவொண்ணாத மிக்க நெருக்கத்தைச் செய்தருளினான். இவர்கள் 'முன் இல்லாத நெருக்கம் இப்பொழுது உண்டாயது என்னை? பிறரெவரேனும் புகுந்தவருண்டோ?' என்று சங்கிக்கையில், பொய்கையாழ்வார் பூமியாகிய தகழியில் கடல்நீரையே நெய்யாகக் கொண்டு சூரியனை விளக்காக ஏற்ற, பூதத்தாழ்வார் அன்பாகிய தகழியில் ஆர்வத்தை நெய்யாகவும் சிந்தையைத் திரியாகவும் கொண்டு ஞானதீபத்தை ஏற்ற, இவ்விரண்டி னொளியா

லும் இருளற்றதனால், பேயாழ்வார் பெருமாளைத் தாம் கண்டமை கூறியவளவிலே, மூவரும் ஆழியஞ்செல்வனுடைய சொரூபத்தை அறிந்து அனுபவித்து ஆனந்தமடைந்து, அப்பெருங்களிப்பு உள்ளடங்காமையால் அதனைப் பிரபந்த முகமாக வெளியிட்டு உலகத்தாரை வாழ்விக்கக் கருதினார்கள்.

அப்பொழுது, பொய்கையாழ்வார்,—"வையந்தகளியா" என்று தொடங்கி முதல்திருவந்தாதியைப் பாடியருளினார்.

பூதத்தாழ்வார்,—"அன்பேதகளியா" என்று தொடங்கி இரண்டாந்திருவந்தாதியை அருளிச்செய்தார்.

பேயாழ்வார்,—"திருக்கண்டேன்"—என்று தொடங்கி மூன்றாந்திருவந்தாதியைத் திருவாய்மலர்ந்தருளினார்.

பின்பு இந்தயோகிகள் மூவரும் தேகளீசனைத் திருவடிதொழுது விடைபெற்றுப் பலகாலம் திவ்வியதேசயாத்திரை செய்துகொண்டு சென்று, திருமழிசையாழ்வாரைக் கண்டு பேசி அவரோடு கூடிக் களித்து யோகுசெய்து நின்று, இங்ஙனம் மண்ணுலகத்தில் மூவாயிரத்து முந்நூற்று இருபத்தைந்து வருஷம் யோகபலத்தால் வாழ்ந்திருந்து, முடிவில் திருக்கோவலூரையே யடைந்து, முடிவில்பேரின்பத்து அழிவில் வீட்டை யுற்றனர்.

இவர்கள் மூவரும், ஆழ்வார்களெல்லார்க்கும் முன்னே திருவவதரித்ததனாலும், பின்பு உண்டாகும் பிரபந்தங்கட்கெல்லாம் இலக்கணமாம்படி ஆதியில் திருவந்தாதித் திவ்வியப்பிரபந்தங்களைத் திருவாய்மலர்ந்தருளியதனாலும், 'முதலாழ்வார்கள்' என்று பெயர்பெற்றனர்.

பொய்கையாழ்வார்.

பூதத்தாழ்வார்.

பேயாழ்வார்.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

முதலாழ்வார்கள் முதலானோர் அருளிச்செய்த

இயற்பா.

பொய்கையாழ்வார் அருளிச்செய்த

முதல்திருவந்தாதி.

தனியன்.

(முதலியாண்டான் அருளிச்செய்தது.)

நேரிசைவெண்பா.

கைதைசேர்பூம்பொழில்சூழ்கச்சிநகர்வந்துதித்த *
பொய்கைப்பிரான்கவிஞர்போரேறு *—வையத்து
அடியவர்கள்வாழ † அருந்தமிழ்நூற்றந்தாதி *
படிவிளங்கச்செய்தான்பரிந்து.

(ஸஹாநாராகம் - திரிபுடைதாளம்.)

↓↓ வையம்தகளியா வார்கடலேநெய்யாக *
வெய்யகதிரோன்விளக்காக *—செய்ய
சுடராழியானடிக்கே சூட்டினேன்சொல்மாலை *
இடராழி ‡ நீங்குகவேயென்று. (க)

என்றுகடல்கடைந்தது ? எவ்வுலகம்நீரேற்றது ? *
ஒன்றுமதனையுணரேன்நான் *— அன்றுஅது
அடைத்துடைத்துக் கண்படுத்தவாழி * இதுநீ
படைத்திடந்துஉண்டுமிழ்ந்தபார். (உ)

பாரளவும்ஓரடிவைத்து ஓரடியும்பாருடுத்த *
நீரளவும்செல்லநிமிர்ந்ததே *—சூருருவின்
பேயளவுகண்ட பெருமான் ! அறிகிலேன் *
நீயளவுகண்டநெறி. (ங)

† இங்கு வெண்டளைதவறுகின்றது; 'அருந்தமிழந்தாதி' என்னும் பாடம் தளைக்குப் பொருந்தும். ‡ 'நீங்கவே' என்பதும் பாடம்.

நெறிவாசல் தானேயாய்நின்றானை * ஐந்து
பொறிவாசல்போர்க்கதவம்சார்த்தி *—அறிவானாம்
ஆலமரநீழல் அறம்நால்வர்க்குஅன்றுரைத்த *
ஆலமமர்கண்டத்தரன். (௪)

அரன்நாரணன்நாமம் ஆன்விடைபுள்ளூர்தி *
உரைநூல்மறையுறையும்கோயில் *—வரைநீர்
கருமமழிப்பளிப்புக் கையதுவேல்நேமி *
உருவமெரிகார்மேனியொன்று. (௫)

ஒன்றும்மறந்தறியேன் ஓதநீர்வண்ணனைநான் *
இன்றுமறப்பனோ ? ஏழைகாள் ! *—அன்று
கருவரங்கத்துள்கிடந்து கைதொழுதேன்கண்டேன் *
திருவரங்கமேயான்திசை. (௬)

திசையும் திசையுறுதெய்வமும் * தெய்வத்
திசையும்கருமங்களெல்லாம் *—அசைவில்சீர்க்
கண்ணன்நெடுமால் கடல்கடைந்த * காரோத
வண்ணன் படைத்தமயக்கு. (௭)

மயங்கவலம்புரி வாய்வைத்து * வானத்
தியங்கும்எறிகதிரோன்தன்னை *—முயங்கமருள்
தேராழியால்மறைத்தது என் ? நீ திருமாலே ! *
போராழிக்கையால் பொருது. (௮)

பொருகோட்டோரேனமாய்ப் புக்கிடந்தாய்க்கு * அன்றுஉன்
ஒருகோட்டின்மேல்கிடந்ததன்றே *—விரிதோட்ட
சேவடியைநீட்டித் திசைநடுங்கவிண்துளங்க *
மாவடிவின்நீயளந்தமண். (௯)

மண்ணும்மலையும் மறிகடலும்மாருதமும் *
விண்ணும்விழுங்கியதுமெய்யென்பர் *—எண்ணில்
அலகளவுகண்ட சீராழியாய்க்கு * அன்றுஇவ்
வுலகளவும்உண்டோ ? உன்வாய். (௧௦)

வாயவனையல்லது வாழ்த்தாது * கையுலகம்
தாயவனையல்லது தான்தொழா *—பேய்முலைநஞ்சு
ஊணாகவுண்டான் உருவொடுபேரல்லால் *
காணாகண் கேளாசெவி. (௧௧)

செவிவாய்கண்மூக்கு உடலென்றைம்புலனும் * செந்தீ
புவிகால் நீர்விண்பூதமைந்தும் *—அவியாத
ஞானமும்வேள்வியும் நல்லறமுமென்பரே *
ஏனமாய்நின்றற்குஇயல்வு. (கஉ)

இயல்வாக ஈன்துழாயானடிக்கேசெல்ல *
முயல்வாரியலமரர்முன்னம் *— இயல்வாக
நீதியாலோதி நியமங்களால்பரவ *
ஆதியாய்நின்றாரவர். (கங)

அவரவர்தாம்தாம் அறிந்தவாறேத்தி *
இவரிவரெம்பெருமானென்று *—சுவர்மிசைச்
சார்த்தியும் வைத்தும்தொழுவர் * உலகளந்த
மூர்த்தியுருவேமுதல். (கச)

முதலாவார்மூவரே * அம்மூவருள்ளும்
முதலாவான் மூரிநீர்வண்ணன் *—முதலாய
நல்லானருளல்லால் நாமநீர்வையகத்து *
பல்லாரருளும்பழுது. (கரு)

பழுதேபலபகலும் போயினவென்று * அஞ்சி
அழுதேன் அரவணைமேற்கண்டு—தொழுதேன் *
கடலோதம்காலலைப்பக் கண்வளரும் * செங்கண்
அடலோதவண்ணரடி. (கசு)

அடியும் படிகடப்பத் தோள்திசைமேல்செல்ல *
முடியும்விசும்பளந்ததென்பர் *—வடியுகிரால்
ஈர்ந்தான் இரணியனதாகம் * இருஞ்சிறைப்புள்
ஊர்ந்தான் உலகளந்தநான்று. (கஎ)

நான்றமுலைத்தலை நஞ்சுண்டு * உறிவெண்ணெய்
தோன்றவுண்டான் வென்றிசூழ்களிற்றை—ஊன்றி *
பொரு † துடைவுகண்டானும் ‡ புள்ளின்வாய்கீண்டானும் *
மருதிடைபோய்மண்ணளந்தமால். (கஅ)

மாலுங்கருங்கடலே! என்நோற்றாய்? * வையகமுண்டு
ஆலினிலைத்துயின்றவாழியான் *—கோலக்
கருமேனிச் செங்கண்மால்கண்படையுள் * என்றும்
திருமேனி நீதீண்டப்பெற்று. (கக)

† 'இடைவு' என்பதும் பாடம். ‡ 'புள்வாய்' என்னும் பாடமே வேண்டு வாக்குப பொருந்தும்.

பெற்றார்தளைகழலப் பேர்ந்தோர்குறளுருவாய் *
செற்றார்படிகடந்தசெங்கண்மால் *—நற்று
மரைமலர்ச்சேவடியை வானவர்கைகூப்பி *
நிரைமலர்கொண்டேத்துவரால் † நின்று. (உ0)

நின்றுநிலமங்கை நீரேற்றுமூவடியால் *
சென்றுதிசையளந்தசெங்கண்மாற்கு *—என்றும்
படையாழிபுள்ளூர்தி பாம்பணையான்பாதம் *
அடையாழிநெஞ்சே! அறி. (உக)

அறியுமுலகெல்லாம் யானேயுமல்லேன் *
பொறிகொள்சிறையுவணமூர்ந்தாய் *—வெறிகமழும்
காம்பேய்மென்தோளி கடைவெண்ணெயுண்டாயை *
தாம்பேகொண்டார்த்ததழும்பு. (உஉ)

தழும்பிருந்தசார்ங்கநாண் தோய்ந்தவாமங்கை *
தழும்பிருந்த தாள்சகடம்சாடி *—தழும்பிருந்த
பூங்கோதையாள்வெருவப் பொன்பெயரோன்மார்பிடந்த *
வீங்கோதவண்ணர்விரல். (உஙு)

விரலொடுவாய்தோய்ந்த வெண்ணெய்கண்டு * ஆய்ச்சி
உரலோடுஉறப்பிணித்தநான்று—* குரலோவாது
ஏங்கிநினைந்து அயலார்காணவிருந்திலையே? *
ஓங்கோதவண்ணா! உரை. (உச)

உரைமேற்கொண்டு என்னுள்ளமோவாது * எப்போதும்
வரைமேல் மரதகமேபோல *—திரைமேல்
கிடந்தானைக் கீண்டானை * கேழலாய்ப்பூமி
யிடந்தானை யேத்தியெழும். (உரு)

எழுவார்விடைகொள்வார் ஈன்துழாயானை *
வழுவாவகைநினைந்து வைகல்—தொழுவார் *
வினைச்சுடரைநந்துவிக்கும் வேங்கடமே * வானோர்
மனச்சுடரைத் தூண்டும்மலை. (உசா)

மலையாற்குடைகவித்து மாவாய்பிளந்து *
சிலையால் மராமரமேழ்செற்று *—கொலையானைப்
போர்க்கோடொசித்தனவும் பூங்குருந்தம்சாய்த்தனவும் *
கார்க்கோடுபற்றியான்கை. (உஎ)

---

† 'ஏத்துவராம்' என்பதும் பாடம்.

கையவலம்புரியும்நேமியும் * கார்வண்ணத்து
ஐய! மலர்மகள்நின்ஆகத்தாள் *—செய்ய
மறையான்நின்உந்தியான் மாமதிள்மூன்றெய்த *
இறையான்நின்னாகத்திறை. (உ௯)

இறையும்நிலனும் இருவிசும்புங்காற்றும் *
அறைபுனலும் செந்தீயுமானான் *—பிறைமருப்பின்
பைங்கண்மால்யானை படுதுயரங்காத்தளித்த *
செங்கண்மால்கண்டாய்தெளி. (௩௰)

தெளிதாக உள்ளத்தைச்செந்நிறீஇ * ஞானத்
தெளிதாக நன்குணர்வார்சிந்தை *—எளிதாகத்
தாய்நாடுகன்றேபோல் தண்துழாயானடிக்கே *
போய்நாடிக்கொள்ளும்புரிந்து. (௩௦)

புரியொருகைபற்றி ஓர்பொன்னாழியேந்தி *
அரியுருவும்ஆளுருவுமாகி *—எரியுருவ
வண்ணத்தான்மார்பிடந்த மாலடியையல்லால * மற்று
எண்ணத்தானாமோ? இமை. (௩௧)

இமையாதகண்ணால் இருளகலநோக்கி *
அமையாப்பொறிபுலன்கள் ஐந்தும்—நமையாமல் *
ஆகத்தணைப்பார் அணைவரே * ஆயிரவாய்
நாகத்தணையான்நகர். (௩௨)

நகரமருள்புரிந்து நான்முகற்குப்பூமேல் *
பகரமறைபயந்தபண்பன்— * பெயரினையே
புந்தியாற்சிந்தியாது ஓதியுருவெண்ணும் *
அந்தியாலாம்பயனங்கென்? (௩௩)

என்! ஒருவர்மெய்யென்பர் ஏழுலகுண்டு * ஆலிலையில்
முன்னொருவனாய முகில்வண்ணா! *—நின்னுருகிப்
பேய்த்தாய்முலைதந்தாள் பேர்ந்திலளால் * பேரமர்க்கண்
ஆய்த்தாய் முலைதந்தவாறு! (௩௪)

ஆறியவன்பில் அடியார்தமார்வத்தால் *
கூறியகுற்றமாக்கொள்ளல்நீ—தேறி *
நெடியோய்! அடி அடைதற்கன்றே * ஈரைந்து
முடியான்படைத்தமுரண். (௩௫)

† முரணவலி தொலைதற்காமென்றே * முன்னம்
தாரணிதனதாகத்தானே *—இரணியனைப்
புண்ணிரந்தவள்ளுகிரால் பொன்னாழிக்கையால் * நீ
மண்ணிரந்துகொண்டவகை. (௩௬)

வகையறுநுண்கேள்வி வாய்வார்கள் * நாளும்
புகைவிளக்கும் பூம்புனலுமேந்தி *—திசைதிசையின்
வேதியர்கள் சென்றிறைஞ்சும்வேங்கடமே * வெண்சங்கம்
ஊதியவாய் மாலுகந்தவூர். (௩௭)

ஊரும்வரியரவம் ஒண்குறவர்மால்யானை *
பேரவெறிந்த பெருமணியை *—காருடைய
மின்னென்று புற்றடையும்வேங்கடமே * மேலசுரர்
‡ எம்மென்னுமாலதிடம். (௩௮)

இடந்ததுபூமி எடுத்ததுகுன்றம் *
கடந்ததுகஞ்சனைமுன்னஞ்ச *—கிடந்ததுவும்
நீரோதமாகடலே நின்றதுவும்வேங்கடமே *
பேரோதவண்ணர்பெரிது. (௩௯)

பெருவில்பகழிக் குறவர்கைச்செந்தீ *
வெருவிப்புனம்துறந்தவேழம் *—இருவிசும்பில்
மீன்வீழக் கண்டஞ்சும்வேங்கடமே * மேலசுரர்
கோன்வீழக்கண்டுகந்தான்குன்று. (௪0)

குன்றனையகுற்றம்செயினும் குணங்கொள்ளும் *
இன்றுமுதலாகவென்னெஞ்சே! *—என்றும்
புறனுரையேயாயினும் பொன்னாழிக்கையான் *
திறனுரையேசிந்தித்திரு. (௪௧)

திருமகளும்மண்மகளும் ஆய்மகளும்சேர்ந்தால் *
திருமகட்கேதீர்ந்தவாறென்கொல்? *—திருமகள்மேல்
பாலோதம்சிந்தப் படநாகணைக்கிடந்த *
மாலோதவண்ணர்மனம். (௪௨)

மனமாசுதீரும் அருவினையும்சாரா *
தனமாய $ தானேகைகூடும் *—புனமேய
பூந்துழாயானடிக்கே போதொடுநீரேந்தி *
தாம்தொழாநிற்பார்தமர். (௪௩)

---

† 'முரணை' என்றும் ஓதுவர். ‡ 'எம்மென்ற' 'என்னென்ற' 'என்னென்னும்' என்பன - பாடபேதங்கள். $ 'தாமே' எனவும் பாடமோதுவர்.

தமருகந்ததெவ்வுருவம் அவ்வுருவம்தானே *
தமருகந்ததெப்பேர் மற்றப்பேர் *—தமருகந்து
எவ்வண்ணம்சிந்தித்து இமையாதிருப்பரே *
அவ்வண்ணமாழியானாம். (சச)

ஆமே? அமரர்க்கு அறிய, அதுநிற்க *
நாமேயறிகிற்போம் நல்நெஞ்சே! * —பூமேய
மாதவத்தோன்தாள்பணிந்த வாளரக்கன்நீள்முடியை *
பாதமத்தாலெண்ணினான்பண்பு. (சரு)

பண்புரிந்தநான்மறையோன் சென்னிப்பலியேற்ற *
வெண்புரிநூல்மார்பன்வினைதீர *—புண்புரிந்த
ஆகத்தான் தாள்பணிவார்கண்டீர் * அமரர்தம்
போகத்தால் பூமியாள்வார். (சசு)

வாரிசுருக்கி மதக்களிறைந்தினையும் *
சேரிதிரியாமல் செந்நிறீஇ *—கூரிய
மெய்ஞ்ஞானத்தால் உணர்வார்காண்பரே * மேலொருநாள்
கைந்நாகம்காத்தான்கழல். (சஎ)

கழலொன்றெடுத்து ஒருகைசுற்றியோர்கைமேல் *
சுழலும்சுராசுரர்களஞ்ச *—அழலும்
செருவாழியேந்தினான் சேவடிக்கேசெல்ல *
மருவாழிநெஞ்சே! மகிழ். (சஅ)

மகிழலகொன்றேபோல் மாறும்பல்யாக்கை *
நெகிழமுயல்கிற்பார்க்கல்லால் *—முகிழ்விரிந்த
சோதிபோல்தோன்றும் சுடர்பொன்னெடுமுடி * எம்
ஆதிகாண்பார்க்குமரிது. (சகூ)

அரியபுலனைந்தடக்கி ஆய்மலர்கொண்டு * ஆர்வம்
† புரியப் பரிசினாற்புல்கில் *—பெரியனாய்
மாற்றாதுவீற்றிருந்த மாவலிபால் * வண்கைநீர்
ஏற்றானைக் காண்பதெளிது. (ருo)

எளிதிலிரண்டடியும் காண்பதற்கு * என்னுள்ளம்
தெளியத் தெளிந்தொழியும்செவ்வே *—களியில்
பொருந்தாதவனைப் பொரலுற்று * அரியா
யிருந்தான் திருநாமமெண். (ருக)

† 'புரிந்த' என்ற பாடம் சேரும்.

எண்மர்பதினொருவர் ஈராறுவரோரிருவர் *
வண்ணமலரேந்திவைகலும் *—நண்ணி
ஒருமாலையால் பரவியோவாது * எப்போதும்
திருமாலைக்கைதொழுவர்சென்று. (நு௨)

↓↓ சென்றால்குடையாம் இருந்தால்சிங்காசனமாம் *
நின்றால்மரவடியாம் நீள்கடலுள் * —என்றும்
புணையாம்மணிவிளக்காம் பூம்பட்டாம்புல்கும்
அணையாம் * திருமாற்குஅரவு. (நு௩)

அரவமடல்வேழம் ஆன்குருந்தம்புள்வாய் *
குரவைகுடமுலைமற்குன்றம் *—கரவின்றி
விட்டிறுத்துமேய்த்தொசித்துக் கீண்டுகோத்தாடி * உண்
டட்டெடுத்தசெங்கணவன். (நு௪)

அவன்தமர் எவ்வினையராகிலும் * எங்கோ
னவன்தமரே என்றொழிவதல்லால் *—நமன்தமரால்
ஆராயப்பட்டு அறியார்கண்டீர் * அரவணைமேல்
பேராயற்காட்பட்டார்பேர். (நு௫)

பேரேவரப் பிதற்றலல்லால், என்பெம்மானை *
ஆரேயறிவார்? அதுநிற்க *—நேரே
கடிக்கமலத்துள்ளிருந்தும் காண்கிலான் * கண்ணன்
அடிக்கமலந்தன்னையயன். (நு௬)

அயல்நின்றவல்வினையை அஞ்சினேன்அஞ்சி *
உயநின்திருவடியேசேர்வான் *—நயம்நின்ற
நன்மாலைகொண்டு நமோநாரணவென்னும் *
சொல்மாலைகற்றேன்தொழுது. (நு௭)

தொழுதுமலர்கொண்டு தூபம்கையேந்தி *
எழுதுமெழுவாழிநெஞ்சே! *—பழுதின்றி
மந்திரங்கள்கற்பனவும் மாலடியேகைதொழுவான் *
அந்தரமொன்றில்லையடை. (நு௮)

அடைந்தவருவினையோடு அல்லல்நோய்பாவம் *
மிடைந்தவைமீண்டொழியவேண்டில் *—நுடங்கிடையை
முன்னிலங்கைவைத்தான் முரணழிய * முன்னொருநாள்
தன்வில்அங்கைவைத்தான்சரண். (நு௯)

சரணாமறைபயந்த தாமரையானோடு *
மரணாயமன்னுயிர்கட்கெல்லாம் *—அரணாய
பேராழிகொண்ட பிரானன்றிமற்றறியாது *
ஓராழிசூழ்ந்தவுலகு. (௬௰)

உலகும் உலகிறந்தவூழியும் * ஒண்கேழ்
விலகுகருங்கடலும்வெற்பும் *—உலகினில்
செந்தீயும் மாருதமும்வானும * திருமால்தன்
புந்தியிலாயபுணர்ப்பு. (௬௧)

புணர்மருதினூடுபோய்ப் பூங்குருந்தம்சாய்த்து *
மணமருவமால்விடையேழ்செற்று *—கணம்வெருவ
ஏழுலகும்தாயினவும் எண்திசையும்போயினவும் *
சூழரவப்பொங்கணையான்தோள். (௬௨)

தோளவனையல்லால்தொழா, என்செவியிரண்டும் *
கேளவனது இன்மொழியேகேட்டிருக்கும *—நாநாளும்
கோணாகணையான் குரைகழலேகூறுவதே *
நாணாமைநள்ளேன்நயம். (௬௩)

நயவேன்பிறர்பொருளை நள்ளேன்கீழாரோடு *
உயவேன்உயர்ந்தவரோடல்லால் *—வியவேன்
திருமாலையல்லது தெய்வமென்றேத்தேன் *
† வருமாறென்நம்மேல்வினை ? (௬௪)

வினையாலடர்ப்படார் வெந்நரகில்சேரார் *
தினையேனும்தீக்கதிக்கண்செல்லார் *—நினைதற்
கரியானைச் சேயானை * ஆயிரம்பேர்ச்செங்கண்
கரியானைக் கைதொழுதக்கால். (௬௫)

காலையெழுந்து உலகங்கற்பனவும் * கற்றுணர்ந்த
மேலைத்தலைமறையோர் வேட்பனவும் *—வேலைக்கண்
ஓராழியானடியே ஓதுவதுமோர்ப்பனவும *
பேராழிகொண்டான்பெயர். (௬௬)

பெயருங்கருங்கடலே நோக்கும்ஆறு * ஒண்பூ
உயருங்கதிரவனேநோக்கும் *—உயிரும்
தருமனையேநோக்கும் ஒண்தாமரையாள்கேள்வன் *
ஒருவனையேநோக்கும்உணர்வு. (௬௭)

---

† ‘வருமாறென்னென்மேல்வினை’ என்றும் பாடம்.

உணர்வாரார் உன்பெருமை? ஊழிதோறூழி *
உணர்வாரார் உன்னுருவந்தன்னை? —* உணர்வாரார்?
விண்ணகத்தாய்! மண்ணகத்தாய்! வேங்கடத்தாய்! * நால்வேதப்
பண்ணகத்தாய்! நீகிடந்தபால். (௬௮)

பாலன் தனதுருவாய் ஏழுலகுண்டு * ஆலிலையின்
மேலன்று நீவளர்ந்தமெய்யென்பர் *—ஆலன்று
வேலைநீருள்ளதோ? விண்ணதோ? மண்ணதோ? *
சோலைசூழ்குன்றெடுத்தாய்! † சொல்லு. (௬௯)

சொல்லுந்தனையும் தொழுமின்விழுமுடம்பு *
செல்லுந்தனையும்திருமாலை *—நல்லிதழ்த்
தாமத்தால்வேள்வியால் தந்திரத்தால்மந்திரத்தால் *
நாமத்தாலேத்துதிரேல்நன்று. (௭௦)

நன்றுபிணிமூப்புக் கையகற்றிநான்கூழி *
நின்றுநிலமுழுதுமாண்டாலும் *—என்றும்
விடலாழிநெஞ்சமே! வேண்டினேன்கண்டாய் *
அடலாழிகொண்டான்மாட்டன்பு. (௭௧)

அன்பாழியானை அணுகென்னும் * நா அவன்தன்
பண்பாழித்தோள்பரவியேத்தென்னும் *—முன்பூழி
காணானைக்காணென்னுங்கண் செவிகேளென்னும் *
பூணாரம்பூண்டான்புகழ். (௭௨)

புகழ்வாய்பழிப்பாய்நீ பூந்துழாயானை *
இகழ்வாய்கருதுவாய் ‡ நெஞ்சே! *—திகழ்நீர்க்
கடலும்மலையும் இருவிசும்புங்காற்றும் *
உடலுமுயிருமேற்றான். (௭௩)

ஏற்றான்புள்ளூர்ந்தான் எயிலெரித்தான்மார்விடந்தான் *
நீற்றான்நிழல்மணிவண்ணத்தான் *—கூற்றொருபால்
மங்கையான் பூமகளான்வார்சடையான் * நீள்முடியான்
கங்கையான் நீள்கழலான்காப்பு. (௭௪)

காப்புன்னையுன்னக் கழியும் * அருவினைகள்
ஆப்புன்னையுன்ன அவிழ்ந்தொழியும் *—மூப்புன்னைச்
சிந்திப்பார்க்கில்லை திருமாலே! * நின்னடியை
வந்திப்பார் காண்பர்வழி. (௭௫)

† 'சொல்' எனவும் ஓதுவர். ‡ 'என்னெஞ்சே' என்றும் பாடம்.

வழிநின்று நின்னைத்தொழுவார் * வழுவா
மொழிநின்ற மூர்த்தியரேயாவர் *—பழுதொன்றும்
வாராதவண்ணமே விண்கொடுக்கும் * மண்ணளந்த
சீரான்திருவேங்கடம். (எசு)

வேங்கடமும் விண்ணகரும்வெஃகாவும் * அஃகாத
பூங்கிடங்கின் நீள்கோவல்பொன்னகரும் *—நான்கிடத்தும்
நின்றான் இருந்தான் கிடந்தான்நடந்தானே *
என்றால்கெடுமாம்இடர். (எஎ)

இடரார்படுவார் ? எழுநெஞ்சே ! * வேழம்
தொடர்வான் கொடுமுதலைசூழ்ந்த *—படமுடைய
பைந்நாகப்பள்ளியான் பாதமேகைதொழுதும் *
கொய்ந்நாகப்பூம்போதுகொண்டு. (எஅ)

கொண்டானையல்லால் கொடுத்தாரையார்பழிப்பார் ? *
மண்தாவெனவிரந்து மாவலியை *—ஒண்தாரை
நீரங்கைதோய நிமிர்ந்திலையே ? * நீள்விசும்பி
லாரங்கைதோயவடுத்து. (எகூ)

அடுத்தகடும்பகைஞற்கு ஆற்றேனென்றோடி *
படுத்தபெரும்பாழிசூழ்ந்த —விடத்தரவை *
வல்லாளன்கைக்கொடுத்த மாமேனிமாயவனுக்கு *
அல்லாதுமாவரோஆள் ? (அ0)

ஆளமர்வென்றி அடுகளத்துளஞ்ஞான்று *
வாளமர்வேண்டிவரைநட்டு *—நீளரவைச்
சுற்றிக்கடைந்தான் பெயரன்றே ? * தொல்நரகைப்
பற்றிக்கடத்தும்படை. (அக)

படையாரும்வாட்கண்ணார் பாரசிநாள் * பைம்பூந்
தொடையலோடேந்தியதூபம் *—இடையிடையில்
மீன்மாய மாசூணும்வேங்கடமே * மேலொருநாள்
மான்மாயவெய்தான்வரை. (அஉ)

வரைகுடைதோள்காம்பாக ஆநிரைகாத்து * ஆயர்
நிரைவிடையேழ்செற்றவாறென்னே ! *—உரவுடைய
நீராழியுள்கிடந்து நேராநிசாசரர்மேல் *
பேராழிகொண்டபிரான் ! (அங)

*பிரான்! உன்பெருமை பிறராரறிவார்? *
உராய்உலகளந்தஞான்று *—வராகத்
தெயிற்றளவு போதாவாறென்கொலோ? * எந்தை
அடிக்களவுபோந்தபடி.* (௫௪)

*படிகண்டறிதியே? பாம்பணையினான் * புள்
கொடிகண்டறிதியே? கூறாய் *—வடிவிற்
பொறியைந்துமுள்ளடக்கிப் போதொடுநீரேந்தி *
நெறிநின்றநெஞ்சமே! நீ* (௫௫)

*நீயும்திருமகளும் நின்றாயால் * குன்றெடுத்துப்
பாயும் பனி † மறைத்தபண்பாளா! *— ‡ வாசல்
கடைகழியாவுள்புகாக் காமர்பூங்கோவல் *
இடைகழியேபற்றியினி.* (௫௬)

*இனியார்புகுவார் எழுநரகவாசல்? *
முனியாதுமூரித்தாள்கோமின் *—கனிசாயக்
கன்றெறிந்ததோளான் கனைகழலேகாண்பதற்கு *
நன்கறிந்தநாவலஞ்சூழ்நாடு.* (௫௭)

*நாடிலும் நின்னடியேநாடுவன் * நாள்தோறும்
பாடிலும் நின்புகழேபாடுவன் *—சூடிலும்
பொன்னாழியேந்தினான் பொன்னடியேசூடுவேற்கு *
என்னாகிலென்னேயெனக்கு?* (௫௮)

*எனக்காவார் ஆரொருவரே! * எம்பெருமான்
தனக்காவான் தானேமற்றல்லால் *—புனக்காயாம்
பூமேனிகாணப் பொதியவிழும்பூவைப்பூ *
மாமேனிகாட்டும்வரம்.* (௫௯)

*வரத்தால்வலிநினைந்து மாதவ! நின்பாதம் *
சிரத்தால் § வணங்கானாமென்றே? *—உரத்தினால்
ஈரரியாய் நேர்வலியோனாயவிரணியனை *
ஓரரியாய்நீயிடந்ததூன்.* (௬0)

*ஊனக்குரம்பையின் உள்புக்கிருள்நீக்கி *
ஞானச்சுடர்கொளீஇ நாள்தோறும்—* ஏனத்
துருவாயுலகிடந்த ஊழியான்பாதம் *
மருவாதார்க்குண்டாமோவான்?* (௬௧)

*வானாகித்தீயாய் மறிகடலாய்மாருதமாய் *
தேனாகிப்பாலாம் திருமாலே! *—ஆனாய்ச்சி
வெண்ணெய்விழுங்க நிறையுமே? * முன்னொருநாள்
மண்ணையுமிழ்ந்தவயிறு.* (௬௨)

† 'மறுத்த' என்பதும் பாடம். ‡ 'வாயில்' என்றும் ஓதுவர்.
§ 'வணங்கானாமென்னே!' என்ற பாடம் சேரும்.

வயிறழலவாளுருவி வந்தானையஞ்ச *
எயிறிலகவாய்மடுத்ததென்னீ? *—பொறியுகிரால்
பூவடிவையீடழித்த பொன்னாழிக்கையா! * நின்
சேவடிமேலீடழியச்செற்று. (௯௩)

செற்றெழுந்துதீவிழித்துச் சென்றவிந்தவேழுலகும் *
† மற்றிவையாவென்று வாயங்காந்து *—முற்றும்
‡ மறையவற்குக்காட்டிய மாயவனையல்லால் *
இறையேனுமேத்தாதென்நா. (௯௪)

நாவாயிலுண்டே நமோநாரணாவென்று *
ஓவாதுரைக்குமுரையுண்டே *—மூவாத
மாக்கதிக்கண்செல்லும் வகையுண்டே * என்னொருவர்
தீக்கதிக்கண்செல்லுந்திறம்? (௯௫)

திறம்பாதென்னெஞ்சமே! செங்கண்மால்கண்டாய் *
அறம்பாவமென்றிரண்டுமாவான் *—புறந்தான்இம்
மண்தான் மறிகடல்தான்மாருதந்தான் * வான்தானே
கண்டாய் கடைக்கட்பிடி. (௯௬)

பிடிசேர் களிறளித்தபேராளா! * உன்தன்
அடிசேர்ந்தருள்பெற்றாளன்றே *—பொடிசேர்
அனற்கங்கையேற்றான் அவிர்சடைமேல்பாய்ந்த *
புனற்கங்கையென்னும்பேர்ப்பொன். (௯௭)

பொன்திகழுமேனிப் புரிசடையம்புண்ணியனும் *
நின்றுலகந்தாயநெடுமாலும் *—என்றும்
இருவரங்கத்தால் திரிவரேலும் * ஒருவன்
ஒருவனங்கத்தென்றுமுளன். (௯௮)

‡‡ உளன்கண்டாய்நன்னெஞ்சே! உத்தமனென்றும்
உளன்கண்டாய் * உள்ளுவாருள்ளத்து—உளன்கண்டாய் *
வெள்ளத்தினுள்ளானும் வேங்கடத்துமேயானும் *
உள்ளத்தினுள்ளானென்றோர். (௯௯)

‡‡ ஓரடியும்சாடுதைத்த ஒண்மலர்ச்சேவடியும் *
ஈரடியும்காணலாம் என்னெஞ்சே! *—ஓரடியின்
தாயவனைக்கேசவனைத் தண்துழாய்மாலைசேர் *
மாயவனையேமனத்துவை. (௧00)

தசகஅடிவரவு:—வையம் வாய் நின்று புரி குன்று எளிதில் உலகும் நன்று ஆள் ஊன் அன்பு.

பொய்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

† 'மற்றிவையாமென்று' என்பதும் பாடம். ‡ 'மறையவர்க்கு' என்றும் பாடம்.

பூதத்தாழ்வார் அருளிச்செய்த

இரண்டாந்திருவந்தாதி.

தனியன்.

(திருக்குருகைப்பிரான்பிள்ளான் அருளிச்செய்தது.)

நேரிசைவெண்பா.

என்பிறவிதீரவிறைஞ்சினேனின்னமுதா *
அன்பேதகளியளித்தானை *—நன்புகழ்சேர்
சீதத்தார்முத்துக்கள்சேரும் * கடல்மல்லைப்
பூதத்தார்பொன்னங்கழல்.

(பைரவிராகம் - திரிபுடைதாளம்.)

↓↓ அன்பேதகளியா ஆர்வமேநெய்யாக *
இன்புருகுசிந்தையிடுதிரியா *—நன்புருகி
ஞானச்சுடர்விளக்கேற்றினேன், நாரணற்கு *
ஞானத்தமிழ்புரிந்தநான். (க)

ஞானத்தால்நன்குணர்ந்து நாரணன்தன்நாமங்கள் *
தானத்தால்மற்றவன்பேர்சாற்றினால் *—வானத்
தணியமரர் ஆக்குவிக்குமஃதன்றே? * நங்கள்
பணியமரர்கோமான்பரிசு. (உ)

பரிசுநறுமலரால் பாற்கடலான்பாதம் *
புரிவார்புகப்பெறுவர்போலாம் *—புரிவார்கள்
தொல்லமரர்கேள்வித் துலங்கொளிசேர்தோற்றத்து *
நல்லமரர்கோமான்நகர். (ங)

நகரிழைத்துநித்திலத்து நாள்மலர்கொண்டு * ஆங்கே
திகழுமணிவயிரஞ்சேர்த்து *—நிகரில்லாப்
பைங்கமலமேந்திப் பணிந்தேன்பனிமலராள் *
அங்கம்வலங்கொண்டானடி. (ச)

அடிமூன்றிலிவ்வுலகம் அன்றளந்தாய்போலும் *
அடிமூன்றிரந்துஅவனிகொண்டாய் *—படிநின்ற
நீரோதமேனி நெடுமாலே! * நின்னடியை
யாரோதவல்லாரறிந்து? (௫)

அறிந்தைந்துமுள்ளடக்கி ஆய்மலர்கொண்டு * ஆர்வம்
செறிந்தமனத்தராய்ச்செவ்வே *— அறிந்தவன்தன்
பேரோதியேத்தும் பெருந்தவத்தோர்காண்பரே *
காரோதவண்ணன்கழல். (௬)

கழலெடுத்துவாய்மடித்துக் † கண் சுழன்று * மாற்றார்
அழலெடுத்த சிந்தையராயஞ்ச *— தழலெடுத்த
போராழியேந்தினான் பொன்மலர்ச்சேவடியை *
ஓராழிநெஞ்சே! உகந்து. (௭)

உகந்துன்னைவாங்கி ஒளிநிறங்கொள்கொங்கை *
அகங்குளிர உண்ணென்றாளாவி *— உகந்து
முலையுண்பாய்போலே முனிந்துண்டாய் * நீயும்
அலை ‡ பண்பா லானமையாலன்று. (௮)

அன்றதுகண்டஞ்சாத ஆய்ச்சி உனக்கிரங்கி *
நின்றுமுலைதந்த இந்நீர்மைக்கு *— அன்று
வரன்முறையால்நீயளந்த மாகடல்சூழ்ஞாலம் *
பெறுமுறையாலெய்துமோபேர்த்து? (௯)

பேர்த்தனை மாசகடம் பிள்ளையாய் * மண்ணிரந்து
காத்தனை பல்லுயிரும்காவலனே! —* ஏத்திய
நாவுடையேன்பூவுடையேன் நின்னுள்ளிநின்றமையால் *
கா அடியேன்பட்டகடை. (௧௦)

கடைநின்றமரர் கழல்தொழுது * நாளும்
இடைநின்ற இன்பத்தராவர் *— புடைநின்ற
நீரோதமேனி நெடுமாலே! * நின்னடியை
யாரோதவல்லாரவர்? (௧௧)

அவரிவரென்றில்லை அரவணையான்பாதம் *
எவர்வணங்கி யேத்தாதாரெண்ணில் *— பவரும்
செழுங்கதிரோன் ஒண்மலரோன் கண்ணுதலோனன்றே? *
தொழுந்தகையார் நாளும்தொடர்ந்து. (௧௨)

தொடரெடுத்தமால்யானை சூழ்கயம்புக்கஞ்சி *
படரெடுத்தபைங்கமலங்கொண்டு *— அன்றிடரடுக்க
ஆழியான் பாதம்பணிந்தன்றே? * வானவர்கோன்
பாழிதா னெய்திற்றுப்பண்டு. (௧௩)

† 'சுழன்ற' என்ற பாடம் சேரும். ‡ 'பண்பாய்' என்றும் பாடம்.

பண்டிப்பெரும்பதியையாக்கி * பழிபாவம்
கொண்டிங்குவாழ்வாரைக்கூறுதே*— எண்திசையும்
பேர்த்தகரம்நான்குடையான் பேரோதிப்பேதைகாள்! *
தீர்த்தகரராமின்திரிந்து. (கச)

திரிந்ததுவெஞ்சமத்துத் தேர்கடவி * அன்று
பிரிந்தது சீதையைமான்பின்போய்*— புரிந்ததுவும்
கண்பள்ளிகொள்ள, அழகியதே! * நாகத்தின்
தண்பள்ளிகொள்வான்தனக்கு. (கரு)

தனக்கடிமைபட்டது தானறியானேலும் *
மனத்தடைய வைப்பதாம்மாலை*— வனத்திடரை
ஏரியாம்வண்ணம் இயற்றுமிதுவல்லால் *
மாரியார்பெய்கிற்பார்மற்று? (கசு)

மற்றாரியலாவார்? வானவர்கோன்மாமலரோன் *
சுற்றும்வணங்குந்தொழிலானை*— ஒற்றைப்
பிறையிருந்த செஞ்சடையான்பின்சென்று * மாலைக்
குறையிரந்து தான்முடித்தான்கொண்டு. (கஎ)

கொண்டதுலகம் குறளுருவாய், கோளரியாய் *
ஒண்திறலோன்மார்வத்துகிர்வைத்தது*— உண்டதுவும்
தான்கடந்தவேழுலகே தாமரைக்கண்மாலொருநாள் *
வான்கடந்தான்செய்தவழக்கு. (கஅ)

வழக்கன்றுகண்டாய் வலிசகடஞ்செற்றாய் *
வழக்கென்றுநீமதிக்கவேண்டா*—குழக்கன்று
தீவிளவின்காய்க்கெறிந்த தீமைதிருமாலே! *
பார்விளங்கச்செய்தாய்பழி. (கக)

பழிபாவங்கையகற்றிப் பல்காலும்நின்னை *
வழிவாழ்வார் வாழ்வராம்மாதோ*—வழுவின்றி
நாரணன்தன்நாமங்கள் நன்குணர்ந்துநன்கேத்தும் *
† காரணங்கள்தாமுடையார்தாம். (௨0)

தாமுளரே தம்முள்ளமுள்ளுளதே * தாமரையின்
பூவுளதே ஏத்தும்பொழுதுண்டே*— வாமன்
திருமருவு தாள்மருவுசென்னியரே * செவ்வே
அருநரகஞ்சேர்வதரிது. (௨க)

† 'தாரணங்கள்' என்று பாடாந்தரம்.

அரியதெளிதாகும் ஆற்றலால்மாற்றி *
பெருகமுயல்வாரைப் பெற்றால்*— கரியதோர்
வெண்கோட்டுமால்யானை † வென்றிமுடித்தன்றே *
‡ தண்கோட்டுமாமலரால்தாழ்ந்து. (௨௨)

தாழ்ந்துவரங்கொண்டு தக்கவகைகளால் *
வாழ்ந்துகழிவாரை வாழ்விக்கும்*— தாழ்ந்த
விளங்கனிக்குக் கன்றெறிந்துவேற்றுருவாய் * ஞாலம்
அளந்தடிக்கீழ்க்கொண்டவவன். (௨௩)

அவன்கண்டாய்நன்னெஞ்சே! ஆராளும்கேடும் *
அவன்கண்டாய் ஐம்புலனாய்நின்றான்*— அவன்கண்டாய்
காற்றுத்தீநீர்வான் கருவரைமண்காரோதச் *
சீற்றத்தீயாவானும்சென்று. (௨௪)

சென்றதிலங்கைமேல் செவ்வேதன்சீற்றத்தால் *
கொன்றதிராவணனைக்கூறுங்கால்*— நின்றதுவும்
வேயோங்குதண்சாரல் வேங்கடமே * விண்ணவர்தம்
வாயோங்குதொல்புகழான்வந்து. (௨௫)

வந்தித்தவனை வழிநின்றவைம்பூதம் *
ஐந்துமகத்தடக்கி ஆர்வமாய்*— உந்திப்
படியமரர்வேலையான் பண்டமரர்க்கீந்த *
படியமரர்வாழும்பதி. (௨௬)

பதியமைந்துநாடிப் பருத்தெழுந்தசிந்தை *
மதியுரிஞ்சிவான்முகடுநோக்கி*— § கதிமிகுத்து அம்
கோல்தேடியோடும் கொழுந்ததேபோன்றதே *
மால்தேடியோடும்மனம். (௨௭)

மனத்துள்ளான்வேங்கடத்தான் மாகடலான் * மற்றும்
நினைப்பரிய நீளரங்கத்துள்ளான்*— எனைப்பலரும்
தேவாதிதேவ னெனப்படுவான் * முன்னொருநாள்
மாவாய்பிளந்தமகன். (௨௮)

மகனாகக்கொண்டெடுத்தாள் மாண்பாயகொங்கை *
அகனாரவுண்பனென்றுண்டு *—மகனைத்தாய்
தேறாதவண்ணம் திருத்தினாய் * தென்னிலங்கை
நீறாகவெய்தழித்தாய் ! நீ. (௨௯)

---

† 'வென்று' என்று சிலர். ‡ 'தண்தோட்டு' என்பதும் பாடம்.
§ 'கதிர்' என்பதும் பாடம்.

நீயன்றுலகளந்தாய் நீண்டதிருமாலே! *
நீயன்றுலகிடந்தாயென்பரால் *—நீயன்று
காரோதம்முன்கடைந்து பின்னடைத்தாய்மாகடலை *
பேரோதமேனிப்பிரான்! (௩0)

பிரானென்றுநாளும் பெரும்புலரியென்றும் *
குராநற்செழும்போதுகொண்டு *—வராகத்
தணியுருவன் பாதம்பணியுமவர்கண்டீர் *
மணியுருவம்காண்பார்மகிழ்ந்து. (௩௧)

மகிழ்ந்ததுசிந்தை திருமாலே! * மற்றும்
மகிழ்ந்தது உன்பாதமேபோற்றி *—மகிழ்ந்தது
அழலாழிசங்க மவைபாடியாடும் *
தொழிலாகம் சூழ்ந்துதுணிந்து. (௩௨)

துணிந்ததுசிந்தை துழாயலங்கல் * அங்கம்
அணிந்தவன்பேர் உள்ளத்துப்பல்கால் *—பணிந்ததுவும்
வேய்பிறங்குசாரல் விறல்வேங்கடவனையே *
வாய்திறங்கள்சொல்லும்வகை. (௩௩)

வகையாலவனி இரந்தளந்தாய்பாதம் *
புகையால்நறுமலரால்முன்னே *— மிகவாய்ந்த
அன்பாக்கியேத்தி அடிமைப்பட்டேன்உனக்கு *
என்பாக்கியத்தாலினி. (௩௪)

இனிதென்பர்காமம் அதனிலுமாற்ற *
இனிதென்பர் தண்ணீருமெந்தாய்!— * இனிதென்று
காமநீர்வேளாது நின்பெருமைவேட்பரேல் *
சேமநீராகும்சிறிது. (௩௫)

சிறியார்பெருமை சிறிதின்கணெய்தும் *
அறியாரும் தாமறியாராவர்*—அறியாமை
மண்கொண்டுமண்ணுண்டு மண்ணுமிழ்ந்தமாயனென்று *
எண்கொண்டுஎன்னெஞ்சே! இரு. (௩௬)

இருந்தண்கமலத் திருமலரினுள்ளே *
திருந்துதிசைமுகனைத்தந்தாய்! *—பொருந்தியநின்
பாதங்களேத்திப் பணியாவேல் * பல்பிறப்பும்
ஏதங்களெல்லாம்எமக்கு. (௩௭)

எமக்கென்றிருநிதியம் ஏமாந்திராதே *
தமக்கென்றுஞ் † சார்வமறிந்து *—நமக்கென்றும்
மாதவனேயென்னும் மனம்படைத்து * மற்றவன்பேர்
ஓதுவதே நாவினாலோத்து. (கூ அ)

ஓத்தின்பொருள்முடிவுமித்தனையே * உத்தமன்பேர்
ஏத்தும் திறமறிமின்ஏழைகாள்! *— ஓத்ததனை
வல்லீரேல் நன்று, அதனைமாட்டீரேல் * மாதவன்பேர்
சொல்லுவதே ஓத்தின்சுருக்கு. (கூ க)

சுருக்காகவாங்கிச் சுலாவிநின்று * ஐயார்
நெருக்காமுன் நீர்நினைமின்கண்டீர் *— திருப்பொலிந்த
ஆகத்தான் பாதமறிந்தும்அறியாத *
போகத்தாலில்லைபொருள். (ச0)

பொருளாலமருலகம் புக்கியலலாகாது *
‡ அருளாலறமருளுமன்றே? *—அருளாலே
மாமறையோர்க்கீந்த மணிவண்ணன்பாதமே *
நீமறவேல்நெஞ்சே! நினை. (சக)

நினைப்பன்திருமாலை நீண்டதோள்காண *
நினைப்பார் $ பிறப்பொன்றும்நேரார் *—மனைப்பால்
பிறந்தார்பிறந்தெய்தும் பேரின்பமெல்லாம் *
துறந்தார்தொழுதாரத்தோள். (சஉ)

தோளிரண்டெட்டேழும் மூன்றும்முடியனைத்தும் *
தாளிரண்டும்வீழச் சரந்துரந்தான்—தாளிரண்டும் *
ஆர்தொழுவார் பாதமவைதொழுவதன்றே? * என்
சீர்கெழுதோள் செய்யும்சிறப்பு. (சங)

சிறந்தார்க்கெழுதுணையாம் செங்கண்மால்நாமம் *
மறந்தாரைமானிடமாவையேன் *—அறந்தாங்கும்
மாதவனே! என்னும் மனம்படைத்து * மற்றவன்பேர்
ஓதுவதே நாவினாலுள்ளு. (சச)

உளதென்றிறுமாவார் உண்டில்லையென்று *
தளர்தலதனருகுஞ்சாரார் *—அளவரிய
வேதத்தான்வேங்கடத்தான் விண்ணோர்முடிதோயும் *
பாதத்தான் பாதம்பயின்று. (சரு)

† 'சார்வென்றறிந்து' என்னும் பாடம் பொருந்தும். ‡ 'அருளான்' என்றும் பாடம். $ 'பிறப்பென்றும்' என்றும் பாடம்.

பயின்றது அரங்கம் திருக்கோட்டி * பன்னாள்
பயின்றதுவும் வேங்கடமே * பன்னாள்—பயின்றது
அணிதிகழுஞ்சோலை அணிநீர்மலையே *
மணிதிகழும்வண்தடக்கைமால். (௪௬)

மாலையரியுருவன் பாதமலரணிந்து *
காலைதொழுதெழுமின் கைகோலி *—ஞாலம்
அளந்திடந்துஉண்டுமிழ்ந்த அண்ணலை † மற்றல்லால் *
உளங்கிடந்தவாற்றாலுணர்ந்து. (௪௭)

உணர்ந்தாய்மறைநான்கும் ஓதினாய்நீதி *
மணந்தாய்மலர்மகள்தோள்மாலே! *—மணந்தாய்போய்
வேயிருஞ்சாரல் வியலிருஞாலஞ்சூழ் *
மாயிருஞ்சோலைமலை. (௪௮)

மலையேழும் மாநிலங்களேழுமதிர *
குலைசூழ் குரைகடல்களேழும் *—முலைசூழ்ந்த
நஞ்சுரத்துப்பெண்ணை நவின்றுண்டநாவனென்று *
அஞ்சாதுஎன்னெஞ்சே! அழை. (௪௯)

அழைப்பன்திருமாலை ஆங்கவர்கள்சொன்ன *
பிழைப்பில் பெரும்பெயரேபேசி *—இழைப்பரிய
ஆயவனே! யாதவனே! என்றுஅவனையார்முகப்பும் *
மாயவனே! என்றுமதித்து. (௫௦)

மதிக்கண்டாய்நெஞ்சே! மணிவண்ணன்பாதம் *
மதிக்கண்டாய் மற்றவன்பேர்தன்னை *—மதிக்கண்டாய்
பேராழிநின்று பெயர்ந்துகடல்கடைந்த *
நீராழிவண்ணன்நிறம். (௫௧)

நிறங்கரியன் செய்யநெடுமலராள்மார்வன் *
அறம்பெரியனாரதறிவார்? *—மறம்புரிந்த
வாளரக்கன்போல்வானை வானவர்கோன்தானத்து *
நீளிருக்கைக்குத்தான்நெறி. (௫௨)

நெறியார்குழற்கற்றை முன்னின்றுபின்தாழ்ந்து *
அறியாதிளங்கிரியென்றெண்ணி *—பிரியாது
பூங்கொடிக்கள்வைகும் பொருபுனற்குன்றென்னும் *
வேங்கடமே யாம்விரும்பும்வெற்பு. (௫௩)

† 'மற்றெல்லாம்' என்றும் பாடம்.

வெற்பென்றிருஞ்சோலை வேங்கடமென்றிவ்விரண்டும் *
நிற்பென்று நீமதிக்கும்நீர்மைபோல் *—நிற்பென்று
உளங்கோயில் உள்ளம்வைத்துள்ளினேன் * வெள்ளத்
திளங்கோயில் கைவிடேலென்று. (௫௪)

என்றும்மறந்தறியேன் ஏழ்பிறப்புமெப்பொழுதும் *
நின்றுநினைப்பொழியாநீர்மையால் *—வென்றி
அடலாழிகொண்ட அறிவனே ! * இன்பக்
கடலாழி நீயருளிக்காண். (௫௫)

காணக்கழிகாதல் கைமிக்குக்காட்டினால் *
நாணப்படுமென்றால்நாணுமே? *--பேணிக்
கருமாலைப் பொன்மேனிகாட்டாமுன்காட்டும் *
திருமாலை நங்கள்திரு. (௫௬)

திருமங்கைநின்றருளும்தெய்வம் நாவாழ்த்தும் *
கருமம் கடைப்பிடிமின்கண்டீர் *—உரிமையால்
ஏத்தினோம்பாதம் இருந்தடக்கையெந்தைபேர் *
நால்திசையுங்கேட்டீரே? நாம். (௫௭)

நாம்பெற்றநன்மையும் நாமங்கைநன்னெஞ்சத்து *
ஓம்பியிருந்தெம்மையோதுவித்து *—வேம்பின்
பொருள்நீர்மையாயினும் பொன்னாழிபாடென்று *
அருள்நீர்மைதந்தஅருள். (௫௮)

அருள்புரிந்தசிந்தை அடியார்மேல்வைத்து *
பொருள்தெரிந்துகாண்குற்றவப்போது—* † இருள்திரிந்து
நோக்கினேன்நோக்கி நினைந்தேனதொண்கமலம் *
ஓக்கினேனென்னையுமங்கோர்ந்து. (௫௯)

ஒருருவனல்லை ஒளியுருவம்நின்னுருவம் *
ஈருருவனென்பர் இருநிலத்தோர் *—ஒருருவம்
ஆதியாம்வண்ணம் அறிந்தாரவர்கண்டீர் *
நீதியால் மண்காப்பார்நின்று. (௬௦)

நின்றதோர்பாதம் நிலம்புதைப்ப * நீண்டதோள்
சென்றளந்ததென்பர் திசையெல்லாம் *—அன்று
கருமாணியாய் இரந்தகள்வனே ! * உன்னைப்
பிரமாணித்தார் பெற்றபேறு ! (௬௧)

† 'இருளிரிந்து' என்னும் பாடம் வ்யாக்யானத்துக்கு நன்கு பொருந்தும்.

பேறொன்றுமுன்னறியேன் பெற்றறியேன்பேதைமையால் *
மாறென்றுசொல்லிவணங்கினேன் *—ஏறின்
பெருத்தெருத்தங்கோடொசியப் பெண்ணசையின்பின்போய் *
எருத்திறுத்தநல்லாயரேறு. (௬௨)

ஏறேழும் வென்றுஅடர்த்தவெந்தை * எரியுருவத்து
ஏறேறி பட்டவிடுசாபம் *—பாறேறி
யுண்டதலைவாய்நிறையக் கோட்டங்கையொண்குருதி *
கண்டபொருள்சொல்லின்கதை. (௬௩)

† கதையின்பெரும்பொருளும் கண்ணா! * நின்பேரே
இதயமிருந்தவையேயேத்தில் *—கதையும்
திருமொழியாய் நின்றதிருமாலே! * உன்னைப்
பருமொழியால்காணப்பணி. (௬௪)

பணிந்தேன்திருமேனி பைங்கமலம்கையால் *
அணிந்தேனுன்சேவடிமேலன்பாய் *—துணிந்தேன்
புரிந்தேத்தி உன்னைப்புகலிடம்பார்த்து * ஆங்கே
இருந்தேத்திவாழுமிது. (௬௫)

இதுகண்டாய்நன்னெஞ்சே! இப்பிறவியாவது *
இதுகண்டாய் எல்லாம்நாமுற்றது *—இதுகண்டாய்
நாரணன்பேரோதி நரகத்தருகணையா *
காரணமும்வல்லையேல்காண். (௬௬)

கண்டேன்திருமேனி யான்கனவில் * ஆங்கவன்கைக்
கண்டேன் கனலுஞ்சுடராழி—கண்டேன் *
உறுநோய்வினையிரண்டும் ஓட்டுவித்து * பின்னும்
மறுநோய்செறுவான்வலி. (௬௭)

வலிமிக்கவாளெயிற்று வாளவுணர்மாள *
வலிமிக்க வாள்வரைமத்தாக *—வலிமிக்க
வாள்நாகஞ்சுற்றி மறுகக்கடல்கடைந்தான் *
கோள்நாகங்கொம்பொசித்தகோ. (௬௮)

கோவாகி மாநிலங்காத்து * நங்கண்முகப்பே
மாவேகிச்செல்கின்ற மன்னவரும் *— ‡ பூமேவும்
செங்கமலநாபியான் சேவடிக்கேயேழ்பிறப்பும் *
தண்கமலமேய்ந்தார்தமர். (௬௯)

---

† 'கதையும்' என்பதும் பாடம். ‡ 'பூவேகும்' என்று உரையின் பாடம்.

தமருள்ளம்தஞ்சை தலையரங்கம்தண்கால் *
தமருள்ளுந்தண்பொருப்புவேலை *—தமருள்ளும்
மாமல்லைகோவல் மதிட்குடந்தையென்பரே *
ஏவல்லவெந்தைக்கிடம். (௭௦)

இடங்கை வலம்புரிநின்றார்ப்ப * எரிகான்று
அடங்கார் ஒடுங்குவித்ததாழி * விடங்காலும்
தீவாயரவணைமேல்தோன்றல், திசையளப்பான் *
பூவாரடி நிமிர்த்தபோது. (௭௧)

போதறிந்துவானரங்கள் பூஞ்சுனைபுக்கு * ஆங்கலர்ந்த
போதரிந்துகொண்டேத்தும் * போதுஉள்ளம் !—போது
மணிவேங்கடவன் மலரடிக்கேசெல்ல *
அணிவேங்கடவன்பேராய்ந்து. (௭௨)

ஆய்ந்துரைப்பனாயிரம்பேர் ஆதிநடுவந்திவாய் *
வாய்ந்தமலர்தூவிவைகலும் *—ஏய்ந்த
பிறைக்கோட்டுச் செங்கண்கரிவிடுத்தபெம்மான் *
இறைக்குஆட்படத்துணிந்தயான். (௭௩)

யானேதவஞ்செய்தேன் ஏழ்பிறப்புமெப்பொழுதும் *
யானேதவமுடையேன் எம்பெருமான் ! *—யானே
இருந்தமிழ்நன்மாலை இணையடிக்கேசொன்னேன் *
பெருந்தமிழன்நல்லேன்பெரிது. (௭௪)

பெருகுமதவேழம் மாப்பிடிக்குமுன்னின்று *
இருகணிளமூங்கில்வாங்கி * — அருகிருந்த
தேன்கலந்துநீட்டும் திருவேங்கடம்கண்டீர் *
வான்கலந்தவண்ணன்வரை. (௭௫)

வரைச்சந்தனக்குழம்பும் வான்கலனும்பட்டும் *
விரைப்பொலிந்த வெண்மல்லிகையும்—நிரைத்துக்கொண்டு *
ஆதிக்கண்நின்ற அறிவனடியிணையே *
ஓதிப்பணிவதுறும். (௭௬)

உறுங்கண்டாய்நன்னெஞ்சே ! உத்தமன்நற்பாதம் *
உறுங்கண்டா யொண்கமலந்தன்னால் *—உறுங்கண்டாய்
ஏத்திப்பணிந்தவன்பேர் ஈரைஞ்ஞூறெப்பொழுதும் *
† சார்த்தியுரைத்தல்தவம். (௭௭)

† 'சாற்றி' என்று சிலர்.

தவஞ்செய்து நான்முகனேபெற்றான் * தரணி
நிவந்தளப்ப நீட்டியபொற்பாதம் *—சிவந்ததன்
கையனைத்தும் ஆரக்கழுவினான் * கங்கைநீர்
பெய்தனைத்துப்பேர்மொழிந்துபின். (௭௮)

பின்னின்று தாயிரப்பக்கேளான் * பெரும்பணைத்தோள்
முன்னின்று தானிரப்பாள்மொய்ம்மலராள் *—சொல்நின்ற
தோள்நலந்தான் நேரில்லாத்தோன்றல் * அவனளந்த
நீள்நிலந்தானத்தனைக்கும்நேர். (௭௯)

நேர்ந்தேனடிமை நினைந்தேனதொண்கமலம் *
ஆர்ந்தேனுன்சேவடிமேலன்பாய் *—ஆர்ந்த
அடிக்கோலம கண்டவர்க்குஎன்கொலோ ? * முன்னைப்
படிக்கோலம்கண்டபகல். (௮௰)

பகல்கண்டேன் நாரணனைக்கண்டேன் * கனவில்
மிகக்கண்டேன் மீண்டுஅவனைமெய்யே—மிகக்கண்டேன் *
ஊன்திகழும்நேமி ஒளிதிகழும்சேவடியான் *
வான்திகழும்சோதிவடிவு. (௮௧)

வடிக்கோலவாள்நெடுங்கண் மாமலராள் * செவ்விப்
படிக்கோலங்கண்டு அகலாள்பல்நாள் *—அடிக்கோலி
ஞாலத்தாள் பின்னுமநலமபுரிந்ததென்கொலோ ? *
கோலத்தாலில்லைகுறை. (௮௨)

குறையாகவெஞ்சொற்கள் கூறினேன்கூறி *
மறையாங்கெனவுரைத்தமாலை *—இறையேனும்
ஈயுங்கொல் ! என்றே இருந்தேன்எனைப்பகலும் *
மாயன்கண்சென்றவரம். (௮௩)

வரங்கருதித்தன்னை வணங்காதவன்மை *
உரங்கருதி + மூர்க்கத்தவனை *—நரங்கலந்த
சிங்கமாய்க்கீண்ட திருவனடியிணையே *
அங்கண்மாஞாலத்தமுது. (௮௪)

அமுதென்றும்தேனென்றும் ஆழியானென்றும் *
அமுதன்றுகொண்டுகந்தானென்றும் *—அமுதன்ன
சொல்மாலையேத்தித் தொழுதேன்சொலப்பட்ட *
நல்மாலையேத்திநவின்று. (௮௫)

+ 'மூக்கத்தவனை' என்று சிலர்.

நவின்றுரைத்தநாவலர்கள் நாள்மலர்கொண்டு * ஆங்கே
பயின்றதனால் பெற்றபயனென்கொல்? *—பயின்றார்தம்
மெய்த்தவத்தால் காண்பரியமேகமணிவண்ணனை * யான்
எத்தவத்தால்காண்பன்கொல் இன்று? (௮௬)

இன்றாவறிகின்றேனல்லேன் * இருநிலத்தைச்
சென்றாங்களந்த திருவடியை *—அன்று
கருக்கோட்டியுள்கிடந்து கைதொழுதேன், கண்டேன் *
திருக்கோட்டியெந்தைதிறம். (௮௭)

திறம்பிற்றினியறிந்தேன் தென்னரங்கத்தெந்தை *
திறம்பாவழிசென்றார்க்கல்லால்*—திறம்பாச்
செடிநரகைநீக்கித் தாம்செலவதன்முன் * வானோர்
கடிநகரவாசற்கதவு (௮௮)

கதவிக் † கதஞ்சிறந்த கஞ்சனைமுன்காய்ந்து *
அதவிப்போர்யானையொசித்து *—பதவியாய்ப்
பாணியால்நீரேற்றுப் பண்டொருகால்மாவலியை *
மாணியாய்க்கொண்டிலையேமண்? (௮௯)

மண்ணுலகம்ஆளேனே? வானவர்க்கும்வானவனாய் *
விண்ணுலகந்தன்னகத்துமேவேனே? *—நண்ணித்
திருமாலைச் செங்கணெடியானை * எங்கள்
பெருமானைக் கைதொழுதபின். (௯௦)

பின்னாலருநரகம் சேராமல், பேதுறுவீர் *
முன்னால்வணங்கமுயன்மினோ *—பல்நூல்
‡ அளந்தானைக் கார்க்கடல்சூழ்ஞாலத்தை * எல்லாம்
அளந்தானவன்சேவடி. (௯௧)

அடியால் முன்கஞ்சனைச்செற்று * அமரரேத்தும்
படியான் கொடிமேற்புள்கொண்டான் *—நெடியான்தன்
நாமமே ஏத்துமின்கள், ஏத்தினால் * தாம்வேண்டும்
காமமே காட்டும்கடிது. (௯௨)

கடிதுகொடுநரகம் பிற்காலுஞ்செய்கை *
கொடிதென்று $ அதுகூடாமுன்னம் *—வடிசங்கம்
கொண்டானைக் கூந்தல்வாய்கீண்டானை * கொங்கைநஞ்சு
உண்டானையேத்துமினோவுற்று. (௯௩)

† 'கதஞ்சிறந்து' என்பதும் பாடம். ‡ 'அளந்தானிக்கார்க்கடல்' என்பதும் பாடம். $ 'அவை' என்ற பாடம் ஏற்கும்.

உற்றுவணங்கித்தொழுமின் * உலகேழும்
முற்றும்விழுங்கும் முகில்வண்ணன் *—பற்றிப்
பொருந்தாதான்மார்பிடந்து பூம்பாடகத்துள்
இருந்தானை * ஏத்துமென்னெஞ்சு.

என்னெஞ்சமேயான் என்சென்னியான் * தானவனை
வன்னெஞ்சங்கீண்ட மணிவண்ணன் *—முன்னம்சேய்
ஊழியான் ஊழிபெயர்த்தான் * உலகேத்தும்
ஆழியான் அத்தியூரான்.

‡‡ அத்தியூரான் புள்ளையூர்வான் * அணிமணியின்
துத்திசேர் நாகத்தின்மேல்துயில்வான் *— † முத்தீ
மறையாவான் மாகடல்நஞ்சுண்டான்தனக்கும் *
இறையாவான் எங்கள்பிரான்.

எங்கள்பெருமான்! இமையோர்தலைமகன்! நீ *
செங்கண்நெடுமால்! திருமார்பா! *—பொங்கு
படமூக்கினாயிரவாய்ப் பாம்பணைமேல்சேர்ந்தாய் *
‡ குடமூக்குக் கோயிலாக்கொண்டு.

கொண்டுவளர்க்கக் குழவியாய்த்தான்வளர்ந்தது *
உண்டதுலகேழும்உள்ளொடுங்க *—கொண்டு
குடமாடிக் கோவலனாய்மேவி * என்னெஞ்சம்
இடமாகக்கொண்டஇறை.

‡‡ இறையெம்பெருமான்! அருளென்று * இமையோர்
முறைநின்று மொய்ம்மலர்கள்தூவ *—அறைகழல
சேவடியான் செங்கணெடியான் * குறளுருவாய்
§ மாவடிவில்மண்கொண்டான்மால்.

‡‡ மாலே! நெடியோனே! கண்ணனே! விண்ணவர்க்கு
மேலா! * வியன்துழாய்க்கண்ணியனே! *—மேலால்
விளவின்காய் கன்றினால்வீழ்த்தவனே! * என்தன்
அளவன்றால் யானுடையஅன்பு.

தசகஅடிவாவு:—அன்பு கடை தாம் பிரான் பொருள் மதி தின்,
இடங்கை பகல் பின்னால் திரு.

பூதத்தாழ்வார் திருவடிகளே சரணம்.

---

† 'முத்தி' என்பதும் பாடம். ‡ குடமூக்கில்' என்றும் பாடம்.
§ 'மாவலியை' என்பதும் பாடம்.

பேயாழ்வார் அருளிச்செய்த

மூன்றாந்திருவந்தாதி.

தனியன்.

(குருகைகாவலப்பன் அருளிச்செய்தது.)

நேரிசைவெண்பா.

சீராரும்மாடத்திருக்கோவலூரதனுள் *
காரார்கருமுகிலைக்காணப்புக்கு *—ஓராத்
திருக்கண்டேனென்றுரைத்த சீரான்கழலே *
உரைக்கண்டாய்நெஞ்சே! உகந்து.

(மோஹநராகம் - த்ரிபுடைதாளம்.)

↓↓ திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன் * திகழும்
அருக்கனணிநிறமுங்கண்டேன் *—செருக்கிளரும்
பொன்னாழிகண்டேன் புரிசங்கங்கைக்கண்டேன் *
என்னாழிவண்ணன்பாலின்று. (௧)

இன்றேகழல்கண்டேன் ஏழ்பிறப்பும்யானறுத்தேன் *
பொன்தோய்வரைமார்பில்பூந்துழாய் *—அன்று
திருக்கண்டுகொண்ட திருமாலே! * உன்னை
மருக்கண்டுகொண்டென்மனம். (௨)

மனத்துள்ளான் மாகடல்நீருள்ளான் * மலராள்
தனத்துள்ளான் தண்துழாய்மார்பன் *—சினத்துச்
செருநருகச்செற்றுகந்த தேங்கோதவண்ணன் *
வருநரகந்தீர்க்கும்மருந்து. (௩)

மருந்தும்பொருளும் அமுதமுந்தானே *
திருந்தியசெங்கண்மாலாங்கே *— † பொருந்தியும்
நின்றுலகமுண்டுமிழ்ந்தும் நீரேற்றும்மூவடியால் *
அன்றுலகந்தாயோனடி. (௪)

---

† 'பொருந்திய' என்று வழங்குவர்.

அடிவண்ணம்தாமரை அன்றுலகந்தாயோன் *
படிவண்ணம் † பார்க்கடல்நீர்வண்ணம் *—முடிவண்ணம்
ஓராழிவெய்யோன் ஒளியுமஃதன்றே *
ஆராழிகொண்டாற்கழகு.

அழகன்றேயாழியாற்கு ஆழிநீர்வண்ணம் *
அழகன்றேயண்டங்கடத்தல் *—அழகன்றே
அங்கைநீரேற்றாற்கு அலர்மேலோன்கால்கழுவ *
கங்கைநீர்கான்றகழல்.

கழல்தொழுதும்வாநெஞ்சே! கார்க்கடல்நீர்வேலை *
பொழிலளந்தபுள்ளூர்திச்செல்வன் *— ‡ எழிலளந்தங்
கெண்ணற்கரியானை எப்பொருட்குஞ்சேயானை *
நண்ணற்கரியானைநாம்

நாமம்பலசொல்லி நாராயணாவென்று *
நாமங்கையால்தொழுதும்நன்னெஞ்சே!—வா * மருவி
மண்ணுலகமுண்டுமிழ்ந்த வண்டறையுந்தண்துழாய் *
கண்ணனையேகாண்கநங்கண்.

கண்ணுங்கமலம் கமலமேகைத்தலமும் *
மண்ணளந்தபாதமும் மற்றவையே *—எண்ணின்
கருமாமுகில்வண்ணன் கார்க்கடல்நீர்வண்ணன் *
திருமாமணிவண்ணன்தேசு.

தேசுந்திறலும் திருவுமுருவமும் *
மாசில்குடிப்பிறப்பும் மற்றவையும்—பேசில் *
வலம்புரிந்தவான்சங்கம் கொண்டான்பேரோத *
நலம்புரிந்துசென்றடையுநன்கு.

நன்கோதும் நால்வேதத்துள்ளான் * நறவிரியும்
பொங்கோதருவிப்புனல்வண்ணன் *—சங்கோதப்
பாற்கடலான் பாம்பணையின்மேலான் * பயின்றுரைப்பார்
நூற்கடலான் நுண்ணறிவினன்.

அறிவென்னுந்தாள்கொளுவி ஐம்புலனுந்தம்மில் *
செறிவென்னுந்திண்கதவஞ்செம்மி *—மறையென்றும்
நன்கோதி நன்குணர்வார்காண்பரே * நாடோறும்
பைங்கோதவண்ணன்படி.

† ‘பாற்கடல்’ என்பதும் பாடம். ‡ ‘எழிலளந்தும்’ என்றும் பாடம்

படிவட்டத்தாமரை பண்டுலகம்நீரேற்று *
அடிவட்டத்தாலளப்ப நீண்ட—முடிவட்டம் *
ஆகாயமூடறுத்து அண்டம்போய்நீண்டதே *
மாகாயமாய்நின்றமாற்கு. (கங)

மாற்பால்மனஞ்சுழிப்ப மங்கையர்தோள்கைவிட்டு *
நூற்பால்மனம்வைக்கநொய்விதாம் *—நாற்பால
வேதத்தான்வேங்கடத்தான் விண்ணோர்முடிதோயும் *
பாதத்தான்பாதம்பணிந்து. (கச)

பணிந்துயர்ந்தபௌவப் படுதிரைகள்மோத *
பணிந்தபணமணிகளாலே—அணிந்து * அங்கு
அனந்தனணைக் கிடக்குமம்மான் * அடியேன்
மனந்தனணைக்கிடக்கும்வந்து. (கரு)

↓↓ வந்துதைத்தவெண்திரைகள் செம்பவளவெண்முத்தம் *
அந்திவிளக்குமணிவிளக்காம் *— எந்தை
ஒருவல்லித்தாமரையாள் ஒன்றியசீர்மார்வன் *
திருவல்லிக்கேணியான்சென்று. (கசு)

சென்றநாள்செல்லாத செங்கண்மாலெங்கள்மால் *
என்றநாளெந்நாளும்நாளாகும் *—என்றும்
இறவாதவெந்தை இணையடிக்கேயாளாய் *
மறவாதுவாழ்த்துகவென்வாய். (கஎ)

வாய்மொழிந்துவாமனனாய் மாவலிபால * மூவடிமண்
நீயளந்துகொண்டநெடுமாலே! *—தாவியநின்
எஞ்சாவிணையடிக்கே ஏழ்பிறப்புமாளாகி *
அஞ்சாதிருக்கவருள். (கஅ)

அருளாதொழியுமே? ஆலிலைமேல * அன்று
தெருளாதபிள்ளையாய்ச்சேர்ந்தான் *—இருளாத
சிந்தையராய்ச்சேவடிக்கே செம்மலர்தூய்க்கைதொழுது *
முந்தையராய்நிற்பார்க்குமுன். (ககூ)

முன்னுலகம் உண்டுமிழ்ந்தாய்க்கு * அவ்வுலகமீரடியால்
பின்னளந்துகோடல் பெரிதொன்றே? *—என்னே!
திருமாலே! செங்கணெடியானே! * எங்கள்
பெருமானே! நீயிதனைப்பேசு. (உ0)

பேசுவார் எவ்வளவுபேசுவர் * அவ்வளவே
வாசமலர்த்துழாய்மாலையான் *—தேசுடைய
சக்கரத்தான் சங்கினான்சார்ங்கத்தான் * பொங்கரவ
வக்கரனைக்கொன்றான்வடிவு.

வடிவார்முடிகோட்டி வானவர்கள் * நாளும்
கடியார்மலர்தூவிக் காணும்—படியானை *
செம்மையாலுள்ளுருகிச் செவ்வனேநெஞ்சமே! *
மெய்ம்மையேகாணவிரும்பு.

விரும்பிவிண்மண்ணளந்த அஞ்சிறையவண்டார் *
சுரும்புதொளையிற்சென்றூத *—அரும்பும்
புனந்துழாய்மாலையான் பொன்னங்கழற்கே *
மனந்துழாய்மாலாய்வரும்.

வருங்காலிருநிலனும் மால்விசும்புங்காற்றும் *
நெருங்குதீநீருருவுமானான் *—பொருந்தும்
சுடராழி யொன்றுடையான்சூழ்கழலே * நாளும்
தொடராழிநெஞ்சே! தொழுது.

தொழுதால்பழுதுண்டே? தூநீருலகம் *
முழுதுண்டுமொய்குழலாளாய்ச்சி*—† இழுதுண்ட
வாயானை மால்விடையேழ்செற்றானை * வானவர்க்கும்
சேயானை நெஞ்சே! சிறந்து.

சிறந்தவென்சிந்தையும் செங்கணரவும் *
நிறைந்தசீர்நீள்கச்சியுள்ளும்*—உறைந்ததுவும்
வேங்கடமும்வெஃகாவும் வேளுக்கைப்பாடியுமே *
தாம்கடவார்தண்துழாயார்.

ஆரேதுயருழந்தார்? துன்புற்றாராண்டையார் *
காரேமலிந்தகருங்கடலை *—நேரே
கடைந்தானைக் காரணனை * நீரணைமேற்பள்ளி
அடைந்தானை நாளுமடைந்து.

அடைந்ததரவணைமேல் ஐவர்க்காய் * அன்று
மிடைந்தது பாரதவெம்போர்*—உடைந்ததுவும்
ஆய்ச்சிபால்மத்துக்கே அம்மனே *! வாளெயிற்றுப்
பேய்ச்சிபாலுண்டபிரான்.

---

† 'விழுது' என்றுங் கூறுவர்.

பேய்ச்சிபாலுண்ட பெருமானைப்பேர்ந்தெடுத்து *
ஆய்ச்சிமுலைகொடுத்தாளஞ்சாதே *—வாய்த்த
இருளார்திருமேனி இன்பவளச்செவ்வாய் *
தெருளாமொழியானைச்சேர்ந்து. (௭௯)

சேர்ந்ததிருமால் கடல்குடந்தைவேங்கடம் *
நேர்ந்தவென்சிந்தை நிறை † விசும்பு *—வாய்ந்த
மறைபாடகமனந்தன் வண்துழாய்க்கண்ணி *
இறைபாடியாயவிவை (௮௦)

இவையவன்கோயில் இரணியனதாகம் *
அவைசெய்தரியுருவமானான் *—செவிதெரியா
நாகத்தான் நால்வேதத்துள்ளான் * நறவேற்றான்
பாகத்தான்பாற்கடலுளான். (௮௧)

பாற்கடலும்வேங்கடமும் பாம்பும்பனிவிசும்பும் *
நூற்கடலும்நுண்ணூலதாமரைமேல் *—பாற்பட்
டிருந்தார்மனமும் இடமாகக்கொண்டான் *
குருந்தொசித்தகோபாலகன். (௮௨)

பாலகனாய் ஆலிலைமேல்பைய * உலகெல்லாம்
மேலொருநாளுண்டவனே! மெய்ம்மையே *—மாலவனே
மந்தரத்தால் மாநீர்க்கடல்கடைந்து * வானமுதம்
அந்தரத்தார்க்கீந்தாய்நீயன்று. (௮௩)

அன்றிவ்வுலகம் அளந்தவசைவேகொல ? *
நின்றிருந்துவேளுக்கைநீள்நகர்வாய் *—அன்று
கிடந்தானைக் கேடில்சீரானை * முன்கஞ்சைக்
கடந்தானை, நெஞ்சமே ! காண். (௮௪)

காண்காணெனவிரும்புங்கண்கள் * கதிரிலகு
பூண்தாரகலத்தான் பொன்மேனி *—பாண்கண்
தொழில்பாடி வண்டறையுந்தொங்கலான் * செம்பொன்
கழல்பாடியாம்தொழுதுமகை. (௮௫)

கையகனலாழி கார்க்கடல்வாய்வெண்சங்கம் *
வெய்யகதைசார்ங்கம் வெஞ்சுடர்வாள் *—செய்ய
படைபரவைபாழி பனிநீருலகம் *
அடியளந்த ‡ மாயரவர்க்கு. (௮௬)

† ‘விசும்பும்’ என்றும் பாடமோதுவார்கள்.
‡ ‘மாயனவற்கு’ என்பதும் பாடமாம்.

அவற்கடிமைப்பட்டேன் அகத்தான்புறத்தான் *
உவர்க்குங்கருங்கடல்நீருள்ளான் *— துவர்க்கும்
பவளவாய்ப்பூமகளும் பன்மணிப்பூணாரம் *
திகழுந்திருமார்பன்தான். (

தானேதனக்குவமன் தன்னுருவேயெவ்வுருவும் *
தானேதவவுருவும்தாரகையும் *—தானே
எரிசுடரும்மால்வரையும் எண்திசையும் * அண்டத்
திருசுடருமாயவிறை. (

இறையாய்நிலனாகி எண்திசையும்தானாய் *
மறையாய்மறைப்பொருளாய்வானாய் *—பிறைவாய்ந்த
வெள்ளத்தருவி விளங்கொலிநீர்வேங்கடத்தான் *
உள்ளத்தினுள்ளேயுளன். (

உளன்கண்டாய்நல்நெஞ்சே! உத்தமனென்றும்
உளன்கண்டாய் * உள்ளுவாருள்ளத்து—உளன்கண்டாய் *
விண்ணெடுங்கக்கோடுயரும் வீங்கருவிவேங்கடத்தான் *
மண்ணெடுங்கத்தானளந்தமன். (

மன்னுமணிமுடிநீண்டு அண்டம்போயெண்டிசையும் *
துன்னுபொழிலனைத்துஞ்சூழ்கழலே *—மின்னை
உடையாகக்கொண்டு அன்றுலகளந்தான் * குன்றம்
குடையாகஆகாத்தகோ. (

கோவலனாய் ஆநிரைகள்மேய்த்துக்குழலூதி *
மாவலனாய்க்கீண்ட மணிவண்ணன் *—மேவி
† அரியுருவமாகி இரணியனதாகம் *
தெரியுகிராற்கீண்டான்சினம். (

சினமாமதகளிற்றின் திண்மருப்பைச்சாய்த்து *
புனமேயபூமியதனை *—தனமாகப்
பேரகலத்துள்ளொடுக்கும் பேராரமார்வனார் *
ஓரகலத்துள்ளதுலகு. (

உலகும் ஊழியுமாழியும் * ஒண்கேழ்
அலர்கதிருஞ்செந்தீயுமாவான் *—பலகதிர்கள்
பாரித்த பைம்பொன்முடியானடியிணைக்கே *
பூரித்தவென்னெஞ்சே! புரி. (

† 'எரியுருவம்' என்பதும் பாடம்.

புரிந்துமதவேழம் மாப்பிடியோடூடி *
திரிந்துசினத்தாற்பொருது *—விரிந்தசீர்
வெண்கோட்டு முத்துதிர்க்கும்வேங்கடமே * மேலொருநாள்
மண்கோட்டுக்கொண்டான்மலை. (௪௫)

மலைமுகடுமேல்வைத்து வாசுகியைச்சுற்றி *
தலைமுகடுதானொருகைபற்றி *—அலைமுகட்டு
அண்டம்போய்நீர்தெறிப்ப அன்றுகடல்கடைந்தான் *
பிண்டமாய்நின்றபிரான் (௪௬)

நின்றபெருமானே! நீரேற்று * உலகெல்லாம்
சென்றபெருமானே! செங்கண்ணா! *—அன்று
துரகவாய்கீண்ட துழாய்முடியாய்! * நங்கள்
நரகவாய்கீண்டாயும் நீ. (௪௭)

நீயன்றேநீரேற்று உலகமடியளந்தாய்? *
நீயன்றே நின்றுநிரைமேய்த்தாய்? *—நீயன்றே
மாவாயுரம்பிளந்து மாமருதினூடுபோய் *
தேவாசுரம்பொருதாய்செற்று? (௪௮)

செற்றதுவும் சேராவிரணியனை * சென்றேற்றுப்
பெற்றதுவும் மாநிலம் பின்னைக்காய் *— முற்றல்
மூரியேற்றின் முன்னின்றுமொய்ம்பொழித்தாய்! * மூரிச்
சுரியேறுசங்கினாய்! சூழ்ந்து. (௪௯)

சூழ்ந்ததுழாயலங்கல் சோதிமணிமுடிமால் *
தாழ்ந்தவருவித்தடவரைவாய் *—ஆழ்ந்த
மணிநீர்ச்சுனைவளர்ந்த மாமுதலைகொன்றான் *
அணிநீலவண்ணத்தவன் (௫௦)

அவனே அருவரையால் ஆநிரைகள்காத்தான் *
அவனே அணிமருதஞ்சாய்த்தான் *—அவனே
கலங்காப்பெருநகரம் காட்டுவான்கண்டீர் *
இலங்காபுரமெரித்தானெய்து. (௫௧)

எய்தான்மராமரம் ஏழும்இராமனாய் *
எய்தானம்மான் † மறியையெந்திழைக்காய் *—எய்ததுவும்
தென்னிலங்கைக்கோன்வீழ, சென்றுகுறளுருவாய் *
முன்னிலங்கைக்கொண்டான்முயன்று. (௫௨)

† 'மரிய' என்று சிலர் பாடங்கூறுவர்.

முயன்றுதொழுநெஞ்சே! மூரிநீர்வேலை *
இயன்றமரத்தாலிலையின்மேலால் *—பயின்றங்கோர்
மண்ணலங்கொள்வெள்ளத்து மாயக்குழவியாய் *
தண்ணலங்கல்மாலையான்தாள். (

தாளால்சகடம் உதைத்துப்பகடுந்தி *
கீளாமருதிடைபோய்க்கேழலாய் *—மீளாது
மண்ணகலங்கீண்டு அங்கோர்மாதுகந்தமார்வற்கு *
பெண்ணகலங்காதல்பெரிது. (

பெரியவரைமார்பில் பேராரம்பூண்டு *
கரியமுகிலிடைமின்போல *—† தெரியுங்கால்
பாணொடுங்க வண்டறையும்பங்கயமே * மற்றவன்தன்
நீள்நெடுங்கண்காட்டும்நிறம். (

நிறம்வெளிதுசெய்து பசிதுகரிதென்று *
இறையுருவம்யாமறியோமெண்ணில் *—‡ நிறைவுடைய
நாமங்கைதானும் நலம்புகழவல்லளே? *
பூமங்கைகேள்வன்பொலிவு. (

பொலிந்திருண்டகார்வானில் மின்னேபோல்தோன்றி *
மலிந்துதிருவிருந்தமார்வன் *—$ பொலிந்த
கருடன்மேற்கொண்ட கரியான்கழலே *
தெருடன்மேற்கண்டாய்தெளி. (

தெளிந்தசிலாதலத்தின் மேலிருந்தமந்தி *
அளிந்தகடுவனையேநோக்கி *—விளங்கிய
வெண்மதியம் தாவென்னும்வேங்கடமே * மேலொருநாள்
மண்மதியிற்கொண்டுகந்தான்வாழ்வு. (

வாழும்வகையறிந்தேன் மைபோல்நெடுவரைவாய் *
தாழுமருவிபோல்தார்கிடப்ப *—சூழும்
திருமாமணிவண்ணன் செங்கண்மால் * எங்கள்
பெருமானடிசேரப்பெற்று. (

பெற்றம்பிணைமருதம் பேய்முலைமாச்சகடம் *
முற்றக்காத்தூடுபோயுண்டுதைத்து *—கற்றுக்
குணிலை விளங்கனிக்குக்கொண்டெறிந்தான் * வெற்றிப்
பணிலம்வாய்வைத்துகந்தானண்டு. (

† 'தெரியுங்கால்' என்பது பாடாந்தரம்.
$ 'பொலிந்து' என்றும் பாடம்.

‡‡ பண்டெல்லாம்வேங்கடம் பாற்கடல்வைகுந்தம் *
கொண்டங்குறைவார்க்குக்கோயில்போல் *—வண்டு
வளங்கிளரும்நீள்சோலை வண்பூங்கடிகை *
இளங்குமரன் தன்விண்ணகர். (௬௧)

விண்ணகரம்வெஃகா விரிதிரைநீர்வேங்கடம் *
மண்ணகரம்மாமாடவேளுக்கை *—மண்ணகத்த
தென்குடந்தை தேனார்திருவரங்கம்தென்கோட்டி *
தன்குடங்கைநீரேற்றான் தாழ்வு. (௬௨)

தாழ்சடையும்நீள்முடியும் ஒண்மழுவும்சக்கரமும் *
சூழரவும்பொன்னாணும் தோன்றுமால் *—சூழும்
திரண்டருவிபாயும் திருமலைமேலெந்தைக்கு *
இரண்டுருவுமொன்றாயிசைந்து. (௬௩)

இசைந்தஅரவமும் வெற்பும்கடலும் *
பசைந்தங்கமுது † படுப்ப *—அசைந்து
கடைந்தவருத்தமோ ? கச்சிவெஃகாவில் *
கிடந்திருந்துநின்றதுவுமங்கு. (௬௪)

‡ அங்கற்கிடரின்றி அந்திப்பொழுதத்து *
மங்கவிரணியனதாகத்தை *—பொங்கி
அரியுருவமாய்ப்பிளந்த அம்மானவனே *
கரியுருவங்கொம்பொசித்தான்காய்ந்து. (௬௫)

காய்ந்திருளைமாற்றிக் கதிரிலகுமாமணிகள் *
ஏய்ந்தபணக்கதிர்மேல்வெவ்வுயிர்ப்ப *—வாய்ந்த
மதுகைடவரும் வயிறுருகமாண்டார் *
அதுகேடவர்க்கிறுதியாங்கு. (௬௬)

ஆங்குமலரும் குவியுமாலுந்திவாய் *
ஓங்கு § கமலத்தினொண்போது *—ஆங்கைத்
திகிரிசுடரென்றும் வெண்சங்கம் * வானில்
பகருமதியென்றும்பார்த்து. (௬௭)

பார்த்தகடுவன் சுனைநீர்நிழல்கண்டு *
பேர்த்தோர்கடுவனெனப்பேர்ந்து *—கார்த்த
களங்கனிக்குக் கைநீட்டும்வேங்கடமே * மேல்நாள்
விளங்கனிக்குக் கன்றெறிந்தான்வெற்பு. (௬௮)

---

† 'படைப்ப' என்பதும பாடம். ‡ 'அங்கக்கிடரின்றி' என்பதும் பாடம்.
§ 'கமலத்தி னொண்போது' என்னும் பாடத்தில் வெண்டளைசிதையும்.

வெற்பென்று வேங்கடம்பாடும் * வியன்துழாய்
கற்பென்று சூடும் கருங்குழல்மேல் *—மல்பொன்ற
நீண்டதோள்மால்கிடந்த நீள்கடல்நீராடுவான் *
பூண்டநாளெல்லாம்புகும். (௬௯)

புகுமதத்தால் வாய்பூசிக்கீழ்தாழ்ந்து * அருவி
உகுமதத்தால் கால்கழுவிக்கையால் *—மிகுமதத்தேன்
விண்டமலர்கொண்டு விறல்வேங்கடவனையே *
கண்டுவணங்கும்களிறு. (௭௦)

களிறுமுகில்குத்தக் கையெடுத்தோடி *
ஒளிறுமருப்பொசிகையாளி—பிளிறி
விழ * கொன்றுநின்றதிரும் வேங்கடமே * மேல்நாள்
குழக்கன்றுகொண்டெறிந்தானகுன்று. (௭௧)

குன்றொன்றினாய குறமகளிர்கோல்வளைக்கை *
சென்றுவிளையாடும் தீங்கழைபோய் *—வென்று
விளங்குமதிகோள்விடுக்கும் வேங்கடமே * மேலை
இளங்குமரர்கோமானிடம். (௭௨)

இடம்வலமேழ்பூண்ட இரவித்தேரோட்டி *
வடமுகவேங்கடத்துமன்னும் *—குடம்நயந்த
கூத்தனாய்நின்றான் குரைகழலேகூறுவதே *
நாத்தன்னாலுள்ளநலம். (௭௩)

நலமேவலிதுகொல் ? நஞ்சூட்டுவன்பேய் *
நிலமேபுரண்டுபோய்வீழ *—சலமேதான்
வெங்கொங்கையுண்டானை மீட்டாய்ச்சியூட்டுவான் *
தன்கொங்கைவாய்வைத்தாள்சார்ந்து. (௭௪)

சார்ந்தகடுதேய்ப்பத் தடாவியகோட்டுச்சிவாய் *
ஊர்ந்தியங்கும்வெண்மதியினொண்முயலை *—சேர்ந்து
சினவேங்கைபார்க்கும் திருமலையே * ஆயன்
புனவேங்கைநாறும்பொருப்பு. (௭௫)

பொருப்பிடையேநின்றும் புனல்குளித்தும் * ஐந்து
நெருப்பிடையேநிற்கவும்நீர்வேண்டா *—விருப்புடைய
வெஃகாவேசேர்ந்தானை † மெய்ம்மலர்தூய்க்கைதொழுதால் *
அஃகாவேதீவினைகளாய்ந்து. (௭௬)

† 'மென்மலர்' என்பது சிலர்பாடம்.

ஆய்ந்தவருமறையோன் நான்முகத்தோன் நன்குறங்கில் *
வாய்ந்தகுழவியாய்வாளரக்கன் *—ஏய்ந்த
முடிப்போது மூன்றேழென்றெண்ணினான் * ஆர்ந்த
அடிப்போதுநங்கட்கரண். (எள)

அரணாம்நமக்கென்றும் ஆழிவலவன் *
முரணாள்வலஞ் † சுழிந்தமொய்ம்பன் *—சரணாமேல்
ஏதுகதி? ஏதுநிலை? ஏதுபிறப்பு? என்னாதே *
ஓதுகதி ‡ மாயனையேயோர்த்து. (எஅ)

ஓர்த்தமனத்தராய் ஐந்தடக்கியாராய்ந்து *
பேர்த்தால்பிறப்பேழும்பேர்க்கலாம் *—கார்த்த
விரையார்நறுந்துழாய் வீங்கோதமேனி *
நிரையாரமார்வனையேநின்று. (எக)

நின்றெதிராய நிரைமணித்தேர்வாணன்தோள் *
ஒன்றியவீரைஞ்ஞூறுடன்துணிய *—வென்றிலங்கும்
ஆர்படுவான் நேமியரவணையான் * சேவடிக்கே
நேர்படுவான்தான்முயலும்நெஞ்சு (அ0)

நெஞ்சால் நினைப்பரியனேலும் * நிலைபெற்றென்
நெஞ்சமே! பேசாய் நினைக்குங்கால் *—நெஞ்சத்துப்
பேராதுநிற்கும் பெருமானையென்கொலோ? *
ஓராதுநிற்பதுணர்வு. (அக)

உணரிலுணர்வரியன் உள்ளம்புகுந்து *
புணரிலுங்காண்பரியனுண்மை *—இணரணையக்
கொங்கணைந்துவண்டறையும் தண்துழாய்க்கோமானை *
எங்கணைந்து காண்டும்இனி? (அஉ)

இனியவன்மாயன் எனவுரைப்பரேலும் *
இனியவன்காண்பரியனேலும் *—இனியவன்
கள்ளத்தால்மண்கொண்டு விண்கடந்தபைங்கழலான் *
உள்ளத்தினுள்ளேயுளன். (அங)

உளனாய நான்மறையின்உட்பொருளை * உள்ளத்
துளனாகத் தேர்ந்துணர்வரேலும் *—உளனாய
வண்தாமரைநெடுங்கண் மாயவனையாவரே? *
கண்டாருகப்பர்கவி. (அச)

† 'சுழித்த'என்ற பாடம் ஏற்கும். ‡ 'மாதவனை' என்று சிலவிடங்களில் பாடம்.

கவியினார்கைபுனைந்து கண்ணார்கழல்போய் *
செவியினார்கேள்வியராய்ச்சேர்ந்தார் *—புவியினார்
போற்றியுரைக்கப் பொலியுமே ? * பின்னைக்கா
ஏற்றுயிரையட்டானெழில். (அரு

† எழில்கொண்டு மின்னுக்கொடியெடுத்து * வேகத்
தொழில்கொண்டு தான்முழங்கித்தோன்றும்*—எழில்கொண்ட
நீர்மேகமன்ன நெடுமால்நிறம்போல *
கார்வானம்காட்டும்கலந்து. (அசு

கலந்துமணியிமைக்கும் கண்ணா ! * நின்மேனி
மலர்ந்து மரதகமேகாட்டும் *—நலந்திகழும்
கொந்தின்வாய்வண்டறையும் தண்துழாய்க்கோமானை *
அந்திவான்காட்டுமது. (அஎ)

அதுநன்றுஇதுதீதென்று ஐயப்படாதே *
மதுநின்றதண்துழாய்மார்வன் *—பொதுநின்ற
பொன்னங்கழலேதொழுமின் * முழுவினைகள்
முன்னம்கழலும்முடிந்து. (அஅ)

முடிந்தபொழுதில் குறவாணர் * ஏனம்
படிந்துழுசால் பைந்தினைகள்வித்த *—தடிந்தெழுந்த
வேய்ங்கழைபோய் விண்திறக்கும்வேங்கடமே * மேலொருநாள்
தீங்குழல்வாய்வைத்தான்சிலம்பு. (அகூ)

சிலம்பும்செறிகழலும் சென்றிசைப்ப * விண்ணாறு
அலம்பியசேவடிபோய் * அண்டம்—புலம்பியதோள்
எண்திசையும்சூழ இடம்போதாதென்கொலோ ? *
வண்துழாய்மாலளந்தமண். (கூ0)

மண்ணுண்டும் பேய்ச்சிமுலையுண்டுமாற்றாதாய் *
வெண்ணெய்விழுங்கவெகுண்டு * ஆய்ச்சி—கண்ணிக்
கயிற்றினால்கட்டத் தான்கட்டுண்டிருந்தான் *
வயிற்றினோடாற்றாமகன். (கூக)

மகனொருவர்க்கல்லாத மாமேனிமாயன் *
மகனாமவன்மகன் தன்காதல்—மகனை *
சிறைசெய்தவாணன்தோள் செற்றான்கழலே *
நிறைசெய்துஎன்நெஞ்சே ! நினை. (கூஉ)

† 'எழில்கொண்ட' என்பதும் பாடம்.

நினைத்துலகிலார்தெளிவார்? நீண்டதிருமால் *
அனைத்துலகுமுள்ளொடுக்கியால்மேல் *—கனைத்துலவு
வெள்ளத்தோர்பிள்ளையாய் மெள்ளத்துயின்றானை *
உள்ளத்தேவைநெஞ்சே! உய்த்து. (௯௩)

உய்த்துணர்வென்னும் ஒளிகொள்விளக்கேற்றி *
வைத்தவனைநாடிவலைப்படுத்தேன் *—மெத்தெனவே
நின்றானிருந்தான் கிடந்தானென்னெஞ்சத்து *
பொன்றாமைமாயன்புகுந்து. (௯௪)

புகுந்திலங்கும் அந்திப்பொழுதத்து * அரியாய்
இகழ்ந்தவிரணியனதாகம் *—சுகிர்ந்தெங்கும்
சிந்தப்பிளந்த திருமால்திருவடியே *
வந்தித்துஎன்நெஞ்சமே! வாழ்த்து. (௯௫)

வாழ்த்தியவாயராய் வானோர்மணிமகுடம் *
தாழ்த்திவணங்கத்தழும்பாமே *—கேழ்த்த
அடித்தாமரை மலர்மேல்மங்கைமணாளன் *
அடித்தாமரையாமலர். (௯௬)

அலரெடுத்தவுந்தியான் ஆங்கெழிலாய *
மலரெடுத்தமாமேனிமாயன் *—அலரெடுத்த
வண்ணத்தான் மாமலரான்வார்சடையான் * என்றிவர்கட்கு
எண்ணத்தானாமோ? இமை. (௯௭)

இமஞ்சூழ்மலையும் இருவிசும்பும்காற்றும் *
அமஞ்சூழ்ந் தறவிளங்கித்தோன்றும் *—நமன்சூழ்
நரகத்து நம்மைநணுகாமல்காப்பான் *
துரகத்தைவாய்பிளந்தான்தொட்டு. (௯௮)

⸸⸸ தொட்டபடையெட்டும் தோலாதவென்றியான் *
அட்டபுயகரத்தானஞ்ஞான்று *—குட்டத்துக்
கோள்முதலைதுஞ்சக் குறித்தெறிந்தசக்கரத்தான் *
தாள்முதலேநங்கட்குச்சார்வு. (௯௯)

⸸⸸ சார்வுநமக்கென்றும் சக்கரத்தான் * தண்துழாய்த்
தார்வாழ்வரைமார்பன்தான்முயங்கும் *—காரார்ந்த
வானமருமின்னிமைக்கும் வண்தாமரைநெடுங்கண் *
தேனமரும்பூமேல்திரு. (௧௦௦)

தசகஅடிவரவு:—திரு நன்கு பேசுவார் இவை மன்னும் அவனே பண்டு
களிறு நெஞ்சால் மண்ணுண்டும் நான்முகன்.

பேயாழ்வார் திருவடிகளே சரணம்.

திருமழிசையாழ்வார் அருளிச்செய்த

நான்முகன் திருவந்தாதி.

தனியன்.

(சீராமப்பிள்ளை அருளிச்செய்தது.)

நேரிசைவெண்பா.

நாராயணன்படைத்தான்நான்முகனை * நான்முகனுக்கு
ஏரார்சிவன்பிறந்தானென்னுஞ்சொல் *—சீரார்
மொழிசெப்பிவாழலாம்நெஞ்சமே! * மொய்பூ
மழிசைப்பரனடியேவாழ்த்து.

(அடாணாராகம் - அடதாளம்.)

↓↓ நான்முகனை நாராயணன்படைத்தான் * நான்முகனும்
தான்முகமாய்ச் சங்கரனைத்தான்படைத்தான் *—யான்முகமாய்
அந்தாதிமேலிட்டு அறிவித்தேனாழ்பொருளை *
சிந்தாமல்கொண்மின்நீர்தேர்ந்து. (க

தேருங்கால்தேவன் ஒருவனேயென்றுரைப்பர் *
ஆருமறியாரவன்பெருமை *—ஓரும்
பொருள்முடிவுமித்தனையே, எத்தவம்செய்தார்க்கும் *
அருள்முடிவதாழியான்பால். (உ)

பாலிற்கிடந்ததுவும் பண்டரங்கமேயதுவும் *
ஆலில்துயின்றதுவுமாரறிவார்? *—ஞாலத்
தொருபொருளை வானவர்தம்மெய்ப்பொருளை * அப்பில்
அருபொருளை யானறிந்தவாறு. (ங)

ஆறுசடைக்கரந்தான் அண்டர்கோன்தன்னோடும் *
கூறுடையனென்பதுவும் கொள்கைத்தே *—வேறொருவ
ரில்லாமைநின்றானை எம்மானை * எப்பொருட்கும்
சொல்லானைச் சொன்னேன்தொகுத்து. (ச)

தொகுத்தவரத்தனைத் தோலாதான்மார்வம் *
வகிர்த்தவளையுகிர்தோள்மாலே! *—உகத்தில்
ஒருநான்றுநீயுயர்த்தி உள் † வாங்கிநீயே *
அருநான்குமானாயறி. (ரு)

---

† 'வாங்கினையே' என்றும் பாடம்.

அறியார்சமணர் அயர்த்தார்பவுத்தர் *
சிறியார்சிவப்பட்டார்செப்பில *—வெறியாய
மாயவனைமாலவனை மாதவனையேத்தாதார் *
ஈனவரேயாதலாலின்று. (௬)

இன்றாக நாளையேயாக * இனிச்சிறிதும்
நின்றாக நின்னருளென்பாலதே *—நன்றாக
நானுன்னை அன்றி இலேன்கண்டாய் * நாரணனே !
நீயென்னையன்றியிலை. (எ)

இலைதுணைமற்றென்னெஞ்சே !—ஈசனைவென்று *
சிலைகொண்டசெங்கண்மால்சேரா *—குலைகொண்ட
ஈரைந்தலையான் இலங்கையையீடழித்த *
கூரம்பனல்லால்குறை (அ)

குறைகொண்டுநான்முகன் குண்டிகைநீர்பெய்து *
மறைகொண்டமந்திரத்தால் வாழ்த்தி *—கறைகொண்ட
கண்டத்தான் சென்னிமேலேறக்கழுவினான் *
அண்டத்தான்சேவடியையாங்கு. (௯)

ஆங்காரவாரமதுகேட்டு * அழலுமிழும்
பூங்காரரவணையான் பொன்மேனி *—யாங்காண
வல்லமேயல்லமே ? மாமலரான்வார்சடையான் *
வல்லரேயல்லரே ? வாழ்த்து. (௧0)

வாழ்த்துகவாய் காண்ககண்கேட்கசெவி * மகுடம்
தாழ்த்திவணங்குமின்கள் தண்மலரால் *—சூழ்த்த
துழாய்மன்னுநீள்முடி என்தொல்லைமால்தன்னை *
வழாவண்கைகூப்பிமதித்து. (௧௧)

மதித்தாய்போய்நான்கின் மதியார்போய்வீழ *
மதித்தாய், மதிகோள்விடுத்தாய்! *—மதித்தாய்,
மடுக்கிடந்த மாமுதலைகோள்விடுப்பான் * ஆழி
விடற்கிரண்டும்போயிரண்டின்வீடு. (௧௨)

வீடாக்கும் பெற்றியறியாது * மெய்வருத்திக்
கூடாக்கி நின்றுண்டுகொண்டுழல்வீர்! *—வீடாக்கும்
மெய்ப்பொருள்தான் வேதமுதற்பொருள்தான் *விண்ணவர்க்கு
நற்பொருள்தான் நாராயணன். (௧௩)

நாராயணன் என்னையாளி * நரகத்துச்
சேராமல்காக்குந்திருமால்தன் *—பேரான
பேசப்பெறாத பிணச்சமயர்பேசக்கேட்டு *
ஆசைப்பட்டாழ்வார்பலர். (௧௪)

பலதேவரேத்தப் படிகடந்தான்பாதம் *
மலரேறவிட்டிறைஞ்சிவாழ்த்த—வலராகில் *
மார்க்கண்டன்கண்டவகையே வருங்கண்டீர் *
நீர்க்கண்டன்கண்டநிலை. (௧௫)

நிலைமன்னுமென்னெஞ்சம் அந்நான்று * தேவர்
தலைமன்னர்தாமே மாற்றாக *—பலமன்னர்
போர்மாள வெங்கதிரோன்மாயப்பொழில்மறைய *
தேராழியால்மறைத்தாரால். (௧௬)

ஆலநிழற்கீழ் அறநெறியை * நால்வர்க்கு
மேலையுகத்துரைத்தான் மெய்த்தவத்தோன் *—ஞால
மளந்தானை ஆழிக்கிடந்தானை * ஆல்மேல்
வளர்ந்தானைத் தான்வணங்குமாறு. (௧௭)

மாறாயதானவனை வள்ளுகிரால் * மார்விரண்டு
கூறாகக் கீறியகோளரியை *—வேறாக
ஏத்தியிருப்பாரை வெல்லுமே * மற்றவரைச்
† சார்த்தியிருப்பார்தவம். (௧௮)

தவஞ்செய்து நான்முகனால்பெற்றவரத்தை *
அவஞ்செய்த ஆழியாயன்றே *—உவந்தெம்மைக்
காப்பாய்நீ காப்பதனையாவாய்நீ * வைகுந்த
மீப்பாயுமெவ்வுயிர்க்கும்நீ. (௧௯)

நீயேயுலகெல்லாம் நின்னருளேநிற்பனவும் *
நீயே தவத்தேவதேவனும் *—நீயே
எரிசுடரும்மால்வரையும் எண்திசையும் * அண்டத்
திருசுடருமாயவிவை. (௨0)

இவையா! பிலவாய் திறந்தெரிகான்ற *
இவையா! எரிவட்டக்கண்கள் *—இவையா !
எரிபொங்கிக்காட்டும் இமையோர்பெருமான் *
அரிபொங்கிக்காட்டுமழகு. (௨௧)

---

† 'சாற்றி' என்றும் ஓதுவர்.

அழகியான்தானே அரியுருவன்தானே *
பழகியான்தாளேபணிமின் *—குழவியாய்த்
தானேழுலகுக்கும் தன்மைக்குந்தன்மையனே *
மீனாயுயிரளிக்கும்வித்து. (உஉ)

வித்துமிடவேண்டுங்கொல்லோ? விடையடர்த்த *
பத்தியுழவன்பழம்புனத்து *—மொய்த்தெழுந்த
கார்மேகமன்ன கருமால்திருமேனி *
நீர்வானங்காட்டும்நிகழ்ந்து. (உங)

நிகழ்ந்தாய் பால்பொன்பசுப்புக் கார்வண்ணம்நான்கும் *
இகழ்ந்தாயிருவரையும்வீய *—புகழ்ந்தாய்
சினப்போர்ச்சுவேதனைச் சேனாபதியாய் *
மனப்போர்முடிக்கும்வகை. (உச)

வகையால்மதியாது மண்கொண்டாய் * மற்றும்
வகையால் வருவதொன்றுண்டே? *—வகையால
வயிரங்குழைத்துண்ணும் மாவலிதானென்னும் *
வயிரவழக்கொழித்தாய்மற்று. (உரு)

மற்றுத்தொழுவார் ஒருவரையும்யானின்மை *
கற்றைச்சடையான்கரிக்கண்டாய் *—எற்றைக்கும்
கண்டுகொள்கண்டாய் கடல்வண்ணா! * யானுன்னைக்
கண்டுகொள்கிற்குமாறு. (உசு)

மால்தான்புகுந்த மட † நெஞ்சம் * மற்றதுவும்
பேறாகக்கொள்வனோ? பேதைகாள்! *—நீறாடி
தான்காணமாட்டாத தாரகலச்சேவடியை *
யான்காணவல்லேற்கிது. (உஎ)

இதுவிலங்கையீடழியக் கட்டியசேது *
இதுவிலங்குவாலியை ‡ வீழ்த்ததுவும் *—இதுவிலங்கை
தானொடுங்கவில்நுடங்கத் தண்தாரிராவணனை *
ஊனொடுங்கவெய்தானுகப்பு. (உஅ)

உகப்புருவன்தானே ஒளியுருவன்தானே *
மகப்புருவன்தானேமதிக்கில் *—மிகப்புருவம்
ஒன்றுக்கொன்று ஓசனையான்வீழ * ஒருகணையால்
அன்றிக்கொண்டெய்தானவன். (உகூ)

---

† 'நெஞ்சன்' என்று பாடங்கொள்ள இடமுண்டு.

‡ இங்கே தளை தட்டுகின்றது.

அவனென்னையாளி அரங்கத்து * அரங்கில்
அவனென்னையெய்தாமல்காப்பான் *—அவனென்ன
துள்ளத்து நின்றானிருந்தான்கிடக்குமே *
வெள்ளத்தரவணையின்மேல். (௩0)

மேல்நான்முகன் அரனையிட்டவிடுசாபம் *
தான்நாரணனொழித்தான் † தாரகையுள் *—வானோர்
பெருமானை ஏத்தாதபேய்காள்! * பிறக்கும்
கருமாயம்பேசின்கதை. (௩௧)

கதைப்பொருள்தான் கண்ணன்திருவயிற்றினுள்ள *
உதைப்பளவு போதுபோக்கின்றி *—வதைப்பொருள்தான்
வாய்ந்தகுணத்துப் படாததுஅடைமினோ *
ஆய்ந்தகுணத்தானடி. (௩௨)

அடிச்சகடஞ்சாடி அரவாட்டி * யானை
பிடித்தொசித்துப் பேய்முலைநஞ்சுண்டு *—வடிப்பவள
வாய்ப்பின்னைதோளிக்கா வல்லேற்றெருத்திறுத்து *
கோப்பின்னுமானான்குறிப்பு. (௩௩)

குறிப்பெனக்குக் கோட்டியூர்மேயானையேத்த *
குறிப்பெனக்கு நன்மைபயக்க *—வெறுப்பனோ?
வேங்கடத்துமேயானை ‡ மெய்வினைநோயெய்தாமல் *
தான்கடத்துந்தன்மையான்தாள். (௩௪)

↓↓ தாளால் உலகம்அளந்தவசைவேகொல்? *
வாளாகிடந்தருளும் வாய்திறவான் *—நீளோதம்
வந்தலைக்கும்மாமயிலை மாவல்லிக்கேணியான் *
ஐந்தலைவாய்நாகத்தணை. (௩௫)

நாகத்தணைக்குடந்தை வெஃகாதிருவெவ்வுள் *
நாகத்தணையரங்கம் பேரன்பில் *—நாகத்
தணைப்பாற்கடல்கிடக்கும் ஆதிநெடுமால் *
அணைப்பார்கருத்தனவான். (௩௬)

வானுலவுதீவளி மாகடல்மாபொருப்பு *
தானுலவுவெங்கதிரும் தண்மதியும் *—மேல்நிலவு
கொண்டல்பெயரும் திசையெட்டுஞ்சூழ்ச்சியும் *
அண்டந்திருமாலகைப்பு. (௩௭)

---

† 'தாரணியுள்' என்ற பாடம் சேரும். ‡ 'வெவ்வினைநோய்' என்பதும் பாடம்.

அகைப்பில்மனிசரை ஆறுசமயம்
புகைத்தான் * பொருகடல்நீர்வண்ணன் *—உகைக்குமேல்
எத்தேவர்வாலாட்டும் எவ்வாறுசெய்கையும் *
அப்போதொழியுமழைப்பு. (௩௮)

அழைப்பன் திருவேங்கடத்தானைக்காண *
இழைப்பன் திருக்கூடல்கூட *—மழைப்பே
ரருவி மணி † வரன்றிவந்திழிய * யானை
வெருவியரவொடுங்கும்வெற்பு. (௩௯)

வெற்பென்று வேங்கடம்பாடினேன் * வீடாக்கி
நிற்கின்றேன் நின்றுநினைக்கின்றேன் *—கற்கின்ற
நூல்வலையில்பட்டிருந்த நூலாட்டிகேள்வனார் *
கால்வலையில்பட்டிருந்தேன்காண். (௪0)

காணலுறுகின்றேன் கல்லருவிமுத்துதிர *
ஓணவிழவிலொலியதிர *—பேணி
வருவேங்கடவா! என்னுள்ளம்புகுந்தாய் *
திருவேங்கடமதனைச்சென்று. (௪௧)

சென்றுவணங்குமினோ சேணுயர்வேங்கடத்தை *
நின்றுவினைகெடுக்கும் நீர்மையால் *—என்றும்
கடிக்கமலநான்முகனும் கண்மூன்றத்தானும் *
அடிக்கமலமிட்டேத்துமங்கு. (௪௨)

மங்குல்தோய்சென்னி வடவேங்கடத்தானை *
கங்குல்புகுந்தார்கள் காப்பணிவான் *—திங்கள்
சடையேறவைத்தானும் தாமரைமேலானும் *
குடையேறத்தாங்குவித்துக்கொண்டு. (௪௩)

கொண்டுகுடங்கால் மேல்வைத்தகுழவியாய் *
தண்டவரக்கன்தலைதாளால்—பண்டெண்ணி *
போம்குமரன்நிற்கும் பொழில்வேங்கடமலைக்கே *
போம்குமரருள்ளீர்! புரிந்து. (௪௪)

புரிந்துமலரிட்டுப் புண்டரீகப்பாதம் *
பரிந்துபடுகாடுநிற்ப *—தெரிந்தெங்கும்
தானோங்கிநிற்கின்றான் தண்ணருவிவேங்கடமே *
வானோர்க்கும்மண்ணோர்க்கும்வைப்பு. (௪௫)

† 'வரண்டி' என்று வழங்குவர்.

வைப்பன்மணிவிளக்கா மாமதியை * மாலுக்கென்று
எப்பொழுதும் கைநீட்டும்யானையை *—எப்பாடும்
வேடுவளைக்கக் குறவர்வில்லெடுக்கும்வேங்கடமே *
நாடுவளைத் † தாடுதுமேல்நன்று. (௪௬)

நன்மணிவண்ணனூர் ஆளியுங்கோளரியும் *
பொன்மணியும்முத்தமும் பூமரமும் *—பன்மணிநீ
ரோடு பொருதுருளுங்கானமும்வானரமும் *
வேடுமுடைவேங்கடம். (௪௭)

வேங்கடமே விண்ணோர்தொழுவதுவும் * மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய்தீர்ப்பதுவும் *—வேங்கடமே
தானவரைவீழத் தன்னாழிப்படைதொட்டு *
வானவரைக்காப்பான்மலை (௪௮)

மலையாமைமேல்வைத்து வாசுகியைச்சுற்றி *
தலையாமைதாளொருகைபற்றி *—அலையாமல்
பீறக்கடைந்த பெருமான்திருநாமம் *
கூறுவதேயாவர்க்குங்கூற்று. (௪௯)

கூற்றமும்சாரா கொடுவினையும்சாரா * தீ
மாற்றமும்சாராவகையறிந்தேன் *—ஆற்றங்
கரைக்கிடக்கும் கண்ணன்கடற்கிடக்கும் * மாயன்
உரைக்கிடக்குமுள்ளத்தெனக்கு. (௫௦)

எனக்காவார் ஆரொருவரே ? * எம்பெருமான்
தனக்காவான் தானேமற்றல்லால் *—புனக்காயா
வண்ணனே ! உன்னைப்பிறரறியார் * என்மதிக்கு
விண்ணெல்லாமுண்டோவிலை ? (௫௧)

விலைக்காட்படுவர் விசாதியேற்றுண்பர் *
தலைக்காட்பலிதிரிவர்தக்கோர் *—முலைக்கால்
விடமுண்டவேந்தனையே ‡ வேறுவேத்தாதார் *
கடமுண்டார்கல்லாதவர். (௫௨)

கல்லாதவர் இலங்கைகட்டழித்த * காகுத்த
னல்லால் ஒருதெய்வம்யானிலேன் *—பொல்லாத
தேவரைத் தேவரல்லாரை * திருவில்லாத்
தேவரைத் தேறேன்மின்தேவு. (௫௩)

† 'ஆடுமேல்' என்ற பாடம் ஏற்கும். ‡ 'வேறாக வேத்தாதார்' என்ற பாடம் தீதவறும்.

தேவராய்நிற்கும் அத்தேவும் * அத்தேவரில்
மூவராய்நிற்கும் முதுபுணர்ப்பும் *—யாவராய்
நிற்கின்றதெல்லாம் நெடுமாலென்றோராதார் *
கற்கின்றதெல்லாம்கடை. (௫௪)

கடைநின்றமரர் கழல்தொழுது * நாளும்
இடைநின்றவின்பத்தராவர் *—புடைநின்ற
நீரோதமேனி நெடுமாலே! * நின்னடியை
யாரோதவல்லாரவர்? (௫௫)

அவரிவரென்றில்லை அனங்கவேள்தாதைக்கு *
எவருமெதிரில்லைகண்டீர் *—உவரிக்
கடல்நஞ்சமுண்டான் கடனென்று * வாணற்கு
உடன்நின்றுதோற்றானொருங்கு. (௫௬)

ஒருங்கிருந்தநல்வினையும் தீவினையுமாவான் *
பெருங்குருந்தஞ்சாய்த்தவனே பேசில் *—மருங்கிருந்த
வானவர்தாம்தானவர்தாம் தாரகைதான் * என்னெஞ்ச
மானவர்தாம் அல்லாததென்? (௫௭)

என்னெஞ்சமேயான் இருள்நீக்கிஎம்பிரான் *
மன்னஞ்சமுன்னொருநாள் மண்ணளந்தான் *—என்னெஞ்ச
மேயானை இல்லாவிடையேற்றான் * வெவ்வினைதீர்த்து
ஆயானுக்காக்கினேனன்பு (௫௮)

அன்பாவாய் ஆரமுதமாவாய் * அடியேனுக்கு
இன்பாவாய் எல்லாமும்நீயாவாய் *—பொன்பாவை
கேள்வா! கிளரொளியென்கேசவனே! * கேடின்றி
ஆள்வாய்க்குஅடியேன்நானாள். (௫௯)

ஆட்பார்த்துழிதருவாய் கண்டுகொளென்று * நின்
தாட்பார்த்துழிதருவேன் தன்மையை *—கேட்பார்க்கு
அரும்பொருளாய் நின்றஅரங்கனே! * உன்னை
விரும்புவதே விள்ளேன்மனம். (௬௦)

மனக்கேதம்சாரா மதுசூதன்தன்னை *
தனக்கேதான் தஞ்சமாக்கொள்ளில் *—எனக்கேதான்
இன்றொன்றிநின்றுலகையேழ் ஆணையோட்டினான் *
சென்றொன்றிநின்றதிரு. (௬௧)

திருநின்றபக்கம் திறவிதென்றோரார் *
கருநின்றகல்லார்க்குஉரைப்பர் *—திருவிருந்த
மார்பின் சிரீதரன்தன்வண்டுலவுதண்துழாய் *
தார்தன்னைச் சூடித்தரித்து. (சுஉ)

தரித்திருந்தேனாகவே தாராகணப்போர் *
விரித்துரைத்தவெந்நாகத்துன்னை *—தெரித்தெழுதி
வாசித்தும்கேட்டும் வணங்கிவழிபட்டும் *
பூசித்தும் போக்கினேன்போது. (சுங)

போதானை இட்டிறைஞ்சியேத்துமினோ * பொன்மகரக்
காதானை ஆதிப்பெருமானை *—நாதானை
நல்லானைநாரணனை நம்மேழ்பிறப்பறுக்கும்
சொல்லானை * சொல்லுவதேசூது. (சுச)

சூதாவது என்னெஞ்சத்தெண்ணினேன் * சொல்மாலை
மாதாய † மாலவனைமாதவனை *—யாதானும்
வல்லவா சிந்தித்திருப்பேற்கு * வைகுந்தத்து
இல்லையோசொல்லீரிடம் ? (சுரு)

இடமாவது என்னெஞ்சமின்றெல்லாம் * பண்டு
படநாகணை நெடியமாற்கு *—திடமாக
வையேன் மதிசூடிதன்னோடு * அயனைநான்,
வையேன் ஆட்செய்யேன்வலம். (சுசு)

வலமாக மாட்டாமைதானாக * வைகல்
குலமாக குற்றந்தானாக *—நலமாக
நாரணனைநாபதியை ஞானப்பெருமானை *
சீரணனையேத்துந்திறம். (சுஎ)

திறம்பேன்மின்கண்டீர் திருவடிதன்நாமம் *
மறந்தும்புறந்தொழாமாந்தர் *— இறைஞ்சியும்
சாதுவராய்ப் போதுமின்களென்றான் * நமனும்தன்
தூதுவரைக்கூவிச்செவிக்கு. (சுஅ)

செவிக்கின்பமாவதுவும் செங்கண்மால்நாமம் *
புவிக்கும்புவியதுவேகண்டீர் *—கவிக்கு
‡ நிறைபொருளாய்நின்றானை நேர்பட்டேன் * பார்க்கில்
மறைப்பொருளுமத்தனையேதான். (சுகூ)

† 'மாயவனை' என்பது சிலர் பாடம்.

‡ 'நிறைப்பொருளாய்' என்ற பாடம் செய்யுளோசைக்குச்சேரும்.

தானொருவனாகித் தரணியிடந்தெடுத்து *
ஏனொருவனாய் எயிற்றில்தாங்கியதும் *—யானொருவன்
இன்றாவறிகின்றேனல்லேன் * இருநிலத்தைச்
சென்றாங்கடிப்படுத்தசேய். (௭௦)

சேயனணியன் சிறியன்மிகப்பெரியன் *
ஆயன் துவரைக்கோனாய்நின்ற—மாயன் * அன்று
ஓதிய வாக்கதனைக்கல்லார் * உலகத்தில்
ஏதிலராய் மெய்ஞ்ஞானமில். (௭௧)

† இல்லறமல்லேல் துறவறமில்லெலன்னும் *
சொல், அறமல்லனவும்சொல்லல்ல *—நல்லற
மாவனவும் நால்வேதமாத்தவமும் * நாரணனே
யாவது, ஈதன்றென்பாரார்? (௭௨)

ஆரேயறிவார்? அனைத்துலகுமுண்டுமிழ்ந்த *
பேராழியான் தன்பெருமையை *—கார்செறிந்த
கண்டத்தான் எண்கண்ணான்காணான் * அவன்வைத்த
பண்டைத்தானத்தின்பதி. (௭௩)

பதிப்பகைஞர்க்காற்றாது பாய்திரைநீர்ப்பாழி *
மதித்தடைந்த வாளரவந்தன்னை *—மதித்தவன்தன்
வல்லாகத்தேற்றிய மாமேனிமாயவனை *
அல்லாது ஒன்றேத்தாதென்நா. (௭௪)

நாக்கொண்டு மானிடம்பாடேன் * நலமாகத்
தீக்கொண்ட செஞ்சடையான்சென்று * என்றும்—பூக்கொண்டு
வல்லவாறு ஏத்தமகிழாத * வைகுந்தச்
செல்வனார்சேவடிமேற்பாட்டு. (௭௫)

பாட்டும்முறையும் படுகதையும்பல்பொருளும் *
ஈட்டியதீயும் இருவிசும்பும் *—கேட்ட
மனுவும் சுருதிமறைநான்கும் * மாயன
தனமாயையில்பட்டதற்பு. (௭௬)

தற்பென்னைத் தானறியானேலும் * தடங்கடலைக்
கற்கொண்டு தூர்த்தகடல்வண்ணன் *—எற்கொண்ட
வெவ்வினையும்நீங்க விலங்காமனம்வைத்தான் *
எவ்வினையும்மாயுமால்கண்டு. (௭௭)

---

† 'இல்லறமில்லேல்' என்றும் பாடம்.

கண்டுவணங்கினார்க்கு என்னாங்கொல்? * காமனுடல்
கொண்டதவத்தாற்கு உமையுணர்த்த *—வண்டலம்பும்
தாரலங்கல்நீள்முடியான்தன் பெயரேகேட்டிருந்து * அங்
காரலங்கலானமையாலாய்ந்து. (௭௮)

ஆய்ந்துகொண்டு ஆதிப்பெருமானை * அன்பினால்
வாய்ந்தமனத்து இருத்தவல்லார்கள் *—ஏய்ந்ததம்
மெய்குந்தமாக விரும்புவரே * தாமும்தம்
வைகுந்தம்காண்பார்விரைந்து. (௭௯)

விரைந்தடைமின்மேலொருநாள் வெள்ளம்பரக்க *
கரந்துலகம் காத்தளித்தகண்ணன் *—பரந்துலகம்
பாடின, ஆடினகேட்டு * படுநரகம்
வீடினவாசற்கதவு. (௮0)

கதவுமனமென்றும் காணலாமென்றும் *
குதையும்வினையாவிதீர்ந்தேன் *—விதையாக
நல்தமிழைவித்தி என்னுள்ளத்தைநீவிளைத்தாய் *
கற்றமொழியாகிக்கலந்து. (௮௧)

கலந்தானென்னுள்ளத்துக் காமவேள்தாதை *
நலந்தானுமீதொப்பதுண்டே? *—அலர்ந்தலர்கள்
இட்டேத்தும் ஈசனும்நான்முகனும் * என்றிவர்கள்
விட்டேத்தமாட்டாதவேந்து. (௮௨)

வேந்தராய்விண்ணவராய் விண்ணாகித்தண்ணளியாய் *
மாந்தராய்மாதாய் மற்றெல்லாமாய் *—சார்ந்தவர்க்குத்
தன்னாற்றான்நேமியான் மால்வண்ணன்தான்கொடுக்கும் *
பின்னால்தான்செய்யும்பிதிர். (௮௩)

பிதிருமனமிலேன் பிஞ்ஞகன்தன்னோடு *
எதிர்வன் அவனெனக்குநேரான் *—அதிரும்
கழற்காலமன்னனையே கண்ணனையே * நாளும்
தொழக்காதல்பூண்டேன்தொழில். (௮௪)

தொழிலெனக்குத் தொல்லைமால்தன்னாமமேத்த *
பொழுதெனக்கு மற்றதுவேபோதும் *—கழிசினத்த
வல்லாளன் வானரக்கோன்வாலிமதனழித்த *
வில்லாளன்நெஞ்சத்துளன். (௮௫)

---

† 'வானரர்கோன்' என்பதும் பாடம்.

உளன்கண்டாய்நன்னெஞ்சே ! உத்தமனென்றும்
உளன்கண்டாய் * உள்ளுவாருள்ளத்து—உளன்கண்டாய் *
தன்னொப்பான் தானாய் உளன்காண்தமியேற்கும் *
என்னொப்பார்க்கீசனிமை. (அசு)

இமயப்பெருமலைபோல் இந்திரனார்க்கிட்ட *
சமயவிருந்துண்டு ஆர்காப்பார் ? *—சமயங்கள்
கண்டானவைகாப்பான் கார்க்கண்டன்நான்முகனோடு *
உண்டானுலகோடுயிர். (அஎ)

உயிர்கொண்டுடலொழிய ஓடும்போதோடி *
அயர்வென்றதீர்ப்பான் பேர்பாடி *—செயல்தீரச்
சிந்தித்து வாழ்வாரேவாழ்வார் * சிறுசமயப்
பந்தனையார்வாழ்வேல்பழுது. (அஅ)

பழுதாகாதொன்றறிந்தேன் பாற்கடலான்பாதம் *
வழுவாவகைநினைந்து வைகல்—தொழுவாரை *
கண்டிறைஞ்சிவாழ்வார் கலந்தவினைகெடுத்து *
விண்திறந்துவீற்றிருப்பார்மிக்கு. (அகூ)

வீற்றிருந்து விண்ணாளவேண்டுவார் * வேங்கடத்தான்
பால்திருந்துவைத்தாரே பல்மலர்கள் *—மேல்திருந்தி
வாழ்வார் வருமதிபார்த்து அன்பினராய் * மற்றவர்க்கே
தாழ்வாயிருப்பார்தமர். (கூ0)

தமராவார்யாவர்க்கும் தாமரைமேலாற்கும் *
அமரர்க்கும் † ஆடரவார்த்தாற்கும் *—அமரர்கள்
தாள்தாமரை மலர்களிட்டிறைஞ்சி * மால்வண்ணன்
தாள்தாமரையடைவோமென்று. (கூக)

என்றும்மறந்தறியேன் என்னெஞ்சத்தேவைத்து *
நின்றுமிருந்தும் நெடுமாலை *—என்றும்
திருவிருந்தமார்பன் சிரீதரனுக்காளாய் *
கருவிருந்தநாள்முதலாக்காப்பு. (கூஉ)

காப்புமறந்தறியேன் கண்ணனேயென்றிருப்பன் *
ஆட்புஅங்கொழியவும் பல்லுயிர்க்கும் *—ஆக்கை
கொடுத்தளித்த கோனே ! குணப்பரனே ! * உன்னை
விடத்துணியார் மெய்தெளிந்தார்தாம். (கூங)

† 'ஆடரவத்தாற்கும்' என்று சிலர் பாடமோதுவர்.

மெய்தெளிந்தார்என்செய்யார் ? வேறானார்நீறாக *
கைதெளிந்துகாட்டிக் களப்படுத்து *—பைதெளிந்த
பாம்பினணையாய் ! அருளாய்அடியேற்கு *
வேம்பும்கறியாகுமென்று. (௯௪)

↓↓ என்றேனடிமை இழிந்தேன்பிறப்பிடும்பை *
ஆன்றேனமரர்க்கமராமை *—ஆன்றேன்
கடனாடும்மண்ணாடும் கைவிட்டு * மேலை
இடநாடுகாணவினி. (௯௫)

↓↓ இனியறிந்தேன் ஈசற்கும்நான்முகற்கும்தெய்வம் *
இனியறிந்தேன் எம்பெருமான் ! உன்னை *—இனியறிந்தேன்
காரணன்நீகற்றவைநீ கற்பவைநீ * நற்கிரிசை
நாரணன்நீ நன்கறிந்தேன்நான். (௯௬)

தசக அடிவரவு.—நான்முகன் வாழ்த்துக இவை மேல் காணல் எனக்கு மனக்கேதம் சேயன் கதவு தமராவார் பொய்ந்நின்ற.

திருமழிசையாழ்வார் திருவடிகளே சரணம்.

நம்மாழ்வார் அருளிச்செய்த

ருக்வேதஸாரமான

திருவிருத்தம்.

தனியன்.

† (கிடாம்பியாச்சான் அருளிச்செய்தது.)

கட்டளைக்கலித்துறை.

கருவிருத்தக்குழிநீத்தபின் காமக்கடுங்குழிவீழ்ந்து *
ஒருவிருத்தம்புக்குழலுறுவீர்! உயிரின் ‡ பொருள்கட்கு *
ஒருவிருத்தம்புகுதாமல் குருகையர்கோனுரைத்த *
திருவிருத்தத்தோரடிகற்றிரீர் திருநாட்டகத்தே.

தாமானதன்மையில் அருளிச்செய்தது.

‡‡ பொய்ந்நின்றஞானமும் பொல்லாவொழுக்குமழுக்குடம்பும் *
இந்நின்றநீர்மைஇனியாமுறாமை * உயிரளிப்பான்
எந்நின்றயோனியுமாய்ப்பிறந்தாய்! இமையோர்தலைவா!
மெய்ந்நின்றுகேட்டருளாய் * அடியேன்செய்யும்விண்ணப்பமே. (௧)

தலைவியின்வேறுபாடுகண்ட தோழி வியந்துரைத்தல்.

செழுநீர்த்தடத்துக் கயல்மிளிர்ந்தாலொப்ப * சேயரிக்கண்
அழுநீர்துளும்பஅலமருகின்றன * வாழியரோ
முழுநீர்முகில்வண்ணன்கண்ணன்விண்ணாட்டவர்மூதுவராம்
தொழுநீரிணையடிக்கே * அன்புசூட்டியசூழ்குழற்கே. (௨)

பிரிவாற்றாத் தலைவி நெஞ்சழிந்து உரைத்தல்.

குழற்கோவலர் மடப்பாவையும்மண்மகளும் * திருவும்
நிழற்போல்வனர்கண்டு நிற்குங்கொல்? மீளுங்கொல்? * தண்ணந்துழாய்
அழற்போலடுஞ்சக்கரத்தண்ணல்விண்ணோர்தொழக்கடவும்
தழற்போற்சினத்த * அப்புள்ளின்பின்போனதனிநெஞ்சமே. (௩)

தலைவனைப்பிரிந்த தலைவி வாடைக்கு ஆற்றாது வருந்திக் கூறுதல்.

தனிநெஞ்சம்முன்னவர் புள்ளேகவர்ந்தது * தண்ணந்துழாய்க்கு
இனிநெஞ்சம் இங்குக்கவர்வதுயாமிலம் * நீநடுவே
§ முனிவஞ்சப்பேய்ச்சிமுலைசுவைத்தான்முடிசூடுதுழாய்ப்
பனிநஞ்சமாருதமே! * எம்மதாவிபனிப்பியல்வே? (௪)

---

† சீராமப்பிள்ளை எனவும், ஆளவந்தார் எனவும் கூறுவாருமுளர்.

‡ 'பொருளுக்கு' என்பதும் பாடம். § 'முனிநஞ்சப்பேய்ச்சி' என்பதும் பாடம்.

வாடைக்கு நலிந்த தலைவியின் மாமைகண்டு தோழி இரங்கல்.

பனிப்பியல்வாக உடையதண்வாடை * இக்காலமிவ்வூர்ப்
பனிப்பியல்வெல்லாம் தவிர்ந்தெரிவீசும் * அந்தண்ணந்துழாய்ப்
பனிப்புயல்சோருந்தடங்கண்ணிமாமைத்திறத்துக்கொலாம்?
பனிப்புயல்வண்ணன் * செங்கோலொருநான்றுதடாவியதே. (௫)

தலைவியினெழில்கண்டு வியந்த தலைவன்வார்த்தை.

தடாவியவம்பும் முரிந்தசிலைகளும்போகவிட்டு *
கடாயினகொண்டொல்கும் வல்லியீதேனும் * அசுரர்மங்கக்
கடாவியவேகப்பறவையின்பாகன்மதனசெங்கோல்
நடாவியகூற்றங்கண்டீர் * உயிர்காமின்கள்ஞாலத்துள்ளே. (௬)

காலமயக்கு.

ஞாலம்பனிப்பச்செறித்து * நன்னீரிட்டுக்கால்சிதைந்து
நீலவல்லேறுபொராநின்றவானமிது * திருமால்
கோலஞ்சுமந்துபிரிந்தார்கொடுமைகுழறுதண்பூங்
காலங்கொலோ? அறியேன் * விளையாட்டியேன்காண்கின்றவே. (௭)

தலைவன் பொருள்வயிற்பிரிதலைக் குறிப்பாலறிந்த
தலைவி தோழிக்கு உரைத்தல்.

காண்கின்றனகளும் கேட்கின்றனகளும்காணில் * இந்நாள்
பாண்குன்றநாடர்பயில்கின்றன * இதெல்லாமறிந்தோம்
மாண்குன்றமேந்திதண்மாமலைவேங்கடத்தும்பர்நம்பும்
சேண்குன்றஞ்சென்று * பொருள்படைப்பான்கற்றதிண்ணனவே.

தலைவன் தலைவியின் நீங்கலருமை கூறல்.

திண்பூஞ்சுடர்நுதி நேமியஞ்செல்வர் * விண்ணாடனைய
வண்பூமணிவல்லி யாரேபிரிபவர்தாம்? * இவையோ
கண்பூங்கமலங்கருஞ்சுடராடிவெண்முத்தரும்பி
வண்பூங்குவளை * மடமான்விழிக்கின்றமாயிதழே. (௯)

மதியுடம்படுக்கலுற்ற தலைவன் துறையுறவுரைத்தல்.

மாயோன் வடதிருவேங்கடநாட * வல்லிக்கொடிகாள்!
நோயோவுரைக்கிலும் கேட்கின்றிலீர்உரையீர் * நுமது
வாயோ? அதுவன்றிவல்வினையேனும்கிளியுமெள்கும்
ஆயோ? அடும்தொண்டையோ? * அறையோ! இதறிவரிதே. (௧௦)

பிரிவாற்றாத தலைவியின் வேறுபாடு கண்டு தலைவன் உரைத்தல்.

அரியனயாமின்றுகாண்கின்றன * கண்ணன்விண்ணனையாய் !
பெரியனகாதம் பொருட்கோ ? பிரிவென * ஞாலமெய்தற்
குரியனவொண்முத்தும்பைம்பொன்னுமேந்திஓரோகுடங்கைப்
பெரியனகெண்டைக்குலம் * இவையோவந்துபேர்கின்றவே. (கக)

தலைவி நெஞ்சோடு கலாய்த்துத் தன் ஆற்றாமை கூறல்.

பேர்கின்றது மணிமாமை * பிறங்கியள்ளற்பயலை
ஊர்கின்றது கங்குலூழிகளே * இதெல்லாமினவே
ஈர்கின்றசக்கரத்தெம்பெருமான்கண்ணன்தண்ணந்துழாய்
சார்கின்றநன்னெஞ்சினார் * தந்துபோனதனிவளமே. (கஉ)

பிரிவாற்றாத தலைவி இருளுக்கும் வாடைக்கும் இரங்குதல்.

தனிவளர்செங்கோல்நடாவு * தழல்வாயரசவியப்
பனிவளர்செங்கோலிருள்வீற்றிருந்தது * பார்முழுதும்,
துனிவளர்காதல்துழாயைத்துழாவுதண்வாடைதடிந்து
இனிவளைகாப்பவரார் ? * எனையூழிகளீர்வனவே. (கரு)

நலம்பாராட்டு.

ஈர்வனவேலுமஞ்சேலும் * உயிர்மேல்மிளிர்ந்திவையோ
பேர்வனவோவல்ல தெய்வநல்வேள்கணை * பேரொளியே
சோர்வனநீலச்சுடர்விடுமேனியம்மான் விசும்பூர்
தேர்வன * தெய்வமன்னீரகண்ணோ ? இச்செழுங்கயலே. (கச)

தோழி தலைவனது கருத்தறிந்து உரைத்தல்.

கயலோ ? நுமகண்களென்று களிறுவினவிநிற்றீர் *
அயலோரறியிலும் ஈதென்னவார்த்தை ? * கடல்கவர்ந்த
புயலோடுலாங்கொண்டல்வண்ணன்புனவேங்கடத்தெம்மொடும்
பயலோவிலீர் * கொலைகாக்கின்றநாளும்பலபலவே. (கரு)

தலைவனைப்பிரிந்த தலைவி பாங்கியைநோக்கி இருள்வியந்துரைத்தல்.

பலபலவூழிகளாயிடும் * அன்றியோர்நாழிகையைப்
பலபலகூறிட்டகூறாயிடும் * கண்ணன்விண்ணனையாய் !
பலபலநாளன்பர்கூடிலும்நீங்கிலும்யாம்மெலிதும்
பலபலசூழலுடைத்து * அம்ம! வாழிஇப்பாயிருளே. (கசா)

தலைவி கடலைநோக்கித் தேர்வழி தூரலென்றல்.

இருள்விரிந்தாலன்ன * மாநீர்த்திரைகொண்டுவாழியரோ
இருள்பிரிந்தாரன்பர் தேர்வழிதூரல் * அரவணைமேல்
இருள்விரிநீலக்கருநாயிறுசுடர்கால்வதுபோல்
இருள்விரிசோதி * பெருமானுறையுமெறிகடலே ! (கஎ)

கார்கண்டு நலிந்த தலைவியின் ஆற்றாமைகண்டு பாங்கி இரங்குதல்.

கடல்கொண்டெழுந்ததுவானம் * அவ்வானத்தையன்றிச்சென்று
கடல்கொண்டொழிந்தவதனாலிது * கண்ணன்மண்ணும்விண்ணும்
கடல்கொண்டெழுந்தவக்காலங்கொலோ? புயற்காலங்கொலோ?
கடல்கொண்டகண்ணீர் * அருவிசெய்யாநிற்கும் † காரிகையே. (கஅ)

செவிலி பழிக்குஇரங்குதல்; பாங்கி இரங்குதலுமாம்.

காரிகையார் நிறைகாப்பவர்யாரென்று * கார்கொண்டின்னே
மாரிகையேறி அறையிடுங்காலத்தும் * வாழியரோ
சாரிகைப்புள்ளர்அந்தண்ணந்துழாயிறைகூயருளார்
சேரிகையேறும் * பழியாய்விளைந்ததுஎன்சின்மொழிக்கே. (ககூ)

வெறிவிலக்கு.

சின்மொழிநோயோ கழிபெருந்தெய்வம் * இந்நோயினதென்று
இன்மொழிகேட்கும் இளந்தெய்வமன்றிது * வேல! நில்நீ
என்மொழிகேண்மின்என்னம்மனைமீர்! உலகேழுமுண்டான்
சொல்மொழி * மாலையந்தண்ணந்துழாய்கொண்டுசூட்டுமினே. (உ0)

ஏறுகோள்கூறி வரைவுகடாதல்.

‡ சூட்டுநன்மாலைகள் தூயனவேந்தி * விண்ணோர்கள்நன்னீர்
ஆட்டி அந்தூபந்தராநிற்கவேயங்கு * ஓர்மாயையினால்
ஈட்டியவெண்ணெய்தொடுவுண்ணப்போந்திமிலேற்றுவன்கூன்
கோட்டிடையாடினைகூத்து * அடலாயர்தங்கொம்பினுக்கே. (உக)

தோழி தலைவனை நகையாடுதல்.

கொம்பார்தழைகை சிறுநாணெறிவிலம் * வேட்டைகொண்டாட்டு
அம்பார்களிறு வினவுவதுஐயர் * புள்ளூருங்கள்வர்
தம்பாரகத்தென்றுமாடாதனதம்மிற்கூடாதன
வம்பார்வினாச்சொல்லவோ*எம்மைவைத்ததுஇவ்வான்புனத்தே? ()

தலைவன் குறையுறவுரைத்தல்.

புனமோ? புனத்தயலே வழிபோகுமருவினையேன் *
மனமோ? மகளிர்! நுங்காவல்சொல்லீர் * புண்டரீகத்தங்கேழ்
வனமோரனையகண்ணான்கண்ணன்வானாடமரும் தெய்வத்
தினமோரனையீர்களாய் * இவையோநும்மியல்வுகளே? (உங)

---

† 'காரிகைக்கே' என்பதும் பாடம்.

‡ இது, திருமஞ்சனகாலத்தில் ஸேவிக்கப்படுவது.

பிரிவாற்றாத தலைவியின் ஈடுபாடுகண்ட செவிலி இரங்குதல்.

இயல்வாயின வஞ்சநோய்கொண்டுலாவும் * ஓரோகுடங்கைக்
கயல்பாய்வன பெருநீர்க்கண்கள்தம்மொடும் * குன்றமொன்றால்
புயல்வாயினநிரைகாத்தபுள்ளூர்திகள்ளூருந்துழாய்க்
கொயல்வாய்மலர்மேல்*மனத்தொடென்னாங்கொல்எங்கோல்வளைக்கே?

தலைமகனது தாரில் ஈடுபட்ட தலைவி ஆற்றாது கூறுதல்.

எங்கோல்வளைமுதலா கண்ணன்மண்ணும்விண்ணுமளிக்கும் *
செங்கோல்வளைவுவிளைவிக்குமால் * திறல்சேரமரர்
தங்கோனுடையதங்கோனும்பரெல்லாயவர்க்குந்தங்கோன்
நங்கோனுகக்குந்துழாய் * என்செய்யாதுஇனிநானிலத்தே ? (உரு)

நகர்காட்டுதல்.

நானிலம்வாய்க்கொண்டு நன்னீரறமென்றுகோதுகொண்ட *
வேனிலஞ்செல்வன்சுவைத்துமிழ்பாலை * கடந்தபொன்னே !
கால்நிலந்தோய்ந்துவிண்ணோர்தொழும்கண்ணன்வெஃகாவுது அம்பூந்
தேனிளஞ்சோலையப்பாலது * எப்பாலைக்குஞ்சேமத்ததே. (உசு)

தலைவி தார்பெற்று மகிழ்தல்.

சேமம்செங்கோனருளே * செறுவாரும்நட்பாகுவரென்று
ஏமம்பெறவையஞ்சொல்லும்மெய்யே * பண்டெல்லாம்அறைகூய்
யாமங்கள்தோறெரிவீசும்நங்கண்ணனந்தண்ணந்துழாய்த்
தாமம்புனைய * அவ்வாடைஈதோவந்துதண்ணென்றதே. (உஎ)

தலைவனைப்பிரிந்ததலைவி வாடைக்கு வருந்தி யிரங்குதல்.

தண்ணந்துழாய் வளைகொள்வதுயாமிழப்போம் * நடுவே
வண்ணந்துழாவி ஓர்வாடையுலாவும் * வள்வாயலகால்
புள்நந்துழாமேபொருநீர்த்திருவரங்கா ! அருளாய்
எண்ணந்துழாவுமிடத்து * உளவோபண்டுமின்னன்னவே ? (உஅ)

தலைவி அன்னத்தை வெறுத்துரைத்தல்.

இன்னன்னதூதெம்மை ஆளற்றப்பட்டிரந்தாளிவளென்று *
அன்னன்னசொல்லாப்பெடையொடும் போய்வரும் * நீலமுண்ட
மின்னன்னமேனிப்பெருமானுலகில்பெண்தூதுசெல்லா
அன்னன்னநீர்மைகொலோ ? * குடிச்சீர்மையிலன்னங்களே ! (உகூ)

தலைவி அன்னங்களையும் வண்டானங்களையும் தூதுவேண்டுதல்.

அன்னஞ்செல்வீரும் வண்டானஞ்செல்வீரும்தொழுதிரந்தேன் *
முன்னஞ்செல்வீர்கள் மறவேன்மினோ * கண்ணன்வைகுந்தனோடு
என்னெஞ்சினாரைக்கண்டால்என்னைச்சொல்லி அவரிடைநீர்
இன்னஞ்செல்லீரோ ? * இதுவோதகவென்றிசைமின்களே ! (௩௦)

தூதுசெல்லாத மேகங்களைக்குறித்துத் தலைவி இரங்குதல்.

இசைமின்கள் தூதென்று இசைத்தாலிசையிலம் * என்தலைமேல்
அசைமின்களென்றால் அசையுங்கொலாம்? * அம்பொன்மாமணிகள்
திசைமின்மிளிரும்திருவேங்கடத்துவன்தாள் சிமய
மிசை * மின்மிளிரியபோவான்வழிக்கொண்டமேகங்களே! (௩௧)

தலைவி போலிகண்டு உரைத்தல்.

மேகங்களோ! உரையீர் * திருமால்திருமேனியொக்கும்
யோகங்கள் உங்களுக்கெவ்வாறுபெற்றீர்? * உயிரளிப்பான்
மாகங்களெல்லாந்திரிந்துநன்னீர்கள்சுமந்து நுந்தம்
ஆகங்கள்நோவ * வருந்துந்தவமாமருள்பெற்றதே. (௩௨)

தலைவியினாற்றாமைகண்ட தோழி தலைவனை வெறுத்துரைத்தல்.

அருளார்திருச்சக்கரத்தால் அகல்விசும்பும்நிலனும் *
இருளார்வினைகெடச் செங்கோல்நடாவுதிர் * ஈங்கோர்பெண்பால்
பொருளோவெனுமிகழ்வோ? இவற்றின்புறத்தாளென்றெண்ணோ?
தெருளோம்அரவணையீர்! * இவள்மாமைசிதைக்கின்றதே. (௩௩)

கூடலிழைத்துவருந்தும் தலைவி நிலையைப் பாங்கி தலைவற்கு உணர்த்துதல்.

சிதைக்கின்றதாழி என்றுஆழியைச்சீறி * தன் † சீறடியால்
உதைக்கின்றநாயகந்தன்னொடுமாலே! * உனது தண்தார்
ததைக்கின்றதண்ணந்துழாயணிவானதுவேமனமாய்ப்
பதைக்கின்றமாதின்திறத்து * அறியேன்செயற்பாலதுவே. (௩௪)

தலைவி மாலைக்கு ஆற்றாமையின்மேல் வாடைக்கு இரங்குதல்.

பால்வாய்ப்பிறைப்பிள்ளை ஒக்கலைக்கொண்டு * பகலிழந்த
மேல்பால்திசைப்பெண் புலம்புறுமாலை * உலகளந்த
மால்பால்துழாய்க்குமனமுடையார்க்குநல்கிற்றையெல்லாம்
சோல்வான்புகுந்து * இதுவோர்பனிவாடைதுழாகின்றதே. (௩௫)

தோழி தலைவன்கொடுமை கூறல்.

துழாநெடுஞ்சூழிருளென்று * தன்தண்தாரது, பெயரா
ஏழாநெடுஊழியெழுந்தவிக்காலத்தும் * ஈங்கிவளோ!
வழாநெடுந்துன்பத்தளென்றிரங்காரம்மனோ! இலங்கைக்
குழாநெடுமாடம் * இடித்தபிரானார்கொடுமைகளே! (௩௬)

---

† 'சீரடி' என்பதும் பாடம்.

நற்றாய் தன்மகள் சென்ற சுரத்தருமை கூறி இரங்கல்.

கொடுங்காற்சிலையர் நிரைகோளுழவர் * கொலையில்வெய்ய
சுடுங்காலினோர் துடிபடுங்கவ்வைத்து * அருவினையேன்
நெடுங்காலமும்கண்ணன்நீள்மலர்ப்பாதம்பரவிப்பெற்ற
தொடுங்காலொசியுமிடை * இளமான்சென்றசூழ்கடமே. (கூஎ)

தலைவனைப்பிரிந்த தலைவி பேடைகண்டு மகிழ்தல்.

கடமாயினகள்கழித்து † தன்கால்வன்மையால் * பலநாள்
கடமாயினபுக்கு நீர்நிலைநின்றதவமிதுகொல்? *
குடமாடியிம்மண்ணும்விண்ணுங்குலுங்கவுலகளந்து
நடமாடியபெருமான் * உருவொத்தனநீலங்களே. (கூஅ)

தலைவனது உருவெளிப்பாடு கண்ட தலைவி தோழிக்குக் கூறுதல்.

நீலத்தடவரைமேல் புண்டரீகநெடுந்தடங்கள்
போல * பொலிந்தெமக்கெல்லாவிடத்தவும் * பொங்குமுந்நீர்
ஞாலப்பிரான்விசும்புக்கும்பிரான்மற்றும்நல்லோர்பிரான்
கோலங்கரியபிரான் * எம்பிரான்கண்ணின்கோலங்களே. (கூகூ)

இருள்கண்டிரங்கிய தலைவி தோழிக்கு வரைவு விருப்புரைத்தல்.

கோலப்பகல்களிறொன்றுகற்புய்ய * குழாம்விரிந்த
நீலக்கங்குல்களிறெல்லாம் ‡ நிரைந்தன * நேரிழையீர்!
ஞாலப்பொன்மாதின்மணாளன் துழாய்நங்கள்சூழ்குழற்கே
ஏலப்புனைந்தென்னைமார் * எம்மைநோக்குவதென்றுகொலோ? (சo)

வாடைக்குவருந்திய தலைமகள் வார்த்தை.

என்றும்புன்வாடையிதுகண்டறிதும் * இவ்வாறுவெம்மை
ஒன்றுமுருவும்சுவடும்தெரியிலம் * ஓங்கசுரர்
பொன்றும்வகைபுள்ளையூர்வானருளருளாதவிந்நாள்
மன்றில்நிறைபழிதூற்றி * நின்றென்னைவன்காற்றடுமே. (சக)

தலைவி தலைவனது கண்ணழகின் ஈடுபாடு வியந்துரைத்தல்.

வன்காற்றறைய ஒருங்கேமறிந்துகிடந்தலர்ந்த *
மென்காற்கமலத்தடம்போல்பொலிந்தன * மண்ணும்விண்ணும்
என்காற்களவின்மைகாண்மினென்பானொத்துவான்நிமிர்ந்த
தன்காற்பணிந்தவென்பால் * எம்பிரானதடங்கண்களே. (சஉ)

† 'தம்' என்பதும் பாடம். ‡ 'நிரந்தன' என்பதும் பாடம்.
§ 'தன்பால்' என்றதும் பாடம்.

தலைவனது உருவெழிலுரைத்த தலைமகள்வார்த்தை.

கண்ணும்செந்தாமரை கையும்அவை அடியோ அவையே *
வண்ணங்கரியதோர்மால்வரைபோன்று * மதிவிகற்பால்
விண்ணுங்கடந்துஉம்பரப்பால்மிக்குமற்றெப்பால்யவர்க்கும்
எண்ணுமிடத்ததுவோ? * எம்பிரானதெழில்நிறமே. (சங)

தலைவி தலைவனது பெருமையுரைத்தல்.

நிறமுயர்கோலமும் பேருமுருவுமிவையிவையென்று *
அறமுயல்ஞானச்சமயிகள்பேசிலும் * அங்கங்கெல்லாம்
உறவுயர்ஞானச்சுடர்விளக்காய்நின்றதன்றி ஒன்றும்
பெறமுயன்றாரில்லையால் * எம்பிரானபெருமையையே. (சச)

தலைவி தலைவனது நீரிடையுதவியை நினைந்துரைத்தல்.

பெருங்கேழலார் தம்பெருங்கண்மலர்ப்புண்டரீகம் * நம்மேல்
ஒருங்கேபிறழவைத்தார் இவ்வகாலம் * ஒருவர்நம்போல்
வருங்கேழ்பவருளரே? தொல்லைவாழியம்சூழ்பிறப்பு
மருங்கேவரப்பெறுமே? * சொல்லுவாழிமடநெஞ்சமே! (சரு)

நெஞ்சைத்தூதுவிடட தலைவி இரங்குதல்.

மடநெஞ்சமென்றும் தமதென்றும் * ஓர்கருமங்கருதி
விடநெஞ்சையுற்றார் விடவோஅமையும் * அப்பொன்பெயரோன்
தடநெஞ்சங்கீண்டபிரானார்தமதடிக்கீழ்விடப்போய்த்
திடநெஞ்சமாய் * எம்மைநீத்தின்றுதாறும்திரிகின்றதே. (சசா)

பிரிவாற்றாது வருந்தும் தலைவிநிலைகண்டு செவிலி இரங்கல்.

திரிகின்றதுவடமாருதம் * திங்கள்வெந்தீமுகந்து
சொரிகின்றது அதுவும்அது * கண்ணன்விண்ணூர்தொழவே
சரிகின்றதுசங்கம்தண்ணந்துழாய்க்குவண்ணம்பயலை
விரிகின்றது முழுமெய்யும் * என்னாங்கொல்என்மெல்லியற்கே? (சஎ)

நன்னிமித்தங் கண்டு தான் ஆற்றியிருந்தலைத் தலைவி தோழிக்குக் கூறுதல்.

மெல்லியலாக்கைக்கிருமி * குருவில்மிளிர்தந்தாங்கே
செல்லியசெல்கைத்து உலகையென்காணும்? * என்னாலும்தன்னைச்
சொல்லியசூழல்திருமாலவன்கவியாதுகற்றேன்?
பல்லியின்சொல்லும்சொல்லா * கொள்வதோவுண்டுபண்டுபண்டே.

இருளுக்கு ஆற்றாத தலைவி தோழிக்குக் கூறல்.

பண்டும்பலபல வீங்கிருள்காண்டும் * இப்பாயிருள்போல்
கண்டுமறிவதும் கேட்பதும்யாமிலம் * காளவண்ண
வண்டுண்துழாய்ப்பெருமான்மதுசூதனன்தாமோதரன்
உண்டுமுமிழ்ந்துங்கடாய * மண்ணோரன்னவொண்ணுதலே! (௪௯)

தலைவன் மீண்டுவருகையில் பாகனொடு கூறல்.

ஒண்ணுதல்மாமை யொளிபயவாமை * விரைந்துநந்தேர்
நண்ணுதல்வேண்டும் வலவ! கடாகின்று * தென்னவின்ற
விண்முதல்நாயகன்நீள்முடிவெண்முத்தவாசிகைத்தாய்
மண்முதல்சேர்வுற்று * அருவிசெய்யாநிற்கும்மாமலைக்கே. (௫0)

கடலோசைக்கு ஆற்றாத தலைவி இரங்கல்.

மலைகொண்டுமத்தாவரவால்சுழற்றிய மாயப்பிரான் *
அலைகண்டுகொண்டவமுதங்கொள்ளாதுகடல் * பரதர்
விலைகொண்டுதந்தசங்கம்இவைவேரித்துழாய்துணையாத்
துலைகொண்டுதாயம்கிளர்ந்து * கொள்வானொத்தழைக்கின்றதே. (௫௧)

காலமயக்கு.

அழைக்குங்கருங்கடல் † வெண்திரைக்கைக்கொண்டுபோய் * அலர்
மழைக்கண்மடந்தை அரவணையேற * மண்மாதர்விண்வாய் [வாய்
அழைத்துப்புலம்பிமுலைமலைமேல்நின்றும்ஆறுகளாய்
மழைக்கண்ணநீர் * திருமால்கொடியானென்றுவார்கின்றதே! (௫௨)

கட்டுவிச்சி கூறல்.

வாராயினமுலையாளிவள் வானோர்தலைமகனாம் *
சீராயினதெய்வநன்னோயிது * தெய்வத்தண்ணந்துழாய்த்
தாராயினும்தழையாயினும்தண்கொம்பதாயினும் கீழ்
வேராயினும் * நின்றமண்ணாயினும்கொண்டுவீசுமினே. (௫௩)

வண்டுவிடுதூது.

வீசும்சிறகால்பறத்திர் * விண்ணாடுநுங்கட்கெளிது
பேசும்படியன்னபேசியும்போவது * நெய்தொடுவுண்டு
ஏசும்படியன்னசெய்யும்எம்மீசர்விண்ணோர்பிரானார்
மாசில்மலரடிக்கீழ் * எம்மைச்சேர்விக்கும்வண்டுகளே! (௫௪)

† 'வெண்டிரைக்கே' என்று சேவிப்பர்.

நலம்பாராட்டு.

வண்டுகளோ! வம்மின் நீர்ப்பூநிலப்பூமரத்திலொண்பூ *
உண்டுகளித்துழல்வீர்க்கு ஒன்றுரைக்கியம் * ஏனமொன்றாய்
மண்துகளாடிவைகுந்தமன்னாள்குழல்வாய்விரைபோல்
விண்டுகள்வாரும் * மலருளவோ நும்வியலிடத்தே? (௫௫)

தலைவன் இரவிடைக் கலந்தமையைத் தலைவி தோழிக்கு உரைத்தல்.

வியலிடமுண்டபிரானார் விடுத்ததிருவருளால் *
உயலிடம்பெற்றுய்ந்தம் அஞ்சலம்தோழி! * ஓர்தண்தென்றல்வந்து
அயலிடையாருமறிந்திலர் அம்பூந்துழாயினின்தேன்
புயலுடைநீர்மையினால் * தடவிற்றுஎன் † புலன்கலனே. (௫௬)

தலைவன் பாங்கனுக்குக் கழற்றெதிர்மறுத்தல்.

‡ புலக்குண்டலப் புண்டரீகத்தபோர்க்கெண்டை * வல்லியொன்றால்
விலக்குண்டுலாகின்று வேல்விழிக்கின்றன * கண்ணன்கையால்
மலக்குண்டமுதஞ்சுரந்தமறிகடல்போன்றவற்றால்
கலக்குண்டநான்றுகண்டார் * எம்மையாரும்கழறலரே. (௫௭)

தோழி தலைவன்பெருமையை யுரைத்துத் தலைவியை ஆற்றுதல்.

கழல்தலமொன்றே நிலமுழுதாயிற்று * ஒருகழல்போய்
நிழல்தர எல்லாவிசும்பும்நிறைந்தது * நீண்டவண்டத்து
உழறலர்ஞானச்சுடர்விளக்காய்உயர்ந்தோரையில்லா
அழறலர்தாமரைக்கண்ணன் * என்னோவிங்களக்கின்றதே? (௫௮)

இரவு நீடுதற்கு ஆற்றாத தலைவியைப்பற்றிச் செவிலி இரங்குதல்.

அளப்பருந்தன்மைய ஊழியங்கங்குல் * அந்தண்ணந்துழாய்க்கு
உளப்பெருங்காதலின் நீளியவாயுள * ஒங்குமுந்நீர்
வளப்பெருநாடன் மதுசூதனனென்னும்வல்வினையேன்
தளப்பெருநீள்முறுவல் * செய்யவாயதடமுலையே. (௫௯)

தலைமகளிளமைக்குச் செவிலி இரங்கல்.

‡‡ முலையோ முழுமுற்றும்போந்தில * மொய்பூங்குழல்குறிய
கலையோ வரையில்லை நாவோகுழறும் * கடல்மண்ணெல்லாம்
விலையோவெனமிளிருங்கண் இவள்பரமே? பெருமான்
மலையோ * திருவேங்கடமென்று கற்கின்றவாசகமே. (௬௦)

---

† 'பொலன்கலனே' என்பதும் பாடம். ‡ 'பொலக்குண்டலம்' என்பதும் பாடம்.

தோழி தலைவனது நீர்மையைத் தலைவிக்குக் கூறல்.

வாசகஞ்செய்வதுநம்பரமே? * தொல்லைவானவர்தம்
நாயகன் நாயகரெல்லாந்தொழுமவன் * ஞாலமுற்றும்
வேயகமாயினும்சோராவகை இரண்டேயடியால்
தாயவன் * ஆய்க்குலமாய்வந்துதோன்றிற்றுநம்மிறையே. (௬௧)

தலைவியின் ஆற்றாமையைத் தோழி தலைவனுக்குக்கூறுதல்.

இறையோ இரக்கினும் ஈங்கோர்பெண்பால் * எனவும்இரங்காது
அறையோ! எனநின்றதிரும்கருங்கடல் * ஈங்கிவள்தன்
நிறையோவினியுன் திருவருளாலன்றிக்காப்பரிதால்
முறையோ? * அரவணைமேற்பள்ளிகொண்டமுகில்வண்ணனே! (௬௨)

தலைவனை இயற்பழித்த தோழிக்குத் தலைவி இயற்படமொழிதல்.

வண்ணஞ்சிவந்துள வானாடமருங்குளிர்விழிய *
தண்மென்கமலத்தடம்போல் பொலிந்தன * தாமிவையோ
கண்ணன் திருமால்திருமுகந்தன்னொடுங்காதல்செய்தேற்கு
எண்ணம்புகுந்து * அடியேனொடிக்காலமிருக்கின்றதே. (௬௩)

தலைவன்பேர்கூறித்தரித்திருந்ததலைத் தலைவி தோழிக்குக்கூறிஇரங்கல்.

இருக்கார்மொழியால் நெறியிழுக்காமை * உலகளந்த
திருத்தாளிணை நிலத்தேவர்வணங்குவர் * யாமுமவா
ஒருக்காவினையொடும்எம்மொடும்நொந்துகனியின்மையின்
கருக்காய்கடிப்பவர்போல் * திருநாமச்சொல்கற்றனமே. (௬௪)

தலைவிநோக்கின் வாசிகண்டு தலைவன் குறிப்பறிந்துரைத்தல்.

கற்றுப்பிணைமலர் கண்ணின்குலம்வென்று * ஓரோகருமம்
முற்றுப்பயின்று செவியொடுஉசாவி * உலகமெல்லாம்
முற்றும்விழுங்கியுமிழ்ந்தபிரானார் திருவடிக்கீழ்
உற்றுமுறுதும் * மிளிர்ந்தகண்ணாயெம்மையுண்கின்றவே. (௬௫)

தலைவன் பாங்கனுக்குக் கழற்றெதிர் மறுத்தல்.

உண்ணாதுறங்காது உணர்வுறுமெத்தனையோகியர்க்கும் *
எண்ணாய்மிளிருமியல்வினவாம் * எரிநீர்வளிவான்
மண்ணாகியவெம்பெருமான் தனதுவைகுந்தமன்னாள்
கண்ணாய் அருவினையேன் * உயிராயினகாவிகளே. (௬௬)

தலைவன் பாங்கனுக்குத் தன்வலியழிவு உரைத்தல்.

காவியும்நீலமும் வேலும்கயலும்பலபலவென்று *
ஆவியின்தன்மை அளவல்லபாரிப்பு * † அசுரைச்செற்ற
மாவியம்புள்வல்லமாதவன்கோவிந்தன்வேங்கடஞ்சேர்
தூவியம்பேடையன்னாள் * கண்களாயதுணைமலரே. (௬௭)

---

† 'அசுரர்ச்செற்ற' என்பதும் பாடம்.

காலமயக்கு.

மலர்ந்தேயொழிந்தில மாலையும்மாலைப்பொன்வாசிகையும் *
புலந்தோய்தழைப்பந்தர் தண்டுறநாற்றி * பொருகடல்சூழ்
நிலந்தாவியவெம்பெருமான்தனதுவைகுந்தமன்னாய் !
கலந்தார்வரவெதிர்கொண்டு * வன்கொன்றைகள்கார்த்தனவே. (சுகூ)

மாலைக்கிரங்கிய தலைவியைத் தோழி ஆற்றுதல்.

காரேற்றிருள் செகிலேற்றின்சுடருக்குஉளைந்து * வெல்வான்
போரேற்றெதிர்ந்தது புன்தலைமாலை * புவனியெல்லாம்
நீரேற்றளந்தநெடியபிரான்அருளாவிடுமே
வாரேற்றிளமுலையாய் ! * வருந்தேல்உன்வளைத்திறமே. (சுக)

தலைவி இரவின் நெடுமைக்கு இரங்கல்.

வளைவாய்த்திருச்சக்கரத்து எங்கள்வானவனார்முடிமேல் *
தளைவாய்நறுங்கண்ணித் தண்ணந்துழாய்க்குவண்ணம்பயலை *
விளைவான்மிகவந்துநாள்திங்களாண்டூழிநிற்க எம்மை
உளைவான்புகுந்து * இதுவோர்கங்குலாயிரமூழிகளே. (எ0)

செவிலிவெறுத்தலைத் தலைவி தோழியர்க்கு உரைத்தல்.

ஊழிகளாய் உலகேழுமுண்டானென்றிலம் * பழங்கண்டு
ஆழிகளாம்பழவண்ணமென்றேற்கு * அஃதேகொண்டுஅன்னை
நாழிவளோவென்னும்ஞாலமுண்டான்வண்ணஞ்சொல்லிற்றென்னும்
தோழிகளோ ! உரையீர் * எம்மையம்மனைசூழ்கின்றவே. (எக)

இருளுங் காற்றுந் தலைவி இளம்பிறைகண்டு தளர்ந்து உரைத்தல்.

சூழ்கின்றகங்குல் சுருங்காவிருளின்கருந்திணிம்பை *
போழ்கின்றதிங்களம்பிள்ளையும்போழ்க * துழாய்மலர்க்கே
தாழ்கின்றநெஞ்சத்தொருதமியாட்டியேன்மாமைக்கின்று
வாழ்கின்றவாறுஇதுவோ ? * வந்துதோன்றிற்றுவாலியதே. (எஉ)

பிறைபுடைமாலைக்காற்றத் தலைவியின் தளர்ச்சிக்குப் பாங்கி இரங்கல்.

வால்வெண்ணில வுலகாரச்சுரக்கும்வெண்திங்களென்னும் *
பால்விண்சுரவி சுரமுதிர்மாலை * பரிதிவட்டம்
போலுஞ்சுடரடலாழிப்பிரான்பொழிலேழளிக்கும்
சால்பின்தகைமைகொலாம் ? * தமியாட்டிதளர்ந்ததுவே. (எங)

தலைவனது தார்மணங் கொண்டுவருந் தென்றலைத் தலைவி மகிழ்ந்து உரைத்தல்.

தளர்ந்தும்முறிந்தும் வருதிரைப்பாயல் * திருநெடுங்கண்
வளர்ந்துமறிவுற்றும் வையம்விழுங்கியும் * மால்வரையைக்
கிளர்ந்துமறிதரக்கீண்டெடுத்தான்முடிசூடுதுழாய்
அளைந்துண்சிறுபசுந்தென்றல் * அந்தோ ! வந்துலாகின்றதே. (எ௪)

மதியுடம்படுக்கலுற்ற தலைவன் தலைவிதோழியரைப் பதிவினுதல்.

*உலாகின்றகெண்டையொளியம்பு * எம்மாவியையூடுருவக்*
*குலாகின்ற வெஞ்சிலைவாள்முகத்தீர்! * குனிசங்கிடறிப்*
புலாகின்றவேலைப்புணரியம்பள்ளியம்மான் அடியார்
*நிலாகின்றவைகுந்தமோ? * வையமோ? நும்நிலையிடமே.* (எரு)

மாலைபெறாது வருந்தும் தலைவி மதிக்குவருந்தி நெஞ்சொடு கூறல்.

*இடம்போய்விரிந்து இவ்வுலகளந்தானெழிலார்தண்துழாய் **
*வடம்போதினையும்மடநெஞ்சமே! * நங்கள்வெள்வளைக்கே*
விடம்போல்விரிதல்இதுவியப்பே? வியன்தாமரையின்
*தடம்போதொடுங்க * மெல்லாம்பலலர்விக்கும்வெண்திங்களே.* (எசா)

தலைவி மாலைப்பொழுதுகண்டு வருந்தல்.

*திங்களம்பிள்ளைபுலம்பத் தன்செங்கோலரசுபட்ட **
*செங்களம்பற்றிநின்றெள்குபுன்மாலை * தென்பாலிலங்கை*
வெங்களஞ்செய்தநம்விண்ணோர்பிரானார்துழாய்துணையா
*நங்களைமாமைகொள்வான் * வந்துதோன்றிநலிகின்றதே.* (எஎ)

பிரிவாற்றாத தலைவி தலைவனுற்றுவலிகருதி நெஞ்சழிந்து இரங்கல்.

*நலியும்நரகனைவீட்டிற்றும் * வாணன்திண்தோள்துணித்த*
*வலியும்பெருமையும்யான்சொல்லும்நீர்த்தல்ல * மைவரைபோல்*
பொலியுமுருவிற்பிரானார்புனைபூந்துழாய்மலர்க்கே
*மெலியும்மடநெஞ்சினார் * தந்துபோயினவேதனையே.* (எஅ)

தலைவனைப் பிரியாத மகளிரது சிறப்பைக் கூறித் தலைவி இரங்கல்.

*வேதனை வெண்புரிநூலனை * விண்ணோர்பரவநின்ற*
*நாதனை ஞாலம்விழுங்குமநாதனை * ஞாலந்தத்தும்*
பாதனைப்பாற்கடல்பாம்பணைமேற்பள்ளிகொண்டருளும்
*சீதனையேதொழுவார் * விண்ணுளாரிலுஞ்சீரியரே.* (எகூ)

பிரிவாற்றாத தலைவி மாலைப்பொழுதுகண்டு இரங்கல்.

*சீரரசாண்டு தன்செங்கோல்சிலநாள்செலீஇக்கழிந்த **
*பாரரசொத்துமறைந்தது நாயிறு * பாரளந்த*
பேரரசே! எம்விசும்பரசே! எம்மைநீத்துவஞ்சித்து
*ஓரரசே! அருளாய் * இருளாய்வந்துறுகின்றதே.* (அ0)

வெறிவிலக்குவிக்க நினைந்த தோழி இரங்கல்.

*உறுகின்றகன்மங்கள் மேலனஓர்ப்பிலராய் * இவளைப்*
*பெறுகின்றதாயர் மெய்ந்நொந்துபெறார்கொல்? * துழாய்குழல்வாய்த்*
துறுகின்றிலர்தொல்லைவேங்கடமாட்டவுஞ்சூழ்கின்றிலர்
*இறுகின்றதாலிவளாகம் * மெல்லாவியெரிகொள்ளவே.* (அக)

உருவெளிப்பாடு கண்ட தலைவி தலைவன்கண்ணழகுக்கு இரங்கல்.

எரிகொள்செஞ்ஞாயிறு இரண்டுடனேஉதயமலைவாய் *
விரிகின்றவண்ணத்த எம்பெருமான்கண்கள் * மீண்டவற்றுள்
எரிகொள்செந்தீவீழ்அசுரரைப்போலஎம்போலியர்க்கும்
விரிவசொல்லீர்இதுவோ? * வையமுற்றும்விளரியதே. (௫௨)

அன்றிலின் தாலுக்கு ஆற்றாததலைவியின் தளர்ச்சிகண்டு தோழி இரங்கல்.

விளரிக்குரலன்றில் மென்பெடைமேகின்றமுன்றிற்பெண்ணை *
முளரிக்குரம்பையிதுஇதுவாக * முகில்வண்ணன்பேர்
கிளரிக்கிளரிப்பிதற்றும்மெல்லாவியும்நைவுமெல்லாம்
தளரிற்கொலோ? அறியேன் * உய்யலாவதுஇத்தையலுக்கே. (௫௩)

தலைவி தலைவனைக் காண விரைதல்.

தையல்நல்லார்கள் குழாங்கள்குழியகுழுவினுள்ளும் *
ஐயநல்லார்கள் குழியவிழவினும் * அங்கங்கெல்லாம்
கையபொன்னாழிவெண்சங்கொடும்காண்பானவாவுவன்நான்
மையவண்ணா! மணியே! * முத்தமே! என்தன்மாணிக்கமே! (௫௪)

மாலைப்பொழுதுகண்டு வருந்திய தலைவி இரங்குதல்.

மாணிக்கங்கொண்டு குரங்கெறிவொத்திருளோடுமுட்டி *
ஆணிப்பொன்னன்ன சுடர்படுமாலை * உலகளந்த
மாணிக்கமே! என்மரதகமே! மற்றொப்பாரையில்லா
ஆணிப்பொன்னே! * † அடியேனடியாவியடைக்கலமே! (௫௫)

தலைவனைப் பிரிந்த தலைவி இரங்கல்

அடைக்கலத்தோங்கு கமலத்தலரயன்சென்னியென்னும் *
முடைக்கலத்தூண்முன் அரனுக்குநீக்கியை * ஆழிசங்கம்
படைக்கலமேந்தியைவெண்ணெய்க்கன்றாய்ச்சிவன்தாம்புகளால்
‡ புடைக்கலந்தானைஎம்மானை * என்சொல்லிப்புலம்புவனே? (௫௬)

அன்றிற்கும் ஆழிக்கும் ஆற்றாத தலைவிக்குத் தோழி இரங்கல்.

புலம்புங் § கனகுரல் போழ்வாயவன்றிலும் * பூங்கழிபாய்ந்து
அலம்புங்கனகுரல் சூழ்திரையாழியும் * ஆங்கவைநின்
வலம்புள்ளதுநலம்பாடுமிதுகுற்றமாக வையம்
சிலம்பும்படிசெய்வதே? * திருமால்இத்திருவினையே. (௫௭)

---

† 'அடியேனுடை' என்பதும் பாடம். ‡ 'புடைக்கலர்ந்தானை' என்றும் பாடமுண்டு. § 'கனைகுரல்' என்பது சிலர் பாடம்.

போலிகண்டு அழிகிற தலைவி ஆற்றாமைக்கு இரங்குதல்.

திருமாலுருவொக்கும்மேரு * அம்மேருவில்செஞ்சுடரோன்
திருமால்திருக்கைத்திருச்சக்கரமொக்கும் * அன்னகண்டும்
திருமாலுருவோடு அவன்சின்னமேபிதற்றாநிற்பது ஓர்
திருமால்தலைக்கொண்டநங்கட்கு * எங்கேவரும்தீவினையே? (௮)

தலைவன் கலவிக்கு விரைகிற தலைவி இரங்குதல்.

† தீவினைக்கருநஞ்சை நல்வினைக்கின்னமுதத்தினை *
பூவினைமேவியதேவிமணாளனை * புன்மையெள்காது
ஆவினைமேய்க்கும்வல்லாயனை அன்றுலகீரடியால்
தாவினவேற்றையெம்மானை * எஞ்ஞான்றுதலைப்பெய்வனே? (௯)

தலைவனைப்பிரிந்த தலைவி காலநீட்டிப்புக்கு ஆற்றாது உரைத்தல்.

தலைப்பெய்துயான் உன்திருவடிச்சூடுந்தகைமையினால் *
நிலைப்பெய்தவாக்கைக்கு நோற்றவிம்மாயமும் * மாயம்செவ்வே
நிலைப்பெய்திலாதநிலைமையும்காண்தோறு அசுரர்குழாம்
தொலைப்பெய்தநேமியெந்தாய்! * தொல்லையூழிசுருங்கலதே. (௧௦)

தோழிக்குத் தலைவி தன்கற்புணர்த்தி அறத்தொடுநிற்றல்.

சுருங்குறிவெண்ணெய் தொடுவுண்டகள்வனை * வையமுற்றும்
ஒருங்குறவுண்ட பெருவயிற்றாளனை * மாவலிமாட்டு
இருங்குறளாகிஇசையவோர்மூவடிவேண்டிச்சென்ற
பெருங்கிறியானையல்லால் * அடியேன்நெஞ்சம்பேணலதே. (௧௧)

வேந்தற்குற்றுழிப் பிரிவில் தலைவனைக்குறித்துத் தலைவி இரங்கல்.

பேணலமில்லாவரக்கர் முந்நீரபெரும்பதிவாய் *
நீள்நகர்நீளெரிவைத்தருளாயென்று * நின்னைவிண்ணோர்
தாள்நிலந்தோய்ந்துதொழுவர்நின்மூர்த்திபல்கூற்றிலொன்று
காணலுமாங்கொல்? என்றே * வைகல்மாலையும்காலையுமே. (௧௨)

இருள்கண்டு அஞ்சுகிற தலைவி தோழிசெவிலியரை வெறுத்தல்.

காலைவெய்யோற்கு முன்னோட்டுக்கொடுத்தகங்குற்குறும்பர் *
மாலைவெய்யோன்பட வையகம்பாவுவர் * அன்னகண்டும்
காலைநல்ஞானத்துறைபடிந்தாடிக்கண்போதுசெய்து
மாலைநல்நாவிற்கொள்ளார் * நினையார்அவன்மைப்படியே. (௧௩)

தலைவியைக்கண்ட பாங்கன் தலைவனையடுத்து வியந்துகூறல்.

மைப்படிமேனியும் செந்தாமரைக்கண்ணும்வைதிகரே *
மெய்ப்படியால் உன்திருவடிச்சூடுந்தகைமையினார் *
எப்படியூராமிலைக்கக்குருட்டாமிலைக்குமென்னும்
அப்படியானும்சொன்னேன் * அடியேன்மற்றுயாதென்பனே? (௧௪)

---

† இங்குத் தளை சிதைகின்றது; 'தீவினைகட்கருநஞ்சினை நல்வினைக்கின்னமுதை' எனவும், 'தீவினைக்காருநஞ்சைநல்வினைக்கின்னமுதத்தினை' எனவும் பாடங்கொள்ளலுமாம்.

தலைவி அறத்தோடுநிற்கத் துணிதல்.

↓↓ யாதானும் ஓராக்கையிற்புக்கு * அங்காப்புண்டுமாப்பவிழ்ந்தும்
மூதாவியில்தடுமாறும்உயிர்முன்னமே * அதனால்
யாதானும்பற்றிநீங்கும்விரதத்தைநல்வீடுசெய்யும்
மாதாவினைப்பிதுவை * திருமாலைவணங்குவனே. (கூரு)

தலைவி வெறிவிலக்குவிக்க நினைந்தல்.

வணங்குந்துறைகள் பலபலவாக்கி * மதிவிகற்பால்
பிணங்குஞ்சமயம் பலபலவாக்கி * அவையவைதோறு
அணங்கும்பலபலவாக்கிநின்மூர்த்திபரப்பிவைத்தாய்
இணங்குநின்னோரையில்லாய் ! * நின்கண்வேட்கையெழுவிப்பனே.

தலைவன்பிரிவில் துயில்கொள்ளாத தலைவி இரங்கல்.

எழுவதும்மீண்டே படுவதும்பட்டு * எனையூழிகள்போய்க்
கழிவதுங்கண்டுகண்டெள்கலல்லால் * இமையோர்கள்குழாம்
தொழுவதுஞ்சூழ்வதுஞ்செய்தொல்லைமாலைக்கண்ணாரக்கண்டு
கழிவதோர்காதலுற்றார்க்கும் * உண்டோகண்கள்துஞ்சுதலே ? (கூஎ)

தலைவனதருமைநினைந்து கவல்கிற தலைவிக்குத் தோழிகூறல்.

துஞ்சாமுனிவரும் அல்லாதவருந்தொடரநின்ற *
எஞ்சாப்பிறவியிடர்கடிவான் * இமையோர்தமக்கும்
† தன்சார்விலாதனிப்பெருமூர்த்திதன்மாயம்செவ்வே
நெஞ்சால்நினைப்பரிதால் * வெண்ணெயூணென்னும்ஈனச்சொல்லே. ()

தலைவி தனக்குத்தலைவனிடத்துள்ள அன்புறுதியைத் தோழிக்குக் கூறல்.

↓↓ ஈனச்சொல்லாயினுமாக * எறிதிரைவையம்முற்றும்
ஏனத்துருவாயிடந்தபிரான் * இருங்கற்பகஞ்சேர்
வானத்தவர்க்குமல்லாதவர்க்கும்மற்றெல்லாயவர்க்கும்
ஞானப்பிரானையல்லாலில்லை * நான்கண்டநல்லதுவே. (கூகூ)

நூற்பயன்.

↓↓ நல்லார்நவில்குருகூர்நகரான் * திருமால்திருப்பேர்
வல்லாரடிக்கண்ணிசூடிய * மாறன்விண்ணப்பஞ்செய்த
சொல்லார்தொடையலிந்நூறும்வல்லார்அழுந்தார்பிறப்பாம்
பொல்லாவருவினை * மாய வன்சேற்றள்ளற்பொய்ந்நிலத்தே. (க00)

தசக அடிவரவு:—பொய் அரியன சூட்டு இசை என்றும் மலை வாசகம் ஊழ் உறுகின்ற சுருங்கு செக்கர்.

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

† 'தஞ்சார்வு' 'தன்சால்பு' என்பன பாடபேதங்கள்.

நம்மாழ்வார் அருளிச்செய்த

யஜுர்வேதஸாரமான

† திருவாசிரியம்.

தனியன்.

(அருளாளப்பெருமாளெம்பெருமானார் அருளிச்செய்தது.)

கலிவிருத்தம்.

காசினியோர்தாம்வாழக் கலியுகத்தேவந்துதித்து *
ஆசிரியப்பாவதனால் அருமறைநூல்விரித்தானை *
தேசிகனைப்பராங்குசனைத் திகழ்வகுளத்தாரானை *
மாசடையாமனத்துவைத்து மறவாமல்வாழ்த்துதுமே.

ஆசிரியப்பா. (தேசியராகம் - ஆதிதாளம்.)

↓↓ செக்கர்மாமுகிலுடுத்துமிக்கசெஞ்சுடர்ப்
பரிதிசூடி * அஞ்சுடர்மதியம்பூண்டு *
பலசுடர்புனைந்தபவளச்செவ்வாய் *
திகழ்பசுஞ்சோதிமரகதக்குன்றம் *
கடலோன்கைம்மிசைக்கண்வளர்வதுபோல் *
பீதகவாடைமுடிபூண்முதலா *
‡ மேதகுபல்கலனணிந்து * சோதி
வாயவுங்கண்ணவுஞ்சிவப்ப * மீதிட்டுப்
பச்சைமேனிமிகப்பகைப்ப *
நச்சுவினைக்கவர்தலையரவினமளியேறி *
எறிகடல்நடுவுளறிதுயிலமர்ந்து *
சிவனயனிந்திரனிவர்முதலனைத்தோர் *
தெய்வக்குழாங்கள்கைதொழக்கிடந்த *
தாமரையுந்தித்தனிப்பெருநாயக! *
மூவுலகளந்தசேவடியோயே! (க)

உலகுபடைத்துண்டவெந்தை * அறைகழல்
சுடர்ப்பூந்தாமரைசூடுதற்கு * அவாவுஆ
ருயிருருகியுக்க * நேரியகாத
லன்பிலின்பீன்தேறல் * அமுத

† இத்திருவாசிரியம் அந்தாதித்தொடையாய்வந்தது.

‡ 'மெய்தகு' என்றும் பாடம்.

வெள்ளத்தானும்சிறப்புவிட்டு * ஒருபொருட்கு
அசைவோரசைக * திருவொடுமருவிய
இயற்கை * மாயாப்பெருவிறலுலகம்
மூன்றினொடுநல்வீடுபெறினும் *
கொள்வதெண்ணுமோதெள்ளியோர்குறிப்பே ? (௨)

குறிப்பில்கொண்டுநெறிப்பட * உலகம்
மூன்றுடன்வணங்குதோன்றுபுகழ், ஆணை *
மெய்பெறநடாயதெய்வம்மூவரில்
முதல்வனாகி * சுடர்விளங்ககலத்து *
வரைபுரைதிரை † பொரபெருவரை ‡ வெருவர *
உருமுரலொலிமலிநளிர்கடல்படவர
வரசுடல்தடவரைசுழற்றிய * தனிமாத்
தெய்வத்தடியவர்க்குஇனிநாமாளாகவே
இசையுங்கொல் ? * ஊழிதோறூழியோவாதே. (௩)

ஊழிதோறூழியோவாது * வாழிய
வென்றுயாம்தொழஇசையுங்கொல் ? *
யாவகையுலகமும்யாவருமில்லா *
மேல்வரும்பெரும்பாழ்க்காலத்து * இரும்பொருட்
கெல்லாம்அரும்பெறல்தனிவித்து * ஒருதா
னாகித்தெய்வநான்முகக்கொழுமுளை
யீன்று * முக்கணீசனொடுதேவுபலநுதலி *
மூவுலகம்விளைத்தஉந்தி *
மாயக்கடவுள்மாமுதலடியே. (௪)

மாமுதலடிப்போதொன்றுகவிழ்த்தலர்த்தி *
மண்முழுதுமகப்படுத்து * ஒண்சுடரடிப்போது
ஒன்றுவிண்செலீஇ * நான்முகப்புத்தேள்
நாடுவியந்துவப்ப * வானவர்முறைமுறை
வழிபடநெறீஇ * தாமரைக்காடு
மலர்க்கண்ணொடுகனிவாயுடையது
மாய் * இருநாயிறுஆயிரம்மலர்ந்தன்ன *
கற்பகக்காவுபற்பலவன்ன *
முடிதோளாயிரந்தழைத்த *
நெடியோய்க் $ கல்லது அடியதோவுலகே ? (௫)

† 'பொரு' என்று வழங்குவர். ‡ 'வெருவுற' என்றும் பாடம்.
$ 'அல்லதுமடியதோ' என்பதும் பாடம்

ஓஓ! உலகினதியல்வே! * ஈன்றோளிருக்க
மணைநீராட்டி * படைத்திடந்துண்டுமிழ்ந்
தளந்து * தேர்ந்துலகளிக்கும்முதற்பெருங்
கடவுள்நிற்ப * புடைப்பலதானறி
தெய்வம்பேணுதல் * தனாது
புல்லறிவாண்மைபொருந்தக்காட்டி *
கொல்வனமுதலா அல்லனமுயலும் *
இனையசெய்கைஇன்புதுன்பளி *
தொல்மாமாயப்பிறவியுள்நீங்கா *
பல்மாமாயத்தழுந்துமாநளிர்ந்தே. (௬)

↓↓ நளிர்மதிச்சடையனும்நான்முகக்கடவுளும் *
தளிரொளியிமையவர்தலைவனும்முதலா *
யாவகையுலகமும்யாவருமகப்பட *
நிலம்நீர்தீகால்சுடரிருவிசும்பும் *
மலர்சுடர்பிறவும்சிறிதுடன்மயங்க *
ஒருபொருள்புறப்பாடின்றிமுழுவதும்
அகப்படக்கரந்து * ஓராலிலைச்சேர்ந்தஎம்
பெருமாமாயனையல்லது *
ஒருமாதெய்வம்மற்றுடையமோயாமே? (௭)

அடிவரவு:—செக்கர் உலகு குறிப்பு ஊழி மாமுதல் ஓஓஉலகு நளிர் முயற்றி.

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

நம்மாழ்வார் அருளிச்செய்த

அதர்வணவேதஸாரமான

பெரியதிருவந்தாதி.

தனியன்.

(எம்பெருமானார் அருளிச்செய்தது.)

நேரிசைவெண்பா.

முந்துற்றநெஞ்சே! முயற்றிதரித்துரைத்து *
வந்தித்து † வாயாரவாழ்த்தியே *—சந்த
முருகூருஞ்சோலைசூழ் மொய்பூம்பொருநல் *
குருகூரன்மாறன்பேர்கூறு.

(செஞ்சுருட்டிராகம் - ரூபகதாளம்.)

↓↓ முயற்றிசுமந்தெழுந்து முந்துற்றநெஞ்சே! *
இயற்றுவாயெம்மொடுநீகூடி *—நயப்புடைய
நாவீன்தொடைக்கிளவியுள் பொதிவோம் * நற்பூவைப்
பூவீன்றவண்ணன்புகழ். (க)

புகழ்வோம்பழிப்போம் புகழோம்பழியோம் *
இகழ்வோம்மதிப்போம் மதியோம்—இகழோம் * மற்று
எங்கள் மால்! செங்கண்மால்! சீறல்நீ தீவினையோம் *
எங்கள்மால்கண்டாய்இவை. (உ)

இவையன்றேநல்ல இவையன்றேதீய *
இவையென்றிவையறிவனேலும் * —இவையெல்லாம்
என்னாலடைப்புநீக்கொண்ணாது இறையவனே! *
என்னாற்செயற்பாலதென்? (ங)

என்னின்மிகுபுகழார்யாவரே? * பின்னையும்மற்
றெண்ணில் மிகுபுகழேன்யானல்லால் *—என்ன
கருஞ்சோதிக் கண்ணன், கடல்புரையும் * சீலப்
பெருஞ்சோதிக்குஎன்னெஞ்சாள்பெற்று. (ச)

† 'வாயாரவாழ்த்தி' என்ற பாடம் வெண்டளைக்குச் சேராது.

பெற்றதாய்நீயே பிறப்பித்ததந்தைநீ *
மற்றையாராவாரும்நீபேசில் * —எற்றேயோ !
மாய ! மாமாயவளை மாயமுலைவாய்வைத்த *
நீயம்மா ! காட்டும்நெறி. (௫)

நெறிகாட்டி நீக்குதியோ ? * நின்பால்கருமா
முறிமேனிகாட்டுதியோ ? * மேல்நாள்—அறியோமை
என்செய்வானெண்ணினாய் ? கண்ணனே ! * ஈதுரையாய்
என்செய்தாலென்படோம்யாம் ? (௬)

யாமேயருவினையோம்சேயோம் * என்நெஞ்சினார்
தாமே அணுக்கராய்ச்சார்ந்தொழிந்தார் * —பூமேய
செம்மாதை நின்மார்வில்சேர்வித்து * பாரிடந்த
அம்மா ! நின்பாதத்தருகு. (௭)

அருகும்சுவடும் தெரிவுணரோம் * அன்பே
பெருகும்மிக இதுவென் ? பேசீர் * —பருகலாம்
பண்புடையீர் ! பாரளந்தீர் ! பாவியேம்கண்காண்பரிய *
நுண்புடையீர் ! நும்மைநுமக்கு. (௮)

நுமக்கடியோமென்றென்று நொந்துரைத்தென் ? * மாலார்
தமக்கு அவர்தாம்சார்வரியரானால் * —எமக்கினி
யாதானும் ஆகிடுகாண்நெஞ்சே ! * அவர்திறத்தே
யாதானும்சிந்தித்திரு. (௯)

இருநால்வர் ஈரைந்தின்மேலொருவர் * எட்டோ
டொருநால்வர் ஓரிருவரல்லால் * —திருமாற்கு
யாமார் ? வணக்கமார் ? ஏபாவம்நன்னெஞ்சே ! *
நாமாமிகவுடையோம்நாழ். (௧௦)

நாழாலமர்முயன்ற வல்லரக்கனின்னுயிரை *
வாழாவகைவலிதல்நின்வலியே * —ஆழாத
பாரும்நீவானும்நீ காலும்நீதீயும்நீ *
நீரும்நீயாய்நின்றநீ. (௧௧)

நீயன்றேயாழ்துயரில் வீழ்விப்பான்நின்றுழன்றாய் ? *
போயொன்றுசொல்லியென் ? போநெஞ்சே ! * —நீயென்றும்
காழ்த்துபதேசந்தரினும் கைக்கொள்ளாய் * கண்ணன்தாள்
வாழ்த்துவதேகண்டாய்வழக்கு. (௧௨)

வழக்கொடுமாறுகொளன்று, அடியார்வேண்ட *
இழக்கவுங்காண்டுமிறைவ!— இழப்புண்டே? *
எம்மாட்கொண்டாகிலும் யான்வேண்ட, என்கண்கள் *
தம்மால்காட்டுன்மேனிச்சாய். (கங)

சாயால்கரியானை உள்ளறியாராய்நெஞ்சே! *
பேயார்முலைகொடுத்தார்பேயராய் *—நீயார்? போய்த்
தேம்பூண்சுவைத்து ஊனறிந்தறிந்தும் * தீவினையாம்
பாம்பார்வாய்க்கைநீட்டல்பார்த்தி. (கச)

பார்த்தோரெதிரிதா நெஞ்சே! * படுதுயரம்
பேர்த்தோதப் பீடழிவாம்பேச்சில்லை *—ஆர்த்தோதம்
தம்மேனி தாள்தடவத்தாம்கிடந்து * தம்முடைய
செம்மேனிக்கண்வளர்வார்சீர். (கரு)

சீரால்பிறந்து சிறப்பால்வளராது *
பேர்வாமனாகாக்கால் பேராளா! *—மார்பாரப்
புல்கிநீயுண்டுமிழ்ந்த பூமிநீரேற்பரிதே? *
சொல்லுநீயாமறியச்சூழ்ந்து. (கசா)

சூழ்ந்தடியார்வேண்டினக்கால் தோன்றாதுவிட்டாலும் *
வாழ்ந்திடுவர்பின்னும்தம்வாய்திறவார் *—சூழ்ந்தெங்கும்
வாள்வரைகள்போலரக்கன் வன்தலைகள்தாமிடிய *
தாள்வரைவில்லேந்தினார்தாம். (கஎ)

தாம்பாலாப்புண்டாலும் அத்தழும்புதானிளக *
பாம்பாலாப்புண்டுபாடுற்றாலும் *—சோம்பாதிப்
பல்லுருவையெல்லாம் படர்வித்தவித்தா! * உன்
தொல்லுருவையாரறிவார்? சொல்லு. (கஅ)

சொல்லிற்குறையில்லை சூதறியாநெஞ்சமே! *
எல்லிப்பகலென்னாதெப்போதும் *—தொல்லைக்கண்
மாத்தானைக்கெல்லாம் ஓரைவரையேமாறாக *
காத்தானைக்காண்டும்நீகாண். (கசு)

காணப்புகிலறிவு கைக்கொண்டநல்நெஞ்சம் *
நாணப்படுமன்றே? நாம்பேசில் *—மாணி
யுருவாகிக்கொண்டு உலகம்நீரேற்றசீரான் *
திருவாகம்தீண்டிற்றுச்சென்று. (உ0)

சென்றங்குவெந்நரகில் சேராமல்காப்பதற்கு *
இன்றிங்கென்னெஞ்சாலிடுக்குண்ட *—அன்றங்குப்
பாருருவும் பார்வளைத்தநீருருவும்கண்புதைய *
காருருவன்தான்நிமிர்த்தகால். (௨௧)

காலேபொதத்திரிந்து கத்துவரா † மிந்நாள் *
மாலார்குடிபுகுந்தாரென்மனத்தே *—மேலால்
தருக்குமிடம்பாட்டினொடும் வல்வினையார்தாம் * வீற்
றிருக்குமிடம்காணாதிளைத்து. (௨௨)

இளைப்பாயிளையாப்பாய் நெஞ்சமே! சொன்னேன் *
இளைக்கநமன்தமர்கள் பற்றி—இளைப்பெய்த *
நாய்தந்துமோதாமல் நல்குவான்நல்காப்பான் *
தாய்தந்தையெவ்வுயிர்க்குந்தான். (௨௩)

தானேதனித்தோன்றல தன்னளப்பொன்றில்லாதான் *
தானேபிறர்கட்குந்தற்றோன்றல் *—தானே
இளைக்கில்பார்கீழ்மேலாம் மீண்டமைப்பானானால் *
அளக்கிற்பார்பாரின்மேலார்? (௨௪)

ஆரானுமாதானுஞ்செய்ய * அகலிடத்தை
ஆராய்ந்து அதுதிருத்தலாவதே? *—சீரார்
மனத்தலை வன்துன்பத்தைமாற்றினேன் * வானோ
ரினத்தலைவன்கண்ணனால்யான். (௨௫)

யானுமென்னெஞ்சும் இசைந்தொழிந்தோம் * வல்வினையைக்
கானும்மலையும் புகக்கடிவான் *—தானோர்
இருளன்னமாமேனி எம்மிறையார்தந்த *
அருளென்னுந்தண்டாலடித்து. (௨௬)

அடியால்படிகடந்தமுத்தோ? * அதன்றேல்
முடியால் விசும்பளந்தமுத்தோ? *—நெடியாய்!
செறிகழல்கள்தாள்நிமிர்த்துச் சென்றுலகமெல்லாம் *
அறிகிலமால்நீயளந்தவன்று. (௨௭)

அன்றேநங்கண்காணும் ஆழியான்காருருவம் *
இன்றேநாம்காணாதிருப்பதுவும் *—என்றேனும்
கட்கண்ணால் காணாதஅவ்வுருவை * நெஞ்சென்னும்
உட்கண்ணேல்காணுமுணர்ந்து. (௨௮)

† 'இனநாள்' என்பதும் பாடம்.

உணரவொருவர்க்கு எளியனே? செவ்வே *
இணருந்துழாயலங்கலெந்தை *—உணரத்
தனக்கெளியரெவ்வளவர் அவ்வளவன் ஆனால் *
எனக்கெளியனெம்பெருமானிங்கு. (௪௯)

இங்கில்லை பண்டுபோல்வீற்றிருத்தல் * என்னுடைய
செங்கண்மால் சீர்க்கும்சிறிதுள்ளம் *—அங்கே
மடியடக்கிநிற்பதனில் † வல்வினையார்தாம் * மீண்டு
அடியெடுப்பதன்றோவழகு? (௫௰)

அழகுமறிவோமாய் ‡ வல்வினையைத்தீர்ப்பான் *
நிழலுமடிதாறுமானோம் *—சுழலக்
குடங்கள் தலைமீதெடுத்துக்கொண்டாடி * அன்றுஅத்
தடங்கடலைமேயார்தமக்கு. (௫௧)

தமக்கடிமைவேண்டுவார் தாமோதரனார்
தமக்கு * அடிமைசெய்யென்றால் செய்யாது *—‡ எமக்கென்று
தாம்செய்யுந்தீவினைக்கே தாழ்வுறுவர்நெஞ்சினார் *
யாம்செய்வதிவ்விடத்திங்குயாது? (௫௨)

யாதானுமொன்றறியில் தன்னுகக்கிலென்கொலோ? *
யாதானும்நேர்ந்தணுகாவாறுதான் * —யாதானும்
தேறுமாசெய்யா அசுரர்களை * நேமியால்
பாறுபாறாக்கினான்பால். (௫௩)

பாலாழி நீகிடக்கும்பண்பை * யாம்கேட்டேயும்
காலாழும்நெஞ்சழியும் கண்சுழலும் *—நீலாழிச்
சோதியாய்! ஆதியாய்! தொல்வினையெம்பால்கடியும் *
நீதியாய்! நிற்சார்ந்துநின்று (௫௪)

நின்றுமிருந்தும் கிடந்துந்திரிதந்தும் *
ஒன்றுமோஆற்றான் என்னெஞ்சகலான் * —அன்றங்கை
வன்புடையால்பொன்பெயரோன் வாய்தகர்த்துமார்விடந்தான் *
அன்புடையனன்றேயவன்? (௫௫)

அவனுமிவனுமுவனும் * மற்றும்பு
ரவனும் அவனென்றிராதே *—அவனும்
அவனேயெனத்தெளிந்து கண்ணனுக்கேதீர்ந்தால் *
அவனேஎவனேனுமாம். (௫௬)

---

† 'வல்வினையும்' என்பதும் பாடம். ‡ 'எமக்கென்றும்' என்று ஓதுவர்.

ஆமாறறிவுடையராவது அரிதன்றே? *
நாமேயதுவுடையோம் நன்னெஞ்சே! *—பூமேய்
மதுகரமே தண்துழாய்மாலாரை * வாழ்த்தாம்
அதுகரமேயன்பாலமை. (௩௭)

அமைக்கும்பொழுதுண்டே? ஆராயில்நெஞ்சே! *
இமைக்கும்பொழுதும் இடைச்சி—குமைத்திறங்கள் *
ஏசியேயாயினும் ஈன்துழாய்மாயனையே *
பேசியேபோக்காய்பிழை. (௩௮)

பிழைக்கமுயன்றோமோ? நெஞ்சமே! பேசாய் *
தழைக்குந்துழாய்மார்வன்தன்னை *—அழைத்தொருகால்
போயுபகாரம் பொலியக்கொள்ளாது * அவன்புகழே
வாயுபகாரங்கொண்டவாய்ப்பு. (௩௯)

வாய்ப்போஇதுவொப்ப மற்றில்லைவாநெஞ்சே! *
† போய்ப்போஒய்வெந்நரகில்பூவியேல் *—தீப்பால
பேய்த்தாய் உயிர்கலாய்ப்பாலுண்டு * அவளுயிரை
மாய்த்தானை வாழ்த்தேவலி. (௪0)

வலியமெனநினைந்து வந்தெதிர்ந்தமல்லர் *
வலியமுடிபிடியவாங்கி *—வலியநின்
பொன்னாழிக்கையால் புடைத்திடுதிகீளாதே *
பல்நாளும்நிற்குமிப்பார். (௪௧)

பாருண்டான்பாருமிழ்ந்தான் பாரிடந்தான்பாரளந்தான் *
பாரிடமுன்படைத்தானென்பரால் *—பாரிட
மாவானும் தானானால்ஆரிடமே? * மற்றொருவர்க்கு
ஆவான்புகாவாலவை. (௪௨)

அவயமெனநினைந்து வந்தசுரர்பாலே *
நவையைநளிர்விப்பான்தன்னை *—கவையில்
மனத்துயரவைத்திருந்து வாழ்த்தாதார்க்குண்டோ? *
மனத்துயரைமாய்க்கும்வகை. (௪௩)

வகைசேர்ந்தநல்நெஞ்சும் நாவுடையவாயும் *
மிகவாய்ந்துவீழாவெனிலும் *—மிகவாய்ந்து
மாலைத்தாம் வாழ்த்தாதிருப்பர்இதுவன்றே? *
மேலைத்தாம்செய்யும்வினை. (௪௪)

† 'போய்ப்போய்' எனவும் ஓதுவரேனும் அது வெண்டளைக்குச் சேராது.

வினையார்தருமுயலும் வெம்மையையஞ்சி *
தினையாஞ்சிறிதளவுஞ்செல்ல—நினையாது *
வாசகத்தாலேத்தினேன் வானோர்தொழுதிறைஞ்சும் *
நாயகத்தான்பொன்னடிக்கள்நான். (௬௫)

நான்கூறும் கூற்றாவது இத்தனையே * நாணாளும்
தேங்கோத நீருருவன்செங்கண்மால் *—நீங்காத
மாகதியாம்வெந்நரகில் சேராமல்காப்பதற்கு *
நீகதியாநெஞ்சே! நினை. (௬௬)

நினைத்திறைஞ்சிமானிடவர் ஒன்றிரப்பரென்றே *
நினைத்திடவும்வேண்டாநீநேரே *—நினைத்திறைஞ்ச
எவ்வளவரெவ்விடத்தோர்மாலே! * அதுதானும்
எவ்வளவுமுண்டோ? எமக்கு. (௬௭)

எமக்கியாம்விண்ணாட்டுக்கு உச்சமதாம்வீட்டை *
அமைத்திருந்தோம் அஃதன்றேயாமாறு? *—அமைப்பொலிந்த
மென்றோளிகாரணமா வெங்கோட்டேறேழுடனே *
கொன்றானையேமனத்துக்கொண்டு. (௬௮)

கொண்டல்தான்மால்வரைதான் மாகடல்தான்கூரிருள்தான் *
வண்டறாப்பூவைதான் மற்றுத்தான் *—கண்டநாள்
காருருவம் காண்டோறும்நெஞ்சோடும் * கண்ணனார்
பேருருவென்றெம்மைப்பிரிந்து. (௬௯)

பிரிந்தொன்றுநோக்காது தம்முடையபின்னே *
திரிந்துழலுஞ்சிந்தனையார்தம்மை *—புரிந்தொருகால்
ஆவா! எனவிரங்கார் அந்தோ! வலிதேகொல்? *
மாவாய்பிளந்தார்மனம். (௭0)

மனமாளுமோரைவர் வன்குறும்பர்தம்மை *
சினமாள்வித்துஓரிடத்தேசேர்த்து *—புனமேய
தண்டுழாயானடியைத்தான் காணுமஃதன்றே? *
வண்டுழாஞ்சீரார்க்குமாண்பு. (௭௧)

மாண்பாவித்துஅந்நான்றுமண்ணிரந்தான் * மாயவள்நஞ்சு
ஊண்பாவித்துண்டானது ஒருருவம் *—காண்பான்நங்
கண்ணவா மற்றொன்றுகாணுறா * சீர்பரவாது
உண்ணவாய்தானுறுமோவொன்று? (௭௨)

ஒன்றுண்டுசெங்கண்மால்! யானுரைப்பது * உன்னடியார்க்கு
என்செய்வனென்றேயிருத்திநீ *—நின்புகழில்
வைகும் தம்சிந்தையிலும்மற்றினிதோ? * நீயவர்க்கு
வைகுந்தமென்றருளும்வான். (ரு௩)

வானோ? மறிகடலோ? மாருதமோ? தீயகமோ? *
கானோ? ஒருங்கிற்றும்கண்டிலமால் *—ஆனீன்ற
கன்றுயரத்தாமெறிந்து காயுதிர்த்தார்தாள்பணிந்தோம் *
வன்துயரையாவா! மருங்கு. (ரு௪)

மருங்கோதம்மோதும் மணிநாகணையார் *
மருங்கேவரவரியரேலும் *—ஒருங்கே
எமக்கவரைக்காணலாம் எப்பொழுதுமுள்ளால் *
மனக்கவலைதீர்ப்பார்வரவு. (ரு௫)

வரவாறொன்றில்லையால் வாழ்வினிதால் * எல்லே!
ஒருவாறு ஒருவன்புகாவாறு *—உருமாறும்
ஆயவர்தாம்சேயவர்தாம் அன்றுலகந்தாயவர்தாம் *
மாயவர்தாம்காட்டும்வழி. (ரு௬)

வழித்தங்குவல்வினையை மாற்றானோ? நெஞ்சே! *
தழீஇக்கொண்டு போரவுணன்தன்னை *—சுழித்தெங்கும்
தாழ்விடங்கள்பற்றிப் புலால்வெள்ளந்தானுகள *
வாழ்வடங்கமார்விடந்தமால். (ரு௭)

மாலே! படிச்சோதிமாற்றேல் * இனியுனது
பாலேபோல் சீரிற்பழுத்தொழிந்தேன் *—மேலால்
பிறப்பின்மைபெற்று அடிக்கீழ்க்குற்றேவலன்று *
மறப்பின்மை யான்வேண்டும்மாடு. (ரு௮)

மாடே வரப்பெறுவராமென்றே * வல்வினையார்
காடானுமாதானும் கைக்கொள்ளார் *—ஊடேபோய்ப்
பேரோதம்சிந்து திரைக்கண்வளரும் * பேராளன்
பேரோதச்சிந்திக்கப்பேர்ந்து. (ரு௯)

பேர்ந்தொன்றுநோக்காது பின்னிற்பாய்நில்லாப்பாய் *
ஈன்துழாய்மாயனையே என்னெஞ்சே! *—பேர்ந்தெங்கும்
தொல்லைமாவெந்நரகில் சேராமல்காப்பதற்கு *
இல்லைகாண் மற்றோரிறை. (௬0)

இறைமுறையான்சேவடிமேல் மண்ணளந்தவந்நாள் *
மறைமுறையால் வானாடர்கூடி *—முறைமுறையின்
தாதிலகு பூத்தெளித்தாலொவ்வாதே? * தாழ்விசும்பின்
மீதிலகித்தான்கிடக்கும்மீன். (௬௧)

மீனென்னுங்கம்பில் வெறியென்னும்வெள்ளிவேய் *
வானென்னும் கேடிலாவான்குடைக்கு *—தானோர்
மணிக்காம்புபோல் நிமிர்ந்துமண்ணளந்தான் * நங்கள்
பிணிக்காம்பெருமருந்துபின். (௬௨)

பின்துரக்கும்காற் † றிழந்த சூற்கொண்டல்பேர்ந்தும்போய்—*
வன்திரைக்கண் வந்தணைந்தவாய்மைத்தே *—அன்று
திருச்செய்யநேமியான் தீயரக்கிமூக்கும் *
‡ பருச்செவியுமீர்ந்தபரன். (௬௩)

பரனாமவனாதல் பாவிப்பராகில் *
உரனாலொருமூன்றுபோதும் *—மரமேழன்று
எய்தானைப் புள்ளின்வாய்கீண்டானையே * அமரர்
கைதான்தொழாவேகலந்து. (௬௪)

கலந்துநலியும் கடுந்துயரைநெஞ்சே! *
மலங்கவடித்துமடிப்பான் *—விலங்கல்போல்
தொல்மாலைக்கேசவனை நாரணனைமாதவனை *
சொல்மாலையெப்பொழுதும்சூட்டு. (௬௫)

சூட்டாயநேமியான் தொல்லரக்கனின்னுயிரை *
மாட்டேதுயரிழைத்தமாயவனை *—ஈட்ட
வெறிகொண்ட தண்துழாய்வேதியனை * நெஞ்சே!
அறிகண்டாய்சொன்னேனது. (௬௬)

அதுவோநன்றென்று அங்கமருலகோவேண்டில் *
அதுவோபொருளில்லையன்றே? *—அதுவொழிந்து
மண்ணின்றாள்வேனெனினும் கூடும்மடநெஞ்சே! *
கண்ணன்தாள்வாழ்த்துவதேகல். (௬௭)

கல்லும்கனைகடலும் வைகுந்தவானாடும் *
புல்லென்றொழிந்தனகொல்? ஏபாவம்! *—வெல்ல
நெடியான்நிறங்கரியான் உள்புகுந்துநீங்கான் *
அடியேனதுள்ளத்தகம். (௬௮)

---

† 'இழிந்த' என்பதும் பாடம். ‡ 'பரிச்செவியும்' என்பதும் பாடம்.

அகஞ்சிவந்தகண்ணினராய் வல்வினையராவார் *
முகஞ்சிதைவராமன்றே? முக்தி *—மிகுந்திருமால்
சீர்க்கடலையுள்பொதிந்த சிந்தனையேன்தன்னை *
ஆர்க்குஅடலாம்செவ்வேயடர்த்து? (௬௯)

அடர்பொன்முடியானை ஆயிரம்பேரானை *
சுடர்கொள்சுடராழியானை *— இடர்கடியும்
மாதாபிதுவாக வைத்தேனெனதுள்ளே *
யாதாகில்யாதேயினி? (௭௰)

இனிநின்றுநின்பெருமை யானுரைப்பதென்னே? *
தனிநின்றசார்விலாமூர்த்தி! *—பனிநீர்
அகத்துலவு செஞ்சடையானகத்தான் * நான்கு
முகத்தான்நின்றுந்திமுதல். (௭௧)

முதலாந்திருவுருவம் மூன்றென்பர் * ஒன்றே
முதலாகும் மூன்றுக்குமென்பர் *—முதல்வா!
நிகரிலகுகாருருவா! நின்னகத்ததன்றே? *
புகரிலகுதாமரையின்பூ. (௭௨)

பூவையும்காயாவும் நீலமும்பூக்கின்ற *
காவிமலரென்றும் காண்தோறும் *—பாவியேன்
மெல்லாவி மெய்மிகவேபூரிக்கும் * அவ்வவை
யெல்லாம்பிரானுருவேயென்று. (௭௩)

என்றுமொருநாள் ஒழியாமையானிரந்தால் *
ஒன்றே'ரெங்காருருக்காட்டார் *—குன்று
குடையாக ஆகாத்தகோவலனார் * நெஞ்சே!
புடைதான்பெரிதேபுவி. (௭௪)

புவியுமிருவிசும்பும் நின்னகத்த * நீயென்
செவியின்வழிபுகுந்து என்னுள்ளாய் *—அவிவின்றி
யான்பெரியன்நீபெரியை என்பதனையாரறிவார்? *
ஊன்பருகுநேமியாய்! உள்ளு. (௭௫)

உள்ளிலுமுள்ளந்தடிக்கும் வினைப்படலம் *
விள்ள, விழித்துன்னைமெய்யுற்றால் *—உள்ள
உலகளவும் யானும்உளனாவனென்கொலோ? *
உலகளந்தமூர்த்தி! உரை. (௭௬)

உரைக்கிலோர்சுற்றத்தார் உற்றாரென்றாரே? *
இரைக்குங்கடல்கிடந்தவெந்தாய்! *—உரைப்பெல்லாம்
நின்னன்றி மற்றிலேன்கண்டாய் * எனதுயிர்க்கோர்
சொல்நன்றியாகுந்துணை. (எஎ)

துணைநாள்பெருங்கிளையும் தொல்குலமும் * சுற்றத்
திணைநாளும் இன்புடைத்தாமேலும் *—கணைநாணில்
ஓவாத்தொழிற்சார்ங்கன் தொல்சீரைநல்நெஞ்சே! *
ஓவாதவுணுகவுண். (எஅ)

உள்நாட்டுத்தேசன்றே! ஊழ்வினையையஞ்சுமே? *
விண்ணாட்டையொன்றாகமெச்சுமே? *—மண்ணாட்டில்
ஆராகி எவ்விழிவிற்றாலும் * ஆழியங்கைப்
பேராயற்காளாம்பிறப்பு. (எகூ)

பிறப்பிறப்புமூப்புப் பிணிதுறந்து * பின்னும்
இறக்கவுமின்புடைத்தாமேலும் *—மறப்பெல்லாம்
ஏதமே என்றல்லாலெண்ணுவனே? * மண்ணளந்தான்
பாதமேயேத்தாப்பகல். (அ0)

பகலிராவென்பதுவும் பாவியாது * எம்மை
இகல்செய்து இருபொழுதுமாள்வர் *—தகவாத்
தொழும்பரிவர்சீர்க்கும் துணையிலரென்றோரார் *
செழும்பரவைமேயார்தெரிந்து. (அக)

தெரிந்துணர்வொன்றின்மையால் தீவினையேன் * வாளா
இருந்தொழிந்தேன் கீழ்நாள்களெல்லாம் *—கரந்துருவின்
அம்மானை அந்நான்றுபின்தொடர்ந்த * ஆழியங்கை
அம்மானையேத்தாதயர்த்து. (அஉ)

அயர்ப்பாயயராப்பாய் நெஞ்சமே! சொன்னேன் *
உயப்போம்நெறியிதுவேகண்டாய் *—செயற்பால
வல்லவேசெய்கிறுதி நெஞ்சமே! அஞ்சினேன் *
மல்லர்நாள்வவ்வினனைவாழ்த்து. (அநு)

வாழ்த்தியவனடியைப் பூப்புனைந்து * நின்தலையைத்
தாழ்த்திருகைகூப்பென்றால் கூப்பாத—பாழ்த்தவிதி! *
எங்குற்றாயென்றவனை ஏத்தாதென்னெஞ்சமே! *
தங்கத்தானாமேலுந்தங்கு.

தங்காமுயற்றியவாய்த் தாழ்விசும்பின்மீதுபாய்ந்து *
எங்கேபுக்கு எத்தவஞ்செய்திட்டனகொல்? *—பொங்கோதத்
தண்ணம்பால்வேலைவாய்க் கண்வளரும் * என்னுடைய
கண்ணன்பால் நல்நிறங்கொள்கார். (அரு)

↓↓ கார்கலந்தமேனியான் கைகலந்தவாழியான் *
பார்கலந்தவல்வயிற்றான் பாம்பணையான் *—சீர்கலந்த
சொல்நினைந்துபோக்காரேல் சூழ்வினையினாழ்துயரை *
என்னினைந்துபோக்குவரிப்போது? (அசு)

↓↓ இப்போதுமின்னும் இனிச்சிறிதுநின்றாலும் *
எப்போதுமீதேசொல் என்னெஞ்சே! *—எப்போதும்
கைகழலாநேமியான் நம்மேல்வினைகடிவான் *
மொய்கழலேயேத்தமுயல். (அஎ)

தசகஅடிவரவு:—முயற்றி நாழ் சென்று அழகு வலியம் மனமாளும் இறை முறையான் இனி பகல் ஒருபேர்.

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

திருவெழுகூற்றிருக்கை.

(எம்பெருமானார் அருளிச்செய்தது.)

வாழிபரகாலன் வாழிகலிகன்றி *
வாழிகுறையலூர்வாழ்வேந்தன் *—வாழியரோ
மாயோனைவாள்வலியால மந்திரங்கொள்மங்கையர்கோன் *
தூயோன்சுடர்மானவேல்.

† சீரார்திருவெழுகூற்றிருக்கையென்னுஞ்செந்தமிழால் *
ஆராவமுதன்குடந்தைப்பிரான்தனடியிணைக்கீழ் *
ஏரார்மறைப்பொருளெல்லாமெடுத்திவ்வுலகுய்யவே *
சோராமற்சொன்னஅருண்மாரிபாதம் துணைநமக்கே.

ஆசிரியப்பா. (தேசியராகம் - ஆதிதாளம்.)

‡ ஒருபேருந்தியிருமலர்த்தவிசில் *
ஒருமுறையயனையீன்றனை * ஒருமுறை
இருசுடர்மீதினிலியங்கா * மும்மதி
ளிலங்கையிருகாலவளைய * ஒருசிலை
யொன்றியஈரெயிற்றழல்வாய்வாளியி
லட்டனை * மூவடிநானிலம்வேண்டி *
முப்புரிநூலொடுமானுரியிலங்கு
மார்பினின் * இருபிறப்பொருமாணாகி *
ஒருமுறையீரடிமூவுலகளந்தனை *
நாற்றிசைநடுங்கஅஞ்சிறைப்பறவை
யேறி * நால்வாய்மும்மதத்திருசெவி
யொருதனிவேழத்தரந்தையை * ஒருநாள்
இருநீர்மடுவுள்தீர்த்தனை * முத்தீ
நான்மறையைவகைவேள்வி * அறுதொழி
லந்தணர்வணங்குந்தன்மையை * ஐம்புலன்
அகத்தினுள்செறுத்து * நான்குடனடக்கி
முக்குணத்திரண்டவையகற்றி * ஒன்றினில்

† இத்தனியன் [illegible]

ஒன்றிநின்று * ஆங்கிருபிறப்பறுப்போர்
அறியுந்தன்மையை * முக்கண்நாற்றோள்
ஐவாயரவோடு * ஆறுபொதிசடையோன்
அறிவருந்தன்மைப்பெருமையுள்நின்றனை *
ஏழுலகெயிற்றினில்கொண்டனை * கூறிய
அறுசுவைப்பயனுமாயினை * சுடர்விடும்
ஐம்படையங்கையுளமர்ந்தனை * சுந்தர
நாற்றோள்முந்நீர்வண்ண! * நின்னீரடி
ஒன்றியமனத்தால் * ஒருமதிமுகத்து
மங்கையரிருவரும் † மலரன * அங்கையின்
முப்பொழுதும்வருடஅறிதுயிலமர்ந்தனை *
நெறிமுறைநால்வகைவருணமுமாயினை *
மேதகும்ஐம்பெரும்பூதமும்நீயே *
அறுபதமுரலுங்கூந்தல்காரணம் *
ஏழ்விடையடங்கச்செற்றனை * அறுவகைச்
சமயமும்அறிவருநிலையினை * ஐம்பா
லோதியையாகத்திருத்தினை * அறமுதல
நான்கவையாய்மூர்த்திமூன்றாய் *
இருவகைப்பயனாய்ஒன்றாய்விரிந்து
நின்றனை * குன்றாமதுமலர்ச்சோலை
வண்கொடிப்படப்பை * வருபுனற்பொன்னி
மாமணியலைக்கும் * செந்நெலொண்கழனி
திகழ்வனமுடுத்த * கற்போர்புரிசைக்
கனகமாளிகை * நிமிர்கொடிவிசும்பில்
இளம்பிறைதுவக்கும் * ‡ செல்வம்மல்குதென்
திருக்குடந்தை * அந்தணர்மந்திரமொழியுடன்
வணங்க * ஆடரவமளியிலறிதுயில்
அமர்ந்தபரம! * நின்னடியிணைபணிவன்
வருமிடர்அகலமாற்றோவினையே. (க)

கட்டளைக்கலித்துறை.

‡ இடங்கொண்டநெஞ்சத்திணங்கிக்கிடப்பன * என்றும்பொன்னித்
தடங்கொண்டதாமரைசூழும்மலர்ந்ததண்பூங்குடந்தை *
விடங்கொண்டவெண்பல் கருந்துத்திசெங்கண்தழலுமிழ்வாய் *
படங்கொண்டபாம்பணைப்பள்ளிகொண்டான்திருப்பாதங்களே.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

---

* 'மலரென' எனவும் ஓதுவர்.
‡ இப்பாட்டு கம்பநாட்டாழ்வார் செய்தருளியதென்பர்.

வாழி பரகாலன் வாழி கலிகன்றி
வாழி குறையலூர் வாழ்வேந்தன் - வாழியரோ
மாயோனைவாள்வலியால்மந்திரங்கொள்மங்கையர்கோன்
தூயோன் சுடர்மான வேல்.

ஆரா வமுதனைக் குடந்தைப் பிரானற னடியிணைக்கீழ்
ஏரார் மறைப்பொருளெல்லா மெடுத்திவ் வுலகுய்யவே
சோராமற் சொன்ன வருள்மாரி பாதந் துணைநமக்கே.]



குன்றுமதுமலர்ச்சோலை
வண்கொடிப்படப்பை * வருபுனல்பொன்னி
மாமணியலைக்கும் * செந்நெலொண்கழனித்
திகழ்வனமுடுத்த * கற்போர்ப்புரிசைக்
கனகமாளிகை * நிமிர்கொடிவிசும்பில்
இளம்பிறைதுவக்கும் * செல்வம்மல்குதென்
திருக்குடந்தை * அந்தணர்மந்திரமொழியுடன்
வணங்க * ஆடரவமளியிலறிதுயி
லமர்ந்தபரம * நின்னடியிணைபணிவன்
வருமிடரகலமாற்றோ வினையே.

இடங்கொண்டநெஞ்சத்திணையசிக்கிடப்பன
என்றும் பொன்னித்
தடங்கொண்டதாமரைசூழும்மலர்ந்த
தண்பூங்குடந்தை
விடங்கொண்டவெண்பற்கருந்துத்திச்
செங்கண்தழலுமிழ்வாய்ப்
படங்கொண்டபாம்பணைப்பள்ளி
கொண்டான்திருப்பாதங்களே

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்



எழுகூற்றிருக்கையின் இலக்கணம்.

“மாலை மாற்றே சக்கரஞ் சுழிகுளம் - ஏகபாத மெழுகூற் றிருக்கை - வந்தன பிறவும் வகுத்தினத் துரைப்பான் - அந்தமில் கேள்வி யாசிரியன்னே” என்னும் அமிர்தசாகரனுர் சூத்திரமும்,

“கோதி லேழறை யாக்கிக் குறுமக்கள் - முன்னின்றும் புக்கும் போந்

எழுகூற்றிருக்கையாவது - எழுவரி மூன்றறை முதலொன்றற் கொன்றிரட்டறைமேற்பட முறையாகக்கீறி முறையே மக்கள்போக்கும் போந்து

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

சிறிய திருமடல்.

தனியன்.

(பிள்ளை திருநறையூரரையர் அருளிச்செய்தது.)

நேரிசைவெண்பா.

முள்ளிச்செழு † மலரோதாரான்முளைமதியம் *
கொள்ளிக்கென் னுள்ளங்கொதியாமே *—வள்ளல்
திருவாளன்சீர்க்கலியன்கார்க்கலியைவெட்டி *
மருவாளன்தந்தான்மடல்.

கலிவெண்பா.

(நாதநாமக்கிரியைராகம் - ஆதிதாளம்.)

‡‡ காரார்வரைக்கொங்கை கண்ணார்கடலுடுக்கை *
சீரார்சுடர்ச்சுட்டி செங்கலுழிப்பேராற்று * (க)
பேராரமார்பின் பெருமாமழைக்கூந்தல் *
நீராரவேலி நிலமங்கையென்னும் * இப் (உ)
பாரோர்சொலப்பட்ட மூன்றன்றே *—அம்மூன்றும்
ஆராயில்தானே அறம்பொருளின்பமென்று * (ங)
ஆராரிவற்றினிடையதனையெய்துவார் *
சீராரிருகலையுமெய்துவர் *—சிக்கெனமற்று (ச)
ஆரானுமுண்டென்பா ரென்பதுதானதுவும் *
ஓராமையன்றே? உலகத்தார்சொல்லுஞ்சொல் * (ரு)
ஓராமையாமாறு அதுவுரைக்கேன் ‡ கேளாமே *
காரார்புரவியேழ் பூண்டதனியாழி * (சா)
தேரார்நிறைகதிரோன் மண்டலத்தைக்கீண்டுபுக்கு *
ஆராவமுதமங்கெய்தி *—அதினின்றும் (எ)
வாராதொழிவதொன்றுண்டே? * அதுநிற்க,
ஏரார்முயல்விட்டுக் காக்கைப்பின்போவதே? * (அ)
ஏராரிளமுலையீர்! என்தனக்குற்றதுதான் *
காரார்குழலெடுத்துக்கட்டி *—கதிர்முலையை (கூ)

---

† 'மலரோர்', 'மலரோன்' என்பன பாடபேதங்கள்.
‡ 'கேளாமோ' என்று சிலர்.

வாராரவிக்கி மணிமேகலைதிருத்தி *
ஆராயில்வேற்கண் அஞ்சனத்தின்நீறணிந்து * (க0)
சீரார்செழும்பந்து கொண்டடியாநின்றேன்நான் *
நீரார்கமலம்போல் செங்கண்மாலென்றொருவன் * (கக)
பாரோர்களெல்லாம் மகிழப்பறைகறங்க *
சீரார்குடமிரண்டேந்தி *—செழுந்தெருவே (கஉ)
ஆராரெனச்சொல்லி ஆடுமதுகண்டு *
ஏராரிளமுலையார் † என்னையருமெல்லாரும் * (கங)
வாராயோவென்றார்க்குச் சென்றேனென்வல்வினையால் *
காராமணிநிறமும் கைவளையுங்காணேன்நான் * (க௪)
ஆரானுஞ்சொல்லிற்றுங்கொள்ளேன் *—அறிவழிந்து
தீராவுடம்பொடு பேதுறுவேன்கண்டிரங்கி * (கரு)
ஏரார்கிளிக்கிளவி எம்மனைதான்வந்தென்னை *
சீரார்செழும்புழுதிக்காப்பிட்டு *—செங்குறிஞ்சித் (கசு)
தாரார்நறுமாலை சாத்தற்கு * தான்பின்னும்
நேராதனவொன்றுநேர்ந்தாள் *—அதனாலும் (கஎ)
தீராதுஎன்சிந்தைநோய் தீராதுஎன்பேதுறவு *
வாராதுமாமை அதுகண்டுமற்றாங்கே * (கஅ)
ஆரானுமூதறியும் அம்மனைமார்சொல்லுவார் *
பாரோர்சொலப்படும் கட்டுப்படுத்திரேல் * (கக)
ஆரானுமெய்ப்படுவனென்றார் *—அதுகேட்டுக்
காரார்குழற்கொண்டைக் கட்டுவிச்சிகட்டேறி * (உ0)
சீரார்சுளகில் சிலநெல்பிடித்தெறியா *
வேராவிதிர்விதிரா மெய்சிலிராக்கைமோவா * (உக)
பேராயிரமுடையானென்றாள் *—பேர்த்தேயும்,
காரார்திருமேனிகாட்டினாள் * கையதுவும் (உஉ)
சீரார்வலம்புரியேயென்றாள் *—திருத்துழாய்த்
தாரார்நறுமாலை கட்டுரைத்தாள்கட்டுரையா * (உங)
நீரேதுமஞ்சேன்மின் நும்மகளைநோய்செய்தான் *
ஆரானுமல்லன் அறிந்தேன்அவனைநான் * (உ௪)
கூரார்வேற்கண்ணீர்! உமக்கறியக்கூறுகேனோ? *
ஆரால்இவ்வையம் அடியளப்புண்டதுதான்? * (உரு)

† 'அன்னையர்' என்பது சிலர்பாடம்.

ஆரால்இலங்கை பொடிபொடியாவீழ்ந்தது? * மற்று
ஆராலேகன்மாரிகாத்ததுதான்? *—ஆழிநீர் (௨௬)

ஆரால்கடைந்திடப்பட்டது? * அவன்காண்மின்
ஊராநிரைமேய்த்து உலகெல்லாமுண்டுமிழ்ந்தும் * (௨௭)

ஆராதன்மையனாய் ஆங்கொருநாளாய்ப்பாடி *
சீரார்கலையல்குல் சீரடிசெந்துவர்வாய் * (௨௮)

வாரார்வனமுலையாள் மத்தாரப்பற்றிக்கொண்டு *
ஏராரிடைநோவ எத்தனையோர்போதுமாய் * (௨௯)

சீரார்தயிர்கடைந்து வெண்ணெய்திரண்டதனை *
வேரார்நுதல்மடவாள் வேறோர்கலத்திட்டு * (௩௦)

நாராருறியேற்றி நன்கமையவைத்ததனை *
போரார்வேற்கண்மடவாள் போந்தனையும்பொய்யுறக்கம் * (௩௧)

ஓராதவன்போல் உறங்கியறிவுற்று *
தாரார்தடந்தோள்கள் உள்ளளவும்கைநீட்டி * (௩௨)

ஆராதவெண்ணெய்விழுங்கி *—அருகிருந்த
மோரார்குடமுருட்டி முன்கிடந்ததானத்தே * (௩௩)

ஓராதவன்போல்கிடந்தானைக் கண்டவளும் *
வாராத்தான்வைத்ததுகாணாள் *—வயிறடித்திங்கு (௩௪)

ஆரார்புகுதுவார்? ஐயரிவரல்லால் *
நீராமிதுசெய்தீர் என்றோர்நெடுங்கயிற்றால் * (௩௫)

ஊரார்களெல்லாரும் காணவுரலோடே *
தீராவெகுளியளாய்ச் சிக்கெனவார்த்தடிப்ப * (௩௬)

ஆராவயிற்றினோடு ஆற்றாதான் *—அன்றியும்,
நீரார்நெடுங்கயத்தைச் சென்றலைக்கநின்றுரப்பி * (௩௭)

ஓராயிரம்பணவெங் கோவியல்நாகத்தை *
வாராயெனக்கென்று மற்றதன்மத்தகத்து * (௩௮)

சீரார்திருவடியால்பாய்ந்தான் *—தன்சீதைக்கு
நேராவனென்று ஓர்நிசாசரிதான்வந்தாளை * (௩௯)

கூரார்ந்தவாளால் கொடிமூக்கும்காதிரண்டும் *
ஈராவிடுத்து அவட்குமூத்தோனை *—வெந்நரகம் (௪௦)

சேராவகையே சிலைகுனித்தான் * செந்துவர்வாய்
வாரார்வனமுலையாள் வைதேவிகாரணமா * (௪௧)

ஏரார்தடந்தோளிராவணனை *—ஈரைந்து
சீரார்சிரமறுத்துச் செற்றுகந்தசெங்கண்மால் * (சஉ)

போரார்நெடுவேலோன் பொன்பெயரோனாகத்தை *
கூரார்ந்தவள்ளுகிரால்கீண்டு *—குடல்மாலை (சங)

சீரார்திருமார்பின்மேல்கட்டி * செங்குருதி
சோராக்கிடந்தானைக் குங்குமத்தோள்கொட்டி * (சச)

ஆராவெழுந்தான் அரியுருவாய் *—அன்றியும்.
பேர்வாமனனாகியகாலத்து * மூவடிமண் (சரு)

தாராயெனக்கென்று வேண்டிச்சலத்தினால் *
நீரேற்றுலகெல்லாம் நின்றளந்தான்மாவலியை * (சசு)

ஆராதபோரில் அசுரர்களுந்தானுமாய் *
காரார்வரைநட்டு நாகம்கயிறாக * (சஎ)

பேராமல்தாங்கிக்கடைந்தான் *—திருத்துழாய்த்
தாரார்ந்தமார்வன் தடமால்வரைபோலும் * (சஅ)

போரானைபொய்கைவாய்க் கோட்பட்டுநின்றலறி *
நீரார்மலர்க்கமலங்கொண்டு ஓர்நெடுங்கையால் * (சகூ)

நாராயணா! ஓ! மணிவண்ணா! நாகணையாய்! *
வாராய்என்னாரிடரைநீக்காய் *—எனவெகுண்டு (ருo)

தீராதசீற்றத்தால் சென்றிரண்டுகூறாக *
ஈராவதனையிடர்கடிந்தான் எம்பெருமான் * (ருக)

பேராயிரமுடையான் பேய்ப்பெண்டீர்! நும்மகளை *
தீராநோய்செய்தான் எனவுரைத்தாள் *—சிக்கெனமற்று (ருஉ)

ஆரானுமல்லாமைகேட்டு எங்களம்மனையும் *
போரார்வேற்கண்ணீர்! அவனாகில்பூந்துழாய் * (ருங)

தாராதொழியுமே? தன்னடிச்சியல்லளே? * மற்று
ஆரானுமல்லனேயென்றொழிந்தாள் *—நானவனைக் (ருச)

காரார்திருமேனி கண்டதுவேகாரணமா *
பேராப்பிதற்றாத் திரிதருவன் *—பின்னையும் (ருரு)

ஈராப்புகுதலும் இவ்வுடலைத்தண்வாடை *
சோராமறுக்கும் வகையறியேன் *—சூழ்குழலார் (ருசு)

ஆரானுமேசுவ ரென்னுமதன்பழியை *
வாராமல்காப்பதற்கு வாளாவிருந்தொழிந்தேன் * (ருஎ)

வாராய்மடநெஞ்சே! வந்து *—மணிவண்ணன்
சீரார்திருத்துழாய்மாலை நமக்கருளி * (௫௮)
தாரான்தருமென்று இரண்டத்திலொன்றதனை *
ஆரானுமொன்றாதார் கேளாமேசொன்னக்கால் * (௫௯)
ஆராயுமேலும் பணிகேட்டுஅதன்றெனிலும் *
போராதொழியாதே போந்திடுநீயென்றேற்கு * (௬0)
காரார்கடல்வண்ணன் பின்போனநெஞ்சமும் *
வாராதே என்னைமறந்ததுதான் *—வல்வினையேன் (௬௧)
ஊராருகப்பதேயாயினேன் * மற்றெனக்கிங்கு
ஆராய்வாரில்லை அழல்வாய்மெழுகுபோல் * (௬௨)
நீராயுருகும் என்னாவி *—நெடுங்கண்கள்
ஊராருறங்கிலும் தானுறங்கா * உத்தமன்தன் (௬௩)
பேராயினவே பிதற்றுவன் *—பின்னையும்
காரார்கடல்போலும் காமத்தராயினார் * (௬௪)
ஆரேபொல்லாமையறிவார்? * அதுநிற்க,
ஆரானுமாதானும் அல்லளவள்காணீர் * (௬௫)
வாரார்வனமுலை வாசவதத்தையென்று *
ஆரானுஞ்சொல்லப்படுவாள் *—அவளும்தன் (௬௬)
பேராயமெல்லாம் ஒழியப் பெருந்தெருவே *
தாரார்தடந்தோள் தளைக்காலன்பின்போனாள் * (௬௭)
ஊராரிகழ்ந்திடப்பட்டாளே? *—மற்றெனக்கிங்கு
ஆரானுங்கற்பிப்பார்நாயகரே? * நானவனைக் (௬௮)
காரார்திருமேனி காணுமளவும்போய் *
↓↓ சீரார்திருவேங்கடமே திருக்கோவ (௬௯)
லூரே * மதிட்கச்சியூரகமே பேரகமே *
பேராமருதிறுத்தான் வெள்ளறையேவெஃகாவே * (௭0)
பேராலிதண்கால் நறையூர்திருப்புலியூர் *
↓↓ ஆரமம்சூழ்ந்த அரங்கம் *—கணமங்கை (௭௧)
காரார்மணிநிறக் கண்ணனூர்விண்ணகரம் *
சீரார்கணபுரம் சேறைதிருவழுந்தூர் * (௭௨)
காரார்குடந்தை கடிகைகடல்மல்லை *
ஏரார்பொழில்சூழ் இடவெந்தைநீர்மலை * (௭௩)

சீராரும்மாலிருஞ்சோலை திருமோகூர் *—
பாரோர்புகழும் வதரிவடமதுரை * (எச)

ஊராயவெல்லாம் ஒழியாமேநானவனை *
ஓரானைகொம்பொசித்து ஓரானைகோள்விடுத்த (எரு)

சீரானை * செங்கணெடியானைத் தேன்துழாய்த்
தாரானை * தாமரைபோற்கண்ணானை *—எண்ணருஞ்சீர்ப்(எசு)

பேராயிரமும்பிதற்றி *—↓↓ பெருந்தெருவே
ஊராரிகழிலும் ஊராதொழியேன்நான் * (எஎ)

வாரார்பூம்பெண்ணைமடல். † (எஅ)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

நேரிசைவெண்பா.

‡ ஊராதொழியேன் உலகறியவொண்ணுதலீர் ! *
சீரார்முலைத்தடங்கள்சேரளவும் *—பாரெல்லாம்
அன்றோங்கிநின்றளந்தான் நின்றதிருநறையூர் *
மன்றோங்கவூர்வன்மடல்.

---

† சிறியதிருமடலும் பெரியதிருமடலும் யாப்பிலக்கணத்தின்படி தனித் தனி ஒருபாட்டு. ‡ இது கம்பர் பாடிய தென்பர்.

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

பெரியதிருமடல்.

தனியன்.

(பிள்ளைதிருநறையூரரையர் அருளிச்செய்தது.)

நேரிசைவெண்பா.

பொன்னுலகில்வானவரும் † பூமகளும்போற்றிசெய்யும் *
நல்நுதலீர்! நம்பிநறையூரர் *—மன்னுலகில்
என்னிலைமைகண்டும் இரங்காரேயாமாகில் *
மன்னுமடலூர்வன்வந்து.

கலிவெண்பா. (நாதநாமக்ரியைராகம் - ஆதிதாளம்.)

↓↓ மன்னியபல்பொறிசேர் ஆயிரவாய்வாளரவின் *
சென்னிமணிக்குடுமித் தெய்வச்சுடர்நடுவுள் * (௧)
மன்னியநாகத்தணைமேல் ஓர்மாமலைபோல் *
மின்னுமணிமகரகுண்டலங்கள் வில்வீச * (௨)
துன்னியதாரகையின் பேரொளிசேராகாசம் *
என்னும்விதானத்தின்கீழால் *—இருசுடரை (௩)
மன்னும்விளக்காகவேற்றி * மறிகடலும்
பன்னுதிரைக்கவரிவீச *—நிலமங்கை (௪)
தன்னைமுனநாள் அளவிட்டதாமரைபோல் *
மன்னியசேவடியை வானியங்குதாரகைமீன் * (௫)
என்னும்மலர்ப்பிணையலேய்ந்த *—மழைக்கூந்தல்
தென்னனுயர்பொருப்பும் தெய்வவடமலையும் * (௬)
என்னுமிவையே முலையாவடிவமைந்த *
அன்னநடையவணங்கே *—அடியிணையைத் (௭)
தன்னுடையவங்கைகளால் தான்தடவத்தான்கிடந்து * ஓர்
உன்னியயோகத்து உறக்கந்தலைக்கொண்ட (௮)
பின்னை * தன்னாபிவலயத்துப் பேரொளிசேர் *
மன்னியதாமரை மாமலர்பூத்து * அம்மலர்மேல் (௯)
முன்னந்திசைமுகனைத் தான்படைக்க * மற்றவனும்
முன்னம்படைத்தனன்நான்மறைகள் *—அம்மறைதான் (௧0)

† 'பூமகனும்' என்றும் பாடம்.

மன்னுமறம்பொருளின்பம் வீடென்றுலகில் *
நன்னெறிமேம்பட்டன நான்கன்றே *—நான்கினிலும் (கக)
பின்னையது பின்னைப்பெயர்தருமென்பது * ஓர்
தொன்னெறியைவேண்டுவார் வீழ்கனியுமூழிலையும் * (கஉ)
என்னுமிவையேநுகர்ந்து உடலம்தாம்வருந்தி *
துன்னுமிலைக்குரம்பைத்துஞ்சியும் *—வெஞ்சுடரோன் (கங)
மன்னுமழல்நுகர்ந்தும் வண்தடத்தினுட்கிடந்தும் *
இன்னதோர்தன்மையராய் ஈங்குடலம்விட்டெழுந்து * (கச)
தொன்னெறிக்கண்சென்றாரெனப்படுஞ்சொல்லல்லால் *
இன்னதோர்காலத்து இனையாரிதுபெற்றார் * (கரு)
என்னவுங்கேட்டறிவதில்லை *—உளதென்னில்
மன்னுங்கடுங்கதிரோன் மண்டலத்தின்நன்னடுவுள் * (கசு)
அன்னதோரில்லியினூடுபோய் *—வீடென்னும்
தொன்னெறிக்கண்சென்றாரைச்சொல்லுமின்கள்,சொல்லாதே*
அன்னதேபேசும் அறிவில்சிறுமனத்து * ஆங்
கன்னவரைக் கற்பிப்போம்யாமே *—அதுநிற்க, (கஎ)
முன்னம்நான்சொன்ன அறத்தின்வழிமுயன்ற *
அன்னவர்தாம்கண்டீர்கள் ஆயிரக்கண்வானவர்கோன் * (கஅ)
பொன்னகரம்புக்கமரர் † போற்றிசெப்ப *—பொங்கொளிசேர்
கொல்நவிலுங்கோளரிமாத் தான்சுமந்தகோலஞ்சேர் * (உ௦)
மன்னியசிங்காசனத்தின்மேல் *—வாள்நெடுங்கண்
கன்னியரால்இட்ட கவரிப்பொதியவிழ்ந்து * ஆங் (உக)
கின்னிளம்பூந்தென்றலியங்க *—மருங்கிருந்த
மின்னனையநுண்மருங்குல் மெல்லியலார்வெண்முறுவல் * (உஉ)
முன்னம்முகிழ்த்த முகிழ்நிலாவந்தரும்ப *
அன்னவர்தம்மானோக்க முண்டாங்கணிமலர்சேர் * (உங)
பொன்னியல்கற்பகத்தின் காடுடுத்தமாடெல்லாம் *
மன்னியமந்தாரம் பூத்தமதுத்திவலை * (உச)
இன்னிசைவண்டமரும் சோலைவாய்மாலைசேர் *
மன்னியமாமயில்போற்கூந்தல் *—மழைத்தடங்கண் (உரு)
மின்னிடையாரோடும் விளையாடிவேண்டிடத்து *
மன்னுமணித்தலத்து மாணிக்கமஞ்சரியின் * (உசு)

† 'போற்றிசைப்ப' என்று பாடாந்தரம்.

மின்னிஞெளிசேர் பளிங்குவிளிம்படுத்த *
மன்னும்பவளக்கால் செம்பொன்செய்மண்டபத்துள் * (உஎ)
அன்னநடைய அரம்பையர்தங்கைவளர்த்த *
இன்னிசையாழ்ப்பாடல்கேட் டின்புற்று *—இருவிசும்பில்(உஅ)
மன்னுமழைதவழும் வாணிலாநீள்மதிதோய் *
மின்னிஞெளிசேர் விசும்பூரும்மாளிகைமேல் * (உகூ)
மன்னுமணிவிளக்கைமாட்டி *—மழைக்கண்ணார்
பன்னுவிசித்திரமாப் பாப்படுத்தபள்ளிமேல் * (௩௦)
துன்னியசாலேகம் சூழ்கதவம்தாள்திறப்ப *
அன்னமுழக்கநெரிந்துக்கவாள்நீலச் * (௩க)
சின்னநறுந்தாதுசூடி *—ஓர்மந்தாரம்
துன்னுநறுமலரால் தோள்கொட்டி * கற்பகத்தின் (௩உ)
மன்னுமலர்வாய் மணிவண்டுபின்தொடர *
இன்னிளம்பூந்தென்றல் புகுந்தீங்கிளமுலைமேல் * (௩௩)
நன்னறுஞ்சந்தனச்சேறு புலர்த்த *—தாங்கருஞ்சீர்
மின்னிடைமேல் கைவைத்திருந்தேந்திளமுலைமேல் * (௩௪)
பொன்னரும்பாரம்புலம்ப *—அகங்குழைந்தாங்கு
இன்னவுருவின் இமையாத்தடங்கண்ணார் * (௩௫)
அன்னவர்தம்மானோக்கமுண்டு ஆங்கணிமுறுவல் *
இன்னமுதம் மாந்தியிருப்பர் *—இதுவன்றே (௩௬)
அன்னவறத்தின் பயனாவது * ஒண்பொருளும்
அன்னதிறத்ததே யாதலால் *—காமத்தின் (௩எ)
மன்னும்வழிமுறையே நிற்றும்நாம் * மானோக்கின்
அன்னநடையாரலரேச ஆடவர்மேல் * (௩அ)
மன்னுமடலூரா ரென்பதோர்வாசகமும் *
தென்னுரையில் கேட்டறிவதுண்டு *—அதனையாம்தெளியோம்
மன்னும்வடநெறியேவேண்டினோம் * வேண்டாதார்
தென்னன்பொதியில் செழுஞ்சந்தனக்குழம்பின் * (௪௦)
அன்னதோர்தன்மையறியாதார் *—ஆயன்வேய்
இன்னிசையோசைக்கு இரங்காதார் * மால்விடையின் (௪க)
மன்னுமணிபுலம்பவாடாதார் *—பெண்ணைமேல்
பின்னும்அவ்வன்றிற்பேடைவாய்ச் சிறுகுரலுக்கு * (௪உ)

உன்னியுடலுருகிநையாதார் * —உம்பர்வாய்த்
துன்னுமதியுகுத்த தூநிலாநீள்நெருப்பில் * (௪௩)
தம்முடலம்வேவத் தளராதார் *—காமவேள்
மன்னுஞ்சிலைவாய் மலர்வாளிகோத்தெய்ய * (௪௪)
பொன்னெடுவீதிபுகாதார் * —தம்பூவணைமேல்
சின்னமலர்க்குழலும் அல்குலும்மென்முலையும் * (௪௫)
இன்னிளவாடைதடவத் தாம்கண்துயிலும் *
பொன்னனையார் பின்னுந்திருவுறுக *—போர்வேந்தன் (௪௬)
தன்னுடையதாதை பணியாலரசொழிந்து *
பொன்னகரம் பின்னேபுலம்ப, வலங்கொண்டு * (௪௭)
மன்னும்வளநாடு கைவிட்டு *—மாதிரங்கள்
மின்னுருவில்விண்தேர் திரிந்துவெளிப்பட்டு * (௪௮)
† கல்நிறைந்துதீந்து கழையுடைந்து கால்சுழன்று *
பின்னுந்திரைவயிற்றுப் பேயேதிரிந்துலவா * (௪௯)
கொன்னவிலும்வெங்கானத்தூடு *—கொடுங்கதிரோன்
துன்னுவெயில்வறுத்த வெம்பரல்மேல்பஞ்சடியால் * (௫௦)
மன்னனிராமன்பின் வைதேவியென்றுரைக்கும் *
அன்னநடைய அணங்குநடந்திலளே ? * (௫௧)
பின்னும்கருநெடுங்கண் செவ்வாய்பிணைநோக்கின் *
மின்னனையநுண்மருங்குல் வேகவதியென்றுரைக்கும் (௫௨)
கன்னி * தன் இன்னுயிராம் காதலனைக்காணாது *
தன்னுடையமுன்தோன்றல்கொண்டேகத் தான்சென்று* அங்கு
அன்னவனைநோக்காது அழித்துரப்பி * —வாளமருள்
கல்நவில்தோள்காளையைக் கைப்பிடித்துமீண்டும்போய் * (௫௪)
பொன்னவிலுமாகம் புணர்ந்திலளே ? *—பூங்கங்கை
முன்னம் புனல்பரக்கும் நல்நாடன் * மின்னாடும் (௫௫)
கொன்னவிலும்நீள்வேல் குருக்கள்குலமதலை *
தன்னிகரொன்றில்லாத வென்றித்தனஞ்சயனை * (௫௬)
பன்னகராயன் மடப்பாவை *—பாவைதன்
மன்னியநாணச்சம் மடமென்றிவையகல * (௫௭)
தன்னுடைய கொங்கைமுகம்நெரிய *—தானவன்தன்
‡ பொன்வரையாகம் தழீஇக்கொண்டுபோய் * தனது (௫௮)

† 'கன்னிரைந்து' என்பதும் பாடம். ‡ 'பொன்னவரை' என்பதும் பாடம்.

நல்நகரம்புக்கு நயந்தினிது வாழ்ந்ததுவும் *
முன்னுரையில் கேட்டறிவதில்லையே? *—சூழ்கடலுள் (௫௯)
பொன்னகரஞ்செற்ற புரந்தரனோடொக்கும் *
மன்னவன்வாணன் அவுணர்க்குவாள்வேந்தன் * (௬௦)
தன்னுடையபாவை உலகத்துத்தன்னொக்கும் *
கன்னியரையில்லாத காட்சியாள் *—தன்னுடைய (௬௧)
இன்னுயிர்த்தோழியால் எம்பெருமானீன்துழாய் *
மன்னுமணிவரைத்தோள் மாயவன் *—பாவியேன் (௬௨)
என்னையிது விளைத்த ஈரிரண்டுமால்வரைத்தோள் *
மன்னவன்தன்காதலனை மாயத்தாற்கொண்டுபோய் * (௬௩)
கன்னிதன்பால்வைக்க மற்றவனோடெத்தனையோ *
மன்னியபேரின்பமெய்தினாள் *—மற்றிவைதான் (௬௪)
என்னாலேகேட்டீரே? ஏழைகாள்! என்னுரைக்கேன்? *
மன்னுமலையரையன் பொற்பாவை *—வாள்நிலா (௬௫)
மின்னுமணிமுறுவல் செவ்வாயுமையென்னும் *
அன்னநடையஅணங்கு, நுடங்கிடைசேர் * (௬௬)
பொன்னுடம்புவாடப் புலனைந்தும்நொந்தகல *
தன்னுடையகூழைச் சடாபாரந்தான்தரித்து * ஆங்கு (௬௭)
அன்னவருந்தவத்தினூடுபோய் *—ஆயிரந்தோள்
மன்னுகரதலங்கள் மட்டித்து * மாதிரங்கள் (௬௮)
மின்னியெரிவீச மேலெடுத்தசூழ்கழற்கால் *
பொன்னுலகமேழும் கடந்தும்பர்மேற்சிலும்ப * (௬௯)
மன்னுகுலவரையும் மாருதமும்தாரகையும் *
தன்னினுடனே சுழலச்சுழன்றாடும் * (௭௦)
கொல்நவிலும்மூவிலைவேல் கூத்தன்பொடியாடி *
அன்னவன்தன்பொன்னகலம் சென்றாங்கணைந்திலளே? * (௭௧)
பன்னியுரைக்குங்கால் பாரதமாம் *—பாவியேற்கு
என்னுறுநோய் யானுரைப்பக்கேண்மின் * இரும்பொழில்சூழ்
மன்னுமறையோர் திருநறையூர்மாமலைபோல் *
பொன்னியலுமாடக் கவாடம்கடந்துபுக்கு * (௭௨)
என்னுடையகண்களிப்ப நோக்கினேன் *—நோக்குதலும்
மன்னன்திருமார்பும் வாயுமடியிணையும் * (௭௩)

பன்னுகரதலமும் கண்களும் *—பங்கயத்தின்
பொன்னியல்காடு ஓர்மணிவரைமேல்பூத்ததுபோல் * (எ௫)
மின்னியொளிபடைப்ப வீழ்நாணும்தோள்வளையும் *
மன்னியகுண்டலமும் ஆரமும்நீள்முடியும் * (எ௬)
துன்னுவெயில்விரித்த சூளாமணியிமைப்ப *
மன்னுமரதகக் குன்றின்மருங்கே *—ஓர் (எஎ)
இன்னிளவஞ்சிக் கொடியொன்றுநின்றதுதான் *
அன்னமாய்மானாய் அணிமயிலாய்ஆங்கிடையே * (எ௮)
மின்னாய்இளவேயிரண்டாய் இணைச்செப்பாய் *
முன்னாயதொண்டையாய்க் கெண்டைக்குலமிரண்டாய் * (எ௯)
அன்னதிருவுருவம் நின்றதறியாதே *
என்னுடையநெஞ்சும் அறிவும்இனவளையும் * (௮0)
பொன்னியலும்மேகலையும் ஆங்கொழியப்போந்தேற்கு *
மன்னுமறிகடலுமார்க்கும் *—மதியுகுத்த (௮௧)
இன்னிலாவின்கதிரும் என்தனக்கேவெய்தாகும் *
தன்னுடையதன்மை தவிரத்தானென்கொலோ ? * (௮௨)
தென்னன்பொதியில் செழுஞ்சந்தின்தாதளைந்து *
மன்னிவ்வுலகை மனங்களிப்பவந்தியங்கும் * (௮௩)
இன்னிளம்பூந்தென்றலும் வீசுமெரியெனக்கே *
முன்னியபெண்ணைமேல் முள்முளரிக்கூட்டகத்து * (௮௪)
பின்னுமவ்வன்றில் பேடைவாய்ச்சிறுகுரலும் *
என்னுடையநெஞ்சுக்கு ஓரீர்வாளாம் என்செய்கேன் ? * (௮௫)
கல்நவிலதோள்காமன் கருப்புச்சிலைவளைய *
கொல்நவிலும்பூங்கணைகள் கோத்துப்பொதவணைந்து * (௮௬)
தன்னுடையதோள்கழியவாங்கி *—தமியேன்மேல்
என்னுடையநெஞ்சே இலக்காகவெய்கின்றான் * (௮எ)
பின்னிதனைக் † காப்பீர்தானில்லையே *—பேதையேன்
கல்நவிலுங்காட்டகத்து ஓர்வல்லிக்கடிமலரின் * (௮௮)
நல்நறுவாசம் மற்றாரானுமெய்தாமே *
மன்னும்வறுநிலத்து வாளாங்குகுத்ததுபோல் * (௮௯)
என்னுடையபெண்மையும் என்நலனும்என்முலையும் *
மன்னுமலர்மங்கைமைந்தன் *—கணபுரத்துப் (௯0)

---

† 'காப்பார்தாம்' என்று பாடமுண்டு.

பொன்மலைபோல்நின்றவன்தன் பொன்னகலம்தோயாவேல் *
என்னிவைதான்? வாளாஎனக்கேபொறையாகி * (௯௧)
முன்னிருந்துமூக்கின்று மூவாமைக்காப்பதோர் *
மன்னுமருந்தறிவீ ரில்லையே? *—மால்விடையின் (௯௨)
துன்னுபிடரெருத்துத் தூக்குண்டு * வன்தொடரால்
கன்னியர்கண்மிளிரக் கட்டுண்டு * மாலைவாய்த் (௯௩)
தன்னுடையநாவொழியாது ஆடுந்தனிமணியின் *
இன்னிசையோசையும் வந்தென்செவிதனக்கே * (௯௪)
கொல்நவிலுமெஃகின் கொடிதாய்நெடிதாகும் *
என்னிதனைக்காக்குமா? சொல்லீர் *—இதுவிளைத்த (௯௫)
மன்னன்நறுந்துழாய்வாழ்மார்பன் * மாமதிகோள்
முன்னம்விடுத்த முகில்வண்ணன் *—காயாவின் (௯௬)
சின்னநறும்பூந் திகழ்வண்ணன் * வண்ணம்போல்
அன்னகடலை மலையிட்டணைகட்டி * (௯௭)
மன்னனிராவணனை மாமண்டுவெஞ்சமத்து *
பொன்முடிகள்பத்தும் புரளச்சரந்துரந்து * (௯௮)
தென்னுலகமேற்றுவித்த சேவகனை *—ஆயிரக்கண்
மன்னவன்வானமும் வானவர்தம்பொன்னுலகும் * (௯௯)
தன்னுடையதோள்வலியால் கைக்கொண்டதானவனை *
பின்னோரரியுருவமாகி எரிவிழித்து * (௧௦௦)
கொல்நவிலும்வெஞ்சமத்துக் கொல்லாதே *—வல்லாளன்
மன்னுமணிக்குஞ்சி பற்றிவரவீர்த்து * (௧௦௧)
தன்னுடையதாள்மேல் கிடாத்தி *—அவனுடைய
பொன்னகலம்வள்ளுகிரால் போழ்ந்துபுகழ்படைத்த * (௧௦௨)
மின்னிலங்குமாழிப் படைத்தடக்கைவீரனை *
மன்னிவ்வகலிடத்தை மாமுதுநீர்தான்விழுங்க * (௧௦௩)
பின்னுமோரேனமாய்ப் புக்குவளைமருப்பில் *
கொல்நவிலுங்கூர்நுதிமேல் வைத்தெடுத்தகூத்தனை * (௧௦௪)
மன்னும்வடமலையை மத்தாகமாசுணத்தால் *
மின்னுமிருசுடரும் விண்ணும்பிறங்கொளியும் * (௧௦௫)
தன்னினுடனேசுழல மலைதிரித்து * ஆங்கு
இன்னமுதம் வானவரையூட்டி * அவருடைய (௧௦௬)

மன்னுந் துயர்கடிந்த வள்ளலை *—மற்றன்றியும்,
தன்னுருவம் ஆருமறியாமல் தானங்கோர் * (க0எ)
மன்னுங் குறளுருவின் மாணியாய் *—மாவலிதன்
பொன்னியலும் வேள்விக்கண் புக்கிருந்து * போர்வேந்தர் (க0அ)
மன்னை மனங்கொள்ள வஞ்சித்து நெஞ்சுருக்கி *
என்னுடைய பாதத்தால் யானளப்ப மூவடிமண் * (க0௯)
மன்னா! தருகென்று வாய்திறப்ப *—மற்றவனும்
என்னால் தரப்பட்டதென்றலுமே * அத்துணைக்கண் (கக0)
மின்னார் மணிமுடி போய் விண்தடவ *—மேலெடுத்த
பொன்னார் கனைகழற்கால் ஏழுலகும் போய்க்கடந்து * அங்கு (ககக)
ஒன்றா அசுரர் துளங்கச் செலநீட்டி *
மன்னிவ்வகலிடத்தை மாவலியை வஞ்சித்து * (ககஉ)
தன்னுலகமாக்குவித்த தாளானை *—தாமரைமேல்
மின்னிடையாள் நாயகனை விண்ணகருள் பொன்மலையை * (ககங)
பொன்னி மணிகொழிக்கும் பூங்குடந்தைப் போர்விடையை *
தென்னன் குறுங்குடியுள் செம்பவளக் குன்றினை * (கக௪)
மன்னிய தண்சேறை வள்ளலை *—மாமலர்மேல்
அன்னம் துயிலும் அணிநீர் வயலாலி * (கக௫)
என்னுடைய இன்னமுதை எவ்வுள் பெருமலையை *
கன்னிமதிள் சூழ் கணமங்கைக் கற்பகத்தை * (கக௬)
மின்னை இருசுடரை வெள்ளறையுள் கல்லறைமேல்
பொன்னை * மரதகத்தைப் புட்குழி எம்போரேற்றை * (ககஎ)
↓↓ மன்னு மரங்கத்து எம்மாமணியை *—வல்லவாழ்ப்
பின்னை மணாளனைப் பேரில் பிறப்பிலியை * (ககஅ)
தொன்னீர்க் கடல்கிடந்த தோளா மணிச்சுடரை *
என்மனத்து மாலை இடவெந்தை ஈசனை * (கக௯)
மன்னுங் கடல்மல்லை மாயவனை *—வானவர்தம்
சென்னி மணிச்சுடரைத் தண்கால் திறல்வலியை * (கஉ0)
தன்னைப் பிறரறியாத் தத்துவத்தை முத்தினை *
அன்னத்தை மீனை அரியை அருமறையை * (கஉக)
முன்னிவ் வுலகுண்ட மூர்த்தியை *—கோவலூர்
மன்னும் இடைகழி எம்மாயவனை * பேயலறப் (கஉஉ)

பின்னும்முலையுண்ட பிள்ளையை* — அள்ளல்வாய்
அன்னமிரைதேர் அழுந்தூரெழுஞ்சுடரை * (௧௨௩)
↓↓ தென்தில்லைச் சித்திரகூடத்துளென்செல்வனை *—
மின்னிமழைதவழும் வேங்கடத்துளெம்வித்தகனை * (௧௨௪)
மன்னனை மாலிருஞ்சோலைமணாளனை *
கொல்நவிலுமாழிப்படையானை *—கோட்டியூர் (௧௨௫)
அன்னவுருவினரியை * திருமெய்யத்து
இன்னமுதவெள்ளத்தை இந்தளூரந்தணனை * (௧௨௬)
மன்னுமதிள்கச்சி வேளுக்கையாளரியை *
மன்னியபாடகத்து எம்மைந்தனை *—வெஃகாவில் (௧௨௭)
உன்னியயோகத்துறக்கத்தை * ஊரகத்துள்
அன்னவனை அட்டபுயகரத்தெம்மானேற்றை * (௧௨௮)
என்னைமனங்கவர்ந்தஈசனை * —வானவர்தம்
முன்னவனை மூழிக்களத்து † விளக்கினை * (௧௨௯)
அன்னவனை ஆதனூராண்டளக்குமையனை *
நென்னலையின்றினை நாளையை * —நீர்மலைமேல் (௧௩௦)
மன்னுமறைநான்குமானானை * புல்லாணித்
தென்னன்தமிழை வடமொழியை * நாங்கூரில் (௧௩௧)
மன்னுமணிமாடக்கோயில்மணாளனை *
நல்நீர்த்தலைச்சங்கநாண்மதியை *—நான்வணங்கும் (௧௩௨)
கண்ணனைக் கண்ணபுரத்தானை * தென்னறையூர்
மன்னுமணிமாடக்கோயில்மணாளனை * (௧௩௩)
கல்நவில்தோள்காளையைக் கண்டாங்குக்கைதொழுது *
என்னிலைமையெல்லாம் அறிவித்தால்எம்பெருமான் * (௧௩௪)
தன்னருளுமாகமும் தாரானேல் *—தன்னைநான்
மின்னிடையார்சேரியிலும் வேதியர்கள்வாழ்விடத்தும் *(௧௩௫)
தன்னடியார்முன்பும் தரணிமுழுதாளும் *
கொல்நவிலும்வேல்வேந்தர்கூட்டத்தும்நாட்டகத்தும் * (௧௩௬)
தன்னிலைமையெல்லாம் அறிவிப்பன் *—தான்முனநாள்
மின்னிடையாய்ச்சியர்தம் சேரிக்களவின்கண் * (௧௩௭)
துன்னுபடல்திறந்துபுக்கு *—தயிர்வெண்ணெய்
தன்வயிறாரவிழுங்க * கொழுங்கயற்கண் (௧௩௮)

---

† 'வளத்தினை' என்பது சிலர் பாடம்.

மன்னுமடவோர்கள் பற்றியோர்வான்கயிற்றால் *
பின்னுமுரலோடு கட்டுண்டபெற்றிமையும் * (௧௬௯)

அன்னதோர்பூதமாய் ஆயர்விழவின்கண் *
துன்னுசகடத்தால் புக்கபெருஞ்சோற்றை * (௧௭௦)

முன்னிருந்துமுற்றத்தான் துற்றியதெற்றெனவும் *
மன்னர்பெருஞ்சவையுள் வாழ்வேந்தர்தூதனாய் * (௧௭௧)

தன்னையிகழ்ந்துரைப்பத் தான்முனநாள்சென்றதுவும் *
மன்னுபறைகறங்க மங்கையர்தம்கண்களிப்ப * (௧௭௨)

கொன்னவிலுங்கூத்தனாய்ப் பெயர்த்துங்குடமாடி *
என்னிவன் ? என்னப்படுகின்றவீடறவும் * (௧௭௩)

தென்னிலங்கையாட்டி அரக்கர்குலப்பாவை *
மன்னனிராவணன்தன் நல்தங்கை *—வாளெயிற்றுத் (௧௭௪)

துன்னுசுடுசினத்துச் சூர்ப்பணகா சோர்வெய்தி *
பொன்னிறங்கொண்டு புலர்ந்தெழுந்தகாமத்தால் * (௧௭௫)

தன்னைநயந்தாளைத் தான்முனிந்துமூக்கரிந்து *
மன்னியதிண்ணெனவும், வாய்த்தமலைபோலும் * (௧௭௬)

தன்னிகரொன்றில்லாத தாடகையை*—‡‡மாமுனிக்காத்
தென்னுலகமேற்றுவித்த திண்திறலும் * மற்றிவைதான் (௧௭௭)

உன்னியுலவாவுலகறிய வூர்வன்நான் *
முன்னிமுளைத்தெழுந்து ஓங்கியொளிபரந்த * (௧௭௮)

மன்னியபூம்பெண்ணைமடல். (௧௭௯)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

நேரிசைவெண்பா.

† என்னிலைமையெல்லாம்அறிவித்தால் எம்பெருமான் *
தன்னருளுமாகமும்தாரானேல் *—பின்னைப்போய்
‡ ஒண்துறைநீர்வேலை உலகறியவூர்வன்நான் *
வண்டறைபூம்பெண்ணைமடல்.

[மண்ணிற்பொடிப்பூசி வண்டிரைக்கும்பூச்சூடி *
பெண்ணைமடல்பிடித்துப் § பின்னே *—அண்ணல்
திருநறையூர்நின்றபிரான் தேர்போகும்வீதி *
பொரு $ முறையால்செல்வம்புரிந்து.]

---

† இப்பாட்டுக் கம்பர் பாடியதென்பர். ‡‘ஒண்டிரை’ என்பதும் பாடம்.
§ ‘பின்பின்னே’, $ ‘மறையாய்’ என்பன பாடபேதங்கள்.

இயற்பா.

		பாசுரம்.			பாசுரம்.
க.	முதல்திருவந்தாதி	க00	ரு.	திருவாசிரியம்	எ
உ.	இரண்டாந்திருவந்தாதி	க00	எ.	பெரியதிருவந்தாதி	அஎ
ங.	மூன்றாந்திருவந்தாதி	க00	அ.	திருவெழுகூற்றிருக்கை	க
ச.	நான்முகன்திருவந்தாதி	கூசு	கூ.	சிறியதிருமடல்	எஎ௨
ரு.	திருவிருத்தம்	க00	க0.	பெரியதிருமடல்	கசஅ௨

ஆக, பாசுரம் - அகஎ

இராமாநுசநூற்றந்தாதிச் செய்யுளகராதி.

செய்யுள்	பக்கம்.	செய்யுள்	பக்கம்.	செய்யுள்	பக்கம்.
அங்கயல்	கசு	கள்ளார்	உ	நிலத்தை	சு
அடல்கொண்ட	சு	காரேய்	ரு	நினையார்	கங
அடியை	அ	கார்த்திகை	ரு	நின்றவண்	கக
அடையார்	சு	கூட்டும்	சு	நெஞ்சில்	ரு
அற்புதன்	க	கூறும்	அ	நையும்மனம்	கரு
ஆக்கியடிமை	எ	கைத்தனன்	கக	படிகொண்ட	எ
ஆண்டுகள்	சு	கையிற்கனி	கரு	பண்தரு	க0
ஆயிழையார்	எ	கொழுந்து	க0	பற்றுமனிசரை	கங
ஆரப்பொழில்	ச	கொள்ள	ரு	பார்த்தான்	அ
ஆரெனக்கின்று	க0	கோக்குலம்	க	பிடியை	க0
ஆனதுசெம்மை	அ	சரணமடைந்த	க0	புண்ணிய	கச
இடங்கொண்ட	ங	சார்ந்தது	கக	பூமன்னுமாது	உ
இடுமே	கரு	சிந்தையினோடு	கக	பெரியவர்	கங
இயலும்	ங	சீரிய	ங	பேதையர்	க
இருந்தேன்	க0	சீர்கொண்டு	கஉ	பேரியல்	உ
இருப்பிடம்	கசு	சுரக்கும்	எ	பேறொன்று	அ
இறைஞ்ச	அ	செய்த்தலை	கக	பொய்யை	கஉ
இறைவனை	ங	செய்யும்	ச	பொருந்திய	சு
இனியென்	உ	செழுந்திரை	கசு	பொருளும்	எ
இன்பந்தரு	சு	சேமநல்வீடும்	எ	போந்ததென்	கரு
இன்புற்ற	கக	சொல்லின்	உ	போற்றரும்	கங
ஈந்தனன்	கஉ	சொல்லார்	எ	மண்மிசை	எ
உணர்ந்த	க	சோராத	ச	மயக்குமிருவினை	கரு
உண்ணின்று	கச	சோர்வின்றி	கஉ	மருள்சுரந்து	கச
உதிப்பன	அ	ஞானங்கனிந்த	க0	மற்றொரு	க
உறுபெரும்	ச	தவந்தரும்	கச	மன்னிய	ங
எய்தற்கு	ச	தற்கச்சமணரும்	கரு	முனியார்	ச
எனக்குற்ற	உ	தன்னை	கச	முன்னைவினை	க
என்னைப்புவியில்	உ	தாழ்வொன்று	ச	மொய்த்த	ரு
என்னையும்	கக	திக்குற்ற	ரு	மொழியை	ங
ஓதிய	கங	தெரிவுற்ற	கஉ	வண்மையினாலும்	கக
கடலளவாய	க	தேரார்மறை	கக	வருத்தும்	ங
கட்டப்பொருளை	கச	நயந்தரு	க	வளரும்பிணி	கச
கண்டவர்	க	நயவேன்	சு	வளர்ந்த	கரு
கண்டுகொண்	கங	நல்லார்	கஉ	வாழ்வற்றது	க0
கதிக்கு	ச	நாட்டிய	க	வைப்பாய	ரு
கருத்திற்புகுந்து	கஉ	நிகரின்றி	அ		
கலிமிக்க	கங	நிதியை	ரு		

இயற்பாச் செய்யுளகராதி.

அ	பக்கம்.
அசஞ்சிவந்தகண்ணினராய்	௮௫
அகைப்பில்மனிசரை	௬௯
அங்கற்கிடரின்றி	௩௯
அடர்பொன்முடியானை	௮௫
அடிச்சகடம்சாடி அரவாட்டி	௬௮
அடிமூன்றிலிவ்வுலகம்	௧௮
அடியால்படிகடந்தமுத்தோ	௭௯
அடியால்முன் கஞ்சனைச்செற்று	௨௯
அடியும்படிகடப்ப	௭
அடிவண்ணம்தாமரை	௩௨
அடுத்தகடும்பகைஞற்கு	௧௫
அடைக்கலத்தோங்கு	௭௦
அடைந்ததரவணைமேல்	௩௬
அடைந்தவருவினையோடு	௧௨
அதுநன்றுஇதுதீதென்று	௪௨
அதுவோநன்றென்று	௮௬
அத்தியூரான்புள்ளையூர்வான்	௩௦
அமுதென்றும்தேனென்றும்	௨௮
அமைக்கும்பொழுதுண்டே	௮௧
அயர்ப்பாயயராப்பாய்	௮௩
அயல்நின்றவல்வினையை	௧௨
அரணாம்நமக்கென்றும்	௬௧
அரவமடல்வேழம்	௧௨
அரன்நாரணன்நாமம்	௯
அரியதெளிதாகும்ஆற்றலால்	௨௧
அரியபுலனைந்தடக்கி	௧௧
அரியனயாமின்றுகாண்கின்றன	௫௯
அருகும்சுவடும்தெரிவுணரோம	௭௭
அருளாதொழியுமே	௩௩
அருளார்திருச்சக்கரத்தால்	௯௨
அருள்புரிந்தசிந்தை	௨௫
அலரெடுத்தவுந்தியான்	௬௩
அவயமெனநினைந்துவந்த	௮௧
அவரவர்தாம்தாம்	௭
அவரிவரென்றில்லைஅரவணை	௧௯
அவரிவரென்றில்லைஅனங்கவேள்	௫௧
அவற்கடிமைப்பட்டேன்	௩௯
அவனுமிவனுமுவனும்	௮௦
அவனென்னையாளி	௪௮
அவனேஅருவரையால்	௩௭
அவன்கண்டாய்நன்னெஞ்சே	௨௧
அவன்தார்	௯௨
அழகன்றேயாழியாற்கு	௩௨
அழகியான்தானே அரியுருவன்	௬௭
அழகுமறிவோமாய்	௮௦
அழைக்குங்கருங்கடல்	௯௫
அழைப்பன் திருமாலை	௨௬
அழைப்பன் திருவேங்கடத்தானை	௬௯
அளப்பருந்தன்மைய	௯௯
அறிந்தைந்துமுள்ளடக்கி	௧௯
அறியார்சமணர் அயர்த்தார்	௪௫
அறியுமுலகெல்லாம்	௮
அறிவென்னும்தாள்கொளுவி	௩௨
அன்பாவாய் ஆரமுதமாவாய்	௫௧
அன்பாழியானை	௧௬
அன்போதகளியா	௧௮
அன்றதுகண்டஞ்சாத	௧௯
அன்றிவ்வுலகம்அளந்த	௩௫
அன்றேநங்கண்காணும்	௭௯
அன்னஞ்செல்வீரும்	௯௧
ஆ	
ஆங்காரவாரமதுகேட்டு	௬௫
ஆங்குமலரும்குவியும்	௩௯
ஆட்பார்த்துழிதருவாய்	௫௧
ஆமாறறிவுடையராவது	௮௧
ஆமேஅமரர்க்கு	௧௧
ஆய்ந்தவருமறையோன்	௬௧
ஆய்ந்துகொண்டுஆதி	௫௬
ஆய்ந்துரைப்பனாயிரம்பேர்	௨௭
ஆரானுமாதானும்செய்ய	௭௯
ஆரேதுயருழந்தார்	௩௬
ஆரேயறிவார்அனைத்துலகும்	௫௩
ஆலநிழற்கீழ்அறநெறியை	௬௯
ஆளமர்வென்றி	௧௫
ஆறியவன்பில்	௯
ஆறுசடைக்கரந்தான்	௬௬
இ	
இங்கில்லைபண்டுபோல்	௮௦
இசைந்தஅரவமும்	௩௯
இசைமின்கள்தூதென்று	௯௨
இடங்கைவலம்புரிநின்றார்ப்ப	௨௭

இ	பக்கம்.
இடங்கொண்டநெஞ்சத்து	அசு
இடந்ததுபூமியெடுத்ததுகுன்றம்	க0
இடமாவதுஎன்னெஞ்சம்	ருஉ
இடம்போய்விரிந்து	சுக
இடம்வலமேழ்பூண்ட	ச0
இடரார்படுவார்	கரு
இதுகண்டாய்நன்னெஞ்சே	உசு
இதுவிலங்கையீடழிய	சஎ
இப்போதும்இன்னும்	அஎ
இமஞ்சூழ்மலையும்	சங
இமயப்பெருமலைபோல்	ருரு
இமையாதகண்ணால்	சு
இயல்வாகஈன்துழாயானடி	எ
இயல்வாயினவஞ்சநோய்	சுக
இருக்கார்மொழியால்	சுஎ
இருநால்வர்ஈரைந்து	சஎ
இருந்தண்கமலத்	உஉ
இருள்விரிந்தாலன்ன	ருசு
இலைதுணைமற்றென்னெஞ்சே	சரு
இல்லறமல்லேல்	ருங
இவையவன்கோயில்	ஙரு
இவையன்றேநல்ல	எசு
இவையாபிலவாய்திறந்து	சசு
இளைப்பாயிளையாப்பாய்	எசு
இறைமுறையான்சேவடி	அச
இறையாய்நிலனாகி	ஙசு
இறையும்நிலனும்	சு
இறையெம்பெருமான்	ங0
இறையோஇரக்கினும்	சுஎ
இனிதென்பர்காமம்	உஉ
இனிநின்றுநின்பெருமை	அரு
இனியவன்மாயன்	சக
இனியறிந்தேன்ஈசற்கும்	ருசு
இனியார்புகுவார்	கசு
இன்றாகநாளையேயாக	சரு
இன்றாவறிகின்றேனல்லேன்	உசு
இன்றேகழல்கண்டேன்	ஙக
இன்னன்னதூதெம்மை	சுக
ஈ	
ஈர்வனவேலுமஞ்சேலும்	ருசு
ஈனச்சொல்லாயினுமாக	எஉ
உ	
உகந்துன்னைவாங்கி	கசு
உகப்புருவன்தானே	சஎ
உணரவொருவர்க்கு	அ0
உணரிலுணர்வரியன்	சக
உணர்ந்தாயமறைநான்கும்	உச

உ	பக்கம்.
உணர்வாராருன்பெருமை	கச
உண்ணாதுறங்காதுஉணர்வுறும்	சுஎ
உயிர்கொண்டுடலொழிய	ருரு
உய்த்துணர்வென்னும்	சங
உரைக்கிலோர்சுற்றத்தார்	அசு
உரைமேற்கொண்டு	அ
உலகமும்ஊழியுமாழியும்	ஙசு
உலகுபடைத்துண்டவெந்தை	எங
உலகும்உலகிறந்தவூழியும்	கங
உலாகின்றகெண்டை	சுசு
உளதென்றிறுமாவார்	உங
உளனாயநான்மறையின்	சக
உளன்கண்டாய்நன்	ருரு
உளன்கண்டாய்விண்	ஙசு
உளன்கண்டாய்வெள்	கஎ
உள்நாட்டுத்தேசன்றே	அசு
உள்ளிலுமுள்ளம்	அரு
உறங்குகின்றகன்மங்கள்	சுசு
உறங்கண்டாய்நன்னெஞ்சே	உஎ
உற்றுவணங்கித்தொழுமின்	ங0
ஊ	
ஊராதொழியேன்	கூரு
ஊரும்வரியரவம்	க0
ஊழிகளாய்உலகேழும்	சுஅ
ஊழிதோறூழியோவாது	எச
ஊனக்குரம்பையின்	கசு
எ	
எங்கள்பெருமான்இமையோர்	ங0
எங்கோல்வளைமுதலா	சுக
எண்மர்பதினொருவர்	கஉ
எமக்குயாம்விண்ணாட்டுக்கு	அஉ
எமக்கென்றிருநிதியம்	உங
எய்தான்மராமரமேழும்	ஙஎ
எரிகொள்செந்நாயிறு	எ0
எழில்கொண்டமின்னுக்கொடி	சஉ
எழுவதும்மீண்டேபடுவதும்	எஉ
எழுவார்விடைகொள்வார்	அ
எளிதிலிரண்டடியும்	கக
எனக்காவார்ஆரொருவரே	கசு
எனக்காவார்வண்	ரு0
என்பிறவிதீர	கஅ
என்றுகடல்கடைந்தது	ரு
என்றுமொருநாள்	அரு
என்றும்புன்வாடை	சுங
என்றும்மறந்தறியேன்என்	ருரு
,, ,, ஏழ்பிறப்பு	உரு

எ	பக்கம்.
என்னிலைமையெல்லாம்	க0ரு
என்னின்மிகுபுகழார்	எகூ
என்னெஞ்சமேயான்என்	௯0
என்னெஞ்சமேயான்	ருக
என்னொருவர்மெய்யென்பர்	கூ
ஏ	
ஏறேழும்வென்றுஅடர்த்த	உகூ
ஏற்றான்புள்ளூர்ந்தான்	கச
ஏன்றேனடிமை	ருகூ
ஒ	
ஒண்ணுதல்மாமை	கூரு
ஒருங்கிருந்தநல்வினையும்	ருக
ஒருபேருந்தியிருமலர்த்தவிசில்	அஅ
ஒன்றும்மறந்தறியேன்	கூ
ஒன்றுண்டுசெங்கண்மால்	அ௯
ஓ	
ஓஓஉலகினதியல்வே	எரு
ஓத்தின்பொருள்முடிவும்	உ௯
ஓரடியும்சாடுதைத்த	கஎ
ஓருருவனல்லேலொளியுருவம்	உரு
ஓர்த்தமனத்தராய்	சக
க	
கடமாயினகள்கழித்து	கூ௯
கடல்கொண்டெழுந்தது	கூ0
கடிதுகொடுநாகம்	உகூ
கடைநின்றமரர்கழல்தொழுது	ககூ
கடைநின்றமரர் ,,	ருக
கண்டுவணங்கினார்க்கு	ருச
கண்டேன்திருமேனி	உஅ
கண்ணும்கமலம்	௯உ
கண்ணும்செந்தாமரை	கூச
கதவிக்கதஞ்சிறந்த	உகூ
கதவுமனமென்றும்	ருச
கதைப்பொருள்தான்	சஅ
கதையின்பெருஞ்பொருளும்	உகூ
கயலோநுமகண்கள்	ருகூ
கருவிருத்தக்குழி	ருஎ
கலந்தானென்னுள்ளத்து	ருச
கலந்துநலியுங்கடுந்துயரை	அச
கலந்துமணியிமைக்கும்	சஉ
கல்லாதவர் இலங்கை	௬0
கல்லும்கனைகடலும்	அச
கவியினார்கைபுனைந்து	சஉ
கழலெடுத்துவாய்மடித்து	ககூ
கழலொன்றெடுத்து	கக
கழல்தலமொன்றே	கூக

	பக்கம்.
கழல்தொழுதும்வா	௯உ
களிறுமுகில்குத்த	ச0
கற்றபபிணைமலர்	கஎ
கா	
காசினியோராதாம்வாழ	எ௯
காணக்கழிகாதல்	உரு
காணபபுகிலறிவு	எஅ
காணலுறுகின்றேன்	சக
காண்காணெனவிரும்பும்	கூரு
காண்கின்றனகளும்	௬அ
காபபுமறந்தறியேன்	ருரு
காபபுன்னையுன்னக்கழியும்	௯ச
காய்ந்திருளைமாற்றி	௯கூ
காரார்வரைக்கொங்கை	கூ0
காரிகையார்நிறைகாபபவர்	கூ0
காரேற்றிருள்செகிலேற்றின்	கூஅ
கார்கலந்தமேனியான்	அஎ
காலேபொதத்திரிந்து	எகூ
காலையெழுந்துஉலகம்	க௯
காலைவெய்யோற்குமுன்	எக
காவியும்நீலமும்வேலும்	கஎ
கு	
குழற்கோவலர்மடபபாவை	ருஎ
குறிபபில்கொண்டுநெறி	எச
குறிபபெனக்குக்கோட்டியூர்	சஅ
குறைகொண்டுநான்முகன்	கூரு
குறையாகவெஞ்சொற்கள்	உஅ
குன்றனையகுற்றம்செயினும்	க0
குன்றொன்றினைய	ச0
கூ	
கூற்றமும்சாரா	ரு0
கை	
கைதைசேர்பூம்பொழில்	ரு
கையகனலாழி	கூரு
கையவலம்புரியும்	கூ
கொ	
கொடுங்காற்சிலையர்	கூ௯
கொண்டதுலகம்	உ0
கொண்டல்தான்மால்வரைதான்	அஉ
கொண்டானையல்லால்	கரு
கொண்டுகுடங்கால்மேல்	சகூ
கொண்டுவளர்க்கக்குழவி	௯0
கொம்பார்தழைகை	கூ0
கோ	
கோலப்பகல்களிறு	க௯
கோவலனாய்ஆநிரைகள்	கூக
கோவாகிமாநிலங்காத்து	உஅ

	பக்கம்.
ச	
சரணுமறைபயந்த	௧௫
சா	
சாயால்கரியானை	௭௮
சார்ந்தகடுதேய்பப	௪௦
சார்வுநமக்கென்றும்	௪௫
சி	
சிதைக்கின்றதாழி	௬௨
சிலம்புஞ்செறிகழலும்	௪௨
சிறந்தவென்சிந்தையும்	௫௪
சிறந்தார்க்கெழுதுணையாம்	௨௫
சிறியார்பெருமை	௨௨
சினமாமதகளிற்றின்	௫௬
சின்மொழிநோயோ	௬௦
சீ	
சீரரசாண்டுதன்செங்கோல்	௬௯
சீராரும்மாடத்திருக்கோவலூர்	௫௧
சீரார்திருவெழுகூற்றிருக்கை	௮௮
சீரால்பிறந்துசிறப்பால்	௭௮
சு	
சுருக்காகவாங்கிச்சுலாவிநின்	௨௫
சுருங்குறிவெண்ணெய்	௭௧
சூ	
சூட்டாயநேமியான்	௮௪
சூட்டுநன்மாலைகள்	௬௦
சூதாவதுஎன்னெஞ்சத்	௩௨
சூழ்கின்றகங்குல்சுருங்கா	௬௮
சூழ்ந்தடியார்வேண்டின	௭௮
சூழ்ந்ததுழாயலங்கல்	௫௭
செ	
செக்கர்மாமுகிலுடுத்து	௭௫
செவிக்கின்பமாவதுவும்	௩௨
செவிவாய்கண்மூக்கு	௭
செழுநீர்த்தடத்து	௩௭
செற்றதுவும்சேராவிரணி	௫௭
செற்றெழுந்துதீவிழித்த	௧௭
சென்றங்குவெந்நரகில்	௭௯
சென்றதிலங்கை	௨௧
சென்றநாள்செல்லாத	௫௫
சென்றால்குடையாம்	௧௨
சென்றுவணங்குமினோ	௪௯
சே	
சேமம்செங்கோனருளே	௮௧
சேயனணியன்சிறியன்	௩[illegible]
சேர்ந்ததிருமால்	௫௩
சொ	
சொல்லிற்குறையில்லை	௭௮
சொல்லுந்தனையும்	௧௪
ஞா	
ஞாலம்பனிப்பச்செறித்து	௩௮
ஞானத்தால்நன்குணர்ந்து	௧௮
த	
தங்காமுயற்றியவாய்	௮௭
தடாவியவம்பும்	௩௮
தண்ணந்துழாய்வளை	௬௧
தமக்கடிமைவேண்டுவார்	௮௦
தமராவார்யாவர்க்கும்	௩௩
தமருகந்ததுஎவ்வுருவம்	௧௧
தமருள்ளம்தஞ்சை	௨௭
தரித்திருந்தேனாகவே	௩௨
தலைபபெய்துயான்உன்	௭௧
தவஞ்செய்துநான்முகனால்	௪௬
தவஞ்செயதுநான்முகனே	௨௮
தழும்பிருந்தசார்ங்கநாண்	௮
தளர்ந்தும்முறிந்தும்	௬௮
தற்பென்னைத்தானறியான்	௩௫
தனக்கடிமைபட்டது	௨௦
தனிநெஞ்சம்முன்னவர்	௩௭
தனிவளாசெங்கோல்	௩௯
தா	
தாமுளரேதம்முள்ளம்	௨௦
தாமபாலாபபுண்டாலும்	௭௮
தாழ்சடையும்நீள்முடியும்	௫௯
தாழ்ந்துவரங்கொண்டு	௨௧
தாளால்உலகமஅளந்த	௪௮
தாளால்சகடம்உதைத்து	௫௮
தானேதனககுவமன்	௫௬
தானேதனித்தோன்றல்	௭௯
தானொருவனாகி	௩௫
தி	
திங்களம்பிள்ளைபுலம்ப	௬௯
திசையும்திசையுறு	௬
திண்பூஞ்சுடர்நுதி	௩௮
திரிகின்றதுவடமாருதம்	௬௪
திரிந்ததுவெஞ்சமத்து	௨௦
திருக்கண்டேன்	௫௧
திருநின்றபக்கம்	௩௨
திருமகளும்மண்மகளும்	௧௦
திருமங்கைநின்றருளும	௨௩
திருமாலுருவொக்கும்	௭௧
திறம்பாதெனனெஞ்சமே	௧௭
திறம்பிற்றினியறிந்தேன்	௨௯
திறம்பேன்மின்கண்டீர்	௩௨
தீ	
தீவினைக்கருநஞ்சை	௭௧

து	பக்கம்.
துஞ்சாமுனிவரும்அல்லாத	௭௨
துணிந்ததுசிந்தை	௨௨
துணைநாள்பெருங்கிளையும்	௮௯
துழாநெடுஞ்சூழிருளென்று	௯௨
தெ	
தெரிந்துணர்வொன்று	௮௯
தெளிதாகவுள்ளத்தை	௬
தெளிந்தசிலாதலத்தின்	௫௮
தே	
தேசுந்திறலுந்திருவும்	௩௨
தேருங்கால்தேவன்	௪௪
தேவராய்நிற்கும்அத்தேவும்	௫௧
தை	
தையல்நல்லார்கள்குழாங்கள்	௭௰
தொ	
தொகுத்தவரத்தனாய்	௪௪
தொடரெடுத்தமால்யானை	௧௬
தொட்டபடையெட்டும்	௪௫
தொழிலெனக்குத்தொல்லை	௫௪
தொழுதால்பழுதுண்டே	௫௪
தொடுதுமலர்கொண்டு	௧௨
தோ	
தோளவளையல்லால்தொழா	௧௫
தோளிரண்டெட்டேழும்	௨௫
ந	
நகரமருள்புரிந்து	௬
நகரிழைத்துநித்திலத்து	௧௮
நயவேன்பிறர்பொருளை	௧௩
நலமேவலிதுகொல்	௪௰
நவியும்நரகனைவீட்டிற்றும	௯௬
நல்லார்நவில்குருகூர்	௭௨
நவின்றுரைத்தநாவலர்கள்	௨௬
நளிர்மதிச்சடையனும்	௭௫
நன்கோதும்நால்வேதத்துள்	௫௨
நன்மணிவண்ணனூர்	௫௰
நன்றுபிணிமூப்பு	௧௪
நா	
நாகத்தணைக்குடந்தை	௪௮
நாக்கொண்டுமானிடம்	௫௩
நாடிலும்நின்னடியே	௧௯
நாமம்பலசொல்லி	௩௨
நாம்பெற்றநன்மையும்	௨௫
நாராயணன்என்னையாளி	௪௯
நாராயணன்படைத்தான்	௪௪
நாவாயிலுண்டே	௧௭
நாழாலமர்முயன்ற	௭௭
நானிலம்வாய்க்கொண்டு	௧௧

நா	பக்கம்
நான்கூறுங்கூற்றுவது	௮௨
நான்முகனைநாராயணன்	௪௪
நான்றமுலைத்தலைநஞ்சுண்டு	௭
நி	
நிகழ்ந்தாய்பால்பொன்பசு	௪௭
நிலைமன்னுமென்னெஞ்சம்	௪௬
நிறங்கரியன்செய்ய	௨௪
நிறமுயர்கோலமும்	௯௪
நிறம்வெளிதுசெய்து	௫௮
நினைத்திறைஞ்சிமானிடவர்	௮௨
நினைத்துலகிலார்தெளிவார்	௪௫
நினைப்பன்திருமாலை	௨௩
நின்றதோர்பாதம்	௨௫
நின்றபெருமானே நீரேற்று	௩௭
நின்றுநிலமங்கை	௮
நின்றுமிருந்தும்கிடந்தும்	௮௰
நின்றெதிராயநிரைமணி	௪௧
நீ	
நீயன்றுலகளந்தாய்	௨௨
நீயன்றேநீரேற்று	௩௭
நீயன்றேயாழ்துயரில்	௭௭
நீயுந்திருமகளும்	௧௯
நீயேயுலகெல்லாம்	௪௯
நீலத்தடவரைமேல்	௯௩
நு	
நுமக்கடியோமென்றென்று	௭௭
நெ	
நெஞ்சால்நினைப்பரிய	௪௧
நெறிகாட்டிநீக்குதியோ	௭௭
நெறியாருகுழல்கற்றை	௨௪
நெறிவாசல்தானேயாய்	௯
நே	
நேர்ந்தேனடிமை	௨௮
ப	
பகலிராவென்பதுவும்	௮௯
பகல்கண்டேன்நாரணனை	௨௮
படிகண்டறிதியே	௧௯
படிவட்டத்தாமரை	௫௫
படையாரும்வாள்கண்ணார்	௧௫
பணிந்துயர்ந்தபௌவ	௫௬
பணிந்தேன்திருமேனி	௨௯
பண்டிப்பெரும்பதியை	௨௰
பண்டும்பலபலவீங்கிருள்	௯௫
பண்டெல்லாம்வேங்கடம்	௫௬
பண்புரிந்தநான்மறையோன்	௧௧
பதிப்பகைஞர்க்காற்றாது	௫௫

ப	பக்கம்.
பதியமைந்துநாடி	உக
பயின்றதுஅரங்கம்திருக்கோட்டி	உ௪
பரனுமவனுதல்பாவிப்பர்	அ௪
பரிசுநறுமலரால்	கஅ
பலதேவரேத்தப்படிகடந்தான்	௪௬
பலபலவூழிகளாயிடும்	௫௩
பழிபாவங்கையகற்றி	உ௰
பழுதாகாதொன்றறிந்தேன்	௫௫
பழுதேபலபகலும்	எ
பனிப்பியல்வாகவுடைய	௫அ
பா	
பாட்டும்முறையும்	௫௩
பாரளவும்	௫
பாருண்டான்பாருமிழ்ந்தான்	அக
பார்த்தகடுவன்சுனைநீர்	௯௬
பார்த்தோரெதிரிதாநெஞ்சே	எஅ
பாலகனுய்ஆலிலைமேல்	௩௫
பாலன்தனதுருவாய்	க௪
பாலாழிநீகிடக்கும்	அ௰
பாலிற்கிடந்ததுவும்	௪௪
பால்வாய்ப்பிறைப்பிள்ளை	௯உ
பாற்கடலும்வேங்கடமும்	௯௫
பி	
பிடிசேர்களிறளித்தபேராளா	கஎ
பிதிருமனமிலேன்	௫௪
பிரான்உன்பெருமை	க௬
பிரானென்றுநாளும்	உஉ
பிரிந்தொன்றநோக்காது	அஉ
பிழைக்கமுயன்றோமோ	அக
பிறப்பிறப்புமூப்புப்பிணி	அ௬
பின்துரக்கும்காற்றிழந்த	அ௪
பின்னலருநரகம்	உ௯
பின்னின்றுதாயிரப்ப	உஅ
பு	
புகழ்வாய்பழிப்பாய்நீ	க௪
புகழ்வோம்பழிப்போம்	எ௬
புகுந்திலங்கும்அந்திப்பொழு	௪௩
புகுமதத்தால்வாய்பூசி	௪௰
புணர்மருதினூடுபோய்	க௯
புரிந்துமதவேழம்	௩எ
புரிந்துமலரிட்டு	௪௯
புரியொருகைபற்றி	௯
புலக்குண்டலப்புண்டரீகத்	௯௬
புலம்புங்கனகுரல்	எ௰
புவியுமிருவிசும்பும்	அ௫
புனமோபுனத்தயலே	௯௰

பூ	பக்கம்.
பூவையும்காயாவும்	அ௫
பெ	
பெயருங்கருங்கடலே	க௩
பெரியவரைமார்பில்	௩அ
பெருகுமதவேழம்	உஎ
பெருங்கேழலார்தம்	௬௪
பெருவில்பகழிக்குறவர்கை	௯௰
பெற்றதாய்நீயே	எஎ
பெற்றம்பிணைமருதம்	௩அ
பெற்றார்தளைகழல	அ
பே	
பேசுவார்எவ்வளவுபேசுவர்	௩௪
பேணலமில்லாவரக்கர்	எக
பேய்ச்சிபாலுண்டபெருமானை	௩௫
பேரேவரப்பிதற்றலல்லால்	கஉ
பேர்கின்றதுமணிமாமை	௫க
பேர்த்தனைமாசகடம்	க௩
பேர்ந்தொன்றநோக்காது	அ௩
பேறொன்றுமுன்னறியேன்	உ௬
பொ	
பொய்ந்நின்றஞானமும்	௫எ
பொருகோட்டோரேனமாய்	௬
பொருப்பிடையேநின்றும்	௪௰
பொருளாலமருலகம்	உ௩
பொலிந்திருண்டகார்வானில்	௩அ
பொன்திகழுமேனி	கஎ
பொன்னுலகில்வானவரும்	௯௬
போ	
போதறிந்துவானரங்கள்	உஎ
போதானஇட்டிறைஞ்சி	௫உ
ம	
மகனாகக்கொண்டெடுத்தாள்	உக
மகனொருவர்க்கல்லாத	௪௰
மகிழலகொன்றேபோல்	கக
மகிழ்ந்ததுசிந்தைதிருமாலே	உஉ
மங்குல்தோய்சென்னி	௪௯
மடநெஞ்சமென்றும்	௬௪
மண்ணிற்பொடிபூசி	௪௰௫
மண்ணுண்டும்பேய்ச்சிமுலை	௪உ
மண்ணும்மலையும்மறிகடல்	௯
மண்ணுலகம்ஆளேனே	உ௯
மதிக்கண்டாய்நெஞ்சே	உ௪
மதித்தாய்போய்நான்கின்	௪௫
மயங்கவலம்புரிவாய்வைத்து	௬
மருங்கோதம்மோதும்	அ௩
மருந்தும்பொருளும்	௯க

ம	பக்கம்.
மலர்ந்தேயொழிந்தில	சுஅ
மலைகொண்டுமத்தாவரவால்	சுரு
மலைமுகடுமேல்வைத்து	ருஎ
மலையாமைமேல்வைத்து	ரு0
மலையாற்குடைகவித்து	அ
மலையேழும்மாநிலங்களேழும்	உச
மற்றாரியலாவார்வானவர்	உ0
மற்றுத்தொழுவார்	சஎ
மனக்கேதஞ்சாரமதுசூதன்	ருக
மனத்துள்ளான்மாகடல்நீர்	ருக
மனத்துள்ளான்வேங்கடத்தான்	உக
மனமாசுதீரும்	க0
மனமாளுமோரைவர்	அஉ
மன்னியபல்பொறிசேர்	சுசு
மன்னுமணிமுடிநீண்டு	ருசு
மா	
மாடேவரப்பெறுவராமென்றே	அரு
மாணிக்கங்கொண்டு	எ0
மாண்பாவித்துஅந்நான்று	அஉ
மாமுதலடிப்போதொன்று	எச
மாயோன்வடதிருவேங்கட	ருஅ
மாலுங்கருங்கடலே	எ
மாலேநெடியோனே	ரு0
மாலேபடிச்சோதிமாற்றேல்	அரு
மாலையரியுருவன்பாதமலர்	உச
மால்தான்புகுந்த	சஎ
மாறாயதானவனைவள்ளுகிர்	சசு
மாற்பால்மனஞ்சுழிப்ப	ருரு
மீ	
மீனென்னுங்கம்பில்	அச
மு	
முடிந்தபொழுதில்குறவாணர்	சஉ
முதலாந்திருவுருவம்	அரு
முதலாவார்மூவரே	எ
முந்துற்றநெஞ்சே	எசு
முயற்றிசுமந்தெழுந்து	எசு
முயன்றுதொழுநெஞ்சே	ருஅ
முரணவலித்தொலைதற்கு	க0
முலையோமுழுமுற்றும்	சுசு
முள்ளிச்செழுமலரோ	சு0
முன்னுலகமுண்டுமிழ்ந்தாய்	ருரு
மெ	
மெய்தெளிந்தாரென்செய்யார்	ருசு
மெல்லியலாக்கைக்கிருமி	சுச

மே	பக்கம்.
மேகங்களோவுரையீர்	கஉ
மேல்நான்முகன்அரனையிட்ட	சஅ
மை	
மைப்படிமேனியும்	எக
யா	
யாதானுமொன்றறியில்	அ0
யாதானுமோராக்கையில்	எட
யாமேயருவினையோம்	எஎ
யானுமென்னெஞ்சும்	எசு
யானேதவஞ்செய்தேன்	உஎ
வ	
வகைசேர்ந்தநல்நெஞ்சம்	அக
வகையறுநுண்கேள்வி	க0
வகையாலவனி இரந்து	உட
வகையால்மதியாது	சஎ
வடிக்கோலவாள்நெடுங்கண்	உஅ
வடிவார்முடிகோட்டி	ருச
வணங்குந்துறைகள்	எஉ
வண்டுகளோவம்மின்	சுசு
வண்ணஞ்சிவந்துள	சுஎ
வந்தித்தவனைவழிநின்ற	உக
வந்துதைத்தவெண்டிரை	ருரு
வயிறழலவாளுருவிவந்தானை	கஎ
வரங்கருதித்தன்னைவணங்காத	உஅ
வரத்தால்வலிநினைந்து	கசு
வரவாறொன்றில்லையால்	அரு
வருங்காலிருநிலனும்	ருஅ
வரைகுடைதோள்காம்பாக	கரு
வரைச்சந்தனக்குழம்பும்	டஎ
வலமாகமாட்டாமைதானாக	ருஉ
வலிமிக்கவாளெயிற்று	உசு
வலியமனநினைந்து	அக
வழக்கன்றுகண்டாய்	உ0
வழக்கொடுமாறுகொளன்று	எஅ
வழித்தங்குவல்வினையை	அரு
வழிநின்றுநின்னைத்தொழு	கரு
வளைவாய்த்திருச்சக்கரத்து	சுஅ
வன்காற்றறையவொருங்கே	ருரு
வா	
வாசகஞ்செய்வதுநம்பரமே	சுஎ
வாயவனையல்லதுவாழ்த்தாது	சு
வாய்ப்போதுவொப்ப	அக
வாய்மொழிந்துவாமனனாய்	ருரு
வாராயினமுலையாளிவள்	சுரு
வாரிசுருக்கிமதக்களிறு	கக
வால்வெண்ணிலவுலகார	சுஅ

வா	பக்கம்.
வாழிப்ரகாலன்	௮௮
வாழும்வகையறிந்தேன்	௩௮
வாழ்த்தியவனடியை	௮௬
வாழ்த்தியவாயராய்	௪௯
வாழ்த்துகவாய்காண்ககண்	௪௫
வானோக்கித்தீயாய்	௧௬
வானுலவுதீவளிமாகடல்	௪௮
வானோமறிகடலோ	௮௯
வி	
விண்ணகரம்வெஃகா	௯௧
வித்துமிடவேண்டுங்கொல்லோ	௪௭
வியலிடமுண்டபிரானார்	௬௬
விரலொடுவாய்தோய்ந்த	௮
விரும்பிவிண்மண்ணளந்த	௯௪
விரைந்தடைமின்மேலொரு	௫௪
விலைக்காட்படுவர்	௫௦
விளரிக்குரலன்றில்	௭௦

வி	பக்கம்.
வினையார்தருமுயலும்	௮௨
வினையாலடர்ப்படார்	௧௩
வீ	
வீசும்சிறகால்பறத்திர்	௬௭
வீடாக்கும்பெற்றியறியாது	௪௫
வீற்றிருந்துவிண்ணாள	௫௫
வெ	
வெற்பென்றிருஞ்சோலை	௨௫
வெற்பென்றவேங்கடம்பாடி	௪௬
வெற்பென்றவேங்கடம்பாடும்	௪௦
வே	
வேங்கடமும்விண்ணகரும்	௧௫
வேங்கடமேவிண்ணோர்	௫௦
வேதனைவெண்புரிநூலனை	௬௧
வேந்தராய்விண்ணவராய்	௫௪
வை	
வைப்பன்மணிவிளக்கா	௫௦
வையம்தகளியா	௫

இயற்பாச் செய்யுளகராதி ஸம்பூர்ணம்.

ஶ்ரீ

திருவரங்கத்தமுதனார் வைபவம்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍇𑌤𑍍𑌰𑌹𑌸𑍍𑌤𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑍂𑌤𑌂 𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌾𑌮𑍃𑌤𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇 ।
𑌕𑌵𑌿𑌂 𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌃 𑌕𑍂𑌰𑍇𑌶𑌪𑌦𑌸𑌂𑌶𑍍𑌰𑌿𑌤𑌂 ॥

మీనేహస్తసముద్భూతం శ్రీరంగామృతమాశ్రయే।
కవిం ప్రపన్నగాయత్ర్యాః కూరేశపదసంశ్రితం॥

மீநேஹஸ்தஸமுத்பூதம் ஸ்ரீரங்காம்ருதமாஶ்ரயே-
கவிம்ப்ரபந்நகாயத்ர்யா: கூரேஶபதஸம்ஶ்ரிதம்.

இவ்வமுதனார், ஒரு பங்குனி மாஸத்தில் ஹஸ்தநக்ஷத்திரத்தில் வேயர் குடியில் திருவவதரித்து, திருவரங்கம்பெரியகோயிலில் இருந்ததுவே ஹேது வாக 'பெரியகோயில்நம்பி' என்று பிரசித்தராய் வாழ்ந்திருந்தார். இவர் ஸகல சாஸ்திரங்களையும் அதிகரித்து மிக வல்லவராய், தமக்குக் குலக்ரமமாகக்கிடைத்த ஸந்நிதிபௌரோஹித்யத்தையும் புராணபடநத்தையும் பெற்று மிகவும்ராஜஸராய்ச் செருக்குடன்வாழ்ந்துவரும்நாளிலே, லோகோத்தாரணார்த்தமாகத்திருவனந்தாழ்வானது திருவவதாரமாய்த் திருவவதரித்த எம்பெருமானார் தமது நிர்ஹேதுககிருபாகடாக்ஷத்தாலே இவரைத் திருத்திபபணிகொள்ளத் திருவுள்ளமாய்க் கூரத்தாழ்வானுக்குநியமிக்க, ஆழ்வானும் அவரை அநுவர்த்தித்து ஞானச்சுடர்கொளுத்தி எம்பெருமானார்திருவடிக்கீழ்ச் சேர்க்க, எம்பெருமானாரும் அவரைக் குளிரக் கடாக்ஷித்தருளி ஆழ்வானை ஆச்ரயிக்கும்படி நியமிக்க, அவரும் ஆழ்வானை ஆச்ரயித்துத் தத்வஹிதபுருஷார்த்தங்களை ஸந்தேஹ விபரீதமில்லாமல் தெளிந்து ஆத்மஆத்மீயஙகளை அந்தஆசார்யன்திருவடிகளிலே ஸமர்ப்பித்து ந்யஸ்தபரராயிருந்தார்.

பின்பு, இவர், ஸகலசாஸ்த்ரஸங்கரஹமான திருமந்த்ரத்தின் ஸாரார்த்தமும் மயர்வறமதிநலம்அருளப்பெற்ற ஆழ்வார்கள்அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களின் ஸாரார்த்தமும் நம்மாழ்வார் க்ருபாகடாக்ஷபாத்ரபூதரான மதுரகவியாழ்வார் தமது பேச்சுக்களாலும் அநுஷ்டாநங்களாலும் ப்ரகாசிப்பித்ததும் நம்மாழ்வாரால் நாதமுனிகளுக்கு உபதேசிக்கப்பெற்றதும் அந்நாதமுனிகள் முதல் ஓராண்வழியாய் வந்ததும் பரமரஹஸ்யமுமான சரமபர்வநிஷ்டையைத் தாம் நிரந்தரமாக அநுஸந்தித்துக்கொண்டிருக்கையாலே அது தமதுஉள்ளடங்காமையாலும், 'சேதநர்க்கு இவ்வர்த்தஜ்ஞாநம் ஸுலபமாக நெஞ்சிற்படும்படியாகவேணும்' என்ற தம்முடைய பரமக்ருபையாலும், தமது ஆசார்யரது ப்ரீதிக்கு ஹேதுவாகத் தமக்கு ப்ராசார்யரான ஸ்ரீ உடையவர் விஷயமாக ஒன்று இரண்டு பிரபந்தம் இட்டருளி அவற்றை எம்பெருமானார் ஸந்நிதியிற் கொண்டுபோய்வைக்க, எம்பெருமானாரும் அவற்றை அவிழ்த்து

முழுவதும் திருக்கண்சார்த்தியருளி அவை தமது திருவுள்ளத்துக்கு இசைந்திரா மையாலே அவற்றைக் கிழித்துப்போகட்டு, அவரைப்பார்த்து 'உமக்கு ப்ர பந்தம் சொல்லவேணுமென்கிற நிர்ப்பந்தம் உண்டாகில், உமக்கு உத்தேச்ய ரான ஆழ்வானும் நமக்கு உத்தேச்யரான ஆழ்வார்களும் உகந்தருளின நிலங் களும் முதலியோர்களுடைய ஸம்பந்தம் தோற்றுமாறு ஒரு ப்ரபந்தம் செய் யும்' என்று நியமித்தருள, இவரும் 'அப்படியே செய்கிறேன்' என்று அந்த ஆஜ்ஞையைச் சிரஸாவஹித்து 'எம்பெருமானார் திருவடிகளிலே ப்ரேமமுடைய வர்களுக்கு ஸாவித்ரிபோலே இது நித்யம் அநுஸந்தாநவிஷயமாகவேணும்' என்று பாட்டுக்கள்தோறும் இராமாநுச னென்னுந் திருநாமத்தை யிட்டு நூற்றெட்டுப்பாட்டாக அருளிச்செய்து எம்பெருமானார்ஸந்நிதியிலே சே வித்து 'இத்தைத் திருச்செவிசார்த்தவேணும்' என்று பிரார்த்தித்து அநு மதிபெற்றுக் கூரத்தாழ்வான் முதலானோர் பேரோலக்கமாக இருக்கிற அங்குத் தானே இந்த ப்ரபந்தத்தை விண்ணப்பஞ்செய்ய, எம்பெருமானார் மற்றை முதலிகளோடும் திருச்செவிசார்த்திச் சிரக்கம்பஞ்செய்து போரவுகந்த ருளி, தம்திருவடிகளில் ஸம்பந்தமுடையார்க்கெல்லாம் அந்தப்பிரபந்தத்தை அன்றுதொடங்கி என்றும் நித்யாநுஸந்தேயமாம்படி கற்பித்தருளிய தல் லாமல், அவரதுவாக்கு அமுதவாக்காயிருந்தமையால் அவர்க்கு 'அமுதன்' என்ற திருநாமத்தையும் ப்ரஸாதித்தருளி மிகவும் கடாக்ஷித்தருளினார். ஆகை யால், அதுமுதல் பெரியகோயில்நம்பிக்கு 'திருவரங்கத்தமுதனார்' என்று திருநாமமும், இதற்கு 'ப்ரபந்நகாயத்ரீ' என்று திருநாமமும் உண்டாயின.

பிறகு நமது பூர்வாசார்யர்கள் விஷயகௌரவத்தால் இந்தப்பிரபந்தத்தை ஆழ்வார்களருளிச்செயல்களோடு ஸமமாகச் சேர்த்தருளினார்கள்.

எந்தாதைகூரேச ரிணையடியோன் வாழியே
    எழில்மூங்கிற்குடிவிளங்க இங்குவந்தோன் வாழியே *
நந்தாமலெதிராசர்நலம்புகழ்வோன் வாழியே
    நம்மதுரகவிநிலையை நண்ணினோன் வாழியே *
பைந்தாமவரங்கர்பதம்பற்றினோன் வாழியே
    பங்குனியிலத்தநாள் பாருதித்தோன் வாழியே *
அந்தாதிநூற்றெட்டும் அருளினோன் வாழியே
    அணியரங்கத்தமுதனா ரடியிணைகள் வாழியே.

திருவரங்கத்தமுதனார்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்த
ப்ரபந்நகாயத்ரி என்னும்

இராமாநுச நூற்றந்தாதி.

தனியன்கள்.

(வேதப்பிரான்பட்டர் அருளிச்செய்தவை.)

இருவிகற்பநேரிசைவெண்பா.

முன்னைவினையகல மூங்கிற்குடியமுதன் *
பொன்னங்கழற்கமலப்போதிரண்டும் *—என்னுடைய
சென்னிக்கணியாகச்சேர்த்தினேன் * தென்புலத்தார்க்கு
என்னுக்கடவுடையேன்யான் ?

கட்டளைக்கலித்துறை.

நயந்தருபேரின்பமெல்லாம் † பழுதின்றிநண்ணினர்பால் *
சயந்தருகீர்த்திஇராமாநுசமுனிதாளிணைமேல் *
உயர்ந்தகுணத்துத்திருவரங்கத்தமுதோங்கும் * அன்பால்
இயம்புங்கலித்துறையந்தாதியோதவிசைநெஞ்சமே !

† 'பழுதென்றுநண்ணினன்பால்' என்பதும் பாடம்.

**

† [இனியென்குறைநமக்கு? எம்பெருமானார் ‡ திருநாமத்தால் *
முனிதந்தநூற்றெட்டுச்சாவித்திரியென்னுநுண்பொருளை *
கனிதந்தசெஞ்சொற்கலித்துறையந்தாதிபாடித்தந்தான் *
புனிதன்திருவரங்கத்தமுதாகியபுண்ணியனே.]

[அமுதனாரருளிச்செய்ததாவது அவரபிப்ராயத்தாலே அபிநிவேச
முடைய ஆஸ்திகர் அருளிச்செய்ததாவது.]

சொல்லின்தொகைகொண்டு உனதடிப்போதுக்குத்தொண்டுசெய்யும்*
நல்லன்பரேத்தும்உன்நாமமெல்லாமென்தன்நாவினுள்ளே *
அல்லும்பகலுமமரும்படிநல்கு அறுசமயம்
வெல்லும்பரம! * இராமானுச! இதுஎன்விண்ணப்பமே.

(பைரவிராகம் நபகதாளம்.)

↓↓ பூமன்னுமாது பொருந்தியமார்பன் * புகழ்மலிந்த
பாமன்னுமாற னடிபணிந்துய்ந்தவன் * பல்கலையோர்
தாம்மன்னவந்தவிராமானுசன் சரணாரவிந்தம்
நாம்மன்னிவாழ * நெஞ்சே! சொல்லுவோம்அவன்நாமங்களே. (க)

(தோடிராகம் - நபகதாளம்.)

↓↓ கள்ளார்பொழில்தென்னரங்கன் * கமலப்பதங்கள்நெஞ்சிற்
கொள்ளா மனிசரைநீங்கி * குறையற்பிரானடிக்கீழ்
விள்ளாதவன்பனிராமானுசன்மிக்கசீலமல்லால்
உள்ளாதுஎன்னெஞ்சு * ஒன்றறியேன்எனக்குற்றபேரியல்வே (உ)

பேரியல்நெஞ்சே! அடிபணிந்தேனுன்னை * பேய்ப்பிறவிப்
பூரியரோடுள்ள சுற்றம்புலத்தி * பொருவருஞ்சீர்
ஆரியன்செம்மையிராமானுசமுனிக்கன்புசெய்யும்
சீரியபேறுடையார் * அடிக்கீழ்என்னைச்சேர்த்ததற்கே. (ங)

என்னைப்புவியில் ஒருபொருளாக்கி * மருள்சுரந்த
முன்னைப்பழவினைவேரறுத்து * ஊழிமுதல்வனையே
பன்னப்பணித்தவிராமானுசன் பரன்பாதமுமென்
சென்னித்தரிக்கவைத்தான் * எனக்கேதுஞ்சிதைவில்லையே. (ச)

எனக்குற்றசெல்வ மிராமானுசனென்று * இசையகில்லா
மனக்குற்றமாந்தர் பழிக்கில்புகழ் * அவன்மன்னியசீர்
தனக்குற்றவன்பரவன்திருநாமங்கள்சாற்றுமென்பா
இனக்குற்றங்காணகில்லார் * பத்தியேய்ந்த § இயல்விதென்றே. (ரு)

† இத்தனியன் மிகுதியும் வழங்குவதில்லை. ‡ 'திருப்பெயரால்' என்ற பாடம் வெண்டளைக்குச் சேரும். § 'இயலிதென்றே' என்றும் பாடம்

இயலும்பொருளும் இசையத்தொடுத்து * ஈன்கவிகளன்பால்
மயல்கொண்டுவாழ்த்துமிராமானுசனை * மதியின்மையால்
பயிலுங்கவிகளிற்பத்தியில்லாதவென்பாவிநெஞ்சால்
முயல்கின்றனன் * அவன்தன்பெருங்கீர்த்திமொழிந்திடவே. (௬)

(பியாகடை. ராகம் - ரூபகதாளம்.)

‡‡ மொழியைக்கடக்கும் பெரும்புகழான் * வஞ்சமுக்குறும்பாம்
குழியைக் † கடக்கும்நம் கூரத்தாழ்வான்சரண்கூடியபின் *
பழியைக்கடத்துமிராமானுசன்புகழ்பாடி அல்லா
வழியைக்கடத்தல் * எனக்குஇனியாதும்வருத்தமன்றே. (௭)

வருத்தும்புறவிருள்மாற்ற * எம்பொய்கைப்பிரான்மறையின்
குருத்தின்பொருளையும் செந்தமிழ்தன்னையும்கூட்டி * ஒன்றத்
திரித்தன்றெரித்ததிருவிளக்கைத் தன்திருவுள்ளத்தே
இருத்தும்பரமன் * இராமானுசன்எம்மிறையவனே. (௮)

இறைவனைக்காணும் இதயத்திருள்கெட * ஞானமென்னும்
நிறைவிளக்கேற்றிய பூதத்திருவடிதாள்கள் * நெஞ்சத்து
உறையவைத்தாளுமிராமானுசன்புகழோதும்நல்லோர்
மறையினைக்காத்து * இந்தமண்ணகத்தே மன்னவைப்பவரே. (௯)

மன்னியபேரிருள்மாண்டபின் * கோவலுள்மாமலராள்
தன்னொடுமாயனைக் கண்டமைகாட்டும் * தமிழ்த்தலைவன்
பொன்னடிபோற்றுமிராமானுசற்குஅன்புபூண்டவர்தாள்
சென்னியிற்சூடும் * திருவுடையார்என்றுஞ்சீரியரே. (௧௦)

(கல்யாணிராகம் - ரூபகதாளம்.)

சீரியநான்மறைச்செம்பொருள் * செந்தமிழாலளித்த
பாரியலும்புகழ்ப்பாண்பெருமாள் * சரணாம்பதுமத்
தாரியல்சென்னியிராமானுசன்தன்னைச்சார்ந்தவர்தம்
‡ காரியவண்மை * என்னாற்சொல்லொணாதுஇக்கடலிடத்தே. (௧௧)

இடங்கொண்டகீர்த்தி மழிசைக்கிறைவன் * இணையடிப்போது
அடங்குமிதயத்திராமானுசன் * அம்பொற்பாதமென்றும்
கடங்கொண்டிறைஞ்சுந்திருமுனிவர்க்கன்றிக்காதல்செய்யாத
திடங்கொண்டஞானியர்க்கே * அடியேன்அன்புசெய்வதுவே. (௧௨)

† 'கடத்தும்எம்' என்பர் சிலர். ‡ 'காரியல்வண்மை' என்பதும் பாடம்.

செய்யும்பசுந்துளவத்தொழில்மாலையும் * செந்தமிழில்
பெய்யும் மறைத்தமிழ்மாலையும் * பேராதசீரரங்கத்து
ஐயன்கழற்கணியும்பரன்தாளன்றியாதரியா
மெய்யன் * இராமாநுசன்சரணேகதிவேறெனக்கே. (கந)

கதிக்குப்பதறி * வெங்கானமுங்கல்லுங்கடலுமெல்லாம்
கொதிக்கத் தவஞ்செயுங்கொள்கையற்றேன்*கொல்லிகாவலன்சொல்
பதிக்குங்கலைக்கவிபாடும்பெரியவர்பாதங்களே
துதிக்கும்பரமன் * இராமாநுசனென்னைச்சோர்விலனே. (கச)

சோராதகாதல் பெருஞ்சுழிப்பால் * தொல்லைமாலையொன்றும்
பாராதவனைப் பல்லாண்டென்றுகாப்பிடும் * பான்மையன்தாள்
பேராதவுள்ளத்திராமாநுசன்தன்பிறங்கியசீர்
சாராமனிசரைச்சேரேன் * எனக்கென்னதாழ்வினியே ? (கரு)

(நாதநாமக்ரியைராகம் - ரூபகதாளம்.)

↓↓ தாழ்வொன்றில்லாமறைதாழ்ந்து * தலமுழுதுங்கலியே
ஆள்கின்றநாள்வந்து அளித்தவன்காண்மின் * அரங்கர்மௌலி
சூழ்கின்றமாலையைச்சூடிக்கொடுத்தவள்தொல்லருளால்
வாழ்கின்றவள்ளல் * இராமாநுசனென்னும்மாமுனியே. (கசு)

முனியார்துயரங்கள்முந்திலும் * இன்பங்கள்மொய்த்திடினும்
கனியார்மனம் கண்ணமங்கைநின்றானை * கலைபரவும்
தனியானையைத்தண்தமிழ்செய்தநீலன்தனக்கு உலகில்
இனியானை * எங்களிராமாநுசனைவந்தெய்தினரே. (கஎ)

எய்தற்கரியமறைகளை * ஆயிரமின்தமிழால்
செய்தற்குஉலகில்வரும் சடகோபனை * சிந்தையுள்ளே
பெய்தற்கிசையும்பெரியவர்சீரைஉயிர்களெல்லாம்
உய்தற்குஉதவும் * இராமாநுசனம்முறுதுணையே. (கஅ)

உறுபெருஞ்செல்வமும் தந்தையுந்தாயும் * உயர்குருவும்
வெறிதருபூமகள்நாதனும் * மாறன்விளங்கியசீர்
நெறிதருஞ்செந்தமிழாரணமேயென்று இந்நீணிலத்தோர்
அறிதரநின்ற * இராமாநுசனெனக்காரமுதே. (கசு)

ஆரப்பொழில்தென்குருகைப்பிரான் * அமுதத்திருவாய்
ஈரத்தமிழின் இசையுணர்ந்தோர்கட்கு * இனியவர்தம்
சீரைப்பயின்றுய்யுஞ்சீலங்கொள்நாதமுனியை நெஞ்சால்
வாரிப்பருகும் * இராமாநுசனென்தன்மாநிதியே. (உ0)

(சங்கராபரணராகம் - ரூபகதாளம்.)

நிதியைப்பொழியும் முகிலென்று * நீசர்தம்வாசல்பற்றித்
துதிகற்றுலகில் துவள்கின்றிலேன் இனி * தூய்நெறிசேர்
எதிகட்கிறைவன் யமுனைத்துறைவனிணையடியாம்
கதிபெற்றுடைய * இராமானுசனென்னைக்காத்தனனே. (உக)

கார்த்திகையானும் கரிமுகத்தானும் * கனலும்முக்கண்
மூர்த்தியும் மோடியும்வெப்பும்முதுகிட்டு * மூவுலகும்
பூத்தவனே! என்றுபோற்றிடவாணன்பிழைபொறுத்த
தீர்த்தனையேத்தும் * இராமானுசனென்தன்சேமவைப்பே. (உஉ)

வைப்பாயவான்பொருளென்று * நல்லன்பர்மனத்தகத்தே
எப்போதும்வைக்கும் இராமானுசனை * இருநிலத்தில்
ஒப்பாரில்லாத † வுறுவினையேன்வஞ்சநெஞ்சில்வைத்து
முப்போதும்வாழ்த்துவன்*என்னாம்இது அவன்மொய்புகழ்க்கே? (உஙு)

மொய்த்தவெந் ‡ தீவினையால் பல்லுடல்தொறும்மூத்து * அதனால்
எய்த்தொழிந்தேன் முனநாள்களெல்லாம் * இன்றுகண்டுயர்ந்தேன்
பொய்த்தவம்போற்றும்புலைச்சமயங்கள்நிலத்தவியக்
கைத்தமெய்ஞ்ஞானத்து*இராமானுசனென்னும்கார்தன்னையே. (உச)

காரேய்கருணையிராமானுச! * இக்கடலிடத்தில்
ஆரேயறிபவர் நின்னருளின்தன்மை? * அல்லலுக்கு
நேரேயுறைவிடம்நான்வந்துநீயென்னையுய்த்தபின் உன்
சீரேயுயிர்க்குயிராய் * அடியேற்குஇன்று தித்திக்குமே. (உரு)

திக்குற்றகீர்த்தி யிராமானுசனை * என்செய்வினையாம்
மெய்க்குற்றம்நீக்கி விளங்கியமேகத்தை * மேவுநல்லோர்
எக்குற்றவாளர் எதுபிறப்பேதியல்வாகநின்றோர்
அக்குற்றமப்பிறப்பு * அவ்வியல்வேநம்மையாட்கொள்ளுமே. (உசு)

கொள்ளக்குறைவற்றிலங்கி * கொழுந்துவிட்டோங்கியவுன்
வள்ளல்தனத்தினால் வல்வினையேன்மனம்நீபுகுந்தாய் *
வெள்ளைச்சுடர்விடும்உன்பெருமேன்மைக்கிழுக்கிதென்று
தள்ளுற்றிரங்கும் * இராமானுச! என்தனிநெஞ்சமே. (உஎ)

நெஞ்சிற்கறைகொண்டகஞ்சனைக் காய்ந்தநிமலன் * நங்கள்
பஞ்சித்திருவடிப் பின்னைதன்காதலன் * பாதம்நண்ணா
வஞ்சர்க்கரியவிராமானுசன்புகழன்றி என்வாய்
கொஞ்சிப்பரவகில்லாது * என்னவாழ்வின்றுகூடியதே! (உஅ)

---

† 'அருவினையேன்' என்பதும் பாடம். ‡ 'தீவினையார்' என்பதும் பாடம்.

கூட்டும்விதி † யென்றுகூடுங்கொலோ? * தென்குருகைப்பிரான்
பாட்டென்னும் வேதப்பசுந்தமிழ்தன்னை * தன்பத்தியென்னும்
வீட்டின்கண்வைத்தஇராமாநுசன்புகழ்மெய்யுணர்ந்தோர்
ஈட்டங்கள்தன்னை * என்நாட்டங்கள்கண்டின்பமெய்திடவே (௪௯)

இன்பந்தருபெருவீடுவந்தெய்திலென்? * எண்ணிறந்த
துன்பந்தருநிரயம்பலசூழிலென்? * தொல்லுலகில்
மன்பல்லுயிர்கட்கிறைவன்மாயனெனமொழிந்த
அன்பன் அனகன் * இராமாநுசன்என்னையாண்டனனே. (௫0)

(பந்துவராளிராகம் - ரூபகதாளம்)

↓↓ ஆண்டுகள்நாள்திங்களாய் * நிகழ்காலமெல்லாம்மனமே!
ஈண்டுபல்யோனிகள்தோறுழல்வோம் * இன்றோரெண்ணின்றியே
காண்தகுதோளண்ணல்தென்னத்தியூரர்கழலிணைக்கீழ்ப்
பூண்டவன்பாளன் * இராமாநுசனைப்பொருந்தினமே. (௫௧)

பொருந்தியதேசும் பொறையும்திறலும் * புகழும்நல்ல
திருந்தியஞானமும் செல்வமும்சேரும் * செறுகலியால்
வருந்தியஞாலத்தைவண்மையினால் வந்தெடுத்தளித்த
அருந்தவன் * எங்களிராமாநுசனையடைபவர்க்கே. (௫௨)

அடையார்கமலத்து அலர்மகள்கேள்வன் * கையாழியென்னும்
படையோடுநாந்தகமும் படர்தண்டும் * ஒண்சார்ங்கவில்லும்
புடையார்புரிசங்கமும்இந்தப்பூதலங்காப்பதற்கென்று
இடையே * இராமாநுசமுனியாயினஇந்நிலத்தே. (௫௩)

நிலத்தைச்செறுத்துண்ணும் நீசக்கலியை * நினைப்பரிய
பலத்தைச்செறுத்தும் பிறங்கியதில்லை * என்பெய்வினைதென்
புலத்திற்பொறித்தவப்புத்தகச்சும்மைபொறுக்கியபின்
நலத்தைப்பொறுத்தது * இராமாநுசன் தன்நயப்புகழே. (௫௪)

நயவேன்ஒருதெய்வம் நானிலத்தே * சிலமானிடத்தைப்
புயலேயெனக் கவிபோற்றிசெய்யேன் * பொன்னரங்கமென்னில்
மயலேபெருகுமிராமாநுசன்மன்னுமாமலர்த்தாள்
அயரேன் * அருவினையென்னையெவ்வாறின்றடர்ப்பதுவே? (௫௫)

அடல்கொண்டநேமியனாருயிர் ‡ நாதன் * அன்றாரணச்சொற்
கடல்கொண்டவொண்பொருள்கண்டளிப்ப * பின்னும்காசினியோர்
இடரின்கண்வீழ்ந்திடத்தானுமவ்வொண்பொருள்கொண்டு அவர்பின்
படருங்குணன் * எம்மிராமாநுசன் தன்படியிதுவே. (௫௬)

---

† 'இன்று' என்றும் பாடம். ‡ 'நாதனென்று' என்பதும் பாடம்.

படிகொண்டகீர்த்தி இராமாயணமென்னும்பத்திவெள்ளம் *
குடிகொண்டகோயில் இராமானுசன்குணங்கூறும் * அன்பர்
கடிகொண்டமாமலர்த்தாள்கலந்துள்ளங்கனியுநல்லோர்
அடிகண்டுகொண்டுகந்து * என்னையுமாளவர்க்காக்கினரே. (௩௭)

ஆக்கியடிமைநிலைப்பித்தனை என்னையின்று * அவமே
போக்கிப் புறத்திட்டதென்பொருளாமுன்பு? * புண்ணியர்தம்
வாக்கிற்பிரியா இராமானுச! நின்னருளின் வண்ணம்
நோக்கில்தெரிவரிதால் * உரையாய்இந்தநுண்பொருளே. (௩௮)

பொருளும்புதல்வரும்பூமியும் * பூங்குழலாருமென்றே
மருள்கொண்டிளைக்கும் நமக்குநெஞ்சே! * மற்றுளார்தரமோ?
இருள்கொண்டவெந்துயர்மாற்றித்தன்னீறில்பெரும்புகழே
தெருளும்தெருள்தந்து * இராமானுசன்செய்யும்சேமங்களே. (௩௯)

சேமநல்வீடும் பொருளும்தருமமும் * சீரியநற்
காமமுமென்றிவை நான்கென்பர் * நான்கினுங்கண்ணனுக்கே
ஆமதுகாமம்அறம்பொருள்வீடிதற்கென்றுரைத்தான்
† வாமனன்சீலன் * இராமானுசன்இந்தமண்மிசையே. (௪௰)

([illegible])

மண்மிசை யோனிகள்தோறும்பிறந்து * எங்கள்மாதவனே
கண்ணுறநிற்கிலும் காணகில்லா * உலகோர்களெல்லாம்
அண்ணலிராமானுசன்வந்துதோன்றியஅப்பொழுதே
நண்ணருஞானம்தலைக்கொண்டு * நாரணற்காயினரே. (௪௧)

ஆயிழையார்கொங்கைதங்கும் * அக்காதலளற்றழுந்தி
மாயுமென்னாவியை வந்தெடுத்தானின்று * மாமலராள்
நாயகனெல்லாவுயிர்கட்குநாதனரங்கனென்னும்
தூயவன் * தீதிலிராமானுசன்தொல்லருள்சுரந்தே. (௪௨)

சுரக்குந்திருவுமுணர்வும் * சொலப்புகில்வாயமுதம்
பரக்கும் இருவினைபற்றறவோடும் * படியிலுள்ளீர்!
உரைக்கின்றனன்உமக்குயான் அறஞ்சீறுமுறுகலியைத்
துரக்கும்பெருமை * இராமானுசனென்றுசொல்லுமினே. (௪௩)

சொல்லார் தமிழொருமூன்றும் * சுருதிகள்நான்குமெல்லை
யில்லாவறநெறி யாவும்தெரிந்தவன் * எண்ணருஞ்சீர்
நல்லார்பரவுமிராமானுசன்திருநாமம்நம்பிக்
கல்லார்அகலிடத்தோர் * எதுபேறென்றுகாமிப்பரே. (௪௪)

† 'வாமனன்சீலை' என்பதும் பாடம்.

பேறொன்றுமற்றில்லை நின்சரணன்றி * அப்பேறளித்தற்கு
ஆறொன்றுமில்லை மற்றச்சரணன்றி * என்றுஇப்பொருளைத்
தேறுமவர்க்குமெனக்குமுனைத்தந்தசெம்மை சொல்லால்
கூறும்பரமன்று * இராமானுச! மெய்ம்மைகூறிடிலே. (௪௫)

கூறுஞ்சமயங்களாறுங்குலைய * குவலயத்தே
மாறன்பணித்த மறையுணர்ந்தோனை * மதியிலியேன்
தேறும்படியென்மனம்புகுந்தானைத் திசையனைத்தும்
ஏறுங்குணனை * இராமானுசனை இறைஞ்சினமே. (௪௬)

இறைஞ்சப்படும்பரன் ஈசனரங்கனென்று * இவ்வுலகத்து
அறஞ்செப்பு மண்ணலிராமானுசன் * என்னருவினையின்
திறஞ்செற்றிரவும்பகலும்விடாது என்தன்சிந்தையுள்ளே
நிறைந்தொப்பறவிருந்தான் * எனக்காருநிகரில்லையே. (௪௭)

நிகரின்றிநின்ற என்நீசதைக்கு * † நின்னருளின்கணன்றிப்
புகலொன்றுமில்லை அருட்குமஃதேபுகல் * புன்மையிலோர்
பகரும்பெருமையிராமானுச! இனிநாம்பழுதே
அகலும்பொருளென்? * பயனிருவோமுக்குமானபின்னே. (௪௮)

ஆனதுசெம்மையறநெறி * பொய்ம்மையறுசமயம்
போனதுபொன்றி இறந்ததுவெங்கலி * பூங்கமலத்
தேனதிபாய்வயல்தென்னரங்கன்கழல்சென்னிவைத்துத்
தானதில்மன்னும் * இராமானுசன்இத்தலத்துதித்தே. (௪௯)

உதிப்பனவுத்தமர்சிந்தையுள் * ஒன்னலர்நெஞ்சமஞ்சிக்
கொதித்திட மாறிநடப்பன * கொள்ளைவன்குற்றமெல்லாம்
பதித்தஎன்புன்கவிப்பாவினம்பூண்டனபாவுதொல்சீர்
எதித்தலைநாதன் * இராமானுசன்தனிணையடியே. (௫௰)

அடியைத்தொடர்ந்தெழுமைவர்கட்காய் * அன்றுபாரதப்போர்
முடியப் பரிநெடுந்தேர்விடுங்கோனை * முழுதுணர்ந்த
அடியர்க்கமுதமிராமானுசன்என்னையாளவந்து இப்
படியிற்பிறந்தது * மற்றில்லைகாரணம்பார்த்திடிலே. (௫௧)

பார்த்தான்அறுசமயங்கள்பதைப்ப * இப்பார்முழுதும்
போர்த்தான் புகழ்கொண்டு புன்மையினேனிடைத்தான்புகுந்து *
தீர்த்தானிருவினைதீர்த்தரங்கன்செய்ய தாளிணையோடு
ஆர்த்தான் * இவையெம்பிராமானுசன்செய்யுமற்புதமே. (௫௨)

---

† 'உன்' என்றபாடம் கட்டளைக்கலித்துறையிலக்கணத்துக்குச் சேரும்.

அற்புதன் செம்மையிராமானுசன் * என்னையாளவந்த
கற்பகம் கற்றவர்காமுறுசீலன் * கருதரிய
பற்பல்லுயிர்களும்பல்லுலகுயாவும்பரனதென்னும்
நற்பொருள்தன்னை * இந்நானிலத்தேவந்துநாட்டினனே. (ருங)

நாட்டிய நீசச்சமயங்கள்மாண்டன * நாரணனைக்
காட்டியவேதம் களிப்புற்றது * தென்குருகைவள்ளல்
வாட்டமிலாவண்தமிழ்மறைவாழ்ந்தது மண்ணுலகில்
ஈட்டியசீலத்து * இராமானுசன்தனியல்வுகண்டே. (ருச)

கண்டவர்சிந்தைகவரும் * கடிபொழில்தென்னரங்கன்
தொண்டர்குலாவு மிராமானுசனை * தொகையிறந்த
பண்தருவேதங்கள்பார்மேல்நிலவிடப்பார்த்தருளும்
கொண்டலைமேவித்தொழும் * குடியாமெங்கள் † கோக்குடியே. (ருரு)

கோக்குலமன்னரை மூவெழுகால * ஒருகூர்மழுவால்
போக்கியதேவனைப் போற்றும்புனிதன் * புவனமெங்கும்
ஆக்கியகீர்த்தியிராமானுசனையடைந்தபின் என்
வாக்குரையாது * என்மனம்நினையாது இனிமற்றொன்றையே. (ருசு)

மற்றொருபேறுமதியாது * அரங்கன்மலரடிக்குஆள்
உற்றவரே தனக்குஉற்றவராக்கொள்ளும்உத்தமனை *
நல்தவர்போற்றுமிராமானுசனை இந்நானிலத்தே
பெற்றனன் * பெற்றபின் மற்றறியேன்ஒருபேதைமையே. (ருஎ)

பேதையர் வேதப்பொருளிதென்றுன்னி * பிரமம்நன்றென்று
ஓதி மற்றெல்லாவுயிருமஃதென்று * உயிர்கள்மெய்விட்டு
ஆதிப்பரனொடொன்றாமென்றசொல்லுமவ்வல்லலெல்லாம்
வாதில்வென்றான * எம்மிராமானுசன்மெய்ம்மதிக்கடலே. (ருஅ)

கடலளவாய திசையெட்டினுள்ளும் * கலியிருளே
மிடைதருகாலத்து இராமானுசன் * மிக்கநான்மறையின்
சுடரொளியாலவ்விருளைத்துரந்திலனேல் உயிரை
யுடையவன் * நாரணனென்றறிவாரில்லையுற்றுணர்ந்தே. (ருகூ)

உணர்ந்தமெய்ஞ்ஞானியர் யோகந்தொறும் * திருவாய்மொழியின்
மணந்தரு மின்னிசைமன்னுமிடந்தொறும் * மாமலராள்
புணர்ந்தபொன்மார்வன்பொருந்தும்பதிதொறும்புக்குநிற்கும்
குணந்திகழ்கொண்டல் * இராமானுசன்எங்குலக்கொழுந்தே. (சு0)

---

† 'கோக்குலமே' என்றும் பாடம்.

(ஸஹாநாராகம் - ரூபகதாளம்.)

கொழுந்துவிட்டோடிப்படரும் வெங்கோள்வினையால் * நிரயத்து
அழுந்தியிட்டேனை வந்தாட்கொண்டபின்னும் * அருமுனிவர்
தொழுந்தவத்தோனெம்இராமானுசன் † தொல்புகழ்சுடர்மிக்
கெழுந்தது * அத்தால்நல்லதிசயங்கண்டது இருநிலமே. (சுக)

இருந்தேனிருவினைப் பாசங்கழற்றி * இன்றுயானிறையும்
வருந்தேன் இனி எம்இராமானுசன் * மன்னுமாமலர்த்தாள்
பொருந்தாநிலையுடைப்புன்மையினோர்க்கொன்றுநன்மைசெய்யாப்
‡ பெருந்தேவரைப்பரவும் * பெரியோர்தங்கழல்பிடித்தே. (சுஉ)

பிடியைத்தொடரும் களிறென்ன * யானுன்பிறங்கியசீர்
அடியைத்தொடரும்படி நல்கவேண்டும் * அறுசமயச்
செடியைத்தொடரும் மருள்செறிந்தோர்சிதைந்தோடவந்து இப்
படியைத்தொடரும் * இராமானுச! மிக்கபண்டிதனே! (சுங)

பண்தருமாறன்பசுந்தமிழ் * ஆனந்தம்பாய்மதமாய்
விண்டிட எங்களிராமானுசமுனிவேழம் * மெய்ம்மை
கொண்டநல்வேதக்கொழுந்தண்டமேந்திக்குவலயத்தே
மண்டிவந்தேன்றது * வாதியர்காள்! உங்கள்வாழ்வற்றதே. (சுச)

வாழ்வற்றது தொல்லைவாதியர்க்கு * என்றும்மறையவர்தம்
தாழ்வற்றது தவம்தாரணிபெற்றது * தத்துவநூல்
கூழற்றது குற்றமெல்லாம்பதித்தகுணத்தினர்க்கு அந்
நாழற்றது * நம்இராமானுசன்தந்தஞானத்திலே. (சுரு)

ஞானங்கனிந்த நலங்கொண்டு * நாள்தொறும்நைபவர்க்கு
வானங்கொடுப்பதுமாதவன் * வல்வினையேன்மனத்தில்
ஈனங்கடிந்தஇராமானுசன்தன்னையெய்தினர்க்கு அத்
தானங்கொடுப்பது * தன்தகவென்னுஞ்சரண்கொடுத்தே (சுசு)

சரணமடைந்த தருமனுக்கா * பண்டுநூற்றுவரை
மரணமடைவித்தமாயவன் * தன்னைவணங்கவைத்த
கரணமிவையுமக்கன்றென்றிராமானுசன் உயிர்கட்கு
அரணங்கமைத்திலனேல் * அரணார்மற்றிவ்வாருயிர்க்கே? (சுஎ)

ஆரெனக்கின்று நிகர்சொல்லில்? * மாயனன்றைவர்தெய்வத்
தேரினில் செப்பியகீதையின் * செம்மைப்பொருள்தெரியப்
பாரினிற்சொன்னஇராமானுசனைப்பணியும்நல்லோர்
சீரினிற்சென்றுபணிந்தது * என்ஆவியும்சிந்தையுமே. (சுஅ)

---

† 'தன்புகழ்' என்பதும் பாடம். ‡ 'பெருந்தேவனை' என்றும் பாடம்.

சிந்தையினோடுகரணங்கள் யாவும்சிதைந்து * முன்னாள்
அந்தமுற்றாழ்ந்ததுகண்டு * அவையென்தனக்கன்றருளால்
தந்தவரங்கனும்தன்சரண்தந்திலன் தானதுதந்து *
எந்தையிராமானுசன்வந்தெடுத்தனனின்றென்னையே. (௬௯)

என்னையும்பார்த்து என்னியல்வையும்பார்த்து*எண்ணில்பல்குணத்த
உன்னையும்பார்க்கில் அருள்செய்வதேநலம் * அன்றியென்பால்
பின்னையும்பார்க்கில்நலமுளதே ? உன்பெருங்கருணை
தன்னையென்பார்ப்பர் ? * இராமானுச ! உன்னைச்சார்ந்தவரே. (௭௦)

(தந்யாசிராகம் - ரூபகதாளம்.)

சார்ந்ததுஎன்சிந்தை உன்தாளிணைக்கீழ் * அன்புதான்மிகவும்
கூர்ந்தது அத்தாமரைத்தாள்களுக்கு * உன்தன்குணங்களுக்கே
தீர்ந்ததுஎன்செய்கைமுன்செய்வினைநீ † செய்வினையதனால்
பேர்ந்தது * வண்மையிராமானுச ! எம்பெருந்தகையே ! (௭௧)

கைத்தனன் தீயசமயக்கலகரை * காசினிக்கே
உய்த்தனன் தூயமறைநெறிதன்னை * என்றுன்னியுள்ளம்
நெய்த்தவன்போடிருந்தேத்தும்நிறைபுகழோருடனே
வைத்தனன்என்னை * இராமானுசன்மிக்கவண்மைசெய்தே. (௭௨)

வண்மையினாலும் தன்மாதகவாலும் * மதிபுரையும்
தண்மையினாலும் இத்தாரணியோர்கட்கு * தான்சரணாய்
உண்மைநல்ஞானமுரைத்தஇராமானுசனையுன்னும்
திண்மையல்லா லெனக்கில்லை * மற்றோர்நிலைதேர்ந்திடிலே. (௭௩)

தேரார்மறையின்திறமென்று * மாயவன்தீயவரைக்
கூராழிகொண்டுகுறைப்பது * கொண்டலனையவண்மை
ஏரார்குணத்தெம்மிராமானுசனவ்வெழில்மறையில்
சேராதவரைச்சிதைப்பது * அப்போதுஒருசிந்தைசெய்தே. (௭௪)

செய்த்தலைச்சங்கம் செழுமுத்தமீனும் * திருவரங்கர்
கைத்தலத்தாழியும் சங்கமுமேந்தி * நங்கண்முகப்பே
‡ மொய்த்தலைத்துன்னைவிடேனென்றிருக்கினும்நின்புகழே
மொய்த்தலைக்கும்வந்து*இராமானுச ! என்னைமுற்றும்நின்றே. (௭௫)

(செஞ்சுருட்டிராகம் - ரூபகதாளம்.)

↓↓ நின்றவண்கீர்த்தியும் நீள்புனலும் * நிறைவேங்கடப்பொற்
குன்றமும்வைகுந்தநாடும் குலவியபாற்கடலும் *
உன்தனக்கெத்தனையின்பந்தரும்உன்னிணைமலர்த்தாள்
என்தனக்குமது * இராமானுச ! இவையீந்தருளே. (௭௬)

---

† 'செய்வனவதனால்' என்பதும் பாடம். ‡ 'மெய்த்தலத்து' என்பதும்பாடம்.

ஈந்தனனீயாதவின்னருள் * எண்ணில்மறைக்குறும்பைப்
பாய்ந்தனன் அம்மறைப்பல்பொருளால் * இப்படியனைத்தும்
† ஏய்ந்தனன்கீர்த்தியினாலென்வினைகளை வேர்பறியக்
காய்ந்தனன் * வண்மையிராமாநுசற்குஎன்கருத்தினியே? (௭௭)

கருத்திற்புகுந்து உள்ளில்கள்ளங்கழற்றி * கருதரிய
வருத்தத்தினால் மிகவஞ்சித்து * நீயிந்தமண்ணகத்தே
திருத்தித்திருமகள்கேள்வனுக்காக்கியபின் என்னெஞ்சில்
பொருத்தப்படாது * எம்மிராமாநுச! மற்றோர்பொய்ப்பொருளே. ()

பொய்யைச்சுரக்கும் பொருளைத்துரந்து * இந்தப்பூதலத்தே
மெய்யைப்புரக்கும் இராமாநுசன்நிற்க * வேறுநம்மை
உய்யக்கொள்ளவல்லதெய்வமிங்குயாதென்றுலர்ந்தவமே
ஐயப்படாநிற்பர் * வையத்துள்ளோர்நல்லறிவிழந்தே. (௭௯)

நல்லார்பரவும் இராமாநுசன் * திருநாமம்நம்ப
வல்லார்திறத்தை ‡ மறவாதவர்கள்யவர் * அவர்க்கே
எல்லாவிடத்திலுமென்றுமெப்போதிலுமெத்தொழும்பும்
சொல்லால்மனத்தால் * கருமத்தினால் செய்வன்சோர்வின்றியே.(௮0)

(கல்யாணிராகம் - ரூபகதாளம்.)

சோர்வின்றி உன்றன்துணையடிக்கீழ் * தொண்டுபட்டவர்பால்
சார்வின்றிநின்றவெனக்கு * அரங்கன்செய்யதாளிணைகள்
பேர்வின்றியின்றுபெறுத்தும்இராமாநுச! இனியுன்
சீரொன்றியகருணைக்கு * இல்லைமாறுதெரிவுறிலே. (௮௧)

தெரிவுற்றஞானம் செறியப்பெறாது * வெந்தீவினையால்
உருவற்ற § ஞானத்து உழல்கின்ற வென்னை * ஒருபொழுதில்
பொருவற்றகேள்வியனாக்கிநின்றான்என்னபுண்ணியனோ?
தெரிவுற்றகீர்த்தி * இராமாநுசனென்னுஞ்சீர்முகிலே. (௮௨)

சீர்கொண்டுபேரறஞ்செய்து * நல்வீடு $ செறிதுமென்னும்
பார்கொண்டமேன்மையர் கூட்டனல்லேன் * உன்பதயுகமாம்
ஏர்கொண்ட [] வீட்டையெளிதினிலெய்துவன் உன்னுடைய
கார்கொண்டவண்மை * இராமாநுச! இதுகண்டுகொள்ளே. (௮௩)

---

† 'ஏய்ந்தவண்கீர்த்தியினால்' என்பதும் பாடம். ‡ 'மதியாதவர்கள்' என்பதும் பாடம். § 'ஞாலத்து' என்பதும் பாடம். $ 'பெறுதும்' என்பதும் பாடம். [] 'வீட்டில்' என்றும் ஓதுவர்.

கண்டுகொண்டேன் எம்மிராமானுசன்தன்னை * காண்டலுமே [நோய்
தொண்டுகொண்டேன் அவன்தொண்டர்பொற்றாளில் * என்தொல்லைவெந்
விண்டுகொண்டேன் அவன்சீர்வெள்ளவாரியைவாய்மடுத்து இன்று
உண்டுகொண்டேன் * இன்னமுற்றனவோதிலுலப்பில்லையே. (அ௪)

ஓதியவேதத்தினுட்பொருளாய் * அதனுச்சிமிக்க
சோதியைநாதனெனவறியாது உழல்கின்றதொண்டர் *
பேதைமை † தீர்த்தஇராமானுசனைத்தொழும்பெரியோர்
பாதமல்லால்என்தனுருயிர்க்கு * யாதொன்றும்பற்றில்லையே. (அ௫)

பற்றுமனிசரைப்பற்றி * அப்பற்றுவிடாதவரே
உற்றாரெனவுழன்று ஓடிநையேன்இனி * ஒள்ளியநூல்
கற்றார்பரவும்இராமானுசனைக்கருதுமுள்ளம்
பெற்றார்யவர் * அவர்எம்மைநின்றாளும்பெரியவரே. (அ௬)

பெரியவர்பேசிலும் பேதையர்பேசிலும் * தன்குணங்கட்கு
உரியசொல்லென்று முடையவனென்றென்று * உணர்வின்மிக்கோர்
தெரியும்வண்கீர்த்திஇராமானுசன்மறைதேர்ந்துஉலகில்
புரியுநல்ஞானம் * பொருந்தாதவரைப்பொரும்கலியே. (அ௭)

கலிமிக்கசெந்நெல் கழனிக்குறையல் * கலைப்பெருமான்
ஒலிமிக்கபாடலைஉண்டு தன்னுள்ளம்தடித்து * அதனால்
வலிமிக்கசீயமிராமானுசன் மறைவாதியராம்
புலிமிக்கதென்று * இப்புவனத்தில்வந்தமைபோற்றுவனே. (அஅ)

போற்றருஞ்சீலத்திராமானுச! * நின்புகழ்தெரிந்து
சாற்றுவனேல் அதுதாழ்வு * அதுதீரில்உன்சீர்தனக்குஓர்
ஏற்றமென்றேகொண்டிருக்கினுமென்மனம்ஏத்தியன்றி
ஆற்றகில்லாது * இதற்கென்னினைவாயென்றிட்டஞ்சுவனே. (அ௯)

‡ நினையார்பிறவியை நீக்கும்பிரானை * இந்நீள்நிலத்தே
எனையாளவந்தஇராமானுசனை * இருங்கவிகள்
புனையார், புனையும்பெரியவர்தாள்களில் பூந்தொடையல்
வனையார் * பிறப்பில்வருந்துவர் மாந்தர்மருள்சுரந்தே. (௯௰)

† 'தீர்க்கும்' என்பதும் பாடம். ‡ 'நினைவார் பிறவியை' என்பதும் பாடம்.

(காம்போஜிராகம் - ரூபகதாளம்.)

மருள்சுரந்தாகமவாதியர்கூறும் * † அவப்பொருளாம்
‡ இருள்சுரந்தெய்த்த உலகிருள்நீங்க * தன்னீண்டியசீர்
அருள்சுரந்தெல்லாவுயிர்கட்கும்நாதனரங்கனென்னும்
பொருள்சுரந்தான் * எம்மிராமானுசன் $ மிக்கபுண்ணியனே. (௯௩)

புண்ணியநோன்பு புரிந்துமிலேன் * அடிபோற்றிசெய்யும்
நுண்ணருங்கேள்வி நுவன்றுமிலேன் * செம்மைநூற்புலவர்க்கு
எண்ணருங்கீர்த்தியிராமானுச! இன்றுநீபுகுந்து என்
கண்ணுள்ளும்நெஞ்சுள்ளும் * நின்றவிக்காரணம்கட்டுரையே. (௯௪)

கட்டப்பொருளை மறைப்பொருளென்று * கயவர்சொல்லும்
பெட்டைக்கெடுக்கும் பிரானல்லனே? * என்பெருவினையைக்
கிட்டிக்கிழங்கொடுதன்னருளென்னுமொள்வாளுருவி
வெட்டிக்களைந்த * இராமானுசனென்னும்மெய்த்தவனே. (௯௫)

தவந்தரும் செல்வந்தகவுந்தரும் * § சலியாப்பிறவிப்
பவந்தரும் தீவினைபாற்றித்தரும் * பரந்தாமமென்னும்
திவந்தரும்தீதிலிராமானுசன்தன்னைச்சார்ந்தவர்கட்கு
உவந்தருந்தேன் * அவன்சீரன்றியானொன்றும்உள்மகிழ்ந்தே. (௯௬)

உண்ணின்றுஉயிர்களுக்கு உற்றனவேசெய்து * அவர்க்குஉயவே
பண்ணும்பரனும் பரிவிலனும்படி * பல்லுயிர்க்கும்
விண்ணின்தலைநின்றுவீடளிப்பான்எம்மிராமானுசன்
மண்ணின்தலத்துதித்து * மறைநாலும்வளர்த்தனனே. (௯௭)

வளரும்பிணிகொண்ட வல்வினையால் * மிக்கநல்வினையில்
கிளருந்துணிவு கிடைத்தறியாது * முடைத்தலையூன்
தளருமளவுந்தரித்தும்விழுந்துந்தனிதிரிவேற்கு
உளரெம்மிறைவர் * இராமானுசன்தன்னையுற்றவரே. (௯௮)

தன்னையுற்றாட்செய்யுந்தன்மையினோர் * மன்னுதாமரைத்தாள்
தன்னையுற்றாட்செய்ய என்னையுற்றானின்று * தன்தகவால்
தன்னையுற்றாரன்றித்தன்மையுற்றாரில்லையென்றறிந்து
தன்னையுற்றாரை * இராமானுசன்குணம்சாற்றிடுமே. (௯௯)

---

† 'மறப்பொருளாம்' ‡ 'இருள்சுமந்து' $ 'என்னும் புண்ணியனே' என்பன பாடபேதங்கள். § 'சரியா' என்பதும் பாடம்.

(யமுநாகல்யாணிராகம் - ரூபகதாளம்.)

‡‡ இடுமே? இனியசுவர்க்கத்தில் * இன்னும்நரகிலிட்டுச்
சுடுமே? அவற்றைத்தொடர்தருதொல்லை * சுழல்பிறப்பில்
நடுமே? இனிநம்இராமானுசன்நம்மைநம்வசத்தே
விடுமே? சரணமென்றால் * மனமே! நையல்மேவுதற்கே. (௯௮)

தற்கச்சமணரும் சாக்கியப்பேய்களும் * தாழ்சடையோன்
சொற்கற்றசோம்பரும் சூனியவாதரும் * நான்மறையும்
நிற்கக்குறும்புசெய்நீசரும்மாண்டனர் நீணிலத்தே
பொற்கற்பகம் * எம்இராமானுசமுனிபோந்தபின்னே. (௯௯)

போந்ததென்னெஞ்சென்னும் பொன்வண்டு*உனதடிப்போதில்ஒண்சீ
ராந்தெளிதேனுண்டமர்ந்திடவேண்டி * நின்பாலதுவே
ஈந்திடவேண்டும்இராமானுச! இதுவன்றியொன்றும்
மாந்தகில்லாது * இனிமற்றொன்றுகாட்டிமயக்கிடலே. (௧௦௦)

(கேதாரகௌளராகம் - ரூபகதாளம்.)

மயக்குமிருவினை † வல்லியிற்பூண்டு * மதிமயங்கித்
துயக்கும்பிறவியில் தோன்றியவென்னை * துயரகற்றி
உயக்கொண்டுநல்கும் இராமானுச! என்றதுஉன்னையுன்னி
நயக்குமவர்க்கிதிழுக்கென்பர் * நல்லவரென்றுநைந்தே. (௧௦௧)

நையும்மனம் உன்குணங்களையுன்னி * என்நாவிருந்தெம
ஐயனிராமானுசனென்றழைக்கும் * அருவினையேன்
கையுந்தொழும் கண்கருதிடும்காணக்கடலபுடைசூழ்
வையமிதனில் * உன்வண்மையென்பாலென்வளர்ந்ததுவே? (௧௦௨)

வளர்ந்தவெங்கோபமடங்கலொன்றாய் * அன்றுவாளவுணன்
கிளர்ந்தபொன்னாகங்கிழித்தவன் * கீர்த்திப்பயிரெழுந்து
விளைந்திடுஞ்சிந்தையிராமானுசன் என்தன்மெய்வினைநோய்
களைந்துநன்ஞானமளித்தனன் * கையிற்கனியென்னவே. (௧௦௩)

கையிற்கனியென்னக் கண்ணனைக்காட்டித்தரினும் * உன்தன்
மெய்யிற்பிறங்கியசீரன்றி வேண்டிலன்யான் * நிரயத்
தொய்யில் ‡ கிடக்கினும்சோதிவிண் § சேரினும்இவ்வருள்நீ
செய்யில்தரிப்பன் * இராமானுச! என்செழுங்கொண்டலே! (௧௦௪)

---

† 'வல்லியை' என்றும் பாடம். ‡ 'கிடக்கிலென்', § 'சேரிலென்' என்றும் பாடம்.

(கமாஸ்ராகம் - ரூபகதாளம்.)

↓↓ செழுந்திரைப்பாற்கடல் கண்துயில்மாயன் * திருவடிக்கீழ்
விழுந்திருப்பார்நெஞ்சில் மேவுநன்ஞானி * நல்வேதியர்கள்
தொழுந்திருப்பாதனிராமாநுசனைத்தொழும்பெரியோர்
எழுந்திரைத்தாடுமிடம் * அடியேனுக்குஇருப்பிடமே. (க0ரு)

(மோஹநராகம் - ரூபகதாளம்.)

↓↓ இருப்பிடம் வைகுந்தம்வேங்கடம் * மாலிருஞ்சோலையென்னும்
பொருப்பிடம் மாயனுக்கென்பர்நல்லோர் * அவை † தம்மொடும்வந்து
இருப்பிடம்மாயனிராமாநுசன் மனத்துஇன்றுஅவன்வந்து
இருப்பிடம் * என்தனிதயத்துள்ளேதனக்கின்புறவே. (க0சு)

(ஸௌராஷ்ட்ராகம் - ரூபகதாளம்.)

↓↓ இன்புற்றசீலத்திராமாநுச! * என்றுமெவ்விடத்தும்
என்புற்றநோயுடல்தோறும் பிறந்திறந்து * எண்ணரிய
துன்புற்றுவீயினும்சொல்லுவதொன்றுண்டு உன்தொண்டர்கட்கே
அன்புற்றிருக்கும்படி * என்னையாக்கியங்காட்படுத்தே. (க0எ)

(சுருட்டிராகம் - ரூபகதாளம்.)

↓↓ அங்கயல்பாய்வயல்தென்னரங்கன் * அணியாகமன்னும்
பங்கயமாமலர்ப்பாவையைப் போற்றுதும் * பத்தியெல்லாம்
தங்கியதென்னத்தழைத்துநெஞ்சே! நம்தலைமிசையே
பொங்கியகீர்த்தி * இராமாநுசனடிப்பூமன்னவே. (க0அ)

தசக அடிவரவு:—பூ சீர் நிதி ஆண்டு மண் அடி கொழுந்து சார்ந்தது சோர்வு மருள் மயக்கு.

திருவரங்கத்தமுதனார் திருவடிகளே சரணம்.

---

† 'தன்னொடும்' என்பதும் பாடம்.

இயல்சாத்து.

(பிள்ளையுறங்காவில்லிதாஸர் அருளிச்செய்தது.)

நன்றுந்திருவுடையோம் நானிலத்திலெவ்வுயிர்க்கும் *
ஒன்றுங்குறையில்லையோதினோம்*—குன்ற
மெடுத்தானடிசேரிராமாநுசன்தாள் *
பிடித்தார்பிடித்தாரைப்பற்றி. (௧)

(வகுளாபரணபட்டர் அருளிச்செய்தது.)

வாழிதிருக்குருகூர் வாழிதிருமழிசை *
வாழிதிருமல்லிவளநாடு *—வாழி
சுழிபொறித்தநீர்ப்பொன்னித்தென்னரங்கன்தன்னை *
வழிபறித்தவாளன்வலி. (௨)

(ஸ்ரீபராங்குசதாஸர் அருளிச்செய்தது.)

திருநாடுவாழி திருப்பொருநல்வாழி *
திருநாட்டுத்தென்குருகூர்வாழி *—திருநாட்டுச்
சிட்டத்தமர்வாழி வாழிசடகோபன் *
இட்டத்தமிழ்ப்பாவிசை.)

(பரகாலதாஸர் அருளிச்செய்தது.)

மங்கைநகர்வாழி வண்குறையலூர்வாழி *
செங்கையருண்மாரிசீர்வாழி *—பொங்குபுனல்
மண்ணித்துறைவாழி * வாழிபரகாலன்
எண்ணில்தமிழ்ப்பாவிசை. (௪)

(பிள்ளை இராமாநுசதாஸர் அருளிச்செய்தது.)

வாழியரோதென்குருகை வாழியரோதென்புதுவை *
வாழியரோதென்குறையல்மாநகரம் *—வாழியரோ
தக்கோர்பரவும்தடஞ்சூழ்பெரும்பூதூர் *
முக்கோல்பிடித்தமுனி. (௫)

(திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்தது.)

மொழியைக்கடக்கும்பெரும்புகழான் * வஞ்சமுக்குறும்பாம்
குழியைக்கடக்குங்கூரத்தாழ்வான்சரண்கூடியபின் *
பழியைக்கடத்துமிராமாநுசன்புகழ்பாடியல்லா
வழியைக்கடத்தல் * எனக்கினியாதும்வருத்தமன்றே. (௬)

(பிள்ளை அழகியமணவாளதாஸர் அருளிச்செய்தது.)

நெஞ்சத்திருந் துநிரந்தரமாகநிரயத்துய்க்கும் *
வஞ்சக்குறும்பின்வகையறுத்தேன் * மாயவாதியர்தாம்
அஞ்சப்பிறந்தவன்சீமாதவனடிக்கன்புசெய்யும் *
தஞ்சத்தொருவன்சரணம்புயமென்தலைக்கணிந்தே. (எ)

(பின்பழகராம்பெருமாள்சீயர் அருளிச்செய்தது.)

ஊழிதொறூழிதொறுமுலகமுய்ய
உம்பர்களுங்கேட்டுய்ய * அன்பினாலே
வாழியெனும்பூதம்பேய்பொய்கைமாறன்
மழிசையர்கோன்பட்டர்பிரான்மங்கைவேந்தன் *
கோழியர்கோன்தொண்டர்துகள்பாணன்கோதை
குலமுனிவன்கூறியநூலோதி * வீதி
வாழியெனவருந்திரளைவாழ்த்துவார்தம்
மலரடியென்சென்னிக்குமலர்ந்தபூவே. (அ)

இயல்சாத்து ஸம்பூர்ணம்.

சாத்துமறை.

பல்லாண்டுபல்லாண்டுபல்லாயிரத்தாண்டு *
பலகோடிநூறாயிரம் *
மல்லாண்டதிண்தோள்மணிவண்ணா! * உன்
செவ்வடிசெவ்விதிருக்காப்பு.

அடியோமோடும்நின்னோடும்பிரிவின்றியாயிரம்பல்லாண்டு *
வடிவாய்நின்வலமார்பினில்வாழ்கின்றமங்கையும்பல்லாண்டு *
வடிவார்சோதிவலத்துறையும்சுடராழியும்பல்லாண்டு *
படைபோர்புக்குமுழங்கும்அப்பாஞ்சசன்னியமும்பல்லாண்டே.

(பெரியசீயர் அருளிச்செய்தது.)

ஸர்வதேசதசாகாலேஷ்வவ்யாஹதபராக்ரமா -
ராமாநுஜார்யதிவ்யாஜ்ஞாவர்த்ததாமபிவர்த்ததாம்.

(கந்தாடையண்ணன் அருளிச்செய்தது.)

ராமாநுஜார்யதிவ்யாஜ்ஞாப்ரதிவாஸரமுஜ்ஜ்வலா -
திகந்தவ்யாபிநீபூயாத்ஸாஹிலோகஹிதைஷிணீ.

(உடையவர் அருளிச்செய்தது.)

ஸ்ரீமந்ஸ்ரீரங்கஸ்ரியமநுபத்ரவாமநுதிநம்ஸம்வர்த்தய -
ஸ்ரீமந்ஸ்ரீரங்கஸ்ரியமநுபத்ரவாமநுதிநம்ஸம்வர்த்தய.

(பெரியசீயர் அருளிச்செய்தது.)

நமஸ்ஸ்ரீஶைலநாதாயகுந்தீநகரஜந்மநே -
ப்ரஸாதலப்தபரமப்ராப்யகைங்கர்யஶாலிநே.

(நம்பெருமாள் அருளிச்செய்தது.)

ஸ்ரீஶைலேஶதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம் -
யதீந்த்ரப்ரவணம்வந்தே ரம்யஜாமாதரம்முநிம்.

(மடத்துப்பிள்ளை அருளிச்செய்தது.)

வாழிதிருவாய்மொழிப்பிள்ளைமாதகவால் *
வாழும்மணவாளமாமுனிவன் *—வாழியவன்
மாறன்திருவாய்மொழிப்பொருளை *மாநிலத்தோர்
தேறும்படியுரைக்குஞ்சீர்.

(ப்ரதிவாதிபயங்கரம் அண்ணன் அருளிச்செய்தது.)

செய்யதாமரைத்தாளிணைவாழியே சேலைவாழிதிருநாபிவாழியே *
துய்யமார்பும்புரிநூலும்வாழியே சுந்தரத்திருத்தோளிணைவாழியே *
கையுமேந்தியமுக்கோலும்வாழியே கருணைபொங்கியகண்ணிணைவாழி
பொய்யிலாதமணவாளமாமுனி புந்திவாழிபுகழ்வாழிவாழியே. [யே*

அடியார்கள்வாழ அரங்கநகர்வாழ *
சடகோபன்தண்தமிழ்நூல்வாழ *—கடல்சூழ்ந்த
மன்னுலகம்வாழ * மணவாளமாமுனியே! *
இன்னுமொருநூற்றாண்டிரும்.

நாலாயிரதிவ்யப்ரபந்தங்கள் அருளிச்செய்த ஆழ்வார்கள்.

ஆழ்வார்கள்.	அவதரித்த காலம்.	அம்சம்.	அருளிச்செய்த ப்ரபந்தங்கள்.	பாசுரம்.
க. பொய்கையாழ்வார்	த்வாபரயுகம் அ,கூஉ,கூ0க	பாஞ்சஜந்யாம்சம்	முதல்திருவந்தாதி	க00
உ. பூதத்தாழ்வார்	ஷை	கதாம்சம்	இரண்டாந்திருவந்தாதி.	க00
௩. பேயாழ்வார்	ஷை	நந்தகாம்சம்	மூன்றாந்திருவந்தாதி.	க00
ச. திருமழிசையாழ்வார்	ஷை	சக்ராம்சம்	திருச்சந்தவிருத்தம் (கஉ0), நான்முகன்திருவந்தாதி (கூசு)	உகசு
ரு. மதுரகவியாழ்வார்	அ,கூ௩,அஎக	வைநதேயாம்சம்	கண்ணிநுண்சிறுத்தாம்பு.	கக
சு. நம்மாழ்வார்	கலியுகம் ச௩-ஆம் நாள்	ஸேநாம்சம்	திருவிருத்தம் (க00), திருவாசிரியம் (எ), பெரியதிருவந்தாதி (அஎ), திருவாய்மொழி (க,க0உ.)	கஉகூசு
எ. குலசேகராழ்வார்	௲ உஅ	கௌஸ்துபாம்சம்	பெருமாள்திருமொழி.	க0ரு
அ. பெரியாழ்வார்	சஎ	கருடாம்சம்	திருப்பல்லாண்டு (கஉ), திருமொழி (சசுக.)	சஎ௩
கூ. ஆண்டாள்	கூஅ	பூமிபிராட்டியாரம்சம்	திருப்பாவை (௩0), திருமொழி (கச௩.)	கஎ௩
க0. தொண்டரடிப்பொடியாழ்வார்.	உகூஅ	வநமாலாம்சம்	திருமாலை (சரு), திருப்பள்ளியெழுச்சி (க0.)	ருரு
கக. திருப்பாணாழ்வார்	௩ச௩	ஸ்ரீவத்ஸாம்சம்	அமலனாதிபிரான்.	க0
கஉ. திருமங்கையாழ்வார்	௩கூஅ	சார்ங்காம்சம்	பெரியதிருமொழி (க,0அச), திருக்குறுந்தாண்டகம் (உ0), திருநெடுந்தாண்டகம் (௩0), திருவெழுகூற்றிருக்கை (க), சிறியதிருமடல் (எஎ௲), பெரியதிருமடல் (கசஅ௲.)	க,௩சுக
			ஆக, பாசுரம் ...	ச,000

அரும்பதவுரை.

அ

அஃகுதல் - சுருங்குதல்.
அகடு - நடுவிடம், வயிறு.
அகப்பணி - அந்தரங்ககைங்கரியம்.
அகம், அகம்படி - உள்ளிடம்.
அகலம் - மார்பு.
அகலிடம் - பூமி.
அகவலை - வலையின்உள்ளிடம்.
அகாரியம் - செய்யத்தகாத தொழில்.
அகைப்பு - ஸங்கல்பம், முயற்சி, மதிப்பு.
அக்காரம் - வெல்லம்.
அக்கு - எலும்பு, ருத்ராக்ஷம்.
அக்குவடம் - சங்குமணிவடம்.
அங்கம் ஆறு - சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம்.
அங்காத்தல் - வாய்திறத்தல்.
அங்கி - அக்நி.
அசும்பு - நீர்ப்பெருக்கு.
அசுரர் - இராக்கதர்.
அச்சன் - ஸ்வாமி.
அச்சுதன் - அடியார்களை நழுவவிடாத திருமால்.
அஞ்சனம் - மை.
அடல் - வலிமை,போர்,கொல்லுதல்.
அடிகள் - ஸ்வாமி.
அடிசில் - சோறு.
அடிச்சி - அடியவள்.
அடிதாறு - அடிக்குஅளவாயிருத்தல், பாதுகை, பாதரேகை.
அடியுறை - பாதகாணிக்கை.
அடுதல் - சமைத்தல், கொல்லுதல்.
அடை - இலை.
அடைகாய் - வெற்றிலைபாக்கு.
அட்டல் - வார்த்தல், சமைத்தல்.
அணங்காடுதல் - ஆவேசமாடுதல்.
அணங்கு - தெய்வமகள், வருத்தம்.
அணர் - தாடை.
அணவுதல் - கிட்டுதல்.
அணர் - கழுத்துக்குக்கீழுறுப்பு.
அணுக்கர் - சமீபத்திலிருப்பவர், அந்தரங்கர்.

அ

அணை - படுக்கை.
அண்டம் - மேலுலகம்.
அண்டர் - நித்யஸூரிகள், இடையர்.
அண்டவாணா - மேலுலகத்தில் வசிக்கும் தேவர்.
அண்ணல் - பெருமையுடையவன்.
அண்ணித்தல் - தித்தித்தல்.
அண்மை - சமீபம்.
அதகன் - ஹதகன்; ஆச்ரிதர்களின் விரோதிகளைப் போக்கும் மிடுக்குடையவன்.
அதர் - வழி.
அதவுதல் - நெருக்குதல்.
அதள் - தோல்
அத்தன் - ஸ்வாமி.
அத்தாணி - அருகானஇடம்; ஆஸ்தாநம்.
அத்தாணிச்சேவகம் - பிரியாமல் நெருங்கிச்செய்யுஞ் சேவை.
அத்திரம் - அம்பு.
அநகன் - குற்றமற்றவன்.
அநங்கன் - மன்மதன்.
அநந்தன் - ஆதிசேஷன்.
அநுராகம் - ஆசை.
அந்தகன் - குருடன், யமன்.
அந்தணமை - பிராமணத்தன்மை.
அந்தத - அப்படிப்பட்ட பிராயவஸ்து.
அந்தமில்பேரின்பம் - முடிவில்லாத நிரதிசயவின்பம்.
அந்தரம் - இடையூறு, தாமதம்,இடைவெளி.
அந்தரி - துர்க்கை.
அந்தி - மாலைப்பொழுது.
அந்திகாவலன் - சந்திரன்.
அபயம் - முறையிடுதல், ரக்ஷகம்.
அப - ஜலம்.
அமணர் - ஜைநர்.
அமஞ்சூழ்ந்து - அமைந்து பரந்து.
அமரர் - மரணமில்லாத தேவர், நித்யஸூரிகள்.
அமருலகு - பரமபதம்.
அமர் - யுத்தம்.

அ

அமலன் - குற்றமற்றவன்.
அமளி - படுக்கை.
அமை - மூங்கில்.
அம்பரம் - வஸ்திரம், ஆகாசம்.
அம்பு - நீர்.
அம்புதம் - மேகம்.
அம்புயம் - தாமரை.
அம்புலி - சந்திரன்.
அம்மம் - முலைப்பால்.
அம்மணி - இடுப்பு.
அம்மனைமார் - தாய்மார்.
அயர்ப்பு - மறதி.
அயன்வாளி - பிரமாஸ்திரம்.
அயில் - வேல், கூர்மை.
அரக்கர் - ராக்ஷஸர்.
அரங்குதல் - அழிதல்.
அரட்டன் - தீம்பன்.
அரணம் - க்ஷேமம்.
அரண் - காவல், மதிள், சரணம்.
அரந்தை - துன்பம்.
அரம்பன் - தீம்பன்.
அரம்பையர் - தேவமாதர்.
அரவதண்டம் - யமதண்டனை.
அரவப்பகையூர்தி - பாம்புக்குபபகைவனாகிய கருடனை வாகனமாகவுடைய திருமால்.
அரவம் - ஓசை, பாம்பு.
அரவிந்தம் - தாமரை.
அரவிந்த லோசனம் - தாமரைக்கண்.
அரவு - பாம்பு.
அரன்சேய் - சுப்பிரமணியன்.
அரி - சிங்கம், ரேகை, கறுப்புநிறம்.
அரியணை - சிங்காசனம்.
அரியுரு - நரஸிம்மரூபம். அரி-சத்ரு.
அரிவை - இளம்பெண்.
அரு - உருவமின்மை.
அருகல் - சமீபம்.
அருக்கன் - சூரியன்.
அருத்தி - ஆசை.
அருந்துதல் - உண்ணுதல்.
அரும்பெறல் பெறுதற்கு அருமை.
அரைத்தொடர் - அரைவடம்.
அரையன் - அரசன்.
அர்த்தபஞ்சகம் - ஸ்வஸ்வரூபம், பரஸ்வரூபம்,புருஷார்த்தஸ்வரூபம்,உபாயஸ்வரூபம், விரோதிஸ்வரூபம்.
அர்த்தம் - பாதி, பொருள்.

அ

அலகு - அளவு, நுனி, விதை, வாய்.
அலக்கண் - துன்பம்.
அலங்கல் - மாலை.
அலத்தல் - கிலேசப்படுதல்.
அலந்தலை - கலக்கம்.
அலப்பு - சிரமம்.
அலமருதல் - சுழலுதல்.
அலம் - கலப்பை, போதும்.
அலம்புதல் - அலையச்செய்தல்.
அலர் - புஷ்பம், பழிதூற்றுதல்.
அலர்மகள் - லக்ஷ்மி.
அலவலை - தனது வெற்றியைப் பிறர் மேல் ஏற்றிப் புகழ்பவன், பொய்யன், வாயாடி.
அலவன் - ஆண்நண்டு.
அலவை - வஞ்சகமுள்ளவள்.
அலற்றுதல் - அழுதல்.
அலி - நபும்ஸகம்.
அலைவலைமை - அலைச்சல்தன்மை.
அலோகம் - கண்ணுக்குவிஷயமாகாத வஸ்து.
அல் - இராத்திரி, இருட்டு.
அல்ல - பாவம்.
அல்லல் - துன்பம்.
அல்லி - அகவிதழ், ஓர்நீர்ப்பூங்கொடி.
அவத்தம் - அபத்தம், இழிவு, தவறு, பொல்லாங்கு, வீண்.
அவபிருதம் - யாகத்தின்முடிவில்செய்யும் மங்களஸ்நானம்.
அவம் - வீண்.
அவயம் - அபயம், அடைக்கலம்.
அவலம் - துன்பம்.
அவனியாள் - பூமிதேவி.
அவா - ஆசை.
அவி - ஹவிஸ், யாகங்களில் தேவர்களுக்குக் கொடுக்கும் உணவு.
அவுணன் - ராக்ஷஸன்.
அவை - ஸபை.
அழன் - பேய்.
அழுந்தை - திருவழுந்தூர்.
அழும்புதல் - மிகநெருங்குதல்.
அளகைக்கோன் - குபேரன்.
அளறு - சேறு.
அளி - வண்டு, கிருபை.
அளை - தயிர், சேறு, வளை.
அள்ளல் - குழைசேறு, நெருக்கம்.
அறவன் - தர்மஸ்வரூபி.

அ

அறுசுவை - கைப்பு புளிப்பு உவர்ப்பு கார்ப்பு தித்திப்பு துவர்ப்பு.
அறுதொழில் - ஓதல் ஓதுவித்தல் யாகம்செய்தல் செய்வித்தல் ஈதல் ஏற்றல்.
அறுபதம் - வண்டு.
அறுமுகன் - சுப்பிரமணியன்
அறுவகைச்சமயம் - பௌத்தம், ஜைநம், பைரவம், காளாமுகம், லோகாயதம், சூநியவாதம்; பிறவாறுங்கூறுவர்.
அறைகூவுதல் - போர்செய்ய வலியக்கூப்பிடுதல்.
அறை - பாறை.
அறையோ - சயித்தவர்கள தோற்றவர்களை நோக்கிச் சொல்லும் வார்த்தை.
அற்கம் - அடக்கம்.
அற்றம் - சமயம், இடையூறு, இல்லாமை.
அனந்தல் - நித்திரை
அனுங்குதல் - நோவுபடுதல்.
அனை - தாய்.
அன்றுதல் - சீறுதல்.
அன்னவசஞ்செய்கை - உணவுக்கு ஈடாக இடம்வலம் கொள்ளுதல், தாங்குதல்.

ஆ

ஆகமவாதியர் - சைவர்.
ஆகம் - மார்பு, உடம்பு.
ஆகுலம் - துன்பம்.
ஆக்கம் - செல்வம், பேறு.
ஆக்கை - சரீரம்.
ஆங்காரம் - அஹங்காரம்.
ஆசறுத்தல் - நிரவிஸித்தல்.
ஆசு - குற்றம்.
ஆடகம் - ஒருவகைப்பொன்.
ஆடல்மா - திருமங்கையாழ்வாரது குதிரை.
ஆடு - வெற்றி.
ஆட்சி - ஆளுகை.
ஆணம் - கதி.
ஆணிப்பொன் - மாற்றறிதற்குக்கொள்ளும் உயர்தரப்பொன்.
ஆணை - சத்தியம்.
ஆண்டு-வருஷம், அரசாட்சிசெய்து.
ஆதரம் - அன்பு.

ஆ

ஆதர் - இழிந்தவர்.
ஆதித்தியன் - சூரியன்.
ஆத்தன் - ஆப்தன்.
ஆநிரை - பசுக்கூட்டம்.
ஆப்பு - கட்டு, சரீரம்.
ஆம்பல் - இலைக்குழலோசை, அல்லி.
ஆயம் - தோழியர்கூட்டம், வேலைத்திறம், சிநேகம்.
ஆயர்பாடி - இடைச்சேரி.
ஆய்க்குலம் - இடைச்சாதி.
ஆய்மகள் - நப்பின்னைப்பிராட்டி.
ஆரணம் - வேதம்.
ஆரம் - மாலை.
ஆரல் - ஒருவகைமீன்.
ஆராஅமுதம் - தெவிட்டாத (பரம போக்யமான) அமிருதம்.
ஆராமம் - சோலை.
ஆராமை - திருப்தியிறவாமை.
ஆரியன் - ஆசாரியன்.
ஆர் - கூர்மை, இலை.
ஆர்கலி - கடல்.
ஆர்தல - நிறைதல்.
ஆர்த்தல் - ஆரவாரஞ்செய்தல், கட்டுதல்.
ஆரபபு - பேரொலி.
ஆர்வம் - அன்பு.
ஆலம் - விஷம்
ஆலி - மழைத்துளி.
ஆலித்தல் - ஆரவாரஞ்செய்தல், ஒலிடுதல்.
ஆலுதல் - ஆடுதல்.
ஆவத்தனம் - ஆபத்துக்காலத்திலுதவும் செல்வம்.
ஆவர் - யாவர்.
ஆவலிபபு - ஆசைப்படுதல், செருக்குதல்.
ஆவித்தல் - நெடுமூச்சுவிடுதல்.
ஆழி - சக்கராயுதம், வட்டவடிவம், கடல், சூரியன்.
ஆளம்வைத்தல் - ஆலாபித்தல்.
ஆளரி - நரசிங்கம்.
ஆளி - சிங்கம்.
ஆறு - விதம்.
ஆற்றல் - பராக்கிரமம்.
ஆனு - அழியாத.
ஆனைச்சாத்தன் - வலியன்.
ஆன் - பசு.

இ

இகல் - போர், பகை.
இகுள் - செவிலித்தாய்.
இசலுதல் - பேரொலிசெய்தல்.
இசை - இராகம், உடன்பாடு.
இஞ்சி - மதிள்.
இடத்தல் - பிளத்தல்.
இடவன் - மண்கட்டி.
இடும்பை - துன்பம்.
இடைவீடு - விச்சேதம்.
இடைகழி - நடுவிடம் [நடை.]
இட்டம் - இஷ்டம்.
இட்டிடை - சிறியஇடுப்பு.
இணக்கம் - சகவாசம்.
இணர் - பூங்கொத்து.
இணை - இரண்டு, ஒப்பு.
இண்டை - பூமாலை.
இண்டைக்குலம் - நெருங்குதலையுடைய கூட்டம்.
இதணம் - பரண்.
இதயம் - மனம்.
இதழ் - உதடு.
இந்திரகோபம் - தம்பலப்பூச்சி.
இந்திரஞாலம் - மாயவித்தை.
இந்திரன்சிறுவன் - அருச்சுனன்.
இந்து - சந்திரன்.
இமம் - பனி.
இமவந்தம் - இமயமலை.
இமில் - முசுப்பு.
இமையவர் - தேவர்.
இம்பர் - இவ்விடம்.
இயக்கு-அசைதல், துன்பம்.
இயக்கர் - யக்ஷர்
இயம்புதல் - சொல்லுதல்.
இயல் - லக்ஷணம்.
இயல்வு - விரகு.
இரவி - சூரியன்.
இராகம் - ஆசை, இசைப்பாட்டு.
இராவணாந்தகன் - இராவணனைக் கொன்றவன்.
இரிதல் - ஓடுதல்.
இரீஇ-இருத்தி.
இருக்கு - வேதம்.
இருக்கை - இருப்பிடம்.
இருடீகேசன் - ஹ்ருஷீகேசன்; இது, எம்பெருமானது துவாதசநாமங்களுள் ஒன்று, இந்திரியங்களை அடக்கியாள்பவனென்று பொருள்படும்.
இருந்தில் - கரி.
இருபிறப்பு - இயற்கையான ஜந்மத்தோடு ஞானஜந்மமும்சேர்ந்த பிராமணப்பிறப்பு [த்விஜர்.]
இலகுதல் - விளங்குதல்.
இலக்கியம் - லக்ஷ்யம்.
இலக்கு - குறி.
இலங்குதல் - விளங்குதல்.
இலச்சினை-அடையாளம், முத்திரை.
இலட்டுவம் - லட்டு.
இலிங்கியர்-லிங்கப்பிரமாணவாதிகள், ஆருமாதிகர்.
இலைக்குரம்பை - பர்ணசாலை.
இல்லம் - வீடு.
இல்லவள் - மனைவி.
இல்லறம் க்ருஹஸ்ததருமம்.
இல்லி - சிறுதுவாரம்.
இவரித்தல் - எதிர்த்தல்.
இழுக்கு - குறைவு, தவறு.
இழுசுதல் - பூசுதல்.
இழை - ஆபரணம்.
இளங்கோ - இளையபெருமாள்.
இளங்கோயில் - பாலாலயம்.
இளம்படி - இளந்தன்மை.
இறப்பு - மரணம், மோக்ஷம்.
இறவு - மீன்விசேஷம், முடித்தல்.
இறுகல் - ஸங்கோசம்.
இறுத்தல் - செலுத்துதல்.
இறுமாப்பு - கர்வம்.
இறை-சிறிது, அரசன், கடவுள், கபபம்.
இறைச்சி - மாமிசம்.
இறைஞ்சுதல் - வணங்குதல்.
இறைநிலை - பரமாத்மஸ்வரூபம்.
இன்பமாரி - இன்பத்தை யுண்டாக்கும் மேகம்.
இன்னுமை - துன்பம்.

ஈ

ஈசன் - சிவன்.
ஈடறவு - விடாமுயற்சி.
ஈடு - ஒப்பு, தகுதி.
ஈட்டம் - கூட்டம்.
ஈட்டுதல் - திரளுதல்.
ஈண்டுதல் - நெருங்குதல்.
ஈரி - அன்புடையவன்.
ஈர்த்தல் - இழுத்தல்.
ஈர்மை - அறுக்குந்தன்மை.

ஈ

ஈளை - கோழை.
ஈன்றதாய் - பெற்றதாய்.

உ

உகவாதவர் - பகைவர்.
உகவை - சந்தோஷம்.
உகளுதல் - புரளுதல்.
உகிர் - நகம்.
உகைத்தல் - உபேக்ஷித்தல்.
உக்கம் - விசிறி.
உசாவுதல் - விஞவுதல்.
உடுக்கை - வஸ்திரம்.
உடை - வஸ்திரம்.
உட்கண் - ஞானம்.
உட்கு - பெருமை, அச்சம்.
உணங்கல் - உலர்த்தின நெல், புழுங்கல்நெல்.
உண்டி - உணவு.
உதரம் - வயிறு.
உத்தரவேதி - யாகஸ்தானம்.
உத்தானம் - எடுத்தல்.
உந்தி - கொப்பூழ்.
உமர் - உம்மைச்சேர்ந்தவர்.
உமைபங்கன் - பார்வதியை இடபாகத்திற்கொண்ட சிவன்.
உம்பர் - மேலிடம், தேவர்.
உம்பி - உன்தம்பி:
உயவேன் - ஸஹவாஸம் செய்யேன், விஞவேன்
உயிர்நிலை - ஜீவாத்மஸ்வரூபம்
உயிர்ப்பு - மூச்சு.
உயோகுதுயில் - யோகநித்திரை, எல்லாவற்றையும் அறிந்துகொண்டே தூங்குதல்.
உய்த்தல் - கொண்டுவிடுதல்.
உய்வு - பிழைப்பு.
உரகம் - பாம்பு.
உரப்புதல் - மலக்குதல், அதட்டுதல்.
உரம் - பலம், மார்பு.
உரவு - வலிமை.
உரன் - மனம்.
உரிஞ்சுதல் - தேய்த்தல்.
உரு - ரூபம், தேகம்.
உருத்தல் - கோபித்தல்.
உருப்பன் - ருக்மன்.
உருப்பிணி - ருக்மிணி.
உருப்பொலார் - அழகில்லாத உருவமுடையார்.

உ

உரும் - இடி.
உருவி = உர்வீ : பூமி.
உரைக்கியம் - சொல்வோம்.
உரோடம் - கோபம்.
உரோமகூபம்-மயிர்ச்சிலிர்ப்பு.
உலங்கு - பெருநுளம்பு, கொசுகு.
உலப்பு - அழிவு, வறட்சி.
உலோபாய் - பின்வாங்கமாட்டாய்.
உவணப்புள் - கருடப்பக்ஷி.
உவரி - கடல்.
உவலை - இழிவு.
உவனியம் - உபநயநம்.
உவன் - மத்தியிலிருப்பவன்.
உவா - அமாவாஸ்யை, பௌர்ணமி.
உழக்குதல் - கலக்குதல்.
உழத்தல் - வருந்துதல்.
உழலை - குறுக்கிடும் மரம்.
உழறுதல் - துகைத்தல், கலங்குதல்.
உழிதருதல் - அலைச்சல்படுதல்.
உழுவை - புலி.
உழை - புள்ளிமான்.
உளை - புறமயிர்.
உள்ளுதல் - நினைத்தல்.
உறகல் = உறங்கல்-உறங்கவேண்டா.
உறைப்பன் - மிடுக்குடையவன்.
உறைப்பு - உறுதி.
உறைவிடம் - இருப்பிடம்.
உன்னி - நினைத்தற்குஉரியவன்.
உன்மத்தர் - பைத்தியம்பிடித்தவர்.
உன்னுதல் - நினைத்தல்.
உஷையின்தோழி - சித்ரலேகை; (இவள் கண்ணனது பௌத்திரனை அநிருத்தனைக் கொண்டுபோனுள்.)

ஊ

ஊடல் - பிரணயகலகம.
ஊட்டம் - தீனி.
ஊண் - உணவு.
ஊதல் - நடுக்குதல்.
ஊதை - குளிர்காற்று,
ஊரகம் - உலகளந்தபெருமான் சந்நிதி.
ஊரு - தொடை.
ஊர்தி - வாகனம்.
ஊழி - விலக்ஷணகாலம், கற்பகாலம்.
ஊழிலை - முளையிலே விழுந்த இலை, சருகு.

ஊ

ஊழ் - முறை, விதி.
ஊழ்த்தல் - கனிதல்.
ஊழ்மை. முறைமை.
ஊளி - பசி.
ஊறு - ஸ்பர்சம்.
ஊற்றம் - உறுதி.
ஊனகாரகர் - தாங்கள் சொல்லுவத ல்லாமல் பிறரைக்கொண்டும் சொல்விப்பவர்.
ஊனம் - குறைவு.
ஊனேய்குரம்பை- மாம்ஸதேகம்.
ஊன் -மாமிசம்.

எ

எக்கம் - தாளம்.
எக்கல் - மேடு.
எக்கே - இதென்னகஷ்டம்?
எச்சம் - சந்ததி.
எஞ்சல் - குறைவு.
எடுப்பு - உயர்வு.
எட்டிரேண்டிரண்டு - பத்து, பக்தி.
எண்கண்ணன் - பிரமன்.
எண்கு - கரடி.
எண்தோளினள் - துர்க்கை.
எம்மாவீடு - எமக்காகத்தருகிற விலக்ஷணமான மோக்ஷம்.
எயில் - மதிள்.
எயிறு - பல்.
எய்ப்பினில்வைப்பு - தளர்ந்தகாலத்தில் உதவும்செல்வம்.
எய்த்தல் - இளைத்தல்.
எரியம்பு - ஆக்நேயாஸ்திரம்.
எருத்து - முசுப்பு.
எருத்துக்கொடியுடையான் - ரிஷபத்துவசத்தையுடைய சிவன்.
எல்லி - இரவு.
எல்லே - தோழி,வியப்பும் இரக்கமும் பற்றிவரும் இடைச்சொல்.
எவம் - எது.
எவ்வம் - துன்பம.
எழில் - அழகு.
எழுமை - எழுபிறப்பு; ஊர்வன மானிடம் தேவர் நீர்வாழ்வன பறவை மிருகம் தாவரம்.
எள்கல்-நெகிழ்தல்.
எற்று - எப்படிப்பட்டது.
எற்றுதல் - மோதுதல்.
'எனது' என்பது - மமகாரம்.

எ

எனைத்து - எவ்வளவு.
எஃகு - எஃகினாற்செய்த சூலம்.

ஏ

ஏ - பாணம்.
ஏகம் - ஒன்று.
ஏடு - ஸூக்ஷ்மசரீரம், புஸ்தகம்.
ஏண் - நிலை, வலிமை.
ஏதம் - குற்றம், துன்பம்.
ஏதலன் - அயலான்.
ஏதிலர் - பகைவர், அயலார்.
ஏத்துதல் - புகழ்தல்.
ஏமம் - கட்டழகு, வலி, மயக்கம், இனிமை, காவல், இராத்திரி.
ஏமாற்றம் - துன்பம்.
ஏய்த்தல் - ஒத்தல்.
ஏர் - அழகு, ஒப்பு.
ஏர்வு - ஒப்பு.
ஏலம் - வாசனை.
ஏவலம் - அம்பின் திறமை.
ஏழிசை - தாரம், உழை, குரல், இளி, துத்தம், விளரி, கைக்கிளை.
ஏழுமால்வரை-ஸப்தகுலபர்வதங்கள்; கைலை இமயம் மந்தரம் விந்தியம் நிடதம் ஏமகூடம் நீலகிரி என்பன.
ஏழையர் - சபலமுடையவர்.
ஏழ்ச்சி - விகாரம்.
ஏறன் - சிவன்.
ஏறு - ஆண்சிங்கம்.
ஏற்றான் - சிவன்.
ஏனம் - பன்றி.
ஏனோர் - மற்றையோர், பகைவர்.
ஏன்றேன் - பொருந்தினேன்.

ஐ

ஐ - கோழை.
ஐங்கணை வில்லி - ஐந்துபுஷ்பபாணங்களையுடைய மன்மதன்.
ஐங்கருவி - பஞ்சஇந்திரியங்கள்.
ஐம்படை - பஞ்சாயுதமென்னும் ஆபரணம்.
ஐம்பால் - கூந்தல்; மென்மை குளிர்த்தி நாற்றம் நெடுமை கறுப்பு; அன்றி, முடி குழல் தொங்கல் பனிச்சை சுருளுமாம்.
ஐம்பெரும்பூதம் - பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம்.
ஐயம் - மோக்ஷவிஷயத்தில் இடுவது.
ஐயப்பாடு - சந்தேகம்.

ஐ

ஐயறிவு - பஞ்சஇந்திரியவுணர்ச்சி.
ஐயுறவு - சந்தேகம்.

ஒ

ஒக்கலித்தல் - நடைபழகுதல்.
ஒக்கலை - இடுப்பு.
ஒசித்தல் - ஒடித்தல்.
ஒசிவு - தளர்ச்சி.
ஒண்டொடி - அழகியவளையல்களை யணிந்தவள்.
ஒண்மை - நன்மை.
ஒருக்கடுத்தல் - ஒருமைப்படுத்துதல்.
ஒருங்கு - முழுதும்.
ஒல்குதல் - நாணங்கொண்டு கூசுதல்.
ஒல்லை - விரைவு.
ஒற்கம் - ஒடுக்கம்.
ஒன்றிரண்டுகண்ணினன்-மூன்றுகண் களையுடைய சிவன்.
ஒன்றுதல் - கலத்தல்.
ஒன்னலர் - பகைவர்.
ஒன்னார்=ஒன்றார் - சத்துருக்கள்.

ஓ

ஓச்சுதல் - ஓங்கியடித்தல்.
ஓடை - முகபடாம்.
ஓட்டருதல் - ஓட்டந்தருதல், ஓடி வருதல்.
ஓதம் - குளிர்ச்சி, அலை, கடல்.
ஓதி - கூந்தல்.
ஓத்து - வேதம்.
ஓராமை - ஆராய்ந்தறியாமை.
ஓர்ப்பு - மனனம்பண்ணுதல்.
ஓலக்கம் - ஸாந்நித்யம், காட்சிகொடுத் தல்.
ஓலமிடுதல் - கதறிக்கூப்பிடுதல்.
ஓவி - சித்திரம்.
ஓவுதல் - ஒழிதல்.
ஓளி - ஒழுங்கு.

க

கங்கு - முற்றுதல், இராத்திரி, நிறம்.
கங்குல் - இராத்திரி.
கசிதல் - ஈடுபடுதல்.
கச்சங்கம் - வியவஸ்தை,பிரதிஜ்ஞை.
கச்சி - காஞ்சிபுரம்.
கடம்-காடு, மதநீர், பாபபலம், அவசி யம் செயற்பாலது.
கடலேழ்-உவர்நீர், நன்னீர்,பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன்.
கடவன் - கடமைப்பட்டவன்.

கடவு - கடமை,பிராப்தி.
கடாம் - மதநீர்.
கடாரம் - பெரியபாத்திரம்.
கடாவுதல் - செலுத்தல்.
கடி - காவல், மதிள், வாசனை.
கடிகைத்தடங்குன்று-சோளசிங்கபுரம்.
கடிபபு - ஒருகாதணி.
கடிறு=களிறு, யானை.
கடுவன் - ஆண்குரங்கு.
கடைத்தலை - தலைவாசல்.
கடையா மூங்கிற்குழாய்.
கட்கண் - புறக்கண்.
கட்கிலி - கண்ணுக்குஅகப்படாதவன்.
கட்டம் - கஷ்டம்.
கட்டி - வெல்லம்.
கட்டு - மரியாதை, செறிவு.
கட்டுவிச்சி - குறிசொல்பவள்.
கணம் - கூட்டம், க்ஷணம்.
கணவலர் - அலரி.
கணுளன் - நிர்வாஹகன்.
கணி - சோதிடன்.
கணைநாண் - அமபுவிடும்கயிறு.
கணை - இடம்.
கண்டகர் - முள்போல (க்கொடிய) ராக்ஷஸர்.
கண்டம் - கழுத்து.
கண்டல் - தாழை.
கண்டிகை - கழுத்திலணியும் ஆபர ணம், ருத்ராக்ஷம்.
கண்ணி - மாலை, முடிச்சு, கண்களை யுடையவள்.
கண்ணுதல் - நெற்றிக்கண்ணையுடைய சிவன்.
கண்படை - தூங்குதல்.
கணபுதைத்தல் - மறைத்தல்.
கதம் - கோபம்.
கதலி - வாழை.
கதிரவன - சூரியன்.
கதுவப்படுதல் - கவ்வப்படுதல்.
கதுவாய்பபடுதல் - வடுப்படுதல்.
கத்திரபந்து - க்ஷத்ரபந்து.
கத்திரியர் - க்ஷத்திரியர்.
கந்தாரம்=காந்தாரம் - ஓர்பண்.
கந்து - கட்டுத்தறி, வாசனை.
கபாலநல்மோக்கம் - பிரமகபாலத்தை யொழித்தல்.
கபாலி - தூர்க்கை, சிவன்.

க

கபிலை - பசு.
கபோதம் - புறா, கொடிங்கு.
கப்பு - தோள், கிளை.
கமுகு - பாக்கு.
கமை = க்ஷமை, பொறுமை.
கம்பம் - கப்பம், நடுக்கம்.
கம்பு - சிறுதடி.
கயம் - தடாகம்.
கயவர் - மூடர்.
கரசரணம் - கைகால்கள்.
கரணம் - உறுப்பு.
கரண்டம் - நீர்க்காக்கை.
கரத்தல் - ஒளித்தல்.
கரம்-கை, உறுதி.
கரா, கராம் - முதலை.
கரி - சாக்ஷி.
கரிமுகத்தான் - யானைமுக முடைய விநாயகன்.
கரு - கல்பிரதிமை, கர்ப்பம்.
கருக்காய் - பிஞ்சு.
கருப்புச்சிலை - கரும்புவில். [மூமாம்.
கருமுகை - இருவாட்சி, சிறுசண்பக
கருமேந்திரியம்ஐந்து-உபஸ்தம் பாணி பாதம் பாயு வாக்கு என்பன.
கருவரங்கம் - கர்பபஸ்தாநம்.
கருவிளை - புஷ்பவிசேஷம்.
கருளப்புள் - கருடப்பறவை.
கருள் - கோபம்.
கரை - ஒலி.
கலம் - ஆபரணம், கபபல்.
கலம்பகம் - பலபுஷ்பங்களைகொண்டு தொடுக்கும் மாலை.
கலவர் - மரக்கலத்திலுள்ளவர்.
கலவி - கலத்தல்.
கலவிருக்கை - கொலுவிருத்தல்.
கலாய்-கலந்து.
கலி-காலதோஷம்.
கலிகன்றி-திருமங்கையாழ்வார்.
கலிங்கம்-வஸ்திரம்.
கலுழி - கலங்கல், வெள்ளம். [பக்கம்.
கலை - வஸ்திரம், சாஸ்திரம், அம்சம்,
கலைப்பாகி - மானைவாகனமாகவுடைய
கல்அதர் - கல்வழி. [திர்க்கை.
கல்கி - குதிரைமுகத்துடன் அவதரிக்கும் பெருமாள்.
கவண் - கல்லெறிகயிறு.
கவந்தம் - தலையற்ற உடல்.

க

கவரி - சாமரம்.
கவரிமா - சமரமிருகம்.
கவர் - பிளவு, (இரண்டுவிதம்.)
கவர்தலை - பலதலைகள்.
கவர்வு - (கிடையாதபோது உண்டாகும்) கிலேசம்.
கவளம் - யானையுணவு.
கவாடம் - கதவு.
கவி - குரங்கு, பாட்டு.
கவிஞர் - வித்துவான்கள்.
கவிதை - பாட்டு.
கவின் - அழகு.
கவுள் - கன்னம்.
கவை - ஸம்சயம், பிளவு.
கவ்வை - ஆரவாரம். கோலாஹலம்.
கழகண்டு - தீம்பு.
கழல் - விளையாட்டுக்கருவி.
கழல்கமலம்-திருவடித்தாமரை,கழல்-வீரத்துக்கு அறிகுறியாகக் காலில் அணியும் ஓர் ஆபரணம்.
கழிகோல்-வீசுகோல், கன்றின் வாயில்கட்டும் கொறுக்கோல்.
கழிவு - இறந்தகாலம்.
கழுது - பேய.
கழை - மூங்கில்.
களகம் - சாந்து, அன்னபபறவை.
களவம் - யானைக்கன்று.
களிறு - ஆண்யானை.
களைகட்டல் - களையெடுத்தல்.
களைகண் - ஆதாரம்.
களைஞர் - களையெடுபபவர்.
கள் - தேன்.
கள்கை - களவுசெய்தல்.
கறங்குதல் - ஒலித்தல்.
கறவு - கபபம.
கறவை - கறக்கும்பசு.
கறி - மிளகு.
கறு - கோபம.
கறை - அழுக்கு.
கற்பம் - வேதாங்கங்களில் ஒன்று.
கற்பகம் - வேண்டியவற்றைத்தரும் தெய்வமரம்.
கற்று - கன்றையுடைய பசு.
கற்றுயர் - கன்று + ஆயர்; கன்றுகளை மேய்க்கும இடையர்.
கற்றினம் - கன்றுஇனம்-கன்றுகளின் கூட்டம்.

க

கற்றை - கூட்டம்.
கனகக்கடிப்பு - பொன்னாற்செய்த ஒருகாதணி.
கனங்குழை - கனமான குண்டலம்.
கன்னல் - கருப்பஞ்சாறு.
கன்னி - இளம்பெண், அழியாமை.

கா

கா - சோலை.
காகுத்தன் - புரஞ்சயனென்னும்பெயரையுடைய சூரியகுலத்தரசனது வம்சத்திற் பிறந்தவன் [இராமன்.]
காசினி - பூமி.
காசையாடை - காஷாயவஸ்திரம்.
காட்சி - தோற்றம்.
காண்டவம் - இந்திரனது பூந்தோட்டம்.
காண்டும் - காண்போம்
காதலன் - அன்புடைய கணவன்.
காதலி - அன்புடைய மனைவி.
காந்தர்ப்பர் - கந்தர்வர்கள்.
காபாலி - பிரமகபாலத்தைக் கையிலேந்திய சிவன்.
காப்பு - பாதுகாவல் [ரக்ஷை.]
காமம் - அபீஷ்டம்.
காமரம் - ஓர்பண்
காமன் - மன்மதன்.
காம்பு - மூங்கில், சிறுகாம்பன்சேலை.
காயம் - உடம்பு.
காய்தல் - கோபித்தல்.
காரிகை - அழகுடைய பெண்
காரேழ் - ஸம்வர்த்தம், ஆவர்த்தம், புஷ்கலாவர்த்தம்,சங்காரிதம், துரோணம், காளமுகி, நீலவர்ணம்.
கார்க்கண்டன் - சிவன்.
கார்க்கலி - அஞ்ஞானமாகிய தோஷம்,
கார்த்தல் - அரும்புதல்.
கார்த்திகையான் - சுப்பிரமணியன்.
காலசக்கரம் - காலத்தை நடத்துகிற திருவாழி.
காலன் - யமன்.
காலி - பசுக்கூட்டம்.
கால் - காற்று, சக்கரம், நுனி.
காவலன் - அரசன்.
காவி - நீலோற்பலம்.
காவு - விளையாட்டுச்சோலை.
காழ்த்தல்-உறுதிப்படுதல்.

கா

காளம் - வாத்தியவிசேஷம், கறுப்பு.
காறை - கழுத்திலணியும் ஆபரணம்.
கானம் - காடு, பாட்டு.
கானல் - கடற்கரைச்சோலை.
கானவர் - காட்டில்திரியும் வேடர்.
கான் - காடு, வாசனை.

கி

கிஞ்சுகம் - கிளி.
கிடங்கு - அகழ்.
கிதி = க்ருதி - கிரியை.
கிரிசு - கரித்ரிமம்.
கிரிசை - கிரியை.
கிரீடை - விளையாட்டு.
கிருமி - புழு.
கில்லேன் - மாட்டேன்.
கிழத்தி - உரியவள்.
கிழி - பணமுடிப்பு.
கிளர்தல் - விளங்குதல்.
கிளவி - சொல்.
கிளை - உறவினர்
கிளைக்கொள்ளுதல் - திரளுதல்.
கிள்ளை - கிளி.
கிறி - சிறுபவளவடம், வருத்தம், தந்திரம்.
கின்னரம் - தேவவாத்தியம்.

கீ

கீழ்க்கன்று - தம்பி.

கு

குக்கர் - இழிகுலத்தார்.
குக்கூடல் - முட்டாக்கு.
குஞ்சி - ஆண்மயிர்.
குடக்கூத்து - தலையின்மேல் குடங்களை அடுக்கிவைத்துக்கொண்டு அவை அசையாதபடி ஆடும் கூத்து.
குடங்கால் - முழங்கால், மடி.
குடங்கை - உள்ளங்கை.
குடதிசை - மேற்குதிக்கு.
குடமூக்கு - திருக்குடந்தை.
குடில் - குடிசை.
குடுமி - மலையுச்சி.
குட்டநாடு - கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டில் ஒன்று.
குட்டம் - மடு.
குட்டன் - குமாரன்
குணதிசை - கிழக்குத்திக்கு.
குணலம் - களிப்பினால் ஆடுவதொரு கூத்து.

கு

குணில் - குறுந்தடி.
குணுங்கு - வெண்ணெய்நாற்றம்.
குண்டர் - நீசர்.
குண்டிகை - கமண்டலம்.
குண்டு - ஆழம்.
குதறுதல் - துன்பஞ்செய்தல், நெறி தவிர்தல்.
குதிரி - நாணமற்றவள்.
குதைகை - தடுமாறுதல்.
குந்தம் - சிறுசவளம், வேல், நோய்.
குந்தன் - திருமாலினது ஆயிரநாமங்களுள் ஒன்று.
குப்பாயம் - உடற்சட்டை.
குமரி - கன்னிகை.
குமுதம் - அல்லி.
குமுறுதல் - வாய்விட்டுச்சொல்லமாட்டாது உள்ளே முறுகுதல்.
குமைத்தல் - ஹிம்ஸித்தல்.
கும்பம் - குடம்.
கும்பி - நரகவிசேஷம்.
கும்மாயம் - குழையச்சமைத்தபருப்பு.
குயம் - ஸ்தநம்.
குரம்பை - குடிசை.
குரவம் - ஓர் வாசனைமரம்.
குரவர் - பெரியோர்.
குரவை - கைகோத்து ஆடுதல்.
குரிசில் - சிறந்த வீரன்.
குருகு - நாரை.
குருக்கள் குலமதலை - குருவம்சத்துப்பிறந்த அருச்சுனன்.
குருதி - ரக்தம்.
குருந்தம் - ஓர்மரம்.
குருமணி - சிறந்தமாணிக்கம்.
குரு - புண்.
குருளை - குட்டி.
குரைத்தல் - ஒலித்தல்.
குலை - கரை.
குவடு - மலையுச்சி.
குவலயம் - பூமி.
குவை - குவியல்.
குழ - இளமை.
குழகன் - யாவருடனும் கலந்துவிளையாடுபவன்.
குழகு - இனிமை.
குழகுதல் - விளையாடுதல்.
குழமணன் - மரப்பாச்சி.
குழமணிதூரம் - தோற்றோர் தோல்விக்கு ஈடாக ஆடும் கூத்து.
குழல் - வேய்ங்குழல், கூந்தல்.
குழவி - குழந்தை.
குழறுதல் - கூறுதல்.
குழாம், குழு - கூட்டம்.
குழை - குண்டலம்.
குறங்கு - தொடை.
குறடு - கட்டை.
குறளை - கோட்சொல்.
குறிக்கோள் - பகுத்தறிவு.
குறிஞ்சி - மலை, ஓர்மரம், ஓர்பண்.
குறும்பர் - சிற்றரசர்.
குறையல்பிரான் - திருமங்கையாழ்வார்.
குற்றேவல் - அந்தரங்ககைங்கரியம்.
குனித்தல் - வளைத்தல், கூத்தாடுதல்.

கூ

கூக்குரல் - கூவுகிறசப்தம்.
கூசம் - கூச்சம்.
கூடலித்தல் நெரிந்தேறுதல்.
கூடலிழைத்தல் - தலைமகனைப்பிரிந்த தலைவி பார்க்கும் குறி.
கூடலூர் - அப்பக்குடத்தான் ஸந்நிதி.
கூடலர் - பகைவர்.
கூடல் - தென்மதுரை.
கூடார் - சத்துருக்கள்.
கூதை - மூளி.
கூத்தன் - சிவன்.
கூந்தல் - கேசியென்னும் அரக்கன்.
கூம்பு - பாய்மரத்தின் நுனி.
கூர்தல் - மிகுதி.
கூவிளை - வில்வம்.
கூழை - கூந்தல்.
கூழைப்பார்வை - கள்ளப்பார்வை.
கூழைமை - குழைச்சலிடுதல்.
கூழ் - உணவு, பயிர்.
கூழ்ப்பு - சந்தேகம்.
கூறை - வஸ்திரம்.
கூற்று - யமன், சொல்.

கே

கேசம் - தலைமயிர்.
கேசரம் - பிடரிமயிர்.
கேடகம் - (ஆயுதத்தைத்தடுப்பதற்குக்கையில்கொள்ளும்)தோற்கருவி.
கேட்டாம் - கேட்டோம்.
கேதகை - தாழை.
கேதம் - துக்கம்.
கேயம் - பாட்டு.

கே

கேழல் - வராகம்.
கேழ் - நிறம்.
கேழ்பவர் - சம்பந்தம்பெற்றவர்.
கேள் - ஒப்பு, உறவு.
கேள்வன் - கணவன்.
கேள்வி - நூல்களைக்கேட்டறிதல்.

கை

கைசெய்தல் - ஒழுங்குபடுத்தல்.
கைதவம் - மோசம்.
கைதை - தாழை.
கைந்நாகம் } கைம்மா } - துதிக்கையை யுடைய யானை.
கைம்மாறு - பிரதியுபகாரம்.
கைம்மை - பசப்புப்பேச்சு.
கையறவு - செயலற்றிருத்தல்.
கைவலம் - கைம்முதல்.

கொ

கொங்கர் - சேரதேசத்தார்
கொங்கு - வாசனை.
கொடிக்கோழிகொண்டான் - சுப்பிரமணியன்.
கொண்டல் - காளமேகம்.
கொத்துத்தலைவன் - கூட்டங்களுக்குத் தலைவனான துரியோதனன்
கொந்தளம் - சிறுகுடுமை
கொந்து - கொத்து.
கொயல் - கொய்தல்.
கொல்லிகாவலன் - குலசேகராழ்வார்.
கொல்லை - வரம்பழிதல்.
கொள்ளி - நெருப்பு.
கொற்றம் - ஜயம்.
கொற்றவன் - அரசன்.

கோ

கோகனகம் - தாமரை.
கோகுஉகட்டு - அக்கிரமமான ஆரவாரம், அடைவுகேடு தலைமண்டையிட்டு.
கோகுலம் - பசுக்கூட்டம்.
கோசரம் - விஷயமாதல்.
கோடல் - காந்தள்.
கோடி - புதுவஸ்திரம்.
கோடு - தந்தம், கரை.
கோடு ஆலம் - வளைந்த ஆரம்.
கோட்டம் - கோணுதல்.

கோ

கோட்பாடு - கொள்கை.
கோணை - குற்றமுள்ளதொழில், பிணக்கு.
கோது - குற்றம்.
கோதுகலம் - கௌதூஹலம்; மிக்க சந்தோஷம்,
கோதை - மாலை.கூந்தல், ஆண்டாள்.
கோநிரை - பசுக்கூட்டம்.
கோமளம் - பேரழகு, மெதுவான தன்மை.
கோயில் - ஸ்ரீரங்கம்.
கோயின்மை - ராஜகுலமகிமை, அநீதி.
கோரம் - கொடுமை.
கோரம்பு தீம்பு.
கோலம் - அழகு.
கோவலன் - இடையன்.
கோவல் - திருக்கோவலூர்.
கோவி - கோபி, இடைப்பெண்.
கோவை - கோத்தமாலை.
கோழம்பம் - மனக்குழப்பம்.
கோழி - உறையூர்.
கோளரி - வலிமையுடைய சிங்கம்.
கோள் - கிரகம், குற்றம், துன்பம், வலிமை, கொள்கை.
கோறம்பு-குறம்பவென்ற ஆபரணம்.
கோனேரி - திருவேங்கட மலைமேலுள்ள புஷ்கரிணி.

கௌ

கௌத்துபம் - திருமால் இடத்திருமார்பில் அணியும் தேவரத்தினம்.
கௌவை - பேரொலி.

ச

சகடம் - வண்டி
சங்கம் - பங்கம்.
சங்கம் = ஸங்கம், கூட்டம்.
சங்கரன் - சிவன்
சங்கு - வளை.
சங்கை - சந்தேகம்.
சசிபதி - இந்திரன்.
சஞ்சலம் - மனக்கலக்கம்.
சண்டம் - உக்கிரம்.
சண்ணம் - ஆண்குறி
சதிர் - பெருமை.
சதுப்பேதிமார் = சதுர்வேதிமார்- நான்கு வேதங்களையும் அறிந்தவர்.
சதுரர் - சமர்த்தர்.

சா

சத்திரம் - குடை.
சந்தம் - சந்தனம், அழகு.
சந்தி - சேர்க்கை, ஸந்த்யாவந்தனம், பூஜை.
சந்தோகன் - சாந்தோக்ய உபநிஷத்தை யறிந்தவன்.
சப்பாணி-கைகொட்டி விளையாடுதல்.
சமம் - போர்.
சமயம் - சங்கேதம், மதம்.
சமயிகள் - சித்தாந்திகள்.
சம்பிரதம் - இந்திரஜாலவித்தை.
சயமரம் - வெற்றிக்கு அறிகுறியான தம்பம்.
சர அசரம் - அசையும்பொருளும் அசையாப்பொருளும்.
சரண அரவிந்தம் - திருவடித்தாமரை.
சரண் - திருவடி.
சரம் - அம்பு.
சரற்காலம்-ஐப்பசியும் கார்த்திகையும்.
சரிதை - சரித்திரம்.
சலம் - கபடம், குற்றம், வெறுப்பு.
சலவன் - சத்துரு.
சவி - ஒளி.
சவித்தல் - சபித்தல்.
சழக்கு - குற்றம்.
சறை - இடையர் அரையில்கட்டும் ஒருவகைமணி, பேறுமை.

சா

சாக்கியர் - பௌத்தர்.
சாடு - வண்டி.
சாடுதல்-தள்ளியழித்தல், அடித்தல்.
சாதுவர் - சாதுக்கள்.
சாத்து - கூட்டம்.
சாந்து - சந்தனம்.
சாமம்—ஸ்யாமம், கறுப்பு.
சாய்-(ஆச்சரியப்படும்படியான)அழகு
சாரல் - மலைப்பக்கம்.
சாரிகை - விரைந்தநடை.
சார்ங்கம் - வில்.
சார்வு - பிராப்யம்.
சாலகம் - பலகணி.
சாலி - செந்நெற்பயிர்.
சாலேகம் - ஜாலகம், பலகணி.
சாவித்திரி - காயத்ரீ.
சாழல் - தோழி,மகளிர்விளையாட்டு.
சாறு - உத்ஸவம்.
சாற்றுதல் - சொல்லுதல்.

சி

சிக்கென - விரைவாக.
சிங்குதல் - குறைதல்.
சிட்டன் - பெரியோன்.
சிணுங்குதல் - சீராட்டுதல்.
சிதகு - கடுஞ்சொல், குற்றம்.
சிதைகுதல் - சில்லியாதல்.
சிதைவு - அழிவு.
சித்திரகுபதன் - யமதருமராசனது கணக்கன்.
சிந்தாமணி - கருதியபொருள்கொடுக்கும் தேவமணி.
சிந்துக்கோன் - சிந்துதேசத்தரசன், ஜயத்ரதன்.
சிந்தூரம் - நெற்றியிலணியும்பொடி.
சிமயம் - சிகரம்.
சிரத்தை - ஆசை.
சிரீதரன் - லக்ஷ்மியைத் (திருமார்பில்) தரிப்பவன்.
சிரீவரமங்கலநகர் - வானமாமலை.
சிலம்பாறு - நூபுரகங்கை.
சிலம்பு - மலை, நூபுரம்.
சிலம்புதல் - ஒலித்தல்.
சிலாதலம் - கற்பாறை.
சிலிங்காரம்-ஸ்ருங்காரம், அலங்காரம்.
சிலுப்புதல் - அசைத்தல்.
சிலும்புதல் - ஓரிடத்தில் நில்லாமல் சுழலுதல்.
சிலை - வில், கல்.
சில்லை - முணுமுணுத்தல்.
சிவப்பட்டார் - சைவர்.
சிவளிகைக்கச்சு - கட்டுமக்கச்சு.
சிறுக்கன் - சிறுவன்.
சிறுச்சேவகம் - பாலபராக்கிரமம்.
சிறுமாமனிசர் - வடிவுசிறுத்துப் பிரபாவம் கனத்திருக்குமவர்கள்.
சிறுமியர் - இளம்பெண்கள்.
சிறை - பந்தம், இறகு.
சிற்றஞ்சிறுகாலே - விடியற்காலம்.
சிற்றல் - அலைதல், ஆயாசப்படுதல்.
சிற்றவை - சிறியதாயார்.
சிற்றில் - சிறுஇல், சிறுவீடு.
சினை - முட்டை, கிளை.
சின்னம் - அடையாளம்.

சீ

சீயம் - சிங்கம்.
சீய்த்தல் - திருவலகிடுதல்

சீ

சீரியர் - சிறப்புடையவர்.
சீர்மை - சிறப்பு.
சீலம் - நல்லொழுக்கம்.
சீலக்குதம்பை - சீலத்தக்கை (காது வளர்த்தற்பொருட்டு இடுவது.)
சீறல் - கோபியாதே.
சீற்றம் - கோபம்

சு

சுகிர்தல் - வகிர்தல்.
சுடலை - சுடுகாடு.
சுட்டி - ஓர் நெற்றியணி.
சுணங்கை - மயிர்க்கூச்சு, ஒருவகைக் கூத்து.
சுணம் - சுணங்கு, தேமல்
சுண்டாயம் - கிருத்திரிமமான விளையாட்டு.
சுண்ணம்-சூர்ணம், வாசனைபபொடி.
சுதை - சுண்ணும்பு.
சுமடு - சும்மாடு, (சரீரம்.)
சுரம் - பாலைவனம்.
சுரன் - தேவன்.
சுரி, சுரிகை - உடைவாள்.
சுருக்குண்ணுதல் - கட்டுபபடுதல்.
சுருதி - வேதம், ஸ்வரம்.
சுரும்பு - வண்டு.
சுலாய் - சுற்றி.
சுலாவுதல் - பரவுதல்.
சுவடு - அடையாளம்
சுவேதன் - அருச்சுனன்.
சுழல் - வஞ்சனை.
சுளகு - சிறுமுறம்.

சூ

சூடகம் - கைவளை.
சூடாமணி - தலையிலணியும் இரத்தினம்.
சூட்டு - உச்சி.
சூதம் - மாமரம்.
சூது - வஞ்சனை, வாய்ப்பு.
சூர் - தெய்வப்பெண்.
சூர்மை - சூரஸ்வபாவம்.
சூலிகை - சூலம்.
சூல் - கர்ப்பம்.
சூழல் - தந்திரம், மணற்குன்று, வட்டவடிவமான பூமி.

சூ

சூழி - நெற்றிப்பட்டம்
சூறை - சுழல் பெருங்காற்று.
சூனியவாதர் - நிரீசுவரவாதிகள்.

செ

செகில் - சிவப்பு.
செகுத்தல் - அழித்தல்.
செக்கர் - சிவப்பு.
செங்கிரை - அசைந்தாடுதல்.
செடி - கூட்டம்.
செப்பாடு - செவ்வைக்குணம்.
செப்பம் - செவ்வை, ரக்ஷை.
செப்பு - சிறுபாத்திரம்.
செம்மல் - மலர்ந்த புஷ்பம்.
செம்பியன் - சோழன்.
செம்மாது - சிவந்த லக்ஷ்மி.
செயிர் - குற்றம்.
செய - கழனி.
செய்கிறுதி - செய்கிறாய்.
செய்யவள் - லக்ஷ்மி.
செய்யாள் - லக்ஷ்மி.
செரு - போர்.
செருவார் - பகைவர்.
செருந்தி - சுரபுன்னை.
செல்சார் - பற்றுக்கோடு.
செல்வு - ஐசுவரியம்.
செவ்வி - அழகு
செவ்வுதல் - அடைத்தல்.
செறிதல் நெருங்குதல்.
செறு - கழனி.
செறுத்தல் - அடக்குதல்.
செறுவார் - பகைவர்.
செற்றம் - பகைமை, கோபம், பொறுமை
செற்றார் - பகைவர்.
சென்னி - தலை.

சே

சே - எருது.
சேடம் - மிச்சம்.
சேடு - இளமை.
சேட்டை - ஜ்யேஷ்டை, மூதேவி.
சேண் - உயர்ச்சி, தூரம்.
சேது - திருவணை.
சேமம் - ரக்ஷகம்.
சேமவைப்பு - சேமித்துவைத்தனம்.
சேயன் - செம்மையுடையவன், சிறந்தவன்.

சே

சேயிழையார் = (செம்மை + இழையார்) - செம்பொன்னாற்செய்த ஆபரணங்களையணிந்த மகளிர்.
சேய் - சுப்பிரமணியக்கடவுள், எருது.
சேய்மை - தூரம்.
சேர்பபு - கடற்கரை.
சேவகம் - வீரப்பாடு.
சேவல் - ஆண்பறவை
சேற்றுத்தாமரை - வான மாமலையிலுள்ள ஏரி.

சொ

சொப்பட - நன்றாக.

சோ

சோத்தம் - ஸ்தோத்ரம்.
சோப்புண்ணுதல் - அடியுண்ணுதல்.
சோமு - ஸோமயாகம்.
சோர்வு - மறதி.

ஞா

ஞாலம் - பூமி.
ஞாழல் - குங்குமமரம்.
ஞானவிதி - சாஸ்திரமரியாதை.
ஞானேந்திரியம்ஐந்து - மெய், வாய், கண், மூக்கு, செவி.
ஞான்று - நாள்.

த

தகர்த்தல் - உடைத்தல்.
தகர்ப்புண்ணல் - நெருக்கபபடுதல்
தகவிலி - நற்குணமில்லாதவன்.
தகவு - நற்குணம், தகுதியான உபகாரி.
தகளி - அகல்.
தக்கணை - தக்ஷிணை.
தசக்கிரீவன் - பத்துத்தலைகளையுடைய இராவணன்.
தஞ்சம் - அடைக்கலம்.
தஞ்சு - தஞ்சம், அடைக்கலம், ஆதாரம்.
தட - பெரிய.
தடம் - குளம்.
தடா - பெரியபாத்திரம்.
தடிதல் - அழித்தல்.
தடிபிணக்கு - தடிச்சண்டை.
தடுகுட்டம் - தலைதடுமாற்றம்.
தட்டல் - தடுத்தல்.
தட்டுளுப்பு - தடுமாற்றம்.
தட்டொளி - கண்ணாடி.
தணறல் - பிரிதல்.

த

தண்கா - விளக்கொளியெம்பெருமான் சன்னிதி
தண்டம் - தடி, தண்டனை, சேனை.
தண்டு - கதாயுதம்.
தண்ணுவாது - தாமதியாமல்.
தண்ணுமை - சிறுபறை.
தண்ணெனவு - மென்மைத்தன்மை.
தண்மை - அருள்.
ததர்த்தல் வருத்துதல்.
தத்து - ஸ்வீகாரம்.
தத்துவம் உண்மைப்பொருள்.
தமம் - அஞ்ஞான இருள்.
தமர் - உறவினர்.
தமனகம் - தவனம்.
தமியேன் - தனியான நான்.
தமிழ்முனி - அகத்தியர்.
தமிழ்மூன்று - இயல் இசை நாடகம்.
தரங்கம் - அலை.
தரணிமங்கை - பூமிதேவி.
தரளம் - முத்து.
தராதலம் - பூமி.
தருக்கு - அகங்காரம், ஹிம்ஸை.
தருமன் - யமன்.
தலைப்பெய்தல் - சேர்தல்.
தலைவிளாக்கொள்ளுதல் - முழுதும் வியாபித்தல்
தவநெறி - பக்திமார்க்கம்.
தவர்தல் - துளைத்தல்.
தவளம் - வெண்ணிறம்.
தவிசு - ஆசனம்.
தழீஇக்கோளியார் - தழுவிக்கொண்டவர்.
தழை - பீலிக்குடை.
தளவு - முல்லை.
தளை - விலங்கு.
தளையவிழ்தல் - மலர்தல்.
தறுகண்மை - அஞ்சாமை.
தற்பு - தத்துவம், உண்மை.
தனஞ்சயன் - சயத்தையே தனமாகவுடைய அர்ச்சுனன்.
தனிநாயகம் - ஒப்பற்ற தலைமை.

தா

தாசரதி - தசரதனது குமாரன்.
தாது - புஷ்பகேஸரம்.
தாதை - தகப்பன்.
தாபதர் - ருஷிகள்.
தாமம் - மாலை, இடம்.

தா

தாயம் - தாயாதிமுறை, பங்கு.
தாமோதரன் - கண்ணன்.
தாம்பு - கயிறு.
தாயவன் - தாவியளந்தவன்.
தாரகையின்உலகம்-நக்ஷத்ரமண்டலம்.
தாரம் - மனைவி
தாரணி - பூமி.
தாரா - ஓர் நீர்ப்பறவை.
தாராகணம் - நக்ஷத்திரக்கூட்டம்.
தாரித்தல் - மனம்பொறுத்தல்.
தார் - மாலை.
தால் - நாக்கு.
தாளாளன் - முயற்சியுடையவன்.
தாழ்த்தல் - தாமதித்தல்.
தாள் - திருவடி, முயற்சி, தாமரைத் தண்டு.
தாள்கொளுவல் - தாழ்ப்பாள்போடுதல்.
தானவர் - அசுரர்.
தானை - சேனை.

தி

திகிரி - சக்கரம்.
திங்கள் - மாஸம், சந்திரன்.
திசைத்தல் - திகைத்தல்
திசைமுகன் - நான்முகக்கடவுள்
திடர்=த்ருடர் - உறுதியானவர்.
திடல் - மேடு.
திணர்த்தல் - நெருங்குதல்,சுகித்தல்.
திணித்தல் - வலியதிறைத்தல்
திணிம்பு - செறிவு.
திண்ணம் - உறுதி
திமிர் - ஸ்தப்தமாயிருத்தல்
திமில் - மூசுபடு
திரிவிக்கிரமன் - மூன்று அடிகளால் உலகங்களை அளந்தவன்.
திரு - அழகு, செல்வம், லக்ஷ்மி.
திருத்தி - திருப்தி
திருநறையூர் - நாச்சியார்கோவில்.
திருவாகாரம் - திருமேனி.
திருவிண்ணகர் - உப்பிலியப்பன் ஸந்நிதி.
திருவிழவு - உத்ஸவம்.
திருவோணத்தான் - சிரவணநக்ஷத்திரத்துக்கு உரியவன்.
திரை - அலை,(முதுமைப்பருவத்தில்) தோல்சுருங்குதல்.
திரேதை - திரேதாயுகம்.
திலதம் - நெற்றிப்பொட்டு.

திவம் - பரமபதம்
திவலை - நீர்த்துளி.
திவளுகை - ஒளிவிடுகை, படிகை, அசைகை
திளைத்தல் - ஆடுதல், அனுபவித்தல்.
திறம்புதல் - தவறுதல்.
திறல் - வலிமை.
திறவிது - வசத்திலிருப்பது.
திறை - கப்பம்

தீ

தீங்கவி - நல்லபாடல்
தீர்த்தன் - பரிசுத்தமூர்த்தி.
தீவிகை - தீராஜநதீபம்.
தீற்றுதல் - தின்னச்செய்தல்.

து

துகள் - புழுதி, குற்றம்
துகில் - வஸ்திரம்.
துங்கம் - உயர்வு.
துஞ்சல் - இறத்தல், தூங்குதல்.
துடவை - விளைநிலம்.
துடி - உடுக்கை.
துணங்கை-களிப்பினால் ஆடும்கூத்து.
துணரி - பூங்கொத்து.
துணி - துண்டு
துதி - ஸ்தோத்ரம்.
துதைக்கை - மிதிக்கை.
துத்தி - பாம்பின்படப்புள்ளி.
துப்பம் - நெய்.
துப்பன் - பெருமிடுக்குடையவன்.
துப்பு - வலிமை.
துப்புரவு - சாமர்த்தியம்.
துமிலம் - பேரோசை.
தும்பி - வண்டு.
துயக்கு - ஸம்சயம், கலக்கம்.
துயில் - தூக்கம்.
துரங்கம் - குதிரை.
துரிசு - கள்ளம்.
துலை - தராசு.
துவக்கு - சம்பந்தம், ஆரம்பம்.
துவராடை - சிவப்புவஸ்திரம்.
துவராபதி=த்வாரவதி-துவாரகை.
துவரி - இலவம்பூ.
துவரியாடை - காவிவஸ்திரம்.
துவரை - துவாரகை.
துவர் - சிவப்பு, பவழம்.
துவர்தல் - உலர்தல்.
துவலை - நீர்த்துளி.

துவ

துவள் - குற்றம்.
துழதி - அலமாப்பு, அலேச்சல்.
துழாவுதல் - புக்கு அனுபவித்தல், தடவுதல்.
துளங்கல் - கலக்கம்.
துளக்கம் - சலிப்பு.
துளம் - மாதுளம்.
துளர் - களேக்கொட்டு.
துளவம் - துளசி.
துள்ளம் - துளி.
துற்று - பிடியளவு உணவு.
துறவறம் - ஸந்யாஸதருமம்.
துனி - கோபம், பிரதிபந்தகம்.

தூ

தூ - பரிசுத்தம், இறகு.
தூங்குதல் - தொங்குதல்.
தூசனம் - தூஷணம்.
தூசு - வஸ்திரம், பஞ்சு.
தூதி - தூதாக அனுப்பப்பட்டவள்.
தூதை - சிறுசோறுசமைக்கும் மட்பாத்திரம், விளேயாட்டுக்கருவி.
தூபம் } - வாசனேப்புகை.
தூமம் }
தூம்பு - துவாரம்.
தூய்மை - பரிசுத்தம்.
தூரியம் - வாத்தியம்.
தூவி - இறகு.
தூறு - புதர்.

தெ

தெகு - தெற்கு.
தெட்ட - பக்குவமான.
தெபர் - தச்சர்.
தெரியல் - பூமாலே.
தெரிவைமார் - இளமகளிர்.
தெருள் - தெளிந்த அறிவு.
தெவ்வர் - பகைவர்.
தெழித்தல் - அலேத்தல், அதட்டுதல், ஒலித்தல்.
தெழ்கு - இடைச்சரிகை.
தெள்ளியோர் - தெளிந்தவர்.
தெற்றல் - தெள்ளியவன்.
தெற்றுதல் - பின்ளே க்கவிபாடுதல்.
தென்புலத்தார் - யமபுரவாசிகள்.
தென்றுதல் - சிதறுதல்.
தென்னன் - பாண்டியன்
தென்னவன் - தெற்குத்திக்குப்பாலகனை யமன்.

தெ

தென்னுரை - தமிழ்.
தென்னுலகம் - யமலோகம்.

தே

தேக்கம் - தாமதம்.
தேசிகன் - ஆசார்யன்.
தேசு - ஒளி.
தேம்பல் வாடுதல், குறைபடுதல்.
தேவகாரியம் - பகவானுக்குத் திருப்தியான தொழில்.
தேவாசுரம் - தேவர்களுக்கும் அசுரர்களுக்கும நேர்ந்த யுத்தம்.
தேவில் - தேவகிருகம்.
தேவு - தெய்வம்.
தேவை - அடிமைத்தனம்.
தேறல் - தேன்.
தேற்றம் - தெளிவு.
தேற்றன்மை - தெளிவு.
தேனித்தல் - மனமகிழ்தல்.

தை

தைத்திரியன் - தைத்திரிய உபநிஷத்தாற் பிரதிபாதிக்கப்படுபவன்.
தையல் - பெண், மனேவி.
தைவருதல் - தடவுதல்.

தொ

தொங்கல் - மாலே, பீலிக்குடை விசேஷம்.
தொடக்கு - சம்பந்தம்.
தொடர் - சங்கிலி.
தொடி - வளேயல்.
தொடை - மாலே, சொல்தொடர்.
தொடையல் - பூமாலே.
தொண்டர் - அடியார்.
தொண்டை - கொவ்வைக்கனி.
தொத்து - பூங்கொத்து, மாலே.
தொய்யில் - சேறு
தொல்லே - பழமை, உபத்திரவம்.
தொழு - ஓர்நோய், பசுக்கொட்டகம், சிறை.
தொழுதி ஆரவாரம்.
தொழும்பர் - அடியவர், நீசர்.
தொழுத்தை - வேலேக்காரி.
தொளி=ப்ரதோளி - வீதி.
தொறு - பசு.
தொறுப்பாடி - ஆய்ப்பாடி.

தோ

தோகை - மயில்வால்.
தோக்கை - முன்தானே, கொய்சகம்.
தோடு - பூவிதழ்.

தோ

தோதவத்தி - தௌதவஸ்திரம்.
தோமரம் - எறியீட்டி.
தோயம் - நீர்.
தோளாமணி-துளைக்காத இரத்தினம்
தோற்றம் - பிறப்பு.
தோன்றல் - சிறந்தபுருஷன்
தோன்றி - காந்தள்.

தௌ

தௌவை - மூதேவி.

ந

நகுதல் - பரிகசித்தல், சிரித்தல்.
நக்கன் - சிவன்.
நசை - ஆசை.
நச்சுதல் - விரும்புதல்
நடம் - கூத்து.
நடலை - வருத்தம், நடுக்கம்.
நட்டம் - கூத்து.
நண்ணார் - பகைவர்
நந்தன் - நந்தகோபன்.
நந்திபுரவிண்ணகரம் - நாதன்கோயில்.
நந்து - நத்தை.
நந்துதல் - அழிதல், தூண்டுதல்.
நமர் - நம்மைச்சேர்ந்தவர்
நமன் - யமன்.
நமுகுதல் - குழைதல்.
நமுசி - மகாபலிசக்ரவர்த்தியின் குமாரன்.
நமைத்தல் - உபத்திரவித்தல்.
நம்பன் - யாவராலும் நம்பிச்சரணமடையப்படுபவன்.
நம்பர் - பூர்ணர்.
நய அசலன் - நீதியிற் குலையாதவன்.
நயக்குகை } நயத்தல் } - விரும்புதல்.
நயப்பு - நன்மை.
நயனம் - கண்.
நரகஅந்தகன்-அடியார்களுக்கு நேரும் நரகத்தை ஒழிப்பவன்.
நரகநாசனன்-நரகவேதனையை ஒழிப்பவன்.
நரம் - மனிதவடிவம்.
நரன் - சிஷ்யன், மனிதன்.
நலிவு - துன்பம்.
நல்குரவு - வறுமை.
நவித்தல் - நசித்தல்.
நவிற்றுதல் - சொல்லுதல், பழகுதல்.

ந

நவை - குற்றம்.
நளிர்தல் - செவ்வைப்படுதல், குளிர்தல்.
நள்ளி - பெண்நண்டு.
நறு - வாசனையுள்ள.
நறையூர் - நாச்சியார்கோவில்.
நற்பால் - நல்லஇடம்.
நற்றம் - நன்மை.
நனவு - மனதமெளிவு, (கனவுக்கு எதிர்மொழி.)
நனை - அரும்பு.

நா

நாகணை - ஸர்ப்பசயனம்
நாகம் - ஸ்வர்க்கம், பாம்பு, யானை, சுரபுன்னை.
நாகு - இளம்பெண்மாடு.
நாஞ்சில் - கலப்பை.
நாட்டமாயிரத்தன் - ஆயிரங்கண்களையுடைய இந்திரன்.
நாண் - கயிறு, வெட்கம்.
நாதம் - ஓசை.
நாதான் - நாதன் - ஸ்வாமி.
நாந்தகம் - வாள்.
நாபதி - நாவுக்கு நிர்வாஹகன்.
நாபிவலயம் - கொப்பூழ்வட்டம்.
நாமகள் } நாமங்கை } - சரசுவதி.
நாமம் - புகழ்.
நாலுதல் - தொங்குதல்.
நால்வாய் - தொங்குகிற வாய்.
நால்வகைவருணம-பிராமண க்ஷத்ரிய வைசிய சூத்ரா.
நாவலம்புவி - ஜம்பூத்வீபம்.
நாவலர் - வித்துவான்கள்.
நாவவிடுதல்-தோற்றதற்குறிப்பு; தோற்றவர்கள்முன் ஜயித்தவர்கள் சொல்லுஞ் சொல்.
நாவாய் - கப்பல்.
நாவி - நாபி.
நாழல் - குங்குமமரம், ஓர்கொடி விசேஷம்.
நாழ் - அகங்காரம், அர்த்தமில்லாத வார்த்தை.
நானம் - மஞ்சள், மயிர்க்கு இடும் வாசனைதிரவியம், புழுகு.
நானிலம் - பூமி.

நான்றில - நழுவமாட்டா.
நான்று நாள்.

நி

நிசாசரர் - இராக்கதர்.
நிச்சம் - நித்தியம்.
நிச்சலும் - தினந்தோறும்.
நிதி - செல்வம்.
நித்திலம் - முத்து
நிமலன் - குற்றமற்றவன்.
நிமிதல் - நெளிதல்
நியதமும் - எப்பொழுதும்.
நியமம் - ஒருயோகவுறுப்பு
நிரந்தவர் - எதிர்த்தவர்.
நிரயம் - நரகம்.
நிரல்நிறை - சப்தங்களும் அர்த்தங்களும் நிறைந்திருப்பது.
நிருத்தம் - கூத்து.
நிரை - வரிசை, கூட்டம்.
நிலத்தேவர் - பிராமணர்.
நிலாவுதல் விளங்குதல்.
நிவா - வெள்ளாறு.
நிழறுதல்-ஒளிசெய்தல், நடத்தல்.
நிறம் - மார்பு, மர்மஸ்தாநம்.
நிறை - அடக்கம், மகடூஉக்குணம்.

நீ

நீசதை - இழிகுணம்.
நீர்க்கண்டன் - சிவன்.
நீர்மை - குணம்.
நீலகண்டன்-கறுத்தகழுத்தையுடைய சிவன்.
நீலன் - திருமங்கையாழ்வார்.
நீறாடி - சிவன்.

நு

நுகம் - நுகத்தடி.
நுகர்ச்சி - அநுபவம்.
நுகர்தல் - உண்ணுதல்.
நுடங்குதல் - சூழ்தல், அசைதல்.
நுணுக்கம் - ஸூக்ஷ்மம்.
நுணுக்குதல் - அரைத்தல்
நுண்பு - சூக்ஷ்மம்.
நுதலுதல் - ஸங்கல்பித்தல்.
நுதி - நுனி.
நுதல் - நெற்றி.
நுவலுதல் - சொல்லுதல்.
நுளைப்பாவையர் - நெய்தல்நிலத்து மகளிர்

நூ

நூக்குதல் - தள்ளுதல்.

நூ

நூலாட்டி - மகாலக்ஷ்மி.
நூற்றவள்-ஆலோசித்தவள்.
நூற்றுவர் - துரியோதனுதியர்.

நெ

நெடுந்தகை - பெருமைக்குணமுள்ளவன்.
நெருநல் - நேற்று.
நெறி - உபாயம்.
நென்னல் - நேற்று.

நே

நேசம் - அன்பு.
நேமி - சக்கரம்.
நேர்ப்பம் - அவ்யக்தமான தன்மை.

நை

நைவளம் - ஓர்பண்.

நொ

நொக்கென - விரைவாக.
நொடி - க்ஷணம்.
நொடித்தல் - சொல்லுதல்.
நொய்து - அற்பம்.
நொய்யர் - அற்பர்.

நோ

நோன்பியர் - சமணர்.
நோன்பு - விரதம்.

ப

பகடு - ஆண்யானை, எருது.
பகர்தல் - சொல்லுதல்.
பகலோன் - சூரியன்.
பகவர் - முனிவர், ஸந்யாஸிகள்.
பகழி - பாணம்.
பங்கயம் - தாமரை.
பங்கி - ஆண்மயிர்.
பசு + இலை = பாசிலை, பசியஇலை.
பசுபு - பசுமைநிறம்.
பசை - பாசம், அன்பு.
பஞ்ச இந்திரியங்கள் - மெய், வாய், கண் மூக்கு, செவி.
பஞ்சசனன் - ஓர் அசுரன்.
பஞ்சபிராணன் - பிராணன், அபாநன், வ்யாநன், உதாநன், ஸமாநன்.
பஞ்சமம் - ஓர்பண்.
பஞ்சவர் - பாண்டவர்.
பஞ்சி - பஞ்சு.
படப்பை - சோலை.
படம் - வஸ்திரம்.
படலம் - கூட்டம்.
படி - பூமி, ஸ்வபாவம், திருமேனி.

ப

படிச்சோதி - திருமேனியின் அழகு.
படிமைகலம் - ஆராதநஉபகரணம்.
படியமரர் - நிலத்தேவர், பிராமணர்.
படிறு - தீம்பு.
படை - ஆயுதம், சேனை, கலப்பை.
பட்டர்பிரான் - வித்வான்களுக்குத் தலைவன்.
பட்டினம் - (இலக்கணையால்) உடல்.
பணம் - படம்.
பணயம் - நம்பிக்கைக்கு உரிய பொருள்.
பணி வேலை, படத்தையுடைய பாம்பு.
பணிகொள்ளல் - அடிமையாக்குதல்.
பணிலம் - சங்கு.
பணை - மூங்கில், கிளை, நீர்நிலை, பருத்தல், வாத்தியம், வயல்.
பண் - அணிவகுப்பு, ராகம்.
பண்டாரம் - பொருட்சாலை.
பண்டி - வயிறு
பண்டு - பழமை.
பண்ணை - கட்டு, சேரி.
பதகம்=பாதகம் - உபத்திரவம்.
பதம் - பக்குவம்.
பதயுகம் - இரண்டுதிருவடி.
பதலை - கலசம்.
பதவி - நீர்மை, வழி.
பதி - தேசம், தலைவன்.
பதியம் - பாசுரம்.
பதிற்றைந்திரட்டி - நூறு.
பதினொருவிடையர் - ஏகாதசருத்ரர்
பதுமம் - தாமரை.
பத்தர் = பக்தர்.
பத்தவிலோசனம் - ஓரிடம்.
பத்தன் - சிநேகமுள்ளவன்.
பத்திமை - பக்தி.
பத்திர ஆகாரன் - விலக்ஷணமான வடிவமுடையவன்.
பத்திரம் ஓர் ஆபரணம்.
பத்து - பக்தி; 'எட்டினோடிரண்டு.'
பந்தனை - அனுக்கம்.
பயப்பு - நிறவேறுபாடு.
பயலை - பசலைநிறம்.
பயிலுதல் - பழகுதல்.
பரக்கழிதல் - அடக்கமில்லாமை.
பரண் - மச்சு.
பரதர் - நெய்தல்நிலத்துமக்கள்.
பரந்தாமம் - பரமபதம்.

ப

பரம்பரம்பரன் - தனக்குமேலில்லாதபடி ஸர்வஸ்மாத்பரன்.
பரமேஷ்டி - பரமபதத்தில் இருப்பவன்.
பரபரன் - பராத்பரன், உயர்ந்தவர்களுள்ளும் உயர்ந்தவன்.
பரம் - வசம், பாரம், உயர்வு.
பரல் - பருக்கைக்கல்.
பரவுதல் - தோத்திரஞ்செய்தல்.
பரவை - கடல்
பராங்கதி - உயர்ந்தகதி.
பராங்குசன் - பிறமதங்களாகிய யானைகட்கு பவெட்டிபோன்ற நம்மாழ்வார்.
பராவுதல் - நிறைத்தல், துதித்தல்.
பரி - குதிரை
பரிசு - பரிசை, தன்மை, பெருமை.
பரிதி - சூரியன், ஸமித்து.
பரிதிவட்டம் - சூரியமண்டலம்.
பரிப்பு - துக்கம்
பரிமா - குதிரையாகிய மிருகம்.
பரியோன் - வலிமையுடையவன்.
பரிவு - சிநேகம்.
பரிவேடம் - ஊர்கோள்.
பருங்குதல் - சொல்லுதல்.
பருப்பதம் - மலை.
பலங்கனி - பலாப்பழம்.
பலம்தவன் - பலராமன்.
பலி - பிக்ஷை.
பல்லவம் - தளிர்.
பல்லவன் - ஓர் அரசன்.
பவநம் - வாயு.
பவம் - சம்சாரம்.
பவா - பரப்பு.
பவித்திரன் - பரிசுத்தமூர்த்தி.
பவ்வம் - பாற்கடல்.
பழனம் - வயல்.
பழுக்காய் - பழுத்தபாக்கு.
பளிங்கு - ஸ்படிககல்.
பள்ளி - படுக்கை, பள்ளிக்கூடம்.
பறை - வாத்தியம், அபேக்ஷிதம்.
பறைதல் - சொல்லுதல்.
பற்றுக்கொம்பு - கொழுகொம்பு.
பற்பநாபன் = பத்மநாபன் - நாபீகமலமுடையவன்.
பற்பு - தாமரை.
பற்றார், பற்றுதார் - பகைவர்.

ப

பற்று - அடைக்கலம், அன்பு.
பற்றை - அல்பவஸ்து.
பனிப்பு - நடுக்கம்.
பனிவரை - இமயமலை.
பனுவல் - நூல்.
பன்னகராயன் - நாகராசன்; அவனது மகன், உலூபி.
பன்னுதல் - சிறப்பித்துச்சொல்லுதல்.

பா

பா - பாட்டு.
பாகு - ஸாரத்யம்.
பாகுடம் - வெல்லப்பாகு நிறைந்த குடம், உபஹாரம்.
பாங்கர் - பாங்கு.
பாங்கலர் - குணமில்லாதவர்.
பாங்கு - அநுகூலம், பக்கம்
பாசடை - பசுமையான இலை.
பாசறவு - நிறமழிவு.
பாசனம் - மரக்கலம், பாத்திரம்.
பாஞ்சஜந்யம் - திருமாலின் (பஞ்சாயுதங்களுள்) சங்கத்தின் பெயர்.
பாஞ்சாலி - திரௌபதி.
பாடகம் - தண்டை, பாண்டவதூதர் சன்னிதி.
பாடி - ஊர்.
பாடு - பெருமை, வருத்தம். பக்கம்.
பாணன் - கடகன்.
பாணி - கை, சத்தம்.
பாணித்தல் - தாமதித்தல்.
பாண் - பாட்டு, வெளியுபசாரம்.
பாண்டி = பாண்டீரம். (வடம்) - ஆலமரம்.
பாதகேசம் - அடிமுதல் முடிவரையில்.
பாதமத்தால் - திருவடியால்.
பாந்தள் - பாம்பு.
பாயல் - படுக்கை.
பாரசி - த்வாதசி.
பாரணங்கு - பூமிப்பிராட்டி.
பாரிடம் - பூமியினிடம், பேய்.
பாரித்தல் - அலங்கரித்தல், முயற்சி செய்தல், மனத்தில் பெருக நினைத்தல்.
பார் - பூமி.
பார்த்தன் - அருச்சுனன்.
பாலை - வறுநிலம், பண்விசேஷம்.

பா

பாவநாசன் - (அடியார்களின்) பாவங்களை யழிப்பவன்.
பாவனை - எண்ணம்.
பாவை - சித்திரப்பிரதிமை, அது போன்ற அழகிய பெண், விரதம்.
பாழி - பலம், வலி, பெருமிடுக்கு, படுக்கை.
பாழ் - போகமோக்ஷங்களை விளைக்க வல்ல நல்தரை, பிரகிருதி.
பாறு - பருந்து.
பாறுதல் - பொடியாதல், ஓடுதல்.
பாற்றுதல் - ஒழித்தல்.
பானல் - நீலோற்பலம்.
பானு - சூரியன்.
பான்மை - குணம்.

பி

பிச்சை - பிரமசாரிகளுக்கும் ஸந்யாஸிகளுக்கும் இடுவது.
பிஞ்ஞகன் - சிவன்.
பிடர் - பின்கழுத்து.
பிடி - பெண்யானை.
பிணக்கு - சண்டை.
பிணி - வியாதி, கட்டு.
பிணை - பெண்மான்.
பிணையல் - மாலை.
பிண்டியார் - அசோகமரத்தின்கீழுள்ள ஆருஹதர்.
பிதிர் - அதிசயம், மிச்சம், வேறுவழியிற்செல்லுதல்.
பித்தா - பைத்தியம்பிடித்தவர்.
பித்து - உன்மத்த குணம்.
பிரகிருதி - ஒருதத்துவம்.
பிரசம் - தேன், வண்டு.
பிரமாணித்தார் - விசுவசித்தவர்.
பிராக்கள் - உபகாரகர்.
பிலம் - குகை, பாதாளம்.
பிழக்கு - பிழைசெய்தல்.
பிறங்கல் - மலை.
பிறப்பு - மூளைத்தாலி.
பிறவி - பிறப்பு.
பிறிது - வேறு.
பிறையணிந்தான் - சிவன்.
பின்னை - நப்பின்னைப்பிராட்டி, லக்ஷ்மி

பீ

பீடு - பெருமை.
பீதகஆடை - பீதாம்பரம்.

பீ

பீர் - நிறவேறுபாடு.
பீலி - மயிலிறகு.
பீளை - கண்ணின் அழுக்கு.
பீனம் - பருமன்.

பு

புகர் - காந்தி, புள்ளி.
புகலிடம் - அடையுமிடம்.
புகல் - அடைக்கலம்.
புட்டி - அரை.
புட்டில் - பெட்டி.
புணரி - அலைநெருக்கத்தை யுடைய கடல்.
புணர்ப்பு - வியாபாரம்
புணை - தெப்பம்.
புண்டரீகம் - தாமரை.
புதம்=அம்புதம் - மேகம்
புதம்செய்தல் - தாவிப்பாய்தல்.
புதல் - புதர்.
புதா - பெருநாரை.
புதுக்கணிப்பு-வடிவிற்பிறந்தபுதுமை.
புதுவை - ஸ்ரீவில்லிபுத்தூர்.
புத்தேளிர் - தேவர்கள்.
புந்தி - மனம், அறிவு.
புயல் - மழை, மேகம்.
புய்த்தல் - மறைதல்.
புரந்தரன் - இந்திரன்
புரம் - பட்டணம்.
புரவி - குதிரை.
புரவு - கட்டளை.
புரி - செய் [ஏவல்], வலம்புரி, பட்டணம்.
புரிசை - மதிள்.
புரை - ஒப்பு, துவாரம்.
புலத்தல் - விடுதல்.
புலமங்கை - பூமிப்பிராட்டி.
புலமை - தேர்ந்தஅறிவு.
புலம் - அறிவு, ஆகாஷித்தல்.
புலம்புதல் - கோஷித்தல்.
புலரி - விடியற்காலம்.
புலர்த்தல் - உலர்த்துதல்.
புலவி - ஊடல்.
புலால் - மாம்சம்.
புலையர் - இழிந்தசாதியார்.
புல்குதல் - தழுவுதல்.
புல்லறிவாண்மை - அற்பபுத்தி.
புவனம் - பூமி.
புவனி . பூமி.
புவி - பூமி.

பு

புழைக்கை - துதிக்கை.
புள்ளூர்தி - கருடவாகனன்.
புள்ளரையன் - பக்ஷிராஜாவாகிய பெரியதிருவடி.
புள்ளுவம் - மெய்போலத்தோன்றும் படி பொய்யில்வல்லமைகாட்டுதல்.
புறவம் - புறா.
புறவு - தாழ்வரை.
புறனுரை - அன்பில்லாதசொல்.
புறக்கெனல் - அற்பபடாதல்.
புனம் - காடு, கொல்லை, வாசனை.
புனல் - ஜலம்.
புனிதம் - பரிசுத்தம்.
புனைதல் - அலங்கரித்தல்.
புன்கண்மை தீனத்தன்மை.
புன்மை - இழிவு.

பூ

பூ - பூமி, மலர்.
பூகம் - பாக்குமரம்.
பூசல் - பேரொலிசெய்தல், யுத்தம்.
பூடு - பூண்டு
பூணி பசு.
பூண் - ஆபரணம்.
பூதங்கள் - இருபபுபெற்றவர்கள்.
பூதம் ஐந்து - பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம்.
பூமகன் - பிரமன்.
பூமங்கை - ஸ்ரீதேவி.
பூரித்தல் - நிறைத்தல்.
பூரியர் - இழிபிறப்பாளர்.
பூவன் - பிரமன்.
பூவார்கழல்கள் - திருவேங்கடமுடையானது திருவடிநிலை.
பூவியேல் - புகச்செய்யாதே.
பூவை - நாகணவாய்ப பறவை, காயாம்பூ.
பூனை - ஓர் பூண்டு.

பெ

பெட்டு - பிரமக வாக்கியம்.
பெண்ணை - பனைமரம்.
பெம்மான் - பெருமான்.
பெற்றம் - பசு.
பெற்றி - தன்மை.

பே

பேதுறுதல் - மனங்கலங்குதல்.
பேரியல் - பெரிய ஸ்வபாவம்.

பே

பேழை - பெருத்திருத்தல்.
பேழ்வாய் - பெரியவாய்.
பேறு - பாக்கியம், செல்வம்.

பை

பை - படம்.
பைங்கூழ் - பசுமையான பயிர்.
பைதல் - இளமை, வயதுக்குத் தக்க பக்குவமில்லாமை.
பைய - மெல்ல.

பொ

பொங்கத்தம்பொங்கோ - சப்தோச்சாரணம், தோற்றதோல்வியாலே பறையடிக்க ஆடுவதொரு கூத்து.
பொத - வெடிக்க, உள்தைக்க.
பொதியில் - பொதியமலை, மலையமலை.
பொதும்பு - சோலை, குழி.
பொதுளுதல் - நிறைதல்.
பொருதி - போர்செய்வாய்.
பொருநல் - தாம்ரபர்ணி.
பொருந்தார் - சத்துருக்கள்.
பொருப்பு - மலை.
பொருவு - ஒப்பு
பொல்லாமை பொல்லாங்கு, பழி.
பொழில் - சோலை.
பொள்ளை - துவாரம்.
பொறி - இந்திரியம், கையெழுத்து, அடையாளம், புள்ளி.
பொறை - பொறுமை, பாரம்.
பொற்பு - அழகு.
பொன்னி - காவேரி.
பொன்பெயரோன் - இரணியன்.

போ

போட்கன் - சுணைகேடன்.
போதகம் - யானைக்கன்று.
போதமர் செல்வக்கொழுந்து - செந்தாமரைமலரில்வாழுமசெல்வமகள் [லக்ஷ்மி.]
போதர் - வருவாய்.
போதியார் - அரசமரத்தின்கீழுள்ள பௌத்தர்.
போது - மலரும்பருவத்து அரும்பு, காலம், வா [ஏவல்.]
போழ்க்கன் - முன்றகேடன்.
போழுதல் - பிளத்தல்.
போனகம் - போஜனம்.

பௌ

பௌவம் - கடல்.
பௌழியன் - ப்ருஹதாரண்யக உபநிஷத்தினுல் அறியப்படுபவன்.

ம

மகம் - யாகம்
மகரக்குழை - சுறுமீன்வடிவம் அமையச்செய்த குண்டலம.
மகன்றில் - க்ரௌஞ்சபக்ஷி, அன்றில்.
மங்கவொட்டு - (உடலும்உயிரும்) மங்குப்படி இசையவேணும்.
மங்குல் - ஆகாயம், மேகம்
மசுமை - லஜ்ஜை.
மஞ்சரி - பூங்கொத்து.
மஞ்சனம் - நீராட்டம்.
மஞ்சு - மேகம்.
மஞ்ஞை - மயில்
மடங்கல் - சிங்கம்.
மடம் - மடபபம் ; இது, மகடூஉக்குணங்கள் நான்கில் ஒன்று, இளமை.
மடலூர்தல் - பனைமரத்தின்மடல்களினுல் செய்யபபட்ட குதிரையின்மேல் ஏறுதல்.
மடல் - இதழ்.
மடவரல் - இளம்பெண்.
மடவார் - இளமகளிர்.
மட்டித்தல் - வியாபித்தல்.
மட்டு - வாசனை, தேன்.
மட்டை - மொட்டை.
மணாளன் - மணவாளன், கணவன்.
மண்டலம் - வளைவு.
மதலை - பிள்ளை, தூண்.
மதனன் - மன்மதன்.
மதன் = மதம் - கொழுப்பு.
மதிசூடி - சிவன்.
மது - தேன்.
மதுகரம் - வண்டு.
மதுசூதன் - மதுவென்னும் அசுரனை அழித்தவன்.
மதுதாரை - தேன்வெள்ளம்.
மத்தகம் - தலை.
மத்தம் - ஊமத்தை, உன்மத்தம்.
மந்தி - பெண்குரங்கு.
மந்திரம் - இரகசியம்.
மந்திரித்தல் - ஆராய்ந்து அறுதியிடுதல்.
மயர்வு - மயக்கம், அஜ்ஞானம்.

ம

மயல் - மயக்கம்.
மயிலினன் - மயில்வாகனமுடைய சுப்பிரமணியன்.
மரக்கால்கூத்து - மரத்தைக் காலிலே கட்டிக்கொண்டு ஆடும் கூத்து.
மரண் = மரணம்.
மரவடி - பாதுகை.
மராமரம் - ஸாலவிருக்ஷம், ஆச்சா மரம்.
மரு - வாசனை.
மருகி - மருமகள்.
மருங்கு - பக்கம்.
மருங்குல் - இடுப்பு.
மருதர் - மருத்துக்கள்.
மருத்துவப்பதம் - வைத்தியன்செய்யும் மருந்தின்பக்குவம்.
மருத்துவன் - வைத்தியன்
மருப்பு - தந்தம்.
மருவார் - பகைவர்
மருவானன் - பகவதநுபவத்தில்மூழ்ந்தவன்.
மருள் . மயக்கம், அஜ்ஞாநம்
மலக்கம் - கலக்கம்.
மலங்கு - ஒருவகைமீன்.
மலங்குதல் - அழிதல்.
மலம் - அழுக்கு.
மலர்வாளி - புஷ்பபாணம்
மலினம் - தோஷம.
மலைப்பண்டம் - மலைபடுபொருள்.
மலைமங்கை - பார்வதி.
மலையரையன் - ஹிமவான்.
மலையேழ் - கைலாஸம், இமயம், மந்தரம், விந்தியம், நிஷதம், ஹேமகூடம், நீலகிரி.
மல் - ஆயுதமின்றி உடல்வலிமைகொண்டு செய்யும் போர்; அதனையுடையவர், மல்லா.
மல்லன் - பலிஷ்டன்.
மல்லை - வளப்பம், திருக்கடல்மல்லை.
மழ - இளமை.
மழலை - குதலைச்சொல்.
மழறு - புதுமை, கலக்கம.
மழு - கோடாலி.
மழுவாளி - பரசுராமன்.
மள்ளர் - உழவர்.
மறம் - கொடுமை, பாவம்.
மறி - மான்குட்டி.
மறு - களங்கம, ஸ்ரீவத்ஸம்.
மறுகு - வீதி.
மறுக்கம் - கலக்கம.
மறையோர் - வேதமுணர்ந்த பிராமணர்.
மற்கடம் - குரங்கு
மன்று - பொதுவிடம.

மா

மா - மாமரம், குதிரை, பெரிய.
மாகம் - பெரிய ஆகாசம்.
மாசுணம் பெரும் பாம்பு.
மாசுணுதல் - அழுக்கடைதல்.
மாநி - பகப், செல்வம்.
மாணிக்குறளன் - பிரமசாரியான வாமனன்.
மாதலி - இந்திரனது சாரதி.
மாதவி - குருக்கத்தி.
மாதிரம் - திக்கு, மலை.
மாது - பெண், மேகு.
மாத்திரைப்போது - கண்ணிமைத்தலும், கைந்நொடித்தலும்.
மாந்தர் - மநுஷ்யர்.
மாந்துதல - உண்ணுதல்
மாமை - நிறம்.
மாமதர் - பெரிய யோதாவீரர்.
மாரன் - மன்மதன்.
மாருதம காற்று.
மால் - காமமயக்கம், திருமால்.
மாலவன் - ஆடல்மாவென்னுங் குதிரையையுடைய திருமங்கை மன்னன.
மாழாந்து - ஒளிமழுங்கி
மாழை - இளமை.
மாறன் - நம்மாழ்வார்.
மாறுனன் - சத்துரு.
மாறு - எதிர், ஒப்பு, பகைமை, கொம்பு.
மாற்றம் - பேச்சு.
மாற்றலர் - சத்துருக்கள்.
மாற்றான் - பகைவன்.
மாற்றுன்மை - பகைமை.
மாற்றில் - பிரதியுபகாரத்தை விரும்பாமல் உதவிசெய்தல்.
மானம் - பெருமை.
மானுரி - மான்தோல்
மான் - வியவசாயஹேதுவான மஹத்தத்வம்.

மி

மிகை - அதிகம்.
மிடறு - தொண்டை.
மிடுக்கு - வலிமை.
மிடைதல் - நெருங்குதல்.
மிண்டுதல் - நெருங்குதல்.
மிண்டர் - மூர்க்கர்.
மிதி - அடிவைப்பு.
மிலைத்தல் - கனைத்தல்.
மிழற்றுதல் - இன்சொற்கூறுதல், சேஷ்டிதங்களைச் செய்தல்.
மிளிர்தல் - பிரகாசித்தல்.
மிளை - சிறுபுதர்.
மிறை - மிடுக்கு, கொடுமை, ஹிம்ஸை.

மீ

மீட்சி - திரும்பிவருதல்.
மீதியன் - மேற்பட்டவன்.
மீளி - பெரும்பலம்.
மீன் - நக்ஷத்திரம்.

மு

முகடு - உச்சி.
முகப்பு - முன்பு.
முகில் - மேகம்.
முகிழ் - அரும்பு.
முகை = கருமுகை, அரும்பு.
முக்குதல் - வருந்துதல்.
முக்குறும்பு - ஆணவம், மாயை, கன்மம்.
முசு - ஆண்குரங்கு.
முடை - துர்க்கந்தம்.
முட்டு - குறைவு.
முட்டை - அண்டம், உலகவுருண்டை.
முண்டம் - தலையோடு.
முண்டர் - சைவர்.
முண்டியான் - தாபஸவேஷமுடையவன்.
முதுநீர் - கடல்.
முதுபுணர்ப்பு - பழைய நிலைமை.
முத்கலன் - ஒரு புண்ய புருஷன்.
முந்தை - முற்பட்டவன்.
முந்நீர் - சமுத்திரம்.
முப்புரிநூல் - வடமும் வடத்தில் இழையும் மும்மூன்றாக இருக்கும் யஜ்ஞோபவீதம்.
மும்மதம் - கர்ணமதம், கபோலமதம், பீஜமதம்.
முயங்குதல் - தழுவுதல்.
முயற்றி - முயற்சி, உத்ஸாஹம்.

மு

முரண் - வலிமை, பகைமை.
முரலுதல் - ஒலித்தல்.
முருகன் - சுப்பிரமணியன்.
முருகு - வாசனை, தேன்.
முருக்கு - பலாசு.
முருடு - கடினம்
முழவம் - பெருவாயனென்னும் வாத்தியம், மத்தளம்.
முழுசுதல்-மூழ்குதல்.
முழுவுதல் - முத்தமிடுதல்.
முழை - குகை.
முழைஞ்சு - குகை, துளை.
முளரி - தாமரை, முள்ளைக்கொண்டு செய்தது.
முளரிக்கூட்டகம் - முள்ளையுடைய தாமரைத்தண்டினால் செய்த கூடு.
முளிதல் - உலர்தல்.
முறி - தளிர்.
முறுவலித்தல் - பரிகசித்துச் சிரித்தல்.
முறுவல் - புன்சிரிப்பு, பல்.
முற்றாவுரு - சிறுகுழந்தை.
முற்றில் - சிறுமுறம்.
முற்றிழை - பூரணமான ஆபரணம் அணிந்தவள்.
முனிவர் - மகாசீலர்.
முனிவு - கோபம்.
முனை - போர்.
முனைவன் - முக்கியமானவன்.
முன்தோன்றல் - தமையன்.
முன்னுரை - மகாபாரதம்.

மூ

மூக்கு - மேல்நாணிப்பு.
மூதறிவு - பேரறிவு.
மூதுரை - பழமொழி.
மூதுவர் - முற்பட்டவர்.
மூரி - வலிமை.
மூர்த்தி - வடிவம்.
மூவாமை - மூப்படையாமை.
மூழை - அகப்பை.
மூழ்த்தல் - மூழ்குதல்.
மூன்றுஅனல் - கார்ஹபத்தியம், ஆகவநீயம், தக்ஷிணாக்நி.

மே

மேகலை - அரைநூல் மாலை.
மேதி - எருமை.
மேலாப்பு - மேற்கட்டி.

மை

மைதிலி - சீதை.
மையன்மை - மயக்கம்.
மையாத்தல் - மோகித்தல்

மொ

மொக்குள் - மொக்கல், நீர்க்குமிழி.
மொட்டு - அரும்பு.
மொய்குழல் - நெருங்கிய கூந்தல்.
மொய்ம்பு - வலிமை.

மோ

மோக்கம்=மோக்ஷம்.
மோடி - காளி.
மோடுபெருத்தல்-பிடரியில் பிசல் பருத்தல் [மோடு - அம்ஸம்.]
மோய் - தாய்.
மோழை - நீர்ப்பெருக்கு, கீழாறு, குமிழி, துவாரம்.

மௌ

மௌலி - திருமுடி.
மௌவல் - முல்லை.

ய

யமுனைத்துறைவன் - ஆளவந்தார்.
யவன் - யாவன்.

யா

யாதவர் - யதுவம்சத்தார்.
யாய் - தாய்.
யாழ் - வீணை.
யாளி - சிங்கம்.
'யான்' என்பது - அஹங்காரம்.

யோ

யோகநித்திரை - எல்லாம் அறிந்து உறங்குதல்.
யோகம் - கண்ணுக்கு விஷயமாகிற வஸ்து.
யோகு - தவம், உபாயம்.
யோனி - பிறப்பு.

வ

வகிர் - பிளவு.
வகுளம் - மகிழமலர்.
வங்கம் - கப்பல்; பங்கம் என்றதன் திரிபாய், அலையென்றும் கொள்ளலாம்.
வசி - வசப்படுத்தல்.
வசை - குற்றம்.
வசைவு - திட்டு.
வஞ்சி - ஓர் நீர்க்கொடி.

வ

வடகலை - ஸம்ஸ்கிருதம்.
வடநெறி - ஸம்ஸ்கிருத நியாயம்.
வடமலை - திருவேங்கடமலை.
வடம் - ஆரம், ஆலிலை.
வடி - கூர்மை.
வட்கு - லஜ்ஜை. [சிக்காய்.
வட்டு - வாத்துலமானது, நீலக்கழற்
வணடல்-மகளிர்விளையாட்டு, குழைசேறு.
வண்டானம் - நாரையில் ஓர் சாதி
வண்ணம் - அழகு.
வண்மை - ஈகை.
வதுவை - கலியாணம்.
வந்தி - பலவந்தம்.
வந்தித்தல் - நமஸ்கரித்தல்.
வம்பு - வாசனை.
வம்பின் - வாருங்கள்.
வயிச்சிரவணன் - குபேரன்: விசிரவ முனிவரின் குமாரன்.
வயிரம் - உறுதி, பகை.
வயிறுவாய்த்தல் - வயிற்றிற்பிறத்தல.
வரம்பு - எல்லை.
வரன்றுதல் - வாரிக்கொள்ளுதல்.
வரால் - மீன் விசேஷம்.
வரிந்து - சூழ்ந்து.
வருடுதல் - தடவுதல்.
வருமை - மறுபிறப்பு
வலம்புரி - வலப்பக்கமாக உட்சுழியையுடைய பாஞ்சஜந்யம்.
வலவன் - வல்லவன், சாரதி.
வலவை - வஞ்சகக் குணமுடையவள், ஆவேசமாடுபவள்.
வல்லி - பாசம், கொடி.
வழக்கு - நியாயம்.
வழிபாடு - வணக்கம்.
வழு - குற்றம்.
வழுதி - பாண்டியன்.
வழுத்துதல் - ஸ்தோத்ரம்செய்தல்.
வளாய்க்கொள்ளுதல் - சூழ்ந்துகொள்ளுதல்
வளி - காற்று.
வளைவண்ணன்-சங்குபோன்ற வெண்ணிறமுடைய பலராமன்.
வள் - கூர்.
வள்ளல் - வரையாதுகொடுப்பவன்.
வள்ளி - ஓர்கொடி.
வள்ளிகொழுநன் - சுப்பிரமணியன்.

வ

வற்பு - வலிமை.
வனைதல் - அலங்கரித்தல்
வன்கையர் - பிரபலமானவர.
வன்மம் - மர்மம்.

வா

வாகை - வெற்றி, ஓர்மரம்.
வாக்கு - சரமச்லோகம்.
வாசம் - வாசனை.
வாசல் - உபேயம்.
வாசவதத்தை - வத்ஸராயன் மனைவி.
வாசி - குதிரை
வாசிகை - மாலை.
வாசுதேவன் - வசுதேவகுமாரனை கிருஷ்ணன்.
வாடை - காற்று.
வாணபுரம - பாணசுரனுடைய சோணிதபுரம்.
வாணனதுமகள் - உஷை.
வாணன் - வாழ்நன் (மரூஉ); பாணசுரன்.
வாணிபம் - பயன்.
வாணியம் - வியாபாரம்.
வாதமாமகன்-வாயுவின்புத்ரன்: ஹநுமான்.
வாதை - துன்பம்
வாமம் - அழகு.
வாமன் - குள்ளமான பிரமசாரி.
வாமான் - தாவியோடும்குதிரை.
வாயுஐந்து - பஞ்சப்ராணன்.
வாயுறை - அறுகம்புல்.
வாய்ப்பு - அமைப்பு.
வாரணம் - யானை.
வாரம் - பக்ஷபாதம்.
வாரம்ஓதுதல் - உருச்சொல்லுதல்.
வாரி - கடல்.
வார் - கச்சு, நீளம்.
வாலிமை - வெண்மை, பெருமை,சுத்தம்.
வாவி - தடாகம்.
வாளா - சும்மா.
வாளி - பாணம்.
வாளை - பெருமீன்.
வாள்நுதல் - ஒளிபொருந்திய நெற்றி.

வி

விகிருதம் - வேறுபாடு, சேஷ்டாவிகாரம்.

வி

விக்கி - விக்கலெடுத்து.
விக்கிரமம் - வீரச்செயல்.
விசயன் - அருச்சுனன்.
விசாதி - வியாதி.
விசித்திரம் - அழகு.
விசும்பு - மேலுலகம்.
விச்சை - வித்யை.
விஞ்சை - வித்தை.
விடமம் - வைஷம்யம்,சோராச்சேர்த்தியான செயல்.
விடலை - புருஷசிரேஷ்டன்.
விடிவை - விடியற்காலம.
விடை - வ்ருஷபம், உத்தரம்.
விடையோன் - விருஷபவாகனன்.
விட்டு=விஷ்ணு.
விண் - ஆகாசம்.
விண்டார் - பகைவர்.
விண்ணகா - பரமபதம், உப்பிலியப்பன் ஸந்நிதி.
விண்ணாறு - ஆகாசகங்கை.
விண்ணி - ஓரிடம்.
விண்தேர் - பேய்த்தேர், கானல்.
விதலை - விசனம்.
விதானம் மேற்கட்டி.
விதி - பாக்கியம்.
விதிர்த்தல் - நடுக்கம்.
வித்தகன்-ஆச்சரியமான குணசேஷ்டிதங்களை யுடையவன்.
வித்து - காரணம்
விநதை - கருடன்தாய்.
விந்தை - விந்தியமலை, காளி.
விபரீதம் - பாதகம்.
விமலன் - குற்றமற்றவன்
வியம் - வேறுபாடு.
வியல் - விசாலம்.
வியவு - வேறுபாடு.
வியூகம் - சேனையின்திரள்.
விராவுதல் கலத்தல்.
விருத்தம் - கிழத்தனம், விரோதம்.
விரை - வாசனை.
விலங்கல் - மலை.
விலங்கு - மிருகபக்ஷிகள்.
விலவு - விலாப்பக்கம்.
வில் - காந்தி.
வில்லவன் - சேரராஜன்.
விழவு - உத்ஸவம்.
விழுது - நெய்.

வி

விழுப்பொருள் - சிறந்தபொருள்.
விழுமிய - சிறந்த.
விளப்புறுதல் - பிரசித்தியடைதல், தாமசித்தல், கூறப்படுதல்.
விளரி - மிக்கவிருப்பம், ஓர்இசை
விளாக்கொள்ளுதல் - முழுதும்பரவுதல்.
விளிம்பு - ஓரம்.
விறல் - பராக்கிரமம்.
விஷ்ணுசித்தர் - பெரியாழ்வார்.

வீ

வீக்குதல் - கட்டுதல்.
வீடுதல் - விடுதல்.
வீட்டுதல் - ஒழித்தல்.
வீதல் - அழிதல்.
வீரஅணி - இந்திரியஜயமான வீரமே ஆபரணம்.
வீழ்தல் - விரும்புதல்.
வெள்வரைப்பு - கிழக்குவெளுத்தல்

வெ

வெகுளி - கோபம்.
வெங்கதிரோன் - சூரியன்.
வெண்பகடு - ஐராவதம்.
வெதிர் - மூங்கில்.
வெப்பு - ஜ்வரதேவதை.
வெய்து - கொடிது.
வெரு - அச்சம்.
வெளியநீறு - அஞ்சனசூர்ணம்
வெள்ளியார் - பாசுபதர், சுக்கிரன்.
வெறி - வாசனை, சந்திரன், பாழ்

வெற்பு - மலை.
வெஃகா - சொன்னவண்ணம்செய்த பெருமாள் ஸந்நிதி.

வே

வேகவதி - வேகமுடையது.
வேங்கை - ஓர்மரம், புலி.
வேடு - மிருகபக்ஷிகளைக்கொல்லும் தொழில்.
வேட்கை - ஆசை.
வேதம்நான்கு - ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம்; அன்றி, தைத்திரீயம், பௌழியம், தலவகாரம், ஸாமவேதம்.
வேயர் - மூங்கிற்குடியிற்பிறந்தவர்.
வேய் - மூங்கில்.
வேரிமயிர - பிடரிமயிர்
வேலை - சமயம், கடல்.
வேழம் - யானை.
வேளுக்கைபாடி - ஆளழகியசிங்கர் சந்நிதி.
வேள் - மன்மதன்.
வேள்வி - யாகம்.
வேள்வி ஐந்து - பிரமயஜ்ஞம், தேவயஜ்ஞம், பூதயஜ்ஞம், பித்ருயஜ்ஞம், மநுஷ்யயஜ்ஞம் என்பன.
வேற்றோன் - பகைவன்.

வை

வைகல் - தினந்தோறும்.
வைகறை - விடியற்காலம்.
வைதிகா - வேதவிதிப்படிநடப்பவர்.
வைதேகி - விதேகதேசத்தரசனான ஜநகமகாராஜனது மகள், சீதை.
வைப்பு - புதையல்.
வையத்தேவர் - அந்தணர்.
வையம் - நிலவுலகம்.
வைரம் - விரோதம்.
வ்ருத்தம் - வட்டம்.

அரும்பதவுரை முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம :

நூற்றெட்டுத் திருப்பதிப்ரபாவம்.

ஈரிருபதாஞ்சோழம் ஈரொன்பதாம்பாண்டி
ஓர்பதின்மூன்றும்மலைநாடு ஓரிரண்டாம்—சீர்நடுநாடு
ஆறோடீரெட்டுத்தொண்டை அவ்வடநாடுஆறிரண்டு
கூறுதிருநாடொன்றாக் கொள்.

சோழநாட்டுத்திருப்பதிகள் (௪0)

க. **திருவரங்கம் பெரியகோயில்** :—ஸ்ரீரங்கநாதன், நம்பெருமாள் - ஸ்ரீரங்கநாச்சியார். ப்ரணவாக்ருதி விமாநம். வேதச்ருங்கம். காவேரிநதி. சந்திர புஷ்கரிணி. புன்னைவிருக்ஷம். புஜங்கசயநம். தெற்கே திருமுகமண்டலம். தருமவர்மாவுக்கும், ரவிதர்மனுக்கும் ப்ரத்யக்ஷம்.

பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார், திருமழிசையாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார, நம்மாழ்வார் மங்களாசாஸநம். பட்டர், வடக்குத்திருவீதிப்பிள்ளை, பிள்ளைலோகாசாரியர் முதலிய சிலஆசாரியர்கள் திருவவதரித்த தலம் இதுவே.

திருவரங்கமென்பது - திருமாலின் திவ்யதேசங்கள் நூற்றெட்டனுள் தலைமைபூண்டதும், சோழநாட்டுத்திருப்பதிகள் நாற்பதில் முக்கியமானதும், 'கோயில் திருமலை பெருமாள்கோயில்' என்று பிரதானமாக எடுத்துக் கூறப்படுகின்ற மூன்றுதலங்களுள் முதலதும், 'கோயில்' என்றும் 'பெரிய கோயில்' என்றும் மறுபெயருடையதும், 'பூலோகவைகுண்டம்' எனப்படுகின்ற மகிமையுடையதும், 'போகமண்டபம்' எனப்படுவது மாகிய தலம். பிரணவாகாரமான ஸ்ரீரங்கவிமானத்திலே ஆதிசேஷசயனத்திற் பள்ளிகொண்டருளுந் திருமால் ஆதியிற் சத்தியலோகத்தில் பிரமனது திருவாராதனத் திருவுருவமாயிருந்தான்: பின்பு, சூரியகுலத்து மநுகுமாரனான இக்ஷ்வாகு மகாராஜன் பிரமனைக்குறித்துப் பலகாலம் அரும்பெருந்தவம் புரிந்து அத்தேவனருளால் அப்பெருமானைத் தான்பெற்றுத் திருவயோத்திக்கு எழுந்தருளப்பண்ணிக்கொண்டுவந்து பிரதிஷ்டித்துத் திருவாராதனஞ்செய்துவந்தனன். அந்த ஸ்ரீரங்கநாதனே இக்ஷ்வாகுமுதல் இராமபிரான்வரையிலுள்ள இரவிகுலமன்னவரெல்லார்க்கும் குலதெய்வமாகி விளங்கினான். இங்ஙனம் மனிதவுருவங்கொண்ட பெருமானாகிய இராமபிரானால் வணங்கப்பட்டமைபற்றி, ரங்கநாதனுக்கு 'பெரியபெருமாள்' என்று திருநாமம். இராமபிரான், வனவாசஞ்சென்று விபீஷணனுக்கு அபயமளித்துக் கடல் கடந்து இலங்கைசேர்ந்து இராவணதிராக்ஷஸசங்காரஞ்செய்து, திருவயோத்திக்கு

மீண்டுஎழுந்தருளிப் பட்டாபிஷேகஞ் செய்துகொண்டபின்பு, சுக்ரீவன் முதலிய அனைவர்க்கும் விடைகொடுத்து அவரவரைத் தந்தம் இருப்பிடங்கட்கு அனுப்பும்பொழுது, தனது திருவாராதனமூர்த்தியும் குலதனமுமான திருவரங்கநாதனைத் தனக்கு மிகவும் அந்தரங்கனான விபீஷணாழ்வானிடங் கொடுத்து ஆராதித்துவரும்படி நியமித்து அனுப்பினான். * அங்ஙனமே அவ்வரக்கர்பெருமான் அவ்வமரர் பெருமானை அவ்விமானத்துடனே எழுந்தருளப்பண்ணிக்கொண்டு இலங்கை நோக்கிச் செல்லும்பொழுது இடைவழியில் உபயகாவேரிமத்தியிலே பெருமான் புடைபெயராது விமானத்துடனே நிலைநின்றருளினான். அவ்வாறு திருமால் திருவுள்ள முவந்து தங்கிய இடமே ஸ்ரீரங்கமெனப்படுவது.

(ஸ்ரீவைகுண்டம் திருப்பாற்கடல் சூரியமண்டலம் யோகிகளுடைய உள்ளக்கமலம் என்னும் இவையனைத்திலும் இனியதென்று திருமால்) திருவுள்ளமுவந்து எழுந்தருளியிருக்குமிடமான தென்பதுபற்றி, 'ரங்கம்' என்று அவ்விமானத்திற்குப் பெயர்; திருமால் இங்கு ரதியை [ஆசைப்பெருக்கத்தை] யடைகின்றனனென்க. இனி, திருமகளார் திருநிருத்தஞ்செய்யுமிடமாயிருத்தலாலும், ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய திருவுக்கு [மேன்மைக்கு]க் கூத்துப்பயிலிடமாயிருத்தலாலும், ஆற்றிடைக்குறை [நதியினிடையே உயர்ந்ததிடர்] ஆதலாலும், 'திருவரங்கம்' என்னும் பெயர் வந்ததெனினுமாம். இத்தலம், திருச்சிக்கோட்டைக்கு வடமேற்கே ௩ - மைலில் உள்ளது.

உ. உறையூர் - நிசுளாபுரி:—அழகிய மணவாளன் - வாஸலக்ஷ்மி, உறையூர்வல்லி. கல்யாணவிமானம். கல்யாணதீர்த்தம். குடமுருட்டிநதி. வடக்கே திருமுகமண்டலம் - நின்றதிருக்கோலம். முப்பத்துமுக்கோடி தேவர்களுக்கும் ரவிதர்மராஜாவுக்கும் ப்ரத்யக்ஷம். திருஉறைந்த காரணம்பற்றி, இத்திருப்பதிக்கு, 'திருவுறையூர்' என்று திருநாமமாயிற்று; (உறையூர் உறந்தை: என்றும் மருவும்.) இது, அழகியமணவாளனுக்கும் உறையூர்வல்லிக்கும் திருமணம் நடந்த தலம். திருப்பாணாழ்வார் திருவவதரித்த தலம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். திருச்சிக்கோட்டைக்கு மேற்கே ஒருமைலில் உள்ளது.

௩. தஞ்சைமாமணிக்கோயில்:—நீலமேகப்பெருமாள் - செங்கமலவல்லி. ஸௌந்தர்யவிமானம். கன்னிகா புஷ்கரிணி - அம்ருததீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம் - வீற்றிருந்த திருக்கோலம். பராசரமுனிக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார் மங்களாசாஸநம். "தஞ்சைமாமணி" என்பது, இத்தலத்து எம்பெருமானது திருநாமம். இதனால், இத்தலத்திற்குத் தஞ்சைமாமணிக்கோயிலெனத் திருநாமமுண்டாயிற்று. தஞ்சா

---

* இராமபிரான், திருவவதாரத்தை முடித்துக்கொண்டு தன்னடிச்சோதிக்கு எழுந்தருளும் பொழுது வந்து தன்னைவணங்கித் தனது பிரிவையாற்றமாட்டாது நின்ற விபீஷணனுக்கு இக்ஷ்வாகு குலதெய்வமும் தனது திருவாராதனமூர்த்தியுமான திருவரங்கநாதனைத் தந்தருளினனென வரலாறு கூறுதலு முண்டு.

சுரனைக் கொன்ற தலமாதல்பற்றி, இதற்குத் தஞ்சையென்று நாமதேய முண்டாயிற் றென்பர். தஞ்சாவூருக்கு வடக்கே ௩ - மைலில் உள்ளது.

தஞ்சையாளிநகர்:—நரசிங்கப்பெருமாள் - தஞ்சைநாயகி. வேதசுந்தரவிமாநம். சூரியபுஷ்கரிணி - ஸ்ரீராமதீர்த்தம். கிழக்கேதிருமுகமண்டலம் - வீற்றிருந்ததிருக்கோலம். மார்க்கண்டேயருக்கு ப்ரத்யக்ஷம்.

௬. திருவன்பில்:—திருவடிவழகியநம்பி - அழகியவல்லிநாச்சியார். தாரகவிமாநம். மண்டூகபுஷ்கரிணி. கிழக்கே திருமுகமண்டலம் - புஜங்கசயநம். பிரமனுக்கும் வால்மீகருக்கும் ப்ரத்யக்ஷம். திருமழிசையாழ்வார் மங்களாசாஸநம். பூதலூர்க்குவடக்கே ௮ - மைலில் உள்ளது.

௫. திருக்கரம்பனூர் (உத்தமர் கோயில்) :—புருஷோத்தமன் - பூர்வாதேவி. உத்யோக விமாநம். கதம்பதீர்த்தம். வாழைமரம். கிழக்கே திருமுகமண்டலம், புஜங்கசயநம். கதம்பமகரிஷிக்கும், திருமங்கையாழ்வாருக்கும், உபரிசரவசுவுக்கும், ஸநக ஸநந்தன ஸநத்குமாரர்களுக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். திருச்சிக்கோட்டைக்கு வடக்கே ௫ - மைலில் உள்ளது.

௬. திருவெள்ளறை:—புண்டரீகாக்ஷன் - பங்கயச்செல்வி, செண்பகவல்லி. விமலாக்ருதிவிமாநம். குசதீர்த்தம், மணிகர்ணிகாதீர்த்தம், சக்ரதீர்த்தம், திவ்யபுஷ்கரிணி, புஷ்கலதீர்த்தம், பத்மதீர்த்தம், கந்தபுஷ்கரிணி, க்ஷீரபுஷ்கரிணி, வராகதீர்த்தம். ச்வேதகிரி. கிழக்கே திருமுகமண்டலம் - நின்றதிருக்கோலம். பெரியதிருவடிக்கும், சிபிசக்ரவர்த்திக்கும், பூதேவிக்கும், மார்க்கண்டேயருக்கும் ப்ரத்யக்ஷம். பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். உய்யக்கொண்டார் அவதாரஸ்தலம். வெள்ளறை - வெண்மையான பாறைகளாலியன்ற மலை; [அறை - பாறை;] இது, வடமொழியில் 'ஶ்வேதாத்ரி' எனப்படும். திருச்சிக்கோட்டைக்கு வடக்கே ௧௪-மைலில் உள்ளது.

௭. புள்ளம்பூதங்குடி:—வல்விலிராமன்-பொற்றாமரையாள். சோபநவிமாநம். க்ருத்ரதீர்த்தம். கிழக்கேதிருமுகமண்டலம். புஜங்கசயநம். சக்ரவர்த்திதிருமகனுக்கும், க்ருத்ரராஜனுக்கும் ப்ரத்யக்ஷம். க்ருத்ரராஜனுக்கு மோக்ஷம் தந்தவிடம். திருமங்கையாழ்வார், மங்களாசாஸநம். ஜடாயுவென்ற புள்ளிற்கு [பக்ஷிக்கு]ப் பிரதியக்ஷமாய் இராமபிரான் மோக்ஷங்கொடுத்த தலமென்பது, 'புள்ளம் பூதங்குடி' என்பதற்குப் பொருளாகலாம். கும்பகோணத்துக்கு வடமேற்கே ௯ - மைலில் உள்ளது.

௮. திருப்பேர்நகர்:— அப்பக்குடத்தான் - கமலவல்லித்தாயார். இந்திரதீர்த்தம். இந்திரவிமாநம். மேற்கேதிருமுகமண்டலம். புஜங்கசயநம் - வலதுஹஸ்தத்தின்கீழே குடம். இந்திரகிரி. உபமந்யுவுக்கும் பராசரருக்கும் ப்ரத்யக்ஷம். கோவிலடியென்று ஒருபெயர்வழங்கும். பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார் மங்களாசாஸநம். பூதலூர்க்கு வடமேற்கே ௯ - மைலில் உள்ளது.

கூ. திருஆதனூர்:—ஆண்டளக்குமையன் - ஸ்ரீரங்கநாயகியார். ப்ரணவ விமானம். சூரியபுஷ்கரிணி. கிழக்கே திருமுகமண்டலம். புஜங்கசயநம். காமதேனுவுக்கும் திருமங்கையாழ்வாருக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். காமதேநுவுக்குப் பிரதியக்ஷமான தல மாதல்பற்றி, இதற்கு 'ஆதனூர்' என்று திருநாமமாயிற்றுப்போலும். கும்பகோணத்துக்கு வடக்கே ௪0 - மைலில் உள்ளது.

கo. திருவழுந்தூர்:—ஆமருவியப்பன் - செங்கமலவல்லித்தாயார். கருட விமாநம். தர்சநபுஷ்கரிணி. கிழக்கே திருமுகமண்டலம் - நின்றதிருக்கோலம். உபரிசரவசு ராஜாவுக்கும், காவேரிக்கும், தர்மதேவதைக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். தனது தபோபலத்தால் விமானத்துடன் ஆகாசத்திற் சஞ்சரிக்குந் தன்மையனான உபரிசரவஸுவென்னும் அரசன் தேவர்கட்கும் முனிவர்கட்கும் நேர்ந்த விவாதத்தில் பக்ஷபாதமாகத் தீர்ப்புச்சொன்னமையால் ரிஷிகளாற் சபிக்கப்பட்டு பூமியில்விழுகையில் அவனது தேர் அழுந்தப் பெற்ற இடமாதல்பற்றி, இதற்கு, 'அழுந்தூர்' என்று பெயர்வந்த தென்பர்; 'தேரழுந்தூர்' எனவும் வழங்கும். குற்றாலத்துக்குத் தென்கிழக்கே ௩ - மைலில் உள்ளது.

கக. திருச்சிறுபுலியூர்:—அருள்மாகடல் - திருமாமகள் நாச்சியார். நந்தவர்த்தநவிமாநம். அநந்தஸரஸ், மாநஸபுஷ்கரிணி. தெற்கே திருமுகமண்டலம் - புஜங்கசயநம். வ்யாஸமகாமுனிவர்க்கும், வ்யாக்ரபாதருக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம் எம்பெருமான் வியாக்கிரபாத மஹர்ஷிக்குப் பாலசயனமாய்ச் சேவைசாதித்த தலமாதல்பற்றி, இதற்கு 'சிறுபுலியூர்' என்று திருநாமம். மாயவரத்துக்குத்தெற்கே க - மைலிலுள்ளது.

கஉ. திருச்சேறை (ஸாரக்ஷேத்ரம்):—ஸாரநாதன் - ஸாரநாயகி. ஸார விமாநம் ஸாரபுஷ்கரிணி. கிழக்கே திருமுகமண்டலம்-நின்ற திருக்கோலம். காவேரிக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். இத்தலத்தில் எம்பெருமான், நாச்சியார், விமானம், தீர்த்தம், நிலம் என்ற ஐந்து ஸாரமுள்ள பொருள்கள் அமைந்திருத்தலால், இத்தலத்திற்கு 'திருச்சேறை' என்று திருநாமமாயிற்று. இது, வடமொழியில் 'பஞ்சஸாரக்ஷேத்ரம்' என வழங்கப்படுதலுங் காண்க. இவ்வாறு ஸாரமுள்ள பொருள்களையுடைய இத்தலத்தில் காவேரிநதி தவஞ்செய்து கங்காநதியைக்காட்டிலும் சிறப்புப்பெற்றன ளென்பர். கும்பகோணத்துக்குத் தென்கிழக்கே எ-மைலில் உள்ளது.

கங. தலைச்சங்கநாண்மதியம்:—நாண்மதியப் பெருமாள், வெண்சுடர்ப் பெருமாள் - தலைச்சங்கநாச்சியார், செங்கமலவல்லி. சந்திரவிமாநம். சந்திர புஷ்கரிணி. கிழக்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம். தேவர்களுக்கும், சந்த்ரனுக்கும் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். சிறந்தசங்கத்தையேந்திய நாண்மதியப்பெருமானை யுடைய தலமாதல் பற்றி, இத்தலத்திற்கு 'தலைச்சங்கநாண்மதியம்' என்று திருப்பெயரென்பர். சீயாழின் தென்கிழக்கே கக-மைலில் உள்ளது.

கச. **திருக்குடந்தை:**—சார்ங்கபாணிப்பெருமாள், ஆராவமுதன்-கோமளவல்லி. வைதிகவிமாநம். ஹேமபுஷ்கரிணி. கிழக்கே திருமுகமண்டலம். உத்யோகசயநம். ஹேமமகரிஷிக்கு ப்ரத்யக்ஷம். பெரியாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார் மங்களாசாஸநம். கும்பகோணத்துக்கு வடமேற்கே க-மைலில் உள்ளது.

கரு. **திருக்கண்டியூர்:**—அரன்சாபந்தீர்த்தபெருமாள் - கமலவல்லி நாச்சியார். கமலாக்ருதி விமாநம். கபாலதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம். ருத்திரனுக்குக் கபாலநிவர்த்தி செய்தவர். அகஸ்தியருக்கு-ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். சிவபெருமானது சாபத்தைக் கண்டநம்செய்ததுபோலச் சேவைசாதித்த தலமாதலால், இத்தலத்திற்கு 'திருக்கண்டியூர்' என்று திருநாமமாயிற்று. வடமொழியில் 'கண்டநபுரம்' என்று வழங்கும். தஞ்சாவூர்க்கு வடகிழக்கே ரு-மைலில் உள்ளது.

கசா. **திருவிண்ணகர்:**—உப்பிலியப்பன் - பூமிதேவிநாச்சியார். விஷ்ணு விமாநம். ஆர்த்தி புஷ்கரிணி. கிழக்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம். மார்க்கண்டேயருக்கும், பெரியதிருவடிக்கும், காவேரிக்கும், தர்மதேவதைககும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார், பொய்கையாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார் மங்களாசாஸநம். விண்ணகரென்பது-தேவலோகம்போன்றதென்ற காரணம்பற்றிவந்த பெய ரென்னலாம்; இதுவே, உப்பிலியப்பன் ஸந்நிதி யெனப்படுவது.) இத்தலத்து எம்பெருமான் திருநாமமான-உப்பிலியப்பன் என்பதை ஒப்பிலியப்பனென்றும் வழங்குவர். இத்தலத்து எம்பெருமான் திருவேங்கடமுடையான்போன்ற திருவுருவ முள்ளவராய், அன்பர்களின் அபிமதத்தைப் பூர்த்திசெய்கின்றனரென்றும், மிருகண்டுமுனிவர் பத்தினியினது விருப்பத்தின்படி உபயில்லாத பிரசாதங்களையே அமுதுசெய்கின்றனரென்றும் அறிக. கும்பகோணத்துக்குக் கிழக்கே ௩ - மைலில் உள்ளது.

கஎ. **திருக்கண்ணபுரம்:**— சௌரிராஜன் - கண்ணபுரநாயகி. உத்பலாவதகவிமானம். நித்யபுஷ்கரிணி. கிழக்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம். கண்வமாமுனிக்கு ப்ரத்யக்ஷம். பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் மங்களாசாஸநம். திருக்கண்ணபுரமென்பது, பஞ்சகிருஷ்ணக்ஷேத்ரங்களுள் ஒன்று; (மற்றவை - திருக்கண்ணங்குடி, திருக்கண்ணமங்கை, திருக்கண்ணன்கவித்தலம், திருக்கோவலூர் என்பன என்பர்.) இத்தலத்தின்மறுபெயர், கண்வபுரம். இத்தலத்தில் விமானம் - உத்பலாவதகம்; அதன்பொருள் வருமாறு:—பலம் - மாமிசம், அது சோஷிக்கப்பெற்றவர் - உத்பலர்: அவராவார் - தேகத்தை உபேக்ஷிக்கின்ற முமுக்ஷுக்கள்: அவர்களைக்காக்கின்ற கடவுள் எழுந்தருளியிருக்கும் விமானமாதலால், இதற்கு 'உத்பலாவதகம்' என்று திருநாமம். இதுபற்றியே, "மாணமாளுல் வைகுந்தங்கொடுக்கும் பிரான்" என்று நம்மாழ்வார் மங்களாசாசனஞ் செய்ததும். இவ்விமானம் பிரதக்ஷிணஞ் செய்யும்போது கட்புலனுகாதவாறு கட்டப்பெற்றுள்ள தென்பர். நன்னிலத்துக்குக் கிழக்கே ச-மைலில் உள்ளது.

கஅ. **திருவாலி திருநகரி:**—வயலாலி மணவாளன் - அம்ருதகடவல்லி. அஷ்டாக்ஷர விமாநம். இலாக்ஷணி புஷ்கரிணி. மேற்கே திருமுகமண்டலம் -

வீற்றிருந்த திருக்கோலம். அலாதநிகஞ்சமப்ரஜாபதிக்கும், திருமங்கையாழ்வாருக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். எம்பெருமானைத் திருமகள் ஆலிங்கனஞ் செய்துகொண்ட தலமாதல்பற்றி, இதற்கு 'திருவாலி' என்று பெயர். சீயாழிக்குக் கிழக்கே ௬-மைலில் உள்ளது.

௧௯. திருநாகை (நாகப்பட்டணம்):— சௌந்தர்யராஜன் - சௌந்தர்ய வல்லி. சௌந்தர்ய விமாநம். ஸாரபுஷ்கரிணி. கிழக்கே திருமுகமண்டலம்-நின்ற திருக்கோலம். நாகராஜனுக்கும், திருமங்கையாழ்வாருக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார்மங்களாசாஸநம். நாகை - நாகபட்டணமென்பதன் மரூஉ. நாகராஜனுக்குப் பிரதியக்ஷமான தலமாதலால், இதற்கு 'திருநாகை' என்று பெயர். நாகப்பட்டணத்துக்கு மேற்கே கால் - மைலில் உள்ளது.

௨௦. திருநறையூர் (நாச்சியார் கோயில்.):—நம்பி - நம்பிக்கை நாச்சியார். ஸ்ரீநிவாஸவிமாநம். மணிமுக்தாநதி. கிழக்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். நறுமணம்மிக்க தலமென்பதுபற்றி, இதற்கு 'திருநறையூர்' என்று திருநாமம்; வடமொழியில், 'ஸுகந்தகிரி' என்று எம்பெருமான் எழுந்தருளியிருக்குமிடத்தை வழங்குவதுங் காண்க. இங்கு, கந்யாசுல்கமாக நாச்சியாருக்குப் பிராதானியத்தை எம்பெருமான் அளித்ததனால், இத்தலத்திற்கு 'நாச்சியார்கோவில்' என்று ஒரு பெயர்வழங்குகின்றது. இத்தலத்து எம்பெருமான், மேதாவிமுனிவரின் கன்னிகையைப் பலியென்னும் அசுரன் கவர்ந்துசெல்ல அவனைச்சபித்து அக்கன்னிகையை அம்முனிவர்க்கு அருள்செய்தனரென்றும், திருமங்கையாழ்வார்க்குத் திருவிலச்சினை பிரசாதித்தனரென்றும் அறிக. இங்கே கருடன் விசேஷம். கும்பகோணத்துக்குத் தென்கிழக்கே ௬-மைலில் உள்ளது.

௨௧. நந்திபுரவிண்ணகரம் (நாதன்கோவில்.):—விண்ணகரப்பெருமான், ஜகந்நாதன், நாதநாதப்பெருமாள் - செண்பகவல்லி. மந்தாரவிமாநம். நந்தி தீர்த்தம். மேற்கே திருமுகமண்டலம் - வீற்றிருந்த திருகோலம். நந்திக்கும், சிபி சக்ரவர்த்திக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். நந்திதேவர்க்குப் பிரத்யக்ஷமான சிறந்த நகரமாதல்பற்றி, இத்தலத்திற்கு, 'திருநந்திபுரவிண்ணகரம்' என்று திருநாமம்: இது, 'நாதன்கோவில்' என வழங்கும். கும்பகோணத்துக்குத் தென்மேற்கே ௩ - மைலில் உள்ளது.

௨௨. திரு இந்தளூர்:—சுகந்தவனநாதன், மருவினிய மைந்தன் - சந்திர சாபவிமோசன வல்லி, புண்டரீகவல்லி. வேதசக்ர விமானம். இந்து புஷ்கரிணி. கிழக்கே திருமுகமண்டலம் - வீரசயனம். சந்திரனுக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். சந்திரன் தனது சாபம் நீங்கப்பெற்ற தலமாதலால், 'திருவிந்தளூர்' என்று இத்தலத்திற்குப் பெயரென்பர். இதற்கு வடமொழியில் 'ஸுகந்தவநம்' என்று திருநாமம் வழங்குகின்றது. மாயவரத்துக்கு வடகிழக்கே ௩-மைலில் உள்ளது.

௨௩. திருச்சித்திரகூடம்:—கோவிந்தராஜன் - புண்டரீகவல்லி. ஸாத்விக விமாநம். புண்டரீக ஸரஸ். கிழக்கே திருமுகமண்டலம் - போகசயநம்.

சிவன் முதலிய தில்லைமூவாயிரவருக்கு ப்ரத்யக்ஷம். குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். சித்திரகூடம் - விசித்திரமான சிகரங்களையுடையதெனப் பொருள்படுங் காரணப்பெயர். இது, இராமபிரான் வனவாசஞ்செய்தபொழுது அவ்வெம்பெருமானது திருவுள்ளத்திற்கு மிகவும்பாங்காயிருந்ததொரு மலை; அதனைபபோலவே, இத்தலமும் எம்பெருமானது திருவுள்ளத்திற்கு மிகவும் பாங்காயிருப்ப தென்பதுபற்றி, அப்பெயரே இதற்கும் இடப்பட்ட தென்பர். இங்கு உத்ஸவமூர்த்தி, இராமபிரான் வனவாசஞ்செய்கையில் சித்திரகூடபருவதத்தில் வீற்றிருந்தவண்ணமாக எழுந்தருளி யிருக்கின்றனர்; மூலமூர்த்தி, க்ஷீராப்திநாதன்போலச் சயனத்திருக்கோலமாகிச் சிவபிரானது நடனத்தைப் பார்த்து ஆமோதித்துக்கொண்டு எழுந்தருளியிருக்கின்றனர். இது, தில்லைமரங்க ளடர்ந்த காடாயிருந்ததனால், 'தில்லைத்திருச்சித்திரகூடம்' என்று வழங்கப்படும். இது, எம்பெருமான் தேவர்களும் முனிவர்களும் சூழக் கொலுவீற்றிருந்த சபை. சிதம்பரத்துக்கு வடமேற்கே க - மைலில் உள்ளது.

உ௪. காழிச்சீராமவிண்ணகரம்:—தாடாளன், த்ரிவிக்ரமமூர்த்தி-மட்டவிழுங்குழலி. புஷ்கலாவர்த்தக விமாநம். சக்ரதீர்த்தம், சங்கபுஷ்கரிணி. கிழக்கே திருமுகமண்டலம் - நின்றதிருக்கோலம். அஷ்டகோணமகாரிஷிக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். சக்கரவர்த்தித் திருமகனெழுந்தருளியிருக்கின்ற சிறந்தநகரமாதல்பற்றி, இத்தலத்திற்கு 'சீராமவிண்ணகரம் என்று பெயர்: காளி வாசஞ்செய்கிற காரணம்பற்றி இத்தலத்திற்குக் காழிச்சீராமவிண்ணகரமென்றும் பெயருண்டு. (இது, சீர்காழியென்றும் வழங்கப்படும்.) இது, திருஞானசம்பந்தமூர்த்திநாயனரைத் திருமங்கையாழ்வார் தமது கவித்திறத்தினால் வென்று அவரது வெற்றிவேலைத் திருமுன்காணிக்கையாகப் பெற்ற தலம். சீயாழிக்குக் கிழக்கே அரைமைலில் உள்ளது.

உ௫. கூடலூர். (ஆடுதுறைப் பெருமாள்கோவில்):—வையங்காத்தபெருமாள் - பத்மாஸநவல்லி. சுத்தஸத்வ விமாநம். சக்ரதீர்த்தம் - காவேரிநதி. கிழக்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம் நந்தகமாமுனிக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். தேவர்கள் கூட்டமாகவந்து எம்பெருமானைச் சேவிக்குந் தலமாதலால், 'திருக்கூடலூர்' என்று இத்தலத்திற்குத் திருநாம மென்பர். ஐயம்பேட்டைக்கு வடமேற்கே ௪-மைலில் உள்ளது.

உ௬. திருக்கண்ணங்குடி:—ச்யாமளமேனிப்பெருமாள் - அரவிந்தவல்லி நாச்சியார். உத்பலவிமாநம். ராவணபுஷ்கரிணி. கிழக்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம். ப்ருகுதைத்யருக்கும், கௌதமமுனிக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். கண்ணன் வாழ்கின்ற இடமாதலால், இத்தலத்திற்கு 'திருக்கண்ணன்குடி' என்று பெயர்; அதுவே கண்ணங்குடியென்று வழங்குவதாயிற்று. இத்தலத்தைக்குறித்து 'உறங்காப்புளி, ஊறாக்கிணறு, காயாமகிழ், தீராவழக்கு, திருக்கண்ணங்குடி' என்று ஒருபழமொழி வழங்கும். கீவளூர்க்குக் கிழக்கே உ - மைலில் உள்ளது.

௨௭. திருக்கண்ணமங்கை:— பக்தவத்ஸலப்பெருமாள் - அபிஷேகவல்லித்தாயார். உத்பலவிமாநம் தர்சநபுஷ்கரிணி கிழக்கே திருமுகமண்டலம்- நின்றதிருக்கோலம். வருணனுக்கும், உரோமசருக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். திருவாலூர்க்கு வடமேற்கே ௪-மைலில் உள்ளது.

௨௮. கவித்தலம்:— கஜேந்த்ரவரதர் - ரமாமணிவல்லி, பொற்றாமரையாள். ககநாக்ருதிவிமாநம். கஜேந்திர புஷ்கரிணி, கபிலதீர்த்தம் கிழக்கே திருமுகமண்டலம் - புஜங்கசயநம். கஜேந்திரனுக்கும், ஆஞ்சநேயருக்கும் ப்ரத்யக்ஷம் திருமழிசையாழ்வார் மங்களாசாஸநம். அநுமானுக்கு ப்ரத்யக்ஷமான தலமாதலால், இத்திருப்பதிக்கு, 'திருக்கவித்தலம்' என்று பெயரென்பர். பாபநாசத்துக்கு வடமேற்கே ௨-மைலில் உள்ளது.

௨௯. திருவெள்ளியங்குடி:—கோலவில்லிராமன் - மரகதவல்லிநாச்சியார். புஷ்கலாவர்த்தகவிமாநம். சுக்ரபுஷ்கரிணி, பிரமதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம் - புஜங்கசயநம். வாழைமரம். சுக்ரனுக்கும் பிரம்மாவுக்கும் பராசரருக்கும் இந்திரனுக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். சுக்கிராசாரியனுக்கு ப்ரத்யக்ஷமான தலமாதலால், இத்திருப்பதிக்கு 'திருவெள்ளியங்குடி' என்று பெயர்: 'பார்க்கவபுரி' என்று இத்தலத்திற்கு வடமொழியில் ஒருபெயர் வழங்குதலுங் காண்க. திருவிடைமருதூர்க்கு வடக்கே ௫ - மைலில் இருக்கிறது.

௩௦. திருமணிமாடக்கோயில்:—நந்தாவிளக்குப்பெருமாள், நராநாராயணன் - புண்டரீகவல்லி. ப்ரணவவிமாநம், இந்த்ரபுஷ்கரிணி, ருத்ரபுஷ்கரிணி கிழக்கே திருமுகமண்டலம் - வீற்றிருந்த திருக்கோலம் ஏகாதசருத்ரருக்கும் இந்திரனுக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். இதுமுதற் கூறப்படுகின்ற திருப்பதிகள் பதினொன்றையும், 'திருநாங்கூர்த்திருப்பதிகள்' என வழங்குவர். அழகிய உபரிகைவீடுகள் நிறைந்து எம்பெருமானெழுந்தருளியிருக்கின்ற தலமாதலால், இத்தலத்திற்கு, 'திருமணிமாடக்கோயில்' என்று பெயர் வந்ததுபோலும். சீயாழிக்குக் கிழக்கே ௫ - மைலில் உள்ளது.

௩௧. திருவைகுந்தவிண்ணகரம்:—வைகுந்தநாதன், தாமரைக்கண்ணுடையபிரான் - வைகுந்தவல்லி. அநந்தசத்யவர்த்தகவிமாநம். லக்ஷ்மிபுஷ்கரிணி, உதங்கபுஷ்கரிணி, விரஜை. கிழக்கே திருமுகமண்டலம் - வீற்றிருந்த திருக்கோலம். உபரிசரவஸுராஜாவுக்கும் உதங்கமகரிஷிக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். ஸ்ரீவைகுண்டத்தில் எம்பெருமான் எழுந்தருளி யிருப்பதுபோலவே இத்தலத்தில் வீற்றிருந்த திருக்கோலமாகச் சேவைசாதித்தலால், இத்திருப்பதிக்கு 'திருவைகுந்தவிண்ணகரம்' என்று பெயரென்பர். சீயாழிக்குக் கிழக்கே ௫-மைலில் உள்ளது.

௩௨. திருஅரிமேயவிண்ணகரம்:—குடமாடுகூத்தர் - அம்ருதகடவல்லி. உச்சச்ருங்கவிமாநம். கோடிதீர்த்தம், அம்ருததீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம் - வீற்றிருந்த திருக்கோலம். உதங்கமகரிஷிக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். 'திருஅரிமேயவிண்ணகரம்' என்பது - அரிபொருந்

டிய விண்ணகரம் போன்றது எனப் பொருள்படும். ('அரியென்ற சொல்-அழகு திருமால் குரங்கு சிங்கம் தவளை மூங்கில் முதலிய பலபொருளுள்ளது.) சீயாழிக்குத் தெற்கே க - மைலில் உள்ளது.

௩௩. **திருத்தேவனார் தொகை**:—தெய்வநாயகப்பெருமாள் - கடல்மகள் நாச்சியார். சோபநவிமாநம். சோபநபுஷ்கரிணி, தேவஸபாபுஷ்கரிணி. மேற்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம். வஸிஷ்டருக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். தேவர்கள் சபைகூடின இடமாதலால், இத்திருப்பதிக்கு 'திருத்தேவனார்தொகை' என்று பெயராயிற் றென்னலாம். சீயாழிக்குத் தென்கிழக்கே ௪ - மைலில் உள்ளது.

௩௪. **திருவண்புருடோத்தமம்**:—புருஷோத்தமன் - புருஷோத்தமநாயகி. சஞ்சீவிக்ரஹவிமாநம். திருப்பாற்கடல் தீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம். உபமந்யுவுக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். புருஷோத்தமனென்ற வடசொல் - பத்தர்களும் முக்தர்களும் நித்யர்களுமாகிய புருஷர்கள் யாவரினுஞ் சிறந்தவனென்று பொருள்படும். புருஷோத்தம னெழுந்தருளியிருக்கின்ற வளப்பமுள்ள திருப்பதி யாதலால், இதற்கு 'திருவண்புருடோத்தமம்' என்று பெயர். சீயாழிக்குக் கிழக்கே ௫ - மைலில் உள்ளது.

௩௫. **திருச்செம்பொன்செய்கோயில்**:—பேரருளாளர் - அல்லிமாமலர் நாச்சியார். கநகவிமாநம். கநகதீர்த்தம். ஹேமபுஷ்கரிணி. கிழக்கே திருமுக மண்டலம்-நின்ற திருக்கோலம். ருத்ரனுக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். சீயாழிக்குக் கிழக்கே ரு - மைலில் உள்ளது.

௩௬. **திருத்தெற்றியம்பலம்**:—செங்கண்மால் - செங்கமலவல்லி. வேத விமாநம். ஸூர்யபுஷ்கரிணி. கிழக்கே திருமுகமண்டலம் - புஜங்கசயநம். செங்கமலவல்லிநாச்சியாருக்கும், அநந்தனுக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். சீயாழிக்குக் கிழக்கே ரு - மைலில் உள்ளது.

௩௭. **திருமணிக்கூடம்**:—மணிக்கூடநாயகன் - திருமாமகள் நாச்சியார். கநகவிமானம். சந்திரபுஷ்கரிணி. கிழக்கே திருமுகமண்டலம் - நின்றதிருக் கோலம். பெரிய திருவடிக்கும், சந்திரனுக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ் வார் மங்களாசாஸநம். சீயாழிக்குக் கிழக்கே ரு - மைலில் உள்ளது.

௩௮. **திருக்காவளம்பாடி**:— கோபாலக்ருஷ்ணன் - மடவரல்மங்கை, செங்கமலநாச்சியார். ஸ்வயம்பு விமாநம். தடமலர்ப்பொய்கை. கிழக்கே திரு முகமண்டலம் - நின்றதிருக்கோலம். சேனைத்தலைவருக்கும், ருத்ரனுக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். சீயாழிக்குக் கிழக்கே எ - மைலில் உள்ளது.

௩௯. **திருவெள்ளக்குளம்**:—கண்ணன், நாராயணன் - பூவார் திருமகள் நாச்சியார். தத்வத்யோதக விமாநம். வெள்ளக்குளதீர்த்தம். கிழக்கே திருமுக மண்டலம் - நின்ற திருக்கோலம். இக்ஷ்வாகு வம்சத்தில் ச்வேதராஜனுக்கும் ருத்ரனுக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். சீயாழிக்குத் தென்கிழக்கே ௪ - மைலில் உள்ளது.

௪௦. **திருப்பார்த்தன்பள்ளி:**—தாமரையாள் கேள்வன் - தாமரைநாயகி. நாராயண விமாநம். சங்கஸரஸ். மேற்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம். பார்த்தனுக்கும் வருணனுக்கும் ஏகாதச ருத்ரருக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் பொய்கையாழ்வார் மங்களாசாஸநம். சீயாழிக்குத் தென்கிழக்கே எ - மைலில் உள்ளது.

சோழநாட்டுத் திருப்பதிகள் ஸம்பூர்ணம்.

பாண்டியநாட்டுத் திருப்பதிகள் - ௧௮.

௪௧. **திருமாலிருஞ்சோலை:**—அழகர், மாலலங்காரர் - சுந்தரவல்லிநாச்சியார். சோமசுந்தரவிமாநம். சிலம்பாறு. கிழக்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம். வ்ருஷபகிரி. சந்தனவிருக்ஷம். மலயத்வஜபாண்டியனுக்கும் தர்மதேவதைக்கும் ப்ரத்யக்ஷம். பெரியாழ்வார் ஆண்டாள் திருமங்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் நம்யாழ்வார் மங்களாசாஸநம். மதுரைக்கு வடகிழக்கே ௧௨ - மைலில் உள்ளது.

௪௨. **திருக்கோட்டியூர்:**—ஸௌம்ய நாராயணன் - திருமாமகள் நாச்சியார். அஷ்டாங்கவிமாநம் தேவபுஷ்கரிணி. கிழக்கே திருமுகமண்டலம் - நின்றும் இருந்தும் நடந்தும் கிடந்தும் கூத்தாடியும் நின்றதிருக்கோலம். கதம்பமகரிஷிக்கும் இந்திரனுக்கும் ப்ரத்யக்ஷம். பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார் மங்களாசாஸநம். இரணியாசுரன் மூவுலகத்தையும் ஆட்சிசெய்தகாலத்தில் தேவர்கள் அவ்வசுரனையொழித்தற்கு வேண்டும் உபாயத்தை ஆலோசிப்பதற்கு ஏற்றதாய், அசுரரூபத்திரவமில்லாத இடத்தைத் தேடுகையில் கதம்பமுனிவரது சாபத்தால் 'துஷ்டர் ஒருவரும் வரக்கூடாது' என்று ஏற்பட்டிருந்த இந்த க்ஷேத்ரம் அவர்கள் கூட்டமாக இருந்து ஆலோசித்தற்கு ஏற்ற இடமாயிருந்த காரணம்பற்றி, இத்தலத்திற்கு 'கோஷ்டீபுரம்' என்று வடமொழியிற் பெயர்; அதுவே 'கோட்டியூர்' எனத் தமிழில் வழங்குகின்றது. எம்பெருமானார் திருக்கோட்டியூர் நம்பியினிடத்துத் திருமந்திரத்தை உபதேசங்கொண்டருளி விமானத்தின்மீது ஏறியிருந்து பரமரஹஸ்யமான அந்தத் திருமந்த்ரத்தை எல்லாருங் கேட்டு உய்வுபெறுமாறு உரத்துவெளியிட்ட இடம் இது. மானாமதுரைக்கு வடகிழக்கே ௨௭ - மைலில் உள்ளது.

௪௩. **திருமெய்யம்:**—ஸத்யகிரிநாதன் - உய்யவந்தாள். ஸத்யகிரிவிமாநம். ஸத்யகிரி ஸத்யதீர்த்தம், கதம்ப புஷ்கரிணி. பலாவிருக்ஷம். கிழக்கே திருமுகமண்டலம் - நின்றதிருக்கோலம். ஸத்யதேவதைகளுக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். ஸத்யதேவதைகள் திருமாலைநோக்கித் தவஞ்செய்த தலமாதல்பற்றி, இத்திருமலை ஸத்யகிரி யென்றும், அங்குத்தோன்றிய திருமால் ஸத்யகிரிநாதரென்றும் பெயர்பெறுவர்; சத்தியகிரியென்ற அச்சொல்லே திருமெய்யமலை யென்றும், அத்திருப்பதி திருமெய்யமென்றும் வழங்கப்பெறும். மானாமதுரைக்கு வடகிழக்கே ௫௰ - மைலில் உள்ளது. அன்றி, திருச்சிராப்பள்ளிக்குத் தெற்கே ௪௰ - மைலில் உள்ளது.

சச. திருப்புல்லாணி(தர்ப்பசயநம்.):— கல்யாணஜகந்நாதன் - தெய்வச்சிலையார் - கல்யாணவல்லி. கல்யாணவிமானம். ஹேமதீர்த்தம், சக்ரதீர்த்தம். அச்வத்தவிருக்ஷம். கிழக்கே திருமுகமண்டலம் - வீற்றிருந்ததிருக்கோலம். புல்லாரண்யமகரிஷிக்கும், அச்வத்தநாராயணனுக்கும் ப்ரத்யக்ஷமாய்,ஸ்ரீராமன் சமுத்திரராஜனுக்கு வரங்கொடுத்த இடம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். புல்லாணி - புல்லணையென்பதன் மரூஉ: இது, சீதையைக் கவர்ந்து சென்ற இராவணனைக் கொல்லுதற்பொருட்டு இராமபிரான் வானரசேனையுடனே புறப்பட்டுச் சென்று தென்கடற்கரையை யடைந்து கடல்கடக்க உபாயஞ்சொலவேண்டு மென்று அக்கடலரசனை வருணனைப் பிரார்த்தித்துத் தருப்பத்திற் படுத்து ஏழுநாளளவும் பிராயோபவேசமாகக் கிடந்த தல மாதலால், இது வடமொழியில் தர்ப்பசயநம் எனப்படும்; புல்லணை என்பது - அதற்குஏற்ற தென்மொழி. ராமநாதபுரத்துக்குத்தெற்கே கூ-மைலில் உள்ளது.

சரு. திருத்தண்கால்:—அப்பன், தண்காலப்பன் - அன்னநாயகி, அநந்தநாயகி, நாச்சியார் நால்வர். தேவசந்த்ர விமாநம். பாப விநாச தீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம். சல்லிய பாண்டியனுக்கும் ஸ்ரீவல்லபனுக்கும் புலிக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார் மங்களாசாஸநம் சாத்தூர்க்கு மேற்கே கஅ - மைலில் உள்ளது.

சசா. திருமோகூர்:—காளமேகப்பெருமாள் - திருமோகூர்வல்லி, மேகவல்லி நாச்சியார். கேதகி விமானம். க்ஷீராப்தி புஷ்கரிணி. கிழக்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம் - அஜருத்ரேந்த்ராதிகளுக்கு பரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் நம்மாழ்வார் மங்களாசாஸநம். இத்தலம் - வடமொழியில் ஸ்ரீமோஹநபுரம் எனப்படும். மதுரைக்கு வடகிழக்கே எ - மைலில் உள்ளது.

சஎ. திருக்கூடல் (தென்மதுரை):—கூடலழகர் - வகுளவல்லிநாச்சியார், மரகதவல்லிநாச்சியார், வரகுணவல்லி, மதுரைவல்லி. அஷ்டாங்கவிமானம். ஹேமபுஷ்கரிணி, சக்ரதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம் - வீற்றிருந்த திருக்கோலம். சௌநகாதிகளுக்கும் ப்ருகுமகாரிஷிக்கும் பெரியாழ்வாருக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். பெரியாழ்வார்க்குச் சேவைசாதித்த அவ்வெம்பெருமான், அஷ்டாங்கவிமானத்தின்மீது எழுந்தருளியிருக்கின்ற 'வையந்தாயபெருமான்' என்பர். கூடல் என்பது தென்மதுரைக்கு ஓர்பெயர். மதுரைக்குக்கிழக்கே அரைமைலில் உள்ளது.

சஅ. ஸ்ரீவில்லிபுத்தூர் :—வடபத்ரசயநர், ரங்கமன்னார்-ஆண்டாள், கோதைநாச்சியார். ஸம்சநவிமாநம. திருமுக்குளதீர்த்தம்.கிழக்கே திருமுகமண்டலம்-வடபத்ரசயனம்-நின்றதிருக்கோலம். மண்டூகமகரிஷிக்கும் பெரியாழ்வாருக்கும் ப்ரத்யக்ஷம். பெரியாழ்வாரும் ஆண்டாளும் அவதரித்ததலம். பெரியாழ்வார் ஆண்டாள் மங்களாசாஸநம். வில்லி கண்டர் என்பவர்களில் மூத்தவனான வில்லியென்பவனால் ஏற்படுத்தப்பட்ட புதியநகரமாகையால், இதற்கு, 'ஸ்ரீவில்லிபுத்தூர்' என்று திருநாம மென்பர். சாத்தூர்க்கு மேற்கே 22-மைலில் உள்ளது.

௪௯. **திருக்குருகூர்** (ஆழ்வார்திருநகரி.):—ஆதிநாதப்பெருமாள், பொலிந்து நின்றபிரான் - ஆதிநாதவல்லி. கோவிந்தவிமானம். தாம்ரபர்ணிநதி - ப்ரம்மதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம். ப்ரம்மாவுக்கும் நம்மாழ்வாருக்கும மதுரகவிகளுக்கும் ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம் ஒருநாள் பிரமன் 'எங்குத்தவஞ்செய்வது?' என்று சிந்தைகொண்டிருக்கையில், 'கா-பிரமனே! குரு-(இங்குத் தவஞ்)செய்' என்று இத்தலத்தைச் சுட்டி ஆகாயவாணி மொழிந்ததனால், இதற்கு 'குருகாபுரீ' என்று பெயர்வந்ததென்பர். இத்தலம், நம்மாழ்வார் திருவவதரித்த தலமாதல்பற்றி, 'ஆழ்வார் திருநகரி' என்று பெயர்பெறும். திருநெல்வேலிக்குக் கிழக்கே ௧௯-மைலில் உள்ளது.

௫0 **துலைவில்லிமங்கலம்**:—தேவபிரான், அரவிந்தலோசனன் - கருந்தடங்கண்ணி. குமுதவிமானம். தாம்ரபர்ணி நதி, வருணதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம் - நின்றதிருக்கோலம் - வீற்றிருந்த திருக்கோலம். இந்திரன் வாயு வருணன் இவர்களுக்கு ப்ரத்யக்ஷம். இங்கே இரண்டு திருபபதிகள் உள்ளதனால், இரட்டைத்திருப்பதி யென்றும் பெயர்வழங்கும். திருநெல்வேலிக்கு வடககே ௨௫-மைலில் உள்ளது.

௫௧. **சிரீவரமங்கை** (வானமாமலை):—வானமாமலைப்பெருமாள், தெய்வநாயகன், தோதாத்ரிப்பெருமாள் - சிரீவரமங்கை நாச்சியார். நந்தவர்த்தநவிமானம். இந்த்ரபுஷ்கரிணி, சேற்றுத்தாமரை. கிழக்கே திருமுகமண்டலம்-வீற்றிருந்த திருக்கோலம். ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவி சேனைமுதலியார் பெரியதிருவடி இவர்களுடனும், சாமரகன்னிகைகள் சந்திரசூரியர் பக்கத்திலிருக்க, இந்திரனுக்கும் பரமமாவுக்கும் உரோமசரிஷிக்கும் பிருகுரிஷிக்கும் மார்க்கண்டேயருக்கும் ப்ரத்யக்ஷம். நமமாழ்வார் மங்களாசாஸநம். சிரீவரமங்கையென்பது - அத்தலத்திற்கு அங்குஎழுந்தருளியுள்ள நாச்சியாரின் திருநாமத்தால் வந்தது; அங்கு எழுந்தருளியுள்ள எம்பெருமான் திருநாமத்தைக் கொண்டு, இந்தத்திவ்யதேசத்தை 'வானமாமலை' என்றும் வழங்குவர். அதற்கு ஏற்ற வடமொழித்திருநாமம், 'தோதாத்ரி' என்பது. திருநெல்வேலிக்குத் தெற்கே ௧௮ - மைலில் உள்ளது.

௫௨. **திருப்புளிங்குடி**:—காய்சினவேந்தன் - மலர்மகள்நாச்சியார், புளிங்குடிவல்லி. வேதஸாரவிமானம் வருணதீர்த்தம், நிருதிதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம்-புஜங்கசயனம். நிருதி வருணன் தர்மராஜா இவர்களுக்கு ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம். திருநெல்வேலிக்குக் கிழக்கே ௧௭-மைலில் உள்ளது.

௫௩. **திருப்பேரை**:—மகரநெடுங்குழைக்காதர், நிகரில்முகில்வண்ணன்-குழைக்காதுவல்லிநாச்சியார். பத்ரவிமானம். சுக்ரபுஷ்கரிணி. கிழக்கே திருமுகமண்டலம்-வீற்றிருந்ததிருக்கோலம். சுக்ரனுக்கும் பரம்மாவுக்கும் ஈசாநயருத்ரனுக்கும் ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம். திருநெல்வேலிக்குக் கிழக்கே ௨௪-மைலில் உள்ளது.

௫௪. ஸ்ரீவைகுந்தம்:—கள்ளப்பிரான், வைகுந்தநாதன் - வைகுந்தவல்லி. சந்த்ரவிமானம். தாம்ரபர்ணிநதி, ப்ருகுதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம்-நின்ற திருக்கோலம். இந்திரனுக்கும் பிருதுசக்ரவர்த்திக்கும் ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம். திருநெல்வேலிக்குக் கிழக்கே கரு-மைலில்உள்ளது.

௫௫. வரகுணமங்கை:—விஜயாஸநர் - வரகுணவல்லி. விஜயகோடி விமானம். தேவபுஷ்கரிணி. அக்கினிதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம் - வீற்றிருந்த திருக்கோலம் அக்நிக்கு ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம். திருநெல்வேலிக்கு வடகிழக்கே கஅ-மைலில் உள்ளது.

௫௬. திருக்குளந்தை (பெருங்குளம்.):—மாயக்கூத்தன் - குளந்தைவல்லி. ஆனந்தநிலயவிமானம். பெருங்குளதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம்-நின்றதிருக்கோலம். ப்ருஹஸ்பதிக்கு ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம். இந்தத்தலம் - பெரியகுளத்தையுடைய தாதலின், 'பெருங்குளம்' என்று வழங்குகின்றது: ஆகவே, குளந்தை யென்பது மரூஉமொழிபோலும். திருநெல்வேலிக்கு வடகிழக்கே உரு-மைலில் உள்ளது.

௫௭. திருக்குறுங்குடி:—வைஷ்ணவநம்பி மலைமேல்நம்பி நின்றநம்பி இருந்தநம்பி கிடந்தநம்பி திருப்பாற்கடல்நம்பி - குறுங்குடிவல்லி. பஞ்சகேதகவிமானம். திருப்பாற்கடல்நதி, பஞ்சதுறை கிழக்கே திருமுகமண்டலம் - நின்றதிருக்கோலம். பக்கம்நின்ற சிவனுக்கு ப்ரத்யக்ஷம். பெரியாழ்வார் திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார் நம்மாழ்வார் மங்களாசாஸநம். சண்டாளஜந்மத்திற் பிறந்த நம்பாடுவான் தன்னை யுண்ணுமாறு வந்த பிரமராக்ஷஸுக்கு முன்புசபதஞ்செய்துகொடுத்து, இத்தலத்து எம்பெருமானைக்குறித்துக் கைசிகமென்னும் பண்பாடி வழிபட்டு மீண்டு, முன்னர்ப் பிராமணனாகிக் கருமாநுஷ்டாநத்திற் கொத்தையினால் பிரமரக்ஷஸான அவனை உய்வித்த தலம் இதுவே. குறுகியவனை வாமனனது க்ஷேத்ர மாதலால், இத்தலத்திற்குக் குறுங்குடியென்று பெயர்வந்த தென்பர். இத்தலத்திலுள்ள எம்பெருமான்களுள் ஓர் எம்பெருமான் ஸ்ரீபாஷ்யகாரர்பக்கலிலே வேதாந்தார்த்தம் கேட்டுச் சிஷ்யனாய் 'நாமும் நம்மிராமாநுசனை யுடையோம்' என்கையாலே, அப்பெருமானுக்கு வைஷ்ணவநம்பியென்று திருநாமம. நம்மாழ்வார் திருவவதாரத்திற்குக் காரணமாயிருந்தவரும் இத்தலத்துநம்பியே. திருநெல்வேலிக்குத் தெற்கே உரு-மைலில் உள்ளது.

௫அ. திருக்கோளூர்:—வைத்தமாநிதி (நிக்ஷேபவித்தன்)-கோளூர் வல்லி நாச்சியார். ஸ்ரீகரவிமானம். குபேரதீர்த்தம், தாம்ரபர்ணிநதி. கிழக்கே திருமுகமண்டலம் - புஜங்கசயநம். குபேரனுக்கும் மதுரகவியாழ்வாருக்கும் ப்ரத்யக்ஷம். மதுரகவியாழ்வார் அவதாரஸ்தலம். நம்மாழ்வார் மங்களாசாஸநம். நவநிதிகள் இங்கே ஒளித்துக்கொண்டிருக்கின்றன என்று அதருமம் குபேரனுக்குக் கோள்சொல்லிய இடமாதல்பற்றி, இத்தலத்திற்குத் திருக்கோளூரென்று பெய ரென்பர்; பிரஹ்மக்ஷேத்ரம் என்று வடமொழியிற் பெயர் வழங்கும். திருநெல்வேலிக்குக் கிழக்கே உ௦ - மைலில் உள்ளது.

பாண்டியநாட்டுத் திருப்பதிகள் ஸம்பூர்ணம்.

மலைநாட்டுத்திருப்பதிகள் - ௧௩.

௫௯. **திருவநந்தபுரம்:**—அநந்தபத்மநாபன் - ஸ்ரீஹரிலக்ஷ்மி. ஹேமகூட விமாநம். மத்ஸ்யதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம் - புஜங்கசயநம். ருத்ரனுக்கும் சந்திரனுக்கும் இந்திரனுக்கும் ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம். திருநெல்வேலிக்குத்தென்மேற்கே ௮௮-மைலில் உள்ளது.

௬௦. **திருவண்பரிசாரம்:**—திருக்குறளப்பன் திருவாழ்மார்பன் - கமலவல்லிநாச்சியார். இந்த்ரகல்யாண விமாநம். லக்ஷ்மிதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம் - சயனத் திருக்கோலம். விந்தைக்கும் காரிக்கும் உடையநங்கைக்கும் ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம். திருநெல்வேலிக்குத் தெற்கே ௪௦ மைலில் உள்ளது.

௬௧. **திருக்காட்கரை:**—அப்பன் - பெருஞ்செல்வநாயகி. புஷ்கலவிமாநம். கபிலதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம். கபிலமுனிக்கு ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம். ஷோரனூர் எர்ணாகுளம் ரயில்வே இடைப்பள்ளி ஸ்டேஷனுக்குக் கிழக்கே ௭-மைலில் உள்ளது.

௬௨. **திருமூழிக்களம்:**—திருமூழிக்களத்தான் - மதுரவேணிநாச்சியார். ஸௌந்தர்யவிமாநம். பெருங்குளதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம் - நின்றதிருக்கோலம் ஹாரீதமுனிக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் நம்மாழ்வார் மங்களாசாஸநம். ஷோரனூர் எர்ணாகுளம் ரயில்வே கரிகுட்டி ஸ்டேஷனுக்குத் தென்மேற்கே ௪ - மைலில் உள்ளது.

௬௩. **திருப்புலியூர் - குட்டநாடு:**—மாயப்பிரான் - பொற்கொடிநாச்சியார். புருஷோத்தமவிமாநம். பூஞ்சுனைத் தீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம். ஸப்தரிஷிகளுக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் நம்மாழ்வார் மங்களாசாஸநம். கொல்லத்துக்கு வடகிழக்கே ௪௧-மைலில் உள்ளது. (திருச்செங்கன்னூரிலிருந்து ௩ - மைலில் உள்ளது.)

௬௪. **திருச்செங்குன்றூர்:**—இமையவரப்பன் - செங்கமலவல்லி. ஜகஜ்ஜ்யோதிவிமாநம். திருச்சிற்றாறு, ~~சங்கதீர்த்தம்~~ கிழக்கே திருமுகமண்டலம்-நின்றதிருக்கோலம். பத்மாசுரன் நிமித்தமாகச் சிவனுக்கு ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம். கொல்லத்துக்கு வடகிழக்கே ௫௮ - மைலில் உள்ளது.

௬௫. **திருநாவாய்:**—நாராயணன் - மலர்மங்கைநாச்சியார். வேதவிமாநம். செங்கமலஸரஸ். கிழக்கே திருமுகமண்டலம் - வீற்றிருந்த திருக்கோலம். லக்ஷ்மிக்கும் கஜேந்திரனுக்கும் ப்ரத்யக்ஷம் திருமங்கையாழ்வார் நம்மாழ்வார் மங்களாசாஸநம். திருவாங்கூர் ஸம்ஸ்தானத்தில் இடக்குளம் ஸ்டேஷனுக்குத் தெற்கே அரை - மைலில் உள்ளது.

௬௬. **திருவல்லவாழ்:**—கோலப்பிரான் - செல்வத்திருக்கொழுந்து நாச்சியார். சதுரங்ககோலவிமாநம். கண்டாகர்ணதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம்-நின்றதிருக்கோலம். கண்டாகர்ணனுக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார்

நம்மாழ்வார் மங்களாசாஸநம். திருவாங்கூர் ஸம்ஸ்தானம் அம்பலப்புழைக்கு வடகிழக்கே உ௦ - மைலில் உள்ளது.

சஎ. திருவல்லவாழ் :—பாம்பணையப்பன் - கமலவல்லிநாச்சியார். வேதாலயவிமாநம். பாபநாசதீர்த்தம். மேற்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம். மார்க்கண்டேயருக்கும் நாரதருக்கும் ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம். திருவாங்கூர் ஸம்ஸ்தாநம் அம்பலப்புழைக்குக் கிழக்கே கசு - மைலில் உள்ளது.

சஅ. திருவாட்டாறு :—ஆதிகேசவப்பெருமாள் - மரகதவல்லிநாச்சியார். அஷ்டாங்கவிமானம். கடல்வாய்தீர்த்தம் ராமதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம் - புஜங்கசயனம். பரசுராமனுக்கும் சந்திரனுக்கும் ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம். இது, நதியின்பெயர்பெற்றது. திருவனந்தபுரத்துக்குத் தென்கிழக்கே உஅ - மைலில் உள்ளது.

சகூ. திருவித்துவக்கோடு :—உய்யவந்தபெருமாள் - வித்துவக்கோட்டுவல்லி. தத்துவகாஞ்சநவிமாநம். சக்ரதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம்-புஜங்கசயநம். அமபரீஷனுக்கு ப்ரத்யக்ஷம். திருவிற்றுவக்கோடு என்றும் வழங்கும். குலசேகராழ்வார் மங்களாசாஸநம். இடப்பள்ளி ஸ்டேஷனுக்குக் கிழக்கே க௦ - மைலில் உள்ளது.

எ௦. திருக்கடித்தானம் :—அற்புதநாராயணன் - கற்பகவல்லித்தாயார். புண்யகோடிவிமானம். பூமிதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம்-நின்ற திருக்கோலம். ருக்மாங்கதராஜனுக்கு ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம். திருவல்லவாழுக்கு வடக்கே ரு - மைலில் உள்ளது.

எக. திருவாறன்விளை :—திருக்குறளப்பன் - பத்மாஸநநாச்சியார். வாமநவிமாநம். வேதவியாஸஸரஸ் கிழக்கே திருமுகமண்டலம்-நின்ற திருக்கோலம். பிரம்மாவுக்கு ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம். திருச்செங்குன்றூர்க்குக் கிழக்கே ச - மைலில் உள்ளது.

மலைநாட்டுத்திருப்பதிகள் ஸம்பூர்ணம்.

நடுநாட்டுத்திருப்பதிகள் - உ.

எஉ. திருவயிந்திரபுரம் :—தெய்வநாயகப்பெருமாள் - வைகுண்டநாயகி. சந்திரவிமானம். கருடநதி - சேஷதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம்-நின்ற திருக்கோலம். சந்திரனுக்கும் கருடனுக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். அஹீந்த்ரனெனப்படுகிற திருவனந்தாழ்வான் பூஜித்த தலமாதல்பற்றி, 'அஹீந்த்ரபுரம்' என்று இத்திருப்பதிக்குத் திருநாமம். திருப்பாபுலியூர்க்கு மேற்கே ச - மைலில் உள்ளது.

எஙு. திருக்கோவலூர்-கோபாலநகரம்:—த்ரிவிக்ரமன், ஆயனார் - பூங்கோவல்நாச்சியார். ஸ்ரீகரவிமானம். க்ருஷ்ணதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம். மிருகண்டுமுனிக்கும் மகாபலிசக்ரவர்த்திக்

கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் மங்களாசாஸநம். கோபாலன் எனப்படுகிற ஆயனார் எழுந்தருளியிருக்கும் திவ்ய தலமாதல்பற்றி, இதற்கு 'திருக்கோவலூர்' என்று திருநாமமாயிற்று: வடமொழியில், இது, 'கோபாலபுரம்' எனப்படும். "பாவருந் தமிழாற் பேர்பெறு பனுவற் பாவலர் பாதிநா ளிரவில், மூவரு நெருக்கி மொழிவிளக்கேற்றி முகுந்தனைத் தொழுத நன்னாடு" என்று புகழ்ந்துகூறும்படி முதலாழ்வார்மூவரும் ஒருவரையொருவர் சந்தித்து அந்தாதிபாடின தலம். இது, திருக்கோவலூர்க்குத் தென்மேற்கே ௩ - மைலில் உள்ளது.

நடுநாட்டுத் திருப்பதிகள் ஸம்பூர்ணம்

தொண்டைநாட்டுத் திருப்பதிகள் - உ௨.

௭௩. திருக்கச்சி-அத்திகிரி:—பேரருளாளப் பெருமாள், வரதராஜப் பெருமாள் - பெருந்தேவித்தாயார். புண்யகோடிவிமாநம். ஸத்யவ்ரத க்ஷேத்திரம். அநந்தஸரஸ். சேஷதீர்த்தம், வராகதீர்த்தம், ப்ரஹ்மதீர்த்தம், பத்மதீர்த்தம், அக்நிதீர்த்தம், குசலதீர்த்தம், வேகவதிநதி. மேற்கே திருமுகமண்டலம்-நின்றதிருக்கோலம். ப்ருகுமகரிஷிக்கும நாரதருக்கும் திருவனந்தாழ்வானுக்கும் கஜேந்த்ராழ்வானுக்கும் பரமாவுக்கும ப்ரத்யக்ஷம் பூதத்தாழ்வார் திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம. கச்சி=காஞ்சி என்னும் வடசொல்லின் சிதைவு: பிரமனால் பூசிக்கப்பட்ட தலம் என்பது, பொருள்; இனி, பூமியாகிய பெண்ணுக்கு அரையில் அணியும் அரைநூல்மாலைத் தானத்தி லுள்ளதுபற்றி வந்த பெயரென்று கூறுவாருமுளர். அத்திகிரி=ஹஸ்திகிரி: 'கோயில் திருமலை பெருமாள்கோயில்' என்று சிறப்பாக எடுத்துக்கூறப்படுகின்ற மூன்று தலங்களில் ஈற்றுத்தலம் இது: இது, தியாகமண்டபம் எனப்படும். நெடுநாள் தவஞ்செய்தும் மனத்தூய்மைபெறாத பிரமதேவன் ஆகாயவாணிகூறியபடி பூலோகத்தில் புண்ணியக்ஷேத்திரங்களெல்லாவற்றுள்ளும் உத்தமமானதும் ஒன்று ஆயிரமாகப் பயன்தருவதுமாகிய சத்தியவிரதக்ஷேத்திரத்தை யடைந்து, அங்கு அநந்தஸரஸின்கரையிலுள்ள ஹஸ்திகிரியை உத்தரவேதியாகக் கொண்டு யாகசாலையையமைப்பித்து, அசுவமேதயாகஞ்செய்து அதனால் ஸ்ரீமந் நாராயணனை யாராதிக்க, அந்தயாகாக்கினியினின்று எழுந்த புண்ணிய கோடிவிமாநத்தில் தேவராஜனென திருமால் பிரசன்னனாயின னென்றும், அந்த வரதராஜஸ்வாமியைப் பின்பு * கஜேந்திராழ்வான் பூசித்து முதலையினாலாகிய துயர்தீர்ந்து மேன்மைபெற்ற தென்றும், தெய்வத்தச்சனிலொருவனான மயன் பிரமன்கட்டளையால் அங்கு எம்பெருமானுக்குத் திருக்கோயில் கட்டியமைத்தன னென்றும் அறிக. இந்திரனது யானையாகிய ஐராவதம் நெடுநாள் தவஞ்செய்து மலைவடிவங்கொண்டு எம்பெருமானைத் தரித்தலால், அம்மலைக்கு 'ஹஸ்திகிரி' என்று பெயர்: கஜேந்திராழ்வான் பூஜித்துப் பேறுபெற்ற தலமாதலால், இப்பெயர்நிகழ்ந்த தென்றலு முண்டு. இங்கு, மலையடிவாரத்திலுள்ள அழகியசிங்கப்பெருமானை ஆழ்வார்தமங்களாசாஸநம்

* ௩௧

பெற்றவ ரென்பது, பலர் கொள்கை. காஞ்சீபுரத்துக்குத் தெற்கே ௩-மைலில் உள்ளது.

எரு. திருஅட்டபுயங்கம்:—ஆதிகேசவப்பெருமாள், சக்ரதரர்-அலர்மேல் மங்கை. ககநாக்ருதி விமாநம் கஜேந்த்ர புஷ்கரிணி. மேற்கே திருமுகமண்டலம் - நின்றதிருக்கோலம். கஜேந்த்ராழ்வானுக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் பேயாழ்வார் மங்களாசாஸநம் இத்தலத்து எம்பெருமானுக்கு எட்டுத் திருக்கைகள் உள்ளதுபற்றி 'அஷ்டபுஜம்' என்று திருப்பெயராக, அச்சொல் 'க'ப்ரத்யயம் பெற்று 'அஷ்டபுஜகம்' என்று ஆகி, தமிழில் அஷ்டபுயங்கம் எனத் திரிந்தது. இனி, இத்திருப்பதி அஷ்டபுயகரம் என்று வழங்கப்பெறுதலு முண்டு; அஷ்டபுஜன் எழுந்தருளியிருக்கின்ற கரம் [கிருகம்] ஆதல்பற்றி இப்பெயர் வந்தது போலும்: அட்டபுயவகரம என்பதன் மரூஉ என்பாரு முளர். காஞ்சீபுரத்துக்குத் தெற்கே க-மைலில் உள்ளது.

எசு. திருத்தண்கா:—விளக்கொளி, தீபப்ரகாசர் - மரகதவல்லித்தாயார். ஸ்ரீகரவிமாநம். ஸரஸ்வதி தீர்த்தம். மேற்கே திருமுகமண்டலம் - நின்றதிருக்கோலம். ஸரஸ்வதிக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். காஞ்சீபுரத்துக்குத் தெற்கே உ-மைலில் உள்ளது.

எஎ. வேளுக்கை:—அழகியசிங்கர், முகுந்த நாயகன் - வேளுக்கைவல்லி. கனகவிமாநம். கநகஸரஸ். கிழக்கே திருமுகமண்டலம் - நின்றதிருக்கோலம். ப்ருகுமகரிஷிக்கு ப்ரத்யக்ஷம். பேயாழ்வார் திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். காஞ்சீபுரத்துக்குக்கிழக்கே உ - மைலில் உள்ளது.

எஅ. பாடகம் (பாண்டவதூதர் சன்னிதி):— பாண்டவதூதர் - ருக்மிணிதேவி, ஸத்தியபாமை. பத்ரவிமாநம். மத்ஸ்ய தீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம்-வீற்றிருந்த திருக்கோலம். ஹாரீதமகாமுனிக்கு ப்ரத்யக்ஷம். திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் மங்களாசாஸநம். காஞ்சீபுரத்துக்கு மேற்கே க-மைலில் உள்ளது.

எகூ. திருநீரகம்:—ஜகதீசப்பெருமாள் - நிலமங்கைவல்லி. ஜகதீச்வர விமாநம். அக்ரூர தீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம். அக்ரூரருக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். காஞ்சீபுரம் உலகளந்தபெருமாள் ஸந்நிதிக்குத் தென்மேற்கே க-மைலில் உள்ளது.

அ௦. நிலாத்திங்கள் துண்டம்:—நிலாத்திங்கள் துண்டத்தான்-நேரொருவரில்லாவல்லி. புருஷஸூக்த விமாநம். சந்திரபுஷ்கரிணி. மேற்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம். சிவனுக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் கோயிலுக்குள் உள்ளது.

அக. திருவூரகம் (உலகளந்தபெருமாள் கோவில்):—உலகளந்த பெருமாள் (த்ரிவிக்ரமன்) - அமுதவல்லி நாச்சியார். ஸார ஸ்ரீகரவிமாநம். நாக தீர்த்தம். மேற்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம். ஊரகமென்கிற ஆதிசேஷனுக்கு ப்ரத்யக்ஷம். திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார் மங்

களாசாஸநம் இத்தலத்தில் திருமால் உரகரூபியாய்ச் சேவைசாதிப்பதுபற்றி, இத்திருப்பதிக்கு 'ஊரகம்' என்று திருநாமம்போலும்; உரகம் - பாம்பு. காஞ்சீபுரத்துக்குத் தென்மேற்கே க-மைலில் உள்ளது.

அஉ. திருவெஃகா. (யதோக்தகாரி):—சொன்னவண்ணஞ்செய்தபெருமாள் - கோமளவல்லி நாச்சியார். வேதஸாரவிமானம். பொய்கை புஷ்கரிணி. மேற்கே திருமுகமண்டலம் - புஜங்கசயநம். பொய்கையாழ்வாருக்கும் கணிகண்ணருக்கும் பிரம்மாவுக்கும் ப்ரத்யக்ஷம். பொய்கையாழ்வார் திருவவதரித்த தலம். திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார் பொய்கையாழ்வார் பேயாழ்வார் மங்களாசாஸநம். திருவெஃகாவிலெம்பெருமான் பிரமதேவன் செய்த வேள்வியை யழிக்க வந்த வேகவதிநதியைத் தடுத்தற்பொருட்டு அதற்கு அணையாகக் குறுக்கிற் பள்ளிகொண்டருளினவனாதலால், அப்பிரானுக்கு வடமொழியில் 'வேகாஸேது' என்று பெயர்; அது, தமிழில் 'வேகவணை' என்று மொழிபெயர்ந்து, அது பின்பு (நாகவணையென்பது நாகணையென்று விகாரப்படுதல்போல) வேகணை' என விகாரப்பட்டு, அது பின்னர் 'வெகணை' எனத் திரிந்து, தானியாகுபெயராய்த் தலத்தைக் குறித்து, அது, பின்பு 'வெஃகா' என மருவிவழங்கிற்றென நுண்ணிதின் உணர்க. காஞ்சீபுரத்துக்குத் தென்கிழக்கே உ - மைலில் உள்ளது.

அங. திருக்காரகம்:—கருணாகரப் பெருமாள் - பத்மாமணி நாச்சியார். வாமந விமாநம். அக்ராயதீர்த்தம். தெற்கே திருமுகமண்டலம் - நின்றதிருக்கோலம். கார்ஹரிஷிக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். காஞ்சீபுரத்துக்கு மேற்கே க-மைலில் உள்ளது.

அச. திருக்கார்வானம்:—கள்வர் - கமலவல்லி நாச்சியார். புஷ்கலவிமானம். கௌரிதடாகம். மேற்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம். பார்வதிக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். காஞ்சீபுரத்துக்குத் தென்மேற்கே க-மைலில் உள்ளது.

அரு. திருக்கள்வனூர்:—ஆதிவராகப் பெருமாள் - அஞ்சிலை நாச்சியார். வாமந விமாநம். நித்யபுஷ்கரிணி. மேற்கே திருமுகமண்டலம் - நின்றதிருக்கோலம். அச்வத்த நாராயணனுக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். காஞ்சீபுரத்துக்கு மேற்கே கவ-மைலில் உள்ளது

அசு. திருப்பவளவண்ணம்:—பவளவண்ணப் பெருமாள் - பவளவல்லி நாச்சியார். ப்ரவாளவிமாநம். சக்ரதீர்த்தம். மேற்கே திருமுகமண்டலம்-நின்ற திருக்கோலம் அச்விநீ தேவதைகளுக்கும் பார்வதிக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். காஞ்சீபுரத்துக்கு மேற்கே க-மைலில் உள்ளது.

அஎ. பரமேச்சுரவிண்ணகரம் (வைகுண்டப்பெருமாள் சந்நிதி) :—பரமபதநாதன் - வைகுந்தவல்லி. முகுந்த விமாநம். அயிரமதீர்த்தம். மேற்கே திருமுகமண்டலம் - வீற்றிருந்த திருக்கோலம். பல்லவராயனுக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். பரமேசுவரன் [தேவாதிதேவன்] எழுந்தருளியிருக்கின்ற விண்ணகரமாதல்பற்றி, இத்தலத்திற்குப் பரமேச்சுரவிண்ணகரமென்று திருநாமம். காஞ்சீபுரத்துக்குத் தெற்கே க-மைலில் உள்ளது.

அஅ. திருப்புட்குழி :—விஜயராகவப் பெருமாள் - மரதகவல்லி நாச்சியார். விஜயகோடி விமானம். ஜடாயுதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம் - வீற்றிருந்த திருக்கோலம். ஜடாயுவுக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். புள்ளை [சடாயுவென்னும் பெரியவுடையாரைக்] குழியிலிட்டு ஸம்ஸ்கரித்ததுபோல எம்பெருமான் சேவை சாதிக்கின்ற தலமாதல்பற்றி, திருப்புட்குழியென்று இத்தலத்திற்குத் திருநாம மென்பர். காஞ்சீபுரத்துக்குத் தென்மேற்கே ௫ - மைலில் உள்ளது.

அகூ. திருநின்றவூர் :—பக்தவத்ஸலா (பத்தராவிபெருமாள்) - என்னைப பெற்றதாயார். ஸ்ரீநிவாஸவிமானம் வருணபுஷ்கரிணி - வ்ருத்தக்ஷீரநதி. கிழக்கே திருமுகமண்டலம - நின்ற திருக்கோலம். வருணனுக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம் திண்ணனூருகருத் தெற்கே க-மைலில் உள்ளது.

கூ௦. திருவெவ்வுளூர் :—வீரராகவபெருமாள் - கநகவல்லித்தாயார். விஜயகோடிவிமானம். ஹ்ருத்தாபநாசதீர்த்தம் கிழக்கே திருமுகமண்டலம் - புஜங்கசயனம். வீக்ஷாரண்யம், மக்ஷிகாரண்யம் சாலிஹோத்ரருக்கு ப்ரத்யக்ஷம் திருமங்கையாழ்வார் திருமழிசையாழ்வார் மங்களாசாஸநம். திருமால் சாலிஹோத்ர மஹாரிஷிக்குப பிரதியக்ஷமாகி, 'உறைதற்கு உரிய உள் எவ்வுள்?' என விஞவியதனுல், இத்தலத்திற்குத் திருவெவ்வுளூரென்று திருநாமமாயிற்றென்பர். திருவள்ளூர்க்கு வடக்கே உ-மைலில் உள்ளது.

கூக. திருநீர்மலை (தோயாத்ரம்) :—நீலமுகில்வண்ணன் - அணிமாமலர்மங்கைத் தாயார். சக்ரவர்த்தித்திருமகன், உலகளந்தபெருமாள், அழகியசிங்கர் இவர்கள். கிழக்கே திருமுகமண்டலம. தோயகிரி விமானம். மணிகர்ணிகாதீர்த்தம். ரங்கநாதன் - ஸ்ரீரங்கநாயகி. தெற்கே திருமுகமண்டலம் - மாணிக்கசயனம். தொண்டைமான் சக்ரவர்த்திக்கும், பிருகு மார்க்கண்டேயருக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் பூதத்தாழ்வார மங்களாசாஸநம் பல்லாவரத்துக்கு மேற்கே உ-மைலில் உள்ளது.

கூஉ. திருவிடவெந்தை:—நித்யகல்யாணர் - கோமளவல்லி நாச்சியார். கல்யாணவிமானம். கல்யாணதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம். மார்க்கண்டேயருக்கு ப்ரத்யக்ஷம. திருமங்கையாழ்வார மங்களாசாஸநம். இத்தலத்தி லெழுந்தருளிய வராகபெருமாள் தமது தேவியை இடபக்கத்திற் கொண்டிருத்தலால், இத்தலத்திற்குத் திருவிடவெந்தையென்று திருநாமமாயிற்று. சென்னை திருவல்லிக்கேணிக்கு அடுத்த பாப்பான்சாவடியிலிருந்து தோணியில் போகவேண்டும். வண்டலூர்க்குக் கிழக்கே கக-மைலில் உள்ளது.

கூ௩. திருக்கடல்மல்லை (மஹாபலிபுரம்.):—தலசயனத் துறைவார் - நிலமங்கைநாச்சியார். ககநாக்ருதிவிமானம். கருடநதி கிழக்கே திருமுகமண்டலம் - ஸ்தலசயனம். புண்டரீகரிஷிக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் பூதத்தாழ்வார் மங்களாசாஸநம். இது, பூதத்தாழ்வார் திருவவதாரஸ்தலம். செங்கல்பட்டுக்குக் கிழக்கே கஅ-மைலில் உள்ளது. அல்லது, மேற்கண்டதோணியிலும் போகலாம்.

௬௪. திருவல்லிக்கேணி (பிருந்தாரண்ய க்ஷேத்ரம்.)—வேங்கடக்ருஷ்ணன் (பார்த்தஸாரதி) - ருக்மிணிப்பிராட்டி. (அநிருத்தன் - ப்ரத்யும்நன் - பலராமன் - ஸாத்யகி). கிழக்கே திருமுகமண்டலம்-நின்ற திருக்கோலம். ஆநந்த விமானம். வ்யாஸமஹரிஷியினால் பிரதிஷ்டை செய்யப்பட்டு, ஆத்ரேய மஹரிஷியினால் ஆராதிக்கப்பட்டவர். ஸுமதியென்னும் ராஜாவுக்கும், தொண்டைமான் சக்ரவர்த்திக்கும், அர்ச்சுனனுக்கும் ப்ரத்யக்ஷம்.

மந்நாதன் (ரங்கநாதன்-என்னையாளுடையப்பன்)-வேதவல்லித்தாயார். புஜங்கசயனம் - கிழக்கே திருமுகமண்டலம். ப்ருகுமஹரிஷியினால் கன்னிகாதானம் பண்ணப்பெற்றவர்.

(வராஹநாயனார்) அழகியசிங்கர் தெள்ளியசிங்கர் நரஸிம்ஹர். மேற்கே திருமுகமண்டலம். வீற்றிருந்த திருக்கோலம் அத்ரிமஹரிஷிக்கும், ஜாபாலி மஹரிஷிக்கும் ப்ரத்யக்ஷராய மோக்ஷந்தந்தவர்.

சக்ரவர்த்தித்திருமகன் [ஸ்ரீராமன்] (பரதாழ்வான் சத்ருக்நாழ்வான், இளையபெருமாள்) மைதிலி. தெற்கே திருமுகமண்டலம் - நின்றதிருக்கோலம். சுபதர்குமாரரான மதுமானென்னும் மஹரிஷிக்கு ப்ரத்யக்ஷம்.

தேவப்பெருமாள். கிழக்கே திருமுகமண்டலம். கருடாரூடர். ஸப்தரோமாவுக்கு ப்ரத்யக்ஷம்.

இந்த்ரதீர்த்தம், ஸோமதீர்த்தம், மீநதீர்த்தம், அக்நிதீர்த்தம், விஷ்ணு தீர்த்தம் இவ்வைந்து தீர்த்தங்களால் சூழப்பட்ட கைரவிணி என்னும் ஸரஸ்.

ப்ருகு அத்ரி மரீசி மார்க்கண்டேயர் ஸுமதி ஸப்தரோமா ஜாபாலி என்னும் ஏழுமஹரிஷிகள் தபஸ் செய்த இடம்.

திருமங்கையாழ்வார் பேயாழ்வார் திருமழிசையாழ்வார் மங்களாசாஸநம். இது - தொண்டைமான் சக்ரவர்த்தியின் பிரார்த்தனைப்படியே திருவேங்கடமுடையான் கண்ணனாகத் தனது தம்பதியோடு ஸேவைசாதித்த தலம், இத்தலத்துப் புஷ்கரிணி அல்லிப்பூக்கள் நிறையப்பெற்றதனால், கைரவிணியென்று வடமொழியிலும், திருவல்லிக்கேணியென்று தமிழ்மொழியிலும் பெயர்பெறும். இந்தப் புண்ணியதீர்த்தத்தின் பெயரே இத்தலத்திற்கும் பெயராயிற்றென்க. இது மயிலையை அடுத்திருத்தலால், மயிலைத்திருவல்லிக்கேணி யெனப் பெயர்பெறும்; இம்மயிலையே பேயாழ்வாரது திருவவதாரஸ்தலமாம். சென்னை ஸென்றல் ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கே ௨-மைலிலும், எழும்பூர்க்குத் தென்கிழக்கே ௨-மைலிலும் உள்ளது.

௬௫. திருக்கடிகை (சோளசிங்கபுரம்.):—யோகாநருஸிம்ஹர் - அம்ருதவல்லி நாச்சியார். சிங்ககோஷ்டக்கியிமானம் அம்ருததீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம் - வீற்றிருந்த திருக்கோலம். சிறிய திருவடிக்கு ப்ரத்யக்ஷம். தக்கான் - அக்காரக்கனிப்பெருமாள். தக்கான்குளம். திருமங்கையாழ்வார் பேயாழ்வார் மங்களாசாஸநம் ஒருவர் ஒருகடிகைப்பொழுது இத்தலத்தில் உறைந்தாலும் அவர்க்கு முத்தி கிடைக்குமாதலால், இத்தலத்திற்குக் கடிகையென்று திருநாமம்: கடிகாசலமெனப்படும். இது, சோளதேசம்போன்று வளம்மிக்கு

நரசிங்கமூர்த்தி உறைதற்கு இடமாயிருத்தல்பற்றி, சோளஸிம்ஹபுரமென்றும் வழங்கப்பெறும். சோளஸிம்ஹராஜனது புரமெனினுமாம். சோளங்கிபுரத்துக்கு வடக்கே ௧-மைலில் உள்ளது.

தொண்டைநாட்டுத்திருப்பதிகள் ஸம்பூர்ணம்.

வடநாட்டுத்திருப்பதிகள் - ௧௨.

௯௬. **திருவேங்கடம்** (திருமலை—திருப்பதி.)—திருவேங்கடத்தான் - அலர்மேல்மங்கைத்தாயார். ஆநந்தநிலயவிமானம். சேஷாசலம். ஸ்வாமிபுஷ்கரிணி, கோனேரி. கிழக்கே திருமுகமண்டலம்-நின்ற திருக்கோலம். தொண்டைமான் சக்ரவர்த்திக்கும், ஆறுமுகனுக்கும் ப்ரத்யக்ஷம். பெரியாழ்வார் ஆண்டாள் குலசேகராழ்வார் திருமழிசையாழ்வார் திருப்பாணாழ்வார் திருமங்கையாழ்வார் நம்மாழ்வார் மங்களாசாஸநம். தன்னையடைந்தவர் பாவமனைத்தையும் ஒழிப்பதனால், இது 'வேங்கடம்'எனப்பெயர்பெற்றது. ஸ்ரீசைலத்தின்மேற்கிலுள்ள நந்தனபுரமென்னும் ஊரில் புரந்தரனென்னும் பிராமணோத்தமனது குமாரனாகிய மாதவனென்பவன் தன்மனைவியாகிய சந்திரரேகையென்பவளோடு பூஞ்சோலையிற் சென்று விளையாடிக்கொண்டிருக்கையில் மாலினியென்பாளொரு சண்டாளகன்னிகையின் கட்டழகைக் கண்டு காமுற்று அவளோடுசேர்ந்து மனையாளைத்துறந்து அப்புலைமங்கையுடனே சென்று புலால் நுகர்ந்தும் கட்குடித்தும் கைப்பொருள் முழுவதையும் இழந்து பின்பு வழிபறித்தல் உயிர்க்கொலை முதலிய கொடுந்தொழில் புரிந்து பொருள்சேர்த்து அவட்குக்கொடுத்துவந்து முடிவில் வறியவனாகிப் பலநோய்களையும் அடைந்து அவளால் அகற்றப்பட்டவனாய்ப் பலபாவமுந்தொடரப் பித்தன்போல அலைந்து திரிந்து இத்திருமலையை அடைந்தமாத்திரத்தில் தனது தீவினையெல்லாம் சாம்பலாகப்பெற்று முன்னைப்பிரமதேஜஸைப் பொருந்தி நல்லறிவுகொண்டு திருமாலைச்சேவித்து வழிபட்டுப் பரமபதமடைந்தனனாதலால், இதற்கு 'வேங்கடாசலம்' என்னும் பெயர் நிகழ்ந்தது என்று வடமொழியில் ப்ரஹ்மாண்டபுராணத்திலும் பவிஷ்யோத்தரபுராணத்திலும் கூறப்படுதல் காண்க. அன்றி, 'வேம் என்பது - அழிவின்மை, கடம் என்பது - ஐசுவரியம்; அழிவில்லாத ஐசுவரியங்களைத் (தன்னையடைந்தார்க்குத்) தருதலால் வேங்கடமெனப் பெயர்கொண்டது' என்று வராகபுராணத்திற் சொல்லப்பட்டவாறும் உணர்க. திருப்பதி மலையின்மேல் ௭-மைலில் உள்ளது.

௯௭. **சிங்கவேள்குன்றம்** (அஹோபிலம்.):—நரஸிம்ஹன் - லக்ஷ்மிநாச்சியார். குருகைவிமானம். இந்த்ரதீர்த்தம், நரசிங்கதீர்த்தம், பாபநாசதீர்த்தம. கிழக்கே திருமுகமண்டலம-வீற்றிருந்ததிருக்கோலம. ஹிரண்யனை ஸம்ஹரித்து ப்ரஹ்லாதனுக்கு அருள்செய்தவர். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். சிங்கமாகிய யாவராலும் விரும்பப்படுகின்ற கட்டழகுடைய பெருமான் எழுந்தருளிய திருமலையாதலால், சிங்கவேள்குன்றம் என்று இத்தலத்திற்குப் பெயர்: 'சிங்கவேழ்குன்றம்' என்று வழங்குதலு முண்டு: அப்போதைக்கு நரசிங்கமூர்த்திகள்

எழுந்தருளியிருக்கின்ற ஏழுகுன்றங்களையுடையது எனப் பொருள் காண்க. இதுவே அஹோபிலமெனப்படும். கடப்பைஜில்லா ஏர்ரகுண்டாவுக்கு வடக்கே ௯௦-மைலில் உள்ளது.

௯௮. திருவயோத்தி:—சக்ரவர்த்தித்திருமகன், ரகுநாயகன்-ஸீதாபிராட்டி. புஷ்கலவிமானம். பரமபதஸத்யபுஷ்கரிணி, ஸரயூநதி. வடக்கே திருமுகமண்டலம்-வீற்றிருந்த திருக்கோலம். பரதாழ்வானுக்கும், தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் ப்ரத்யக்ஷம். பெரியாழ்வார் குலசேகராழ்வார் தொண்டரடிப்பொடியாழ்வார் திருமங்கையாழ்வார் நம்மாழ்வார் மங்களாசாஸநம். அயோத்தி-பகைவர்களாற் போர்செய்து வெல்லமுடியாதது எனப் பெயர்பெறும்; அரண் முதலியவற்றால் மிக்கபாதுகாவலையுடையது என்பது கருத்து. இது, ஸ்ரீராமபிரானது திருவவதாரஸ்தலம். முத்திதரும் நகரமேழனுள் ஒன்று. அஜோத்யாவுக்கு உ மைலில் உள்ளது.

௯௯. நைமிசாரண்யம்:—தேவராஜன் - ஸ்ரீஹரிலக்ஷ்மி. புண்டரீகவல்லித்தாயார். ஸ்ரீஹரிவிமானம் திவ்யவிசராந்ததீர்த்தம் கிழக்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம். தேவரிஷிகளுக்கும், இந்திராதிகளுக்கும், ஸுதருமனுக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். ஒருகாலத்தில் முனிவர்கள் 'தவஞ்செய்தற்குச் சிறந்த இடம் நிலவுலகத்தில் யாது?' என்று தங்களுக்கு விளக்கிக்காட்டுதற்பொருட்டுப் பிரமனை வேண்டியபோது, அம்முனிவர்க்கு, அப்பிரமதேவன் தான் ஒருதருப்பையாழியைச்செய்து மண்ணுலகத்திலுருட்டி அது சென்று நின்ற இடத்தையே சிறந்ததென்று காட்டினனாதலால், அதற்கு இடமான இத்தலம் நைமிசமெனப் பெயர்பெற்றது. நைமிசம் - நேமிவிழுந்த இடம். ஸாண்டிலிக்கு வடக்கே ௨௫ மைலில் உள்ளது.

௱. சாளக்கிராமம்:—ஸ்ரீமூர்த்திப்பெருமாள்-ஸ்ரீதேவிநாச்சியார். கநகவிமானம். சக்ரதீர்த்தம். கண்டகிநதி வடக்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம் கண்டகியென்கிற தேவிக்கும், பிரமருத்ராதிகளுக்கும் ப்ரத்யக்ஷம். பெரியாழ்வார் திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம் கோரக்பூர்க்கு வடகிழக்கே ௧௦ - மைலில் இருக்கிறது

௱௧. வதர்யாச்ரமம் (பதரிகாச்ரமம்):—பதரீநாராயணன் - அரவிந்தவல்லி தபதகாஞ்சநவிமானம். தபதகுண்டதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம் - வீற்றிருந்த திருக்கோலம். இலந்தைமரத்தின்கீழ்ப் பத்மாசனங்கொண்டு ஞானமுத்திரை தரித்து ஜயசீலரான தபஸ்வியாய், நரனுக்குத் திருமந்த்ரோபதேசஞ்செய்தவர். பெரியாழ்வார் திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். (பதரி - இலந்தைமரம்) இலந்தைமரங்களடர்ந்த ஆச்ரமமென்பது, பொருள். இது இமயமலையிலுள்ளது. ஹரித்வாரத்திலிருந்து வடகிழக்கே ௧௭௫-மைலில் உள்ளது.

௱௨. திருக்கண்டங்கடிநகர் (தேவப்ரயாகை):— நீலமேகப்பெருமாள், புருஷோத்தமன்-புண்டரீகவல்லி. மங்களவிமானம். கிழக்கே திருமுகமண்டலம் - நின்றதிருக்கோலம். பரத்வாஜமகரிஷிக்கு ப்ரத்யக்ஷம். பெரியாழ்வார் மங்களாசாஸநம். ஆல்மோராவுக்கு வடக்கே ௧௫௨-மைலில் உள்ளது.

௧௦௩. திருப்பிருதி (நந்தப்பிரயாகை):— பரமபுருஷன் - பரிமளவல்லிநாச்சியார். கோவர்த்தநவிமாநம். மாநஸஸரஸ். கிழக்கே திருமுகமண்டலம் - புஜங்கசயநம. பார்வதிக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். ஆல்மோராவுக்கு ௪௩-மைலில் உள்ளது.

௧௦௪. த்வாரகை:- கல்யாணநாராயணன் - கல்யாணநாச்சியார். அஷ்டமஹிஷிகள்-ஹேமகூடவிமாநம். கோமதிதீர்த்தம். மேற்கே திருமுகமண்டலம் வீற்றிருந்ததிருக்கோலம். த்ரௌபதிக்கு ப்ரதயக்ஷம். பெரியாழ்வார் ஆண்டாள் திருமங்கையாழ்வார் நம்மாழ்வார் மங்களாசாஸநம். இதுவும் முத்திதரும்நகரமேழனுள் ஒன்று. இந்நகரம் - காலயவனன் பெருஞ்சேனையோடு வடமதுரையை முற்றுகைசெய்தபோது அவனால் யாதவர்களுக்கு எங்குத் தீங்குவருமோ? என்ற கருத்தினால் ஸ்ரீகிருஷ்ணபகவான் சமுத்திரத்தினிடையே அவ் யாதவரைப பாதுகாக்குமாறு ஏற்படுத்தி அரசாண்ட நகரம். பேரிபந்தர் அல்லது பம்பாயிலிருந்து ஸ்டீமரில் 16-மணிநேரத்தில் போகலாம்.

௧௦௫. வடமதுரை (கோவர்த்தநம்):— கோவர்த்தநேசன் - சத்தியபாமை. கோவர்த்தன விமானம். இந்திரதீர்த்தம், கோவர்த்தனதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம். இந்த்ராதிதேவர்களுக்கு ப்ரத்யக்ஷம். பெரியாழ்வார் ஆண்டாள் திருமங்கையாழ்வார் நம்மாழ்வார் மங்களாசாஸநம். இது - ஸ்ரீகிருஷ்ணபகவானது திருவவதாரஸ்தலம். முத்திதரும் நகரமேழனுள் இதுவும் ஒன்று. கண்ணனுக்கு மதுரமாயிருத்தலாலும், மது வென்ற அசுரனை யழித்த இடமாதலாலும், இதற்கு மதுரையெனப் பெயர் வந்த தென்பர். கோவர்த்தனகிரி யென்னும் மலை, மட்ருவிலிருநது வட மேற்குத் திசையில் ௧௬-மைல் தூரத்தில் இருக்கிறது.

௧௦௬. திருவாய்ப்பாடி (கோகுலம்):—நவமோகனக்ருஷ்ணன். ருக்மிணிப் பிராட்டி, ஸத்யபாமைப்பிராட்டி. ஹேமகூடவிமாநம். யமுநாநதி. கிழக்கே திருமுகமண்டலம் - நின்ற திருக்கோலம். நந்தகோபருக்கு ப்ரத்யக்ஷம். பெரியாழ்வார் ஆண்டாள் திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். ஆய்ப்பாடி-இடையர்கள்வசிக்கின்ற சேரி யெனப் பொருள்படும்; 'கோகுலம்' என்று வடமொழியில் வழங்கப்பெறும். மட்ருவுக்குத் தென்கிழக்கே ௬-மைலில் உள்ளது.

௧௦௭. திருப்பாற்கடல்:—க்ஷீராப்திநாதன். வ்யூஹமூர்த்தி - கடல்மகள் நாச்சியார். அஷ்டாங்கவிமாநம். அமிருததீர்த்தம். தெற்கே திருமுகமண்டலம் - புஜங்கசயநம். பிரமருத்ராதிகளுக்கு ப்ரத்யக்ஷம். பெரியாழ்வார் ஆண்டாள் குலசேகராழ்வார் திருமழிசையாழ்வார் தொண்டரடிப்பொடியாழ்வார் திருமங்கையாழ்வார் பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் நம்மாழ்வார் மங்களாசாஸநம். எம்பெருமானது ஐவகைநிலைகளுள், திருப்பாற்கடலி லெழுந்தருளியிருப்பவன் வியூகமூர்த்தியாவன்; "வ்யூஹமாவது - ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரார்த்தமாகவும், ஸம்ஸாரிஸம்ரக்ஷணார்த்தமாகவும, உபாஸகானுக்ரஹார்த்தமாகவும் ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த ரூபேண நிற்கும்நிலை." பாற்கடல், வடக்குத்திசையில் உள்ளது.

திருநாடு. க.

கoஅ. பரமபதம்:—பரமபதநாதன் - பெரிய பிராட்டியார். அநந்தாங்க விமாநம். விரஜாநதி - அயிரமதபுஷ்கரிணி. தெற்கே திருமுகமண்டலம் - வீற்றிருந்த திருக்கோலம். அநந்த கருட விஷ்வக்ஸேநர் முதலிய நித்ய ஸூரிகளுக்கும் முக்தர்களுக்கும் ப்ரத்யக்ஷம். பெரியாழ்வார் திருமழிசை யாழ்வார் திருப்பாணாழ்வார் திருமங்கையாழ்வார் பொய்கையாழ்வார் பேயாழ் வார் நம்மாழ்வார் மங்களாசாஸநம். இது - திருமாலினது ஐவகை நிலைகளுள் பரத்வம் விளங்குந் தானம். "பரத்வமாவது - அகாலகால்யமான நலமந்த மில்லதோர் நாட்டிலே நித்யமுக்தர்க்குப் போக்யனாய்க்கொண்டு எழுந்தருளி யிருக்கும் இருப்பு." இதுவே - பரமபதமெனவும், நித்தியவிபூதி யெனவும் படும்.

இதுவரையிற் கூறிவந்த திருபபதிகள் மயர்வறமதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்களால் மங்களாசாஸநம செய்யப்பட்டு மிகவும் ஏற்றம்பெற் றன. இவைகளன்றி, முனிவர் முதலியோரால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டு ஏற்றம்பெற்ற புராணஸ்தலங்களும், ஆழ்வாராசாரியர்களின் திருவவதாரம் முதலியசம்பந்தங்களினால் ஏற்றம்பெற்றதலங்களும்உண்டு. அவையாவன:—

க. திருநாராயணபுரம்:—செல்வப்பிள்ளை எழுந்தருளிய தலம். ஸ்ரீபாஷ்ய காரர், திருநாராயணன் செல்வப்பிள்ளை என்ற இவர்கட்குச் சந்நிதி முதலியன நிர்மாணஞ்செய்து செல்வப்பிள்ளையை எழுந்தருளப் பண்ணி உத்ஸவாதிகளையெல்லாம் நடப்பித்தருளினர். நாராயணா த்ரியென்றும், வேதாத்ரியென்றும், யாதவாத்ரியென்றும், யதிசைல மென்றும் மறுபெயர்களையுடைய பிரஸித்தமான தலம் இதுவே. இது மேல்நாட்டி லுள்ளது.

உ. ராஜமன்னார்கோயில்:—ராஜகோபாலன் எழுந்தருளிய தலம்.

ங. ஜநார்த்தநம்:—ஜநார்த்தநப்பெருமாள் எழுந்தருளிய தலம்; இப்பெரு மான் தமதுகையிற்கொண்டுள்ள நீரை யுகமுடிவில் ஆசமநஞ்செய்வ ரென்பர்; இது, மேலைக்கடற்கரையி லுள்ளது.

ச. ஸ்ரீமுஷ்ணம்:—ஆதிவராகப்பெருமாள் எழுந்தருளிய தலம். இது, எட்டு ஸ்வயம்வ்யக்தஸ்தலங்களில் ஒன்று. (மற்றவை - ஸ்ரீரங்கம், திருவேங் கடம், வானமாமலை, புஷ்கரம், நைமிசாரணியம், பதரிகாசிரமம், சாளக் கிராமம் என்பன.) இது, சோழநாட்டி லுள்ளது.

ரு. புஷ்கரம்:—தீர்த்தஸ்வரூபியாகிய எம்பெருமான் எழுந்தருளிய தலம்.

சா. ஜகந்நாதம்:—ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி எழுந்தருளிய தலம். புருஷோத்த மம் என்னும் மறுபெயருடையது. வடநாட்டி லுள்ளது.

எ. ஸ்ரீகூர்மம்:—ஸ்ரீவராகப்பெருமாள் எழுந்தருளிய தலம்.

அ. சிங்கப்பெருமாள்கோயில்:—இது, தொண்டைநாட்டிலுள்ளது; நரசிங் க மூர்த்தி எழுந்தருளியுள்ள தலம்.

௯. அவந்தி:—கண்ணன்எழுந்தருளிய தலம். உஜ்ஜயினி என்னும் மறுபெய ருடையது. இது, முத்திதரும்நகரங்கள் ஏழனுள் ஒன்று.

௧௦. கயா:—பல்குநி நதிக்கரையி லுள்ளது. சிராத்தபிண்டம் போடும்படி யான விஷ்ணுபாதத்தை யுடையது.

௧௧. ப்ரயாகை:—மாதவப்பெருமாள் ஆலிலையில் பள்ளிகொண்டுள்ள தலம். அலகபாத் என்னும் மறுபெயருடையது.

௧௨. மயிலாப்பூர்:—இது, முதலாழ்வார்கள் மூவரில் பேயாழ்வார் திருவவ தரித்த தலம்.

௧௩. திருமழிசை:—திருமழிசையாழ்வார் திருவவதரித்த தலம். மஹீஸார க்ஷேத்ரம் என்னும் மறுபெய ருடையது.

௧௪. திருவஞ்சிக்களம்:—குலசேகராழ்வார் திருவவதரித்த தலம். மலை நாட்டி லுள்ளது.

௧௫. திருமண்டங்குடி:—தொண்டரடிப்பொடியாழ்வார் திருவவதரித்த தலம்.

௧௬. திருக்குறையலூர்:—திருமங்கையாழ்வார் திருவவதரித்த தலம்.

௧௭. காட்டுமன்னார்கோவில்:—ஸ்ரீமந்நாதமுனிகளும் ஸ்ரீஆளவந்தாரும் திரு வவதரித்த தலம்.

௧௮. பூவிருந்தவல்லி:—திருக்கச்சிநம்பிகள் திருவவதரித்த தலம்.

௧௯. ஸ்ரீபெரும்பூதூர்:—ஸ்ரீபாஷ்யகாரர் திருவவதரித்த தலம். இவர்க்குப் பெரியநம்பிகள் த்வயம் உபதேசம்செய்த தலம்—ஸ்ரீமதுராந்தகம்.

௨௦. கூரம்:—கூரத்தாழ்வான் திருவவதரித்த தலம்.

௨௧. மழலைமங்கலம்:—எம்பார் திருவவதரித்த தலம்.

௨௨. பச்சைப்பெருமாள்கோயில்:—முதலியாண்டான் திருவவதரித்த தலம்.

மற்றும் பல வுள.